அஸ்திபாரங்கள்

விசுவாசத்தில் கட்டியெழுப்புதல்

கற்பாறையாகிய இயேசுகிறிஸ்துவின்மேல் அஸ்திபாரமிடுதல்
(லூக்கா 6:48)

ஒரு உலகலாவிய

கிராம
ஊழியங்கள்
வெளியீடு

www.villageministries.org

© 2001 by
Village Ministries International, Inc. (VMI)

இந்த புத்தகத்தில் உள்ளவைகளை பிரதி எடுக்கவும் வினியோகிக்கவும் மற்றவர்களுக்கு கிறிஸ்துவைப்பற்றியும் தேவனுடைய வார்த்தையையும் போதிக்க உபயோகப்படுத்தவும் VMI எந்தத் தனி நபருக்கும் அதிகாரம் கொடுக்கிறது; ஆயினும் மூலப் புத்தகத்தை மாற்றவோ, திருத்தவோ, மாறுதல் செய்யவோ (அது எவ்வளவு சிறிய மாறுதலாயிருந்தாலும்) கூடாது. இதிலுள்ளவற்றைப் பயன் படுத்துவதற்கு எந்த தனி மனிதனிடமோ அல்லது குழுவிடமோ யாரும் கட்டணம் வசூக்கக்கூடாது. VMI இவற்றை உபயோகப்படுத்த எந்த கட்டணமும் வசூப்பதில்லை, என்ற கிருபையின் கொள்கையை உடையதாயிருக்கிறது.

<u>அஸ்திபாரங்களின்</u> எந்தவிதமான பிரதியெடுத்தல், வினியோகித்தல், அச்சுப்பதித்தல் அல்லது எந்த உபயோகமோ, உபயோகிக்கப்பட்ட அதன் இறுதிப் பகுதியில் கீழ்கண்டவற்றை முழுமையாகப் போடவேண்டும்.

Copyright © 2001 by Village Ministries International, Inc. அனுமதியுடன் மறுபதிப்பு செய்யப்பட்டது.

<u>Foundations</u> is a publication of Village Ministries International, Inc. www.villageministries.org

பொருளடக்கம்

அங்கீகாரம்		8
முன்னுரை		8
அத்தியாயம் 1	**ஆரம்பித்தல்**	**9**
பகுதி 1	ஒருவரது தனிப்பட்ட ஆயத்தம்	10
பகுதி 2	வேதாகமம்	12
பகுதி 3	ஒரு வரலாற்றுக் கண்ணோட்டம்	14
பகுதி 4	ஒரு காலவரிசை கண்ணோட்டம்	17
பகுதி 5	வேதத்தைப் போதிக்கத் தயாராகுதல்	21
அத்தியாயம் 2	**பழைய ஏற்பாடு ஒரு கண்ணோட்டம்**	**25**
	முன்னுரை	26
பகுதி 1	நியாயப்பிரமாணம்: முதல் ஐந்து புத்தகங்கள்	27
	ஆதியாகமம்	27
	யாத்திராகமம்	28
	லேவியராகமம்	30
	எண்ணாகமம்	31
	உபாகமம்	33
பகுதி 2	சரித்திரப் புத்தகங்கள்	35
	யோசுவா	35
	நியாயாதிபதிகள்	36
	ரூத்	37
	1 சாமுவேல்	38
	2 சாமுவேல்	40
	1 இராஜாக்கள்	41
	2 இராஜாக்கள்	43
	1 நாளாகமம்	45
	2 நாளாகமம்	47
	எஸ்றா	49
	நெகேமியா	50
	எஸ்தர்	51
பகுதி 3	கவிதைப் புத்தகங்கள்	52
	எபிரேய கவிதைகள்	53
	யோபு	54
	சங்கீதங்கள்	56
	நீதிமொழிகள்	61
	பிரசங்கி	63
	உன்னதப்பாட்டு	64
பகுதி 4	பெரிய தீர்க்கதரிசிகள்	66
	ஏசாயா	68
	எரேமியா	70
	புலம்பல்	72
	எசேக்கியேல்	73
	தானியேல்	74
பகுதி 5	சிறிய தீர்க்கதரிசிகள்	76
	ஓசியா	77
	யோவேல்	79
	ஆமோஸ்	79
	ஒபதியா	81
	யோனா	82
	மீகா	82
	நாகூம்	84
	ஆபகூக்	85
	செப்பனியா	86

ஆகாய் 87
சகரியா 88
மல்கியா 89
அத்தியாயம் 3 புதிய ஏற்பாடு - ஒரு கண்ணோட்டம் 91
முகவுரை 92
பகுதி 1 சரித்திர புத்தகங்கள் – முகவுரை 96
மத்தேயு 97
மாற்கு 99
லூக்கா 101
யோவான் 104
அப்போஸ்தலருடைய நடபடிகள் 107
பகுதி 2 பவுன் நிருபங்கள் – முகவுரை 109
ரோமர் 111
1 கொரிந்தியர் 114
2 கொரிந்தியர் 116
கலாத்தியர் 118
எபேசியர் 119
பிப்பியர் 120
கொலோசெயர் 121
1 தெசலோனிக்கேயர் 121
2 தெசலோனிக்கேயர் 122
1 தீமோத்தேயு 123
2 தீமோத்தேயு 124
தீத்து 125
பிலேமோன் 126
பகுதி 3 பொதுவான நிருபங்கள் – முகவுரை 128
எபிரெயா 128
யாக்கோபு 130
1 பேதுரு 131
2 பேதுரு 133
1 யோவான் 134
2 யோவான் 136
3 யோவான் 136
யூதா 137
பகுதி 4 தீர்க்கதரிசன புத்தகம் 139
வெளிப்படுத்தின விசேஷம் 139
அத்தியாயம் 4 வியாக்கியானம் செய்வதின் அடிப்படை கொள்கைகள் 143
அறிமுகம் 144
பகுதி 1 விதி ஒன்று: உண்மைகளைப்பெற நாடுங்கள் 145
கொள்கை ஒன்று : தேவனின் முக்கியத்துவத்தைக் கற்றுக்கொள்ளுதல் 145
கொள்கை இரண்டு: இயேசுவின் வெளிப்பாட்டைக் நாடுங்கள் 146
பகுதி 2 விதி இரண்டு: புரிந்து கொள்ளுவதை நாடுங்கள் 149
கொள்கை மூன்று: வெளிப்படுத்தல் படிப்படியாக வளர்ச்சி பெறுவது 149
கொள்கை நான்கு: வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் காணுங்கள் 150
கொள்கை ஐந்து: திட்டவட்டமானவைகளைக் கவனியுங்கள் 151
கொள்கை ஆறு: அடிப்படைப் பகுதிகளை ஆய்வுசெய்யுங்கள் 151
கொள்கை ஏழு: மனிதனின் தீர்மானிக்கும் சக்தியை அங்கீகரியுங்கள் 152
கொள்கை எட்டு: உடன்படிக்கைகளை நினைவில் வைத்திருங்கள் 153
பகுதி 3 விதி மூன்று: ஞானமாய் நடந்து கொள்ளுவதை நாடுங்கள் 157
கொள்கை ஒன்பது: வேறுபாடுகளை நோக்கிப் பாருங்கள் 157
கொள்கை பத்து: பின்னணியைச் சீர்தூக்கிப் பாருங்கள் 159
கொள்கை பதினொன்று: ஒப்பிட்டு அர்த்தம் காணுங்கள் 160
கொள்கை பன்னிரெண்டு: ஒற்றுமையை நாடுதல் 161
கொள்கை பதிமூன்று: கடவுள் மனிதருடன் செயலாற்றும் கால ஒழுங்குகளை பாருங்கள் 162
கொள்கை பதிநான்கு: தீர்க்கதரிசனத்தைக் குறித்துக் கவனமாக இருத்தல் 164

பகுதி 4	விதி நான்கு: கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதை நாடுங்கள்	166
	கொள்கை பதினைந்து: சரியான செயல்படுதல்	166
அத்தியாயம் 5	**தேவனுடைய ஆள்தத்துவம் பற்றிய கோட்பாடுகள்**	**171**
பகுதி 1	திரித்துவம்	172
பகுதி 2	தேவனுடைய பெயர்கள்	176
பகுதி 3	பிதாவாகிய தேவன் (பிதாவைப்பற்றித் தெரிந்துகொள்ளுதல்)	179
பகுதி 4	குமாரனாகிய தேவன் (கிறிஸ்துவைப் பற்றியவைகள்)	185
பகுதி 5	பரிசுத்த ஆவியானவராகிய தேவன்	196
அத்தியாயம் 6	**தேவனுடைய படைப்பின் கோட்பாடுகள்**	**205**
பகுதி 1	படைப்பு	206
பகுதி 2	தேவதூதர்கள்	207
பகுதி 3	மனிதன்	213
பகுதி 4	தேவதூதர்களோடு போராட்டம்	223
அத்தியாயம் 7	**தேவனுடைய திட்டத்தின் கோட்பாடுகள்**	**225**
பகுதி 1	வெளிப்படுத்தல்: திருமறை	226
பகுதி 2	பிரச்சினை: பாவம்	227
பகுதி 3	தீர்வு: இரட்சிப்பு	230
பகுதி 4	பாதுகாப்பு: தேவனுடைய வாக்குத்தத்தங்கள்	233
பகுதி 5	வருங்காலம்: தீர்க்கதரிசனம் (பரலோகம், நரகம் பற்றிய கொள்கை)	236
அத்தியாயம் 8	**தேவனுடைய நோக்கத்தைப் பற்றிய கோட்பாடுகள்**	**239**
பகுதி 1	தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கை	240
பகுதி 2	ஒன்றுபட்ட கிறிஸ்தவ வாழ்க்கை	250
அத்தியாயம் 9	**நிறைவேற்றுதல்**	**255**
	அறிமுகம்	256
பகுதி 1	இந்தப் புத்தகத்தோடு பரிச்சயமாகுதல்	257
பகுதி 2	இந்தப் புத்தகத்தின் சுருக்கமான வருணனை எழுதுவது	258
பகுதி 3	உங்கள் ஆய்வின் நோக்கத்தைக் குறுகியதாக ஆக்குவது	260
பகுதி 4	உறவுகளுக்காகப் பார்ப்பது	262
பகுதி 5	வேத வசனங்களை ஒப்பிட்டு நோக்குதல்	265
பகுதி 6	உங்கள் ஆய்வை விரிவுபடுத்துவது	267
பகுதி 7	குறிப்புகளை எழுதுவது	270
ஆசிரியரின் குறிப்பு		**271**
பதில்கள்		**272**
புத்தகங்களின் விவர அட்டவனை		**287**
புத்தக அகராதி		**289**
இறுதிக் குறிப்புகள்		**303**

அங்கீகாரம்

அகில உலக கிராம ஊழியங்களின் வழிநடத்துதல் அஸ்திபாரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்தஊழியங்க ளின்துவக்கத்திருந்தே உலகத்திலுள்ள கிராமங்களிலும் தொலைவிலுள்ள பகுதிகளிலும் இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிப்பதே இதன் நோக்க மாக இருந்து வந்திருக்கிறது. பெரும்பாலும் அருட் பணிக்கான வாய்ப்புகள் ஒரு குறுகிய காலத்துக்கே திறந்திருக்கின்றன. இந்தப் பகுதிகளிலுள்ள வரம்பெற்ற ஊழியர்களைக் கண்டுபிடித்து, வெளிநாட்டு ஈடுபாடுகள் முடிவுக்கு வந்த பிறகு அவர்கள் தொடர்ந்து வேதாகமப் போதனைகளைக் கொடுத்து, அவர்களை ஆயத்தப்படுத்தி, இயேசுகிறிஸ்து நமக்குக் கொடுத்துள்ள பிரதான கட்டளையின்படி, சீஷர்களை உருவாக்குவதே எங்கள் நிறுவனத்தின் இலக்காகும்.

இரண்டாம் மற்றும் மூன்றாம் அத்தியாயங்கள் ஜே. ஹாம்டன் கீத் எழுதிய ***சுருக்கமான பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு ஆய்வு*** என்ற நூலை ஆதாரமாகக் கொண்டு அவர்களின் அனுமதியுடன் தயாரிக்கப்பட்டுள்ளன:

www.bible.org

என்ற இணைய தளத்திருந்து நாம் கீத்யின் முழுமையான ஆய்வை எடுத்துப் பயன்படுத்தலாம்.

இந்த ஆய்வைப் பயன்படுத்துவதற்காக அகில உலக கிராம ஊழியங்கள் கீத்க்கு நன்றி கூறுகின்றது. இது உண்மையிலேயே வேதாகம ஆய்வுக்கு ஏற்ற மிகச் சிறந்த ஒரு உபகரணமாக இருக்கிறது. அவருடைய ஆய்வுகள் முந்தைய அஸ்திபாரங்கள் வெளியீடுகளுக்கேற்ப சிறுசிறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக வேதாகம கால விசயத்தில்.

பயிற்சி தேவைப்பட்டாலும், கிடைக்காத உலகின் பல பகுதிகளுக்கு வேதாகமப் பயிற்சி உபகரணங்களை அளிப்பதே அகில உலக கிராம ஊழியங்களின் (VMI) நோக்கமாகும். இந்த ஊழியத்தின்மூலமாக மிக வேகமாக எண்ணிக்கையில் அதிகரித்துவரும் சுதேசி போத கர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், ஆரோக்கியமான வேதாகமப் பயிற்சியையும் போதனை உபகரணங்களையும் கொடுத்து அவர்கள் ஊழியத்துக்கு திறமையான மற்றும் பலனுள்ள விதத்தில் ஆதரவளித்து வருகிறது.

இந்த உபகரணங்களைத் தயாரிப்பதில் அர்ப்பணிப்போடு முயற்சிசெய்த பலருக்கும் நாங்கள் நன்றிகூறுகிறோம். முதலாவதாகவும், முக் கியமாகவும் நாங்கள் தம்முடைய மகிமையினாலும் காருண்யத்தினாலும் நம்மை அழைத்து, ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய எல்லாவற்றையும் அருளிய (2 பேதுரு 1:3), நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவைத் துதிக்கிறோம். இரண்டாவதாக, இந்தத் தரிசன ம் நனவாகும்படி தங்கள் தாலந்துகளையும், நேரத்தையும், வரங்களையும் செலவிட்ட பலரையும் நினைவு கூருகிறோம். அவர்கள் கண் ணில் காணப்படாத ஆனால் முக்கியமான நாயகர்களாக இருக்கிறார்கள்.

முன்னுரை

அகில உலக கிராம ஊழியங்களின் ஆயத்தப்படுத்தும் செயல்திட்டத்தின் இந்தப் பகுதி அஸ்திபாரங்கள் என்று அழைக்கப்படுகிறது. தேவனுடைய வார்த்தையைப் புதிதாகக் கற்றுக்கொள்ளும் மாணவன் ***"நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளரும்படியாக"*** (2 பேதுரு 3:18) இது வடிவமைக்கப்பட்டுள்ளது. எனவே, அஸ்திபா ரங்கள் முழுவதிலும் தேவனுடைய வார்த்தையின் முக்கியத்துவத்தையும், ஆழத்தையும் புரிந்துகொள்ளுவதற்கு மட்டுமின்றி, மாணவன் தனது சொந்த ஆவிக்குரிய வாழ்க்கையில் வளர்ச்சி பெறுவதற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

மாணவன் தனது சொந்த ஆத்துமாவில் இந்தக் கொள்கைகளை ஏற்றுக்கொண்ட பிறகு, அவன் அதை மற்றவர்களுக்குப் போதிக்கும்படி, அவனை ஆயத்தப்படுத்தும்படியாகவும், இந்த அஸ்திபாரங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. பிரதான கட்டளையை நிறைவேற்றும்படி யாக, "சீஷராக்குவதற்கு" இது ஒரு விலைமதிப்பற்ற உபகரணமாக இருக்கிறது (மத்தேயு 28:18-20).

தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளும் ஒரு மாணவன் அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படைச் செய்திகள் இந்த நூல் கொடுக்கப்பட்டுள்ளன. "ஆரம்பித்தல்" என்ற முதல் அத்தியாயம் ஆவிக்குரிய ஆயத்தத்தின் முக்கியத்துவத்தை வயுறுத்துகிறது. பிறகு தேவனுடைய வார்த்தையைப் பற்றிப் பொதுவான பார்வையைக் கொடுக்கிறது.

மாணவனுக்கு ஒரு குறிப்பிட்ட புத்தகத்தை எழுதியது யார், எழுதப்பட்ட காலம், கருப் பொருள் என்பவைகளைப் பற்றிய பொதுவான தகவல் கொடுக்கும்படி இரண்டாம் மற்றும் மூன்றாம் அத்தியாயங்கள் வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு நூலைக் குறித்தும் சுருக்கமான ஆய்வைக் அளிகின்றன. நாம் வேதவசனங்களைப் புரிந்துகொள்ள நமக்கு உதவியாக இருக்கும்படி வடிவமைக்கப்பட்டுள்ள அர்த்தம் காணுதல் கொள்கைகளைப் பற்றி நான்காம் அத்தியாயம் மாணவர்களுக்கு எடுத்துக் கூறுகிறது.

ஐந்து முதல் எட்டு வரையிலான அத்தியாயங்கள் மாணவர்களுக்கு அடிப்படை இறையியலை எடுத்துக் கூறு கின்றன. வேதாகமச் சொற் கள் மற்றும் கருத்துப் படிவங்களின் சுருக்கமும் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரு வேதாகமப் பாடத்தை ஆயத்தம் செய்வதின் மூலம் தான் கற்றுக்கொண்டதை மாணவன் எவ்வாறு செயல்படுத்துவது என்பதைக் குறித்து ஒன்பதாம் அத்தியாயம் போதிக்கிறது.

தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள விசுவாச ஆவிக்குரிய வாழ்க்கையின் மூலமாக நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை முழுமையாக சார்ந்துகொள்ள அஸ்திபாரங்கள் உதவியாக இருக்க வேண்டும் என்பதே எங்கள் ஜெபமாகும்.

தேவனுடைய வார்த்தையைக் கற்கும் அற்புத அனுபவத்திற்கு உங்களை வரவேற்கிறோம்!

அத்தியாயம் 1

ஆரம்பித்தல்

பகுதி 1
தனிப்பட்ட ஆயத்தம்

A. தனிப்பட்ட வேத ஆராய்ச்சி செய்ய ஆயத்தப்படும்போது கடைப்பிடிக்க வேண்டிய ஆறு அடிப்படைக் கொள்கைகள்

1. இயேசு கிறிஸ்துவை நம்புங்கள்

வேத ஆராய்ச்சி செய்ய வேண்டுமானால் அதற்காக தனிப்பட்ட முறையில் ஆயத்தம் செய்வது மிக முக்கியமானது. மாணவன் (வேத ஆராய்ச்சியில் ஈடுபடுபவர்) முதலாவதாக இயேசு கிறிஸ்துவை தன் இரட்சகராக விசுவாசிக்க வேண்டும். ஏனென்றால் “ஜென்ம சுபாவமுள்ள மனிதனால்” (கிறிஸ்து அல்லாத மனிதன்) தேவனுடைய காரியங்களை ஏற்றுக்கொள்ளவோ, அறிந்து கொள்ளவோ முடியாது (1 கொரிந்தியர் 2:14). ஆகவே, இரட்சிப்பு கிறிஸ்துவின்மேல் மட்டுமுள்ள விசுவாசத்தினால் மாத்திரமே, (எபேசியர் 2:8–9). வேத வார்த்தையை ஆராயும் மாணவரை தேவஆவியானவர் ஆவிக்குரிய காரியங்களைப் பகுத்தறிய வழிநடத்துகிறார்.

2. வேதாகமம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என ஏற்றுக்கொள்ளுங்கள்

வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது என்று வேதம் கூறுகிறது (2 தீமோத்தேயு 3:16–17). எந்த ஒரு வேத ஆராய்ச்சியும் அந்த உண்மையை ஏற்றுக்கொள்வதின்மூலம் ஆரம்பிக்கப்பட வேண்டும். விசுவாசத்தை விட்டு “கடந்து” செல்லுதல் கூடாது; வேதாகமம், சத்தியமும் பிழையற்றதுமானது என்ற உண்மையை ஏற்றுக்கொள்வது போதும்.

3. ஜெபியுங்கள்

வேத வாக்கியங்களைப் புரிந்துகொள்ள ஜெபம் மிகவும் அவசியம். உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும் (யாக்கோபு 1:5) என வேதம் சொல்லுகிறது. சரியான அறிவையும் பகுத்துணர்வையும் கடவுளிடத்தில் உண்மையாய் கேட்கும் பொழுது அதற்கு நிச்சயம் பதில் உண்டு. ஏனென்றால், இவைகள் எல்லாம் கடவுளின் தெளிவான சித்தத்திற்குள்ளானவைகள் (1 யோவான் 5:14; மத்தேயு 7:7–8).

4. சிரத்தையோடும் (ஜாக்கிரதையோடும்) மற்றும் பொறுமையோடும் படியுங்கள்

இந்த வேதத்திலுள்ள அநேக பகுதிகளை உடனே நம்மால் புரிந்துகொள்ள முடியாது. அதனால் அவைகளைப் படிப்பதற்கு மிகுந்த முயற்சியும் பொறுமையும் அவசியம் (2 தீமோத்தேயு 2:15). குறைவுள்ள மனிதர்களாகிய நாம் குறைவற்ற, எல்லையற்ற கடவுளின் மனதை அறிய முயற்சிக்கும்போது, அதைக் கிரகித்துக்கொள்ள சற்று நேரம் எடுக்கும்.

5. தொடர்ந்து பாவங்களை அறிக்கை செய்தல்

நம்முடைய வாழ்க்கையைக் கடவுள் சுத்திகரிக்க அனுமதிக்கவும் அதன் மூலம் அவருடன் ஒரு பெரிய ஐக்கியம் கிடைக்கவும். பாவத்தைத் தொடர்ந்து அறிக்கை செய்ய வேண்டும். (1 யோவான் 1: 6–10). நம்முடைய பாவங்களை அறிக்கை செய்ய வேண்டிய அவசியத்தை உணர்ந்திருப்பது, தேவனுடைய சித்தமில்லாத எந்த சிந்தை, சொல், செயலைக் குறித்து தொடர்ந்து ஜாக்கிரதையாயிருக்க உதவுகிறது

6. தேவ சித்தத்தின்படி வாழத் தயாராயிருத்தல்

“அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவனெவனோ அவன் இந்த உபதேசம் தேவனால் உண்டாயிருக்கிறதோ, நான் சுயமாய்ப் பேசுகிறேனோ என்று அறிந்துகொள்ளுவான்” (யோவான் 7:17) என ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறியிருக்கிறார். ஜீவனுள்ள தேவனுடனுள்ள உறவை வளர்க்க வேண்டும் என்பது நீங்கள் வேதாகமத்தை ஆய்வு செய்வதன் நோக்கமாயிருந்தால், உங்களுடைய எந்த அறிவும் அந்த உறவுக்கு ஆதரவாயிருக்க வேண்டும். அன்பு இல்லாத அறிவு பெருமையை விளைவிக்கும் (1 கொரிந்தியர் 8:1). உங்கள் ஆராய்ச்சி வெறும் அறிவுக் கூர்மைக்கான ஆராய்ச்சியாயிருந்தால் நீங்கள் பெற்ற அறிவு குறைவானதாகவும், திரித்துக் கூறுவதாகவும் இருக்கும்.

B. தனிப்பட்ட வேதாகம தியானத்தினால் வரும் ஐந்து நன்மைகள்

1. அதிக விசுவாசம்

“நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கிறோம்” (2 கொரிந்தியர் 5:7) என்று திருச்சபையின் மிகப்பெரிய இறையியலராகிய பவுல் அப்போஸ்தலன் தம்மைப் பற்றி கூறியிருக்கிறார். எபேசியர் 2:8–9ல் பவுல் கூறியிருக்கிறபடி நாம் எல்லோரும் விசுவாசத்தினாலே கிருபையின்மூலம் இரட்சிப்புக்குள் நுழைகிறோம். நாம் நுழைந்தபடியே, நடக்கவும் வேண்டும் (கொலோசெயர் 2:6–7).

2. புதிய அறிவு

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளரும்போது தேவனுடைய வார்த்தையிருந்து புதிய அறிவைப் பெற்றுக்கொள்ளுகிறோம் (2 பேதுரு 3:14–18). இந்த அறிவு அவருடைய கிருபையை நாம் சரியாக அறிந்துகொள்ள உதவும். இந்த அறிவிலே வளருவதோடுகூட, வேத வசனத்தைக் “கேட்பதின்” மூலம் இந்த அறிவு நாம் அவரது கிருபையை இன்னும் நன்கு உணர்ந்துகொள்ள உதவுகிறது. நாம் விசுவாசத்திலும் வளர்ந்து, எல்லாவற்றிற்கும் அவரையே நம்புகிறோம் (ரோமர் 10:17).

3. நம்முடைய வாழ்க்கைக்கான பரிசுத்தம்

நம்முடைய வாழ்க்கையின் பரிசுத்தத்திற்கு கடவுளுடைய வார்த்தை மிகவும் அவசியம். ஏனென்றால், அவருடைய வார்த்தை உண்மையானது (யோவான் 17:17). நாம் விசுவாசிகளாயிருந்தாலும் நம்முடைய வாழ்க்கையில் பாவப் பிரச்சினைகள் உண்டு (1 யோவான் 1:6–10). ஆகவே, பாவத்தின் விளைவுகளைப் புரிந்துகொள்ள நாம் தேவனுடைய வசனங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு, பாவத்திருந்தும், வியாதிகளிருந்தும் விடுதலை பெறவும் பரிசுத்தமாகவும் நல்ல அறிவோடு ஜெபிக்கலாம் (சங்கீதம் 51). பல நேரங்களில் கிறிஸ்தவர்கள் கடவுளுடைய வார்த்தையுடன் இன்னும் “சிலவற்றை சேர்த்து,” இந்த சேர்க்கைகளை நீதியின் அடித்தளமாக்கி விடுகின்றார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். இது தான் “சட்டபூர்வமாக்குதல்” (legalism) என அழைக்கப்படுகிறது. அதாவது, மனிதர்கள் தங்களுடைய சொந்த நியாயத்தை நீதியாக நிர்மாணித்து விடுகிறார்கள். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இதை வெகுவாகக் கண்டிக்கிறார் (மாற்கு 7:1–13). ஆகவே, நாம் தேவனுடைய வார்த்தைக்கு மிகவும் கவனமாகவும், ஜாக்கிரதையாகவும் செவிகொடுக்க வேண்டும்.

4. **ஊழியத்தில் வல்லமை**
நாம் கிறிஸ்துவின் சிந்தையைப்பற்றி கற்கும்போது (1 கொரிந்தியர் 2:14-16) பரிசுத்த ஆவியானவர் நம் வாழ்வில் கிரியை செய்வதுடன், நம்முடைய ஊழியத்தில் வல்லமை இருக்கும் (எபேசியர் 2:10). சாத்தானோடும் அவனுடைய சேனையோடும் நமக்கு யுத்தம் உண்டு. ஆகவே, நம்முடைய சக்திக்கும் திறமைக்கும் அப்பாற்பட்ட வல்லமை நமக்குத் தேவை (எபேசியர் 6:10-18). இந்த வல்லமை நாம் கடவுளுடைய சித்தத்திற்கு அடிபணிவதின்மூலம் உண்டாகிறது. ஏனென்றால் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும், ***"செய்கையையும் உண்டாக்கி நம்மில் கிரியை நடப்பிக்கிறார்"*** (பிப்பியர் 2:13).

5. **ஊழியத்துக்கான சாதனம்**
இந்த ஆண்டவருடைய வார்த்தையின் அறிவோடு இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் சத்தியத்தை நடப்பித்து (கொலோசெயர் 3:16-17), காணாமற்போன மற்றும் அழிந்து கொண்டிருக்கும் உலகத்திற்கு அதை அறிவிக்க முடியும் (யோவான் 17:17-19; எபிரெயர் 5:2). ஆண்டவருடைய வார்த்தையை அறிவிப்பதன் முக்கிய நோக்கம் ***"பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, கிறிஸ்துவின் சபையாகிய சரீரம் பக்திவிருத்தி அடைவதற்காகவும்"*** (எபேசியர் 4: 11-13) மட்டுமேயாகும். மற்றவர்களைப் பணிக்காக ஆயத்தம் செய்யுமுன் நம்மையே நாம் தயார் செய்து கொள்ளவேண்டும்.

தனிப்பட்ட ஆராய்ச்சிக்காக: அத்தியாயம் 1, பாகம் 1

1. 1 கொரிந்தியர் 2:14ல் காணப்படுகிற ஜுஇயற்கையானடு என்பதற்கான கிரேக்க வார்த்தையான (ப்சுச்சிக்கோஸ்) 1 கொரிந்தியர் 15:44, 46; யாக்கோபு 3:15; யூதா 1:19 ஆகிய இடங்களிலும் (லௌகீக சிந்தை என்ற பொருளில்) காணப்படுகிறது. இந்த பகுதிகளை வாசித்து ஜுஇயற்கையானடு என்ற வார்த்தையை விளக்கவும்.

2. 2 தீமோத்தேயு 3:16-17ஐ வாசிக்கவும். தேவனுடைய வார்த்தையில் காணப்படும் நான்குவிதமா ஆதாயங்கள் என்ன? அதன் நோக்கம் என்ன?

3. ஞானத்தில் குறைவுள்ளவனுக்கு யாக்கோபு 1:5 கொடுக்கும் வாக்குதத்தம் என்ன?

4. 2 தீமோத்தேயு 2:15 ஐ வாசிக்கவும். தேவனுடைய வார்த்தையின் மாணவர்கள் என்ற முறையில் நாம் எவைகளைக் குறித்து கவனமாயிருக்கவேண்டும்.

5. 1 யோவான் 1:6-10ஐ வாசிக்கவும். நம்முடைய பாவங்களை அறிக்கைசெய்வதற்காகக் கொடுக்கப்பட்டுள்ள இரண்டுவிதமான வாக்குத்தத்தம் என்ன?

6. யோவான் 7:17 தேவசித்தத்தை அறிய ஒரு நிபந்தனையைக் கொடுக்கிறது. அது என்ன?

7. கொலோ 2:6-7 மற்றும் எபேசியர் 2:8-9ஐ வாசிக்கவும். நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறிக்கும் இரண்டு காரியங்கள் எவை?

8. 2 பேதுரு 3:14-18 ஐ வாசிக்கவும். நாம் வளரும்படிக்கு 14ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள கிறிஸ்தவ குணாதிசியம் என்ன? மற்றும் 18ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள இரண்டு காரியங்கள் எவை?

9. 1 யோவான் 1:6-10 க்குத் திரும்புங்கள். விசுவாசிகள் தங்கள் பாவங்களிருந்து சுத்திகரிக்கப்படும்படி அவர்களிடம் எதிர்பார்க்கப்படும். இரண்டு காரியங்கள் எவை?

10. எபேசியர் 6:10-18 ஐ வாசிக்கவும். உண்மையான எதிரிகள் யார் மற்றும் நாம் எப்படி போரிடவேண்டும்?

11. எபேசியர் 4:11-13 ஐ வாசிக்கவும் கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டி எழுப்புவதில் சொல்லப்பட்டுள்ள மூன்று காரியங்கள் எவை?

பகுதி 2
வேதாகமம்

A. வேதாகமம் என்பது என்ன?

1. வேதாகமம் என்பது எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை

வேதாகமம் ஒரு சாதாரண புத்தகம் அல்ல. சுமார் 1500 ஆண்டுகளுக்கிடையில் வாழ்ந்த 40க்கும் மேற்பட்ட ஆசிரியர்களால் எழுதப்பட்டது இது. இயேசு கிறிஸ்து இதை “புஸ்தகச்சுருள்” (The Book) (எபிரெயர் 10:7) என்று அழைத்தார். இந்த வேதாகமம் இல்லாமல் மனிதன் சரியான நீதியின் தரத்தையும், தன்னுடைய வாழ்க்கையில் கிருபை அவசியம் என்பதையும் அறிந்துகொள்ள முடியாது. தம்முடைய வார்த்தைகள் எழுதப்படவும் அதன் மூலம் தம்முடைய நியாயங்கள் மக்களுக்குத் தெளிவாக அறிவிக்கப்பட வேண்டும் என்பதும் ஆண்டவரின் நோக்கமாயிருந்தது. எழுதப்பட்ட இந்த வார்த்தையானது விசுவாசத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டும், சரித்திரத்தினால் நிரூபிக்கப்பட்டும் இருக்கிறது. மனிதன் ஜெபத்தின் மூலம் தேவனுடன் பேசுகிறான். எழுதப்பட்ட தம்முடைய வார்த்தையின் மூலம் தேவன் மனிதனுடன் பேசுகிறார்.

பெரும்பான்மையான மக்கள் மூல பாஷையிருந்து மொழிபெயர்க்கப்பட்ட வேதாகமத்தைப் பயன்படுத்துகிறார்கள். பழைய ஏற்பாட்டின் பெரும்பகுதி எபிரெய மொழியில் எழுதப்பட்டது. ஒருசில விதிவிலக்கு உண்டு. அதாவது தானியேல் 2–7 அதிகாரங்கள் மற்றும் எஸ்றா அதிகாரம் 4 முதல் 7 வரை. இந்த அத்தியாயங்கள் எபிரெய மொழியின் சகோதர மொழியான அரமேயு பாஷையில் எழுதப்பட்டது. இந்த அரமேயு மொழியானது, வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் பெரும்பான்மையான யூதர்களால் பேசப்பட்ட ஒரு மொழியாகும். புதிய ஏற்பாட்டின் பாகங்களெல்லாம் கோயினே (Koine) (பொதுவான) கிரேக்கு மொழியில் எழுதப்பட்டது.

பல்வேறு பகுதிகளை எளிதில் கண்டுபிடிக்க அதிகாரங்களும், வசனங்களும் மனிதனால் சேர்க்கப்பட்டன. ஆகவே, இவைகள் தேவனால் அருளப்பட்டவைகள் அல்ல; ஆனால் இப்பகுதிகள் தலைமுறை தலைமுறையாக எப்படி அறிந்து கொள்ளப்பட்டன என்பதை அறியக்கூடிய ஒரு உயர்ந்த நோக்கத்திற்கு உதவுகின்றன.

2. தேவனால் ஏவப்பட்ட வசனங்கள்

வேதாகமத்தின் ஒவ்வொரு தனித்தனிப் பகுதியும் தேவனால் ஏவப்பட்டது (2 தீமோத்தேயு 3:16–17), இவ்வாறாக இது நன்மை அளிக்கக்கூடியது. “ஏவப்படுதல்” என்பது மனிதனுடைய மனித அறிவு தெளிவு, வெளிப்பாடு, வெளிப்படுத்துதல் ஆகியவற்றிற்கும் அப்பாற்பட்டது. அது தெய்வீகமாக ஆரம்பிக்கப்பட்டது. அது மனிதன்மூலமாக வெளிப்படுத்தப்படுகிற “தேவனுடைய சுவாசமாகும்”.

3. ஜீவனுள்ள தேவனுடைய வசனங்களின் வெளிப்பாடு

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவாகிய தேவனுடைய ஜீவனுள்ள வசனங்களின் வெளிப்படுத்துதலால் வேதாகமம் எழுதப்பட்டது. “வெளிப்படுத்துதல்” என்பது புதிய செய்திகளைக் கொடுப்பது என்ற அர்த்தமுடையது. பரிசுத்த ஆவியானவர் நமக்குள் கிரியை செய்து, வசனங்களைக் கற்பவர்களுக்கு “தெளிவாக விளங்கச்” செய்கிறார். எழுதப்பட்ட வசனங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றிய தெய்வீக விளக்கமாகும் (எபிரெயர் 4:12; யோவான் 5:39–47).

நாம் கவனிக்க வேண்டிய முக்கியமான வித்தியாசங்கள் உள்ளன. காகிதமும், மையும் அந்த வல்லமையைப் பெற்றிருக்கவில்லை. எனினும் காகிதத்துக்கும் மைக்கும் பின்னாருக்கும் வல்லமை தேவ ஆவியால் ஏற்பட்டு, மக்களுடைய வாழ்க்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. அதை எழுதியவரைக் கண்டு பிரமிக்காமல் வசனங்களை வல்லமையுடைய வார்த்தைகளாகக் காண்பது (எபிரெயர் 12:2), குறிக்கோளைத் தவறவிடுவதாகும்.

B. வேதாகமத்தின் அமைப்பு

1. இரண்டு பெரிய பகுதிகள்

வேதாகமம் பழைய, புதிய என்ற இரண்டு ஏற்பாடுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் 30 வேறுபட்ட ஆசிரியர்களால் எழுதப்பட்ட 39 புத்தகங்களும், புதிய ஏற்பாட்டில் 10 ஆசிரியர்களால் எழுதப்பட்ட 27 புத்தகங்களும் உள்ளன. இவை இரண்டும் சேர்ந்து மொத்தம் 66 புத்தகங்கள் இருக்கின்றன. இவைகளில் 1,189 அதிகாரங்கள் உள்ளன. பழைய ஏற்பாட்டில் 929 அதிகாரங்களும், புதிய ஏற்பாட்டில் 260 அதிகாரங்களும் இருக்கின்றன. பழைய ஏற்பாட்டில் 23,214 வசனங்களும் புதிய ஏற்பாட்டில் 7,959 வசனங்களும் அடங்கியிருக்கின்றன (மொத்தம் 31,173 வேத வசனங்களிருக்கின்றன).

அதிக மதிப்புள்ள ஒன்றை ஒருவர் கொடுப்பதை மற்றவர் ஏற்றுக்கொள்ளும் ஒரு உடன்படிக்கை அல்லது ஒப்பந்தமே “ஏற்பாடு” ஆகும். எடுத்துக்காட்டாக, ஒருவர் ஏதாவது ஒரு பொருளை வாங்க விரும்பும்போது, ஒருவர் அதைக் கொடுப்பதாகக் கூற, அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது; அல்லது புறக்கணிக்கப்படுகிறது. கொடுக்கும் பொருளை ஒரு முறை ஏற்றுக்கொண்டதும், ஒரு உடன்படிக்கை அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்டுவிட்டது. இந்த இரண்டு தரப்பினர்களுக்குமிடையேயுள்ள உறவை செயல்படுத்தும் வாக்குறுதிகளாகும். இந்த உடன்படிக்கைக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு திருமணத்திற்காக எடுத்துக்கொள்ளும் வாக்குறுதியில் காணப்படுகிறது. இந்த வாக்குறுதி மணமகள் மணமகன் ஆகியோருக்கிடையில் உறவென்னும் அஸ்திபாரமாயிருக்கும் ஒரு உடன்படிக்கையாகும்.

பழைய ஏற்பாடு மேசியா வருவதைப்பற்றி மனிதனோடு தேவன் செய்துகொண்ட உண்மையான ஒப்பந்தங்களை அடக்கியது. இப்புத்தகத்தின் பிற்பகுதியில் உடன்படிக்கைகளைப் பற்றிப் படிப்போம்.

2. **பழைய ஏற்பாடு ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.**
   a. ‘‘தோரா’’ (எபிரெய மொழியில்) என்றழைக்கப்படும் சட்டம் அல்லது ‘‘பஞ்சாகமம்’’ (pentateuch) (கிரேக்கு மொழியில் ‘‘ஐந்து புத்தகங்கள் என அர்த்தம்)’’ இவைகள்: ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம்.
   b. வரலாற்று புத்தகங்கள் (பன்னிரெண்டு): யோசுவா, நியாயாதிபதிகள். ரூத், 1 சாமுவேல், 2 சாமுவேல், 1 இராஜாக்கள், 2 இராஜாக்கள், 1 நாளாகமம், 2 நாளாகமம், எஸ்றா, நெகேமியா, எஸ்தர்.
   c. கவிதைப் புத்தகங்கள் (ஐந்து): யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு.
   d. பெரிய தீர்க்கதரிசிகள் (ஐந்து): ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியேல், தானியேல்.
   e. சிறிய தீர்க்கதரிசிகள் (பன்னிரெண்டு): ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக். செப்பனியா, ஆகாய், சகரியா, மல்கியா.

3. **புதிய ஏற்பாட்டின் மூன்று பிரிவுகள்**
   புதிய ஏற்பாடு, மேசியாவின் வருகையையும், அதன் பிறகு அவர் உண்டாக்கிய புதிய உடன்படிக்கையையும் கூறுகிறது.

   புதிய ஏற்பாட்டு புத்தகங்களிலே பலவித தலைப்புகள் உண்டு. உதாரணமாக, வரலாற்று புத்தகங்களிலே சில தீர்க்கதரிசனமும் (மத்தேயு 24, மாற்கு 13, லூக்கா 21) உள்ளது. அதே போல தீர்க்கதரிசனப் புத்தகங்களிலே சில நிருபங்களும் (வெளி 2-3) உள்ளன. புதிய ஏற்பாடு 3 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவைகள்:
   a. ஐந்து வரலாற்றுப் புத்தகங்கள்: மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், அப்போஸ்தலருடைய நடபடிகள்
   b. 21 நிருபங்கள்: ரோமர், 1 கொரிந்தியர், 2 கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிப்பியர், கொலோசெயர், 1 தெசலோனிக்கேயர், 2 தெசலோனிக்கேயர், 1 தீமோத்தேயு, 2 தீமோத்தேயு, தீத்து, பிலேமோன், 1 யோவான், 2 யோவான், 3 யோவான், 1 பேதுரு, 2 பேதுரு, எபிரெயர், யாக்கோபு, யூதா.
   c. தீர்க்கதரிசனப் புத்தகம் (ஒன்று): வெளிப்படுத்தின விசேஷம்.

தனிப்பட்ட ஆய்வு: அத்தியாயம் 1, பாகம் 2

1. **எபிரேயர் 10:1-7ஐ வாசிக்கவும். எழுதப்பட்ட வார்த்தை செய்யக்முகூடாததது என்ன?**

2. **எபிரேயர் 10:1-7 ருந்து எழுதப்பட்ட வார்த்தையின் நோக்கம் யாது?**

3. **2 தீமோத்தேயு 3:16-17 ஐ வாசிக்கவும். ஏவப்பட்ட தேவனுடைய வார்த்தை எதற்கு பிரயோஜனமுள்ளது?**

4. **2 தீமோத்தேயு 3:17 ன்படி வேதவாக்கியங்களின் இரண்டு வகையான நோக்கம் என்ன?**

5. **யோவான் 5:39-47 ஐ வாசிக்கவும் வேதவசனங்களைப் படிக்கிறவர்களுக்கு என்ன எச்சரிக்கை இயேசு கொடுக்கிறார்?**

6. **ஒரு “உடன்படிக்கை” அல்லது ஒரு “ஏற்பாட்டின்” முக்கிய அம்சங்கள் எவை?**

7. **பழைய ஏற்பாட்டின் ஐந்து பிரிவுகள் எவை?**

8. **பெரிய தீர்க்கத்தரிசிகளையும் சிறிய தீர்க்கத்தரிசிகளையும் தீர்க்கத்தரிசிகள் என்று குறிப்பிடலாமா?**

9. **புதிய ஏற்பாட்டின் மூன்று பிரிவுகள் எவை?**

பகுதி 3
ஒனூ வரலாற்திக் கண்ணோட்டம்

வேதாகமம் ஒரு நீண்ட கால இடைவெளியில், பல ஆசிரியர்களால் எழுதப்பட்டிருந்தபோதும் ஒன்றுக்கொன்று இசைவாய் இருப்பது அதன் அழகை வெளிப்படுத்துகிறது. வரலாறு கடந்த காலத்தில் நடந்த சம்பவத்தையே நோக்குகிறது.

கீழே கொடுக்கப்பட்டுள்ள சம்பவங்களின் கிரம வரிசை, மனித வரலாற்றிலே அற்புதமான கதையின் ஆரம்பத்தையும் முடிவையும் தெளிவாகக் காட்டுகிறது. பல நூற்றாண்டுகளாக தத்துவ மேதைகள் கேட்கும் கேள்வியான ''நாம் ஏன் இங்கு இருக்கிறோம்?'' என்பதற்கான பதிலையும் சில ஆழ்ந்த அறிவையும் நாம் பெறலாம்.

மேலோட்டமான கருத்து கீழே கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது நமக்கு முன் தேவன் வைத்துள்ள வேதத்தின் மிகப்பெரிய வரலாற்று நிகழ்ச்சிகளிருந்து சிலவற்றைக் கற்றுக்கொள்வோம். பிறகு, தேவனுடைய அற்புதமான திட்டத்தின் கருத்தினைக் காண்போம்.

A. நிகழ்ச்சிகளின் விளக்கம்

1. **படைப்பு**

வேதத்தின் ஆரம்பத்திலேயே வானம் பூமியின் சிருஷ்டிப்பை ஆதியாகமம் விளக்குகிறது (ஆதியாகமம் 1:1; 2 பேதுரு 3:6). கடைசிப் புத்தகமான வெளிப்படுத்தின விசேஷம், ஆரம்பத்தில் இருந்த படைப்பு அழிந்து, ''புதிய வானமும் புதிய பூமியும்'' (வெளிப்படுத்தல் 21-22) உருவாக வழிவகுக்கிறது.

2. **சாத்தானின் எதிர்ப்பு**

மனிதனைக் தேவன் உருவாக்குவதற்குச் சற்று முன்பு, சாத்தான் தேவனை எதிர்த்தான் (ஏசாயா 14:12-14; எசேக்கியேல் 28). இந்த முதல் கலகத்தின் நோக்கம் வேதாகமம் முழுவதும் மிகவும் துல்யமாக விவரிக்கப்பட்டுள்ளது. அதைப்பற்றிய எல்லாப் பகுதிகளும் எளிதாய் அறிந்துகொள்ள முடியாது. நாம் அறிந்துகொண்டது என்னவென்றால், மனிதனின் படைப்புக்கு முன்பு கடவுளுக்கும் சாத்தானுக்கும் இடையே ஒரு தீவிர போர் நடந்தது (வெளிப்படுத்தல் 12). சாத்தானின் கடைசி எதிர்ப்பு பூமியில் இயேசு கிறிஸ்துவின் ஆயிர வருட அரசாட்சிக்குப் பின்பு, அதாவது புதிய வானம் மற்றும் புதிய பூமியின் சிருஷ்டிப்புக்கு முன்பு நடைபெறும். (வெளிப்படுத்தல் 20:7-10).

3. **பூமியும் சூரியனும்**

மனிதன் இருப்பிடமாகக் கொள்ளும்படி பூமியைக் கடவுள் ஆயத்தப்படுத்தியிருந்தார். ஆதியாகமம் 1:2-2:3 வசனங்களிலே பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது எனக் காண்கிறோம். அதாவது ''யாரும் வசிக்காமல்'' ''மக்களற்று'' இருந்தது. பிரச்சினை என்னவென்றால், சாத்தான் தானாகவே புகுந்து தேவனிடம் சவால் விடுக்க வகை தேடிக்கொண்டிருந்தான். ஆயிர வருட அரசாட்சியின்போது ஆண்டவர் சாத்தானைக் கட்டி வைக்கும்போது (வெளிப்படுத்தல் 20:1-3) தேவன் இன்னொரு முறை மனிதனுக்காக பூமியைப் பூரணப்படுத்துவார் (ஏசாயா 60-66).

4. **முதல் மற்றும் கடைசி ஆதாம்**

முதல் மனிதனாகிய ஆதாம் சர்வ சிருஷ்டிப்புக்கும் தலையாயிருந்தான் (ஆதியாகமம் 1:28; 2:4-25). ஏதேன் தோட்டத்தைப் பராமரிக்கவும், நிலத்தைப் பண்படுத்தவும் அவன் அங்கே வைக்கப்பட்டான். கடைசி ஆதாமாகிய இயேசு கிறிஸ்து (1 கொரிந்தியர் 15:45), ஆயிரம் வருடம் அரசாளுவார் (வெளிப்படுத்தல் 20:4). அதாவது அவருக்குப்பின் எவரும் அவரைப்போல் பூரண மனிதராய் இருக்க மாட்டார்கள்.

5. **சாத்தானுடன் மனிதனின் யுத்தம்**

ஆதாம் ஏதேன் தோட்டத்திலே விழுந்தபோது, ''இவ்வுலகத்தின் அதிபதியாகிய'' (ஆதியாகமம் 3; யோவான் 12:31; 16:11) சாத்தானுக்கு கீழ்ப்பட்டுவிட்டான். ஆயிர வருட ஆட்சி ஆரம்பிக்குமுன் தேவன் சாத்தானை கிறிஸ்துவின் ஆட்சிக்குக் கீழ் கொண்டு வருவார் (வெளிப்படுத்தல் 20:1-3).

6. **எல்லா மனித குலமும் நியாயந்தீர்க்கப்படும்**

மனிதன் தீமையில் இறங்க தேவன் அனுமதிக்கிறார். ஆனால் கடைசில் அவர் எல்லா மனுக்குலத்தோடும் இடைபடுவார். ஆதியாகமம் 4-10 அதிகாரங்களிலே, மகா பெரிய ஜலப்பிரளயத்திற்கு எது வழிநடத்தியது எனக் காண்கிறோம். இது மனித குலத்தின் கீழ்ப்படியாமையின் நிமித்தம் தேவனுடைய மனஸ்தாபத்தினால் நிகழ்ந்தது (ஆதியாகமம் 6:1-13). ஏழு வருடங்களுக்குப் பின் உண்டாகும் மகா உபத்திரவத்திற்குப் பிறகு இயேசு கிறிஸ்து இரண்டாம் வருகையில் வரும்போது தேவன் எல்லா மனுக்குலத்தோடும் இடைபடுவார். அந்நேரத்தில் அவர் மனுக்குலத்தை ''செம்மறியாடுகளாகவும்'' (விசுவாசிகள்) ''வெள்ளாடுகளாகவும்'' (அவிசுவாசிகள்) பிரிப்பார் (மத்தேயு 25:31-46).

7. **பாபிலோன்**

நோவாவின் ஜலப்பிரளயத்திற்குப் பின்பு, பூமியானது மக்களால் நிரப்பப்பட்டது. ஆனால் வெகு விரைவில் மக்கள் ஆண்டவரை விட்டுவிட்டு, தவறான வழியில் திரும்ப ஆரம்பித்தார்கள். பாபிலோனிலே பாபேல் கோபுரம் கட்டப்பட்டது. இது

தங்களைத் தாங்களே பாதுகாத்துக்கொள்ள மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகும். தாங்கள் உயரமாக ஒரு கட்டிடத்தைக் கட்டிவிட்டால் தேவனுடைய கோபாக்கினைக்குத் தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைத்தனர் (அதாவது வெள்ளம் போன்ற தாக்குதல்கள்) மனிதர் தங்களைத் தாங்களே சார்ந்துகொள்ள வழிவகுக்கும். இந்த முறை னுமனிதத்துவம்து (humanism) எனப்படுகிறது. கிறிஸ்தவம் மட்டுமே மனிதனால் தன்னைத்தானே இரட்சித்துக் கொள்ள முடியாது என்பதை உணர்ந்துள்ளது. ஆம்; நம் பாவத்தைப் போக்க நமக்கு ஒரு இரட்சகர் வேண்டும். சில மனித இயல்புகள் ஜீவனுள்ள தேவனுக்கு எதிராக உள்ளன. இவற்றை பாபிலோனியர், தீரு ஆகியோர் வாழ்க்கையில் காணலாம் (ஏசாயா 47). அந்தத் தன்மை இன்றும் நம்மில் உண்டு. அதே தன்மைகளை உலக சமயங்களிலும் காணலாம். அவைகள் மனிதன் சிறிது சிறிதாக மேல் நோக்கி சென்று தேவனை அடையும் வழியைத் தேடினால் தன்னை இரட்சித்துக் கொள்ளலாம் என்று நம்புகின்றன. ''உபத்திரவ'' காலத்தின் போது தேவன் பாபிலோனிய இயக்கங்களை அழித்து விடுவார் (வெளிப்படுத்தல் 17-18).

8. **இஸ்ரவேல்**

பாபேருந்து மக்களை சிதறடித்து, அவர்களுக்கு பலவிதமான மொழிகளைப் பகிர்ந்து கொடுத்த பின்பு, தேவன் ஆபிரகாமை னுஇஸ்ரவேல்து என்ற ஒரு புது ராஜ்யத்திற்கு ஸ்தாபகராக அழைத்தார் (ஆதியாகமம் 12). அற்புத பிறப்பான ஆபிரகாமின் மகன் ஈசாக்கு, மற்றும் பேரன் யாக்கோபு மூலமாக தேவன் ஆபிரகாமுடன் வரப்போகின்ற மேசியாவைக் குறித்து உடன்படிக்கை செய்தார் (ஆதியாகமம் 22:1-18; 28:14). கடைசியில், இஸ்ரவேல் ஜனங்கள் விக்கிரக ஆராதனையால் தங்கள் சொந்த இடத்திருந்து பிரிக்கப்பட்டு உலக முழுவதும் சிதறடிக்கப்பட்டார்கள். ஆனாலும் தேவனுடைய உடன்படிக்கை மாறவில்லை. உபத்திர காலத்திற்கு பிறகு இஸ்ரவேல் ஜனங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதமாக மீண்டும் சேர்க்கப்பட்டு ஆயிர வருட ஆட்சியில் ஆசீர்வதிக்கப்படுவார்கள் (மத்தேயு 24:29-31).

9. **இயேசுவின் வருகை**

இயேசுவின் முதலாம் வருகை ஏற்ற காலத்தில் தேவனுடைய திட்டத்தின்படி சரித்திரத்தில் நடந்தது. 1 தீமோத்தேயு 2:6; மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிசேஷங்களில் இயேசுவின் அற்புதமான பிறப்பு, ஊழியம் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைக் குறித்துக் காண்கிறோம். மிகவும் அழகாக ஏசாயா 53ல் முன்கூறப்பட்டதுபோல இயேசு கிறிஸ்து ''பாடு அனுபவிக்கிற தாசனாக'' வருகிறார். இயேசுவின் இரண்டாம் வருகை உபத்திர காலத்திற்கு பிறகு ஏற்படும். அப்பொழுது இயேசு கிறிஸ்து உண்மையாக தம்முடைய பாதத்தை இந்தப் பூமியில் வைத்து, தம்முடைய எதிரிகளை மேற்கொள்ளுவார் (சகரியா 14:1-8; வெளிப்படுத்தல் 19:11-19). இவ்வாறாக ஆயிர வருட ஆட்சியைத் துவக்கிவைப்பார். இரண்டாம் வருகையில் இயேசு ''ஜெயங்கொள்கிற ராஜாவாக'' வருவார்.

10. **எதிர் ஊழியங்கள்**

சுவிசேஷங்கள் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், இயேசு கிறிஸ்துவின் பொது ஊழியத்தைக் குறித்து அழகாக வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்துவின் ஊழியம் மற்றவர்களுக்காகச் செய்யப்படுகிற ஒரு ஊழியமாக இருந்தது (மத்தேயு 20:28). இயேசுவின் ஊழியத்துக்கு முற்றிலும் மாறுபாடாக எதிரிடையாக அந்திக் கிறிஸ்துவின் ஊழியம் இருக்கிறது. (அந்திக் கிறிஸ்து ''கேட்டின் மகனாகிய பாவமனுஷன்'' என்றும் அறியப்படுகிறான்). அவன் தனக்குத் தான் ஊழியம் கொள்கிறவனாகவும், எல்லோருடைய கவனத்தை தன்பால் ஈர்க்கிறவனாகவும், எல்லோரும் தன்னையே ஆராதிக்க வேண்டும் என்ற நோக்கமுடையவனாகவும் இருப்பான்.

11. **சபை**

இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுந்து, பரமேறி பிதாவின் வலது பாரிசத்தில் இருந்த பின்பு சபை இயேசு கிறிஸ்துவின் பலி மூலம் உண்டாகிய பாவ மன்னிப்பாகிய நற்செய்தியை பரப்புவதற்காக அழைக்கப்பட்டது (அப்போஸ்தல நடபடிகள்). சபையாகிய, இந்த மணவாட்டி, மணவாளன் இயேசு கிறிஸ்துவுடன் கல்யாணத்திற்கு அழைக்கப்படும் வரை எல்லா ஜாதிகளையும் சீடராக்கும் கடமையைச் சுமக்கின்றது (1 தெசலோனிக்கேயர் 4:13-18; 1 கொரிந்தியர் 15:50-58; வெளிப்படுத்தல் 19:7-10).

B. சுருக்கம்

சற்று முன்பு விளக்கப்பட்ட சம்பவங்களை நன்கு கவனித்தால், ஆச்சரியமான, ஒரு ஒத்த பரிமாண அமைப்பைக் காணலாம். முதல் மனித சரித்திரம் உண்டானதையும், திரும்பவும் அதே வரிசையில் நிகழப் போகிறவற்றையும் விளக்குகிறது. எண்களை அதே எண்களோடு பொருத்தினால் நாம் பரந்த கண்ணோட்டத்தில் தேவனுடைய திட்டத்தை காணலாம்.[1]

1. வானத்தையும் பூமியையும் உருவாக்குதல் ஆதியாகமம் 1:1; 2 பேதுரு 3:6
2. சாத்தானுடைய முதல் கலகம் ஏசா்ா 14:12-14; எசேக்கியேல் 28
3. பூமி மனிதனுக்காக தயாராகப்பட்டது ஆதியாகமம் 1:1-2:3
4. முதல் ஆதாமின் அதிகார தலைமைத்துவம் ஆதியாகமம் 2:4-25
5. மனிதன் சாத்தானுக்கு அடிமையாதல் ஆதியாகமம் 3
6. மனித வர்க்கம் நியாயந்தீர்க்கப்படுதல் ஆதியாகமம் 4-10
7. பாபேல் கோபுரத்தின் கட்டுமானம் ஆதியாகமம் 11
8. இஸ்ரவேல் ஒரு தேசமாக அழைக்கப்படுதல் ஆதியாகமம் 12
9. இயேசுவின் முதல் வருகை மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான்
10. இயேசு கிறிஸ்துவின் ஊழியம் மத்தேயு, மாற்கு லூக்கா, யோவான்
11. சபை அழைக்கப்படுதல் அப்போஸ்தல நடபடிகள்
11. சபை எடுக்கப்படுதல் 1 தெசலோனிக்கேயர் 4:13-18; 1 கொரிந்தியர் 15:50-58
10. அந்திக் கிறிஸ்துவின் ஊழியம் 2 தெசலோனிக்கேயர் 2:1-12, வெளிப்படுத்தல் 6-16
9. இயேசுவின் இரண்டாம் வருகை வெளிப்படுத்தல் 19:11-19
8. இஸ்ரவேல் மீண்டும் சந்ததியாக சேர்க்கப்படுதல் மத்தேயு 24:29-31
7. பாபிலோனுடைய நிறுவனங்கள் அழிக்கப்படுதல் வெளிப்படுத்தல் 17-18
6. எல்லா மனிதர்களும் நியாயந்தீர்க்கப்படுதல் மத்தேயு 25:31-46
5. சாத்தான் இயேசுவுக்குக் அடிமையாதல் வெளிப்படுத்தல் 20:1-3
4. இரண்டாம் ஆதாமின் அதிகார தலைமைத்துவம் வெளிப்படுத்தல் 20:4
3. பூமி மனிதனுக்காக, குறையற்றதாக புதுப்பிக்கப்படுதல் ஏசாயா 60-66
2. சாத்தானின் கடைசி கலகம் வெளிப்படுத்தல் 20:7-10
1. புதிய வானம், புதிய பூமி சிருஷ்டிக்கப்படுதல் வெளிப்படுத்தல் 21-22

தனிப்பட்ட ஆய்வு: அத்தியாயம் 1, பாகம் 3

1. வாசிக்கவும்: ஆதியாகமம் 1-2 மற்றும் வெளிப்படுத்தல் 21-22 அவை எதை வெளிப்படுத்துகின்றன.

2. வாசிக்கவும்: ஏசாயா 14:12-14 மற்றும் வெளிப்படுத்தல் 20:7-10 சாத்தானின் ஆதி பாவம் என்ன? அவனுடைய முடிவு என்ன?

3. வாசிக்கவும்: ஆதியாகமம் 1:2, 2:3 மற்றும் ஏசாயா 60-66 ஆதியாகமத்தில் பூமி பரிபூரணமாகச் சிருஷ்டிக்கப்பட்டது, ஆனால் ஆதாமின் வீழ்ச்சியினால் அது குறைவுள்ளது. ஏசாயா எதைக் குறிக்கிறது?

4. வாசிக்கவும்: ஆதியாகமம் 3; 1 கொரிந்தியர் 15:45 மற்றும் 1 பேதுரு 2:22-24. முதல் மனிதனாகிய ஆதாமாகிய ஆதாமுக்கும் கடைசி ஆதாமாகிய இயேசு கிறிஸ்துவிற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

5. வாசிக்கவும்: எபேசியர் 6:10-18. யார் நம்முடைய எதிரிகள் மேலும் நாம் எப்படி போரிடுகிறோம்?

6. வாசிக்கவும்: ஆதியாகமம் 6:1-13 மற்றும் மத்தேயு 25:31-46. இந்த அதிகாரங்களின் பொதுவான கருப்பொருள் என்ன?

7. வாசிக்கவும்: வெளிப்படுத்தல் 17-18. மனித நேயமே பாபிலோனிய மதமாகும், அர்த்தம் என்னவென்றால் மனிதஇனம் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளமுடியும். இந்த அதிகாரங்களில் உள்ள எல்லா அடையாளங்களையும் கண்டுபிடிக்க முயற்சி செய்யாமல் அது தன்னை வெளிப்படுத்தும் இரண்டு முக்கிய வழிகளைக் கண்டுப்பிடியுங்கள்.

8. வாசிக்கவும்: ஆதியாகமம் 12:1-3, எபிரேயர் 11:8-12 மற்றும் வெளிப்படுத்தல் 20:10-17. ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் எப்போது முழுமையாக நிறைவேறும்?

9. வாசிக்கவும்: ஏசாயா 53, சகரியா 14:1-8 மற்றும் வெளிப்படுத்தல் 19:11-19. மிக எளிமையாக இயேசு கிறிஸ்துவின் முதலாம் மற்றும் இரண்டாம் வருகையை விவரி.

10. வாசிக்கவும்: 2 தெசலோனிக்கேயர் 2:1-12 மற்றும் மத்தேயு 20:28. இயேசு கிறிஸ்து மற்றும் அந்திக்கிறிஸ்துவின் ஊழியத்திற்கு இடையிலுள்ள பெரிய வித்தியாசம் என்ன?

11. வாசிக்கவும்: மத்தேயு 28:18-20; அப்போஸ்தலர் 1:8; 1 தெசலோனிக்கேயர் 42:13-18. சபையானது கர்த்தரைச் சந்திக்க அழைக்கப்படும் வரை அதன் வேலை என்ன?

பகுதி 4
ஒனூ காலவயீசை கண்ணோட்டம்

பல்வேறான முக்கிய சரித்திர சம்பவங்களின் சீரமைப்பையும் அதின் காலங்களையும், அதின் உறவுகளையும் வேதபாட மாணவன் கண்டிப்பாக அறிய வேண்டும். இந்தப் பகுதி மூன்று வரிசைகளை அளிக்கிறது. முதல் வரிசை வேதத்தில் காணப்படுகின்ற 10 முக்கிய சம்பவங்களையும் அதின் காலத்தையும், அதின் முக்கியத்தின் சுருக்கத்தையும் கொடுக்கிறது. இரண்டாவது பட்டியல் பழைய ஏற்பாட்டின் முக்கிய சம்பவங்களையும், அவைகளைக் கூறுகின்ற வேத புத்தகங்களையும் அடையாளப்படுத்துகிறது. மூன்றாவது பட்டியல் புதிய ஏற்பாட்டின் புத்தகங்களின் தொடர் வரிசையை அளிக்கிறது.

கி.மு. (B.C.) என்று கொண்டுள்ள காலங்கள் இயேசு கிறிஸ்துவின் பிறப்புக்கு முந்திய காலங்களை குறிக்கின்றது. கி.பி. (A.D.) என்பது இயேசு கிறிஸ்துவின் பின்புள்ள காலங்களை, வருடங்களை குறிக்கின்றது. இது லத்தீன் மொழியிருந்து எடுக்கப்பட்டது. இதன் விரிவு Anno Domini, ''நமது கர்த்தருடைய வருடத்தில்'' என்கின்ற அர்த்தம்.

தேவனுடைய வார்த்தையை சொற்களுக்கு நேராகச்செய்த மொழிபெயர்ப்பின் அடிப்படையில் காலங்கள் தீர்மானிக்கப்பட்டுள்ளன. தேவனுடைய வார்த்தையை படித்த அநேகர் தற்போது கூறமுடியாத அநேக காரணங்களா ய் வித்தியாசமான காலங்களை குறிப்பிட்டுள்ளன ர். இது எந்த குழப்பத்தையும் தருவதில்லை. சம்பவங்களின் காலத்தொடர்ச்சியை அறிந்து கொள்வதே இந்தப் பகுதியின் முக்கிய பங்கு.

அஸ்திபாரங்கள் என்ற நூன் முந்திய பதிப்புகள் ஆதியாகமம் 11:26 –12:5 வரை குறிப்பிடப்பட்டிராத 60 ஆண்டுகளைப் பற்றி தெரிவிக்கத் தவறிவிட்டன. ஆனால் அப்போஸ்தலர் நடபடிகள் 7:4ல் குறிப்புகள் உள்ளன. தேராகு மரித்தபின் ஆபிரகாம் ஆரோனை விட்டு புற ப்பட்டான் என்று அப்போஸ்தலர் நடபடியில் கூறப்பட்டுள்ளது. தேராகு ஆரோனில் 205 வயதில் மரித்தான் (ஆதியாகமம் 11:32) என்றும் தேராகு மரித்தபின் (அப்போஸ்தலர் 7:4) ஆபிரகாம் ஆரோனை விட்டுப் புறப்பட்டான் என்றும் அறிகிறோம். ஆபிரகாம் பிறந்தபோது தேராகுக்கு 130 வயது. ஆதியாகமம் 11:26 நாகோர் அல்லது ஆரோன், பெரும்பாலும் ஆரோன் (ஆதியாகமம் 11:28) இவர்கள் பிற ப்பையே ஆதியாகமம் 11:26ல் சொல்லப்பட்டுள்ள 70 ஆண்டுகளைக் குறிக்கிறது. ஒவ்வொரு வேதாகம மாணவனும் வேதவசனங்களை வேதவசனங்களோடு ஒப்பிட்டு கற்று வருகிறதைத் தொடர்ந்தால் தேவையான வினக்கத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

A. பத்து முக்கிய சம்பவங்களும் அதின் காலமும்

1. **ஆதாமின் வீழ்ச்சி (கி.மு. 3958)**

   வேத வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள மனித பரம்பரையின் சரியான வியாக்கியானத்தில் ஆதாமின் வீழ்ச்சி ஏறத்தாழ கி.மு. 3958 க்கு நாம் வருவோம். ஆதாம் என்ற ஆரம்ப புள்ளியிருந்து முன்னோட்டமாக காலகட்டங்களைக் கூட்டியும் சாலொமோ னின் 4வது வருடத்திருந்து (1 இராஜாக்கள் 6:1) பின்னோட்டமாக காலகட்டங்களையும் கூட்டி, தேதிகளை நிர்ணயிக்களாம். வேத வரிசை இந்த வழியில் கொடுக்கப்பட்டிருக்கிறது. வேத சம்பவங்களை தெரிந்த உலக சரித்திர தேதிக ளுடன் ஒப்பிடும் பொழுது நாம் உலக சரித்திரத்தையும் வேத சரித்திரத்தையும் ஒன்றாக்கி தேதிகளை கண்டுபிடிக்கலாம்.

2. **நோவாவின் ஜலப்பிரளயம் (கி.மு. 2302)**

   ஆதியாகமம் ஐந்தாம் அதிகாரத்திலுள்ள தலைமுறைகளைக் கணக்கில் கொண்டால் நாம் ஆதாமினுடைய வீழ்ச்சியிருந்து, நோவா வரைக்கும் 1,656 வருட இடைவேளையை காணலாம். இப்படியாக கணக்கிடும்போது ஜலப்பிரளயம் (கி.மு. 2302 க்கு வருகிறது).

3. **ஆபிரகாமோடு வாக்குத்தத்தம் (கி.மு. 1875)**

   ஆதியாகமம் 11:10–26ல் கொடுக்கப்பட்டுள்ள தலைமுறைகளின் கணக்கின்படி, ஜலப்பிரளயத்திற்குப் பிறகு 352 வருடத்தில் ஆபிரகாம் பிறந்தான் அல்லது ஆதாமுக்குப் பின் 2,008 வருடம் கழித்து ஆபிரகாம் பிறந்தான். இது ஆபிரகாம் கி.மு. 1950ல் பிறந்தான் என்பதை குறிக்கிறது. ஆதியாகமம் 12:4 ருந்து ஆபிரகாம் தேவனிடமிருந்து வாக்குத்தத்தத்தைப் பெற்று அது ஆபிரகாமின் உடன்படிக்கையா னபோது அவனுக்கு 75 வயதாயிருந்தது என்பதை அறிகிறோம், இதன்படி கி.மு.1875 வில் ஆபிரகாமோடு வாக்குத்தத்தம் செய்யப்பட்டது.

4. **இஸ்ரவேன் யாத்திரை (கி.மு. 1445)**

   ஆபிரகாமின் நேரடியான சந்ததிகளைக் குறித்துள்ள விவரங்களை ஆதியாகமம் 12–50 நமக்கு வெளிப்படுத்துகிறது. ஆபிரகாமுடைய பேரன் யாக்கோபினுடைய பிள்ளைகள் எகிப்திற்கு கடந்து போனார்கள். அங்கு அவர்கள் கடைசியாக எகிப்தியர் களால் அடிமையாக்கப்பட்டார்கள் (யாத்திராகமம் 1). தேவன் அவர்களை எகிப்தியரின் அடிமைத்தனத்திருந்து மோசேயின் கரத்தினால் விடுவித்தார். ஆபிரகாமின் உடன்படிக்கையிருந்து, நியாயப்பிரமாணம் கொடுக்கும் காலம் வரைக்கும் 430 வருடங்கள் கடந்திருந்தது என்று அப்போஸ்தலன் பவுல் இடைப்பட்ட காலத்தைக் குறித்துக் கூறுகிறார் (கலாத்தியர் 3:17). இது இஸ்ரவேன் யாத்திரை 1445 கி.மு. என தேதியிடுகிறது அல்லது ஆதாமிற்கு பிறகு 2,438 வருடங்கள் எனக் குறிக்கின்றது.

5. **சாலொமோனின் நான்காம் வருடம் (கி.மு. 965)**

   சாலொமோன், அவன் தகப்பன் தாவீது ராஜா மற்றும் சவுல் ராஜாவை தொடர்ந்து, இஸ்ரவேன் மூன்றாவது ராஜாவாக இருந்தான். இஸ்ரவேன் யாத்திரையிருந்து தேவாலயத்தைக் கட்டத் தொடங்கிய சாலொமோனின் 4ஆம் வருடம் வரைக்கும் 480 வருடங்கள் கழிந்திருக்கின்றது என்று 1 இராஜாக்கள் 6:1 நமக்கு கூறுகின்றது. இப்படியாக கணக்கீடு கி.மு. 965 என சாலொமோனின் 4ஆம் வருடத்தை குறிக்கிறது அல்லது ஆதாமிற்குப் பிறகு 2,918 வருடங்கள் எனக் குறிக்கின்றது.

மற்ற சரித்திர ஆதாரங்களிருந்து சாலோமோனின் 4ஆம் வருடத்தை நாம் கணக்கிடலாம். இது ஒரு தேதியை உறுதிப்படுத்தவும் அதிருந்து பின்னோக்கிக் கணக்கிட்டு யாத்திராகமம், ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம், நோவாவின் வெள்ளம் மற்றும் ஆதாம் போன்றவர்களுக்கு முன்பு குறித்துள்ள தேதியை உறுதிப்படுத்த உதவுகிறது. கடந்த 100 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியில் உலக சரித்திரத்தின் கி.மு. தேதிகளில் சில மாற்றங்கள் செய்யும்படி தள்ளப்பட்டார்கள். பல்வேறு மாறுபட்ட தேதிகள் காணப்படுவதற்கு காரணம் இப்பகுதியே.

6. **வடராஜ்யத்தின் வீழ்ச்சி (கி.மு. 721)**
சாலொமோன் ராஜாவிற்குப் பிறகு இஸ்ரவேல் இரண்டாகப் பிரிக்கப்பட்டு வட ராஜ்யம் இஸ்ரவேல் என்றும் தென் ராஜ்யம் யூதா என்றும் அறியப்படுகிறது. வடராஜ்யம் 721ல் அசீரியா என்ற வல்லரசின் கையில் வீழ்ந்தது. மேலும் அது ஒழிந்து போயிற்று.

7. **தென் ராஜ்யத்தின் வீழ்ச்சி (கி.மு. 586)**
தென் ராஜ்யம் கி.மு. 586ல் பாபிலோன் என்ற வல்லரசின் கையில் வீழ்ந்து பாபிலோனுக்கு பிணைக் கைதியாக கொண்டு போகப்பட்டது. 70 வருடங்களுக்கு பிறகு கி.மு. 516ல் தென்ராஜ்யம் தன் சொந்த இடத்துக்கே மீண்டும் வர அனுமதிக்கப்பட்டது.

8. **இயேசுவின் பிறப்பு (கி.மு. 1)**
இயேசுவிற்கு பிறகு 6 நூற்றாண்டுகள் வரைக்கும் கி.மு. மற்றும் கி.பி. என்ற தேதியிடும் அமைப்பு முற்றிலுமாக முன்னேறவில்லை. சபை இந்த தேதியிடும் அமைப்பை நிறுவியபோது. ஏரோது ராஜா வாழ்ந்த காலங்களில் சற்று மாறுதல் உண்டாயிருப்பதை அறிந்தது. (இயேசு பிறக்கும் பொழுது ஏரோது ராஜா அதிகாரத்தில் இருந்தான், லூக்கா 1:5). அதிக நாட்களுக்கு பிறகு ஒன்று அல்லது இரு வருட மாறுபாடுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் இந்த கி.மு., கி.பி. என்று தேதியிடும் அமைப்பு ஏற்கனவே முற்றிலுமாக நிறுவப்பட்டது. எனவே முன்னமே குறிக்கப்பட்ட தேதிகளை மாற்ற முயலுவதற்கு பதிலாக, இயேசு கிறிஸ்து 1 அல்லது 2 கி.மு. வில் பிறந்தார் என்று முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

ஜூயன் நாள்காட்டி ஜனவரி 1ல் தொடங்குகிறது. ஆனால் யூதரின் நாள்காட்டி செப்டம்பரில் தொடங்குகிறது. இந்த மாறுபாட்டின் காரணமாக இயேசுவின் பிறப்பு கி.மு. 1-2 அல்லது 966-965 என குறிக்கப்பட்டதை காண முடிகிறது.

9. **இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் (கி.பி. 32-33)**
பெரும்பாலான வேதவல்லுனர்கள் இயேசுவின் இறப்பு, அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் கி.பி. 32-33 என குறிக்கின்றனர்.

10. **வேதத்தின் கடைசிப் புத்தகம் (கி.பி. 96)**
ரோமச் சக்ரவர்த்தி டோமிசன் ஆட்சி காலத்தில் அப்போஸ்தலன் யோவான் பத்மு தீவிற்கு நாடு கடத்தப்பட்டதாகக் குறிக்கப்படுகிறது. இங்கு வேதம் பூரணமாக்கப்பட்டது (வெளிப்படுத்தல் 22:18-19).

B. பழைய ஏற்பாட்டின் புத்தக வரிசை

1. **ஆதாமிருந்து ஜலப்பிரளயம் வரைக்கும் (கி.மு. 3958-2302)**
ஆதியாகமம் 1-5

2. **ஜலப்பிரளயத்திருந்து ஆபிரகாமின் உடன்படிக்கை வரைக்கும் (கி.மு. 2302 - 1875)**
ஆதியாகமம் 6-12

3. **ஆபிரகாமின் உடன்படிக்கையிருந்து இஸ்ரவேன் யாத்திரை வரைக்கும் (கி.மு. 1875 -1445)**
ஆதியாகமம் 12-50; யோபுவின் புத்தகம்.

4. **யாத்திராகமத்திருந்து சாலொமோனின் 4ஆம் வருடம் வரை. (கி.மு. 1445 - 965)**
a. யாத்திராகமம்
b. லேவியராகமம்
c. எண்ணாகமம்
d. உபாகமம்
e. யோசுவா
f. நியாயாதிபதிகள்
g. ரூத்
h. 1 சாமுவேல்
i. 2 சாமுவேல்
j. 1 இராஜாக்கள் 1-5
k. சங்கீதம்
l. 1 நாளாகமம்

5. **சாலொமோனின் 4ஆம் வருடத்திருந்து யூதாவின் வீழ்ச்சி வரைக்கும் (கி.மு. 965-586)**
a. 1 இராஜாக்கள் 6-22
b. 2 இராஜாக்கள்
c. 2 நாளாகமம்
d. நீதிமொழிகள்
e. பிரசங்கி
f. உன்னதப்பாட்டு
g. ஒபதியா
h. யோவேல்
i. யோனா
j. ஆமோஸ்
k. ஓசியா
l. மீக
m. ஏசாயா
n. நாகூம்
o. செப்பனியா
p. ஆபகூக்

6. **பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட கால கட்டங்கள் (கி.மு. 586-516)**
a. எரேமியா
b. எசேக்கியேல்
c. புலம்பல்
d. தானியேல்

7. **பாபிலோனுக்கு நாடு கடத்தப்பட்டதிருந்து பழைய ஏற்பாடு முடியும் வரை (கி.மு. 516-400)**
   a. எஸ்றா
   b. நெகேமியா
   c. சகரியா
   d. ஆகாய்
   e. மல்கியா
   f. எஸ்தர்

C. புதிய ஏற்பாட்டின் புத்தக வரிசை:

பரிசுத்த ஆவியின் நடத்துதலால் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் வரிசை கீழே பொதுவாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது:

1. **இயேசு கிறிஸ்துவின் ஜீவிய சரித்திரமும் ஆரம்ப சபையும் (கி.பி. 55-85)**
   a. மத்தேயு
   b. லூக்கா
   c. மாற்கு
   d. யோவான்
   e. அப்போஸ்தலருடைய நடபடிகள்

2. **சபைக்கு எழுதின நிருபங்கள் (கி.பி. 46-85)**
   a. யாக்கோபு
   b. கலாத்தியர்
   c. 1 தெசலோனிக்கேயர்
   d. 2 தெசலோனிக்கேயர்
   e. 1 கொரிந்தியர்
   f. 2 கொரிந்தியர்
   g. ரோமர்
   h. பிலேமோன்
   i. எபேசியர்
   j. கொலோசெயர்
   k. பிப்பியர்
   l. 1 தீமோத்தேயு
   m. தீத்து
   n. 2 தீமோத்தேயு
   o. எபிரேயர்
   p. 1 பேதுரு
   q. 2 பேதுரு
   r. யூதா
   s. 1 யோவான்
   t. 2 யோவான்
   u. 3 யோவான்

3. **தீர்க்கதரிசனம் (கி.பி. 96)**
   வெளிப்படுத்தின விசேஷம்

தனிப்பட்ட ஆய்வு: அத்தியாயம் 1, பாகம் 4

1. **கீழ்காணும் நிகழ்வுகளை சரியான வரிசையில் ஒழுங்குபடுத்துக:**
   வடராஜ்யத்தின் வீழ்ச்சி
   நோவாவின் ஜலப்பிரளயம்
   தென் ராஜ்யத்தின் வீழ்ச்சி
   ஆபிரகாமோடு வாக்குத்தத்தம்
   இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்
   இஸ்ரவேன் யாத்திரை
   சாலொமோனின் நான்காம் வருடம்
   இயேசுவின் பிறப்பு
   ஆதாமின் வீழ்ச்சி
   வேதத்தின் கடைசிப் புத்தகம்

2. **எந்த இரண்டு பழைய ஏற்பாட்டு புத்தகங்கள் சிருஷ்டிப்பிருந்து எகிப்திருந்து புறப்பட்ட யாத்திரை வரைக்கும் உள்ள காலத்தைக் குறிக்கின்றன?**

3. **வேதாகமத்தின் கீழ்கண்ட பாகங்களை கால வரிசையில் ஒழுங்குபடுத்துக:**
   1 சாமுவேல்
   1 இராஜாக்கள் 1-5
   எண்ணாகமம்
   நியாயாதிபதிகள்
   யோசுவா
   உபாகமம்
   ரூத்
   1 நாளாகமம்
   2 சாமுவேல்
   லேவியராகமம்
   சங்கீதம்
   யாத்திராகமம்

4. **பழைய ஏற்பாட்டின் கீழ்கண்ட பாகங்களை கால வரிசையில் ஒழுங்குபடுத்துக:**
   2 நாளாகமம்
   இராஜாக்கள் 6-22
   2 இராஜாக்கள்
   நீதிமொழிகள்
   பிரசங்கி
   உன்னதப்பாட்டு
   ஏசாயா
   நாகூம்
   ஆமோஸ்
   மீகா
   யோனா
   ஒபதியா
   ஓசியா
   யோவேல்
   செப்பனியா
   ஆபகூக்

5. **கீழ்கண்ட பழைய ஏற்பாட்டு புத்தகங்களை கால வரிசையில் ஒழுங்குபடுத்துக:**
   நெகேமியா
   தானியேல்
   எரேமியா
   எசேக்கியேல்
   மல்கியா
   எஸ்றா
   சகரியா
   புலம்பல்
   ஆகாய்

6. **கீழ்கண்ட புதிய ஏற்பாட்டு வரலாற்று புத்தகங்களை கால வரிசையில் ஒழுங்குபடுத்துக:**

மத்தேயு	லூக்கா	அப்போஸ்தலருடைய நடபடிகள்
மாற்கு	யோவான்	

7. **கீழ்கண்ட புதிய ஏற்பாட்டு புத்தகங்களை கால வரிசையில் ஒழுங்குபடுத்துக:**

ரோமர்	2 தெசலோனிக்கேயர்	2 பேதுரு
1 கொரிந்தியர்	1 தீமோத்தேயு	1 யோவான்
2 கொரிந்தியர்	2 தீமோத்தேயு	2 யோவான்
கலாத்தியர்	தீத்து	3 யோவான்
எபேசியர்	பிலேமோன்	யூதா
பிப்பியர்	எபிரேயர்	வெளிப்படுத்தின விசேஷம்
கொலோசெயர்	யாக்கோபு	
1 தெசலோனிக்கேயர்	1 பேதுரு	

பகுதி 5
வேதத்தைப் போதிக்கத் தயாராகுதல்

கடந்த காலத்தில் நிகழ்ந்த முக்கிய சம்பவங்களைக் குறித்தும், அவைகளின் காலகட்ட வரிசையைக் குறித்தும் கடந்த இரு பகுதிகளிலும் (பகுதி 3, பகுதி 4) பார்த்தோம். வேதத்தைப் படிக்கும்பொழுது "எப்போது?" என்று எழும் முக்கிய கேள்விக்கு பதிலளிப்பதற்கு இந்த அஸ்திபாரத்தை போட்டிருக்கிறோம். நாம் வேதத்தைப் புரிந்துகொள்ள முயற்சிக்கும்போது, ***"சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்க"*** (2 தீமோத்தேயு 2:15) அவசியமான கேள்விகளுக்கு நாம் தொடர்ந்து பதில் தேட முற்படுவோம். (தேவன் நம்முடைய எல்லாக் கேள்விகளையும் அவரிடம் கொண்டுவர அழைக்கிறார் (மத்தேயு 7:7–8).

ஒவ்வொரு வேத வசனத்தையும் வாசிக்கும்போது அடிப்படையில் நாம் கேட்க வேண்டிய கேள்விகள் – **யார், என்ன, எப்போது, எங்கே, ஏன்** மற்றும் **எப்படி?** இதற்குப் பதிலைக் காண முற்படும்போது இரு முக்கிய கேள்விகளை மனதில் கொள்ள வேண்டும். இது கிறிஸ்துவோடு எனக்குள்ள உறவை எவ்வாறு வளரச் செய்கிறது (பிப்பியர் 3:10), அப்படியானால் நான் எவ்வாறு ஜீவிக்க வேண்டும்? (யோவான் 7:17) என்பவைகளே இவை.

A. ஒவ்வொரு வேத வசனத்திற்கும் ஆறு அடிப்படைக் கேள்விகள்

1. யார்?

"யார்" என்ற கேள்விக்குப் பதிலைத் தேடும்பொழுது நாம் யார் பேசுகிறார்கள், மேலும் யாரைக் குறித்து கூறப்பட்டுள்ளது என்பதை நிர்ணயிக்கிறோம். எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 22: 2 ல், தேவன் ஆபிரகாமுடைய ஒரே பேறான குமாரனை ப செலுத்தக் கூறியபொழுது, ஆபிரகாமுடன் நேரடியாகக் கூறினார், மற்றவர்களிடம் அல்ல. எனவே, வேதத்தை கேட்கிற நாம் அந்தக் கட்டளையைக் கைக்கொள்ள வேண்டியதில்லை.

2. என்ன?

"என்ன" என்ற கேள்வி சொல்லப்பட்ட காரியத்தின் உண்மையை வெளிப்படுத்துகிறது. வெளிப்படுத்தின விசேஷம் 5ல் இயேசு கிறிஸ்து "ஆட்டுக்குட்டியாக" குறிக்கப்பட்டு இருக்கிறார். இதனுடைய அர்த்தம் இயேசு கிறிஸ்து நான்கு கால்களுடைய மிருகம் என்பதல்ல. இது பாவத்தைச் சுமந்து தீர்க்கின்ற அவருடைய பயைச் சுட்டிக் காட்டுகிறது (யோவான் 1: 29).

3. எப்போது?

"எப்போது" எனும் கேள்வி, வேதத்தில் காணும் நிகழ்வுகளின் காலத்தைக் குறிக்கின்றது. ஆபிரகாம் தன் ஒன்றுவிட்ட சகோதரியாகிய சாராளை நியாயப்பிரமாண விதியை மீறித் திருமணம் செய்து பாவம் செய்தான் என்று யோசிக்கலாம். ஆனால் இந்தத் திருமணம், மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுப்பதற்கு முன்பு ஏற்பட்டது (ரோமர் 4:15). எனவே ஆபிரகாமின் திருமணம் பாவம் அல்ல; பூரணமான வேதத்தைத் தெளிவாக அறிந்துகொள்ள "எப்போது" என்பதின் பதிலைக் கண்டுப்பிடிக்க வேண்டும்.

4. எங்கே?

"எங்கே" என்ற கேள்வி புவியியல் மற்றும் கலாச்சாரத்தில் எழுதப்பட்ட வேத பகுதியுடன் இடைபடுகிறது. வேதத்தில் "எருசலேம் வரைக்கும்" (up to) என்ற வாக்கு அடிக்கடி காணப்படுகிறது. பெரும்பாலான கலாச்சாரத்தில் "வரைக்கும்" என்பது வட திசையை நோக்கி செய்வதைக் குறிக்கிறது. ஆனால் வேதம் திசையைக் குறிக்கவில்லை. மேடான பக்கம் செல்வதைக் குறிக்கிறது. இயேசு கிறிஸ்து உண்மையாக தெற்கு நோக்கி பயணம் செய்தார். ஆனால் அது "மேல் செல்வதைக்" குறிக்கின்றது.

5. ஏன்?

"ஏன்" என்ற கேள்விக்குப் பதில் அளிப்பது அநேக வேளையில் அதிகக் கஷ்டமாக இருக்கிறது. அநேக வேளையில் மற்ற வேத பகுதிகளைப் படிக்கும்போது பதில் காணலாம். ஏசாயா 7: 14 யில் ***"இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள்"*** என்ற வாக்கியத்தில் "ஏன் கன்னிகை?" எனும் கேள்வி எழலாம். "இந்த வழியில்தான் தேவன் செய்ய விரும்புகிறார்" என்று நாமே பதில் கொடுத்துக்கொள்வோம். இந்த பதில் சரிதான். ஆனால் பூரணமானதல்ல.

இதற்கு பதில் தேடும்பொழுது ரோமர் 5ல் ஆதாமுடைய பாவத்தின் விளைவு எல்லா மனிதர்கள் மேல் இருப்பதை காண லாம். ஆதாம் என்ற ஒரு மனிதன் மூலமாக மனித வர்க்கம் பாவ சுபாவத்திற்குள் தள்ளப்பட்டது. இயேசு கிறிஸ்துவுக்குப் பூவுலக தந்தை இருப்பாரானால், இயேசுவும் பாவ சுபாவத்தை கொண்டவராக இருந்திருப்பார். "ஏன் கன்னிகை?" என்ற கேள்வி இங்கு முக்கியமானது. ஏனெனில், இது பாவ பரிகாரத்துக்கு வேண்டிய இயேசுவின் தகுதியைக் குறிக்கிறது.

6. எப்படி

"எப்படி?" என்ற கேள்விக்கும் அநேக வேளையில் பதில் அளிப்பது கடினமாக இருக்கிறது. நாம் "இயேசு எப்படிக் கடன் மேல் நடந்தார்?" என்ற கேள்வியைக் கேட்கலாம். பதில் மிகவும் எளிது. அவர் பரிசுத்தாவியை சார்ந்திருந் தார் (லூக்கா 4:18). மனிதனுக்கு எதையும் செய்ய சுதந்திரம் இருக்கும்போது எப்படி தேவனால் உலக சரித்திரத்தை கட்டுப்படுத்த முடியும்; இந்தக் கேள்விக்கு எளிதாக பதில் கூற முடியாது. இதைக் குறித்து பின்வரும் பாடங்களில் தேடுவோம்.

B. தனிப்பட்ட இரண்டு முக்கியமான கேள்விகள்

1. **தனிப்பட்ட முறையில் இயேசுவோடு நெருங்கிய உறவுகொள்ள எப்படி இந்த வேதபகுதி உதவி செய்கிறது?**
நாம் கேட்கும் கேள்விகளில் இது மிகவும் முக்கியமானதாகும். வேதத்திருந்து பெறும் அறிவு விசுவாசத்துடன் இணைந்து இருக்க வேண்டும் (எபிரேயர் 11:6). அப்போது இயேசு கிறிஸ்துவுடன் நம்முடைய உறவு வளர்ச்சியடையும். வேத வசனம் சரியானது; நம்பத்தக்கது என்றும் நாம் விசுவாசிக்க வேண்டும். இதனால் ஆதாரமாகிய இயேசு கிறிஸ்துவில் உள்ள உறவு வளர்ச்சியடை யும். அப்போஸ்தலன் பவுல் இதைக் குறித்து எபேசியர் 3:14-19ல் கூறுகிறார்.

> ***இதினிமித்தம் நான் பரலோகத்திலும், பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்துக்கும் நாமகாரணராகிய, நம்முடைய கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய பிதாவை நோக்கி முழங்கால்படியிட்டு, நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி, சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து, அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அனுக்கிரகம் பண்ண வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன்.***

நாம் நம் அறிவை வளர்த்துக்கொள்வதற்காக மட்டும் வேதத்தைப் படித்துவிட்டு மற்றவர்களிடமும், தேவனிடத்தும் அன்புகூருவதில் வளர்ச்சியடையாவிட்டால், நாம் இறுமாப்பு அடைந்தவர்களாவோம் (1 கொரிந்தியர் 8:1) இறையியலை நன்கு அறிந்த அப்போஸ்தலன் பவுல் தன்னுடைய மிகப்பெரிய ஆசை "நான் அவரை அறிய வேண்டும்" (பிப்பியர் 3:10) என்பதே என்று வெளிப்படுத்துகிறார். பவுல் பரிசேயனாக இந்த உலகத்தில் கெட்டிக்காரனாக பயணம் செய்தான். ஆனால் கிறிஸ்தவனாக தேவனுடைய உறவில் சிறப்பாக வளர்ச்சியடையத் தொடங்குகிறான்.

தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் கண்டு, அவைகளில் நம்பிக்கை வைத்து ***"நம்முடைய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருவோம்"*** (2 பேதுரு 3:18).

2. **அப்படியானால், நாம் எப்படி வாழ வேண்டும்?**
வேத வசனத்தைப் படித்துவிட்டு அதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட பிறகு நாம் எப்படி இதை நம்முடைய அனுதின வாழ்க்கையில் பயன்படுத்த முடியும் என்பதைக் குறித்துத் தேட வேண்டும். எபிரெயர் 12:1-3ல் நமக்கு ஓர் அழகான எடுத்துக்காட்டு கொடுக்கப்பட்டிருக்கிறது. வேத வசனம் 1 மற்றும் 2 கூறுகிறது:

> ***ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.***

எபிரெய நிருபத்தை ஆக்கியோன் இந்த இரண்டு வசனங்களில் ஒரு ஓட்டப்பந்தயத்தைச் சித்தரிக்கிறார். மக்கள் நின்றுகொண்டு ஓட்டத்தைக் கவனிக்கிறார்கள். 11ஆம் அதிகாரத்தில் கூறப்படுபவர்களின் ஓட்டம் தூரத்தைப் பொருத்தும் வேகத்தை பொருத்தும் இருக்கிறது. ஜெயம் கொள்ளுகிறவன் மரியாதைக்குரிய இடத்துக்குச் செல்வான். போட்டியிடுபவன் (ஓடுபவன்) வேகத்தைக் குறைக்கும் பளுவையும், தடைகளையும் அகற்றிப் போடுகிறான். அவன் கண்கள் இலக்கை நோக்கி இருக்கிறது. அங்கு ஓட்டத்தை ஜெயித்த இயேசு நிற்கிறார். வரப்போகும் சந்தோஷத்தை யோசித்து, எல்லா சோர்வையும் ஓடுபவன் பொறுத்துக் கொள்கிறான். அவன் இலக்கை அடைகிறான்.

மூன்றாவது வசனத்தில் நிருபத்தை எழுதியவர் இரண்டு வசனங்களை நம்முடைய வாழ்க்கையில் பயன்படுத்துகிறார்:

> ***ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.***

கிறிஸ்துவின் பொருட்டு நாம் கஷ்டங்கள், எதிர்ப்புகள், வேதனைகள், கவலைகள், அவமானங்கள், சோர்வுகள் இவைகளைச் சந்திக்கும் பொழுது, நாம் தலைவராகிய இயேசுவைக் கருத்தில் கொண்டு அவரால் தேற்றப்படுகிறோம். ***"நம்முடைய பலவீனங்களைக்குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்தி லும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்"*** (எபிரெயர் 4:15).

C. எல்லாக் கேள்விக்கும் பதில் அளிக்க முடியாவிட்டால் என்ன?
கேள்விகளும் அதின் பதில்களும் முக்கியமானவை. தேவனோடு நாம் கொண்டுள்ள உறவு விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டது (எபேசியர் 2:8-9; கொலோசெயர் 2:6). எனவே நம்முடைய வாழ்நாளில் எல்லாக் கேள்விகளுக்கும் பதில் கிடைப்பதில்லை. ஆனாலும் நம்முடைய எல்லா கேள்விகளுக்கும் பதில் கிடைக்கும் என தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (1 கொரி. 13:12). வாழ்நாள் முழுவதும் நம்மை வழிநடத்த வேண்டிய செய்திகளை வேதவசனம் அளிக்கின்றது.

தனிப்பட்ட ஆய்வு: அத்தியாயம் 1, பாகம் 5

1. வாசிக்கவும் எரேமியா 39:1-2 மற்றும் ஒவ்வொரு வசனத்திற்கும் நாம் கேட்கவேண்டிய ஆறு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும்.

   யார்? =

   என்ன? =

   எப்போது? =

   எங்கே? =

   ஏன்? =

   எப்படி? =

2. வாசிக்கவும் மாற்கு 12:29-31. எந்த நான்கு காரியங்களுடன் நாம் கர்த்தரை நேசிக்கவேண்டும்?

3. வாசிக்கவும் எபிரேயர் 11:6 மற்றும் 1 யோவான் 2:7-11. கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவசியமான இரண்டு காரியங்கள் எவை?

அத்தியாயம் 2

பழைய ஏற்பாடு ஒரு கண்ணோட்டம்

முகவுரை

இது பழைய புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் ஒரு சுருக்கமான கண்ணோட்டமாகும். வேத புத்தகத்தைப் படிப்பவர்களுக்கு புத்தகத்தின் எழுத்தாளர், இதை எழுதிய காலம், முக்கிய மக்கள், மையக்கருத்து ஆகியவைகளைக் கொடுப்பதே இதன் நோக்கமாகும். இதனோடு இயேசு இந்தப் புத்தகத்தில் எப்படிச் சித்தரிக்கப்பட்டிருக்கிறார் என்பதையும் சுருக்கமானத் தெரிந்துகொள்வோம். ஒவ்வொரு புத்தகத்தின் விளக்கத்திலும் பொருளடக்கத்தை கொண்டுள்ள சுருக்கமான குறிப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

தேவனுடைய வார்த்தையை ஆய்வுசெய்யும் ஒரு மாணவர் வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகத்தையும் ஆராய்ந்து பார்ப்பது அவசியமாகும். அப்போதுதான் வேதாகமத்தின் முக்கிய நிகழ்ச்சிகளையும், முக்கிய தலைப்புகளையும் நன்றாகப் புரிந்துகொள்ள முடியும். நாம் எவ்வளவாக வேதாகமத்தைப் படிக்க நேரம் செலவழிக்கிறோமோ, அவ்வளவாக அதைப்பற்றி அறிந்து கொள்ளுவோம். ஆனால் இந்த ஆய்வின் அணுகுமுறையின்படி முதல் பெரிய கண்ணோட்டத்தைப் பெற்று, பின்னர் உள்ளே உள்ள காரியங்களை சரியாக நாம் அறிந்துகொள்ளுவோம். முதலாம் அத்தியாயத்தில் முழு வேதாகமத்தைக் குறித்த பொதுவான சுருக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட நூல்களை குறித்த மேலோட்டமான பார்வை மூலம் இந்த அத்தியாயம் நம்முடைய படிப்பைக் குறிக்கிறது.

பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் ஒப்பிடுதல்

எல்லா புத்தகங்களிலும் இயேசு கிறிஸ்துவே நம்பிக்கையாகவும் மையக்கருத்தாகவும் இருக்கிறார். அநேக வேளைகளில் இயேசு கிறிஸ்து தாமே வேத வசனத்தின் மையக்கருத்தாக இருப்பதாக உரிமை கொண்டாடினார்:

1. மத்தேயு 5:17ல் அவர் ***"நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங்களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல, நிறைவேற்றுகிறதற்கே வந்தேன்."***

2. எம்மாவு சாலையில் சீஷர்களுடன் நடக்கும்போது இயேசு, ***"மோசே முதய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங் களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்யவைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார்"*** (லூக்கா 24:27) என்று காண்கிறோம்.

3. அன்று மாலை வேளையில் 10 சீஷருடன் இயேசு சம்பாஷிக்கும் பொழுது ***"மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக்குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச்சொல்க்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே என்றார். அப்பொழுது வேதவாக்கியங்களை அறிந்துகொள்ளும்படி அவர்களுடைய மனதை அவர் திறந்து அவர்களை நோக்கி: எழுதியிருக்கிற படி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம்நாளில் மரித்தோரிருந்து உயிர்த்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது; அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங் கிக்கப்படவும் வேண்டிய"*** (லூக்கா 24:44-47) என்று கூறினார்.

4. இயேசு யூதர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது ***"வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்: அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே. அப்படி யிருந்தும் உங்களுக்கு ஜீவன் உண்டாகும்படி என்னிடத்தில் வர உங்களுக்கு மனதில்லை"*** (யோவான் 5:39, 40) என்றார்.

மேலும் வெளிப்படுத்தின விசேஷம் 19:10ல் ***"இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிற"*** என்று நமக்கு எடுத்துகாட்டுகிறது. அதாவது தீர்க்கதரிசனத்தின் உண்மையான சுபாவம், நோக்கம் மற்றும் எல்லா வேத வசனங்களும் அதின் பொருள்களும் இயேசு கிறிஸ்துவையே வெளிப்படுத்துகின்றன. மனுஷனின் வீழ்ச்சியின் காரணமாகவும் மனிதனின் தேவையின் காரணமாகவும் இயேசு கிறிஸ்து பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளின் மையக்கருத்தானார். அவரின் மூலம் நாம் நித்திய ஜீவனையும் பரிபூரண வாழ்வையும் பெறுகிறோம் (யோவான் 10:10).

பழைய ஏற்பாடு		
நியாயப்பிரமாணம் – இயேசுவிற்கு அஸ்திபாரம் சரித்திரம்-இயேசுகிறிஸ்துதயாராகுதல் சங்கீதம் –இயேசுவிற்கான பெரும் வாஞ்சை தீர்க்க தரிசனம் – இயேசுவின் வருகைக்கு எதிர்பார்ப்பு	தயாராகுதல் & அஸ்திபாரம்	பழைய ஏற்பாடு இயேசுவை பாவத்திற்காக மரிக்கின்ற தீர்க்கதரிசியாகவும், ஆசாரியராகவும், ராஜாவாகவும், பாடுபடுகின்ற இரட்சகராகவும், வருவதற்கு அஸ்திபாரம் போட்டது.
புதிய ஏற்பாடு		
சுவிசேஷங்கள்	வெளிப்பாடு	அதிக நாட்களாய் எதிர்ப்பார்க்கப்பட்ட இரட்சகரின் வருகையும் அவருடைய வேலையும் இதைக் குறித்த சரித்திரம்
அப்போஸ்தலருடைய நடபடிகள்	விரிவாக்கம்	பரிசுத்தாவியின் மூலமாக இரட்சகராக வந்த செய்தியை அப்போஸ்தலருடைய நடபடிகள் பரப்புகின்றது.
நிருபங்கள்	விளக்கமும் & செயல்படுத்தலும்	இயேசு கிறிஸ்துவினுடைய வேலையில் உள்ள தனிச் சிறப்புகளை பூரணப்படுத்துகிறது. மேலும் இது கிறிஸ்தவனை, உலகத்தில் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதியாக கொண்டு வர அழுத்துகிறது.
வெளிப்படுத்தின விசேஷம்	முடிவு	நித்தியத்தையும், இயேசுவின் கடைசி ஆளுகையும், இயேசுவின் வருகையையும், கடைசிகால சம்பவங்களையும் எதிர்பார்க்கின்றது

தனிப்பட்ட புத்தங்களைப்பற்றிய குறிப்புகளில் வேதவசனங்களின் வேறுபட்ட பகுதிகளுக்கு தலைப்புகள் கொடுக்கப்படவில்லை. இது மாணவருக்கான வேலை. ஒவ்வொரு பகுதியையும் படித்து ஒரு தலைப்பு கொடுக்கவும்.

பகுதி 1
நியாயப்பிரமாணம் - முதல் ஐந்து புத்தகங்கள்

சில சமயங்களில் முதல் ஐந்து புத்தகங்கள் ''பஞ்சாகமம்'' என்று அழைக்கப்படுகிறது. இதன் அர்த்தம் ''ஐந்து புத்தகங்கள்'' என்பதாகும். மேலும் இவைகள் நியாயப்பிரமாண புத்தகங்கள் என்றும் அறியப்படுகின்றன. ஏனெனில் இது தேவன் இஸ்ரவேல் மக்களுக்கு மோசேயின் மூலமாகக் கொடுத்த நியாயப்பிரமாணத்தையும் விதிகளையும் உள்ளடக்கி இருக்கிறது. உபாகமத்தின் கடைசி பகுதிகளைத் தவிர எல்லாம் மோசேயினால் எழுதப்பட்டது. உபாகமத்தின் கடைசிப் பகுதியில் மோசேயின் மரணத்தைக் குறித்து எழுதப்பட்டுள்ளது. இந்த ஐந்து புத்தகங்களும் இயேசுவின் வருகையைக் குறித்த அஸ்திபாரத்தை போட்டன. இங்கே தேவன் தம்மால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் இஸ்ரவேல் சந்ததியாக இருப்பதற்கு வழிநடத்தினார். தேவனால் தெரிந்தெடுக்கப்பட்ட ஜனங்களாக, இஸ்ரவேலர் பழைய ஏற்பாட்டிற்கு முக்கியமானவர்களானார்கள்; உடன்படிக்கையின் வாக்குத்தத்துவத்தைப் பெற்றவர்களானார்கள். மேலும் மேசியாவின் சந்ததியானார்கள் (ரோமர் 3:2, 9:1–5).

ஆதியாகமம்
(ஆரம்பங்களின் புத்தகம்)

எழுதியவரும் புத்தகத்தினுடைய பெயரும்: மோசே இந்தப் புத்தகத்தை எழுதினார். ஆதியாகமம் என்றால் ''ஆரம்பம்'' எனப் பொருள்படும். இந்தப் பெயர் எபிரெய பழைய ஏற்பாட்டிருந்து கிரேக்க மொழிக்கு மொழிமாற்றம் செய்யப்பட்ட செப்டுஜென்ட் (LXX) என்ற கிரேக்க மொழிபெயர்ப்பிருந்து வந்தது.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 1450–1410

மையக்கருத்தும் நோக்கமும்: சாதாரணமாக இந்தப் புத்தகத்தை படிக்கும்போதுகூட பிரதான மையக்கருத்தாகிய இதன் ''ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் குறித்துப்'' புரிந்துகொள்ள முடியும். கீழ்ப்படிதனாலும் விசுவாசத்தினாலும் ஆசீர்வாதம் கிடைக்கிறது. கீழ்ப்படியாமையினால் சாபம் வருகிறது. இஸ்ரவேல் சந்ததியில் ஆபிரகாமுடன் ஏற்பட்ட உடன்படிக்கையும் முக்கிய மையக்கருத்தாக இருக்கிறது. ஆபிரகாம் மூலமாக தேவன் மனித சந்ததியை ஆசீர்வதிப்பதாக வாக்குத்தத்தம் செய்தார் (ஆதியாகமம் 12:1–3; 15:1–21).

ஆதியாகமம் என்றால் 'ஆரம்பம்' என்பது மாத்திரம் அர்த்தம் அல்ல. இது ஆரம்பங்களின் புத்தகமாக இருக்கிறது. இதிருந்து தொடர்ச்சியாக எல்லா வெளிப்படுத்துதன் சரித்திரக் குறிப்புகளும் வருகின்றன. இதில் நாம் உலகத்தின் ஆரம்பத்தையும் அதின் விளைவான மனித வீழ்ச்சியையும், இரட்சிப்பைக் குறித்த ஆரம்ப தேவ வாக்குத்தத்தத்தையும் காண முடியும். இரட்சகர், இஸ்ரவேன் சந்ததியாகத் தோன்றும் சிறப்பான நோக்கத்துடன் தேவனால் பிரித்தெடுக்கப்பட்ட செய்தியை இந்தப் புத்தகத்தில் காணலாம். இதில் நாம் ஆதாம், ஏவாள், சாதனைக் காரனாகிய சாத்தான், நோவா, ஜலப்பிரளயம், ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு மற்றும் யோசேப்பு அவனுடைய சகோதரர் ஆகியோரைக் குறித்தும் அறிகிறோம். மேலும் இந்த புத்தகத்தில் திருமணம், பாவம், கொலை, உயர்ந்தபட்ச தண்டனை, சந்ததிகள், பாஷைகள், நாகரீகம், ஓய்வுநாள், அனைத்து உலக ஆளுகைக்கான முதல் முயற்சியாகிய பாபேல் கோபுரம், அங்கே உருவான பாபிலோனிஸம் என்ற சமயம் ஆகியவற்றின் ஆரம்பத்தை நாம் காண முடியும். மேலும் வேதம் ஒரு சரித்திர வெளிப்பாடாகும். இது சரித்திரத்தில் தேவனுடைய செயல்களைக் காட்டுகிறது.

ஆதியாகமத்தில் பொதுவாக உபயோகப்பட்டுள்ள தொடர் ''வம்ச வரலாறு''. 11 தடவை வாசிப்பவரை அடுத்த பகுதிக்கு அறிமுகப்படுத்தி உலகசிருஷ்டிப்பிருந்து நிகழ்ந்த முக்கிய சம்பவங்கள், இஸ்ரவேன் முற்பிதாக்கள் பற்றி கூறுகின்றன.

முக்கிய நபர்கள்: ஆதாம், ஏவாள், நோவா, ஆபிரகாம், சாராள், ஈசாக்கு, ரெபெக்காள், ஏசா, யாக்கோபு, ராகேல், யோசேப்பு.

ஆதியாகமத்தில் இயேசு – தீர்க்கதரிசனமாக: வீழ்ச்சிக்கு பிறகு உடனே ஸ்திரீயினுடைய வித்தில் இரட்சிப்பின் வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டது (ஆதியாகமம் 3:15). மேலும் மேசியாவின் உறவு ஆதியாகமம் முழுவதும் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. சேத்தின் சந்ததி (4:25), சேமுடைய சந்ததி (9:26) ஆபிரகாமின் குடும்பம் (12:3), ஈசாக்கின் வித்து (26:3) யாக்கோபின் குமாரர்கள் (46:3). யூதா கோத்திரம் (49:10) இவைகள் மேசியா வழிவந்த சந்ததியைக் குறிக்கிறது.

ஆதியாகமத்தில் அநேக முக்கிய ''மாதிரிகள்'' இயேசு கிறிஸ்துவைச் சித்தரிக்கின்றன. **ஆதாம்** இயேசுவின் ஒரு மாதிரி (ரோமர் 5:14).

ஆதாம் பழைய சிருஷ்டிப்புக்குத் தலைவனாக இருக்கிறான். இயேசு புதிய ஆவிக்குரிய சிருஷ்டிக்குத் தலைவராக இருக்கின்றார்.

ஆபேலுடைய இரத்தப காணிக்கை நமக்காக மரித்த இயேசுவைச் சுட்டிக்காட்டுகிறது. ஆபேன் கொலை இயேசு கிறிஸ்துவின் மரணத்தை எடுத்துக்காட்டுகிறது.

ராஜாவாகவும், ஆசாரியனாகவும் இருந்த **மெல்கிசேதேக்கு**, இயேசு கிறிஸ்துவின் ஒரு மாதிரி (எபிரெயர் 7:3).

தன் தகப்பனால் அதிகம் நேசிக்கப்பட்ட **யோசேப்பு** சகோதரர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டான். ஆனாலும் அவன் வாயிலாக மீட்பு உண்டாயிற்று. இவன் இயேசு கிறிஸ்துவின் மாதிரி.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கமான குறிப்பு

தலைப்புக் கொடுக்கப்படாத பகுதிகளுக்கு ஒரு தலைப்புக் கொடுங்கள். உங்கள் தலைப்புகளில், ஒரு பகுதிக்கும் மற்ற பகுதிக்கும் உள்ள வித்தியாசத்தைக் காட்ட முயற்சி செய்யுங்கள். உதாரணமாக, கீழே உள்ள பகுதி "C" கீழுள்ள தலைப்புகளைக் கொடுக்கலாம்:

1) வெள்ளத்திற்காக நோவாவின் ஆயத்தம்
2) வெள்ளத்தில் நோவா
3) வெள்ளம் வடிகிறது
4) நோவாவுடன் உடன்படிக்கை
5) நோவாவின் குடும்பம்

1. **நான்கு சம்பவங்கள் (1:1-11:32)**
   a. உலகம் மற்றும் மனிதனின் சிருஷ்டிப்பு (1:1-2:25)

1:1-2:3	2:4-25	

   b. மனிதனின் பாவமும், வீழ்ச்சியும் (3:1-5:32)

3:1-24	4:1-24	4:25-5:32

   c. மனிதனின் அழிவும், ஜலப்பிரளயமும் (6:1-9:29)

6:1-22	8:1-22	9:18-29
7:1-24	9:1-17	

   d. மனிதனின் சிதறடிப்பும், ஜாதிகளும் (10:1-11:32)

10:1-32	11:1-9	11:10-32

2. **நான்கு பேர்: ஒரு ஜாதி தேர்ந்தெடுக்கப்பட்ட இரட்சகர் வருகைக்காகத் தயாராக்கப்படுகிறது. (12:1-50:26)**
   a. ஆபிரகாம் - விசுவாசத்தின் தந்தை மேலும் இஸ்ரவேல் சந்ததியின் தந்தை (12:1-23:20)

12:1-20	16:1-16	20:1-18
13:1-18	17:1-27	21:1-34
14:1-16	18:1-33	22:1-24
14:17-24	19:1-29	23:1-20
15:1-21	19:30-38	

   b. ஈசாக்கு - வாக்குத்தத்தத்தின் அன்பு புத்திரன் (24:1-26:35)

24:1-67	25:19-34	26:26-35
25:1-11	26:1-17	
25:12-18	26:18-25	

   c. யாக்கோபு - சூழ்ச்சியும், தண்டனையும் (27:1-36:43)

27:1-46	31:1-55	34:1-31
28:1-22	32:1-23	35:1-8
29:1-35	32:24-32	35:9-29
30:1-43	33:1-20	36:1-43

   d. யோசேப்பு - துன்பமும், மகத்துவமும் (37:1-50:26)

37:1-36	40:1-41:57	49:1-50:21
38:1-30	42:1-45:28	50:22-26
39:1-23	46:1-48:22	

யாத்திராகமம்
(மீட்பின் புத்தகம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: மோசே இந்தப் புத்தகத்தை எழுதினார். யாத்திராகமம் (Exodus) என்பது (Exodus) எக்சோடோஸ் என்ற கிரேக்க வார்த்தையிருந்து பெறப்பட்ட லத்தீன் வார்த்தையாகும். இப்பெயர் செப்டுஜெண்ட் (LXX) என்ற புத்தகத்தை எபிரெய மொழியிருந்து கிரேக்க மொழிக்கு மொழிமாற்றிய மொழிபெயர்ப்பாளர்கள் வழங்கியதாகும். இந்த வார்த்தையின் அர்த்தம் "வெளியேறுதல்" என்பதாகும்.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 1450-1410

மையக்கருத்தும் நோக்கமும்: இந்தப் புத்தகத்தில் முக்கியமாக இரண்டு மையக்கருத்துகள் இருக்கின்றன: (1) பஸ்கா பண்டிகையில் சித்தரிக்கப்பட்டுள்ள மீட்பு, மற்றும் (2) எகிப்தின் அடிமைத் தனத்திருந்து கிடைத்த மீட்பு, (எகிப்தை விட்டு வந்து, செங்கடலைக் கடத்தல்).

இருநூறு வருடங்களுக்கு மேலாக எகிப்தில் அடிமையாயிருந்தபின், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இஸ்ரவேலரின் சரித்திரத்தின் யாத்திரையைப் பற்றியது. இந்தப் புத்தகம் எகிப்திருந்து இஸ்ரவேல் பெற்ற மீட்பையும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்

தையும் விளக்குகிறது. மோசேயின் பிறப்பையும், அவனுடைய சரித்திரத்தையும் அவன் எகிப்தின் அடிமைத்தனத்திருந்த மக்களை மீட்டு வாக்குத்தத்த நிலமாகிய கானானுக்கு அவர்களை வழிநடத்த தேவனால் அழைக்கப்பட்டதைக் குறித்தும் விளக்குகிறது. தேவன் செங்கடலைக் கடக்க வைத்த தம் அற்புதங்கள் மூலமாகவும், பஸ்கா ஆடு, தலைப்பிள்ளைகளை காத்தல், பத்து வாதைகள் மற்றும் தம் முடைய மக்களுக்கு எகிப்தின் மக்களை காட்டிலும், பார்வோனைக் காட்டிலும் வல்லமையுள்ளவர், என்பது மட்டுமல்ல அவர் சர்வ அதிகாரம் உள்ள கர்த்தர், யாவே, (YAHWEH) மீட்பின் தேவன் மற்றும் வெளிப்படுத்துதன் தேவன் என்பவற்றைக் காட்டினார்.

இஸ்ரவேலர் செங்கடலைக் கடந்து வனாந்திரத்திற்கு வந்தவுடன் தேவன் அவர்களுக்கு நியாயப்பிரமாணத்தைக் கொடுத்து அவர்கள் ஜாதிகளுக்கு சாட்சியாக தமக்குச் சொந்த சம்பத்தாயும், பொக்கிஷமாகவும் ராஜ்யத்தின் ஆசாரியராகவும், பரிசுத்த ஜாதியாகவும் இருக் கிறார்கள் என்று அறிவித்தார் (யாத்திராகமம் 19:4-7). பத்துக் கட்டளைகளைக் கொண்ட, இந்த பரிசுத்த நியாயப்பிரமாணம் தேவனுடைய பரிசுத்தத்தை வெளிப்படுத்தியது, எப்படி தேவனையும் மற்ற மனிதர்களையும் சிநேகிக்க வேண்டும் என்பதை அவர்களுக்குக் கற்பித்தது. மேலும் மனிதன் எப்படி தேவனுடைய பரிசுத்தத்திருந்து வீழ்ந்தான் என்றும் தேவனை சேரும்படியாக மன்னிப்பை அருளும் ஒரு வழி தேவை என்பதையும் காட்டுகிறது. அது ஆசரிப்புக் கூடாரம், பகள், லேவியருடைய ஆசாரியத்துவம் ஆகியவற்றில் கொடுக்கப்பட் டுள்ளது.

முக்கிய நபர்கள்: மோசே, ஆரோன், மிரியாம், பார்வோன்

யாத்திராகமத்தில் இயேசு: இந்த புத்தகத்தில் இயேசுவைக் குறித்த நேரடியான தீர்க்கதரிசனங்கள் இல்லாதபோதிலும், அநேக அழகான இரட்சகரின் "மாதிரிகள்" இருக்கின்றன. அநேக வழியில் **மோசே** கிறிஸ்துவின் மாதிரியாக இருக்கின்றார். யாத்திராகமம் 18:15 மோசே ஒரு தீர்க்கதரிசியாக இயேசுவை எதிர்பார்த்தலை காட்டுகிறது. இரண்டு பேரும் மீட்பர்கள்; குழந்தையாக இருந்தபோது ஆபத்தைச் சந் தித்தார்கள், மற்றவர்களுக்கு ஊழியம் செய்ய தங்களுடைய மகிமையை துறந்தார்கள்;, மத்தியஸ்தர்களாக செயல்பட்டார்கள், சட்டத் தைக் கொடுத்தார்கள் இருவரும் விடுவிக்கிறவர்களாக இருந்தார்கள்.

பஸ்கா பாவமில்லாத தேவ ஆட்டுக்குட்டியாக இருந்த இயேசுவின் தெளிவான "மாதிரி" யாகும் (யோவான் 1:29, 36; 1 கொரிந்தியர் 5:7).

ஏழு பண்டிகைகள் இவை ஒவ்வொன்றும் இயேசுவின் சில கோணங்களை வருணனை செய்கின்றன.

யாத்திராகமம், பவுல் ஞானஸ்நானத்துடன் இணைத்து, இயேசு கிறிஸ்துடன் நாம் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழும் அடையாளத்தைப் படம்பிடித்து காட்டுகிறார். (1 கொரிந்தியர் 10:1-2; ரோமர் 6:2-3)

மன்னா மற்றும் **நீரூற்று** - இயேசு கிறிஸ்துவைச் சித்தரித்து காட்டுகிறது (யோவான் 6:31-35; 48-63; 1 கொரிந்தியர் 10:3-4).

ஆசரிப்புக் கூடாரம் - அதின் பொருட்கள், நிறங்கள், தளவாடங்கள், அமைப்புகள், மற்றும் ப காணிக்கைகள் இயேசு கிறிஸ்துவை வர்ணனை செய்கின்றன (எபிரேயர் 9:1-10:18).

பிரதான ஆசாரியன் - தெள்ளத் தெளிவாக இயேசுவின் ஆள்த்தத்துவம் மற்றும் ஊழியத்திற்கு நிழலாட்டமாக இருக்கின்றது (எபிரேயர் 4:14-16; 9:11-12, 24-28).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **எகிப்திருந்து மீட்பு (1:1-18:27)**
   a. அடிமைத்தனத்திற்குள் (அடங்கியிருத்தல்) (1:1-12:32)

1:1-7	5:1-23	9:8-17
1:8-14	6:1-13	9:18-35
1:15-22	6:14-30	10:1-20
2:1-14	7:1-7	10:21-29
2:15-25	7:8-13	11:1-10
3:1-9	7:14-25	12:1-13
3:10-22	8:1-15	12:14-22
4:1-13	8:16-32	12:23-32
4:14-31	9:1-7	

   b. அடிமைத்தனத்திற்கு வெளியே (வல்லமையினாலும், இரத்தத்தினாலும் மீட்பு) (12:33-14:31)

12:33-41	13:1-16	14:1-12
12:42-51	13:17-22	14:13-31

   c. சீன் வனாந்தரத்துக்கு யாத்திரை (கல்வி) (15:1-18:27)

15:1-21	16:8-21	17:8-16
15:22-27	16:22-36	18:1-16
16:1-7	17:1-7	18:17-27

2. **தேவனிடத்திருந்து வெளிப்பாடு (19:1-40:38)**
   a. நியாயப்பிரமாணம் கொடுத்தல் (19:1-24:18)

19:1-17	22:1-15	23:20-33
19:18-25	22:16-31	24:1-18
20:1-26	23:1-9	
21:1-36	23:10-19	

b. ஆசரிப்புக் கூடாரத்தை நிறுவுதல் (25:1-31:18)

25:1-9	26:31-37	29:31-46
25:10-22	27:1-8	30:1-21
25:23-30	27:9-21	30:22-33
25:31-40	28:1-43	30:34-38
26:1-14	29:1-9	31:1-11
26:15-30	29:10-30	31:12-18

c. நியாயப்பிரமாணத்தை மீறுதல் (32:1-34:35)

32:1-10	33:1-11	34:10-28
32:11-18	33:12-23	34:29-35
32:19-35	34:1-9	

d. ஆசரிப்பு கூடாரத்தின் கட்டுமானம் (35:1-40:38)

35:1-9	36:8-38	39:1-43
35:10-19	37:1-29	40:1-33
35:20-35	38:1-20	40:34-38
36:1-7	38:21-31	

ஆசரிப்புக் கூடாரத்தின் வரைபடம்



லேவியராகமம்
(பரிசுத்த புத்தகம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: மோசே இந்தப் புத்தகத்தை எழுதினார். லேவியராகமம் என்ற பெயர் கிரேக்க வேதம் செப்டுவிஜென்ட்டிருந்து வந்தது. இதன் அர்த்தம் "லேவியரின் தொடர்பாக" - லேவியர்கள் தேசத்திற்கு ஊழியம் செய்ய தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசாரியராக இருந்தார்கள். ஆசாரியர்கள் என்ற முறையில் தேவ ஆராதனைக்காக அவர்களை வழிநடத்த தேவனால் கொடுக்கப்பட்ட அநேக சட்டங்கள் லேவியராகமத்தில் உள்ளன.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 1450-1410

மையக்கருத்தும் நோக்கமும்: லேவியராகமம் 11:45 ***"நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருப்பீர்களாக"*** என்று கூறுகிறது. லேவியராகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள கட்டளைகள் இஸ்ரவேல் ஜனங்கள் தேவனுக்கு முன்பாக பரிசுத்தமாக நடந்துகொள்ள வேண்டும் என்று காட்டுகிறது. லேவியராகமம் இஸ்ரவேல் ஜனங்களுக்கு (1) தேவனை ஆராதிப்பது மற்றும் அவருடன் நடப்பது எப்படி? (2) ஆசாரியத் தேசமாக அழைக்கப்பட்ட தேசம் அதன் அழைப்பை நிறைவேற்றுவது எப்படி? என்பதைக் கற்றுக் கொடுக்க எழுதப்பட்டது. இதன் முதன்மையான மையக்கருத்து **பரிசுத்தம்** (சுத்திகரித்தல் என்பது ஒருவரை பரிசுத்தமாக்கும் நடைமுறையாகும்). பரிசுத்தராகிய கடவுளை பயின் அடிப்படையில், மத்தியஸ்தராகிய ஆசாரியன் மூலமாக மட்டுமே அடைய முடியும்.

முக்கிய நபர்கள்: மோசே, ஆரோன்

லேவியராகமத்தில் கிறிஸ்து: யாத்திராகமத்தைப் போல் அநேக "மாதிரிகள்" லேவியராகமத்திலும் காணப்படுகின்றன.

ஐந்து பகள்: அனைத்தும் நாம் தேவனோடு உறவுகொள்ள அவருடைய பரிசுத்த வாழ்க்கை மற்றும் பிதாவுக்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்த இயேசு கிறிஸ்துவின் ஆள்தத்துவம் மற்றும் ஊழியத்திற்கு மாதிரியாக இருக்கின்றன.

பிரதான ஆசாரியன்: லேவியராகமத்தில் நன்கு தெரியக்கூடிய ஒரு இயேசுவின் மாதிரியாக இருக்கிறான்.

ஏழு பண்டிகைகள்: இரட்சகரின் பூரண மனித இயல்பு, அவரின் பதியான ப, மரித்தோரிருந்து உயிர்த்தெழுதல், பரிகார வேலை ஆகியவற்றைக் காட்டுகின்ற மாதிரிகளாக இருக்கின்றன.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **பயின் சட்டங்கள் (1:1-17:16)**
   a. தேவனிடத்தில் சேருவதற்கு (1:1-7:38)

1:1-17	4:1-35	6:8-30
2:1-16	5:1-19	7:1-38
3:1-17	6:1-7	

   b. ஆசாரியருக்கு (8;1-10:20)

8:1-36	9:15-24
9:1-14	10:1-20

   c. பரிசுத்தத்தைக் குறித்து (11:1-15:33)

11:1-12	13:1-59	15:1-33
11:13-47	14:1-32	
12:1-8	14:33-57	

   d. தேசத்தின் பரிகாரத்தை குறித்து (16:1-17:16)

16:1-28	16:29-34	17:1-16

2. **சுத்திகரிப்பின் சட்டங்கள் (18:1-27:34)**
   a. தேவனுடைய மக்களுக்கு (18:1-20:27)

18:1-30	19:9-37
19:1-8	20:1-27

   b. தேவனுடைய ஆசாரியருக்கு (21:1-22:33)

21:1-24	22:1-16	22:17-33

   c. ஆராதனையின் போது (23:1-24:23)

23:1-25	24:1-16
23:26-44	24:17-23

   d. கானான் நிலத்தில் (25:1-26:46)

25:1-22	25:35-46	26:1-13
25:23-34	25:47-55	26:14-46

   e. வாக்குறுதி பற்றி (27:1-34)

27:1-13	27:14-34

எண்ணாகமம்
(வனாந்தரத்தில் சுற்றி அலைதல்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: மோசே இந்த புத்தகத்தை எழுதினார். முதலாவது, சீனாய் மலையிலும் இரண்டாவது மோவாபின் சமபூமியிலும் இஸ்ரவேல் ஜனங்களின் மக்கள் தொகை கணக்கெடுப்பைப் பற்றி 1 மற்றும் 26 ஆம் அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ளதால் இதற்கு எண்ணாகமம் என்ற பெயர் வந்தது.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 1450-1410

மையக்கருத்தும் நோக்கமும்: மக்கள் தொகை கணக்கெடுப்பிருந்து எண்ணாகமம் என்ற பெயர் பெற்றாலும், முக்கியமாக 40 வருடங்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்ததைக் குறித்து இந்தப் புத்தகம் கூறுகின்றது. பதினொரு நாட்களில் முடிவடைகின்ற யாத்திரை ஜனங்களின் விசுவாசமின்மையாலும் கீழ்ப்படியாமையினாலும் 38 வருட உபத்திரவமாக மாறியது. தேவனுடைய வாக்குத்தத்தத்தை விசுவாசத்துடன் இணைக்கத் தவறியதனால் வந்த வீழ்ச்சியை எண்ணாகமம் காட்டுகிறது (எபிரேயர் 3:16-4:2). மேலும் வாழ்க்கை ஒரு ''வனாந்தரமான'' அனுபவமாருந்தாலும் தேவனுடைய மக்கள் அந்நிலையிலேயே தரித்திருக்க வேண்டியதில்லை என்று லேவியராகமம் கற்பிக்கின்றது. நம் தெரிந்தெடுத்தலே நம்முடைய வாழ்க்கைப் பாதையில் நம்மை நடத்துகிறது. யோசுவா பின்னால் இதைக் குறித்து விளக்குவார்.

தேவனின் தொடர்ந்த பாதுகாப்பைப் பற்றி இந்தப் புத்தகம் முழுவதிலும் காணலாம்; இது மற்றொரு முக்கிய கருத்தாகக் காட்டப்படுகிறது. இஸ்ரவேல் மக்கள் மறுபடியும், மறுபடியுமாகப் பாவம் செய்தும், விசுவாசமில்லாதவராக இருந்த போதிலும், தேவன் அற்புதமாக அவர்களுடைய தேவைகளைச் சந்தித்தார். அவர்களுக்கு நீரூற்று, மன்னா, காடை இவைகளைக் கொடுத்தார். இஸ்ரவேல் மக்கள் குறை கூறுபவர்களாகவும் தேவனுக்கு விரோதமாய் முணுமுணுப்பவர்களாகவும்,மீறுபவர்களாகவும் இருந்தாலும் தேவன் தொடர்ச்சியாக அவர்களை நேசித்தார்; அவர்களை மன்னித்தார்.

முக்கிய நபர்கள்: மோசே, ஆரோன், மிரியாம், யோசுவா, காலேப், பாலாக்

எண்ணாகமத்தில் கிறிஸ்து: உயர்த்தப்பட்ட சர்ப்பம் வானாந்தரத்தில் உயர்த்தப்பட்ட மாதிரியைப்போல வேறு ஒரு இடத்திலும் இயேசுவின் சிலுவை மரணம் சித்தரிக்கப்படவில்லை (எண்ணாகமம் 21:4-9; யோவான் 3:14).

மக்களின் தாகம் தீர்த்த பாறை: இயேசுவிற்கு மாதிரியாக இருக்கிறது (1 கொரிந்தியர் 10:4).

மன்னா: இது வானத்திருந்து வந்த ஜீவ அப்பமாகிய இயேசுவின் மாதிரியாக இருக்கிறது (யோவான் 6:31-33).

மேக ஸ்தம்பமும் அக்கினி ஸ்தம்பமும்: இவை இயேசு கிறிஸ்துவின் வழிநடத்தலுக்கு மாதிரியாக இருக்கிறது. மேலும் அடைக்கலப்பட்டணங்கள் நிச்சயமாக கிறிஸ்து நியாயத்தீர்ப்பிருந்து பாதுகாக்கும் அடைக்கலம் என்று காட்டுகிறது.

கடைசியாக சிவப்புப் கிடாரி: சிவப்புக் கிடாரி இயேசு கிறிஸ்துவின் மாதிரியாக இருக்கிறது (எண்ணாகமம் 19).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **சீனாயில் தயாராகுதல் (பழைய தலைமுறை) (1:1-10:36)**

a. மக்களின் நிலையும், மக்களின் கணக்கெடுப்பும் (1:1-4:49)

1:1-46	3:1-24	4:1-20
1:47-54	3:25-39	4:21-28
2:1-34	3:40-51	4:29-49

b. தேவனுடைய கற்பனைகளும், மக்களின் சுத்திகரிப்பும் (5:1-9:14)

5:1-10	6:22-27	8:5-22
5:11-31	7:1-89	8:23-26
6:1-21	8:1-4	9:1-14

c. கானான் நோக்கி தீர்த்த யாத்திரை (9:15-10:36)

9:15-23	10:1-10	10:11-36

2. **பழைய தலைமுறையின் தோல்வி (11:1-25:18)**

a. பாதை முழுவதும் அதிருப்தி (11:1-12:16)

11:1-9	11:16-30	12:1-16
11:10-15	11:31-35	

b. காதேஸ்பர்னேயாவில் அவிசுவாசம் (13:1-14:45)

13:1-24	14:1-10	14:20-38
13:25-33	14:11-19	14:39-45

c. தேவனுடைய வழிநடத்துதல் (15:1-25:18)

15:1-13	18:8-32	21:21-35
15:14-31	19:1-22	22:1-21
15:32-41	20:1-7	22:22-41
16:1-40	20:8-22	23:1-30
16:41-50	20:23-29	24:1-25
17:1-13	21:1-5	25:1-9
18:1-7	21:6-20	25:10-18

3. **புதிய தலைமுறையின் ஆயத்தம் (26:1-36:13)**

a. இஸ்ரவேன் திருத்தி அமைக்கப்பட்ட நிலை (26:1-27:23)

26:1-65	27:1-14	27:15-23

b. காணிக்கைக்கும், வாக்குகளுக்கும் சட்ட திட்டங்கள் (28:1-30:16)

28:1-31	29:1-40	30:1-16

c. நிலத்தின் நிர்வாக சம்பந்தங்கள் (31:1-36:13)

31:1-24	33:1-49	35:1-5
31:25-54	33:50-56	35:6-34
32:1-42	34:1-29	36:1-13

உபாகமம்
(நியாயப்பிரமாணம் - மறுபார்வை)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: மோசே இந்தப் புத்தகத்தை எழுதினார். இந்த புத்தகத்தின் ஆங்கிலத் தலைப்பு செப்டுவஜன்ட் என்ற கிரேக்க வேதாகமத்திருந்து வந்தது. அதின் அர்த்தம் "இரண்டாம் பிரமாணம் கொடுத்தல்" என்பதாகும். இவ் அர்த்தம் உபா 17:18ம் வசனத்தின் தவறான மொழிபெயர்ப்பாகும். இது "இந்த நியாயப்பிரமாணத்தினுடைய ஒரு பிரதி" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். எனவே இது இரண்டாவது நியாயப்பிரமாணம் அல்ல. இது சீனாய் மலையில் முதல் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணத்தின் ஒரு மறுபார்வையும் அதின் விரிவும் ஆகும்.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 1410

மையக்கருத்தும் நோக்கமும்: ***மறந்து போகாதபடிக்கு உன்னைக் காத்துக்கொள்.*** நாற்பது வருடங்களாக வனாந்தரத்தில் அலைந்து திரிந்த பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் நுழையும் தருவாயில் இருந்தார்கள். நுழைவதற்கு முன் பாக, பரிசுத்த நியாயப்பிரமாணத்தை நினைப்பூட்டி, இஸ்ரவேலுக்கு தேவன் என்ன செய்தார் என்பதை நினைவுபடுத்துவது அவசியமாக இருந்தது (உபாகமம் 4:1-8). தேவனுக்குக் கீழ்ப்படிவதைப்பற்றியும், தேவனைச் சிநேகிக்க பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுப்பதின் முக்கி யத்துவத்தையும் இந்தப் புத்தகம் எடுத்துரைக்கிறது. இந்த மையக்கருத்து அல்லது நோக்கத்தின் ஒரு பகுதியாக பிள்ளையாக தேவனை நேசித்துக் கீழ்ப்படிவதைக் கற்றுக்கொடுப்பதின் அவசியத் தேவையை இப்புத்தகம் வயுருத்துகிறது.

இஸ்ரவேலுடன் தேவனுடைய உடன்படிக்கையை புதுப்பித்தல் (அதிகாரம் 29), யோசுவா புதிய தலைவனாக நியமிக்கப்படுதல் (அதிகாரம் 31) மற்றும் மோசேயின் மரணம் (அதிகாரம் 34) ஆகியவற்றுடன் உபாகம புத்தகம் முடிவடைகிறது..

முக்கிய நபர்கள்: மோசே, யோசுவா

உபாகமத்தில் கிறிஸ்து: ***"உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோத ரரிருந்து எழும்பப்பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக"*** என்ற மோசேயின் வாக்கியம் உபாகமம் 18:15ல் கிறிஸ்துவைத் தெளிவாக சித்தரிக்கின்றது. மேலும் மோசே இயேசுவுக்கு மாதிரியாக இருக்கிறார். மோசே என்ற ஒரு நபர் மாத்திரம் இயேசுவைப் போல் மூன்று பணிகளைச் செய்தான். தீர்க்கதரிசி (உபாகமம் 34:10-12), ஆசாரியன் (யாத்திராகமம் 32:31-35) மேலும் ராஜா (மோசே ராஜாவாக இருக்கவில்லை. ஆனால் இஸ்ரவேலருக்குத் தலைவனாக அல்லது ஆளுபவனாக இருந்தான் 33:4-5).[2]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை (1:1-5)**

2. **சரித்திரத்தை மறுபார்வையிடல் (1:6-4:43)**

1:6-18	2:26-37	4:1-43
1:19-46	3:1-17	
2:1-25	3:18-29	

3. **நியாயப்பிரமாணத்தை மறுபார்வையிடல் (4:44-5:33)**

4:44-49	5:1-21	5:22-33

4. **நியாயப்பிரமாணத்தின் பயன்கள் (6:1-11:32)**

6:1-25	9:1-29	11:1-32
7:1-26	10:1-11	
8:1-20	10:12-22	

5. **கூடுதலான பிரமாணங்கள் (12:1-26:19)**

12:1-32	18:9-22	23:1-25
13:1-18	19:1-13	24:1-5
14:1-29	19:14-21	24:6-22
15:1-23	20:1-20	25:1-19
16:1-22	21:1-23	26:1-19
17:1-20	22:1-12	
18:1-8	22:13-20	

6. **உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளல் (27:1-30:20)**

27:1-26	28:15-68	30:1-14
28:1-14	29:1-29	30:15-20

7. தலைவன் மாற்றம் (31:1-34:12)

31:1-13
31:14-30
32:1-52
33:1-29
34:1-12

சுருக்கம்: நினைவில் கொள்ள வேண்டிய மையக்கருத்துகள்

ஆதியாகமம்	தேசத்தைத் தெரிந்தெடுத்தல்
யாத்திராகமம்	தேசத்தின் மீட்பு
லேவியராகமம்	தேசத்தின் சுத்திகரிப்பு
எண்ணாகமம்	தேசத்தை வழிநடத்துதல்
உபாகமம்	தேசத்துக்குக் கற்றுக் கொடுத்தல்

பகுதி 2
சரித்திரப் புத்தகங்கள்

பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு பாகமும் இயேசு கிறிஸ்துவைப்பற்றிய ஒரு குறிப்பிட்ட காரியத்தை வர்ணிக்கிறது. யோசுவாவிருந்து எஸ்தர் வரையுள்ள இரண்டாம் பாகமாகிய புஸ்தகங்கள் இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரத்தை விளக்குகிறது. இந்தப் புத்தகங்கள் இஸ்ர வேலரின் வாழ்க்கையை உள்ளடக்கியிருக்கிறது. இஸ்ரவேல் கானான் தேசத்தை சுதந்தரித்தது முதல் அவிசுவாசத்தினாலும் கீழ்ப்படியா மையினாலும் நிலத்தை இழந்து இரண்டு பிரிவாக பிணைக் கைதிகளாகக் கொண்டு போகப்பட்டது வரை இந்த புத்தகங்களில் காணலாம். 800 வருட இஸ்ரவேல் சரித்திரத்தை உள்ளடக்கிய இந்த 12 புத்தகங்கள் கானான் தேசத்தை ஜெயம் கொள்ளுதலையும் சுதந்தரித்தைக் குறித்தும், நியாயாதிபதிகளின் ஆட்சியைக் குறித்தும், இராஜாக்களை ஏற்படுத்தினதைக் குறித்தும், இஸ்ரவேல் வடக்கு மற்றும் தெற்கு ராஜ்யங்கள் எனப்பிரிக்கப்பட்டதைக் குறித்தும், அசீரியாவின் கையில் வடதேசம் விழுந்ததைக் குறித்தும், பாபிலோனுக்கு தென்தேசம் கொண்டுபோகப்பட்டதைக் குறித்தும், நெகேமியா, எஸ்றா தலைமையில் யூத மக்கள் திரும்பி எருசலேமிற்கு வந்ததை குறித்தும் தெளி வாக எடுத்துரைக்கின்றன.

மேசியாவாகிய இயேசு கிறிஸ்து, வரவுக்காக நம்மை தயார்படுத்துகிற இந்தப் புத்தகங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள காரியங்களைக் கூறுகின்றன:

சரித்திர புத்தகங்கள்: கிறிஸ்துவுக்காக தயாராகுதல்[3]		
யோசுவா நியாயாதிபதிகள் ரூத்	தேசத்தை சுதந்தரித்தலும் பின்பு எதிரிகளால் ஒடுக்கப்படுதலும்	தேவனது ஆட்சி: இஸ்ரவேலரை தேவன் ஆண்ட காலத்தை உள்ளடக்கிய புத்தகங்கள் (கி.மு. 1405-1043)
1 சாமுவேல் 2 சாமுவேல் 1 இராஜாக்கள் 1–10 1 இராஜாக்கள் 11–22 2 இராஜாக்கள் 1–17 2 இராஜாக்கள் 18–25 1 நாளாகமம் 2 நாளாகமம்	தேசத்தின் திடநிலை தேசத்தை விரிவாக்குதல் தேசத்தின் மகத்துவம் தேசத்தின் பிரிவு வட தேசத்தின் சீர்கேடு தென்தேசம் நாடுகடத்தப்படுதல் தேவாலயம் தயாராகுதல் தேவாலயத்தின் அழிவு	அரசனின் ஆட்சி: தேசம் நிலைவரப்பட்டது முதல் தேசம் அழிக்கப்பட்ட வரைக்கும் உள்ள சரித்திரத்தை இந்த புத்தகங்கள் காண்பிக்கின்றன கி.மு. 586
எஸ்றா நெகேமியா எஸ்தர்	தேவாலயத்தை மறுபடி புதுப்பித்தல் எருசலேமைத் திரும்பக் கட்டுதல் தேசத்தின் மக்களைப் பாதுகாத்தல்	பழைய நிலைக்கு வருதல்: 70 வருடங்களுக்கு பிறகு மீதியான ஜனங்கள் திரும்பி வந்ததை இந்தப் புத்தகங்கள் விளக்குகிறது (கி.மு. 605-536)

யோசுவா
(சுதந்தரித்தலும் ஜெயமும்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: யோசுவா இந்தப் புத்தகத்தை எழுதினான். முதல் 5 புத்தகங்களைப் போல் இல்லாமல் மோசே யின் தாசன், யோசுவா என்ற தனிப்பட்ட மனிதனின் பெயரைத் தலைப்பாக இந்தப் புத்தகம் கொண்டுள்ளது. யோசுவாவின் உண்மை யான பெயர் "ஓசேயா" (எண்ணாகமம் 13:8; உபாகமம் 32:44) இதின் அர்த்தம் "இரட்சிப்பு" வனாந்தரத்தில் அலைந்து திரிந்த காலத்தில் மோசே யோசுவாவின் பெயரை ஓசேயாயிருந்து யோசுவா என்று மாற்றினான். யோசுவா என்ற பெயரின் அர்த்தம் "யெகோவா இரட் சிப்பாயிருக்கிறார்" (எண்ணாகமம் 13:16) இந்த புத்தகம் அநேக தீர்க்கதரிசன எதிர்பார்ப்புகளை கொண்டுள்ளது. மக்கள் எதிரிகளை மேற்கொண்டதும், கானானை சுதந்தரித்ததும் மனிதனுடைய அறிவோ பலமோ அல்ல, தேவனுடைய பலத்தினால் மாத்திரம் நடந்தது என யோசுவாவுக்கும் மற்ற உளவாளிகளுக்கும் மக்களுக்கும் நினைப்பூட்டுகிறது. யோசுவா உலக சரித்திரத்தின் மிகவும் பெரிய படைத் தலைவனாக இருந்தான். ஆனாலும் அவனுடைய ஞானம் மற்றும் வெற்றிகள் நம்முடைய இரட்சிப்பாக இருக்கிற தேவனிடத்திருந்து வந்தது. தேவனே இஸ்ரவேல் ஜனத்திற்கு வெற்றி தந்து இஸ்ரவேன் எதிரிகளை மேற்கொண்டு தேசத்தை சுதந்திரமாகக் கொடுத்தார்.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 1400–1370

மையக்கருத்தும் நோக்கமும்: வாக்குத்தத்த தேசத்தை வெற்றிகொள்ளல், சுதந்தரித்தல், பிரித்தல் என்பவைகளே இந்த புத்தகத்தின் மையக்கருத்தும் நோக்கமும் ஆகும். தேவன் இஸ்ரவேலுக்கு வாக்குத்தத்தம் கொடுத்ததை சரியாக செய்து தம்முடைய வாக்குத்தத்தத் தில் உண்மையுள்ளவராக இருப்பதை காண்பிக்க இந்த புத்தகம் உருவாக்கப்பட்டது (ஆதியாகமம் 15:18 பார்க்க, யோசுவா 1:2-6; 21:43-45). வாக்குத்தத்தம் செய்யப்பட்ட நாட்டை வென்று சுதந்தரித்து பங்கிட்டுக் கொள்வதைக் காட்டுவதே இதன் மையம். தேவன் உண்மையுள் ளவராயிருக்கிறார். யோசுவா புத்தகத்தில் உள்ள சம்பவங்கள் தேவன் தனிச்சிறப்பாக எல்லாவித மிகப்பெரிய எதிர்ப்புகள் மத்தியிலும் தம் ஜனங்களுக்குப் பதிலாக, இடைப்பட்டதை குறிக்க தெரிந்தெடுக்கப்பட்டவைகள் ஆகும், ஆபிரகாமும் சாராளும் ஈசாக்கைப்பெற்றது போல, அரணான பட்டணங்களைச் சுதந்தரித்ததும் தேவனுடைய வாக்குத்தத்தத்தின் செயல்களே. இப்படிப்பட்ட செயல்களை எவ்வளவு கடின முயற்சி செய்தாலும் தேவன் தவிர ஒருவனும் செய்ய முடியாது (ரோமர் 4).

முக்கிய நபர்கள்: யோசுவா, ராகாப், காலேப்

யோசுவாவில் கிறிஸ்து: கிறிஸ்துவைக் குறித்து நேரடியான தீர்க்கதரிசனம் இல்லாமல் இருந்தாலும், இந்தப் புத்தகத்தில் இரட்சகரைக் குறிக்கும் அநேக மாதிரிகள் உள்ளன. முக்கியமான இரண்டு வழிகளில் யோசுவா கிறிஸ்துவின் மாதிரியாக இருக்கின்றார். முதலாவது அவருடைய பெயர் யோசுவா அதன் அர்த்தம், ஹுயெகோவா இரட்சகராக இருக்கிறார்டு என்பதே. இது இயேசு என்ற கிரேக்க வார்த்தைக்கு சமமாயிருக்கிறது. இரண்டாவதாக இஸ்ரவேலரைத் தங்களுடைய வாக்குத்தத்தத்தின் ஹுஇளைபாறுதலுக்குள்டு கானான் தேசத்திற்க்குள் (எபிரெயர் 4:8) இஸ்ரவேலை வெற்றிகரமாக வழிநடத்திய அவருடைய செயல் யோசுவா கிறிஸ்துவுக்கு மாதிரியாக இருக்கிறான். இயேசு வினுள்ள விசுவாசத்தில் நாம் ஓய்வுக்குள் நுழைவதை இந்த புத்தகத்தின் ஓய்வு எடுத்துக்காட்டுகிறது. அநேக புத்திரர்களை மகிமைக்குள் வழிநடத்தும் இரட்சகருக்கு யோசுவா நிழலாட்டமாக இருக்கிறான் (எபிரெயர் 2: 9-10). யோசுவா கர்த்தருடைய சேனையின் அதிபதியால் சந்திக்கப்பட்டான் (5:13-15). இது நிச்சயமாக மாம்ச உருவம் எடுப்பதற்கு முன்பாக இருந்த கிறிஸ்து (இது கிறிஸ்டோபனி (Christophany) என்று அழைக்கப்படுகிறது) தான் இவர் யார் பக்கமும் சாயாமல், படைத்தளபதியாக வந்ததை யோசுவாவுக்கு கற்பிக்க வந்தார். இறுதியாக ராகாபின் சிகப்புக் கயிறு (2:21), இரட்சிப்பு கிறிஸ்துவின் இரத்தம், மற்றும் மரணம் மூலமாகவே கிடைக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது (பார்க்க, 9:19-22). இந்தப் புறஜாதியைச் சார்ந்த வேசி தேவனுடைய வல்லமையான செயல்களைக் கேட்டு, விசுவாசித்து, உளவாளிகளை மறைத்து வைத்து, எரிகோ நகரம் அழிக்கப்பட்ட போது அவள் காக்கப்பட்டாள். மேலும் இயேசுவின் தலைமுறைகளில் அவளுடைய பெயர் இருப்பதைக் காண முடியும் (மத்தேயு 1:15).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **கானானில் படையெடுப்பு (1:1-5:12)**

1:1-9	2:1-24	4:1-24
1:10-18	3:1-17	5:1-12

2. **கானானை வெற்றிகொள்ளல் (5:13-12:24)**

5:13-15	8:1-35	10:29-43
6:1-27	9:1-27	11:1-23
7:1-15	10:1-15	12:1-24
7:16-26	10:16-28	

3. **கானானைப் பிரித்தல் (13:1-21:45)**

13:1-33	17:1-18	20:1-9
14:1-15	18:1-10	21:1-45
15:1-63	18:11-28	
16:1-10	19:1-51	

4. **முடிவுரை (22:1-24:33)**

22:1-34	24:1-28
23:1-16	24:29-33

நியாயாதிபதிகள்
(மீறுதல், நியாயத்தீர்ப்பு, விடுவிக்கப்படுதல் இவை மாறிமாறி வருதல்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: சாமுவேல் இந்தப் புத்தகத்தை எழுதினார் என்று மரபு கூறுகின்றது. ஆனாலும் உண்மையான எழுத்தாளர் யார் என்று சரியாகத் தெரியவில்லை. நியாயாதிபதிகளின் காலத்திருந்து சில விவரங்களை சாமுவேல் சேர்த்திருக்கலாம். தீர்க்கதரிசிகளான நாத்தான், காத் என்பவர்கலும் அந்த விவரங்களை சீர்படுத்தியிருக்கலாம் (1 நாளாகமம் 29:29).

இந்தப் புத்தகத்திற்கு சோபெடிம் (Shophetim) என்பது எபிரெய தலைப்பு. அதன் அர்த்தம் நியாயாதிபதிகள், ஆள்பவர்கள், மீட்பவர் கள் அல்லது இரட்சிப்பவர்கள் என்பதாகும். முதல் நியாயாதிபதிகள் மக்களை விடுவித்தனர். பின்பு அவர்களை ஆளுகை செய்தனர். மேலும் நியாயத்தை நிர்வகித்தனர்.[4]

தங்களை ஒடுக்கியவர்களிடமிருந்து இஸ்ரவேலை விடுதலை செய்வதற்காக தேவன் எழுப்பின நியாயாதிபதிகள் என்று அழைக்கப்பட்ட அநேக தலைவர்களிடமிருந்து இந்த புத்தகத்தின் பெயர் வந்தது. இது இந்த புத்தகத்திற்கு தலைப்பாக இருப்பதை 2:16 வசனம் தெளி வாக வெளிப்படுத்துகிறது. ***“கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணினார்; அவர்கள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள்.”*** எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் இஸ்ரவேலுக்கு நியாயாதிபதியாகவும் இரட்சகராகவும் இருந்தார். காரணம் தேவன் தாமே முதல் தொடர்ந்து பாவம் செய்த மக்களை திருத்துவதற்காக அடிமைத்தன காலத்தை கட்டளையிட் டார். பின்பு அவர்கள் மனம் திரும்பி தேவனை நோக்கிக் உதவிக்காகக் கதறியபொழுது தேவன் தாமே நியாயாதிபதிகளை எழுப்பின ார். நியாயாதிபதிகள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள் (11:27; 8:23).

எழுதப்பட்ட காலம்: கி.மு. 1050-1000

மையக்கருத்தும் நோக்கமும்: யோசுவா புத்தகத்திற்கும், நியாயாதிபதிகளின் புத்தகத்திற்கும் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. இஸ்ரவேல் ஜனங்கள் வெற்றியின் உற்சாகத்திருந்து தோல்வியின் வேதனைக்குள்ளாக, விடுதலையிருந்து அடிமைத்தனத்திற்கு, முன்னேற்றத்திருந்து பின்னடைவுக்குக் கடந்து போனார்கள். எனவே ஏன் இந்தப் புத்தகம்?

சரித்திரபூர்வமாக, நியாயாதிபதிகள் யோசுவாவின் காலத்திருந்து தீர்க்கதரிசியாகிய சாமுவேல் காலத்தையும் சவுல், மற்றும் தாவீது ராஜாக்களின் அரசாட்சியின் துவக்கத்தையும் இணைக்கின்றது. இதில் அவர்கள் மாறி மாறி மனமாற்றம், அடிமைத்தனம், விணணப்பம், இரட்சிப்பு ஆகிய சுழற்சி எழுதப்பட்டுள்ளது. இதன் மூலம் இஸ்ரவேல் அரசன் ஆட்சிக்கு காரணமும் விளக்கமுமாக இருக்கிறது. அவனவன் தன் பார்வைக்கு சரிபோனபடி செய்த (21:25); சூழ்நிலையில் தேசத்துக்கு நியாயம் செய்கிற ராஜாவின் வழிநடத்துதல் தேவைப்பட்டது.

உபதேசபூர்வமாக, அநேக முக்கிய சத்தியத்திற்குள் நியாயாதிபதிகளின் புத்தகம் நம்முடைய கவனத்தை ஈர்க்கின்றது. உபாகமத்தில் எச்சரித்திருந்ததுபோல கீழ்ப்படிதலுக்கு ஆசீர்வாதம் வருகின்றது; கீழ்ப்படியாமைக்கு சிட்சையும் அடிமைத்தனமும், தேவன் வருகின்றது. மேலும், நியாயாதிபதிகள், நமக்கு மக்கள் மனம் திரும்பி, தேவனை நோக்கிக் கதறும்பொழுது சாந்தமும் கிருபையும் நிறைந்த தேவன், பதிலளிக்கிற தேவன் அந்த மக்களை மீட்பார் என்பதை நினைவுபடுத்துகிறது. தொடர்ந்து மக்கள் தேவனை விட்டு விலகுவதும், தேவன் அவர்களை திருத்த அடிமைத்தனத்திற்கு ஒப்புக்கொடுத்தலும், பின்பு மக்கள் மனந்திரும்பி தேவனிடத்தில் முறையிடுவதும், பின்பு தேவன் நியாயாதிபதிகளை எழுப்பி அவர்களை விடுதலை செய்தலுமாகிய சுழற்சியை இந்தப் புத்தகம் விளக்கி இந்தப் புத்தகத்தின் மையக்கருத்தை வெளிப்படுத்துகிறது.

முக்கிய நபர்கள்: நியாயாதிபதிகளாகிய – ஒத்னியேல், ஏகூத், சம்கார், தெபொராள், பாராக், கிதியோன், தோலா, யாவீர், யெப்தா, இப்சான், ஏலான், அப்தோன், சிம்சோன், பிரபலமான நியாயாதிபதிகள்: தெபொராள், கிதியோன் மேலும் சிம்சோன்.

நியாயாதிபதிகளில் கிறிஸ்து: ஒவ்வொரு நியாயாதிபதியும், ஆள்பவர்களாகவும், விடுவிக்கிறவர்களாகவும் செயல்பட்டார். அவர்கள் நீதி செய்கிற ராஜாவாகவும், இரட்சகராகவும் தேவனாகவும் செயல்பட்ட இயேசு கிறிஸ்துவை சித்தரித்துக் காட்டும் மாதிரிகளாக இருந்தனர்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **வீழ்ச்சி – ஒரு முகவுரை: நியாயாதிபதிகளின் காலத்திற்கான காரணங்கள் (1:1-3:8)**

1:1-26	2:1-5	2:11-23
1:27-36	2:6-10	3:1-8

2. **மீட்பு – சரித்திரமும், நியாயாதிபதிகளின் காலத்திலுள்ள ஆளுகையும் (3:9-16:31)**

3:9-14	7:19-25	12:8-10
3:15-30	8:1-27	12:11-12
3:31	8:28-35	12:13-15
4:1-24	9:1-22	13:1-25
5:1-31	9:23-57	14:1-11
6:1-8	10:1-2	14:12-20
6:9-27	10:3-18	15:1-20
6:28-35	11:1-28	16:1-17
6:36-40	11:29-40	16:18-27
7:1-18	12:1-7	16:28-31

3. **பின்மாற்றம், குழப்பம், நியாயாதிபதிகள் காலத்தினுடைய வீழ்ச்சி (17:1-21:25)**

17:1-13	20:1-17	21:8-25
18:1-31	20:18-48	
19:1-30	21:1-7	

ரூத்
(நியாயாதிபதிகளின் புத்தகத்தினுடைய பின் இணைப்பு)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: யூதருடைய மரபு சாமுவேலைச் சுட்டிகாட்டுகிறபோதும் நியாயாதிபதிகளின் புத்தகத்தைப் போல, இந்த புத்தகத்தை எழுதியவரும் யார் என்று நிச்சயமாகத் தெரியவில்லை. இந்தப் புத்தகத்தின் பெயர் இந்த புத்தகத்தின் முக்கிய பாத்திரமாகிய, மோவாபிய இளம் பெண்ணும், இரட்சகரின் தலைமுறை வரிசையில் வந்த தாவீதினுடைய பூட்டியாகிய ரூத்திருந்து வந்தது (மத்தேயு 1:5). ஒரு பெண்ணினுடைய பெயரை கொண்டுள்ள வேதத்தின் வேறு ஒரு புத்தகம் எஸ்தர் ஆகும்.

எழுதப்பட்ட காலம்: கி. மு. 1050

மையக்கருத்தும் நோக்கமும்: பஞ்சகாலத்தில் மோவாபிற்கு கடந்து சென்ற ஒரு இஸ்ரவேல் குடும்பத்தின் சரித்திரம் ரூத் ஆகும். அங்கு கணவனும் இரண்டு மகன்களும் மரித்து இரண்டு மருமக்களுடன் (ஒர்பாள், ரூத்) தனித்து விடப்பட்ட ஒரு பெண் (நகோமி). நகோமி திரும்ப இஸ்ரவேல் தேசத்திற்கு போக முடிவெடுத்தாள். மேலும் ரூத், உறுதியாக நகோமியுடன் இஸ்ரவேல் தேசத்திற்கு வந்தாள். இஸ்ரவேல் தேசத்தில் ஒருநாள் உறவினனாகிய போவாஸ் என்ற பெயருடைய மனிதனின் உதவியை நாடினார்கள். கடைசியாக ரூத் போவாசை மணந்தாள்.

நியாயாதிபதிகளின் புத்தகத்தின் இருண்ட காலத்தின் மத்தியில் ரூத் ஒரு மின்னுகிற வைரத்தைப் போல ஒளிர்கிறது ஒழுக்க கேடும், சுயநலமும், வன்முறையும் ஆளுகை செய்த காலத்தில் ரூத் அன்பும் பரிசுத்தமும் விசுவாசபற்றுமாகிய சரித்திரமாக இருக்கிறது. தங்கள் தெய்வத்தை விட்டுவிட்ட மக்கள் மத்தியிலும் கீழ்படிதல், விசுவாசம் இவைகளைக் கைக்கொண்டு ரூத் செயல்பட்டாள். மேலும் இப்படிப்பட்ட விசுவாசம் எவ்விதமான ஆசீர்வதத்தைக் கொண்டு வருகிறதென்பதை காட்டுகிறது. தாவீது இராஜாவினுடைய மூதாதையர்க்கு ரூத் ஒரு முக்கிய இணைப்பாக இருக்கிறாள். மேலும் அவள் மேசியா வரிசையில் காணப்படுகிறாள். ரூத் புத்தகத்தின் மற்றொரு நோக்கம் சொல்லப்பட்டுள்ளபடி நெருங்கின உறவினன் மீட்கும் சத்தியம் மிகுந்த துன்மார்க்கத்தின் மத்தியிலும் தேவபக்தியுள்ள ஒரு கூட்டம் இருப்பதையும், விசுவாசத்தில் அவரோடு நடப்பவர்களுக்கு தேவனுடைய உண்மையை விளக்குகிற விதத்தில் தெரிகிறது.

ரூத் ஒரு புறஜாதியாளாக இருந்தபடியால், புறஜாதி உலகத்தை தன்னுடைய குடும்பத்தில் கொண்டுவர இருக்கும், தேவனுடைய ஆசையை இந்த புத்தகம் விளக்குகின்றது. தேவனுடைய அன்பை தெள்ளத் தெளிவாகப் பிரதிபத்த ஒரு நபர் மோவாபிய ஸ்திரீயாக இருக்கிறாள் என்பது ஆச்சரியமாக தோன்றலாம். திருமணத்தில் தன்னை ஏற்றுக் கொண்ட இஸ்ரேல் குடும்பத்திற்கு அவளுடைய முழுமையான விசுவாசம் மற்றும் தனித்து விடப்பட்ட தன்னுடைய மாமியாருக்கு தன்னுடைய முழுமையான அர்ப்பணம். அவளை ஒரு உண்மையான இஸ்ரேன் மகளாகவும், தாவிதுக்கு ஒரு தகுதியான மூதாதையராகவும் காட்டுகிறது.. தேவனுடைய இராஜ்யத்தில் பங்கு பெறுவது, பிறப்பினாலோ, இரத்தத்தினாலோ அல்ல, ஒருவரது வாழ்க்கையை தேவனுடைய சித்தத்துக்கு அர்ப்பணித்து விசுவாசத்தின் மூலம் வரும் கீழ்ப்படிதனால் மட்டுமே என்பதை நிரூபிக்கிறார் (ரோமர் 1:5). குமாரனுடைய இராஜ்யத்தில் எல்லா நாட்டுக்காரர்களும் இடம் பெறுவார்கள் என்பதை தாவீதின் பூட்டியாக இருந்த ரூத் மூலம் அறிகிறோம்.[5]

முக்கிய நபர்கள்: ரூத், நகோமி, போவாஸ்

ரூத்தில் கிறிஸ்து: பழைய ஏற்பாட்டில் ஒரு மனிதனோ, இடமோ, பிணையத்திற்கு விற்கப்பட்டால் உறவுக்காரர் மீட்பர் என்று அழைக்கப்படுபவரால் சில நிபந்தனைகளை நிறைவேற்றி அவர்களை மீட்டுக் கொள்ள முடியும். மீட்பர் என்பவர் எபிரெய மொழியில் கோய்ல் (Goel) என்றழைக்கப்படுகிறார். இதன் அர்த்தம் "நெருங்கிய உறவு." இரட்சகரின் மீட்பின் பணிக்கு இது ஒரு பூரணமான விளக்கமாக இருக்கிறது.

விடுவிக்கப்படுபவரின் இரத்த சம்பந்தப்பட்ட உறவுக்காரராக இந்த கோய்ல் (Goel) இருக்க வேண்டும். (உபாகமம் 25:5; 7-10; யோவான் 1:14; ரோமர் 1:3; பிப்பியர் 2:5-8; எபிரெயர் 2:14-15). இந்த மீட்பர் மீட்பின் கிரயத்தை கொடுக்க திறமை உள்ளவராக இருக்க வேண்டும் (2:1 மேலும் பார்க்க, 1 பேதுரு 1:18-19). மேலும் இவர் மீட்க அல்லது கிரயத்தை கொடுக்க விருப்பம் உள்ளவராக இருக்க வேண்டும் (3:11 மேலும் பார்க்க, மத்தேயு 20:28; யோவான் 10:15, 19; எபிரெயர் 10:7). இயேசு கிறிஸ்து தன்னைத்தான் பாவமில்லாமல் இருந்து பாவ சாபத்திருந்து விடுவிக்கப்பட்டவராக இருந்ததுபோல, இந்த மீட்பரும் விடுவிக்கப்பட்டவராக இருக்க வேண்டும் (2 கொரிந்தியர் 5:22; 1 பேதுரு 2:22; 1 யோவான் 3:5).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **தீர்மானமும் ரூத் திரும்பி வருதலும் (1:1-22)**
   1:1-5 1:6-18 1:19-22

2. **ரூத்தின் உரிமைகள் (2:1-23)**
   2:1-3 2:4-17 2:17-23

3. **ரூத்தின் வேண்டுகோள் (3:1-18)**
   3:1-4 3:5-9 3:10-18

4. **ரூத்தினுடைய வெகுமதி (4:1-22)**
   4:1-12 4:13-17 4:18-22

1 சாமுவேல்
(நியாயாதிபதிகளிருந்து அரசாட்சிக்கு மாறுதல்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: 1 மற்றும் 2 சாமுவேல் ஆகியவற்றை யார் எழுதினார் என்று நமக்கு உறுதியாகத் தெரியவில்லை. யூத தால்மூத் மரபு இந்தப் புத்தகம் சாமுவேலால் எழுதப்பட்டது என்று கூறுகிறது. 1 சாமுவேலும் 2 சாமுவேலும் தீர்க்கதரிசி சாமுவேருந்து பெயர் பெற்றிருந்தாலும், 1 சாமுவேலுடைய பகுதியைக் காட்டிலும் மேலாக அந்த தீர்க்கதரிசி எழுதியிருக்க முடியாது. ஏனெனில் 25வது அதிகாரத்தில் அவருடைய மரணம் பதிவு செய்யப்பட்டுள்ளது. 1 சாமுவேல் 10:25ல் சாமுவேல் ஒரு புத்தகம் எழுதினதாகக் கூறப்படுகிறது. சாமுவேல் பதிவு செய்யப்பட்ட சம்பவங்களை தீர்க்கதரிசி நாத்தான் மற்றும் காத்தும் எழுதினார்கள் என்று 1 நாளாகமம் 29:29 குறிக்கின்றது.

1 மற்றும், 2 சாமுவேல் புத்தகங்கள் ஒரே புத்தகமாக எபிரெய வேதத்தில் இடம் பெற்றது. முந்தைய கால மன்னராட்சியில் இஸ்ரவேலருடைய மன்னராட்சி சரித்திரத்தை இந்த இரண்டு புத்தகங்களும் கொடுக்கிறது. முக்கியமாக 1 சாமுவேல் சவுல் ராஜாவைப் பற்றியும் 2 சாமுவேல் தாவீது ராஜாவைப் பற்றியும் கூறுகிறது.

1 மற்றும், 2 சாமுவேல் முதலாவது ஒரே புத்தகமாக இருந்தாலும், செப்டுஜெண்ட் (எபிரெய மொழியிருந்து கிரேக்க மொழிக்கு மாற்றப் பட்ட வேதம்) மொழிபெயர்ப்பாளர்கள் 2 புத்தகமாகப் பிரித்தார்கள். பின்னர் இந்த பிரிவை ஜெரோம் என்பவருடைய இலத்தீன் வல்கேட் (Vulgate) என்ற வேதமும் மேலும் தற்கால வேதமும் பின்பற்றியது.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 1010 (அதன் பின்னரும்)

மையக்கருத்தும் நோக்கமும்: சாமுவேலுடைய பிறப்பிலும், அவனுடைய தேவாலய பயிற்சியிலும் ஆரம்பித்து இந்தப் பெரிய தேவமனிதன் இஸ்ரவேல் ஜனங்களை தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும் கடைசி நியாயாதிபதியாகவும் இருந்து வழிநடத்தினதை குறித்து 1சாமுவேல் விளக்குகிறது. சாமுவேல் வழிநடத்திய காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் மற்ற நாடுகளைப்போல தங்களுக்கும் ராஜா வேண்டும் என்ற விருப்பம் கொண்டார்கள். தேவனுடைய வழிநடத்துதல் சாமுவேல் சவுலை முதல் இராஜாவாக அபிஷேகம் செய்தார். ஆனால் சவுல் ராஜா தன்னுடைய கீழ்ப்படியாமையால் தேவனால் புறக்கணிக்கப்பட்டான். மறுபடியும் தேவனுடைய வழிநடத்துதன்படி சவுலுக்கு பதிலாக தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவனாக இருந்த தாவீதை இஸ்ரவேன் ராஜாவாக அபிஷேகம் செய்தான். தேவபக் தியுள்ள தாவீதுக்கும் பொறாமை பிடித்த சவுலுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்தத்தைக் குறித்து இந்த புத்தகத்தின் மீதமுள்ள பகுதிகள் விளக்குகிறது.

சிம்சோனுக்கு அடுத்து வந்த சாமுவேலுடன் விட்ட நியாயாதிபதிகளின் சரித்திரத்தை 1 சாமுவேல் தொடருகிறது. (பார்க்க நியாயாதிபதி கள் 16:31). நியாயாதிபதிகளின் வழிநடத்துதருந்து ராஜாக்களின் வழிநடத்துதலுக்கு இறையாட்சியிருந்து மன்னராட்சிக்கு மாறியதை இந்தப் புத்தகம் விளக்குகிறது. யெகோவா தங்களுடைய வாழ்க்கையை ஆள நியாயாதிபதி காலத்தில் அனுமதிக்கவில்லை இஸ்ரவேல் ஜன ங்கள் அவனவன் தன் பார்வைக்கு சரியானதைச் செய்தனர். (நியாயாதிபதிகள் 17:6; 21:25). மன்னராட்சி ஒரு உறுதி நிலையைக் கொண்டு வந்தது. ஏனென்றால் மக்கள் காணக்கூடிய அரசர்களைத் பின்பற்ற அதிக விருப்பம் கொண்டனர். தேவன் சாமுவேலுடன் இப்படியாகக் கூறினார். ***"ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள்; அவர்கள் உன்னைத் தள்ளவில்லை, நான் அவர்களை ஆளாதபடிக்கு, என்னைத்தான் தள்ளினார்கள்"*** (8:7).

இஸ்ரவேலுக்கு ஒரு ராஜாவைக் கொடுக்க தேவன் சித்தமாயிருந்தார் (ஆதியாகமம் 49:10; உபாகமம் 17:14-20). ஆனால் ஜனங்கள் தேவ னுடைய ராஜாவுக்காகக் காத்திருப்பதற்க்குப் பதில், தாங்கள் தெரிந்து கொண்ட ராஜாவை வயுருத்திக் கேட்டார்கள். சவுல் தேவனால் நிராகரிக்கப்பட்டான். ஏனென்றால் ***"பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதல் உத்தமம்"*** (15:22) என்ற சத்தியத்தை அறியவில்லை. சவுல் மன ம் பேதத்தவனாக, ***"மனுஷன் பார்ப்பது போல் கர்த்தர் பார்ப்பதில்லை"*** (16:7) என்பதை தாவீதில் காண்கிறோம். தாவீதின் சிங்காசன த்தைத் தேவன் நிலைநிறுத்தியதற்குக் காரணம் தாவீதின் கீழ்ப்படிதல்; ஞானம் மற்றும் தேவனை சார்ந்து வாழ்ந்ததாகும்.[6]

சரித்திரபூர்வமாக, 1 சாமுவேன் முக்கிய நோக்கங்களில் ஒன்று தாவீதின் வம்சத்தினுடைய தெய்வீக ஆரம்பத்தைப் பதிவு செய்வதாகும்.

முக்கிய நபர்கள்: தீர்க்கதரிசி சாமுவேல், கீழ்ப்படியாத ராஜா சவுல், ஆட்டிடையன் தாவீது

1 சாமுவேல் கிறிஸ்து: சாமுவேல் ஒரு தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், அவன் ஒரு ராஜாவாயிராதபோதும், தேவனால் பயன்ப டுத்தப்பட்ட நியாயாதிபதியாக இருந்து அரசர்கள் ஆள்வதற்குப் புதிய காலத்தை தொடங்கினான். இப்படியாக சாமுவேல் கிறிஸ்துவுக்கு வருணணையாக இருக்கிறான்.

மேசியா என்பதின் அர்த்தம் "அபிஷேகிக்கப்பட்ட ஒருவர்" மேலும் வேதத்தில் முதல் முதலாக இந்த வார்த்தையை சாமுவேல் புத்தகமே பயன்படுத்தியது (2:10). மேசியாவினுடைய ஒரு பிரதான தன்மை தாவீதின் வாழ்க்கையில் காணப்பட்டது. பெத்லகேமில் பிறந்து ஆட்டி டையனாக பணி செய்து, இஸ்ரவேலரை ஆண்டு, தாவீதின் வம்சத்தின் மூலமாக வந்த அரசர், மேசியாவுக்கு மூதாதையராக இருந்தான். புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து ***"மாம்சத்தின்படி தாவீது வம்சத்தில் பிறந்தவர்"*** என விவரிக்கப்படுகிறார். (ரோமர் 1:3).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **சாமுவேல் - கடைசி நியாயாதிபதி (1:1-8:22)**
   - a. சாமுவேன் அழைப்பு (1:1-3:21)
     - 1:1-18
     - 1:19-28
     - 2:1-11
     - 2:12-17
     - 2:18-21
     - 2:22-36
     - 3:1-21
   - b. சாமுவேலுக்கு கொடுக்கப்பட்ட ஊழியம் (4:1-7:17)
     - 4:1-22
     - 5:1-12
     - 6:1-21
     - 7:1-17
   - c. சாமுவேன் கரிசனை (8:1-22)
     - 8:1-9
     - 8:10-22

2. **சவுல் - முதல் அரசன் (9:1-15:35)**
   a. சவுலைத் தெரிந்தெடுத்தல் (9:1-12:25)

9:1-14	10:17-27	12:12-25
9:15-27	11:1-15	
10:1-16	12:1-11	

   b. சவுலைப் புறக்கணித்தல் (13:1-15:35)

13:1-23	14:24-46	15:1-9
14:1-23	14:47-52	15:10-35

3. **தாவீது - அடுத்த அரசன் (16:1-19:24)**
   a. தாவீது - ஆட்டிடையன், தெரிந்தெடுத்து அபிஷேகம் பண்ணப்படுதல் (16:1-23)

16:1-11	16:12-23

   b. தாவீது - அரக்கனைக் கொல்லுதல், சவுன் அரண்மனையிலுள்ளோர் உற்சாகம்

17:1-19	17:20-30	17:31-58

   c.. தாவீது யோனத்தானின் நண்பன்; சவுலால் புறக்கணிக்கப்படுதல் (18:1-19:24)

18:1-9	18:20-30
18:10-19	19:1-24

4. **தாவீது - தப்பி ஓடுதல், சவுலால் தொடரப்படுகிறான் (20:1-26:25)**
   a. தாவீது யோனத்தானால் பாதுகாக்கப்படுகிறான் (20:1-42)

20:1-29	20:30-42

   b. தாவீது அகிமெலெக்கினால் பாதுகாக்கப்படுகிறான் (21:1-9)
   c. தாவீது ஆகீஸ் என்ற மனிதனால் பாதுகாக்கப்படுகிறான் (21:10-15)
   d. தாவீதும் அவனோடுள்ளவர்களும் (22:1-26:25)

22:1-23	24:1-22	25:18-38
23:1-14	25:1	25:39-44
23:15-29	25:2-17	26:1-25

5. **பெஸ்தரின் தேசத்தில் தாவீது அடைக்கலம் புகுதல் (27:1-31:13)**
   a. தாவீது பெஸ்தரின் வேலைக்காரனாக மாறுதல் (27:1-28:2)
   b. சவுல் எந்தோரி அஞ்சனம் பார்த்தல் (28:3-25)
   c. தாவீது பெஸ்தரால் துரத்தப்படுதல் (29:1-11)
   d. தாவீது அமலேக்கேயரை அழித்தல் (30:1-31)
   e. பெஸ்தரும் சவுன் மரணமும் (31:1-13)

2 சாமுவேல்
(தாவீதின் அரசாட்சி - தேசத்தை விரிவுபடுத்துதல்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: துவக்கத்தில் 1 சாமுவேலும் 2 சாமுவேலும் ஒன்றாகவே இருந்தன. பின்பு அது இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இந்த புத்தகத்தின் எழுத்தாளரைக் குறித்துள்ள காரியங்களை 1 சாமுவேலுள்ள எழுத்தாளரின் விளக்கத்தில் காணலாம்.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 1010 (அதற்குப் பின்னும்)

மையக்கருத்தும் நோக்கமும்: இஸ்ரவேல் இராஜ்யத்தினுடைய சரித்திரத்தைத் தடையில்லாமல் சவுன் மரணத்தில் தொடங்கி தாவீது ராஜாவின் அரசாட்சியில் தொடருகின்ற கதையை 2 சாமுவேல் கூறுகிறது. இது முக்கியமாக தாவீதின் நாற்பது வருட ஆட்சியைப் பற்றியதாகும் (5:4-5) தாவீது ராஜாவின் வாழ்க்கையின் வெற்றி, தோல்வி, விபசாரங்கள், பாவங்கள், கொலை, அதனால் தேசம் மற்றும் அவனுடைய குடும்பத்தில் ஏற்பட்ட விளைவுகளைச் சித்தரிக்கிறது. தாவீதினுடைய ஆளுகையில் "பாவம் எப்படி வெற்றியை உபத்திரவமாக மாற்றுகிற"து என்பதே 2 சாமுவேல் புத்தகத்தின் கருப்பொருள் சுருக்கம் எனலாம். சவுனால் இராஜ்யம் நிறுவப்பட்டது. தாவீதினால் அது விரிவாக்கப்பட்டது. சவுன் ஆளுகை நியாயாதிபதிகளின் காலத்திருந்து இஸ்ரவேலர்களுக்கு உறுதியைக் கொடுத்தது. ஆனால் தாவீதின் ஆளுகை வளர்ச்சி அல்லது விரிவைக் கொண்டு வந்தது. 2 சாமுவேல் தாவீது ராஜாவின் வாழ்க்கையில் உள்ள நல்லதையும், கெட்டதையும் கூறுகிறது, வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள தலைவர்களைப் பற்றி தன்னுடைய தனிப்பட்ட பாணியில் வெளிப்படையாகப் பேசுகிறது.

முக்கிய நபர்கள்: தாவீது, பத்சேபாள், நாத்தான், அப்சலோம், யோவாப், அம்னோன், அகித்தோப்பேல்

2 சாமுவேல் கிறிஸ்து: அவனுடைய பாவத்தை தவிர இஸ்ரவேன் ராஜாவாக தாவீது இயேசுவுக்கு மாதிரியாக இருக்கிறான். இந்தப் புத்தகத்தில் தான் தேவன் தாவீதின் உடன்படிக்கையை நிறுவுகிறார், அது கிறிஸ்துவில் நிறைவேறியது.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **தாவீதின் வெற்றி வாகை (1:1-10:19)**
   a. அரசனாக முடிசூடப்படுதல் (1:1-5:5)

1:1-16	2:12-32	3:31-39
1:17-27	3:1-5	4:1-12
2:1-7	3:6-25	5:1-5
2:8-11	3:26-30	

   b. இராஜ்யம் பலப்படுதல் (5:6-6:23)

5:6-25	6:1-11	6:12-23

   c. இராஜ்யத்தைக் குறித்துள்ள உடன்படிக்கை (7:1-29)

7:1-7	7:8-17	7:18-29

   d. இராஜாவின் வெற்றி (8:1-10:19)

8:1-18	9:1-13	10:1-19

2. **தாவீதின் மீறல் (11:1-27)**
   a. ராஜாவின் விபசாரம் (11:1-13)
   b. ராஜாவின் ஆணையால் செய்யப்பட்ட கொலை (11:14-27)

3. **ராஜாவின் உபத்திரவங்கள் (12:1-24:25)**
   a. வீட்டில் உபத்திரவம் (12:1-13:36)

12:1-14	12:24-25	13:1-23
12:15-23	12:26-31	13:24-36

   b. இராஜ்யத்தில் உபத்திரவம் (13:37-24:25)

13:37-39	7:1-14	20:13-26
14:1-20	17:15-29	21:1-22
14:21-33	18:1-18	22:1-51
15:1-12	18:19-33	23:1-7
15:13-37	19:1-7	23:8-39
16:1-4	19:8-43	24:1-14
16:5-14	20:1-9	24:15-17
16:15-23	20:10-12	24:18-25

1 இராஜாக்கள்
(தாவீதின் மரணம் - இராஜ்யம் பிளவுபடுதல்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: யூதர்கள் எரேமியாவைச் சுட்டிக் காட்டுகின்ற போதும் எழுதியவர் யார் என்று தெரியவில்லை. டாக்டர் கார்லஸ் ரைரி கூறுகிறார்:

> எழுதியவரோ அல்லது தொகுத்தவரோ யாராக இருந்தாலும் சரி, அவர்கள் சரித்திர அடிப்படையை உபயோகித்தனர் (11:41; 14:19, 29). பாபிலோனில் பிணையக் கைதியாக வாழ்ந்த ஒருவரைப் போல் இந்த புத்தகத்தின் எழுத்தாளர் தோன்றுகிறார். ஆனாலும் அறியப்படாத ஒருவராக இருக்கலாம், எஸ்றா அல்லது எசேக்கியா அல்லது எரேமியாவாக இருக்கலாம். எனினும், 2 இராஜாக்களின் கடைசி அதிகாரத்தை எரேமியாவை தவிர வேறு ஒருவர்தான் எழுதியிருக்க வேண்டும். ஏனெனில் எரேமியா புத்தகத்திருந்து (எரேமியா 43:6-7) அவர் எகிப்திலே மரித்தார். பாபிலோனில் அல்ல.[7]

1 மற்றும் 2 இராஜாக்கள், இரண்டும் ஒரு புத்தகமாக இருந்தது (1 மற்றும் 2 சாமுவேல் மேலும் 1 மற்றும் 2 நாளாகமம் போல). எபிரெய மரபுப்படி (Melechim) "இராஜாக்கள்" என்று அழைக்கப்பட்டது. சாலமோன் நாட்களிருந்து பாபிலோனுக்குக் கைதியாக கொண்டு போகப்பட்ட காலம் வரைக்குமுள்ள இஸ்ரவேல் மற்றும் யூதாவின் ராஜாக்களின் சரித்திரத்தை குறிக்கின்றபடியால் இந்தப் புத்தகத்தின் தலைப்பு சரியாக இருக்கிறது. 1 இராஜாக்கள் கி.மு. 853 இல். தொடங்கிய அகசியா ராஜாவின் ஆளுகை ஆரம்பமாவதுடன் திடீரென முடிவடைகிறது.

எழுதப்பட்ட காலம்: ஏறத்தாள **கி.மு. 550.** யோயாக்கீம் சிறையிருந்து விடுதலையான சம்பவத்தை கடைசி சம்பவமாக 2 இராஜாக்கள் பதிவு செய்திருக்கிறது. இது சிறையிருப்புக்கு பிறகு 37-ம் வருடத்தில் (கி.மு. 560) நடந்தது. எனவே அந்த சம்பவத்திற்கு முன்பதாக 1 இராஜாக்களும் 2 இராஜாக்களும் எழுதப்பட்டிருக்க முடியாது. கி.மு. 516 இல் யூதர்கள் பாபிலோனியச் சிறையிருப்பிருந்து திரும்பினார்கள். 1 மற்றும் 2 இராஜாக்கள் எழுதப்பட்ட காலத்தில் இது நடைபெற்றிருந்தால் இதன் ஆசிரியர் அதைப்பற்றிக் குறிப்பிட்டிருந்திருப்பார். ஒரு வேளை 1 இராஜாக்களும் 2 இராஜாக்களும் கி.மு. 560 க்கும் கி.மு. 516 க்கும் இடைப்பட்ட காலத்தில் முழுமைபெற்ற படைப்பாக இருந்திருக்கலாம்.[8]

மையக்கருத்தும் நோக்கமும்: தாவீதின் மரணத்துக்குப் பின்பு (அதிகாரங்கள் 1-2) தாவீதின் மகனாகிய சாலொமோன் ராஜாவானான். 1-11 அதிகாரங்கள், இஸ்ரவேல் மகத்துவத்தின் உச்சிக்கு உயர்தல், தேசத்தின் இராஜ்ய விரிவு எருசலேமில் தேவாலயம் மற்றும் அரண்மனை கட்டியது பற்றியும் அடங்கிய சாலொமோனின் வாழ்க்கை மற்றும் ஆளுகை பற்றியும் குறிப்பிடுகின்றன. ஆனால் சாலமோனின் பின்னய வாழ்க்கையில், இவனுடைய மனைவிகளின் தவறான உந்துதனால் அந்நிய தேவர்களை நாடி தேவனிடத்திருந்து விலகினான். அவர்கள் தேவாலயத்தில் தேவனை ஆராதிப்பதிருந்து அவனுடைய இருதயத்தைத் திருப்பினார்கள்.

மனமுடைந்த ராஜா, பிரிக்கப்பட்ட இராஜ்யத்தை தனக்கு பின்னால் விட்டுச் சென்றான். அடுத்து வந்த நூற்றாண்டில் இரண்டாகப் பிரிந்த இராஜாக்களின் இரண்டு சரித்திரங்களையும் அவர்களது கீழ்ப்படியாமையையும், தேவ தீர்க்கதரிசிகளையும், தேவ கட்டளைகளையும் மதியாமல் வாழ்ந்த அவர்கள் வாழ்க்கையையும் காண்போம்.[9]

அடுத்த அரசனாகிய ரெகொபெயாம் ராஜ்ஜியத்தின் வடபகுதியை இழந்தான். அதன்பின் அந்த வடக்கு ராஜ்ஜியம் 10 கோத்திரங்களைக் கொண்டதாயிருந்தது. அது இஸ்ரவேல் எனப்பட்டது. யூதா, பென்யமீன் கோத்திரங்களைக் கொண்ட தெற்கு ராஜ்ஜியம் யூதா எனப்பட்டது. 1 ராஜாக்களின் கடைசி அதிகாரங்களில் கெட்ட அரசனாகிய ஆகாபைப் பற்றியும், நீதியுள்ள தீர்க்கதரிசியாகிய எயா ஆகாபின் துன்மார்க்கத்தையும் இஸ்ரவேன் கீழ்ப்படியாமையையும் எவ்வாறு கண்டனம் செய்தார் என்பது குறித்தும் காண்கிறோம்.

அப்படியானால், இந்தப் புத்தகத்தின் முக்கிய நோக்கம் கீழ்ப்படியாமை எவ்வாறு ஒரு தேசத்துக்கு அழிவைக் கொண்டு வருகிறது என்பதைக் காட்டுவதேயாகும். தேசத்தின் நலன் (இஸ்ரவேலுடன் தேவனுடைய உடன்படிக்கைக்கு) அதன் தலைமை மற்றும் ஜனங்கள் உண்மையாயிருப்பதையே சார்ந்திருக்கிறது. முதல் புத்தகங்கள் இந்த ராஜாக்களின் சரித்திரத்தைப் பதிவு செய்திருக்கிறது. ஆனால் இந்தப் புத்தகம் எவ்வாறு ***"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவமோ எந்த ஜனத்துக்கும் இகழ்ச்சி"*** (நீதிமொழிகள் 14:34) என்பதைக் காட்டுகிறது. தேவனுடைய உடன்படிக்கைக்கு உண்மையில்லாமல் இருப்பது வீழ்ச்சியையும், சிறையிருப்பபையும் கொண்டு வந்தது

முக்கிய நபர்கள்: சாலொமோன், ரெகொபெயாம், யெரொபெயாம், எயா, எசா, ஆகாப், மற்றும் யேசபேல்

1 இராஜாக்களில் கிறிஸ்து: பழைய ஏற்பாட்டில் பூமியில் மேசியாவை எதிர்கால இராஜாவாக சித்தரிக்கிற தாவீதைப் போல சாலொமோனும் கிறிஸ்துவின் மாதிரிகளில் ஒரு முக்கியமானவனாக இருக்கிறான். சாலொமோனுக்கு சிறப்பாக அமைந்த அவனுடைய புகழ், மகத்துவம், சொத்து மற்றும் மரியாதை இவைகள் பூமியில் இயேசுவின் ஆளுகைக் குறித்து பறைசாற்றுகின்றன. சாலொமோனுடைய சிறந்த ஞானமும் இயேசுவை சித்தரிக்கிறது.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **ஒன்றுபட்ட ராஜ்யம்: சாலொமோனுடைய 40 வருட அரசாட்சி (1:1-11:43)**
   a. சாலொமோன் பதவி ஏறுதல் (1:1-2:46)
      1:1-10 2:1-9 2:28-35
      1:11-37 2:10-18 2:36-46
      1:38-53 2:19-27
   b. சாலொமோனின் ஞானம் (3:1-4:34)
      3:1-5 3:10-15 4:1-19
      3:6-9 3:16-28 4:20-34
   c. சாலொமோனுடைய ஆலயம் (5:1-8:66)
      5:1-12 7:13-51 8:54-61
      5:13-18 8:1-11 8:62-66
      6:1-38 8:12-21
      7:1-12 8:22-53
   d. சாலொமோனுடைய கீர்த்தி (9:1-10:29)
      9:1-9 10:1-13
      9:10-28 10:14-29
   e. சாலொமோனின் வீழ்ச்சி (11:1-43)
      11:1-13 11:14-40 11:41-43

2. **இரண்டுபட்ட ராஜ்யம்: இரண்டு ராஜ்யங்களுடைய முதல் 80 வருடங்கள் (12:1-22:53)**
   a. பிரிவுக்கு காரணம் (12:1-24)
      12:1-15 12:16-24

b. **இஸ்ரவேல்** யெரொபெயாமின் ஆட்சி (12:25-14:20)

12:25-33	13:11-34
13:1-10	14:1-20

c. **யூதா**வில் ரெகொபெயாமின் ஆட்சி (14:21-31)
d. **யூதா**வில் அபியாமின் ஆட்சி (15:1-8)
e. **யூதா**வில் ஆசாவின் ஆட்சி (15:9-24)
f. **இஸ்ரவேல்** நாதாப்பின் ஆட்சி (15:25-31)
g. **இஸ்ரவேல்** பாஷாவின் ஆளுகை (15:32-16:7)
h. **இஸ்ரவேல்** ஏலாவின் ஆளுகை (16:8-14)
i. **இஸ்ரவேல்** சிம்ரியின் ஆளுகை (16:15-20)
j. **இஸ்ரவேல்** உம்ரியின் ஆளுகை (16:21-28)
k. **இஸ்ரவேல்** ஆகாபின் ஆட்சி (16:29-22:40)

16:29-34	19:1-8	21:11-29
17:1-16	19:9-21	22:1-12
17:17-24	20:1-12	22:13-28
18:1-19	20:13-25	22:29-40
18:20-35	20:26-43	
18:36-46	21:1-10	

l. **யூதா**வில் யோசாபாத்தின் ஆட்சி (22:41-50)
m. **இஸ்ரவேல்** அகசியாவின் ஆட்சி (22:51-53)

2 இராஜாக்கள்

(சிதறடிப்பு - துணிகரமான பாவம் துக்கமான முடிவைக் கொண்டு வரும்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: ஆரம்பத்தில் 1 இராஜாக்களும் 2 இராஜாக்களும் ஒன்றாக இருந்தது, பின்பு, இரண்டாகப் பிரிக்கப் பட்டது. இந்தப் புத்தகத்தின் எழுத்தாளரைக் குறித்து 1 இராஜாக்களின் எழுத்தாளரைப் பற்றிய விளக்கத்தில் காணலாம்.

எழுதப்பட்ட காலம்: ஏறத்தாழ **கி.மு. 550** (விபரங்களுக்கு 1 இராஜாக்களின் புத்தகத்தைக் காணுக).

மையக்கருத்தும் நோக்கமும்: இரண்டு இராஜாக்கள் எயாவின் சரித்திரத்தையும் அவருடைய சீராகிய எசாவின் சரித்திரத்தையும் தொடருகிறது, மேலும் "இரண்டு இராஜ்யங்களுடைய கதை" யையும் தொடர்ந்து கூறுகிறது. அவர்கள் மேற்கொள்ளப்பட்டு, பிணையக் கைதிகளாக கொண்டுபோகப்பட்டது வரை இஸ்ரவேலுடைய வட ராஜ்யத்தின் சரித்திரத்தையும், யூதாவினுடைய தென் ராஜ்யத்தின் சரித் திரத்தையும் கூறுகிறது. கடைசியாக கி.மு. 722ல் இஸ்ரவேல் தேசம் அசீரியர் கையிலும் கி.மு. 586-ல் யூதா பாபிலோனியனின் கையி லும் வீழ்ந்தது. இரண்டு இராஜ்ஜியங்களிலும் தீர்க்கதரிசிகள் ஜனங்களை எச்சரித்து மனந்திரும்பாதபட்சத்தில், தேவன் அவர்களைத் தண்டிப்பார் என்று தொடர்ந்து கூறினார்கள்.

இரண்டாவது இராஜாக்கள் தெரிந்தும் துணிகரமாய் செய்த பாவம் துக்கமான முடிவைக் கொண்டுவரும் என்பதைக் கற்பிக்கிறது. 1 மற்றும் 2 சாமுவேல் தேசம் பிறந்தது. 1 இராஜாக்களில் தேசம் பிரிக்கப்பட்டது. 2 இராஜாக்களில் தேசம் சிதறடிக்கப்பட்டது. தேவன் தம்முடைய மக்களிடம் வருடக்கணக்காக தீர்க்கதரிசிகள் மூலமாக கெஞ்சிய பிறகு அவருடைய பொறுமை, அவர் சொன்னது போல கடைசியாக அவர்களைச் தண்டிக்க திரும்பியது. ஆரம்பத்தில் இரண்டு புத்தகங்களும் ஒன்றாக இருந்தபடியால் 1 மற்றும் இராஜாக் கள் ஒரே நோக்கம் உடையவைகள். அவை உண்மையில்லாமை (தேவனுடைய பிரமாணத்தை மீறி முரட்டாட்டம் செய்தல்) எப்படி தேசத்தைக் கவிழ்க்குமளவுக்கு தேவனுடைய தண்டனையைக் கொண்டு வரும் என்பதனைப் போதிக்கிறது. இராஜாக்கள் தேவ சத்த த்திற்கு செவிகொடுத்து நீதியாய் ஆட்சி செய்யத் தவறியபடியால், இரண்டு இராஜ்ஜியங்கலும் கவிழ்க்கப்பட்டன.

முக்கிய நபர்கள்: எயா, எசா, யோசியா, நாகமான், எசேக்கியா

2 இராஜாக்களில் கிறிஸ்து: எயா இயேசுவின் முன்னோடியாக இருந்த யோவான் ஸ்நானன் என்பவனைச் சுட்டிக் காட்டுகிறார் (மத்தேயு 11:14; 17:10-12; லூக்கா 1:17). எசா, அவனுடைய ஊழியத்தில் அநேக வழியில் இயேசு கிறிஸ்துவை நமக்கு நினைப்பூட்டுகிறார். ஈர்விங் எல். ஜென்சென் என்பவர் இந்த இரண்டு பேர்களையும் ஒப்புமைப்படுத்தி அவர்களுடைய ஊழியத்தை இப்படியாகச் சுருக்குகிறார்.

> பெரிய பொதுச் செயல்களுக்காக எயா குறிக்கப்படுகிறான். ஆனால் எசா அவைகளில் அநேகம் அற்புதங்களுக்காக கவனிக்கப்படுகிறான். தனிப்பட்ட தேவைகளை சந்திக்கிறதாக இருக்கிறது. அதிகமான எயாவின் ஊழியம் கண் டிப்பையும் நியாயத்தீர்ப்பையும், கடவுளுடைய சட்டத்தையும் அழுத்திக் காட்டுகிறது. எசா கிறிஸ்துவைப் போன்று கிருபையும், அன்பையும் மென்மையையும் தம் அற்புதங்கள் மூலம் காட்டுகிறார். எயா, யோவான், ஸ்நானகனை ப் போல பாவத்திருந்து மனந்திரும்ப வேண்டுமென்று முழங்கினார். அதை தொடர்ந்து எசா கிறிஸ்துவைப் போல கிருபையின் செயல்களைச் செய்து தீர்க்கதரிசிகளின் செய்திகள் தேவனுடையது என்றும் நிரூபித்தார்.[10]

1, 2 இராஜாக்களின்[11] பொருளடக்கத்தை ரைரி என்பவர் நமக்கு வெளிப்படுத்தியிருக்கிற வித்தியாச குறிப்புகளை கவனியுங்கள்:[11]

1, 2 இராஜாக்கள்: வித்தியாசம்	
1 இராஜாக்கள்	**2 இராஜாக்கள்**
தாவீதுடன் தொடங்குகிறது	பாபிலோன் ராஜாவுடன் தொடங்குகிறது
சாலொமோனின் மகத்துவத்துடன் திறக்கிறது	யோயாக்கீனின் வெட்கத்துடன் முடிகிறது
கீழ்ப்படிதன் ஆசீர்வாதத்துடன் தொடங்குகிறது	கீழ்படியாமையினுடைய சாபத்தில் முடிவடைகிறது.
தேவாலய கட்டிடத்துடன் திறக்கிறது	தேவாலய எரிப்புடன் முடிகிறது
பின்மாற்றத்திற்கு வருகிறதை குறிக்கின்றது	பின்மாற்றத்தின் விளைவை விளக்குகிரது
தேவமக்களை அரசர்கள் எப்படி ஆளத் தவறினார்கள் என்பதை காட்டுகிறது	தோல்வியின் விளைவை படம்பிடித்து விளக்குகிறது
எயா தீர்க்கதரிசியை அறிமுகப்படுத்துகிறது	எசா தீர்க்கதரிசியை அறிமுகப்படுத்துகிறது
தேவனுடைய பொறுமையை அழுத்திக் காட்டுகிறது	பாவத்துக்கு தேவன் தரும் தண்டனையை உறுதிப்படுத்துகிறது

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **பிளவுபட்ட இராஜ்யம் (1:1-17:41)**
   a. **இஸ்ரவேல்** அகசியாவின் ஆட்சி (1:1-18)
   b. **இஸ்ரவேல்** யோராமின் ஆட்சி (2:1-8:15)
      1) எயா எடுத்துக்கொள்ளப்படுதல் (2;1-14)
      2) எசாவின் ஊழியத்தின் துவக்கம் (2:15-25)
      3) மோவாபிற்கு எதிராக யோராமின் படை எடுப்பு (3:1-27)
      4) எசாவின் ஊழியம் (4:1-8:15)

4:1-7	5:15-27	7:3-14
4:8-17	6:1-7	7:15-20
4:18-37	6:8-23	8:1-6
4:38-44	6:24-33	8:7-15
5:1-14	7:1-2	

   c. **யூதாவில்** யோராம் ராஜாவின் ஆளுகை (8:16-24)
   d. **யூதாவில்** அகசியாவின் ஆட்சி (8:25-29)
   e. **இஸ்ரவேல்** யெகூவின் ஆட்சி (9:1-10:36)

9:1-13	9:33-37	10:34-36
9:14-26	10:1-17	
9:27-32	10:18-33	

   f. **யூதாவில்** அத்தாயாளின் ஆட்சி (11:1-16)
   g. **யூதாவில்** யோய்தாவின் ஆட்சி (11:17-12:21)

11:17-20	12:4-18
11:21-12:3	12:19-21

   h. **இஸ்ரவேல்** யோவாகாஸ் ஆட்சி (13:1-9)
   i. **இஸ்ரவேல்** யோவாசினுடைய ஆட்சி (13:10-25)
   j. **யூதாவில்** அமத்சியாவின் ஆட்சி (14:1-22)
   k. **இஸ்ரவேல்** யெரொபெயாமின் 11ஆட்சி (14:23-29)
   l. **யூதாவில்** அசரியாவின் ஆட்சி (15:1-7)
   m. **இஸ்ரவேல்** சகரியாவின் ஆட்சி (15:8-12)
   n. **இஸ்ரவேல்** சல்லூமின் ஆட்சி (15:13-15)
   o. **இஸ்ரவேல்** மெனாகேமின் ஆட்சி (15:16-22)
   p. **இஸ்ரவேல்** பெக்காகியாவின் ஆட்சி (15:23-26)
   q. **இஸ்ரவேல்** பெக்காவின் ஆட்சி (15:27-31)
   r. **யூதாவில்** யோதாமின் ஆட்சி (15:32-38)
   s. **யூதாவில்** ஆகாஸின் ஆட்சி (16:1-20)
   t. **இஸ்ரவேல்** ஓசெயாவின் ஆட்சி (17:1-41)
      1) இஸ்ரவேன் முறியடிப்பு (17:1-6)
      2) இஸ்ரவேன் பாவம் (17:7-23)
      3) இஸ்ரவேல் பங்கிடப்படுதல் (17:24-41)

2. **யூதா இராஜ்யம் நீடித்தல் (18:1-25:30)**

a. எசேக்கியாவின் ஆட்சி (18:1-20:21)

18:1-6	19:1-7	19:20-37
18:7-12	19:8-13	20:1-11
18:13-37	19:14-19	20:12-21

b. மனாசேயின் ஆட்சி (21:1-18)

c. ஆமோனின் ஆட்சி (21:19-26)

d. யோசியாவின் ஆட்சி (22:1-23:30)

e. யோவாகாசின் ஆட்சி (23:31-33)

f. யோயாக்கீமின் ஆட்சி (23:34-24:7)

g. யோயாக்கீனின் ஆட்சி (24:8-16)

h. சிதேக்கியாவின் ஆட்சி (24:17-25:21)

1) பாபிலோனுக்கு எதிராக கலக்கமும் தேவாலயத்தினுடைய அழிவும் (24:17-25:10)

2) மூன்றாம் முறையாக பாபிலோனுக்கு பிணையக் கைதிகளாகப் போகுதல் (25:11-21)

i. கெதயாவின் ஆட்சி, பொம்மை ஆளுனர் (25:22-26)

j. பாபிலோனில் யோயாக்கீனின் விடுதலை (25:27-30)

1 நாளாகமம்
(தேவாலயத்திற்கு ஆயத்தப்படுத்து)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: நாளாகமம் புத்தகம் எழுதியவரைப் பற்றி குறிப்பிடவில்லை (ஆரம்பத்தில்) 1 மற்றும் 2 நாளாகமம் ஒரே புத்தகமாக இருந்தது). எனினும் எஸ்றா அதை எழுதியவர் என்று யூதரின் மரபு தெரிவிக்கின்றது. புத்தகம் முழுவதுமுள்ள மாறாத நடை இதை இந்த புத்தகத்தின் தொகுப்பு அநேக இடங்களிருந்து எடுக்கப்பட்டிருந்தாலும் ஒரு ஆள்தான் அதை உருவாக்கினார் என்பதை சுட்டிக்காட்டுகிறது. அவை: சாமுவேன் தீர்க்கதரிசன புத்தகம் (1 நாளாகமம் 29:29), ஏசாயாவின் தீர்க்கதரிசன புத்தகம் (2 நாளாகமம் 32:32) மற்றும் வேறு புத்தகங்கள் (2 நாளாகமம் 9:29; 12:15; 20:34; 33:19) போன்றவை விபரங்கள் கொடுத்தாலும் இந்தப் புத்தகத்தின் பிரதான மூலம் "இஸ்ரவேல், யூதா இராஜாக்களுடைய புத்தகம்" ஆகும். (2 நாளாகமம் 16:11; 25:26). தேவாலயத்தைக் குறித்தும் உள்ள அழுத்தம், ஆசாரியத்துவத்தைக் குறித்தும், தாவீதின் தலைமுறையைக் குறித்தும், தென் தேசமாகிய யூதாவைக் குறித்தும், இந்த புத்தகத்தின் பொருளடக்கம், இதன் எழுத்தாளர் ஒரு ஆசாரியனாக இருக்க வேண்டும் என்று கூறுகிறது. எஸ்றா மற்றும் நாளாகமம் புத்தகத்தில் உள்ள பொதுவான மையக்கருத்தாகிய தேவாலயத்தின் கட்டுமானமும் அர்ப்பணமும் இந்த புத்தகத்தை தொகுத்தவர் எஸ்றா என்பதை நாம் நம்பச் செய்கிறது.

1 மற்றும் 2 நாளாகமம் புத்தகங்கள் யூதருடைய சரித்திர காலத்தைக் கொண்டிருந்தாலும் இந்த புத்தகத்தின் கண்ணோட்டம் வேறுபட்டதாக இருக்கிறது. ஒரே பொருளடக்கத்தை கொண்டிருந்தாலும், இது மறுபடியும் ஒரே பொருளைக் குறித்து சொல்வதாக அல்லாமல் இஸ்ரவேல் மக்களுடைய சரித்திரத்தில் ஒரு ஆவிக்குரிய வியாக்கியானமாக இருக்கிறது.

முதலாவதாக, கி.மு. 180 வரை 1 நாளாகமப் புத்தகமும் 2 நாளாகமப் புத்தகமும் ஒன்றாகவே இருந்தது. இந்தப் புத்தகத்தின் எபிரெய தலைப்பின் அர்த்தம் "தினக் குறிப்புகள்", ஒரு வகையில் நாளாகமம் புத்தகம் "ஒரு சிறிய பழைய ஏற்பாட்டின் உருவம்" ஆகும் ஏனெனில் சுருக்கமாக பழைய ஏற்பாட்டு சரித்திரத்தை குறிக்கின்றது. அதாவது இஸ்ரவேன் சரித்திரம் - ஆதாம் முதல் பிணையக் கைதியாக பாபிலோனுக்கு கொண்டுபோகப்பட்டதையும், கோரேசு ராஜாவுடைய "யூதா மக்கள் திரும்பிச் செல்ல அனுமதித்த" இட்ட ஆணை வரைக்கும் உள்ள சரித்திரங்களையும் கொண்டுள்ளது.[12]

செப்டுஜெண்ட் என்ற கிரேக்க பைபிளை உருவாக்கும்பொழுது மொழிபெயர்ப்பாளர்கள் இந்தப் புத்தகத்தை இரண்டு பகுதிகளாகப் பிரித்தனர். அப்போது சாமுவேல் மற்றும் ராஜாக்களிருந்து விடுப்பட்டவைகளாகக் குறிக்கும்படி அதற்கு "விடுப்பட்ட காரியங்கள்" என்ற தலைப்புக் கொடுக்கப்பட்டது. "நாளாகமம்" என்ற பெயர் ஜெரோம் தன்னுடைய லத்தீன் வல்கேட் என்ற பைபிளில் கொடுத்த தலைப்பாகும். ஜெரோம் தன்னுடைய தலைப்பை "முழுமையான பரிசு த்த வரலாற்றின் நாளாகமம்" என்ற அர்த்தத்தில் கொடுத்தார்.[13]

எழுதப்பட்ட காலம்: கி.மு. 450-425

மையக்கருத்தும் நோக்கமும்: ஆதாம் முதல் சவுல் அரசனின் மரணம் வரையுள்ள சரித்திரத்தின் சுருக்கக்குறிப்புடன் 1 நாளாகமம் துவங்குகிறது. மீதமுள்ள பகுதி தாவீதின் ஆட்சியைப் பற்றியது. நாளாகமப் புத்தகங்கள், சாமுவேல் மற்றும் இராஜாக்களின் புத்தகத்தின் சரித்திரத்தைத் திரும்பவும் கூறுவது போல் தோன்றுகிறது. ஆனால் இந்த புத்தகம் சிறையிருந்து திரும்பி வந்தவர்களுக்கு, அவர்கள் தாவீதின் இராஜாவின் வம்சமாகவும், தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாகவும் இருப்பதை நினைவுபடுத்த எழுதப்பட்டது. "நான் உன்னை ஒரு பெரிய வம்சத்திற்கு தகப்பனாக்குவேன். உன் மூலமாக தேசங்களை ஆசீர்வதிப்பேன்" என்று ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் ஏற்பட்ட தாவீதின் உடன்படிக்கையை 1 நாளாகம வம்ச வரலாறுகள் சுட்டிக்காட்டுகின்றன. தேவன் தம் உடன்படிக்கையில் உண்மையுள்ளவராக இருக்கிறார் என்பது இந்தப் புத்தகத்தின் பிரதான மையக்கருத்தாக இருக்கிறது.

நியாயப்பிரமாணத்தையும், ஆசாரியத்துவத்தையும், தேவாலயத்தை பற்றியும் நாளாகமம் அழுத்திக் கூறுகிறது. சாலொமோன் கட்டிய ஆலயம் அழிக்கப்பட்டாலும், இரண்டாவது ஆலயம் மீதமுள்ளவர்களுக்கு முதலாவது ஆலயத்துடன் உள்ள தொடர்பாக உள்ளது.

கடந்த காலம் நிகழ்காலத்திற்காக பாடமாக உள்ளது என்பதை இப்புத்தகம் போதிக்கிறது. தேவனை விட்டுவிடுவது, சிலை வழிபாடு, அந்நிய ஜாதியருடன் கலப்புத் திருமணம், ஒற்றுமையின்மை ஆகியவைகள் தற்கால அழிவுக்கு காரணமாயிருந்தது. பிணையக் கைதிகளான பின்பு இஸ்ரவேல் ஜனங்கள் ஒருபோதும் அந்நிய தெய்வத்தை ஆராதிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.[14]

சொல்லப்பட்டுள்ளபடி முக்கிய நபர்கள்: இந்தப் புத்தகம் தாவீதை குறித்தது, எனினும் 1 சாமுவேல் புத்தகத்தில் உள்ள முக்கிய நபர்களாகிய நாத்தான், பத்சேபாள், உரியா போன்றவர் இந்தப் புத்தகத்திலும் பிரபலமானவர்கள்.

1 நாளாகமத்தில் கிறிஸ்து: 1 மற்றும் 2 சாமுவேல் புத்தகத்தில் தாவீதைக் குறித்த எந்தெந்த காரியங்கள் இயேசுவுக்கு மாதிரியாக இருக்கிறதோ, அதே காரியங்கள் இங்கும் பொருந்தும்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **ஆ தாமிருந்து தாவீது வரை - வம்ச வரலாறு (1:1-9:44)**
    - a. ஆதாமிருந்து ஆபிரகாம் வரை (1:1-27)
    - b. ஆபிரகாமிருந்து யாக்கோபு வரை (1:28-54)
    - c. யாக்கோபிருந்து தாவீது வரை (2:1-55)
    - d. தாவீதிருந்து பிணைக் கைதியாக கொண்டுபோகும் வரை (3:1-24)
    - e. பன்னிரெண்டு கோத்திரங்களின் வம்ச வரலாறு (4:1-8:40)

4:1-23	7:1-5	7:20-29
4:24-43	7:6-12	7:30-40
5:1-26	7:13	8:1-32
6:1-81	7:14-19	8:33-40

    - f. எருசலேமின் குடிகள் (9:1-34)
    - g. சவுன் குடும்பம் (9:35-44)

2. **தாவீதின் வருகையும் அபிஷேகமும் (10:1-12:40)**
    - a. சவுன் மரணம் (10:1-14)
    - b. தாவீதின் பதவி ஏற்பு (11:1-3)
    - c. எருசலேம் பிடிக்கப்படுதல் (11:4-9)
    - d. தாவீதின் வெற்றிவீரர்கள் (11:10-12:40)

3. **தாவீதின் ஆட்சி (13:1-29:21)**
    - a. தாவீதும் உடன்படிக்கைப் பெட்டியும் (13:1-17:27)
        1) தாவீது சீதோனுக்கு உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வருதல், உசியாவின் மரணம். (13:1-14)
        2) தாவீதின் கீர்த்தியும் பெலிஸ்தரின் மேல் வெற்றியும் (14:1-17)
        3) தாவீது எருசலேமிற்கு உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வருதல் (15:1-29)
        4) தாவீதின் கொண்டாட்டமும், உடன்படிக்கைப் பெட்டிக்கு ஒழுங்குபடுத்தலும் (16:1-43)
        5) தேவாலயத்தை கட்ட தாவீதின் விருப்பம். தாவீதின் உடன்படிக்கை (17:1-27)
    - b. தாவீதின் யுத்தங்கள் (18:1-20:8)

18:1-17	19:10-19
19:1-9	20:1-8

    - c. தாவீதின் பாவமான கணக்கெடுப்பு (21:1-30)
    - d. தேவாலயத்திற்காக தாவீது தயாராகுதல் (22:1-23:1)
    - e. தாவீது - லேவியரை அமைப்பாக ஒழுங்குபடுத்துதல் (23:2-26:32)
        1) தொகையிடுதலும், லேவியரின் கடமைகளும் (23:2-32)
        2) 24 பிரிவுகளாக லேவியரைப் பிரித்தல் (24:1-31)
        3) இசைக் கலைஞர்களைக் கட்டளையிடுதல் (25:1-31)
        4) வாயிற் காப்பாளர்களை நியமித்தல் (26:1-19)
        5) பொக்கிஷக்காரர்களிடம் கட்டளையிடுதல் (26:26-28)
        6) நியாயாதிபதிகளை நியமித்தல் (26:29-32)
    - f. தாவீதின் சமுதாயத் தலைவர்கள் (27:1-34)
    - g. மக்களுக்கும் மகன் சாலொமோனுக்கும் தாவீதின் கடைசி அறிவுரை (28:1-21)
    - h. தாவீதின் காணிக்கையும் ஆராதனையும் (29:1-21)

4. **சாலொமோனின் பதவி ஏற்பும், தாவீதின் மரணமும் (29:22-30)**

2 நாளாகமம்
(தேவாலயத்தின் அழிவு)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: முன்னமே சொன்னதுபோல முதலாவதாக 1 மற்றும் 2 நாளாகமம் புத்தகங்கள் ஒன்றாக இருந்தன. 1 நாளாகமத்தைப் போலவே இதுவும் யார் எழுதினார் என்று குறிப்பிடவில்லை. ஆனால் யூத பாரம்பரியம் எஸ்றா இதன் எழுத்தாளராக இருந்திருப்பார் எனக் கூறுகிறது. கருத்துகளைச் சொல்லும் விதத்திலுள்ள ஒழுங்கும் எழுத்து நடையும் இது ஒரு நபருடைய வேலையாகத் தான் இருக்க வேண்டும். எழுத்தாளர் யாராக இருந்தாலும் அவர் கீழுள்ள அலுவலக ஆதாரங்களைக் கையாளக் கூடிய இடத்தில் இருந்திருக்கிறார். உதாரணமாக;

1. இஸ்ரவேல் மற்றும் யூதருடைய ராஜாக்களுடைய புத்தகம் (27:7; 35:27; 36:8)
2. யூதா மற்றும் இஸ்ரவேலருடைய ராஜாக்களுடைய புத்தகம் (16:11; 25:26; 28:26; 32:32)
3. இஸ்ரவேல் ராஜாக்களுடைய புத்தகம் (26:34; 33:18)
4. ராஜாக்கள் பற்றிய பதிவேடுகள் (24:27)
5. நாத்தானின் புத்தகம், ஆகியாவின் தீர்க்கதரிசனம், இத்தோவின் தரிசனங்கள் (9:29)
6. செமாயாவின் சரித்திரம் (12:15)
7. இத்தோ என்பவனின் பதிவுகள் (13:22)
8. தீர்க்கதரிசி ஏசாயாவின் வர்த்தமானங்கள் (26:22)
9. ஓசாயாவின் சொற்பிரபந்தம் (33:19)
10. புலம்பல் புத்தகம் (35:25)
11. தாவீது மற்றும் அவன் குமாரனாகிய சாலொமோன் ஆகியோரின் எழுத்துக்கள் (35:4)

எழுதப்பட்ட காலம்: கி.மு. 450-425

மையக்கருத்தும் நோக்கமும்: 1 நாளாகமம் 1 மற்றும் 2 சாமுவேலுக்கு சமமாக இருக்கும்போது, 2 நாளாகமம் 1 மற்றும் 2 ராஜாக்களுக்கு சமமாக இருந்து தாவீதின் வம்ச வரலாறைத் தொடருகிறது. வட ராஜ்யத்தில் தாவீதைப் போல் பக்திமானான ஒரு அரசன் இல்லாததாலும் ஜனங்களின் அவிசுவாசம் காரணமாகவும் 1 நாளாகமம் வட ராஜ்யத்தை புறக்கணித்தது. மாறாக 2 நாளாகமம் தாவீதின் வாழ்க்கையை தொடர்ந்து நடந்த ராஜாக்களின் சரித்திரத்தை முக்கியப்படுத்துகிறது. 1 – 9 அதிகாரங்கள் சாலொமோனின் ஆளுகையின்போது நடந்த தேவாலயத்தின் கட்டிடப் பணியை விளக்குகிறது. 10-36 அதிகாரங்கள் எருசலேமின் கடைசிகட்ட அழிவையும் மக்கள் கைதிகளாக பாபிலோனுக்குக் கொண்டு போகப்பட்ட யூதாவின் தெற்கு ராஜ்ஜிய சரித்திரத்தையும் விளக்குகிறது. தேசத்தில் எழுப்புதலையும் மறுமலர்ச்சியையும் கொண்டு வந்த ஆசா, யோசேபாத், யோவாஸ், எசேக்கியா மற்றும் யோசியா போன்ற ராஜாக்களின் வாழ்க்கைக்கு நீண்ட பகுதியை இந்த புத்தகம் அர்ப்பணிக்கிறது.

சாமுவேல் மற்றும் இராஜாக்களின் புத்தகங்களுடைய சரித்திரத்தையே நாளாகமம் புத்தகம் கொண்டிருந்தாலும் சில காரியங்களை அழுத்திக் கூறுவதற்காக ஒரு மாறுபட்ட கோணத்திருந்து எழுதப்பட்டது. 1 நாளாகமத்தில் தாவீதும், 2 நாளாகமப் புத்தகத்தில் தாவீதின் வீடும் கருப்பொருளாக இருக்கிறது. இராஜாக்களின் புத்தகத்தில் அரண்மனையிருந்து கொடுப்படுகிறது. ஆனால் நாளாகமத்தில் தேசத்தின் சரித்திரம் பபீடத்திருந்து (தேவாலயத்திருந்து) கொடுக்கப்படுகிறது. இராஜாக்களின் புத்தகத்தில் அரண்மனை முக்கிய தலைப்பாக இருக்கிறது. ஆனால் நாளாகமத்தில் தேவாலயம் முக்கியத்துவம் பெறுகிறது. இராஜாக்களின் புத்தகத்தில் அரசியல் சரித்திரம் தான் முக்கியப்படுத்தப்படுகிறது. ஆனால் நாளாகமப் புத்தகம் இஸ்ரவேல் சரித்திரத்தின் சமயம் சார்ந்த அல்லது ஆவிக்குரிய காரியங்களை முக்கியப்படுத்துகிறது.

நாளாகமப் புத்தகம் ஒரு சாதாரண சரித்திரப் பதிவைவிட மேலானதாக இருக்கின்றது. தாவீது இராஜாவின் வம்சத்தினுடைய ஆவிக்குரிய குணத்தை குறித்த தேவனுடைய வியாக்கியானமாக இருக்கிறது. அதனால்தான் தென் தேசமாகிய யூதாவிற்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது. அங்கு தான் எழுப்புதலை உண்டாக்கிய தாவீதின் வம்சத்தின் ராஜாக்கள் இருந்தார்கள். வட தேசத்தில் ஆவிக்குரிய அரசர்கள் இல்லை. அதனால்தான் அடிப்படியாக வடதேசம் இந்த புத்தகத்தில் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

முக்கிய நபர்கள்: யோசியா, ரெகொபெயாம், சாலொமோன்

2 நாளாகமத்தில் கிறிஸ்து: தாவீதின் சிங்காசனம் அழிக்கப்பட்டது; ஆனால் தாவீதின் வம்சம் நிலைத்திருக்கிறது. கொலை, ஏமாற்றம், யுத்தம், சிறைப்பிடிக்கப்படுதல் இவைகள் எல்லாம் மேசியா வம்சத்தைப் பயமுறுத்தியது; ஆனாலும் ஆதாம் முதல் செருபாபேல் வரைக்கும் துண்டிக்கப்படாமல் தெளிவாக நிலைநிற்கிறது. இது கிறிஸ்து பிறப்பில் நிறைவேறினதை மத்தேயு 1 மற்றும் லூக்கா 3ல் உள்ள வம்ச வரலாற்றில் காணமுடியும்.[15]

2 நாளாகமத்தில் எழுதப்பட்டுள்ள பிரசித்தி பெற்ற தேவாலயம், கிறிஸ்துவை அழகாகச் சித்தரிப்பதாக இருக்கிறது. (மத்தேயு 12:6; யோவான் 2:19; வெளிப்படுத்தல் 21:22).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **சாலொமோனின் ஆட்சி (1:1-9:31)**
   a. சாலொமோனின் துவக்கம் (1:1-17)
      1:1-13 1:14-17

b. சாலொமோனின் ஆலயம் (2:1–7:22)

2:1–10	5:1–10	7:4–7
2:11–18	5:11–14	7:8–10
3:1–2	6:1–11	7:11–22
3:3–17	6:12–42	
4:1–22	7:1–3	

c. சாலொமோனின் கீர்த்தி (8:1–9:28)

8:1–18	9:1–12	9:13–28

d. சாலொமோனின் மரணம் (9:29–31)

2. **யூதாவின் ராஜாக்கள் (10:1–36:21)**

a. ரெகொபெயாம் (10:1–12:16)

10:1–19	11:14–17	12:1–8
11:1–13	11:18–23	12:9–16

b. அபியா (13:1–22)

13:1–3	13:4–19	13:20–22

c. ஆசா (14:1–16:14)

14:1–15	15:8–19	16:7–14
15:1–7	16:1–6	

d. யோசாபாத் (17:1–20:37)

17:1–2	18:28–34	20:14–19
17:3–19	19:1–4	20:20–25
18:1–7	19:5–11	20:26–34
18:8–11	20:1–4	20:35–37
18:12–27	20:5–13	

e. யோராம் (21:1–20)

f. அகசியா (22:1–23:15)

22:1–4	22:8–12	23:12–15
22:5–7	23:1–11	

g. யோவாஸ் (23:16–24:27)

23:16–21	24:3–7	24:20–22
24:1–2	24:8–19	24:23–27

h. அமத்சியா (25:1–28)

25:1–13	25:14–16	25:17–28

i. உசியா (26:1–23)

26:1–5	26:6–15	26:16–23

j. யோதாம் (27:1–9)

k. ஆகாஸ் (28:1–27)

28:1–4	28:5–15	28:16–27

l. எசேக்கியா (29:1–32:33)

29:1–4	30:13–27	32::9–19
29:5–19	31:1–2	32:20–33
29:20–36	31:3–21	
30:1–12	32:1–8	

m. மனாசே (33:1–20)

33:1–9	33:10–20

n. அம்மோன் (33:21–25)

o. யோசியா (34:1–35:27)

34:1–7	34:22–30	35:20–27
34:8–13	34:31–33	
34:14–21	35:1–19	

p. யோவாஸ் (36:1–4)

q. யோயாக்கீம் (36:5–8)

r. யோயாக்கீன் (36:9–10)

s. சிதேக்கியா (36:11–21)

3. **கோரேஸ் ராஜாவின் ஆணை (36:22–23)**

எஸ்றா
(தேவாலயத்தைத் திரும்பக் கட்டுதலும் மக்களை முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவருதலும்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: எஸ்றா புத்தகம் அதன் எழுத்தாளரைக் குறிப்பிடவில்லை என்றாலும், தால்மூத்தின் பதிவுக ளுள்ளபடி யூதரின் மரபு எஸ்றாவை எழுத்தாளராக குறிப்பிடுகிறது. அநேக ஆவணங்கள் (4:7-16), வம்ச வரலாறுகள் (2:1-76), சொந்தக் குறிப்புகள் (7:27-9:15) ஆகியவற்றின் மூலமாக எஸ்றா இந்தப் புத்தகத்தை எழுதினார்.

இந்தப் புத்தகத்தின் பெரும் பகுதியில் எஸ்றா, முக்கிய கதாபாத்திரமாக இருக்கிறார் என்ற உண்மை எஸ்றா இந்தப் புத்தகத்தை எழுதின ார் என்பதற்கு ஆதாரமாயிருக்கிறது. அதிகாரம் 1 - 10ல் விளக்கப்பட்ட சம்பவங்களில் எஸ்றா பங்கு வகித்தார். மேலும் நெகேமியா புத் தகத்தில் அதிகாரம் 8-10ல் பங்கு வகிக்கிறார். இரண்டிலும் ஹநான் என்றேது (முதல் நபரில்) எழுதப்பட்டது.

பழைய ஏற்பாடு புத்தகங்கள் சேர்த்து வைக்கப்பட்டுள்ள "பெரிய ஜெபாலயத்தை" (great synagogue) நிறுவியவர் எஸ்றா, என மரபு சொல்லுகிறது. இன்னொரு செய்திப்படி எஸ்றா வேத புத்தகங்களை சேகரித்து ஒன்றாக்கி ஜெபாலய வழிபாட்டை ஆரம்பித்து வைத்தார்.[16]

பழைய எபிரெய வேதாகமத்தில் எஸ்றாவும், நெகேமியாவும் ஒரே புத்தகமாக "எஸ்றாவின் புத்தகம்" என்றழைக்கப் பட்டன. தற்கால எபிரெய வேதம் ஆங்கில மொழிபெயர்ப்புகளில் இருப்பதுபோல் இரண்டு பிரிவுகளாக உள்ளது. மேலும் ஜோசேபஸ் என்பவரும் (பழைய, யூத வரலாற்று அறிஞன்) ஜெரோம் என்பவரும் (வல்கேட் என்ற இலத்தீன் பைபிளை எழுதியவர்) எஸ்றா புத்தகத்தையும், நெகேமியா புத்தகத்தையும் ஒன்றாகவே கருதினர்.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 457-444

மையக்கருத்தும் நோக்கமும்: சரித்திர கோணத்தில் பார்த்தால், 2 நாளாகமத்தில் முடிவடைந்த உரையை எஸ்றா இந்தப் புத்தகத்தில் தொடருகிறார். மேலும் பாபிலோனில் அடிமைகளாக இருந்த யூத மக்கள் திரும்பி வரும் சரித்திரத்தையும், மறுபடியும் அவர்கள் தேவா லயத்தைக் கட்டிய சரித்திரத்தையும் இந்தப் புத்தகம் குறிப்பிடுகிறது. (ஆவிக்குரிய மற்றும் உபதேச கண்ணோட்டத்தில் பார்த்தால்) 70 வருடங்களுக்கு பிறகு அடிமைத்தனத்திருந்து தன் மக்களை திரும்ப வாக்குத்தத்த நாட்டிற்கு கொண்டு வருவேன் என்று தீர்க்கதரிசிக ளால் தேவன் வாக்களித்ததை எப்படி நிறைவேற்றினார் என்பதை எஸ்றா எடுத்துக்காட்டுகிறார். நாளாகமப் புத்தகத்தில் உள்ளது போல தேவனுடைய மக்களின் வாழ்க்கையில் தேவாலய ஆராதனையின் முக்கியத்துவத்தையும், தேவாலயத்தின் முக்கியத்தையும், ஆசாரியன் எஸ்றா காட்டுகிறார். மீதியான ஜனங்கள், திரும்ப சொந்த நிலத்திற்கு வருவதற்கு அனுமதிக்க பெர்சியா நாட்டு அரசன் கோரேசுவின் ஆணையுடன் இந்த புத்தகம் துவங்குகிறது. ஜனங்கள் உற்சாகமாக ஆலயத்தைத் திரும்ப கட்டத் துவங்கினர், ஆனாலும் வட தேசத்தின் எதிரிகளால் 18 வருடங்கள் தாமதம் ஆனது இறுதியில் தரியுவின் ஆணை கட்டி முடிக்க அனுமதித்தது. (எஸ்றா 1-6). அதிகாரம் 7-10ல் ஆசாரியன் எஸ்றா திரும்பி வருவதையும் நியாயப்பிரமாணத்தை மக்களுக்கு கற்பிப்பதையும், தேசத்தின் ஆவிக்குரிய வாழ்க்கையை மறுமலர்ச்சிப்படுத்தினதைக் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது.

முக்கிய நபர்கள்: கோரேசு (திரும்ப வருவதற்கு அனுமதி அளித்த பெரிசியாவின் ராஜா), எஸ்றா (ஆசாரியன், மற்றும் வேதபாரகன்) யோசுவா, (பிரதான ஆசாரியன்) மற்றும் செருபாபேல்.

எஸ்றாவில் இயேசு: தாவீதின் குமாரனாகிய மேசியாவிற்காக வம்சத்தைக் காக்க தாவீதின் உடன்படிக்கையையும் தேவனுடைய வாக் குத்தத்தங்களையும் காக்கும்மாக்குப்படி மக்களைத் திரும்ப சொந்த நிலத்திற்கு கொண்டு வந்தது மூலம் தேவன் தம் வாக்கை எப்படி தொடர்ந்து நிறைவேற்றுகிறார் என்பதை எஸ்றா புத்தகமும், நெகேமியா புத்தகமும் காட்டுகிறது.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முன்னிருந்த நிலைக்கு வருதல்: செருபாபேன் கீழ் எருசலேமுக்கு முதல் வருகை (1:1-6:22)**
   a. கோரேசு ராஜாவின் ஆணை (1:1-11)
      1:1-4 1:5-11
   b. மக்கள் தொகைக் கணக்கெடுப்பு (2:1-70)
      2:1-35 2:40-60
      2:36-39 2:61-70
   c. ஆலயப் பணியைத் துவங்குதல் (3:1-13)
      3:1-7 3:8-13
   d. எதிர்ப்பு (4:1-24)
      4:1-7 4:8-16 4:17-24
   e. ஆலயக் கட்டுமானத்தை புதுப்பித்தல் (5:1-6:12)
      5:1-5 5:6-17 6:1-12
   f. ஆலயப் ப ழிஜிக்கப்பவூதல் (6:13-22)
      6:13-18 6:19-22

2. **மக்கள் ஞினும்பவனுதல் எஸ்றநின் தலமளீல் ஞினூன்பிவனுதல் (7:1-10:44)**

a. எனூசலழிக்ரூ வனுதல் (7:1–8:36)

7:1–10	8:1–14	8:33–36
7:11–26	8:15–20	
7:27–28	8:21–32	

b. எனூசலஞீன் எப்தல் (9:1–10:44)

9:1–4	10:1–17
9:5–15	10:18–44

நெகேமியா
(பட்டணம் திரும்பவும் கட்டப்படுதல்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: சிலர் நெகேமியாவே நெகேமியா புத்தகத்தை எழுதினார் என நம்புகின்றனர் காரணம் ***"அகயாவின் குமாரனாகிய நெகேமியாவின் நடபடிகள்"*** (1:1) என்ற வாக்கு. ஆனால் அநேகர் சில தடயங்களால் எஸ்றா நெகேமியா புத்தகத்தை எழுதினார் என்றும் அவர் நெகேமியாவின் குறிப்புகளிருந்து நெகேமியாவைப்போல் மேற்கோள் காட்டினான் என்றும் நம்புகின்றனர். அநேக வேத வல்லுநர்களும் இந்தப் புத்தகம் நெகேமியாவின் பெயரைக் கொண்டிருப்பதனால் நெகேமியா எழுதினார் என்று நம்புகின்றனர்; மேலும் இந்த புத்தகத்தின் பெரும்பகுதி தன் சொந்த வாழ்க்கையில் எருசலேமிற்குத் திரும்புதைப் பற்றி கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் நெகேமியா எழுதினார் என்று நம்புகின்றனர் (1:1–7:73; 12:31–13:31).[17]

ஆரம்பத்தில் எஸ்றாவும் நெகேமியாவும் ஒரு புத்தகமாக இருந்தாலும், புத்தகத்தின் கடைசிப் பாதிப் பகுதி பெர்சியா ராஜாவுடைய பான பாத்திரக்காரனாகவும், எஸ்றாவின் காலத்தில் வாழ்ந்தவனாகவும் இருந்த நெகேமியா என்பவனிருந்து இந்தப் புத்தகத்தின் பெயர் வந்தது. நெகேமியா என்ற பெயரின் அர்த்தம் யெகோவா தேற்றுகிறார்து என்பதாகும்.

எழுதப்பட்ட காலம்: இதன் சரித்திரப் பிண்ணனி என்னவென்றால், பழங்கால எபிரெய புத்தகம் எஸ்றா - நெகேமியாவின் பின் பாதியாகும் அப்படியானால், ஏறத்தாழ **கி.மு. 445 ருந்து 425** வரையில் இது எழுதப்பட்டது.

மையக்கருத்தும் நோக்கமும்: சிறையிருப்பிருந்து திரும்பி வந்த யூத மக்கள் சரித்திரத்தை நெகேமியா புத்தகம் தொடருகிறது. பெர்சியா ராஜாவாகிய அர்தசஷ்டாவிடம் பான பாத்திரக்காரனாக இருந்த நெகேமியா, தன் பதவியைக் கைவிட்டு, இஸ்ரவேன் ஆளுநராக மாறி; பட்டணத்தின் மதில்களை சரிசெய்ய மக்களை வழிநடத்தினான். எஸ்றாவும் நெகேமியாவும் ஒரே காலத்தில் வாழ்ந்தனர் (நெகேமியா 8:2, 9). இரண்டு பேருமே தேவனுடைய ஊழியக்காரர்கள், ஆனாலும் வித்தியாசமான திறமைகளில் யெகோவாவுக்கு ஊழியம் செய்தனர். எஸ்றா ஆசாரியனாக, திரும்பி வந்த மீதியானவர்களின் ஆத்மீக காரியங்களை திரும்ப முன்னய நிலைக்கு கொண்டுவருவதில் அதிகமாய் ஈடுபட்டான். நெகேமியா உலக வேலை செய்பவனாக ஆளுநராக, எருசலேம் பட்டணத்தின் மதில்களை திரும்பக் கட்டுவதற்கு அரசியல் ரிதியாக தேவனுக்கு ஊழியம் செய்தான்.

பிணையக் கைதியாக இருந்த வருடங்களுக்கு பிறகு, தேவனுடைய மக்களின் சொந்த நிலத்திற்கு திரும்பி வந்ததில் தேவனுடைய கரம், அவர்கள் மேல் இருப்பதைத் தெளிவாகக் காட்டும்படி நெகேமியா புத்தகம் எழுதப்பட்டது. செருபாபேன் தலைமையில் முதல் திரும்பி வந்தவர்கள் தொன்னுற்று நான்கு வருடங்களாக செய்ய முடியாததை, நெகேமியாவின் தலைமையில் ஐம்பத்திரண்டு நாட்களில் செய்துமுடித்தார்கள். கீழ்ப்படிதலுள்ள விசுவாசத்தினால் மிகக் கடினமான எதிர்ப்பை மேற்கொண்டார்கள்.[18]

முக்கிய நபர்கள்: நெகேமியா அர்தசஷ்டா, சன்பல்லாத், எஸ்றா

நெகேமியாவில் கிறிஸ்து: மக்களைத் திரும்ப பழைய நிலைக்குக் கொண்டுவர இயேசு தமது உயர்ந்த நிலையை விருப்பத்துடன் விட்டு விட்டதை நெகேமியா இயேசுவுக்கு மாதிரியாக இருந்து சித்தரிக்கிறான். சரியாக குறிக்கப்படாத காலத்தினால் தொடர்ச்சியை தடைசெய்தாலும், மேசியாவின் வருகையைக் குறித்து கணக்கிட துவங்கிய, "தானியேல் 70 வாரங்கள்" அர்தசஷ்டா ராஜாவின் ஆணையில் துவங்கியது என்பது குறிப்பிடத்தக்கது (தானியேல் 9:25-27).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **மதில்களைத் திரும்பக் கட்டுதல் (1:1–7:73)**

a. திரும்பக் கட்டத் தயாராகுதல் (1:1–2:20)

1:1–11	2:1–10	2:11–20

b. திரும்பக் கட்டுதல் (3:1–7:73)

3:1–32	5:1–13	6:15–18
4:1–8	5:14–19	7:1–65
4:9–23	6:1–14	7:66–73

2. **மக்களைத் திரும்ப முன்னிருந்த நிலைக்குக் கொண்டுவருதல் (8:1-13:31)**
   a. உடன்படிக்கையைப் புதுப்பித்தல் (8:1-10:39)

8:1-8	8:13-18	10:1-27
8:9-12	9:1-38	10:28-39

   b. உடன்படிக்கைக்கு மக்களின் கீழ்ப்படிதல் (11:1-13:31)

11:1-19	12:27-30	13:10-14
11:20-36	12:31-47	13:15-22
12:1-21	13:1-3	13:23-31
12:22-26	13:4-9	

எஸ்தர்
(தேவ ஜனங்கள் பாதுகாக்கப்படுதல்)

எழுதியவரும் புத்தகத்தின் தலைப்பும்: இந்த புத்தகம், யார் எழுதினார் என்பதை பற்றியுள்ள குறிப்பை கொடுக்கவில்லை. ஆனால் அவர் யாராயிருந்தாலும் பெர்சியா நாட்டின் கலாச்சாரத்தை நன்கு அறிந்தவர். கண்களால் கண்ட சம்பவங்களை எழுதியவர் விளக்குகிறார். ஆதலால் எழுதியவர் பெர்சியா நாட்டில் வசித்தவராக இருக்கிறார் என்று தெரிகிறது. மேலும், எழுதியவர் ஒரு யூதராக இருக்க வேண்டும். இது எஸ்றா அல்லது நெகேமியாவாக இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். ஆனால் இதை நிரூபிக்க குறிப்பிடத்தக்க ஆதாரங்கள் இல்லை.[19]

இந்த புத்தகத்தின் பெயர் முக்கிய கதா பாத்திரமாகிய எஸ்தரிருந்து வந்தது. பிரதான கதா பாத்திரத்தின் பெயர் புத்தகத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது, அவளுடைய எபிரெய பெயர் ''ஹாடாஸ்யா'' (நறுமணச் செடி) என்றதிருந்து பெர்சியா நாட்டின் பெயராக ''எஸ்தர்'' என மாற்றப்பட்டது; இதன் அர்த்தம் ''நட்சத்திரம்'' ஆகும்.

எழுதப்பட்ட காலம்: எஸ்தரில் உள்ள சம்பவங்கள் எஸ்றா புத்தகத்தின் 6 மற்றும் 7ஆம் அதிகாரத்தினிடையில் நடந்தது. செரூபாபேன் கீழ் மக்கள் வந்த முதல் வருகைக்கும் எஸ்றாவின் கீழுள்ள இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்தது. எஸ்தர் கி.மு. 470க்கும் கி.மு. 465க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது. அகாஸ்வேரு ராஜாவின் ஆளுகையின் பிற்பகுதியிலே அல்லது அவனுடைய மகனின் ஆளுகையில் காலத்திலோ இந்தப் புத்தகம் எழுதப்பட்டிருக்கலாம் (கி.மு. 464-424).

மையக் கருத்தும் நோக்கமும்: பெர்சியாவின் ராஜாவாகிய அகாஸ்வேரு தனக்கு ராணியாக தெரிந்து கொண்ட ஒரு அழகான யூத பெண்ணின் கதையை இந்தப் புத்தகம் சொல்லுகிறது. ஆமான் என்பவன், எல்லா யூத ஜனங்களையும் கொலை செய்யத் திட்டமிட்டபோது எஸ்தரின் வளர்ப்புத் தந்தையாகிய மொர்தெகாய் என்பவன் யூத ஜனங்களைக் காக்கும்படி எஸ்தர் ராணியை தூண்டினான். தன்னுடைய ஜீவனைப் பெரிதாக எண்ணாமல் ராஜாவிடம் முறையிட்டு யூதர்களைக் காப்பாற்றினாள். தேவனுடைய பேரை குறிப்பிடாத ஒரே புத்தகமாக இருந்தாலும் இந்தப் புத்தகத்தின் மையக் கருத்தும் நோக்கமும், உபத்திரவத்திலும் கஷ்டத்திலும் உள்ள தேவ ஜனங்களுக்கு, தேவன் பாதுகாப்பளிப்பதாகக் காட்டுகிறது.

முக்கிய நபர்கள்: எஸ்தர், ஆமான், மொர்தெகாய், அகாஸ்வேரு (பெர்சியா நாட்டின் அரசன்)

எஸ்தரில் கிறிஸ்து: மக்களுடைய இரட்சிப்புக்காக தன்னுடைய ஜீவனையும் பொருட்படுத்தாது விருப்பத்துடன் தன்னை ஒப்புக் கொடுத்து, மக்களுக்காக ஒரு மத்தியஸ்தளாக இயேசுவைப் போன்று பணி செய்ததில், எஸ்தர் ஒரு பொருத்தமான இயேசுவின் சித்திரத்தை கொடுக்கிறது. மேலும் மேசியாவைக் கொடுத்த யூதா ஜனங்களை தேவன் எப்படித் தொடர்ந்து காத்து வந்தார் என்பதையும் நாம் காண முடியும்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **யூத ஜனத்தின் ஆபத்து (1:1-3:15)**
   a. வஸ்திக்கு பதிலாக எஸ்தர் ராணியைத் தெரிந்தெடுத்தல் (1:1-2:23)

1:1-9	2:1-7	2:17-20
1:10-22	2:8-16	2:21-23

   b. யூத ஜனத்திற்கெதிராக ஆமான் துர் ஆலோசனை செய்தல் (3:1-15)

2. **யூத ஜனங்களின் விடுதலை (4:1-10:3)**
   a. யூதஜனத்திற்காக எஸ்தரின் தீர்மானம் (4:1-5:14)

4:1-8	4:15-17	5:9-14
4:9-14	5:1-8	

   b. ஆமான் தோற்கடிக்கப்படுதல் (6:1-7-10)

6:1-9	7:1-6
6:10-14	7:7-10

   c. அகாஸ்வேரு ராஜாவின் ஆணையும் மொர்தெகாயும் (8:1-17)

8:1-8	8:9-17

   d. யூத ஜனத்தின் எதிரியின் தோல்வி (9:1-19)

9:1-10	9:11-19

   e. பூரீம் என்ற பண்டிகையின் நாட்கள் (9:20-32)
   f. மொர்தெகாயின் கீர்த்தியும், அவனுடைய ராஜ சபையின் உயர்வும் (10:1-3)

பகுதி 3
கவிதைப் புத்தகங்கள்

முகவுரை: முன்பு பார்த்தவற்றில் ஆதியாகமம் முதல் நெகேமியா வரையுள்ள முதல் 17 புத்தகங்கள் (நியாயப்பிரமாணம் மற்றும் சரித்திரம்) பழைய ஏற்பாட்டின் முழுமையான சரித்திரத்தை கொண்டுள்ளன. மற்ற எல்லாப் புத்தகங்களும், (கவிதை மற்றும்) தீர்க்கதரிசன புத்தகங்களும், அந்த 17 புத்தகங்களின் சரித்திரத்திற்குள் அடங்கி இருக்கின்றன. யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப்பாட்டு என்ற ஐந்து புத்தகங்களை கொண்ட சிறிய பகுதி கவிதைப் புத்தகங்களாகும். இந்தப் புத்தகங்களை ஆய்வு செய்வதற்கு முன்பு, நாம் இந்த ஐந்து புத்தகங்களும் கொண்டுள்ள சில குணாதிசயங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

''கவிதை'' என்பது அவைகளின் அமைப்பை மாத்திரம் குறிப்பிடுகிறது என்பதை வேதத்தை கற்கும் மாணவன் தெளிவாக அறிந்து கொள்வது அவசியமாகும். இது மனித கற்பனையில் உருவானது அல்ல. இந்தப் புத்தகங்கள் மனிதனுடைய உண்மையான அனுபவமாக இருக்கிறது.

உறவுகள்: முன்பே கண்ட 17 சரித்திர புத்தகங்கள் சரித்திர புத்தகமாக இருக்கிற வேளையில் இந்த 5 கவிதைப் புத்தகங்கள் அனுபவத்தின் பிரதிபப்பாக இருக்கின்றது. தனிப்பட்ட மனிதனுடைய வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை விளக்குகிறது. சரித்திர புத்தகங்கள் தேசத்தை குறித்து கரிசனை கொள்ளும்போது, கவிதை புத்தகங்கள் மக்களுடைய செயல்களையும் அவர்களுடைய உணர்வுகளையும் குறித்து அதிக கரிசனை கொள்கிறது. எபிரெய வம்சத்தை சரித்திர புத்தகங்கள் விளக்குகிறது. மனிதனுடைய இதயத்தைக் கவிதை புத்தகம் விளக்குகிறது. பழைய ஏற்பாட்டுப் புத்தகங்களில் கவிதைப் புத்தகங்களில் மட்டுமல்ல, பின்பு நாம் பார்க்கப்போகிற தீர்க்கதரிசன புத்தகங்களிலும் பெரும்பகுதி கவிதையாக இருக்கிறது.

தேவன் தெரிந்துகொண்ட இஸ்ரவேல் தேசத்தை கவனத்தில் கொண்டு பழைய ஏற்பாடு நான்கு பெரிய பகுதிகளாக பிரிக்கப்படுகிறது. அவர்களின் முக்கிய குணாதிசய கோணங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

1. நியாயப்பிரமாணம் - இஸ்ரவேலருடைய வாழ்க்கை ஒழுங்கை பொருத்ததாக இருக்கிறது.
2. சரித்திரப் புத்தகம் - இஸ்ரவேல் தேசத்தின் உறுவானதையும் வாழ்க்கையையும் குறிக்கின்றது.
3. கவிதைப் புத்தகம் - இஸ்ரவேலருடைய ஆவிக்குரிய அனுபவம் தொடர்பாக இருக்கிறது.
4. தீர்க்கதரிசன புத்தகம் - மேசியாவில் நிறைவேறுகின்ற இஸ்ரவேலருடைய எதிர்கால வாழ்க்கையைக் குறிப்பதாக இருக்கிறது.

இந்த ஐந்து கவிதை புத்தகங்களிலும் கூட அவைகளில் ஒன்றோடொன்று உள்ள தொடர்பைக் காணலாம்.

1. யோபு - உபத்திரவத்தின் வழியாய் ஆசீர்வாதம்
2. சங்கீதம் - ஜெபத்தின் வழியாய் துதி
3. நீதிமொழிகள் - கட்டளையின் வழியாய் ஞானம்
4. பிரசங்கி - யதார்த்ததின் வழியாய் சத்தியம்
5. உன்னதப்பாட்டு - ஐக்கியத்தின் மூலம் சந்தோஷம்

எபிரெய கவிதையின் காலம்: பழைய ஏற்பாட்டு சரித்திரம் முழுவதிலும் கவிதைகள் இருந்தாலும் கவிதை இலக்கியம் பிரதானமாய் மூன்று காலங்களைக் கொண்டுள்ளது.

1. பூர்வ பிதாக்களின் காலம் - யோபு (ஏறத்தாழ கி.மு. 1750)
2. தாவீதின் காலம் - சங்கீதம் (ஏறத்தாழ கி.மு. 1050)
3. சாலொமோனின் காலம் (ஏறத்தாழ கி.மு. 950)
    a. உன்னதப்பாட்டு - ஒரு இளைஞனின் அன்பு
    b. நீதிமொழிகள் - ஒரு நடுவயது மனிதனின் ஞானம்
    c. பிரசங்கி - ஒரு முதிர்ந்த மனிதனின் துக்கம் (ஏறத்தாழ கி.மு. 950)[20]

கவிதைப் புத்தகங்களில் கிறிஸ்து:முன்னமே குறிப்பிட்டதுபோல கிறிஸ்துவாகிய மேசியாவே முழுவேதாகமத்தின் இருதயமாக இருக்கிறார். கடந்த நாட்களில் நடந்த சிலுவை மரண சம்பவங்களால் குழம்பியும், துக்கமாயும், எம்மாவு ரோட்டில் நடந்து கொண்டிருந்த சீடருடன் உயிர்த்தெழுந்த இரட்சகர் நடந்து வந்து தன்னைக் குறித்து வேதத்தில் எழுதப்பட்ட காரியத்தை விளக்கினார் (லூக்கா 24:27). அதன் பின்பு பதினொன்று சீடருக்கு தோன்றி: இப்படிக் கூறினார் ***"மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகளெல்லாம் நிறைவேறவேண்டியதென்று, நான் உங்களோடிருந்தபோது உங்களுக்கு சொல்லிக்கொண்டுவந்த விசேஷங்கள் இவைகளே"*** (லூக்கா 24:44).

இந்த சிந்தையுடன் ஒவ்வொரு கவிதை புத்தகத்தை குறித்து படிக்க துவங்கும் முன்பு இவைகளை கிறிஸ்துவின் கோணத்தில் கண்டால் நல்லது. இதைக்குறித்து நார்மன் கெய்ஸ்லர் எழுதுகிறார்:

> நியாயப்பிரமாணத்தில் கிறிஸ்துவுக்காக அஸ்திபாரமிடப்பட்ட வேளையில் சரித்திரப் புத்தகங்களில் கிறிஸ்துவுக்காக ஆயத்தம் செய்யப்பட்டது கவிதை புத்தகங்கள் ஜனங்களின் இருதயங்களில் கிறிஸ்துவிற்கான தேவையைக் குறிக்கிறது. அறிந்தும் அறியாமலும், உள்ளும் புறமும் கிறிஸ்துவில் நிறைவான வாழ்வை ஊக்குவிக்கின்றன.[21]

கிறிஸ்து மத்தியஸ்தராக இருக்கும் தேவையை யோபு காட்டுகிறது. சங்கீதம் கிறிஸ்துவுடன் ஐக்கியமாயிருப்பதன் தேவையைக் குறிக்கிறது. கிறிஸ்துவுக்குள் ஞானத்தின் தேவையை நீதிமொழிகள் காட்டுகிறது. ஒரு முடிவான திருப்தியின் தேவையை பிரசங்கி காட்டுகிறது. கிறிஸ்துவில் அன்பினால் ஒன்றுபடுதன் தேவையை உன்னதப்பாட்டு காட்டுகிறது.

ரெய கவிதை

எபிரெய கவிதையின் தன்மை: வார்த்தை ஜாலத்தையும், அதன் நீளத்தையும் வைத்து அழகுபடுத்தும் ஆங்கில கவிதையைப் போல் அல்லாமல் எபிரெய கவிதை அதனுடைய பிறரை கவரும் மற்ற குணாதிசயங்களை வெளிப்படுத்துகிறது. வேதாகம கவிதையில் ஒப்புமை (வெவ்வேறு வரிகளின் பொருளடக்கத்தின் பொருத்தம்), ஒரு முக்கிய குணாதிசயமாக இருக்கிறது. எபிரெய கவிதைகள் மேலும் அநேக ஞுஉவமைகளைக்டு கொண்டுள்ளது.

எபிரெய கவிதையின் மூன்று வகைகள்:எபிரெய கவிதையில் மூன்று வகைகள் இருக்கின்றன. அவைகள் (1) இசைப்பாட்டு கவிதை. இது இசையுடன் சேர்ந்திருக்கிறது (சங்கீதங்கள்) (2) போதனை தரும் கவிதை. இது அடிப்படை வாழ்க்கைத் தத்துவத்தை பகிர்ந்துகொள்ள சத்தியத்தை வெளிப்படுத்துகிறது (நீதிமொழிகள் மற்றும் பிரசங்கி). (3) நாடகக் கவிதை. இது ஒரு செய்தியை உரையாடல் வழியாக பகிர்ந்து கொள்ளும் தன்மையுடையது (யோபு, உன்னதப்பாட்டு).

எபிரெய கவிதையின் இரண்டு முக்கிய மூலப்பொருட்கள்: ஒப்புமை மற்றும் உருவகம்

ஒப்புமை

எபிரெயக் கவிதை எண்ணங்களைத் (திரும்பக் கூறி மேலும்) திருத்தி அமைக்கிறது. அந்த எண்ணங்களுடைய ஒப்பிடுதலை ஒப்புமை குறிப்பிடுகிறது. அநேகவிதமான எண்ணங்களுடைய ஒப்புமை அமைப்புகள் இருக்கின்றன:

A. ஒரேமாதிரியான அமைப்பு – அடிப்படையாக முதல் வரியில் காணப்படும் எண்ணங்கள் இரண்டாம் வரியில், திரும்ப, வேறு வார்த்தைகளால் கூறப்படுகிறது. (சங்கீதம் 2:4; 3:1; 7:17).

B. எதிர்மறை – முதல் வரியின் எண்ணங்கள் இரண்டாம் வரியில் திரும்ப எதிர்மறை எண்ணத்தால் அழுத்தி கூறப்படுகிறது (சங்கீதம் 1:6; 34:10). அவைகள் அநேக வேளையில் ‘‘ஆனால்’’ என்ற வார்த்தையுடன் குறிப்பிடப்படுகிறது.

C. தொகுப்பு அமைப்பு – இரண்டாம் வரி, முதல் வரியின் எண்ணங்களின் விளக்கமாக அல்லது மேலும் விரிவுப்படுத்துவதாக உள்ளது. (சங்கீதம் 1:3; 95:3)

D. இறுதி அமைப்பு – இரண்டாம் வரி, முதல் வரியின் இறுதிப் பகுதியை வயுருத்துவதாயிருக்கும் (சங்கீதம் 29:1).

E. சின்ன அமைப்பு – முதல் வரி முக்கிய கருத்தை பரிமாறுகிறது. இரண்டாம் வரி அதை சித்திரமாக விளக்குகிறது (சங்கீதம் 42:1; 23:1).

உருவகம்

ஒரு பொருள் மற்றொரு பொருளை குறிக்கப் பயன்படுத்தப்படும்பொழுது உருவகம் தோன்றுகிறது. உணர்வுகளையும், எண்ணங்களையும் பரிமாற எபிரெய கவிதைகள் உவமையை பயன்படுத்துகிறது.

உதாரணமாக ***‘‘அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து இலையுதிராதிருக்கிற மரத்தைப்போருப்பான்’’*** (சங்கீதம் 1:2–3). ‘‘வேதத்தில் தியானமாக இருக்கிற மனுஷன் ஒரு உண்மையான ஞுமரம்து அல்ல; ஆனால் அந்த மனிதன் மரத்திற்கு ஒப்பாக இருக்கிறான். இந்த வகையாக வாக்கியங்களில் ‘‘போல்’’ என்ற வார்த்தை காணப்படுகிறது. (சங்கீதம் 5:12; 17:8; 131:2).

மற்றொரு உருவகத்தில் ‘‘இருக்கிறார்’’ என்ற வார்த்தையை உபயோகித்து ஒன்றை மற்றொன்றுடன் ஒப்பிட்டுப் பார்க்கிறது. சங்கீதம் 23:1ல் தாவீது கூறுகிறான் ***‘‘கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்.’’*** இங்கு தாவீது ஒரு நீண்ட முரட்டு முடிகளுடைய நான்கு கால்களையுடைய மிருகமாக இருக்கவில்லை, மாறாக ஆட்டிடையன் தன் ஆடுகளை கவனிப்பது போல தாவீது தேவனால் கவனிக்கப்படுகிறான் என்பதாக இருக்கிறது (சங்கீதம் 84:11; 91:4).

சில நேரத்தில் ‘‘மிகைப்படுத்துதல்’’ ஒரு காரியத்தை அழுத்தி கூற பயன்படுத்தப்படுகிறது. சங்கீதம் 6:6ல் தாவீது கூறுகிறார் ***‘‘இராமுழுவதும் என் கண்ணீரால் என் படுக்கையை மிகவும் ஈரமாக்கி, என் கட்டிலை நனைக்கிறேன்.’’*** இந்த வாக்கியத்தில் அவனுடைய துக்கம் அழுத்தி கூறப்படுகிறது. தாவீது தன் படுக்கை மிதக்கும்படியாக அழவில்லை (சங்கீதம் 78:27; 107:26).

விசாரணை மேற்கொள்வதற்குப் பதில் வினாக்கள் சில நேரங்களில் உண்மையை உறுதிப்படுத்த அல்லது மறுக்கப் பயன்படுத்தப்படுகிறது. சங்கீதம் 35:10ல் தாவீது ***‘‘உமக்கொப்பானவன் யார் கர்த்தாவே?’’*** என்று கேட்கும்பொழுது ‘‘ஒருவனுமில்லை’’ என்ற பதிலை பெறுவதற்காக அல்ல கர்த்தர் மிகவும் பெரியவராக இருக்கிறார் என்பதை அழுத்தி கூற விரும்புகிறான். (சங்கீதம் 56:8; 106:2).

தேவனுடைய தன்மையை விளக்க மிருகத்தினுடைய சில பாகங்களை பயன்படுத்துவது கடைசியாக உருவகத்திற்க்கு உதாரணமாக இருக்கிறது. தேவனை குறித்து சில உண்மைகளை பறிமாற இது குறிக்கப்படுகிறது. உதாரணமாக சங்கீதம் 17:9 தாவீது தேவனிடத்தில் கேட்கிறான். ***‘‘உம்முடைய செட்டைகளின் நிழலே என்னைக் காப்பாற்றும்.’’*** இங்கு தேவன் ஒரு பறவையாக இருக்கவில்லை, மாறாக குஞ்சுகளை பாதுகாக்கின்ற பறவையைப் போல தேவன் தன்னைக் காப்பாற்ற வேண்டிக்கொள்கிறான் (சங்கீதம் 91:4).

யோபு
(உபத்திரவத்தின் மூலமாய் ஆசீர்வாதம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: நாம் இந்த புத்தகத்தின் தலைப்பு அதன் முக்கிய கதாபாத்திரமாகிய யோபுவிருந்து வந்தது என அறிய முடியும்; மேலும் யோபு ஒரு சரித்திர முக்கியம் வாய்ந்த மனிதன் (எசேக்கியேல் 14:14, 20; யாக்கோபு 5:11). ஆகிலும் எழுதியவர் யார் என்பதற்கு புத்தகத்தில் ஆதாரமில்லை. விளக்கவுரை அறிஞர்கள் யோபு, எகூ, மோசே, சாலொமோன் இவர்களின் ஒருவர் எழுதியிருக்கலாம் என கூறுகின்றனர்.

யோபு புத்தகத்தின் முக்கிய கதாபாத்திரமாகிய யோபு என்ற மனிதனிடமிருந்து இந்தப் புத்தகத்தின் தலைப்பு வந்தது. அவர் செல்வம், குடும்பம் மற்றும் ஆரோக்கியத்தை இழந்து உபத்திரவத்தின் உச்சநிலையை அனுபவித்து ஏன் என்ற கேள்வியுடன் போராடினர்.

எழுதப்பட்ட காலம்: எழுதினவரை அறிந்துகொள்ள இயலாமையால் இந்த புத்தகம் எப்பொழுது உண்மையாக எழுதப்பட்டது என்பது நிர்ணயிக்க முடியாத காரியமாக இருக்கிறது. ஆனாலும் மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்பாக இந்த சரித்திரம் இடம் பெற்றது என கால வடிவத்தை நாம் நிர்ணயிக்க முடியும் (கி.மு. 1445-1405). நியாயப்பிரமாணம் கொடுப்பதற்கு முன்பும், லேவிய ராகம ஆசாரியத்துவம் நிர்ணயத்திற்கு முன்பும் குடும்பத்தலைவன் ஆசாரியனாக இருந்தான். யோபு குடும்ப ஆசாரியனாக இருந்து பசெலுத்துவதைப் பார்க்கலாம் (யோபு 1:5). இது நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு, முன்பு உள்ள காலத்தைக் குறிக்கிறது. ஆபிரகாமின் காலக்கட்டத்தில் நடந்திருப்பதுபோல் தோன்றுகிறது.

முக்கிய கருத்தும் நோக்கமும்: உபத்திரவ மற்றும் தீமையின் மத்தியில், தேவனுடைய நன்மை, நீதி மற்றும் ஆளுகையையும் தெளிவுபடுத்துவதாக இந்த புத்தகம் இருக்கிறது. னு"கடவுள் அன்பு மற்றும் கிருபையின் கடவுளாக இருந்தால், ஏன் நீதிமான் உபத்திரவப்படுகிறான்? என்ற வினாவுடன் இந்த புத்தகம் போராடுகிறது. தேவனுடைய அநாதி ஆளுகையும், மனிதன் அதை அங்கீகரித்துத் தான் ஆக வேண்டும் என்பதையும் இந்தப் புத்தகம் தெளிவாகக் கற்பிக்கிறது. யோபின் மூன்று நண்பர்களும் இதே பதிலை அடிப்படையாகக் கொடுத்தனர். எல்லா உபத்திரவமும் பாவத்தின் காரணமாக வருகிறது என்று அவர்கள் கூறினர். ஆனாலும் எகூ நீதிமானை பரிசுத்தப்படுத்தும் முறையாக அநேக வேளையில் உபத்திரவம் இருக்கிறது என்பதை பிரஸ்தாபப்படுத்தினான். யோபின் சுய நீதியை நீக்கி தேவனை முழுமையாக நம்பும் இடத்திற்கு கொண்டு வருவதே தேவனுடைய நோக்கமாக இருந்தது.[22] இந்தக் கருப்பொருளைக் குறித்து கிளீசன் ஆர்க்கர் என்பவர் அருமையாகவும் சுருக்கமாகவும் கூறுகிறார்:

> தேவபக்தியுள்ளவர்களின் வாழ்வில் உள்ள வேதனை மற்றும் அழிவு ஆகியவற்றைப்பற்றி இப்புத்தகம் கூறுகிறது. நீதிமான் துன்பப்படுவதேன் என்ற கேள்விக்குப் பதில் கொடுக்கிறது. இந்தப் பதில் மூன்றுவிதத்தில் வருகிறது: (1) அவர் கொடுக்கும் ஆசீர்வாதங்களுக்கு மேல் தேவன் நம் அன்புக்குப் பாத்திரர்; (2) ஆத்துமாவை தேவபக்தியில் பரிசுத்தமாக்கவும் பலப்படுத்தவும் தேவன் உபத்திரவத்தை அனுமதிக்கலாம்; (3) மனிதனுடைய சின்ன மூளையினால் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு தேவனுடைய நினைவுகளும் வழிகளும் விசாலமானவைகயாகும். மனிதனால் வாழ்க்கையின் பிரச்சனைகளை சர்வ வல்ல தேவனைப் போல அவருடைய கண்களால் காணமுடியாவிட்டாலும் தேவன் தம்முடைய மகிமைக்கும், நம்முடைய நன்மைக்கும் எது சிறந்தது என்பதை உண்மையாக அறிந்திருக்கிறார். இந்தப் பதிலானது யோபுவின் மூன்றுனு "தேற்றவாளர்" களாகிய எப்பாஸ், பில்தாத், மற்றும் சோபார் ஆகியோரின் கண்ணோட்டத்தின் சூழ்நிலைக்கு எதிராகக் கொடுக்கப்படுகிறது.[23]

சாத்தானுக்கும் தேவனுக்கும் இடையில் காலங்காலமாக இருக்கிற யுத்தத்தை தெளிவாக வெளிப்படுத்துவது இந்த புத்தகத்தின் வேறொரு நோக்கமாக இருக்கிறது. மேலும் இந்த யுத்தத்தினால் வரும் உபத்திரவத்தையும் எடுத்துக்காட்டுவது, இந்தப் புத்தகத்தின் நோக்கமாக இருக்கிறது. கடைசியாக ரோமர் 8:28ல் உள்ள சத்தியத்தை இது வெளிப்படுத்துகிறது.

முக்கிய நபர்கள்: உத்தமனும் சன்மார்க்கனுமாகிய யோபு, யோபைக் குற்றம் சாற்றியவர்களாகிய எப்பாஸ், பில்தாத், சோபார் மேலும் (யோபுவின் நண்பர்களில் இளையவனும் அறிவாளியுமாயிருந்து யோபுக்கு ஆலோசனை கூறிய எகூ; மற்றும் சாத்தான்.

யோபில் கிறிஸ்து: யோபு புத்தகத்தில் கிறிஸ்து அநேக விதங்களில் காணப்படுகிறார். ஒரு இரட்சகராக இருப்பதை நம்பி, அங்கீகரித்து (19:25-27) ஒரு மத்தியஸ்தருக்கா வேண்டுகிறார் (9:33; 33:23). அவர் தம்முடைய துன்பங்களுக்கான காரணம் தெரியாமல் துன்பப்பட்ட போது, பாடுகளின் ஊடே சென்ற கிறிஸ்துவினாலே மட்டும் தம்மைப் புரிந்துகொண்டு, அவராலே மட்டும் தேவனுக்கு எதிராக செயல்படும் சாத்தானை மேற்கொள்ள முடியும். கிறிஸ்துவில் மாத்திரமே தன் உபத்திரவத்துக்கும், அதன் இரகசியத்துக்கும் பதில் கிடைக்கும் என்பதை யோபு அறிந்திருந்தார். யோபுவை மேற்கொள்ளுகிற, மற்றும் தேவனுக்கு எதிராக இருக்கிற சாத்தானுக்குப் பதில் அளிக்கவும், அவனை தோற்கடிக்கவும் கிறிஸ்துவைப் போன்ற ஒருவர் தேவை. (எபிரெயர் 2:14-18; 4:15; ரோமர் 8:32-34).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை: யோபின் அழிவுகள் (உபத்திரங்கள்) (1:1-2:13)**
   a. யோபுவின் சூழலும் குணாதிசயமும் (1;1-5)
   b. யோபுவின் பிரச்சனைகளும், அதற்குக் காரணமாகிய சாத்தானும் (1:6-2:10)
      1:6-12 1:13-22 2:1-10
   c. யோபுவை தேற்றுபவர்கள் (2:11-13)

2. **பொய்யான வழியில் தேற்றும் மூன்று நண்பர்களின் உரையாடல் (3:1-31:40)**

a. முதல் கட்ட வாதம் (3:1-14:22)

1) யோபுவின் புலம்பல் (3:1-26)

3:1-19 3:20-26

2) எப்பாஸின் பதில் (4:1-5:27)

4:1-11 5:1-7 5:17-27
4:12-21 5:8-16

3) யோபுவின் பதில் (6:1-7:21)

6:1-7 6:24-30 7:11-21
6:8-13 7:1-6
6:14-23 7:7-10

4) பில்தாத்தின் பதில் (8:1-22)

8:1-7 8:8-10 8:11-22

5) யோபுவின் பதில் (9:1-10:22)

9:1-12 9:25-35 10:8-17
9:13-24 10:1-7 10:18-22

6) சோப்பாரின் பதில் (11:1-20)

11:1-6 11:7-12 11:13-20

7) யோபுவின் பதில் (12:1-14:22)

12:1-6 13:13-19 14:13-17
12:7-12 13:20-28 14:18-22
12:13-25 14:1-6
13:1-12 14:7-12

b. இரண்டாம் கட்ட வாதம் (15:1-21:34)

1) எப்பாஸின் பதில் (15:1-35)

15:1-16 15:17-35

2) யோபுவின் பதில் (16:1-17:16)

16:1-5 16:18-22 17:6-16
16:6-17 17:1-5

3) பில்தாத்தின் பதில் (18:1-21)

18:1-4 18:5-21

4) யோபுவின் பதில் (19:1-29)

19:1-6 19:7-22 19:23-29

5) சோப்பாரின் பதில் (20:1-29)

20:1-11 20:12-19 20:20-29

6) யோபுவின் பதில் (21:1-34)

21:1-16 21:17-26 21:27-34

c. மூன்றாம் கட்ட வாதம் (22:1-31:40)

1) எப்பாஸின் பதில் (22:1-30)

22:1-11 22:12-20 22:21-30

2) யோபுவின் பதில் (23:1-24:25)

23:1-7 24:1-12 24:18-25
23:8-17 24:13-17

3) பில்தாத்தின் பதில் (25:1-6)

4) யோபுவின் பதில் (26:1-31:40)

26:1-4 29:1-20 31:9-12
26:5-14 29:21-25 31:13-15
27:1-6 30:1-8 31:16-23
27:7-12 30:9-15 31:24-28
27:13-23 30:16-23 31:29-37
28:1-11 30:24-31 31:38-40
28:12-22 31:1-4
28:23-28 31:5-8

3. **எகூவின் வார்த்தைகள் (32:1-37:24)**

a. முதல் உரை: உபத்திரவத்தின் மூலம் தேவன் மனிதனுக்குக் கற்பித்தல் (32:1-33:33)

32:1-10 33:1-7 33:19-22
32:11-14 33:8-12 33:23-28
32:15-22 33:13-18 33:29-33

b. இரண்டாம் உரை: தேவனுடைய நீதியும் விவேகமும் நிரூபிக்கப்படுதல் (34:1-37)

34:1-9	34:16-20	34:31-37
34:10-15	34:21-30	

c. மூன்றாம் உரை: எப்போதும் தூய்மையாயிருப்பதன் பயன் (35:1-16)

35:1-8	35:9-16

d. நான்காம் உரை: தேவனுடைய சிறப்பும் தேவன் நேர்மையற்றவர் என்று குற்றம் சாட்டிய யோபுவின் பாவமும் (36:1-37:24)

36:1-16	36:24-33	37:14-20
36:17-23	37:1-13	37:21-24

4. சுழல்காற்றிருந்து மூலம் தேவனுடைய வெளிப்பாடு (38:1-42:6)

a. முதல் வெளிப்பாடு (38:1-40:5)

1) இயற்கையில் தேவனுடைய சர்வவல்லமை பிரஸ்தாபப்படுதல் (38:1-39:30)

38:1-7	38:25-30	39:5-12
38:8-11	38:31-33	39:13-18
38:12-15	38:34-38	39:19-25
38:16-18	38:39-41	39:26-30
38:19-24	39:1-4	

2) யோபு தன் தவறை உணர்ந்து அறிக்கையிடல் (40:1-5)

b. இரண்டாவது வெளிப்பாடு; தேவனுடைய வல்லமையும் மனிதனுடைய பலவீனமும்; யோபுவின் தாழ்மையான பதில் (40:6-42:6)

40:6-9	40:19-24	42:1-6
40:10-14	41:1-11	
40:15-18	41:12-34	

5. கடைசிக் குறிப்புகள் (42:7-17)

a. தேவன் யோபுவைத் தேற்றிய உண்மையற்ற நண்பர்களைக் கடிந்து கொள்கிறார். (42:7-9)

b. யோபுவுக்கு சன்மானமும், அவன் பழைய நிலைக்குக் கொண்டுவரப்படுதலும். (42:10-17)

சங்கீதம்
(ஜெபத்தின் மூலம் துதி)

எழுதியவரும் புத்தகத்தின் தலைப்பும்: சங்கீத புத்தகம் வேதத்தில் அதிக நீளமுடைய புத்தகம். வாழ்க்கையின் எல்லா அனுபவங்களைப் பற்றியும் பேசுகிறவிதத்தில் வேதாகமத்திலுள்ள எல்லாப் புத்தகங்களையும் விட, அதிகமாக பயன்படுத்தப்படும் புத்தகம் இதுவே. மனிதனுடைய இருதயத்திற்கு மீண்டும் மீண்டும் பெருமூச்சுகள் ஜெபத்தினாலும் துதியினாலும் பாடலாக மாற்றப்படுகிறது. அநேக பாகத்தில், அந்தப் பகுதியின் எழுத்தாளர் யார் என்று குறிப்பிடப்படாமல் இருந்தாலும், பெரும்பாலும் பாடன் தலைப்பு எழுத்தாளர் யார் என்பதை குறிப்பிடுகிறது. சங்கீதத்தின் தலைப்புகளில் காணப்பட்ட எழுத்தாளர்கள் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.[24]

சங்கீதத்தின் எழுத்தாளர்		
தாவீது	78	சங்கீதம் 1:41; 51-70; 86; 103; 108-110; 122; 124; 131; 133; 138-145
ஆசாப்	12	சங்கீதம் 50; 73-83
கோரா புத்திரர்	12	சங்கீதம் 42-49; 84-85; 87-88
சாலொமோன்	2	சங்கீதம் 72; 127
மோசே	1	சங்கீதம் 90
எத்தான்	1	சங்கீதம் 89
யாரென்று தெரியவில்லை	44	சங்கீதம் 71; 91-102; 104-107; 111-121; 123; 125-126; 128-130; 132; 134-137; 146-150

எபிரெய மொழியில் சங்கீதத்திற்கு ‘‘துதி’’ அல்லது ‘‘துதியின் புத்தகம்’’ என்ற பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரே ஒரு சங்கீதம் (145) மாத்திரம் ‘‘துதி’’ என்ற வார்த்தையால் குறிப்பிடப்படுகிறது. என்றாலும் ‘‘துதி’’ என்பது சங்கீதத்தின் மையமாக இருக்கிறது. சங்கீதங்கள் இசையடன் பாடப்பட்ட பாடல்கள் அல்லது கவிதைகளாகும். ஹுசங்கீதம்து என்ற வார்த்தை எபிரெய வார்த்தையிந்து வந்ததாகும். அதன் அர்த்தம் பாடும்போது வாசிக்கும்படி ஹுவாத்தியக் கருவியை எடுத்தல்.

எழுதப்பட்ட காலம்: ஒரு நீண்ட காலவரையில் விசாலமான வரிசையுடன், வித்தியாசமான வெவ்வேறு மையக் கருத்தில் வெவ்வேறு நிலையில் வாழ்ந்த வெவ்வேறு மக்களின் காலத்தில் பலவிதமான உணர்வுகளையும், அனுபவங்களையும், நிலையையும் சங்கீதம் பிரதிபலிக்கிறது.

சங்கீதம் பிரதிபக்கிறது. இந்த அனுபவங்களும் நிலையும் எந்த நாட்களில் வாழ்பவர்களுக்கும் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. கிளீசன் ஆர்ச்சர் என்பவர் வெவ்வேறு சங்கீதங்களின் காலங்களைக் குறித்து எழுதுகிறார்:

> மோசேயினால் எழுதப்பட்ட 90ஆம் சங்கீதம் இயற்கையாக பழமையான ஒன்றாக இருக்கலாம். இது கி.மு. 1405ல் எழுதப்பட்டிருக்கலாம். கி.மு. 1020–975க்கு இடைப்பட்ட காலத்தில் தாவீதின் சங்கீதம் உருவெடுத்திருக்கலாம். ஆசாபின் சங்கீதங்களும் ஏறத்தாழ அதே காலத்தில் எழுதப்பட்டவைகளாகும் கி.மு. 950–ல் சாலொமோனின் ஆளுகையில் சங்கீதம் 127 உருவாக்கப்பட்டிருக்கலாம். கோரா சந்ததியையும் எஸ்றாவின் இரண்டு சங்கீதங்களின் காலத்தைக் கணிப்பது கடினம். அது ஒருவேளை பிணைக் கைதியாக கொண்டு போவதற்கு முன்பாக இருந்திருக்கலாம். தலைப்பு இல்லாத சங்கீதங்களில் சில சந்தேகம் இல்லாமல் தாவீதினுடையதாக இருக்கிறது (உதாரணமாக 2, 33) மற்ற சங்கீதங்களின் காலம் பிணைக் கைதியாக இருந்து, திரும்பி வந்த காலமாக குறிக்கப்படுகிறது (126, 137). காலங்களை திட்டமாகத் தீர்மானிக்க ஆதாரங்கள் இல்லை. எனினும் கி.மு. 500க்குப் பின்பு இவை எழுதப்பட்டதற்கு, நல்ல ஆதாரங்கள் இல்லை.[25]

மையக்கருத்தும் நோக்கமும்: ஆராதனை என்ற பொதுவான கருப்பொருளில் மூலமாக நம்பிக்கையும் மற்றும் ஆறுதன் செய்தியை சங்கீதம் கொடுக்கிறது. அவைகள் சுருக்கமாக தேவனுடைய தன்மை மற்றும் செயல்களுக்கு தனிப்பட்ட முறையில் உள்ள உறவில் பயம் மற்றும் முறுமுறுப்பிற்கு மாற்று மருந்தாக உள்ளன. இஸ்ரவேலருடைய ஆராதனை, விசுவாசம் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கை, இவைகளின் பிரதிபப்பாக சங்கீதம் இருக்கிறது. தேவனுடைய சமுகம், திட்டம், வாக்குத்தத்தம் தேவனின் தன்மை இவைகளின் வெளிச்சத்தின் பொதுவான மனித அனுபவங்களை பிரதிபக்கும் ஒரு கண்ணாடியாக சங்கீதம் நமக்கு இருக்கிறது.

இந்த 150 சங்கீதங்கள் விதவிதமான கருப்பொருள் மற்றும் சூழ்நிலைகளில் எழுதப்பட்டவை. விதவிதமான உணர்வுகளைச் சித்தரிப்பவையாக காணப்படுகிறது. இதனால், பொதுவான நோக்கத்தையும், பொதுவான மையக் கருத்தையும் குறிப்பது கடினமாக இருக்கிறது. தேவனுடைய கிருபை மற்றும் நன்மைக்கு விசுவாசிகளின் வாழ்க்கையில் எவ்வாறு செயல்படுகின்றன என்பதை அநேகமாக எல்லாச் சங்கீதங்களிலும் காணலாம். சங்கீதக்காரனின் உள்ளான உணர்வின் சோர்வு, கவலை அல்லது துக்கம், துன்பம், நன்றி எதிரிகளை சந்தித்தபோது தேவனுடைய பாதுகாப்பு, இவைகள் யாவும் சங்கீதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. சங்கீதக்காரன் துக்கமாக இருந்தாலும், சந்தோஷமாக இருந்தாலும் ஜீவனுள்ள தேவனுடைய சமுகத்தில் அவன் தன்னையே வெளிப்படுத்துகிறான். சில சங்கீதங்கள் தேவனுடைய வெளிப்பாடுகளையும், எண்ணங்களையும் அடக்கியுள்ளன (சங்கீதம் 2). ஆனாலும் இவை வெகு சில மட்டுமே.[26]

அநேக சங்கீதங்கள் தேவனுடைய குணாதிசயங்களைக் கொண்ட தேவ வார்த்தையை ஆராய்கிறது. மற்றும் சங்கீதங்கள் மேசியாவின் வருகையைக் குறிப்பிடுகிறது.

சங்கீதங்களின் பிரிவு: சங்கீதம் சரியானபடி ஐந்து புத்தகங்களடங்கிய, ஒன்றாக இருக்கிறது. கீழ்க்காணப்படும் ஒவ்வொரு பகுதியும் துதியுடன் முடிவடைகிறது. ஆனால் சங்கீதம் 150 ''துதி'' க்கே முக்கியத்துவம் கொடுத்து, எல்லா புத்தகங்களுக்கும் பொருத்தமான ஒரு முடிவுரையைச் கொடுக்கிறது.

''எபிரெயர்கள் சங்கீதத்தை மற்றொரு பஞ்சாகமமாயிருக்கும்படி ஐந்து புத்தகங்களாகப் பிரித்திருக்கிறார்கள்'' என்று எபிபனியுஸ் கூறினார். ''மோசே இஸ்ரவேல் ஜனங்களுக்கு நியாயப்பிரமானத்தின் ஐந்து புத்தகங்களைக் கொடுத்தார். இதற்கு இணையாக சங்கீதங்களின் புத்தகத்தை தாவீது ஐந்து புத்தகங்களில் கொடுத்தார். முதல் ஐந்து புத்தகமாகிய பஞ்சாகமம் போன்று சங்கீதம் ஐந்து பிரிவுகளைக் கொண்டது.'' [27]

பஞ்சாகமத்துடன் உள்ள தொடர்பை கீழுள்ள சுருக்கக் குறிப்பில் காணலாம்:[28]

1. மனிதனை குறித்தும் சிருஷ்டிப்பைக் குறித்தும் உள்ள சங்கீதங்கள் (1–41) – ஆதியாகமத்திற்கு ஒத்து இருக்கிறது
2. இஸ்ரவேலைக் குறித்தும் அவர்களுடைய மீட்பைக் குறித்தும் உள்ள சங்கீதங்கள் (42–72) –யாத்திராகமத்திற்கு ஒத்து இருக்கிறது
3. ஆராதனையைக் குறித்தும் தேவாலயத்தைக் குறித்தும் உள்ள சங்கீதங்கள் (73–89) – லேவியராகமத்திற்கு ஒத்து இருக்கிறது
4. பூமியில் நம்முடைய பயணங்களை குறித்துள்ள சங்கீதங்கள் (90–106) – எண்ணாகமத்திற்கு ஒத்து இருக்கிறது
5. துதித்தலையும் தேவ வார்த்தையைக் குறித்தும் உள்ள சங்கீதங்கள் (107–150) –உபாகமத்திற்கு ஒத்து இருக்கிறது

வேறொரு முறையில் இந்தப் பிரிவுகள்:

புத்தகம்	சங்கீதம்	எழுதியவர்	பொதுவான உள்ளடக்கம்
I	சங்கீதம் 1–41	தாவீது	ஆராதனைப் பாடல்கள்
II	சங்கீதம் 42–72	தாவீது பெயர் கோரா	விண்ணப்ப ராகங்கள்
III	சங்கீதம் 73–89	முக்கியமாக ஆசாப்	விண்ணப்ப ராகங்கள்
IV	சங்கீதம் 90–106	முக்கியமாக பெயரில்லாதவர்கள்	துதியின் பாடல்கள்
V	சங்கீதம் 106–150	தாவீதும் பெயர் குறிப்பிடப்படாதவர்கள்	துதியின் பாடல்கள்

சங்கீதத்தின் வகைகள்: பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கீதத்தின் வகைகளை கீழே காணலாம்:

1. **புலம்பல் (துக்கம்)** அல்லது **விண்ணப்பம்** : தனியாகவோ (சங்கீதம் 3) அல்லது சமூகத்தினராகவோ (சங்கீதம் 44).
2. **நன்றி** அல்லது **துதித்தல்**; தனியாகவோ (சங்கீதம் 30) அல்லது குழுவாகவோ (சங்கீதம் 65) இருக்கிறது.
3. **கடவுள் மேல் நம்பிக்கை** (சங்கீதம் 4)
4. **யெகோவாவை உயர்த்தும் சிங்காசன** சங்கீதம் : எருசலேமைக் குறித்த சங்கீதம் (சங்கீதம் 48) அரச குடும்ப சங்கீதம் அவற்றில் சில மேசியாவைப் பற்றியது (2, 110)
5. **போதக** மற்றும் **ஞானப்பாட்டுக்கள்** (சங்கீதம் 1, 37, 119)
6. **மையக்கருத்துக்களுள்ள** சங்கீதங்கள்: இந்த சங்கீதங்கள் அவைகளின் சிறப்பான மையக்கருத்தைக் கொண்டு வகுப்பு வாரியாக பிரிக்கப்படலாம். படைப்பு பற்றிய சங்கீதங்கள் (சங்கீதம் 8, 19). இயற்கை சங்கீதங்கள் (சங்கீதம் 19, 104) ஞாபகார்த்த சங்கீதங்கள்(சங்கீதம் 111, 112, 119), பிரயாண சங்கீதங்கள் (சங்கீதம் 78), மனந்திரும்புதல் பற்றிய சங்கீதங்கள் (சங்கீதம் 6), புனித யாத்திரை சங்கீதங்கள் (120), மேசியா சங்கீதங்கள் இவைகள் மேசியாவின் தீர்க்கதரிசனங்களைக் குறிப்பவையும் 2, 8, 16, 22, 40, 45, 72, 110, 118.

முக்கிய நபர்கள்: சில வேளையில் பாடன் தலைப்பு தாவீது மற்றும் கோராவின் புத்திரரைப் போல எழுதியவர் மற்றும் பாடன் பொருளை குறித்தாலும், சங்கீதத்தின் உள்ளடக்கம் அதைக் குறிப்பிடவில்லை. தேவனுடைய மக்களின் ஆராதனையும், தேவனோடு அவர்கள் நடப்பதையும் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது.

சங்கீதத்தில் கிறிஸ்து: அநேக சங்கீதங்கள் மேசியாவைப் பற்றியும் கிறிஸ்துவின் ஆள்தத்துவம் மற்றும் வேலை ஆகியவற்றைப் பற்றிப் பேசுவதாகவும் உள்ளன. அவைகள் கீழே உள்ள பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன:

1. **மேசியாவை எடுத்துக்காட்டும் சங்கீதம்:** இந்த சங்கீதங்கள் மேசியாவைப்பற்றிய குறைந்த காரியங்களைக் கூறுகின்றன. சில சமயங்களில் சங்கீதக்காரன் சில காரியங்களில் இயேசுவுக்கு மாதிரியாக இருப்பதைக் காணலாம் (34:20, 69:4, 9). மற்ற காரியங்கள் மேசியாவுக்குப் பொருந்தாதவைகளாயிருக்கும். இதில் இயேசுவும் அப்போஸ்தலர்களும் தங்களுடைய அனுபவங்களுக்கு சங்கீதங்களை கூறினர். (உதாரணம். 109:8, அப்போஸ்தலர் 1:20)
2. **மாதிரி – தீர்க்கதரிசன சங்கீதம்:** சங்கீதக்காரன், தன் அனுபவங்களை விளக்கினாலும், அவைகள் அவனுடைய வாழ்க்கைக்கு அப்பால் சென்று, கிறிஸ்துவின் வாழ்வில் நடந்தவற்றில் நிறைவேறுகிறது. (சங்கீதம் 22).
3. **மறைமுக மேசியா சங்கீதம்:** சங்கீதக்காரன் இவைகளை எழுதும்பொழுது அது தாவீதின் வீட்டையும் அல்லது குறிப்பிட்ட ஒரு அரசனைக் குறித்தாலும், கடைசியாக இயேசு கிறிஸ்துவில் மாத்திரம் நிறைவேறுவதாக இருக்கிறது (2, 45, 72).
4. **நேரடியான தீர்க்கதரிசன சங்கீதம்:** இது நேரடியாக கிறிஸ்துவைக் குறிப்பிடுகிறது; தாவீதைக் குறித்தோ வேறு யாரையோ குறிக்கப்படாமல் இயேசுவை நேரடியாகக் குறிக்கிறது. (110)
5. **சிங்காசன சங்கீதம்:** மேசியாவின் வரவை எதிர்பார்த்தும், அவர் நிறுவப்போகும் இராஜ்யத்தைப் பற்றியும் உள்ளவை இவை கிறிஸ்துவாகிய மேசியாவில் நிறைவேறியது (96-99).

குறிப்பாக இயேசுவில் நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்:

தீர்க்கதரிசனம்	சங்கீதம்	புதிய ஏற்பாட்டு பர்ங்திகள்
1. பிறப்பு	104:4	எபிரெயர் 1:7
2. அவமானம்	8:4	எபிரெயர் 2:6
3. தெய்வீகம்	45:6	எபிரெயர் 1:8
4. ஊழியம்	69:9	யோவான் 2:17
5. புறக்கணிப்பு	118:22	மத்தேயு 21:42
6. காட்டிக் கொடுத்தல்	41:9	யோவான் 13:18
7. சிலுவையில் ஏற்பட்டவை	22	மத்தேயு 27:39, 43, 46; லூக்கா 23:35
8. உயிர்த்தெழுதல்	2 மற்றும் 16	அப்போஸ்தலர் 2:27
9. பரமேறுதல்	68:18	எபேசியர் 4:8
10. ஆளுகை	102:26	எபிரெயர் 1:11

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **புத்தகம் I: ஆராதனை சங்கீதம் (சங்கீதம் 1-41)**

சங்கீதம்	1:	ஆசீர்வதிக்கப்பட்ட மனிதன் இரண்டு மாறுபாடான வாழ்க்கை – தேவனுடைய வார்த்தையும், உலகமும்
சங்கீதம்	2:	மேசியா ராஜா: தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் எதிரான திட்டம்
சங்கீதம்	3:	துன்பத்தின் இடையில், அமைதி; ஆபத்தில் பாதுகாப்பு
சங்கீதம்	4:	தேவன் மேலுள்ள நம்பிக்கை குறித்து மாலைப் பிரார்த்தனை
சங்கீதம்	5:	தேவ சமுகத்தில் நம்பிக்கை வைத்து காலை விண்ணப்பம்
சங்கீதம்	6:	அதிக துக்கத்திலுள்ள ஆத்துமாவின் விண்ணப்பம்
சங்கீதம்	7:	பாதுகாப்புக்காக விண்ணப்பம்
சங்கீதம்	8:	சிருஷ்டிகரின் மகத்துவமும் மனிதனின் மதிப்பும்
சங்கீதம்	9:	தேவனுடைய நீதிக்காக நன்றி கூறும் ஜெபம்

சங்கீதம் 10: துன்மார்க்கன் வீழ்வதற்காக விண்ணப்பம்
சங்கீதம் 11: அடைக்கலமாகவும், பாதுகாப்புமாகவும் தேவன்
சங்கீதம் 12: பொய் நாவுக்கு எதிராக உதவி கேட்டு ஜெபம்
சங்கீதம் 13: துன்பத்தில் உதவிக்காக விண்ணப்பம்
சங்கீதம் 14: மூடனையும் துன்மார்க்கனையும் குறித்து விளக்கம்
சங்கீதம் 15: தேவபக்தியுடைய ஒருவரைப் பற்றிய விளக்கம்
சங்கீதம் 16: பரிசுத்தவான்களின் அடைக்கலமாக தேவன் இருக்கிறார்
சங்கீதம் 17: தேவனுடைய நீதியின் மூலம் விடுதலைக்கு விண்ணப்பம்
சங்கீதம் 18: விடுதலைக்காக துதியின் விண்ணப்பம்
சங்கீதம் 19: தேவனுடைய சிருஷ்டிப்பிலும் தேவனுடைய வார்த்தையிலும் தேவனுடைய வெளிப்பாடு
சங்கீதம் 20: பகைவர்கள் மேல் வெற்றிகொள்ள விண்ணப்பம்
சங்கீதம் 21: அரசனின் பலமாக தேவன் இருக்கிறார்
சங்கீதம் 22: சிலுவையின் சித்திரம்: துன்பம் மற்றும் துதித்தன் சங்கீதம்
சங்கீதம் 23: தெய்வீக மேய்ப்பனின் சித்திரம், தேவ நன்மையின் சங்கீதம்
சங்கீதம் 24: மகத்துவமுள்ள ராஜாவின் சங்கீதம்
சங்கீதம் 25: விடுதலைக்கும், வழிகாட்டுதலுக்கும் மன்னிப்புக்கும் பிரார்த்தனை
சங்கீதம் 26: நேர்மைக்காகவும் விடுதலைக்காகவும் வேண்டுகோள்
சங்கீதம் 27: பயமின்றி தேவன்மேல் நம்பிக்கையின் ஜெபம்
சங்கீதம் 28: உதவிக்காக விண்ணப்பம் மற்றும் அதன் பதிலுக்காக துதி - தேவன் என் கன்மலை
சங்கீதம் 29 : தேவனுடைய வல்லமையான சத்தம்
சங்கீதம் 30: தக்க சமயத்தில் தேவன் உதவி செய்வதற்காக நன்றியின் ஜெபம்
சங்கீதம் 31: வேண்டுதல், புகார் மற்றும் துதியின் ஜெபம்
சங்கீதம் 32: மன்னிப்பின் ஆசீர்வாதமும், தேவனில் நம்பிக்கையும்
சங்கீதம் 33: இரட்சிப்பவராகவும், சிருஷ்டிகராகவும் இருக்கிற தேவனைத் துதித்தல்
சங்கீதம் 34: இரட்சகராகவும், தேவைகளைச் சந்திக்கிறவராகவும் இருக்கிற தேவனைத் துதித்தல்
சங்கீதம் 35: நீதிக்காக வேண்டுதல் மேலும் எதிரியிடமிருந்து மீட்க வேண்டுதல்
சங்கீதம் 36: தயவுள்ள தேவனின் அன்பும், மனித துன்மார்க்கமும் முரண்படுகிறது
சங்கீதம் 37: தேவனில் ஓய்வுக்காக வேண்டுகோள்
சங்கீதம் 38: பாவத்தின் பாரத்தை உணர்ந்து, மன்னித்து சேர்த்துக் கொள்ள விண்ணப்பம்
சங்கீதம் 39: மனிதனின் வலுவின்மையை அறிந்து விண்ணப்பம்
சங்கீதம் 40: இரட்சிப்பின் மகிழ்ச்சியான அனுபவத்திற்காகவும் எதிர்ப்பார்ப்பிற்காகவும் துதித்தல்
சங்கீதம் 41: எதிர்ப்பின் மத்தியில், தேவனுடைய ஆசீர்வாதத்திற்காக துதித்தல்

2. **புத்தகம் II: விண்ணப்ப சங்கீதங்கள் (சங்கீதம் 42-72)**

சங்கீதம் 42-43: தேவனுக்காக வாஞ்சித்தலும் தேவனுடைய இரட்சிப்பில் நம்பிக்கையாக இருத்தலும்
சங்கீதம் 44: தேசத்தின் துக்கமும் விடுதலைக்கான விண்ணப்பமும்
சங்கீதம் 45: தாவீதின் ஒரு குமாரனின் திருமணப் பாடல்
சங்கீதம் 46: தேவன் நம்முடைய அடைக்கலமும் பெலனுமாக இருக்கிறார்
சங்கீதம் 47: தேவன் ஜெயம்கொள்கிற ராஜாவாக இருக்கிறார்
சங்கீதம் 48: சீயோன் மலைக்காக, அழகான நகரத்துக்காக துதித்தல்
சங்கீதம் 49: ஞானமில்லாத செல்வம் ஒன்றுமில்லை
சங்கீதம் 50: நன்றிகூறுதன் ப
சங்கீதம் 51: பாவ அறிக்கையும் மன்னிப்பும்
சங்கீதம் 52: இறுமாப்போடுள்ள தீமையினால் பயனில்லாமை
சங்கீதம் 53: தேவன் இல்லை என்பவனின் சித்திரம்
சங்கீதம் 54: நம்முடைய உதவி தேவனிடத்தில் இருக்கிறது
சங்கீதம் 55: தேவன் நீதிமானைத் தாங்குகிறார்
சங்கீதம் 56: நம்முடைய பயத்தின் மத்தியிலும் நம்பிக்கை
சங்கீதம் 57: தனிமையிலும் தேவனை உயர்த்துதல்
சங்கீதம் 58: நீதிமானுக்கு நிச்சமாய் பரிசளிக்கப்படும்
சங்கீதம் 59: எதிரியினிடமிருந்து விடுதலைக்காக விண்ணப்பம்
சங்கீதம் 60: தேசத்தின் விடுதலைக்காக விண்ணப்பம்
சங்கீதம் 61: தொய்ந்துபோன இதயத்திருந்து வேண்டுதல்
சங்கீதம் 62: தேவனுக்குக் காத்திருத்தல்
சங்கீதம் 63: தேவனுடைய அன்புக்காக தாகம்
சங்கீதம் 64: பாதுகாப்பிற்கான விண்ணப்பம்
சங்கீதம் 65: உலகின்பாலும் மனுஷன்மேலும் தேவனுக்கிருக்கும் தயாளம்
சங்கீதம் 66: தேவன் நமக்காக செய்தவைகளை நினைவுகூறுதல்
சங்கீதம் 67: எல்லோரையும் தேவனைத் துதிக்க அழைப்பு

சங்கீதம் 68: அடிமைப்படுத்தப்படுபவர்களுக்கு தேவன் தந்தையாக இருத்தல்
சங்கீதம் 69: தேவனுடைய மனதுருக்கத்தின்படி விடுதலைக்கான விண்ணப்பம்
சங்கீதம் 70: ஏழைகளுக்காகவும் திக்கற்றவர்களுக்காகவும் விண்ணப்பம்
சங்கீதம் 71: வயதானவர்களுக்காக விண்ணப்பம்
சங்கீதம் 72: மேசியாவின் மகத்தான ஆளுகை

3. **புத்தகம் III: விண்ணப்பச் சங்கீதங்கள் (சங்கீதம் 73–89)**

சங்கீதம் 73: நித்திய நோக்குக்கான விண்ணப்பம்
சங்கீதம் 74: தேசம் துன்பத்திருக்கும்போது உதவிக்காக மன்றாடுதல்
சங்கீதம் 75: நீதி கர்த்தருடையது
சங்கீதம் 76: யாக்கோபின் தேவன் வெற்றிகொள்ளும் வல்லமையுடையவர்
சங்கீதம் 77: துன்ப நாட்களில், தேவனுடைய வல்லமையை நினை
சங்கீதம் 78: இஸ்ரவேல் சரித்திரத்திருந்து பாடம்
சங்கீதம் 79: தேவனுடைய மேய்ச்சன் ஆடுகளை தேவன் நினைவுகூரும்படி விண்ணப்பம்
சங்கீதம் 80: கடவுளின் தயைக்காக இஸ்ரவேன் வேண்டுகோள்
சங்கீதம் 81: தேவனுக்குச் செவிகொடுக்க இஸ்ரவேலருக்கு வேண்டுகோள்
சங்கீதம் 82: நீதியில்லாத நீதிபதிகளைக் கண்டித்தல்
சங்கீதம் 83: இஸ்ரவேலருடைய எதிரிகளை நியாயந்தீர்க்க வேண்டுதல்
சங்கீதம் 84: தேவ சமுகத்திற்காக அதிகமான வாஞ்சை
சங்கீதம் 85: எழுச்சிக்காக வேண்டுதல்
சங்கீதம் 86: தேசத்தின் மேல் தயைகூரும்படி வேண்டுதல்
சங்கீதம் 87: சியோனில் வாழ்வதின் மகிழ்ச்சியை வெளிப்படுத்தல்
சங்கீதம் 88: நம்பிக்கையில்லா இருள் சூழ்ந்த நேரத்தில் வேண்டுதல்
சங்கீதம் 89: துன்பத்தில் தேவனுடைய வாக்குத்தத்தையும், ஆளத்துவத்தையும் உரிமை கொண்டாடுதல்

4. **புத்தகம் IV: துதியின் பாடல்கள் (சங்கீதம் 90–106)**

சங்கீதம் 90: எங்களுடைய நாட்களைக் கணக்கிட எங்களுக்கும் கற்றுத் தாரும்
சங்கீதம் 91: உன்னதமானவருடைய கூடாரத்தில்
சங்கீதம் 92: தேவ துதியில்
சங்கீதம் 93: யெகோவா மகிமையாக ஆளுகை செய்கிறார்
சங்கீதம் 94: பூமியின் நியாயாதிபதி யெகோவாவாக இருக்கிறார்; பழிவாங்குதல் அவருக்குறியது
சங்கீதம் 95: நம்மைப் படைத்தவருக்கு முன்பாக முழங்காடுவோம்; ஆராதனைக்கு ஓர் அழைப்பு
சங்கீதம் 96: உலகத்தை நீதியாய் நியாயந்தீர்க்கிற தேவனை ஆராதித்தல்
சங்கீதம் 97: மகிழ்ச்சியாயிருப்போம் – தேவன் ஆளுகை செய்கிறார்
சங்கீதம் 98: தேவனுக்குப் புதுப்பாடலைப் பாடுங்கள்
சங்கீதம் 99: ஆளுகை செய்யும் தேவனை மகிமைப்படுத்துங்கள்
சங்கீதம் 100: மகிழ்ச்சியோடு தேவனுக்கு ஊழியம் செய்யுங்கள். அவர் தேவனாக இருக்கிறார். அவர் நல்லவர்
சங்கீதம் 101: பரிசுத்த வாழ்க்கைக்கு அர்ப்பணிப்பு
சங்கீதம் 102: தாழ்த்தப்பட்ட பரிசுத்தவான்களின் வேண்டுதல்
சங்கீதம் 103: தேவனைப் போற்றுங்கள்; அவருடைய மனதுருக்கம் ஒருபோதும் ஒழிவதில்லை
சங்கீதம் 104: எல்லா சிருஷ்டிகளையும் தேவன் காக்கிறார்
சங்கீதம் 105: இரட்சிப்பின் சரித்திரத்தில் தேவனுடைய உண்மையின் செயல்கள்
சங்கீதம் 106: யெகோவாவின் அன்பை நினைவுகூருதலும் இஸ்ரவேலரின் கீழ்ப்படியாமையும்

5. **புத்தகம் V: துதியின் பாடல்கள் (சங்கீதம் 107–150)**

சங்கீதம் 107: பலவித துன்பங்களிருந்து தேவனுடைய இரட்சிப்புக்காகத் துதித்தல்
சங்கீதம் 108: ஜெயத்திற்காக துதித்தலும், வேண்டுதலும்
சங்கீதம் 109: நியாயஞ்செய்ய வேண்டுதல்; எதிரியை நியாயம் விசாரிக்க வேண்டுதல்
சங்கீதம் 110: யுத்தத்தில் வல்லவராகவும், அரசராகவும், ஆசாரியராகவும் மேசியாவைச் சித்தரித்தல்
சங்கீதம் 111: தேவனின் உண்மையைக் கொண்டாடுதல்
சங்கீதம் 112: விசுவாசத்தின் வெற்றிவாகை
சங்கீதம் 113: தாழ்மையுள்ளவர்களிடத்துக்கு வந்த உன்னதமான தேவனைத் துதித்தல்
சங்கீதம் 114: யாத்திரைக்காக துதித்தல்
சங்கீதம் 115: செயழந்த விக்கிரகமும், தேவனின் மகத்துவமும்
சங்கீதம் 116: தேவன் தந்த விடுதலைக்காக துதித்தல்
சங்கீதம் 117: எல்லா ஜனங்களின் துதி
சங்கீதம் 118: தேவன் நம்மைக் காக்கும் நன்மைக்காக
சங்கீதம் 119: வேதத்திற்காக துதிசெலுத்தல்
சங்கீதம் 120: தவறாகப் பேசுபவர்களிடமிருந்து மீட்பிற்காக வேண்டுதல்

சங்கீதம்	121:	தேவன் என் பாதுகாவலர்
சங்கீதம்	122:	எருசலேமின் சமாதானத்திற்காக வேண்டுதல்
சங்கீதம்	123:	தயவுக்காக வேண்டுகோள்
சங்கீதம்	124:	நமக்கு உதவி செய்பவர் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர்
சங்கீதம்	125:	இஸ்ரவேல் சமாதானம் இருக்கட்டும்
சங்கீதம்	126:	பழைய நிலைக்கு கொண்டுவந்ததற்கு துதித்தல்
சங்கீதம்	127:	குழந்தைகளுக்காக துதி : அவர்கள் தேவன் தந்த ஈவு
சங்கீதம்	128:	தேவனால் குடும்பம் ஒரு ஆசீர்வதிக்கப்படல்
சங்கீதம்	129:	துன்பத்திலுள்ளோரின் ஜெபம்
சங்கீதம்	130:	தேவனுடைய மீட்பிற்காகக் காத்திருத்தல்
சங்கீதம்	131:	தேவன்மேல் சிறுபிள்ளை போல் நம்பிக்கை வைத்திருப்பது
சங்கீதம்	132:	சீயோன் மலையின் மேல் தேவ ஆசீர்வாதத்திற்காக வேண்டுதல்
சங்கீதம்	133:	சகோதர ஒற்றுமையினுடைய ஆசீர்வாதம்
சங்கீதம்	134:	இரவில் கடவுளைத் துதித்தல்
சங்கீதம்	135:	கடவுளின் அற்புத செயலுக்காகத் துதித்தல்
சங்கீதம்	136:	என்றைக்கும் நீடித்திருக்கிற தேவனுடைய தயைக்காகத் துதித்தல்
சங்கீதம்	137:	சிறைப்பிடித்ததற்காக கண்ணீர் சிந்துதல்
சங்கீதம்	138:	தேவன் ஜெபத்தைக் கேட்கிறார்; மேலும் தாழ்மையுள்ளவர்களை விடுவிக்கிறார்
சங்கீதம்	139:	தேவன் என்னை அறிந்திருக்கிறார்
சங்கீதம்	140:	விடுதலைக்காக வேண்டுதல்; நீரே என் தேவன்
சங்கீதம்	141:	என்னுடைய ஜெபம் ஒரு தூபமாக இருப்பதாக
சங்கீதம்	142:	என்னை தேவன் மட்டுமே காக்கின்றார்; அவரே என்னுடைய பகுதியாய் இருக்கிறார்
சங்கீதம்	143:	வழிநடத்துதலுக்காக வேண்டுதல். சமாதானத்தில் என்னை வழிநடத்தும்
சங்கீதம்	144:	தேவன் என் கன்மலையும் என் யுத்த வீரரும்
சங்கீதம்	145:	தேவனுடைய வல்லமைக்காகவும் அவரின் அற்புத செயலுக்காகவும் துதித்தல்
சங்கீதம்	146:	மிக்க உதவி செய்பவரைத் துதிப்போம்
சங்கீதம்	147:	நொருங்குண்ட இதயத்தை சுகமாக்குகின்ற தேவனைத் துதிப்போம்
சங்கீதம்	148:	ஞானமான சிருஷ்டிகரான தேவனைத் துதிப்போம்
சங்கீதம்	149:	தன்னுடைய ஜனத்தில் மகிழ்ந்திருக்கிற தேவனைத் துதிப்போம்
சங்கீதம்	150:	தேவனைத் துதிப்போம்

நீதிமொழிகள்
(கட்டளையின் வழியாய் ஞானம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: 1 ராஜாக்கள் 4:32ன்படி, சாலொமோன் 3,000 நீதிமொழிகள் கூறினான். மேலும் 1,005 பாடல்களைப் பாடினான். அநேக நீதிமொழிகளை இந்த புத்தகத்தில் சாலொமோன் எழுதினாலும், இந்த புத்தகத்தின் பிந்தைய அதிகாரங்கள் இப்புத்தகத்தை சாலொமோன் மாத்திரம் எழுதவில்லை என்று காட்டுகிறது. நீதிமொழியின் மூன்று பாகங்கள் சாலொமோன் எழுதியவை: அதிகாரம் 1:1-9:18; 10:1-22:16 மேலும் 25:1-29:27. இருந்தபோதும் நீதிமொழியின் பிந்தைய பாகம் (25:1-29:27). சாலொமோனால் எசேக்கியா ராஜாவின் குழுவிருந்து (25:1) தேர்வு செய்யப்பட்டது. நீதிமொழிகள் 22:17 "ஞானிகளின் வார்த்தைடுயைக் ஹுகுறிப்பிடுகிற." மேலும் 24:23 கூடுதலாக ஹுஞானியின் வார்த்தைடு எனக் குறிப்பிடுகிறது. நீதிமொழிகள் 22:17-21 சாலொமோனிடமிருந்து மாத்திரமல்லாமல், ஞானிகளின் வட்டத்திருந்து இந்த பகுதிகள் வந்ததாக கூறுகிறது. 30ஆம் அதிகாரம் யாக்கோபின் குமாரன் ஆகூர் எழுதியது. மேலும் 31:1-9 லெமுவேல் அரசன் எழுதியது.

(நீதிமொழிகளின் புத்தகம் அதன் பெயரை அதில் உள்ளவற்றிருந்து பெறுகிறது. சிறிய வாக்கியம் அல்லது உண்மையை இரத்தினச்சுருக்கமாகக் கூறும் கொள்கைகள்.) நீதிமொழிகள் என்ற எபிரெய வார்த்தையின் அர்த்தம் "இணை"து"ஒரே மாதிரியான" அல்லது "ஒரு ஒப்பீடு", நற்பண்புகளை ஒப்புமைப்படுத்துவதை இது குறிப்பிடுகிறது. ஒரே மாதிரியான எண்ணங்களை மட்டும் ஒப்பிடுவதன்றி இல்லாமல் எதிரிடை எண்ணங்களையும் இது ஒப்பிடுகிறது.

ஒரு மனிதன் ஞானமாய் வாழ வடிவமைக்கப்பட்ட நற்பண்புகள் மற்றும் ஆத்மீக போதனைகளின் சுருக்கமாகவும் இந்தப் புத்தகத்தின் தலைப்பு இருக்கிறது.

எழுதப்பட்ட காலம் : கி.மு. 950-700: சாலொமோனின் நீதிமொழிகள் அவன் மரணத்துக்கு (கி.மு. 931) முன்னதாக எழுதப்பட்டிருக்கிறது. மற்றவைகள் எசேக்கியாவின் வேதபண்டிதர்களால் ஏறத்தாழ கி.மு. 700ல் சேர்க்கப்பட்டது.

மையக் கருத்தும் நோக்கமும்: புத்தகத்தின் பெயரும் ஹுநீதிமொழிகள்டு என்ற வார்த்தையின் அர்த்தம் கூறுகிறபடி, வாழ்வதற்கேற்ற ஞானத்தைக் கொடுப்பதே இந்த புத்தகத்தின் மையக் கருத்தும் நோக்கமாகவும் இருக்கிறது. வாழ்க்கையில் ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு

சிறப்புப் போதனையை நீதிமொழிகள் கொடுக்கிறது. அவைகள்: பாவம், நன்மை, சொத்து, ஏழ்மை, நாவு, பெருமை, தாழ்மை, நீதி, (குடும்பம், பெறறோர், குழந்தைகள், ஒழுக்கம்), பழிவாங்குதல், கலகம், பெருந்தீனி, அன்பு, சோம்பல், நண்பர்கள், வாழ்க்கை, மற்றும் மரணம், நீதிமொழிகளை காட்டிலும் வேறு எந்த புத்தகமும் நடைமுறையில் செயல்படுத்தக்கூடிய போதனைகளைக் கொண்டதல்ல.

கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் (1:7) என்பது அடிப்படை மையக் கருத்தாக இருக்கிறது. தேவனுக்கு பயமின்மை ஒரு புத்தியீனமான வாழ்க்கைக்கு வழிநடத்துகிறது. தேவனுக்குப் பயப்படுகிற பயம் என்பது, தேவனுடைய தூய்மையான குணத்தையும், வல்லமையையும் கண்டு பயபக்தியாய் இருப்பதே. அதே சமயத்தில், ஒரு உண்மையான ஞானம் தேவனுக்கு பயந்து நடக்கும் வழியைக் காட்டுகிறது (2:1-5).

முக்கிய நபர்கள் : நீதிமொழிகள் ஒவ்வொருவருக்காகவும் எழுதப்பட்டது. எனவே தனிப்பட்ட ஆட்கள் குறிப்பிடபடவில்லை.

நீதிமொழிகளில் கிறிஸ்து: அதிகாரம் 8ல் ஞானம் ஒரு மனிதனைப் போல் சித்தரிக்கப்படுகிறது. (அது தெய்வீகமாயிருக்கிறது. (8:2231), இது சரீர மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கையின் ஆதாரமாயிருக்கிறது (3:18; 8:35-36), இது நீதி மற்றும் நற்பண்புடையது (8:8-9) மேலும் பெற்றுக்கொள்ளும் யாவருக்கும் ஆயத்தமாயிருக்கிறது (8:1-6, 32-35). அதில் பரிபூரணத்தையும் பார்க்க முடியும். இந்த ஞானம் மாம்சத்தில் கிறிஸ்துவின் வடிவில் வந்தது. ***"அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது"*** (கொலோசெயர் 2:3). ***"நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்"*** (1 கொரிந்தியர் 1:30 மேலும் பார்க்க, 1 கொரிந்தியர் 1:22-24).[29]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை: நீதிமொழிகளின் நோக்கம் (1:1-7)**

2. **ஞானமான கட்டளைகள்: வாபருக்கு நீதிமொழிகள் (1:8-9:18)**
   a. பெற்றோருக்குக் கீழ்ப்படிதல் (1:8-9)
   b. கெட்ட நண்பர்களைத் தவிர்த்தல் (1:10-19)
   c. ஞானத்தின் அழைப்பிற்கும், ஞானத்தின் ஆலோசனைக்கும் செவிகொடுத்தல் (1:20-33)
   d. பரஸ்திரீயைத் தவிர்த்தல் (2:1-22)
   e. தேவனை நம்பு. தேவனை உயர்த்து (3:1-12)
   f. ஞானத்தால் வரும் ஆசீர்வாதங்கள் (3:13-20)
   g. பிறரிடம் இரக்கமாயிருக்கவும். தாராளமாகவும் இருத்தல் (3:21-35)
   h. ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுதல் (4:1-9)
   i. கெட்ட நண்பர்களைத் தவிர்த்தல் (4:10-19)
   j. எல்லாவற்றிற்கும் மேலாக இருதயத்தைக் காத்துக்கொள்ளல் (4:20-27)
   k. விபசாரம் செய்யாதே (5:1-14)
   l. உன்னுடைய வாழ்க்கைக்கு துணைக்கு உண்மையாக இரு (5:15-23)
   m. மற்றவர்களுக்காக பிணைபடுவதைத் தவிர்த்துவிடு (6:1-5)
   n. சோம்பலை நீக்கு (6:6-19)
   o. விபசாரத்தை தவிர்க்க வேண்டும் (6:20-35)
   p. வேசியிடம் செல்லக்கூடாது (7:1-27)
   q. ஞானமும் புத்தியினமும் : வேறுபாடு (8:1-9:18)

3. **சாலொமோனின் நீதிமொழிகள் (10:1-24:34)**
   a. நீதிமொழிகள் தேவபக்தியுள்ளவனுக்கும் துன்மார்க்கனுக்கும் உள்ளவேறுபாட்டைக் கூறுகிறது. (10:1-15:33)
   b. நீதிமொழிகள் பக்தியான வாழ்க்கைக்கு உற்சாகமூட்டுகிறது (16:1-22:16)
   c. நீதிமொழிகள் பலவிதமான காரியங்களைக் குறித்து (22:17-23:35)
   d. நீதிமொழிகள் பலதரப்பு மக்களைக் குறித்து (24:1-34)

4. **எசேக்கியாவின் மனிதர்கள் எடுத்து எழுதிய சாலமோனின் நீதிமொழிகள் (25:1-29:27)**
   a. நீதிமொழிகள் மற்றவர்களில் உள்ள தொடர்பைக் குறித்து (25:1-26:28)
   b. நீதிமொழிகள் - செயல்களைக் குறித்து (27:1-29:27)

5. **ஆகூரின் வார்த்தைகள் (30:1-33)**
   a. சொந்த, தனிப்பட்ட வார்த்தைகள் (30:1-14)
   b. எண்ணிக்கை நீதிமொழிகள் (30:15-33)

6. **லேமுவேன் வார்த்தைகள் (31:1-9)**

7. **திறமையுள்ள மனைவி (31:10-31)**

பிரசங்கி
(நடைமுறை உண்மையின் மூலம் சத்தியம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: இரண்டு விதமான ஆதாரங்கள் (உட்புறம், வெளிப்புறம்) சாலொமோன் பிரசங்கி புத்தகத்தை எழுதியதாகக் குறிப்பிடுகிறது. வெளிப்புற ஆதாரமாக, யூத மரபு சாலொமோன் இதை எழுதியதாகக் கூறுகிறது. உட்புறத்தில் அநேக வரிகள் தீர்க்கமாய் சாலொமோனை எழுதியவாராகக் காண்பிக்கிறது. முதல் எழுதியவர் தன்னை ***"தாவீதின் குமாரன் எருசலேமின் ராஜா"*** (1:1) என குறிப்பிடுகிறார். இந்தப் புத்தகத்தில் உள்ள தகவல் குறிப்புகள் எழுதியவர் அதிக ஞானம் உள்ளவர் (1:16). அளவுக்கு மீறின சொத்து உடையவர் (2:7), அனுபவிக்க வாய்ப்புள்ளவர் (2:3) மற்றும் பெரிய கட்டிட வேலைகள் செய்தவர் (2:4-6) என்று கூறுவ தால் இதை எழுதியவர் சாலொமோன் என குறிப்பிடுகிறது. தாவீதின் வேறு எந்த ஒரு வம்சாவழி மனிதனும் இந்த அளவுக்கு சிறப்புப் பெற்றிருக்கவில்லை.

செப்துவஜிந்திருந்து பிரசங்கி என்ற பெயர் வந்தது. இந்த கிரேக்க வார்த்தையின் அர்த்தம் சபையாகும். எபிரெய தலைப்பின் அர்த்தம் "சபையில் பிரசங்கிக்கிறவர் மற்றும் பேசுகிறவர்" அல்லது பிரசங்கிப்பவர் என்பதாகும்.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 931. யூத மரபுப்படி இளைஞனாயிருந்தபோது சாலொமோன் ஒரு வாபனின் காதலை வெளிப்படுத்தி, உன்னதப்பாட்டை எழுதினான். முதிர்ச்சியடைந்த நடுவயது மனிதனாக ஞானத்தை வெளிப்படுத்தி, நீதிமொழிகளை எழுதினான். ஒரு வயது மனிதனின் துக்கத்தை வெளிப்படுத்தி, சாலொமோன் தன் கடைசி காலத்தில் பிரசங்கி புத்தகத்தை எழுதினான் (12:1). 1 இராஜாக்கள் 1:11ல் வாசிக்கும் அவரது தவற்றிருந்து மனம் திரும்பி வருந்துவதை ஒருவேளை பிரசங்கி புத்தகத்தில் எழுதியிருக்கலாம். எனவே இந்த புத்தகம் சாலமோனின் மரணத்துக்கு மற்றும் கி.மு. 931ல் அவனுடைய இராஜ்யம் பிரிவதற்கு சற்று முன்னதாக எழுதப்பட்டிருக்கலாம்.[30]

மையக்கருத்தும் நோக்கமும்: தேவனிடத்திருந்து பிரிந்த வாழ்க்கை அர்த்தமில்லாதது என்பதே அடிப்படை மையக்கருத்தாக இருக்கிறது. இந்த மையக் கருத்து நான்கு முக்கிய நோக்கங்களை வெளிப்படுத்துகிறது.

முதலாவது, தேவன் இல்லாத மனித வாழ்க்கை அர்த்தமற்றது என்பதை வெளிப்படுத்த மனித சாதனைகள் மற்றும் ஞானம் ஆகியவற்றின் மேல் உள்ள நம்பிக்கையைத் தகர்க்க தேவ மனிதனுடைய எல்லா நோக்கமும், அவனுக்குச் செம்மையாய் தோன்றலாம் எனினும் அவை அவனை அதிருப்திக்கும், குறைவுக்கும் வழிநடத்துகிறது என்பதை சாலொமோன் காட்டுகிறான். சாலொமோன் தன் வாழ்க்கையில் நடந்த தவறுகளை நினைத்து இதைப் படிக்கிறவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைகொள்ளுவதற்காக இதை எழுதுகிறான். மனிதனால் மட்டும் வாழ்க்கையில் சந்தோஷத்தைப் பெறமுடியாது என்பதை சாலொமோன் காட்ட வழிதேடுகிறான்.

இரண்டாவதாக, வாழ்க்கையில் அதிகமானவற்றை மனிதனால் முழுமையாக அறிந்து கொள்ள முடியாவிட்டாலும் தரிசித்து அல்ல விசுவாசத்தினால் வாழ வேண்டும் என்ற உண்மையை சாலொமோன் உறுதிப்படுத்துகிறான். வாழ்க்கை முழுவதும், எதிர்பாராத சம்பவங்களால் நிறைந்துள்ளது. பலகாரியங்களை நம்மால் புரிந்துகொள்ளவோ கட்டுப்படுத்தவோ போய்விடுகிறது. ஆனால் நம்முடைய வாழ்க்கை விசுவாசத்தினாலும், தேவனுடைய சர்வ ஞானத்திலும், செயலும், நிலைநிற்க வேண்டும். (அதிகமாக யோபுவின் புத்தகத்தைப்போல பிரசங்கி மனிதன் ஒரு எல்லைக்குட்பட்டவன் என்பதனை உறுதிப்படுத்துவதோடு, ஆச்சரியங்களோடு வாழக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது). மனிதன் பூமிக்கு மேலான காரியங்களை நோக்க வேண்டும். அவன் கடவுளுக்கு பயந்து அவரை நம்ப மேலான நோக்கம் உடையவனாக இருக்க வேண்டும்.

மூன்றாவதாக, நீதிமொழி புத்தகத்தில் கூறியுள்ளது போலன்றி, வாழ்க்கையின் உண்மையை பிரசங்கி கொடுக்கிறது. நீதிமொழியின் சிறப்பான கொள்கையிருந்து வாழ்க்கை வித்தியாசப்படுவதை பிரசங்கி காட்டுகிறது. நீதிமொழிகள் 10:16 நீதிமானின் மற்றும் துன்மார்க்கனின் நீதியை உறுதிபடுத்துகிறது. ஆனால் பிரசங்கி 8:14 மனித வாழ்க்கையில் அநேக வேளையில் அப்படி நடப்பது இல்லை குறைந்தபட்சம் இவ்வாழ்வில் நடப்பதில்லை என்பதை உணர்த்துகிறது. இவைகள் முரண்பாடுகளா? இல்லை, வீழ்ந்த பாவ நிலையில் உள்ள உலகத்தில் நாம் வாழ்வதால் ஏற்படும் தோல்விகளைக் குறிப்பிடாமல் தேவனுடைய பொதுவான கொள்கைகளை நீதிமொழிகள் குறிப்பிடுகிறது. நீதிமொழிகள் உறுதி செய்ததுபோல நீதிநெறிகள் உள்ளது என்று பிரசங்கி குறித்தாலும், அநேக வேளையில் அப்படியாக இருக்க முடியாது; எனெனில் சூரியனுக்கு கீழே மனிதனின் வாழ்க்கைக் கண்ணோட்டம் எல்லைக்குட்ப்பட்டது என்பதை எடுத்துக்கூறுகிறது.

நான்காவதாக, மனிதன் தன் சொந்த முயற்சியினால் மட்டும் எதையும் செய்யும்போது, வாழ்க்கையில் வெறுமை ஏமாற்றம், மற்றும் புதிர்களைக் காண்கிறான் என்பதை சாலொமோன் காட்டுகிறார். தேவ பயத்தோடு கூடிய மனிதனுடைய வாழ்க்கையில் அர்த்தம் தனிசிறப்புடையதுமாயிருப்பதையும் என்றும் அது விளக்குகிறார். தேவனோடு உள்ள உறவு மூலமாய் வருகிற மனநிறைவு ஏமாற்றத்தை நீக்கும்.

முக்கிய நபர்கள்: சாலொமோன் ராஜா

பிரசங்கியில் இயேசு: கிறிஸ்து மட்டுமே மனிதன் தேவனிடம் செல்லும் வழியாயிருக்கிறார். அங்கே மனிதன் முழுமையையும் திருப்தியையும் அல்லது ஜீவன் மற்றும் பரிபூரண ஜீவனை (யோவான் 10:10; 7:37-38) காண்கிறான்.. மனிதன் வாழ்க்கையில் அனுபவிக்கிற குறைவுகள் இயேசு கிறிஸ்துவினோடு உள்ள தனிப்பட்ட உறவின் மூலம் மட்டுமே நிறைவு செய்யப்பட முடியும். தனிச்சிறப்பிற்க்காக மனிதனின் மோகமும் நிறைவும் இரட்சகரில் மட்டும் காணலாம்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை: பிரச்சினைகள் (1:1-3)**

2. **பிரச்சினைகளை எடுத்துக்காட்டுதல் (1:4-2:26)**
   a. வாழ்க்கைச் சுழற்சியிறின் மாயை (1:4-11)
   b. மனித ஞானத்தின் மாயை (1:12-18)
   c செல்வம் மற்றும் மகிழ்ச்சியின் மாயை (2:1-11)
   d. பௌதிகத்தின் மாயை (2:12-23)
   e. முடிவுரை : கடவுளின் அருளில் திருப்தியாக அனுபவிக்க வேண்டும் (2:24-26)

3. **வாழ்க்கையில் தேவனுடைய மாறாத திட்டம் (3:1-22)**
   a. வாழ்க்கையின் சம்பவங்களை தேவன் முன் தீர்மானித்தல் (3:1-11)
   b. வாழ்க்கையின் நிலையை தேவன் முன் தீர்மானித்தல் (3:12-13)
   c. தேவன் எல்லாரையும் நியாயந்தீர்த்தல் (3:14-21)
   d. முடிவுரை (3:22)

4. **வாழ்க்கை சூழ்நிலையின் மாயை (4:1-5:20)**
   a. இங்கு விளைவிக்கும் அடிமைத்தனம் (4:1-3)
   b கடினவேலையில் வெறுமை (4:4-12)
   c. அரசியல் வெற்றியின் வெறுமை (4:13-16)
   d. மனித மதத்தின் குறைவு (5:1-7)
   e. மனித செல்வத்தின் குறைவு (5:8-17)
   f. முடிவுரை (5:18-20)

5. **மொத்த வாழ்க்கையின் மாயை (6:1-12)**
   a. செல்வம் திருப்தியளிக்காது (6:1-2)
   b. குழந்தைகளால் திருப்தி கிடைக்காது (6:3-6)
   c. வேலையினால் திருப்தி காண முடியாது (6:7-12))

6. **மாயை வாழ்க்கைக்கு ஆலோசனை (7:1-12:8)**
   a. மனிதனின் துஷ்டத்தனத்தின் பார்வையில் ஆலோசனை (7:1-29)
   b. கடவுளின் அருளின் பார்வையில் ஆலோசனை (8:1-9:18)
   c. நிரந்தரமற்ற வாழ்க்கையின் பார்வையில் ஆலோசனை (10:1-20)
   d. வாழ்க்கையின் வித்தியாசமான வயதுகளில் கேட்க வேண்டிய ஆலோசனை (11:1-12:8)

7. **முடிவுரை (12:9-14)**

சாலொமோனின் உன்னதப்பாட்டு
(ஐக்கியத்தின் வழியாய் சந்தோஷம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: சாலொமோன் இந்தப் புத்தகத்தை எழுதியவர். அவருடைய பெயரை என்பதை ஏழு இடங்க ளில் காண்கிறோம் (1:1 ,5; 3:7, 9, 11; 8:11-12). இதில் சாலொமோன் மணவாளனாகக் குறிக்கப்படுகிறார். அவர் எழுதிய அநேக பாடல்களில் மிகவும் சிறப்பானதாக உன்னதப்பாட்டை சாலமோன் எழுதினார் என்று வசனம் 1 குறிப்பிடுகிறது (1,005 பாடல்களை சாலமோன் எழுதின ார் என்று 1 இராஜாக்கள் 4:32 கூறுகிறது). சாலமோனின் பாடல்டு என்று இல்லாமல் ஹுசாலொமோனின் பாடல்களின் பாடல்டு என்று இதைக் கூறுவதைக் கவனியுங்கள்.

இந்தப் புத்தகத்தின் பெயரைப் பற்றி டாக்டர். சார்லஸ் ரைரி எழுதுகிறார்:

> அநேக வழிகளில் இப்புத்தகம் பெயரிடப்பட்டிருக்கிறது: 1 ஆம் வசனத்திருக்கிறது எபிரேய தலைப்பு, பாடல்களின் பாடல், அதன் அர்த்தம் ஹுஎல்லாப் பாடல்களிலும் சிறந்தது அல்லது தன்னிகரற்ற'' என்பதாகும்; ஆங்கிலத் தலைப்பும் 1 ஆம் வசனத்திருந்து தான் வந்தது சாலமோனின் பாடல், இது அதை எழுதியவரைக் குறிப்பிடுகிறது. இதன் அர்த்தம் பாடல்கள்து என்பதே - இது லத்தீன் மொழியிருந்து பெறப்பட்டது.[31]

எழுதப்பட்ட காலம்: ஏறத்தாழ **கி.மு. 965**

மையக் கருத்தும் நோக்கமும்: தேவனுடைய பார்வையில், அன்பையும் திருமணத்தையும் சித்திரிக்கிற உவமைகள் நிறைந்த காதல் பாட்டுகளாக இந்த புத்தகம் இருக்கிறது. இந்தப் புத்தகம் சாலொமோனின் இளமைப் பருவத்தில் எழுதப்பட்டதாக இருக்கலாம்.

ஏறத்தாழ கி.மு. 965. அந்த சமயத்தில் சாலொமோன் 60 ராணிகளையும் 80 மறுமனையாட்டிகளையும் பெற்றிருந்தான் (6:8), பின்னால் அவன் வாழ்க்கையில், 700 ராணிகளும் 300 மறுமனையாட்டிகளையும் உடையவனாயுமிருந்தான் (1 இராஜாக்கள் 11:3).

முக்கிய நபர்கள்: மணவாட்டி (சூலமித்தி) அரசன் (சாலொமோன்) பின்னணிகள் (எருசலேமின் குமாரத்திகள்)

உன்னதப்பாட்டில் இயேசு: விசுவாசிகளிடம் இயேசு கொண்டுள்ள அன்பை இந்தப் புத்தகம் விளக்குகிறது.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **தலைப்பு (1:1)**

2. **அன்பில் விழுதல் (1:2–3:5)**
   a. அன்பிற்காக மணவாட்டியின் ஏக்கம் (1:1–8)
   b. பரஸ்பர அன்பை வெளிப்படுத்தல் (1:9–2:7)
   c. இராஜா மணவாட்டியைக் காண்கிறார் (2:8–17)
   d. மணவாட்டி பிரிவைப் பற்றி முதல் முறை கனவு காண்கிறாள் (3:1–5)

3. **அன்பில் இணைதல் (3:6–5:1)**
   a. திருமண ஊர்வலம் (3:6–11)
   b. மணமகளின் அழகைப் புகழ்தல் (4:1–15)
   c. திருமணம் முடிந்தது (4:16–5:1)

4. **அன்பில் போராட்டம் (5:2–7:10)**
   a. மணவாட்டி இரண்டாவது தடவை பிரிவைப்பற்றிக் கனவு காண்கிறாள் (5:2–7)
   b. மணவாளன் அழகைப் புகழ்தல் (5:8–6:3)
   c. மணவாட்டியின் அழகைப் புகழ்தல் (6:4–7:10)

5. **அன்பில் முதிர்ச்சி (7:11–8:14)**
   a. மணவாட்டிக்கு தன் வீட்டிக்குச் செல்ல ஆர்வம் (7:11–8:4)
   b. பிரயானமும் வீட்டுக்கு வருதலும் (8:5–14)

பகுதி 4
பெரிய தீர்க்கதரிசிகள்

இஸ்ரவேன் தீர்க்கதரிசிகளை முழுமையாக நோக்குதல்

முகவுரை: நம்முடைய பழைய ஏற்பாட்டு ஆராய்ச்சியில் "சட்ட நூல்கள்." "வரலாற்று நூல்கள்," மற்றும் "கவிதை நூல்கள்" ஆகியவற்றைப் பார்த்தோம். இப்போது நாம் கடைசிப் பிரிவைக் காணத் தொடங்கியுள்ளோம். அது "தீர்க்கதரிசிகள்" என்று அழைக்கப்படுவதாகும்.

தீர்க்கதரிசன நூல்கள், "பெரிய தீர்க்கதரிசன நூல்கள்," "சிறிய தீர்க்கதரிசன நூல்கள்" எனப் பிரிக்கப்பட்டுள்ளன. "பெரிய தீர்க்கதரிசன நூல்கள், ஏசாயா, எரேமியா, புலம்பல், எசேக்கியேல், தானியேல் என்ற ஐந்து புத்தகங்களாகும். சிறிய தீர்க்கதரிசன நூல்கள், ஓசியா, யோவேல், ஆமோஸ், ஒபதியா, யோனா, மீகா, நாகூம், ஆபகூக், செப்பனியா, ஆகாய், சகரியா மற்றும் மல்கியா என்ற 12 நூல்களாகும்.

இந்தத் தீர்க்கதரிசிகள் "எழுதும் தீர்க்கதரிசிகள்" என அழைக்கப்பட்டனர். ஏனெனில் அவைகளின் நூலாசிரியர்கள் அவர்களின் வார்த்தைகளை எழுதியும் பதிவு செய்தும் வைத்துள்ளனர். வாய்மொழி தீர்க்கதரிசிகளான நாத்தான், அஹிஜா, இத்தோ, ஜெகூ, எயா, எசா, ஓதேத், செமா, அசரியா, ஹினானி, யாஹாசியேல், உல்தாள் என்பவர்கள் தங்கள் தீர்க்கதரிசனங்களை நூல்களாகப் பதிவு செய்யவில்லை.

நூலாசிரியர்கள்: அவரவர் ஊழியத்தின் அல்லது அழைப்பின் அடிப்படையில் அவர்கள் தீர்க்கதரிசிகள், தரிசனக்காரர்கள், காவற்காரர், தேவ மனிதர்கள், தேவ செய்தியாளர், கடவுளின் வேலைக்காரர் எனப்பட்டனர்.

"தீர்க்கதரிசி" என்பதன் முக்கிய கருத்து அதிகாரம் பெற்ற பிறர் சார்பாக பேசுபவர் என்பதாகும். ஆகையால் உண்மையான தீர்க்கதரிசி, என்பவர் கடவுளுக்காக மனிதரிடம் பேசுபவராவார். பழைய ஏற்பாட்டில் மூன்று பகுதிகளில் காணப்படுகிற ஓர் தீர்க்கதரிசியின் விபரங்களிருந்து இது தெளிவாகிறது. (1) யாத்திராகமம் 6:28–7:2–ன்படி மோசே பார்வோனுக்கும் கடவுளுக்கும் மத்தியஸ்தனாக இருக்க மறுத்தபோது, கர்த்தர் ஆரோனை மோசேயின் தீர்க்கதரிசியாக ஏற்படுத்தினார். அதாவது அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்ட மத்தியஸ்தன். அதாவது ஒருவர் மற்றொருவருக்குப் பதிலாக பேசுகிறார். (2) எண்ணாகமம் 12:1–8ல் ஒருமுறை ஆரோனும் மிரியாமும் பொறாமையினால் மோசேயின் நிலையில் நின்று கர்த்தரின் வெளிப்பாடுகளை தாங்களும் கொடுக்கமுடியும் என்ற போது கர்த்தர் தாமே தலையிட்டு மோசேயோடு மட்டும் பேசுவேன், ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால் அவனுக்குத் தரிசனத்திலும், சொப்பனத்திலும் பேசுவேன் என்றார். இதில் "தீர்க்கதரிசி" என்பதன் அர்த்தம் தெளிவாக உள்ளது. (3) உபாகமம் 18:9–22ல் மோசேயின் மரணத்திற்கு முன் ஓர் தீர்க்கதரிசியின் வேலை இன்னதென்று கூறப்பட்டுள்ளது.[32] இந்த வார்த்தைகள் மூலம் கர்த்தர் கற்பிக்கும் செய்திகளை எல்லாம் மற்றவர்களுக்கு வெளிப்படுத்துபவர் தீர்க்கதரிசி என தெளிவாகிறது.

அவர்களது கட்டளைகள் அல்லது போதனைகள்: தேவன் சார்பாக பேசுபவரென்ற வகையில், ஒரு தீர்க்கதரிசியின் முதல் கடமை யாவது: தேவ செய்தியை தேவ ஜனங்களுக்கு அறிவித்து சரித்திரத்தில் தேவ ஜனங்கள் மத்தியில் நடந்து கொண்டிருக்கிற காரியங்களின் பின்னனியில் அறிவித்தலாகும். "தீர்க்கதரிசனம்டு என்பதற்கான விரிவான அர்த்தமாவது தற்போதைய நிகழ்ச்சியைப் பற்றிப் பிரசங்கித்தல் (forthtelling) குறுகிய நிலை அர்த்தமாவது, நிகழ்ச்சிகள் நடக்குமுன் அவற்றைக் கூறுதலாகும். அதாவது முன்னறிவித்தல், வருங்காலம் குறித்து முன் அறிவித்தல் (foretelling), நடைமுறைக் காரியங்களைக் குறித்துப் பேசுதல் (foretelling) தேவசித்தத்தைக் குறித்து உள்ளுணர்வு அடங்கியுள்ளது; இது அவசரமானது மனிதர்களைக் கீழ்ப்படிவதற்கு சவால் விடக்கூடியதாகும். முன்னறிவித்தல் என்பது தேவ திட்டத்தை தூரத்திருந்துப் பார்த்தலாகும். அது தேவனுடைய வாக்குத்தத்தங்களை முன்னதாகக் கூறி நீதிமான்களை ஊக்குவிப்பது; அல்லது வரப்போகும் நியாயத்தீர்ப்பைக் குறித்து மக்களை எச்சரிப்பதாகும். தேவனுடைய செய்தியை அறிவித்தல் சில நேரங்களில் தீர்க்கதரிசியானவர் எதிர் காலத்திற்குரியவற்றைப் பற்றி வெளிப்படுத்துவார். ஆயினும் இது அத்தீர்க்கதரிசியின் செய்தியின் ஒரு பகுதியாகத்தானிருக்கும். ஆகவே தீர்க்கதரிசி என்பவர் தேவனால் தெய்வீகமாக (Divinely) தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி, கர்த்தர் செய்தியை பெற்றுக்கொண்டு வாய்மொழியாகவோ காட்சியாகவோ (Visual) எழுத்தின் மூலமாகவோ ஜனங்களுக்கு அறிவிப்பவராகும். ஆகையால் பொதுவாக தீர்க்கதரிசிகள் "கர்த்தர் கூறுகிறதாவ" என்று துவக்குவார்கள்.

தேவ அறிவிப்பாளராக அவர்கள் தரும் செய்திகளை பழைய ஏற்பாட்டில் தேவ ஜனங்கள் மத்தியில் அவர்களுக்கிருந்த மூன்று விதமான வேளைகளில் காணலாம்:

முதலாவதாக, போதகராக மோசேயின் நியாயப்பிரமாணத்தை ஜனங்களுக்குப் சொல்க் கொடுத்து வியாக்கினமும் செய்தார்கள். எச்சரிப்பதும், கடிந்துகொள்வதும், குற்றங்களை பகிரங்கமாக கண்டனம் செய்தலும், நியாயத்தீர்ப்பின் பயங்கரத்தைக் குறித்துக் கூறுவதும், மனம் திரும்ப அழைப்பதும், ஆறுதல் மற்றும் மன்னிப்பை கொண்டுவருவதுமாகும். பாவத்தைக் குறித்துக் கண்டித்துணர்த்துதலும், மனம் திரும்ப அழைத்தலும், தீர்க்கதரிசிகளின் பெரிய பொறுப்பானது. இது அவர்கள் மற்ற வகையான வேலைகளைவிட இதற்காக அவர்கள் நேரத்தை அதிகம் செலவழிக்க வேண்டியதாயிற்று. கண்டித்து உணர்த்தும்போது தீர்க்கதரிசிகள் தேவனுடைய எச்சரிப்பைக் கவனியாதோர் மேல் வரும் தேவ தண்டனையையும் எடுத்துக் கூறினார்கள் (யோனா 3:4).

இரண்டாவதாக, வரப்போகும் நியாயத்தீர்ப்பைப் பற்றியும், விடுதலையைப் பற்றியும், மேசியாவைக் குறித்த காரியங்களையும், தேவ இராஜ்யத்தைப் பற்றியும் அறிவிக்கும் முன்னறிவிப்பாளராக இருந்தனர். முன்னறிவிப்பது மனிதனின் உலகப் பிரகாரமான அவாவினை மட்டும் திருப்திப்படுத்துவதல்ல. அது கடவுள் எல்லாம் தெரிந்தவர். எதிர்காலத்தைக் கட்டுபடுத்துபவர், மற்றும் அர்த்தமுள்ள வெளிப்பாட்டைத் தருபவர் என்பதை வெளிப்படுத்துதலாகும். ஒரு தீர்க்கதரிசியின் முன்னறிவிப்பு நேரடியாக நிறைவேறுவதைக் காணலாம். அப்படி கூறும் காரியம் நடவாமலும், நிறைவேறாமலும் போனால் அது கர்த்தர் கூறிய வார்த்தையல்ல (உபாகமம் 18:20–22). கர்த்தர் சாமுவேலுடனே இருந்தார். அவர் தம் வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்து போகவிடவில்லை என்று (1 சாமுவேல் 3:19) இல் வாசிக்கிறோம்.

மூன்றாவதாக, எசேக்கியேல் 3:17ன் படி அவர்கள் இஸ்ரவேலருக்கு காவலாளராக இருந்தார்கள். எசேக்கியேல் சீயோன் மதிற்சுவரின் மேல் காவலாளியாக நின்று சத்தியத்தினின்று வழுவிப் போகிறவர்களுக்கு எச்சரிக்கை குரல், கொடுப்பவராக இருந்தார். அவர் மக்கள் இராணுவ முறையில் அயலாருடன் தொடர்பு கொள்வதையும், விக்கிரக வழிபாடு மற்றும் கானானியரின் ஆராதனை முறைகளை பின்பற்றுவது மதச் சடங்காச்சாரங்கள் மீது அதிக நம்பிக்கை வைக்கும் ஆபத்து போன்றவற்றை எதிர்த்தும் எச்சரிப்பு கொடுப்பவராக இருந்தார்.

கடைசியாக, தீர்க்கதரிசிகள் மேற்கண்ட காரியங்களில் கவனம் செலுத்தும்போது, தேவ செய்தியை மக்களுக்கு தெரிவிப்பதோடு இஸ்ரவேலரின் மத சம்பந்தமான ஒழுங்கு முறைகளில் ஓர் முக்கிய பங்கும் வகித்தனர். மோசேயின் நியாயப்பிரமாணத்தை மீறும்போது, நாட்டிற்கு தீர்க்கதரிசிகள் இராஜ தந்திரிகளாகவும், தவறுகளை எடுத்துக் கூறுபவர்களாகவும் இருந்தனர்.[33]

நான்கு பெரிய தீர்க்கதரிசிகள் ஓர் ஒப்பீடு[34]

நான்கு பெரிய தீர்க்கதரிசிகள் ஓர் ஒப்பீடு				
	ஏசாயா	**ஏரேமியா**	**எசேக்கியேல்**	**தானியேல்**
யாருக்கு தீர்க்கதரிசனம்:	யூதேயாவிலுள்ள யூதருக்கு	யூதேயாவிலுள்ள யூதருக்கும் பிணையக் கைதிகளுக்கும்	பாபிலோனிலுள்ள யூத பிணையக் கைதிகளுக்கு	பாபிலோனிலுள்ள யூத பிணையக்கைதிகளுக்கும், புறஜாதி ராஜாக்களுக்கும்
யாரைக் குறித்து:	யூதா & எருசலேம் (ஏசாயா 1:1; 2:1)	யூதாவிற்கும் தேசங்களுக்கும் (எரேமியா 1:5, 9-10; 2:12)	முழு இஸ்ரவேல் வீட்டாருக்கு (எசேக்கியேல் 2:36; 3:4-10, 17)	இஸ்ரவேல் மற்றும் புறஜாதி தேசங்கள் (தானியேல் 2:36-43:9)
யாருடைய ஆளுகையில்:	உசியா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா (யூதாவின் ராஜாக்கள்)	யோசியா, யோவாஸ் யோயாக்கீம், யோயாக்கீன், சிதேக்கியா (பாபிலோனின் ராஜா)	சிதேக்கியா (யூதாவின் ராஜா) நேபுகாத்நேச்சார் (பாபிலோனின் ராஜா)	யோயாக்கீம், யோயாக்கீன், சிதேக்கியா, (யூதாவின் ராஜாக்கள்). நேபுகாத்நேச்சார் (யூதாவின் ராஜாக்கள்)
காலம்:	740-680 கிமு	627-585 கிமு	592-570 கிமு	605-536 கிமு
சரித்திர அமைப்பு:	2 இராஜாக்கள் 15-21; 2 நாளாகமம் 26-30	2 இராஜாக்கள் 22-25	தானியேல் 1-6	தானியேல் 1-6

பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவை எதிர் பார்த்தல் பற்றிய ஒரு பார்வை[35]

இதுவரை நாம் பார்த்ததில் நியாயப்பிரமாணம் கிறிஸ்துவுக்குக் கீழ்க்கண்ட வகையில் அஸ்திபாரமாக அமைந்தது என அறிகிறோம். (ஆதியாகமம்) கிறிஸ்துவுக்கு - தேர்வு மூலம் அஸ்திபாரமிட்டது. (யாத்திராகமம்) - மீட்பு மூலம். (லேவியாகமம்) - சுத்திகரிப்பு மூலம். (எண்ணாகமம்) - வழிநடத்துதல் மூலம். (உபாகமம்) - கற்பித்தல். இவற்றிற்கு இணையானது. இஸ்ரவேல் தேசம் தேவனுடைய வார்த்தைக்குப் பாதுகாப்பாக வைக்கப்பட்டது (ரோமர் 3:1) மேசியாவின் வம்ச பரம்பரையையும் காணலாம் (ஆதியாகமம் 12:1-3, ரோமர் 9:4-5).

மேலும் வரலாற்று நூல்களின்படி கிறிஸ்துவிற்காக ஆயத்தமாகுதலென்பது இஸ்ரவேல் தேசத்தை அவர்களுக்கு சொந்தமாகக் கொடுத்தலே (யோசுவா). கர்த்தர் நியாயாதிபதிகளை எழுப்பி நாட்டில் விசுவாசத்தை காணும்வரை (ரூத்). இத்தேசம் அக்காலத்தில் அந்நிய ஆதிக்கத்தால் அடிமைப்படுத்தப்பட்டிருந்தது. விசுவாசமற்ற நிலையிருந்தது. சவுல் ராஜா காலத்தில் தேசத்திற்கு நிலையான ஆட்சி உண்டாயிற்று (1 சாமுவேல்), தாவீது அரசர் காலத்தில் தேசம் விரிவுப்படுத்தப்பட்டது (2 சாமுவேல்), மற்றும் சாலொமோன் அரசர் ஆட்சியின்போது (1 இராஜாக்கள் 1- 10) நாடு மகிமையடைந்தது. இதன் பின்னர் தேசம் பிளவுபட்டது (1 இராஜாக்கள் 11-22). பத்து கோத்திரங்கள் வடநாடாகவும், யூதா, பென்யமின் ஆகிய இரண்டு கோத்திரங்கள் தென்நாடாகவும் மாறிற்று. இவ்விரண்டும் குறைவுபடத் தொடங்கின (2 நாளாகமம்). அதன் விளைவாக, பாபிலோனியராலும், சீரியராலும் நாட்டைவிட்டு கடத்தப்பட்டனர். (2 இராஜாக்கள்). இதன் தொடர்ச்சியாக ஆலயம் சீரழியத் தொடங்கி (1 நாளாகமம்), அழிவுக்குட்படுத்தப்பட்டது (2 நாளாகமம்). ஆயினும் தேவனின் உண்மை நிலையும், அவரது வாக்குத்தத்தங்களும் நிலைத்திருந்ததால், மறுபடியும் ஆலயம் எழுப்பப்பட்டது யூதா, பென்யமின் (எஸ்றா), தேசத்தின் மீதமுள்ள ஒரு பகுதியினர் திரும்ப வந்தனர். (நெகேமியா), தொடர்ந்து கர்த்தரின் ஜனங்கள் பாதுகாக்கப்பட்டனர் (எஸ்தர்).

கவிதை நூல்களில், கிறிஸ்துவின் மேலுள்ள ஆவிக்குரிய ஆசையும், நியாயப் பிரமாணத்திலுள்ள அடிப்படைப் பண்புகளும் காணப்படும் அதோடு ஒரு நாட்டின் வரம்பும் வரலாற்று நூல்களில் வரையப்பட்டுள்ளது.

தீர்க்கதரிசன நூல்கள் கிறிஸ்துவுக்கான பெரிதான எதிர்ப்பார்ப்பைக் காட்டுகிறது. கெய்ஸ்லர் என்பவரின் கூற்றுப்படி அது கீழ்க்கண்டவாறு செய்யப்படுகிறது.

> ஆரம்ப கால தீர்க்கதரிசிகள் (ஓசியா யோவேல், ஆமோஸ்) மேசியா நாட்டைப் புதுப்பிப்பார் என எதிர்பார்த்தனர். ஏசாயா, மீகா ஆகியோர் அகில உலக இரட்சிப்பு, கிறிஸ்து மூலமாகவரும் என முன் உரைத்தனர். ஆனால் ஒபதியா, யோனா, நாகூம், ஆபகூக், செப்பனியா ஆகியோர் தேசத்தின் வரப்போகும் தெய்வீகத் தண்டனையைக் குறித்து எச்சரித்தனர். புலம்பல், தேவதண்டனை அவரது மக்கள் மீது வரப்போவதைக் குறித்து புலம்புகிறது. ஆனால் எரேமியா உடன்படிக்கையைத் திரும்பவும் உறுதிப்படுத்துவதை கிறிஸ்துவில் எதிர்பார்க்கிறார். எசேக்கியேல் தேச சமய புதுப்பித்தலை எதிர்பார்க்கிறார். தானியேலோ அரசியல் புதுப்பித்தலை முன்னறிவிக்கிறார். பாபிலோனியரால் பிடிபட்டபின், ஆகாயும் சகரியாவும் மக்களின் மதப்பற்றை ஊக்குவிக்கிறார்கள். மல்கியா அவர்களது சமூக, ஒழுக்கம் இவற்றினை திரும்ப கட்டுகிறார். அதாவது (மல்கியா 4:2) பிரகாரம் அவர்கள் மேல் ***“நீதியின் சூரியன் உதிக்கும்; அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்”*** என்ற வாக்கை எதிர்நோக்கியிருப்பதாகக் கூறுகிறார்.[36]

ஏசாயா
(இறைவனின் (யாவே) இரட்சிப்பு)

நூலாசிரியர் மற்றும் புத்தகத்தின் பெயர்: இப்புத்தகம் தெளிவாகக் கூறுவதுபோல், இந்நூலாசிரியர் ஏசாயா; அவரது தந்தையின் பெயர் ஆமோஸ். ஏசாயா ஓர் உயர்ந்த, மக்களின் செல்வாக்குப் பெற்ற மேன்மையான யூத குடும்பத்தில் தலைவராயிருந்தார். ஏசாயா ஆகாஸ் இராஜாவின் காலத்தில் ராஜ சபையில் பெயர்பெற்றவராயிருந்தார். உயர் கல்வி பெற்று உலக அறிவில் மிக சிறந்த பயிற்சி பெற்றவர். அவரது வாழ்க்கை பெரும்பகுதியை எருசலேம் நகரில் கழித்தவர். அங்கு உயர் குடும்பத்தினருடன் தொடர்புகொண்டு வெளிநாட்டு உறவுகள் பற்றிய காரியங்களுக்கு ஆலோசனை கொடுத்து வந்தார். ஏசாயா கர்த்தரால் வழிநடத்தப்பட்டாலும் அடிக்கடி பரிகசிக்கப்பட்டார். ஏனெனில் அந்நியரோடு (அசீரியர், எகிப்தியர் ஆகியோருடன்) தொடர்பு கொள்வதை எதிர்த்தார். ஆறாம் அதிகாரத்தில் காணப்படும் ஆண்டவரின் எச்சரிப்பின்படி அவரது காரியங்கள் அனைத்தும் தோல்வியடைந்தது. ஏனெனில் மக்கள் தங்கள் நம்பிக்கையை சமுதாயத்தின்மீதும், மக்கள்மீதும் வைத்தார்களேயொழிய தேவனுடைய வாக்குத்தத்தங்கள்மீது வைக்கவில்லை.

பாரம்பரியக் கூற்றுப்படி மனோசேயின் ஆட்சி காலத்தில் எபிரேயர் 11:37ன்படி அவர் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அனுபவித்து கொல்லப்பட்டிருக்க வேண்டும். சனகெரிபின் மரணம், ஏசாயா 37:37-38ல் பதிவு செய்யப்பட்டபடியால் கி.மு. 681ல் சனகெரிப்பின் மரணத்திற்குப்பின் வரை ஏசாயா வாழ்ந்திருக்கக்கூடும்.[37]

பரிசுத்த ஆவியின் ஏவுதலால் இப்புத்தகத்தை எழுதிய ஏசாயாவின் பெயரையே இப்புத்தகம் பெற்றிருக்கிறது. எபிரெய பாஷையில் இத்தீர்க்கதரிசியின் பெயர் யெகோவா இரட்சகராயிருக்கிறார் என்று பொருள்படும். இதுவே இந்த அதிகாரத்தின் சிறந்த செய்திச் சுருக்கமாகவும், கருப்பொருளுமாயிருக்கிறது.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 740-680. ஏசாயாவின் நீண்ட ஊழியக்காலம் ஏறத்தாழ கி.மு. 740 முதல் 680 வரையிலாகும். உசியா ராஜாவின் ஆட்சியின் இறுதி காலத்தில் (கி.மு. 790-739) தொடங்கிய ஊழியம், யோதாம் (கி.மு. 739-731) ஆகாஸ் (கி.மு. 731-715) மற்றும் எசேக்கியா (கி.மு. 715-686) ஆகியோரின் ஆட்சிகள் வரை தொடர்ந்தது. யூதரல்லாத ராஜாக்களின் காலத்தைப் பார்த்தால் திகிலாத்பிலோர் (கி.மு. 745-727) காலம் தொட்டு அசீரிய அரசனாகிய சனகெரிப் காலம் (கி.மு. 705-681) வரை அவரது ஊழியம் தொடர்ந்தது.

கருப்பொருளும், அதன் நோக்கமும்: ஏசாயா என்ற பெயரே இந்தப் புத்தகத்தின் கருப்பொருளாகும். அதாவது இரட்சிப்பு யெகோவாவிடமிருந்து வருகிறது என்பதாகும். ஏனெனில் "இரட்சிப்பு" என்ற வார்த்தை 26 முறை ஏசாயா புத்தகத்தில் வருகிறது. ஆனால் மற்ற தீர்க்கதரிசன புத்தகங்களில் மொத்தத் தொகுப்பிலும் சேர்த்து இது ஏழு முறைதான் காணப்படுகிறது. ஏசாயா "சுவிசேஷ பிரபல்ய தீர்க்கதரிசி" என அழைக்கப்பட்டார். மற்ற எந்த பழைய ஏற்பாட்டு புத்தகங்களை விட உண்மையாய், அவர் அதிகமாக மேசியாவின் இரட்சிப்பைப் பற்றியும், மீட்புப் பணியைப் பற்றியும் கூறுகிறார்.

ஒரு சில வகைகளில், ஏசாயா ஒரு சிறு திருமறை போல் விளங்குகிறது. இதில் 66 அதிகாரங்கள் உள்ளன. திருமறையிலும் 66 நூல்கள் காணப்படுகின்றன. ஏசாயா புத்தகத்தின் முதல் 39 அதிகாரங்கள் பழைய ஏற்பாட்டிலுள்ள 39 நூல்களுக்கு ஒப்பாயிருக்கிறது. இவைகள் வரப்போகும் மேசியாவை எதிர்நோக்கியிருப்பதை கூறுகின்றன. இதன் கடைசி 27 அதிகாரங்கள், 27 புதிய ஏற்பாட்டு கடைசி நூல்களுக்கு இணையாயிருக்கின்றன. ஏனெனில், அவைகள் மேசியாவைப்பற்றியும், அவரது இராஜ்யத்தைக் குறித்தும் கூறுகிறது. முதல் 1-39 அதிகாரங்கள் மனிதனுக்கு அதிமுக்கிய தேவையாகியஇரட்சிப்பைப் பற்றியும், 40-66 அதிகாரங்கள் மேசியாவிலும், அவரது இராஜ்யத்திலும் உள்ள தேவனுடைய ஈவாகிய இரட்சிப்பை வெளிப்படுத்துகின்றன.

முக்கிய நபர்கள்: மனிதனாக ஏசாயா முக்கிய கதாப்பாத்திரமாவார். ஆயினும் யெகோவாவே இஸ்ரவேன் தலைசிறந்த வல்லவராகவும் இஸ்ரவேன் பரிசுத்தராகவும் சேனைகளின் தேவனாகவும் ஏசாயாவில் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளார்.

ஏசாயாவில் கிறிஸ்து: பழைய ஏற்பாட்டில் எந்த ஒரு புத்தகத்திலும் ஏசாயா சொன்னது போல இயேசு கிறிஸ்துவைப்பற்றி இவ்வளவு முழுமையாகவும், விரிவாகவும் சொல்லப்படவில்லை. ஆனால் ஏசாயாவில் கிறிஸ்துவின் மேலான வல்லமை (6:1), அவரது பிறப்பு மற்றும் மனுஷீகம் (7:14; 9:6; 11:1), ஆவியின் மூலம் அவருடைய ஊழியம் (11:2), அவருடைய தெய்வீகம் (7:14; 9:6), அவருடைய தாவீதின் வம்சவழி (11:1), மேலும் நமக்குப் பதிலாக அவரது மீட்பின் வேலை (53), தாழ்மையான இரட்சகராக (49-52) அவரது ஊழியம், ஆகியவை பற்றி அதிகமாகவும் கூறப்பட்டுள்ளது.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கமான குறிப்பு

1. **கண்டணம் மற்றும் நியாயத்தீர்ப்பு பற்றிய தீர்க்கதரிசனங்கள்: (1:1-39:8)**
   a. யூதேயாவிற்கு எதிரான தீர்க்கதரிசனங்கள் (1:1-12:6)
      1) யூதேயா குறித்த எச்சரிப்பு (1:1-5:30)

1:1-9	2:12-22	5:1-7
1:10-17	3:1-12	5:8-30
1:18-31	3:13-26	
2:1-11	4:1-6	

2) தீர்க்கதரிசியின் வேலை (6:1-13)

6 : 1-7	6 : 8-13

3) வரப்போகும் மேசியாவைக் குறித்து (7:1-12:6)

7:1-9	8:9-22	10:20-34
7:10-16	9:1-7	11:1-10
7:17-25	9:8-21	11:11-16
8:1-8	10:1-19	12:1-6

b. புறஜாதியரைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் (13:1-23:18)

1) பாபிலோனின் பாரம் (13:1-14:23)

13:1-5	13:17-22
13:6-16	14:1-23

2) அசீரியாவின் பாரம் (14:24-27)

3) பெலிஸ்தியாவின் பாரம் (14:28-32)

4) மோவாபின் பாரம் (15:1-16:14)

5) தமஸ்கு, அதோடு உறவு கொண்ட இஸ்ரவேன் பாரம் (17:1-14)

6) எத்தியோப்பியாவின் பாரம் (18:1-7)

7) எகிப்தின் பாரம் (19:1-20:6)

19:1-10	19:11-25	20:1-6

8) பாபிலோன் பாரம் (21:1-10)

9) ஏதோமின் பாரம் (21:11-12)

10) அரபியாவின் பாரம் (21:13-17)

11) எருசலேமின் பாரம் (22:1-25)

12) தீருவின் பாரம் (23:1-18)

c. கர்த்தரின் வருகையைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் (24:1-27:13)

1) நியாயத்தீர்ப்பும் இறைவனின் கோபம் ஊற்றப்படுதலும் (24:1-23)

2) இராஜ்ஜியத்தின் வெற்றியும் ஆசீர்வாதங்களும் (25:1-27:13)

25:1-12	26:11-21
26:1-10	27:1-13

d. யூதேயா, இஸ்ரவேலருக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள் (அழுகையும் ஆசீர்வாதங்களும்) (28:1-35:10)

1) சமாரியாவின் துக்கம் (28:1-29)

28:1-13	28:14-29

2) யூதேயாவின் துக்கம் (29:1-31:9)

29:1-8	29:17-24	30:18-33
29:9-16	30:1-17	31:1-9

3) மேசியாவும், அவரது இராஜ்யமும் (32:1-20)

32:1-8	32:9-20

4) அசீரியருக்குத் துன்பமும் எருசலேமை அழிப்பவரும் (33:1-24)

33:1-12	33:13-24

5) எல்லா நாடுகளுக்கான துன்பம் (34:1-17)

6) இறைவனின் வரப்போகும் ஆட்சிகாலம் (35:1-10)

e. சனகெரிப்புக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள்(36:1-39:8)

1) அசீரியாவின் நிந்தைச்சொல் (36:1-22)

2) ஆண்டவரிடமிருந்து வந்த உண்மை (37:1-7)

3) அசீரியரிடமிருந்து வந்த அச்சுறுத்தல் (37:8-35)

37:8-13	37:14-20	37:21-35

4) அசீரியா மீது வெற்றி (37:36-38)

5) எசேக்கியாவின் சுகவீனம் (38:1-22)

6) எசேக்கியாவின் மதியீனம் (39:1-8)

2. ஆறுதலான அல்லது ஆசீர்வாதமான தீர்க்கதரிசனங்கள் (40:1-66:24)

a. இஸ்ரவேலரின் மீட்புக்கான தீர்க்கதரிசனமும் சர்வ வல்ல தேவனின் சிறப்பும் (40:1-48:22)

40:1-20	43:8-13	45:8-25
40:21-31	43:14-21	46:1-13
41:1-20	43:22-28	47:1-15
41:21-29	44:1-8	48:1-16
42:1-13	44:9-20	48:17-22
42:14-25	44:21-28	
43:1-7	45:1-7	

b. இஸ்ரவேலரை மீட்பவரைப் பற்றிய தீர்க்கதரிசனமும் உபத்திரவப்படும் ஊழியரின் மீட்பும் (49:1-57:21)

49:1-13	52:1-15	56:1-12
49:14-26	53:1-12	57:1-21
50:1-11	54:1-17	
51:1-23	55:1-13	

c. இஸ்ரவேலரின் மகிமையான எதிர்காலம் பற்றிய தீர்க்கதரிசனமும் சமாதானம் குறித்து ஆண்டவர் தீர்மானங்களும் (58:1-66:24)

58:1-12	61:1-11	65:1-16
58:13-14	62:1-12	65:17-25
59:1-8	63:1-6	66:1-2
59:9-21	63:7-14	66:3-9
60:1-14	63:15-19	66:10-24
60:15-22	64:1-12	

எரேமியா

(பாவத்தைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் எச்சரிப்பு)

எழுதியவரும், புத்தகத்தின் பெயரும்: ஏசாயாவைப் போல் இப்புத்தகத்தின் நூலாசிரியர் எரேமியா என்று தெளிவாக உள்ளது. இவரது தந்தை இல்கியா என்பவர். பென்யமீன் தேசத்திலுள்ள ஆனதோத் என்ற ஊரிருந்து பரம்பரை ஆசாரியர்களுக்கு சொந்தமான இடத்திருந்து வந்தவர் (1:1). எரேமியா தான் கூறும் தீர்க்கதரிசனங்களை தனது ஊழியராகிய பாருக் எழுதும்படிச் செய்வார். "புலம்பன் தீர்க்கதரிசி" (9:1; 13:17) அல்லது "தனிமையான தீர்க்கதரிசி" அதாவது திருமணம் புரியாதிருக்க கட்டளை பெற்றதால் அவ்வாறு அழைக்கப்பெற்றார் (16:2). "விருப்பமற்ற தீர்க்கதரிசி" (1:6) என்றும் அழைக்கப்பட்டார். தன்னை எதிர்ப்பவர்கள் இருப்பினும் துன்புறுத்தினாலும், சிறையிலடைத்தாலும், (11:18-23; 12:6; 18:18; 20:1-3; 26:1-24; 37:11-38:28ன்படி) தென் தேசமாகிய யூதேயாவின்மீது ஆண்டவரின் நியாயத்தீர்ப்பை உண்மையாக அறிவித்து வந்தார்.

இப்புத்தகத்தின் பெயர் நூலாசிரியர் பெயரைக் கொண்டுள்ளது. எரேமியா என்றால் "யெகோவா நிலைநிறுத்துபவர்" என்று அர்த்தமாகும்.

எழுதிய காலம்: கி.மு. 627-585. செப்பனியா, ஆபகூக், தானியேல், எசேக்கியேல் ஆகிய தீர்க்கதரிசிகளின் சமகாலத்தவர் எரேமியா. அவரது தீர்க்கதரிசன ஊழியம் கி.மு. 626ல் தொடங்கி கி.மு. 586க்கு பின் முடிவடைந்தது. அவரது ஊழியத்தைத் தொடர்ந்து செப்பனியா ஊழியம் செய்தார். கி.மு. 593ல் பாபிலோனில் எசேக்கியா தன் ஊழியத்தை ஆரம்பித்தபோது எருசலேமில் இவரும் சமகாலத்தவராக பெரிய தீர்க்கதரிசியாயிருந்தவர். எப்போது எவ்வாறு எரேமியா மரித்தாரெனத் தெரியாது. ஆயினும் யூத பாரம்பரிய செய்திப்படி எகிப்திருக்கும்போது (எபிரேயர் 11:37) கொல்லப்பட்டாரெனத் தெரிகிறது.

கருப்பொருளும் அதன் நோக்கமும்: முக்கியமான இரு கருப்பொருட்கள் (1) பாவத்தின்மீது ஆண்டவரின் நியாயத்தீர்ப்பைக் குறித்த எச்சரிப்பு (2) மக்கள் உண்மையாய் மனம் திரும்பும் பட்சத்தில் நம்பிக்கை மற்றும் திரும்ப நிலைநிறுத்தலைப் பற்றிய செய்தி.

முக்கிய நபர்: இந்நூல் முழுவதும் வரும் முக்கிய பாத்திரம் எரேமியா, அவரது செய்திகள் எதிர்ப்புகள் மற்றும் உபத்திரவம் ஆகியவை.

எரேமியாவில் கிறிஸ்து: எரேமியாவில் கிறிஸ்துவைப்பற்றி பல வகையாக சித்திரங்கள் உள்ளன. அவர் நித்திய ஜீவ ஊற்றாகவும் (2:13; யோவாள் 4:14) கீலேயாத்தின் பிசின் தைலமாகவும் (8:22) நல்ல மேய்ப்பன் (23:4) நீதியின் கிளை (23:5) நம்முடைய நீதியின் கர்த்தர் என்றும் (23:6) புது உடன்படிக்கை கொண்டு வருபவர் (31:31-34) என்றும் கூறப்பட்டுள்ளார்.

மேசியா சம்பந்தப்பட்டவைகள் எரேமியாவின் மற்றொரு தீர்க்கதரிசனமாகும். யோயாக்கீன் (ஜெக்கோனியா, கோனியா) மேலுள்ள சாபமே அவர்களது பரம்பரை ஆட்சிக்கு வராததற்குக் காரணமாகும் (22:28-30). மத்தேயு 1:1-17ல் இயேசுவின் மூதாதையர் பட்டியலைக் காண்கிறோம்: இது சாலொமோன், ரெகேபெயாம் முதல் இயேசுவின் தகப்பனாராகிய (சரீரப் பிரகாரமாக அல்ல சட்ட பூர்வமாக) யோசேப்பு வரை கூறுகிறது. யோயாக்னுடைய சாபத்தில் யோசேப்பின் உண்மையான பிள்ளைகள் ஒருவராகிலும் தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்க இயலாது போனது. லூக்கா 3:23-38 வசனங்கள் கிறிஸ்துவின் வம்ச பட்டியலை, (சரீரப் பிரகாரமான) தாயான மரியாளிருந்து பின்னோக்கி தாவீதின் குமாரன் நாத்தான் (லூக்கா 3:31) வரை கூறுகிறது. இதன் மூலம் சாபம் தவிர்க்கப்பட்டு நீதியின் கிளையே தாவீதின் சிங்காசனத்தில் வீற்றரசாளுவார் என கூறப்படுகிறது.[38]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கமான குறிப்பு

1. **எரேமியாவின் அழைப்பும், ஊழியமும் (1:1-19)**
   a. அழைப்பு (1;1-10)
   b. அழைப்பின் உறுதி (1:11-19)

2. **யூதேயாவைக் குறித்த தீர்க்கதரிசனங்கள் (2:1-45:5)**
   a. யூதேயாவைக் குறித்த தண்டனை (2:1-25:38)

1) யூதர்கள் வேண்டுமென்றே செய்த பாவம் (2:1-3:5)

2) யூதர்களுக்கான தண்டனை (3:6-6:30)

3:6-10	4:19-31	6:1-21
3:11-25	5:1-13	6:22-30
4:1-18	5:14-31	

3) யூதர்களின் தவறான மதப்பற்று (7:1-10:25)

7:1-34	9:1-26
8:1-22	10:1-25

4) யூதர்கள் தேவ உடன்படிக்கையை மீறுதல் (11:1-13:27)

11:1-17	12:1-6	13:1-11
11:18-23	12:7-17	13:12-27

5) யூதருக்கு வந்த கடுமையான பஞ்சம் (14:1-15:9)

14:1-12	14:13-22	15:1-9

6) யூதருக்குத் தீர்க்கதரிசனம் - மீண்டும் ஒப்படைப்பு (15:10-16:13)

15:10-21	16:1-13

7) யூதர்களின் பாவங்கள் (16:14-17:27)

16:14-21	17:1-18	17:19-27

8) யூதாவும் பரிசுத்த குயவனும் (18:1-23)

9) யூத மக்கள் உடைக்கப்பட்ட கலசமாக (19:1-20:18)

19:1-15	20:1-6	20:7-18

10) யூத அரசர்கள் (21:1-23:8)

21:1-14	22:13-30
22:1-12	23:1-8

11) யூதாவின் கள்ளத்தீர்க்கதரிசிகள் (23:9-40)

12) யூதர்களின் சிறையிருப்பு (24:1-25:38)

24:1-10	25:12-31
25:1-11	25:32-38

b. எரேமியாவின் போராட்டம் (26:1-29:32)

1) எரேமியாவின் ஊழியத்துக்கு யூதர்களின் எதிர்தாக்குதல் (26:1-24)

26:1-6	26:7-15	26:16-24

2) எரேமியா யூதர்களுக்கு தந்த ஆலோசனை: நேபுகாத்நேசர்க்கு அடங்கியிருக்கும்படி அறிவுரை (27:1-29:32)

27:1-22	28:1-17	29:1-32

c. யூதருக்கு பாதுகாப்பின் உறுதிமொழி (30:1-33:26)

30:1-17	31:27-40	33:1-13
30:18-24	32:1-15	33:14-26
31:1-26	32:16-44	

d. எருசலேம் அழிக்கப்படும்முன் (34:1-38:28)

34:1-22	36:20-26	38:1-16
35:1-11	36:27-32	38:17-28
35:12-19	37:1-10	
36:1-19	37:11-21	

e. எருசலேமின் அழிவு (39:1-18)

39:1-10	39:11-18

f. எருசலேம் அழிவுக்குப் பின்விளைவுகள் (40:1-45:5)

40:1-16	42:1-22	44:20-30
41:1-10	43:1-13	45:1-5
41:11-18	44:1-19	

3. யூதரல்லாத புறமக்களுக்கு தீர்க்கதரிசனம் (46:1-51:64)

a. எகிப்துக்கு எதிரான தீர்க்கதரிசனம் (46:1-28)

b. பெலிஸ்தருக்கு எதிரான தீர்க்கதரிசனம் (47:1-7)

c. மோவாபியருக்கு எதிரான தீர்க்கதரிசனம் (48:1-47)

d. அம்மோனியருக்கு எதிரான தீர்க்கதரிசனம் (49:1-6)

e. ஏதோமியருக்கு எதிரான தீர்க்கதரசனம் (49:7-22)

f. தமஸ்குவுக்கு எதிராக தீர்க்கதரிசனம் (49:23-27)

g. அரபியாவுக்கு எதிராக தீர்க்கதரிசனம் (49:28-33)

h. ஏலாமியருக்கு எதிராக தீர்க்கதரிசனம் (49:34-39)

i. பாபிலோனுக்கு எதிராக தீர்க்கதரிசனம் (50:1-51:64)

50:1-20	50:41-46	51:27-44
50:21-32	51:1-10	51:45-58
50:33-40	51:11-26	51:59-64

4. **சரித்திரத்தின் அடிப்படையில் (52:1-34)**
   a. எருசலேமின் நிலை (52:1-23)
   b. சிலமக்களின் நிலை (52:24-34)

புலம்பல்
(கண்ணீரின் நதி)

நூலாசிரியரும், புத்தகத்தின் பெயரும்: இப்புத்தகத்தின் நூலாசிரியர் பெயர் இதில் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் இரு வரிகள் எரேமியா தான் ஆசிரியரென பறை சாற்றுகிறது.

இப்புத்தகத்தின் தலைப்பு "எப்படி?" என்பதாகும். இது தான் 1:1; 2:1; 4:1 மற்றும் வசனங்களிருக்கும் முதல் வார்த்தையாகும். இதிலுள்ள பொருளடக்கத்தின் அடிப்படையில் யூத பாரம்பரியப்படி "புலம்பல்" என்று பொருளாகும்.

எழுதப்பட்ட காலம்: கிமு 586 அல்லது 585. எருசலேம் நகரம் 586ல் அழிந்தவுடனே எழுதப்பட்டுள்ளதால் எழுதப்பட்ட காலம் அதிக பட்சம் கி.மு. 586 ஆக இருக்கலாம். வரலாற்று பின்னணி புலம்பல் எழுதிய காலம் கி.மு. 586 அல்லது 585 என காட்டுகிறது.

கருப்பொருளும், நோக்கமும்: இப்புத்தகத்தின் ஒரு கருப்பொருள் பாவத்தில் வீழ்ந்த தென்தேசமாகிய யூதாவின் துன்பத்துக்காக அழுதலாகும். அது எருசலேம் மற்றும் ஆலயத்தின் அழிவை விளக்குகிறது. யூதாவின் பாவத்திற்கான தேவன் குறித்திருந்த நியாயத்தீர்ப்பு வந்தது. இரண்டாம் கருப்பொருள் பாவத்திற்கான, நியாயத்தீர்ப்பு. இதில் தீர்க்கதரிசியானவர், கடவுள் எல்லாவற்றிலும் நேர்மையும், நீதியுமுள்ளவர், அவரிடம் கிருபையைத் தேட வேண்டுமென வேண்டுகிறார்.

எரேமியாவையும் புலம்பலையும் ஒப்பிடும்போது இரண்டு புத்தங்களிலுமுள்ள எரேமியாவின் முக்கிய பங்கு விளங்குகின்றது.[39]

எரேமியா	எருசலேமின்	புலம்பல்
(எச்சரிப்பு)	அழிவும்	(அழுகை)
எதிர்	தோல்வியும்	பின்னாகத்
நோக்கியிருத்தல்		திரும்பிப்பார்ப்பது

முக்கிய நபர்: எரேமியா

புலம்பல் கிறிஸ்து: புலம்பல் கிறிஸ்துவை இரு விதங்களில் சித்தரிக்கின்றது: (1) கிறிஸ்து, துக்கம் நிறைந்த மனிதனாக, பாடு அனுபவித்தவரும், அசட்டை பண்ணப்பட்டவரும், அவரது விரோதிகளால் வெறுக்கப்பட்டவருமாயிருந்தார் (1:12; 2:15-16; 3:14, 19, 30). (2) அழிக்கப்பட்ட எருசலேமைப் பார்த்து எரேமியா கண்ணீர் விட்டது இயேசு எருசலேமைப் பார்த்து கண்ணீர் விட்டதை ஒத்ததாக இருக்கிறது (மத்தேயு 23:37-38).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **எருசலேமின் அழிவு (1:1-22)**
   a. தீர்க்கதரிசியின் புலம்பல் (1:1-11)
   b. எருசலேம் நகரத்தைப் பற்றிய புலம்பல் (1:12-22)

2. **தமது ஜனங்கள்மீது ஆண்டவரின் கோபாக்கினை (2:1-22)**
   a. தேவனுடைய கோபாக்கினை (2:1-10)
   b. நூலாசிரியரின் புலம்பல் (2:11-22)

3. **துன்பமடைந்த தீர்க்கதரிசி (3:1-66)**
   a. அவரது புலம்பல் (3:1-18)
   b. அவரது நம்பிக்கை (3:19-42)
   c. அவரது துன்பம் (3:43-54)
   d. அவரது ஜெபம் (3:55-66)

4. **தோல்விவுற்ற எருசலேம் மக்கள் (4:1-22)**
   a. நகரத்தின் முற்றுகை (4:1-12)
   b. முற்றுகையின் காரணம் (4:13-20)
   c. எதிர்கால நம்பிக்கை (4:21-22)

5. **புதுப்பிக்கப்படும்படி விண்ணப்பம் செய்தல் (5:1-22)**
   a. அறிக்கையிடுதல் (5:1-18)
   b. விண்ணப்பம் செய்தல் (5:19-22)

எசேக்கியேல்
(நானே கர்த்தரென்று அவர்கள் அறிந்துகொள்வார்கள்)

நூலாசிரியரும், நூன் பெயரும்: நூலாசிரியராகிய எசேக்கியேல் ஓர் ஆசாரியன். தந்தையின் பெயர் பூசி. இவர் பாபிலோனில் கைதியாக இருந்தபோது, ஒரு தீர்க்கதரிசியாக கர்த்தருடைய அழைப்பு அவருக்கு உண்டானது (1:1-3). இவரது தீர்க்கதரிசன ஊழியத்தில், அவருக்கு ஆலயம், அவரது ஆசாரியத்துவம், பகள் மற்றும் கடவுளின் மகிமை ஆகியவற்றின் மீதுள்ள கரிசனை விளக்குகின்றன. எசேக்கியா நூல் முழுவதும் எசேக்கியா காணப்படுகிறார். இவர் மணமானவர் (24:15-18), தன் சொந்த இல்லத்திலேயே வாழ்ந்தார் (3:24; 8:1). மற்ற அகதிகளோடு சமமாகப் பழகி வாழ்ந்தவர்.

ஏசாயா, எரேமியா போன்ற நூல்களைப் போல் எசேக்கியலும் தன் நூலாசிரியர் எசேக்கியாவின் பெயரையே பெற்றுள்ளது. எசேக்கியேல் என்பதற்கு "தேவன் பெலப்படுத்துகிறார்" தேவனால் "பெலப்படுத்தப்படுகிறேன்" என்பது பொருளாகும்.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 593-571. எசேக்கியேல் என்ற நூல் அநேக காலங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதன் மூலம் தீர்க்கதரிசனங்களின் காலத்தை தவறின்றி அறியமுடிகிறது. பதின்மூன்று தேதிகளில் பன்னிரெண்டு நாட்கள் தேவனிடமிருந்து எசேக்கியா செய்தி பெற்றுக் கொண்ட காலத்தைக் குறிக்கிறது. மற்றொரு நாள், அறிவிப்பாளர் ஒருவர் எருசலேம் வீழ்ச்சியை அறிவிக்க வந்ததை (33:21) குறிப்பிடுகிறது. கி.மு. 593ல் ஜூலை மாதத்தில் தீர்க்கனாக அழைப்பு பெற்ற எசேக்கியேல் 22 ஆண்டுகள் தம் பணியை நன்கு செய்தார் அவர் கடைசியாக கி.மு. 571ல் தேவ வாக்கைப் பெற்றார்.

கருப்பொருளும் நோக்கமும்: எதிர்காலத்தில் தேவன் செய்யப் போவதைக் குறித்த கண்ணோட்டத்தில் எசேக்கியேல் இஸ்ரவேலரிடம் அவர்கள் பாவங்களுக்கான ஆக்கினையை (1-32), குறித்து பேசி கண்டிக்கவும் ஆறுதல் சொல்லவும் செய்கிறார் (33-48).

முக்கிய நபர்: பூசியின் மகனாகிய எசேக்கியேல், பாபிலோன் சிறைவாசத்துக்கு முன்னும் பின்னும், இஸ்ரவேலருக்கு தீர்க்கதரிசியாக செயல்பட்டார்.

எசேக்கியேல் கிறிஸ்து: மேசியாவாகிய கிறிஸ்து ஓர் மெல்ய சிறுகிளை பெரிதும், உயரமுமான மலைமேல் நாட்டப்பட்டது போல் (17:23-24) சித்தரிக்கப்பட்டுள்ளார். இது ஏசாயா (11:1) எரேமியா (23:5; 33:15) மற்றும் சகரியா (3:8; 6:12) ஆகியவற்றில் சித்தரிக்கப்பட்டுள்ளதற்கு இணையாகவுள்ளது. மேலும் எசேக்கியேல், மேசியாவை, ஆட்சி செய்ய அதிகாரம் பெற்ற இராஜாவாகவும் (21:26-27) உண்மையான மேய்ப்பனாக ஊழியம் செய்கிறவர் என்றும் கூறுகிறார் (34:11-31).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **எசேக்கியேல் அழைப்பும் ஊழியமும் (1:1-3:27)**
   a. எசேக்கியேல் இறைவனின் மகிமையின் காண்கிறார் (1:1-28)
      1: 1-21 1: 22-28
   b. ஆண்டவர் வார்த்தையை அறிவிக்க அழைக்கப்படுகிறார் (2:1-3-27)
      2:1-10 3:1-15 3:16-27

2. **எருசலேம் யூதேயா மீது இப்போதைய நியாயத்தீர்ப்பு (4:1-24:27)**
   a. வரப்போகும் நியாயத்தீர்ப்புக்கான நான்கு அடையாளங்கள் (4:1-5:17)
      4:1-8 4:9-17 5:1-17
   b. வரப்போகும் நியாயத்தீர்ப்புக்கான இரண்டு செய்திகள் (6:1-7:27)
      6:1-14 7:1-19 7:20-27

c. தரிசனங்கள் மூலம் நான்கு தீர்க்கதரிசனங்கள் (8:1-11:25)

8:1-18	10:1-22	11:14-25
9:1-1111: 1-13		

d. நியாயத் தீர்ப்புக்கான நிச்சயமும் அதன் விளைவுகளும் (12:1-24:27)

12:1-28	17:1-10	21:18-32
13:1-23	17:11-24	22:1-31
14:1-11	18:1-32	23:1-21
14:12-23	19:1-14	23:22-49
15:1-8	20:1-32	24:1-14
16:1-59	20:33-49	24:15-27
16:60-63	21:1-17	

3. **புற இன நாடுகளுக்கு எதிரான தீர்க்கதரிசனங்கள் (25:1-32:32)**

a. அம்மோனியருக்கு எதிராக (25:1-7)
b. மோவாபியருக்கு எதிராக (25:8-11)
c. ஏதோமியருக்கு எதிராக (25:12-14)
d. பெலிஸ்தியர்க்கு எதிராக (25:15-17)
e. தீருவுக்கு எதிராக (26:1-28:19)
f. சீதோனுக்கு எதிராக (28:20-26)
g. எகிப்துக்கு எதிராக (29:1-32:32)

29:1-21	31:1-9	32:17-32
30:1-19	31:10-18	
30:20-26	32:1-16	

4. **இஸ்ரவேலர் புதுப்பிக்கப்படுதலுக்கான தீர்க்கதரிசனங்கள் (33:1-48:35)**

a. இஸ்ரவேலர் தங்கள் தேசத்திற்கு திரும்பிவருதல் (33:1-39:29)

33:1-20	36:1-21	37:24-28
33:21-33	36:22-38	38:1-23
34:1-10	37:1-10	39:1-24
34:11-31	37:11-14	39:25-29
35:1-15	37:15-23	

b. இஸ்ரவேலர் தங்கள் இராஜ்யத்தில் நிலைநிறுத்தப்படுதல் (40:1-48:35)

40:1-4	44:1-14	47:13-23
40:5-49	44:15-31	48:1-9
41:1-26	45:1-6	48:10-20
42:1-20	45:7-25	48:21-22
43:1-12	46:1-18	48:23-29
43:13-17	46:19-24	48:30-35
43:18-27	47:1-12	

தானியேல்
(இஸ்ரவேலரின் கடைசித் இலக்கு)

நூலாசிரியரும், புத்தகத்தின் பெயரும்: தானியேல் தாமே கூறுவது போல் (12:4) இருப்பதாலும், "நான்" என்ற வார்த்தை 7:2 வசனம் முதலாக வருவதால் தானியேல்தான் இந்த தீர்க்கதரிசன புத்தகத்தின் ஆசிரியர் எனத் தெளிவாகிறது. வாபனாக இருந்தபோது தானியேல் கி.மு. 605ல் பாபிலோனுக்கு சிறைபிடித்து நேபுகாத்நேச்சாரால் கொண்டு போகப்பட்டான். அங்கு நேபுகாத்நேச்சார் மற்றும் தரியு அரச சபையில் இராஜ நிர்வாகியாக இருந்தான். அவன் தீர்க்கதரிசியாக பதவி வகிக்காவிடினும், கிறிஸ்துவானவர் அவனை தீர்க்கதரிசியென மத்தேயு 24:15, மாற்கு 13:14ல் குறிப்பிடுகிறார்.

இதன் நூலாசிரியரின் பெயரே. தானியேல் என்பதற்கு "தேவன் நியாயாதிபதியாயிருக்கிறார் அல்லது தேவன் என்னுடைய நீதிபதி" என்று பொருள்.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 537. நேபுகாத்நேச்சார் எருசலேமைக் கைப்பற்றி தானியேலையும் அவனோடிருந்த பிற இளைஞரையும் அடிமைப்படுத்தி பாபிலோனுக்கு கி.மு. 605 கொண்டு சென்ற போது அங்கு அடிமையாக இருந்த காலத்தில் தானியேல் எழுதப்பட்டது.

கருப்பொருளும், நோக்கமும்:தானியேன் கருப்பொருளாவது, ஒரே உண்மையான தேவனின் வல்லமை, உலகத்தை நியாயந்தீர்த்து, உலக வல்லமைகளையும் முரட்டாட்டத்தையும் முறியடித்து, தமது மக்களை அவர்கள் விசுவாசத்தின்படி மீட்டெடுத்தலாகும். அந்நிய ஆதிக்க நாட்களில் தலைமறைவாயிருந்த இஸ்ரவேலரைக் குறித்து, தேவனின் திட்டங்களை எடுத்துக்காட்ட, அவர்களை ஊக்குவிக்க இப்புத்தகம் எழுதப்பட்டது.

முக்கிய நபர்கள்: தானியேல், பாபிலோனுக்கு இளைஞனாயிருக்கும்போது சிறைப்பிடித்துச் செல்லப்பட்டவர். அரசாங்க வேலை செய்தார். புறவின மற்றும் யூத ஜனங்களுக்கு தேவனுடைய சார்பில் பேசினார். சாத்ராக், மேஷாக் ஆபேத்நேகோ என்ற மூன்று யூத வாபர்களும் தானியேலுடன் சிறப்பு பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களின் முந்தைய பெயர்கள் அனனியா, மீஷாவேல், அசரியா என்பவையாகும்; தானியேலோடு பிரத்தியேக பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். மற்ற முக்கிய நபர்கள் நேபுகாத்நேச்சார், இவர் கி.மு. 605ல் பாபிலோனின் இராஜாவாகவிருந்தார். தரியு பெல்சாத்சாருக்குப் பின் இராஜாவாக வந்தவர். பாரசீக மன்னராகிய கோராகு. மேலும் தானியேலுக்கு பணிபுரிந்த மிகாவேல் என்ற தேவதூதன் (தானியேல் 10) என்பவர்களாகும்.

தானியேலில் கிறிஸ்து: வரப்போகும் மேசியாவாக கிறிஸ்து தானியேல் புத்தகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளார். அந்த மேசியா 9:25-26 படி வெட்டப்படுவார். ஆயினும் கிறிஸ்து ஓர் பெரிய கல்லாகவும் பெயர்ந்து வந்து உலகில் உள்ள நாடுகளை நொறுக்கிப் போடுவது போலவும் (2:34, 45ல்) மனுஷகுமாரனாகவும் (7:13), அநாதி காலமாகவும் (7:22) சித்தரிக்கப்பட்டுள்ளது தானியேல் 10:5-9ல் கூறப்பட்டது அநேகமாக கிறிஸ்து தோன்றுதலைக் குறிக்கிறது (வெளிப்படுத்தல் 1:12-16).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **தானியேன் சொந்த வரலாறு (1:1-21)**
   a. பாபிலோனின் சிறையிருப்பில் தானியேல் (1:1-7)
   b. பாபிலோனில் அவனது நேர்மை (1:8-16)
   c. பாபிலோனில் அவனது நல்ல பெயர் (1:17-21)

2. **யூதரல்லாத நாடுகளைக் குறித்த தீர்க்கதரிசனத் திட்டம் (2:1-7:28)**
   a. பெரிய சிலையைக் குறித்து நேபுகாத்நேச்சாரின் கனவு (2:1-49)
      2:1-18 2:36-38 2:44-45
      2:19-30 2:39 2:46-49
      2:31-35 2:40-43
   b. எரியும் அக்கினிச் சூளை ஒரு விசுவாசத்திற்கான பாடம் (3:1-30)
      3:1-7 3:8-18 3:19-30
   c. நேபுகாத்நேச்சாரின் கனவு - பெரிய விருட்சம் (4:1-37)
      4:1-3 4:19-27
      4:4-18 4:28-37
   d. பெல்ஷாத்சாரின் விருந்து: சுவரில் தோன்றிய கை எழுத்துக்கள் (5:1-31)
      5:1-12 5:13-29 5:30-31
   e. தரியுவின் புத்தியீனமான செயல் சிங்கக் குகையில் தானியேல் (6:1-28)
      6:1-15 6:16-28
   f. நான்கு பெரிய மிருகங்களைக் குறித்து தானியேன் கனவு (7:1-28)
      7:1-8 7:13-14
      7:9-12 7:15-28

3. **இஸ்ரவேலரைக் குறித்த தீர்க்கதரிசனத் திட்டங்களை குறித்த தானியேன் கனவு (8:1-12:13)**
   a. தானியேன் தீர்க்கதரிசனத்தால் வெள்ளாட்டுக் கடா, ஆட்டுக்கடா, மற்றும் சிறிய கொம்பு (8:1-27)
      8: 1-8 8: 15-19
      8: 9-14 8: 20-27
   b. ஒரு வருடத்தின் 70 வாரங்களைக் குறித்ததான தானியேன் தீர்க்கதரிசனம் (9:1-27)
      9: 1-19 9: 20-23 9: 24-27
   c. இஸ்ரவேலரின் வருங்கால தரிசனத்தைக் குறித்தான தானியேன் தீர்க்கதரிசனம் (10:1-12:13)
      10:1-9 11:14-19 11:40-45
      10:10-21 11:20-28 12:1-4
      11:1-4 11:29-35 12:5-13
      11:5-13 11:36-39

பகுதி 5
சிறிய தீர்க்கதரிசிகள்

“சிறிய தீர்க்கதரிசிகள்” என்ற வார்த்தை: வேதத்தில் 12 புத்தகங்களுக்கு பொதுவான தலைப்பாக “சிறிய தீர்க்கதரிசிகள்” இருக்கிறது. கி. பி. நான்காம் நூற்றாண்டிற்கு பிறகு இந்த தலைப்பு தோன்றியது. ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் (பெரிய தீர்க்கதரிசிகள்) புத்தகங்களைக் காட்டிலும் இதிலுள்ள செய்திகள் குறைந்ததாக இருப்பதனால், இந்தப் புத்தகங்கள் சிறிய தீர்க்கதரிசிகள் எனப்படுகின்றன. பழைய மற்றும் ஏற்பாட்டுக் காலத்தில், பழைய ஏற்பாடு “நியாயப்பிரமாணம் மற்றும் தீர்க்கதரிசனம்” என அழைக்கப்பட்டது.

தீர்க்கதரிசன ஊழியத்தின் தோற்றம்: இஸ்ரவேல் தேசத்தின் மூலம் எல்லா தேசமும் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்பது தேவனின் நோக்கமாக இருந்தது. இந்த நோக்கத்தில் தீர்க்கதரிசன ஊழியம் தோன்றியது. தேவன் இஸ்ரவேலருக்கு நியாயபிரமாணத்தைக் கொடுத்த பொழுது, மக்கள் அதற்குக் கீழ்ப்படிந்தால், எல்லா தேசங்கள் மத்தியில் “இராஜ்யத்தின் ஆசாரியராகவும், பரிசுத்த ஜாதியாகவும்”, இருக்கும்படியாக ***“தேவனின் சொத்துக்களாக”*** வும் இருப்பார்கள் என வாக்குத்தத்தம் செய்தார். (யாத்திராகமம் 19:5-6; உபாகமம் 4:6-8). மக்கள் புறஜாதி தேசத்தின் வழியிலும் அவர்கள் விசுவாசத்திலும் போனார்கள் என்றால், இந்த வாக்குத்தத்த நோக்கம் நிறைவேறாது. மோசேயின் மரணத்திற்கு சற்று முன்னதாக தாங்கள் போகும் தேசம் செல்லத் தயாராகுகையில் எதிர்காலத்தை அல்லது தேவ சித்தத்தை அறிய நாள் பார்க்கிறதையும், குறிகேட்கும் முறைகளையும் தேவன் மோசேயின் மூலம் முழுமையாய்க் கண்டனம் செய்தார் (உபாகமம் 18:9-14). அப்படியென்றால் எப்படி தேவனின் திட்டத்தை அறிய முடியும்? தேவன் மக்களுக்குத் தம்முடைய சித்தத்தை வெளிப்படுத்தும் உண்மையான, சட்டத்திற்குட்பட்ட வழி உபாகமம் 18:15-22 வசனங்களில் அதன்படி கொடுக்கப்பட்டுள்ளது,

> ***உன் தேவனாகிய கர்த்தர் என்னைப் போல ஒரு தீர்க்கதரிசியை உனக்காக உன் நடுவே உன் சகோதரரிருந்து எழும்பப் பண்ணுவார்; அவருக்குச் செவிகொடுப்பீர்களாக. ஓரேபிலே சபை கூட்டப்பட்ட நாளில்: நான் சாகாதபடி என் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தை இனி நான் கேளாமலும், இந்தப் பெரிய அக்கினியை இனி நான் காணாமலும் இருப்பேனாக என்று உன் தேவனாகிய கர்த்தரை நீ வேண்டிக்கொண்டதின்படியெல்லாம் அவர் செய்வார். அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி: அவர்கள் சொன்னது சரியே. உன்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை நான் அவர்களுக்காக அவர்கள் சகோதரரிருந்து எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்; நான் அவருக்குக் கற்பிப்பதையெல்லாம் அவர்களுக்குச் சொல்லுவார். என் நாமத்தினாலே அவர் சொல்லும் என் வார்த்தைகளுக்குச் செவிகொடாதவன் எவனோ அவனை நான் விசாரிப்பேன். சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத் துணியும் தீர்க்கதரிசியும், வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக்கடவன். கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல்வாயாகில், ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும்போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை; அந்தத் தீர்க்கதரிசி அதை துணிகரத்தினால் சொன்னான்; அவனுக்கு நீ பயப்படவேண்டாம்.***

இந்த வெளிப்பாடு வேதத்தின் துவக்கத்தையும், தீர்க்கதரிசனத்தின் அவசியத்தையும் விளக்குகிறது. மேலும் இதனால் ஆபிராமின் உடன்படிக்கையில் குறிப்பிட்டபடி (ஆதியாகமம் 12:1-3) நாடுகள் தேவனின் நோக்கத்தை நிறைவேற்ற முடிந்தது. அவர்களுக்கு முக்கிய வாக்குத்தத்தங்களையும், எச்சரிப்பையும் கொடுத்தார். இவையாவும் உபாகமம் 28-30ல் ஆசீர்வாதங்களும், சாபங்களும் என்ற பகுதியில் கூறப்பட்டுள்ளன. கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதங்களும், கீழ்ப்படியாவிட்டால் சாபங்களும் உண்டு. ஆனால் தீர்க்கதரிசனங்கள் இவற்றில் எவ்வாறு பொருந்தும்? ***“கர்த்தர் சத்தத்திற்கு கீழ்ப்படியாமற் போவாயாகில் இப்போது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து உனக்கு பக்கும்”*** என்ற வார்த்தையுடன் செல்வதால்தான். அதாவது, உபாகமம் 28-30ல் காணப்படும் தேவனின் எச்சரிப்புப்படி நடக்கும் (நடக்க கூடும்), தீர்க்கதரிசிகள் பாவத்தைக் குறித்த நியாயத்தீர்ப்பும் எச்சரிக்கையும் பழைய ஏற்பாட்டை எழுதியபோது உள்ள சூழ்நிலையின் வெளிச்சத்தில் காணப்பட வேண்டும்.

தீர்க்கதரிசிகள் வெறும் எச்சரிப்புகளை மட்டுமல்ல இரட்சிப்பின் செய்திகளையும் வரப்போகும் ஆண்டவரின் மகிமைப்பற்றியும் கூறினார்கள். தேவனுடைய நோக்கம் அவரது மக்களின் வாழ்க்கையில் அவரது மேன்மையான வேளையில் நிறைவேறும். சில வேளைகளில் இரட்சிப்பின் செய்தி தாங்கள் தரிசனத்தில் கண்ட சில குறிப்பிட்ட செய்திகளில் விளங்குகிறது (தானியேல் 9:24-27 மற்றும் 70 வாரம்). மற்ற நேரங்களில் ஆபிரகாம், தாவீது போன்றோர்க்கு கொடுத்த ஆண்டவரின் வாக்குத்தத்தங்களை உரிமை கொண்டாடுவதாகவும் பலருக்கும் கூறுவதாகவும் அமையும்.

சிறிய தீர்க்கதரிசிகளின் மொழி நடை: தீர்க்கதரிசிகளைப்பற்றிப் படிக்கும்போது அவர்கள் அனைவருக்கும் ஒரே வித அடிப்படைப் பண்புகள் இருப்பதைக் காணலாம். (1) தேசத்தின் பாவங்களினால் வரும் நியாயத்தீர்ப்பைப் பற்றி எச்சரித்தல் (2) பாவத்தைக் குறித்து விளக்கம் கொடுத்தல் (3) வரப்போகும் நியாயத்தீர்ப்பு குறித்து விளக்கம் (4)மனந்திரும்புதலுக்கான அழைப்பு மற்றும் (5)வரப்போகும் மீட்பின் வாக்குத்தத்தத்தைக் கொடுத்தல் போன்றவையாகும்.

எங்கே ஒரு சிந்தைகளின் தொகுப்பு முடிந்து மற்றொன்று ஆரம்பிக்கின்றதென்று அறிவதே ஒரு தீர்க்கதரிசன புத்தகத்தின் சுருக்கத்தை அறியும் திறவு கோலாகும்.[40] தீர்க்கதரிசிகள் “கர்த்தர் சொல்லுகிறதாவது...” என்ற ஆரம்ப வரிகளை உபயோகித்து அதே போன்ற அல்லது வரிகளுடன் முடிப்பார்கள்.

வம்ச வரலாறு பற்றிய கண்ணோட்டம்:

வேதாகமத்தில் சிறிய தீர்க்கதரிசிகளின் வரிசை

1. ஓசியா 2. யோவேல் 3. ஆமோஸ்	4. ஒபதியா 5. யோனா 6. மீகா	7. நாகூம் 8. ஆபகூக் 9. செப்பனியா	10. ஆகாய் 11. சகரியா 12. மல்கியா

சிறைப்பட்டுச் சென்றபடி மற்றும் இஸ்ரவேல் மற்றும் யூத இராஜ்ஜியங்களின்படி பகுத்தல்

பகுதி	புத்தகம்	காலம் ஏறத்தாழ (கி.மு.)
சிறையிருப்புக்கு முன்னான காலம்: இஸ்ரவேன் தீர்க்கதரிசிகள்	யோனா ஆமோஸ் ஓசியா	793-753 760 755-715
யூதாவின் தீர்க்கதரிசிகள்	ஒபதியா யோவேல் மீகா நாகூம் செப்பனியா ஆபகூக்	840 835-796 700 633-612 630-625 600
சிறையிருப்புக்கு பின்னான காலம் மீதமுள்ள தீர்க்கதரிசிகள் நாடு திரும்பியவர்கள்	ஆகாய் சகரியா மல்கியா	520 520-518 450-400

ஓசியா

(அன்பைக் காத்துக்கொள்ளுதல்)

நூலாசிரியரும், நூன் பெயரும்: முதலாம் வசனத்தில் கூறியிருப்பது போல் நூலாசிரியர் ஓசியா, தந்தை பெயர் பெயேரி. அவர் கோமேரின் கணவன் (1:3). அவன் வட பகுதியாகிய இஸ்ரவேல் நாட்டின் குடிமகனாயிருந்திருக்க வேண்டும். அதனால்தான் நாட்டின் வடபகுதி மேல் அக்கறையுடையவராயிருந்தார். சமாரிய நாட்டரசரை "நம்முடைய ராஜா" (7:5) என்றழைத்தார். ஓசியா புத்தகத்திருந்து தான் நூலாசிரியராகிய ஓசியாவைப் பற்றி அறிகிறோம்.

நூலாசிரியர் பெயரே நூன் பெயராகும். ஓசியா வடநாட்டையாண்ட கடைசி இராஜாவாகிய ஓஷியா என்பவரின் பெயரை ஒத்ததாகும். வேறுபாட்டைக் காட்டவே சிறிய தீர்க்கதரிசியை ஓசியா என்று வேதம் கூறுகிறது. ஓசியா, யோசுவா, இயேசு என்ற பெயர்கள் எபிரெய மொழியின் ஒரே பெயர்ச்சொல்லாகிய ஓஷியா என்பதிருந்து (அர்த்தம் "இரட்சிப்பு") பிறந்தது வியப்புக்குரியதாகும். ஆயினும் யோசுவா, இயேசு என்ற இரு சொற்களும் "யெகோவாவே இரட்சகர்" என்ற உண்மையை வயுறுத்தின. இறைவன் தூதுவராக வந்த ஓசியா நாட்டின் மக்கள் சிலை வணக்கத்தை விட்டு கடவுளிடம் திரும்பினால் நாட்டிற்கு இரட்சிப்பு கிடைக்கும் எனக் கூறினார்.

எழுதிய காலம்: ஓசியா கி.மு. 755-715. உசியா (கி.மு. 767-739) யோதாம் (கி.மு. 739-731) ஆகாஸ் (கி.மு. 731-715) மற்றும் (கி.மு. எசேக்கியா (715-686) ஆகிய யூதேய அரசர்கள் காலத்தில் ஊழியம் செய்தவராவார் (1:1). இஸ்ரவேலரை ஆண்ட இரண்டாம் யெரொபெயாம் (கி.மு. 782-752) நாட்களிலும் ஊழியம் செய்தார்.

பல பத்தாண்டு காலம் ஓசியாவின் ஊழியம் நீடித்திருந்தது. யூதேயா ராஜாவாகிய உசியாவின் (கி. மு. 790-739) கடைசி நாட்கள் முதல் இஸ்ரவேன் ராஜா இரண்டாம் யெரொபெயாம் (கி. மு. 793-753) ராஜ்யத்தின் முடிவுவரை நீடித்திருந்தது. எசேக்கியாவின் ஆளுகையின் துவக்க ஆண்டுகளிலும் ஓசியா ஊழியம் செய்தார். எசேக்கியாவின் ஆளுகை கி. மு. 715இல் துவங்கியது. அதற்கு முன்னர் அவரது தகப்பனார் ஆகாஸ் கூடவே சிறிதுகாலம் ஆட்சி செய்தார். ஓசியா பெரும்பாலும் இஸ்ரவேல் ராஜ்யத்துக்கே ஊழியம் செயதபடியால், அவருடைய நிருபத்தின் முதல் வசனத்தில் யூதாவின் நான்கு ராஜாக்கள் குறிப்பிடப்பட்டிருக்கும் வேளையில், ஒரேயொரு இஸ்ரவேல் ராஜாவின் பெயர் மட்டும் குறிப்பிடப்பட்டிருப்பது விநோதமாக இருக்கிறது. ஏன் இரண்டாம் யெரொபெயாமுக்குப் பின் வந்த ஆறு இஸ்ரவேல் ராஜாக்களின் பெயர்கள் விடப்பட்டிருக்கின்றன என்பது தெளிவாகத் தெரியவில்லை. ஒருவேளை வடக்கத்திய ஆளுகையின ஸ்திரமில்லாத தன்மை மற்றும் சிதைந்துபோகுதலுக்கு (7:3-7) எதிராக தாவீதின் ஆளுகை சட்டபூர்வமாக இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக (3:5). இவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கலாம்.[41]

மேலும் இரண்டாம் யெரொபெயாமுக்குப் பின்வந்த ஆறு இஸ்ரவேல் ராஜாக்களின் பெயர்கள் விடப்பட்டிருப்பதற்கு மற்றொரு காரணம் அவர்கள் முக்கியத்துவமில்லாதவர்கள் என்பதாக இருக்கலாம். இவர்கள் ஒவ்வொருவரும் நாமத்தின் மகனாகிய முதலாம் யெரொபெயாமின் பாவங்களைத் தொடர்ந்தார்கள். தெற்கத்திய ராஜ்யமாகிய யூதாவின் மறுமலர்ச்சியை உண்டாக்கிய ராஜாக்களைப்போல இஸ்ரவேல் ராஜ்யத்தில் எந்த ராஜாவும் நல்லவராக இருக்கவில்லை என்றே கூற வேண்டும்.

நோக்கமும், கருப்பொருளும்: ஓசியா எழுதப்பட்ட நோக்கம் இஸ்ரவேல் மக்கள் தொடர்ந்து உண்மையற்றவர்களாயிருப்பினும் தேவனுக்கு அவர்கள் மீதுள்ள உறுதியான அல்லது மாறாத அன்பை வெளிப்படுத்துவதேயாகும். ஓசியாவின் திருமண அனுபவத்தின்மூலமாக, இந்தப்

புத்தகம் அன்பும் மனதுருக்கமுமுள்ள தேவனுடைய இருதயத்தை வெளிப்படுத்துகிறது. அவர் தம்மைக் குறித்தும் தேவனை நெருக்கமாக அறிவது மனிதனுக்கு எத்தகைய அர்த்தத்தைக் கொடுக்கிறது என்பதைக் குறித்துமுள்ளஅறிவைக் கொடுப்பதின்மூலம் அவனை ஆசீர்வதிக்க விரும்புகிறார். இந்தக் கருப்பொருளின் அடிப்படையில், ஓசியா வடநாட்டினர் ஆண்டவரின் உடன்படிக்கைக்கு உண்மையாயிருக்கவில்லை என்பதை எடுத்துக் கூறுகிறார். அவர்கள் தனிப்பட்ட சமூக வாழ்க்கையில் நல்லொழுக்கம் அற்றவர்களாக இருந்தனர். ஆகையால் நூலாசிரியர் அவர்கள் மனம் திரும்பி பொறுமையும் அன்பும் உள்ள கர்த்தரிடத்தில் திரும்ப வேண்டுமென கூறுகிறார். இஸ்ரவேலர் மீது ஆண்டவர் கொண்ட அன்பினை தனது சொந்த பிள்ளைகள் மற்றும் உடன்படிக்கையின் மணவாட்டி மூலம் விளக்குகிறார்.

முக்கிய நபர்கள்: ஓசியா, கோமேர், இஸ்ரவேன் இராஜாவாகிய யெகூ

ஓசியாவில் கிறிஸ்து: ஓசியாவில் மேசியா, தேவனுடைய குமாரனாகவும் (11:1 மத்தேயு 2:15) தம்முடைய ஜனங்களின் ஒரே இரட்சகராகவும் (13:4 யோவான் 14:6), நம் பாவத்துக்காகத் தம்மையே கொடுத்தவராகவும், நம்மை மரணத்திருந்து விடுவிக்கும் ஒரே நபராகவும் (13:14, 1 கொரிந்தியர் 15:55), நம்மை மிகுந்த மனதுருக்கத்துடன் நேசிப்பவராகவும் (11:4) தம்மிடம் திரும்புகிறவர்களை குணப்படுத்துகிறவராகவும் (6:1) அறிமுகப்படுத்தப்படுகிறார்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை 1:1**

2. **இஸ்ரவேலரோடு இறைவனின் தொடர்பைச் சித்தரித்தல் (1:2–3:5)**
   - a. ஓசியாவின் குடும்பத்தின் தீர்க்கதரிசன இயல்புகள் (1:2–11)
     - 1) ஓசியாவின் திருமணம்: இஸ்ரவேலரின் உண்மையற்ற நிலை (1:2–3a)
     - 2) ஓசியாவின் பிள்ளைகள் – இஸ்ரவேலரின் நியாயத்தீர்ப்பு (1:3b–9)
     - 3) இஸ்ரவேலரின் எதிர்காலம் – பழைய நிலைக்கு வருதல் (1:10–11)
   - b. தண்டனை மூலம் பழைய நிலையை அடைதல் (2:1–23)
     - 1) இஸ்ரவேலரை இறைவன் தண்டித்தல் (2:1–13)
     - 2) இஸ்ரவேலரை இறைவன் பழைய நிலைக்குக் கொண்டு வருதல் (2:14–23)
   - c. ஓசியாவின் திருமணத்தைப் பழைய நிலைக்கு கொண்டு வருதல் (3:1–5)
     - 1) தெய்வீகக் கட்டளை (3:1)
     - 2) ஓசியாவின் கீழ்ப்படிதலான பதில் (3:2–3)
     - 3) உதாரணம் விவரிக்கப்பட்டுள்ளது (3:4–5)

3. **ஓசியாவின் செய்தி: இஸ்ரவேலை பழைய நிலைக்குக் கொண்டுவருவதும், நியாயத்தீர்ப்பும் (4:1–14:9)**
   - a. இஸ்ரவேலுக்கு எதிராகக் கர்த்தர் (4:1–6:3)
     - 1) இஸ்ரவேன் தவறு வெளிப்படுத்தப்படுதல் (4:1–19)
       4:1–3 | 4:7–10 | 4:15–19
       4:4–6 | 4:11–14
     - 2) இஸ்ரவேன் நியாயத்தீர்ப்பு கூறப்படுதல் (5:1–15)
       5:1–7 | 5:8–15
     - 3) இஸ்ரவேலர் பழையநிலைக்கு வருவதைப்பற்றிய தீர்க்கதரிசனம் (6:1–3)
   - b. இஸ்ரவேலருக்கு எதிராகக் கர்த்தர் (6:4–11:11)
     - 1) இஸ்ரவேன் தவறும், தண்டனையும் (6:4–8:14)
       6:4–11 | 7:8–16 | 8:8–14
       7:1–7 | 8:1–7
     - 2) இஸ்ரவேன் தவறும், தண்டனையும் திரும்பவும் கூறப்படுதல் (9:1–11:7)
       9:1–6 | 9:15–17 | 10:11–15
       9:7–9 | 10:1–2 | 11:1–4
       9:10–14 | 10:3–10 | 11:5–7
     - 3) திரும்பவும் தேவனுடைய கிருபை (11:8–11)
   - c. இஸ்ரவேலுக்கு எதிரான தேவனுடைய வழக்கு முடிவடைதல் (11:12–14:9)
     - 1) கடைசியில் தவறுகளைக் கூறுதல் (11:12–13:16)
       11:12–12:11 | 13:1–3 | 13:9–11
       12:12–14 | 13:4–8 | 13:12–16
     - 2) கடைசியில் ஊக்கமளித்தல் (14:1–9)
       14:1–3 | 14:4–7 | 14:8–9

யோவேல்
(யெகோவாவின் நாளின் வருகை)

நூன் பெயரும் நூலாசிரியரும்: நூலாசிரியர் யோவேல். அதன் அர்த்தம் ஞயெகோவாவே இறைவன்து என்பதாகும் (1:1). இந்த நூல் கர்த்தர் பரிசுத்தர். உலகை உருவாக்கியவர், நாடுகள் அவர் அதிகாரத்திலும், சரித்திர நாயகனாகிய அவர் கட்டுப்பாட்டிலும் உள்ளது என்பதை முக்கியத்துவப்படுத்தியுள்ளது. அவருடைய தகப்பனார் பெயர் பெத்துவேல் என்பதைத் தவிர வேறொன்றும் அவரைப் பற்றித் தெரியவில்லை (1:1).

எழுதிய காலம்: கி.மு. 835-796. எந்தக் கால கட்டத்தில் எழுதப்பட்டது என்று புத்தகத்தில் குறிப்பிடப்படாமையால், புத்தகத்திற்குள் நாம் காணும் ஆதாரங்களிருந்தும் அவற்றை தெரிந்த நிகழ்ச்சிகளுடன் ஒப்பிடுவதன் வாயிலாகவும், முடிந்த வரை காலத்தை அறிந்துகொள்ள வேண்டும். மக்கள் கி.மு. 835-400 என குறிப்பிட்டுள்ளனர். ஆயினும் காலத்தை சரியாகக் கணக்கிடுவது கடினம். தீரு, சீதோன். பெலிஸ்தியா, எகிப்து ஆகியோரிடமுள்ள பகைமையைக் காட்டுவதால் (3;4, 19), கி.மு. 835-796ல் எழுதியிருக்கலாமெனக் கருதுகிறோம். இஸ்ரவேலர் பாபிலோனுக்கு அடிமைகளாக கொண்டு செல்லப்படும் முன் தென் இராஜ்யத்தின் பகைவர்களாக கருதப்பட்டனர். அடிமைகளாக்கப் பட்ட பின்னர் அவர்களது எதிரிகள் அசீரியர், பாபிலோனியர், பெர்சியர்களாயிருக்கலாம்.

கருப்பொருளும் நோக்கமும்: வருங்காலத்தில் கர்த்தருடைய நாளில் இஸ்ரவேல் ஆக்கிரமிக்கப்படும் என்பதைக் குறஇத்த எச்சரிப்பைக் கொடுப்பதற்காக சமீபத்தில் யூதாவில் ஏற்பட்ட பஞ்சத்தையும் வெட்டுக்கிளிகளின் தாக்குதலையும் யோவேல் பயன்படுத்துகிறார். மிக குறைந்த நேரத்தில், ஒருசில மணி நேரங்களுக்குள்ளாக இந்த வெட்டுக்கிளிகள் எல்லாத் தாவரங்களையும் அழித்துவிட்டன. தேசமானது மனந்திரும்பி, கர்த்தரிடம் திரும்புமானால், தேவன் அதோடு தமது உறவைப் புதுப்பித்து, அதை ஆசீர்வதிப்பார் என்று யோவேல் சொல்லுகிறார். யோவேல் இதை எழுதிய வரலாற்றுப் பின்னணியில் இது உண்மையாக இருந்தது. வருங்காலத்தில் எந்தவொரு காலகட்டத்துக்கும் இது பொருத்தமாக இருக்கும்.

யோவேல் வாக்குத்தத்தம் பண்ணப்படும் இறுதியான வாக்குத்தத்தங்களையும் சீரமைப்பையும் அனுபவிக்க வேண்டுமானால், யூதர்கள் உபத்திரவத்தையும், பரிசுத்த ஆவியானவரின் பொழிதலையும் அனுபவிக்க வேண்டும். இந்த இரண்டுமே அவர்களைக் கிறிஸ்துவிடம் திரும்பி வரும்படி செய்யும்.

முக்கியமான நபர்: யோவேல்

யோவேல் கிறிஸ்து: கிறிஸ்துவானவர் பரிசுத்த ஆவியை ஊற்றுபவராகவும் (2:28; யோவான் 16:7-15; அப்போஸ்தலர் 1:8), தேசங்களை நியாயம் தீர்ப்பவராகவும் (3:2, 12), இஸ்ரவேலருக்கு அடைக்கலங் கொடுப்பவராகவும் இருப்பதாக சித்தரிக்கப்பட்டுள்ளார் (3:16).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **சரித்திரத்தில் கர்த்தருடைய நாள் (1:1-20)**
   - a. சரித்திரத்தில் வெட்டுக் கிளிகளினால் அழிவு (1:1-12)
     1:1-3   1:4-7   1:8-12
   - b. சரித்திரத்தில் வறட்சி ஏற்படுதல் (1:13-20)

2. **தீர்க்கதரிசனத்தில் கர்த்தருடைய நாள் (2:1-3:21)**
   - a. கர்த்தருடைய நாள் வருவதற்கு மிகவும் அவசியம் (2:1-27)
     1) யூதாவின் சிறையிருப்பு பற்றிய தீர்க்கத்தரிசனம் (2:1-11)
     2) யூதாவின் இரட்சிப்புக்கு அவசியமானவை (2:12-27)
        2:12-17   2:18-20   2:21-27
   - b. கர்த்தரின் கடைசி முக்கிய நாள் (2:28-3:21)
     1) கர்த்தர் வருவதற்கு முன்னய நாளின் நிகழ்ச்சிகள் (2:28-32)
     2) கர்த்தரின் நாளில் நடக்கும் காரியங்கள் (3:1-21)
        3:1-8   3:9-17   3:18-21

ஆமோஸ்
(சலுகையை தவறாக பயன்படுத்தினபடியால் நியாயத்தீர்ப்பு)

நூலாசிரியரும், நூன் பெயரும்: ஏசாயா (நியாய சங்கத் தலைவன்), எரேமியா (ஆசாரியன்) இவர்களைப் போலல்லாது இப்புத்தகம் ஆடு மேய்ப்பவனும், காட்டத்திப் பழங்கள் பொறுக்கினவனுமான ஆமோஸ் (Amos) என்பவரால் எழுதப்பட்டது (1:1; 7:14). இவர் பெத்லேகேமிலுள்ள தெக்கோவா என்னும் பகுதியைச் சேர்ந்தவர். இது தெற்கு எருசலேமுக்கு தெற்கில் பத்து மைல் தொலைவிலுள்ளது. இவர் மேய்ப்பனாகவும், மாட்டுப் பண்ணையாளராகவும் இருப்பினும், கர்த்தருடைய வார்த்தைகளை நன்கு அறிந்தவராயிருந்தார்.

ஆமோஸ் என்பது ஓர் எபிரெய வார்த்தை. அதற்கு "சுமை" அல்லது "சுமை தாங்குகிறவன்" என்று பொருள். இது அவருக்கு கொடுக்கப்பட்ட பாரங்களைக் குறிப்பதாக இருக்கிறது. இஸ்ரவேலருடையதாகிய வட தேசத்திருந்து வராமல் தெற்குப்பகுதியாகிய யூதேயாவிருந்து ஆமோஸ், வந்தவராயினும் அவருக்கு வட நாட்டினரின் பேராசை, அநியாயம், உலக ஆசை, சுயநீதி குறித்து எச்சரிக்கும்படியான பாரம் அதிகமாக கொடுக்கப்பட்டது. ஆமோஸ் என்பவரை ஏசாயாவின் தகப்பனாகிய (ஏசாயா 1:1) ஆமோசுடன் (Amoz) குழப்பிக் கொள்ளக் கூடாது.

எழுதப்பட்ட காலம்: ஏறத்தாழ கி.மு. 760. உசியா மற்றும் யெரொபெயாம் II நாட்களில் ஆமோஸ் தீர்க்கதரிசனம் சொன்னார்: ***"யூதாவின் ராஜாவாகிய உசியாவின் நாட்களிலும்*** (790-739), ***இஸ்ரவேல் இராஜாவாகிய யோவாசுடைய குமாரனாகிய எரொபெயாமின் நாட்களிலும்*** (793-753 கி.மு.), ***பூமி அதிர்ச்சி உண்டாக இரண்டு, வருஷத்திற்கு முன்னே இஸ்ரவேலைக் குறித்து தரிசனங்கண்டு சொன்ன வார்த்தைகள்"*** (1:1) என்பதை வாசிக்கும்போது ஆமோஸ் கி.மு. 767-753ல் தீர்க்கதரிசனம் உரைத்திருக்க வேண்டும். ***"பூமியதிர்ச்சிக்கு இரண்டு வருடங்களுக்கு முன்"*** என நமக்குக் கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்நிகழ்ச்சியின் திட்டவட்டமான காலம் தெரியவில்லை.

கருப்பொருளும் நோக்கமும்: ஆமோஸ் முதலாவது கொடுத்த தேவ செய்தி நியாயத்தீர்ப்பாயினும் அதை நம்பிக்கையின் செய்தியோடு முடிக்கிறார். ஆண்டவர், முழு உலகையும் ஆளுபவர். ஓர் போர் வீரராக, தன் அதிகாரத்தை எதிர்த்தவர்களை நியாயந்தீர்க்க வருவார். தேவனுடைய உடன்படிக்கையை மீறிய இஸ்ரவேலரை தண்டிப்பார். வடநாட்டில் உலகப்பிரகாரமான ஆசைகளில் தரித்திருந்த யெரொபெயாம் காலத்தில் பாவங்கள் பெருகியது: நியாயத்தீர்ப்பினின்றி தப்பிக்க ஒரே வழி மனம் திரும்புவதே என்று ஆமோஸ் வழிகாட்டுகிறார். இதை செய்யும்படி, தம்முடைய பரிசுத்தத்தினிமித்தம், தீமையை வெறுப்பதையும் இஸ்ரவேன் பாவத்திற்கு விரோதமாய் அவருடைய நீதி விளங்கவேண்டுமென்றும் பாவங்கள் தண்டிக்கப்படவேண்டுமென்றும் இப்புத்தகம் கூறுகிறது.

நாடு அழிக்கப்பட்டாலும், மனம் திரும்பிய சிறு கூட்டத்தினரான இஸ்ரவேலரை (அடிக்கடி "மீதியானவர்" எனக் குறிப்பிடப்படுபவரைக்) காப்பாற்றுவார். ஒரு நாள் இச்சிறு கூட்டத்தினர் காப்பாற்றப்பட்டு ஆசீர்வாத உடன்படிக்கையும், அரசியல் அந்தஸ்தையும் பெறுவர். அப்போது எல்லா நாடுகளையும் தம்மண்டை இழுத்துக்கொள்பவார்.

முக்கிய நபர்கள்: ஆமோஸ், யூதாவின் இராஜாவாகிய உசியா, இஸ்ரவேன் இராஜாவாகிய யெரொபொயாம்,

ஆமோஸில் கிறிஸ்து: இந்தப் புத்தகத்தில் கிறிஸ்து விழுந்து போன தாவீதின் கூடாரத்தைக் (9:11) கட்டுபவராகவும், தமது ஜனங்களை தேசத்தில் திரும்ப நாட்டுபவராகவும் (9:11-15) ஆமோஸ் சித்தரிக்கிறார்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை: நூலாசிரியர் கருப்பொருள் (1:1-2)**

2. **ஆமோஸின் எட்டு நியாயத்தீர்ப்புகள் (1:3-2:16)**
   a. தமஸ்குவின்மீது நியாயத்தீர்ப்பு (1:3-5)
   b. பெலிஸ்தியாமீது நியாயத்தீர்ப்பு (1:6-8)
   c. தீருமீது நியாயத்தீர்ப்பு (1:9-10)
   d. ஏதோம்மீது நியாயத்தீர்ப்பு (1:11-12)
   e. அம்மோன்மீது நியாயத்தீர்ப்பு (1:13-15)
   f. மோவாப்மீது நியாயத்தீர்ப்பு (2:1-3)
   g. யூதாவின்மீது நியாயத்தீர்ப்பு (2:4-5)
   h. இஸ்ரவேல்மீது நியாயத்தீர்ப்பு (2:6-16)

3. **ஆமோஸின் பிரசங்கங்கள் (3:1-6:14)**
   a. இஸ்ரவேலரின் நியாயத்தீர்ப்பு (3:1-15)
      3:1-8 3: 9-10 3:11-15
   b. இஸ்ரவேலரின் சீரழிவு (4:1-13)
      4:1-3 4: 4-5 4:6-13
   c. இஸ்ரவேலர்மீது புலம்பல் (5:1-6:14)
      1) வரப்போகும் நியாயத்தீர்ப்பில் இஸ்ரவேலரின் அழிவு (5:1-17)
         5:1-3 5:8-9 5:14-15
         5:4-7 5:10-13 5:16-17
      2) சமய ஜனங்களின் கண்டித்தல் (5:18-27)
         5:18-20 5:21-24 5:25-27
      3) முழு நாட்டிற்கான கண்டனம் (6:1-14)
         6:1-3 6:8-11
         6:4-7 6:12-14

4. **ஆமோஸின் ஐந்து தரிசனங்கள் (7:1-9:10)**
    a. விழுங்கும் வெட்டுக்கிளிகளின் தரிசனம் (7:1-3)
    b. அக்கினியின் தரிசனம் (7:4-6)
    c. தூக்கு நூன் தரிசனம் (7:7-9)
    d. வரலாற்றுப் பகுதி : பெத்தேலுள்ள ஆசாரியர்களின் எதிர்ப்பு (7:10-17)
    e. பழக்கூடையின் தரிசனம் (8:1-14)
    f. ஆண்டவர் நியாயத்தீர்ப்பின் தரிசனம் (9:1-10)

5. **இஸ்ரவேலர் மீட்கப்பட வாக்குத்தத்தங்கள் (9:11-15)**

ஒபதியா
(ஏதோமின் நியாயத்தீர்ப்பு)

நூலாசிரியரும், நூல் பெயரும்: நூலாசிரியர், ஒபதியா. ஊர் பெயர் அறியப்படாத தீர்க்கதரிசியானவர் (1:1). ஒபதியா என்றால் "யெகோவாவை வழிபடுபவன்" அல்லது "யெகோவாவின் ஊழியன்" என்று அர்த்தமாகும்.

பழைய ஏற்பாட்டில் பலர் ஒபதியா என்ற பெயரைக் கொண்டிருந்தார்கள். தாவீதின் சேனையிலுள்ள ஒரு அதிகாரி (1 நாளாகமம் 12:9), தேவனுடைய தீர்க்கதரிசிகளை ஒளித்துவைத்த ஆகாபின் சேவகன் (1 இராஜாக்கள் 18:3), யோசியாவின் நாட்களிருந்த ஒரு லேவியன் (2 நாளாகமம் 34:12), எஸ்றாவோடுகூடச் சிறையிருப்பிருந்து திரும்பிவந்த ஒரு தலைவர் (எஸ்றா 8:9). ஆகியோர் இதே பெயரைக் கொண்டிருந்தார்கள். ஒபதியாவின் சொந்தப் பட்டணத்தைப் பற்றியோ அல்லது குடும்பத்தைப் பற்றியோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. அவருடைய தகப்பனின் பெயர் குறிப்பிடாதபடியால் அவர் ராஜாவின் வழியிலோ அல்லது ஆசாரியரின் வழியிலோ பிறக்கவில்லை என்பது தெளிவாகிறது.

எழுதிய காலம்: கி.மு. 840. வேதத்தில் மிகச் சிறிய நூல் ஒபதியாவாகும். இதில் 21 வசனங்களே உள்ளன. சிறிய தீர்க்கதரிசனங்களின் புத்தகங்களில் மிகவும் கடினமானதும், பிரதானமானதுமாகும். ஒபதியா கி.மு. 840ம் வருடத்திருந்திருப்பார். ஏனெனில்: யோராம் அரசர் காலத்தில் பெலிஸ்தியரும், அரபியரும் ஏதோமியருக்கு எதிராகப் படையெடுப்பதை கி.மு. 848-841 (2 நாளாகமம் 21:16-17) தீர்க்கதரிசனமாக ஒபதியா கூறியிருப்பதாகும்.

கருப்பொருளும் நோக்கமும்: ஒபதியாவின் கருப்பொருள் அழிவுக்கு முன்னானது பெருமை என்ற உண்மையை மீண்டும் உணர்த்துவதாகும். எருசலேமுக்கு ஏற்பட்ட தீங்கைக் குறித்து அகந்தையோடு களிகூர்ந்ததால் ஏதோமியர் நியாயந்தீர்க்கப்படுவர் என ஒபதியா முன்னுரைக்கிறார்.

முக்கிய நபர்: ஒபதியா

ஒபதியாவில் கிறிஸ்து: தேசங்களின் நியாயாதிபதியாகவும் (15-16), இஸ்ரவேலரின் மீட்பராகவும் (17-20) இராஜ்யத்தை உடையவராகவும் (21) சித்தரிக்கப்பட்டுள்ளார்.[42]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **ஏதோமின் நியாயத்தீர்ப்பு குறித்த தீர்க்கதரிசனம் (1:1-9)**
    a. நியாயத்தீர்ப்பின் நிச்சயம் (1;1-4)
    b. நியாயத்தீர்ப்பு முழுமையடைதல் (1:5-9)

2. **ஏதோம் நியாயத்தீர்ப்புக்கு அடிப்படை (1:10-14)**
    a. சகோதர பாசம் இல்லாததால் (1:10)
    b. கர்வத்திற்காக (1:11-12)
    c. கொடுரத்திற்காக (1:13-14)

3. **நியாயத்தீர்ப்பின் நேரம் (1:15)**

4. **நியாயத்தீர்ப்பின் விளைவு (1:16-18)**

5. **இஸ்ரவேன் மீட்பு (1:19-21)**

யோனா
(தேவ சித்தத்திருந்து ஓடுதல்)

எழுதியவரும், புத்தகத்தின் பெயரும்: அமித்தாயின் குமாரனாகிய, யோனா வடதேசமாகிய இஸ்ரவேலுள்ள கலேயா பட்டணத்தின் தீர்க்கதரிசி, இந்தப் புத்தகத்தை எழுதினார். இது இந்தப் புத்தகத்தின் தலைப்பிலேயே காணப்படுகிறது (1:1). அந்தக் காலத்தில் இருந்த இடத்தையும் மனிதரையும் கொண்ட இந்தப் புத்தகத்தின் சரித்திரத்திருந்து அறியலாம். இதுபற்றி (2 இராஜாக்கள் 14:25)ல் பார்க்கலாம். புதிய ஏற்பாட்டில் இயேசுவின் சாட்சியும் உள்ளது (மத். 12:40). “யோனா” என்பதன் அர்த்தம் “புறா” என்று பார்க்கிறோம்.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 793-753. 2 இராஜாக்கள் 14:27 மூலம் இரண்டாம் யெரொபெயாம் என்ற இஸ்ரவேல் ராஜாவின் ஆளுகையில் (கி.மு. 793-753) யோனா இருந்தார் என அறிகிறோம். எசாவுக்குப் பிறகும், ஆமோஸ், ஓசியா என்பவர்களின் காலத்திற்கு சற்று முன்பாகவும் யோனா ஊழியம் செய்தார்.

மையக்கருத்தும் நோக்கமும்: பிற இன மக்களின் மேல் அன்பு காட்டாமருப்பது தேவ சித்தத்தைச் செய்யத் தடையாக இருக்கிறது என்று யோனா காட்டுகிறார். மேலும் எபிரெயரின் தேவனை இப்படியாகத் தெளிவாக விளக்குகிறார்: (1) தேவன், முழு உலகத்தின் மீதும் கரிசனை உள்ளவராக இருக்கிறார். மனம் திரும்பி அவரிடம் சேரும் யாவருக்கும் அவர் இரட்சிப்பை அருளுகிறார். (2) அவர் மனிதனுடைய காரியங்கள் மேலும், இயற்கையின் மேலும் ஆளுகை உடையவராக இருக்கிறார்.

முக்கிய நபர்: யோனா

யோனாவில் கிறிஸ்து: யோனாவின் மூலம் இயேசு உயிர்த்தெழுதல் தேசங்களுக்கு தீர்க்கதரிசியாக சித்தரிக்கப்படுகிறார் (மத்தேயு 12:40). (எனினும் இயேசு யோனாவைப் போல் தன் ஊழியத்தை செய்ய விருப்பமில்லாதவராக இல்லை). யோனாவின் வாழ்க்கையில், இரட்சகராகவும் தேவனாகவும் இயேசுவைக் காணலாம் (2:9).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **யோனா தப்பி ஓடுதல் (1:1-17)**
   a. யோனாவின் ஓட்டத்திற்கு காரணம் (1:1-2)
   b. தப்பி ஓடுதன் வழி (1:3)
   c. தப்பி ஓடுதன் விளைவு (1:4-17)

2. **யோனாவின் ஜெபம் (2:1-10)**
   a. ஜெபத்தின் தன்மைகள் (2:1-9)
   b. ஜெபத்திற்குப் பதில் (2:10)

3. **யோனாவின் பிரசங்கம் (3:1-10)**
   a. பிரசங்கிக்கும்படி, தேவனின் கட்டளை (3:1-3)
   b. யோனாவின் பிரசங்கத்தின் பொருளடக்கம் (3:4)
   c. யோனாவின் பிரசங்கத்தின் விளைவு (3:5-10)

4. **யோனா கற்றுணர்தல் (4:1-11)**
   a. தேவனிடத்தில் யோனாவின் புகார் (4:1-3)
   b. யோனாவுக்கு தேவனுடைய பாடத்திட்டம் (4:4-11)

மீகா
(தேவனைப்போல் யார் உண்டு?)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: இந்தப் புத்தகத்தை எழுதிய தீர்க்கதரிசியாகிய மீகாவிருந்து இந்தப் புத்தகத்திற்குப் பெயர் வந்தது. எரேமியா 26:18 ருந்தும், இந்த புத்தகத்திருந்தும் இந்த புத்தகத்தின் எழுத்தாளனைக் குறித்து சிறிது அறியமுடியும். மீகா என்ற பெயர் “மீகாயா” என்ற வார்த்தையின் சுருக்க வடிவமாக இருக்கிறது. “மீகாயா” என்றால் யெகோவாப் போல் யாருண்டு என்று அர்த்தம். இதை ***“உம்மைப் போன்ற தேவன் யார் இருக்கிறார்கள்”*** 7:18 என்று சொல்வதன்மூலம் இவ்வுண்மையை கூறுகிறார். எரேமியாவின் நாட்களில், மூப்பர்கள் தேசத்தின் மீது நியாயத்தீர்ப்பைக் குறித்த எரேமியாவின் செய்தியை (எரேமியா 26:18) உறுதிப்படுத்தும்படி மீகா 3:12 ஐ மேற்கோள் காட்டுகிறார்கள்.

பெலிஸ்தியரின் பட்டணமாகிய காத்துக்கு அருகில், எருசலேமிருந்து தென்மேற்காக 25 மைல் தொலைவில் உள்ள யூதேயா நாட்டில் மொரேசேத் என்ற பட்டணத்தில் மீகா வாழ்ந்தான். அகில உலக வியாபார பட்டணமாகிய லாகீஸ்க்கு அருகில் யூதேயாவின் மலையடிவாரங்களில் மொரேசா பட்டணம் இருந்தது.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 700. முதலாம் வசனம், யோதாம் (கி.மு. 750-732), ஆகாஸ் (கி.மு. 736-716) மற்றும் எசேக்கியா (கி.மு. 716-687) ஆகிய ராஜாக்களில் காலத்தில் மீகா தீர்க்கதரிசனம் உரைத்தாக கூறுகிறது. மீகா பிரதானமாக யூதாவுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தான். மேலும் இஸ்ரவேன்

வடதேசத்தைக் குறித்தும் பேசினான். சமாரியாவின் வீழ்ச்சியை வெளிப்படுத்தினான் (1:6). இவனுடைய ஊழியத்தில் பெரிய பகுதி கி.மு. 722ல் நடந்த அசீரியாவின் அடிமைத்தனத்திற்குட்படுவதற்கு முன்பு உள்ள காலம் ஆகும். ஏறத்தாழ கி.மு. 700ஆக இருக்கலாம்.

மையக்கருத்தும் நோக்கமும்: எப்படி மக்கள், தேவன் கொடுத்த உடன்படிக்கையின் நிபந்தனைக்கு தக்க வாழாததினால் தோல்வி அடைந்தார்கள் என்பதை மீகா புத்தகம் காட்டுகிறது. அந்த உடன்படிக்கைக்குக் கீழ்ப்படிந்தால் ஆசீர்வாதம் வருகிறது (உபாகமம் 28:1–14). அதற்குக் கீழ்ப்படியாமை சாபத்தையும், வாக்குத்தத்த தேசத்திருந்து விலக்கப்படுவதையும் விளக்குகிறது (உபாகமம் 28:15–68). யூதாவின் அநீதியை மீகா வெளிப்படுத்துகிறது. மேலும், இந்த புத்தகம் தேவனின் நீதியையும், நியாயத்தையும் வெளிப்படுத்தி தேவன் அவர்களை சிட்ஷிப்பது சரியென்று கூறுகிறார். நியாயாதிபதி, தீர்க்கதரிசி, ஆசாரியன் இவர்களின் மத்தியில் இருந்த ஒடுக்குதல், லஞ்சம், பேராசை, ஏமாற்றுதல், பெருமை மற்றும் மீறுதல் போன்ற பாவங்களுக்கு, எதிராக குற்றஞ்சாட்டுகிறார். தேவனின் கண்டிப்பு, அவருடைய அன் பையும், அவர்களைத் திரும்பவும் கட்டுவார் என்பதையும் நிரூபித்து காட்டுகிறது.

மீகாவின் மூன்று செய்திகளிலும் ''நியாயத்தீர்ப்பு'' பிரதானமான கருத்தாக இருக்கிறது. ஆனால் தேவ மக்கள் திரும்பவும் கட்டப்படுவார் என்ற உண்மையையும் மீகா காட்டுகிறார். மேலும், மீகா தன்னுடைய ஒவ்வொரு செய்தியிலும் மீதமுள்ள மக்கள் திரும்பக்கட்டப்படுவ தைக் குறிக்கிறார் (மீகா. 2:12: 4:7; 5:7–8; 7:18). வரப்போகிற மேசியாவின் கீழ், தேவன் எதிர்காலத்தில் உலகத்தின் உயர்ந்த இடத்தில், தன் மக்களை திரும்ப வைப்பார் என்பதை மீகா பறைசாற்றுகிறார்.

மீகாவின் இறுதிப் பகுதி ஒரு நீதிமன்றக் காட்சியை விவரிக்கிறது. தமது மக்களுக்கு விரோதமாக தேவன் ஒரு வழக்கைக் கொண்டிருக்கிற ார். தாம் வழக்கை முன்வைக்கும்போது மலைகளையும் குன்றுகளையும் விசாரிக்க வருமாறு அவர் அழைக்கிறார். முழு இருதயத்தோ டும் ஆராதிப்பதற்கு மாறாக, மக்கள் வெறுமையாந சடங்குகளைப் பின்பற்றுகிறார்கள். தேவன் இதையேதான் எதிர்பார்க்கிறார் என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். நேர்மையில்லாத தங்கள் செயல்களை மூடி மறைப்பதற்தாகத் தேவ நீதியின் தகுதிநிலையை விட்டு வில கிப் போயிருக்கிறார்கள். கர்த்தர் மனிதரிடமிருந்து எதை எதிர்பார்க்கிறார் என்பதை அவர்கள் உணரத் தவறியிருக்கிறார்கள். அவர்கள் ''குற்றவாளிகள்'' என்ற ஒரே தீர்ப்பே வழங்கப்பட வேண்டும்.

ஒரு நம்பிக்கையான செய்தியுடன் இந்தப் புத்தகம் முடிவடைகிறது. தண்டனையை நிறைவேற்றுகிற அதே தேவன் தயவு காட்டுவதில் மகிழ்ச்சியாக இருக்கிறார். ***"தமது சுதந்தரத்தில் மீதியானவர்களுடைய அக்கிரமத்தை பொறுத்து, மீறுதலை மன்னிக்கிற தேவரீ ருக்கு ஒப்பான தேவன் யார்? அவர் கிருபை செய்ய விரும்புகிறபடியால் அவர் என்றென்றைக்கும் கோபம் வைப்பார்"*** என மீகா 7:18 கூறுகிறது. மீகா 7:7ல் ***"நானோவென்றால் கர்த்தரை நோக்கிக்கொண்டு, என் இரட்சிப்பின் தேவனுக்குக் காத்திருப்பேன்; என் தேவன் என்னைக் கேட்டருளுவார்"*** என்று தீர்க்கதரிசி கூறுவதில் ஆச்சரியமில்லை. [43]

முக்கிய நபர்கள்: மீகா, யோதாம், ஆகாஸ், எசேக்கியா

மீகாவில் கிறிஸ்து: மீகா கிறிஸ்துவை யாக்கோபின் தேவனாக (4:2), தேசங்களின் நியாயாதிபதியாக (4:3), பெத்லகேம் பட்டணத்தில் பிறக்கப்போகிற இராஜாவாக (5:2 மத்தேயு 2:1–6) வெளிப்படுத்துகிறார். மேசியாவின் பிறப்பிடத்தைக் குறித்த ஏரோதின் கேள்விக்கு ஆசாரியர்களும், வேதபாரகரும் மீகா 5:2யைப் பதிலாக குறிப்பிட்டனர்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை (1:1)**

2. **முதல் செய்தி: சமாரியாவுக்கும், யூதாவுக்கும் நியாயத்தீர்ப்பு (1:1–2:13)**
   a. வருகின்ற நியாயத்தீர்ப்பை வெளிப்படுத்துதல் (1:2–7)
   b. மக்களுக்காகப் புலம்புதல் (1:8–16)
      1) மீகாவின் புலம்பல் (1:8–9)
      2) துக்கப்படும்படியாக மீகா மற்றவர்களை அழைத்தல் (1:10–16)
   c. யூதாவின் பாவம் (2:1–11)
      1) மக்களின் பாவம் (2:1–5)
      2) பொய்யான தீர்க்கதரிசிகளின் பாவம் (2:6–11)
   d. எதிர்காலத்தில் மறுபடியும் மக்களைக் கூட்டிச் சேர்ப்பதை குறித்த வெளிப்பாடு (2:12–13)

3. **இரண்டாம் செய்தி: மீட்பைத் தொடர்ந்து அழிவு (3:1–5:15)**
   a. தேசத் தலைவர்கள்மேல் நியாயத்தீர்ப்பு (3:1–12)
      1) ஆளுபவர்கள்மேல் நியாயத்தீர்ப்பு (3:1–4)
      2) பொய் தீர்க்கதரிசிகளின்மேல் நியாயத்தீர்ப்பு (3:5–8)
      3) எல்லாத் தலைவர்கள்மேலும் நியாயத்தீர்ப்பு (3:9–12)
   b. நாட்டுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தின் ஆசீர்வாதம் (4:1–5:15)
      1) இராஜ்யத்தின் குணாதிசயங்கள் (4:1–8)
      2) இராஜ்யத்தை நிலைநாட்டுமுன் உள்ள சம்பவங்கள் (4:9–5:1)
      3) இராஜ்யத்தின் ஆளுனர் (5:2–15)

4. **மூன்றாம் செய்தி: பாவத்திற்கு கண்டிப்பும், ஆசீர்வாதத்தின் வாக்குத்தத்தமும் (6:1-7:20)**
   a. தேவனின் குற்றச்சாட்டு (6:1-5)
   b. தேசத்திற்காக மீகாவின் பதில் (6:6-8)
   c. பாவத்தின் காரணமாக தேவனுடைய நியாயத்தீர்ப்பு (6:9-16)
      1) பாவங்கள் (6:9-12)
      2) தண்டனைகள் (6:13-16)
   d. தேவனிடம் மீகாவின் வேண்டுதல் (7:1-17)
      1) தேசத்தின் பாவத்தை குறித்து மீகாவின் துக்கம் (7:1-6)
      2) தேவன்மேல் மீகாவின் நம்பிக்கை (7:7-13)
      3) தேவன் மறுபடியும் தம் மந்தையை மேய்ப்பதற்காக மீகாவின் ஜெபம் (7:14)
      4) தேவ மக்களுக்கு அதிசயங்களைக் காட்டுவதாக தேவனின் வாக்குத்தத்தம் (7:15-17)
   e. தேவன் தனிச்சிறந்தவர் என்று மீகா உறுதிப்படுத்துதல் (7:18-20)

நாகூம்
(நினிவேயின் அழிவு)

எழுதியவரும், புத்தகத்தின் பெயரும்: எல்கோசானாகிய நாகூமின் தரிசனமாக இந்தப் புத்தகம் இருக்கிறது. மேலும் இது நினிவே பட்டணத்தைக் குறித்துள்ள தேவ கட்டளை ஆகும். இந்தத் தீர்க்கதரிசியைக் குறித்து நமக்கு, வசனம் 1:1 கூறினதைத் தவிர வேறு ஒன்றும் தெரியவில்லை. நாகூம் என்பதனின் அர்த்தம் “ஆறுதல்”. ஆனால் இது, நினிவே பட்டணத்தை ஆக்கிரமித்த கேடுகெட்ட அசீரியர்களுக்கு நாகூமின் செய்தி நிச்சயமாகவே ஆறுதலான செய்தி அல்ல. எனினும் இந்த செய்தி யூதாவிற்கு ஆறுதல் அளித்தது. வசனம் 1:15ன் பிரகாரம் இந்த தீர்க்கதரிசி யூதாவின் தீர்க்கதரிசியாக இருக்கலாம். எல்கோசா பட்டணத்தின் இருப்பிடம் நிச்சயமற்றதாக இருக்கிறது. இந்தப் பட்டணம் யூதாவின் தென் பகுதியில் இருந்திருக்கலாம் என்று அநேக வேத வல்லுனர்கள் கூறுகின்றனர்.

மற்ற தீர்க்கதரிசன புத்தகத்தைப் போல, இந்த தீர்க்கதரிசன புத்தகத்தின் பெயரும் தீர்க்கதரிசனம் உரைத்த தீர்க்கதரிசியிடமிருந்து வந்தது.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 663-612. எகிப்தில் இருக்கின்ற (தீப்ஸ்) பட்டணம் முன்னதாகவே விழுந்துவிட்டது என்று நாகூம் 3:8-10ல் கூறினான். கி.மு. 663ல் தீப்ஸ் விழுந்தது. கி.மு. 612ல் சம்பவித்த நினிவேயின் அழிவை நாகூமின் மூன்று அதிகாரங்களும் வெளிப்படுத்தின. நினிவேயின் அழிவு உடனடியாக இருக்கிறது என்று சொல்லப்பட்டதால் மீகாவின் தேவ கட்டளை ஒரு வேளை கி.மு. 612க்கு அருகில் இருக்கலாம் (2:1; 3:14, 19) யோசியா ராஜாவின் ஆளுகையிலும், செப்பனியா, எரேமியா வாழ்நாட்களிலும் மீகாவின் ஊழியம் இருந்திருக்கலாம்.

மையக்கருத்தும் நோக்கமும்: துன்மார்க்கரான நினிவே பட்டணத்தாராகிய அசீரியர்களுக்கு எதிராக தேவனுடைய பழிவாங்குதலே இந்தப் புத்தகத்தின் மையக்கருத்து. அசீரியர் மேல் வருகின்ற தேவனின் நியாயத்தீர்ப்பைக் காண வேண்டும் என்று ஆவலாக இருந்த யோனாவின் ஆசையை ஏறத்தாழ 150 வருடங்களுக்கு பிறகு நாகூம் வெளிப்படுத்தினான்.

யோனாவின் பிரசங்கத்தால் ஏற்பட்ட நினிவேயின் மனமாற்றம் கொஞ்ச காலம் மாத்திரமே இருந்தது; திரும்பவும் கருணையற்றவர்களாக, தங்களின் முந்தின கேடுகெட்ட வழிகளுக்குத் திரும்பினர். அசீரியாவின் சார்கோன் II என்பவன் சமாரியாவை அழித்து கி.மு. 722ல் வடதேசமாகிய இஸ்ரவேலை பிணைக் கைதியாகக் கொண்டு போய் 10 கோத்திரங்களை சிதறடித்தான். பின்பு கி.மு. 701ல் எசேக்கியாவின் ஆளுகையில், அசீரியாவின் சனகெரிப்பு என்பவன் ஏறத்தாழ எருசலேமை பிடித்தான். நினிவே எத்தனை வல்லமையுடையதாயிருந்தாலும் அந்த நகரத்தை தேவன் நிச்சயமாகவே நியாயந்தீர்த்து அழிப்பார். அசீரியாவின் மிருகத்தனம், பலன், பெருமை யாவும் தேவனுடைய வல்லமையால் முடிவுக்கு கொண்டு வரப்படும். இந்தப் புத்தகம் அசீரியாவின் நியாயத்தீர்ப்பையும், வீழ்ச்சியையும் முக்கியப்படுத்துவதாக இருந்தாலும், இது யூதாவிற்கு ஆறுதல் அளிக்கின்றது.

முக்கிய நபர்: நாகூம்

நாகூமில் கிறிஸ்து: நேரடியான “மேசியா - தீர்க்கதரிசனம்” இந்த புத்தகத்தில் இல்லாத போதும், எல்லா தீர்க்கதரிசன ஆவியின் அடிப்படையில், இந்த புத்தகத்தில் கிறிஸ்து எதிரிகளை பழிவாங்குகிற ஒரு வைராக்கியமுள்ள தேவனாக காணப்படுகிறார். (1:2-13).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை (1:1)**

2. **நினிவே மேல் நிச்சயமான தேவனின் நியாயத்தீர்ப்பும், தீர்க்கதரிசனமும் (1:2-15)**
   a. நினிவேக்கு எதிராய் தேவனுடைய பரிசுத்த கோபம் (1:2-8)
   b. யெகோவாவுக்கு எதிரான நினிவேயின் சூழ்ச்சியை முடிவுக்கு கொண்டுவருதல் (1:9-11)
   c. நினிவேயின் நியாயத்தீர்ப்பின் காரணமாக யூதாவின் வேதனை முடிவுக்கு வருதல் (1:12-15)

3. **நினிவே மேல் வருகின்ற தேவனுடைய நியாயத்தீர்ப்பை குறித்த விளக்கவுரை (2:1-13)**
   a. தாக்குதல் - விளக்கம் (2:1-16)
   b. முறியடிப்பு - அறிவித்தல் (2:7-13)

4. **நினிவே மேல் வருகின்ற தேவனின் நியாயத்தீர்ப்புக்கான காரணம் (3:1-19)**
   a. அதன் வன்முறையும், ஏமாற்றுதலும் வெட்கத்தை கொண்டு வருகிறது. (3:1-7)
   b. நோ அம்மோன் (தீப்ஸ்) பட்டணத்திற்கு செய்தது அதற்கே வெட்கத்தை உண்டாக்குகிறது (3:8-11).
   c. பட்டணத்தின் பாதுகாப்பினால் பயனில்லை (3:12-19)

ஆபகூக்
(குழப்பத்திற்குத் தீர்வு)

எழுதியவரும், புத்தகத்தின் பெயரும்: வேத வசனம் 1:1 மற்றும் 3:1ருந்து ஆபகூக் இந்த புத்தகத்தை எழுதினார் என்பதை அறியமுடிகிறது. தான் ஒரு தீர்க்கதரிசி என்று தானாகவே அறிமுகப்படுத்துகிறார். அவர் ஒரு ஆசாரிய வகுப்பை சார்ந்தவர். ***"இது நெகிநோத் என்னும் வாத்தியத்தில் வாசிக்க இராகத் தலைவனுக்கு ஒப்புவிக்கப்பட்ட சங்கீதம்"*** என்று முடியும் அவருடைய ஜெபமும் துதியும் அவருக்கு ஆசாரியத்துவப் பிண்ணனியிருந்தது என்று கூறுகிறது.

இந்தப் புத்தகத்தின் தலைப்பு இந்த புத்தகத்தை எழுதியவரிடமிருந்து பெறப்பட்டது. ஆபகூக் என்ற எபிரெய வார்த்தையின் அர்த்தம் "தழுவுதல்" எனப்படும். தேவன் தன்னுடைய இரட்சிப்பாகவும் பலமாகவும் இருக்கிறார் என யெகோவாவை தீர்க்கதரிசி கட்டிப்பிடித்திருக்கிறான்.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 600. இந்தப் புத்தகம் வரப் போகிற பாபிலோனின் படையெடுப்பை எதிர்பார்க்கின்றது. மேலும் பாபிலோனுடைய புகழ்ச்சியை குறித்து எச்சரிப்பு அளிக்கின்றது. இதை வைத்துப் பார்க்கும்போது யூதாவின் யோயாக்கீம் அரசன் ஆளுகையில், ஆபகூக் ஒருவேளை ஊழியம் செய்திருக்கலாம். பாபிலோனின் படையெடுப்பு எப்படியும் நடக்கப்போவது போல இருந்தாலும், அந்த படையெடுப்பு இன்னும் நடக்கவில்லை (1:6; 2:1). எனவே ஆபகூக்கின் ஊழியம், கி.மு. 605ல் பாபிலோன் விழுவதற்கு சற்று முன்பாக இருந்திருக்க வேண்டும்.

மையக் கருத்தும் நோக்கமும்: துன்மார்க்கமுள்ள பாபிலோனின் வரப்போகும் படையெடுப்பைக் குறித்துள்ள ஆபகூக்கின் குழப்பம் இந்தப் புத்தகத்தின் மையக்கருத்தாக ஓடுகிறது. ஆபகூக்கின் விசுவாசத்தில் இரண்டு பிரச்சினைகள் வந்தது போலுள்ளது. அதாவது (1) பாவம் பெருகிய யூதாவை தேவன் ஏன் இன்னும் தண்டிக்கவில்லை (1:2-4)? (2) பாபிலோன் போன்ற பாவம் நிறைந்த தேசத்தை, எப்படி பரிசுத்த தேவன் நியாயந்தீர்க்கப் பயன்படுத்த முடியும் (1:12-2:1)? தொடர்ந்து வருகின்ற வெளிப்பாடுகளின் வெளிச்சத்தில் தீர்க்கப்படுகின்ற இந்தப் பிரச்சினைகளினால் ஆபகூக் குழம்பி இருக்கிறான். நம்பிக்கையின் பாடலோடு இந்த புத்தகம் முடிவடைகிறது. தீமையாகிய பிரச்சனையின் கண்ணோட்டத்தில் தேவனுடைய நன்மையை இந்தப் புத்தகம் வயுறுத்துகிறது.

முக்கிய நபர்: ஆபகூக்

ஆபகூக்கில் கிறிஸ்து: தீர்க்கதரிசனத்தின் தன்மையைப் பார்க்கும்போது, இயேசு கிறிஸ்து இரட்சகராக சித்தரிக்கப்பட்டுள்ளார். வசனம் 3:13 மற்றும் 18ல் 3 தடவை காணப்படுகின்ற "இரட்சிப்பு" என்ற வார்த்தை மத்தேயு 1:21ல் காணப்படுகிற "இயேசு" என்ற பெயருக்கு மூல வார்த்தையாக இருக்கிறது. பரிசுத்தர் (1:12; 1 யோவான் 1:9), விசுவாசத்தால் நீதிமானாக மாற்றுபவர் (2:4), ***"சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பது போல, கர்த்தருடைய மகிமையின் அறிவை பூமி முழுவதும் நிரப்புகிறவர்"*** (2:14) ஆகியவைகள் இயேசுவை காட்டுகின்றன.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை (1:1)**

2. **ஆபகூக்கின் குழப்பம்: விசுவாசம் சோதிக்கப்பட்டு, கற்பிக்கப்படுகிறது (1:2-2:20)**
   a. முதல் குழப்பம்: யூதாவில் கேடுகெட்ட செயல்களைத் தொடர்ந்து செய்ய ஏன் தேவன் அனுமதிக்கிறார்? (1:2-4)
   b. தேவனுடைய முதல் பதில் (1:5-11)
   c. இரண்டாவது குழப்பம்: யூதாவைத் தண்டிக்க ஏன் தேவன் தீய மக்களைப் பயன்படுத்துகிறார்? (1:12-2:1)
   d. தேவனுடைய இரண்டாவது பதில் (2:2-20)

3. **ஆபகூக்கின் துதி: விசுவாசம் வெற்றி பெறும் (3:1-19)**
   a. தேவனுடைய தனித்துவத்துக்காக அவரைத் துதித்தல் (3:1-3)
   b. தேவனுடைய வல்லமைக்காகத் துதியை ஏறெடுத்தல் (3:4-7)
   c. தேவனுடைய நோக்கத்துக்காகத் துதித்தல் (3:8-16)
   d. தேவன் மேலுள்ள நம்பிக்கைக்காகத் துதி (3:17-19)

செப்பனியா
(நியாயத்தீர்ப்பின் மூலம் ஆசீர்வாதம்)

எழுதியவரும், புத்தகத்தின் பெயரும்: எஸ்கியாவின் குமாரனாகிய ஆமரியாவுக்கு குமாரனான கெதயா என்பவனுடைய மகனாகிய கூஷிவதில் இந்த தலைப்பு தனிச்சிறப்பு வாய்ந்ததாக இருக்கின்றது. சாதாரணமாக, வம்ச வரலாற்றைக் கொடுக்கும்போது தந்தை பெயரை மட்டும் குறிப்பிடுவர் (ஏசாயா 1:1; எரேமியா 1:1; எசேக்கியேல் 1:3; ஓசியா 1:1; யோவேல் 1:1). இந்தத் தீர்க்கதரிசி ஒரு உயர் குடியில் பிறந்தவர் என்பதை இந்த நீளமான வம்ச வரலாறு கூறுகிறது. இந்தத் தீர்க்கதரிசியின் மூதாதையர் நல்ல பேர்பெற்ற அரசனான எசேக்கியா.

இந்தப் புத்தகத்தின் பெயர் தீர்க்கதரிசியான செப்பனியாவிருந்து வந்தது. செப்பனியா என்ற வார்த்தைக்கு அர்த்தம் "யெகோவாவின் மறைப் பொருள்" (2:3).

எழுதப்பட்ட காலம்: கி.மு. 630-625. முகவுரையின் பிரகாரம் (1:10), யோசியா அரசன் ஆளும் காலத்தில் (கி.மு. 640-609) செப்பனியா தீர்க்கதரிசனம் உரைத்தார். கி.மு. 612ல் ஏற்பட்ட நினிவேயின் வீழ்ச்சிக்கு முன்பாகவும் கி.மு. 622-621 கால கட்டத்தில் யோசியா அரசனின் சீர்திருத்தங்களுக்கு முன்பும் இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. யூதாவில் விக்கிரக ஆராதனை இருப்பதை இந்தப் புத்தகம் குறிக்கிறது (1:4-6). இந்த விக்கிரக ஆராதனை யோசியாவின் சீர்திருத்தங்களால் நீக்கப்பட்டது. இவையாவும், இந்த புத்தகம் கி.மு. 630க்கும் கி.மு. 625க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுதப்பட்டது என கூறுகிறது.

மையக்கருத்தும் நோக்கமும்: மனாசே மற்றும் அம்மோன் அரசர்களின் ஆளுகையில் (3:1-7) ஏற்பட்ட கெட்ட பாதிப்பினால் ஆவிக்குரிய வாழ்விலும், ஒழுக்க வாழ்விலும் தளர்ந்து போய் இருந்த யூத மக்களுக்கு இந்தத் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது. உபாகமம் 28ல் கீழ்ப்படியாமைக்கு சாபம் வரும் என்ற எச்சரிக்கையின் விளைவாக இந்தப் புத்தகத்தின் மையக்கருத்து "நியாயத்தீர்ப்பு" அல்லது "வரப்போகிற தேவனின் நாள்" என்பவைகளாக இருக்கின்றன. (தேவனுடைய பரிசுத்தத்தினிமித்தம் பாவம் செய்கிற உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் கணக்கு ஒப்புவிக்க தனக்கு முன்பாக அழைத்து தன்னுடைய பரிசுத்தத்தை விளங்கப்பண்ணவேண்டும். தேவன் தயவுள்ளவராகவும் ஆசீர்வதிப்பவராகவும் இருக்கிறார். எனவே ஆசீர்வாத வாக்குத்தத்தத்துடன் மனம் திரும்பும்படி அழைப்பதையும் இந்தப் புத்தகம் அழுத்தமாக வயுறுத்துகிறது. இப்படியாக செப்பனியா இந்தப் புத்தகத்தை மூன்று பகுதிகளாக பிரிக்கின்றார்; எனினும், பாவத்திற்கு தண்டனை, மனம்திருந்த அழைப்பு, எதிர்கால மீட்பின் அல்லது ஆசீர்வாத வாக்குத்தத்தம்.

முக்கிய நபர்கள்: செப்பனியா, யோசியா

செப்பனியாவில் கிறிஸ்து: தனிப்பட்ட விதத்தில் இந்தப் புத்தகம் இயேசுவைக் குறிப்பிடாமல் இருந்ததாலும், இஸ்ரவேல் தேசத்தின் நீதிபரர் (3:5), அவர்களுடைய ராஜா (3:15) என்று கூறுபவற்றில் இயேசுவை காணலாம்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை (1:1)**

2. **யெகோவா நாளின் நியாயத்தீர்ப்பு (1:2-3:8)**
   a. முழு பூமியின் மேலும் நியாயத்தீர்ப்பு (1:2-3)
   b. யூதாவின்மேல் நியாயத்தீர்ப்பு (1:4-2:3)
      1) நியாயத்தீர்ப்பின் காரணம் (1:4-13)
      2) நியாயத்தீர்ப்பின் விளக்கவுரை (1:14-18)
      3) தேசத்திற்கு அழைப்பு: மனந்திரும்பவும் தேவனைத் தேடவும் (2:1-3)
   c. சுற்றியுள்ள தேசத்தின்மேல் நியாயத்தீர்ப்பு (2:4-15)
      1) பெலிஸ்தியாவின்மேல் (2:4-7)
      2) மோவாப் மற்றும் அம்மோன்மேல் (2:8-11)
      3) எத்தியோப்பியாவின்மேல் (2:12)
      4) அசீரியாவின்மேல் (2:13-15)
   d. எருசலேமின்மேல் நியாயத்தீர்ப்பு (3;1-7)
      1) தீர்க்கதரிசியின் குற்றச்சாட்டு (3:1-5)
      2) தேவனுடைய நியாயத்தீர்ப்பு (3:6-7)
   e. பூமியில் உள்ளவற்றின் மேல் நியாயத்தீர்ப்பு (3:8)

3. **யெகோவாவின் நாளில் திரும்பக் கட்டப்படுதல் (3:9-20)**
   a. நாடுகள் திரும்ப கட்டப்படுதல் (3:9-10)
   b. இஸ்ரவேல் திரும்ப கட்டப்படுதல் (3:11-20)

ஆகாய்
(உற்சாகம் அளித்தல்)

முகவுரை: பாபிலோனின் அடிமைத்தனத்திற்கு பிறகு எழுதப்பட்ட மூன்று தீர்க்கதரிசன புத்தகங்களில் ஒன்று ஆகாய் தீர்க்கதரிசன புத்தகம்; நாம் அதற்கு வந்திருக்கிறோம். இஸ்ரவேலுக்கு திரும்பிய யூத மக்களுக்காக ஆகாய், சகரியா, மல்கியா தீர்க்கதரிசன புத்தகங்கள் எழுதப்பட்டன. மீதமுள்ள இந்தச் சிறிய கூட்டத்தின் ஆவிக்குரிய வாழ்வுக்கும், ஒழுக்க வாழ்வுக்கும் உற்சாகம் கொடுப்பது இந்தத் தீர்க்கதரிசன புத்தகங்களின் நோக்கமாகும். மீதமுள்ளவர்கள் இப்பொழுது தங்கள் சொந்த நிலத்தில் தேவாலயத்தையும், தேசத்தையும் திரும்பக் கட்ட வழிதேடுகின்றனர்.

தேவாலயத்தைத் திரும்ப கட்டுவதின் தொடர்பாக மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் தேவைகளை விளக்குவதாக ஆகாய் மற்றும் சகரியா தீர்க்கதரிசன புத்தகங்கள் இருக்கின்றன. தேசத்தைத் திரும்பக் கட்டுவதில் மக்களின் ஒழுக்க மற்றும் சமூக தேவைகளை குறித்து மல்கியா தீர்க்கதரிசன புத்தகம் விளக்குகிறது.

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: ஆகாய் என்பதின் அர்த்தம் "கொண்டாட்டம்" அல்லது "பண்டிகை" வேதாகமத்தில் இதற்கு ஆதாரமில்லை என்றாலும் பிரதானமான பண்டிகை நாட்களின் ஒன்றில் ஆகாய் பிறந்திருக்கலாம் என கருதப்படுகிறது. எஸ்றா 5:1-2 மேலும் 6:14 இவைகளிருந்தும், ஆகாய் புத்தகத்திருந்தும் (9 தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது) ஆகாயைக் குறித்து அறிய முடியும். ஆனாலும் சிறிதளவே அவனைக் குறித்து அறிய முடிகிறது. வசனம் 1:1ல் தானாகவே "தீர்க்கதரிசியாகிய ஆகாய்" என குறிப்பிடுகிறான். அவனுடைய வம்ச வரலாற்றைக் குறித்தும், தகப்பனைக் குறித்தும் ஒன்றும் தெரியவில்லை. சகரியா என்ற தீர்க்கதரிசியின் நாட்களிலும், செருபாபேல் என்ற ஆளுநரின் காலத்திலும் ஆகாய் வாழ்ந்தான்.

சாதாரணமாக, தீர்க்கதரிசன புத்தகத்தின் தலைப்பு எழுதியவரிடமிருந்து வருவதுபோல், இந்தப் புத்தகத்தின் பெயரும் இதை எழுதிய ஆகாய் தீர்க்கதரிசியின் பெயரிருந்து வந்தது.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 520. பெர்சியாவின் மஹா ராஜாவாகிய கோரேஸ் அரசாட்சியின் கீழ் ஏறத்தாழ 50,000 யூத மக்கள் எருசலேமுக்குத் திரும்பி வர அனுமதிக்கப்பட்டனர். செருபாபேல் (எஸ்றா 1:2-4; ஏசாயா 44:28), ஆசாரியனாகிய யோசுவா, தீர்க்கதரிசிகளாகிய ஆகாய், சகரியா இவர்கள் திரும்பி வந்தவர்களின் சிலர். யூத மக்கள் திரும்பி தங்கள் நாட்டுக்கு வரவும், தேவாலயத்தைத் திரும்ப கட்டவும், கி.மு. 538ல் அதிகாரம் அளிக்கப்பட்டது.

சீக்கிரமாகவே சர்வாங்க தகன பக்காக பபீடம் திரும்பக் கட்டப்பட்டது; அதின் மேல் லேவிய பகள் கொடுக்கப்பட்டன (எஸ்றா 3:1-6) திரும்பி வந்த பிறகு 2ம் வருடத்தில் தேவாலயத்திற்கு அஸ்திபாரம் போடப்பட்டது (எஸ்றா 3:8-13; 5:16). ஆனாலும் சமாரியாவின் தொல்லையினாலும், கடைசியாக பெர்சியாவின் அழுத்தத்தினாலும், ஆலயம் திரும்பக் கட்டுவது நின்றது. ஆவிக்குரிய வாழ்க்கையில் கவனக்குறைவு வந்தது. பெர்சியா ராஜா தரியு கிஸ்டாஸ்பெஸ் (கி.மு. 521-486) வரைக்கும் ஏறத்தாழ 16 வருடங்கள் ஆலயம் திரும்பக்கட்டுவது தடைப்பட்டது. தரியு ராஜாவின் 2ஆம் வருடத்தில், ஆலயத்தை திரும்பகட்ட யூத மக்களை உற்சாகப்படுத்த, தேவன் ஆகாய் தீர்க்கதரிசியை எழுப்பினார் (எஸ்றா 5:1-2; ஆகாய் 1:1).

ஆகாய் 1:1, இந்த வசனத்தின் பிரகாரம், ராஜாவாகிய தரியு அரசாண்ட இரண்டாம் வருடம் இலுல் மாதம் (ஆகஸ்டு-செப்டம்பர்) முதல் தேதியில் ஆகாயின் முதல் செய்தி கொடுக்கப்பட்டது. இது கி.மு. 520ல் இருந்தது.

மையக்கருத்தும் நோக்கமும்: பழைய ஏற்பாட்டில் இரண்டாவது சிறிய புத்தகமாக ஆகாய் இருக்கிறது. ஒபதியா மட்டுமே இதைவிடச் சிறிய புத்தகம். ஆகாயின் எழுத்து நடை எளியதாகவும் நேரடியாகவும் இருக்கிறது. குறைந்த காலத்தில் ஊழியம் செய்த, சாதரணமான தீர்க்கதரிசியாகிய ஆகாய் கொடுத்த நான்கு செய்திகளின் விவரங்களை நாம் சாதாரணமாக எண்ணிவிட முடியாது.

ஆகாய் தீர்க்கதரிசியின் புத்தகம், இரண்டாவது சிறிய புத்தகமாக பழைய ஏற்பாட்டில் இருந்தாலும், தேவாலயத்தைத் திரும்ப கட்ட உற்சாகப்படுத்திய ஆகாயின் பங்கு, மற்றும் அவனுடைய 4 செய்திகளின் பயனையும் நாம் குறைவாக எண்ணிவிடக் கூடாது. இவ்வளவு சிறிய புத்தகத்தில் மிக அதிகமான ஆவிக்குரிய எழுப்புதலை வயுறுத்துவதில் வெகு சில தீர்க்கத்தரிசிகளே வெற்றிபெற்றுள்ளார்கள். ஆகாய் தீர்க்கதரிசியின் செய்தியின் தனிச்சிறப்பு, இந்தச் செய்தி தேவனிடத்திருந்து வந்தது என்ற அசைச்க முடியாத அவனுடைய நம்பிக்கையாகும் தன்னுடைய செய்தியின் தெய்வீக அதிகாரத்தை சுமார் 25 தடவைகள் உறுதிப்படுத்தினார். அவர் எப்போதுமே தான் கொடுத்த செய்திகளை ***"சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்"*** என்று துவங்கி முடிக்கிறார்.

இஸ்ரவேன் மீதியானவர்களை தேவாலயத்தை திரும்ப கட்ட உற்சாகப்படுத்தவும், புத்தி சொல்லவும், தீர்க்கதரிசி ஆகாய் இந்தப் புத்தகத்தை எழுதினான். இதில் அவன் கற்பித்தவைகள் (1) தேவனை முதல் இடத்தில் வைக்கும்பொழுது தேவன் மக்களை ஆசீர்வதிக்கின்றார் (2) கர்த்தருடைய ஊழியத்தில் நாம் சோர்ந்துபோகக் கூடாது (3) நாளைக்கான தேவனுடைய வாக்குத்தத்தம் நமக்கு இன்றைய தினத்தின் நம்பிக்கையின் அஸ்திபாரம்.

முக்கிய நபர்கள்: ஆகாய், தரியு, செருபாபேல், ஆசாரியனாகிய யோசுவா

ஆகாயில் கிறிஸ்து: ஆலயத்தின் மகிமையை திரும்ப முந்திய நிலைக்கு கொண்டு வருபவராக (2:7-9) இந்தப் புத்தகத்தில் மேசியா சித்தரிக்கப்பட்டுள்ளார். மேலும் உலகத்தின் ராஜ்யங்களை முடிவுக்கு கொண்டு வருகிறவராகவும் (2:22) சித்தரிக்கப்பட்டுள்ளார்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முதல் செய்தி: தேவாலயத்தைத் திரும்பக் கட்ட அழைப்பு (1:1-15)**
   a. முகவுரை (1:1)
   b. முதல் கண்டனம் (1:2-6)
   c. பரிகாரம் (1:7-8)
   d. இரண்டாம் கண்டனம் (1:9-11)
   e. தீர்க்கதரிசியின் செய்திக்கு மறு உத்திரம் (1:12-15)

2. **இரண்டாம் செய்தி: தேவனுடைய வாக்குத்தத்தத்தில் பெலன்கொள்ள அழைப்பு (2:1-9)**
   a. முகவுரை (2:1-2)
   b. பெலப்படுத்தும் வாக்குத்தத்தங்களும் எதிர்கால மகிமையும் (2:3-9)

3. **மூன்றாம் செய்தி: வாழ்க்கையை பரிசுத்தப்படுத்த அழைப்பு (2:10-19)**
   a. முகவுரை (2:10)
   b. பிரச்சனை : மீதியானவர்களின் கீழ்படியாமை (2:11-14)
   c. தீர்வு: மீதியானவர்களின் கீழ்படிதல் (2:15-19)

4. **நான்காம் செய்தி: எதிர்காலத்தில் உறுதிகொள்ள அழைப்பு (2:20-23)**
   a. முகவுரை (2:20-21a)
   b. புறஜாதி ராஜ்யங்களின் எதிர்கால முறியடிப்பைக் குறித்த வாக்குத்தத்தம் (2:21b-22)
   c. தாவீதின் இராஜ்யத்தை திரும்ப கட்ட வாக்குத்தத்தம் (2:23)

சகரியா
(யெகோவாவின் வைராக்கியம்)

எழுதியவரும், புத்தகத்தின் பெயரும்: இத்தோவின் மகனாகிய பெரகியாவின் குமாரனாகிய சகரியா, ஒரு தீர்க்கதரிசியாக இருந்தான் (சகரியா 1:1) ஆகாயின் காலத்தில் வாழ்ந்தான் (எஸ்றா 6:14).

சகரியா என்ற பெயரின் அர்த்தம் ''யெகோவா நினைக்கிறார்'' அல்லது ''யெகோவா நினைத்திருக்கிறார்'' என்பதே. இந்தக் கருப்பொருளே இப்புத்தகம் முழுவதும் இழையோடியிருக்கிறது.

எழுதப்பட்ட காலம்: கி.மு. 520-518. செருபாபேல் நாட்களில் வாழ்ந்த, நெகேமியா 12:4ல் குறிப்பிடப்பட்ட ஆசாரியனாகிய இத்தோவின் பேரனும், பெரகியாவின் குமாரனுமாகிய சகரியா இருக்கிறான் என்று வசனம் 1 வெளிப்படுத்துகிறது. சகரியா 2:4 இந்தத் தீர்க்கதரிசி ஒரு வாபனாக இருந்தான் என கூறுகிறது. கி.மு. 520ல் தேவாலயத்தைத் திரும்பக் கட்டுவதில் ஆகாயுடன் சேர்ந்து உழைக்கும் சமயத்தில் சகரியா ஒரு வாபனாக இருந்திருக்கலாம். கி.மு. 518ல் 2 வருடங்களுக்குப் பிறகு, இவனுடைய கடைசித் தீர்க்கதரிசனம் கொடுக்கப்பட்டிருக்கிறது (7:1-14) 9 முதல் 14 வரையுள்ள அதிகாரங்கள், சில பத்தாண்டுகளுக்குப் பிறகு, ஒருவேளை கி.மு. 480க்கு பிறகு தொகுக்கப்பட்டிருக்கலாம் என 9:13ல் உள்ள கிரேக்க தேசத்தைப் பற்றிய குறிப்புகளிருந்து கணிக்கலாம்.

சகரியா, தேவாலயத்தில் மக்களால் இரத்தசாட்சியாகக் கொல்லப்பட்டான் என்று மத்தேயு 23:35 குறிப்பிடுவதைத் தவிர, சகரியாவின் வாழ்க்கை குறித்து அறிய, வேறு விபரங்கள் இல்லை. வேறொரு சகரியாவும் ஆசாரியனாகிய யோயேதாவின் குமாரன்). அதே சமயத்தில் கொல்லப்பட்டான் என்று 2 நாளாகமத்தில் 20:20-21 கூறுகிறது.[44]

மையக்கருத்தும் நோக்கமும்: திரும்பி வந்த மீதியான யூத ஜனங்களுக்கு தேவாலயத்தைத் திரும்ப கட்டும் பணியை பூர்த்தி செய்ய உற்சாகம் அளிக்க இந்தப் புத்தகம் எழுதப்பட்டது. வரப்போகிற மேசியாவுக்கு தயாராக்க, இஸ்ரவேல் ஜனங்களின் ஆவிக்குரிய சுதந்திரத்தை பெற, அவர்களை உலகத்தில் திரும்ப கட்டும் பணியில் தேவன் இருந்தார் என்பதையும் இந்தத் தீர்க்கதரிசன புத்தகம் காட்டுகிறது. இஸ்ரவேன் ஆவிக்குரிய வாழ்க்கை திரும்பி முந்தின நிலைக்கு வருவதில் தேவாலயத்தின் முக்கியத்தை சகரியா விளக்குகிறார். தேவ ஜனங்களை திரும்ப அவர்களுடைய சொந்த நாட்டுக்கு கொண்டு வருவதில் தேவனுடைய அநுக்கிரகத்தை இந்த புத்தகத்தில் சகரியா காட்டுகிறார். மேலும் தேசத்தின் எதிர்கால ஆவிக்குரிய வாழ்க்கையைத் திரும்பக்கட்ட மேசியாவின் உன்னத பணியையும் இந்த புத்தகம் வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறது.

முக்கிய நபர்கள்: சகரியா, பிரதான ஆசாரியனாகிய யோசுவா

சகரியாவின் கிறிஸ்து: சகரியா புத்தகம் போல மேசியாவை வெளிப்படுத்தியுள்ள வேறு புத்தகங்கள் பழைய ஏற்பாட்டில் இல்லை என கூறலாம். இப்புத்தகம் மேசியா அல்லது கிறிஸ்துவின் முதல் மற்றும் இரண்டாம் வருகை ஊழியக்காரன் மற்றும் ராஜா, தேவன் மற்றும் மனிதன், தேவனுடைய தூதன் (3:1), நீதியின் கிளை (3:8), 7 கண்கள் கொண்ட கல் (3:9), சிலுவையில் அறையப்படட இரட்சகர் அல்லது குத்தப்பட்ட ஒருவர் (12:10), வரப்போகிற மற்றும் தாழ்மையுள்ள ராஜா (9:9-10). கைவிடப்படும் மேய்ப்பன் (13:7), மேலும் வருகின்ற நீதிபதி மற்றும் நீதியுள்ள ராஜா (14) இப்படியாக இந்தப் புத்தகம் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **மனம்திரும்ப அழைப்பு (1:1-6)**

2. **சகரியாவின் எட்டு தரிசனங்கள் (1:7-6:8)**
   a. குதிரைகளும், குதிரை வீரர்களும் (1:7-17)
   b. நான்கு கொம்புகளும், நான்கு தொழிலாளிகளும் (1:18-21)
   c. அளக்கிறவர் (2:1-13)
   d. பிராதான ஆசாரியன் (3:1-10)
   e. பொன் விளக்குத் தண்டு (4:1-14)
   f. பறக்கும் புத்தக சுருள் (5:1-4)
   g. மரக்கால் ஸ்திரீ (5:5-11)
   h. நான்கு இரதங்கள் (6:1-8)

3. **யோசுவா முடிசூட்டப்படுதல் (6:9-15)**

4. **உபவாசத்தைக் குறித்துக் கேள்வி (7:1-8:23)**

7:1-7 8: 9-13	8:20-23
7:8-14	8:14-17
8:1-8	8:18-19

5. **எதிர்காலத்தைக் குறித்த இரண்டு தேவ கட்டளை (9:1-14:21)**
   a. மேசியாவின் புறக்கணிப்பு (9:1-11:17)

9:1-10	10:1-12
9:11-17	11:1-17

   b. மேசியாவின் ஆளுகை (12:1-14:21)

12:1-5	13:1-6	14:1-8
12:6-14	13:7-9	14:9-21

மல்கியா

(மனமாற்றமும் மனந்திரும்புதலும் வருதலும்)

எழுதியவரும், புத்தகத்தின் பெயரும்: மல்கியா 1:1 மட்டும் இந்த தீர்க்கதரிசனத்தின் எழுத்தாளர் மல்கியா என குறிப்பிடுகிறது. மல்கியா என்பதன் அர்த்தம் "என் தூதன்" யோவான் ஸ்நானனை குறித்துள்ள தீர்க்கதரிசனம் "உடன்படிக்கையின் தூதன்" எதிர்பார்க்கின்ற இந்த புத்தகத்திற்கு பெயர் பொருத்தமாக உள்ளது (3:1; மத்தேயு 11:10)

எழுதப்பட்ட காலம்: கி.மு. 450-400. எழுதப்பட்ட காலத்தைக் குறித்து க்சன் ஆர்சர் என்பவர் கூறுகிறார்:

> சகரியாவின் தீர்க்கதரிசனம், 5ஆம் நூற்றாண்டின் பிற்ப் பகுதியில், ஒருவேளை ஏறத்தாழ கி.மு. 435ல் கொடுக்கப்பட்டிருக்கலாம் என புத்தகத்திலுள்ள ஆதாரத்திருந்து தெளிவாக தெரிகின்றது. கீழே கொடுக்கப்பட்ட குறிப்புகளிருந்து நாம் இந்த முடிவிற்கு வருகிறோம்" (1) தேவாலயம் ஏற்கனவே திரும்ப கட்டப்பட்டு மோசேயின் பகள் திரும்ப செலுத்தப்பட்டது (1:7, 10; 3:1). (2) இந்த (கி.மு. 445-433ல் நெகேமியா ஆளுநராக இருந்தான்). (3) நெகேமியா கண்டனம் செய்த அதே பாவங்களை மல்கியாவும் அவனுடைய இரண்டாம் கால கட்டத்தில் கண்டித்துச் சரிசெய்தான்; அதாவது (a) ஆசாரியர்களின் அசட்டை (1:6; நெகேமியா 13:4-9). (b) லேவியரை வளம் குன்ற செய்யும், தசமபாக புறக்கணிப்பு (3:7-12; நெகேமியா 13:10-13). (c) புறஜாதிப் பெண்களுடன் கலப்புத் திருமணம் (2:10-16; நெகேமியா 13:23-28). நெகேமியா வருவதற்கு சற்று முன்பாக மல்கியா இந்த தவறான வழிகளுக்கு எதிராக ஏற்கனவே கண்டனம் செய்திருக்கிறான் என்று கருதுவது சரியாக இருக்கிறது. எனவே ஏறத்தாழ கி.மு. 435 எனக் கொள்வது நல்ல மதிப்பீடாக இருக்கும். [45]

மையக்கருத்தும் நோக்கமும்: நெகேமியாவின் தலைமையில், ஒரு எழுச்சியின் காலம் இருந்திருந்தது (நெகேமியா 10:28-39). ஆனால் தேவனோடு நடப்பதில், மக்களும் ஆசாரியர்களும் ஒரு குளிர்ந்த நிலைக்கு வந்திருந்தார்கள். நியாயப்பிரமாணத்தை மாயையாக இயந்திரம் போல் கைக்கொண்டார்கள். மல்கியா கண்டனம் செய்த பாவத்தின் குற்றச்சாட்டில் அவர்கள் இருந்தார்கள் (ஆசாரியர்களின் சோபேறித்தனம், காணிக்கை புறக்கணிப்பு, புறஜாதி பெண்களுடன் கலப்பு திருமணம்). மேலும், தங்களில் ஏன் தேவன் திருப்திகொள்ளவில்லை என்பதை குறித்து குழம்பிப்போய் இருந்தார்கள். ஆசாரியர் மற்றும் மக்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் விதமாகவும், அவர்ளுடைய பாவங்களையும், பின்வாங்குதலையும், மோசமான மனோபாவங்களையும் வெளிப்படுத்தி, அவர்களைக் கடிந்துகொள்ளுவதற்காகவும் மல்கியா எழுதினார். மேசியாவுக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி வரப்போகும் கர்த்தருடைய தூதரைக் குறித்த ஊக்கமளிக்கும் வார்த்தையோடு அவர் முடிக்கிறார்.

மக்கள் உண்மையான ஆராதனையை புறக்கணித்ததை, மல்கியா கண்டித்ததையும், அவர்களை மனம் திரும்ப அழைத்ததையும் (1:6; 3:7) க்சன் ஆர்சர் என்பவர் சுருக்கமாக, மையக்கருத்தை கீழே உள்ள வண்ணமாக கொடுக்கிறார்:

> தேவனுடைய கருணை தானியத்தின் மேலும், தேசத்தின் பொருளாதார வளத்தின் மேலும் வரவேண்டுமென்றால், தேவனின் பார்வையில் தேவனுக்கு நேராக உண்மையும் பரிசுத்த வாழ்க்கையும் மிகவும் அவசியமானது. என்பதே இந்த புத்தகத்தின் மையக்கருத்தாக இருக்கின்றது. இஸ்ரவேல் மக்கள் பரிசுத்த ஜாதியாகவும் மேசியாவின் வருகைக்காக காத்து இருப்பவர்களாகவும் தாங்கள் அழைக்கப்பட்ட உயர்ந்த அழைப்புக்கு ஏற்றவாறு வாழ வேண்டும். மேசியாவின் குணமாக்கும் ஊழியமும், நியாயத்தீர்ப்பும் மக்கள் எதிர்பார்த்தவற்றை நிறைவு செய்யும். [46]

முக்கிய நபர்: மல்கியா

மல்கியாவில் கிறிஸ்து: மல்கியா புத்தகத்தில் உள்ள மேசியாவை குறித்து வில்கின்சன் (ரண்ப்ந்ண்ய்ள்ர்ய்) என்பவரும் போய (Boa) என்பவரும் கொடுத்த ஒரு சிறப்பான சுருக்கம், கீழே காணலாம்:

> ***"இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி"*** (யோவான் 1:29) என்ற யோவான் ஸ்நானனுடைய வார்த்தைகள் கடைசியாக 400 வருட தீர்க்கதரிசின் அமைதியை உடைத்தது. அந்த அமைதிக்கு மல்கியாவின் புத்தகம் ஒரு முகவுரையாக இருக்கின்றது. தேவனுக்கு வழியை ஆயத்தப்படுத்துகிற, தூதனை குறித்து மல்கியா (3:1, ஏசாயா 40:30) கூறுகிறார். யோவான் ஸ்நானகன் இதனை பின்னர் நிறைவேற்றினார். (3:2-5). மல்கியா வரப்போகும் செய்தியாளர். ஆண்டவருக்கு வழியை ஆயத்தம் பண்ண போகிறவரைப் (3:1, ஏசாயா 40:30) பற்றி முன்னுரைத்தார். யோவான் ஸ்நானகன் இத்தீர்க்கதரிசனத்தை பூர்த்தி செய்தார். ஆனால்அடுத்த சில வசனங்களில் (3:2-5) அவர் மேலேறிச் சென்று ஆண்டவரின் இரண்டாம் வருகை பற்றிக் கூறுகிறார்.[47]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **இஸ்ரவேன் சிலாக்கிய நிலை (1:1-5)**
   a. தேவ அன்பு வெளிப்படுத்துதல் (1:1-2a)
   b. தெய்வ அன்பு சந்தேகத்துள்ளாதல் (1:2b)
   c. தேவ அன்பு நிரூபிக்கப்படல் (1:3-5)

2. **இஸ்ரவேலர் மாசுபடல் (1:6-3:15)**
   a. ஏமாற்றல் (1:6-14)
   b. உண்மையற்ற நிலை (2:1-9)
   c. ஆவிக்குரிய தீமையான கலப்பு திருமணம் (2:10-12)
   d. திருமண முறிவு (2:13-16)
   e. பகிரங்கமான பாவங்கள் (2:17)
   f. வரப்போகும் செய்தியாளர் (3:1-6)
   g. திருட்டு (3:7-12)
   h. மூர்க்கத்தனம் (3:13-15)

3. **தம் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் (3:16-4:6)**
   a. ஞாபக புத்தக வாக்குறுதி (3:16-18)
   b. வரப்போகும் கிறிஸ்து குறித்தவாக்குறுதி (4:1-3)
   c. எயாவின் வருகை குறித்த வாக்குறுதி (4:4-6)

அத்தியாயம் 3

புதிய ஏற்பாட்டு ஆய்வு

முகவுரை

புதிய ஏற்பாடு சரித்திரபூர்வமான சம்பவங்களின் ஒரு பதிவேடாகும். இது நற்செய்தியை – இயேசுவின் வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், பரத்துக்கேறுதல் மற்றும் உலகில் அவருடைய வேலையின் தொடர்ச்சி அவர் ஊழியம் பற்றி அவரால் தெரிந்து கொள்ளப்பட்டு உலகத்திலே அனுப்பப்பட்ட அப்போஸ்தலரின் விளக்கமும் செயல்பாடும் அடங்கியது. மேலும் பழைய ஏற்பாட்டில் நாம் கண்ட பல வெகு காலமாய் எதிர்பார்க்கப்பட்ட தீர்க்கதரிசனங்களின் நிறைவேறுதலை நாம் இதில் காணலாம். இது உலக சரித்திரம் போல் அல்லாமல் இது பரிசுத்த சரித்திரமாக இருக்கிறது. இந்த சரித்திரம் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதனால் எழுதப்பட்டது. அதாவது புதிய ஏற்பாடும், பழைய ஏற்பாட்டைப் போல் எந்தத் தவறுமின்றி தெய்வீக உந்துதலால் எழுதப்பட்டதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து திரும்பி வரும் வரையுள்ள மனிதர் அனைவருக்கும், இந்த நாளில் உள்ள சபைகளுக்கும் இது கொடுக்கப்பட்டுள்ளது.

"புதிய ஏற்பாடு" என்ற வார்த்தையின் தோற்றமும் அர்த்தமும்: நம்முடைய வேதம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு அவைகள் பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு எனப்படுகின்றன. ஆனால் இதனுடைய சரியான அர்த்தம் என்ன? "ஏற்பாடு" என்பதன் கிரேக்க வார்த்தையின் அர்த்தம் "சித்தம், ஏற்பாடு அல்லது உடன்படிக்கை" என்பதாகும். சீனாய் மலையில் கொடுக்கப்பட்ட மோசேயின் உடன்படிக்கையை அடிப்படையாக கொண்டு இஸ்ரவேலுடன் தேவன் இடைப்பட்ட விதத்தை பிரதானமாகக் கொண்ட ஒரு பதிவாக பழைய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை இருக்கிறது. மாறாக புதிய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை (எரேமியா 31:31ல் எதிர்பார்க்கப்பட்டு இயேசுவால் நிறுவப்பட்டது 1 கொரிந்தியர் 11:25). கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டு இரட்சிப்பைப்பெற்ற ஒவ்வொரு கோத்திரம் மற்றும் மொழிகளிருந்தும், ஜனங்கள் மற்றும் தேசங்களிருந்தும் இருக்கிற மனிதர்களுடன் தேவன் ஏற்படுத்திய ஒரு புதிய ஒழுங்கு அல்லது புதிய ஏற்பாடு என விளக்கப்படுகிறது.

பழைய உடன்படிக்கை நியாயப்பிரமாணத்தின் நீதியின் தரத்திலும் தேவனுடைய பரிசுத்தத்தை வெளிப்படுத்தி வரபோகும் இரட்சகரை வாக்குப் பண்ணியது, மனிதனுக்காக வந்த மீட்பராகிய இயேசுவில், புதிய ஏற்பாடு அல்லது உடன்படிக்கை தேவனுடைய பரிசுத்தத்தை நீதியுள்ள அவரது குமாரனில் காட்டுகிறது. புதிய உடன்படிக்கையின் பொருளடக்கத்தை வெளிப்படுத்துகிற புத்தகங்களை புதிய ஏற்பாடு கொண்டுள்ளது.

புதிய ஏற்பாட்டு செய்தியின் மையம் (1) பாவத்திற்குப் பரிகாரமாக தன்னையே கொடுத்த மனிதனையும் (மத்தேயு 26:28) (2) அவரின் இரட்சிப்பை பெற்ற மக்களையும் (சபை) சார்ந்தது. இப்படியாக புதிய ஏற்பாட்டின் மையக்கருத்து "இரட்சிப்பு" என்பதாக இருக்கிறது.[48]

தேவன் மனிதரோடு ஏற்படுத்திக்கொண்ட இரண்டு உறவுகளையும் குறிக்க பழைய உடன்படிக்கை, புதிய உடன்படிக்கை என்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு உறவுகளையும்பற்றிக் குறிப்பிடும் நூல்களுக்கும் இதே பெயர்கள் வைக்கப்பட்டன. "புதிய ஏற்பாடு என்னும் தெய்வீக உடன்படிக்கையின் மூலமாக தேவன் நம்மைத் தம்மோடுகூட சமாதானத்தோடு ஏற்றுக்கொண்டிருக்கிறார்."[49]

புதிய ஏற்பாட்டிற்கான தேவனுடைய ஆயத்தம்: புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அதிகாரமுள்ள வல்லரசாக ரோம இராஜ்யம் இருந்தது. அது அநேக பழங்கால நாடுகளை ஆளுகை செய்தது. யூதாவின் பெத்லகேம், பாலஸ்தீன நாட்டில் ஒரு சிறிய பட்டணமாக இருந்தாலும், உலகத்தை மாற்றுகிறவர் அதில் பிறந்தார். உலகத்தை மாற்றின இந்த கிறிஸ்துவைப் பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் இப்படியாகக் கூறுகிறார். ***"காலம் நிறைவேறின போது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவரும்"*** (அதாவது பழைய உடன்படிக்கையின் கீழ்), அநேக சிறப்பான வழியிலும் அற்புதமான வழியிலும் மேசியாவின் வரவிற்காக இந்த உலகத்தை ஆயத்தப்படுத்தினார். இந்தக் காரியத்தில் அநேக காரணிகள் பங்கு கொண்டன.

யூத தேசத்தின் வழியாக ஆயத்தம்: இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தப்படுதலே பழைய ஏற்பாட்டின் கதையாக இருக்கிறது. யூதர்கள் எல்லா நாடுகளிருந்தும் பரிசுத்த தேசமாகவும் இராஜரீக ஆசாரியராகவும் தேவனின் பொக்கிஷமாகவும் இருக்க தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டனர் (யாத்திராகமம் 1:5–6) இதற்காக ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு போன்ற முற்பிதாக்களிடம் கொடுத்த வாக்குத்தத்தத்தோடு தேவன் தொடங்கினார் (ஆதியாகமம் 12:1–3; ரோமர் 9:4). மேலும் இந்த முற்பிதாக்கள் தேவ வார்த்தையை பெற்றவர்களாக இருந்தனர் (பழைய ஏற்பாடு (ரோமர் 3:2)). இந்த யூத, தேசம் மீட்பருடைய வம்சத்தை உள்ளடக்கியிருந்தது (ஆதியாகமம் 12:3; கலாத்தியர் 3:8; ரோமர் 9:5). எனவே பழைய ஏற்பாடு முழுவதிலும் இயேசுவைப் பற்றிய விவரங்கள் அடங்கியுள்ளது. இயேசுவை வரப்போகிற, துன்பங்களை பொறுத்துக் கொள்ளுகிற இரட்சகராகவும், மகிமைப்படும் இரட்சகராகவும் பழைய ஏற்பாடு எதிர்பார்த்தது. அநேக தீர்க்கதரிசனங்கள்ல் இயேசுவின் வம்சவரலாற்றைக் குறித்தும், பிறக்கும் இடத்தை குறித்தும், பிறக்கும் சமயத்தில் நடக்கும் சூழ்நிலையை குறித்தும், அவரின் வாழ்க்கையைக் குறித்தும், மரணத்தைக் குறித்தும், அவருடைய உயிர்த்தெழுதலைக் குறிக்கக் கூட விளக்கங்களைக் காணலாம்.

இஸ்ரவேல் தன்னுடைய இருதயக் கடினத்தால் கீழ்ப்படியாமருந்ததால், தேவனின் தண்டனையாக அவர்கள் பிணையக் கைதியாகக் கொண்டு போகப்பட்டாலும் அவர் வாக்குத்தத்தம் செய்தது போல, எழுபது வருடங்களுக்கு பிறகு மீதியானவர்களைக் கொண்டுவந்தார். அவர்கள் மேசியாவின் வருகைக்கு ஆயத்தமாக இருக்க, சொந்த நாட்டிற்குக் கொண்டுவரப்பட்டார்கள். பழைய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகம் எழுதப்பட்டு, 400 வருடங்கள் கடந்தன. அதன்பின் உள்ள சூழ்நிலை பரிசேயர்களின் சமய சடங்குகளாலும், மாய்மாலங்களினாலும் நிறைந்திருந்தது. ஆனாலும் மேசியாவுக்கான ஒரு எதிர்பார்ப்பின் ஆவியும் இருந்தது. மேலும் மீதியானவர்கள் இயேசுவின் வருகைக்காகக் காத்துக்கொண்டிருந்தனர்.

கிரேக்க மொழியின் வாயிலாக ஆயத்தம்: இயேசு கிறிஸ்து தன் சீஷர்களை உலகத்தில் சுவிசேஷத்தை அறிவிக்க அனுப்பினபோது, ஒரு பொதுவான சிறப்பான மொழி எல்லாராலும் விளங்கும்படி இருந்தது. கிறிஸ்து பிறப்பிற்கு 300 வருடங்களுக்கு முன்பு, பிப்பு என்பவரின் மகனாகிய அலெக்ஸாண்டர் என்ற மக்கத்தோனியா அரசன் ஒன்றன்பின் ஒன்றாக தேசங்களைப் பிடித்து தான் வெற்றி கொண்ட நாடுகளில் கட்டாயமாக கிரேக்க மொழியைப் புகுத்தினான். அதனால் கிரேக்க மொழி பல நாடுகளிலும் நடைமுறையில் இருந்தது. "ஒரு உலகம், ஒரு மொழி" என்பதே அலெக்ஸாண்டர் மன்னனின் விருப்பமாக இருந்தது. பிறகு கிரேக்க மொழியை பொதுவான மொழியாகவும், கிரேக்க கலாச்சாரத்தை

மொழி'' என்பதே அலெக்ஸாண்டர் மன்னனின் விருப்பமாக இருந்தது. பிறகு கிரேக்க மொழியை பொதுவான மொழியாகவும், கிரேக்க கலாச்சாரத்தை வாழ்க்கைக்கும் எண்ணங்களுக்கு மாதிரியாகவும் உருவாக்கினான். அலெக்ஸாண்டர் பேரரசன் சிறிது காலமே வாழ்ந் தான். ஆனால் கிரேக்க மொழியை பொதுவான மொழியாக பரப்பியதன் விளைவு அந்த மொழி நீடித்து நிலைத்திருந்தது.

எல்லோரும் அறிந்த மிக துல்யமான, தெளிவான ஒரு பொது மொழியுடன் தேவன் இந்த உலகத்தை மேசியாவின் வருகைக்காக ஆயத் தமாக்கிக் கொண்டிருந்தார். இரட்சகரின் நற்செய்தியைப் பரப்புவதற்கு அந்த மொழி பயன்பட்டது. இதன் விளைவாக புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் பொதுவான மொழியாகிய கொய்னே கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. புதிய ஏற்பாடு புத்தகங்களின் எழுத்தாளர்கள் (புறஜாதியனாகிய லூக்காவை தவிர) எல்லோரும் யூதர்களாக இருந்த போதிலும் இது எபிரெய மொழியிலோ அரமாய் மொழியிலோ எழுதப்படவில்லை. கொய்னே கிரேக்க மொழி, அந்த சமயத்தில் உலகமெங்கும் உள்ள எல்லோராலும் அறியப்பட்ட ஒரு இரண்டாவது பாஷையாக இருந்தது.

ரோமர்களின் வழியாக ஆயத்தம்: தேவன் இன்னும் இயேசுவின் வருகைக்காக உலகத்தை ஆயத்தம் பண்ணுவதை முடிக்கவில்லை. பாலஸ்தீனத்தில் இயேசு பிறந்தபோது, உலகை ரோமாபுரி ஆளுகை செய்தது. பாலஸ்தீன தேசம் ரோம ஆளுகையின் கீழ் இருந்தது. ரோம அரசு சட்டங்களையும், கட்டளைகளையும் அமுல்படுத்துவதில் கண்டிப்பாக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. அகஸ்துராயன் ஆளு கையில் ரோம சரித்திரத்தில் நடைபெற்ற நெடுநாள் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தது. அந்த 100 வருடங்களுக்கு மேலான யுத்தத்தின் முடிவால் ரோம் பேரரசுக்கு அமைதியும், எல்லை விரிவும் உண்டாயிற்று. ரோம அரசில் அங்கும் இங்கும் பயணிகள் எளிமையாகவும் பாதுகாப்பாகவும், செல்ல, ரோம அரசு வழிதடங்களை அமைத்தது. அந்த சாலைகள் ரோம காவலாளிகளால் அடிக்கடி ரோந்து செய்யப் பட்டதால் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ரோம பேரரசில் அகஸ்துராயன் முதலாவது மேன்மையான இரத்தாம்பர உடை தரித்த மற்றும் முடி சூடிய பேரரசனாக இருந்தான். ரோமாபுரியை வாழ்வதற்கும், பிரயாணம் செய்வதற்கும் பாதுகாப்பான இடமாக உருவாக்கி, ஞானம் உள்ளவனாகவும் தன் மக்கள் மேல் கரிசனை கொள்கிறவனாகவும் ரோம சாம்ராஜ்ஜியத்தை சமாதானமுள்ளதாக்கினான். இது ''பாக்ஸ் ரோமனோ'' என்று அழைக்கப்படுகிற ''ரோம் அமைதியை'' அறிமுகப்படுத்தியது. (கி.மு. 27 – கி.பி. 180) அகஸ்துராயன் இதையெல்லாம் செய்து முடித்ததினால், அவன் பிறந்தபொழுது, ஒரு தேவன் பிறந்தார் என அநேகர் கூறினர். இந்த சூழ்நிலையில் உலகத்திற்கும் தான் நிரந்தரமாக தனிப்பட்ட சமாதானத்திற்கும் காரணராக இருந்த, இருக்கின்ற ஒருவர் பிறந்தார். மனிதன் எவ்வளவு அறிவாளியாகவோ நல்லவனாகவோ அல்லது ஒப்பற்றவனாகவோ இருந்தாலும் அதைக் கொடுக்க முடியாது. மேலும் இயேசு மெய்யாகவே தேவன், மனிதன் தேவனென்று அழைக்கப்படுவதற்குப் பதிலாக தேவன் மனிதனானார். அது தற்காகமானதோ அல்லது தவறான சமாதானமோ அல்ல. ரோம ஆட்சியும், அதன் கட்டளைகளும் இயேசுவின் வாழ்க்கைக்கும் இந்த உலகை இயேசுவின் ஊழியத்துக்கு ஆயத்தப்படவும் நற் செய்தி பிரசங்கிக்கப்படவும் உதவின.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் மத சம்பந்தமான உலகம்: புதிய ஏற்பாட்டை ஆய்வுசெய்வதற்கு முன்பாக, நமது இரட்சகர் வந்தபோ தும், பிறகு சபையை உலகத்துக்குள் செல்லும்படி அனுப்பியபோதும் இருந்த சமயப்பிரகாரமான உலகத்தைப் பற்றி நாம் அறிந்திருப்பது நலமாகும். மெரில் சி. டென்னி கூறிய கீழ்க்கண்ட வார்த்தைகளை நீங்கள் வாசிக்கும்போது, இது நமது இன்றைய உலகத்துக்கும் பொருத் தமாக இருப்பதை நீங்கள் காண முடியும்:

> ஹுபல்வேறு சமயங்கள் ஒன்றோடொன்று போராடிக்கொண்டிருந்த ஒரு உலகத்தில்தான் கிறிஸ்தவ சபை பிறந்தது. இவை ஒன்றுக்கொன்று பெரிய அளவில் வேறுபட்டிருந்தாலும், ஒரு பொதுவான பண்பு காணப்பட்டது – அணுகமு டியாத கடவுள் அல்லது கடவுள்களை அடைய இவை முயன்றுகொண்டிருந்தன. தேவன் தாமாகவே தம்மை முற் பிதாக்களுக்கும், மோசேக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் வெளிப்படுத்தியிருக்கிறார் என்று போதித்த யூத சமயத்தைத் தவிர வேறு எந்தச் சமயமும் (மதம்) தேவ வெளிப்பாட்டைப் பற்றியோ பாவம் மற்றும் இரட்சிப்பைப் பற்றியோ தெளிவாகப் போதிக்கவில்லை. இப்போதும் நல்லொழுக்கம் குறித்துக் காணப்பட்ட தகுதிநிலைகளால் பாவத்துக்குத் தீர்வோ இரட்சிப்புக்கான வழிவகையை உண்டாக்கவும் முடியவில்லை.
>
> யூதச் சமயத்திலும்கூடப் பாரம்பரியத்தின் காரணமாகவோ, அல்லது புறக்கணிப்பின் காரணமாகவோ வெளிப்படுத் தப்பட்ட சத்தயம் மறைக்கப்பட்டிருந்தது. தேவனுடைய வார்த்தையை அறிந்து விசுவாசிக்காத மக்கள் எப்போதுமே மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட தேவ வெளிப்பாட்டைத் திரித்தே கூறுகின்றன. கிருபை அலட்சியமாக எடுத்துக்கொள் ளப்பட்டது. சத்தியத்தின் பல அடிப்படை அம்சங்களை அது கொண்டிருந்தாலும், அதைப் பொய்யாகத் திரித்துக் கூறுகிறது. தேவ ராஜரீகத்தின் இடத்தை விதி எடுத்துக்கொண்டது. நீதியானது விதிகளுக்குக் கட்டுப்படுவதாகிவிட்டது. ஆராதனை வெறுமையான சடங்காகிவிட்டது. ஜெபம் என்பது சுயநலத்தோடு பிச்சைகேட்பது போலாகிவிட்டது. இயல்புக்கு அப்பாற்பட்டவைகளின்மீதான நம்பிக்கை வெறும் மூட நம்பிக்கையாகக் கருதப்பட்டது. தேவனுடைய வெளிச்சமானது கட்டுக்கதைகளாலும், பொய்களாலும் மறைக்கப்பட்டது. இதன் விளைவாக ஏற்பட்ட குழப்பம் மனிதனை நிச்சயமில்லாமல் அலைந்துதிரியும்படி செய்துவிட்டது. சிலருக்குத் தாங்கள் விரும்பியபடியெல்லாம் செய்வதே வாழ்க்கைத் தத்துவமாக ஆகிவிட்டது. ஏனென்றால் நடத்தையை ஒழுங்குபடுத்த நிரந்தரமான கொள் கைகள் இல்லை. நிரந்தரமான கொள்கையில்லாத படியால் ஒவ்வொருவரும் அந்தச் சூழ்நிலையைச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு விருப்பப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். பழைய கடவுள்கள் சக்தியை இழந்துபோயின; புதிய கடவுள்களும் உருவாக்கப்படவில்லை. எங்கும் உறுதியில்லாத தன்மை நிலவியது. பல்வேறு சமயப் பிரிவுகள் தோன்றின. மனிதன் பெரும்பாலும் தனது சந்தோஷத்தையும், மதிப்பையும் இழந்துபோயிருந்தான்.''[50]

புதிய ஏற்பாட்டின் தொகுப்பும் மற்றும் அமைப்பும்: ஒன்பது வித்தியாசமான எழுத்தாளர்களால் எழுதப்பட்ட இருபத்தி ஏழு புத்த கங்களின் தொகுப்பாக புதிய ஏற்பாடு இருக்கிறது. இலக்கியத்தின் அடிப்படையில் இது மூன்று பெரும் பிரிவுகளாக பிரிக்கப்படுகிறது:

1. **ஐந்து சரித்திர புத்தகங்கள்:** சுவிசேஷ புத்தகங்கள் மற்றும் அப்போஸ்தலர் நடபடிகள்
2. **இருபத்தியொரு நிருபங்கள்:** ரோமர் முதல் யூதா வரை
3. **ஒரு தீர்க்கதரிசன புத்தகம்:** வெளிப்படுத்தின விசேஷம்

புதிய ஏற்பாட்டின் இந்த மூன்று பிரிவுகளின் முக்கியத்துவத்தையும் கீழே உள்ள இரண்டு அட்டவணைகள் விளக்குகிறது.[51]

புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள்						
சரித்திர புத்தகம்	**நிருபங்கள் (கடிதங்கள்)**					**தீர்க்கத்தரிசன புத்தகம்**
	பவுலின்				பொதுவான	
	ஆரம்ப (மிஷனரி பிரயானத்தின் போது)	**பின்னான** (எருசலேமில் கைது செய்யப்பட்டப்பின்)				
		முதல் சிறையிருப்பின் போது எழுதப்பட்டது	*விடுதலையான பின்பு*	*இரண்டாம் சிறையின் போது எழுதப்பட்டது*		
மத்தேயு மாற்கு லூக்கா யோவான் அப்போஸ்தலருடைய நடபடிகள்	கலாத்தியர் 1 தெசலோனிக்கேயர் 2 தெசலோனிக்கேயர் 1 கொரிந்தியர் 2 கொரிந்தியர் ரோமர்	கொலோசெயர் எபேசியர் பிலேமோன் பிப்பியர்	1 தீமோத்தேயு தீத்து	2 தீமோத்தேயு	யாக்கோபு எபிரேயர் யூதா 1 பேதுரு 2 பேதுரு 1 யோவான் 2 யோவான் 3 யோவான்	வெளிப்படுத்தின விசேஷம்

புதிய ஏற்பாட்டு புத்தகங்களின் முக்கியத்துவத்தை ஒரு மேற்பார்வையிடல்		
சரித்திர புத்தகங்கள்	**சுவிசேஷ புத்தகங்கள்;** மத்தேயு, மாற்கு லூக்கா, யோவான்	**வெளிப்படுத்தல்:** இரட்சகரின் வருகை, அவரின் பணி, மற்றும் அவரின் ஆள் தத்துவம்
	அப்போஸ்தலருடைய நடபடிகள்: அப்போஸ்தலர் மூலமாக பரிசுத்த ஆவியின் செயல்	**பரப்புதல்:** வந்துவிட்ட இரட்சகரின் செய்தியைப் பரப்புதல்
நிருபங்கள்	**நிருபங்கள்:** சபைகளுக்கும் தனிப்பட்டவர்களுக்கும் கடிதங்கள். ரோமர் முதல் யூதர் வரை	**விளக்கம்:** முற்றிலும் தனிச்சிறப்பான இயேசுவும் அவருடைய பணிகளின் வளர்ச்சியும் எப்படி கிறிஸ்தவன் இந்த உலகத்தில் வாழ வழி உண்டாக்குகிறது என்பவைகளின் விளக்கம்.
தீர்க்கதரிசன புத்தகம்	**வெளிப்படுத்தின விசேஷம்:** ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மறை பொருள் வெளிப்பாடு	**முற்றுப்பெறுதல்:** கடைசிக்கால சம்பவங்கள் மற்றும் இயேசுவின் வருகை, இயேசுவின் கடைசிக் கால ஆட்சி மற்றும் நித்தியம் இவைகளை எதிர்பார்த்தல்

புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் வரிசை: புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் கால வரிசை பிரகாரம் இல்லாமல் தன்மையின் அடிப்படையில் வரிசை பிரகாரம் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது. இதை ரைரி (Ryrie) என்பவர் இப்படியாக விளக்குகிறார்.

> இயேசுவின் வாழ்க்கை பதிவுகளை கொண்ட சுவிசேஷங்கள் முதல் வருகிறது. பின்பு கிறிஸ்து பரவியதின் சரித்திரத்தை கொடுக்கின்ற அப்போஸ்தலருடைய நடபடிகள். பின்பு பிரச்சனைகளோடு கூட சபையின் சத்தியத்தின் வளர்ச்சியை காண்பிக்கின்ற, நிருபங்கள்: கடைசியாக வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் தரிசனம்.”[52]

புதிய ஏற்பாட்டு புத்தகங்கள் எழுதப்பட்ட காலங்களை குறித்து வேதவல்லுனர்கள் தம் கருத்தில் வேறுபட்டாலும் கீழே உள்ள காலங்கள் பரந்த அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது:

புத்தகம்	காலம் (கி.பி.)	புத்தகம்	காலம் (கி.பி.)
யாக்கோபு	45-46	அப்போஸ்தலருடைய நடபடிகள்	61
கலாத்தியர்	49	1 பேதுரு	63-64
மாற்கு	50 அல்லது 60	1 தீமோத்தேயு	63
மத்தேயு	50 அல்லது 60	தீத்து	65
1 & 2 தெசலோனிக்கேயர்	51-52	எபிரெயர்	64-68
1 கொரிந்தியர்	55	2 பேதுரு	67-68
2 கொரிந்தியர்	56	2 தீமோத்தேயு	66
ரோமர்	57-58	யூதா	70-80
லூக்கா	60	யோவான்	85-90
கொலோசெயர், எபேசியர்	60-61	1,2,3, யோவான்	85-90
பிப்பியர், பிலேமோன்	60-61	வெளிப்படுத்தின விசேஷம்	96

புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களின் சேகரிப்பு: முதல், புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் தனித்தனியாக சபைகளுக்கு அனுப்பப்பட்டு பின்பு அவைகள் படிப்படியாக சேகரிக்கப்பட்டு, இப்பொழுது நாம் பயன்படுத்தும் புதிய ஏற்பாடாக வேதத்தின் ஒரு பகுதியாக உரு வாக்கப்பட்டது. தேவனுடைய பாதுகாப்பால், புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்கள், ஆதி சபை காலத்தில் எழுதப்பட்ட மற்ற அநேக புத்தகங்களிருந்து பிரிக்கப்பட்டு பத்திரமாக வைக்கப்பட்டன. அப்போஸ்தலர்களின் அதிகாரத்தை பெற்றும், பரிசுத்த ஆவியானவரால் எழுதப்பட்டும் இருந்த காரணத்தினால், அவைகள் புதிய ஏற்பாட்டின் பாகங்களாகப் பாதுகாக்கப்பட்டன. இதை ரைரி (Ryrie) என்பவர் சிறப்பாக சுருக்கி இப்படியாக கூறுகிறார்:

> புதிய ஏற்பாட்டின் புத்தகங்கள் எழுதப்பட்ட பிறகு ஒவ்வொரு தனிப்பட்ட புத்தகமும் உடனடியாக சேர்க்கப்பட்டு வேதமாக்கப்படவில்லை. இந்தப் புத்தகங்களை புதிய ஏற்பாட்டின் ஒரு பகுதியாக சபை பாதுகாத்தது. முதல் பவுன் நிருபங்கள் மற்றும் சுவிசேஷப்புத்தகங்கள் போன்ற பிரிவுகள் பாதுகாக்கப்பட்டது. மேலும் படிப்படியாக எல்லா 27 புத்தகங்களும் சேர்க்கப்பட்டு சபைகளினால் ஒழுங்குமுறைமைப்படி ஒத்துக்கொள்ளப்பட்டது.
>
> இந்தப் பணிமுடிய சுமார் 350 வருடங்கள் ஆகின. இரண்டாம் நூற்றாண்டில், தவறான சத்தியங்களை ஊக்குவிக்கின்ற புத்தகங்கள் பரவியிருந்தன. எனவே, இப்படிப்பட்ட கிறிஸ்தவ புத்தகங்களிருந்து வேத புத்தகங்களை பிரித்து அறிய வேண்டிய அவசியம் முக்கியமானதாக இருந்தது. வேத புத்தகங்களை பிரித்தறிய சில சோதனைகள் மேற்கொள் ளப்பட்டு, எந்தப் புத்தகம் வேதத்தில் இடம்பெற வேண்டும் என்று நிர்ணயம் செய்யப்பட்டது. அந்தச் சோதனைகள்:
>
> 1. இந்தப் புத்தகம் அப்போஸ்தலர்களால் எழுதப்பட்டதா? அல்லது அவர்களால் அங்கீகரிக்கப்பட்டதா?
> 2. இந்தப் புத்தகம் ஆவிக்குரிய தன்மையைக் கொண்டுள்ளதா?
> 3. பரிசுத்த ஆவியானவரால் இந்த புத்தகம் எழுதப்பட்டது என்பதற்கு இந்தப் புத்தகம் ஆதாரம் அளிக்கின்ற தா?
> 4. இந்தப் புத்தகம், பரந்த அளவில் சபைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா?
>
> இப்போதுள்ள இந்த 27 புத்தகங்கள், சில பழைய சபையினரால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. உடனடியாக உலகமு மூவதும் ஏற்றுக்கொள்ளப்படாத புத்தகங்கள் எல்லாம் தவறாக இருக்கிறது என்று அர்த்தமில்லை. தனி நபர்களுக்கு எழுதப்பட்ட நிருபங்கள் (பிலேமோன், 2 மற்றும் 3 யோவான்) எல்லா சபைகளுக்கும் அனுப்பப்படவில்லை. யாக்கோபு, யூதா, 2 பேதுரு, 2 மற்றும் 3 யோவான், பிலேமோன் ஆகிய நிருபங்கள் பெரிதும் வாக்குவாதத்திற்கு உட்பட்டிருந்தா லும் முடிவாக அவைகள் புதிய ஏற்பாட்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. கி.பி. 397ல் நடைபெற்ற கார்தேஜ் (Carthage) என்ற ஆலோசனை குழுவால் இந்த புதிய ஏற்பாடு சான்று அளிக்கப்பட்டது.
>
> புதிய ஏற்பாடு உள்ளடக்கிய புத்தகங்களின் மூலநகல் (Original Copy) இல்லாவிட்டாலும், புத்தகங்களின் பகுதிகளை கொண்ட 4,500 கிரேக்க கையெழுத்துப் பிரதிகளும், 8,000 இலத்தீன் கையெழுத்துப் பிரதிகளும், மேலும் தற்போது உள்ள வேதத்தை கொடுத்த மற்ற 1000 மொழிபெயர்ப்புகளும் உள்ளன. இந்த பிரதிகளைக் கவனமாகப் படித்து யாவ ரும் நம்பக்கூடிய துல்யமான புதிய ஏற்பாட்டை கடைசியில் ஒன்று சேர்த்தார்கள்.”[53]

பகுதி 1
சரித்திர புத்தகங்கள்

முகவுரை: முன்பே எழுதப்பட்டது போல, இலக்கியத்தின் அடிப்படையில் புதிய ஏற்பாடு மூன்று பிரிவின் கீழ் வருகின்றது. சரித்திர புத்தகங்கள், நிருபங்கள், தீர்க்கதரிசன புத்தகங்கள், புதிய ஏற்பாட்டில் சுமார் 46 சதவீதம் சுவிசேஷ புத்தகங்களால் ஆனது. அப்போஸ்தலர் நடபடிகளின் புத்தகத்தை சேர்த்து மொத்தம் 60 சதவீதம். இந்த 60 சதவீதம் கிறிஸ்தவ மதத்தின் சரித்திரபூர்வமான வளர்ச்சியை விளக்குகிறது. சுவிசேஷங்களில் இயல்பாக இருக்கிற சரித்திர உண்மையின் அடிப்படையில் கிறிஸ்தவ மதம் சரித்திர உண்மைகள் அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றது. சுவிசேஷம் என்பது மற்றவர்களின் வாழ்க்கை சாட்சிகளிருந்து கொடுக்கப்பட்ட நல்ல செய்தியாகும். இது சரித்திரம் மட்டுமல்ல; சரித்திர உண்மைகளின் சாட்சியாகும்.

இயேசுவின் பிறப்பு, வாழ்க்கை, மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகியவற்றைக் குறித்து நான்கு சுவிசேஷ புத்தகங்கள் கூறுகையில், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம், ஆதிகால சபையில் அப்போஸ்தலரின் ஊழியத்தின் சரித்திர வரைகோட்டைக் கொடுக்கிறது. நிருபங்களில் நாம் காணும் காரியங்களை அதிகம் அறிந்துகொள்ள அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் முக்கியமானதொன்றாக இருக்கிறது. அந்தக் காலத்தில் குறிப்பிட்ட இடங்களில் வாழ்ந்த மக்களுக்கு எழுதின கடிதங்களே இந்த நிருபங்கள். மனித சரித்திரத்தில், ஜீவிக்கிற தேவனின் நற்செய்தியை உள்ளடக்கிய சித்திர புத்தகங்களே புதிய ஏற்பாடு. இவற்றை தேவனின் வாக்குத்தத்தங்களை வைத்துப் பார்க்கும்போது, இது கடந்தவைகள் மட்டுமல்லாமல் நிகழ்கின்றவைகள் மற்றும் நிகழப்போகிற காரியங்களைக் கொடுக்கிற புத்தகங்களாக இருக்கின்றன.

ஒத்த சுவிசேஷங்கள் (Synoptic Gospels): சுவிசேஷ புத்தகங்களை தனித்தனியாகப் படிப்பதற்கு முன்பு, “ஒத்த சுவிசேஷங்கள்” என்ற வார்த்தையை ஆராய்ந்து பார்ப்போம். ஒவ்வொரு சுவிசேஷ புத்தகமும் தனிப்பட்டபிரகாரமாய், முக்கியத்துவங்களையும், நோக்கங்களையும் கொண்டிருந்தாலும், மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய சுவிசேஷ புத்தகங்கள் “ஒத்த சுவிசேஷங்கள்” என குறிப்பிடப்படுகின்றன. இயேசுவின் வாழ்க்கையைக் குறித்து, இந்த மூன்று சுவிசேஷங்களும் ஒரே கோணத்தில் காண்பதின் காரணமாகவும், வரிசையாகவும் மற்றும் கருப்பொருள் ஒத்திருப்பதின் காரணமாகவும் இவைகள் “ஒத்த சுவிசேஷங்கள்” என்றழைக்கப்படுகிறது. “ஒன்றாக காணுதல்” என்ற பொருள்பட இருக்கிறது. மேலும் யோவான் சுவிசேஷத்தில் கொடுக்கப்பட்ட சித்திரத்தை நிறைவு செய்யும் வழியில் இயேசு வாழ்க்கையை விளக்குகிறது. முதல் மூன்று சுவிசேஷங்களில் பொதுவாக இருக்கின்ற அநேக பகுதிகளை கீழே காணலாம்.

- யோவான் ஸ்நானனால் மேசியா அறிவிக்கப்படுதல் (மத்தேயு 3, மாற்கு 1, லூக்கா 3)
- இயேசுவின் ஞானஸ்நானம் (மத்தேயு 3, மாற்கு 1, லூக்கா 3)
- இயேசுவின் சோதனை (மத்தேயு 4, மாற்கு 1, லூக்கா 4)
- இயேசுவின் போதனையும், அற்புதமும் (ஒவ்வொரு புத்தகத்தின் பெரும்பாலான பகுதிகள்)
- இயேசு மறுரூபமாகுதல் (மத்தேயு 17, மாற்கு 9, லூக்கா 9)
- இயேசுவின் பாடு, மரணம், அடக்கம் (மத்தேயு 26-27, மாற்கு 14-15, லூக்கா 22-23)
- இயேசுவின் உயிர்த்தெழுதல் (மத்தேயு 28, மாற்கு 16, லூக்கா 24)

நான்கு சுவிசேஷங்களின் தனிப்பட்ட பார்வையும் நோக்கமும்: இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்துவதே நான்கு சுவிசேஷங்களின் நோக்கமாக இருக்கிறது. மத்தேயு 16:13-16 இப்படியாக கூறுகிறது.

> ***பின்பு, இயேசு பிப்புச் செசரியாவின் திசைகளில் வந்தபோது, தம்முடைய சீஷரை நோக்கி: மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லுகிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள், சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும்; சிலர் எயா என்றும்; வேறு சிலர் எரேமியா; அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார்கள். அப்பொழுது அவர்: நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக; நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்றான்.***

இயேசுவின் நாளில் வாழ்ந்த அநேக மக்களின் நான்கு கோணங்களை மத்தேயு 16:14 கொடுக்கிறது. இயேசு கிறிஸ்து தேவனின் குமாரன் என்ற உண்மையை முதல் சில மனிதர்களே கண்டுகொண்டனர். இயேசு கிறிஸ்து யாராக இருந்தார் என்பதை பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதலால் சுவிசேஷ எழுத்தாளர்கள் வெளிப்படுத்தினர். அவருடைய ஆள்தத்துவத்தையும், அவருடைய பணியையும் வெளிப்படுத்தினர். நான்கு வழிகளில், தன் சொந்த கோணத்தில். ஆனால் கணக்கில் பூரணம் செய்ய இந்த நான்கு சுவிசேஷங்களும் இயேசு தன் சீடரிடம் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கிறது. இந்த நான்கு சுவிசேஷங்களும் இயேசு யார் என்பதை மிகச் சரியாக வெளிப்படுத்துகிறது. இவைகள் இயேசுவை, பழைய ஏற்பாட்டில் எதிர் பார்த்த மேசியா. தேவனுடைய ஊழியக்காரன், மனித குமாரன், தேவ குமாரன், இந்த உலகத்தின் இரட்சகர், போன்றவற்றால் வெளிப்படுத்துகிறது. இயேசுவின் பணி, ஆள்தத்துவம் இவைகளைக் கொண்ட தேவனின் சித்திரத்தை சுவிசேஷங்கள் நான்கு தனிப்பட்ட சித்திரமாக கொடுக்கின்றன.

மத்தேயு சுவிசேஷத்தை முக்கியமாக யூதர்களுக்காக நாசரேத்தின் இயேசுவே அவர்களின் மேசியாவாக இருக்கிறார், அவரே யூதரின் ராஜா என்று உணர்த்துவதற்காகவே எழுதினார். இயேசு புறக்கணிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டாலும், பழைய ஏற்பாட்டில் நெடுங்காலமாக காத்திருந்த மேசியா இயேசுவே என்று காண்பிக்க மத்தேயு பத்து நிறைவேறின வேத குறிப்புகளை இயேசுவின் (பூமிக்குரிய) வம்ச வரலாறுடன் பயன்படுத்தினார். (மத்தேயு 1;23; 2:15; 2:18; 2:23; 4:15; 8:15; 12:18-21; 13:35; 21:5; 27:9-10). இயேசு முழு தேசத்தால் புறக்கணிக்கப்பட்டு சிலுவையில் அறையப்பட்டாலும், அவரே ராஜா; வெறுமையான கல்லறையை இந்த உலகத்தில் விட்டுச் சென்றார்.

மாற்கு, அதிகம் பேசாமல், ஆனால் நன்கு செயல்படும் ரோமர்களுக்கு ***“தன்னுடைய ஜீவனை அநேகருக்கு பரிகாரமாக கொடுக்க வந்த”*** தேவ ஊழியனாகிய இயேசுவை, வெளிப்படுத்துவதாகத் தோன்றுகிறது. இதனுடன், எல்லாவற்றிலும் குறைந்த சொற்களையுடைய இந்த சுவிசேஷம் முக்கியமானதாகவும், உற்சாகமூட்டுவதாகவும் உயிரோட்டமுள்ளதாகவும் இருந்து, இந்த உலகத்தில் இயேசு இந்த உலகிருந்த கடைசி வாரத்தை சிறப்பாக எடுத்துக் காட்டுகிறது. இயேசுவின் வாழ்க்கையில் கடைசியும் மிக முக்கியமான வாரத்தில் நடைபெற்ற சம்பவங்களை “இந்த புத்தகத்தின் மூன்றில் ஒரு பகுதியை மாற்கு சுவிசேஷம் அறிவிக்கின்றது.”[54]

லூக்கா, மருத்துவனும், சரித்திரம் எழுதுபவருமான இவர், ***இழந்ததைத் தேடவும்,*** இரட்சிக்கவும் வந்த இயேசுவை, பூரண மனித குமாரனாக எடுத்துக்காட்டுகிறார். (லூக்கா 19:10). இயேசுவின் தெய்வீகத்தை வெளிப்படுத்தும்போது, இயேசுவின் ஆள்தத்துவத்தையும் மிக முக்கியப்படுத்திக் கூறுகிறார். சிலர் லூக்கா இந்த சுவிசேஷத்தை எழுதும்பொழுது தன் மனதில் கிரேக்கர்களை கொண்டிருந்தார் என்று நம்புகின்றனர். காரணம் கிரேக்கர்கள் மனித தத்துவத்தில் அதிக ஆர்வம் கொண்டிருந்தனர்.

யோவான் விசுவாசத்தில் அவரை ஏற்றுக்கொண்ட அனைவருக்கும் நித்திய ஜீவனையும், மற்றும் பூரணமான வாழ்க்கையையும் கொடுக்கும் நித்திய தேவனுடைய குமாரனாக இயேசுவை அளித்து, இந்த சுவிசேஷத்தை படிப்பவர்களுக்கு இயேசுவின் தெய்வீகத்தை யோவான் முக்கியப்படுத்தினான், (யோவான் 1:1-2, 12; 3:16-18, 36; 10:10). இந்த சுவிசேஷம் எல்லாருக்கும் எழுதப்பட்டாலும், சிறப்பாக சபைக்காக எழுதப்பட்டது. மரிப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு இயேசு தன் சீடர்களுக்கு கொடுத்த கடைசி ஆறுதல் செய்தியை ஐந்து அதிகாரங்கள் பதிவு செய்திருக்கிறது. மேலும் இயேசு இரட்சகராக இருக்கிறார் என்று வெளிப்படுத்தவும், நித்திய ஜீவனை பெற எங்குமுள்ள மக்களை இயேசுவை விசுவாசிக்க ஊக்கமளிக்கவும் இயேசுவின் ஏழு அற்புத அடையாளங்கள் யோவான் சுவிசேஷத்தில் இடம் பெற்றிருக்கின்றன (யோவான் 20:30-31).

மத்தேயு
(யூதருடைய ராஜா)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: ஒவ்வொரு சுவிசேஷமும் அதன் பெயரை எழுதியவரிடமிருந்து பெறுகிறது. இந்த முதல் சுவிசேஷ புத்தகம், மற்ற சுவிசேஷ புத்தகத்தைப் போல எழுதியவர் பெயரைக் குறிப்பிடாவிட்டாலும், அப்போஸ்தலன் மத்தேயு எழுதினான் என்பது ஆதிகால சபைகளின் பரந்த சாட்சியாக இருக்கிறது. மேலும் "மத்தேயு எழுதின சுவிசேஷம்" என்ற தலைப்பை அருளி ஆதிகால புத்தகங்கள் கூறியிருப்பது மத்தேயு எழுதினார் என்று சாட்சி அளிக்கின்றது. இயேசுவின் உண்மை சீடனாக இருந்த மத்தேயு ஒரு யூதனாக இருந்து யூதர்களுக்கு அவர்களுடைய ராஜாவைக் குறித்து எழுதினார். இவரது உண்மையான பெயர் லேவி, அல்பேயுவின் மகன். இயேசு தன்னை பின்தொடர மத்தேயுவை அழைக்கும் வரைக்கும், ரோம அரசுக்கு, வரி வசூப்பவனாக பாலஸ்தீன நாட்டில் வேலை செய்தான். (மத்தேயு 9:9, 10; மாற்கு 2:14-15) இயேசுவின் ஊழியம் ஒருவேளை மத்தேயுவின் இதயத்தை ஏற்கனவே தொட்டிருக்கலாம். அதனால் தான் இயேசு அழைத்தவுடன் பின்தொடர்ந்தான்.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 50கள் அல்லது 60கள்: கி.பி. 40 முதல் கி.பி. 140 வரையுள்ள இடைப்பட்ட காலக்கட்டத்தில் மத்தேயு சுவிசேஷம் எழுதப்பட்டிருக்கலாம் என கருதப்படுகிறது. "ஆனால் கி.பி. 70ல் நடந்த எருசலேமின் அழிவு, எதிர்கால நிகழ்வாக (24:2) இருப்பதால் கி.பி. 70க்கு முன்னுள்ள காலத்தின் தேதி தேவைப்படுகிறது. சிலர் இந்த சுவிசேஷம்தான் முதல் எழுதப்பட்டது (கி.பி. 50) என்கின்றனர். ஆனால் வேறு சிலர் இது முதல் எழுதப்பட்டது அல்ல என்றும் இது 60ல் எழுதப்பட்டது என்றும் கருதுகின்றனர்."[55]

மையக்கருத்தும் நோக்கமும்: மத்தேயு 16:13-15ல் இயேசு தன் சீடர்களிடம் கேட்ட கேள்வியின் அடிப்படையில், மத்தேயு, நசரேனயனாகிய இயேசுவைக் குறித்து யூதர்களுக்கு பதில் அளிக்க இந்த சுவிசேஷத்தை எழுதினான். யூதர்களின் மேசியாவாக இருந்தார் என்பதை இயேசு தெளிவாக வெளிப்படுத்துகிறார். தீர்க்கதரிசியால் உரைத்த பழைய ஏற்பாட்டு மேசியாவாக இயேசு இருந்தாரா? அப்படியென்றால் மதத் தலைவர்கள் ஏன் ஏற்கவில்லை இயேசு ஏன் தாம் வாக்களித்த ராஜ்யத்தை ஏற்படுத்தவில்லை? அந்த இராஜ்யம் உருவாக்கப்படுமா? அப்படியென்றால் எப்பொழுது? நெடுநாட்களாக காத்திருந்த மேசியாவாக இயேசு இருக்கிறார் என்பதை முக்கியமாக யூதர்களுக்கு மத்தேயு காட்டினார். இது இயேசுவின் வம்சவரலாற்றில் உள்ளது (1:1-17); சாஸ்திரிகளின் வந்து போகுதல் (2:1-12); இயேசு எருசலேமியில் நுழைதல் (21:5); தேசத்தின் நியாயத்தீர்ப்பு (25:31-46); மற்ற சுவிசேஷங்களுடன் பொதுவாக இருக்கின்ற "பரலோக ராஜ்யம்" என்ற அடிக்கடி பயன்படுத்தப்பட்ட வாக்கு, மேலும் இந்த வாக்கு பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் பூரணமாக இருப்பது, இவைகளில் இயேசுதான் மேசியா என்பதை காணலாம்.

மத்தேயுவில் கிறிஸ்து: முன்னமே சொல்லப்பட்டது போல, பழைய ஏற்பாட்டில் எதிர்பார்த்த மேசியாவாக இயேசு இருக்கிறார் என்பதை வெளிப்படுத்துவதே மத்தேயுவின் நோக்கமாக இருக்கிறது. இயேசு ஆபிரகாமின் குமாரனும், தாவீதின் குமாரனுமாக இருக்கிறார். இவ்வாறாக, ராஜ்யத்தைக் கொடுக்க வந்த ராஜாவாக இயேசு இருக்கிறார். ஜுபரலோகத்தின் ராஜாது என்ற வாக்கு 32 தடவைகள் இந்த சுவிசேஷத்தில் காணப்படுகிறது. பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்ற, பழைய ஏற்பாட்டின் எதிர்பார்ப்பான இயேசுவே நிறைவேற்றினார் என்று காட்டும்படி இயேசுவின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை 10 தடவை மத்தேயு தனிப்பட்ட பிரகாரமாக முக்கியப்படுத்திருக்கிறார்.

புதிய ஏற்பாட்டில் மற்ற புத்தகங்களைக் காட்டிலும் அதிகமாய் மத்தேயு, பழைய ஏற்பாட்டு மேற்கோள்களையும், குறிப்புகளையும் 130 தடவை பயன்படுத்தினான்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **இயேசுவும், இராஜாவாகக் கொடுக்கப்படுதலும் (1:1-4:25)**
   a. அவரின் பிறப்பு (1:1-25)
      1:1-17 1: 18-25
   b. அவரைக் கண்டுகொள்ளுதல் (2:1-12)
   c. அவர் தப்பித்துச் செல்லுதல் (2:13-23)
      2:13-15 2:16-23
   d. அவருடைய முன்னோடி (3:1-17)
      3:1-12 3:13-17
   e. அவருடைய சோதனை (4:1-11)
   f. அவருடைய முதல் சீடர்கள் (4;12-25)
      4:12-17 4:18-22 4:23-25

2. **ராஜாவின் பிரசங்கம் அல்லது அறிவிப்பு (5:1-7:29)**
   a. தனிப்பட்ட முன்னேற்றத்தை குறித்து (5:1-12)
   b. விசுவாசிகளின் கடமையைக் குறித்து (5:13-20)
   c. உறவுகளைக் குறித்து (5:21-48)
   d. கொடுத்தல், ஜெபம், உபவாசம் இவைகளைக் குறித்து (6:1-18)
      6:16   6:7-15   6:16-18
   e. உண்மையான பொக்கிஷத்தைக் குறித்து (6:19-34)
      6:19-24   6:25-34
   f. நியாயப்பிரமாணம் நிறைவேறுதலைக் குறித்து (7:1-29)
      7:1-6   7:13-14   7:24-29
      7:7-12   7:15-23

3. **ராஜாவின் வல்லமை (8:1-11:1)**
   a. இன்னும் சுகமாக்குதல் (8:1-17)
      8:1-13   8:14-17
   b. மற்றவர்களை அழைத்தல் (8:18-22)
   c. கடல் அலையை சாந்தப்படுத்துதல் (8:23-27)
   d. பேய்களைத் துரத்துதல் (8:28-34)
   e. மேலும் சுகமாக்குதல் (9:1-38)
      9:1-8   9:14-17
      9:9-13   9:18-38
   f. சீடர்களை வழிநடத்துதல் (10:1-11:1)
      10:1-15   10:24-39
      10:16-23   10:40-11:1

4. **திட்டமும், படிப்படியாக ராஜாவைப் புறக்கணித்தலும் (11:2-16:12)**
   a. யோவானை இயேசு புகழ்தல் (11:2-19)
   b. மனந்திரும்ப அழைப்பு (11:20-30)
      11: 20-24   11:25-30
   c. பரிசேயரின் தாக்குதல் (12:1-50)
      12:1-7   12:30-32   12:46-50
      12:8-21   12:33-37
      12:22-29   12:38-45
   d. உவமைகள் (13:1-58)
      13:1-9   13:31-32   13:45-46
      13:10-17   13:33-35   13:47-52
      13:18-23   13:36-43   13:53-58
      13:24-30   13:44
   e. யோவானின் சிரச்சேதம் (14:1-12)
   f. இன்னும் அதிக அற்புதங்கள் (14:13-36)
      14:13-21   14:22-36
   g. மரபும் பொய்யான வாழ்வும் (15:1-20)
      15:1-14   15:15-20
   h. இன்னும் அதிகமான சுகமாக்குதல் (15:21-39)
      15:21-28   15:29-31   15:32-39
   i. இன்னும் அதிகமான தாக்குதல் (16:1-12)

5. **ராஜாவினுடைய சீடர்களை ஆயத்தம் செய்தல் (16:13-20:28)**
   a. பேதுருவின் அறிக்கை (16:13-28)
      16:13-20   16:21-23   16:24-28
   b. மறுரூபமாகுதல் (17:1-13)
   c. பிசாசைக் குறித்து (17:14-23)
   d. விசுவாசமும் வரிகளும் (17:24-27)
   e. விசுவாசமும் அன்பும் (18:1-19:12)
      18:1-6   18:12-14   18:21-35
      18:7-11   18:15-20   19:1-12
   f. விசுவாசமும் குழந்தைகளும் (19:13-15)
   g. விசுவாசமும் சீடத்துவமும் (19:16-30)
      19:16-26   19:27-30

h. கூறியபடி நடந்துகொள்ளுதல் (20:1-16)
i. ஊழியமா? அல்லது சேவையா? (27:17-28)

20:17-19	20:20-28

6. **ராஜாவை காண்பித்தல் (20:29-23:39)**
a. குருடர்களை சுகமாக்குதல் (20:29-34)
b. எருசலேமில் நுழைதல் (21:1-27)

21:1-11	21:18-22
21:12-17	21:23-27

c. உவமைகளைக் கற்பித்தல் (21:28-22:14)

21:28-32	21:33-46	22:1-14

d. மறுபடியும் தாக்கப்படுதல் (22:15-46)

22:15-22	22:23-46

e. பரிசேய தத்துவம் வெளிப்படுத்தப்படுதல் (23:1-39)

23:1-12	23:13-36	23:37-39

7. **ராஜாவின் தீர்க்கதரிசனம் (24:1-25:46)**
a. அவரின் வருகைக்கு ஆயத்தம் (24:1-51)

24:1-14	24:29-31	24:42-51
24:15-28	24:32-41	

b. ஆயத்தமாகுதன் உவமைகள் (25:1-30)

25:1-13	25:14-30

c. நியாயத்தீர்ப்பு (25:31-46)

8. **ராஜாவின் துன்பம் அல்லது புறக்கணிப்பு (26:1-27:66)**
a. காட்டிக் கொடுத்தலும் கைது செய்தலும் (26:1-56)

26:1-5	26:20-25	26:47-56
26:6-13	26:26-35	
26:14-19	26:36-46	

b. துன்பமும், மறுதப்பும் (26:57-75)

26:57-68	26:69-75

c. ஆழ்ந்த வருத்தம் (27:1-10)
d. சிலுவை மரணம் (27:11-56)

27:11-26	27:27-32	27:33-56

e. அடக்கம் (27:57-66)

9. **ராஜாவின் சான்று (28:1-20)**
a. அவர் உயிர்த்தெழுந்தார் (28:1-10)
b. சம்பவங்களை மறைத்தல் (28:11-15)
c. மாபெரும் கட்டளை (28:16-20)

மாற்கு
(தேவனுடைய ஊழியக்காரன்)

எழுதியவரும் புத்தகத்தின் தலைப்பும்: இந்த புத்தகத்தில் எழுதியவர் பெயர் குறிப்பிடாமல் இருப்பதால் மாற்கு சுவிசேஷம் பெயர் இல்லாததாக இருக்கிறது. ஷுதுமாற்கு எழுதின சுவிசேஷம்'' என்ற தலைப்பு கி.பி. 125க்கு சற்று முன்பு வேதபாரகரால் சேர்க்கப்பட்டது. மாற்கு இந்தப் புத்தகத்தை எழுதினார் என்று திடமான தெளிவான ஆதாரங்கள் இருக்கிறது (வெளிப்புற மற்றும் உட்புற ஆதாரங்கள்). ''அப்போஸ்தலன் பேதுருவுடன் இணைந்திருந்த மாற்கு இந்த சுவிசேஷத்தை எழுதினார் என்று ஆதி கால சபை தந்தையர்கள் யாவரும் சாட்சி அளிக்கின்றனர்.''[56] ''பேதுருவின் வியாக்கியானக்காரன்'' என்று கி.பி. 112ல் பாப்பியஸ் என்பவர் மாற்கை குறித்து கூறுகிறார். அப்போஸ்தலருடைய நடபடிகளிலுள்ள (10:36-43) பேதுருவின் பிரசங்கத்தை மாற்கு சுவிசேஷத்துடன் ஒப்பிடுகையில் இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றில் மாற்கு அதிக விளக்கம் அளிப்பதை காட்டுகிறது என்று வால்ட்டர் எம். டுன்னட் சுட்டிக்காட்டுகிறார்.[57]

மாற்கு இயேசுவின் உண்மையான (12) சீடர்களில் ஒருவராக இல்லாதிருந்தாலும், இவன் பர்னபாஸின் ஒன்றுவிட்ட சகோதரனும் (கொலோசெயர் 4:10), பேதுருவின் சிநேகிதனும் (1 பேதுரு 5:13), எருசலேமில் உயர்ந்த இடத்தைச் சார்ந்த பணக்காரனாகவும், (அப்போஸ்தலர் 12:12) மரியாள் என்ற பெயருள்ள ஸ்திரீயின் மகனாகவும் இருந்தான். மாற்குவில் உள்ள விபரங்களுக்கு அடிப்படைமூலமாக பேதுரு இருந்தார். பேதுருவின் துணையால், இந்த மாற்கு சுவிசேஷத்திற்கு அப்போஸ்தல அதிகாரம் கொடுக்கப்பட்டது. ''மாற்கு என் மகன்'' (1 பேதுரு 5:13) என்று பேதுரு அழைப்பதனால், மாற்குவை கிறிஸ்துவிடம் பேதுரு ஒருவேளை வழி நடத்தியிருக்கலாம்.

மேலும் மாற்கு பவுலுக்கு நெருக்கமான உதவியாளனாக இருந்தார். சார்ல்ஸ் ரைரி இவ்வாறு எழுதுகிறார்:

> பவுலும் பர்னபாவும் தங்கள் முதல் அருட்பணிப் பயணத்தில் சென்றபோது, மாற்கு அவர்களோடு செல்லும் சிலாக்கியத்தைப் பெற்றார். ஆனால் அவர் பாதி வழியிலேயே திரும்பி வந்துவிட்டார். இதன் காரணமாகத் தனது இரண்டாவது பயணத்தில் மாற்குவைக் கூட்டிச்செல்ல பவுல் மறுத்துவிட்டார். மாற்கு பர்னபாவுடன் சீப்புரு தீவுக்குச் சென்றார் (அப்போஸ்தலர் 15:38-40). பன்னிரு ஆண்டுகள் கழித்து அவர் மறுபடியுமாகப் பவுலோடு இருப்பதைக் காண்கிறோம் (கொலோசெயர் 4:10; பிலேமோன் 24). பவுல் கொல்லப்படுவதற்கு முன்பாக அவர் மாற்குவைத் தம்மிடம் வரும்படி அழைத்திருந்தார் (2 தீமோத்தேயு 4:11). வாழ்க்கையில் ஒருமுறை தோல்வியைக் கண்டுவிட்டால், பிறகு எவருக்கும் பயன்படாமல் போய்விட மாட்டோம் என்பதற்கு மாற்குவின் வாழ்க்கை எடுத்துக்காட்டாக இருக்கிறது.[58]

எழுதப்பட்ட காலம்: கி.பி. 50கள் அல்லது 60கள் மாற்கு சுவிசேஷத்தை தேதியிட சற்று கடினமாக இருக்கிறது. மாற்கு சுவிசேஷ புத்தகத்தினுள்ள வேத வசனங்கள் மற்ற மூன்று சுவிசேஷங்களில் காணப்படுவதால், அநேக வேத வல்லுநர்கள், நான்கு சுவிசேஷங்களில், மாற்கு தான் முதலாவது என நம்புகின்றனர். கி.பி. 70இல் எருசலேமின் அழிவுக்கு முன்பு எழுதப்பட்டது (13:2).

மையக்கருத்தும் நோக்கமும்: ''கிறிஸ்து ஊழியக்காரர்'' என்பதுதான் மாற்குவின் மையக்கருத்து. இயேசுவின் ஊழியம், ப இவைகளில் முக்கியத்துவத்தை 10:45ல் தெளிவாகக் கற்பிக்கிறார். ***"அப்படியே மனுஷகுமாரன் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்."*** இந்த வசனத்தின் இரண்டு மையக் கருத்துக்கள் ஊழியம், ப என்பதாகும். இவைகளை எப்படி மாற்கு வெளிப்படுத்தினார் என்பதை நாம் பார்க்கலாம்.

புறஜாதியார் அல்லது ரோமருக்காக இந்த சுவிசேஷம் எழுதப்பட்டது. இதனால் இயேசுவின் மலைப்பிரசங்கத்துடன், இயேசுவின் வம்ச வரலாறும் விடப்பட்டது. சமயத் தலைவர்கள் செய்வதும் குறைந்த முக்கியத்துவத்தையே பெற்றிருக்கிறது. ஏனெனில் அவை யூதர்களுக்கே அதிக அர்த்தமுள்ளதாக இருக்கும். இயேசுவை தேவனுடைய ஊழியக்காரராக, ஒரு வேலைக்காரராக மாற்கு வெளிப்படுத்தியிருப்பதனால், தன்னுடைய வேலையை வல்லமையுடன் செய்கின்ற ஒரு விசுவாசமுள்ள வேலைக்காரராக இயேசுவின் செயல்பாடுகளை இந்த புத்தகம் முக்கியப்படுத்துகிறது.

மாற்கில் கிறிஸ்து: அநேகருக்காக தன் ஜீவனை பரிகாரமாய்க் கொடுத்த இரட்சகரை, பயான வேலைக்காரராக அளிப்பது மாற்குவின் பங்கில் முக்கியம் வகிக்கிறது. தன்னுடைய தேவையை முதன்மைப்படுத்தாமல், எப்பொழுதும் அடுத்தவர்களின் சரீர, ஆவிக்குரிய தேவைகளை முக்கியமாகக் கருதிய இயேசுவின் ஊழியத்தை தெளிவாக மாற்கு புத்தகம் மையப்படுத்துகிறது. இரட்சகரின் ஊழியக்காரத் தன்மை கீழுள்ளபடி காணலாம்:

> கிறிஸ்துவின் எழுபது உவமைகளில் பதினெட்டு மட்டுமே மாற்கில் காணப்படுகின்றது. அவைகளில் சில ஒரே வரியில் உள்ளன. ஆனால் கிறிஸ்துவின் முப்பத்தைந்து அற்புதங்களில் பாதிக்கு மேல் சுவிசேஷங்களில் சொல்லப்பட்டவைகளில் இதுவே அதிகம் கூறுகிறார்.[59]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **வேலைக்காக ஊயக்காரனின் ஆயத்தம் (1:1-13)**
   a. அவருடைய முன்னோடி (1:1-8)
   b. அவருடைய ஞானஸ்நானம் (1:9-11)
   c. அவருடைய சோதனைகள் (1;12-13)

2. **கலேயாவில் ஊழியரின் பிரசங்கம் (1:14-9:32)**
   a. அவருடைய ஊழியம் (1:14-2:12)

1:14-28	1:29-45	2:1-12

   b. ஆரம்ப எதிர்ப்பு (2:13-3:35)

2:13-22	3:1-12
2:23-28	3:13-35

   c. உவமைகள் (4:1-34)

4:1-12	4:26-29
4:13-25	4:30-34

   d. அற்புதங்கள் (4:35-5:43)

4:35-41	5:1-20	5:21-43

   e. வளருகின்ற எதிர்ப்பு (6:1-8:26)

6:1-6	6:33-52	7:14-23
6:7-13	6:53-56	7:24-37
6:14-32	7:1-13	8:1-26

   f. இயேசுவை குறித்த பேதுருவின் அறிக்கை (8:27-33)

g. சீடத்துவத்தின் விலை (8:34-9:1)
h. மறுரூபமாக்கப்படுதல் (9:2-13)
i. பிசாசு பிடித்த குமாரனை விடுதலையாக்குதல் (9:14-29)
j. இயேசு தம்முடைய மரணத்தை முன்னமே அறிவித்தல் (9:30-32)

3. **பெரெயா பட்டணத்தில் ஊழியரின் பிரசங்கம் (9:33-10:52)**
   a. சீடர்களை ஆயத்தம்பண்ண இயேசு கற்பித்தல் (9:33-10:45)
      9: 33-37 | 10: 1-12 | 10: 17-31
      9: 38-50 | 10: 13-16 | 10: 32-45
   b. பர்திமேயு என்ற குருடன் சுகமாகுதல் (10:46-52)

4. **எருசலேமில் ஊழியரின் துக்கம் (11:1-15:47)**
   a. சாதாரண அறிமுகம் (11:1-19)
      11: 1-14 | 11: 15-19
   b. ஜெபத்தைக் குறித்து கற்பித்தல் (11:20-26)
   c. தலைவர்களால் எதிர்க்கப்படுதல் (11:27-12:44)
      11: 27-33 | 12: 13-27 | 12: 41-44
      12: 1-12 | 12: 28-40
   d. எதிர்காலத்தைக் குறித்துக் கற்பித்தல் (13:1-37)
      13: 1-2 | 13: 14-23 | 13: 33-37
      13: 3-8 | 13: 24-27
      13: 9-13 | 13: 28-32
   e. இயேசு துன்பம் அனுபவித்தல் (14:1-15:47)
      14:1-11 | 14:43-52 | 15:16-21
      14:12-21 | 14:53-65 | 15:22-41
      14:22-31 | 14:66-72 | 15:42-47
      14:32-42 | 15:1-15

5. **உயிர்த்தெழுதல் ஊழியர் கண்டது (16:1-20)**
   a. அவருடைய உயிர்த்தெழுதல் (16:1-8)
   b. இயேசுவின் தோற்றம் (16:9-18) *கேள்விக்குரிய பதில்*
   c. இயேசுவின் பரமேறுதல் (16:19-20) *கேள்விக்குரிய பதில்*

லூக்கா
(மனித குமாரன்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: இரண்டு பகுதிகளாக தேயோப்பிலு என்பவருக்கு எழுதப்பட்ட லூக்கா, அப்போஸ்தலருடையநடபடிகள் ஆகிய இரண்டு புத்தகங்களும் லூக்காவை சேர்ந்ததாக இருக்கிறது. ஆனால் லூக்கா எழுதியதாக இரண்டு புத்தகங்களில் எங்கும் குறிப்பிடவில்லை. இந்த இரண்டு புத்தகங்களின் எழுத்தாளனாக, ''அன்பின் வைத்தியன், லூக்கா'' எழுதியதாக ஆதாரங்கள் விளக்குகின்றன (கொலோசெயர் 4:14).

இந்த இரண்டு நூல்களும் கிரேக்கப் புதிய ஏற்பாட்டில் நான்கில் ஒரு பங்குக்கு மேலான இடத்தைப் பிடித்திருக்கின்றன என்பது முக்கியமாகும். கொலோசெயர் 4:14; 2 தீமோத்தேயு 4:11; பிலேமோன் 24 ஆகிய வசனங்களில் மட்டுமே இவருடைய பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போஸ்தலருடைய நடபடிகள் நூல் ''நாங்கள்'' என்று குறிப்பிடப்படும் இடங்களிலெல்லாம் லூக்கா தன்னையும் சேர்த்தே அப்படிக் குறிப்பிடுகிறார் (16:10-17; 20:5-21:18, 27:1-28:16). இதன்மூலம் அவர் பவுன் நெருக்கமான உதவியாளனாக, அவருடைய பயணங்களில் உடன் சென்றார் என்பது தெரிகிறது. லூக்காவும், தீத்துவும் மட்டுமே இவ்வாறு நெருக்கமானவர்களாக இருந்தார்கள். பவுல் லூக்காவை ''பிரியமான வைத்தியன்'' எனறும் (கொலோசெயர் 4:14), ''உடன் வேலையாள்'' என்றும் (பிலேமோன் 24) அழைக்கிறார்.

லூக்கா ஒரு புறஜாதியனாக இருக்கலாம் என்று கொலோசெயர் 4:10-14 வசனங்களில் தெளிவாக காணலாம்; காரணம் பவுல், யூதர்களுக்கும் லூக்காவுக்கும் இடையே ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துகிறான், இங்கு பவுல், அரிஸ்தர்க்கு, மாற்கு, யோவான் என்பவர்களை மட்டும் தன் உடன் வேலையாளர்களில் யூதர்கள் என்று குறிப்பிடுகிறான், மேலும் இதே வசனங்கள் எப்பாப்பீரா, லூக்கா, தேமா இவர்களையும் குறிப்பிடுகிறது; இவர்கள் புறஜாதியார்கள், யூதர்கள் அல்ல. ''லூக்காவின் தெளிவான கிரேக்க அறிவும் மேலும் அப்போஸ்தலருடைய நடபடிகள் 1:19ல் அவர்களுடைய பாஷை என்ற வாக்கை உபயோகித்ததாலும், லூக்கா யூதன் அல்ல என்பது தெரிகிறது.'' [60]

இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை, இவன் கண்ணாரக் கண்டவன் அல்ல என்பதை தவிர இவனுடைய ஆதிகால வாழ்க்கை மற்றும் இரட்சிப்பு இவைகளை குறித்தும் ஒன்றும் தெரியவில்லை (லூக்கா 1:2). லூக்கா வைத்தியனாக தொழில்ரீதியில் இருந்தாலும், பவுலுடன் சேர்ந்து மிஷனரி ஊழியம் செய்தும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம், லூக்கா சுவிசேஷ புத்தகம் இவைகளை எழுதியும் முக்கியமாக இவன் ஒரு சுவிசேஷகனாக இருந்தான். அப்போஸ்தலர் இரத்தசாட்சியாக மரிக்கும் சமயத்தில் லூக்கா பவுலுடன் இருந்தான் (2 தீமோத்தேயு 4:11). ஆனாலும் இவரின் பிந்தய வாழ்க்கையை குறித்து சரியான விபரங்கள் இல்லை.[61]

எழுதப்பட்ட காலம்: கி.பி. 60 லூக்கா சுவிசேஷத்தை தேதியிட பொதுவாக இரண்டு கருத்துகள் நிலவுகின்றன. (1) கி.பி. 59-63: (2) கி.பி. 70 அல்லது 80, பவுல் ரோமாபுரியிருந்ததை கடைசிப் பகுதி காட்டுகிறது. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் எழுதுவதற்கு முன்பு, லூக்கா சுவிசேஷம் எழுதப்பட்டிருக்கிறது (அப்போஸ்தலர் 1:1). எனவே சுமார் கி.பி. 60ல் லூக்கா சுவிசேஷம் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

மையக்கருத்தும் நோக்கமும்: முதல் நான்கு வசனங்களில் லூக்கா சுவிசேஷத்தின் நோக்கம் தெளிவாக கூறப்பட்டுள்ளது.

> ***மகா கனம்பொருந்திய தேயோப்பிலுவே, நாங்கள் முழுநிச்சயமாய் நம்புகிற சங்கதிகளை, ஆரம்பமுதல் கண்ணாரக்கண்டு வசனத்தைப் போதித்தவர்கள் எங்களுக்கு ஒப்புவித்தபடியே அவைகளைக் குறித்துச் சரித்திரம் எழுத அநேகம்பேர் ஏற்பட்டபடியினால், ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரித்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, இவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய் தோன்றிற்று*** (லூக்கா 1:1-4)

இந்த சுவிசேஷ புத்தகத்தை அளிப்பதற்கு லூக்காவின் அணுகுமுறையை குறித்து அநேக காரியங்களைக் கவனிக்கவேண்டும்:

அநேகருடைய முயற்சியால் தாம் இதை எழுத உந்தப்பட்டான் என்று லூக்கா கூறுகிறார். (1:1) அதற்காக அவர் கிறிஸ்துவை நேரில் பார்த்தவர்களிடம் பேசினார்; (1:2), எல்லாத் தகவல்களையும் நன்கு ஆராய்ந்தார் (1:3). விசுவாசத்தின் சரித்திர நம்பகத் தன்மையை பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் தேயோப்பிலுவுக்கு கற்பிக்க, விவரங்களை ஒழுங்காக்கி பரிசோதித்து லூக்கா இந்த சுவிசேஷத்தை எழுதினார் (1:4).[62]

லூக்கா புறஜாதியான் என்ற வகையில் புறஜாதிகளுக்காக இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையை இரண்டு பகுதிகளாக எழுதவேண்டும் என்ற கடமை உணர்வை கொண்டிருக்க வேண்டும். "கிரேக்க மொழியினருக்கு யூதருடைய புவியியல் கலாச்சாரத்தை விளக்கி அரமேய மொழி வாக்குகளை கிரேக்க மொழிக்கு மாற்றினான்."[63] இவைகள் லூக்கா இந்த சுவிசேஷத்தை புறஜாதியருக்கு கிடைப்பதற்காகவே எழுதினான் என்று காட்டுகிறது.

ஞுபிரிய வைத்தியனாகியது லூக்கா எழுதிய சுவிசேஷம், எல்லா சுவிசேஷப் புத்தகங்கலும் நீளமானதாகவும் புரிந்துகொள்ளக் கூடியதாகவும் இருக்கின்றது. அது கிறிஸ்துவை, இழந்ததைத் தேடவும் இரட்சிக்கவும் வந்த பூரண மனிதனாகவும், மனித குமாரனாகவும் காட்டுகிறது (19:10). மத்தேயுவில் இயேசுவை தாவீதின் குமாரனாக இஸ்ரவேன் ராஜாவாகக் காண்கிறோம். மாற்குவில் கர்த்தருடைய ஊழியக்காரராகவும் மற்றவர்களுக்கு ஊழியம் செய்பவராகவும் காண்கிறோம். இயேசுவை, பிரதான ஆசாரியனாகவும், இரட்சகராகவும் இருப்பதற்கு அதிக தகுதியுடையவர், மனிதர்களுக்குள் சோதிக்கப்பட்டவர், மனிதர்களிடமிருந்து தெரிந்தெடுக்கப்பட்டவர். மனிதர்களுக்குள்ளே பூரணமானவர், மனிதர்களுடைய தேவைகளை சந்திக்கிறவர், மனித குமாரன் என்பதாக லூக்கா காண்கிறோம். முக்கிய சம்பவங்களை ஒன்று சேர்த்து நாம் மத்தேயுவில் பார்க்கிறோம். முக்கிய சம்பவங்களின் சுருக்கத்தை மாற்கில் பார்க்கிறோம். ஆனால், சரித்திர எழுத்தாளரும் வைத்தியனுமாகிய லூக்கா அந்த முக்கிய சம்பவங்களை விளக்கமாக அளிப்பதை நாம் லூக்காவில் காண்கிறோம்.

இயேசுவானவரின் வம்சாவளியை ஆதாமிருந்து குறிப்பிடுவதின் மூலம் தேவ குமாரனாகிய அவர் பூரணமான மனுஷ குமாரனாகவும் இருந்தார் என்பது வயுறுத்தப்படுகிறது (3:38; மத்தேயு ஆபிரகாம் வரையிலேயே குறிப்பிடுவதைக் கவனியுங்கள்). லூக்காவில் இயேசுவின் மன வளர்ச்சி 2:40-52 வசனங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், அவருடைய ஞானஸ்நானத்தில் பரலோகத்திருந்து வந்த பிதாவின் குரலாலும், பரிசுத்தாவியானவரின் அபிஷேகத்தாலும் இயேசுவின் ஒழுக்க மற்றும் ஆவிக்குரிய பூரணத்தை தெளிவாக காணமுடியும் (3:21-22). ஆவி, ஆத்துமா, சரீரம் இவைகளில் பூரணமான ஒரு மனிதனை இயேசுவில் நாம் கொண்டுள்ளோம்.

லூக்காவில் கிறிஸ்து: லூக்கா சுவிசேஷத்தில் இயேசுவின் மனுஷீகம் மற்றும் மனதுருக்கம் மறுபடியும் மறுபடியும் முக்கியப்படுத்தப்பட்டுள்ளது. இயேசுவின் வம்சாவளி, பிறப்பு. வளர்ச்சி இவைகளின் கணக்கை பூரணமாக லூக்கா சுவிசேஷம் கொடுக்கிறது. விலைமதிக்கமுடியாத இரட்சிப்பாகிய தானத்தை நமக்கு அளிக்கவும், நமது தூக்கங்களை சுமப்பதற்கும், துக்கமும் பாவமுள்ள மனிதனுடன் அடையாளமாக்கப்பட மனித குமாரனாகிய இயேசு, நம் உள்ளத்தில் நிற்கிற ஒரு மனிதனாக காட்டப்படுகிறார். கிரேக்க கொள்கையில் பூரண மனிதன் என்பதை இயேசு ஒருவர் மாத்திரம் நிறைவேற்றினார்.[64]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை: எழுதுவதின் நோக்கமும் வழிமுறையும் (1:1-4)**

2. **மனிதர்களுடன், மனித குமாரனாகிய இயேசுவின் அடையாளம் (1:5-4:13)**
   a. இயேசுவின் பிறப்புக்கு முந்திய சம்பவங்கள் (1:5-56)
      1:5-25 1:39-45
      1:26-38 1:46-56
   b. இயேசுவின் பிறப்புடன் சேர்ந்த சம்பவங்கள் (1:57-2:38)
      1:57-66 2:1-20
      1:67-80 2:21-38

c. இயேசு குழந்தையாக இருந்தபோது நடந்த சம்பவங்கள் (2:39-52)

2:39-40	2:41-52

d. இயேசு அறிமுகமானதை தொடர்ந்து வந்த சம்பவங்கள் (3:1-4:13)

3:1-20	3:23-38
3:21-22	4:1-13

3. மனிதகுமாரனாகிய இயேசு மனிதர்களுக்கு செய்த ஊழியம் (4:14-9:50)

a. இயேசுவின் அறிமுகம் (4:14-30)

b. இயேசுவின் வல்லமையை நிரூபித்தல் (4:31-5:28)

4:31-37	5:1-11	5:27-28
4:38-44	5:12-26	

c. இயேசுவின் திட்டத்தின் விளக்கம் (5:29-6:49)

5:29-39	6:12-19	6:46-49
6:1-11	6:20-45	

d. இயேசுவின் திட்டத்தின் விரிவு (7:1-9:50)

7:1-17	8:16-21	9:12-27
7:18-39	8:22-25	9:28-45
7:40-50	8:26-39	9:46-50
8:1-3	8:40-56	
8:4-15	9:1-11	

4. மனிதர்களால் மனிதகுமாரனாகிய இயேசு புறக்கணிக்கப்படுதல் (9:51-19:27)

a. இயேசுவுக்கு எதிர்ப்பு அதிகரிக்கிறது (9:51-11:54)

9:51-56	10:30-37	11:29-36
9:57-62	10:38-42	11:37-54
10:1-16	11:1-13	
10:17-29	11:14-28	

b. இயேசுவைப் புறக்கணித்தன் கோணத்திருந்து அறிவுரை (12:1-19:27)

12:1-12	14:7-15	17:1-10
12:13-34	14:16-24	17:11-21
12:35-48	14:25-35	17:22-37
12:49-59	15:1-7	18:1-8
13:1-9	15:8-10	18:9-17
13:10-17	15:11-32	18:18-34
13:18-21	16:1-13	18:35-43
13:22-35	16:14-18	19:1-10
14:1-6	16:19-31	19:11-27

5. மனிதர்களுக்காக வேதனைப்படும் மனித குமாரனாகிய இயேசு (19:28-23:56)

19:28-44	21:25-28	22:54-65
19:45-48	21:29-33	22:66-71
20:1-8	21:34-36	23:1-7
20:9-18	21:37-38	23:8-12
20:19-26	22:1-13	23:13-25
20:27-47	22:14-23	23:26-32
21:1-9	22:24-38	23:33-49
21:10-19	22:39-46	23:50-56
21:20-24	22:47-53	

6. மனிதர்களுக்கு முன்பாக மனித குமாரன் என்று ஊர்ஜிதம் செய்தல் (24:1-53)

24:1-12	24:36-49
24:13-35	24:50-53

யோவான்
(நித்திய தேவ குமாரன்)

எழுதியவரும் புத்தகத்தின் தலைப்பும்: சபை மரபு 2ம் நூற்றாண்டின் ஆரம்பத்திருந்து யாக்கோபின் சகோதரனும், செபதியாவின் குமாரனுமாகிய அப்போஸ்தலன் யோவான் நான்காவது சுவிசேஷத்தை எழுதினதாகக் கூறுகிறது. இயேசு யோவானையும் யாக்கோபையும், “இடிமுழக்கத்தின் குமாரர்கள்” என பெயரிட்டார் (மாற்கு 3:17). இவனுடைய தாயார், சலோமி, கலேயாவில் இயேசுவுக்கு ஊழியம் செய்தாள். மேலும் இயேசு சிலுவையில் அறையப்படும்பொழுது அங்கு இருந்தாள் (மாற்கு 15:40–41). பன்னிரெண்டு சீடர்களில் இயேசுவுக்கு நெருக்கமான சீடனாக இருந்தது மட்டுமல்லாமல், “பிரிய சீடன்” என்றும் அடிக்கடி அடையாளப்படுத்தப்படுகிறார். (13:23; 18:15–16; 19:26–27). சீஷர்களில் உள்வட்டத்தில் இருந்தவர்களில் யோவானும் ஒருவர். மறுரூப மலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட மூன்று சீடர்களில் ஒருவராக இருந்தார் (மத்தேயு 17:1). மேலும் யோவான் பேதுருவுடனும் நெருக்கமாக இருந்தான். இயேசு பரமேறின பிறகு சபையின் “தூணாக”, மாறினான். இதை பவுல் கலாத்தியர் 2:9ல் குறித்துள்ளார்.

சரியாகப் பார்த்தால் நான்காவது சுவிசேஷம் பெயரிடப்படாததாக இருக்கிறது, இந்தப் புத்தகத்தில் எழுதியவரின் பெயர் குறிப்பிடப்பட வில்லை. இது ஒன்றும் ஆச்சரியமில்லை; காரணம் சுவிசேஷம் நிருப இலக்கியத்திருந்து மாறுபட்டதாக இருக்கிறது. பண்டை காலத்தில் நிருபங்கள் எழுதுபவர்களின் பொது காலாச்சாரம் முதலாவது பெயரை வெளியிடுவதாகும். அதனால்தான் பவுல் ஒவ்வொரு நிருபத்தையும் பெயருடன் ஆரம்பிக்கிறார். நான்கு சுவிசேஷங்களை எழுதியவர்கள் தங்களுடைய பெயர்களைக் குறிப்பிடவில்லை, ஆனால் மறைமுகமாக தங்களை வெளிப்படுத்தியிருக்கின்றனர். மேலும் மரபுகளால் அவர்கள் நன்றாக அறியப்படுகிறார்கள்.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 85–90 “நான்காவ”து சுவிசேஷமாக சபையில், யோவான் சுவிசேஷம் அறியப்படுகிறது. மேலும், யோவான் முதிர்வயதாக இருக்கும் பொழுது இந்த சுவிசேஷத்தை எழுதினான் என்று ஆதிகால சபை நம்புகிறது. எனவே 85க்கும் 95க்கும் இடைப்பட்ட காலத்தில் இது நிகழ்ந்ததாகத் தெரிகிறது யோவான் 21:18, 23ல் முதிர்ந்த வயதில் பேதுருவுக்குப்பின் கொஞ்ச காலம் வாழ்ந்தார் என்று காண்கிறோம்.

மையக்கருத்தும் நோக்கமும்: வேறு எந்தப் புத்தகத்தைப் பார்க்கிலும், யோவான், தன் சுவிசேஷத்தின் மையக்கருத்தையும் நோக்கத்தையும் தெளிவாக குறிப்பிடுகிறார். உயிர்த்தெழுந்த இரட்சகருடன் தோமா பேசுவதும், கிறிஸ்துவின் பதிலுமே இந்தப் புத்தகத்தின் நோக்கமாக அமைகின்றது. தோமா உயிர்த்தெழுதன் உண்மையைக் குறித்து சந்தேகப்பட்டான் (யோவான் 20:24–25); இந்த சந்தேகத்திற்கு பிறகு, உடனே இயேசு சீடர்களுக்கு காட்சி அளித்து தோமாவிடம் இந்த வார்த்தைகளைக் கூறினார்,

> ***நீ உன் விரலை இங்கே நீட்டி, என் கைகளைப் பார், உன் கையை நீட்டி, என் விலாவிலே போடு, அவிசுவாசியாயிராமல் விசுவாசியாயிரு என்றார். தோமா அவருக்குப் பிரதியுத்திரமாக: என் ஆண்டவரே! என் தேவனே! என்றான். அதற்கு இயேசு: தோமாவே, நீ என்னை கண்டதினாலே விசுவாசித்தாய், காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்.*** (20:27–29)

இதை தொடர்ந்து, இயேசுவை விசுவாசிப்பதின் அவசியத்தையும், மாற்றத்தையும், யோவான் இந்த புத்தகத்தின் மையக்கருத்தாகவும் நோக்கமாகவும் குறிப்பிடுகிறான்,

> ***இந்த புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார். இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது*** (20:30–31)

இந்த நோக்கத்துடன் இரட்சகராக இயேசுவை விசுவாசிக்க வேண்டும் என்று இயேசுவையும் அவருடைய திட்டத்தையும் வெளிப்படுத்துகிற ஏழு அற்புத அடையாளங்களை யோவான் தேர்வு செய்தான். இயேசுவின் மகிமையை இந்த அடையாளங்கள் வெளிப்படுத்துகின்றன. கிறிஸ்துவின் மகிமையை (யோவான் 1:14; ஏசாயா 35:1–2; யோவேல் 3:18; ஆமோஸ் 9:13) ஆகியவை வெளிப்படுத்தின. அந்த ஏழு அற்புத அடையாளங்கள்:

1. தண்ணீரைத் திராட்சரசமாக மாற்றுதல் (2:1–11)
2. ராஜ பரம்பரை மனிதனின் குமாரனை சுகமாக்குதல் (4:46–54)
3. சூம்பின உறுப்புடையவனை சுகமாக்குதல் (5:1–18)
4. திரள்கூட்டத்தைப் போஷித்தல் (6:6–13)
5. நீரின் மேல் நடத்தல் (6:16–21)
6. குருடனுக்குப் பார்வை அளித்தல் (9:1–7)
7. மரித்த லாசருவை உயிர்த்தெழச் செய்தல் (11:1–45)

யோவான் சுவிசேஷத்தை, மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய சுவிசேஷத்துடன் ஒப்பிடும்போது, யோவான் சுவிசேஷத்தின் தனிப்பட்ட தன்மையால் இந்தப் புத்தகத்தின் சிறப்பான மையக்கருத்தையும் நோக்கத்தையும் எளிதாக அறியமுடியும்.

ஒருவர் யோவான் சுவிசேஷத்தை மற்ற மூன்று சுவிசேஷங்களுடன் ஒப்பிடும்போது அவர் யோவானுடைய எழுத்தின் தனிப்பட்ட தன்மையினால் ஈர்க்கப்படுவார். இயேசுவின் வம்சவரலாறு, பிறப்பு, ஞானஸ்நானம், சோதனை, பிசாசுகளை விரட்டுதல், உவமைகள், மறுரூபமாக்கப்படுதல், இராப்போஜனத்தை ஆரம்பித்தது, கெத்சமனேயில் இயேசுவின் வேதனை, இயேசுவின் பரமேறுதல், ஆகிய காரியங்களை தன் சுவிசேஷத்தில் சேர்க்கவில்லை. எருசலேமில் இயேசுவின் ஊழியம், யூத தேசத்தின் பண்டிகைகள், தனிப்பட்ட முறையில் இயேசுவின் சந்திப்பும், உரையாடலும்

(3:1-4:38; 18:28-19:16) சீடர்களுக்கு இயேசு செய்த ஊழியம் ஆகிய காரியங்களை வயுருத்துகிறது. இயேசுவை தேவனுடைய குமாரன் என்றும், இயேசுவே மேசியா என்றும் அறிவிக்கிற ஏழு அற்புத அடையாளங்களைக் கொண்டுள்ள "அடையாள புத்தகமாக" யோவான் சுவிசேஷ புத்தகத்தின் ஒரு பெரும் பகுதி உள்ளது (2:1-12:50). மேலும் அடையாளங்களின் முக்கியத்துவம் என்பதையும் விளக்குகிறார். உதாரணமாக, 5000 பேரைப் போஷித்ததைத் தொடர்ந்து (6: 1-15) உலகத்தின் ஜீவனுக்காக பரலோகப் பிதா கொடுக்கும் ஜீவ அப்பம் என்று தன்னை வெளிப்படுத்தினார். நான்காவது புத்தகத்தில் முக்கியமான அப்பம் ஒன்று என்னவென்றால், இயேசு தான் உருவாக்கின "நான்" என்கின்ற வாக்கிய வரிசையாகும் (6:35; 8:12; 10:7, 9, 11, 14; 11:25; 14:6; 15:1, 5).

யோவான் சுவிசேஷத்தின் தனித்தன்மையை நோக்க வேண்டும். வாழ்க்கை வரலாற்றை கூறும் நோக்கமாக சுவிசேஷங்கள் இல்லை. கடல் போன்று கிடக்கும் விவரங்களிருந்து தன்னுடைய புத்தகத்தின் நோக்கத்திற்குத் தேவையான காரியங்களை ஒவ்வொரு சுவிசேஷக எழுத்தாளரும் தெரிவு செய்தனர். மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய சுவிசேஷங்களில் இயேசு கூறிய வார்த்தைகளை உரக்கப் படித்தால் சுமார் மூன்று மணி நேரமே ஆகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.[66]

யோவானில் கிறிஸ்து: வேதாகமத்தில் அநேக இடங்களில், இயேசுவின் தெய்வீகம் நன்றாகத் தெரியக்கூடிய மையக் கருத்தாக இருந் தாலும், வேறு எந்த புத்தகமும் தேவ குமாரனாகிய இயேசுவின் தெய்வீகத்தை யோவான் சுவிசேஷத்தைப் போல் அதிக வல்லமையுடன் வெளிப்படுத்தவில்லை. "இயேசு என்று அழைக்கப்பட்ட மனிதன்" (9: 11); "ஒரே ஒரு தேவன்" (1:18), "ஜீவனுள்ள தேவனுடைய குமாரன ாகிய கிறிஸ்"து (6:69), அல்லது "பரிசுத்தர்" (6:69) என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

யோவான் சுவிசேஷத்தில் பதிவுசெய்யப்பட்ட, இயேசுவினால் சொல்லப்பட்ட ஏழு "நான்" என்கிற வாக்கியங்கள் மேலும் இயேசு கிறிஸ்து வின் தெய்வீகத்தை அறிக்கை செய்கிறது. அந்த ஏழு "நான்" வாக்கியங்கள்:

1. நானே "ஜீவ அப்பம்" (6:35)
2. நான் "உலகத்திற்கு ஒளியாக இருக்கிறேன்" (8:12)
3. நானே "வாசல்" (10:7, 9)
4. நானே "நல்ல மேய்ப்பன்" (10:11, 14)
5. நானே "உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" (11:25)
6. நானே "சத்தியமும், ஜீவனும், வழியுமாயிருக்கிறேன்" (14:6)
7. நானே "மெய்யான திராட்சச் செடி" (15:1, 5)

யோவான் சுவிசேஷத்திலுள்ள மற்றுமொரு சிறப்பான காரியம் இயேசுவின் ஆள்தத்துவத்தை முக்கியப்படுத்தி தேவ குமாரனாகிய இயே சுவைக் குறித்து சாட்சி கொடுக்கின்ற ஐந்து சாட்சிகள் ஆகும். யோவான் 5:31-47ல் இயேசு தன் எதிரிகளின் வாதத்திற்கு பதில் அளிக்கிற ார். இயேசுவின் உரிமையை உறுதி செய்யப் போதுமான சாட்சியங்கள் இல்லை என்று இயேசுவின் எதிரிகள் குற்றம் சாட்டினர். எனவே, தான் உரிமை கொண்டாடியதைச் செல்லும்படியாக்க வேறு சாட்சியங்களை அளித்து அவர்களின் குற்றச்சாட்டு உண்மை அல்ல என இயேசு காட்டுகிறார். வேறு சாட்சியங்கள். இயேசுவின் பிதா (5:32, 37), யோவான்ஸ்நானன் (5:33), அவருடைய அற்புதங்கள் (5:36), வேத வாக்கு (5:39), மோசே (5:46) இவைகளாகும். அவரின் சாட்சியங்கள் உண்மையாக இருக்கிறது என்று பின்னால் 8:14ல் இயேசு அறிக் கையிடுகிறார். குறிப்பிட்ட சமயங்களில் இயேசு தன்னை பழைய ஏற்பாட்டு "யெகோவா" அல்லது "இருக்கிறவராகவே இருக்கிறேன்" என்ற தேவனுக்கு சமப்படுத்துகிறார். (4:25-26; 8:24, 28, 58; 13:19; 18:5-6, 8). இயேசுவின் தெய்வீகத்தைப் பற்றி மிக முக்கியமாக சில வாக் கியங்களை யோவான் (1:1; 8:58; 10:30; 14:9; 20:28) வசனங்களில் காணலாம்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை: தேவ குமாரன் மாம்சமாதல் (1:1-18)**
   a. இயேசுவின் தெய்வீகம் (1:1-2)
   b. மாம்சமாவதற்கு முன்பு இயேசுவின் பணி (1:3-5)
   c. இயேசுவின் முன்னோடி (1:6-8)
   d. இயேசுவைப் புறக்கணித்தல் (1:9-11)
   e. இயேசுவை ஏற்றுக்கொள்ளுதல் (1:12-13)
   f. இயேசு மாம்சமாகியது (1:14-18)

2. **தேவ குமாரனின் அறிமுகம் (1:19-4:54)**
   a. யோவான் ஸ்நானனால் அறிமுகம் (1:9-34)
   b. யோவானின் சீடர்களுக்கு அறிமுகம் (1:35-51)
   c. கானா ஊர் கயாணத்தில் அறிமுகம் (2:1-11)
   d. எருசலேம் தேவாலயத்தில் அறிமுகம் (2:12-25)
   e. நிக்கொதேமுவுக்கு அறிமுகம் (3:1-24)
   f. யோவான் ஸ்நானனால் அறிமுகம் (3:22-36)
   g. சமாரிய ஸ்திரீக்கு அறிமுகம் (4:1-42)
   h. கப்பர்நகூமில் உள்ள அலுவலருக்கு அறிமுகம் (4:43-54)

3. தேவ குமாரனுக்கு எதிர்ப்பு (5:1-12:50)

a. எருசலேம் பண்டிகையில் (5:1-47)

5:1-17	5:33-35	5:39-47
5:18-24	5:36	
5:25-32	5:37-38	

b. கலேயாவில் பஸ்கா பண்டிகையின் போது (6:1-71)

6:1-14	6:26-40	6:59-65
6:15-25	6:41-58	6:66-71

c. எருசலேமில் கூடாரப் பண்டிகையில் (7:1-10:21)

7:1-24	8:12-30	9:13-34
7:25-39	8:31-47	9:35-41
7:40-53	8:48-59	10:1-21
8:1-11	9:1-12	

d. எருசலேமில் பிரதிஸ்டை பண்டிகையில் (10:22-42)

10:22-30	10:31-42

e. பெத்தானியாவில் (11:1-12:11)

11:1-16	11:38-46	12:1-11
11:17-29	11:47-53	
11:30-37	11:54-57	

f. எருசலேமில் (12:12-50)

12:12-19	12:27-36	12:44-50
12:20-26	12:37-43	

4. தேவகுமாரன் போதித்தல் (13:1-16:33)

a. மன்னிப்பதைக் குறித்து (13:1-20)

13:1-4	13:5-20

b. அவரை காட்டிக்கொடுப்பதை குறித்து (13:21-30)

c. அவர் உலகத்தை விட்டு போகுதலைக் குறித்து (13:31-38)

d. பரலோகத்தைக் குறித்து (14:1-15)

14:1-6	14:7-15

e. பரிசுத்த ஆவியானவரைக் குறித்து (14:16-26)

f. சமாதானத்தைக் குறித்து (14:27-31)

g. கனிகொடுப்பதைக் குறித்து (15:1-17)

15:1-11	15:12-17

h. உலகத்தைக் குறித்து (15:18-16:4)

15:18-27	16:1-4

i. பரிசுத்தாவியானவரைக் குறித்து (16:5-15)

j. அவரின் வருகையைக் குறித்து (16:16-33)

16:16-22	16:23-33

5. தேவ குமாரன் பரிந்து பேசுதல் (17:1-26)

17:1-12	17:13-21	17:22-26

6. தேவ குமாரனின் சிலுவை மரணம் (18:1-19:42)

18:1-11	19:1-15	19:31-37
18:12-24	19:16-22	19:38-42
18:25-27	19:23-27	
18:28-40	19:28-30	

7. தேவ குமாரனின் உயிர்த்தெழுதல் (20:1-31)

a. வெறுமையான கல்லறை (20:1-10)

b. உயிர்த்தெழுந்த தேவனின் தோற்றம் (20:11-31)

20:11-18	20:24-29
20:19-23	20:30-31

8. முடிவுரை : கடற்கரையில் தோற்றம் (21:1-25)

a. ஏழு சீடர்களுக்கு தோற்றம் (21:1-14)

21:1-11	21:12-14

b. பேதுருவுக்கு வாக்கு (21:15-23)

21:15-17	21:18-23

c. சுவிசேஷத்தின் முடிவுரை (21:24-25)

அப்போஸ்தலருடைய நடபடிகள்
(சுவிசேஷத்தை பரப்புதல்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: அப்போஸ்தலருடைய நடபடிகளில் அதை எழுதியவரின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும், லூக்கா எழுதினார் என்ற முடிவுக்கு வர ஆதாரங்கள் உள்ளன. "இயேசு செய்ய ஆரம்பித்த அனைத்தையும் மேலும் கற்பித்தவைகளைக் குறித்" தேயோப்பிலுவுக்கு வைத்தியனாகிய லூக்கா எழுதிய இரண்டு பகுதிகளான போதனைகளில் இரண்டாம் பகுதியாக அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் இருக்கிறது.

எல்லா கிரேக்க மொழி கையெழுத்துப் பிரதிகளும் "அப்போஸ்தலருடைய நடபடிகள்" அல்லது "நடபடிகள்" என்ற தலைப்பைக் கொடுக்கின்றன. ஏன், எப்படி, இந்தத் தலைப்பு வந்தது என்று தெரியவில்லை. எல்லா அப்போஸ்தலருடைய நடபடிகளை இந்தப் புத்தகம் கொண்டிராத காரணத்தால் "அப்போஸ்தலருடைய நடபடிகள்" என்ற தலைப்பு ஒருவேளை சரியான தலைப்பாக இல்லாமல் இருக்கலாம். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் உலகமெங்கும் போய் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க, எல்லா அப்போஸ்தலர்களும் வாக்குத்தத்தத்தைப் பெற்றிருந்தாலும் பவுல் மற்றும் பேதுரு மட்டும் இந்தப் புத்தகத்தில் முக்கியம் பெறுகின்றனர் (1:2-8). அப்போஸ்தலருடைய நடபடிகள் 2ல் வந்த பரிசுத்த ஆவியானவரின் வேளையிருந்து, கிறிஸ்தவம் பரவியதை விளக்கப்பட்டிருப்பதின் காரணத்தால், "பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள்" என்ற தலைப்பு இந்தப் புத்தகத்திற்கு பொருத்தமான தலைப்பாக இருக்கலாம் என்று அநேகர் எண்ணுகின்றனர். பவுல், சீலா, பர்னபா, யாக்கோபு, பிப்பு, ஸ்தேவான், யோவான், பேதுரு ஆகிய முக்கிய நபர்களை அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் உள்ளடக்கியிருக்கிறது.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 61 இந்த புத்தகத்திற்கு தேதியிட்ட காரியத்தை குறித்து ஸ்டான் டௌஸ்செயின்ட் (Stanley Toussaint) என்பவர் கூறுகிறார்:

> கி.பி. 70ல் நடந்த எருசலேமின் அழிவிற்கு முன்பாக அப்போஸ்தலருடைய நடபடிகள் எழுதப்பட்டிருக்க வேண்டும். நிச்சயமாக இவ்வளவு முக்கியமான சம்பவம் தவிர்க்கப்பட்டிருக்க முடியாது. இயேசு கிறிஸ்துவை யூதர்கள் புறக்கணித்த காரணத்தால் தேவன் யூதர்களிடமிருந்து புறஜாதியாரிடம் திரும்பினார் என்பது இந்த புத்தகத்தின் ஒரு மையக்கருத்தின் வெளிச்சத்தில் உண்மையாக இருக்கிறது.
>
> மரபின்படி பவுன், மரணம் கி.பி. 66-68 என்று கூறுகிறது. இந்தப் புத்தகத்தை எழுதுவதற்கு முன்பு நடந்திருந்தால் லூக்கா அதைப் புறக்கணித்திருக்க மாட்டார்.
>
> கி.பி.64ல் ரோம நகரில் ஏற்பட்ட பெரிய தீ விபத்திற்கு பிறகு, நீரோ என்ற பேரரசன் கிறிஸ்தவர்களை உபத்திரவப் படுத்தியதைக் குறித்து பவுல் எழுதவில்லை.
>
> மேலும், நீரோவின் பகைமை காலத்தில் கீழ் அதிகாரிகளிடமிருந்து பவுல் சில காரியங்களைப் பெற்றிருக்க வேண்டும். அந்த சமயத்தில் நீரோ பேரரசன் சபையை அழிப்பதற்கு மும்முரமாக இருந்தான். அப்பொழுது கிறிஸ்தவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை ஏற்பட்டிருந்தால், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் அதைப்பற்றிக் கூறி இருக்கலாம். ஆனால் அதைக் குறித்து குறிப்புகள் இல்லை.
>
> சாதாரணமாக அப்போஸ்தலர் நடபடிகள் கி.பி. 60-62ல் இருக்கலாம் என்று கணக்கிடப்பட்டுள்ளது. ரோமாபுரியில் வைத்தோ அல்லது செசரியாவிலும் ரோமாபுரியிலும் வைத்தோ இது எழுதப்பட்டிருக்கலாம். இதை எழுதும்போது பவுல் விடுதலைசெய்யப்படும் காலம் நெருங்கியிருக்கலாம் அல்லது அப்போதுதான் அவர் விடுதலை செய்யப்பட்டிருக்கலாம்.[68]

மையக்கருத்தும் நோக்கமும்: புதிய ஏற்பாடு புத்தகங்களில் அப்போஸ்தலருடைய நடபடிகளில் புத்தகம் இணையற்றதாக இருக்கிறது. மற்ற புதிய ஏற்பாட்டு புத்தகங்களுக்கு இணைப்பை கொடுக்கிற தனிப்பட்ட புத்தகமாக உள்ளது. லூக்காவின் முதல் புத்தகமாகிய லூக்கா சுவிசேஷத்தில் பதிவு செய்யப்பட்டது போல இயேசு ***"செய்யத் தொடங்கின காரியங்களையும், கற்பித்தலையும்"*** இரண்டாம் புத்தகமாக இருக்கிற அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகம் தொடருகிறது (1:1). இந்தப் புத்தகம் இயேசு வின் பரமேறுதல் தொடங்கி புதிய ஏற்பாட்டு நிருபங்களின் காலத்துக்கு செல்லுகிறது. இயேசுவின் சரீரமாகிய சபையை உருவாக்குவதற்கு பிரசங்கிக்கப் போன அப்போஸ்தலர் பணியில், பரிசுத்தாவியானவரின் மூலமாக இயேசுவின் ஊழியம் தொடர்வதை இந்த புத்தகம் கொண்டுள்ளது. நிருபங்களுக்கும் சுவிசேஷங்களுக்கும் இடையில் ஒரு சரித்திர இணைப்பாக இந்த புத்தகம் இருக்கிறது.

இந்தப் புத்தகம் நமக்கு ஒரு இணைப்பை மாத்திரம் கொடுக்கவில்லை. பவுன் வாழ்க்கை வரலாற்றையும், பவுன் கடிதங்களுக்கு சரித்திர தருணத்தையும் இந்த புத்தகம் கொடுக்கிறது. முதல் 30 வருட சபை வரலாற்றை இந்தப் புத்தகம் அருளுகிறது.

அப்போஸ்தல நடபடிகளின் நோக்கத்தைக் குறித்த பல்வேறு பார்வைகளை ஸ்டான் டௌசெயின்ட் இவ்வாறு சுருக்கமாகத் தொகுத்துக் கூறுகிறார்:

> அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் நோக்கத்தை இவ்வாறு தொகுத்துக் கூறலாம்: யூதரிடமிருந்து புறஜாதியாருக்கும், எருசலேமிருந்து ரோமாபுரிக்கும் எப்படி ராஜ்யத்தைக் குறித்த செய்தி ஒழுங்குரீதியாகப் பரவியது என்பதை லூக்கா சுவிசேஷத்தோடு சேர்ந்து கூறுவதே இந்தப் புத்தகத்தின் நோக்கமாகும். லூக்கா சுவிசேஷத்தில் "கிறிஸ்தவ சமயம் பழைய ஏற்பாட்டிலும், யூதச் சமயத்திலும் வேர் கொண்டிருக்குமானால், பிறகு எப்படி அது உலகளாவிய சமயமாகியது?" என்ற கேள்விக்குப் பதில் கொடுக்கப்பட்டுள்ளது. அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகம் இதே கேள்விக்குத் தொடர்ந்து பதிலைக் கொடுக்கிறது.[69]

இந்தப் புத்தகத்தின் மையக்கருத்தை 1:8 வசனம் வெளிப்படுத்துகிறது. எருசலேமிலும் (வீட்டை சார்ந்த) யூதேயாவிலும் சமாரியாவிலும் (சுற்றியிருக்கிற பகுதிகள்), பூமியின் கடைசி பரியந்தம் (உலகம் முழுவதும்) இரட்சகருக்கு சாட்சியாக இருப்பதற்கு பரிசுத்தாவியானவர் தங்கியிருந்து தேவ மக்களுக்கு வல்லமை கொடுக்கிறார்.

அப்போஸ்தலருடைய நடபடிகளில் கிறிஸ்து: உயிர்த்தெழுந்த இரட்சகர் இயேசுவே இந்த புத்தகத்திலுள்ள போதனைகளுக்கு மையக் கருத்தாக இருக்கிறார். இயேசுவே கிறிஸ்துவாகவும் கர்த்தராகவும் இருக்கிறார் என்பதை, பழைய ஏற்பாட்டு வேதம், சரித்திரப்பூர்வமான உயிர்த்தெழுதல், அப்போஸ்தலர்களுடைய சாட்சி, பரிசுத்தாவியானவரின் கண்டித்து உணர்தல் ஆகிய இவைகள் சாட்சி கொடுக்கின்றன. (2:22-26; 10:34-43). ***"அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக் குறித்தே சாட்சி கொடுக்கிறார்கள்."*** (10:43). ***"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை."*** (4:12).[70]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **எருசலேமில் சாட்சி (1:1-6:7)**
   a. தெரிந்தெடுக்கப்பட்டவர்களின் காத்திருப்பு. (1:1-2:47) முன்னேற்ற அறிக்கை 1

1:1-8	1:12-26	2:14-36
1:9-112: 1-13	2:37-47	

   b. எருசலேம் சபையின் விரிவு (3:1-6:7) முன்னேற்ற அறிக்கை 2

3:1-10	4:13-31	5:17-32
3:11-26	4:32-37	5:33-42
4:1-12	5:1-16	6:1-7

2. **யூதேயா முழுவதிலும் மற்றும் சமரியாவில் சாட்சி (6:8-9:31)**
   a. ஸ்தேவானின் இரத்தச் சாட்சி (6:8-8:1a)
      1) ஸ்தேவானின் கைது (6:8b-7:1)
      2) ஸ்தேவானின் உரை (7:2-53)

7:2-8	7:17-29	7:44-53
7:9-10	7:30-34	
7:11-16	7:35-43	

      3) ஸ்தேவானின் தாக்குதல் (7:54-8:1a)
   b. பிப்புவின் ஊழியம் (8:1b-40)

8:1b-3	8:4-24	8:25-40

   c. சவுன் செய்தி (9:1-19a)
   d. சவுன் போராட்டம் (9:19b-31) முன்னேற்ற அறிக்கை 3

3. **பூமியின் கடைசி பரியந்தம் சாட்சி (9:32-28:31)**
   a. அந்தியோகியா பட்டணம் வரைக்கும் சபை விரிவுபடுத்தப்படுதல் (9:32-12:24) முன்னேற்ற அறிக்கை 4

9:32-43	10:34-48	12:1-19
10:1-23	11:1-18	12:20-24
10:24-33	11:19-30	

   b. சிறிய ஆசியாவில் சபையின் விரிவு (12:25-16:5) முன்னேற்ற அறிக்கை 5

12:25-13:25	14:8-18	15:30-35
13:26-43	14:19-28	15:36-41
13:44-52	15:1-11	16:1-5
14:1-7	15:12-29	

   c. மக்காதோனியாவில் சபையின் விரிவு (16:6-19:20) முன்னேற்ற அறிக்கை 6

16:6-13	17:1-9	18:1-21
16:14-21	17:10-15	18:22-28
16:22-34	17:16-21	19:1-10
16:35-40	17:22-34	19:11-20

   d. ரோமாபுரி வரைக்கும் சபையின் விரிவு (19:21-28:31) முன்னேற்ற அறிக்கை 7

19:21-41	22:1-30	26:1-32
20:1-12	23:1-11	27:1-13
20:13-16	23:12-22	27:14-44
20:17-38	23:23-35	28:1-10
21:1-14	24:1-27	28:11-29
21:15-26	25:1-22	28:30-31
21:27-40	25:23-27	

பகுதி 2
பவுன் நிருபங்கள்

முகவுரை: சரித்திர புத்தகங்களை (சுவிசேஷங்கள் மற்றும் அப்போஸ்தலருடைய நடபடிகள்) படித்துவிட்டு, இப்பொழுது நாம் புதிய ஏற்பாட்டிலுள்ள 21 நிருபங்களுக்கு அல்லது வெளிப்படுத்தின விசேஷத்தை நிருபமாக கணக்கிட்டால், அதையும் சேர்த்து 22 நிருபங்களுக்கு வந்துள்ளோம். வெளிப்படுத்தின சுவிசேஷமும் ஒரு நிருபமாக இருக்கலாம் (வெளிப்படுத்தல் 1:4). வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தின் தனித்தன்மையின் காரணமாக நாம் அந்தப் புத்தகத்தை புதிய ஏற்பாட்டின் தீர்க்கதரிசன புத்தகமாகப் பிரித்துள்ளோம். நிருபங்கள் பவுன் நிருபமாகவும், பவுல் அல்லாத நிருபங்கள் ஆகவும் (பொதுவான) பிரிக்கப்படுகின்றன. பவுன் நிருபங்கள் இரண்டு பிரிவுக்குள் வருகின்றன. ஒன்பது நிருபங்கள் சபைகளுக்கும் நான்கு நிருபங்கள் போதகர்களுக்கும் எழுதப்பட்டது. அதை தொடர்ந்து எட்டு எபிரேய கிறிஸ்தவ நிருபங்கள் வருகின்றன. கிறிஸ்தவர்களுக்குச் சுவிசேஷம் எத்தகைய அர்த்தத்தையும் செயல்படுத்துதலையும் கொடுக்கிறது என்பதைக் குறித்து இயல்பாகவே பல கேள்விகள் எழலாம். நிருபங்கள் இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கின்றன. கிறிஸ்துவின ஆள்தத்துவம் மற்றும் கிரியையின் அர்த்தத்தை எடுத்துக் கூறுகின்றன. சுவிசேஷத்தின் சத்தியத்தை விசுவாசிகளுக்குப் பொருத்திக் காட்டுகின்றன.

பவுன் பின்னணி: தர்சு பட்டணத்தின் சவுலாக, அநேக வருடங்களாக பவுல் அறியப்பட்டிருந்தான். சிசியாவின் தர்சு பட்டணத்தில் யூத குடும்பத்தில் பிறந்திருந்தான். யூதனாக மாத்திரமல்ல, மேலும் பரிசேயனும், பரிசேயனுக்கும் மகனும் (அப்போஸ்தலர். 23:6) எபிரெயரில் எபிரெயனும் (எபிரெய அல்லது அரமேய பாஷையைக் கொண்டவன்) பென்யமீன் கோத்திரக்காரனாகவும் (பிப்பியர் 3:4–5) தன் வாப வயதில் கூடாரம் செய்பவனாகவும் (அப்போஸ்தலர் 18:3) இருந்தான் என்று அவனுடைய சாட்சியங்களிருந்து அறியலாம். வாப வயதில் எருசலேமுக்கு போயிருந்தான். அவனுடைய சாட்சியத்திருந்து கமாயேல் என்ற எல்லோருக்கும் நன்கு அறிமுகமான ஒருவரிடம் படித்தவனாக இருந்தான். இந்த கமாயேல், ஹில்லல் என்ற வேதப்பிரமாணத்தை திட்டமாய் போதிக்கின்ற பள்ளியில் குறிப்பிடத்தக்கவனாக இருந்தான் (அப்போஸ்தலர் 22:3). சவுல் அவனுடைய படிப்பில், அவன் ஜனத்தாரில் அவனுக்கொத்த வயதுள்ள அநேகரைப் பார்க்கிலும், யூதமார்க்கத்திலே தேறினவனாய் தன் பிதாக்களுடைய பாரம்பரிய நியாயங்களுக்கு மிகவும் பக்திவைராக்கியமுடையவனாக இருந்தான் (கலாத்தியர் 1:14).

யூத சமயத்தில் அவனுடைய வைராக்கியம், சபைகளை வைராக்கியமாய் உபத்திரவப்படுத்த கொண்டு சென்றது. இளம் பரிசேயனாக, ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட அதிகாரம் அளித்து, அந்த இடத்தில் இருந்தான் (அப்போஸ்தலர் 7:58–8:3). பிரதான ஆசாரியனின் கடிதத்துடன் மற்ற நகரங்களில் போய் இயேசு கிறிஸ்துவின் சபையை அழிக்கும்படியும் ஸ்திரீகளையும் புருஷர்களையும் உபத்திரப்படுத்தும்படியும் சவுல் பிரயாணம் செய்தான் (அப்போஸ்தலர் 26:10–11; கலாத்தியர் 1:13). தமஸ்கு சாலையில் பிரயாணம் செய்கையில், இதுவே சவுன் திட்டமாக இருந்தது. (அப்போஸ்தலர் 9).

கிரேக்க கல்வியைப் பெற்று, கிரேக்க கலாச்சாரத்தில் சவுல் பழக்கம் உடையவனாக இருந்தான் (அப்போஸ்தலர் 17:28; தீத்து 1:12). இது அவனை கிரேக்க சிந்தனையில் பழக்கம் உடையவனாக மாற்றியது. அவனின் காலத்தில் இருந்த எழுத்தாளர்களின் பழமொழியையும், இவனுடைய காலத்திற்கு முன்பு இருந்த எழுத்தாளர்களின் பழமொழிகளையும், கற்றவனாகவும் அவற்றை நன்கு தெரிந்தவனாகவும் இருந்தான். மேலும் ரோமாபுரியில் பிறந்து ரோம குடிமனாக இருந்தான் (அப்போஸ்தலர் 22:28). அதனால் தான் பவுல் பிப்பு நாட்டில் சிறையிருந்தபொழுது ரோமக் குடிமகனாக இராயனுக்கு அபயமிட முடிந்தது (அப்போஸ்தலர் 16:37–39).

புறஜாதியருக்கு சுவிசேஷ செய்தியை கொண்டு செல்ல தெரிந்தெடுக்கப்பட்டவனாக இருக்க தனிப்பட்ட முறையில் தகுதி படைக்கப்பட்டிருந்தான். ***“எப்படியாவது எல்லோரையும் இரட்சிக்க நான் எல்லோருக்கும் எல்லாமுமானேன்”*** என்று எளிதாக கூற முடிந்தது (1 கொரிந்தியர் 9:22).

பவுன் மனமாற்றம்: தொடர்ச்சியாகவும், உறுதியுடனும் இயேசு கிறிஸ்துவின் சபையை உபத்திரப்படுத்தி தமஸ்கு ரோட்டில் பிரயாணம் செய்தபோது தன் வாழ்க்கையில் மறுமலர்ச்சி சக்தியைக் கொடுத்த, மகிமையடைந்த உயிர்த்தெழுந்த இயேசுவுடன் சவுலுக்கு ஒரு இடைபடுதல் நேர்ந்தது (அப்போஸ்தலர் 9:3–30).

தேவ குமாரனாகிய மேசியாவை கிறிஸ்து என்று கிறிஸ்தவர்கள் உரிமை கொண்டாடியதை சவுல் மறுதத்திருந்தான். ***“அதோ வானங்கள் திறந்திருக்கிறதையும், மனுஷகுமாரன் தேவனுடைய வலதுபாரிசத்தில் நிற்கிறதையும் காண்கிறேன்”*** என்று ஸ்தேவான் அறிக்கை செய்த உண்மை இயேசு மரித்தோரிருந்து எழுந்தார் என்கிறதை சவுல் நம்பவில்லை (அப்போஸ்தலர் 7:56). “பொய்யன்” என்று உரக்க சத்தமாய்க் கூறி அவனை கல்லெறிந்து கொன்றார்கள். சவுலும் அங்கே நின்று ஸ்தேவானை ***“கொல்வதற்கு சம்மதித்தான்”*** தான் தவறாக இருப்பதையும், ஸ்தேவான் சரியாக இருந்ததையும், தமஸ்கு பட்டணத்திற்கு வெளியே இயேசு பேசின அந்த பெரிய அனுபவ நாளில் சவுல் உணர்ந்தான். இயேசு உயிரோடிருக்கிறார். மேலும் அவர் தான் தேவ குமாரனாயிருக்க வேண்டும். இப்படியாக தமஸ்கு பட்டண தேவாலயத்தில் கிறிஸ்துவே இரட்சகர் என்று சவுல் (இப்பொழுது பவுல்) அறிக்கையிட்டான். நாடகபாணியாகவும், உடனடியாகவும் இந்த அனுபவம் இருந்தாலும், இதனுடைய விளைவு நீடித்திருந்தது. இந்த விளைவு சவுன் மனதையும், அறிவையும் திருத்தி அமைக்கக் காரணமாக இருந்தது. எருசலேமிற்கு முதல் தடவை வருவதற்கு முன்பு தமஸ்குவிலும் அரேபியாவிலும் சல காலங்களை கழிக்க இது காரணமாக இருந்திருக்கலாம் (கலாத்தியர் 1:16–19). பின்பு தன் சொந்த நாட்டிற்குச் சென்றான். எட்டு முதல் பத்து வருடக்காலத்தில் அவன் செய்த காரியங்களை அதிகமாய் அறிய முடியவில்லை.[71]

பவுல் நிருபத்தின் தனித்தன்மையான முக்கியம்: பவுன் நிருபங்களை மேலோட்டமாக காண்பதற்கு முன்பு, பவுன் ஒவ்வொரு நிருபத்திலும் சில தனித்தன்மைகளைக் காண்போம்.[72]

<u>சிறை நிருபங்கள்</u>

எபேசியர், பிப்பியர், கொலோசெயர், பிலேமோன் ஆகிய நிருபங்கள் ''சிறை நிருபங்கள்'' என குறிப்பிடப்படுகின்றன. ஏனெனில், இந்த நிருபங்கள் பவுல் சிறையிருந்த போது எழுதப்பட்டவைகள். ஒவ்வொரு நிருபமும் பவுல் இருந்த சூழ்நிலையைப் பற்றிய குறிப்புகளைக் கொண்டுள்ளன. (எபேசியர் 3:1; 4:1; 6:20; பிப்பியர் 1:7, 13; கொலோசெயர் 4:10, 18; பிலமோன் 1, 9, 10).

இந்தப் பெரிய நிருபங்கள் பவுல் சிறையில் இருந்தபோது எழுதப்பட்டது என்பது உண்மை. ரோமர்களது போர் குடியிருப்பில் (barracks) ஒரு வேளை பவுல் சிறை வைக்கப்பட்டிருக்கலாம் அல்லது அவரது சொந்த வாடகை வீட்டில் தினமும் ஒரு ரோம வீரனுடன் விலங்கு இடப்பட்டிருக்கலாம் (அப்போஸ்தலர் 28:30). எப்படி தேவன் ஒருவருடைய உபத்திரவத்தைத் தம்முடைய மகிமைக்கு பயன்படுத்தினார் என்பதையும் எப்படி உபத்திரவத்தில் ஊழியம் செய்ய தருணத்தை அருளினார் என்பதையும் பவுன் சிறை வாழ்க்கையிருந்து நாம் காண லாம் (பிப்பியர் 1:12-13). நமக்கு தடங்கல் வந்தாலும், நாம் விலங்கிடப்பட்டாலும் தேவனுடைய வார்த்தை சிறையிலடைக்கப்படவில்லை என்பதை இது காட்டுகிறது (2 தீமோத்தேயு 2:9).

<u>போதக நிருபங்கள்</u>

பவுன் நிருபத்தில் வேறு ஒரு பெரும் பிரிவு பொதுவாக ''போதக நிருபம்'' என அழைக்கப்படுகிறது. இவைகள் தீமோத்தேயுவிற்கும், தீத்துவுக்கும் எழுதப்பட்ட மூன்று நிருபங்கள் (1&2 தீமோத்தேயு மற்றும் தீத்து). தோற்றத்தில், இவைகள் தனிப்பட்ட மனிதர்களுக்கு எழு தப்பட்டதாகவும், பிலேமோன் புத்தகத்துடன் இணைக்கப்பட்டிருந்தாலும் சபையின் காரியங்களைத் திட்டமாக கொண்டிருப்பதன ால் இவைகள் ''போதக நிருபங்கள்'' என்று அழைக்கப்பட்டது. தனிப்பட்டவர்களுக்கு எழுதப்பட்ட இந்த நிருபங்கள் தனிப்பட்ட மற் றும் சொந்த காரியங்களைப் பரிமாறினாலும் அதன் தன்மையில் அதிகமாக சபையின் பொறுப்புகளைக் கொண்டுள்ளது. தேவனுடைய வீடாகிய ஒரு சபையின் போதகரின் கடமையை குறித்த விஷயங்களில் வழிநடத்த தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் இந்த நிருபங்கள் எழுதப்பட்டன (1 தீமோத்தேயு 3:14-15; 4:6-15; 2 தீமோத்தேயு 2:2).

சபையின் போதக பராமரிப்புக்கு முக்கியமான காரியங்களான, கொள்கைகள், செயல்திட்டம், அதை நிறைவேற்றுவது ஆகியவற்றை இந்த நிருபங்கள் விளக்குகின்றன. சுருக்கமாக ஸ்தல சபைகளை வழிநடத்தவும், அதன் வளர்ச்சிக்கும், போதகருடைய பொறுப்புகளை எடுத்துக் கூற இந்த நிருபங்கள் தேவனால் வடிவமைக்கப்பட்டவைகளாக இருக்கின்றன.

இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது. பவுன் 13 நிருபங்களில் இந்த நிருபங்கள் கடைசியாக இருக்கிறது. அப்படியென்றால் இந்த நிருபத்தின் தனிச்சிறப்பு என்ன? சபையின் ஒழுங்கு, ஊழியம், அமைப்பு ஆகியவற்றை விளக்கும்போது ஏன் இந்த நிருபங்கள் முதல் இடத்தைப் பெறவில்லை? அப்படி, முதல் இடத்தில் இருந்தால் முதல் நாம் சபையின் நிர்வாக அமைப்பை ஒழுங்கு செய்வோமல்லவா? பின்பு சத்தியங்களை குறித்து கவலைப்படுவோம்.

எனவே இதைக் குறித்து சிந்திக்க கீழே சில கருத்துக்கள்:

கருத்து 1: சபையின் அமைப்பும், ஒழுங்கும் முக்கியம்தான். சபை ஒரு ஆவிக்குரிய சரீரமாக இருக்கிறது. ஒவ்வொரு விசுவாசியும் இந்த சரீரத்தின் அங்கமாக இருக்கின்றனர். ஒவ்வொரு அங்கத்தினரும் சிறப்பான பணி மற்றும் கடமை ஆகியவற்றைக் கொண்டுள்ளனர். கிறிஸ்துவைப் போல வாழ, தேவ வசனத்தை தனிப்பட்ட வாழ்க்கையில் நடைமுறைப்படுத்த, புரிந்து கொள்ள ஒரு சரியான இறையி யல் தேவை. இந்தத் தேவை சபை செயல்பட பிரதான தேவையாயிருக்கிறது. இந்தத் தேவை சபையின் ஒழுக்கம், மற்றும் ஆவிக்குரிய அஸ்திபாரத்தை இடுகிறது. இந்த அஸ்திபாரத்தின் மேல் நிர்வாகம், செயல்களை திறப்பட கையாளுதல், வழிமுறை ஆகியவைகள் கட் டப்படுகிறது. எனவே நம்முடைய வழிமுறையின் வேறுபாடுகள் தேவ வசனத்தின் ஒழுக்க மற்றும் ஆவிக்குரிய கொள்கைக்கு முரண் பாடாக இருக்கக் கூடாது.

எடுத்துக்காட்டாக, சபைக்கு ஆதரவளிக்கும்படி கொடுப்பது ஒட்டுமொத்த மட்டும் தனிப்பட்ட பொறுப்புமாகும். ஆனால் சில குறிப்பிட்ட வேதாகமக் கொள்கைகள் மீறப்படாத வகையில் பணத்தைக் கொடுக்க வேண்டும், சேகரிக்க வேண்டும், விசுவாசிகள் தானாகவே முன் வந்து கொடுக்க வேண்டும். கொள்கையை மீறக்கூடிய வகையிலான வழிமுறைகளால் நிர்ப்பந்திக்கப்படக் கூடாது (2 கொரிந்தியர் 9:6-10).

கருத்து 2: வேத வசனத்தை நிதானமாய் பகுத்து அறிகின்ற அஸ்திபாரத்தில், சபையின் அமைப்பு இருக்க வேண்டும் (2 தீமோத்தேயு 2:15). ஆவிக்குரிய தகுதியான மக்களால் பயன்படுத்தப்பட்ட திடமான தேவனின் சத்தியம், சபையின் ஆரோக்கியத்திற்கு மிக முக்கியமாக இருக்கிறது (1 தீமோத்தேயு 3:1-10). மரபின் அதிகார அடிப்படையிலோ அல்லது சரித்திரப் பின்னணி அடிப்படையிலோ பாரம்பரியம் அல்லது பிண்ணனியை வைத்து விசுவாசிகள் சபையை வழிநடத்த முயற்சித்தால், கடைசியில் அவர்களின் சபை அமைப்பு வேதத் தின்படி இராது. மேலும் அந்த சபையின் அமைப்பு ஆவிக்குரிய உணர்வு இல்லாததாகவும் தேவன் திட்டப்படி ஊழியம் செய்ய சக்தி இல்லாத ஒன்றாக இருக்கும்.

எனவே இந்த நிருபங்கள் முன்பு சொல்லப்பட்டிராத சபையின் ஒழுங்கு பற்றிய காரியங்களை விளக்குவதாக இருக்கிறது. சபையின் ஒழுக்கத்திற்கு தனிப்பட்ட வழிமுறைகளை சபைக்கு கொடுப்பதற்கு முன்பு தேவன் ரோமர், 1 மற்றும் 2 கொரிந்தியர், கலாத்தியர், எபே சியர், பிப்பியர், கொலோசெயர் ஆகிய நிருபங்களை நமக்கு தந்தார். இதனால் சபையின் அமைப்பு முக்கியமில்லாத ஒன்றாக இருக்கிற தா? இல்லை! சபையின் அமைப்பும் நிர்வாகமும், முதன்மையானதாக இல்லை. ஆனால் சபையின் வளர்ச்சிக்கு இவைகள் இரண்டாம் இடத்தில் இருக்கின்றன. ஆரோக்கியமான போதனை திடமான ஆவிக்குரிய வாழ்க்கை ஆகியவையே பயனுள்ள ஊழியத்தை உரு வாக்குகிறது. இந்த ஊழியங்கள் தேவனின் தரத்திற்கு ஏற்றார் போல் சக்தியுடையவைகளாக இருக்கின்றன. மேலும் இவைகள் இயேசு வின் ஆவியையும் குணத்தையும் வெளிப்படுத்துகிறது, மேலும் இந்த ஊழியங்கள் வெளியே செல்லுகிறது.

பவுன் நிருபங்கள் ஒவ்வொன்றும் தனித்தன்மை உடையவைகளாக இருந்தாலும், ஒரே மாதிரியாக இயேசு கிறிஸ்துவையே முக்கியப்ப டுத்துதல் சுவிசேஷ செய்தி மற்றும் இயேசுவோடு விசுவாசிகளின் ஒற்றுமை இவைகளையும் முக்கியப்படுத்துகிறது. வேற்றுமைகளை கீழே உள்ள அட்டவணை காட்டுகிறது:

கர்த்தராகிய இயேசுவை முக்கியப்படுத்துதல்	
ரோமர்	கிறிஸ்து நமக்கு தேவனின் வல்லமையாக இருக்கிறார்
1 கொரிந்தியர்	கிறிஸ்து நமக்கு தேவனின் ஞானமாக இருக்கிறார்
2 கொரிந்தியர்	கிறிஸ்து நமக்கு தேவனின் ஆறுதலாக இருக்கிறார்
கலாத்தியர்	கிறிஸ்து நமக்கு தேவ நீதியாக இருக்கிறார்
எபேசியர்	கிறிஸ்து நமக்கு தேவனின் செல்வமாக இருக்கிறார்
பிப்பியர்	கிறிஸ்து நமக்குப் போதுமானவராக இருக்கிறார்
கொலோசெயர்	கிறிஸ்து நமக்கு தேவனின் நிறைவாக இருக்கிறார்
1 தெசலோனிக்கேயர்	கிறிஸ்து நமக்கு தேவனுடைய வாக்குத்தத்தமாக இருக்கிறார்
2 தெசலோனிக்கேயர்	கிறிஸ்து நமக்கு தேவனுடைய பலனாக (பரிசு) இருக்கிறார்
1 தீமோத்தேயு	கிறிஸ்து நமக்கு தேவனுடைய மத்தியஸ்தராக இருக்கிறார்
2 தீமோத்தேயு	கிறிஸ்து நமக்கு தேவனின் நியாயாதிபதியாக இருக்கிறார்
தீத்து	கிறிஸ்து நமக்கு தேவனின் இரக்கமாக இருக்கிறார்
பிலேமோன்	கிறிஸ்து நமக்கு தேவனின் நம்பிக்கையாக இருக்கிறார்

சுவிசேஷ செய்தியை முக்கியப்படுத்துதல்	
ரோமர்	சுவிசேஷமும் அதன் செய்தியும்
1 கொரிந்தியர்	சுவிசேஷமும் அதன் ஊழியமும்
2 கொரிந்தியர்	சுவிசேஷமும் அதன் ஊழியக்காரரும்
கலாத்தியர்	சுவிசேஷமும் அதன் உருவைச் சிதைப்பவரும்
எபேசியர்	சுவிசேஷமும் அதன் பரலோக மகிழ்ச்சியும்
பிப்பியர்	சுவிசேஷமும் அதன் உலகமும்
கொலோசெயர்	சுவிசேஷமும் அதன் தத்துவமும்.
1 தெசலோனிக்கேயர்	சுவிசேஷமும் அதன் சபையின் எதிர்காலமும்
2 தெசலோனிக்கேயர்	சுவிசேஷமும் அதன் அந்திக் கிறிஸ்துவும்
1 தீமோத்தேயு	சுவிசேஷமும் அதன் போதகரும்
2 தீமோத்தேயு	சுவிசேஷமும் அதன் எதிர்ப்பும்
தீத்து	சுவிசேஷமும் அதன் பயன்பாடுகளும்
பிலேமோன்	சுவிசேஷமும் சந்தர்ப்பத்துக்கேற்ற பொருத்தமும்

விசுவாசிகளின் ஒற்றுமையில் சுவிசேஷ முக்கியத்துவம்	
ரோமர்	கிறிஸ்துவில் நீதிமானாக்கப்படுதல்
1 கொரிந்தியர்	கிறிஸ்துவில் பரிசுத்தமாக்கப்படுதல்
2 கொரிந்தியர்	கிறிஸ்துவில் ஆறுதல்
கலாத்தியர்	கிறிஸ்துவில் விடுதலை
எபேசியர்	கிறிஸ்துவில் உயர்வு
பிப்பியர்	கிறிஸ்துவில் மகிழ்ச்சி
கொலோசெயர்	கிறிஸ்துவில் முழுமை
1 தெசலோனிக்கேயர்	கிறிஸ்துவில் மறுரூபமாகுதல்
2 தெசலோனிக்கேயர்	கிறிஸ்துவில் இழப்பீடு சரி செய்தல்
1 தீமோத்தேயு	கிறிஸ்துவில் மேன்மையான நோக்கம்
2 தீமோத்தேயு	கிறிஸ்துவில் தீர்மானித்தல்
தீத்து	கிறிஸ்துவில் சுறுசுறுப்பு
பிலேமோன்	கிறிஸ்துவில் உந்துதல்

ரோமர்

கிறிஸ்து: நமக்கு தேவனுடைய வல்லமை

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: பவுல் இந்த நிருபத்தை எழுதினார் என்று இந்த நிருபம் கூறுகிறது (1:1). ஆதிகால சபையார் யாவரும், பவுல் எழுதியதாகக் கூறுகின்றனர். பவுன் வாழ்க்கையில் அறியப்பட்ட உண்மையுடன் ஒத்துப்போகின்றன. அநேக சரித்திரக் குறிப்புகளை இந்தப் புத்தகம் கொண்டுள்ளது. இந்தப் புத்தகத்தின் சத்தியங்கள் பவுன் மற்ற கடிதங்களிலும் மாறாமல் இருக்கிறது. இந்த கடிதத்தை மற்ற கடிதங்களுடன் ஒப்பிடுகையில் இந்த உண்மை தெளிவாக இருக்கிறது.

ரோம் நகரத்தின் சபைக்கு இந்தக் கடிதம் எழுதப்பட்டது என்ற உண்மையிருந்து புத்தகத்திற்கு தலைப்பு ரோமர் என்று வந்தது (1:7, 15), பவுன் ஹுதுமிகப்பெரிய பணி" என்றழைக்கப்படுகிறது. ரோம சபையை பவுல் உருவாக்கவில்லை. புறஜாதியாரின் அப்போஸ்தலனாக, சுவிசேஷத்தை ரோம் நகரத்தில் பிரசங்கிக்கவும், விசுவாசத்தில் ரோம விசுவாசிகளை கட்டவும், அநேக வருடங்களாக ரோமாபுரிக்குப் போக பவுல் ஆசையாக இருந்தான் (15:22-23; 1:13-15).

ரோம நகரத்தில் ஊழியம் செய்ய ஆசையிருந்து, தான் அந்த நகரத்திற்கு போக வழிகளை ஆயத்தம் செய்ய ரோம விசுவாசிகளுக்கு இந்த நிருபத்தை பவுல் எழுதினான் (15:14-17). பாலஸ்தீன ஏழைகளுக்காக காணிக்கைகளை சேகரித்து முடிக்கையில் இந்த நிருபத்தைக் கொரிந்து பட்டணத்திருந்து எழுதினான். தன்னுடைய பயணத்தை ரோம் நகரத்திற்கும் ஸ்பானியா நாட்டிற்கும் தொடரலாம் என்று நினைத்து, சேகரித்த காணிக்கைகளை கொடுக்க கொரிந்து பட்டணத்திருந்து எருசலேமிற்கு, பவுல் சென்றான் (15:24). ஆனால் கடைசியாக ரோம் பட்டணத்திற்கு சென்றார். ஆனால் கைதியாக. கொரிந்துக்கு அருகிலுள்ள செஞ்சேரியா பட்டணத்து சபையின் ஸ்திரீ பெபேயாள் இந்தக் கடிதத்தை ரோம் பட்டணத்திற்கு கொண்டு சென்றாள் என்று தோன்றுகிறது (16:1).

எழுதப்பட்ட காலம்: கி.பி. 57-58 பவுன் மூன்றாம் மிஷனரி பிரயாணத்தின் கடைசி காலக்கட்டத்தில் சுமார் கி.பி. 57-58ல், இது எழுதப்பட்டிருக்கலாம் (அப்போஸ்தலர் 18:23-21:14; ரோமர் 15:19). அகாயா மற்றும் மக்கெதோனியா சபைகளிருந்து காணிக்கைகளை ஏற்கனவே பவுல் பெற்றுவிட்டதாக (ரோமர் 15:26) பவுன் வார்த்தையிருந்து தெரிகிறது. (அகாயா தேசத்தில் கொரிந்து பட்டணம் இருந்தது). அதாவது அவர் ஏற்கனவே கொரிந்துவிற்குச் சென்றிருந்தார். கொரிந்து பட்டணத்திற்கு நிருபம் எழுதுவதற்குமுன் அவர் அங்கு சென்றிருக்கவில்லை. (1 கொரிந்தியர் 16:1-4; 2 கொரிந்தியர் 8-9) 1 மற்றும் 2 கொரிந்தியர் நிருபங்களை எழுதியபின் அது (கி. பி. 55இல் எழுதப்பட்டது). ரோமருக்குக் கடிதம் எழுதினார்.

மையக்கருத்தும் நோக்கமும்: அவருடைய மற்ற சில நிருபங்களைப் போல குறிப்பிட்ட சில பிரச்சனைகளைத் தீர்க்கும்படி ரோமருக்கு எழுதப்படவில்லை. ரோமருக்கு எழுதிய நிருபத்தில் மூன்று தெளிவான நோக்கங்கள் உள்ளன. சபையை பவுன் வரவுக்கு ஆயத்தம் செய்வது **முதலாவது** நோக்கமாகும் (15:24, 28-29 ஒத்துப்பார்க்க அப்போஸ்தலர் 19:21), பவுல் தன்னுடைய திட்டத்தை அறிவிக்க விரும்பினான். மேலும் திட்டத்தை நிறைவேற்றும்படி அவர்கள் ஜெபிக்கவும் எதிர்பார்த்திருக்கவும் விரும்பினான் (5:30-32), தேவன் சுவிசேஷ செய்தியை அறிவிக்க பவுலை அழைத்தார். அந்த சுவிசேஷ செய்தியை முழுமையாக விளக்கி ரோம நாட்டினருக்கு அளிப்பது **இரண்டாவது** நோக்கமாக இருக்கிறது. ***"ரோம நாட்டிலுள்ளவர்களுக்கு சுவிசேஷத்தை பிரசங்கிக்க"*** (1:15) மட்டும் பவுல் தயாராகவில்லை. இந்த சுவிசேஷத்தின் அர்த்தத்தை தெளிவாக ரோம மக்கள் தெரிந்து கொள்ளவும் பவுல் விரும்பினான். கடந்த காலம் (நீதிமானாக ஒருவனை அறிவித்தல் என்ற அர்த்தம் கொள்கின்ற நீதிமானாக்கப்படல்), நிகழ் காலம் (பிரிந்து இருந்தல் என்ற அர்த்தம் கொள்ளுகிற பரிசுத்தமாக்கப்படல்) மற்றும் எதிர்காலம் (கிறிஸ்துவின் மகிமையை பகிர்ந்து கொள்ளுதல் என்று அர்த்தம் கொள்ளுகிந்ற மகிமைப்படுத்தப்படல்) ஆகிய மூன்று கால நிகழ்வுகளை உள்ளடக்கிய, மனித வாழ்க்கையில் பரந்து இருக்கின்ற அந்த சுவிசேஷத்தை ரோமர்கள் அறிந்து கொள்ள பவுல் விரும்பினான். **மூன்றாவது** நோக்கம், ரோம பட்டணத்திலுள்ள புறஜாதி கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்கும் இயற்கையாக எழும் கேள்விக்கு பதில் அளிப்பது, அவைகள், *பழைய ஏற்பாட்டு நியமமாகிய விருத்தசேதனம் போன்ற நியாயப்பிரமாணத்திற்கு சுவிசேஷம் என்ன செய்கிறது? யூதர்களுக்கு குறித்து சுவிசேஷம் என்ன சொல்கிறது? யூதர்களைத் தேவன் தள்ளிவிட்டாரா? யூதர்களுக்குத் தேவன் செய்த உடன்படிக்கையை மறந்துவிட்டாரா?* இவைகள் எல்லாவற்றிற்கும் பவுல் விடையளித்து யூதர்களுக்கும் புறஜாதிகளுக்கும் உள்ள தேவனின் இரட்சிப்பின் திட்டத்தை விளக்குகிறார்.

ரோமர் 1:16-17 ஆகிய வசனங்களில், பவுன் மையக்கருத்து தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. எப்படி தேவன் பாவிகளை இரட்சிக்கிறார் என்பதை அப்போஸ்தலன் இந்த வசனத்தில் காட்டுகிறான். இந்த வசனங்களில் இந்த நிருபத்தின் மிகப்பெரிய மையக்கருத்து அனைத்தையும் காணலாம். அவைகள் சுவிசேஷம், தேவனுடைய சக்தி இரட்சிப்பு, விசுவாசிகள் அனைவரும், தேவனிடத்திருந்து வரும் நீதி, யூதர் மற்றும் புறஜாதியார்கள். இந்தப் புத்தகத்தின் மையக்கருத்தையும் உள்ளடக்கத்தையும் சார்லஸ் ரைரி என்பவர் அருமையாக சுருக்கமாக அளிக்கிறார்:

> பவுன் மற்ற நிருபங்களை காட்டிலும் இந்த நிருபம் ஒழுங்காக அமைக்கப்பட்டிருக்கிறது. விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல் என்ற சத்தியத்தை வரிசை கிரமமாக ரோமர் நிருபம் கொடுக்கிறது. தேவனுடைய நீதி என்பதே இந்த நிருபத்தின் மையக்கருத்தாக இருக்கிறது. (1:16-17). அநேக அடிப்படை கிறிஸ்தவ சத்தியங்கள் - இயற்கையின் தேவனின் வெளிப்பாடு (ரோமர் 1:19-20), எல்லோரும் பாவிகள் (ரோமர் 3:9-20), நீதிமானாக்கப்படுதல் (ரோமர் 3:24), கிருபாதார ப (3:25), விசுவாசம் (ரோமர் 4:1), உண்மையான பாவம் (ரோமர் 5:12), இயேசுவில் உறவு (ரோமர் 6:1), இஸ்ரவேல் தேர்ந்தெடுக்கப்பட்டதும், புறக்கணிக்கப்பட்டதும் (ரோமர் 9-11), ஆவிக்குரிய வரங்கள் (ரோமர் 12:3-8) மற்றும் அரசுக்கு மரியாதை (ரோமர் 13:1-7) ஆகியவை இந்தப் புத்தகத்தில் விளக்கப்பட்டிருகிறது.[73]

இந்தப் புத்தகத்தின் முகவுரை (1:1-17) மற்றும் பவுன் முடிவுரை கட்டளை (15:14-16:27), இவைகளை தவிர்த்து, இந்த புத்தகம் எளிதாக மூன்று பகுதிகளாகப் பிரிகிறது:

1. முதல் எட்டு அதிகாரங்கள் **கோட்பாடுகளாக** இருக்கின்றன. மேலும் தேவனிடமிருந்து விசுவாசத்தால் வருகின்ற நீதியை குறித்த அடிப்படை சத்தியங்களை (நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல்) இந்த எட்டு அதிகாரங்களும் சுருக்கக் குறிப்பாகக் கொடுக்கிறது.
2. அடுத்த மூன்று அதிகாரங்களும் (9-11) **ஜாதிகளைக்** குறித்தாக இருக்கின்றன. புறஜாதிகளிடமும், யூதர்களிடம் தேவன் இடைபட்ட விதத்தை விளக்குகிறது; சுவிசேஷத்துடன் அவர்கள் ஒவ்வொருவருடைய தொடர்பையும் விளக்குகிறது.
3. மற்ற அதிகாரங்கள் (12-16) விசுவாசிகளின் அனுதின வாழ்வில் சுவிசேஷத்தை **எப்படி நடைமுறைப்படுத்த வேண்டும்** என்று கூறுகிறது.

ரோமரில் கிறிஸ்து : கிறிஸ்து தம் மேல் விசுவாசம் வைக்கிற அனைவரையும் தம்முடைய நீதி மற்றும் தம்முடைய பயினால் நீதிமானாக்குகிற இரண்டாம் ஆதாமாக, இயேசுவை பவுல் இந்த புத்தகத்தில் அளிக்கிறார். மனிதருடைய பாவங்களுக்காக தேவனுடைய தண்டனையையும் கோபத்தையும் சுமந்து தம்முடைய நீதியை கிருபையாய், தானமாய் பாவமுள்ள மனிதர்களுக்கு இயேசு அளிக்கிறார். சுத்திகரிப்பு, அவர் மரணமும், உயிர்த்தெழுதலும், விசுவாசிகளின் மீட்பாகவும், நீதியாகவும், ஒப்புரவாகுதலாகவும், இரட்சிப்பாகவும் மற்றும் மகிமையாகவும் இருக்கிறது. [74]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை (1:1-17)**
   1:1-7 | 1:8-15 | 1:16-17

2. **கண்டனம்: எல்லோரும் பாவிகளானதால் நீதி தேவைப்படுகிறது (1:18-3:20)**
   a. ஒழுக்கமற்ற மனிதன் (புறஜாதியார்) குற்றவாளியாகத் தீர்க்கப்படுதல் (1:18-32)
      1:18-23 | 1:24-27 | 1:28-32
   b. ஒழுக்கமுள்ள மனிதன் குற்றவாளியாகத் தீர்க்கப்படுதல் (2:1-16)
      2:1-11 | 2:12-16
   c. சமய சார்பான மனிதன் (யூதர்) குற்றவாளியாகத் தீர்க்கப்படுதல் (2:17-3:8)
      2:17-24 | 2:25-29 | 3:1-8
   d. எல்லா மனிதர்களும் குற்றவாளியாகத் தீர்க்கப்படுதல் (3:9-20)
      3:9-18 | 3:19-20

3. **நீதிமானாக்கப்படுதல்: கிறிஸ்துவின் மூலமாய் தேவனுடைய நீதியை உரியதாக்குதல் (3:21-5:21)**
   a. நீதிமானாக்கப்படுதன் விளக்கவுரை (3:21-31)
      3:21-26 | 3:27-31
   b. நீதிமானாக்கப்படுவதற்கு எடுத்துக்காட்டு (4:1-25)
      4:1-8 | 4:13-15
      4:9-12 | 4:16-25
   c. நீதிமானாக்கப்படுதன் ஆசீர்வாதம் (5:1-11)
   d. கண்டனம் மற்றும் நீதிமானாக்கப்படுதல் இவைகளின் வித்தியாசம் (5:12-21)
      5:12-14 | 5:15-17 | 5:18-21

4. **பரிசுத்தமாக்கப்படுதல்: நீதி கொடுக்கப்பட்டு, செய்து காட்டப்படுதல் (6:1-8:39)**
   a. பாவமும், பரிசுத்தமாக்கப்படுதலும் (6:1-23)
      6:1-7 | 6:12-14 | 6:20-23
      6:8-11 | 6:15-19
   b. நியாயப்பிரமாணமும் பரிசுத்தமாக்கப்படுதலும் (7:1-25)
      7:1-3 | 7:7-13 | 7:21-25
      7:4-6 | 7:14-20
   c. பரிசுத்த ஆவியானவரும் பரிசுத்தமாக்கப்படுதலும் (8:1-39)
      8:1-8 | 8:18-25 | 8:28-30
      8:9-17 | 8:26-27 | 8:31-39

5. **நீதிசெய்தல் : யூதர் மற்றும் புறஜாதியார், தேவனுடைய நீதியின் எல்லை (9:1-11:36)**
   a. இஸ்ரவேன் கடந்தகாலம்: தேவனுடைய தெரிந்தெடுப்பு (9:1-29)
      9:1-5 | 9:14-18 | 9:27-29
      9:6-13 | 9:19-26
   b. இஸ்ரவேன் நிகழ்காலம்: தேவனுடைய புறக்கணிப்பு (9:30-10:21)
      9:30-33 | 10:5-13 | 10:16-17
      10:1-4 | 10:14-15 | 10:18-21
   c. இஸ்ரவேன் எதிர்காலம்: மறுபடியும் அவர்கள் முந்திய நிலைமைக்கு கொண்டுவரப்படுதல் (11:1-36)
      11:1-6 | 11:11-16 | 11:25-32
      11:7-10 | 11:17-24 | 11:33-36

6. **செயல்படுத்துதல் : ஊழியத்தில் நீதியை செயல்படுத்துதல் (12:1-15:13)**
   a. தேவனுடைய உறவில் (12:1-2)
   b. தன்னுடைய உறவில் (12:3)
   c. சபையின் உறவில் (12:4-8)
   d. சமூகத்தின் உறவில் (12:9-21)
      12:9-13 | 12:14-21
   e. அரசாங்கத்தின் உறவில் (13:1-14)
      13:1-7 | 13:8-10 | 13:11-14
   f. மற்ற கிறிஸ்தவர்களின் உறவில் (14:1-15:13)
      14:1-4 | 14:10-12 | 15:1-6
      14:5-9 | 14:13-23 | 15:7-13

7. **தனிப்பட்ட செய்தியும் ஆசீர்வாதமும் (15:14-16:27)**

a. பவுன் திட்டங்கள் (15:14-33)

15:14-21	15:22-29	15:30-33

b. பவுன் தனிப்பட்ட வாழ்த்துதல்கள் (16:1-16)

16:1-2	16:3-16

c. பவுன் முடிவுரையும் ஆசீர்வாதமும் (16:17-27)

16:17-20	16:21-24	16:25-27

1 கொரிந்தியர்
(கிறிஸ்து: நமக்கு தேவனுடைய ஞானம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: இந்த நிருபத்தின் எழுத்தாளர் பவுல். பவுல் எழுதினார் என்பதற்கு, உள்புற ஆதாரங்கள் மற்றும் வெளிப்புற ஆதாரங்கள் ஆதரவு அளிக்கின்றன. பவுல் இந்த நிருபத்தை எழுதினான் என்பதற்கு முதல் நூற்றாண்டில் கி.பி. 96 தொடர்ச்சியான மற்றும் அதிகமான ஆதாரங்கள் இருக்கின்றன. ரோம் நகரை சேர்ந்த கிளமண்ட் என்ற (இரண்டாம் நூற்றாண்டு போதகர்) கொரிந்தியருக்கு எழுதின தன்னுடைய நிருபத்தில் 1 கொரிந்தியர் நிருபத்தை குறித்து "ஆசீர்வதிக்கப்பட்ட அப்போஸ்தலனாகிய பவுன் நிருபம்" என குறிப்பிட்டார். மேலும் கொரிந்தியரிலுள்ள தொடர்ச்சியான பிளவுகளை மேற்கோள் காட்டினார். உள்புற ஆதாரங்கள் தெளிவாக இருக்கின்றன. எழுத்தாளர் தன்னைத் தானே பவுல் என்று அநேக இடங்களில் எழுதியுள்ளார் (1:1; 16:21 ஒத்துப்பார்க்க 1:12-17; 3:4, 6, 22).

அநேக நிருபங்களையும், அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தையும் கவனமாக படிக்கும் பொழுது, கொரிந்தியர் சபையுடன் பவுன் கீழ் காணும் தொடர்பைக் காணலாம். (1) கொரிந்தி பட்டணத்திற்கு பவுன் முதல் வருகை, (2) கொரிந்தியருக்கு முதல் நிருபம் எழுதப்பட்டது (அது தொலைந்துவிட்டது) (3) கொரிந்தியருக்கு இரண்டாம் நிருபம் எழுதப்பட்டது (1 கொரிந்தியர்). (4) இதனைத் தொடர்ந்து இரண்டாம் முறையாக கொரிந்து பட்டணத்திற்கு பவுல் வருதல் (வேதனை நிறைந்த வருகை, 2 கொரிந்தியர் 2:1). பின்பு (5) கொரிந்தியருக்கு மூன்றாம் நிருபம் எழுதப்பட்டது (இதுவும் தொலைந்து விட்டது. (6) இதனைத் தொடர்ந்து 2 கொரிந்தியர் எழுதப்பட்டது. இது பவுன் நான்காவது கடிதம், இறுதியாக கொரிந்து பட்டணத்திற்கு; (7) கொரிந்தியர் பட்டணத்திற்கு பவுன் மூன்றாம் வருகை (அப்போஸ்தலர் 20:2-3). தொலைந்து போன அந்த இரு நிருபங்களும் வேதத்தின் பகுதிகளாக இருக்க வேண்டாம் என்று தேவன் கருதியதினால் அவைகள் தொலைந்து போய்விட்டன.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 55. சுமார் கி.பி. 50ல் பவுல் தன்னுடைய இரண்டாம் மிஷனரி பிரயாணத்தில் இருந்தபோது, கொரிந்து பட்டணத்தில் முதலாவதாக சுவிசேஷத்தை பிரசங்கித்தான். கொரிந்து பட்டணத்தில் பவுல் தங்கியிருந்தபோது, ஆக்கில்லா, பிரிஸ்கில்லாள் என்பவர்களுடன் சேர்ந்து கூடாரம் செய்யும் பணியில் இருந்தான் (அப்போஸ்தலர் 18:3). பவுல் வழக்கம் போல முதல் யூதர்களுடைய தேவாலயத்தில் பிரசங்கித்தான். ஆனால் கடைசியாக யூதர்களின் எதிர்ப்பினால் வெளியே தள்ளப்பட்டான். பவுல், யுஸ்து எனப்பட்ட மனிதனுடைய வீட்டுக்குக் கடந்து சென்று இப்படியாக தன்னுடைய ஊழியத்தை தொடர்ந்தான் (அப்போஸ்தலர் 18:7). கல்யோ என்ற ரோம ஆளுநர் முன்பாக யூதர்கள் பவுலை குறித்து குற்றம் சாட்டினாலும், (கல்யோன் அவர்களின் வழக்கைத் தள்ளுபடி செய்தான்) பவுல் 18 மாதங்களாக கொரிந்து பட்டணத்தில் இருந்தான் (அப்போஸ்தலர் 18:1-17; 1 கொரிந்தியர் 2:3). மூன்று வருடமாக எபேசு பட்டணத்தில் இருந்தபொழுது கடைசி கால கட்டத்தில் ஏறத்தாழ கி.பி.55ல் பவுல் இந்த நிருபத்தை எழுதினான் (16:5-9; அப்போஸ்தலர். 20:31). தன்னுடையக் குறிப்புகளிருந்து பவுல் பெந்தெகொஸ்தே நாள் வரைக்கும் எபேசு பட்டணத்தில் தங்கியதாகத் தெரிகிறது (16:8). இந்த நிருபத்தை எழுதியபோது, ஒரு வருட காலமாவது அந்தப் பட்டணத்தில், பவுல் தங்க வாஞ்சிப்பது போல் தோன்றுகிறது.

மையக்கருத்தும் நோக்கமும்: இந்த நிருபத்தின் மையக்கருத்தையும், நோக்கத்தையும் அறிந்துகொள்ள, இந்த நிருபத்தின் தலைப்பின் பின்னணி அவசியமாக இருக்கிறது. அநேகர் வந்து கூடும் முக்கிய தலைநகரமாக கொரிந்து பட்டணம் இருந்தது (ஏறத்தாழ 700,000) மக்கள் தொகை; இதில் மூன்றில் இரண்டு பகுதியினர் அடிமைகள்). இது இரண்டு நிலப் பரப்புகளை இணைக்கின்ற நில இடுக்காக இருந்தது (கடல் நீண்டு இருக்கின்ற ஒரு நிலப்பரப்பு). இந்த கொரிந்து பட்டணம் அகாயா கடலுக்கும் அட்ரியாடிக் கடலுக்கும் இடைப்பட்ட நிலப்பரப்பு. பிப்போனெசல் தேசத்தையும், வட கிரேக்க தேசத்தையும் இணைக்கிறது. மனிதனின் பார்வையில் செழிப்பாகக் காணப்பட்டாலும் கொரிந்து போன்ற பட்டணத்தில் தேவ நீதியாகிய சுவிசேஷத்தின் வெற்றியை பவுலும் அவன் கூட்டாளிகளும், கண்டு ஆச்சரியப்பட்டிருக்கலாம். இந்த நகரம் முரட்டுத்தனமான சரீரசம்பந்தப்பட்ட மேலும் பாவத்தில் அதிகமாய் மூழ்கி கெட்ட பெயர் பெற்றிருந்தது. இந்தப் பட்டணம் தேவர்களாலும் கோவில்களாலும் நிரப்பப்பட்டிருந்தது. மேலும் அக்ரோ கொரிந்து என்றழைக்கப்படுகிற 1800 அடியுள்ள மலைஉச்சியில் அமைந்துள்ள அப்ரொடைட் என்ற தேவியின் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்றிருந்தது. இதுபற்றி பழங்கால கிரேக்க இலக்கியங்கள் செல்வத்தையும், பாயல் ஒழுக்கக்கேடுகளையும் உடையது என எழுதியிருந்தது. கொரிந்திய பெண் என்ற சொல் "விபசாரி" என்பதற்கு அர்த்தமாகி விட்டது. னுகொரிந்தியர் போல் செய்து என்ற சொற்றொடர் "விபசாரம் செய்" என்ற அர்த்தமாக இருக்கிறது. கொரிந்தின் அதிகமான ஐசுவரியங்கள், அப்ரொடைட் ஆலயத்தையும் அதன் ஆயிரம் விபச்சாரிகளையும் மையமாகக் கொண்டிருந்தது. எனவே தான் "கொரிந்து பட்டணத்தை நோக்கிச் செல்வது எல்லார்க்கும் அல்ல" என்ற எச்சரிக்கை பழமொழி வந்தது.

யூதர்களின் மத்தியில் ஒரு சில மனமாறிய மக்களை பவுல் பெற்றிருந்தான் என்பது போல் அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்திருந்து தோன்றுகிறது; மனம்மாறிய மற்ற எல்லோரும் புறஜாதியாக இருந்தனர். அநேகர் தாழ்த்தப்பட்டோர், இருந்தாலும் ஒரு சிலர் அரச பரம்பரை வகுப்பை சேர்ந்தவர்களாக இருக்கலாம் (1:26-31). குறிப்பிட்ட சமூக மற்றும் பொருளாதார வேறுபாடுகள் அவர்களின் மத்தியில் இருந்தது. (7:20-24; 11:21-34); மேலும் சிலர் புறஜாதியாரின் ஒழுக்கக்கேட்டை பின்பற்றினர். (6:9-11). அவர்கள் செய்யும் காரியங்கள் கேடாக இருந்தாலும், அவர்கள் கிரேக்கர்களாக இருந்து தங்களின் அறிவுத் திறமையில் பெருமைப்பட்டார்கள் (1:17; 2:1-5).[75]

கொரிந்து பட்டணத்தின் சீர்கெட்ட மற்றும் சமயத் தன்மை, கொரிந்து பட்டண சபையின் ஆவிக்குரிய மற்றும் ஒழுக்கத்துக்குரிய வாழ்க்கையை எப்படிப் பாதித்தது என ஒரு மனிதன் தெளிவாக காணமுடியும். பரிசுத்தவானாக அழைக்கப்பட்டு, கிறிஸ்துவினால் பரிசுத்தமாக்கப்பட்ட கிறிஸ்தவனின் புதியவாழ்க்கை, எல்லா வாழ்க்கை சூழ்நிலைக்கும் பொருத்தமாக எப்படி இருக்கிறது என்பதே இந்த புத்தகத்தின் மையக்கருத்தாக இருக்கிறது. கிறிஸ்துவில்

உள்ள இந்த புது வாழ்வு பரிசுத்தாவியின் மூலமாய் புது விதமான வாழ்விற்கு அழைக்கிறது (3:16, 17; 6:11, 19-20). தனிப்பட்ட மற்றும் சமூக அளவில் விசுவாசிகளை மாற்றுவதாக தேவனுடைய ஞானம் கிறிஸ்துவில் நமக்கு வெளிப்பட்டது.

கொரிந்து சபையில் நிலவிய ஒழுங்கின்மை மற்றும் அநேக பிரச்சனைகளைக் குறித்தச் செய்தியைப் பெற்றபின் அவர்களைச் சரிச்செய்யப் போதனையாக இந்தக் கடிதம் எழுதப்பட்டது. சபையில் பிரிவு (1:11); தேவன் மேல் நம்பிக்கை வைப்பதற்கு பதிலாக மனித ஞானத்தில் நம்பிக்கை வைத்தல் அல்லது உலகத்தில் நம்பிக்கை வைத்தல் (1:21-30); சீர்கேடு (5:1-13; 6:9-20); திருமணம், விவாகரத்து, உணவு, ஆராதனை, ஆவிக்குரிய வரம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை குறித்து அநேக கேள்விகளுக்குப் பதிலாக இந்தப் புத்தகம் காணப்படுகிறது. சமய மற்றும் ஒழுக்கமற்ற பின்னணி, தவறான நம்பிக்கை, தவறான செயல்முறை ஆகிய இவைகள் கொரிந்து சபையை மாற்றி அமைத்ததை சந்தேகம் இல்லாமல் காணமுடியும்.

1 கொரிந்தியரில் கிறிஸ்து: கிறிஸ்தவ வாழ்க்கையின் சாராம்சம், ஆதாரம், வழி ஆகியவற்றை கிறிஸ்துவின் முக்கியத்தை, 1:31ல் கூறப்பட்டுள்ளது ***"அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்."***

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை (1:1-9)**
   a. வாழ்த்துதல் (1:1-3)
   b. நன்றி ஜெபம் (1:4-9)

2. **சபையில் பிரிவு (1:10-4:21)**
   a. பிரிவுகளைப் பற்றிய புகார் (1:10-17)
   b. பிரிவின் காரணம் (1:18-2:16)

1:18-25	2:1-5	
1:26-31	2:6-16	

   c. பிரிவின் விளைவு (3:1-4:5)

3:1-4	3:10-15	3:18-23
3:5-9	3:16-17	4:1-5

   d. பவுன் உதாரணமும் அமைப்பும் (4:6-21)

4:6-7	4:8-13	4:14-21

3. **சபையில் ஒழுக்கக்கேடு (5:1-6:20)**
   a. விபச்சாரம் (5:1-13)

5:1-5	5:6-8	5:9-13

   b. புறஜாதிகளின் சபையில் வழக்குத் தொடுத்தல் (6:1-8)
   c. பாயல் கேடுகளுக்கு எதிராய் எச்சரிக்கை (6:9-20)

6:9-11	6:12-20	

4. **திருமணத்தைக் குறித்த போதனை (7:1-40)**
   a. திருமணமும் மணமாகாத நிலையும் (7:1-9)
   b. திருமணமும் விவாகரத்தும் (7:10-24)

7:10-11	7:17-20	
7:12-16	7:21-24	

   c. திருமணமும் கிறிஸ்தவ ஊழியமும் (7:25-38)

7:25-31	7:32-35	7:36-38

   d. திருமணமும் மறுமணமும் (7:39-40)

5. **விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்ட உணவைக் குறித்து போதனை (8:1-11:1)**
   a. கேள்வி: புறஜாதி கடவுளுக்கு படைக்கப்பட்ட உணவை ஒரு கிறிஸ்தவன் சாப்பிடலாமா? (8:1-13)

8:1-3	8:4-6	8:7-13

   b. பவுன் உதாரணம் (9:1-27)

9:1-2	9:8-14	9:19-23
9:3-7	9:15-18	9:24-27

   c. புத்தி கூறல் (10:1-11:1)

10:1-5	10:14-22	10:31-33
10:6-13	10:23-30	11:1

6. **பொது ஆராதனையைக் குறித்து போதனை (11:2-14:40)**
   a. ஸ்திரீகள் முக்காடு இடுவதைக் குறித்து (11:2-16)
   b. இராப்போஜனம் (11:17-34)

11:17-22	11:27-32
11:23-26	11:33-34

   c. ஆவிக்குரிய வரங்களின் பயன் (12:1-14:40)

12:1-3	13:1-3	14:13-19
12:4-11	13:4-7	14:20-25
12:12-13	13:8-13	14:26-33
12:14-26	14:1-5	14:34-36
12:27-31	14:6-12	14:37-40

7. **உயிர்த்தெழுதலைக் குறித்த சத்தியம் (15:1-58)**
   a. உயிர்த்தெழுதன் முக்கியம் (15:1-11)

15:1-2	15:3-11

   b. உயிர்த்தெழுதலை மறுதப்பதின் விளைவு (15:12-19)
   c. கிறிஸ்தவரின் நம்பிக்கை (15:20-34)

15:20-28	15:29-34

   d. சரீர உயிர்த்தெழுதல் (15:35-50)

15:35-41	15:42-50

   e. கிறிஸ்துவின் மூலமாய் கிறிஸ்தவர்களின் வெற்றி (15:51-58)

15:51-57	15:58

8. **எருசலேமிற்கு காணிக்கை சேகரிப்பு (16:1-4)**

9. **முடிவுரை (16:5-24)**

16:5-9	16:13-14	16:21-24
16:10-12	16:15-20	

2 கொரிந்தியர்
(கிறிஸ்து: நமக்கு தேவ ஆறுதல்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: பவுல் இந்த நிருபத்தை எழுதியதாக முகவுரை வாழ்த்து குறிக்கிறது. பவுல் எழுதியதாக உள்புற மற்றும் வெளிபுற ஆதாரங்கள் திடமாய் ஆதரவு அளிக்கின்றது. இந்த நிருபத்தில் பவுன் நடை திட்டமாகத் தெரிகிறது. மேலும், “மற்ற நிருபங்களைக் காட்டிலும் இந்த நிருபத்தில் பவுன் சொந்த வாழ்க்கையைக் குறித்து அதிகமாக எழுதப்பட்டுள்ளது.”[76]

எழுதப்பட்ட காலம்: கி.பி. 56. வெள்ளிப் பட்டறைத் தொழிலாளர்களால் உண்டான கலகத்தினிமித்தம் (அப்போஸ்தலர் 19:23-41) பவுல் எபேசுவிருந்து மக்கெதோனியா பட்டணத்திற்கு (அப்போஸ்தலர் 20:1) கி.பி. 56ல் வந்தான். வழியில் தீத்துவை சந்திக்க துரோவா பட்டணத்தில் தங்கினான் (2 கொரிந்தியர் 2:13). தீத்துவைக் காணாததால் தீத்துவினுடைய பாதுகாப்பைக் குறித்த கவலையுடன் மக்கெதோனியாவுக்கு வந்தான் (7:5-6). அங்கு தீத்துவை சந்தித்தான். மேலும் கொரிந்து சபையின் நலம் குறித்த செய்தியையும், பவுன் ஊழியத்தை எதிர்க்கிற மக்களைக் குறித்தும் செய்தியைப் பெற்றான். மக்கெதோனியாவிருந்து நான்காவது நிருபமாக 2 கொரிந்தியரை எழுதினான். பிறகு தனது மூன்றாவது முறையாக கொரிந்தியர் பட்டணத்திற்கு கி.பி. 56-57ல் மழைக்காலத்தில் வந்தான் (அப்போஸ்தலர் 20:2-3).

மையக்கருத்தும் நோக்கமும்: பவுன் எல்லா நிருபத்தைப் பார்க்கிலும் 2 கொரிந்தியர், பவுலைப்பற்றிய மிகவும் தனிப்பட்ட காரியங்களைப் பற்றியும் கூறுகிறது. கொரிந்து பட்டணத்தில் சிலர் பவுன் மேல் குற்றம் கண்டுபிடிப்பவர்களாகவும், அவன் மீதிருந்த அன்பை மாற்றிக் கொள்பவர்களாக இருந்தாலும் பவுல் இந்த நிருபத்தில் தன் இருதயத்தைத் திறந்து அவர்கள் மேல் உள்ள மாறாத அன்பை வெளிப்படுத்துகிறான். *பைபிள் நாலெட்ஜ் கமாண்டரி* (Bible Knowledge Commentary) என்ற வேத விளக்க உரையில் ஜேம்ஸ் கே லோரி என்பவர் இந்த நிருபத்தின் மையக் கருத்தை கொடுக்கிறார்:

> பவுலை மிகவும் கவலைக்குள்ளாக்கிய காரியம் என்னவென்றால், சபையினுள் வந்த, தவறான உபதேசிகளின் அப்போஸ்தலன் என்று உரிமை கொண்டாடுவது ஆகும். தவறான உபதேசிகள் தங்களுடைய எண்ணங்களைக் கூறிவிட்டு பவுலையும் அவனுடைய செய்தியையும் அவமதிக்க வகை தேடினர். பவுன் அப்போஸ்தல ஊழியத்தையும் மற்றும் பவுன் செய்தியையும் சரியென்று காட்ட 2 கொரிந்தியர் எழுதப்பட்டது. இது சுய நலத்தினால் தன்னை பாதுகாக்கும்படி எழுதப்படவில்லை. ஆனால் பவுலையும் அவனுடைய செய்தியையும் அங்கிகரிப்பது கொரிந்து சபையின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு நலமாக இருக்கும் என்பதை பவுல் அறிந்திருந்தார்.[77]

பவுல் கொரிந்திய சபைக்கு பதில் அளிக்கும்போது மூன்று முக்கிய நோக்கங்களைக் காணலாம். (1) பவுன் ஊழியத்தை கொரிந்து சபையினர் அன்பாக ஏற்றுக்கொண்டதால், பவுல் தன்னுடைய சந்தோஷத்தை வெளிப்படுத்துகிறான் (1:1–7:16); (2) யூதேயாவின் கிறிஸ்தவர்களுக்கு காணிக்கை அளிக்க விசுவாசிகள் பொறுப்பானவர்கள் என்பதை பவுல் நினைவூட்ட வகைதேடுகிறான் (8:1–9:15); (3) மேலும் தன்னுடைய அப்போஸ்தல அதிகாரத்தை நிலைநாட்ட பவுல் வகை தேடுகிறான் (16:1–13;14).

2 கொரிந்தியரில் கிறிஸ்து: இயேசுவை இந்த நிருபத்தில் இப்படியாகக் காணலாம். நம்முடைய ஆறுதல் (1:5), வெற்றி (2;14), தேவன் (2:4), புதிய வாழ்வுக்காக விடுதலை (3:17), வெளிச்சம் (4:6), நியாயாதிபதி (5:10), ஒப்புரவாக்குபவர் (5:19), வரம் (9:15); உரிமையாளர் (10:7), மற்றும் வல்லமை (12:9).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு[78]

1. **பவுல் அப்போஸ்தல ஊழியத்தின் விளக்கம் (1:1–7:16)**
   a. வணக்கம் (1:1–2)
   b. வேதனையில் தேவ ஆறுதலுக்காக நன்றி (1:3–11)
      1:3–7 | 1:8–11
   c. பவுன் நேர்மையான நோக்கமும் குணமும் (1:12–2:4)
      1:12–14 | 1:23–24
      1:15–22 | 2:1–4
   d. உள்ளத்தைப் புண்படுத்தியவர்களை மன்னித்தல் (2:5–11)
   e. ஊழியத்தில் தேவனுடைய வழிநடத்தல் (2:12–17)
      2:12–13 | 2:14–17
   f. கொரிந்திய விசுவாசிகளுக்கு கிறிஸ்துவிடமிருந்து வந்த நிருபம் (3:1–11)
      3:1–3 | 3:4–11
   g. முகத்தில் முக்காடு இல்லாமல் தேவனுடைய மகிமையைக் காணுதல் (3:12–4:6)
      3:12–18 | 4:1–6
   h. களிமண் பாண்டத்தில் பொக்கிஷம் (4:7–15)
      4:7–12 | 4:13–15
   i. கிறிஸ்தவர்களுக்கு மரணம் என்றால் அர்த்தம் என்ன? (4:16–5:10)
      4:16–18 | 5:1–5 | 5:6–10
   j. ஒப்புரவாக்குதன் ஊழியம் (5:11–6:10)
      5:11–15 | 5:20–21
      5:16–19 | 6:1–10
   k. ஆவிக்குரிய தந்தை தன் பிள்ளைகளுக்காக செய்யும் வேண்டுதல் (6:11–7:4)
      6:11–13 | 7:1
      6:14–18 | 7:2–4
   l. தீத்துவுடன் சந்திப்பு (7:5–16)
      7:5–12 | 7:13–16

2. **உற்சாகப்படுத்துதல்: எருசலேம் விசுவாசிகளுக்காக காணிக்கை சேகரிப்பு (8:1–9:15)**
   a. உதாரத்துவமாய்க் கொடுக்க ஊக்குவித்தல் (8:1–15)
      8:1–6 | 8:7–15
   b. தீத்துவும் அவன் கூட்டாளிகளும் கொரிந்து பட்டணத்திர்கு அனுப்பப்படுதல் (8:16–9:5)
      8:16–24 | 9:1–5
   c. உதாரத்துவமாய் கொடுத்தன் விளைவு (9:6–15)

3. **பவுன் அப்போஸ்தல அதிகாரத்தை நிலைநாட்டுதல் மற்றும் பவுன் திட்டங்கள் (10:1–13:14)**
   a. பவுல் அப்போஸ்தல அதிகாரத்தை பாதுகாப்பதும் அவருடைய ஊழிய எல்லையும் (10:1–18)
      10:1–6 | 10:7–11 | 10:12–18
   b. முட்டாள்தனமான பெருமைக்கு பவுல் தள்ளப்படுதல் (11:1–12:21)
      11:1–6 | 11:21–29 | 12:11–13
      11:7–11 | 11:30–33 | 12:14–18
      11:12–15 | 12:1–6 | 12:19–21
      11:16–20 | 12:7–10
   c. கடைசி எச்சரிக்கை (13:1–10)
      13:1–4 | 13:5–10
   d. முடிவுரை (13:11–14)

கலாத்தியர்
(கிறிஸ்து: நமக்கு தேவ நீதி)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: ''அப்போஸ்தலனாயிருக்கிற பவுல்'' என்ற வார்த்தையால், இந்த நிருபத்தை தான் எழுதினதாக பவுல் குறிப்பிடுகிறான்.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 49. தெற்கு கலாத்திய நாட்டிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு இந்த நிருபம் எழுதப்பட்டது. இங்குள்ள சபைகள் பவுன் முதல் மிஷனரி பிரயாணத்தின்போது நிறுவப்பட்டன. எருசலேம் ஆலோசனை சங்கக் கூடுகைக்கு (அப்போஸ்தலர் 15) சற்று முன்பு பவுன் மிஷனரி பிரயாண முடிவில் இந்த நிருபம் எழுதப்பட்டது. (ஒரு வேளை அந்தியோகியாவிருந்து சுமார் கி.பி. 49ல் எழுதப்பட்டிருக்கலாம்) இது பவுன் ஆதிகால நிருபம்.

மையக்கருத்தும் நோக்கமும்: கலாத்தியர் நிருபம் ''கிறிஸ்தவர்களில் விடுதலை அறிக்கை'' என்று அநேக வேதவல்லுநர்களால் அழைக்கப்படுகிறது. கலாத்தியர் நிருபம் யூத பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்களுக்கும் (கிருபைக்கு பதிலாக சட்டத்தின் கீழ் வாழ்வதை முக்கியப்படுத்தும்) சட்ட போதனைகளுக்கும் வல்லமையான சவாலாக இருக்கிறது. மற்ற அநேக காரியங்களோடு, பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள அநேகச் சடங்குகள் இன்னும் சபையைக் கட்டுப்படுத்தும் என்று போதித்தார்கள். அவர்களுடைய தவறான கிரியையின் சுவிசேஷத்தைக் கடிந்துகொள்ளவும், பரிசுத்தாவியானவரால் பரிசுத்தமாக்கப்படுதன் மேன்மையை காட்டவும் பவுல் இந்த நிருபத்தை எழுதுகிறான்.

மேலும், யூதர்கள் தவறான சுவிசேஷத்தை பரப்பினது மட்டுமல்லாமல் பவுன் அப்போஸ்தல அதிகாரத்தை அவமதித்தனர். உயிர்த்தெழுந்த இயேசுவிடமிருந்து வெளிப்பட்ட செய்தியையும், அப்போஸ்தல அதிகாரத்தையும் முதல் இரண்டு அதிகாரத்தில் பவுல் நிலைநாட்டுகிறான். விசுவாசத்தினால் மாத்திரம் மனிதன் நீதிமானாக்கப்படுகிறான் என்ற உண்மையான சத்தியத்தையும், கிருபையின் சத்தியத்தையும் குறித்து அதிகாரம் 3, 4ல் பவுல் வாதிடுகிறார். இந்த மாதிரியான சத்தியங்கள் பாவம் செய்ய அனுமதி அளிக்கிறதென சிலர் வாதிடுவர். எனவே கிறிஸ்தவர்களின் விடுதலை, பாவம் செய்ய அனுமதி அளிக்கிறது என்று அர்த்தம் இல்லை என்று பவுல் வெளிப்படுத்தினார். இப்படியாக அதிகாரம் 5, 6 கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியின் வல்லமையால் வாழ கற்றுக் கொள்ள வேண்டும் என்று காட்டுகிறது. மேலும் பரிசுத்தாவியானவரால் நடத்தப்படுதல், மாம்சத்தின் கிரியையை வெளிப்படுத்தாமல் ஆவியின் கனியை வெளிப்படுத்துகிறது என்பதையும் 5, 6 அதிகாரங்கள் காட்டுகிறது.

கலாத்தியரில் கிறிஸ்து: விசுவாசிகள் இயேசுவின் மரணத்தின் மூலமாய் நியாயப்பிரமாணத்திற்கு மரித்து, இயேசுவின் உயிர்த்தெழுதனால் (2:20) கட்டுகளிருந்து விடுதலையாக்கப்பட்டு, விடுதலை அடைந்த நிலைக்கு கொண்டு வரப்பட்டனர். சுயத்திருந்தும் பாவத்தின் வல்லமையிருந்தும், நியாயப்பிரமாண சாபத்திருந்தும், சிலுவையின் வல்லமை விடுதலை கொடுக்கிறது (1:4, 2:20; 3:13; 4:5; 5:16, 24; 6:14).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **தனிப்பட்ட விதத்தில்: கிருபையின் சுவிசேஷம், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் இவைகள் ஆதரிக்கப்படுகின்றன (1:1–2:21).**
   a. முகவுரை (1:1–10)
      1:1–2   1:3–5   1:6–10
   b. வெளிப்படுத்துதன் மூலம் கிருபையின் சுவிசேஷம் வந்தது (1:11–24)
      1:11–12   1:13–17   1:18–24
   c. எருசலேமின் சபையால் கிருபையின் சுவிசேஷம் அங்கீகரிக்கப்படுதல் (2:1–10)
   d. பேதுரு கடிந்துகொள்ளப்பட்டதில் கிருபையின் சுவிசேஷம் தெளிவுப்படுத்தப்பட்டது (2:11–21)
      2:11–14   2:15–21

2. **கொள்கை: கிருபையின் சுவிசேஷம், விசுவாசத்தால் நீதிமானாக்கப்படுதல் இவைகளின் விளக்கம் (3:1–4:31)**
   a. கலாத்தியரின் அனுபவம்: விசுவாசத்தால் பரிசுத்தாவி கொடுக்கப்பட்டது (3:1–5)
   b. ஆபிரகாமின் உதாரணம் : ஆபிரகாம் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டான். கிரியையினால் அல்ல. (3:6–9)
   c. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல், நியாயப்பிரமாணத்தினால் அல்ல. (3:10–4:11)
      3:10–14   3:19–22   4:1–7
      3:15–18   3:23–29   4:8–11
   d. கலாத்தியர் விசுவாசத்தினால் ஆசீர்வாதத்தை பெற்றனர். நியாயப்பிரமாணத்தினால் அல்ல (14:12–20)
   e. நியாயப்பிரமாணமும் கிருபையும் ஒன்றுக்கொன்று ஒதுக்கித் தள்ளுவதாக இருக்கிறது. (4:21–31)

3. **செயல்படுத்துதல்: கிருபையின் சுவிசேஷம், விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் இவைகளின் பயன்பாடு (5:1–6:18)**
   a. விடுதலையின் நிலை: உறுதியாக நிற்குதல் (5:1–12)
      5:1   5:2–6   5:7–12
   b. விடுதலையின் செயல்பாடு : ஒருவருக்கொருவர் அன்புகூருதலும், ஊழியம் செய்தலும் (5:13–15)
   c. விடுதலையின் வல்லமை: பரிசுத்தாவியானவரால் நடத்தப்படுதல் (5:16–26)
      5:16–24   5:25–26
   d. விடுதலையின் செயல்பாடு: எல்லோருக்கும் நன்மை செய்தல் (6:1–10)
      6:1–5   6:6–10
   e. முடிவுரை (6:11–18)

எபேசியர்
(கிறிஸ்து: நமக்கு தேவ செல்வம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: எல்லா சிறை நிருபங்களின் தொடக்க வசனம் கூறுவது போல பவுலே இதை எழுதியவராக இருக்கிறார். "எபேசியருக்கு" என்பது இந்த நிருபத்தின் மரபுத் தலைப்பாகும்.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 60-61 இந்த நிருபத்தை எழுதும் பொழுது பவுல் சிறைக்கைதியாக இருந்தார் (எபேசியர் 3:1; 4:1; 6:20;). இந்த நிருபத்தை பவுல் எழுதும்போது, கி.பி. 57-59ல் செசரியாவில் கைதியாக இருந்தாரோ (அப்போஸ்தலர் 24;27) அல்லது கி.பி. 60-62ல் ரோமில் கைதியாக இருந்தாரோ என்று வேத வல்லுனர்கள் தங்களுக்குள் வித்தியாசப்பட்டாலும், ரோமில் கைதியாக இருக்கும்போதே எழுதினார் என்பதற்கு ஆதாரங்கள் சாதகமாக இருக்கின்றன. எபேசியர், பிப்பியர், கொலோசெயர், பிலேமோன் ஆகிய நிருபங்கள் ஒரே கால கட்டத்தில் எழுதப்பட்டது என்று நம்பப்படுகிறது (பிப்பியர் 1:7; கொலோசெயர் 4:10; பிலேமோன் 9). காரணம் பிலேமோன் (1:22) மற்றும் பிப்பியர் (1:19-26) ஆகிய நிருபங்களைப் போல் எபேசியர் நிருபம் பவுல் சிறையிருந்து விடுதலை ஆனார் என்ற குறிப்பைக் கொடுக்கவில்லை. பவுல் தான் வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டில், வீட்டுக்கைதியாக இருக்கையில் (அப்போஸ்தலர் 28:30), கி.பி. 60ல் ரோமில் ஆரம்பகால கைதியாக இருக்கையில், இந்த நிருபம் எழுதப்பட்டது என்று அநேகர் நம்புகின்றனர். பவுல் சிறையிருந்து விடுதலையான பின்பு 1 தீமோத்தேயு மற்றும் தீத்து ஆகிய நிருபங்களை எழுதினார். பின்பு, அவர் திரும்பவும் கைது செய்யப்பட்டார். 2 தீமோத்தேயுவை எழுதினார். பின்பு, ரோமாபுரியில் இரத்தச் சாட்சியாக மரித்தார்.

மையக்கருத்தும், நோக்கமும்: "சபை கிறிஸ்துவின் சரீரமாக இருக்கிற," கிறிஸ்து சபைக்குத் தலையாக இருக்கிறார் (1:22, 23), விசுவாசிகள் அங்கத்தினராக இருந்து கிறிஸ்துவில் ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர் (1:3; 2:11-22). ஆகிய மகிமையான இரகசியங்களை இந்த நிருபம் வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையினுடைய தலையாகிய கிறிஸ்துவில் எல்லையில்லாத ஆசீர்வாதங்கள் மற்றும் செல்வத்தைக் குறித்து விசுவாசிகளின் அனுபவம் நன்றாக இருக்க வேண்டும் என்பதே பவுன் தெளிவான நோக்கம். இதைத்தவிர இரண்டு பெரிய நோக்கங்கள் இந்த நிருபத்தில் உள்ளன. முதலாவது நோக்கம், பரலோகத்திருக்கிறவைகளும், பூலோகத்திருக்கிறவைகளும், கிறிஸ்துவுக்குள் கட்டப்படவேண்டும் என்ற தேவனின் நித்திய நோக்கத்தில் கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளுக்குள்ள சில ஆசீர்வாதமான செல்வங்களை விளக்குவது (1:3-12). இரண்டாவது நோக்கம் முதல் நோக்கத்திருந்து வருகிறது. விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் அவர்களுடைய உன்னத அழைப்பிற்கு ஏற்றதாக, நடக்க, அறிந்துகொள்ள, புரிந்துகொள்ள கடமைப்பட்டுள்ளார் என்பதைக் கூறுவது (1:18-23; 3:14-21; 4:1).

தனிப்பட்ட பிரச்சனைகளைச் சரிசெய்ய இந்த நிருபம் எழுதப்படவில்லை என்றாலும், விசுவாசிகள் கிறிஸ்துவில் உள்ள காரியங்களை அறிந்துகொள்ளாததாலும், ஆவிக்குரிய வளர்ச்சி இல்லாததாலும் அடிக்கடி ஏற்படும் பிரச்சனைகளைத் தடுக்கவும் ஏதுவாக இந்த நிருபம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் நெருங்கிய தொடர்புடைய ஒரு காரியம் சாத்தானுடன் விசுவாசிகளின் போராட்டத்தை பற்றிய ஒரு சிறிய பகுதியும் இந்த நிருபத்தில் இருக்கிறது (6:10-18). இப்படியாக, விசுவாசிகளின் ஆசீர்வாதம், நடக்கை, போராட்டம் ஆகியவற்றைக் குறித்து பவுல் இந்த நிருபத்தில் எழுதுகிறார்.

எபேசியரில் கிறிஸ்து: "கிறிஸ்துவில்" அல்லது "கிறிஸ்துவுடன்" போன்ற சொற்றொடர் 35 தடவைகள் இந்த நிருபத்தில் தோன்றுகிறது. இவைகள் பொதுவான பவுன் வாக்கியங்கள் ஆகும், ஆனால் மற்ற நிருபங்களைக் காட்டிலும் இந்த நிருபத்தில் இந்த சொற்றொடர்கள் அதிகமாய் காணப்படுகின்றன. இதனால், இரட்சகரில் அவர்களின் நிலை வழியாக விசுவாசிகளுக்கு கிறிஸ்துவில் உள்ள காரியங்களை அதிகமாகக் காணலாம். விசுவாசிகள் கிறிஸ்துவில் இருக்கிறார்கள் (1:1), கிறிஸ்துவில் எல்லாவித ஆசீர்வாதங்களால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர் (1:3), கிறிஸ்துவில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர் (1:4), கிறிஸ்துவின் மூலமாய் புத்திர சுவிகாரம் பெற்றுள்ளனர் (1;5), அவருக்குப் பிரியமானவர்களாக இருக்கின்றனர் (1:6), கிறிஸ்துவில் விடுதலையாக்கப்பட்டுள்ளனர் (1:7), கிறிஸ்துவில் சுதந்திரம் பெற்றுள்ளனர் (1:11), கிறிஸ்துவில் (1:11), அவருடைய மகிமையை துதிக்கின்ற நம்பிக்கையை பெற்றுள்ளனர் (1:12). சுதந்திரத்தை அடைவார்கள் என்பதற்கு அச்சாரமாக கிறிஸ்துவின் ஆவியானவரால் முத்திரைப் போடப்பட்டுள்ளனர் (1:13-14), உயிர்ப்பிக்கப்பட்டு, எழுப்பப்பட்டு, கிறிஸ்துவுடனே உன்னதத்தில் இருக்கின்றனர் (2:5-6), நன்மை செய்வதற்காக கிறிஸ்துவில் விசுவாசிகள் சிருஷ்டிக்கப்பட்டுள்ளனர். (2:10), கிறிஸ்துவின் வாக்குத்தத்ததில் பங்கு பெறுகிறவர்களாக இருக்கின்றனர் (3:6) கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தின் மூலமாய் தேவனைச் சேரும் சிலாக்கியத்தைப் பெற்றுள்ளனர் (3:12).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **வாழ்த்துதல் (1:1-2)**

2. **நிருபத்திலுள்ள சத்தியங்களின் பகுதி: சபையை அழைத்தல் (1:3-3:21)**
   a. விடுதலைக்காக துதித்தல் (1:3-14)
   b. ஞானத்துக்காகவும் வெளிப்படுத்தலுக்காகவும் விண்ணப்பம் (1:15-23)
   c. விசுவாசிகளின் மறு ஸ்தானம் (நிலை) (2:1-22)
      2:1-10 2:11-22
   d. இடைக் காட்சியின் விளக்கம் (3:1-13)
   e. காரியங்களை உணர்ந்துகொள்ள வேண்டுதல் (3:14-21)
      3:14-19 3:20-21

3. **நிருபத்திலுள்ள செயல்முறைப் பாங்கி: சபையின் நடப்பு (4:1-6:24)**
   a. ஒற்றுமையில் விசுவாசிகளின் நடப்பு (4:1-16)
      4:1-6 4:7-16
   b. நீதியில் விசுவாசிகளின் நடப்பு (4:17-5:21)
      4:17-24 5:1-2 5:6-14
      4:25-32 5:3-5 5:15-21

c. உலகத்தில் விசுவாசிகளின் நடப்பு (5:22-6:9)
5:22-24 6:1-8
5:25-33 6:9

d. போராட்டத்தில் விசுவாசிகளின் நடப்பு (6:10-20)
6:10-17 6:18-20

e. முடிவுரை (6:21-24)

பிலிப்பியர்

(கிறிஸ்து: நமக்ர்ங் தேவன் போதுமானவர்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: பவுல் இந்த நிருபத்தின் எழுத்தாளராக இருக்கிறார். இந்த நிருபம், மக்கெதோனியாவில் முதலில் பவுலால் நிறுவப்பட்ட பிலிப்பி சபைக்ர்ங் எழுதப்பட்டது. மேலும் இதன் தலைப்பு “பிலிப்பியருக்ர்ங்” என்பதார்ங்ம்.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 60-61 எபேசியர் நிருபத்தை போல, இந்த நிருபமும் பவுல் சிறையில் இருக்ர்ங்ம்பொழுது எழுதப்பட்டது. அரண்மனை காவலில் மரணம் நேரிடலாம் என்ற ர்ங்றிப்பிலிருந்து (1:3; 1:20-26) ரோம நகரிலிருந்து இந்த நிருபம் எழுதப்பட்டது என க் கருதலாம். மரணம் நேரிட வாய்ப்பு இருந்தாலும், பவுல் விடுதலை பெறுவோம் என்ற நம்பிக்கையில் இருந்தான் என்பது போலவும் தோன்றுகிறது. இது, இந்த நிருபம் கி.பி. 60 அல்லது 61ல் எபேசியர் நிருபத்திற்ர்ங் பிறர்ங் எழுதப்பட்டு இருக்கலாம் எனும் கருத்தை தெரிவிக்கிறது.

மையக்கருத்தும் நோக்கமும்: சபை கிறிஸ்துவின் சரீரம், கிறிஸ்து அந்தச் சபைக்ர்ங் தலையாக இருக்கிறார் (1:22-23), விசுவாசிகள் சபையில் அங்கத்தினராக இருந்து கிறிஸ்துவில் ஆவிக்ர்ங்ரிய சகல ஆசீர்வாதத்தினாலும் சமமாக ஆசீர்வதிக்கப்படுகின்றனர் போன்ற மகிமையின் ரகசியத்தை எபேசியர் நிருபம் வெளிப்படுத்தும்போது, பிலிப்பியர் நிருபம் இந்த எபேசியர் நிருபத்தை செயல்முறைப்படுத்துகிறது (1:3; 2:11-22). கிறிஸ்துவில் கொடுக்கப்பட்ட ஒற்றுமையை செயல்முறைப்படுத்துதில் ஏற்படும் தோல்விக்ர்ங் எதிராக இந்த நிருபம் விசுவாசிகளைப் பாதுகாக்கிறது. மேலும் கிறிஸ்துவில் உள்ள ஸ்தானம் மற்றும் ஆசீர்வாதத்தில் விசுவாசிகள் சந்தோஷப்படமலிருக்ர்ங்ம் தோல்விக்ர்ங் எதிராக இந்த நிருபம் விசுவாசிகளைப் பாதுகாக்கிறது (1:27; 2:2; 4:1). “கிறிஸ்துவில் சந்தோஷம் மற்றும் ஒற்றுமை” என்பது பிலிப்பியர் நிருபத்தின் மையக்கருத்தாக இருக்கலாம்.

பிலிப்பியர் நிருபத்தை எழுத பவுல் அநேக தெளிவான நோக்கங்களைக் கொண்டிருந்தார். (1) பிலிப்பியர் தனக்ர்ங்க் கொடுத்தனுப்பிய வெர்ங்மதிக்காக தன்னுடைய அன்பையும் நன்றியையும் தெரிவிக்கின்றார் (1;5; 4:10-19); (2) தன்னுடைய சொந்த சூழ்நிலையைக் ர்ங்றித்து விபரம் அறிவிக்க (1:12-26; 4:10-19); (3) உபத்திரவத்திற்ர்ங் எதிராக நிலைத்து நிற்கவும், சூழ்நிலைக்ர்ங் மேலாக சந்தோஷப்படவும், பிலிப்பியருக்ர்ங் உற்சாகமூட்ட எழுதப்பட்டது (1:27-30; 4:4); (4) ஒற்றுமையாகவும், தாழ்மையாகவும் வாழ புத்தி சொல்ல (2:1-11; 4:2-5); (5) தீமோத்தேயுவையும், எப்பாப்பிராதீத்துவையும் பிலிப்பி சபைக்ர்ங் அனுப்ப (2:19-30); மேலும் (6) யூதருடைய நியாயபிரமாணத்திற்ர்ங்ம் அவர்கள் நடுவிலிருந்த பொல்லாத துன்மார்க்கர்களுக்ர்ங்ம் எச்சரிக்கையாக இருக்ர்ங்ம்படி இந்த நிருபம் எழுதப்பட்டது (அதி. 3)

பிலிப்பியரில் கிறிஸ்து: கிறிஸ்து மனுஉரு எடுத்ததின் இயல்பையும், உண்மையையும்,நோக்கத்தையும் எந்த ஒரு வேத பார்ங்தியும் பிலிப்பியர் நிரு பத்தில் காணப்படுவது போல தெளிவாக வெளிப்படுத்தவில்லை (2:5-8). கிறிஸ்து இருந்த, இருக்கின்ற, செய்து முடித்த நிறைவேற்ற போகின்ற காரியங்களின் அடிப்படையில் பவுல் கிறிஸ்துவை விசுவாசிகளுடைய (1) ஜீவன் (1:21); (2) மானிடத்தின் விட்டுக் கொடுக்ர்ங்ம் தாழ்மையான அன்புக்ர்ங் பூரண மாதிரி (2:4-5); (3) உயிர்த்தெழுதலில் நம்முடைய சரீரத்தை அவரின் மகிமையின் சரீரத்தின் சாயலாக மாற்றுபவர் (3:21) மற்றும் (4) நம்முடைய வாழ்க்கையின் எல்லா சூழ்நிலையிலும் பெலன் தருகின்றவர் (4:12) என்று அறிவிக்கிறான்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் ர்ங்றிப்பு[79]

1. **வாழ்த்துக் கூறல், பிலிப்பியருக்ர்ங் நன்றி கூறல் (1:1-11)**
   1:1-2 1: 3-11

2. **ரோமாபுரியில் பவுலின் சொந்தச் சூழ்நிலைகள்: கிறிஸ்துவைப் பிரசங்கித்தல் (1:12-30)**
   1:12-18 1:21-26
   1:19-20 1:27-30

3. **கிறிஸ்தவ வாழ்க்கையின் மாதிரி: கிறிஸ்துவின் சிந்தையைப் பெற்றிருத்தல் (2:1-30)**
   2:1-4 2:12-13 2:19-30
   2:5-11 2:14-18

4. **கிறிஸ்து வாழ்க்கையின் வெர்ங்மதி: கிறிஸ்துவின் அறிவைப் பெற்றிருத்தல் (3:1-21)**
   3:1 3:7-11 3:17-21
   3:2-6 3:12-16

5. **கிறிஸ்தவ வாழ்க்கையின் சமாதானம்; கிறிஸ்துவின் சமுகத்தை அறிந்திருத்தல் (4:1-23)**
   4:1-3 4:8-9 4:15-20
   4:4-7 4:10-14 4:21-23

கொலோசெயர்
(கிறிஸ்து: நமக்கு தேவனின் நிறைவு)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: வசனம் 1:2ல் பவுன் வாழ்த்துன் காரணமாக இந்த நிருபம் “கொலோசெயருக்கு எழுதப்பட்ட” என பெயர் வந்தது.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 60-61 ரோம பட்டணத்தில் முதல் தடவையாக சிறைக் கைதியாக இருந்தபொழுது நான்கு சிறை நிருபங்களையும் எழுதினான். அதாவது கி.பி. 60-61ல் இந்த நிருபங்களை எழுதினான் (எபேசியர், பிப்பியர் நிருபங்களின் தேதியின் விளக்கத்தை காண்க).

மையக்கருத்தும் நோக்கமும்: இயேசுவின் சரீரமாகிய சபைக்கு, இயேசுவின் பூரண மேன்மை, தலைமைத்துவம், சபைக்கு கிறிஸ்து முழுமையாய் போதுமானவர் ஆகியவைகளை வெளிப்படுத்துகிற, சுவிசேஷ செய்தியின் கனி கொடுக்கிற சக்தி இந்த நிருபத்திற்கு மையக் கருத்தாக இருக்கிறது. இந்த சிறிய நிருபத்தில் பவுல் “இயேசுவின் முழு சித்திரத்தை” காட்டுகிறார்.[80] இயேசு மனிதனாக இருந்து எல்லா வேலையையும் செய்து முடித்ததினால், அவர் விசுவாசிகளின் விசுவாசத்திற்குப் பாத்திரவானாக இருக்கிறார். அவரே நம் தேவை, அவருக்குள் நாம் எல்லோரும் பூரணமாக்கப்பட்டிருக்கிறோம் (2:10). தேவ மனிதனாகிய இயேசு நித்தியத்திலும், உலகத்திலும் மனிதனின் தேவைகளுக்கு பூரண தீர்வாகவும், அண்டசராசரங்களை படைத்தவரும், அவைகளை காக்கிறவரும், இரட்சகர் என்றும், பணி மற்றும் அவரின் நிறைவு, தனித்தன்மை, பூரணம், மேன்மை இவைகளை கொலோசெயர் நிருபம் அளிக்கின்றது. கொலோசெயர் நிருபம் கிறிஸ்துவை மனிதனுடைய மற்றும் எல்லா லோகத்தினுடைய சிருஷ்டிகளைக் காக்கிறவர், மீட்பர், ஒப்புரவாளர் என்பவராக கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறது.

கொலோசெயரில் கிறிஸ்து: வில்கின்சன் மற்றும் போவா (Boa) என்பவர்கள் இவ்வாறு குறிப்பிடுகின்றனர்:

> இயேசு, சகல துரைத்தனத்திற்கும் அதிகாரத்திற்கும் தலைவராக இருக்கின்ற (2:10), சிருஷ்டி கர்த்தர் (1:16-17), சமரசம் செய்பவர் (1:20-22; 2:13-15) கிறிஸ்துவை மையமாகக் கொண்ட தனித்தன்மையுடைய புத்தகமாக கிறிஸ்துவை கற்பிக்கிறதாக இருக்கிறது. விசுவாசிகளின் நம்பிக்கைக்கு அஸ்திபாரம் (1:5, 23, 27), விசுவாசிகளின் புது வாழ்க்கையின் சக்திக்கு அடிப்படை மூலம் (1:11, 29), விசுவாசிகளின் மீட்பர் மற்றும் ஒப்புரவாளர் (1:14, 20-22; 2;11-15), முழு தெய்வீக உருவம் (1:15, 19; 2;9), எல்லாவற்றையும் படைத்தவரும் காக்கிறவரும் (1:16-17), சபையின் தலை (1:18), உயிர்த்தெழுந்த தேவனும் மனிதனுமானவர் (1:18; 3:1), மற்றும் போதுமான இரட்சகர் (1:28; 2:3, 20; 3:1-4), இவைகளாக இயேசு கிறிஸ்து இருக்கிறார்.[81]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு[82]

1. **கோட்பாடு சம்பந்தப்பட்டது: கிறிஸ்துவின் ஆள்தத்துவம் மற்றும் பணி (1:1-2:5)**

1:1-2	1:13-14	1:24-29
1:3-8 1: 15-20	2:1-5	
1:9-12	1:21-23	

2. **தர்க்கம் : கிறிஸ்துடன் உள்ள உறவின் வெளிச்சத்தில் தவறான கொள்கை பிரச்சனைகள் (2:6-3:4)**

2:6-72: 16-19	3:1-4
2:8-15	2:20-23

3. **செயல்முறை : கிறிஸ்துவில் விசுவாசிகளின் செயல்முறை (3:5-4:6)**

3:5-11	3:22-25	4:5-6
3:12-17	4:1	
3:18-21	4:2-4	

4. **தனிப்பட்ட காரியம் : அப்போஸ்தலனின் தனிப்பட்ட திட்டமும் பணியும் (4:7-18)**

4:7-9	4: 10-17	4:18

1 தெசலோனிக்கேயர்
(கிறிஸ்து: நமக்கு தேவ வாக்குத்தத்தம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: வசனம் 1:1 மற்றும் 2:18ல் வெளிப்படுத்தப்பட்டது போல் 1 தெசலோனிக்கெயர் நிருபத்தை எழுதியவர் பவுல்.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 51-52 18 மாதங்களாக அப்போஸ்தலன் கொரிந்து பட்டணத்தில் இருந்தபோது இரண்டு தெசலோனிக்கேயர் நிரு பங்களும் எழுதப்பட்டன (அப்போஸ்தலர் 18:1-11). சபையின் வளர்ச்சியைக் ர்ங்றித்த செய்தியுடன் தெசலோனிக்கே பட்டணத்திலிருந்து தீமோத் தேயு திரும்பி வந்த பிறர்ங , ஆரம்பக் கட்டத்தில் இந்த நிருபம் எழுதப்பட்டது. இரண்டாவது நிருபம் சில வாரங்களுக்ர்ங பின்பு (அல்லது சில மாதங்களுக்ர்ங பிறர்ங) அனுப்பப்பட்டது. எந்த தேதி கொடுத்தாலும் அந்த தேதி சற்று முன் பின்னதாகத்தான் இருக்ர்ங்ம், ஆனாலும் கி.பி. 51-52 ஆக இருக்கலாம்.

மையக்கருத்தும் நோக்கமும்: மூன்று வாரங்கள் மாத்திரமே பவுல் தெசலோனிக்கே பட்டணத்திருந்தான் (அப். 17:2). எனவே தெசலோனிக்கேயருக்கு எழுதப்பட்ட இந்த நிருபத்தில் அந்தப் புதிய சபைக்கு அவரால் போதுமான போதனைகளைக் கொடுக்க முடியவில்லை. தெசலோனிக்கேயர் வாழ்வில் தேவன் செய்த காரியங்களுக்காக நன்றி தெரிவிக்க (1:2-3), பவுன் ஊழியத்தை பொய் என்று கூறியவர்களுக்கு எதிராக தன்னை பாதுகாக்க (2:12), உபத்திரவத்திற்கு எதிராக நிலைத்து நிற்கவும், பழைய புறஜாதி வாழ்க்கைக்கு திரும்பாமல் இருக்க உற்சாகம் கொடுக்க (3:2-3; 4:1-12) மரித்த கிறிஸ்தவர்களின் முடிவைக் குறித்து எழும்பின உபதேசக் கேள்விக்கு பதில் அளிக்க (4:1-13), "கர்த்தரின் நாளைணுது குறித்து எழும்பின கேள்விக்கு பதில் அளிக்க (5:1-11), சபையில் அவர்களுடைய வாழ்க்கையில் உருவான சில பிரச்சனைகளை தீர்க்க (5:12-13; 19:20) என்று இந்நிருபம் எழுதப்பட்ட நோக்கத்தை சுருக்கமாகக் கூறலாம்.

1 தெசலோனிக்கேயரில் கிறிஸ்து: ஒவ்வொரு அதிகாரமும் அவரின் வருகையைக் குறித்துள்ள குறிப்புகளை கொண்டுள்ளது. இது இப்போதும் அவர் வருகையிலும், விசுவாசிகளின் இரட்சிப்பின் நம்பிக்கையாக கிறிஸ்து இந்த புத்தகத்தில் வெளிப்படுகிறார். அவர் வரும்பொழுது, நம்மை கோபாக்கினையிருந்து விடுதலை செய்வார் (சந்தேகமில்லாமல் இது உபத்திரவ காலத்தை குறிக்கிறது (1:10; 5:4-11). வெகுமதி அளிப்பார் (2;19), நம்மை பூரணப்படுத்துவார் (3:13), நம்மை உயிரோடு எழுப்புவார் (4:13-18), அவரை விசுவாசிக்கிற எல்லோரையும் பரிசுத்தப்படுத்துவார் (5:23).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **கடந்த காலம்: விசுவாசத்தின் கிரியை (1:1-3:13)**

1:1-5	2:9-12	3:1-5
1:6-10	2:13-16	3:6-10
2:1-8	2:17-20	3:11-13

2. **நிகழ்காலம்: அன்பின் பணி (4:1-12)**

4:1-8	4:9-12

3. **எதிர்பார்க்கக்கூடியது: நம்பிக்கையின் சகிப்பு (4:13-5:28)**

4:13-18	5:12-13	5:23-24
5:1-11	5:14-22	5:25-28

2 தெசலோனிக்கேயர்
(கிறிஸ்து: நமக்கு தேவன் கொடுத்த வெகுமதி)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: 1 தெசலோனிக்கேயர் நிருபத்துடன், இந்த நிருபமும் பவுனால் எழுதப்பட்டது (2 தெசலோனிக்கேயர் 1:1; 3:17).

எழுதப்பட்ட காலம்: கி.பி. 51-52. ஒரு வேளை முதலாம் தெசலோனிக்கேயர் நிருபம் எழுதியபின் கொஞ்சக் காலத்திலேயே சுமார் 6 மாதங்களுக்குள் இந்த நிருபம் எழுதப்பட்டிருக்கலாம் என அநேகர் நம்புகின்றனர், காரணம் இந்த புத்தகத்தின் சரித்திர சூழ்நிலைகள்: 1 தெசலோனிக்கேயர் நிருபத்தினுடைய சரித்திர சூழ்நிலைக்கு ஒத்ததாக இருக்கிறது. சபையின் நிலை ஒரே மாதிரியாக இருந்தாலும், கிறிஸ்தவர்கட்கு உபத்திரவம் கடுமையானதாக இருந்ததுபோல் தோன்றுகிறது (1:4-5). இதுவும் மேலும் சில காரணங்களும் பவுல் இந்த நிருபத்தை கி.பி. 51 அல்லது 52ல் கொரிந்திய பட்டணத்திருந்து எழுத வழிநடத்தியது. இந்த நிருபம், முதல் நிருபத்தை கொண்டு சென்ற தீமோத்தேயுவும் சீலாவும் நல்ல செய்தியுடன் திரும்பிவந்தபின் சில காலத்திற்கு பிறகு எழுதப்பட்டிருக்கலாம்.

மையக்கருத்தும் நோக்கமும்: பவுல் கேட்டு அறிந்த மூன்று காரியங்கள் இந்த நிருபத்தை தெளிவாக உடனடியாக எழுத வைத்தது: (1) தெசலோனிக்கேயர் எதிர்கொண்ட அதிகப்படியான உபத்திரவம் பற்றிய தகவல் (1:4-5), (2) "கர்த்தருடைய நாள்" - இதைக்குறித்து பவுன் பெயரால் தவறாக எழுதப்பட்ட கடிதம் மற்றும் அவருடைய போதனையை திரித்துக் கூறுதல் (2:1 முதல்) (3) இயேசுவின் இரண்டாம் வருகை குறித்து தெசலோனிக்கேயர்களின் நம்பிக்கை. அதனால் தெசலோனக்கேயர்களின் அனுதின வாழ்க்கையின் அன்றாட வேலைகளைச் செய்யாமல் அவர்கள் சோம்பேறி வாழ்க்கையை வாழ்ந்தது. மேலும் ஒழுக்கமின்மையை இன்னுமாகக் கடிந்துகொள்ளவும் இந்த கடிதம் எழுதப்பட்டது (3:5-15).

விசுவாசிகளை ஆறுதல் செய்யவும், அவர்களை சரி செய்யவும் பவுல் இந்த நிருபத்தை அவர்களுடைய தேவைகளை சந்திப்பதற்காக எழுதினான். இதன் மூன்று விரிவான நோக்கங்களை பவுல் வெளிப்படுத்துகிறார் (1) இயேசுவின் வருகைக்குப்பின் ஏற்படும் தண்டனை மற்றும் பிரதிபலன்களை விளக்கி, தெசலோனிக்கேயர்களை தங்கள் துன்பங்களை சகிக்க தூண்டுகிறான் (1:3-10); (2) கர்த்தரின் நாள் ஏற்கனவே நடந்து விட்டது என்ற கூற்றுக்கு எதிராக பவுல் கர்த்தரின் நாளில் நடக்கும் முக்கிய நிகழ்ச்சிகளை தெளிவாக்கி அது இன்னும் நடக்கவில்லை என்று நிறுவுகிறான் (2:1-2), (3) வேலை செய்ய மறுக்கிறவர்களை சரிசெய்ய சபை மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையை குறித்து விளக்கமான போதனை கொடுக்கிறான் (3:6-15).

2 தெசலோனிக்கேயரில் கிறிஸ்து. இயேசுவின் இரண்டாம் வருகையின் நியாயத்தீர்ப்பு இந்த புத்தகத்திற்கு மையக்கருத்தாக இருக்கிறது. அவர் எல்லா மீறுதல்களையும் மேற்கொண்டு தண்டனை கொடுப்பார். இது அதிகாரம் 1 மற்றும் 2ல் சிறப்பாக கொடுக்கப்பட்டுள்ளது. 2 தெசலோனிக்கேயர் நிருபம் இயேசுவை ஒரு வரப்போகிற நியாயாதிபதியாக எதிர்பார்க்கிறது.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **வாழ்த்து அல்லது முகவுரை (1:1-2)**

2. **உபத்திரவத்தைக் குறித்து ஆறுதலளித்தலும், மெச்சிக்கொள்ளுதலும் (1:3-12)**

3. **கர்த்தருடைய நாளைக் குறித்து பவுன் உபதேசமும் சவாலும் (2:1-17)**
   2:1-12 2:13-15 2:16-17

4. **சோம்பலைக் குறித்து பவுன் கட்டளையும் உணர்த்துதலும் (3:1-15)**
   3:1-5 3:6-13 3:14-15

5. **பவுன் முடிவுரை: ஆசீர்வாதமும் வாழ்த்துதலும் (3:16-18)**

1 தீமோத்தேயு
(கிறிஸ்து : நமக்கும் தேவனுக்கும் மத்தியஸ்தர்)

எழுதியவரும், புத்தகத்தின் பெயரும்: தீமோத்தேயு இளம் ஊழியனாக சமூகத்திலும், சபையிலும் சவால்களையும்,போராட்டங்களை யும் எதிர்கொண்டார். பவுல் அவரது ஆலோசகராக இரண்டு தனிப்பட்ட நிருபங்களை தீமோத்தேயுவுக்கு ஆலோசனை அளிக்கவும், புத்தி கூறவும் எழுதினான். இதே காரணங்களுக்காக பவுல் கிரேத்தாவிலுள்ள தீத்துக்கும் ஒரு நிருபத்தை எழுதினான். இந்த மூன்று நிருபங்களும் "போதக நிருபங்கள்" என அழைக்கப்படுகிறது.

எழுதிய காலம்: கி.பி. 63. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை 1 தீமோத்தேயு, தீத்து ஆகியப் புத்தகங்களோடு ஒப்பிடும்போது, ரோம பட்டணத்தில் பவுல் முதலாவது விடுவிக்கப்பட்டு குற்றமற்றவர் என்று (சட்டபூர்வமான நடவடிக்கைகள் நீக்கப்படுதல்) அறிவித்த காலத்துக்குப் பின்னால் அவை எழுதப்பட்டன என்று தெளிவாகத் தெரிகிறது. இதனால் 1 தீமோத்தேயு அவர் முதலாவது விடுவிக்கப்பட் டதற்கு பின்பு, இளவேனிற் காலம் கி.பி. 63ஐ ஒட்டிய காலத்தில், கி.பி. 64ல் நீரோ என்ற ரோமப் பேரரசின் கீழ், உபத்திரவங்கள் தொடங் குவதற்கு முன்பாக எழுதப்பட்டது என்று காலம் குறிப்பிடப்படவேண்டும். ஒரு வேளை இந்த நிருபம் கி.பி. 63ல் முதலாவது அவர் விடுவிக்கப்பட்ட காலத்துக்குப் பின் எழுதப்பட்டிருக்கக் கூடும். தீத்து கி.பி. 65லும், 2 தீமோத்தேயு கி.பி. 66ஐச் சார்ந்த காலத்திலும் எழு தப்பட்டன. துவக்கச் சபை பிதா யூசேபியஸ் (Eusebius) என்பவரின் கூற்றுப்படி பவுல் கி.பி. 67ல் மரணமடைந்தார். ஒரு ரோம பிரஜை என்பதால் பவுல் வாளினால் (தலை துண்டிக்கப்பட்டு) மரணமடைந்தார். மாறாக பேதுரு சிலுவையில் அறையப்பட்டுக் கொல்லப்பட்டார்.

பவுன் மிஷனரி பயணங்கள் கி.பி. 48-56 ஆண்டுகளின்போது மேற்கொள்ளப்பட்டன. கி.பி. 56-60களிருந்து பவுல் மெதுவாக ரோம நீதிமன்றங்களில் ஆஜராகி கடைசியில் ரோமப் பட்டணத்தில் வந்து சேர்ந்தார். கி.பி. 61-62 இரண்டு ஆண்டுகள் பவுல் ரோம பட்டணத் தில் வீட்டுக் காவல் வைக்கப்பட்டார், அந்தக் காலம் முடிந்தபின் அவர் விடுதலை செய்யப்பட்டார். கி.பி. 62-67 ஆண்டுகளில் பவுல் ஏறத்தாழ சுதந்திரமாகப் பிரயாணம் செய்தார். இந்தக் காலகட்டத்தில் தீமோத்தேயுவை எபேசுவிலும், தீத்துவை கிரேத்தா தீவிலும் விட் டுவிட்டு பின்தொடர்ந்து அவர்கள் ஒவ்வொருவருக்கும் கடிதம் எழுதினார். இதனால் 1 தீமோத்தேயு மற்றும் தீத்து எழுதப்பட்ட காலம் ஏற்குறைய கி.பி. 63-65 ஆக இருக்கக் கூடும். திரும்பவும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட பின் பவுல் 2 தீமோத்தேயு என்ற கடிதத்தைத் தீமோத்தேயுவுக்கு எழுதினார். இவ்வாறாக கிட்டத்தட்ட கி.பி. 66ல் எழுதப்பட்ட 2 தீமோத்தேயு பவுன் நிருபங்களில் கடைசி நிருபத்தைக் குறிப்பிடுகிறது.[83]

கருப் பொருளும் அதன் நோக்கமும்: 1 தீமோத்தேயுவில் குறைந்தபட்சம் ஐந்து தெளிவான நோக்கங்களைக் காண முடியும். (1) தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்ட உத்தரவு அல்லது கடமையை (1:3), அவனுடைய ஆவியின் வரம் (4:14), அவனுடைய நல்ல அறிக்கை (6:12) மற்றும் அவனிடம் ஒப்படைக்கப்பட்ட உபதேசத்தை பாதுகாப்பது (6:20) ஆகியவற்றை அவனுக்கு ஞாபகமூட்டி அவனு டைய ஆவியையும் தைரியத்தையும் ஊக்குவிப்பது; (2) தவறான போதகர்களின் தவறுகளோடு இடைபட்டு வேதாகம உள்பார்வையை தீமோத்தேயுவுக்குக் கொடுத்து, ஆரோக்கியமான உபதேசத்தில் தொடருவதற்கு அவனுக்கு ஊக்கமளிப்பது (1:3-11, 18-20; 4:1-16; 6:3-10); (3) சபையில் ஆராதனை நடத்துவதைப் பற்றி வழிகாட்டுவது (2:1-15); (4) எழும்பக் கூடிய அநேகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வழி காட்டி, அவைகளை எப்படிக் கையாள வேண்டும் என்று காட்டுவது; இது மூப்பர்கள் டீக்கன்மார் என்ன தகுதியுள்ளவர்களாக இருக்க வேண்டும் (3:1-16), வெவ்வேறு வயது குழுக்களுக்கு நேராக, மூப்பர்கள் (5:1-20), விதவைகள் ஆகியோருக்கு நேராக எப்படி நடந்து கொள்ளுவது என்பதையும் இது உட்கொண்டது. மற்றும் (5) பொருளாசைகளின் தீமைகளுக்கு எதிராக எச்சரிக்கை கொடுப்பது (6:11-19).

1 தீமோத்தேயு, தீத்து, 2 தீமோத்தேயு ஆகியவைகளின் கருப்பொருள் தனிநபரையும் சபையையும் பற்றியது. தனிநபருக்கானப் கருப்பொ ருள் "நல்ல போராட்டம் பண்" (1:18) என்பதாகும். சபைக்காக எழுதப்பட்ட பொருள் தேவனுடைய வீடான சபையில் எப்படி செயல்பட வேண்டும் (3:15) என்பதாகும்.

1 தீமோத்தேயுவில் கிறிஸ்து: அநேக பகுதிகள் இரட்சகரின் ஆள்தத்துவத்தையும் அவருடைய ஊழியத்தைப் பற்றியும் நமக்குத் தெளி வாகச் சுட்டிக்காட்டுகின்றன. ஊழியத்துக்கு மிகவும் அவசியமான நம்முடைய அழைப்பு, பெலன், விசுவாசம், அன்பு ஆகியவைகளுக்கு அவரே ஆதாரமாயிருக்கிறார் (1:12-14), பாவிகளை இரட்சிக்க வந்தவர் (1:15) ***"தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தர் ஒருவரே"*** (2;5), ***"தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார்"*** (3:16), மேலும் ***"எல்லா மனுஷருக்கும், விசேஷமாக விசுவாசிகளுக்கும் இரட்சகராகியவர்"*** (4:10).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **வாழ்த்துதல் (1:1-2)**

2. **கோட்பாடுகளைக் குறித்த கட்டளைகளும் அறிவுரையும் (1:3-20)**

1:3-7	1:12-17
1:8-11	1:18-20

3. **ஆராதனையைக் குறித்து போதனைகள் (2:1-15)**

2:1-7	2:8	2:9-15

4. **தலைவர்களைக் குறித்த போதனை (3:1-16)**

3:1-7	3:8-13	3:14-16

5. **ஆபத்துகளைக் குறித்த போதனை (4:1-16)**

4:1-5	4:6-10	4:11-16

6. **வெவ்வேறான கடமைகளை குறித்த போதனை (5:1-6:10)**

5:1-2	5:17-22	6:1-2
5:3-8	5:23	6:3-10
5:9-16	5:24-25	

7. **தீமோத்தேயுவுக்கு கடைசி போதனைகள் (6:11-21)**

6:11-16	6:17-19	6:20-21

2 தீமோத்தேயு
(கிறிஸ்து: நமக்கு தேவனின் நீதிபரர்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: 1 தீமோத்தேயுவைக் காண்க

எழுதப்பட்ட காலம்: கி.பி. 66. 1 தீமோத்தேயுவைக் காண்க

மையக்கருத்தும் நோக்கமும்: நாம் 2 தீமோத்தேயுவிற்கு திரும்பும்போது அதிக வித்தியாசமான சூழலைக் காணலாம். 1 தீமோத்தேயு மற்றும் தீத்து நிருபத்தில் பவுல் விடுதலை பெற்று பிரயாணம் செய்யத் தகுதியுள்ளவனாக இருந்தார். ஆனால் இந்த நிருபத்தில் மரணத்தை எதிர்பார்க்கும் கைதியாக இருக்கிறார். பவுன் சிந்தையில் இரு பெரிய நோக்கங்களைக் கொண்டுள்ளவனாக இந்த நிருபத்தில் காணப்படுகிறான் (1) எந்தத் தருணத்திலும் தனக்கு மரணம் நேரிடும் என்கின்ற கோணத்தில் பவுல் தீமோத்தேயுவை ரோமிற்கு வர அவசரப்படுத்தினான் (4:9, 21; ஒத்துப்பார்க்க 4:6-8) மேலும் (2) கள்ளப் போதகம் வளர்கின்ற நாட்களில் நாம் வாழ்கிறோம் என்பதை உணர்த்தவும், நல்ல போர்வீரனாக துன்பங்களைச் சகிக்கவும், எல்லா தவறுகளுக்கும் எதிராக நல்ல சத்தியத்தைப் பாதுகாக்கவும், அவற்றைக் கைக்கொள்ளவும் தீமோத்தேயுவுக்கு புத்தி கூறுகிறான்.

1 தீமோத்தேயுவைப் போல், தனிப்பிரகாரமாகவும் சபைக்காகவும் மையக்கருத்ததை இந்த நிருபம் கொண்டுள்ளது. தனிப்பட்ட காரியத்தின் பிரகாரமாக ***“உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பிவிடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன்”*** (1:6) என்பது மையக் கருத்தாக இருக்கிறது. ஆனாலும் அநேக வேத வசனங்கள் தனிப்பட்ட மற்றும் சபையின் காரியங்களின் மையக்கருத்துகளை உருவாக்க முடியும் (1:14; 2:1-2; 2:15; 4:5) சபையின் காரியங்களின், மையக் கருத்தாக மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடம் சத்தியத்தை ஒப்புவிக்கவும், நல்ல போர்சேவகனாக இருந்து பாடனுபவிக்கவும் (2:2-4) அல்லது நல்ல போராட்டத்தை போராடி விசுவாசத்தை காத்துக் கொள்ளவும் ஒட்டத்தை முடிக்கவும் (4:6-7) ஆகும்.

2 தீமோத்தேயுவில் கிறிஸ்து: கிறிஸ்துவின் ஆள்தத்துவம் மற்றும் செயலைப் பற்றிய உபதேசமே எல்லா ஊழியத்தின் அடிதளமாகும். ஊழியத்தில் நாம் நிலைத்திருப்பதும் இருக்கிறது. ஊழியத்தில் சகிப்புத்தன்மையை வயுருத்தும் புத்தகத்திலும், கிறிஸ்துவைப் பற்றிய உபதேசமே அஸ்திபாரமாயிருக்கிறது. இயேசு கிறிஸ்து கீழ்கண்டவாறு விளக்கப்படுகிறார். ***“அவர் மரணத்தைப் பரிகரித்து, ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார்”*** (1:10); மரித்தோரிருந்து எழுந்தவர் (2:8); இரட்சிப்பையும், நித்திய மகிமையும் கொடுப்பவர் (2:10); அவருடன் எல்லா விசுவாசிகளும் மரித்த மற்றும் உயிர்த்த விசுவாசிகளுக்கு அவர்களின் உண்மையின் ஊழியத்தின் பிரதிபலன்களை (நீதியின் கிரீடம்) அளித்து அவருடன் ஆளுகை செய்ய சிலாக்கியம் அளிப்பவர் (2:11-13; 4:8).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **வாழ்த்துரை (1:1-2)**

2. **தீமோத்தேயுவுக்கு நன்றியைத் தெரிவித்தல் (1:3-7)**

3. **தீமோத்தேயுவினுடைய கடமைகளை நினைவுகூர அழைத்தல் (1:8-18)**
   1:8-14 1:15-18

4. **உண்மை ஊழியனின் குணாதிசயங்கள் (2:1-26)**
   2:1-7 2:14-19
   2:8-13 2:20-26

5. **உண்மையுள்ள ஊழியக்காரனுக்கு எச்சரிக்கை (3:1-17)**
   3:1-9 3:10-17

6. **வசனத்தைப் பிரசங்கிக்க கட்டளை கொடுத்தல் (4:1-5)**

7. **உண்மையான ஊழியனின் ஆறுதல் (4:6-18)**
   4:6-8 4:9-15 4: 16-18

8. **முடிவுரை வாழ்த்துதல்கள் (4:19-22)**

தீத்து
(கிறிஸ்து: நமக்கு தேவனுடைய இரக்கம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: எழுதியவரைக் குறித்து முன்பே "போதக நிருபத்தில்" விளக்கப்பட்டுள்ளது. 1 தீமோத்தேயுவை காண்க.

தீத்து ஒருபோதும் அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தில் குறிப்பிடப்படவில்லை. ஆனாலும் பவுன் நிருபத்தில் தீத்துவைக் குறித்த அநேக குறிப்புகள் (13 தடவைகள்) உள்ளன. தீத்து சுவிசேஷ வேலையில் பவுன் நம்பிக்கைக்குரிய உடன் வேலையாளனாகவும் பவுலுக்கு நெருக்கமானவனாகவும் இருந்தான் என்று இந்த குறிப்புகள் தெளிவுபடுத்துகின்றன. விருத்தசேதனம் இல்லாமல் கிருபையால் ஏற்றுக் கொள்ளப்படுவர் என்பதற்கு உதாரணமாக, பவுல் தீத்துவை (புறஜாதியான்) அழைத்துக்கொண்டு அந்தியோகியாவிருந்து எருசலேமில் வந்து, அங்குள்ள தலைவர்களிடம் கிருபையின் சுவிசேஷத்தை விவாதிக்க வந்தான் (அப்போஸ்தலர் 15; கலாத்தியர் 2:1-3). இது பவுல் விவாதித்த நிலையை தெளிவுபடுத்துகிறது (கலாத்தியர் 2:3-5). மூன்றாம் மிஷனெரி பிரயாணத்தில் எபேசு பட்டணத்தில் பவுலுடன் தீத்து வேலை செய்தான் என்றும் தெரிகின்றது. எபேசு பட்டணத்திருந்து கொரிந்து பட்டணத்திற்கு அப்போஸ்தலனால் அனுப்பப்பட்டான். அங்கு அவன் சபையின் ஊழியத்தில் உதவி செய்தான் (2 கொரிந்தியர் 2:12-13; 7:5-6; 8:6).

எழுதப்பட்ட காலம்: கி.பி. 65. துல்யமான காலம் தெரியவில்லை என்றாலும், இந்த நிருபத்திற்கு ஏறத்தாழ சரியான காலத்தை இந்த நிருபத்தின் முக்கிய நிகழ்ச்சிகள் கொடுக்கின்றன. ரோமில் பவுல் வீட்டு கைதியாக இருந்த நிலையிருந்து விடுதலையாக்கப்பட்டான். அப்போஸ்தலருடைய நடபடிகளின் கடைசிப் பகுதியில் காண்கிறோம். பவுல் ரோம நாட்டின் குடிமகனாக இருந்ததினால் பவுலுக்கு எதிராகக் குற்றம் சாட்டினவர்கள் தங்களுடைய குற்றச்சாட்டுகளை நிரூபிக்க முடியவில்லை. அவர்கள் இராயனுக்கு முன்பாக அவனைக் குற்றம் சாட்டாதிருக்க தீர்மானித்தனர் (அப்போஸ்தலர் 24-25; 28:30) அவர்களின் குற்றச்சாட்டு முடிந்த பின் பவுல் விடுதலையாக்கப்பட்டான். பின்பு பவுல் சபையை கண்காணிக்க தீமோத்தேயுவை விட்டு வந்த எபேசு பட்டணத்திற்கு வந்தான். பின்பு மக்கெதோனியா நாட்டிற்குச் சென்றான். மக்கெதோனியா நாட்டிருந்து (வட கிரேக்கத்திருந்து) 1 தீமோத்தேயு நிருபத்தை எழுதினான் (1 தீமோத்தேயு 1:3). பின்பு கிரேத்தா தீவின் சபைகளின் காரியங்களை ஒழுங்குபடுத்த அங்கு தீத்துவை விட்டுச் செல்ல, பவுல் கிரேத்தா தீவிற்கு வந்தான். இதைத் தொடர்ந்து ஆகயா தேசத்திலுள்ள நிக்கோபோ பட்டணத்திற்கு (தென் கிரேக்கம், தீத்து 3:12) வந்தான். தீத்துவை உற்சாகப்படுத்தவும், போதிக்கவும், நிக்கோபோஸ் பட்டணத்திருந்தோ அல்லது மக்கெதோனியா பட்டணத்திருந்தோ பவுல் இந்த நிருபத்தை எழுதினான். பின்பு துரோவா பட்டணத்திற்குச் சென்றான். (2 தீமோத்தேயு 4: 13) அங்கு பவுல் கைது செய்யப்பட்டு, ரோம பட்டணத்திற்கு கொண்டு செல்லப்பட்டு கடைசியாக தலை துண்டிக்கப்பட்டு இறந்தார். முன்பு கூறப்பட்டதுபோல், ரோம தேசத்திருந்து, இரண்டாம் முறையாக கைது செய்யப்பட்டு இருட்டறையில் கைதியாக இருந்தபோது, 2 தீமோத்தேயு நிருபத்தை எழுதினார். கி.பி. 62-67 இந்த இடைப்பட்ட காலத்தில் இந்தச் சம்பவங்கள் நடந்தன.

மையக்கருத்தும் நோக்கமும்: இந்த நிருபத்தில் அநேக மையக் கருத்துகளையும், நோக்கங்களையும் காணலாம். (1) கிரேத்தாவில் உள்ள சபைகளை ஒழுங்காக ஸ்தாபிக்க குறைவாயிருக்கிறவர்களை ஒழுங்குபடுத்த என்ன செய்ய வேண்டும் என்ற தீத்துவுக்கு போதனை கொடுக்க; (2) தீத்து எதிர்கொள்கின்ற எதிர்ப்புகளின் மத்தியில் தீத்துவுக்கு தனிப்பட்ட அதிகாரம் அளிக்க (2:15; 3:1-15); (3) எப்படி எதிர்ப்புகளை சந்திக்க மேலும் விசுவாசம், நடத்தை இவைகளை தீத்துவுக்கு போதிக்க, (4) கள்ளப் போதகர்களைப் பற்றி எச்சரிக்க (1:5, 10-11; 2:1-8, 15; 3:1-11), மேலும் (5) குளிர் காலத்தில் நிக்கோபோ பட்டணத்தில் தீத்துவிடம் சேர்ந்துக்கொள்ள இருந்த திட்டத்தை தெரிவிக்க (3:12), இந்த சந்திப்பு நடைபெற்றதா இல்லையா என்பது தெரியவில்லை. தீத்து பின்பு மறுபடியும் கிரேத்தா தீவிற்கு வந்து மீதமுள்ள தன் வாழ்நாளை ஊழியத்தில் செலவழித்ததாக மரபு கூறுகிறது.

இயேசுவின் மற்றும் மரணம் மூலம் தேவனுடைய கிருபை வெளிப்பட்டது என்பதை காண்பிப்பதாக இந்த நிருபத்தின் மையக்கருத்து இருக்கிறது (2:10-3:9).

மூப்பர்களின் தகுதிகள் (1:5-9), வெவ்வேறு வயதினருக்கு போதனைகள் (2;1-8), அரசாங்கத்துடன் உள்ள தொடர்பு (3:12), ஆவி மற்றும் நற்கிரியை இவைகளின் உறவில் மறுபடி பிறத்தல் சத்தியம் (3:5, தேவ மக்கள் மத்தியில் நற் கிரியையை மேன்படுத்துவதில் கிருபையின் பங்கு (2:11-3:8) இவைகளை உள்ளடக்கிய அநேக முக்கிய விஷயங்களை இந்த நிருபத்தில் விளக்கப்படுகிறது.

தீத்துவில் கிறிஸ்து: பவுன் மற்ற போதனைகளுக்கு ஏற்றார் போல, கிறிஸ்துவின் ஆள்தத்துவம் மற்றும் கடந்த கால, நிகழ்கால, வருங் கால பணியுடன், எப்படி கிறிஸ்தவர்களின் நடத்தை தொடர்புடையதாக இருக்கிறது என்பதை இந்த நிருபம் காட்டுகிறது. இரட்சகரின் தெய்வீகம் (2:13) மற்றும் மீட்பின் பணி (2:12) இவைகளை இந்தப் புத்தகத்தில் காணலாம். இந்தப் புத்தகத்தில் இயேசு இப்படியாக விளக் கப்படுகிறார். ***"நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்"*** (2:13-14).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **வாழ்த்துதல்கள் (1:1-4)**

2. **சபையில் மூப்பர்களின் தகுதிகள் (1:5-9)**

3. **சபையின் எதிராளிகள் (1:10-16)**

4. **சபையின் செயல்பாடுகள் (2:1-3:11)**

   2:1-2 2:3-5 2:6-8 2:9-10 2:11-14 2:15 3:1-11

5. **கடைசி போதனைகளும், வாழ்த்துதலும் (3:12-15)**

பிலேமோன்
(கிறிஸ்து: நமக்கு தேவ நம்பிக்கை)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: மற்ற சிறை நிருபங்களுடன் (எபேசியர், பிப்பியர், கொலோசெயர்) பிலேமோன் நிருபமும், ரோம் நகரத்தில் பவுல் முதன் முறையாக சிறைக் கைதியாக இருந்தபொழுது பவுலால் எழுதப்பட்டது. தன்னுடைய எஜமானிடமிருந்து சில பொருள்களைத் திருடி ஓடிச்சென்ற ரோம சாம்ராஜ்ஜியத்திருந்த லட்சக்கணக்கான அடிமைகளில் ஒருவனாகிய ஓநேசிமு உரிமை யாளர். பிலேமோன் என்பவனுக்கு இந்த நிருபம் எழுதப்பட்டது. ஒநேசிமு ரோம நகரத்திற்கு தப்பித்துச் சென்றான். அங்கு பவுலுடன் தொடர்பு ஏற்பட்டு, இயேசுவை விசுவாசிக்க வழி நடத்தப்பட்டான் (1:10). எனவே இப்பொழுது ஒநேசிமு மற்றும் பிலேமோன் இருவரும் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கிறிஸ்தவ ஊழியத்தை செய்ய சந்திக்கப்பட்டனர். ஓநேசிமு தன்னுடைய எஜமானிடம் திரும்பவும், பிலேமோனும் அவனை மன்னித்து கிறிஸ்துவில் சகோதரனாக ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். ஓடிய அடிமைக்கு சாதாரணமாக மரண தண்டனை கொடுப்பது இயல்பாக இருந்தது. ஆனால் ஓநேசிமுக்காக பவுல் பிலேமோனிடம் மன்றாடினான்.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 60-61. ரோமில் முதல்முறையாக சிறைக் கைதியாக பவுல் இருந்தபோது எழுதப்பட்ட காரணத்தினால் இந்த நிருபம் ஏறத்தாழ கி.பி. 60-61 காலக் கட்டத்தில் எழுதப்பட்டிருக்கலாம்.

மையக்கருத்தும் நோக்கமும்: சுவிசேஷத்தில் உடன் வேலைக்காரனாகவும் பிரியமுள்ள சகோதரனாகவும் ஒநேசிமுவை மறுபடியும் ஏற்றுக்கொள்ள, மன்னிப்பளிக்க பிலேமோனிடம கேட்பது இந்த நிருபத்தின் முக்கிய நோக்கமாகும். பவுன் நிருபங்களில் இந்த நிரு பம் மிகவும் தனிப்பட்ட கடிதமாக இருக்கிறது (1:10-17). ஒநேசிமுடைய கடன்களை தன்னுடைய கணக்கில் எழுதுமாறு பிலேமோனிடம் பவுல் வேண்டிக் கொண்டான். நம்முடைய இடத்தை இயேசு கிறிஸ்து எடுத்துக்கொண்ட பதிலீட்டின் சித்திரத்திற்கு இந்த நிருபம் பொருத் தமான உதாரணமாக இருக்கிறது (1:18). நாம் கிறிஸ்துவின் வாழ்க்கையின் வல்லமையால் மாற்றப்பட்ட வாழ்க்கையை வெளிப்படுத்தத் தேடும்பொழுது, ஏற்கும் நடைமுறைக் கிறிஸ்தவ அன்பைப் போதிப்பது இந்த நிருபத்தின் இரண்டாவது நோக்கமாகும். அது வீட்டிலோ மற்றவர்களுடன் எஜமான்/அடிமை அல்லது முதலாளி/தொழிலாளி கொண்டுள்ள நம்முடைய உறவையோ மாற்றுகிறது. மற்ற சிறை நிருபத்திலும் பவுல் இந்த புதிய உறவு முறையைக் குறித்து பேசுகிறான் (எபேசியர் 6:5-9; கொலோசெயர் 3:22; 4:1). ஆச்சரியமான எடுத் துக்காட்டை இந்த நிருபத்தில் நாம் பார்க்கிறோம். பவுல் தான் சிறையிருந்து விடுதலையானவுடன் தங்க ஏற்பாடுகள் செய்ய கேட்கவும், பிலேமோனுக்கு தன்னுடைய நன்றியை தெரிவிக்கவும், இவைகள் இந்த நிருபத்தின் கடைசி நோக்கமாக இருக்கிறது (1:4-7, 22). சமுகத் திலுள்ள எல்லா தரப்பினருக்கும் போகின்ற சுவிசேஷத்தின் மறுவாழ்வு கொடுக்கும் மற்றும் அடிமை உறவிருந்து சகோதரன் உறவை கொடுக்கும் சக்தி இந்த புத்தகத்தின் மையக்கருத்தாக இருக்கிறது.

கொலோசே சபையில் பிலேமோன் மட்டும் அடிமைகளுக்கு உரிமையாளராக இருக்கவில்லை (கொலோசெயர் 4:1). கிறிஸ்தவ எஜமான ர்களுக்கும் அவர்களுடைய அடிமை சகோதரர்களுக்கும் உள்ள தொடர்புக்கு இந்த நிருபம் ஒரு வழிகாட்டியாக இருக்கிறது. பிலேமோ னுக்குத் தன் அடிமைகள் மேலுள்ள உரிமையை பவுல் மறுக்கவில்லை. ஆனால் ஒநேசிமுவின் சூழ்நிலையில் கிறிஸ்தவ சகோதர கொள்கையை கைக்கொள்ள பிலேமோனிடம் கேட்டான் (1:16). அதே சமயத்தில், ஒநேசிமுவின் கடன்களை தானே ஏற்றுக்கொள்வதாக கூறினான். இந்த நிருபம் அடிமைத்தனத்திற்கு எதிரான தாக்குதலாக இல்லாமல், கிறிஸ்தவ எஜமான், அடிமை என்ற அமைப்புக்குள்

எப்படி விசுவாச வாழ்க்கை வாழ வேண்டும் என்று யோசனை கூறுகின்றது. ஒநேசிமுவுக்கு விடுதலை கொடுத்து அவன் திரும்பி பவுடம் சென்றான் என்பது நடக்ககூடிய காரியமாக இருக்கிறது (1;14). ஒநேசிமு எபேசு பட்டணத்தில் சபையின் தலைமைக் குருவாகவும், ஊழியனாகவும் மாறியிருந்தான் என்றும் கருதப்படுகிறது.[84]

பிலேமோனில் கிறிஸ்து: விசுவாசி இயேசு கிறிஸ்துவில் கண்டடைகின்ற மன்னிப்பு பிலேமோன் நிருபத்தில் ஒப்புமையால் அழகாக சித்திரம் தீட்டப்பட்டுள்ளது. பெரிய குற்றத்திற்காக தண்டிக்கப்பட வேண்டிய ஒநேசிமுவிற்குவாக பவுல் அன்பால் தூண்டப்பட்டு மன்றாடினான் (1:10-17). பவுல் தன்னுடைய உரிமைகளைத் தள்ளி வைத்துவிட்டு (1:8) ஓநேசிமுவின் கடன்களை நினைத்து ஒநேசிமுவின் பதிலீடாக மாறினான் (1:19). பிலேமோனின் இரக்கத்தினால் ஒநேசிமு புதிய உறவில் மறுபடியும் கட்டப்பட்டான் (1:15-16). இந்த ஒப்புமையில், நாம் எல்லோரும் ஒநேசிமுவைப் போல் இருக்கிறோம். பிலேமோனிடம் பவுல் பரிந்து பேசுதல், பிதாவிற்கு முன்பாக கிறிஸ்துவின் மத்தியஸ்த பணிக்கு சமமாக இருக்கிறது. ஒநேசிமு நியாயப்பிரமாணத்தால் குற்றவாளியாக்கப்பட்டான்; கிருபையினால் இரட்சிக்கப்பட்டான்.[85]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **பிலேமோனுக்காக நன்றி கூறுதன் வேண்டுதல். (1:1-7)**
   1:1-3 1:4-7

2. **பவுல் ஒநேசிமுவுக்கு மன்றாடுதல். (1:8-18)**
   1:8-9 1:10-16 1:17-18

3. **பிலேமோனுக்கு பவுன் வாக்கு. (1:19-21)**

4. **சொந்தக் காரியங்கள். (1:22-25)**

பகுதி 3
பொதுவான நிருபங்கள்

முகவுரை: நாம் இப்பொழுது புதிய ஏற்பாட்டின் கடைசி எட்டு நிருபங்களுக்கு வந்திருக்கிறோம். இதில் ஏழு நிருபங்கள் பொதுவான நிருபங்கள் அல்லது பரந்த நோக்குடைய நிருபங்கள் என அடிக்கடி அழைக்கப்படுகிறது. எபிரெயர் நிருபம் இதிருந்து விடுபட்டிருக்கிறது. இந்தப் பொதுவான நிருபங்கள், தனிப்பட்டவர்களுக்கும், சபைகளுக்கும் எழுதின பவுன் நிருபங்களிருநது வித்தியாசப்படுகிறது.[86] அவைகள், தனிப்பட்ட ஒரு இடத்திற்கு மாத்திரம் உடையவைகளாக இருக்கவில்லை (2 மற்றும் 3 யோவான் தவிர). உதாரணமாக, யாக்கோபு நிருபம் ***"சிதறியிருக்கின்ற பன்னிரெண்டு கோத்திரங்களுக்காக எழுதப்பட்டது"*** எனக் குறிப்பிடுகிறது. இது எங்கும் இருக்கின்ற விசுவாசிகளைக் குறிப்பிடுவதாக இருக்கிறது (ஆதி காலத்திருந்த எல்லா யூத கிறிஸ்தவர்களையும் குறிப்பிடுகிறது). 1 பேதுரு நிருபம் "பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா், ஆசியா பித்தினியா தேசங்களில் சிதறியிருக்கின்ற (அத்தேசத்தின் குடிமகன் அல்லாத) வர்களுக்கு" எனக் குறிப்பிடுகிறது. இது வெவ்வேறு தேசங்களிலுள்ள விசுவாசிகளைக் குறிப்பிடுகிறது. 2 மற்றும் 3 யோவான் தனிப்பட்டவர்களுக்காக எழுதப்பட்ட போதிலும், பொதுவான நிருபங்களோடு சேர்க்கப்பட்டுள்ளது. இந்த வித்தியாசங்களின் காரணமாக இந்த எட்டு நிருபங்களும் "பொதுவான நிருபங்கள்" என அழைக்கப்படுகின்றன. பவுன் நிருபங்கள் எழுதியவரின் தலைப்பை கொண்ட நிருபத்தை தவிர்த்து இல்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய ஒன்று. ஆனால் எபிரெயர் தவிர பொதுவான நிருபங்கள் எழுதியவர்களின் பெயரைத் தலைப்பாக கொண்டுள்ளது.

பொதுவாக யாக்கோபு, 1 பேதுரு நிருபங்கள் ஒழுக்கவியல் (எது சரி எது தவறு என்ற தெய்வீகக் கோட்பாடுகளுக்கு ஏற்ப நிருபங்களாக இருந்து விசுவாசிகளை இரட்சகருடன் சேர்ந்து பரிசுத்த வாழ்க்கைக்கு அழைக்கிறது. 2 பேதுரு மற்றும் யூதா நிருபங்கள் வருங்காரியங்களைக் குறிப்பதாக (தீர்க்கதரிசனம்) இருந்து, கள்ள போதகர்களுக்கு எதிராக விசுவாசிகளை எச்சரிக்கவும், மேலும் விசுவாசத்திற்காக போராட விசுவாசிகளை அழைப்பதுமாக இருக்கிறது. எபிரெயர் மற்றும் யோவான் நிருபங்கள் முதன்மையாக கிறிஸ்துவை குறித்தும் ஒழுக்கத்தை குறித்தும் கற்பித்து, கிறிஸ்துவே தேவனுடைய இறுதி வெளிப்பாடாகவும், பழைய ஏற்பாடின் நிறைவேறுதலாகவும், அவருடைய ஜீவனை அனுபவிக்கவும் சுவிசேஷத்தின் உண்மைக்குப் புறம்பே செல்லாதிருக்கவும் கிறிஸ்தவர்களை அழைக்கிறது.

இந்த எட்டு நிருபங்களும் அளவில் சிறியவனாக இருந்தாலும் (புதிய ஏற்பாட்டில் இவை 10 சதவீதத்துக்கும் குறைவான இடத்தையே பிடித்திருக்கின்றன) அதிகமான தாக்கம் விளைவிக்கக் கூடியவையாக இருக்கின்றன. கிறிஸ்தவ சத்தியத்தின் ஐசுவரியத்தின் வெவ்வேறான பார்வைகளைக் கொடுப்பதின்மூலம் பவுன் பதின்மூன்று நிருபங்களுக்கும் உதவியாக இருக்கின்றன. எழுதிய ஐந்து பேரும் (யாக்கோபு, பேதுரு, யோவான், யூதா, எபிரெய நிருபத்தின் ஆசிரியர்) தங்களுடைய சொந்தப் பார்வையில் தனிச்சிறப்பான பங்களிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். அப்போஸ்தல நடபடிகளுக்கு அடுத்தபடியாக, இந்த ஐவரின் நிருபங்களும் புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிராவிட்டால், ஒரே ஒரு அப்போஸ்தலனின் கண்ணோட்டத்தில் புதிய ஏற்பாடு குறைவுபட்டிருக்கும்.[87]

எபிரெயர்
(கிறிஸ்து எல்லாவற்றிற்கும் மேலானவர்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: ஏறத்தாழ 1,200 வருடங்களாக (கி.பி. 400 முதல் 1600 வரை) "எபிரெயருக்கு பவுல் எழுதின நிருபம்" என பொதுவாக இந்தப் புத்தகத்திற்கு தலைப்பு கொடுக்கப்பட்டது. ஆனால் முதல் நூற்றாண்டில் பவுல் எழுதினான் என்பதை எல்லாரும் ஏற்றுக் கொள்ளவில்லை. அதனால் "எபிரெயருக்கு" என்ற தலைப்பு பழமையானதும் நிலையான தலைப்பாகவும் ஆகிவிட்டது.

வேதவல்லுனர்களால் அநேக கருத்துகளும் விளக்கமான விவாதங்களும் இந்த நிருபத்தின் எழுத்தாளரைக் குறித்து எழும்பின; ஆனால் இந்தப் புத்தகத்தில் எங்கும் எழுதியவர் பெயர், எழுதப்பட்ட இடம், எழுதப்பட்ட காலம், மேலும் யாருக்கு எழுதினது என்பவைகள் குறிப்பிடவில்லை, அல்லது தெரியவில்லை என்பதுதான் உண்மை.

இந்தப் புத்தகத்தை எழுதியவர் யார் என்று அந்தக்காலத்தில் எழுதப்பட்டவர்களுக்கு தெரியாததாக இருக்கவில்லை, அவர்கள் தெளிவாக எழுதியவரை அறிந்திருந்தனர் (13:18-24). சில காரணங்களுக்காக ஆதி சபையின் மரபு, எழுதியவரை அறிவதில் தர்க்கம் செய்தது. ஒரு பிரிவினர் பவுல் எழுதினதாகவும், மற்றொரு பிரிவினர் பர்னபா லூக்கா அல்லது கிளமண்ட் என்றும் வேறு சிலர் எழுதியவர் பெயர் தெரியவில்லை என்றும் கூறினர். எழுதியவரின் பெயரில்லாததாக இருந்தாலும் இந்த நிருபத்தின் தரமும் ஆவிக்குரிய ஆழமும் பரிசுத்தாவியானவரால் அருளப்பட்டது என்பதற்கு சாட்சி அளிக்கின்றது.

பவுன் நிருபங்களில் கூறப்பட்டுள்ளதுபோலப் பெற்றுக்கொள்ளுபவர் யார் என்பது சொல்லப்பட்டிராவிட்டாலும், அதைக்குறித்து நாம் அறிந்துகொள்ளுவது நலமாகும். இந்த நிருபத்தில் பல பழைய ஏற்பாட்டு மேற்கோள்கள் கொடுக்கப்பட்டிருக்கிறபடியாலும், ப கொடுக்கும் முறைமையைப் பற்றி அதிகமாகக் கூறப்பட்டிருக்கிறபடியாலும், இது எபிரெயர்களுக்கே எழுதப்பட்டது என்று கூறலாம். ஜேன் சி. ஹோட்ஜஸ் இவ்வாறு கூறுகிறார்:

> எபிரெய நிருபத்தை எழுதியவர் யார், முதல் யாருக்காக எழுப்பப்பட்டது ஆகிய விவரங்கள் தெளிவாகத் தெரியவில்லை. என்றாலும் அவர்கள் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகவே இருக்க வேண்டும். பல காரியங்களை நோக்கிப் பார்க்கும்போது இது தெரிகிறது. வாசகர்கள் திட்டவட்டமான வரலாற்றைப் பெற்றிருந்தார்கள். நிருப ஆசிரியர் அவர்களின் "முந்தின நாட்களைனுது குறிப்பிடுகிறார் (எபிரெயர் 10:32-34). அவர்களுடைய கடந்தகாலத்தையும், தற்போது அவர்கள் தாராளமாக உதவிவருவதையும் ஆசிரியர் அறிந்திருந்தார் (6:10). அவர்களுடைய தற்போதைய ஆவிக்குரிய நிலையை அவரால் திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல முடிந்தது (5:11-14). மேலும் ஆசிரியர் அவர்களோடு திட்டவட்டமான தொடர்பு கொண்டிருந்தார். தீமோத்தேயுவோடு சேர்ந்து அவர்களைப் பார்க்கும்படி வர விரும்புவதாக அவர் தெரிவிக்கிறார் (13:19, 23). மேலும் ஜெபிக்கும்படியும் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறார் (13:18).

வாசகர்கள் அநேகமாக யூதப் பின்னணியைச் சேர்ந்தவர்களாகவே இருக்க வேண்டும். சில வேளைகளில் இதைக்குறித்துச் சந்தேகம் கிளப்பப்பட்டாலும், நிருபத்தின் உள்ளடக்கம் அதற்குப் பதிலளிக்கிறது. ‘‘எபிரெயருக்கு’’ என்பது இதற்கு ஆதியில் கொடுக்கப்பட்ட தலைப்பாகும். நிருப ஆசிரியர்யூதர்களின் முறைமைகளைக் குறிப்பிட்டு தனது விவாதத்தை எடுத்துவைப்பதால் அவர் யூதர்களுக்கே இதை எழுதியிருக்கலாம் என்பது தெரிகிறது. பழைய ஏற்பாட்டு வசனங்களின் அதிகாரம் வயுறுத்தப்பட்டிருப்பதால் இதுவும் யூத வாசகர்களுக்கே பொருத்தமாக இருக்கிறது.[88]

எழுதப்பட்ட காலம்: கி.பி. 64-68. கி.மு. 64-68க்கு இடைப்பட்ட காலமாக இருக்கலாம் என அநேக உண்மைகள் கருத்து தெரிவிக்கிறது, முதலாவது கி.பி. 95ல் ரோம் நாட்டு கிளமண்ட் (ஒரு ஆதி சபை போதகர்) என்பவரால் குறிப்பிடப்பட்டது, எனவே இந்த நிருபம் கி.மு. 95க்கு முன்பே எழுதப்பட்டது. இரண்டாவது கி.பி. 70ல் நடந்த எருசலேமின் அழிவிற்கு முன்னதாக இந்த நிருபம் எழுதப்பட்டது என்பது தெளிவாகத் தெரிகிறது. அதன் காரணங்கள்: (1) இப்படி ஒரு சம்பவம் நடந்திருந்தால் இந்த நிருபத்தை எழுதியவர் எருசலேமின் அழிவை இந்தப் புத்தகத்தின் விளக்கத்தில் குறிப்பிட்டிருக்கலாம். ஆனால் அதைக் குறிப்பிடவில்லை (2) ஆசாரியர்களின் செயல்முறை மற்றும் தேவாலயத்தை குறித்துப் பேசும் விதத்திருந்து இன்னும் அவைகள் நடந்து கொண்டிருக்கிறது எனவும் தேவாலயம் இடிக்கப்படவில்லை என்றும் தெரிகிறது (5:1-3; 7:23, 27; 8:3-5; 9:6-9, 13, 25; 10:1, 3-4, 8, 11; 13:10-11) (3) 13:23 வசனத்தில் இந்த நிருபத்தை எழுதியவர் சில காலத்துக்கு முன் நடந்த தீமோத்தேயுவின் விடுதலையைக் குறிப்பிடுகிறார். தீமோத்தேயு பவுலுடன் சேர்ந்து ரோம பட்டணத்தில் ஊழியம் செய்த பொழுது இது நடந்திருந்தால் கி.பி. 60களின் பிற்பாகத்தில் ஒரு தேதியை இந்த சம்பவங்கள் உடையதாக இருந்திருக்கும்.

மையக்கருத்தும் நோக்கமும்: எபிரெய நிருபத்தின் மையக்கருத்து கிறிஸ்துவின் மேன்மையை அல்லது உயர்ந்த நிலையை தெளிவாகக் குறிப்பிடுவதாக உள்ளது. இப்படியாக கிறிஸ்தவம் எல்லா பழைய ஏற்பாட்டு சட்டத்திட்டங்களைவிட மேன்மையானது. இதைக் காட்டும்படியாக சிறந்த, பூரண, தேவராஜ்யம் என்ற வார்த்தைகள் முக்கியமாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. ஐந்து சிறப்பான வழிகளில் இயேசு உயர்ந்தவர் மற்றும் சிறந்தவராக இருக்கிறார் என்று காண்பிப்பதே இந்த நிருபத்தின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. அவைகள் (1) பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளை காட்டிலும் இயேசு உயர்ந்தவர் (1:1-3); (2) தேவ தூதர்களை காட்டிலும் உயர்ந்தவர் (1:4-2:18); (3) மோசேயைக் காட்டிலும் (3:1-6); (4) யோசுவாவை (3:7-4:16); விட (5) ஆரோனின் ஆசாரியத்துவத்தை காட்டிலும் இயேசு உயர்ந்தவர் (5:1-10:18). என்று காட்டுகிறது. இந்த மையக்கருத்தின் நோக்கம் என்னவெனில், பழைய ஏற்பாட்டின் தாற்காகமான நிழலுக்காக (எபி. 10:1) கிறிஸ்துவுக்குள் தாங்கள் பெற்றிருப்பவைகளைத் தனது வாசகர்கள் விட்டுக்கொடுக்கக் கூடாது என்று நிருப ஆசிரியர் எச்சரிக்கிறார். வாசகர்கள் முதிர்ச்சியடைந்து, உண்மையுள்ள விசுவாசிகளாகத் தங்களது பரிசைப் பெற்று, தங்கள் பரம அழைப்பை நிறைவேற்ற வேண்டுமென்று அவர் அவர்களை ஊக்குவிக்கிறார். கிறிஸ்தவ விசுவாசத்தில் அவர்கள் வளர்ச்சியடைய வேண்டும் என்பதற்காக ஐந்து எச்சரிக்கையளிக்கும் பகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன (2:1-4; 3:1-4:13; 5:11-6:20; 10:26-39; 12:14-29).

எபிரெயரில் கிறிஸ்து: இயேசு கிறிஸ்துவின் உன்னத நிலையைக் காட்டும் நோக்கத்தை நிறைவேற்றும்வகையில், இந்த எபிரெய நிருபம் கிறிஸ்துவைக் குறித்து கற்பிக்கின்ற மிகச் சிறந்த ஒரு புதிய ஏற்பாட்டு புத்தகமாக உள்ளது. கிறிஸ்து இங்கு குமாரனாக, தேவனின் தனித்தன்மையைப் பிரதிபக்கிறவராகவும் (1:3, 13), தேவனின் வலதுபாரிசத்தில் உட்கார்ந்தவராகவும்(1:3), பிதாவால் தேவன் என்று அறிக்கை செய்யப்பட்டவராகவும் (1:8-9), நித்திய சிருஷ்டிகராகவும் (1:10-12), மெல்கிசேதேக்கு முறைமையின்படி நித்திய ஆசாரியராகவும் (7) இருக்கிறார் என்று அறிக்கை செய்யப்படுகிறார். இங்கே கிறிஸ்து தெய்வீக - மானிட தீர்க்கதரிசியாகவும், ஆசாரியனாகவும், இராஜாவாகவும் அறிவிக்கப்படுகிறார். அவர் ஒரே தடவையில் நமது பாவத்துக்கான நிவாரணத்தைச் செய்து முடித்திருக்கிறார். இப்படியாக தாற்காகமான பயினால் செய்ய முடியாததை அவர் செய்திருக்கிறார். இப்போது அவர் நமது பலவீனங்களை உணர்ந்தவராக, பரலோகத்தில் நமது மகா பிரதான ஆசாரியராக நமக்காகப் பரிந்துபேசிக் கொண்டிருக்கிறார்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **பழைய ஏற்பாட்டு தலைவர்களுக்கு மேலாக கிறிஸ்துவின் உன்னத நிலை (1:1-7:28)**
   a. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைக் காட்டிலும் கிறிஸ்து உயர்ந்தவர் (1:1-3)
   b. தேவ தூதர்களைப் பார்க்கிலும் கிறிஸ்து உயர்ந்தவர் (1:4-2:18)
      1:4-14 | 2:5-8 | 2:14-18
      2:1-4 | 2:9-13
   c. மோசேயைக் காட்டிலும் கிறிஸ்து உயர்ந்தவர் (3:1-6)
   d. யோசுவாவைக் காட்டிலும் கிறிஸ்து உயர்ந்தவர் (3:7-4:13)
      3:7-11 | 4:1-5
      3:12-19 | 4:6-13
   e. ஆரோனின் ஆசாரியத்துவத்தைப் பார்க்கிலும் கிறிஸ்து உயர்ந்தவர் (4:14-7:28)
      1) நிலைத்து நிற்கப் புத்தி கூறல் (4:14-16)
      2) ஆசாரியனின் தகுதி (5:1-10)
         5:1-4 | 5:5-10
      3) ஆவிக்குரிய சோம்பலை விட புத்தி கூறல் (5:11-6:12)
         5:11-14 | 6:1-8 | 6:9-12
      4) தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிச்சயம் (6:13-20)
      5) ஆசாரிய முறைமையின்படி கிறிஸ்துவின் உயர்வு (7:1-28)
         7:1-3 | 7:11-22
         7:4-10 | 7:23-28

2. நம்முடைய பிரதான ஆசாரியனாகக் கிறிஸ்துவின் உன்னத பயின் கிரியை (8:1-10:39)

a. சிறந்த உடன்படிக்கை (8:1-13)

8:1-6	8:7-13	

b. சிறந்த பரிசுத்த ஸ்தலம் (9:1-10)

9:1-5	9:6-10	

c. சிறந்த ப (9:11-10:18)

9:11-14	9:23-28	10:11-18
9: 15-22	10:1-10	

d. புத்தி கூறுதல் (10:19-39)

10:19-25	10:26-31	10:32-39

3. விசுவாசத்தைக் காக்க கடைசி வேண்டுகோள் (11:1-12:29)

a. கடந்த கால விசுவாச வீரர்களின் உதாரணம் (11:1-40)

11:1-2	11:13-16	11:30-31
11:3-7	11:17-22	11:32-38
11:8-12	11:23-29	11:39-40

b. விசுவாசத்தைக் காக்க உற்சாகம் (12:1-11)

12:1-2	12:3-11	

c. விசுவாசத்தைக் காக்க ஊக்கமளித்தல் (12:12-17)

12:12-13	12:14-17	

d. விசுவாசத்தைக் காக்க உந்துதல் (12:18-29)

12:18-24	12:25-29	

4. முடிவுரை (13:1-25)

a. கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நடைமுறை கோட்பாடுகள் (13:1-17)

13:1-6	13:7-14	13:15-17

b. ஜெபிக்க வேண்டுகோள் (13:18-19)

c. ஆசீர்வாதம் (13:20-21)

d. தனிப்பட்ட காரியங்கள் (13:22-23)

e. வாழ்த்துதல்களும் கடைசி ஆசீர்வாதமும் (3:24-25)

யாக்கோபு
(கிறிஸ்து: எடுத்துக்காட்டு)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: *"தேவனுக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல் எழுதுதுகிறதாவ"* என இந்த நிருபம் ஆரம்பிக்கிறது (1:1). புதிய ஏற்பாட்டில் யாக்கோபு என்ற பெயருடன் நான்கு பேர் இருந்தனர். அவர்கள் (1) செபேதேயுவின் குமாரனாகிய யோவானின் சகோதரன் (மாற்கு 1:19), (2) அல்பேயுவின் குமாரன் (மாற்கு 3:18), (3) யூதாவின் தந்தை (யூதாஸ்காரியோத் அல்ல; லூக்கா 6:16), (4) இயேசுவின் சகோதரன் (கலாத்தியர் 1:19). இவர்களைக் குறித்து ரைரி (Ryrie) என்பவர் எழுதுகிறார்:

> புதிய ஏற்பாட்டில் நான்கு மனிதர்கள் இந்த பெயரைக் கொண்டிருந்தாலும் செபேதேயுவின் குமாரன் யாக்கோபு மற்றும் இயேசுவின் சகோதரன் யாக்கோபு ஆகிய இருவர்களில் ஒருவர் மாத்திரமே இந்த நிருபத்தை எழுதியவராக இருக்க முடியும். கி.பி. 44ல் இரத்தச் சாட்சியாக மரித்ததினால் செபேதேயுவின் குமாரனாகிய யாக்கோபு இந்த நிருபத்தை எழுதியவராக இருக்க முடியாது (அப்போஸ்தலர் 12:2). இந்த நிருபத்தின் அதிகாரத் தொனி புதிய ஏற்பாட்டில் அதிகம் அறியப்படாத யாக்கோபுகள் இந்த நிருபத்தை எழுதியவரல்ல எனக் காட்டுகிறது. (அறியப்படாத யாக்கோபு மற்றும் லூக்கா 6:16ல் உள்ள யாக்கோபு). ஆனால் எருசலேமின் சபையின் தலைவராக அறியப்படுகிற இயேசுவின் ஒன்று விட்ட சகோதரனாகிய யாக்கோபை சுட்டிக் காட்டுகிறது (அப்போஸ்தலர் 12:17; 15:13; 21:18). எருசலேம் ஆலோசனை குழுவின்படி யாக்கோபு வழங்கிய உரையும் இந்த நிருபத்தின் உள்ள கிரேக்க மொழிக்கும் ஒற்றுமையாயிருப்பதால் இந்த முடிவுக்கு வந்துள்ளது (யாக்கோபு 1:1 மேலும் அப்போஸ்தலர் 15:23; யாக்கோபு 1:27 மேலும் அப்போஸ்தலர் 15:14; யாக்கோபு 2:5 மேலும் மற்றும் அப்போஸ்தலர் 15:13).[89]

இந்த நிருபத்தை வாசிப்பவர்களை குறிப்பிடும் விதத்திற்கு விளக்கம் அவசியம் ***"சிதறியிருக்கிற பன்னிரெண்டு கோத்திரங்களுக்கு"*** (1:1) என யாக்கோபு எழுதுகிறார். 1:19 மற்றும் 2:17 வசனத்திலுள்ள "என் சகோதரர்" என்ற வார்த்தை கி.பி. 66-70ல் தோன்றிய சிதறடிப்பை குறிப்பிடாமல் யூத கிறிஸ்தவர்கள் முந்தையகாலத்தில் தாங்களின் சொந்த நிலத்திருந்து, சிதறியிருந்ததைக் குறிப்பிடுகிறது (மத்தேயு 1:11, 12, 17). அப்போஸ்தலருடைய நடபடிகளின் புத்தகத்தில் முதல் அதிகாரத்தில் பெந்தெகோஸ்தே பண்டிகைக்காக உலகத்தின் அனைத்து பாகங்களிருந்தும் யூதர்கள் கூடி இருந்தனர் (அப்போஸ்தலர் 1:5). இவர்களில் அநேகர் பெந்தெகொஸ்தே அற்புதங்களை கண்டும் கேட்டும் இயேசுவை விசுவாசிக்க ஆரம்பித்தனர். கடைசியாக அவர்கள், உலகத்தின் வெவ்வேறான பகுதிகளில் உள்ள தங்களின் சொந்த நிலங்களுக்கு, வீடுகளுக்கு சென்றனர். இவர்களுக்கு இதை யாக்கோபு எழுதினார்.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 45 அல்லது 46. ஏறத்தாழ கி.பி. 45 என இந்த புத்தகத்திற்கு வேத வல்லுனர்களால் தேதியிடப்பட்டுள்ளது. கீழே உள்ள காரணங்களால் யாக்கோபு நிருபம் முதல் எழுதிய நிருபமாக இருக்கலாம்: (1) இந்த நிருபத்தில் காணப்படும் யூதர்களின் தனிப்பட்ட குணாதிசயங்கள், சபை யூதர்களால் நிறைந்திருந்தபொழுது எழுதப்பட்டது என கருத்து தெரிவிக்கின்றது; (2) புறஜாதியினரின் விருத்தசேதத்தை குறித்துள்ள வாக்குவாதத்தை குறிப்பதாக எந்தக் குறிப்பும் இல்லை; (3) மக்கள் கூடி வரும் இடத்தை குறிக்கின்ற "ஆலயம்" (synagogue) என்ற வார்த்தை "சபை" என்ற வாக்கிற்கு பதிலாக பயன்படுத்தப்பட்டுள்ளது (2:2); (4) யூத கிறிஸ்தவர்கள் மற்றும் புறஜாதி கிறிஸ்தவர்களின் உறவைக் குறித்த விவாதங்கள் போன்ற காரியங்கள் எருசலேம் ஆலோசனை சங்கத்தில் இடம் பெற்றதாக இதில் குறிப்பிடவில்லை (அப்போஸ்தலர் 15:1 கி.பி. 49). எனவே இது ஆரம்பகால தேதியைக் குறிக்க கருத்து தெரிவிக்கின்றது; (5) "இந்த நிருபத்தில், இயேசு கிறிஸ்துவின் போதனையின் குறிப்புகளில் வார்த்தைகளின் ஒற்றுமை எதுவுமில்லை. எனவே அந்த சுவிசேஷ புத்தகம் இந்த நிருபத்திற்கு சற்று முன்னதாக இருந்திருக்க வேண்டும்."[90]

மையக்கருத்தும் நோக்கமும்: நடைமுறைக்கேற்ற சக்தி வாய்ந்த, முக்கியமான கிரியை செய்கின்ற விசுவாசத்தை பெறுதலைக் குறித்து தெளிவாக யாக்கோபு கரிசனையுள்ளவராய் இருக்கிறார். சபை பிரகாரம் மற்றும் தனிப்பட்ட பிரகாரம் கிரியை இல்லாத மற்றும் செத்த விசுவாசத்தின் விளைவுகளைக் குறித்து விசுவாசிகளை எச்சரிக்கவும், உண்மையான ஆவிக்குரிய முதிர்ச்சியில் வளருவதற்கு உற்சாக மூட்டவும் இந்த நிருபத்தை யாக்கோபு எழுதுகிறார்.

யாக்கோபில் கிறிஸ்து: 1:1 மற்றும் 2:1 வேத வசனங்களில் யாக்கோபு "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை" குறிப்பிடுகிறார். பின்பு அவரின் வருகையை எதிர்பார்க்கிறார் (5:7-8). இந்த நிருபத்திலுள்ள 108 வசனங்களில் 22 பழைய ஏற்பாட்டின் புத்தகங்களின் குறிப்புகளைக் கொண்டவை. மேலும் இயேசுவின் மலைப் பிரசங்க உரையைக் குறித்து குறைந்தது 15 தோற்றங்கள் இருக்கின்றன.[91]

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு[92]

1. **நம்பிக்கையுடன் நிற்குதல் (1:1-27)**
   a. வணக்கமும் வாழ்த்துதலும் (1:1)
   b. வெவ்வேறான உபத்திரவத்தில் சந்தோஷமாயிருங்கள் (1:2-12)
      1:2-4 1:5-8 1:9-12
   c. சாவுக்கேதுவான சோதனையை எதிர்த்தல் (1:13-18)
   d. தேவனுடைய சத்தியத்தில் நிலைத்திருத்தல் (1:19-27)
      1:19-25 1:26-27

2. **இரக்க குணத்தோடு ஊழியம் செய்வது (2:1-26)**
   a மற்றவர்களை ஏற்றுக்கொள்ளல் (2:1-13)
      2:1-7 2:8-13
   b. மற்றவர்களுக்கு உதவிசெய்தல் (2:14-26)
      2:14-17 2:18-26

3. **யோசித்துப் பேசுதல் (3:1-18)**
   a. பேசுதலைக் கட்டுப்படுத்துதல் (3:1-12)
      3:1-5 3:6-12
   b. நல்ல எண்ணத்தை அப்பியாசிப்பது (3:13-18)

4. **மனம்திரும்பலோடு ஒப்புக்கொடுத்தல் (4:1-17)**
   a. வெறுப்பை தாழ்மையாக மாற்றுதல் (4:1-6)
   b. நியாயத்தீர்ப்பை நீதியாக மாற்றுதல் (4:7-12)
      4:7-10 4:11-12
   c. பெருமையை நம்பிக்கையாக மாற்றுதல் (4:13-17)

5. **அக்கறையோடு பகிர்ந்துகொள்ளுதல் (5:1-20)**
   a. செல்வத்தை பகிர்ந்துகொள்ளுதல் (5:1-6)
   b. பொறுமையைப் பகிர்ந்துகொள்ளல் (5:7-12)
   c. ஜெபத்தை சேர்ந்து செய்தல் (5:13-20)
      5:13-18 5:19-20

1 பேதுரு
(கிறிஸ்து: உபத்திரவப்பட்டதற்கு உதாரணம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: அப்போஸ்தலன் பேதுரு இந்த நிருபத்தை எழுதியதாக தொடக்க வசனம் தெளிவாகக் குறிப்பிடுகிறது (1:1). ஆதிகால சபையில் எல்லாரும் அப்போஸ்தலன் பேதுரு இந்த நிருபத்தை எழுதினான் என்று அங்கீகரித்தார்கள்.

(பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா) தேசங்களில் சிதறியிருக்கிறவர்களில் தெரிந்துக் கொள்ளப்பட்ட பரதேசிகளுக்கு இந்த நிருபம் எழுதப்பட்டது (1:1). மத்தியதரைக் கடன் அப்பால் பாலஸ்தீன நாட்டிருந்து சிதறி இருக்கிற யூத மக்களைக் குறிப்பதாக ''சிதறுதல்'' என்ற வார்த்தை இங்கே பயன்படுத்தப்பட்டது. மேலும் பக்தியில்லாத உலக மக்களின் நடுவே சிதறியிருந்த தேவ ஜனமாகிய புறஜாதியினரை குறிப்பதாகவும் பயன்படுத்தப்பட்டது.[93] புறஜாதி மற்றும் யூத விசுவாசிகளையும், பேதுரு இந்த நிருபத்தை எழுதும் பொழுது மனதில் கொண்டிருந்தான்.

சிறிய ஆசியா கண்டத்திலுள்ள ஐந்து ரோம மாகாணங்கிளில் சிதறியிருந்த கிறிஸ்தவர்களுக்கு பேதுரு முதலாவது நிருபத்தை எழுதின ான். இந்த பகுதிகள் இப்பொழுது இருக்கின்ற வட துருக்கியாக இருக்கிறது. அந்த பகுதியில் இருந்த சபைகள் புறஜாதியினராலும் யூத ராலும் சேர்ந்து உருவாயிருந்தது. பழைய ஏற்பாட்டு மேற்கோள் மற்றும் குறிப்புகளால் இந்த நிருபம் நிறைந்ததாக இருக்கிறது. வணக்க பகுதியில் பயன்படுத்திய ''சிதறடிக்கப்பட்ட'' என்ற வாக்கு ''டயஸ்போரா'' (DIASPORA) என்ற வாக்கிருந்து மொழிபெயர்க்கப்பட்டது; எருசலேமிற்கு வெளியே வாழ்ந்த யூதர்களே சிதறடிக்கப்பட்டவர்கள் (டயஸ்போரா) என குறிப்பிடப்படுகின்றனர்.

வேத வசனத்தை முற்றிலும் அறியாத பின்னணியின் வெளிச்சத்தில் பரிசுத்த வாழ்க்கை நடத்த பேதுரு போதிப்பதை புறஜாதியினரும் கவனித்திருப்பார்கள் (1:14). அறியாமையின் பிள்ளைகளாக இருந்தாலும், இப்பொழுது அவர்கள் ''தேவ மக்கள்'' என்று கருதப்படு கின்றனர் என்ற உண்மையினால் புறஜாதி கிறிஸ்தவர்கள் உற்சாகமூட்டப்படுகின்றனர் (2:10). சிறிய ஆசியா கண்டத்தின் சபைக்கு, எழுதி உற்சாகமூட்டும் இந்த நிருபத்தில் பேதுரு கவனமாக புறஜாதி கிறிஸ்தவர்களையும் யூத கிறிஸ்தவர்களையும் உட்படுத்தியிருக்கிறார்.[94]

எழுதப்பட்ட காலம்: கி.பி. 63-64. சபையின் மரபு பேதுருவின் பிந்தைய வாழ்க்கையின் வருடங்களை ரோம நகரத்துடன் இணைக் கின்றது. 5:13ல் குறிப்பிடப்பட்டுள்ள பாபிலோன், ரகசியமாக ரோம நகரத்தை குறிப்பதாக இருந்தால், இந்த நிருபம் ஏறத்தாழ கி.பி. 63, அதாவது கி.பி. 64ல் நீரோ சக்கரவர்த்தியினால் உண்டான உபத்திரவத்திற்கு சற்று முன்பு, தன்னுடைய கடைசி 10 ஆண்டுகளை ரோமா புரியில் கழித்தபொழுது பேதுருவால் எழுதப்பட்டிருக்கலாம். அப்போதும் பேதுரு ரோமை கிறிஸ்தவத்தை எதிரியாகக் கருதவில்லை (1 பேதுரு 2:13-17); நீரோவினால் உண்டான உபத்திரவத்திற்குப் பிறகு இப்படிக் கூறியிருக்கமுடியாது.

மையக்கருத்தும் நோக்கமும்: வெவ்வேறான சத்தியங்களையும், கிறிஸ்தவ வாழ்க்கையையும், கிறிஸ்தவர்களின் கடமையையும் பற்றி 1 பேதுரு நிருபம் குறிப்பிட்டாலும், இந்த நிருபத்தின் மையக்கருத்து கிறிஸ்துவை விசுவாசிப்பதினால் வரும் வேதனையையும், பிரச்சி னைகளையும் பற்றியது. எதிர்ப்பு நிறைந்த இந்த உலகத்தில் கிறிஸ்துவின் தூதர்களாக மேலும் தற்காகமான குடிமக்களாக எப்படி வாழ வேண்டும் என்பதை காட்டும் ஒரு கையேடாக அல்லது தினக்குறிப்பாக இந்த புத்தகம் விளக்கப்படுகிறது. (1:1, 13-21; 2:11-12; 3:14,17; 4:1, 13, 15, 16, 19).

அநேக குறிப்பிட்ட நோக்கங்கள் இந்த புத்தகத்தில் காணப்படுகிறது. உபத்திரவத்தில் விசுவாசிகளுக்கு வழிகாட்டுவதற்காக அமைக்கப் பட்டுள்ளது. (1) வரப்போகிற கிறிஸ்துவின் வெளிப்பாடும் அதன் விடுதலையையும் முக்கியப்படுத்துதல் (1:3-12); (2) உபத்திரவத்தில் பூரண உதாரணமாக இருக்கிற இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுதல் (2:21-24); (3) புறஜாதி உலகத்தில் ஒரு நல்ல சாட்சியை அமைத்து தேவனுடைய சிறப்பான மக்களாக அழைக்கப்பட்ட அழைப்புக்கு ஏற்றவாறு இந்த உலகத்தில் வாழுதல் (2:4-12; 4:1-19) மற்ற நோக்கங்கள் என்னவென்ற ால், செயல்முறைக்கும், சத்தியத்திற்கும் இடையில் உள்ள முக்கிய இணைப்பை நிறுவுதல் (5:12) மற்றும் தெய்வீக தலைமைத்துவத்தை உற்சாகப்படுத்தி தேவனுடைய மந்தையை மேய்த்தல் (5:1-4) விரோதமான உலகத்தில் உபயோககரமாக செயல்படுவதில் சபையின் திறமையில் இது அவசியமான ஒன்றாகும்.

1 பேதுருவில் கிறிஸ்து: கிறிஸ்துவும் அவருடைய பணியும் மிகுதியாக இந்த நிருபத்தில் காணப்படுகின்றன. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலம், கிறிஸ்தவர்கள் ''ஜீவனுள்ள நம்பிக்கை'' மற்றும் ''அழியாத சுதந்திரம்'' இவைகளைக் கொண்டுள்ளனர் (1:3-4). அநேக இடங்க ளில், கிறிஸ்துவின் வெளிப்படுதலையும், வருகின்ற மகிமையையும் குறித்து பேதுரு பேசுகின்றார் (1:7, 13; 4:13; 5:1). சிலுவையில் தேவ ஆட்டுக்குட்டியாக நம்முடைய பாவங்களை சுமந்து நம்மை மீட்ட இயேசுவின் பணியையும் அவரின் ஆள்தத்துவத்தையும் பேதுரு பேசுகிறார் (1:18-19; 2:24), உபத்திரவத்தில் பூரண உதாரணமாகவும் (2;21-24) விசுவாசிகளை பாதுகாக்கிறவர் மற்றும் பிரதான மேய்ப்பன ாகவும் (2:25-54) கிறிஸ்து இந்த புத்தகத்தில் இருக்கிறார்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **விசுவாசிகளின் இரட்சிப்பு (1:1-12)**
   a. வாழ்த்து (1:1-2)
   b. எதிர்கால ஜீவனுள்ள நம்பிக்கையும் தற்கால உபத்திரவமும் (1:3-9)
   c. தற்கால இரட்சிப்பும் கடந்த கால வெளிப்பாடுகளும் (1:10-12)

2. **விசுவாசிகளின் பரிசுத்தம் (1:13-2:12)**
   a. பரிசுத்தத்திற்கு அழைப்பு (1:13-21)
      1:13-16 1:17-21
   b. ஒருவரில் ஒருவர் ஊக்கமான அன்புகூர அழைப்பு (1:22-25)
   c. வேதவசனமாகிய களங்கமில்லாத ஞானப் பான் மேல் வாஞ்சையாக இருக்க அழைப்பு (2:1-3)

d. ஆவிக்குரிய பயை இட அழைப்பு (2:4-10)
   2: 4-8 2: 9-10

e. மாம்ச இச்சைகளிருந்து விடுபட அழைப்பு (2:11-12)

3. **விசுவாசிகளின் கீழ்ப்படிதல் (2:13-3:12)**
   a. அரசாங்கத்திற்கு கீழ்ப்படிதல் (2:13-17)
   b. அலுவல்களில் கீழ்ப்படிதல் (2:18-20)
   c. கிறிஸ்துவின் மாதிரி (2: 25)
   d. திருமணத்தில் கீழ்ப்படிதல் (3:1-8))
   e. வாழ்க்கையில் எல்லா பாகங்களிலும் கீழ்ப்படிதல் (3:9-12)

4. **விசுவாசிகளின் உபத்திரவம் (3:13-5:14)**
   a. உபத்திரவத்தில் காட்டவேண்டிய நடத்தை (3:13-17)
   b. உபத்திரவத்திற்கு கிறிஸ்துவின் உதாரணம் (3:18-4:6)
      3: 18-22 4: 1-6
   c. உபத்திரவத்திற்கு கட்டளை (4:7-19)
      4: 7-11 4: 12-19
   d. உபத்திரவத்தில் மேய்ப்பன் (5:1-11)
      5: 1-5 5: 6-11
   e. முடிவுரை அல்லது ஆசீர்வாதம் (5:12-14)

2 பேதுரு
(போதுமானதாயிருக்கிற கிறிஸ்துவின் வசனம்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: இந்த நிருபத்தை எழுதியவர் சீமோன் பேதுரு எனத் தன்னைத் தெளிவாக குறிப்பிடுகிறார் (1-1). இந்த நிருபத்தை எழுதியவர் பேதுரு என்று அநேக உட்புற ஆதாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. தன்னுடைய மிகவும் தனிப்பட்ட பகுதியில் இயேசுவின் மறுரூபமானதின் சாட்சியாக தன்னை வெளிப்படுத்தியபோது இந்த நிருபத்தை எழுதியவர் தன்னை குறிப்பிட நான் என்ற வார்த்தையைப் பயன்படுத்தினான் (1:16-18; மத்தேயு 17:1-5). இந்த நிருபத்தை வாசிப்பவர்களுக்கு இது தன்னுடைய இரண் டாவது நிருபம் என வெளிப்படுத்தினான், மேலும் பவுலை "நம்முடைய பிரிய சகோதரன்" என அழைத்து பவுலுடன் உள்ள தனிப்பட்ட நட்பை வெளிப்படுத்துகிறான். பேதுரு எழுதிய முதல் நிருபத்திருந்து இந்த நிருபத்தை வித்தியாசப்படுத்த "இரண்டாம் பேதுரு" என தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

முதல் நிருபத்தை வாசித்த அதே விசுவாசிகளுக்கு இந்த நிருபமும் எழுதப்பட்டது (3:1). இது ஒரு கடைசி நியமம். கடைசி நாளைப் பற்றிய எச்சரிப்பு (1:14; 2:1-22; 3:3) விலையேறப்பெற்ற விசுவாசத்தைப் பெற்ற விசுவாசிகளுக்கும், சந்தேகமின்றி பொந்து, கலாத்தியா, கப்பத்தோக்கியா, ஆசியா, பித்தினியா, தேசங்களிலுள்ள யூத மற்றும் புறஜாதி சபைகளுக்கும் (1 பேதுரு 1:1) எழுதியிருக்க வேண்டும்.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 67-68. தன்னுடைய கடைசி கால வாழ்க்கையில் ஒரு பிரிவுரை நிருபமாக இந்த நிருபத்தை பேதுரு எழுதினான் (1:12-14). நீரோ சக்ரவர்த்தியின் கால உபத்திரவத்தில் பேதுரு இரத்தச் சாட்சியாக மரித்தான் என்று யூசிபைஸ் என்ற ஆதிகால சபை சரித்திர ஆசிரியர் கூறுகிறார். (ஏறத்தாழ கி.பி. 67-68) இந்த நிருபம் இந்த இரண்டு ஆண்டுகளில் ஒன்றில் எழுதப்பட்டது.

மையக்கருத்தும் நோக்கமும்: தன்னுடைய ஊழியம் மற்றும் வாழ்க்கை காலத்திலும் வருகின்ற கள்ளப் போதகத்தின் அபாயத்தை அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரிக்கை செய்தது போல (2 தீமோத்தேயு) பேதுருவும் அபாயம் அதிகரிப்பதைக் குறித்து தீர்க்கதரிசிகளும் கர்த்தரும் அவருடைய அப்போஸ்தலர்களும் எச்சரித்தது போல எச்சரிக்கை செய்கிறார் (2:1; 3:1-3). சபைக்கு வரப்போகிற அபாயத்தையும் சிறப்பாக கள்ளப் போதகர்கள் அதிகரிப்பதையும் குறித்து எச்சரிக்கை செய்வது இந்த சிறிய நிருபத்தின் நோக்கமாக இருக்கிறது.

ஜீவனுக்கும் தேவபக்திக்கும் தேவையான எல்லாவற்றையும் தேவன் கொடுத்திருக்கிறார் என்று கூறிவிட்டு, கிறிஸ்துவில் முதிர்ச்சி அடைந்து வளரவும், சோம்பல் மற்றும் கனியில்லாமை இவைகளை அகற்றவும் கள்ளப் போதகர்களின் போதனைக்கு எதிராகத் தங்களை காக்கவும் பேதுரு தம்முடைய விசுவாசிகளுக்கு ஓர் உணர்ச்சி மிக்க வேண்டுகோளை விடுவிக்கிறார். இதற்குக் காரணம் என்னவென்றால், பூமியில் தன்னுடைய வாழ்நாள் குறுகியது என்று பேதுரு அறிந்திருந்தார். மேலும், கிறிஸ்துவின் சரீரம் உடனடியான ஆபத்தைச் சந்தித்தது (2:1-3) இவ்வாறாக பேதுரு அவர்களுக்கு நினைவூட்டவும் சிந்தனையைத் தூண்டவும் (1:13; 3:1-2) அவர்கள் அவருடைய போதனையை உறுதியாகப் பற்றிக்கொள்ளவும் (1:15) விரும்பினார். இந்த நிருபத்தை எழுதியவர்இந்த நிருபத்தை எழுதியவர்விசுவாசிகள் இரட்சகருடைய அறிவிலும், கிருபையிலும் வளர விசுவாசிகளை உற்சாகமூட்ட, இப்படியாகக் கூறுகிறார் (1:2-11; 3:18)

கள்ளப்போதகர்களை எவ்வாறு எதிர்த்து நிற்பது என்பதற்கு ஆலோசனை கூறும் பேதுரு தேவனுடைய வார்த்தையை உறுதியான அஸ்திபாரமாகக் கொள்ள வேண்டும் என்று சொல்லுகிறார் (1:12-21). கள்ளப்போதகர்களால் வரவிருக்கும் சில அபாயங்களைக் குறித்து எச்சரிக்கும் அவர் அவர்களுக்கு நியாயத்தீர்ப்பு நிச்சயம் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார் (2:1-22). இறுதியாக, கிறிஸ்துவின் வருகையின் நிச்சயத்தை வயுறுத்தி, தனது வாசகர்களுக்கு ஊக்கமளிக்கிறார் (3:1-16). இதோடுகூட பேதுரு இறுதியான அறைகூவலையும் விடுக்கிறார்,

ஆதலால் பிரியமானவர்களே, இவைகளை முன்னமே நீங்கள் அறிந்திருக்கிறபடியால், அக்கிரமக்காரருடைய வஞ்சகத்திலே நீங்கள் இழுப்புண்டு உங்கள் உறுதியிருந்து விலகி விழுந்துபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருந்து, நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள். அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென் (2 பேதுரு 3:17,18).

2 பேதுருவில் கிறிஸ்து: கிறிஸ்து தேவபக்திக்கும் வாழ்விற்கும் முக்கிய மூலாதாரமாக இருக்கிறதாக பேதுரு கூறுகின்றார். இதைக் கருத்தில் கொண்டு நான்கு முறை இயேசுவை கர்த்தரும் இரட்சகரும் என்றும் 14 முறை இயேசுவை கர்த்தர் என்றும் கூறுகிறார். மேலும் பரிசுத்த பர்வதத்தில் நடந்த மகிமையின் மறுரூபமாகுதலை பேதுரு குறிப்பிட்டு இயேசுவின் இரண்டாம் வருகையை எதிர்பார்க்கின்றார். அப்போது பேதுருவும் பிற இரண்டு சீடர்களும் பரிசுத்த பர்வதத்தில் கண்ட அந்தக் காட்சியைக் காணும் சிலாக்கியத்தை இந்த உலகம் முழுவதும் காணும்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **வாழ்த்துதல்கள் (1:1-2)**

2. **கிறிஸ்தவத் தன்மைகளை வளரச் செய்வது (1:3-21)**
   a. விசுவாச வளர்ச்சி (1:3-11)
      1:3-4 1:5-8 1:9-11
   b. விசுவாசத்தின் அடைப்படைகள் (1:12-21)
      1:12-15 1:16-18 1:19-21

3. **கள்ளப்போதகரின் நியாயத்தீர்ப்பு அல்லது வீழ்ச்சி (2:1-22)**
   a. அவர்களினால் வரும் ஆபத்தும் நடத்தையும் (2:1-3)
   b. அவர்களின் அழிவு அல்லது நியாயத்தீர்ப்பு (2:4-9)
   c. அவர்களின் குணாதிசயங்களின் விளக்கம் (2:10-22)

4. **எதிர்காலத்தைக் குறித்த திட்டமும், நம்பிக்கையும் (3:1-18)**
   a. கள்ளப்போதகரின் தவறான எண்ணம் (3:1-7)
      3:1-2 3:3-7
   b. கர்த்தருடைய நாளின் தாமதம் (3:8-9)
   c. கர்த்தரின் நாளைத் தொடர்ந்து அழிவு (3:10-13)
   d. வரப்போகும் ஆபத்தின் கண்ணோட்டத்தில் நமக்குத் தேவையான யுக்தி (3:14-18)

1 யோவான்
(கிறிஸ்து: தேவனுடைய அன்பு)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: இந்த நிருபத்தில் எழுதியவர் பெயர் காணப்படாவிட்டாலும், அப்போஸ்தலனாகிய யோவான் எழுதியதாக மரபுகள் சுட்டிக் காட்டுகின்றன. இரட்சகரை மிக நெருக்கமாய் அறிந்த ஒரு உண்மைச் சாட்சியாக இந்த நிருபத்தின் எழுத்தாளர் இருக்கிறார் (1:1-5).

இந்த நிருபம் முழுவதிலுள்ள வசனங்கள் யோவான் இதை விசுவாசிகளுக்காக எழுதினான் என்று குறிப்பிடுகின்றன. (2:1, 12-14, 19; 3:1; 5:13) ஆனால் யார் அந்த விசுவாசிகள் எங்கே வாழ்ந்தார்கள் என்று எங்கும் குறிப்பிடவில்லை. இது இந்த நிருபம் அநேக சபைகளுக்கு சுற்றறிக்கையாக எழுதப்பட்டதாக இருக்கலாம் என கூறுகிறது. யோவானின் கடைசி காலங்களில் எபேசு பட்டணத்திருந்தான் என்று ஆதி கிறிஸ்தவ எழுத்தாளர்கள் நம்பினதால் ஒருவேளை எபேசு பட்டணத்தைச் சுற்றி இருந்த சபைகளுக்கு எழுதியிருக்கலாம்.

எபேசு பட்டணம் இருந்த ஆசியா பகுதியில் (தற்போதுள்ள துருக்கி) 1 யோவான் நிருபம் பயன்படுத்தப்பட்டதாக ஆதி காலங்கள் உறுதிசெய்கின்றன. இந்தப் பகுதி முழுவதிலும் சிதறியிருந்த வெவ்வேறு சபைகளில் யோவான் ஊழியம் செய்ததாக அலெக்சாந்திரியாவின் கிளமண்ட் (முதல் நூற்றாண்டு போதகர்) குறிப்பிடுகிறார். எனவே ஆசியா மகாணங்களிலுள்ள சபைகளுக்கு 1 யோவான் அனுப்பப்பட்டது என்று அனுமானிக்கலாம்.[95]

எழுதப்பட்ட காலம்: கி.பி. 85-90. யோவானின் பிற நிருபத்தையும், இந்த நிருபத்தையும் தேதியிடுவது மிகக் கடினமாக இருக்கிறது. ஆனால் இந்த நிருபத்தின் அநேக வார்த்தைகளும் மையக் கருத்துகளும் யோவான் சுவிசேஷத்துடன் ஒத்து இருப்பதினால், இந்த நிருபம் யோவான் சுவிசேஷ புத்தகத்திற்குப் பிறகே ஆனால் கி.பி. 95-ல் டோமிசியன் (Domitian) சக்ரவர்த்தி செய்த கொடுமைகளுக்கு முன்பாக எழுதப்பட்டது என்று அனுமானிப்பதும் எழுதப்பட்டது என அனுமானிப்பது ஏற்றுக்கொள்வதாக இருக்கும். கி.பி. 85க்கும் 90க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த நிருபம் எழுதப்பட்டது என்பது ஒத்துக்கொள்ளக்கூடியதாகும்.

மையக்கருத்தும் நோக்கமும்: இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனிடம் ஐக்கியம் கொள்வது, இந்த புத்தகத்தின் மையக்கருத்தாக இருக்கிறது (1:3-7). அப்போது ஒருவேளை நாஸ்டிஸிசம் (Gnosticism) என்ற துர் உபதேசம் ஆரம்ப வடிவமாக இருந்திருக்கலாம், (பூலோகத்திலுள்ள யாவும் தீமையானது; ஒருவருடைய விடுதலை அறிவு மூலமாக வரும் என்ற போதனை) அதைக் கருத்தில் கொண்டே யோவான் இந்த நிருபத்தை எழுதினார். வெளிச்சமாகவும் அன்பாகவும் ஜீவனாகவும் உள்ள தேவனுடைய ஐக்கியத்தின் தன்மையை விளக்கும்படி யோவான் இந்த நிருபத்தை எழுதினான். தேவன் ஒளியாக (1:5), அன்பாக (4:8, 16), ஜீவனாக இருக்கின்றார் (1:1-2; 5:11-13). தேவனோடுள்ள ஐக்கியத்தில் நடப்பது என்பதனின் பொருள் தேவனுடைய நீதி, அன்பு, ஜீவன் இவைகளை உணர வெளிச்சத்தில் நடப்பது என்பது ஆகும். பிறகு இந்தப் புத்தகம் ஐக்கியத்தைக் குறித்த பல பரீட்சைகள் அல்லது ஆதாரங்களைக் கொடுக்கிறது. சிலர் இது இரட்சிப்புக்கான பரீட்சை என்று சொல்லுகிறார்கள். ஆனால் கள்ளப்போதகம் குறித்த எச்சரிப்பு, விசுவாசிகளின் இயல்பு இவைகுறித்த பின்னணியில் பார்க்கும்போது, இவை இரட்சகரை அறிந்து அவரோடு நெருக்கமான உறவுகொள்ளுவதைக் குறித்த பரீட்சைகளாகவே இருக்கின்றன. இந்த உறவின் மூலம் விசுவாசிகள் இரட்சகரின் மாற்றக்கூடிய வல்லமையை அனுபவிக்கிறார்கள்.

எப்படிப்பட்ட கள்ளப் போதகத்தை இந்தக் கிறிஸ்தவர்கள் எதிர்நோக்க வேண்டியிருந்தது என்பதைக் கண்டறிவது கடினமாகும். ஆனால் 1 யோவான் நிருபத்தின் பின்னணியைப் பார்க்கும்போது இயேசுவானவரின் மானிடப் பிறப்பு குறித்த மற்றும் பாவ நடத்தைகள் தேவனுடனுள்ள உறவைப் பாதிக்காது என்ற கள்ளப்போதகமே இங்கே குறிப்பிடப்படுகிறது என்பதை அறிகிறோம். யோவான் தன் "சிறு குழந்தைகளுக்கு" (2:1, 18, 28; 3:7, 18; 5:21) ஐந்து காரணங்களுக்காக இந்த நிருபத்தை எழுதினான். அவைகள் (1) உண்மையான ஐக்கியத்தில் முன்னேற (1:3); (2) பூரண சந்தோஷத்தை அனுபவிக்க (1:4); (3) உண்மையான ஐக்கியத்தின் வாயிலாக பரிசுத்த ஜீவியத்தில் முன்னேற (1:6-2:2); (4) துர்உபதேசத்தை தடுக்கவும் அவற்றிருந்து காக்கவும் (2:18-27); (5) இரட்சிப்பின் நிச்சயத்தைக் கொடுக்க (5:11-13).

1 யோவானில் கிறிஸ்து: விசுவாசிகளின் வாழ்க்கையில் இரட்சகருடைய இப்போதய ஊழியத்தையும், இயேசுவின் வருகையை எதிர்பார்ப்பதையும் இந்த புத்தகம் முக்கியப்படுத்துகிறது. இயேசுவின் இரத்தம் தொடர்ச்சியாக விசுவாசிகளின் பாவத்தை சுத்திகரிக்கிறது (1:7); தனிப்பட்ட பாவங்களையும் அநீதியையும் அறிக்கை செய்வதினால் சுத்திகரிக்கிறது (1:9). விசுவாசிகளுக்கு மாத்திரம் அல்லாமல் உலகத்திலுள்ள எல்லாருக்கும் இயேசு பயாக இருக்கிறார் என்றும் பிதாவுக்கு முன்பாக நீதிபரராக பரிந்து பேசுகிறவராக இருக்கிறார் என்றும் இந்த புத்தகம் வெளிப்படுத்துகிறது (2:1, 2). மாம்சத்தில் வந்த கிறிஸ்து இயேசு என்றும் (2:22; 4:2-3), ஞானஸ்நானம் மற்றும் சிலுவையைக் குறிப்பிடும் நீர் மற்றும் இரத்தத்திருந்தும் வந்தவர் என்றும் (5:6), அவரைக் காணும்பொழுது அவரைப் போல இருப்போம் என்றும் அவரின் வருகையையும் இந்த புத்தகம் வெளிப்படுத்துகிறது (2:28-3:3).

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை மற்றும் இந்த நிருபத்தின் நோக்கம் (1:1-4)**

2. **ஐக்கியத்திற்கு முக்கியமாக இருக்க வேண்டியவை (1:5-2:2)**
   a. வெளிச்சத்தில் நடத்தல் (1:5-7)
   b. பாவத்தை அறிக்கையிடல் (1:8-2:2)
      1:8-10 2:1-2

3. **ஐக்கியத்திற்கு ஏற்ற நடத்தை (2:3-27)**
   a. ஐக்கியத்தின் குணாதிசயம் - கிறிஸ்துவைப் போல் இருத்தல் (2:3-11)
      2:3-6 2:7-11
   b. ஐக்கியத்தின் கட்டளை - உலகத்தை சிநேகிக்காமல் இருத்தல் (2:12-17)
      2:12-14 2:15-17
   c. ஐக்கியத்தின் எச்சரிப்பு - அந்திக்கிறிஸ்துவுக்கு எதிராக தங்களைப் பாதுகாத்தல் (2:18-27)
      2:18-25 2:26-27

4. **ஐக்கியத்தின் குணாதிசயங்கள் (2:28-5:3)**
   a. நமது கண்ணோட்டத்தில் தூய்மை (2:28-3:3)
      2:28-29 3:1-3
   b. இயேசு மரித்ததினால் நீதியைச் செயல்படுத்துதல் (3:4-24)
      3:4-10 3:13-22
      3:11-12 3:23-24
   c. தேவ ஆவியை சோதித்தறிவது (4:1-6)
      4:1-3 4:4-6
   d. ஐக்கியத்தின் மாதிரி, இயேசு சிநேகித்தது போல் சிநேகிப்பது (4:7-5:3)
      4:7-14 4:15-21 5:1-3

5. **ஐக்கியத்தினால் பயன்கள் (5:4-21)**
   a. உலகத்தின்மேல் வெற்றி. (5:4-5)
   b. கிறிஸ்துவின் நம்பிக்கைக்குரிய சான்றுகளை உறுதிசெய்தல். (5:6-12)
   c. விசுவாசிகளின் இரட்சிப்பை உறுதிசெய்தல். (5:13)
   d. பதில் அளிக்கப்பட்ட ஜெபத்தை உறுதிசெய்தல். (5:14-17)
   e. தொடர்ந்து செய்கிற பாவத்திருந்து வெற்றி. (5:18-21)

2 யோவான்
(கிறிஸ்து: மாம்சமான தேவன்)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: பெயர் குறிப்பிடப்படாமல் இருந்தாலும், அப்போஸ்தலனாகிய யோவான் இந்த நிருபத்தை எழுதினான் என்று தெரிகிறது. 1 யோவான் நிருபம் மற்றும் யோவான் சுவிசேஷ புத்தகங்கள் தன்னை "மூப்பன்", என்றே குறிக்கின்றான். இதே மாதிரியான முகவுரையை 3 யோவானின் எழுத்தாளர் பயன்படுத்துகிறான். "மூப்பனாக" என்று மட்டும் தன்னை அறிமுகப்படுத்திக்கொள்வதால் அவர் இந்த நிருபத்தை வாசிப்பவர்களுக்கு நன்கு அறிமுகமானவராக இருக்க வேண்டும் என்று தெரிவிக்கிறது.

இந்தப்புத்தகத்தையும் யோவானே எழுதினான் என்று கருதப்படுவதால் இதற்கு "இரண்டாம் யோவான்" என்று தலைப்பு கொடுக்கப்பட்டது.

"தெரிந்துகொள்ளப்பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவளுடைய பிள்ளைகளுக்கும்" இந்த நிருபம் எழுதப்பட்டாலும் (1:1, 4–5), இவர்கள் யார் என்று துல்யமாக நிலைநாட்டப்படவில்லை.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 85–90. இந்த நிருபத்திற்கு தேதியைக் குறிப்பது கடினம், 1 யோவான் எழுதப்பட்ட அதே சமயத்தில் (கி.பி. 85–90) இந்த கடிதம் எழுதப்பட்டிருக்கலாம் என இந்த நிருபத்தின் பொருளும் சூழ்நிலையும் அனுமானிக்கிறது. மேலே குறிக்கப்பட்ட ஒற்றுமைகள் இதை குறிக்கிறது (1 யோவானில் காலத்தின் விளக்கத்தை காண்க).

மையக்கருத்தும் நோக்கமும்: தேவனுடைய கட்டளையின்படியும் அப்போஸ்தலர் போதித்த சத்தியத்தின்படியும் இந்த நிருபத்தை வாசிப்பவர்கள் நடக்க வேண்டும் என்ற யோவானின் ஆதங்கம் இந்த நிருபத்திற்கு மையக்கருத்தாக இருக்கிறது (1:4–6). ஏனெனில் ***"மாம்சத்தில் வந்த கிறிஸ்துவை அறிக்கை பண்ணாத அநேக வஞ்சகர்கள் இந்த உலகத்தில் தோன்றியிருக்கின்றனர்."*** (1:7) கிறிஸ்துவின் போதகத்தில் நிலைத்திருக்க மறுத்து சத்தியத்தை விட்டு விலகியவர்களின் தவறான வஞ்சத்திருந்து விசுவாசிகளைப் பாதுகாக்க, யோவான் இந்த நிருபத்தை எழுதினார் (1:9). இவைகளிருந்து இரண்டு நோக்கங்களைக் காணலாம். (1) இந்த நிருபத்தை வாசிப்பவர்கள் தங்களின் பூரணமான வெகுமதியை இழந்து போகாமல் இருக்கவும் (1:9), (2) கள்ளப் போதகர்களை வாழ்த்தாமலும், அவர்களை சபையிலும், வீடுகளிலும் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க விசுவாசிகளுக்கு தெளிவான போதனை கொடுக்கவும் இதை எழுதினார். அவர்கள் வீட்டுச் சபைகளில் அனுமதிக்கப்படுவதையும், சத்தியத்தைப் போதிக்கிறவர்கள் என்று ஏற்றுக்கொள்ளப்படுவதையும் யோவான் விரும்பவில்லை. அவர்களுக்கு விரோதமாக செயல்படவோ, அவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க மறுக்கவே யோவான் இதை எழுதவில்லை.

2 யோவானில் கிறிஸ்து: 1 யோவானைப் போல் 2 யோவானும் தேவனுடைய மறுஉருவை எடுத்த இயேசுவின் சத்தியத்தைப் பாதுகாக்க எழுதப்பட்டதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்து மாம்சத்தில் வந்தார் என்பதை மறுதக்கின்றவர்கள் கள்ளப்போதகர்கள் என்று நிரூபிக்க இந்த நிருபம் எழுதப்பட்டது.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை மற்றும் வாழ்த்துதல் (1:1–3)**
2. **சத்தியத்தில் நடப்பதற்காக பாராட்டு (1:4)**
3. **ஒருவரிலொருவர் தொடர்ந்து அன்பாயிருக்கக் கட்டளை (1:5–6)**
4. **கள்ளப் போதகர்களுக்கு எதிராக போதனையும் எச்சரிப்பும் (1:7–11)**
5. **முடிவுரையும் கடைசி வாழ்த்துதல்களும் (1:12–13)**

3 யோவான்
(கிறிஸ்து: அவரது பெயர்)

எழுதியவரும், புத்தகத்தின் பெயரும்: இந்த நிருபத்திற்கும் அப்போஸ்தலனாகிய யோவானே எழுத்தாளனாக இருக்கின்றான். 2 யோவான் மற்றும் 3 யோவான் எழுத்தாளர் தன்னை "மூப்பனாக" குறிப்பிடுகிறான். சத்தியத்தின்படி அன்பு கூறுகிற (1:1), மற்றும் சத்தியத்தில் நடக்கிற (1:4) ஆகிய ஒற்றுமையான சொற்றொடர் இரண்டு நிருபங்களிலும் அதே வசனங்களில் காணப்படுகிறது.

இந்த நிருபம் தெளிவாக யோவானின் மிகவும் தனிப்பட்ட நிருபமாக இருக்கிறது. காயு என்பவன் எதிர்கொண்ட சபை பிரச்சனையைக் குறித்து பிரியமுள்ள "காயுவுக்கு" இந்த நிருபம் எழுதப்பட்டது (1:1). யோவான் தன்னுடைய கடைசி காலத்தில் ஊழியம் செய்த சிறிய ஆசியாவின் சபைகளில் இந்த காயு நன்கு அறியப்பட்டவன் என்று மேலே உள்ள விளக்க உரை கருதுகிறது. காயு என்ற பெயர் புதிய ஏற்பாட்டில் நன்கு பழக்கமுடைய பெயராக இருக்கிறது. ரோமர் 16:23ல் (கொரிந்து சபையின் காயு) அப்போஸ்தலருடைய நடபடிகள் 19:29 (மக்கேதோனியாவின் காயு) மேலும் அப்போஸ்தலர் 20:4 (தெர்பை காயு) இந்த வசனங்களில் காயுவு என்ற பெயர் தோன்றுகிறது. ஆனால் இந்த மனிதர்களுக்கும் யோவானுக்கும் எந்த தொடர்பும் உறுதிப்படுத்தப்பட முடியவில்லை.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 85. 1 யோவான் மற்றும் 2 யோவான் இவைகளின் ஒற்றுமை கி.பி. 85-90க்கு இடைப்பட்ட காலத்தில், மூன்று யோவானும் எழுதப்பட்டிருக்கும் என கருத ஏதுவாகயிருக்கிறது.

மையக்கருத்தும் நோக்கமும்: சுற்றித் திரிந்து ஊழியம் செய்பவர்களுக்கு (அருட்பணியாளர்களுக்கு) ஆதரவளிப்பதைப் பற்றியும், குறிப்பாக அவர்கள் அந்நியராக இருக்கும்போது அவர்களை உபசரிப்பதைப் பற்றியும் யோவான் காயுவுக்கு எழுதுகிறார். காயுவின் நடத்தையையும், தியோத்திரேப்பு என்பவனின் நடத்தையையும் ஒப்பிட்டு யோவான் தனது போதனையைக் கொடுக்கிறார். சத்தியத்தில் நடக்கும் காயு கிறிஸ்தவ அன்பைச் தாராளமாகக் காட்டிவருகிறான். ஆனால் தியோத்திரேப்பு சத்தியத்தில் நடக்காமல் சுயநலத்தோடு யோவான் சொன்னதை புறக்கணிக்கிறான். அவன் சபையில் முதன்மையாக இருப்பதையே விரும்புகிறான் (1:9).

இந்த நிருபத்தில் அநேக வேறுபட்ட நோக்கங்கள் உள்ளன: (1) காயுவுவை வாழ்த்த (1:1-6அ); (2) யோவான் அனுப்பிய கிறிஸ்தவ ஊழி யர்களுக்கு தொடந்து உதவும்படி உற்சாகமூட்டவும் போதிக்கவும் (1:6b-8); (3) தியோத்திரேப்பு என்பவனின் சுயநலத்தைக் கண்டிக்க (1:9-11); (4) தேமேத்திரியு என்பவனுக்கு போதிக்க (1:12); (5) அங்கு செல்லவும் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும் தன் விருப்பத்தையும் எண்ணத்தையும் காயுவுக்குத் தெரிவிக்குமாறு (1:10a, 13-14) யோவான் இந்த கருத்தை எழுதினான்.

3 யோவானில் கிறிஸ்து: இயேசு கிறிஸ்துவின் பெயர் இந்த நிருபத்தில் நேரடியாகக் குறிப்பிடவில்லையென்றாலும் ***"அவருடைய நாமத்தினிமித்தம் புறப்பட்டு போனார்கள்"*** என்ற வாக்கியத்தில் இயேசு குறிப்பிடப்படுகிறார். இது சந்தேகமில்லாமல் கர்த்தராகிய இயேசுவிற்காக செய்யப்பட்ட ஊழியத்தைக் குறிக்கின்றது. (அப்போஸ்தலருடைய நடபடிகளின் 5:40-41 புத்தகம் 5:41ல் உள்ள கிரேக்க மொழியின் அமைப்பு). இங்கேயும் பயன்படுகிறது. பவுல் இதற்கு ஒத்த சொற்றொடரை ரோமர் 1:5ல் பயன்படுத்தினான். ***"அவருடைய (கிறிஸ்து) நாமத்தினிமித்தம் உங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டன"*** என 1 யோவான் 2:12ல் யோவான் எழுதுகிறான். தேவனுடைய ஒரே பேறான குமாரனிடத்தில் (யோவான் 1:12; 3:18) விசுவாசமாய் இருப்பதைப் பற்றி யோவான் சுவிசேஷமும் குறிப்பிடுகிறது.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **வாழ்த்து அல்லது முகவுரை (1:1)**

2. **காயுவுக்கு பாராட்டு (1:2-8)**
   a. அவனுடைய பக்தி (1:2-4)
   b. அவனுடைய தாராள மனப்பான்மை (1:5-8)

3. **தியோத்திரேப்பு கடிந்துக் கொள்ளப்படுதல் (1:9-11)**
   a. அவனது நோக்கம் (1:9)
   b. அவனுடைய சுயநல நடவடிக்கைகள். (1:10-11)

4. **தேமேத்திரியுவைப் பாராட்டுதல் (1:12)**

5. **முடிவுரை (1:13-14)**

யூதா
(கிறிஸ்து: மனித வர்க்கத்தின் பாதுகாப்பு)

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: இந்த நிருபத்தை எழுதியவன் தன்னை யூதா என்று குறிப்பிடுகின்றான் (1:1). கிரேக்க மொழியில் யூதாஸ் என்றிருக்கிறது. இயேசு கிறிஸ்துவை காட்டிக் கொடுத்த யூதாஸிருந்து யூதாவை வேறுபடுத்திக்காட்ட, மரபு வழி ஆங்கில மொழி பெயர்ப்பு யூதா என்று குறிப்பிடுகிறது. இயேசு கிறிஸ்துவின் அடிமை ஊழியன் என்றும் யாக்கோபின் சகோதரன் என்றும் இந்த நிருபத்தை எழுதியவன் தன்னைக் குறிப்பிடுகின்றான். மத்தேயு 13:55 மற்றும் மாற்கு 6:3ல் இயேசுவின் சகோதரனாக யூதா குறிப்பிடப்படுகிறான்.

இவைகளைக் கவனிப்பது உதவியாக இருக்கும்:

> யூதா இயேசுவின் சகோதரனாக இருந்தாலும், அவர் தாழ்மையோடு மற்றச் சகோதரனாகிய யாக்கோபின் பெயருடன் தன்னை இணைத்துக் குறிப்பிடுகிறார். முதலாவது தான் இயேசுகிறிஸ்துவின் அடிமை என்று கூறுவதிருந்து, தனது சரீரப்பிரகாரமான தொடர்பைச் சுட்டிக்காட்ட அவர் விரும்பவில்லை என்பது தெரிகிறது. இதே வேளையில் அவர் தான் யார் என்பதைக் கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டியிருந்தது. ஏனென்றால் முதலாம் நூற்றாண்டில் யூதா என்ற பெயர் பொதுவானதாக இருந்தது (இயேசுவின் சீஷர்களில் இருவரும்கூட இதே பெயரைப் பெற்றிருந்தார்கள்) அவ ரைக் காட்டிக்கொடுத்தவனையும் சேர்த்து அதே பெயர்தான்). தன்னை வேறுபடுத்திக் காட்டும்படியாக யூதா தன்னை யாக்கோபின் சகோதரன் என்று அறிமுகம் செய்துகொள்ளுகிறார்.[96]

ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு மாத்திரம் அல்லாமல் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் யூதா எழுதியது போல தோன்றுகிறது. ***"பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசுகிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களும்"*** (1:1) என்று வாசிப்பவர்களை இந்த நிருபம் குறிப்பிடுகிறது பின்பு அவர் "பிரியமானவர்களே" அல்லது "பிரிய நண்பர்களே" என்று குறிப்பிடுகிறார் (1:3).

எழுதப்பட்ட காலம்: கி.பி. 70-80. யூதா நிருபம் மற்றும் 2 பேதுரு நிருபம் இவைகளின் பொருள் ஒன்றாக இருந்தாலும் ஒரு பெரிய வித்தியாசம் என்னவென்றால் பேதுரு ''கள்ளப் போதகர்கள் வருவார்கள்'' என்று எச்சரிக்கையில் (2 பேதுரு 2:1). ***"பக்தியற்றவர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறரார்கள்"*** என யூதா குறிப்பிடுகிறான். (1:4) 2 பேதுரு நிருபத்தில் இந்தப் பிரச்சினை இனிமேல் வரப்போகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் யூதா நிருபத்தில் அது இப்போது நடப்பதுபோலக் கூறப்பட்டுள்ளது. எனவே2 பேதுரு எழுதப்பட்டுச் சிறிதுகாலத்துக்குப் பிறகு யூதா எழுதப்பட்டிருக்கலாம். 2 பேதுரு நிருபம் கி. பி. 67-68 ஆண்டுகளிலும், யூதா நிருபம் 70-80 ஆண்டுகளிலும் எழுதப்பட்டிருக்கலாம்.

மையக்கருத்தும் நோக்கமும்: யூதா நம்முடைய பொதுவான இரட்சிப்பை குறித்து எழுத நினைத்தார். ஆனால் பலவிதமான துர் உபதேசங்கள், சபையை பயமுறுத்திக் கொண்டு இருந்தபடியாலும் நோஸ்டிக்ஸ் (Gnostics) என்பவர்களால் சபைக்குள் இரகசியமாக அறிமுகப்படுத்தப்பட்டக் கள்ளப் போதகத்திற்கு எதிராக விசுவாசத்தைக் காத்துக் கொள்ள அவர்களை உற்சாகப்படுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டான். மறைஞானக் கோட்பாட்டைப் பின்பற்றியவர்கள் எல்லாம் பொருட்கள் தீமையானவை என்றும், ''ஆவிக்குரிய'' எல்லாம் நல்லது என்றும் கருதினார்கள். ஆகவே ஆவிக்குரிய வாழ்க்கைக்கு முகக்கியத்துவம் கொடுத்து, மாம்சமானது எதையும் செய்யும்படி அனுமதித்தார்கள். எனவே எல்லா வகையிலும் நல்லொழுக்கத்தை மீறியவர்களானார்கள்.[97]

இதிருந்து யூதா நிருபத்தில் இரண்டு முக்கிய நோக்கங்களை காணலாம். (1) விசுவாசிகளைக் களங்கப்படுத்த சபையில் உள்ள ஒழுக்கமற்ற மக்களின் நடத்தையை கண்டனம் செய்ய (2) சபைக்குக் கொடுக்கப்பட்ட அப்போஸ்தல சத்தியத்திற்காக போராடவும், விசுவாசத்தில் தொடர்ந்து வளரவும், நிலைத்து நிற்கும்படி விசுவாசிகளுக்கு ஆலோசனை அளிப்பது.

யூதாவில் கிறிஸ்து: கிறிஸ்துவில் உள்ள விசுவாசிகள் பாதுகாப்பு (1:24) மற்றும் இயேசுவின் வருகையின் உறுதியில் (1:21), அவர் கொடுக்கும் நித்திய வாழ்வில் (1:21) குறித்து இந்த நிருபம் நம்முடைய கவனத்தை திருப்புகிறது. தேவனுடைய சந்ததியில் சேரும் சிலாக்கியத்தை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கொடுக்கிறார். (1:25)

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **வாழ்த்துதல்கள் மேலும் நோக்கம். (1:1-4)**

2. **கள்ளப் போதகர்களைக் காட்டுதலும், விளக்க உரையும். (1:5-16)**
    a. அவர்களின் கடந்தகால நியாயத்தீர்ப்பு. (1:5-7)
    b. அவர்களின் தற்கால குணாதிசயங்கள். (1:8-13)
    c. அவர்களின் எதிர்கால நியாயத்தீர்ப்பு. (1:14-16)

3. **விசுவாசிகளுக்குப் புத்தி கூறுதலும், பாதுகாப்பும். (1:17-23)**

4. **ஆசீர்வாதம். (1:24-25)**

பகுதி 4
தீர்க்கத்தரிசன புத்தகம்

வெளிப்படுத்தின விசேஷம்
(கிறிஸ்து: மறுபடியும் வருகிறவர்)

அறிமுகம்: வெளிப்படுத்தின விசேஷம் என்ற இந்த புத்தகத்தோடு, மனிதனுக்கு தேவனால் வெளிப்படுத்தப்பட்ட வேதாகமத்தின் முடிவும், நிறைவுமிருக்கிறது. ஆதியாகமம், துவக்கத்தின் புத்தகமாக இருப்பதைப் போல, வெளிப்படுத்தின விசேஷம் நிறைவின் புத்தகமாயிருக்கிறது. அது கடைசிகால நிகழ்ச்சிகளை ஆண்டவரின் வருகை, அவரது கடைசிகால ஆட்சி மற்றும் நித்திய நிலை ஆகியவற்றை விவரிக்கிறது. வேதாகமத்தில், பரலோகமும், பூலோகம், பாவம், அதனால் வரும் சாபமும், துக்கமும், மனிதனும் அவனுடைய இரட்சிப்பும்; சாத்தான் அவனுடைய வீழ்ச்சியும், தண்டனையும்; இஸ்ரவேலர் அவர்களுடைய தெரிந்தெடுக்கப்படுதல்; ஆசீர்வாதமும் கட்டளையும்; தேசங்கள்; பாபிலோனும் அவற்றின் தத்துவமும்; ராஜ்ஜியங்களும் ராஜ்ஜியமும் போன்ற மிகப் பெரிய கருத்துக்கள் அறிமுகம் செய்யப்பட்டு, வளர்ச்சியடைய செய்யப்பட்டுள்ளன. கடைசியாக இவை யாவும் வெளிப்படுத்தின விசேஷத்தில் நிறைவேற்றப்பட்டு தீர்வு காணப்பட்டுள்ளன. சுவிசேஷங்களும் நிருபங்களும் இவை ஒன்றோடொன்று சேரும்படி இழுக்கின்றன, ஆனால் வெளிப்படுத்தலேயே இவை சேர்ந்திருக்கின்றன.

நாம் இதை கீழ்கண்டவாறு கொடுக்கலாம்:

வெளிப்படுத்தின விசேஷம்: வேதத்தின் நிறைவு

பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள்	
பரலோகமும் நரகமும் →	வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம்
மனிதன் - படைப்பு, வீழ்ச்சி, இரட்சிப்பு →	
பாவம் - காரணம், சாபம், துக்கம் →	
சாத்தான் - குணம், வீழ்ச்சி, அழிவு →	
தேசங்கள் - கீழ்ப்படியாமை, மதம் →	
இஸ்ரவேல் - தெரிந்தெடுப்பு, ஆசீர்வாதங்கள், கீழ்படுத்துதல் →	
வாக்குத்தத்த இரட்சகர் - பணியும் ஆளுகையும் →	
இராஜ்யம் - வாக்குத்தத்தங்கள், திட்டம் →	

எழுதியவரும் புத்தகத்தின் பெயரும்: இந்தப் புத்தகத்தின் பிரகாரம் இந்த நிருபத்தை எழுதியவனின் பெயர் யோவான் (1:4, 9, 22:8). இவர் ஒரு தீர்க்கதரிசி (22:9) மேலும் இந்த நிருபம் எழுதப்பட்ட சிறிய ஆசியா சபைகளால் நன்கு அறியப்பட்ட ஒரு தலைவராக இருந்தான் (1:4).

மரபின்படி, இந்த யோவான் இயேசுவின் சீடர்களின் ஒருவனாகிய அப்போஸ்தலன் யோவானாக குறிப்பிடப்படுகிறான். இந்த புத்தகத்தின் தீர்க்கதரிசன நடை யோவான் சுவிசேஷத்தின் நடையிருந்து வித்தியாசப்படுகிறது.

எழுதப்பட்ட காலம்: கி.பி. 96. டோமிசியன் என்ற பேரரசனுடைய ஆட்சிக் காலத்தில், இப்புத்தகம் எழுதப்பட்டது. மேலும், அலெக்சாந்திரி மற்றும் யூஸிபியசை சேர்ந்த கிளமண்ட் போன்ற ஆதிகால சபை எழுத்தாளர்கள் உறுதிப்படுத்துவதால், வேத வல்லுநர்களும் இந்த நிருபம் கி. பி. 81 – 96க்கு இடையில் இந்தக் காலத்தில்தான் எழுதப்பட்டது என்று நம்புகின்றனர். எனவே இது யோவானின் சுவிசேஷம் மற்றும் நிருபங்களுக்கு (1, 2 மற்றும் 3 யோவான்) சற்றுப் பின்னால் புதிய ஏற்பாட்டில் கடைசியாக எழுதப்பட்ட நூலாக இருக்கிறது.

மையக்கருத்தும் நோக்கமும்: வெளிப்படுத்தின விசேஷத்தில் முக்கியமான கருப்பொருள் என்னவென்றால், சாத்தான் அவனது உலகளாவிய அமைப்புகள் மூலம் ஏற்படுத்திய தீய சக்தியுடன் வரப்போகும் போராட்டத்தைப் பற்றியும், ஆயிரம் வருட அரசாட்சி மற்றும் நித்தியத்தில் (வெளிப்படுத்தல் 20–ல் வரும் 1,000 ஆண்டுகள்), தம்முடைய ராஜ்ஜியத்தை நிறுவும்படி தேவன் இந்த எதிரிகளை மேற்கொள்வது பற்றியும் இந்த புத்தகத்தில் காண்கிறோம்.

உலகத்திலுள்ள தீமையின் ஆதாரம் பற்றியும், பிசாசின் தன்மையைப் பற்றியும் யோவானுக்குக் கொடுக்கப்பட்ட தரிசனங்களின் மூலமாக தீமைக்கு எதிரான போராட்டம் அவருடைய வாசகர்களுக்கும், அவரைக் கேட்டவர்களுக்கும் எடுத்துக் காட்டப்படுகிறது. யூதா கோத்திரத்துச் சிங்கமும், தாவீதின் கிளையுமானவர் இந்தச் சக்திகளுக்கு எதிராக வெற்றிபெறுவதையும் வெளிப்படுத்தல் காட்டுகிறது. இந்தச் சிங்கமே அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியாகவும் இருக்கிறார். ஆனாலும் ஜீவனோடிருக்கும் அவர் தேவனுக்கு விரோதமாகக் கலகம்செய்யும் உலகத்தின்மீது நியாயத்தீர்ப்பைக் கொண்டுவருகிறார்.

அவரவருடைய வேலையின்படி இந்தப் புத்தகத்தில் அநேக கதா பாத்திரங்கள் உள்ளனர். முதல் இயேசு கிறிஸ்து, பின்பு இந்த புத்தகத்தை எழுதிய யோவான், இரண்டு சாட்சிகள், கள்ளத் தீர்க்கதரிசிகள், கடருந்து ஏறிவந்த மிருகம், கடைசியாக தேவனோடு திரும்பும் மணவாட்டியாகிய சபை.

வெளிப்படுத்தின விசேஷத்தில் கிறிஸ்து: வெளிப்படுத்தின விசேஷ புத்தகம் உண்மையாகவே "இயேசு கிறிஸ்துவின் வெளிப்படுத்தலாக" இருப்பதால், கிறிஸ்துவின் வல்லமை மற்றும் இந்த உலகத்தை நியாயந்தீர்க்கும் அவரது உரிமை (5:1–19:21). சபையின் மேல் அவரது அதிகாரம் (2:1–3:22), மகிமை, ஞானம், வல்லமை (1:1–20) இவைகளை இந்தப் புத்தகம் வெளிப்படுத்துகிறது. இது இயேசுவின் வெளிப்படுத்தலாக இருப்பதால், அவரைப் பற்றிய அநேக தலைப்புகளைக் காணலாம். இயேசு கிறிஸ்து (1:1); உண்மையுள்ள சாட்சி, மரித்தோரிருந்து உயர்ந்த முதற்பலன், பூமியிலுள்ள அரசர்களை ஆளுபவர் (1:5); முதலும் முடிவும் (1:17); ஜீவிக்கிறவர் (1:18); தேவகுமாரன் (2:18); உண்மையும் பரிசுத்தமும் (3:7); ஆமென், விசுவாச மற்றும் உண்மை சாட்சி, தேவனுடைய சிருஷ்டிப்புக்கு ஆதியுமாக இருப்பவர் (3:14); யூத குலத்து சிங்கம்; தாவீதின் வேர் (5:5); ஆட்டுக்குட்டி (5:6); உண்மையும் சத்தியமுள்ளவர் (19:11); தேவனுடைய வார்த்தை (19:13); கர்த்தாதி கர்த்தர் இராஜாதி ராஜா (19:16); அல்பா மற்றும் ஒமெகா (22:13); பிரகாசிக்கின்ற விடிவெள்ளி (22:16); கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (22:21) என்பவைகளாக இந்த புத்தகத்தில் இயேசு கிறிஸ்து விளக்கப்படுகிறார்.

தனிப்பட்ட ஆய்வு: சுருக்கக் குறிப்பு

1. **முகவுரை (1:1-8)**
   1:1-3 | 1:4-8

2. **கடந்த காலக் காரியங்கள். (1:9-20)**
   1:9-11 | 1:12-16 | 1:17-20

3. **நிகழ்காலக் காரியங்கள். (2-3)**
   a. எபேசுக்கு செய்தி. (2:1-7)
   b. சிமிர்னாவுக்கு செய்தி. (2:8-11)
   c. பெர்கமுவுக்கு செய்தி. (2:12-17)
   d. தீயத்தீராவுக்கு செய்தி. (2:18-29)
   e. சர்தைக்கு செய்தி. (3:1-6)
   f. பிலதெல்பியாவுக்கு செய்தி. (3:7-13)
   g. லவோதிக்கேயாவுக்கு செய்தி. (3:14-22)

4. **வரப்போகிற காரியங்கள். (4:1-22:5)**
   a. உபத்திரவ காலம் (4:1-19:21)
      1) பரலோக சிங்காசனம் (4:1-11)
         4:1-4 | 4:5-11
      2) ஏழு முத்திரிக்கப்பட்ட புத்தகம் மற்றும் ஆட்டுகுட்டியாக இருக்கின்ற சிங்கம் (5:1-14)
         5:1-5 | 5:6-10 | 5:11-14
      3) முத்திரிக்கப்பட்ட நியாயத்தீர்ப்பு (6:1-17)
         6:1-2 | 6:5-6 | 6:9-11
         6:3-4 | 6:7-8 | 6:12-17
      4) ஒரு இடைவேளை உபத்திரவ காலத்தில் மீட்கப்பட்டவர்கள் (7:1-17)
         7:1-3 | 7:9-12
         7:4-8 | 7:13-17
      5) முதல் நான்கு எக்காளத் தொனி நியாயத்தீர்ப்பு (8:1-13)
         8:1-2 | 8:8-9 | 8:13
         8:3-5 | 8:10-11
         8:6-7 | 8:12
      6) ஐந்து மற்றும் ஆறாவது எக்காளத் தொனி மேலும் முதல் இரண்டு கதறுதல்கள் (9:1-21)
         9:1-6 | 9:12 | 9:20-21
         9:7-11 | 9:13-19
      7) தூதனும் சிறு புத்தகமும் (10:1-11)
         10:1-7 | 10:8-11
      8) தேவாலயம், இரண்டு சாட்சிகள், மேலும் ஏழாவது எக்காளத் தொனி (11:1-19)
         11:1-6 | 11:11-13 | 11:15-18
         11:7-10 | 11:14 | 11:19
      9) தூதனின் போராட்டம் (12:1-17)
         12:1-2 | 12:5-6 | 12:10-12
         12:3-4 | 12:7-9 | 12:13-17

10) மிருகமும் கள்ளத் தீர்க்கதரிசியும் (13:1-18)

13:1-6
13:7-10
13:11-18

11) சிறப்பு அறிவிப்புகள் (14:1-20)

14:1-5
14:6-7
14:8
14:9-12
14:13
14:14-16
14:17-20

12) கடைசியாக உள்ள 7 வாதைகளுக்கு முகவுரை (15:1-8)

15:1
15:2-4
15:5-8

13) கோபக் கலச நியாயத்தீர்ப்பு (16:1-21)

16:1
16:2
16:3
16:4-7
16:8-9
16:10-11
16:12
16:13-16
16:17-21

14) சமய பாபிலோனின் நியாயத்தீர்ப்பு (17:1-18)

17:1-7
17:8-14
17:15-18

15) வியாபார பாபிலோனின் நியாயத்தீர்ப்பு (18:1-24)

18:1-3
18:4-8
18:9-10
18:11-20
18:21-24

16) இயேசுவின் இரண்டாம் வருகை (19:1-21)

19:1-4
19:5-6
19:7-8
19:9-10
19:11-16
19:17-18
19:19-21

b. இயேசுவின் ஆளுகையும், ஆயிர வருட வெள்ளைச் சிங்காசனமும் (20:1-15)

1) சாத்தான் கட்டப்படுதல் (20:1-3)
2) பரிசுத்தர்கள் உயிரோடு எழுதல் (20:4-6)
3) முரட்டாட்டம் செய்யும் பாவிகள் (20:7-9)
4) சாத்தானின் அழிவு (20:10)
5) பாவிகளுடைய நியாயத்தீர்ப்பு (20:11-15)

c. நித்திய நிலை (21:1-22:5)

1) புதிய எருசலேம் இறங்கி வருதல் (21:1-8)

21:1-4
21:5-8

2) புதிய எருசலேமைப் பற்றிய விளக்கம் (21:9-27)

21:9-14
21:15-21
21:22-27

3) புதிய எருசலேமிலுள்ள மகிழ்ச்சி (22:1-5)

d. முடிவுரை (22:6-21)

22:6
22:7
22:8-9
22:10-11
22:12-13
22:14-15
22:16
22:17
22:18-19
22:20
22:21

அத்தியாயம் 4

வியாக்கியானம் செய் வதின் அடிப்படை கொள்கைகள்

அறிமுகம்

அதிகாரம் நான்கு, நான்கு அடிப்படை விதிகளையும் பதினைந்து அடிப்படை வியாக்கியானக் கொள்கைகளையும் அறிமுகப் படுத்த வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தில், விதி என்பது தேவனுடைய வசனங்களைப் படிக்கும் எல்லா சமயத்தி லும் கவனிக்கப்பட வேண்டிய, நிலையான வழிகாட்டியாகும். கொள்கை என்பது (விதியில் உள்ள ஒன்று அதன் உபயோகத்திற்கு முக்கியமானது. எனினும் அதை எல்லா நேரத்திலும் பயன்படுத்த வேண்டும் என்ற அவசியம் இல்லை. இந்த அதிகாரத்தைத் தொடர்ந்துபடிக்கும் பொழுது எங்கே, எப்படி இந்த அதிகாரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வெவ்வேறான கொள்கைகளை எங்கே - எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதை மாணவர்கள் புரிந்துகொள்வர்.

சரியான வேத வசனத்தின் வியாக்கியானம் என்பது வாழ் நாள் முழுவதும் முயற்சிக்கின்ற ஒன்றாக இருக்கிறது. ஒரு மனிதன் வேதத்தை திறந்து சில நிமிடங்களில் ஒவ்வொரு வேத பகுதியின் அர்த்தம் என்ன என்பதை புரிந்து கொள்ள ஒரு சூத்திரமும் இல்லை. இதனால் மாணவன் ஏமாற்றம் அடைந்து சத்தியத்தைத் தேடுவதிருந்து விலகி கூடாது! நாம் வேதத்தைப் படிக்கும்போது பரிசுத்தாவியானவரின் உதவியை நாட வேண்டும் என்றே (1 கொரிந்தியர் 3:10-16) சில கடினமான காரியங்களை தேவன் வேதாகமத்தில் கொடுத்துள்ளார். சில வேத பகுதிகள் எளிதாக புரிந்துகொள்ளுவதாக இருக்கும்பொழுது பிற சில பகுதிகள் மறுமையில் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக் கும் (1 கொரிந்தியர் 13:12).

ஒரு சூத்திரத்தினால் வேத வசனங்கள் வியாக்கியானம் செய்யப்படக்கூடுமானால் அவிசுவாசிகளுங்கூட வேத வசன வியாக்கியானம் செய்ய முடியும். நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியின் முன்னேற்றத்தின் ஒரு பகுதி வேத வசனத்தைப் படிப்பதும் தேவனை தேடு வதும் ஆகிய இவைகளே தேவனுடைய விருப்பமாக இருக்கிறது (2 தீமோத்தேயு 2:15). தயவு செய்து, இந்த கொள்கைகளையும், விதி களையும் முக்கிய வழிகாட்டியாகப் பயன்படுத்துங்கள். ஆனால் எல்லா சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிற பரிசுத்தாவியானவரைச் சார்ந்திருங்கள் (யோவான் 16:13).

நாம் படிக்கப் போகின்ற விதிகளையும் கொள்கைகளின் சுருக்கத்தையும் கீழே காணலாம்:

விதி ஒன்று: எல்லா வேத வசனங்களையும் ஆராய்ந்து கிறிஸ்து இயேசு மற்றும் தேவன் பற்றிய உண்மைகளைக் கண்டுபிடிக்க வகைதேடுங்கள்

A. கொள்கை ஒன்று: தேவனுடைய முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளுதல்
B. கொள்கை இரண்டு: கிறிஸ்து வெளிப்பட்ட விதத்தை தேடுங்கள்

விதி இரண்டு: தெளிவான பகுதிகளை உங்களின் வழிகாட்டியாக பயன்படுத்தி, உண்மைகளைப் புரிந்துகொள்ள நாடுதல்

A. கொள்கை மூன்று: வெளிப்பாடுகள் படிப்படியான முன்னேற்றத்தை உணருதங்கள்
B. கொள்கை நான்கு: வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் காணுங்கள்
C. கொள்கை ஐந்து: திட்டவட்டமானவைகளைக் கவனியுங்கள்
D. கொள்கை ஆறு: முக்கிய பகுதிகளைப் படித்தல்
E. கொள்கை ஏழு: மனிதனுடைய சுயசித்தத்தை அறிந்துகொள்ளுதல்
F. கொள்கை எட்டு: உடன்படிக்கைகளை நினைவுகூருங்கள்

விதி மூன்று: வேத வசனத்தை வேத வசனங்களுடன் ஒப்பிட்டு ஞானமடைய நாடுங்கள்

A. கொள்கை ஒன்பது: வித்தியாசங்களை நோக்குதல்
B. கொள்கை பத்து: சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கருத்தில் கொள்ளுதல்
C. கொள்கை பதினொன்று: ஒப்பிட்டு அர்த்தம் காணுங்கள்
D. கொள்கை பன்னிரெண்டு: ஒற்றுமையை நாடுதல்
E. கொள்கை பதிமூன்று: குறிப்பிட்ட கால ஒழுங்குகளை சீர்தூக்கிப்பாருங்கள்
F. கொள்கை பதினான்கு: தீர்க்கதரிசனத்தில் கவனமாக இருத்தல்

விதி நான்கு: தேவனுடைய வார்த்தையின்படி சரியாக வாழ்வதின் மூலம் கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதை நாடுங்கள்

A. கொள்கை பதினைந்து : வேதவசனத்தை சரியாகப் புரிந்து கொண்டால் சரியாக செயல்பட முடியும்.
B. வேத வசனத்தை வாழ்க்கையில் சரியாக பயன்படுத்த ஐந்து படிகள்.
C. சரியாக அர்த்தம் காண ஆறு தடைகள்.
D. வேத வசனத்தை வாழ்க்கையில் பயன்படுத்த முடியாமல் தோல்விக்குக் கொண்டு செல்லும் எட்டு வழிகள்.

பகுதி 1
விதி ஒன்று

எல்லா வேத வசனங்களையும் ஆராய்ந்து கிறிஸ்து இயேசு மற்றும் தேவன் பற்றிய உண்மைகளைக் கண்டுபிடிக்க நாடுங்கள்

தேவனுடைய அடிப்படை குணாதிசயங்களை அறிந்துகொள்ள இந்த விதி உதவுகிறது. மேலும், சரியான வியாக்கியானத்திற்கு மிக முக்கியமாக இருக்கிற தேவனுடைய குணங்களை அறிந்துகொள்ளவும் உதவுகின்றது. இந்த விதி நாம் எவ்வளவு அதிகமாகவும் முழுமையாகவும் தேவனுடைய வல்லமையுள்ள தன்மையை அறிந்து பாராட்டுகிறோமோ (பிப்பியர் 3:10) அவ்வளவாய் அவர் என்ன சொல்ல விரும்புகிறார் என்பதை புரிந்து கொள்ள திறமை பெறுவோம் என்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி மூவரும் ஒரே சாரத்தைப் பெற்றிருக்கிறார்கள் என்ற உண்மை வேதத்தில் திரித்துவத்தின் வேதாகம நிரூபனமாயிருக்கிறது. ஒரே தேவன், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று வெளிப்படுதன் உண்மையை திரித்துவம் என்ற வார்த்தை குறிக்கிறது. அடிப்படையாக இவர்களுக்கு மூன்று வேலைகள் இருக்கிறது. தேவன் திட்டம் தீட்டுபவராகவும் (அப்போஸ்தலர் 2:23), குமாரன் அத்திட்டத்தை நிறைவேற்றுபவராகவும் (யோவான் 5:36); பரிசுத்த ஆவியானவர் அத்திட்டத்தை வெளிப்படுத்துகிறவராகவும் (யோவான் 16:13) இருக்கின்றனர். நாம் அவர்களின் மூன்று விதமான செயல்பாட்டைப் படிக்கும்பொழுது, திரித்துவத்தை பிரிப்பதற்கு முயற்சி செய்யக் கூடாது. தேவன் ஒருவரே (உபாகமம் 6:4). தேவனிடம் மாத்திரம் உள்ள குணங்களை பிதா, குமாரன், பரிசுத்த ஆவி இவர்கள் பகிர்ந்து கொண்டதால் இவர்கள் மூவரும் தேவன். மேலும் இவர்கள் ஒன்றாயிருக்கிறார்கள். திரித்துவத்தைப் பற்றி பின்னால் வருகின்ற பகுதிகளில் விளக்கமாக ஆராய்வோம்

A. கொள்கை ஒன்று: தேவனுடைய முக்கியத்துவத்தை அறிந்துகொள்ளுதல்

பத்து முக்கிய குணாதிசயங்கள் தேவனிடம் உண்டு. இவைகளை மனப்பாடம் செய்து கொண்டு எப்போதும் நினைவில் வைத்திருக்க வேண்டும்.

1. **இறையாண்மை**

தேவன் **சர்வ இறையாண்மை** படைத்தவராக இருக்கிறார். இதன் அர்த்தம் அவர் ராஜாவாக இருக்கிறார். மேலும் தம் விருப்பப்படி செய்கிறார். தேவன் இறையாண்மை என்பது ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நிகரற்ற மிக உயர்ந்த அதிகாரத்தைச் செயல்படுத்துவதாகும். ஒருவராலும் கட்டுப்படுத்தக் கூடாதவர். நித்திய எல்லா சிருஷ்டிகள் மேலும் முழு அதிகாரத்தை உடையவர். இவரே படைப்பவர், இவர் படைக்கப்பட்டவர் அல்ல (ரோமர் 1:20, 25). எனவே, தம்முடைய சொந்த திட்டம், சொந்த சட்டம், சொந்த நியாயத்தீர்ப்பு ஆகியவற்றை செயல்படுத்த அதிகாரம் கொண்டவராக இருக்கிறார். சுருக்கமாக, அவரின் திட்டமும் நோக்கமும் புரிந்து கொள்ளக் கடினமாக இருந்தாலும், எப்படி செயல்பட நினைக்கிறாரோ அப்படி செயல்பட அதிகாரம் உடையவராக இருக்கிறார்.

2. **நீதி**

தேவன் முழுமையாக **நீதிபரராக** இருக்கிறார், அதாவது அவர் தம்முடைய வழிகளில் எல்லாம் பூரணராக இருக்கிறார். எல்லாவற்றிலும், தேவன் நீதிக்கு அளவுகோலாக இருக்கிறார். அவர் முழுமையாயிருக்கிறார். நாம் பின்பற்றும்படி, தேவன் நமக்கு ஒரு மாதிரியை வைத்திருக்கிறார் (எபேசியர் 5:1).

3. **நியாயம்**

தேவன் **நியாயமுள்ளவராக** இருக்கிறார். இதன் அர்த்தம் அவர் முழுமையாக எல்லாவற்றிலும் நேர்மையானவர், தேவனுடைய நீதியின் தேவைக்கு உத்தரவாக தேவனின் நேர்மை இருக்கிறது. தேவனிடத்தில் பட்சபாதம் இல்லை (ரோமர் 2:11). எங்கு பாவம் தோன்றுகிறோ (அவருடைய பிரமாணத்தை மீறுதல்) அங்கு அவருடைய நீதி திருப்தி செய்யப்படவேண்டும் (ரோமர் 5:13).

4. **அன்பு**

தேவன் **அன்பாக** இருக்கிறார். இதன் அர்த்தம் அவரிடம் பூரண மற்றும் நிபந்தனையற்ற அன்பு காணப்படுகிறது. அன்பு என்பது மற்றவர்களுக்கு சரியான மற்றும் சிறந்தவற்றை செய்தல்; துக்கம் தருவதாக இருந்தாலும் அவைகளைச் செய்தல். கிறிஸ்தவர்கள் தேவ அன்பில் பங்குடையவராக இருக்கின்றனர். மேலும் எல்லோரும் தேவனை அறிந்துகொள்ள அந்த அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் (யோவான் 13:34-35).

5. **நித்திய ஜீவன்**

தேவன் **நித்திய ஜீவனாக** இருக்கிறார். இவர் எப்பொழுதும் இருக்கிறவராக எப்பொழுதும் இருப்பார். நித்திய ஜீவனுக்கு ஆரம்பமும் முடிவும் இல்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் ஆரம்பத்தை கொண்ட ஆனால் முடிவில்லாத அழியா ஜீவனை பெற்றிருக்கிறோம். தேவன் ஒரு போதும் மரணத்துக்கு உட்பட்டவரல்ல என்று தேவனின் நித்திய ஜீவன் போதிக்கின்றது.

6. **சர்வ வல்லமை**

தேவன் **சர்வ வல்லமை** உடையவராக இருக்கிறார். அதாவது அவருக்கு எதையும் செய்ய வல்லமையுண்டு. (ஆதியாகமம் 1:1). அவருடைய சர்வ வல்லமைக்கு ஒரு உதாரணம் வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்டதில் காணப்படுகிறது. அவரின் "வாயின் வார்த்தைகளால்" வானமும், அவரின் "சுவாசத்தால்" சர்வ சேனைகளும் படைக்கப்பட்டது என்று வாசிக்கிறோம் (சங்கீதம் 33:6).

7. **சர்வ வியாபி - எல்லா இடத்திலும் இருப்பவர்**
தேவன் **சர்வ வியாபியாக** இருக்கிறார். இது எங்கும், எல்லா நேரத்திலும் முழுமையாக தேவன் இருக்கிறார் என்பதாகும். இதற்கு தேவன் எல்லாமுமாயிருக்கிறார் என்று அர்த்தமல்ல, ஆனால் எங்கும் இருக்கிறார். இது தேவனுடைய தனிப்பட்ட குணாதிசயத்தைக் காட்டுவதாக இருக்கிறது.

8. **சர்வ ஞானம் - எல்லாம் அறிபவர்**
தேவன் **சர்வ ஞானம்** உள்ளவர். அவர் கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் எல்லாவற்றையும் அறிவார். வெளிவருகின்ற எல்லாக் காரியங்களிருந்தும் ஏற்படும் விளைவை தேவன் அறிவார். நிகழ்வதையும் மேலும் நிகழ இருப்பவைகளையும் தேவன் அறிவார். ஒவ்வொரு தீர்மானமும் கொண்டு வருகின்ற எல்லா விளைவுகளையும், எல்லா நேரத்திலும், தேவன் அறி வார். தேவனுடைய நித்திய திட்டம் இந்த எல்லாக் காரணிகளையும் கருத்தில் கொண்டதாகும் (ரோமர் 8:28-30).

9. **மாறாத நிலை - மாறாதவர்**
தேவன் **மாறாதவராக** இருக்கிறார். இதன் அர்த்தம் தேவனுடைய சாரம் அல்லது முக்கிய காரியங்கள் ஒருபோதும் மாறாது என்பதாகும்.

10. **சத்தியம்**
தேவன் பூரணமான **சத்தியமாக** இருக்கிறார். தேவன் கூறுகிற எல்லாம் முற்றிலும் நம்பத்தகுந்தவை என்று இது கூறுகிறது (எண்ணாகமம் 23:19). இது தேவன் பொய் சொல்வது சாத்தியம் இல்லை (தீத்து. 1:2) என்றும் கூறுகிறது.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 1A

1. **கொடுக்கப்பட்டுள்ள பத்து முக்கியமான தேவனுடைய குணாதிசயங்களை மனப்பாடம் செய்.**

2. **சங்கீதம் 11ஐ வாசித்து தேவனுடைய குணாதிசயங்களைக் கண்டுபிடி.**

B. கொள்கை இரண்டு: கிறிஸ்து வெளிப்பட்ட விதத்தைத் தேடுங்கள்
எல்லா சரித்திரமும் இயேசுவைச் சுற்றி அவரையே முக்கியப்படுத்துகிறது என்பதை இந்த இரண்டாம் கொள்கை உணர்த்துகிறது. இயேசு கிறிஸ்துவே எல்லாவற்றையும் படைத்தவர் (யோவான் 1:1, 3, 14; கொலோசெயர் 1:16-17); அல்பாவும், ஒமெகாவும், ஆரம்பமும் முடிவுமானவர் (வெளிப்படுத்தல் 1:8); மனிதனாக வந்த ஒரே தேவன் (பிப்பியர் 2:6-8); என இந்தக் கொள்கை இயேசுவை அடை யாளம் காட்டுகிறது (பிப்பியர் 2:6-8).

வேத வசனத்தை புரிந்துகொள்ள நாம் நாடும்பொழுது, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சத்தியத்தை, கொடுக்கப்பட்ட வேத பகுதியின் வியாக்கியானம் எப்படி உறுதி செய்கிறது என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும். இதற்கான ஒரு வழி வேதத் தில் ஒவ்வொரு நபரும் இடமும் காரியங்களும் சம்பவங்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்து நமக்கு என்ன போதிக்கிறது என்பதைத் தீர்மானிக்க வேண்டும் வரப்போகிற நன்மையானவைகளின் ''நிழலாக'' மட்டும் உள்ள பழைய சட்டத்தை அல்ல நல்ல காரியங்களையே (மெய்யான சத்தியமாக்கிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து) ஆராயவும், நோக்கிப் பார்க்கவும் உற்சாகப்படுத்தப்படுகிறோம்) (எபிரேயர் 10:1; யோவான் 14:6). தேவனை குறித்துப் படிக்கவும் அவற்றை அறிந்து கொள்ளும்படி பழைய ஏற்பாட்டில் தேவன் எல்லா மனிதர்களையும், இடம், சம்பவங்களையும் வைத்தார் (1 கொரிந்தியர் 10:1-6).

கர்த்தரைக் குறித்து ஒரு **மனிதன்** போதிப்பதின் உதாரணத்தை தீர்க்கதரிசி யோனாவில் காண முடியும். நீங்கள் நினைவுகூருவது போல, தேவனால் கட்டளை பெற்றபடி யோனா, அசீரியரிடத்திற்கு போக விரும்பவில்லை. மாறாக, ஒரு கப்பலைப் பிடித்து வேறு திசையில் சென்றான். ஒரு புயல் உண்டாயிற்று. மேலும் யோனா கடல் போடப்பட்டான். ஒரு பெரிய மீனால் அவன் விழுங்கப்பட்டு மூன்று நாட்களுக்குப் பிறகு அசீரியக் கடற்கரை ஒன்றில் துப்பப்பட்டான். பின்னர், தேவனுடைய கட்டளையின்படி செய்யத் தீர்மானித்தான். அந்த மூன்று நாள் இரவும் பகலும் ''யோனா தீர்க்கதரிசியின் அடையாளம்'' (மத்தேயு 12:39-40) என அழைக் கப்படுகிறது. இது இயேசு மூன்று நாள் கல்லறையில் இருக்கும் காலத்தை வெளிப்படுத்தியது.

ஒரு **இடம்** கூட, ஆண்டவரைக் குறித்துப் போதிக்க முடியும். ''அப்பத்தின் வீடு'' என்றழைக்கப்படுகின்ற பெத்லகேம் கிராமத் தில் இயேசு கிறிஸ்து பிறக்க வேண்டும் (மீகா 5:2). இயேசு பரலோகத்திருந்து இறங்கி வந்த உண்மையான அப்பமாக ஆவிக்குரிய வாழ்க்கையைக் காக்கிற நபராக இருந்தார் (யோவான் 6:35) என்று நாம் அறிவோம்.

இயேசு கிறிஸ்துவைக் குறித்து நேரிடையாக போதிக்கும்படி அநேக ***காரியங்கள்*** வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆசாரிப்புக் கூடாரம், தேவாலயம் இவைகள் இதன்கீழ் வருகின்றன. தூபகலச பொன் பீடம். பொன் விளக்கு தண்டு, சமுகத்தப்ப மேஜை இவைகள் பரிசு த்த ஸ்தலத்தில் இருக்கின்றதை கருத்தில் கொள்ளும்பொழுது, இவைகள் இயேசு கிறிஸ்துவுக்கு மாதிரியாக இருப்பதை எளிதாக அறிய முடியும். மேலும் இயேசுகிறிஸ்து அப்பமாக இருக்கிறார் (யோவான் 6:35). மேலும் இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வெளிச் சமாக இருக்கிறார் (யோவான் 8:12). நம்முடைய ஜெபத்தை கேட்பவராக இருக்கிறார் (தூபம்). (பரிசுத்தவான்களின் ஜெபத்திற்கு மாதிரியாக இருக்கிறது [வெளிப்படுத்தல் 8:3,4] ஜெபம் ''பயாக'' இருக்கிறது [எபிரேயர் 13:15-16]).

வே கோத்திர ஆசாரியர்களால் ஏற்படுத்தப்பட்ட காணிக்கை போன்ற ***சம்பவங்கள்*** கர்த்தரைக் குறித்து போதிக்கிறது. ''எல்லா காலத்திற்கும் ஒரே பலி'' (எபிரேயர் 10:10-12) ஆக இருக்கின்ற இயேசுவை சுட்டிக்காட்டுவதாக எல்லா காணிக்கைகளும் வடிவ மைக்கப்பட்டன (லேவியராகமம் 1-7 அதிகாரங்களில் விளக்கப்பட்டுள்ளது). உண்மையாகவே ***''உலகத்தின் பாவங்களை சு மந்து தீர்க்கின்ற தேவ ஆட்டுக்குட்டியாக''*** இயேசு கிறிஸ்து இருந்தார் (யோவான். 1:29).

வேதத்திலுள்ள எல்லா புத்தகங்களின் மையக்கருத்தில் முக்கிய பொருளாக இயேசு கிறிஸ்து இருப்பதை மாணவர்கள் காணமுடியும்.[98]

ஆதியாகமம்:	சிருஷ்டிகர், ஸ்திரீயின் வித்து (1:1; 3:15)
யாத்திராகமம்:	பாவங்களுக்காக அடிக்கப்பட்ட தேவ ஆட்டுக்குட்டி (12:1-13)
லேவியராகமம்:	பிரதான ஆசாரியன். (முழுபுத்தகமும்)
எண்ணாகமம்:	யாக்கோபிருந்து உதிக்கும் நட்சத்திரம் (24:17)
உபாகமம்:	மோசேக்கு ஒப்பான தீர்க்கதரிசி (18:15)
யோசுவா:	தேவனுடைய சேனைகளின் அதிபன் (5:13-15)
நியாயாதிபதிகள்:	நியாயாதிபதி (11:27)
ரூத்:	உறவுக்கார மீட்பர் (3)
சாமுவேல்:	இராஜாக்களுடைய கர்த்தர் (2 சாமுவேல் 7:18-20)
இராஜாக்கள் / நாளாகமம்:	வானம், பூமி இவைகளின் எஜமான் (புத்தகம் முழுவதும்)
எஸ்றா:	திரும்பக் கட்டுபவர் (1:1)
நெகேமியா:	உண்மையானவர் (9:32)
எஸ்தர்:	தகுதியானவர் (அதிகாரம் 10)
யோபு:	உயிரோடு எழுந்த மேலும் திரும்ப வருகின்ற மீட்பர் (19:25)
சங்கீதம்:	ஆசிர்வதிக்கப்பட்ட மனிதன் சங்கீதம் (1)
	தேவகுமாரன் (2)
	சிலுவையில் அறையப்பட்ட ஒருவர் (22)
	உயிரோடு எழுந்தவர் (23)
	வருகின்ற ஒருவர் (24)
	ஆளுகின்ற ஒருவர் (72)
	துதிக்கு தலைவர் (150)
நீதிமொழிகள்:	ஞானம் (அதிகாரம் 4)
பிரசங்கி:	மறக்கப்பட்ட ஞானி (9:14-15)
உன்னதப்பாட்டு:	என் நேசர் (2:16)
ஏசாயா:	ஒருவருக்குப் பதிலாக உபத்திரவப்படுவர் (53)
எரேமியா:	நம்முடைய நீதியின் கர்த்தர் (23:6)
புலம்பல்:	துக்கமுள்ள மனிதர் (1:12-18)
எசேக்கியேல்:	சிங்காசனத்தில் வீற்றிருப்பவர் (1:26)
தானியேல்:	நொறுக்கும் கல் (2:34)
ஓசியா:	தாவீதின் மகா ராஜா (3:5)
யோவேல்:	நிறைவின் கர்த்தர் (2:18-19)
ஆமோஸ்:	இஸ்ரவேலை விடுவிக்கிறவர் (3:12)
ஒபதியா:	சியோன் மலையின் மேல் விடுவிக்கிறவர் (வ. 17)
யோனா:	அடக்கம் செய்யப்பட்டு மேலும் உயிர்த்த இரட்சகர் (முழு புத்தகம்)
மீகா:	அநாதி தேவன் (5:2)
நாகூம்:	இக்கட்டு நாட்களில் அரணான கோட்டை (1:7)
ஆபகூக்:	நம்முடைய விசுவாசத்தின் நங்கூரம் (2:4)
செப்பனியா:	நியாயத்தீர்ப்பிலும், சுத்திகரிப்பிலும் நம் நடுவில் இருக்கிறவர் (3:5, 15)
ஆகாய்:	அடிக்கும் மேய்ப்பன் (2:17)
சகரியா:	கிளை (3:8)
மல்கியா:	நீதியின் சூரியன் (4:2)
மத்தேயு:	யூதருடைய ராஜா (2:1)
மாற்கு:	யெகோவாவின் ஊழியன் (முழு புத்தகம்)
லூக்கா:	பூரண மனித குமாரன் (3:38; 4:1-13)
யோவான்:	தேவ குமாரன் (1:1)
அப்போஸ்தலருடைய நடபடிகள்:	பரமேறின கர்த்தர் (1:8-9)
ரோமர்:	நீதி (3:22)
1 கொரிந்தியர்:	நித்திரையடைந்தவர்களின் முதற் பலன் (15:20)
2 கொரிந்தியர்:	நமக்காக பாவமாக்கப்பட்டவர் (5:21)
கலாத்தியர்:	நியாயப்பிரமாணத்தின் முடிவானவர் (3:10, 13)
எபேசியர்:	நம்முடைய சர்வாயுதவர்க்கம் (6:11-18)
பிப்பியர்:	எல்லாத் தேவையும் சந்திப்பவர் (4:19)
கொலோசெயர்:	முதற்பேறானவர் (1:18)

1 தெசலோனிக்கேயர்:	திரும்ப வருகின்ற கர்த்தர் (4:15-18)
2 தெசலோனிக்கேயர்:	திரும்ப வருகின்ற உலகத்தின் நியாதிபதி (1:7-9)
1 தீமோத்தேயு:	மத்தியஸ்தர் (2:5)
2 தீமோத்தேயு:	கிரீடத்தை அளிப்பவர் (4:8)
தீத்து:	மகா தேவனும் இரட்சகரும் (2:13)
பிலேமோன்:	கைதிகளின் கூட்டாளி (1:9)
எபிரெயர்:	விசுவாசத்தின் இளைப்பாறுதல் மற்றும் மாதிரிகளை நிறைவேற்றுபவர் மேலும் (9:11)
யாக்கோபு:	ஓய்வு நாளின் கர்த்தர் (5:4)
1 பேதுரு:	பழைய ஏற்பாடு தீர்க்கதரிசியின் மையக்கருத்து (1:10-11)
2 பேதுரு:	நீடிய பொறுமையுள்ள இரட்சகர் (3:9)
1 யோவான்:	ஜீவ வார்த்தை (1:1)
2 யோவான்:	அந்திக் கிறிஸ்துவின் குறி இலக்கு (1:7)
3 யோவான்:	சத்தியத்தினுடைய ஆளுருவம் (1:3-4)
யூதா:	விசுவாசிகளின் பாதுகாவலர் (1:24-25)
வெளிப்படுத்தின விசேஷம்:	ராஜாதி ராஜனும் கர்த்தாதி கர்த்தரும் (19:11-16)

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 1B

1. வாசிக்கவும்: யோவான் 1:1, 3 மற்றும் 14; கொலோசெயர் 1:16-17; மற்றும் பிப்பியர் 2:6-8. இயேசு கிறிஸ்து யார்?

2. வாசிக்கவும்: எபிரேயர் 10:1-18 மற்றும் யோவான் 14:6. எது பாவங்களை நீக்கமுடியாது? யார் பாவங்களை போக்கமுடியும்? நிழலையும் நிஜத்தையும் கண்டுபிடி.

3. வாசிக்கவும்: மத்தேயு 12:39-40 மற்றும் யோனா 1. யோனாவுக்கும் இயேசு கிறிஸ்துவுக்கும் உள்ள ஒற்றுமைகளை எழுதுக?

4. வாசிக்கவும்: மீகா 5:2 மற்றும் யோவான் 6:32-51. இந்தப் பகுதிகள் இயேசு கிறிஸ்துவைப் பற்றி வெளிப்படுத்துவது என்ன?

5. வாசிக்கவும்: யாத்திராகமம் 25:23-40, யோவான் 6:35 மற்றும் 8:12. ஆசாரிப்புக் கூடாரத்திலுள்ளவைகள் இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறுவது என்ன?

6. வாசிக்கவும்: லேவியராகமம் 3, எபிரேயர் 10:10-12 மற்றும் யோவான் 1:29. சமாதான ப மற்றும் இயேசு கிறிஸ்துவுக்கும் உள்ள ஒற்றுமை என்ன?

7. இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறும் வசனங்களைக் கண்டுபிடித்து அவர் எப்படிச் சித்தரிக்கப்பட்டுள்ளார் என்று நீங்களே பாருங்கள்.

பகுதி 2
விதி இரண்டு

தெளிவான பகுதிகளை உங்கள் வழிகாட்டியாகப் பயன்படுத்தி, உண்மைகளைப் புரிந்து கொள்ளுவதை நாடுங்கள்

எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடிய வேதாகமப் பகுதிகளைத் தேடி தெளிவாக இல்லாத வேதாகமப் பகுதிகளைப் புரிந்துகொள்ள இந்தப் பகுதிகளின் உதவியை நாம் நாட வேண்டும் என்று இந்த விதி நமக்குப் போதிக்கிறது.

இந்த விதிக்குப் பொருத்தமான ஆறு கொள்கைகளைப் பற்றி நாம் படிக்கப் போகிறோம். வேதாகமத்தில் காணப்படும் பல்வேறு தலைப்புகளை உறுதிப்படுத்தி வரையறை செய்யும் தெளிவான பகுதிகளை மாணவர்கள் கண்டுபிடித்து, சீர்தூக்கிப் பார்க்க, இந்தக் கொள்கைகள் அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

இந்தப் பகுதியில் தேவன் எவ்வாறு வரலாறு முழுவதிலும் தமது திட்டத்தைப் படிப்படியாக வெளிப்படுத்தியிருக்கிறார் என்பதைப் பற்றியும் நாம் பார்க்கப் போகிறோம். இந்தத் திட்டம் எவ்வாறு படிப்படியாக வெளிப்படுத்தப்படுகிறது என்பதை நாம் காண வேண்டுமானால், திட்டவட்டமான செய்திகளையும், விவரங்களையும் சீர்தூக்கிப் பார்த்து, வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் கண்டு, ஒரு குறிப்பிட்ட தலைப்பின்கீழ் அடிப்படையாக உள்ள பகுதிகளை ஆய்வு செய்ய வேண்டும். மனிதனின் தீர்மானிக்கும் சக்தியை நாங்கள் அங்கிகரிக்கிறோம். அது நம்முடைய வியாக்கியானத்தை எப்படிப் பாதிக்கிறது என்றும் நாம் அர்த்தம் காண்பதில் உடன்படிக்கைகள் வகிக்கும் முக்கிய பங்கைப்பற்றியும் நாம் பார்க்கப் போகிறோம்.

A. கொள்கை மூன்று: வெளிபாடுகள் படிப்படியாக முன்னேறுவதை உணருங்கள்

தேவன் ஒரு காலகட்டத்துக்குப் படிப்படியாகச் செய்தியை வெளிப்படுத்துகிறார் என்று இந்தக் கொள்கை நமக்குப் போதிக்கிறது. எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 3:15ல் காணப்படும், ஸ்திரீயின் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வித்தே மேசியாவைக் குறித்த முதல் தீர்க்கதரிசனமாக இருக்கிறது. பழைய ஏற்பாடு முழுவதிலும் இந்த "வித்தைப்" பற்றி இன்னுமதிகமான செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன. மேசியா ஆபிரகாமின் வித்தாகவும் (ஆதியாகமம் 12:3), ஈசாக்கின் வித்தாகவும் (ஆதியாகமம் 21:12), யாக்கோபின் வித்தாகவும் (ஆதியாகமம் 35:10-12), யூதாவின் கோத்திரத்தைச் சேர்ந்தவராகவும் (ஆதியாகமம் 49:8-11), ஈசாயின் வம்சாவளியைச் சேர்ந்தவராகவும் (ஏசாயா 11:1), தாவீதின் வீட்டைச் சேர்ந்தவராகவும் (2 சாமுவேல் 7:12-16) இருப்பார் என்றும் சொல்லப்பட்டுள்ளது. அவர் பெத்லகேமில் பிறப்பார் (மீகா 5:2). அவர் தேவனாகவும், மனிதனாகவும் இருப்பார் (சங்கீதம் 110:1). அவர் இம்மானுவேல் என்று அழைக்கப்படுவார் (ஏசாயா 7:14). அவர் ஒரு தீர்க்கதரிசியாகவும் (உபாகமம் 18:18), ஒரு ஆசாரியனாகவும் (சங்கீதம் 110:4), ஒரு நியாயாதிபதியாகவும் (ஏசாயா 33:22), ஒரு இராஜாவாகவும் (எரேமியா 23:5) இருப்பார். அவர் பரிசுத்த ஆவியானவரின் சிறப்பான அபிஷேகத்தையும் (ஏசாயா 11:2), தேவனுடைய வீட்டைக்குறித்த பக்திவைராக்கியத்தையும் (சங்கீதம் 69:9) பெற்றிருப்பார்.

(மேலே உள்ளதைப்போல) ஒரு காலகட்டத்துக்கு விரிவாக வெளிப்படுத்தப்படும் வெளிப்படுத்தல்கள் "படிப்படியாக அதிகரிக்கும் வெளிப்படுத்தல்கள்" என்று அழைக்கப்படுகின்றன. பொதுவான ஒரு தீர்க்கதரிசனம் கொடுக்கப்படுகிறது. பிறகு காலம் கடக்கும்போது, அந்தத் தீர்க்கதரிசனத்தை குறித்த முக்கியமான விவரங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

எனவே, ஒரு குறிப்பிட்டதலைப்புப்பொருளைப் பற்றி முதன் முறையாகக் கூறப்படுவதைக் கவனித்து, பிறகு அந்த தலைப்புப் பொருளைப்பற்றி அடுத்தடுத்து வரும் செய்திகளைப் புரிந்துகொள்ள அதுவே நமக்கு உதவியாக இருக்கும்படி இடம்கொடுக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஆதியாகமம் 3:1 வசனத்தில் சாத்தானின் கிரியையையும், தந்திரத்தையும் பற்றி முதன்முறையாகப் பார்க்கிறோம். இந்தச் "சர்ப்பத்தைப்" பற்றி நாம் இன்னுமதிகமாகக் கற்றுக்கொள்ளும்போது, அவன் ஏமாற்றுக்காரன், தேவனுடைய நேரடியான எதிரி என்ற விவரங்களுக்கு நம்மை வழிநடத்துகின்றன. மானிட வரலாறு முழுவதிலும் சாத்தான் நல்லவனாக மாறவில்லை (வெளிப்படுத்தல் 12:9; 20:2-3, 10). அவன் காலம் கடக்கும்போது தனது வழிமுறைகளை மாற்றிக்கொண்டாலும், அவனது மனோபாவத்தை ஒருபோதும் மாற்றிக்கொள்ளவில்லை (ஏசாயா 14:12-14; வெளிப்படுத்தல் 12:9; 20:7-8). நாம் தேவனாகலாம் என்று விவாதிக்கும் தனது அணுகுமுறையை அவன் ஒருபோதும் விட்டுவிடவில்லை. உபத்திரவ காலத்தின்போது, "பாவமனுஷன்" தேவனுடைய ஆலயத்தில் தனது இருக்கையில் அமர்ந்து, தானே தேவன் என்று அறிவிக்கும்போது, இது மறுபடியுமாகத் தெளிவாக்கப்படுகிறது (2 தெசலோனிக்கேயர் 2:4).

ஒரு குறிப்பிட்ட தலைப்புப் பொருளைப்பற்றிய உலகளாவிய சத்தியம் அது எப்போது முதன் முறையாகக் குறிப்பிடப்படுகிறதோ, அதோடு இணைந்த வகையிலேயே போதிக்கப்படுவதை நாம் பலமுறை காண்கிறோம். மேலும், வேதாகமத்தில் காணப்படும் பல தலைப்புப் பொருள்கள் முதன்முறையாக ஆதியாகமத்திலேயே அறிமுகம் செய்யப்படுகின்றன. எனவே, தேவனுடைய வார்த்தைக்கு அர்த்தம் காண முயலும் ஒருவர் ஆதியாகம நூலைத் தீவிரமாகவும், விரிவாகவும் படிப்பது அவசியமாகும்.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 2A

1. **வாசிக்கவும்: மத்தேயு 1:1-25; 2:1; 3:16; யோவான் 1:1, 14; 2:17; 5:22; 7:40; எபிரேயர் 5:9-10; மற்றும் வெளிப்படுத்தல் 19:16. தீர்க்கத்தரிசன வசனங்களை, இயேசு தீர்க்கத்தரிசங்களை நிறைவேற்றுவதாகக் காட்டும் வசனங்களுடன் பொருத்துக**
   a. ஸ்திரீயின் வித்து - ஆதியாகமம் 3:15
   b. ஆபிரகாமின் வித்து - ஆதியாகமம் 12:3
   c. ஈசாக்கின் வித்து - ஆதியாகமம் 21:12
   d. யாக்கோபின் வித்து - ஆதியாகமம் 35:10-12
   e. யூதா கோத்திரம் - ஆதியாகமம் 49: 8-11
   f. ஈசாயென்னும் அடிமரம் - ஏசாயா 11:1
   g. தாவீதின் வீடு - 2 சாமுவேல் 7: 12-16
   h. பெத்லகேமில் பிறந்தவர் - மீகா 5:2

i. தேவனும் மனிதனும் – சங்கீதம் 110:1
j. இம்மானுவேல் – ஏசாயா 7:14
k. ஒரு தீர்க்கதரிசி – உபாகமம் 18:18
l. ஒரு ஆசாரியன் – சங்கீதம் 110:4
m. ஒரு நியாயதிபதி – ஏசாயா 33:22
n. ஒரு ராஜா – ஏரேமியா 23:5
o. பரிசுத்தாவியின் விசேஷ அபிஷேகம் – ஏசாயா 11:2
p. தேவனுடைய வீட்டுக்காக வைராக்கியம் – சங்கீதம் 69:9

2. **இந்த வசனங்கள் நிரூபிப்பது என்ன?**

B. கொள்கை நான்கு: வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் காணுங்கள்

தேவன் தாம் நினைப்பதை கூறுகிறார். அவர் கூறுவதை அதே அர்த்தத்துடன் கூறுகிறார் என்பதை இந்தக் கொள்கை போதிக்கிறது. தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளுவதில் இது நம்மை வழிநடத்துகிறபடியால், இது ஒரு மிக மிக முக்கியமான கொள்கையாகும். நமது பிள்ளைகளுக்கு நாம் போதிக்கும்போது, அவர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும் என்று நாம் விரும்பும் காரியங்களை நாம் கூடுமான வரையில் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லுகிறோம். அவர்களுடைய சிறிய உள்ளங்கள் கிரகித்துப் பற்றிக்கொள்ளும்படியாக, ஒரு காரியத்தப்பற்றி நாம் பல்வேறு வழிகளில் விவாதிக்கிறோம் (எபிரெயர் 1:1). நாம் அடிக்கடி ஒரே செய்தியைத் திரும்பத் திரும்பச் சொல்லுகிறோம். நாம் தேவனுடைய பிள்ளைகளாக (1 யோவான் 3:1) இருக்கிறோம் அல்லவா? அவர் நமது "தகப்பன்" அல்லவா? (ரோமர் 8:15 வசனம் கூறுகிறபடி "அப்பா"). வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் காண்பது என்றால், (தேவனுடைய பிள்ளைகளாக) நாம் தேவன் தெளிவாகக் கூறுவதைச் சத்தியம் என்று ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று அர்த்தமாகும்.

திருவசனத்தில் முதல் எளிய, தெளிவான, நேரடியான மற்றும் உலகளாவிய வாசகங்களைத் தேடுவது அர்த்தமுள்ள காரியமாகும். மிகத் தெளிவான வசனங்கள் தெளிவில்லாத வசனங்களை நாம் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

ஒரு எளிய, தெளிவான, நேரடியான மற்றும் உலகளாவிய வாசகத்துக்கு நமது எடுத்துக்காட்டாக, யோவான் 3:16 வசனத்தைக் கூறலாம்: ***"தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."*** தேவனுடைய அன்பைக் குறித்து பேசும்போது, "இருக்கலாம்", "இப்படியிருக்குமானால்" போன்ற நிச்சயமற்ற தன்மையைக் குறிக்கும் சொற்கள் பயன்படுத்தப்படவில்லை. இந்த வாசகம் உலகத்தின்மீது தேவன் கொண்டுள்ள அன்பைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறது. மேலும் "விசுவாசிக்கிறவன் எவனே ா" அவனுக்கு நித்தியஜீவன் உண்டு என்றும் தெளிவாகக் கூறுகிறது. தேவன் கூடுதலான தகுதிகளைச் சேர்க்காதபோது, நாமும் கூடுதலான தகுதிகளைச் சேர்க்கக்கூடாது.

இப்படிப்பட்டதொரு வாசகத்தை நாம் ரோமர் 3:23ல் காணலாம்: ***"எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி..."*** வேதாகமத்தைப் பொருத்தவரையில் பாவத்தின் நிலைமை மனுக்குலத்துக்கு உலகளாவியது; இயேசு கிறிஸ்து மட்டுமே இதற்கு விதிவிலக்கானவர் (1 பேதுரு 2:22). வேதாகமம் மட்டுமே விதியை உறுதிப்படுத்துகிறது. எனவே வேதாகமம் மட்டுமே அதற்கான விதிவிலக்கைக் கொடுக்க முடியும். தேவன் தம்முடைய திருவசனத்தில் கொடுத்திருக்கும் உலகளாவிய வாசகங்களுக்கு மாணவர்களாகிய நாம் விதிவிலக்கைக் கொடுக்கக் கூடாது. எனவே, இயேசு கிறிஸ்துவைத் தவிர, நாம் எல்லோரும் பாவிகளாக இருக்கிறோம்.

வேதவசனத்தின் "மறைவான" மற்றும் "ஆழமான" அர்த்தங்களைத் தன்னிச்சையாக யூகம் செய்வது பொறுப்பில்லாத தன்மையாகும். நாம் ஏற்கெனவே விவாதித்தபடி, வேதவசனத்தை உருவக அணுகுமுறையில் அணுகும்போது, அது தேவனுடைய வார்த்தையோடு கூடுதலாகச் சேர்க்க முயலுகிறது. "புராண" அணுகுமுறை வேதவசனத்திருந்து எடுத்துப்போட முயலுகிறது. இவையிரண்டும் தேவனுடைய வார்த்தையின் வார்த்தைக்கு வார்த்தை அர்த்தத்தைக் குலைத்துப் போடுகிற படியால், இவைகளுக்கு விரோதமாக தேவன் நமக்கு எச்சரிப்புக் கொடுத்திருக்கிறார் (வெளிப்படுத்தல் 22:18-19).

வேதாகமம் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே நடந்த வரலாற்றில் அஸ்திபாரம் கொண்டிருக்கிறது (பார்க்க, 1 கொரிந்தியர் 15). எனவே வரலாறு முழுவதற்கும் அது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. அதற்கு வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் காண்பதற்குத் தவறியபடியால், இஸ்ரவேல் மற்றும் சபை வரலாற்றில் இறையியல் ரீதியாகப் பல திருக்கான அல்லது பிழையான கொள்கைகள் காணப்படுகின்றன.

நாம் வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் காணவேண்டிய வேறு சில உலகளாவிய வாசகங்கள்: ரோமர் 8:35-39; யோவான் 3:16, 18, 36; எபேசியர் 2:8-10; 1 யோவான் 2:1-2; தீத்து 3:5.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 2B

1. **கீழுள்ள பகுதிகளில் உள்ள தெளிவான கருத்தை உங்கள் சொந்த வார்த்தைகளில் எழுதவும்:**
   a. ரோமர் 8:35-39
   b. யோவான் 3:16
   c யோவான் 3:18
   d. யோவான் 3:36
   e. எபேசியர் 2:8-10
   f. 1 யோவான் 2:1-2
   g. தீத்து 3:5

2. **இந்த வசனங்கள் உங்களுக்கும் உங்கள் அன்பானவர்களுக்கும் என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது என்று கவனியுங்கள். நீங்கள் அவைகளை நம்புகிறீர்களா?**

C. கொள்கை ஐந்து: திட்டவட்டமானவைகளைக் கவனியுங்கள்

வேதாகமத்துக்கு அர்த்தம் காணும்போது சில திட்டவட்டமான கேள்விகளுக்குப் பதில் காணவேண்டும் என்று இந்தக் கொள்கை நமக்குப் போதிக்கிறது. எடுத்துக்காட்டாக, “இதைக் கூறியது யார்?” “யாருக்கு இது சொல்லப்பட்டது?” “எந்தச் சூழ்நிலையில் அது சொல்லப்பட்டது?” யாரைக் குறித்து இது அக்கறை கொண்டிருக்கிறது?”

தேவன் வரலாற்றில் மூன்று வகுப்பினரோடு இடைபட்டிருக்கிறார் என்பதையும் இந்தக் கொள்கை அங்கீகரிக்கிறது: யூதர்கள், புறஜாதியார் மற்றும் திருச்சபை (1 கொரிந்தியர் 10:32). எனவே, வேதாகமத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியைப் பெற்றது யார் என்பதைத் தீர்மானிப்பதை நாம் நாட வேண்டும். அப்போதுதான், ஒரு வாக்குத்தத்தமோ, உடன்படிக்கையோ அல்லது எச்சரிப்போ நமக்குப் பொருத்தமானதா என்பதை நாம் அறிய முடியும்.

அடுத்துவரும் உடன்படிக்கைகளைப்பற்றிய நமது ஆய்வில், ஒரு உடன்படிக்கை யாருக்குரியது என்பது மிக முக்கியமானது என்பதை நாம் பார்க்கப் போகிறோம். எடுத்துக்காட்டாக, ஒரு புறஜாதி நாடு (யூதரல்லாத இனங்கள்) தீமை அல்லது கர்த்தருக்குக் கீழ்ப்படியாமையின் காரணமாகச் சிதறடிக்கப்படலாம். சுமேரியர், பாபிலோனியர்கள், அசீரியர்கள் மற்றும் பாரசீக பேரரசுகளுக்கு இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டது.

தேவன் தாம் இஸ்ரவேலைச் சிதறடிக்கப் போவதாக மட்டுமின்றி, அவர்களைத் திரும்பக் கூட்டிச் சேர்க்கப் போவதாகவும் வாக்குத் தத்தம் அருளியிருக்கிறார். வேறு எந்த ஜாதியாருக்கும் இந்த வாக்குத்தத்தங்கள் கொடுக்கப்படவில்லை. இஸ்ரவேலுக்கு மட்டும் பொருத்தமான வாக்குத்தத்தங்களை நாம் மற்ற ஜாதியாருக்குப் பொருத்திக் கூறுவோமானால் தவறு செய்கிறவர்களாக இருப்போம்.

இரண்டாவது எடுத்துக்காட்டாக, இஸ்ரவேலுக்கு ஒரு ஜாதியாக, ஒரு நாட்டையும், குடியுரிமையையும் பெற்றிருப்பது குறித்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது (ஆதியாகமம் 12:1-3; 13:15). ஆனால் சபைக்கோ பரலோகத்தில் குடியிருப்பைக்குறித்த வாக் குத்தத்தம் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது (பிப்பியர் 3:20). தேசிய அங்கீகாரமோ அல்லது நாடோ சபைக்கு வாக்குத்தத்தமாகக் கொடுக்கப்பவில்லை.

இறுதியான எடுத்துக்காட்டாக, இஸ்ரவேலர் தேவனோடுள்ள உறவின் மூலமாகப் பெற்ற ஆசீர்வாதங்களையும் (உபாகமம் 8:7-10), புறஜாதியார் இஸ்ரவேலை ஆசீர்வதிப்பதற்காகப் பெற்ற ஆசீர்வாதங்களையும் (ஆதியாகமம் 12:3) நாம் குறிப்பிடலாம். ஆனால் சபையையோ அல்லது புறஜாதியாரையோ ஆசீர்வதிப்பவர்களுக்கு இப்படிப்பட்ட எந்த ஆசீர்வாதமும் வாக்குத்தத்தம் பண்ணப் படவில்லை.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 2C

1. **வாசிக்கவும்: ஆதியாகமம் 12:1-3 யாரை ஆசீர்வதிக்க தேவன் வாக்குப்பண்ணுகிறார்?**

2. **ஆதியாகமம் 12:1 இல் ஆபிரகாமிற்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதத்திற்கான நிபந்தனைகள் என்ன?**

3. **வாசிக்கவும்: ஆதியாகமம் 26:5. தேவன் ஏன் ஈசாக்கை ஆசீர்வதித்தார்?**

4. **வாசிக்கவும்: எபிரேயர் 11:8. ஆபிரகாம் ஏன் தேவனுக்குக் கீழ்ப்படிந்தான்?**

5. **ஆபிரகாமிற்குக் கொடுக்கப்பட்ட நிபந்தனைகள் (#2) சபைக்குத் தேவையா?**

6. **ஆபிரகாமிற்கு வாக்குப்பண்ணப்பட்ட ஆசீர்வாதங்கள் சபைக்கும் வாக்குப்பண்ணப்பட்டதா?**

7. **வாசிக்கவும்: கலாத்தியர் 3:28-29. ஆபிரகாமின் ஆசீர்வாதங்களில் நாம் பங்கு பெறலாமா?**

D. கொள்கை ஆறு: முக்கியமானப் பகுதிகளைப் 29படித்தல்

நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அத்தியாவசியமான ஒரு தலைப்புப் பொருளைக் குறித்த தேவனுடைய மனோபாவத்தை அறி விக்கும் பகுதிகளாக இருக்கின்றன என்பதை சில குறிப்பிட்ட பகுதிகளை வாசிக்கவேண்டும். வேதாகமத்தில் பல இடங்களில், தேவன் ஒரு குறிப்பிட்ட சத்தியத்தைக் குறித்த துண்டுச் செய்திகளைத் தொகுத்து, இப்படிப்பட்டதொரு அடிப்படைப் பகுதியில் அதை வைத்திருக்கிறார். இவைகளைச் சில எடுத்துக்காட்டுகளாகக் குறிப்பிடலாம்:

- இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் - 1 கொரிந்தியர் 15
- மானிட நாவு - யாக்கோபு 3
- இஸ்ரவேல் சீரமைக்கப்படுதல் - ரோமர் 11
- விசுவாசத்தின் வெற்றி - எபிரெயர் 11
- தேவன் தமது பிள்ளைகளைச் சிட்சித்தல் - எபிரெயர் 12:1-11
- திருச்சபை - எபேசியர் 1-3
- விசுவாசத்தினால் நீதி - ரோமர் 3:10-21
- நியாயப்பிரமாணம் - யாத்திராகமம் 20
- தேவனுடைய சர்வாயுதவர்க்கம் - எபேசியர் 6:10-17
- அன்பு - 1 கொரிந்தியர் 13

முக்கிய கருத்துக்களைத் தீர்மானிக்க வேதாகமத்தின் அடிப்படைப் பகுதிகளை வாசித்து பிறகு கூடுதலான விவரங்களைப் பெறும் படியாக, இவைகளோடு தொடர்புடைய பகுதிகளைப் பார்க்க வேண்டும் என்று இந்தக் கொள்கை கூறுகிறது.

எடுத்துக்காட்டாக, 1 கொரிந்தியர் 13:4-8a வசனங்களில், அன்பின் பண்புகளைக் குறித்த மிக விரிவான சொற்பொழிவு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வசனங்களில் முழுமையான அர்த்தத்தைக் கொண்ட பதினாறு பண்புகள் உள்ளன. இந்த வசனங்களை மட்டும் ஆய்வுசெய்ய நாம் வகுப்பறையில் ஒரு வார காலத்தைச் செலவிடலாம். இதைச் சிந்தித்துப் பாருங்கள்:

> ***அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்குநினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருகாலும் ஒழியாது.***

நாம் மாற்கு 12:29-31 வசனங்களை வாசிக்கும்போது, மிகப் பெரிய கட்டளை எது என்ற கேள்விக்கு இயேசுவானவர் பதிலளிப்பதைப் பார்க்கிறோம்:

> ***இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்பு கூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்.***

இரண்டு பிரதான கற்பனைகளும் அன்பின் தரத்தை உள்ளடக்கியிருக்கிறபடியால், தேவனுக்கும் மற்றவர்களுக்கும் முன்பாக நம்மைக் குறித்துச் சரியான மதிப்பீட்டைக் கொண்டிருக்கும்படியாக, அன்பு எதோடு ஈடுபாடு கொண்டிருக்கிறது என்பதைத் தேடுவது அர்த்தமுள்ள காரியமாகும். இந்த அன்பின் முக்கியத்துவத்தை நாம் மாற்கு 12ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். அதன் வெளிப்பாட்டை 1 கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தில் காண்கிறோம்.

1 கொரிந்தியர் 13ஆம் அதிகாரத்தில் விவரிக்கப்பட்டுள்ள அன்பை நீங்கள் பெற்றிருக்கிறீர்களா என்று சோதித்துப் பார்க்க விரும்பினால், உங்களுக்கு நீங்களே "நான் பொறுமையோடு இருக்கிறேனா?" "நான் தயவோடு இருக்கிறேனா?" "நான் பொறாமை கொள்ளுகிறேனா?" என்ற கேள்விகளைக் கேட்டுக்கொள்ளுங்கள்.

"தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தைப்" பற்றிய விவரிப்பில் (எபேசியர் 6:10-17) இந்தக் கொள்கைக்கு நாம் மற்றொரு எடுத்துக்காட்டை காணலாம். இந்த ஒரே இடத்தில்தான் விசுவாசியின் எல்லா ஆயுதங்களைப் பற்றியும் ஒன்றாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. "சத்தியமென்னும் அரைக்கச்சை" ஏசாயா 11:5 வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. "மார்க்கவசமும்" "தலைச்சீராவும்" 1 தெசலோனிக்கேயர் 5:8 வசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. "பட்டயம்" ஒருவருடைய கவசத்தின் ஒரு பகுதியாக இருப்பது எபிரெயர் 4:12 வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 2D

1. **1 கொரிந்தியர் 15 ஆம் அதிகாரத்தை வாசித்து கீழுள்ள ஒவ்வொரு பத்திகளிலுமிருந்து உயிர்த்தெழுந்தலுடன் தொடர்புடைய பத்திக்கு ஒரு தலைப்புக் கொடுக்கவும்:**
    a. 15:1-11
    b. 15:12-19
    c. 15:20-28
    d 15:29-34
    e. 15:35-49
    f. 15:50-58

2. **1 கொரிந்தியர் 15:3-5 இல் இரட்சிப்பின் சுவிசேஷத்திற்குத் தேவையான காரணிகள் என்ன?**

E. கொள்கை ஏழு: மனித மீறுதலை அறிந்து கொள்ளுதல்

தீர்மானம் எடுக்கும்படி தேவன் மனிதருக்குக் கொடுத்திருக்கும் சுயாதீனத்தையும், அத்தகைய சுயாதீனத்தோடுகூட வரும் பொறுப்பையும் இந்தக் கொள்கை அங்கீகரிக்கிறது (யோவான் 3:18; கலாத்தியர் 6:7). மானிடத் தெரிந்துகொள்ளுதல் குறித்த கொள்கை ஆதியாகமம் 2-3 அதிகாரங்களில் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் கொடுக்கப்பட்ட சோதனையில் மிகத் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தேவன் சர்வத்தையும் அறிந்தவராக இருக்கிறபடியால், அவர்கள் ***"நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின்"*** கனியைப் புசிப்பார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார். ஆனால் அவர்கள் அந்த விலக்கப்பட்ட கனியைப் புசிக்கும்படி அவர் தூண்டவில்லை. தாங்கள் புசிக்கும்படி தெரிந்துகொண்டபடியால் ஆதாமும் ஏவாளும் அந்த விலக்கப்பட்ட கனியைப் புசித்தார்கள். அப்போது அவர்கள் தங்கள் செயல்களுக்குப் பொறுப்புள்ளவர்களாக்கப்பட்டு, ஏதேன் தோட்டத்தைவிட்டு விரட்டப்பட்டார்கள்.

மனிதனின் தெரிந்துகொள்ளும் திறமையைத் தெளிவாகக் குறிப்பிடும் பல பதங்களும், சொற்களும் இருக்கின்றன. "விசுவாசித்தல்" மற்றும் "விசுவாசம்" ஆகிய வார்த்தைகளை முக்கியமானவைகளாக நாம் குறிப்பிடலாம்; இந்த இரண்டு சொற்களும் கிரேக்க மொழியில் ஒரே வேர்களைக் கொண்டிருக்கின்றன. தேவன் சர்வஞானியாக இருக்கிறபடியால், யாரெல்லாம் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, இரட்சிக்கப்படுவார்கள் என்பதை எப்போதுமே அறிந்திருக்கிறார் (ரோமர் 8:29; 1 பேதுரு 1:1-2). என்றாலும், அவருடைய இந்த முன்னறிவு விசுவாசிக்க வேண்டும் என்ற நிபந்தனையை அகற்றிப் போடவில்லை.

மனிதர்கள் எடுத்த நல்ல மற்றும் மோசமான தீர்மானங்களை வேதாகமம் பதிவுசெய்திருக்கிறது. அதன் உள்ளான நேர்மைக்கு இதுவே ஒரு சாட்சியாக இருக்கிறது. இந்தக் கொள்கையில் நாம் தேவனுடைய வார்த்தை மனிதரின் பல மோசமான தீர்மானங்களையும் பதிவு செய்திருக்கிறது என்பதை அங்கீகரிக்கிறோம். இவை மனிதனின் சுயாதீனத்தின்படியான செயல்களாகும்; தமது திட்டத்தின் நோக்கத்துக்காக தேவன் இவைகளை அனுமதித்தார்; என்றாலும், இப்படிச் செய்யும்படி அவர் கட்டளை கொடுக்கவில்லை. ஒரு நபர் ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்தான் என்று வேதாகமத்தில் குறிப்பிருக்கிறபடியால், தேவன் அந்தச் செயலை ஏற்றுக்கொள்ளுகிறார் என்று அர்த்தமில்லை. யூதாஸ் தம்மைக் காட்டிக்கொடுப்பான் என்று இயேசு கிறிஸ்து அறிந்திருந்தார்; உண்மையில், இதைக் குறித்து அவனுக்கு எச்சரிப்பும் கொடுத்திருந்தார் (மத்தேயு 26:24) ஆனால் யூதாஸ் இயேசுவானவரைக் காட்டிக் கொடுத்து, அதன் பின்விளைவுகளை அனுபவித்தான்.

தேவன் மனுக்குலத்துக்குத் தெரிந்துகொள்ளும் சுயாதீனத்தைக் கொடுத்திருக்கிறார் என்றாலும், எல்லா வேளைகளிலும் பிழையில்லாமல் தெரிந்துகொள்ளும் திறமையைக் கொடுக்கவில்லை. எனவே, நாம் அர்த்தம் காணும்போது, மனிதரின் மோசமான மற்றும் பாவகரமான தெரிவுகளைக் கருத்தில் கொண்டிருக்க வேண்டும்.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 2E

1. **வாசிக்கவும் யோவான் 3:16-18. நியாயத்தீர்ப்புக்குத் தப்பிக்க மனிதனுடைய தேவை என்ன?**

2. **வாசிக்கவும் ரோமர் 3:21-26. தேவனுடைய நீதியைப் பெற மனிதனுடைய தேவை என்ன?**

3. **வாசிக்கவும் ஆதியாகமம் 2-3. மனிதனும் மனுஷியும் தேவனுடைய கட்டளையை மீறினார்களா?**

4. **அவர்களுடைய கீழ்ப்படியாமை எதை நிரூபிக்கிறது?**

5. **யாக்கோபு புத்தகத்தை வாசியுங்கள். 60 கட்டளைகள் உள்ளதைக் காண்பீர்கள். ஒவ்வொரு கட்டளையும் கட்டளையைப் பெற்றுக் கொள்பவருடைய பகுதியில் ஒரு தீர்மானம் செய்ய வேண்டி உள்ளது. ஆகவே, ஒவ்வொரு கட்டளையிலும் உள்ளது என்ன?**

F. கொள்கை எட்டு: உடன்படிக்கைகளை நினைவு கூருங்கள்

தேவனுக்கும் மனிதருக்கும் இடையே ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களை இந்தக் கொள்கை அங்கீகரிக்கிறது. இவை நிபந்தனைக்குட்பட்ட உடன்படிக்கைகள் உள்ளன. மனிதன் எப்படி நடந்துகொள்ளுகிறான் என்பதை அவை சார்ந்திருக்கின்றன. மேலும், முற்றிலுமாகத் தேவனுடைய வார்த்தையின் உண்மையைச் சார்ந்திருக்கும் நிபந்தனையில்லாத உடன்படிக்கைகளும் இருக்கின்றன.

உடன்படிக்கைகள் முக்கியமானவை; ஏனென்றால் அவை தேவன் மனிதரோடு எப்படி இடைபட்டார் என்பது குறித்த அடிப்படை வரலாற்றைக் கொடுக்கின்றன. நாம் தேவனுடைய உடன்படிக்கைகளைப் புரிந்துகொண்டு, அந்த வாக்குத்தத்தங்கள் நம்மை வழிநடத்த அனுமதிப்போமானால், முரண்பாடாகத் தோன்றும் வேதாகமப் பகுதிகளுக்குத் தவறாக அர்த்தம் காண்பதைத் தவிர்க்க முடியும். எடுத்துக்காட்டாக, இஸ்ரவேலர்கள் மானிட வரலாற்றில் துன்பங்கள் மற்றும் பேரழிவுகள் மூலம் சிட்சிக்கப்படலாம் (லேவியராகமம் 26); ஆனால் அவர்களைப் பாதுகாப்பதாகத் தேவன் வாக்குத்தத்தம் அருளியிருக்கிறபடியால், அவர்கள் அழிக்கப்பட மாட்டார்கள்.

நாம் தனித்தனியாக ஆய்வுசெய்ய வேண்டிய ஒன்பது உடன்படிக்கைகளை உள்ளன. அவைகளின் தலைப்புகளையும், வேதாகமத்தில் அது எங்கே இருக்கிறது என்பதையும், ஒவ்வொரு உடன்படிக்கையையும் குறித்த சுருக்கத்தையும் இங்கே கொடுத்திருக்கிறோம்.

1. **ஏதேன் உடன்படிக்கை**

   ஏதேன் உடன்படிக்கை ஏதேன் தோட்டத்தில் தேவனுக்கும் ஆதாமுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது (ஆதியாகமம் 1–2). அது நிபந்தனைக்குட்பட்டதாகும்; மனிதனின் கீழ்ப்படிதலை அது அடிப்படையாகக் கொண்டிருந்தது. பரிபூரணமான சூழல் (2:8), பரிபூரணமான உணவு, காணக்கூடிய தூண்டுதல் (2:9), பரிபூரணமான தட்பவெட்பம் (1:6–7; 3:8), பரிபூரணமான பாலுறவு (2:21–25), ஆண்டவரோடு தினசரி ஐக்கியம் (1:26–27; 3:8) இவைகுறித்த தேவனுடைய வாக்குத்தத்தத்தையும் அது உள்ளடக்கியிருந்தது. இந்த உடன்படிக்கை துவக்கத்தில் மனிதனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது; ஆனால் மறுக்கப்பட்ட மரத்தின் கனியைப் புசிக்கக் கூடாது என்ற தேவனுடைய கட்டளையை அவன் மீறியபோது, இந்த உடன்படிக்கை முறிந்துபோனது.

   ஏதேன் உடன்படிக்கை இப்போது வழக்கத்தில் இல்லாவிட்டாலும், புதிய வானமும் புதிய பூமியும் கொண்ட வருங்காலத்தில் அதன் ஆசீர்வாதங்கள் மறுபடியுமாக மனிதனுக்குக் கொடுக்கப்படும் (வெளிப்படுத்தல் 21–22). எனவே, குறிப்பாக ஏதேன் தோட்டத்தோடு இடைபடாத பின்னணிகளில் இந்த உடன்படிக்கைக்கு நாம் அர்த்தம் காணக்கூடாது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இல்லாமல் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட எல்லா ஆசீர்வாதங்களையும் மனுக்குலத்தால் உறுதிப்படுத்த முடியாது.

2. **ஆதாம் உடன்படிக்கை**

   ஆதாம் உடன்படிக்கை, வீழ்ச்சிக்குப் பிறகு, ஆனால் விரட்டப்படுவதற்கு முன்பாக, ஏதேன் தோட்டத்தில் தேவனுக்கும் ஆதாமுக்கும் நடுவே ஏற்படுத்தப்பட்டது (ஆதியாகமம் 3:14–19). இது நிபந்தனையில்லாதது.

   ''வீழ்ச்சி'' என்று அறியப்படும் ஆதிப் பாவத்தின் பின்விளைவாக இந்த உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. தேவன் ஏமாற்றுதலுக்குக் கருவியாக இருந்த சர்ப்பத்தைச் சபித்தார் (3:14); வரலாற்றில் ஆதாமின் சந்ததியாருக்கும், சர்ப்பத்துக்கும் இடையே ஒரு போராட்டத்தைக் கொண்டுவந்தார் (3:14–15). பெண் மகப்பேற்றின்போது வேதனையை அனுபவிக்க வேண்டும். அவள் ஆணுக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் (3:16). உணவைப் பயிரிடுவதில் கடினத்தைக் கொடுக்கும்படி பூமி சபிக்கப்பட்டது (3:17–19). ஆணும் பெண்ணும் சரீரப்பிரகாரமாக மரிக்க வேண்டும் என்ற ஒழுங்கு ஏற்படுத்தப்பட்டது (3:19 முதல்; 2:17). இருவரும் பரிபூரண வாசஸ்தலமாகிய ஏதேன் தோட்டத்தைவிட்டு விரட்டப்பட்டார்கள். (3:17–19).

ஆயிரமாண்டு ஆளுகை முடிவுற்று, தேவன் சாத்தானை அக்கினிக்கடல் தள்ளும் வரையில் இந்த ஆதாம் உடன்படிக்கை எல்லா மனிதர்களுக்கும் காலாகாலமாக அமுல் இருக்கும் (வெளிப்படுத்தல் 20:7-10). ஆதாமின் வீழ்ச்சி மனுக்குலம் முழுவதையும் பாதித்திருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும் (ரோமர் 5:12-14).

3. நோவாவோடு உடன்படிக்கை

ஆதியாகமம் 8:20-9:17) வசனங்களில் காணப்படும் நோவாவோடு உடன்படிக்கை, ஜலப்பிரளயத்துக்குப் பிறகு தேவனுக்கும் நோவாவுக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது. ஜலப்பிரளயத்துக்கு முன்பிருந்த நாகரீகம் அழிக்கப்பட்டதைக் குறிப்பிடும் இந்த உடன்படிக்கை நிபந்தனையில்லாததாக இருக்கிறது. இனிமேலும் மனித கலாச்சாரத்தை அழிக்கும்படியான ஒரு உலகளாவிய ஜலப்பிரளயம் அனுப்பப்பட மாட்டாது என்ற வாக்குத்தத்தையும் இந்த உடன்படிக்கை உள்ளடக்கியிருக்கிறது. பூமியெங்கும் மனிதரைப் பலுகிப் பெருகச் செய்ய வேண்டும் என்ற தேவனுடைய கட்டளையையும் (9:1), உணவுக்காக மிருகத்தின் மாமிசம் கொடுக்கப்படுவதையும் (9:2-4), கொலைக்கு மரண தண்டனை விதிக்கப்படுவதையும் அது உள்ளடக்கியிருக்கிறது (9:5, 6). இந்த உடன்படிக்கையைப் பொருத்தவரையில் தேவன் உண்மையுள்ளவர் என்பதற்கு அடையாளமாக வானவில் கொடுக்கப்பட்டது.

நோவாவோடு உடன்படிக்கை ஜலப்பிரளயத்தில் துவங்கி, நித்தியமாக நிலைத்திருக்கிறது. உடைமைகளை அழித்து, உயிர்களை நாசம்பண்ணும்படியாக ஆங்காங்கே வெள்ளங்கள் ஏற்பட்டாலும், இனிமேலும் ஜலப்பிரளயம் கொண்டுவந்ததுபோல, உலகம் முழுவதையும் அழிக்கும்படி கொடுக்கப்படாது. எனவே, காய்கறிகளை மட்டுமே உணவாகக் கொள்வது (தானியேல் 1) மனுக்குலம் முழுவதற்குமுரியது என்று நாம் அர்த்தப்படுத்தக் கூடாது. இந்த உடன்படிக்கையின் இறுதிப் பகுதி கொலை குறித்த தேவனுடைய தண்டனையை உறுதிப்படுத்துகிறது; இப்போதும் இதுவே அவருடைய சித்தமாக இருக்கிறது.

4. ஆபிரகாமோடு உடன்படிக்கை

ஆபிரகாமோடு உடன்படிக்கையின் அடிப்படை வாக்குத்தத்தங்கள் ஆதியாகமம் 12:1-3 வசனங்களில் காணப்படுகின்றன. கூடுதலான சேர்க்கைகளும் விளக்கங்களும் பின்னால் கொடுக்கப்பட்டன. இது ஆபிரகாமோடு ஏற்படுத்தப்பட்டது; அவன் தேவனுடைய எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே நிபந்தனையாக இருக்கிறது. பின்பு இந்த உடன்படிக்கை எந்தவித நிபந்தனையுமில்லாமல் அவனுடைய சந்ததியாருக்கு விரிவுபடுத்தப்படும்.

ஆபிரகாமோடுள்ள உடன்படிக்கை, தனிப்பட்ட ஆசீர்வாதம், எண்ணமுடியாத சந்ததியினர், இருப்பிடம், ஒரு பட்டணம், தேசீய மதிப்பு, நெருங்கிய தொடர்பின்மூலம் ஆசீர்வாதம், பாதுகாப்பு, மேசியாவின் வம்சாவளி இவைகளை உள்ளடக்கியிருக்கிறது (ஆதியாகமம் 17:1-8).

ஆபிரகாமோடு உடன்படிக்கை ஆபிரகாமுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தோடு துவங்கியது. இயேசு கிறிஸ்துவின் பிறப்பில் மேசியாவின் வம்சாவளி குறித்த வாக்குத்தத்தம் நிறைவேறியது (கலாத்தியர் 3:16). உடன்படிக்கையோடு தொடர்புடைய பொருட்கள் குறித்த ஆசீர்வாதங்கள் வரலாற்றில் வெவ்வேறு காலகட்டத்தில் கொடுக்கப்பட்டாலும், ஆயிரமாண்டு ஆளுகையின்போது அது நிறைவு பெறுகிறது. இந்த உடன்படிக்கை ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் முதல் ஆயிரமாண்டு ஆளுகை வரையில் எல்லா காலக்கட்டங்களிலும் விரித்து பரவியிருக்கிறது.

நாம் ஆபிரகாமோடு உடன்படிக்கையின் கொள்கைகளை அதோடு பொருத்திக் காணும்போது, குறிப்பாகக் குழப்பமான வேதாகமப் பகுதி ஒன்றின் அர்த்தத்தை உடனடியாகப் புரிந்துகொள்ள முடியும். மத்தேயு 11:20-24 வசனங்கள் இவ்வாறு கூறுகின்றன:

> ***அப்பொழுது, தமது பலத்த செய்கைகளில், அதிகமானவைகளைச் செய்யக் கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற் போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார்: 'கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பல் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள். நியாயத்தீர்ப்புநாளிலே உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும். நியாயத்தீர்ப்புநாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.'***

ஆபிரகாமோடு உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களின் காரணமாக, இஸ்ரவேல் மனந்திரும்பக் கூடுதலான காலம் கிருபையாகக் கொடுக்கப்படுகிறது. இஸ்ரவேல் மனந்திரும்பாவிட்டால், சிட்சை கடுமையாக இருக்கும்; ஆனால் அந்த தேசம் உலகத்தைவிட்டு அழிக்கப்பட்டு, வரலாற்றில் இல்லாதபடி செய்யப்பட மாட்டார்கள்.

5. மோசேயோடு உடன்படிக்கை

மோசேயின் நியாயப்பிரமாண உடன்படிக்கை சீனாய் மலையில் மோசேயுடன் ஏற்படுத்தப்பட்டது. யாத்திராகமம் 20ஆம் அதிகாரத்திலும், லேவியராகமம், எண்ணாகமம், உபாகமம் நூல்களிலுள்ள பகுதிகளிலும் இந்த உடன்படிக்கையை நாம் காணலாம். இந்த உடன்படிக்கை கீழ்ப்படிதலை அடிப்படையாகக் கொண்டு, நிபந்தனைக்கு உட்பட்டதாகும். கீழ்ப்படிந்தவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். கீழ்ப்படியாதவர்கள் சபிக்கப்பட்டார்கள் (லேவியராகமம் 26).

இரட்சகருக்கான தேவையைக் காட்டுவதே மோசே உடன்படிக்கையின் அடிப்படை நோக்கமாகும் (கலாத்தியர் 3:24-25). தேவனுடைய நன்னெறிப் பிரமாணத்தை இது தெளிவாகக் கொடுத்துள்ளது. லேவிய ஆசாரியத்துவம் மற்றும், ஆசரிப்புக் கூடாரத்தை உருவாக்குவதற்கு வழிகாட்டியாகவும் இந்த உடன்படிக்கை இஸ்ரவேலருக்குக் கொடுக்கப்பட்டது.

நியாயப்பிரமாணத்தைப் பரிபூரணமாகக் கைக்கொண்டதின்மூலம் இந்த உடன்படிக்கையை நிறைவேற்றும்படியாக இயேசுகிறிஸ்து வந்தார் (மத்தேயு 5:17). இந்த உடன்படிக்கை இஸ்ரவேன் யுகத்துக்கு மட்டுமே உரியதாகும்; இதன் காலகட்டம் மோசேயின் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதிருந்து (யாத்திராகமம் 20) பெந்தெகொஸ்தே நாள் வரை உள்ளது. அந்த நாளில்தான் திருச்சபை துவங்கியது. இது ''உபத்திரவ காலம்'' என்று அழைக்கப்படும் ஏழாண்டு காலகட்டத்தையும் உள்ளடக்கியிருக்கும்; இந்த உபத்திரவ காலம் சபை எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு துவங்குகிறது.

பழைய ஏற்பாட்டிலுள்ள பல பகுதிகள் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழாகச் செலவிடப்பட்ட காலத்தை மட்டுமே குறிக்கின்றன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, பல மிருகங்கள் ''அசுத்தமானவை'' என்று அறிவிக்கப்பட்டு, அவைகளைப் புசிக்கக் கூடாது என்று சொல்லப்பட்டது (லேவியராகமம் 11). ஆனால் இப்போது இது நமக்குப் பொருத்தமானதாக இல்லை; ஏனென்றால் எல்லா உணவும் ''சுத்தமான''து என்பதை இயேசு கிறிஸ்து தெளிவுபடுத்தியிருக்கிறார் (மாற்கு 7:14-18).

6. **தாவீதோடு உடன்படிக்கை**

தாவீதின் உடன்படிக்கை தாவீதோடு ஏற்படுத்தப்பட்டது. 2 சாமுவேல் 7:18-19 மற்றும் சங்கீதம் 89 ஆகிய பகுதிகளில் நாம் இதைக் காணலாம். இது ஒரு நிபந்தனையற்ற உடன்படிக்கையாகும். இது தாவீதின் வம்சத்துக்கு தேசிய ஆளுகையை உறுதிப்படுத்தியது. ''தாவீதின் குமாரன்'' குறித்த வாக்குத்தத்தமும் கொடுக்கப்பட்டுள்ளது; இவர் நாடுகளை நித்தியமாக ஆளுகைசெய்வார்.

தாவீது ராஜாவாக இருந்தபோது, அவனுக்கு இந்த உடன்படிக்கை கொடுக்கப்பட்டதிருந்து தாவீதோடு உடன்படிக்கை செயல்படத் துவங்கியது. ''தாவீதின் குமாரனாகிய'' இயேசு கிறிஸ்துவின் முதலாம் வருகையில் இந்த உடன்படிக்கையின் ஒரு பகுதி நிறைவேறியது (லூக்கா 1:32). இதன் விளைவுகள் நித்தியகாலமாக இருக்கும்.

ஒருமுறை தாவீதின் வம்சாவளியில் எட்டு வயது ராஜாவாகிய யோசியாவின் கையில் ஆளுகை வந்தது (2 இராஜாக்கள் 22:1). இந்தக் காலகட்டத்தில் வாழும் ஒரு யூதர் தேவனுடைய வாக்குத்தத்தத்தின்மீது கட்டியெழுப்பப்பட்ட நம்பிக்கையின் அஸ்திபாரத்தைப் பெற்றிருக்கிறார். இந்த உடன்படிக்கையின் நிறைவாக, இயேசுவானவர்தாமே தமது உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரத்தையும் பெற்றுக்கொண்டார் (மத்தேயு 28:18). இயேசுவானவர் பரலோக சிங்காசனத்தில் இருக்கிறார் என்பதும், ஒருநாள் தமது பூலோக சிம்மாசனத்தை நிறுவும்படியாகத் திரும்ப வருபவர் என்பதும் (மத்தேயு 25:31) இன்று விசுவாசிக்கும் நம்பிக்கையைக் கொடுக்கிறது (எபிரெயர் 8:1).

7. **பாலஸ்தீன உடன்படிக்கை**

பாலஸ்தீன உடன்படிக்கை ஆபிரகாமோடு உடன்படிக்கையின் தொடர்ச்சியாகும். இந்த நிபந்தனைக்குட்பட்ட உடன்படிக்கை, இஸ்ரவேலர் தங்கள் கீழ்ப்படியாமையின் காரணமாகச் சிதறடிக்கப்படுவார்கள் என்று முன்னறிவிக்கிறது. ஆனால் அவர்கள் மனந்திரும்பிய பிறகு, தங்கள் நாட்டுக்குத் திரும்பக் கூட்டிச் சேர்க்கப்படுவார்கள் (உபாகமம் 30:1-10)

இந்த உடன்படிக்கை இஸ்ரவேன் காலக்குரியதாகும். இரண்டாம் வருகையின்போது யூதர்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட வகையில் கூட்டிச் சேர்க்கப்படும்போது இது நிறைவேறும் (மத்தேயு 24:31; மாற்கு 13:27). அப்போது ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட எகிப்தின் ஆறு முதல் ஐபிராத்து வரையிலான நிலம் உறுதிப்படுத்தப்படும் (ஆதியாகமம் 15:18). இந்த உடன்படிக்கை கொடுக்கப்பட்டதிருந்து, இந்த நிலத்திருந்து யூதர்கள் சிதறடிக்கப்படுவது தற்காகமானதே என்று அர்த்தம் கொள்ள வேண்டும்.

8. **இஸ்ரவேலுக்குப் புதிய உடன்படிக்கை**

இஸ்ரவேல் வீட்டாரோடு ஒரு புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்படுவதை நாம் எரேமியா (31:31-34) வசனங்களில் காணலாம். இது மறுபடியுமாக எபிரெயர் 8:8-12 வசனங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கை இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை அடிப்படையாகக் கொண்டது (எபிரெயர் 9:11-14). யூதர்களை மறுபடியும் பிறக்க வைப்பது நிபந்தனையற்றதாகும் (புதிய பிறப்பைப் பெற்ற யூதர்கள்).

உலகளாவிய வகையில் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுவது, அதிகமான பொருள் செல்வம் இவைகளை வாக்குக்தத்தம் செய்யும் இந்த உடன்படிக்கை (எரேமியா 32:41; ஏசாயா 61:8) ஆயிரமாண்டு ஆளுகையின்போது நிறைவேறும். வேதாகமத்தை ஆய்வுசெய்யும்போது, இந்த உடன்படிக்கையில் தேவன் வாக்குத்தத்தம் பண்ணும் ஆசீர்வாதங்கள் விசுவாசிக்கும் யூதர்களுக்கே கொடுக்கப்படுகின்றன என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். அவர்களுடைய இனத்துனிமித்தம் மட்டும் யூதர்கள் இந்த உடன்படிக்கையின் கீழாக ஆசீர்வதிக்கப்பட மாட்டார்கள்.

9. **சபைக்குப் புதிய உடன்படிக்கை**

புதிய ஏற்பாட்டுச் சபையோடும் ஒரு புதிய உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது (மத்தேயு 26:26-28). சிலுவையின் அடிப்படையில், இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் விசுவாசிகளுக்கு இது நிபந்தனையற்றதாகும் (எபிரெயர் 9:11-14). கர்த்தருடைய இராப்போஜனம் என்ற சடங்கில் இது நினைவுகூரப்படுகிறது (1 கொரிந்தியர் 11;25). அது விசுவாசிகளின் உலகளாவிய ராஜரீக ஆசாரியத்துவத்தை உறுதிப்படுத்துகிறது (எபிரெயர் 9:11). அதற்குரிய காலங்களிலும் நித்தியத்திலும் வாக்குத்தத்தங்கள் நிறைவேற்றப்படும். இயேசுகிறிஸ்து இந்த உடன்படிக்கையின் மத்தியஸ்தரானார் (எபிரெயர் 9:15).

பெந்தெகொஸ்தே நாளன்று சபை ஸ்தாபிக்கப்பட்டதிருந்து இந்த உடன்படிக்கை அமுலுக்கு வந்தது (அப்போஸ்தலர் 2); இது நித்தியமாக நிலைத்திருக்கும். இந்த உடன்படிக்கையின் கீழாக அனுபவிக்கப்படும் ஆசீர்வாதங்கள் நித்தியமானவை. யாரும் அவைகளை எடுத்துப் போட முடியாது என்பதை மாணவர்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும். இவ்வாறு, சபையுகத்தில் ஒருவர் வாழ்க்கையில் எவ்வளவுதான் கடினங்களை அனுபவித்தாலும், விசுவாசி முழுமையான பாதுகாப்பைப் பெற்றிருக்கிறார்; ஆண்டவர் அவரைக் கைவிடவில்லை; ஒருபோதும் கைவிடப்போவதுமில்லை (மத்தேயு 28:18-20).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 2F

1. எந்த உடன்படிக்கைகள் நிபந்தனைக்குட்பட்டவை?
   a.
   b.
   c.

2. எந்த உடன்படிக்கைகள் நிபந்தனையற்றவை?
   a.
   b.
   c.
   d.
   e.
   f

3. ஒவ்வொரு உடன்படிக்கையைப் பற்றிய பத்திகளை வாசித்து, அதில் உள்ளவைகளுக்கு மேலாக எதையாவது சேர்க்கமுடியுமா என்று பாருங்கள்.

பகுதி 3
நிஞி மூன்தி

வேதவசனங்களை வேத வசனங்களோடு ஒப்பிட்டு ஞானடைய நாடுங்கள்

மூன்றாவது விதி, தேவனுடைய வார்த்தையைச் சரியாகப் புரிந்துகொண்டு, அதைச் செயல்படுத்துவதிருந்து வரும் ஞானத்தை நாடு வதாகும். தேவனிடம் எந்தவிதக் குழப்பமும் இல்லை என்பதை நாம் உணர்ந்து, விசுவாசத்தினால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் (1 கொரிந்தியர் 14:33). எனவே, புரிந்துகொள்ளுவதில் ஏதேனும் குறைபாடு இருக்குமானால் அது நம்மிடமிருந்தே வருகிறது. நமக்கு ஞானத்தைப் போதிக்கும்படியாக தேவன் உருவக அணிகளையும், புதிர்களையும் வேதாகமத்தில் வைத்திருக்கிறார் (நீதிமொழிகள் 1:2-6).

வேதவசனங்களை வேதவசனங்களோடு சரியாக ஒப்பிட்டுப் பார்ப்பதில் தவறுவதினாலேயே அர்த்தம் காண்பதில் கருத்துவேறுபாடுகள் உண்டாகின்றன. அர்த்தம் காண்பவர் ஒரு பகுதியைப் பார்க்காமல் விட்டுவிடலாம்; அல்லது தான் அறிந்த ஒரு பகுதி எப்படி மற்றெ ாரு பகுதியோடு பொருந்திவருகிறது என்பதைச் சீர்தூக்கிப் பார்க்கத் தவறிவிட்டிருக்கலாம். தேவனுடைய வார்த்தையை அறிந்துகொள் ளுவதை நாடுபவர்கள் தங்கள் சொந்தத் தாழ்மையில் கவனமாக இருப்பது ஞானமுள்ள காரியமாகும். ஒரு வசனத்தையோ அல்லது வார்த்தையையோ தவற விட்டுவிடுபவர்கள் அல்லது அதைச் சீர்தூக்கிப் பார்க்கத் தவறுபவர்கள், தாங்கள் வேதாகமத்தைப் புரிந்துகொள் ளுவதில் முக்கியமான வேறுபாடுகள் உண்டாகின்றன எனபதைக் காண்பார்கள்.

இந்த விதியைப் பயன்படுத்துவது தொடர்பாக ஆறு கொள்கைகள் இருக்கின்றன. தேவன் தமது வார்த்தையில் உறுதிப்படுத்தும் வேறு பாடுகளை நாம் நோக்கிப் பார்க்க வேண்டும். பின்னணியைச் சீர்தூக்கிப் பார்ப்பதின்மூலம் இதை நாம் செய்கிறோம். வேதவசனங்கள் ஒன்றோடொன்று இசைவாக இருக்கும்படி தேவன் செய்திருக்கிறார்; ஒப்பிட்டுப் பார்த்து அர்த்தம் காண்பதில் நாம் இதை அங்கீகரித்து, வசனங்கள் குறிப்பிடும் காரியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும்; குறிப்பாக, தீர்க்கதரிசனப் பகுதிகளுக்கு அர்த்தம் காண்பதில் அதி கக் கவனத்தோடு இருக்க வேண்டும்.

A. கொள்கை ஒன்பது: வேறுபாடுகளை நோக்கிப் பாருங்கள்

தேவன் எங்கேயெல்லாம் வேறுபாடுகளை உறுதிப்படுத்தியிருக்கிறார் என்பதைச் சீர்தூக்கிப் பார்க்குமாறு இந்தக் கொள்கை நமக்குப் போதிக்கிறது. வேறு வார்த்தையில் சொன்னால், விசுவாசம் மற்றும் கிரியைகள், இரட்சிப்பு மற்றும் பாவம், நியாயப்பிரமாணம் மற்றும் கிருபை, மற்றும் பல கருத்துப் படிவங்களுக்கிடையேயுள்ள வேதாகமரீதியான வேறுபாடுகளை நாம் அங்கிகரிக்க வேண்டும். வேதா கமம் பல வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுகிறது. நாம் அர்த்தம் காண்பதில் இந்த வேறுபாடுகளை உணர்வதே சவாலாக இருக்கிறது.

வேறுபாடுகளை உணர்வதைக் குறித்த ஒரு எடுத்துக்காட்டை விசுவாசம் மற்றும் கிரியைகளைப் பற்றிய ஆய்வில் நாம் காணலாம். எபேசியர் 2:8-10 வசனங்கள் இவ்வாறு கூறுகின்றன:

> ***கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவ னுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.***

விசுவாசத்தின் மூலமாக வரும் கிருபையினாலேயே நாம் இரட்சிப்பைப் பெறுகிறோம், கிரியைகளினால் அல்ல என்பது தெளிவாக இருக்கிறது. ஆனால் கிரியைகளின் முக்கியத்துவத்தையும் ஒதுக்க முடியாது. கிரியைகள் இரட்சிப்புக்குரியவைகளாக இல்லாவிட் டாலும், கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அவை அத்தியாவசியமானவையாகும்.

விசுவாசம் தன்னில்தானே எந்தத் தகுதியையும் கொண்டிருக்கவில்லை; நாம் யார்மீது விசுவாசம் கொண்டிருக்கிறோமோ அவரே தகுதியைப் பெற்றிருக்கிறார். ஒருவர் விசுவாசத்தின்மீது விசுவாசம் கொள்ளுவது என்றால் அது உண்மையில் தன்மீதே தான் வைக் கும் நம்பிக்கையாகவே அது இருக்கும். நாம் எல்லோருமே பாவத்தைக் கொண்டிருக்கிறோம் என்பதை நாம் அறிவோம்; எனவே சுயத்தின்மீது நம்பிக்கை வைப்பது ஞானமுள்ள காரியமல்ல (ரோமர் 3:23).

ஒரு அதிக எடையுள்ள பெரியவர் ஒரு மலையுச்சியிருந்து மற்றொரு மலையுச்சிக்குக் கயிற்றின் மூலம் ஊஞ்சலாடிச் செல்லவி ருக்கிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். அவரிடம் ஒரு சிறிய கிளையில் கட்டப்பட்ட ஒரு சிறிய நூலைக் கொடுப்போமானால், அந்தப் பொருள் போதுமான தகுதியைப் பெற்றிராதபடியால், அதன்மீது விசுவாசம் வைப்பது மிகவும் கடினமாகும். என்றாலும், ஒரு வலுவான வடக்கயிறு ஒரு பெரிய கிளையில் கட்டப்பட்டிருக்குமானால், அதற்குப் போதுமான தகுதியிருக்கிறபடியால், விசு வாசம்வைப்பது எளிதான காரியமாக இருக்கும்.

சிலுவையில் தமது சரீரத்தில் நமது பாவங்களைச் சுமந்து மரித்து, மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்து நமது விசுவாசத் துக்குப் பாத்திரமாக இருப்பதற்கு போதுமானதற்கும் அதிகமாக மிக அதிகமான தகுதியைப் பெற்றிருக்கிறார்.

ஏழைகளுக்கு உதவுவது போன்றக் கிரியைகள் தங்கள் இயல்பில் நற்காரியங்களாக இருக்கின்றன (கலாத்தியர் 2:10). ஆனால், நற்கி ரியைகளினாலும்கூட நம்மை இரட்சிக்க முடியாது (தீத்து 3:5). ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின்மேல் நமக்குள்ள விசுவாசத்தை வெளிப்படுத்தும் ஒரு உபகரணமாகவே தேவன் கிரியைகளை வடிவமைத்திருக்கிறார். உண்மையில், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் நாம் செய்த கிரியைகளுக்கு நாம் கணக்குக்கொடுக்க வேண்டும்; அவைகளுக்கேற்ப நாம் பரிசையும் பெறுவோம் (2 கொரிந்தியர் 5:10). தேவன் நமக்குச் செய்திருப்பவைகளுக்கு நன்றிகூறும் விதமாக நாம் நற்கிரியைகளைச் செய்ய வேண்டும். தனிப்பட்ட ஆதா யத்தைப் பெறும் மனோபாவத்தோடு அவைகளைச் செய்யக்கூடாது.

நாம் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய மற்றொரு வேறுபாடு விசுவாசியின் இரட்சிப்பின் பாதுகாப்புக்கும் அவனுடைய வாழ்க்கையில் காணப்படும் பாவத்தின் உண்மைக்கும் இடையேயுள்ள வேறுபாடாகும்.

ஆண்டவர் நமக்காக மிகப் பெரிய கிரியையைச் செய்து முடித்திருக்கிறார் என்றும், நாம் அவருக்கு எதிரிகளாக இருந்தபோதே அவர் நம்மை இரட்சிக்கும்படியாகத் தமது ஜீவனைக் கொடுத்தார் என்றும் நாம் பார்க்கிறோம். இப்போது நாம் அவருடைய குடும்பத்தில் உறுப்பினர்களாக இருக்கும்போது, குறைவாகச் செய்வாரா (ரோமர் 5:6-10)?

இரட்சிக்கப்பட்ட பிறகு விசுவாசிகள் பாவம் செய்ய முடியும், செய்கிறார்கள் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது.

> ***நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வாஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமு உள்ளவராயிருக்கிறார். நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.*** (1 யோவான் 1:8-10)

இந்தப் பகுதி விசுவாசிகளையே குறிப்பிடுகிறது என்பது தெளிவாக இருக்கிறது. பாவம செய்யும் நமது மனோபாவத்தைக் குறித்து புதிய ஏற்பாட்டில் விசுவாசிகளுக்குப் பல எச்சரிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. விசுவாசிகளாகிய நாம் பாவத்தில் ஈடுபடும்போது, நமது இரட்சிப்பை இழந்து போகிறோமா இல்லையா என்பதுதான் கேள்வியாகும்.

ரோமருக்கு எழுதப்பட்டுள்ள நிருபத்திலும், வேதாகமத்திலுள்ள வேறு பல நூல்களிலும், இரட்சிப்பு ஒரு நித்திய உண்மை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ***"ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை. கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே"*** என்று பவுல் கூறியிருக்கிறார் (ரோமர் 8:1-2). கொரிந்திய சபை பல்வேறு விதமான பாவங்களில் அதிகமாக ஈடுபட்டிருந்தது. பவுல் அவர்களை "மாம்சத்துக்குரியவர்கள்" என்று அழைக்கிறார் (1 கொரிந்தியர் 3:1-2); ஆனால் "இரட்சிக்கப்படாதவர்கள்" என்று ஒருபோதும் குறிப்பிடவில்லை. அவர் அவர்களை "பரிசுத்தவான்களைக்" கொண்ட "சபை" என்று அழைக்கிறார் (1 கொரிந்தியர் 1:2).

கிறிஸ்தவர்கள் பாவகரமான வாழ்க்கை முறைகளில் விழுந்துபோகலாம் என்பது தெளிவாக இருக்கிறது. நமது இரட்சிப்பை நாம் இழந்துபோக மாட்டோம் என்பதும் இதைப்போலத் தெளிவான ஒரு காரியமாகும். ***"நாம் உண்மையில்லாதவர்களாயிருந்தாலும், அவர் உண்மையுள்ளவராயிருக்கிறார்"*** (2 தீமோத்தேயு 2:13).

ஒரு கிறிஸ்தவனின் பாவகரமான வாழ்க்கைமுறைக்குக் கண்டிப்பாகப் பின்விளைவுகள் உண்டு. அதன்மூலம் நாம் பரிசுகளை இழந்துபோகிறோம்: ***"நாம் அவரை மறுதத்தால், அவரும் நம்மை மறுதப்பார்"*** (2 தீமோத்தேயு 2:12). நாம் அவரை மறுதப்போமானால், அவரோடுகூட ஆளுகைசெய்ய மாட்டோம் என்று உடனடிப் பின்னணி உறுதியாகக் கூறுகிறது.

இந்த இரண்டு எடுத்துக்காட்டுகளிருந்து, தேவன் தமது வார்த்தையில் கொடுத்துள்ள வேறுபாடுகளைப் பற்றி நாம் அறிந்துகொள்ளலாம். இந்த வேறுபாடுகளைக் கண்டுபிடித்து அவைகளோடு தொடர்புடைய வெவ்வேறு கருத்துப்படிவங்களுக்கு இடையேயுள்ள தொடர்பைப் புரிந்துகொள்ள நாம் நமது வாழ்நாள் முழுவதையும் செலவழிக்க வேண்டியிருக்கலாம்.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 3A

1. **வாசியுங்கள் எபேசியர் 2:8-10. இரட்சிப்பில் தேவனுடைய ஈவு என்ன?**

2. **இரட்சிப்பில் மனிதனுடைய பங்கு என்ன?**

3. **இரட்சிக்கப்பட்டவுடன், அந்த விசுவாசி எதற்காகச் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்?**

4. **வாசியுங்கள் தீத்து 3:5. நற்கிரியைகள் நம்மை இரட்சிக்குமா?**

5. **வாசியுங்கள் 1 யோவான் 1:8. விசுவாசி இன்னும் பாவம் செய்வானா?**

6. **வாசியுங்கள் 1 யோவான் 1:9. விசுவாசி தான் பாவம் செய்யும்போது என்ன செய்ய வேண்டும்?**

7. **வாசியுங்கள் 1 யோவான் 1:10. நாம் பாவஞ்செய்யவில்லை என்போமானால் நாம் யாரைப் பொய்யராக்குகிறோம்?**

8. **வாசியுங்கள் எபிரேயர் 13:15-16. இந்த வசனங்களில் சொல்லப்பட்டுள்ள நற்கிரியைகள் எவை?**

9. **வாசியுங்கள் கொலேசெயர் 3:12-17. இங்கே பட்டியடப்பட்ட நற்கிரியைகள் எவை?**

10. **வாசியுங்கள் 2 கொரிந்தியர் 5:10. நற்கிரியைகளுக்காக விசுவாசி எதைப் பெறுவான்?**

B. கொள்கை பத்து: சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் (பின்னணி) கருத்தில் கொள்ளுங்கள்

வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு வார்த்தையும், வாக்கியமும், அல்லது வசனமும் அதற்கு முன்னாலும், அதற்குப் பின்னாலும் விவரங்களைக் கொண்டிருக்கிறது (முதலாவது அல்லது இறுதி வார்த்தை அல்லது வாக்கியம் அல்லது வசனத்தைத் தவிர) என்ற உண்மையை இந்தக் கொள்கை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வார்த்தையும், வசனமும் இருக்கும் இடத்தையும், மற்ற வசனம் மற்றும் வார்த்தைகளோடு அதற்குரிய தொடர்பையும் இந்தக் கொள்கை அதிகக் கவனத்தோடு சீர்தூக்கிப் பார்க்கிறது. தேவன் அருகிலுள்ள வேதாகமப் பகுதியின் மூலமாகவோ அல்லது அதே தலைப்பில் வேதாகமத்தில் பிற இடங்களிலுள்ள பகுதிகளைக் கொண்டோ ஒரு குறிப்பிட்ட தலைப்புப் பொருளைப்பற்றிய விளக்கத்தைக் கொடுக்கிறார். அது அந்தப் பகுதிக்கான கருப்பொருளை உறுதிப்படுத்துகிறது.

நாம் ஒருபோதும் ஒரு வசனத்தை அதன் பின்னணியிருந்து எடுத்து, அதற்கு அந்நிய அர்த்தத்தைக் கொடுக்கக்கூடாது. வசனங்களை அவைகளின் பின்னணியைவிட்டு எடுத்துப் பயன்படுத்துவது ஒருவர் தனது சொந்தக் கருத்துக்களை நிரூபிப்பதற்குப் பயன்படுத்தும் ஏமாற்று வழியாகும். தனது சொந்தச் செயல்திட்டங்களை நிறைவேற்றும்படி அவர் இந்தச் செய்கை நாம் ஏற்கெனவே விவாதித்தபடி இது ஒரு உருவக வகையாகும்.

பின்னணிக்கேற்ப அர்த்தம் காணுதல் என்றால், வாசிப்பவர்கள் பேசுவது யார், யாரிடம் பேசுகிறார், அந்தப் பகுதியின் முக்கிய கருப்பொருள் என்ன, எந்தக் காலகட்டத்தில், இடத்தில் இந்தப் போதனைகள் மதிப்புள்ளவையாக இருக்கின்றன என்பதைத் தீர்மானிப்பதாகும்.

வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு பகுதியைக் குறித்தும், நாம் மூன்று வகைப்பட்ட பின்னணிகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

1. **அருகிலுள்ள பின்னணி**

   அருகிலுள்ள பின்னணி என்பது அதே பத்தியிலுள்ள பிற வசனங்களை உள்ளடக்கியதாகும். எடுத்துக்காட்டாக, ***"ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலைகொண்டிருங்கள்"*** என்று கலாத்தியர் 5:1 வசனம் கூறுகிறது. ''அடிமைத்தனம்'' என்பது அடிப்படையில் வேறொருவருக்கோ அல்லது ஒரு அரசியல் அமைப்புக்கோ அடிமைப்பட்டிருப்பதைக் குறிப்பிடுகிறபடியால், ''அடிமைத்தனம்'' என்ற சொல்லை ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்துக்கோ அல்லது காலம் மற்றும் இடத்துக்கோ பொருத்திப் பார்க்குமாறு நாம் தூண்டப்படுகிறோம். ஆனால், இதன் பின்னணியைப் பார்க்கும்போது இது ஆவிக்குரிய அடிமைத்தனத்தைக் குறிப்பிடுகிறது என்பது தெளிவாகிறது. இந்தப் பகுதி நியாயப்பிரமாணத்தின் சடங்காச்சாரங்களுக்கு (குறிப்பாக, விருத்தசேதனம்) அடிமைப்பட்டிருப்பவர்களைக் குறிப்பிடுகிறது. இதனால் அவர்கள் அன்பினால் ஒருவருக்கொருவர் ஊழியம்செய்யும் சுயாதீனத்தை இழந்துபோகிறார்கள் (கலாத்தியர் 5:13).

2. **இடையில் உள்ள பின்னணி**

   இடையில் உள்ள பின்னணி என்பது அதே புத்தகத்தில் காணப்படும் வேறு வசனங்களை உள்ளடக்கியிருக்கிறது. மத்தேயு 24:40 வசனத்தில் இதற்கான எடுத்துக்காட்டை நாம் பார்க்கலாம்: ***"அப்பொழுது, இரண்டுபேர் வயல் இருப்பார்கள்; ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான், ஒருவன் கைவிடப்படுவான்."*** இதன் பின்னணி ''இறுதி நாட்களைக்'' குறித்ததாகும். யார் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள், யார் கைவிடப்படுவார்கள் என்பதே கேள்வியாகும். சபை எடுத்துக்கொள்ளப்படும்போது நடப்பது போல, நீதிமான்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, தீயவர்கள் கைவிடப்படுவார்களா? அல்லது இயேசுவானவர் தமது ஆயிரமாண்டு ஆளுகையை உறுதிப்படுத்தும்படி இரண்டாம் முறையாக வரும்போது நடப்பது போல தீயவர்கள் எடுக்கப்பட்டு, நீதிமான்கள் விடப்படுவார்களா? அருகிலுள்ள பின்னணி இதற்குப் பதிலளிக்கவில்லை.

   ஆனால், மத்தேயு 13:49 வசனம் இதற்குப் பதிலளிக்கிறது. ''இறுதி நாட்களைக்'' குறித்துக் கூறப்படும் இந்தப் பகுதியில் ***"நீதிமான்களின் நடுவிருந்து பொல்லாதவர்களைப் பிரித்"*** என்று சொல்லப்பட்டுள்ளது. இவ்வாறு யார் எடுத்துக் கொள்ளப்படுவார்கள், யார் கைவிடப்படுவார்கள் என்ற கேள்விக்கு இடையில் உள்ள பின்னணி பதிலளித்திருக்கிறது. இந்தப் பகுதி இரண்டாம் வருகையைக் குறிப்பிடுகிறது.

   புரிந்துகொண்டு, பின்னணியை மாறாமல் காத்துக்கொள்ளுவதற்காக, நாம் ஒரு புத்தகத்தை வசனம் வசனமாக வாசிக்க வேண்டும் என்பதின் முக்கியத்துவத்தை இடையில் உள்ள பின்னணி நமக்கு உணர்த்துகிறது. ஒரு மாணவன் முதல் 24ஆம் அதிகாரத்துக்குச் செல்லுவான் என்றால், மேற்கண்ட கேள்விக்குப் பதில்காண்பது கடினமாகிவிடும். ஆனால் அந்த மாணவன் மத்தேயு 24ஆம் அதிகாரம் வரையில் முழுப் புத்தகத்தையும் வாசித்திருப்பான் என்றால், பதில் ஏற்கனவே கிடைத்துவிட்டது.

3. **நெருங்கிய சம்பந்தமில்லாத பின்னணி**

   தேவனுடைய வார்த்தையின் உள்ளான முரண்படாத தன்மையை நெருங்கிய சம்பந்தமில்லாத பின்னணி அங்கிகரிக்கிறது. நாம் சீர்தூக்கிப் பார்க்கும் வேதாகமப் பகுதியோடு ஓரளவு தொடர்புடைய வேதாகமத்திலுள்ள பிற பகுதிகளை இது குறிப்பிடுகிறது.

   வேதாகமத்திலுள்ள ஒரு பகுதிக்கு முற்றிலும் தொலைவான இடத்திருக்கும் மற்றொரு பகுதியின்மூலம் விளக்கத்தைப் பெறலாம். ஒரு ஒத்தவாக்கிய அகராதியின் மூலமாக ''கிருபை'', ''விசுவாசம்'' அல்லது ''அன்பு'' போன்ற தனிப்பட்ட சொற்களை நாம் ஆய்வுசெய்யும்போது, அந்தக் குறிப்பிட்ட சொல்லைக் கொண்டிருக்கும் பல்வேறு பகுதிகளை நாம் காணலாம். இந்த அகராதியானது ஒரு குறிப்பிட்ட சொல் காணப்படும் வசனங்களைப் பட்டியட்டுக் கொடுக்கிறது. ஒரு விரிவான அகராதி அந்தச் சொல் காணப்படும் ஒவ்வொரு வசனத்தையும் கொடுக்கும். இப்படிப்பட்ட அகராதிகளைக் குறித்த கூடுதலான விவரங்களை இந்த நூன் இறுதியில் காணலாம்.

   ஒரு தீர்க்கதரிசனத்துக்கு அர்த்தம் காண்பது அல்லது ''வடிவங்கள்'' அல்லது ''குறியீடு''களைப் புரிந்துகொள்ளுவது போன்ற ஆய்வுகளில் ஈடுபடும்போது, இவ்வாறு நெருங்கிய சம்பந்தமில்லாத பின்னணியிலுள்ள சொற்களையும் ஆய்வு செய்வது பயனளிக்கும். எடுத்துக்காட்டாக, ஆசரிப்புக் கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலத்திருந்து மகா பரிசுத்த ஸ்தலத்தைப் பிரித்த திரை (யாத்திராகமம் 26:31-35) எபிரெயர் 10:20ல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மாம்சத்தைக் குறிப்பதாக அர்த்தம் கூறப்பட்டுள்ளது.

நாம் சத்தியவசனத்தை ***“நிதானமாய்ப் பகுத்துப் போதிக்க வேண்டுமானால்”*** (2 தீமோத்தேயு 2:15) பின்னணிக்கேற்ப அர்த்தம் காண்பது மிக முக்கியமானதாகும். நாம் “உபதேச” வாசகங்களைச் சொல்லும்போது, வேதாகமம் அதன் அருகிலுள்ள, இடையில் உள்ள மற்றும் நெருங்கிய சம்பந்தமில்லாத பின்னணிகளில் இசைவோடு இருக்கிறது என்பதை வேதவசனங்களைக் கொண்டு நிரூபிக்கக்கூடியவர்களாக இருக்க வேண்டும். நமது நம்பிக்கைகள் வேதவசனங்கள் முழுமைக்கும் இசைவோடு இராவிட்டால், நமது ஆய்வின் பயனாக உருவாக்கப்படும் “கோட்பாடு” கேள்விக்குரியதாகிவிடும்.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4, பகுதி 3B

1. **வாசிக்கவும் கலாத்தியர் 5:1 மற்றும் ரோமர் 8:2. கிறிஸ்துவில் நமது ஆவிக்குரிய விடுதலையுடன் நாம் என்ன செய்ய வேண்டும்?**

2. **வாசிக்கவும் கலாத்தியர் 5:13. நாம் நம்முடைய விடுதலையை எப்படி உபயோகிக்க வேண்டும்?**

3. **வாசிக்கவும் 1 கொரிந்தியர் 10:28-31. நம்முடைய விடுதலையை தாக்குபவர்களுக்கு நாம் எப்படி பதில் சொல்ல வேண்டும்?**

4. **வாசிக்கவும் 2 கொரிந்தியர் 3:17. பரிசுத்த ஆவியானவர் தன்னுடன் கொண்டு வருவது என்ன?**

5. **வாசிக்கவும் யாக்கோபு 1:25. நமக்கு பாக்கியமுண்டாகும்படி எந்த பூரண பிரமாணத்தில் நாம் நிலைத்திருக்க வேண்டும்?**

6. **வாசிக்கவும் யாக்கோபு 2:12. நாம் எப்படி பேசவும் செயல்படவும் வேண்டும்?**

7. **வாசிக்கவும் 1 பேதுரு 2:16. நம்முடைய சுயாதினத்தை நாம் எப்படி உபயோகப்படுத்த வேண்டும்?**

8. **வாசிக்கவும் 2 பேதுரு 2:1, 17-19. கள்ளப் போதகர்கள் எதை வாக்குப்பண்ணுகிறார்கள்?**

9. **கலாத்தியர் 5:1 (அருகில் உள்ள பிண்ணணி) மற்றும் 5:13 (மத்தியில் உள்ள பிண்ணணி) இல் ஆரம்பியுங்கள். மேலே சொல்லப்பட்ட மற்ற வசனங்களை (நெருங்கிய சம்பந்தமில்லாத பிண்ணணி) உபயோகித்து விடுதலையின் மற்ற குணங்களைக் கண்டுபிடியுங்கள்.**

C. கொள்கை பதினொன்று: ஒப்பிட்டு அர்த்தம் காணுங்கள்

ஒப்பிட்டு அர்த்தம் காண்பது குறித்த கொள்கை தேவனுடைய வார்த்தையின் உள்ளான முரண்படாத தன்மையின்மீது மையம் கொண்டிருக்கிறது. தலைப்புப் பொருள்களில் ஒன்றுபோல் இருப்பவைகளை ஆராய்ந்துபார்த்து, சரியான அர்த்தத்தைக் காணும்படி, அது வேதாகமப்பகுதியை வேதாகமப்பகுதியோடு ஒப்பிடுவதின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுகிறது.

கிருபை மற்றும் இரக்கம் போன்ற ஒன்றுக்கொன்று ஒத்ததாக இருக்கும் கருப்பொருள்களை மட்டுமின்றி தேவன் மற்றும் சாத்தான் போன்ற முற்றிலும் வேறுபட்ட கருப்பொருள்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பது முக்கியமானதாகும். நெருங்கிய சம்பந்தமில்லாத பின்னணியிலுள்ள தலைப்புப் பொருள்களின் ஒத்த தன்மையையும், வேறுபாடுகளையும் நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பல துண்டுகளாக வெட்டப்பட்ட ஒரு சித்திரத்தை, சில வேளைகளில் மிக அதிகமான துண்டுகளாக வெட்டப்பட்ட ஒரு சித்திரத்தை ஒன்றாக இணைக்கிறோம். இப்படிப்பட்ட துண்டுகளை இணைப்பதின்மூலம் தான் இறையியல் உருவாக்கப்படுகிறது.

வேதாகமத்திலுள்ள 31,000க்கும் மேற்பட்ட வசனங்களிலுள்ள முக்கியமான விவரங்களை நாம் கவனியாமல் விட்டிருக்கலாம் என்பதை உணர்ந்து, புதிதாகச் சீஷரானவர் மட்டுமல்ல (1 தீமோத்தேயு 3:6), அர்த்தம் காண்பதில் அனுபவம் பெற்றவரும் சரி, இறையியலை உருவாக்குவதில் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் (நீதிமொழிகள் 3:5-6). நாம் மிக அதிகமான விவரங்களை ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறபடியால், பிழை ஏற்படக்கூடிய வாய்ப்பை உணர்ந்து, நம்மைநாமே தாழ்த்த வேண்டும்.

நாம் வேதவசனத்தை வேதவசனத்தோடு ஒப்பிடும்போது, ஒரு குறிப்பிட்ட இறையியல் அம்சம் வேதாகமத்தின் பல பகுதிகளிலும் அலசி ஆராயப்படுகிறது என்பதைக் காண்போம். “விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல்” என்ற காரியத்தை (ஆதியாகமம் 15:6; ரோமர் 3-4) நாம் ஒரு எடுத்துக்காட்டாகக் குறிப்பிடலாம். நாம் இதற்கு முரண்பாடாக “கிரியைகளினால் நீதிமானாக்கப்படுதல்” என்ற பகுதியைப் (யாக்கோபு 2:14-26) பார்க்கும்போது, இரண்டு பகுதிகளையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இரண்டு பகுதிகளையும் நாம் ஒன்றாக வைக்கும்போது, தேவனுடைய திட்டத்தில் “கிரியைகள்” அத்தியாவசியமானவை என்பதைப் புரிந்துகொள்ளுகிறோம். ஆனால், இரட்சிப்பைப் பெறுவதற்கான வழிவகையாக அல்ல, இரட்சிப்புக்கு வழிநடத்தும் விசுவாசத்திருந்து வளர்ந்துவரும் ஒரு காரியமாக அதைக் காண்கிறோம். எபேசியர் 2:8-10 வசனங்களிலும் இந்தக் கொள்கை போதிக்கப்படுகிறது. நாம் ***“கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம்”*** மேலும் ***“நற்கிரியைகளைச் செய்யும்படி நாம் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.”***

கேள்விக்குரிய பகுதிகளின் அடிப்படையில் இறையியலையோ அல்லது கோட்பாட்டையோ கட்டியெழுப்புவதைக் குறித்தும் இதே கொள்கை நம்மை எச்சரிக்கிறது. எடுத்துக்காட்டாக, மாற்கு 16:9 வசனம் முதல் புத்தகத்தின் இறுதி வரையிலான கிரேக்கப் பகுதி நிச்சயமில்லாத ஒன்றாக இருக்கிறது. சிலர் இந்தப் பகுதிகளைக் கொண்டு கோட்பாடுகளை உருவாக்கியிருக்கிறார்கள்; இது பிழையான இறையியலுக்கே வழிவகுத்திருக்கிறது.

புதிய ஏற்பாட்டில் பலமுறை குறிப்பிடப்படும் “இரகசியம்” (அறியப்படாத ஒன்று) என்பதைக் கண்டுபிடிப்பதற்கு வேதவசனங்களை வேதவசனங்களோடு ஒப்பிட்டுப்பார்க்க வேண்டியிருக்கிறது. சாதாரணமாக நாம் எபேசியர் 3ஆம் அதிகாரத்தை ஆய்வுசெய்யும்போது,

“இரகசியம்’’ என்ற சொல்லைப் பார்ப்போமானால் “இந்த இரகசியம் என்ன?’’ என்ற கேள்விக்குப் பதில் தேட முயல்வோம். ஆனால் இதற்கான பதில் கொலோசெயர் 1:25-27 வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது:

> ***ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து, இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவவசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துகிறதற்கு, உங்கள்பொருட்டு தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்தச் சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.***

வேத வசனமானது இந்த இரகசியம் என்பது மேசியாவோடு புதிய நெருக்கமான உறவு என்று அர்த்தம் சொல்லுகிறது. இந்த உறவு சபை யுகம் என்றழைக்கப்படும் புதிய யுகத்துக்குரியதாகும்.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 3C

1. **வாசிக்கவும் ரோமர் 3:21-28. தேவனுக்கு முன்பாக மனிதன் எப்படி நீதிமானாக்கப்படுகிறான்?**

2. **வாசிக்கவும் எபேசியர் 2:8-9. மனிதன் எப்படி இரட்சிக்கப்படுகிறான்?**

3. **வாசிக்கவும் யாக்கோபு 2:14-26 மற்றும் எபேசியர் 2: 10. விசுவாசி எதை உற்பத்தி செய்ய வேண்டும்?**

4. **யாக்கோபு 2ம் அதிகாரத்தில் கிரியை இல்லாத விசுவாசத்தைக் குறித்து அதை எழுதியவர் கூறுவது என்ன?**

5. **இதற்கு ஒரு விசுவாசி நற்கிரியைகள் செய்யவில்லையானால் அவர் இரட்சிக்கப்படவில்லை என்று அர்த்தமா? (தீத்து 3:5 ஐ பார்க்க)**

6. **யாக்கோபு 2ம் அதிகாரத்தில் ஆபிரகாமைப் பற்றிக் கூறப்பட்டுள்ளதில், அவன் தன்னுடைய மகன் ஈசாக்கை பயிட ஒப்புக்கொடுத்த போது ஆபிரகாம் ஏற்கனவே விசுவாசியாயிருந்தானா?**

7. **யாக்கோபு 2ம் அதிகாரத்தில், ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்கு காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே. அந்த ஒருவன் யார்?**

8. **எபிரேயர் 11:1ஐ வாசியுங்கள். விசுவாசத்தைக் காணமுடியுமா?**

9. **கொடுக்கப்பட்டுள்ள எல்லா வசனங்களையும் யோசித்து யாக்கோபு 2:14 இல் உள்ள இரட்சிக்கப்பட்ட மற்றும் 2:22 & 2:24 வசனங்களில் உள்ள நீதிமானாக்கப்பட்ட என்ற வார்த்தைகளையும் விளக்குங்கள்.**

D. கொள்கை பன்னிரெண்டு: ஒற்றுமையை நாடுதல்

தேவன் உண்மையுள்ளவராக மற்றும் நம்பத்தக்கவராக இருக்கிறார் என்பதையும், அவர் கலகத்துக்குத் தேவனாக இருக்கவில்லை என்பதையும் (1 கொரிந்தியர் 14:33) இந்தக் கொள்கை அங்கிகரிக்கிறது. அதாவது, வேதாகமத்தில் உண்மையான முரண்பாடுகள் எதுவும் கிடையாது. வேதாகமம் ஜீவனுள்ள தேவனால் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு, வடிவமைக்கப்பட்டு, ஏவப்பட்டிருக்கிறபடியால், அதனுள்ளேயுள்ள எல்லாப் பகுதிகளும் ஒன்றுக்கொன்று முரண்படாதவையாக இருக்கின்றன.

வேதாகமத்துக்கு அர்த்தம் கூறுவதிலுள்ள கருத்துவேறுபாடுகள் மனிதருடையவையே தவிர, தேவனுடையவை அல்ல. பலர் தாங்கள் வேதாகமத்தை எப்படிப் புரிந்துகொண்டிருக்கிறார்களோ அதன் அடிப்படையில் தங்கள் உணர்வு பூர்வமான பாதுகாப்பைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இப்படிச் செய்யக் கூடாது என்று வேதவசனம் நம்மை எச்சரிக்கிறது (யோவான் 5:37; நீதிமொழிகள் 3:5-6; 2 கொரிந்தியர் 5:7). நாம் ஆண்டவரை முகமுகமாகச் சந்திக்கும் வரையில் வேதாகமத்திலுள்ள சில காரியங்களைத் தெளிவாகவும் முழுமையாகவும் புரிந்துகொள்ள முடியாது (1 கொரிந்தியர் 13:12). எனவே, தேவன் நம்மை நமது பரலோக இல்லத்துக்கு வழி நடத்துவார் என்று நம்பிக்கை வைத்து, விசுவாசத்திலே நடப்பதுதான் நமக்குரிய காரியமாகும் (எபிரெயர் 11:6; கொலோசெயர் 2:6).

பார்ப்பதற்கு ஒன்றுக்கொன்று முரண்பாடாக இருப்பதுபோலத் தோன்றும் இரண்டு வசனங்கள் எப்படி ஒன்றுக்கொன்று இசைவாக இருக்கின்றன என்பதை நாம் புரிந்துகொள்ளும்போது, ஞானத்தைப் பெறுகிறோம். நீதிமொழிகள் நூன் துவக்கத்தில், நாம் கடினமான வாசகங்களையும், புதிர்களையும் புரிந்துகொள்ளக் கற்றுக்கொள்லும்போது, ஞானத்தைப் பெறுகிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது (நீதிமொழிகள் 1:2-6). இதற்கு நாம் விடாமுயற்சியோடு ஆய்வுசெய்வது அவசியமாகும். எடுத்துக்காட்டாக, நாம் ஏற்கெனவே விவாதித்தபடி, விசுவாசத்துக்கும் கிரியைகளுக்கும் உள்ள உறவைச் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், யாக்கோபு 2ஆம் அதிகாரம் மற்றும் ரோமர் 3-4 அதிகாரங்கள் இரண்டையும் சேர்த்து ஆய்வு செய்ய வேண்டும்.

வேதாகமப் பகுதிகளுக்கிடையேயுள்ள தொடர்புகளை நாம் தேடும்போது, காலத்தையோ அல்லது இடத்தையோ சுட்டிக்காட்டுபவைகளைக் கவனிக்க வேண்டும்; ஒவ்வொரு சிறுசிறு விவரமும் எழுதிவைக்கப்படாமருக்கலாம் அல்லது மொழிபெயர்ப்பில் பிரச்சினை இருக்கலாம் என்பதை நாம் உணர வேண்டும். எப்படியிருப்பினும், வேதாகமத்தில் மெய்யாகவே எந்த முரண்பாடும் இல்லை என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

தேவனுடைய வார்த்தை அடிக்கடி முக்கியமான கொள்கைகளை நாம் முழுமையாகக் கிரகித்துக்கொள்ளுவதற்கு வசதியாக, ஒரே கொள்கையை வெவ்வேறான வகைகளில் விவரிக்கிறது என்பதையும் நாம் உணர வேண்டும். எடுத்துக்காட்டாக, ரோமர் 3:23 வசனம் ‘‘எல்லோரும் பாவஞ்செய்’’து என்று சொல்லுகிறது. இதைப்போலவே, லேவியராகம புத்தகம் எல்லோரும் பாவநிவாரண பகளைக் கொண்டுவர வேண்டும் என்று சொல்லுகிறது. இரண்டு பகுதிகளும் சாராம்சத்தில ஒரே காரியத்தையே சொல்லுகின்றன.

வேதாகமத்தை நாம் ஆய்வுசெய்யும்போது, தேவன்தாமே தமது வார்த்தை மற்றும் அதன் ஒழுங்கின் இலக்கிய வடிவமைப்பை வழிநடத்தியிருக்கிறார் என்று தெளிவாகத் தெரிகிறது.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 3D

1. **முன்பு படித்த பகுதியில் (3இ) உள்ள அணுகுமுறை இந்தக் கொள்கையை வெளிப்படுத்துகிறதா?**

2. **வாசிக்கவும் ரோமர் 3:21–28; 5:1–2, 8–10; 8:35–38 மற்றும் யோவான் 10:27–29. இரட்சிப்பைப் பற்றிச் சொல்லப்பட்ட முக்கியமான குறிப்பு என்ன?**

3. **வாசிக்கவும் 1 கொரிந்தியர் 6:9–10. இந்த வசனங்கள் போதிப்பது என்ன?**

4. **அங்கே முரண்பாடு காணப்படுகிறதா?**

5. **வாசிக்கவும் 1 கொரிந்தியர் 3:10–15. வெளிப்படையான முரண்பாட்டை எப்படி சமன் செய்வது?**

6. **வாசிக்கவும் யாக்கோபு 1:12. ஜீவ கிரீடம் பெற ஒருவர் என்ன செய்ய வேண்டும்?**

7. **வாசிக்கவும் 1 பேதுரு 5:1–4. மகிமையின் கிரீடம் பெற ஒருவர் என்ன செய்ய வேண்டும்?**

8. **வாசிக்கவும் 2 தீமோத்தேயு 4:7–8. நீதியின் கிரீடம் பெற ஒருவர் என்ன செய்ய வேண்டும்?**

E. கொள்கை பதின்மூன்று: கடவுள் மனிதருடன் செயலாற்றும் கால ஒழுங்குகளைச் சீர்தூக்கிப் பாருங்கள்.
இவை வரலாற்றின் காலகட்டங்களாகும்; இந்தக் காலகட்டங்களில் தேவன் தமது மக்களுக்கு வெவ்வேறான பொறுப்புகளை உறுதிப் படுத்துகிறார். இந்தப் பொறுப்புகளின் மூலம் வரலாறு பல காலகட்டங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது. எபிரெயர் 7:12 வசனம் ***“ஆசா ரியத்துவம் மாற்றப்பட்டிருக்குமானால், நியாயப்பிரமாணமும் மாற்றப்பட வேண்டியதாகும்”*** என்று சொல்லுகிறது தேவன் வரலாற்றின் வெவ்வேறான காலகட்டங்களில் வெவ்வேறான பொறுப்புகளை உறுதிப்படுத்துகிறார் என்று இந்த வசனம் போதிக்கிறது.

ஆதாமின் வீழ்ச்சியிருந்து நான்கு தெளிவான கால ஒழுங்குகள் காணப்படுகின்றன:

1. **புறஜாதியாரின் காலம் – ஆதாமின் வீழ்ச்சியிருந்து எகிப்திருந்து வெளியே புறப்படும் வரையில்**
   இந்த காலகட்டம் ஆதியாகமம் மற்றும் யோபு நூல் காணப்படுகிறது. இது கிட்டத்தட்ட கி.மு. 3900 ருந்து கி.மு. 1445 வரையிலான காலகட்டமாகும்.

2. **இஸ்ரவேன் காலம் – எகிப்திருந்து வெளியே புறப்படுவதிருந்து பெந்தெகொஸ்தே நாள் வரையில்**
   இஸ்ரவேன் காலம் ஆதியாகமம் மற்றும் யோபு நூல்கள் தவிர பழைய ஏற்பாட்டின் எல்லா நூல்களிலும் பரவியிருக்கிறது. இது நான்கு சுவிசேஷங்களிலும், அப்போஸ்தலர் முதலாம் அதிகாரத்திலும் பரவியிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் சில பகுதிகள் ஆயிரமாண்டு ஆளுகையைப் பற்றிக் கூறுகின்றன. ஏசாயா 61–66 மற்றும் எசேக்கியேல் 40–48 பகுதிகளை இரண்டு எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

   இந்தக் காலகட்டம் கிட்டத்தட்ட கி.மு. 1445ல் துவங்கி, கி.பி. 33 வரையில் பரவியிருக்கிறது. சபை எடுத்துக்கொள்ளப்படுவதிருந்து இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையிலான காலகட்டமாகிய ‘‘உபத்திரவகாலமும்’’ அல்லது ‘‘தானியேன் 70வது வாரமும்’’ இந்தக் காலகட்டத்தைச் சேர்ந்ததாகும் (தானியேல் 9:24–27).

3. **சபையின் காலம் – பெந்தெகொஸ்தே நாள் முதல் சபை எடுத்துக்கொள்ளப்படும் வரையில்**
   (இஸ்ரவேன் காலகட்டத்தில் இறுதி ஏழு ஆண்டுகளான உபத்திரவ காலம், சபை எடுத்துக்கொள்ளப்படுதல் முதல் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரையில் தொடருகிறது).

   சபையின் காலத்தைப் பற்றி அப்போஸ்தலர் 2–28, நிருபங்கள் மற்றும் வெளிப்படுத்தல் 2–3 அதிகாரங்களில் கூறப்பட்டுள்ளது. இஸ்ரவேன் காலத்தை நிறைவுசெய்யும் உபத்திரவ காலத்தைப்பற்றி வெளிப்படுதல் 4–19 அதிகாரங்களில் காணலாம்.

   இந்தக் காலகட்டம் கி.பி. 33ல் துவங்கி, சபை எடுத்துக்கொள்ளப்படும் வரையில் தொடருகிறது.

4. **ஆயிரமாண்டு ஆளுகை – இரண்டாம் வருகையிருந்து பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு வரையில்**
   வெளிப்படுத்தல் 20ஆம் அதிகாரத்திலும், பழைய மற்றும் புதிய ஏற்பாடுகளில் சில பகுதிகளிலும் இந்தக் காலத்தைப் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

தேவன் மனிதருக்கு அளித்துள்ள வெவ்வேறான ஆசாரியத்துவத்தை நாம் கருத்தில் கொள்ளும்போது, கால ஒழுங்குகளைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும். எடுத்துக்காட்டாக, யாத்திராகமத்துக்குப் பிறகு இஸ்ரவேலர் ஒரு இனமாக ஆகும் வரையில், மனுக்குலம் ''புறஜாதியாரின் காலத்தில்'' இருந்தது. இந்தக் காலகட்டத்தில் ஒருவருடைய சொந்தக் குடும்பத்திலுள்ள மூப்பரே ஆசாரியப்பணியைச் செய்தார்கள். அது ''குடும்ப ஆசாரியத்துவம்'' என்று அழைக்கப்படுதிறது நோவா (ஆதியாகமம் 8:20), ஆபிரகாம் (ஆதியாகமம் 22:2) மற்றும் யோபு (யோபு 1:5) ஆகியோர் இந்தப் பணியைச் செய்திருக்கிறார்கள். அவர்கள் பின்பற்ற வேண்டிய பிரமாணங்கள் தேவனால் ***"அவர்களுடைய இருதயங்களில் எழுதப்பட்டிருந்தன"*** (ரோமர் 2:15).

யூதர்கள் எகிப்திருந்து புறப்பட்டதிருந்து இஸ்ரவேன் காலம் துவங்கியது. ஒரு புதிய வேறுபட்ட ஆசாரியத்துவத்துக்காகத் தேவன் லேவியின் கோத்திரத்தாரை அழைத்தார். இது ''லேவிய ஆசாரியத்துவம்'' என்று அழைக்கப்பட்டது. லேவி கோத்திரத்து ஆரோனிருந்து வம்சாவளிப்படி இந்த ஆசாரியத்துவம் அடுத்தவருக்கு வழங்கப்பட்டது. லேவிய ஆசாரித்துவம் ஆசரிப்பு கூடாரத்திலும், பிறகு ஆலயத்திலும் தனது பணிகளைச் செய்து வந்தது. இந்தக் காலத்திய ஆசாரியர்கள் மிருக பகளை ஏறெடுக்க வேண்டும், ஆராதனையை வழிநடத்த வேண்டும், தேவனுடைய வார்த்தையை அறிவிக்க வேண்டும். தேவனால் மோசேக்கு அறிவிக்கப்பட்ட திட்டவட்டமான ஒழுங்குகளின்படி அவர்கள் இதைச் செய்ய வேண்டும். அவர்கள் பின்பற்ற வேண்டிய பிரமாணங்கள் யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம் நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இயேசுகிறிஸ்து பிறப்பதற்கு முன்பாக இந்த ஒழுங்குகள் சிதைந்துவிட்டது மிகவும் சோகமான காரியமாகும். ஆராதனை முறை எதைப் பிரதிநிதித்துவம் செய்ததோ அதைவிட சடங்காச்சாரங்கள் அதிக முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தன (எபிரெயர் 10:8)

இயேசுகிறிஸ்துவின் சிலுவை மற்றும் உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, தேவன் பெந்தெகொஸ்தே நாளில் ஒரு புதிய கால ஒழுங்கை உண்டாக்கினார். இதுவே ''சபையின் காலம்'' என்று அழைக்கப்படுகிறது. இந்தப் புதிய ஒழுங்கின்படி இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவர்கள் எல்லோரும் தேவனுக்கு ஆசாரியர்களாகிறார்கள் (1 பேதுரு 2:5, 9). இந்தப் புதிய ''விசுவாசிகளாகிய ஆசாரியர்கள்'' மிருக பகளை ஏறெடுக்க வேண்டியதில்லை. அவர்கள் ***"தங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபயாக ஒப்புக்கொடுக்க வேண்டும் இதுவே அவர்கள் னு செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனையாக"*** (ரோமர் 12:1). இருக்கிறது. இந்தக் கால ஒழுங்கின்போது, ஆசாரியத்துவத்தின் வெளிப்புற வடிவம் மாற்றப்பட்டது. என்றாலும், வெவ்வேறான ஆசாரியத்துவங்களின் ஆவிக்குரிய செயல்பாடுகள் மாற்றப்படவில்லை. எல்லோரும் துதியின் பகளைச் செலுத்தி, தேவனுடைய வார்த்தையை அறிவித்தார்கள். கால ஒழுங்குகள் தேவன் தமது கொள்கைகளைச் செயல்படுத்தப் பயன்படுத்திய வெவ்வேறான வடிவங்கள் அல்லது செயல்முறைகளாக இருக்கின்றன. சபையின் கால ஒழுங்கானது ''அன்பின் சூழல்'' (ரோமர் 13:8-10; கலாத்தியர் 5:14; யாக்கோபு 2:8), ''சுயாதீனப் பிரமாணத்தைப்'' பின்பற்ற வேண்டும் (யாக்கோபு 1:25; 2:12).

ஆயிரமாண்டு ஆளுகை அல்லது கால ஒழுங்கு ஒரு புதிய ஆசாரியத்துவத்தைப் பெற்றிருக்கும். லேவியின் கோத்திரத்தில் சாதோக்கின் புத்திரரால் இவர்கள் வழிநடத்தப்படுவார்கள் (எசேக்கியேல் 40:46; 43:19; 44:15; 48:11). பிரமாணங்கள் ''இஸ்ரவேலுடன் செய்யப்படும் புதிய உடன்படிக்கையின்'' அடிப்படையில் இருக்கும் (எரேமியா 31:31-33; எபிரெயர் 8:8-10). நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ***"சகலஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை"*** செய்யும்போது இது அவரால் உறுதிப்படுத்தப்படும் (வெளிப்படுத்தல் 12:5).

எனவே, இந்தக் கால ஒழுங்குகளைக் குறித்த அர்த்தம் காணுதல் வடிவங்கள் அல்லது செயல்முறைகளில் மாற்றங்களை அங்கிகரிக்கிறது; ஆனால் தங்கள் இயல்பில் சரீரத்தைவிட ஆவிக்குரிய இயல்பைக்கொண்டுள்ள கொள்கைகளை இவை அடிப்படையாகக் கொண்டுள்ளன. எடுத்துக்காட்டாக, நமது தற்போதைய கால ஒழுங்கில் நாம் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் இறுதியான பயை நினைவுகூரும்வண்ணமாக, தேவனுக்கு மிருக பகளை ஏறெடுக்க வேண்டிய அவசியமில்லை (எபிரெயர் 10:10). மிருக பகளை ஏறெடுப்பதற்குப் பதிலாகச் சபையானது துதியின் பயாக, கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுக்கிறது (1 கொரிந்தியர் 11:23-34). ஆயிரமாண்டு ஆளுகையின்போது மிருகபகள் மறுபடியுமாகக் கொண்டுவரப்படும். சிலுவையில் கிறிஸ்துவின் முடிக்கப்பட்ட கிரியையை நினைவுகூரும் வண்ணமாக இவை ஏறெடுக்கப்படுகின்றன (எசேக்கியேல் 43:18-27).

வரலாற்றிலுள்ள பிரிவுகள் வேதவசனத்துக்கு அர்த்தம் காணும் ஆய்வின் மூலமாக நிறுவப்படுகின்றன. இவை திட்டவட்டமாக மாறாதவையாக இருக்கின்றன என்று சொல்ல முடியாது. ஒரு கால ஒழுங்கிருந்து மற்றொரு கால ஒழுங்கிற்கு மற்றும் காலம் எது என்பதைக் குறித்து வெவ்வேறான பார்வைகள் இருக்கின்றன. ஆனால் இது தேவன் வரலாற்றின் வெவ்வேறான காலகட்டங்களில் மக்களுக்காக வெவ்வேறான பொறுப்புகளைக் கொடுத்தார் என்ற உண்மையை மறைப்பதில்லை.

சமீப நாட்களில் கால ஒழுங்குகளுக்கிடையே சிறிய சிறிய கால ஒழுங்குகளைப் பகுக்கும் எண்ணம் பரவிவருகிறது. ஆனால் இது தீவிரமான வேதாகம ஆதாரம் பெற்றிருக்கவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சரியான நோக்கத்தைத் திரித்துக்கூறி, தனிப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகவும்கூட இதைப் பயன்படுத்த முடியும். கொள்கைகளில் தீவிரமான பிடிப்போடு இருப்பது பிரமாணவாதத்துக்கு வழிநடத்துகிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் சேவை செய்வதற்கான வாய்ப்புகளைக் காணத் தவறிவிடும் நிலையும் ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, இயேசுவானவர் அந்தக் கொள்கைகளை இஸ்ரவேன் காலத்தில் பேசியபடியால் மலைப்பிரசங்கத்தில் சபைக்கு எந்த மதிப்புமில்லை என்ற முடிவுக்கு வருவது பவுல் கூறுவதை முற்றிலுமாகக் கவனிக்காமல் விட்டுவிடுவதாகும். அவர் 1 தீமோத்தேயு 6:3 வசனத்தில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வசனங்கள் ''ஆரோக்கியமான வசனங்கள்'' என்றும், அவருடைய உபதேசங்கள் தேவபக்திக்கேற்ற உபதேசங்கள் என்றும் கூறியிருக்கிறார்.

கால ஒழுங்குகளைக்குறித்த ஆய்வின் விரிவாக்கமாக இருக்கும் கொள்கைகளை நாம் மெய்யாகவே தேடி அவைகளைப் பற்றிக்கொள்ள வேண்டும். வேதாகமத்தில் ஆசாரியத்துவத்தின் வடிவங்களும் செயல்முறைகளும் ஒவ்வொரு காலத்திலும் மாறிவந்தன. ஆனால் அவை செயல்பட்ட கொள்கைகள் மாறாதவையாக இருக்கின்றன. எந்தவொரு கால ஒழுங்கையும் சேர்ந்த ஆசாரியர்கள் தேவனுக்குப் பகளை ஏறெடுக்க வேண்டும், தேவனுடைய வார்த்தையைப் போதிக்க வேண்டும் என்ற கட்டளையைப் பெற்றிருந்தார்கள்.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4 பகுதி 3E

1. வாசிக்கவும் எபிரேயர் 7:12. ஆசாரியத்துவம் மாறும் போது வேறு எது மாற வேண்டும்?

2. வாசிக்கவும் ஆதியாகமம் 8:20, மற்றும் யோபு 1:5. இவை புறஜாதிகளின் காலத்தில் ஆசாரியத்துவத்திற்கு உதாரணங்களாக இருக்கின்றன. அது ஒரு "குடும்ப ஆசாரியத்துவம்" என்று அழைக்கப்படுகிறது. ப செலுத்தும் பொருப்பு யாருடையது?

3. வாசிக்கவும் ரோமர் 2:15. புறஜாதிகளின் காலத்தில், எந்தப் பிரமாணம் பின்பற்றப்பட்டது?

4. வாசிக்கவும் யாத்திராகமம் 28:1. இது இஸ்ரவேல் காலத்து ஆசாரியத்துவத்திற்கு ஒரு மாதிரியாக உள்ளது. பலி செலுத்துவது யாருடைய பொருப்பு?

5. வாசிக்கவும் உபாகமம் 4:44-46. இஸ்ரவேல் எந்தப் பிரமாணத்தைப் பின்பற்ற வேண்டும்?

6. வாசிக்கவும் 1 பேதுரு 1:1-2 மற்றும் 2:5, 9. சபை காலத்தின் ஆசாரியன் யார்?

7. வாசிக்கவும் ரோமர் 13:8-10 மற்றும் யாக்கோபு 2:8. சபைப் போதகர்கள் எந்தப் பிரமாணத்தைப் பின்பற்ற வேண்டும்?

8. வாசிக்கவும் எசேக்கியேல் 40:46; 43:19; 44:15; மற்றும் 48:11. ஆயிர வருட அரசாட்சிக் காலத்தில் யார் ஆசாரியன ாயிருப்பான்?

9. வாசிக்கவும் எபிரேயர் 8:8-10. இந்தக் காலத்தை எந்தப் பிரமாணம் ஆட்சி செய்யும்?

10. லேவிய ஆசாரியர்கள் மிருக பகளைப் படைத்தார்கள். ராஜரீக ஆசாரியர்கள் தங்களையே ஒப்புக் கொடுக்க வேண்டும். வித்தியாசம் என்ன?

F. கொள்கை பதினான்கு: தீர்க்கதரிசனங்களைக் குறித்துக் கவனமாக இருத்தல்

வேதாகமம் எதிர்கால நிகழ்ச்சிகளை முன்னறிவிக்கிறது என்பதை இந்தக் கொள்கை அங்கீகரிக்கிறது. தேவ ஆவியினால் ஏவப்பட்ட மனிதர்களால் மெய்யான தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்பட்டன என்றும், "தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை" (2 பேதுரு 1:19-21) என்றும் வேதாகமமும் மிகத் தெளிவாகக் கூறுகிறது. தீர்க்கதரிசனங்களுக்கு அர்த்தம் காணும்படி பல சிறப்பான முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் வருந்தத்தக்க விதத்தில் அவைகளில் பெரும்பா லானவை முற்றிலும் ஏமாற்றக்கூடியவையாகவே இருக்கின்றன. தவறான சமயப் பிரிவுகள் மக்கள் தங்கள் பிரிவுகளில் சேரும்படி அவர்களைத் தூண்டுவதற்காக அடிக்கடி தீர்க்கதரிசனங்களின் அர்த்தத்தைத் திரித்துப் பயன்படுத்துகின்றன. இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் நாம் எல்லோரும் ஆசாரியர்கள் என்பதை நினைவில் வைத்திருங்கள். ஒரு புதிய அல்லது வித்தியாசமான அர்த் தத்தை ஒருவர் கூறுவாரானால் விழிப்போடு இருங்கள். தங்கள் குழுவில் சேர வேண்டுமானால் தீர்க்கதரிசனத்தைக் குறித்த தங்கள் புதிய அர்த்தத்தை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்.

தீர்க்கதரிசனத்துக்கு அர்த்தம் கூறுபவர் உண்மையில் பல்லாயிரக்கணக்கான துண்டுகளாக வெட்டப்பட்ட ஒரு பெரிய சித்திரத்தை (வேதாகமத்தில் கிட்டத்தட்ட 10,000 தீர்க்கதரிசன வசனங்கள் இருக்கின்றன) ஒன்றாக இணைத்துக் காட்டுகிறார். சித்திரம் முழுமை யடையும்போது, நாம் வரலாற்றின் - கடந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் - மையமாக இருக்கும் கிறிஸ்துவின் முகத்தைக் காண வேண்டும். வெளிப்படும் சித்திரம் அறியப்பட்டிருக்கும் எல்லா உண்மைகளுக்கும் இடம் கொடுக்க வேண்டும்; நிரூபணத்தின் எல்லாத் துண்டுகளையும் கருத்தில்கொள்ள வேண்டும். நாம் பார்க்கப்போகும் சித்திரத்துக்குப் பொருத்தமில்லாத உண்மைகளை ஒதுக்குவது நமக்குக் கொடுக்கப்பட்டுள்ள சிலாக்கியமல்ல.

தீர்க்கதரிசனத்துக்கு அர்த்தம் காணுதல் ஒரு தனிப்பட்ட பாடத்திட்டமாக இருக்குமளவுக்குப் பெரியதாகும். ஏனென்றால், தீர்க்க தரிசன நூல்களிலேயே வேதாகமத்தின் கால்பகுதி காணப்படுகிறது. என்றாலும், இந்தப்பாடத்தில் நாம் மூன்று எளிய வழிமுறைக ளைப் பின்பற்றுவோம்.

1. **தீர்க்கதரிசியே அர்த்தத்தை கூறுகிறாரா என்று தீர்மானியுங்கள்**

   முதலாவதாக, இயேசுவானவர் ஆலயத்தைக் குறித்தும் தாம் பேசிய யோவான் 2:19-21 வசனங்களுக்குத் தாமே அர்த்தத்தைக் கூறியதுபோல, தீர்க்கதரிசியே தான் அர்த்தத்தைக் கூறுகிறாரா என்பதைக் கவனியுங்கள். இந்தப் பகுதியில் இவ்வாறு நாம் வாசிக்கிறோம்:

> ***இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக் குள்ளே இதை எழுப்புவேன் என்றார். அப்பொழுது யூதர்கள்: இந்த ஆலயத்தைக் கட்ட நாற்பத் தாறு வருஷம் சென்றதே, நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ என்றார்கள். அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக்குறித்துப் பேசினார்.***

இப்படிப்பட்ட சில தீர்க்கதரிசனங்களுக்கு அர்த்தம் காண்பது எளிதான காரியமாகும். தேவன் எந்தக் குறிப்பையும் வெளியி டாமல் பல நூற்றாண்டுகளுக்குத் தாண்டிச் செல்லுவார் என்பதையும் நினைவில் வைத்திருங்கள். ஒரே வசனத்துக்குள்ளாகக் கூட அவர் பல நூற்றாண்டுகளைத் தாண்டிச் செல்லலாம். எடுத்துக்காட்டாக, லூக்கா 4:18-21 வசனங்களில் இயேசுவானவர் ஏசாயா 61:1-2 வசனங்களை மேற்கோளாகக் கூறி, அதற்கு அர்த்தமும் கூறுகிறார்.

2. **அந்தத் தீர்க்கதரிசனம் வரலாற்று பூர்வமாக நிறைவேறியிருக்கிறதா என்று தீர்மானியுங்கள்**
வேதாகமத்தின் மற்ற பகுதிகள் ஏதேனும் தீர்க்கதரிசனம் நிறைவேறியிருக்கிறது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறதா என்பதை நாம் முதல் கவனிக்க வேண்டும். இதன் மூலம் எந்தெந்தத் தீர்க்கதரிசனங்கள் வருங்காலத்தில் நிறைவேற வேண்டியிருக்கிறது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம்.

நோவாவின் ஜலப்பிரளயத்தை இந்தக் கொள்கைக்கு ஒரு எடுத்துக்காட்டாக நாம் குறிப்பிடலாம். அது நடப்பதற்கு 120 ஆண்டுகளுக்கு முன்பே அதைக் குறித்துத் தீர்க்கதரிசனமாக அறிவிக்கப்பட்டுள்ளது (ஆதியாகமம் 6:3). இது நிறைவேறியது என்று வேதாகமம் நமக்குச் சொல்லுகிறது (ஆதியாகமம் 7-8).

தேவன் இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் இஸ்ரவேல் ஜாதியாரைக் கூட்டிச் சேர்ப்பார் என்றும வேதாகமம் தீர்க்கதரிசனமாகச் சொல்யிருக்கிறது (சகரியா 9:14; மத்தேயு 24:31). இந்தத் தீர்க்கதரிசனம் இன்னும் நிறைவேறவில்லை. வேதாகமத்திருந்து மட்டுமல்ல, வரலாற்றிருந்தும் நாம் இதைத் தீர்மானிக்கிறோம்.

சில தீர்க்கதரிசனங்கள் நிறைவேறியிருக்கின்றனவா என்பதை அறியும்படிக்கு, நாம் பொதுவான வரலாற்று நூல்கள் போன்ற வெளியேயுள்ள ஆதாரங்களையும் நாட வேண்டும். பொதுவான வரலாறு தேவனால் ஏவப்பட்டு எழுதப்படவில்லை என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். அது சில வேளைகளில் தேவனுடைய வார்த்தையோடு ஒத்துப்போகாமல் இருக்கலாம். ஆனால் வேதாகம மாணவன் எப்போதுமே தேவனுடைய வார்த்தையையே மிகச் சரியானது என்று ஏற்றுக்கொள்ள வேண்டும்.

3. **தீர்க்கதரிசனத்தின் மொழி நடையை உணர்ந்துகொள்ளுங்கள்**
தீர்க்கதரிசனங்களை ஆய்வுசெய்யும்போது நாம் உருவக அணிகளையும் (நமது ஆண்டவர் "யூதா கோத்திரத்துச் சிங்கம்" என்றும் "தேவ ஆட்டுக்குட்டியானவர்" என்றும் வெளிப்படுத்தல் 5ஆம் அதிகாரத்தில் கூறப்படுகிறார்), குறியீடுகளையும் (வெளிப்படுத்தல் 13ஆம் அதிகாரத்தில் வரும் "மிருகம்" போன்றவை), வடிவங்களையும் (யாத்திராகமம் 25-40 அதிகாரங்களில் காணப்படும் ஆசரிப்புக் கூடாரம் போன்றவை) கருத்தில் கொள்ள வேண்டும். முதல் நாம் தீர்க்கதரிசன மொழி குறித்த வேதாகம விளக்கத்தைத் தேட வேண்டும்.

யூகம் செய்வது அர்த்தம் கூறுவது அல்ல என்பதை நினைவில் வைத்திருங்கள். தீர்க்கதரிசன மொழியைக் குறித்து ஒருவர் தானாகவே அனுமானிப்பதினாலேயே யூகங்கள் உண்டாகின்றன. மனிதன் தனது தனிப்பட்ட யூகங்களை "கோட்பாடுகளாக" மாற்றும்படி சோதிக்கப்படலாம். என்றாலும், பொருத்தமான வேளை வரும்வரையில் சில தீர்க்கதரிசன மொழிகளைப் புரிந்து கொள்ள முடியாது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. (தானியேல் 12:4, 8-10).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4, பகுதி 3F

1. **வாசிக்கவும் 2 பேதுரு 1:19. தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக இயேசு கிறிஸ்து பிறந்தார், மரித்து மறுபடியும் எழுந்தபடியால், தீர்க்கதரிசன வார்த்தையைக் குறித்து நாம் என்ன சொல்ல முடியும்?**

2. **வாசிக்கவும் 2 பேதுரு 1:20. உண்மையான தீர்க்கதரிசனத்தின் முக்கியம் என்ன?**

3. **வாசிக்கவும் 2 பேதுரு 1:21. உண்மையான தீர்க்கதரிசனம் யாருக்கு எப்படிக் கொடுக்கப்பட்டது?**

4. **வாசிக்கவும் லூக்கா 4:18-21 மற்றும் ஏசாயா 61:1-2. அதே நேரத்தில் இயேசு சொன்ன எது நடந்தது?**

5. **வாசிக்கவும் ஆதியாகமம் 6-8. தீர்க்கதரிசனம் 6:3 இல் கொடுக்கப்பட்டது. அது நிறைவேறியதா?**

6. **வாசிக்கவும் ஏசாயா 7:14 மற்றும் மத்தேயு 1:18-25. இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியதா?**

7. **வாசிக்கவும் யோவான் 14:1-3. இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியதா?**

8. **வாசிக்கவும் 1 தெசலோனிக்கேயர் 4:16-17. இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியதா?**

9. **வாசிக்கவும் சகரியா 14:1-8. இந்தத் தீர்க்கதரிசனம் நிறைவேறியதா?**

10. **1 தெசலோனிக்கேயர் 4:16-17 மற்றும் சகரியா 14:1-8 இல் சித்தரிக்கப்பட்ட வித்தியாசமான சம்பவங்களை தீர்மானிக்க நாடுங்கள்.**

11. **வாசிக்கவும் வெளிப்படுத்தல் 5:4-6. இயேசு கிறிஸ்துவை விளக்கும்படி, வித்தியாசமான உருவக வாக்கியங்களைப் பட்டியடு..**

பகுதி 4
விதி நான்கு

விதி நான்கு: தேவனுடைய வார்த்தையை சரியாக உபயோகித்து கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதை நாடுங்கள்

யோவான் 7:17 வசனத்தில் இயேசுவானவர் கூறும் நேரடியான வாசகத்திருந்து இந்த விதி வருகிறது. நாம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தையை "அறிய" விரும்புவோமானால், அவருடைய வார்த்தையின்படி "செய்ய" சித்தம்கொண்டவர்களாக இருக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையை ஆய்வுசெய்வதில் அறிவுபூர்வமான நேர்மையின் அவசியத்தை இந்தக் கொள்கை வயுறுத்துகிறது. நாம் நமது விருப்புவெறுப்புகளையும், நாமே உருவாக்கிக் கொண்ட கருத்துக்களையும் ஒதுக்கிவைத்துவிட்டு, நேர்மையுடன் தேவ ஆவியானவர் நாம் தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளும்படி செய்ய நாடுங்கள் (1 கொரிந்தியர் 2:14). இந்தக் கொள்கையைச் செயல்படுத்துவது என்றால் தனிப்பட்ட முறையில் நமது ஆத்துமாவை ஆராய்ந்துபார்க்க வேண்டும். எடுத்துக்காட்டாக, நமது செயல்நோக்கங்களின் தூய்மையைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும் (2 கொரிந்தியர் 13:5).

தனிப்பட்ட தவறான அபிப்பிராயங்களைப் பிடித்துப் கொண்டோ அல்லது வேண்டாத கருத்துக்களை உறுவாக்கிக் கொண்டோ அவைகளுக்கு வேதாகமரீதியான "நிரூபணத்தைத்" தேடுவது எளிதான காரியம்தான். இப்படிப்பட்ட அணுகுமுறையோடு நாம் செல்லுவோமானால் கிட்டத்தட்ட எதையும் "நிரூபிக்க" முடியும். ஏனென்றால், அது மற்ற திசைகளை நோக்கிச் செல்லும்படி வயுறுத்தும் வசனங்களையும், சமநிலையை நாடும்படி நம்மைத் தூண்டும் பகுதிகளையும் பார்க்க முடியாதபடி நமது பார்வையைக் குருடாக்கிவிடுகிறது.

எடுத்துக்காட்டாக, தனக்கு அதிக உண்மையுள்ள போர்வீரனாக இருந்தவனுடைய மனைவியான பத்சேபாளிடம் தாவீது நடந்துகொண்ட முறையை ஒருவர் பார்க்கலாம் (2 சாமுவேல் 11). அதிகாரத்திலுள்ள ஒருவர் கொலையும், வேசித்தனமும் பண்ணுவது ஏற்றுக்கொள்ளக் கூடிய காரியங்கள் தான் என்பதை நிரூபிக்க ஒருவர் இந்தப் பகுதியைப் பயன்படுத்தலாம். ஆனால் அவர் அடுத்த அதிகாரத்தையும் சேர்த்து வாசித்து அதைப் "பத்துக் கற்பனைகளோடு" (யாத்திராகமம் 20:1-17) ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்; அப்போது கொலையும், வேசித்தனமும் நமது தேவனால் ஏற்றுக்கொள்ளக்கூடாத காரியங்கள் என்பதை அவர் உணர்ந்துகொள்ளுவார். தாவீதின் மனந்திரும்புதலைத் தொடர்ந்து தேவன் அவன்மீது கிருபை காட்டியபடியினால்தான் அவனால் தொடர்ந்து அரசபதவியில் இருக்க முடிந்தது (சங்கீதம் 51).

A. கொள்கை பதினைந்து: சரியாகப் புரிந்துகொண்டால் மட்டுமே சரியாகச் செயல்பட முடியும்

தேவனுடைய வார்த்தையைச் சரியாகப் புரிந்துகொள்ளுவதினால், அதைச் சரியாகப் பின்பற்ற முடிய வேண்டும். பல்வேறு விதமான செயல்படுத்துதல்கள் இருக்கலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட வசனத்துக்கு ஒரு சரியான அர்த்தம் மட்டுமே இருக்க முடியும். எடுத்துக்காட்டாக, 1 தீமோத்தேயு 3:1-7 வசனங்கள் சபையின் "கண்காணிக்குரிய" தகுதிகளை எடுத்துக் கூறுகின்றன. அந்தப் பதவிக்கு வரக்கூடிய ஒருவரின் உண்மையான தகுதிகளே இதற்குரிய அர்த்தமாகும். செயல்படுத்துதலைப் பார்க்கும்போது, "கண்காணி" "நூதன சீஷனாக" இருக்கக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பட்டியடப்பட்டுள்ள தகுதிகள் முதிர்ச்சியையே காட்டுகின்றன. எனவே சபையில் பணிபுரிவோர், குறிப்பாக தலைவர்கள் முதிர்ச்சியையே நாட வேண்டும்.

தேவனுடைய வார்த்தையின்படி சரியாகச் செயல்படுவது என்றால், ஒருவர் இப்போது சீர்தூக்கிப் பார்க்கப்பட்ட இந்த விதிகளையும், கொள்கைகளையும், நேர்மையாகவும் கவனமாகவும் பயன்படுத்துவதாகும். ஒருவர் விசுவாசத்தையும் கிருபையையும் அடிப்படையாகக் கொண்ட தேவனோடுள்ள உறவைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு தேவனைக் குறித்த அறிவை நாட வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் வல்லமை மற்றும் ஊழியத்தின் மூலமாக ஒருவர் இயேசு கிறிஸ்துவை நாட வேண்டும்.

தெளிவான பகுதி ஒருவருடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக ஆகிறது. சீஷன் நீதியான ஆனால் பிரமாணவாதம் இல்லாத வாழ்க்கை வாழும்படியாகவும், எல்லாவற்றைக் குறித்தும் கிறிஸ்துவின் மனோபாவத்தைப் பகிர்ந்துகொள்ளும்படியாகவும், தேவனுடைய வார்த்தை இசைவைத் தீர்மானிக்கும்படி (வேதவசனத்தைக் குறித்த அவருடைய அறிவு அவருக்கு அனுமதிக்கும் வரையிலும்) நாடுகிறார்.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4, பகுதி 4A

1. **வாசிக்கவும் 1 தீமோத்தேயு 3:1-7. ஒரு கண்காணிக்கான பட்டியடு.**

2. **போதகர்களாக விரும்புபவர்கள், இந்த ஒவ்வொரு தேவைகளைக் குறித்தும் தங்களுக்குத் தாங்களே நிதானிக்கவும்.**

B. சரியான செயல்படுத்துதலுக்கு ஐந்து படிகள்

படி 1: புரிந்துகொள்ளுதலுக்காகவும், நினைவில் வைத்துக்கொள்ளும்படியாகவும், ஆவிக்குரிய கொள்கைகளைச் சரியாகச் செயல்படுத்துவதற்காகவும் ஜெபியுங்கள் (யாக்கோபு 1:5).

படி 2: குறிப்பிட்ட பகுதியைச் சரியாகவும், முழுமையாகவும் புரிந்துகொள்ளும்படி நாடுங்கள். வார்த்தைகளுக்கு வாக்கியங்களோடும் வாக்கியங்களுக்கு பத்திகளோடும், பத்திகளுக்கு அதிகாரங்களோடும், அதிகாரங்களுக்குப் புத்தகங்களோடும் உள்ள தொடர்பை ஆய்வுசெய்ய வேண்டும் (2 தீமோத்தேயு 2:15).

படி. 3: அந்தக் குறிப்பிட்ட பகுதிக்கு அர்த்தம் காண்பதிருந்து வரும் ஆவிக்குரிய கொள்கையைத் தீர்மானியுங்கள். ஒரு ஆவிக்குரிய கொள்கை எல்லாக் கால கட்டங்களையும் கலாச்சாரங்களையும் கடந்து நிற்கிறது. எடுத்துக்காட்டாக, திருமணத்துக்கு அப்பாற்பட்ட பாலுறவு எல்லாக் காலகட்டங்களிலும், கலாச்சாரங்களிலும் பாவமாகும். பாலுறவில் அசுத்தத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதே ஆவிக்குரிய கொள்கையாகும் (ரோமர் 13:8-10).

படி 4: வேதாகமத்தின் எந்தக் கொள்கையையாவது நீங்கள் மீறியிருக்கிறீர்களா என்று நேர்மையுடன் உங்கள் வாழ்க்கையைச் சோதித்துப் பாருங்கள். தவறைச் சரிசெய்யும்படி தேவனுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள். இதற்காகப் பிழையை நேர்மையுடன் ஆண்டவருக்கு அறிக்கையிட வேண்டும் (1 யோவான் 1:9). ஒருவர் தனது விசுவாச நடக்கையைப் புதுப்பிக்க வேண்டும் (கொலோசெயர் 2:6). மாணவன் 51ஆம் சங்கீதத்தை வாசித்து, பத்சேபாளுடன் தான் செய்த பாவத்தைக் குறித்துத் தாவீது மனந்திரும்பிய விதத்தைப் பார்க்க வேண்டும் (2 கொரிந்தியர் 13:5).

படி. 5: கிருபையிலும் விசுவாசத்திலும் அப்போஸ்தலனாகிய பவுல் ***"ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே...அவருக்குள் நடந்துகொள்ளுங்கள்"*** என்று எழுதியிருக்கிறார் (கொலோசெயர் 2:6). நாம் அவரைக் கிருபையினாலே விசுவாசத்தின்மூலமாகப் பெற்றுக்கொண்டோம் (எபேசியர் 2:8-9). எனவே, நாம் பெற்றுக்கொண்ட கிருபைக்கு ஏற்றபடியான செயல்களைச் செய்ய வேண்டும் (எபேசியர் 2:10).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4, பகுதி 4B

1. **வாசிக்கவும் யாக்கோபு 1:5. நாம் எதற்காக ஜெபிக்க வேண்டுமென்று இது கூறுகிறது?**
2. **வாசிக்கவும் 2 தீமோத்தேயு 2:15. வேதத்தைப் புரிந்துகொள்ளவும் செயல்படுத்தவும் அவசியமானது எது?**
3. **1 தீமோத்தேயு 3:1-7 சம்பந்தமாக, எதை முக்கியமான ஆவிக்குரிய கொள்கையாக கருதுகிறீர்கள்?**
4. **இந்தக் குணாதிசயங்களெல்லாம் ஒரு கண்காணிக்குத் தேவைப்படுவதால், எந்த விசுவாசிக்கும் அது விரும்பப்படத்தக்கதா?**
5. **இந்தக் கொள்கைகளின் அடிப்படையில் உங்கள் சொந்த வாழ்க்கையை சீர்தூக்கிப் பாருங்கள்.**
6. **நீங்கள் கர்த்தரிடம் அறிக்கை செய்ய வேண்டிய ஏதாவது பாவம் உண்டா? அப்படியானால், அதைச் செய்யுங்கள்.**
7. **உங்கள் விசுவாசப் பாதையில் புதுப்பிக்கப் படவேண்டிய பகுதிகள் ஏதாவது உண்டா? அப்படியானால், அதைச் செய்ய விரும்புகிறீர்களா?**

C. சரியாக அர்த்தம் காண்பதற்கு ஆறு இடையூறுகள்

தேவனுடைய வார்த்தைக்குச் சரியாக அர்த்தம் காண்பதற்குப் பல இடையூறுகள் இருக்கலாம். அர்த்தம் காண்பதில் பிழைகளுக்கு இட்டுச் செல்லும் அப்படிப்பட்ட இடையூறுகள் ஆறினைப் பற்றிப் பார்ப்போம். எவரும் பிழைசெய்யக் கூடாதவர் அல்ல என்பதை நினைவில் வைத்திருங்கள். 1 கொரிந்தியர் 10:12 வசனத்தில் பவுல் கொடுக்கும் எச்சரிப்பை நினைவில் வைத்திருப்பது ஞானமுள்ள காரியமாகும்: ***"இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்."***

1. மாம்சீகம்

மாம்சீகமே சரியாக அர்த்தம் காண்பதற்கு முதல் இடையூறாக இருக்கிறது. இது தொடர்ந்து பாவகரமான வாழ்க்கை முறையில் ஈடுபடுவதாகும், இது அடிக்கடி "மாம்சத்திற்குரியவர்கள்" என்று சொல்லப்பட்டிருக்கிறது (1 கொரிந்தியர் 3:3). விசுவாசி பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு, அவருடைய கனியைக் காண்பதற்குப் பதிலாக, "மாம்சத்தின் கிரியைகளின்" மூலமாகப் பாவத்தை நாடுவதைத் தெரிந்து கொண்டிருக்கிறான் என்பது இதற்கு அர்த்தமாகும் (கலாத்தியர் 5:19-23). இது அறிக்கையிடப்படாத பாவத்தையும் (1 யோவான் 1:9), மனந்திரும்புதல் குறைபாட்டையும் கொண்ட (2 கொரிந்தியர் 12:21) வாழ்க்கையாகும்.

தேவனுடைய வார்த்தையை ஆய்வுசெய்யும் ஒருவர் மாம்சத்தின் கிரியைகளில் ஈடுபடுவாரானால் - விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் போன்ற காரியங்களில் ஈடுபடுவாரானால் (கலாத்தியர் 5:19-21) - அவருடைய அர்த்தம் கூறுதல் பிழையானதாகவே இருக்கும். எடுத்துக்காட்டாக, பாலுறவுத் தவறுகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் ஒரு ஆசிரியர் இந்தக் கருப்பொருளைக் கொண்ட பகுதிகளுக்குப் பிழையான அர்த்தத்தைக் கொடுக்க வேண்டும் என்ற மனோபாவத்தையே கொண்டிருப்பார்.

சத்தியமானது பரிசுத்த ஆவியானவரால் வெளிப்படுத்தப்படுகிறபடியினாலும் (யோவான் 16:13). "மாம்சத்திற்குரிய" மனிதன் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் இல்லாத ஒரு வாழ்க்கைப் பாதையில் செல்லும்படி தெரிந்துகொண்டிருக்கிறபடியினாலும் (அது குறுகிய கால கட்டத்துக்கானாலும் சரி) "மாம்சத்திற்குரிய" மனிதன் தேவனுடைய வார்த்தையை ஆவிக்குரிய பிரகாரமாகச் சீர்தூக்கிப் பார்க்காதபடியால், சத்தியத்தை அவன் தவறாகவே புரிந்துகொள்ளுவான்.

"மாம்சத்திற்குரிய" மனிதன் "ஜென்மசுபாவமான" மனிதனைப் போருந்தாலும் (1 கொரிந்தியர் 2:14) சிறிய வேறுபாடுகள் உள்ளன. "ஜென்மசுபாவமான" மனிதன் என்பது அவிசுவாசியைக் குறிக்கிறது; அவன் ***"தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான்"*** (1 கொரிந்தியர் 2:14). "ஜென்மசுபாவமான" மனிதனால் பரிசுத்த ஆவியானவரை அணுக முடியாது. ஆனால் "மாம்சத்திர்குரிய" மனிதனோ ஆவியானவரோடு ஐக்கியம் கொள்ளாத விசுவாசியாக இருக்கிறான். இருவருமே தேவனுடைய வார்த்தையைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியாது.

2. பெருமை

பெருமையுள்ளவன் புகழையும் அங்கிகரிப்பையும் தேடுகிர். அவன் மற்றவர்களால் பாராட்டப்படுவதை விரும்புகிறான்.பெருமையும் கூடப் பிழையாக அர்த்தம் காண்பதற்கு வழிநடத்தக் கூடும். நீதிமொழிகள் 16:18 வசனத்தில் நாம் இவ்வாறு எச்சரிக்கப்பட்டிருக்கிறோம்; ***"அழிவுக்கு முன்னானது அகந்தை; விழுதலுக்கு முன்னானது மனமேட்டிமை"*** (நீதிமொழிகள் 16:18). இது அர்த்தம் காண்பவருக்கு நல்ல ஆலோசனையாகும்.

நாம் தேவனுடைய வார்த்தையை ஊக்கமாக ஆய்வுசெய்ய வேண்டும் என்பது மட்டுமின்றி, அதை ***"நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவர்களாகவும்"*** இருக்க வேண்டும் (2 தீமோத்தேயு 2:15). நமது உள்ளறிவுக்காகப் பாராட்டப் பெறுவதற்காக அல்ல, ஆண்டவர்மீதும் மற்றவர்கள் மீதும் நாம் கொள்ளும் அன்பே நமது ஆய்வை வழிநடத்த வேண்டும் (மாற்கு 12:29-31). நமது தனிப்பட்ட அறிவை விரிவாக்கும் "புதிதான" ஒன்றைக் கற்றுக்கொள்ளுவது ஆவிக்குரிய வளர்ச்சிக்கு அத்தியாவசியமானதாகும். ஆனால் மற்றவர்களுக்கு முன்பாக நமது புதிய விவரங்களைக் காட்டிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு தேவனுடைய வார்த்தையை ஆய்வுசெய்வோமானால், நமது செயல்நோக்கம் தூய்மையாக இராதபடியால், நமது முயற்சி பயன்தராது.

தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளுவதில் பரிசுத்த ஆவியானவரின் அடிப்படைப் பங்கை நாம் மறந்துவிடாதபடிக்கு, நமது ஆய்வின் "செயல்முறையைக்" குறித்து அதிகமாகப் பெருமைப்பட்டு, அது கண்டிப்பாகச் சரியான விவரங்களைக் கொடுக்கும் என்று நினைத்துவிடக் கூடாது.

3. பாரபட்சம்

சரியாக அர்த்தம்காண முடியாமைக்கு மூன்றாவது இடையூறு பாரபட்சமாகும். பாரபட்சம் என்பது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் ஒருவர் கொள்ளும் முன் அனுமானமாகும். அது அடிப்படையில் எதிர்மாறை உணர்வோடு வேதாகமப் பகுதியைத் திரித்துக் கூறும்படி செய்கிறது: "ஒரு காரியம் இப்படியிருப்பதை நான் விரும்பவில்லை." இப்படிப்பட்ட மனோபாவம் வலுவாக இருக்குமானால், அது தேவனுடைய வார்த்தையின் பகுதிகளைத் திரித்துக் கூறும்படி செய்யலாம்.

வருந்தக்க விதத்தில், சிலர் தங்கள் சொந்த விருப்புவெறுப்புகளைப் பயன்படுத்தி, இனப்பாகுபாடு போன்ற பயங்கரமான மனோபாவங்களை தேவனுடைய வார்த்தையுடன் நியாயப்படுத்த முயன்றிருக்கிறார்கள். ஆனால் வேதாகமமோ தெளிவாக அதற்கு எதிராக இருக்கிறது.

> ***ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனைபேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே. யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை, நீங்களெல்லாரும் இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள். நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால், ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தத்தின்படியே சுதந்தரராயும் இருக்கிறீர்கள்*** (கலாத்தியர் 3:27-29)

தேவன் பட்சபாதம் கொண்டவராக இருந்திருப்பாரானால், யூதர்களல்லாத எந்தப் புறஜாதியாரும் இரட்சிக்கப்பட்டிருக்கமாட்டார்கள்.

4. முரண்படாத தன்மையில் குறைவுபடுதல்

நாம் தேவனுடைய வார்த்தைக்கு அர்த்தம்காண முயலும்போது, பல "ஆவிக்குரிய" செயல்பாடுகளில் முரண்படுவோமானால், நாம் பிழையாக அர்த்தம்கூறும் நிலைக்குத் தள்ளப்படலாம்.

a. உறுதியான தன்னாய்வு மற்றும் அறிக்கையிடுதன் பழக்கம்

2 கொரிந்தியர் 13:5 வசனம் *"நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்"* என்று சொல்லுகிறது. நாம் ஆண்டவருடைய தகுநிலைகளோடு ஒப்பிடும்படியாக, நமது செயல்களை மட்டுமின்றி, செயல்நோக்கங்களையும் அவருக்கு முன்பாக வைக்க வேண்டும். நாம் இதில் தோற்றுவிட்டோம் என்று அறியும்போது, அந்தத் தோல்வியை ஆண்டவருக்கு முன்பாக வைத்து, சுத்திகரிக்கப்பட வேண்டும். 1 யோவான் 1:9 வசனம் *"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் (தேவன்) உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"* என்று சொல்லுகிறது. இந்த வழக்கத்தைச் செயல்படுத்துவதில் தவறுவது மாம்சீகத்தன்மைக்கு வழிநடத்துகிறது. அது தேவனுடைய வார்த்தைக்கு அர்த்தம் காண்பதில் பிழை ஏற்படும்படி செய்கிறது.

b. உறுதியாக தொடர்ந்து ஜெபிக்கும் பழக்கம்

மத்தேயு 7:7-8 வசனங்கள் *"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும், ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்"* என்று சொல்லுகின்றன. தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொண்டு, நினைவில் வைத்திருப்பதற்காக தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். இந்தப் பழக்கத்தைச் செயல்படுத்துவதில தவறுவது நீங்கள் யாருடைய வார்த்தைகக்கு அர்த்தம்காண முயலுகிறீர்களோ அந்தப் பிதாவாகிய தேவனோடு ஐக்கியத்தில் பிளவை உண்டாக்கிவிடுகிறது.

c. உறுதியாக தொடர்ந்து ஆய்வுசெய்யும் பழக்கம்

நாம் தேவனுடைய வார்த்தையைச் சரியாகக் கையாள வேண்டுமானால் ஜாக்கிரதையோடும் விழிப்போடும் அதை ஆய்வுசெய்ய வேண்டும் என்று 2 தீமோத்தேயு 2;15 வசனம் கூறுகிறது: *"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு."* வேதாகமத்தை ஆய்வுசெய்வதில் உறுதி குறையும் போது, ஒரு குறிப்பிட்ட வசனம் இருக்கும் திட்டவட்டமான பின்னணியை நினைவில் வைத்துக் கண்டுபிடிப்பதில் தோல்விகள் உண்டாகின்றன.

5. பிழையான செயல்முறை

நாம் அர்த்தம்காணும் செயல்முறைகூட நாம் சரியாக அர்த்தம்காண்பதற்கு இடையூறாக இருக்கலாம். வேதாகமத்தைக் குறித்த நமது அடிப்படை நம்பிக்கைகள் கூட நாம் அதைப் புரிந்துகொள்ளும் வழியை நிச்சயமாகப் பாதிக்கும். எடுத்துக்காட்டாக,

நாம் முழு வேதாகமமும் தேவனால் ஏவப்பட்டு எழுதப்பட்டது என்று விசுவாசிக்காவிட்டால் (2 தீமோத்தேயு 3:16-17), அற்புதக் கிரியைகளுக்கு அறிவியன் அடிப்படையில் பகுத்தறிவு விளக்கம் கொடுக்க முயலுவோம். முழு வேதாகமமும் வார்த்தைக்கு வார்த்தை உண்மை என்று நாம் விசுவாசிப்போமானால், அற்புதங்களுக்கு வரலாற்றில் தேவனுடைய குறுக்கீடுகள் என்றே அர்த்தம் கூற வேண்டும்.

ஒரு சில குறிப்பிட்ட கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே அர்த்தம்கூறும் சிறப்பான வரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நம்பும் சிலரும் இருக்கிறார்கள். என்றாலும், எல்லா விசுவாசிகளும் ஆசாரியர்களே என்று வேதாகமம் சொல்லுகிறது (1 பேதுரு 2:5, 9). ஆசாரியர்களாக நாம் தேவனுடைய சிங்காசனமிருக்கும் ஸ்தலத்துக்குச் செல்லக்கூடியவர்களாக இருக்கிறோம் (எபிரெயர் 4:16). அங்கே நாம் தேவனாகிய பரிசுத்த ஆவியானவரிடமிருந்து நேரடியாகப் போதனையைப் பெறலாம் (1 கொரிந்தியர் 2:15).

மற்றவர்களோ வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் காண வேண்டிய பகுதிகளுக்கு உருவக அல்லது புராண அர்த்தங்களைக் கூறி, தேவனுடைய வார்த்தையையே திரித்துப்போடுகிறார்கள். உருவகம் என்பது வேதாகமப் பகுதிக்கு வேறுபட்ட அர்த்தம் இருக்கிறது என்று சொல்லுகிறது. நாம் நோவாவின் காலத்திய பெருவெள்ளம் உலகளாவிய பேரழிவு என்று ஏற்றுக்கொள்ளாமல், அது மனுக்குலம் அனுபவிக்கவேண்டிய பாடுகள் குறித்த ஒரு சித்திரம் என்று உருவகப் பொருள் கூறுவோமானால், அது பிழையாகும்.

புராணங்கள் என்பவை ஓரளவு உண்மையையும், மீதிக் கட்டுக்கதைகளையும் கொண்டதாகும். நிகழ்ச்சிகள் அதிகமாக மிகைப்படுத்திக் கூறப்படுகின்றன. நோவாவின் ஜலப்பிரளயம் உண்மையில் ஒரு சிறிய பகுதியில் நடந்தது என்றும், பின்னர் அது உலகளாவிய வகையில் நடந்து என்று மிகைப்படுத்தப்பட்டது என்றும் அர்த்தம் கூறுவோமானால் அது பிழையாகும். புராணம் என்பது ஓரளவு உண்மையையும், அதைச் சுற்றிலும் பொய்களையும் கொண்டிருக்கிறது என்று சொல்லலாம்.

சிலர் இயேசு கிறிஸ்து, சிலுவை மற்றும் உயிர்த்தெழுதலுக்கும்கூட உருவக மற்றும் புராண அர்த்தங்களைக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட அர்த்தங்கள் உண்மையாக இருக்குமானால், இயேசுவானவர் மெய்யாகவே நமது பாவங்களுக்காக மரிக்கவில்லை; அவர் அடக்கம் பண்ணப்பட்டு, நாம் மீட்கப்படும்படியாக உயிரோடு எழவில்லை என்றாகிவிடும். இந்த நிகழ்ச்சிகள் மெய்யாகவே நடக்கவில்லை என்றால் நாம் தீவிரமான துன்பத்தில் இருக்கிறோம் என்று பவுல் அப்போஸ்தலன் சொல்லுகிறார் (1 கொரிந்தியர் 15).

வார்த்தைகளில் காணப்படும் உருவக அணிகளைக் கருத்தில் கொள்ளாமல், முழுவதுமாக வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் கூறுவதும் சரியாக வியாக்கியானம் செய்வதற்கு இடையூறாக இருக்கும். எடுத்துக்காட்டாக, சாலொமோனின் உன்னதப்பாட்டு அற்புதமான இலக்கியமாக இருக்கிறது. அதற்கு வார்த்தைக்கு வார்த்தை அர்த்தம் கூறுவோமானால், அர்த்தமே இல்லாமல் போய்விடும். எனவே அர்த்தம் காணும்போது, உருவக அணிகளைக் கண்டுகொள்ளும்படி சரியான வழிமுறையை நாம் பின்பற்ற வேண்டும். நாம் இதைப்பற்றிப் பின்னர் இந்த நூல் விரிவாகப் பார்ப்போம்.

6. **பிழையாகப் பகுத்தறிதல்**

மானிடப் பகுத்தறிவைக் கொண்டு நித்திய தேவனை ஒருபோதும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது. மானிடப் பண்புகளைக் கொண்டு நம்மால் தேவனை முழுமையாக அறிந்து கொள்ள முடியுமானால், நாம் நிச்சயமாக இறுமாப்புக் கொண்டவர்களாக ஆவோம். நீதிமொழிகள் 3:5-7 வசனங்கள் ***"உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார். நீ உன்னை ஞானியென்று எண்ணாதே; கர்த்தருக்குப் பயந்து, தீமையை விட்டு விலகு"*** என்று சொல்லுகின்றன. நாம் நமது சொந்த அறிவினால் அல்ல, விசுவாசத்தினால் நடக்க வேண்டும் என்றே தேவன் விரும்புகிறார்.

ஒருநாள் நாம் நமது ஆண்டவரை முழுமையாக அறிந்துகொள்ளுவோம் என்ற வாக்குத்தத்தம் நமக்கு அருளப்பட்டிருக்கிறது. 1 கொரிந்தியர் 13:12 வசனத்தில், பவுல் அப்போஸ்தலன் ***"இப்பொழுது கண்ணாடியிலே நிழலாட்டமாய்ப் பார்க்கிறோம், அப்பொழுது முகமுகமாய்ப் பார்ப்போம்; இப்பொழுது நான் குறைந்த அறிவுள்ளவன், அப்பொழுது நான் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவேன்"*** என்று எழுதியிருக்கிறார். வேதாகமத்தைக் குறித்து நாம் பெற்றிருக்கும் எல்லாப் பதில் கிடைக்காத கேள்விகளுக்கும் நாம் நமது ஆண்டவரை முகமுகமாகக் காணும்போது பதில் கிடைக்கும் (2 கொரிந்தியர் 3:18).

முதலாம் நூற்றாண்டு யூதர்கள் தங்கள் பகுத்தறியும் திறனை முழுமையாக நம்பியிருந்தபோது அது அவர்களுக்குப் பிரச்சினைகளைக் கொண்டுவந்தது. சோகமான காரியம் என்னவென்றால் இயேசுவே மேசியா என்பதை அவர்கள் காணத்தவறிவிட்டார்கள். மத்தேயு 22:41-46 வசனங்களில் இயேசுவானவருக்கும் பரிசேயர்களுக்கும் இடையே நடந்த உரையாடலைப் பார்ப்போம்:

> ***பரிசேயர் கூடியிருக்கையில், இயேசு அவர்களை நோக்கி: கிறிஸ்துவைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், அவர் யாருடைய குமாரன்? என்று கேட்டார். அவர் தாவீதின் குமாரன் என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், தாவீது பரிசுத்த ஆவியினாலே அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்கிறது எப்படி? நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்று கர்த்தர் என் ஆண்டவரோடே சொன்னார் என்று சொல்லியிருக்கிறானே. தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்லியிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி என்றார். அதற்கு மாறுத்தரமாக ஒருவனும் அவருக்கு ஒரு வார்த்தையும் சொல்லக் கூடாதிருந்தது. அன்றுமுதல் ஒருவனும் அவரிடத்தில் கேள்விகேட்கத் துணியவில்லை.***

இயேசுவானவர் சங்கீதம் 110:1 ஆம் வசனத்தை மேற்கோளாக எடுத்துக் கூறி பரிசேயர்களிடம் மேசியா எப்படி ஒரே வேளையில் ''தாவீதின் குமாரனாகவும்'', தாவீதின் ''ஆண்டவராகவும்''து இருக்க முடியும் என்று கேட்டார். மேசியா தேவனாகவும், மனிதனாகவும் இருக்கிறார் என்பதே இதற்குரிய பதிலாகும். இப்படிப் பகுத்தறிதல் மானிடப் பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட காரியம் அல்லவா?

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 4, பகுதி 4C

1. வாசிக்கவும் 1 கொரிந்தியர் 3:3. “மாம்சீகம்” அல்லது “சரீர இச்சைகளின்படி” என்று எந்த இரண்டு காரியங்களை பவுல் கூறுகிறார்?

2. வாசிக்கவும் கலாத்தியர் 5:19-21. வைராக்கியங்கள் மற்றும் சண்டைகள் எதைக் குறிக்கிறது?

3. வைராக்கியம் அல்லது சண்டையில் தெடர்புடைய ஒருவர் எப்படி அதன் அர்த்தத்தை மாற்ற முயற்சி செய்வார்?

4. வாசிக்கவும் நிதீமொழிகள் மற்றும் 1 கொரிந்தியர் 8:1. நாம் எதை நம்பக் கூடாது ஏன்?

5. நம்முடைய படிக்கும் வழக்கம் அல்லது முறை பற்றி பெருமையடைந்து மாம்சீகமாகவும் வியாக்கினம் செய்வதில் குறைபடவும் கூடுமா?

6. நம்முடைய விருப்பங்களிருந்து வேதாகமத்தை வியாக்கினம் செய்ய முயற்சி செய்ய வேண்டுமா? ஏன்?

7. நாம் தேவனுடைய வார்த்தையை ஆராய்ச்சி செய்வதில் மிகவும் முக்கியமானது எது?

8. வாசிக்கவும் 2 கொரிந்தியர் 13:5 மற்றும் 1 யோவான் 1:9. நம்முடைய ஆராய்ச்சிக்கு முக்கியமான இரண்டு காரியங்கள் எவை?

9. வாசிக்கவும் மத்தேயு 7:7-8 மற்றும் யாக்கோபு 1:5. நம்முடைய ஆராய்ச்சியில் நாம் எதை நாட வேண்டும்?

10. நம்முடைய ஆராய்ச்சியில் நாம் ஏன் தொடர்ந்து உறுதியாக நாட வேண்டும்?

11. வாசிக்கவும் 2 தீமோத்தேயு 3:16-17. சரியான வியாக்கினத்தை நாட ஆரம்பிக்குமுன் நாம் வேதத்தைப் பற்றிய எதை விசுவாசிக்க வேண்டும்?

12. வாசிக்கவும் ஏசாயா 55:8-9. தேவனுடைய வார்த்தைக்கு மனித அறிவைப் பயன்படுத்த முயற்சி செய்யும் போது நாம் எதை நினைவு கூற வேண்டும்?

13. வாசிக்கவும் யாக்கோபு 3:14. செயல்படுத்துவதில் எந்த மூன்று காரியங்கள் தோல்வியைக் கொண்டுவிடுகின்றன.

D. செயல்படுத்துவதில் தவறுவதற்கு எட்டு வழிகள்

இந்த எட்டு வழிகளையும் எளிமையாகக் கொடுத்துள்ளோம். ஆனால் தேவனுடைய வார்த்தையை ஆய்வுசெய்யும் மாணவன் இவைகளை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏனென்றால் ஒவ்வொன்றிலும் தோல்வியின் வித்தியாசமான படிகள் காணப்படுகின்றன. மறுபடியுமாக நமது வழிநடத்துதலுக்காக ஒரு தெளிவான வசனத்தைப் பார்ப்பது நலமாக இருக்கும். நீதிமொழிகள் 3:5-6 வசனங்கள் ***“உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்”*** என்று சொல்லுகின்றன.

1. கைக்கொள்ளுவதற்கான பலத்தைப் பெறும்படி ஆண்டவரைச் சார்ந்திருக்கத் தவறுதல்.

2. தேவனுடைய சத்தியத்துக்கு முரண்பாடான மனோபாவங்களையோ அல்லது செயல்களையோ மாற்றுவதை எதிர்த்தல்.

3. சரியானவை என்று அறியப்பட்ட கொள்கைகளுக்கும் கீழ்ப்படியாமல் இருத்தல்.

4. உலகத் தகுதிநிலைகளுக்கு ஒத்துப்போக வேண்டும் என்ற அழுத்தத்துக்கு இடம்கொடுத்தல்.

5. உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வார்த்தையைச் செயல்படுத்துவதில் ஆர்வம் குறைவுபடுதல்.

6. பிரமாணவாதத்தின்படியோ அல்லது அப்படியொன்று இல்லை என்ற எண்ணத்துடனோ பாவத்தைப் பார்த்தல்.

7. ஞானமுள்ள தெரிவுகளுக்குப் பதிலாக உணர்வுகளுக்கு இடம்கொடுத்தல்.

8. முன்அனுமானம், பட்சபாதம் அல்லது சோம்பல் இவைகளின் காரணமாகச் சிந்திப்பதில் திரித்துக் கூறுதல்.

அத்தியாயம் 5

தேவனுடைய ஆள்தத்துவம் பற்றிய கோட்பாடுகள்

பகுதி 1
திரித்துவம்

A. திரித்துவத்தைப் பற்றிய விளக்கம்

ஒரே ஒரு உண்மையான தேவன், தம்மைப் பிதாவாகவும் (யோவான் 6:27), குமாரனாகவும் (யோவான் 1:1), பரிசுத்த ஆவியானவ ராகவும் (அப்போஸ்தலர் 5:3-4) வெளிப்படுத்துகிறார் (உபாகமம் 4:35; 6:4; 1 கொரிந்தியர் 8:4-6; எபேசியர் 4:3-6; யாக்கோபு 2:19) என்பதை நாம் தெளிவாக நிலைநாட்ட முடிகிறது. எனினும் துள்ளியமாக அவருடைய உள்ளான கிரியை செய்யும் தன்மையை புரிந்துகொள்ளவதில் நாம் குறைவுபடுகிறோம்.

நம்மால் முற்றிலும் புரிந்துகொள்ளுதலுக்கு அப்பால் தேவன் இருக்கிறார் என்ற சத்தியத்தினாலும் அவர் தேவனாகவேயிருக்கிறார் (ரோமர் 11:33) என்பதாலும் திரித்துவத்தைப் பற்றி ஒரு பூரணமானதும் முழுமையானதுமான வரையறையை நிலைநாட்டுவது கடின ம். அவரைப் பிரியப்படுத்த வேண்டுமானால் (எபிரெயர் 11:6) நம்முடைய கிறிஸ்தவ நடை விசுவாச நடையாக இருக்க வேண்டும். இவ்வுலக வாழ்வில் ஏதாவது ஒரு வழியில் தேவனைப்பற்றிய எல்லா காரியங்களையும் தெரிந்துகொள்ளவும் புரிந்துகொள்ளவும் முடியுமானால், நம்மால் கவனமாக நடக்கமுடியும். இந்த நாட்களில், ஏதாவது ஒரு நாளில், நம்முடைய தேவனைப்பற்றி நாம் முற் றிலும் தெரிந்துகொள்ளுவோம் (1 கொரிந்தியர் 13;12), எனினும் இப்போதைக்கு நம்மால் தரிசித்து புரிந்துகொள்ள முடியாத ஒன்றை விசுவாசத்தால் ஏற்றுக்கொள்ள வேண்டும். திரித்துவத்தைப் பற்றிய எடுத்துக்காட்டு ஒரு முட்டை மூலம் விளக்கப்படுகிறது. ஒரு முட் டையில் தனித்தனியாக மூன்று பகுதிகளாக - முட்டை ஓடு, மஞ்சள் கரு, வெள்ளைக் கரு இருந்தாலும், அது ஒரு முட்டை மட்டுமே.

திரித்துவ அங்கத்தினர்களுக்கு மூன்று முக்கிய பாத்திரங்கள் இருக்கின்றன என்பதை தெளிவாக நம்மால் நிலைநாட்ட முடிந்தது. பிதா திட்டமிடுபவராகவும் (அப்போஸ்தலர் 2:23), குமாரன் நிறைவேற்றுபவராகவும் (யோவான் 5:36), பரிசுத்த ஆவியானவர் வெளிப் படுத்துபவராகவும் (யோவான் 16:13) இருக்கிறார். அவர்களுடைய வேறுபட்ட பாத்திரங்களைக் கற்றுக்கொள்ளும் அதே வேளையில், நாம் திரித்துவத்தைப் பிரிக்க வழிதேடக் கூடாது. தேவனுக்கு மட்டுமே சொந்தமான குண இயல்புகளை பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகிய எல்லாரும் பகிர்ந்துகொள்ளுகின்றனர்.

இது நமக்கு ஒரு பிரச்சினையாக இருக்கக் கூடாது. ஒரு மோட்டார் கார் உள்ளாக எப்படி வேலை செய்கிறது என்பதை நாம் புரிந்துகொள்ளாமருக்கலாம், எனினும் அதை இயங்கச் செய்து, நாம் போய்சேர வேண்டிய இடத்துக்கு ஓட்டிச் செல்லும்போது அதன் செயல்பாட்டைக் காண்கிறோம். தேவனுடைய இயல்பை அவர் படைப்புக்களில் நாம் காணமுடியும். (ரோமர் 1:20)

B. நிரூபணம்

இதற்கு முன் கொடுக்கப்பட்ட விளக்கத்தில் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் ஆகியோர் ''தேவன்'' என்று குறிக்கப்பட்ட உண் மையில் திரித்துவத்தின் நிரூபணம் காணப்படுகிறது. தேவனால் மட்டுமே சொந்தமாய் வைத்திருக்கக் கூடிய பண்புகளை, தேவன ால் மட்டுமே நிறைவேற்றக் கூடிய கிரியைகளை செய்யக் கூடியவர்களாயிருந்தால் அந்த ''மூன்று'' நபர்களும் ''தேவன்'' ஆகிய ''ஒருவர்'' மட்டுமே என்பது தெளிவாயிருக்க வேண்டும்.

அதிகாரம் 4, பகுதி 1இல், தெய்வீக தன்மையின் அடிப்படையில் வியாக்கினம் செய்தல் என்பதில் தேவனுடைய தன்மை அறிமுகம் செய்யப்பட்டது. இப்போது நாம் தேவனுடைய குண இயல்புகளின் விளக்கத்தை விரிவுபடுத்தி, ஒவ்வொரு குண இயல்பையும் திரித்துவத்தின் ஒவ்வொரு அங்கத்தினரோடும் இணைப்போம்.

இது நாம் கற்றுக் கொள்ளுவதின் ஒரு முக்கியமான பகுதியாகும். இந்த வசனங்களைக் கற்றுக்கொள்ளும் மாணவன் ஒருபோதும் இதை மறக்கக் கூடாது. எல்லா வேதாகம இறையியன் இரண்டு அடிப்படை ஆதாரங்களை இந்த வசனங்கள் நிலைநாட்டுகின்றன. முதல் அடிப்படையான உண்மை ''தேவன், ஒரே ஒருவரும் மட்டும்'', இரண்டாவது ''நான் அவர் அல்ல'' என்பதேயாகும்.

C. தெய்வீக சாராம்சத்தின் பத்து இயல்புகள்

முதல் அடைப்புக்குறி ( ) பிதாவாகிய தேவனைக் குறிப்பிடும் வசனங்களையும், இரண்டாவது < >, குமாரனாகிய தேவனைப்பற்றியும் மூன்றாவது [ ], பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய வசனங்களையும் குறிப்பிடுகிறது.

1. சர்வ அதிகாரம்

தேவன் ராஜரீகம் பண்ணுகிறார், அதாவது அவர் ராஜாவாயிருக்கிறார், அதற்கேற்ப நடந்துகொள்ளுகிறார். (தானியேல் 4:17; 1 தீமோத்தேயு 1:17; சங்கீதம் 47:2, 7), <வெளி. 19:16; யோவான் 5:21>, [சகரியா 4:6; 1 பேதுரு 4:14; 1 கொரிந்தியர் 12:11].

ராஜரீகம் என்பதின் அர்த்தம், ''ஒரு வரையறை செய்யப்பட்ட எல்லைக்குள் உயர்ந்த, அதிகாரத்தைப் பயன்படுத்துவ''து என் பதாகும். தேவன், வெளியேயிருந்து வரும் எந்தக் கட்டுப்பாடுமில்லாமல் படைப்புகள் எல்லாவற்றின் மேலும் மிக உயர்ந்த அதிகாரமுள்ளவராயிருக்கிறார். அவரே படைப்பவர், படைக்கப்பட்டவரல்ல (ரோமர் 1:20, 25).

தேவனுக்கு, தம்முடைய சொந்தத் திட்டத்தையும், தம் சட்டங்களையும், நியாயத்தீர்ப்பையும் நிலைநாட்ட அதிகாரமுண்டு. சுருக்க மாகச் சொன்னால் அவருடைய நோக்கங்களைப் புரிந்துகொள்ளுவது கடினமாயிருந்தாலும் அவர் தெரிந்து கொண்டவைகளை செயல்படுத்த அதிகாரமுடையவராயிருக்கிறார்.

2. நீதி

தேவன பரிபூரண நீதிபரர், அதாவது அவர் எல்லா வழிகளிலும் பரிபூரணர். (யோவான் 17:25; 1 யோவான் 1:5), <1 யோவான் 2:1; லூக்கா 1:35; எபிரெயர் 7:26>, [ஏசாயா 32:15-18; சங்கீதம் 143:10; நெகேமியா 9:20] எந்தக் காரியத்துக்கும் அவரே நீதியின் தகுதிநிலையாயிருக்கிறார். நாம் பின்பற்றவேண்டிய தகுதிநிலையை அமைத்து அவர் நன்னெறியில் முழுமையாயிருக்கிறார் (எபேசியர் 5:1).

3. **நியாயம்**
தேவன் நியாயமுள்ளவர். அவர் முழுமையானவர் முற்றிலும் நேர்மையானவர், (ஏசாயா 45:21; யோபு 37:23), <யோவான் 5:22, 30; வெளி. 19:11>, [ஏசாயா 4:4; 28:6]. தேவனுடைய நியாயம் அவருடைய நீதியைக் கோரியதற்கான பதிலாகும். “தேவனிடத்தில் பட்சபாதமில்லை” (ரோமர் 2:11). அவர் பட்சபாதம் காட்டுபவரல்ல. பாவம் எங்கே உள்ளதோ (இது அவருடைய நியாயப் பிரமாணத்தை மீறுவது) (ரோமர் 5:13) அங்கே நியாயம் திருப்தி செய்யப்பட வேண்டும்.

மனிதனால் தேவனுடைய நீதியை நிறைவேற்ற முடியவில்லை, இதனால் தேவனுடைய நீதியை “சாந்தப்படுத்தும்” (தணிக்கும்) ஒரு மேசியா வேண்டியிருக்கிறது. முழு உலகத்தின் பாவங்களுக்கும் கிரயம் செலுத்தும்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையின்மேல் மரித்தபொழுது இந்த சாந்தப்படுத்துதல் நிறைவேற்றப்பட்டது (1 யோவான் 2:1-2).

4. **அன்பு**
தேவன் அன்பாயிருக்கிறார், இதன் அர்த்தம் முழுமையான நிபந்தனையற்ற அன்பு அவரில் காணப்படுகிறது என்பதாகும் (1 யோவான் 4:8-10; தீத்து 3:4; யோவான் 17:24-26), <யோவான் 15:9>, [கலாத்தியர் 5:22].

இநத தேவனுடைய குணமே மனுக்குலத்தை மீட்பதற்காக (யோவான் 3:16) இயேசு கிறிஸ்துவை அனுப்பியதற்கான அடிப் படைக் காரணமாகும். நம்முடைய பாவங்களுக்கு நிவிர்த்தி செய்யும்படி தம் குமாரனாகிய கிறிஸ்துவை சிலுவையின்மேல் மரிக்கும்படி கொடுத்தது அன்பு தான் <லூக்கா 23:34>; மற்றும் பரிசுத்த ஆவியின் “கனியின்” முதல் தனிப்பொருள் அன்பாகும் [கலாத்தியர் 5:22].

நமக்கு வருத்தத்தைக் கொடுத்தாலும், அன்பு என்பது பிறருக்கு சரியானதையும் மிகவும் நன்மையான காரியங்களையும் செய்வதாகும். எல்லாரும் தேவனைத் தெரிந்துகொள்ளும் படியாக கிறிஸ்தவர்கள் தேவனுடைய அன்பில் பங்குபெற்று மற்றவர்களிடம் அதைப் பரப்ப வேண்டும் (யோவான் 13:34-35).

5. **நித்திய ஜீவன்**
தேவன் நித்திய ஜீவனாக இருக்கிறார். அவர் எப்பொழுதும் இருக்கிறவராய் இருக்கிறார், எப்பொழுதும் இருப்பார் (ஏசாயா 57:15), <யோவான் 8:54; 1 யோவான் 5:11-12; மீகா 5:2; வெளிப்படுத்தல் 1:8, 17>, [எபிரெயர் 9:14].

நித்திய ஜீவனுக்கு துவக்கமுமில்லை முடிவுமில்லை. கிறிஸ்தவர்களாகிய நாம் பெற்றுள்ள நித்திய ஜீவனுக்கு துவக்கம் உள்ளது. ஆனால் முடிவில்லை. தேவனுடைய நித்திய ஜீவன் அவர் ஒருபொழுதும் மரணத்துக்குட்பட்டவரல்ல என்று போதிக்கிறது.

6. **சர்வவல்லவர் - எல்லா வல்லமையுடையவர்**
தேவன் சர்வவல்லமையுடையவர், இதன் அர்த்தம் அவருக்கு எதையும் செய்யும் வல்லமையிருக்கிறது என்பதாகும் (மாற்கு 14:36; 1 பேதுரு 1;5), <மத்தேயு 28:18; வெளிப்படுத்தல் 19:6>, [2 தீமோத்தேயு 1:7; ரோமர் 15:13].

அவருடைய சர்வ வல்லமைக்கு ஒரு எடுத்துக்காட்டு, அவர் வானங்களையும் பூமியையும் படைத்ததில் காணப்படுகிறது (ஆதியாகமம் 1:1). “அவருடைய வாயின் வார்த்தை” வானங்களையும் அவருடைய “சுவாசம்” அவர்களுடைய சர்வசேனைகளையும் படைத்தது என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது (சங்கீதம் 33:6).

7. **எங்குமிருப்பவர் - எல்லா இடங்களிலும்**
தேவன் எங்குமிருப்பவர், அதவாது எல்லா இடங்களிலும் ஒரே நேரத்தில், அதே தீவிரத்தோடு இருக்கிறார் என்பதாகும். (நீதிமொழிகள் 15:3; 2 நாளாகமம் 2:6), <மத்தேயு 18:20; 23:20>, [சங்கீதம் 139:7-16]. இதன் அர்த்தம் எல்லாப் பொருளும் தேவன் என்பதல்ல (Pantheism), எனினும் அவர் எங்குமிருக்கிறார். அது தேவனுடைய தனி இயல்பை நமக்குக் காட்டுகிறது.

இந்த இயல்பிருந்து தேவன் ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமாக இருக்கவில்லை என்றும் நாம் காண்கிறோம். (சங்கீதம் 139:7-17). அவர் சிலருக்கு மிகுந்த அன்பையும் சிலருக்கு குறைவான அன்பையும் கொடுப்பவரல்ல. இன்றும் அவர் எங்குமிருப்பவர் என்பதால் அவரால் பல இடங்களில் ஒரே நேரத்தில் தம்மை வெளிப்படுத்த முடியும்.

8. **எல்லாம் தெரிந்தவர் - எல்லாம் அறிந்தவர்**
தேவன் எல்லாம் தெரிந்தவர். அவருக்கு கடந்த, நிகழ், எதிர்காலம் எல்லாம் தெரியும்; (சங்கீதம் 139:1-6; எபிரெயர் 4:13), <யோவான் 2:24, 25; 18:4; மத்தேயு 9:4>, [1 கொரிந்தியர் 2:10-11; ஏசாயா 11:2],

அவருக்கு எல்லாக் காரியங்களின் முடிவும் தெரியும்; உண்மையாக நடந்தவைகள் மட்டுமல்ல, அவைகளின எல்லா சாத்தியக் கூறுகளும் தெரியும். ஒவ்வொரு தீர்மானமும் எல்லா நேரத்திலும் கொண்டுவரும் எல்லா விளைவுகளும் அவருக்குத் தெரியும். அவருடைய நித்திய திட்டம் இந்த எல்லா காரியங்களையும் கவனத்தில் கொண்டுள்ளது (ரோமர் 8:28-30).

9. **மாற்றப்படக் கூடாதவர் - மாற்றப்பட முடியாது**
தேவன் மாற்றப்படக்கூடாதவர், இதன் அர்த்தம், அவருடைய சாராம்சத்தின் தோற்றங்கள் ஒருபோதும் மாற்றமடைவதில்லை. (யாக்கோபு 1:17; எபிரெயர் 6:17; மல்கியா 3:6), <எபிரெயர் 13:8>, [1 கொரிந்தியர் 12:4; எபேசியர் 1:13].

இந்தக் குணம் மனுக்குலத்துக்கு நன்மையளிப்பது ஏனெனில் தேவன் வாக்குறுதியளித்ததை அவர் எப்பொழுதும் செய்து முடிக்க வேண்டும். அவர் மனம் மாறமாட்டார், ஏனெனில் அவர், ***“கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து... நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை”*** (ரோமர் 8:1) என்று கூறியிருக்கிறார் என்பதால் அவர் தம் மனதை மாற்றமாட்டார் என்று முற்றிலும் நாம் நிச்சயமாயிருக்கலாம். இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பவர்களுக்கு அவர் நித்திய ஜீவனைக் கொடுப்பதாக வாக்குறுதியளித்திருக்கிறார், எனவே, அவர் இந்த நற்செய்தியை மாற்றமாட்டார் என்று நமக்குத் தெரியும் (யோவான் 3:16). தேவன் தம்முடைய வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால் அவர் ஒரு பொய்யராகவும் அதனால் அநீதியானவரும் ஆகிவிடுவார் (எபிரெயர் 6:17-18).

சர்வலோகத்திலுமுள்ள மற்ற எல்லாக் காரியங்களும் மாறிக்கொண்டிருக்கின்றன. தேவன் மட்டுமே நிலையானவராயிருக்கிறார். இதனாலேயே அவரை நம்புவது நம்முடைய ஆத்துமாக்களுக்கு “நங்கூரமாய்” இருக்கிறது (எபிரெயர் 6:19).

10. **சத்தியமுள்ளவர்**
தேவன் முழுமையாக சத்தியமுள்ளவர். (உபாகமம் 32:4; யோவான் 7:28; 17:3), <யோவான் 14:6; 1 யோவான் 5:20>, [1 யோவான் 5:7, 8; 4:6; யோவான் 14:17; 15:26; 16:13].

இந்த குணமானது தேவன் தெரிவிக்கிற எல்லாக் காரியங்களும் முற்றிலும் நம்பக்கூடியவை என்று நமக்குச் சொல்லுகிறது (எண்ணாகமம் 23:19). உண்மையில் பொய் சொல்லுவது தேவனால் கூடாத காரியம் (தீத்து 1:2).

தேவன் இயேசு கிறிஸ்து என்ற நபரில் தம்மை வெளிப்படுத்தினார் என்பது சத்தியம் <யோவான் 14:6>. வரலாறு முழுவதிலும் சத்தியம் ஒரு மனத்தோற்றத்தில், வாக்கியத்தில் அல்லது கோட்பாட்டில் தேடப்பட்டது. இதனாலேயே மனுக்குலம் சத்தியம் என்று எண்ணுகிற எதையும் இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகளோடு ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும் <1 தீமோத்தேயு 6:3>.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 5, பகுதி 1

1. **முதலாவதாக வாசியுங்கள் உபாகமம் 6:4-5. பின்பு வாசியுங்கள் யோவான் 6:27, யோவான் 1:1, மற்றும் அப்போஸ்தலர் 5:3-4. எத்தனை உண்மையான தெய்வங்கள் உள்ளன?**

2. **மேலே உள்ள பகுதியிருந்து தேவன் யார்?**

3. **வாசிக்கவும் அப்போஸ்தலர் 2:23. பிதாவின் முக்கிய வேலை என்ன?**

4. **வாசிக்கவும் யோவான் 5:36. குமாரனின் முக்கிய வேலை என்ன?**

5. **வாசிக்கவும் யோவான் 16:13-14. பரிசுத்த ஆவியின் முக்கிய வேலை என்ன?**

6. **பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் எல்லோரும் தேவன் என்பதை நாம் எப்படி நிரூபிக்கலாம்?**

7. **சர்வ அதிகாரமுள்ள தேவனைப் பற்றிய கீழ்க்காணும் பகுதிகளை வாசியுங்கள்.**
   a. பிதா - தானியேல் 4:17; 1 தீமோத்தேயு 1:17 மற்றும் சங்கீதம் 47:2,7
   b. குமாரன் - வெளிப்படுத்தல் 19:16 மற்றும் யோவான் 5:21
   c. பரிசுத்த ஆவியானவர் - சகரியா 4:6; 1 பேதுரு 4:14 மற்றும் 1 கொரிந்தியர் 12:11

   திரித்துவம் சர்வ அதிகாரமுள்ளதா?

8. **தேவனுடைய நீதியைப் பற்றிய கீழ்க்காணும் பகுதிகளை வாசியுங்கள்.**
   a. பிதா - யோவான் 17:25 மற்றும் 1 யோவான் 1:5
   b. குமாரன் - 1 யோவான் 2:1; லூக்கா 1:35 மற்றும் எபிரேயர் 7:26
   c. பரிசுத்த ஆவியானவர் - ஏசாயா 32:15-18; சங்கீதம் 143:10 மற்றும் நெகேமியா 9:20

   திரித்துவம் முற்றிலும் நீதியானதா?

9. **தேவனுடைய நியாயத்தைப் பற்றிய கீழ்க்காணும் பகுதிகளை வாசியுங்கள்.**
   a. பிதா - ஏசாயா 45:21 மற்றும் யோபு 37:23
   b. குமாரன் - யோவான் 5:22, 30 மற்றும் வெளிப்படுத்தல் 19:11
   c. பரிசுத்த ஆவியானவர் - ஏசாயா 4:4 மற்றும் 28:6

   திரித்துவம் நியாயம் நிறைந்ததா?

10. **தேவனுடைய அன்பைப் பற்றிய கீழ்க்காணும் பகுதிகளை வாசியுங்கள்.**
   a. பிதா - 1 யோவான் 4:8-10; தீத்து 3:4 மற்றும் யோவான் 17:24-26
   b. குமாரன் - யோவான் 15:9
   c. பரிசுத்த ஆவியானவர் - கலாத்தியர் 5:22

   திரித்துவம் பூரண அன்புள்ளதா?

11. தேவனுடைய நித்திய ஜீவனைப் பற்றிய கீழ்க்காணும் பகுதிகளை வாசியுங்கள்.
    a. பிதா - ஏசாயா 57:15
    b. குமாரன் - யோவான் 8:54; 1 யோவான் 5:11-12; மீகா 5: 2 மற்றும் வெளிப்படுத்தல் 1:8, 17
    c. பரிசுத்த ஆவியானவர் - எபிரேயர் 9:14

திரித்துவம் நித்திய ஜீவன் உள்ளதா?

12. தேவனுடைய சர்வ வல்லமையைப் பற்றிய கீழ்க்காணும் பகுதிகளை வாசியுங்கள்.
    a. பிதா - மாற்கு 14: 36 மற்றும் 1 பேதுரு 1:5
    b. குமாரன் - மத்தேயு 28:18 மற்றும் வெளிப்படுத்தல் 19:6
    c. பரிசுத்த ஆவியானவர் - 2 தீமோத்தேயு 1:7 மற்றும் ரோமர் 15:13

திரித்துவம் சர்வ வல்லமையுள்ளதா?

13. தேவனுடைய எங்கும் நிறைந்த தன்மையைப் பற்றிய கீழ்க்காணும் பகுதிகளை வாசியுங்கள்.
    a. பிதா - நீதிமொழிகள் 15:3 மற்றும் 2 நாளாகமம் 2:6
    b. குமாரன் - மத்தேயு 18:20 மற்றும் 28:20
    c. பரிசுத்த ஆவியானவர் - சங்கீதம் 139:7-16

திரித்துவம் எங்கும் நிறைந்ததா?

14. தேவனுடைய எல்லாம் அறிந்த தன்மையைப் பற்றிய கீழ்க்காணும் பகுதிகளை வாசியுங்கள்.
    a. பிதா -சங்கீதம் 139:1-6 மற்றும் எபிரேயர் 4:13
    b. குமாரன் - யோவான் 2:24-25; 18:4 மற்றும் மத்தேயு 9:4
    c. பரிசுத்த ஆவியானவர் - 1 கொரிந்தியர் 2:10-11 மற்றும் ஏசாயா 11:2

திரித்துவம் எல்லாம் அறிந்ததா?

15. தேவனுடைய மாறாத தன்மையைப் பற்றிய கீழ்க்காணும் பகுதிகளை வாசியுங்கள்.
    a. பிதா - யாக்கோபு 1:17; எபிரேயர் 6:17 மற்றும் மல்கியா 3:6
    b. குமாரன் - எபிரேயர் 13:8
    c. பரிசுத்த ஆவியானவர் - 1 கொரிந்தியர் 12:4 மற்றும் எபேசியர் 1:13

திரித்துவம் மாற்றப்பட முடியாததா?

16. தேவனுடைய உண்மைப் பற்றிய கீழ்க்காணும் பகுதிகளை வாசியுங்கள்.
    a. பிதா - உபாகமம் 32:4; யோவான் 7:28 மற்றும் 17:3
    b. குமாரன் - யோவான் 14:6 மற்றும் 1 யோவான் 5:20
    c. பரிசுத்த ஆவியானவர் - 1 யோவான் 5:7-8; 4:6; யோவான் 14:17; 15:26 மற்றும் 16:13

திரித்துவம் உண்மையுள்ளதா?

பகுதி 2
தேவனுடைய பெயர்கள்

இந்தப் பகுதி, வேதவசனங்களில் காணப்படும் தேவனுடைய பதவிகள் அல்லது பெயர்களின்மீது கவனத்தைச் செலுத்துகிறது. கிரேக் கம் மற்றும் எபிரெயு மொழிகளில் தேவன் என்பதற்கான அநேக வேறுபட்ட சொற்கள் இருக்கின்றன, இவைகள் அவருடைய தன்மை அல்லது அவருடைய இயல்பின் தனிப்பட்ட பக்கங்களின்மீது கவனத்தைக் கொண்டுவரப் பயன்படுத்தப்படுகின்றன.

சில மொழிபெயர்ப்புகளில் எபிரேய அல்லது கிரேக்க வார்த்தைகள் புதிய மொழியில் அப்படியே, (மொழி புரிந்துகொள்ள எந்த உதவியும் செய்யாமல்), அதனுடைய உச்சரிப்பின் அடிப்படையில் மாற்றப்படுகிறது (transliiteration) இந்த படிப்பானது ஒரு மாணவனுக்கு எபிரேய அல்லது கிரேக்க மூலத்தில் உள்ள தலைப்பையும் அதன் மொழிபெயர்ப்பையும் அளிக்கிறது.

A. எபிரெய பெயர்கள்:

1. **தேவன்**

தேவன் என்று மொழிபெயர்க்கப்பட்ட சொல்லுக்கான எபிரெயப் பெயர் **எலோகிம்** என்பதாகும். இது முதலாவதாக ஆதியாகமம் 1:1லும், அதன் பின்பு பழைய ஏற்பாட்டில் 2,500க்கும் அதிகமான தடவைகளும் காணப்படுகிறது. இந்த சொல்ன் அர்த்தம் தேவனுடைய எல்லா சாராம்சத்தையும் உட்கொண்டது, இதனால் அவருடைய இயல்புகள் எல்லாவற்றையும உடனேயே அளிக்கிறது. அநேக நேரங்களில் இது பிதாவை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டிருந்தாலும், குமாரனையும் பரிசுத்த ஆவியானவரையும் விவரிக்கவும் பயன்பட்டது என்று மாணவன் கண்டுகொள்ளுவான், ஏனென்றால் திரித்துவம் தேவனாகும்.

எலோகிம் என்பது பன்மைச் சொல் (ஒன்றுக்கும் அதிகமானது என்ற அர்ததமுடையது). இது வேத அறிஞர்களால் ஒரு ‘‘மகத் துவத்தின் பன்மை’’ (plural of majesty) என்று விவரிக்கப்பட்டது. அது அவருடைய வரம்பற்ற பெருந்தன்மையைக் குறிப்பிடு கிறது. இந்த வார்த்தை பன்மையாயிருந்தாலும் ஒருமை வினைச்சொற்களையே மாறாமல் பயன்படுத்துகிறது. இது மறுபடியும் ஒரே ஒரு தேவன் மட்டுமே இருக்கிறார் என்று காட்டுகிறது (உபாகமம் 6:5).

எலோகிம் என்ற சொல் அடிக்கடி தேவனைப்பற்றி கூடுதலான செய்தியைக் கொடுக்கும் மற்றொரு சொல்லோடு இணைக்கப் பட்டு அவருக்கு மற்றொரு பதவிப்பெயரை அளிக்கிறது.

a. சர்வவல்லமையுள்ள தேவன்

‘‘சர்வவல்லமையுள்ள தேவன்’’ என்பது **எல் சடாய்** (EL SHADDAI) என்பதன் மொழிபெயர்ப்பு. ‘‘எல்’’ (EL) என்பது எலோகீம் (ELOHIM) என்பதன் குறுகிய சொல். தேவன் தம்முடைய மக்களின் மீது பொழிந்த ஆசீர்வாதங்களை விளக் குவதற்கு அடிக்கடி இந்தச் சொல் பயன்படுத்தப்பட்டது. இது காணப்படும் இடங்கள்: ஆதியாகமம் 17:1; 28:3; 35:11; 43:14; 48:3; 49:25; யாத்திராகமம் 6:3; எண்ணாகமம் 24:4, 16; ரூத். 1:20, 21; யோபு 5:17; 6:4, 14; 8:3, 5; 11:7; 13:3; 15:25; 21:15, 20; 22:3, 17, 23, 25, 26; 23:16; 24:1; 27:2, 10, 11, 13; 29:5; 31:2, 35; 32:8; 33:4; 34:10, 12; 35:13; 37:23; 40:2; சங்கீதம் 68:14; 91:1; ஏசாயா 13:6; எசேக்கியேல் 1:24; 10:5; யோவேல் 1:15.

b. உன்னதமான தேவன்

‘‘உன்னதமான தேவன்’’ என்பது **எல் எயான்** (EL ELYON) என்பதன் பொதுவான மொழிபெயர்ப்பு. இது எல்லாக் காரியங்களுக்கும் அவரே மேலானவராக இருக்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. இது காணப்படும் இடங்கள் ஆதியாகமம் 14:18, 19, 20, 22; 40:17; எண்ணாகமம் 24:16; உபாகமம் 26:19; 28:1; 32:8; யோசுவா 16:5; 2 சாமுவேல் 22:14; 1 இராஜாக்கள் 9:8; 2 இராஜாக்கள் 15:35; 18:17; 1 நாளாகமம் 7:24; 2 நாளாகமம் 7:21; 8:5; 23:20; 27:3; 32:30; நெகேமியா 3:25; சங்கீதம் 7:17; 9:2; 18:13; 21:7; 46:4; 47:2; 50:14; 57:2; 73:11; 77:10; 78:17, 35, 56; 82:6; 83:18; 87:5; 89:27; 91:1, 9; 92:1; 97:9; 107:11; ஏசாயா 7:3; 14:14; 36:2; எரேமியா 20:2; 36:10; புலம்பல் 3:35, 38; எசேக்கியேல் 9:2; 41:7; 42:5.

c. சதாகாலமுமுள்ள தேவன்

எல் ஓலம் (EL OLAM) எனபதன் பொதுவான மொழிபெயர்ப்பு ‘‘சதாகாலமுமுள்ள தேவன்’’ என்பதாகும் எபிரெய பதம் ஹுஓலம்து என்பது முடிவில்லாதது என்று சொல்வதைவிட சதாகாலமும் (ஆரம்பமும் முடிவும் இல்லாதது) என்று புரிந்துகொள்ளு வது நல்லது. இது ஆதியாகமம் 21:33 மற்றும் ஏசாயா 40:28 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது. சதா காலம் (ஓலம்) என்ற வார்த்தை காணப்படும் இடங்களிலெல்லாம் தேவனுடைய முடிவற்ற தன்மை குறிப்பிடப்படுகிறது என்பது தெளிவாயிருக்கிறது.

2. **கர்த்தர்**

யெகோவா (YAHWEH) என்பது பெரும்பாலும் கர்த்தர் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இந்த சொல் மற்ற வார்த்தைகளி ருந்து தனித்துக் காண்பிக்கும்படி பெரிய எழுத்துக்களால் அச்சிடப்பட்டுள்ளது. யெகோவா என்பது வேறு சொற்களோடு சேர்க்கப்பட்டு அவருடைய தனித்துவத்தையும் பாத்திரத்தையும் விவரிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

யெகோவா என்ற எபிரெய பதத்தின் பொதுவான மொழிபெயர்ப்பு தேவனுடைய பெயரான கர்த்தர் என்பது. யெகோவா என்பது தேவனுடைய தனிப்பட்ட பெயர் (யாத்திராகமம் 3:14), இது 5,300 முறைக்கும் அதிகமாக பழைய ஏற்பாட்டில் பயன் படுத்தப்பட்டிருக்கிறது. அது அவர் சுறுசுறுப்பாக சுய உணர்வுடன் இருப்பதைக் குறிப்பிடுகிறது. கர்த்தர் என்ற வார்த்தை முதல் ஆதியாகமம் 2:4ல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அது எலோகிம் (ELOHIM) என்ற சொல்லோடு சேர்க்கப்பட்டு தேவன ாகிய கர்த்தர் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

தேவனுடைய தனிப்பெயர் பாபிலோனிய சிறையிருப்புக்குப்பின் இஸ்ரவேல் மிகவும் பரிசுத்தமானதாகியது. இதனால் (586-516 கி.மு.) அவருடைய பெயரை அவர்கள் உச்சரிக்கவில்லை, அதற்குப்பதில் அடோனாய் (ADONAI) என்று அவரை அழைத்தனர். கி.பி. ஆறாம் ஏழாம் நூற்றாண்டுகளில் அடோனாய் யாவே என்ற சொற்களின் உயிர் எழுத்துக்களும் யாவே என்ற (YAWH) மெய் எழுத்தோடு சேர்ந்து "யெகோவா" (JEHOVAH) என்ற சொல்லாயிற்று. யாவே (YHWH) என்பதை அடோனாய் (ADONAI) என்று உச்சரிக்கவேண்டும் என்று வாசகர்களுக்கு ஞாபகப்படுத்தும்படி இப்படிச் செய்தார்கள்.

a. கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும்
யேகோவாயீரே, (YAHWEH JIREH) என்பதன் மொழிபெயர்ப்பு "கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளப்படும்" என்பதாகும். இது ஆதியாகமம் 22:14ல் காணப்படுகிறது. ஆபிரகாம் தன்னுடைய மகன் ஈசாக்கின் இடத்தில் பயிட தேவன் ஒரு ஆட்டுக்கடாவை அளித்த காலத்தை இது குறிப்பிடுகிறது.

b. கர்த்தர் என் கொடி
யெகோவாநிசி (YAHWEH NISSI) என்பதன் மொழிபெயர்ப்பு "கர்த்தர் என் கொடியாயிருக்கிறார்" என்பதாகும். இது யாத்திராகமம் 17:15ல் காணப்படுகிறது. அமலேக்கியரின் தோல்விக்குப்பின் மோசே கர்த்தருக்குக் கொடுத்தான்.

c. கர்த்தர் சமாதானத்தின் காரணர்
கர்த்தர் சமாதானத்தின் காரணர் என்பது **யெகோவா ஷாலோம்** (YAHWEH SHALOM) என்பதின் மொழிபெயர்ப்பாகும். இது நியாயாதிபதிகள் 6:24ல் காணப்படுகிறது.

d. சேனைகளின் கர்த்தர்
சேனைகளின் கர்த்தர் என்பது **யெகோவா சபாத்** (YAHWEH SABBAOTH) என்ற இராணுவத்தில் பயன்படுத்தும் ஒரு சொல்ன் மொழிபெயர்ப்பாகும். இதன் அர்த்தம் கர்த்தர் சேனைகளின் தலைவர் என்பதாகும். இது தூதர்களின் சேனையையும். இஸ்ரவேலரின் சேனையையும் குறிக்கிறது. இது முதல் 1 சாமுவேல் 1:3ல் பயன்படுத்தப்பட்டு, இதற்குப்பின் நூற்றுக்கனக்கான இடங்களில் அதிகமாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

3. கர்த்தர், ஆண்டவர், சொந்தக்காரர்
அடோனாய் (ADONAI) என்பதும் ஏலோகிமைப் (ELOHIM) போல ஒரு பன்மைச் சொல், இது தேவனுடைய மகத்துவத்தைக் குறிப்பிடுகிறது. எனினும், ஏலோகிமைப் போலல்லாமல் அடோன் (ADON) என்று ஒருமையிலும் காணப்படுகிறது. அடோன் என்ற சொல் ஒரு ஆண்டவர் என்பதாகும். எஜமான் அல்லது சொந்தக்காரர் என்ற கருத்தில் உள்ளது. இது அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது. இது ஆதியாகமம் 18:3ல் முதலாவதாகப் பயன்படுத்தப்பட்டது, இங்கு ஆபிரகாம் தேவனைக் கூப்பிட இந்தச் சொல்லைப் பயன்படுத்துகிறான்.

இதற்கு சமமான கிரேக்க சொல் குரியோஸ் (KURIOUS) என்பதாகும்.

B. கிரேக்கப் பெயர்கள்

1. தேவன்
தேவன் என்பதற்கான கிரேக்கச் சொல் தியோஸ் (THEOS) என்பதாகும். எலோகிம் என்ற எபிரெய சொல்லைப்போல இது தேவனுடைய எல்லா இயல்புகளையும் ஒரே நேரத்தில் குறிப்பிடுகிறது. செப்துவாஜின்த (Septuagint) மொழி பெயர்ப்பில் எலோகிம் என்ற சொல்லுக்கு இந்த வார்த்தையே பெரும்பாலும் தெரிந்தெடுக்கப்பட்டது. எபிரெய மொழி பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழியில் பெயர்ப்பு.

யோவான் 1:1 தெளிவாக ஆதியாகமம் 1:1ஐ ஒத்திருக்கிறது, இங்கே தியோஸ் என்ற சொல் ஏலோகிம் என்பதற்குப் பதிலாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது, அவைகளின் உறவைத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

2. கர்த்தர்
கர்த்தர் என்பதற்கான கிரேக்கப்பதம் குரியோஸ் (KURIOUS) என்பதாகும். இது 700க்கும் மேலாக புதிய ஏற்பாடடில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது அதிகாரத்தையும் முதன்மையான தன்மையையும் வயுறுத்துகிறது. இந்தச் சொல் மரியாதைக் குரிய ஒரு பதவியாகவும் பயன்படுத்த முடியும்.

இதற்கு முன்பாக தியோஸ் (THEOS) என்பதும் ஏலோகிம் (ELOHIM) என்பதும் ஒரே அர்த்தமுடையது என்று பார்ததோம். குரியோஸ் என்ற சொல்லும் யாவே என்ற சொல்லும் ஒரே அர்த்தமுடையது என்றும் நாம் காண்போம். மாற்கு 11:9ல், இதை எழுதியவர் சங்கீதம் 118:26ல் ***"கர்த்தருடைய நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்திரிக்கப்பட்டவர்"*** என்று சொல்யதைக் குறிப்பிடுகிறார். சங்கீதம் 118ல் எபிரெய சொல் **யாவே** என்பதாகும். இது குயூரியோஸ் என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

3. ஆண்டவர்
டெஸ்போட்டஸ் (DESPOTES) என்ற சொல் சில வேளைகளில் கர்த்தர் (லூக்கா 2:29; அப். 4:24) என்று மொழிபெயர்க்கப் பட்டிருந்தாலும் அதன் வழக்கமான மொழிபெயர்ப்பு "ஆண்டவர்" என்பதாகும். "ஆண்டவர்" என்பது, குயூரியோஸ் என்ற சொல் வயுருத்துவது போல் அதிகாரம் மற்றும் முதன்மை தன்மை என்பதற்கு மாறாக சொந்தமாயிருப்பது என்ற கருத்தை அழுத்தமாய்த் தெரிவிக்கிறது. இது 1 தீமோத்தேயு 6:1, 2; 2 தீமோத்தேயு 2:21; தீத்து 2:9; 1 பேதுரு 2:18; 2 பேதுரு 2:1; யூதா 1:4; வெளி. 6:10 ஆகியவைகளில் காணப்படுகிறது.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 5, பகுதி 2

1. **தேவனுக்கான எபிரேய பெயர்களுக்கு இணையான எபிரேய வார்த்தைகளுடன் பொருத்துக:**

a.	தேவன்	1)	யேகோவா சாபோத்
b.	வல்லமையுள்ள தேவன்	2)	யேகோவா நிசி
c.	உன்னத தேவன்	3)	ஏலோஹிம்
d.	நித்திய தேவன்	4)	அடோனாய்
e.	கர்த்தர்	5)	எல்ஷடாய்
f.	கர்த்தர் பார்த்துக் கொள்வார்	6)	யேகோவா சாலோம்
g.	கர்த்தர் என் கொடி	7)	எல் ஒலம்
h.	கர்த்தர் சமாதானக் காரணர்	8)	எல் எயோன்
i.	சேனைகளின் கர்த்தர்	9)	யாவே
j.	கர்த்தர், ஆண்டவர், உரிமையாளர்	10)	யேகோவா ஈரே

2. **கீழுள்ள கிரேக்க பெயர்களுக்கு இணையான கிரேக்கப் பதத்துடன் பொருத்துக:**

a.	தேவன்	1.	குரியோஸ்
b.	கர்த்தர்	2.	டெஸ்போட்ஸ்
c.	ஆண்டவர்	3.	தியோஸ்

பகுதி 3
பிதாவாகிய தேவன் (Paterology)

A. அவர் எப்படிப்பட்டவர்

பிதாவைப்பற்றி விவரிப்பதற்குச் சிறந்த வழி, அவர் தம்முடைய வசனங்களில் தம்மை வெளிப்படுத்தப் பயன்படுத்திய சொற்களைப் பரிசீலனை செய்வதாகும். நாம் இப்போது கற்றுக்கொண்ட திரித்துவம் என்ற ஆய்வில், பிதா, குமாரன், பரிசுத்த ஆவி ஆகியோர் ஒரே குணங்களைப் பகிர்ந்துகொள்ளுகிறார்கள் என்று கவனித்தோம். இப்போது நாம் நம்முடைய பரலோகப் பிதாவைப் பற்றிப் போதிக்க வேதாகமம் பயன்படுத்தும் சொற்களை விரிவாகப் பார்ப்போம்.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்பவர்களுக்கிடையே வித்தியாசங்கள் இருந்தாலும் ஒரே ஒரு தேவன் மட்டுமே இருக்கிறார் என்பதைக் கவனியுங்கள் (உபாகமம் 6:4). அநேக வேளைகளில் வேதவசனங்களில் ஒரு குறிப்பிட்ட வேத வசனம் திரித்துவத்தின் எந்த அங்கத்தினரைக் குறிப்பிடுகிறது என்று பிரித்தறிவது கடினம். இந்தக் கடினம் எதிர்பார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் ஏனெனில் தேவனைத் தனிப்படுத்தவோ பிரிக்கவோ முடியாது (யோவான் 10:30; 14:9). பிதா எப்படிப்பட்டவர், வார்த்தைகள், வசனங்கள். வசனபகுதிகள் ஆகியவைகளைப் பற்றி பரிசீலனைச் செய்யும்போது அவர் யார் என்று அதிகமாகப் புரிந்துகொள்ளவும் அவரைப் பாராட்டவும் அவை வழிவகுக்கின்றன.

அநேக நேரங்களில் "என்" என்று விவரிக்கும் வார்த்தை "பிதா" என்ற வார்த்தையோடு பயன்படுத்தப்படுகிறது. பிதாவின் தனிப்பட்ட இயல்பை விவரிப்பதற்காக இப்படிச் செய்யப்பட்டது. "உங்கள்," "அவனுடைய," "அவளுடைய," என்பதைப் போன்ற வார்த்தை "பிதா" என்ற வார்த்தையோடு சேர்க்கப்படும்போது அது தனிப்பட்ட உறவைக் குறிப்பிடுகிறது. "நம்முடைய," "உங்களுடைய," "அவர்களுடைய" என்ற பன்மை வார்த்தைகளைச் சேர்க்கும்போது அவைகள் இணைக்கப்பட்ட உறவை விவரிக்கின்றன.

B. பிதா என்ற நபர் இப்படியாக விவரிக்கப்படுகிறார்

- **"சர்வவல்லவர்"** இது அவருடைய வல்லமையையும் ஆசீர்வதிக்கும் திறனையும் கொண்டது. ஆதியாகமம் 49:25; எண்ணாகமம் 24:4, 16; ரூத் 1:20, 21; யோபு 5:17; 6:4, 14; 8:3, 5; 11:7; 13:3; 15:25; 21:15, 20; 22:3, 17, 23, 25, 26; 23:16; 24:1; 27:2, 10, 11, 13; 29:5; 31:2, 35; 32:8; 33:4; 34:10, 12; 35:13; 37:23; 40:2; சங்கீதம் 68:14; 91:1; ஏசாயா 13:6; எசேக்கியேல் 1:24; யோவேல் 1:15; வெளிப்படுத்தல் 1:8
- **"நீண்ட ஆயுசுள்ளவர்"** இது அவருடைய நித்திய இயல்பைப்பற்றிய குறிப்பு. தானியேல் 7:9, 13, 22
- **"அநாதி தேவன்"** இது அவருடைய நித்திய இயல்பைக் குறிப்பிடுகிறது. ஆதியாகமம் 21:33; ஏசாயா 40:28
- **"உண்மையுள்ள தேவன்"** அவருடைய அன்பின் இயல்பு மாறாதது என்பதை இது காட்டுகிறது. உபாகமம் 7:9
- **"மகிமையின் பிதா"** இது அவரிடமிருந்து எல்லா மகிமையும் புறப்படுகிறது என்பதைக் குறிப்பிடுகிறது. எபேசியர் 1:17
- **"இரக்கங்களின் பிதா"** அவருடைய இணையற்ற கிருபையை இது குறிப்பிடுகிறது. 2 கொரிந்தியர் 1:3
- **"உன்னதமான தேவன்"** சர்வலோகத்திலும் மிக உயர்ந்த அதிகாரமுடைய பதவியை வகிப்பவரைக் குறிப்பிடுகிறது. ஆதியாகமம் 14:18, 19, 20, 22; சங்கீதம் 57:2; 78:35; எபிரெயர் 7:1
- **"நியாயக்கேடில்லாத சத்தியமுள்ள தேவன்"** உறுதியாக அவர் எந்தத் தவறும் செய்யாதவர் என்ற சத்தியத்தைக் குறிப்பிடுகிறது. உபாகமம் 32:4
- **"மகிமையுள்ள தேவன்"** இது அவருடைய மகத்தான இயல்பைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 29:3; அப்போஸ்தலர் 7:2
- **"தேவாதி தேவன்"** உலக சமயங்களிலுள்ள தேவர்கள் என்றழைக்கப்படுபவைகளுக்கு மேலுள்ள அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது. உபாகமம் 10:17; சங்கீதம் 136:2; தானியேல் 2:47; 11:36
- **"சமாதானத்தின் தேவன்"** தேவன் போராட்டத்தை விரும்புபவரல்ல என்ற சத்தியத்தை இது குறிப்பிடுகிறது. ரோமர் 15:33; 16:20; பிப்பியர் 4:9; 1 தெசலோனிக்கேயர் 5:23; எபிரெயர் 13:20
- **"ஜீவனுள்ளோருக்கு தேவன்"** இது நித்திய இயல்பைக் குறிப்பிடுகிறது. மத்தேயு 22:32; மாற்கு 12:27; லூக்கா 20:38
- **"உன்னதமான தேவன்"** வணங்குவதற்குத் தகுதியான மிக உயர்ந்தப் பதவியைக் குறிக்கிறது. மீகா 6:6
- **"சத்தியபரனாகிய தேவன்"** சத்தியம் என்றால் என்ன என்று வரையறை செய்பவர் என்ற உண்மையைக் குறிப் பிடுகிறது. சங்கீதம் 31:5; ஏசாயா 65:16
- **"வல்லமையும் பயங்கரமுமான தேவன்"** அவர் அபாரமானவர், மகத்துவமானவர் என்று சொல்லுகிறது. உபாகமம் 7:21; நெகேமியா 1:5; தானியேல் 9:4
- **"மகத்துவமும் வல்லமையுமுள்ள தேவன்"** அவர் அபாரமானவர், வல்லமையுடையவர் என்பதைக் குறிப்பிடு கிறது எரேமியா 32:18 நெகேமியா 9:32.
- **ஹுஎல்லா தேவர்களுக்கும் மகாராஜன்"** மனுக்குலத்தின் தேவர்கள்மீது அதிகாரமுள்ளவர் என்பதைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 95:3
- **"பயப்படத்தக்கவர்"** அவர் பெற்றுக்கொள்ளத்தக்க மரியாதையைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 76:11, 12
- **"பரிசுத்தர்"** அவருடைய நீதியின் பரிபூரணத்தின் தனித்தன்மையைக் குறிக்கிறது. 2 இராஜாக்கள் 19:22; யோபு 6:10; சங்கீதம் 22:3; 71:22; 78:41; 89:18; நீதிமொழிகள் 9:10; 30:3; ஏசாயா 1:41; 5:19, 24; 10:17, 20; 12:6; 17:7; 29:19, 23; 30:11, 12, 15; 31:1; 37:23; 40:25; 41:14, 16, 20; 43:3, 14–15; 45:11; 47:4; 48:17; 49:7; 54:5; 55:5; 60:9, 14; எரேமியா 50:29; 51:5; எசேக்கியேல் 39:7; ஓசியா 11:9, 12; ஆபகூக் 1:12; 3:3; 1 யோவான் 2:20

- **“எரிச்சலுள்ளவர்”** தம்முடைய மக்களை வேறு எந்த “தேவனுடனும்” பங்கிட விருப்பமில்லாதிருப்பது. யாத்திராகமம் 34:14
- **“எரிச்சலுள்ளவரும் நீதியைச் சரிகட்டுபவருமான தேவன்”** தம்முடைய மக்களை களவாட வழி தேடும் மக்களை அவர் நியாயந்தீர்ப்பார். நாகூம் 1:2
- **“மகிமையின் ராஜா”** அவருடைய பதவி மிகவும் அதிகமான மகிமையைப்பெறத் தகுதியுள்ளது என்று குறிப்பிடுகிறது. சங்கீதம் 24:7, 8, 9, 10
- **“ஜீவனுள்ள மெய்யான தேவன்”** அவருடைய இயல்பு சதாகாலத்துக்குமானது, மெய்யானது என்பதைக் குறிக்கிறது. 1 தெசலோனிக்கேயர் 1:9
- **“சர்வவல்லமையுள்ள தேவன்”** இது அவருடைய அதிகாரத்தையும் (கர்த்தர்), இயல்பையும் (தேவன்), வல்லமையையும் (சர்வ வல்லமையுடையவர்) குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 4:8; 11:17; 15:3; 16:7; 19:6; 21:22
- **“சமாதானம்”** அவருடைய பரிபூரண உள்ளான இசைவை இது குறிப்பிடுகிறது. நியாயாதிபதிகள் 6:24
- **ஹுஹுஉன்னதமான கர்த்தர்”** இது இருக்கக்கூடிய அதிகாரத்தின் மிக உயர்ந்த பதவியை வகிப்பவர் என்ற உண்மையைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 7:17; 47:2
- “நம்முடைய **தேவனாகிய ஆண்டவர்”** அவருடைய அதிகாரத்தின் சொந்த இயல்பை இது குறிப்பிடுகிறது. சங்கீதம் 90:17; தானியேல் 9:9, 15; மாற்கு 12:29; அப்போஸ்தலர் 2:39
- **“அன்பு”** அவருடைய இயல்பில் காணப்படும் இயற்கையாய் அமையப்பெற்ற அற்பணிப்பு. 1 யோவான் 4:8, 16
- **“இரக்கஞ்செய்கிறவர்”** அவருடைய அன்புக்கு உரியதான மாறாத விசுவாசத்தைக் குறிப்பிடுகிறது. யாத்திராகமம் 34:6, 7; உபாகமம் 5:10; 7:9, 12; 1 இராஜாக்கள் 8:23; 1 நாளாகமம் 16:34; 2 நாளாகமம் 6:14; எஸ்றா 3:11; நெகேமியா 1:5; 9:17; யோபு 37:13; சங்கீதம் 6:4; 13;5; 26:3; 31:16; 32:10; 36:5, 7; 63:3; 89:2, 14; 103:8, 11; 136:1, 2–26; 138:8; புலம்பல் 3:22, 32; யோவேல் 2:13
- **“உன்னதமான மகிமை”** அவருடைய அற்புதமான இயல்பை இது குறிப்பிடுகிறது. 2 பேதுரு 1:17
- **“பரலோகத்தில் / உன்னதத்தில் மகத்துவமானவர்”** இது அவருடைய உயர்ந்த பதவியைக் குறிப்பிடுகிறது. எபிரெயர் 1:3; 8:1
- **“மகிமையுள்ள கர்த்தர்”** அவருடைய உயர்ந்த பதவியின் தனித்துவத்தைக் குறிப்பிடுகிறது. ஏசாயா 33:21
- **“உன்னதமானவர்”** சாத்தியமான எல்லா காரியங்களுக்கும் அவர் மேலானவர் என்ற சத்தியத்தின் ஒரு எளிய வாக்கியம். எண்ணாகமம் 24:16; உபாகமம் 32:8; 2 சாமுவேல் 22:14; சங்கீதம் 7:17; 9:2; 18:13; 21:7; 46:4; 47:2; 50:14; 57:2; 73:11; 77:10; 78:17, 35, 56; 82:6; 83:18; 87:5; 91:1, 9; 92:1; 97:9; 107:11; ஏசாயா 14:14; புலம்பல் 3:35, 38; தானியேல் 3:26; 4:2, 17, 24, 25, 32, 34; 5:18, 21; 7:18, 22, 25, 27; ஓசியா 7:16; 11:7; மாற்கு 5:7; லூக்கா 1:32, 35, 76; 6:35; 8:28; அப்போஸ்தலர் 7:48; 16:17; எபிரெயர் 7:1
- **“என் கீதமுமானவர்”** ஒருவருடைய சங்கீத வெளிப்பாட்டின் நோக்கத்தைக் குறிப்பிடுகிறது. யாத்திராகமம் 15:2; சங்கீதம் 118:14; 119:54; ஏசாயா 12:2
- **“தாம் ஒருவரே தேவன்”** தெய்வத்தின் மெய்யானத் தனித்துவத்தைக் குறிப்பிடுகிறது. யோவான் 5:44; 1 தீமோத்தேயு 1:17; யூதா 1:25
- **“ஒருவரே ஞானமுள்ளவராயிருக்கிற தேவன்”** இது அவருடைய ஞானத்தின் தனித்தன்மையைப் பார்வையிடுகிறது. ரோமர் 16:27
- **“பூரண சற்குணர்”** அவரில் எந்த பாவமோ அல்லது தவறோ இருக்கவில்லை என்பது இதன் அர்த்தம். மத்தேயு 5:48
- **“மெய்யான தேவன்”** அவர் மனிதனைப் படைத்தார், மனிதன் அவரைப் படைக்கவில்லை என்பது இதன் பொருள். 2 நாளாகமம் 15;3; எரேமியா 10:10; 1 யோவான் 5:20

C. பிதாவின் பங்கு:

திரித்துவத்தில் பிதாவின் பங்கு, வானமும், பூமியும் படைக்கப்படுவதற்கு முன்பே அவர் வடிவமைத்து நிலைநாட்டிய திட்டத்தில் அக்கறை காட்டுவதாகும் (எபேசியர் 1:11; 3:11).

D. **பிதாவின் பங்கு இப்படி விவரிக்கப்படுகிறது**

- **“கட்டி உண்டாக்குபவர்”** அஸ்திபாரத்தையும் எல்லா உட்புற வெளிப்புற அழுத்தங்களையும், தோற்றங்களையும், கட்டிடத்தின் ஒரு பகுதிக்கும் மற்றொரு பகுதிக்கும் உள்ள தொடர்புகளையும் கருத்தில்கொண்டு ஒரு கட்டிடத்தை வடிவமைத்துத் திட்டமிடும் அவருடைய திறமையைக் குறிப்பிடுகிறது. எபிரெயர் 11:10
- **“கட்டி எழுப்புபவர்”** ஒரு திட்டத்தை வைத்துக் கட்டி முடிக்கும் திறமை. எபிரெயர் 3:4; 11:10
- **“இரக்கமும் கிருபையுமுள்ள தேவன்”** மனுக்குலத்துக்கு நேராக அவருடைய பொறுமையைக் குறிப்பிடுகிறது. யாத்திராகமம் 34:6
- **“நெருக்கப்படுகிற எளியவனுக்குத் திடனானவர்”** தங்களைவிட வமை குறைந்த மக்களை தவறாக நடத்தும் வமைமிக்க மக்களின்மேல் அவருடைய வெறுப்பைக் குறிப்பிடுகிறது. ஏசாயா 25:4
- **“நித்திய ராஜா”** இது அவருடைய நித்திய அரசாட்சியைக் குறிப்பிடுகிறது. எரேமியா 10:10
- **“சோதிகளின் பிதா”** உலகத்துக்கு வெளிச்சம் கொடுக்கும்படி அமைக்கப்பட்ட வரங்களைக் கொடுக்கும் ஒருவரைக் குறிப்பிடுகிறது. யாக்கோபு 1:17
- **“இரக்கங்களின் பிதா”** தம்முடைய படைப்புக்கு இடைவிடாமல் கிருபையளிப்பதை இது குறிப்பிடுகிறது. 2 கொரிந்தியர் 1:3
- **“ஆவிகளின் பிதா”** இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கு ஆவிக்குரிய வாழ்க்கை என்ற வரத்தை அளிப்பதைக் குறிப்பிடுகிறது. எபிரெயர் 12:9

- **“திக்கற்ற பிள்ளைகளுக்குத் தகப்பன்”** இது அனாதைகளுக்கு அவருடைய மனவுருக்கத்தைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 68:5
- **“மன்னிக்கிற தேவன்”** மனுக்குலத்தை அவர்களுடைய பாவங்களிருந்து இரட்சிக்கும் அவருடைய ஆசையை இது குறிப்பிடுகிறது. நெகேமியா 9:17; சங்கீதம் 99:8
- **“ஜீவத்தண்ணீர் ஊற்று”** நித்திய ஜீவனைக் கொடுத்து அதைத் தொடர்ந்து இருக்கச் செய்யும் ஒருவர் என்ற சத்தியத்தை இது குறிப்பிடுகிறது. எரேமியா 2:13; 17:13
- **“திராட்சத்தோட்டக்காரர்”** ஆவிக்கேற்ற கனியை உற்பத்தி செய்வதில் அவருடைய கவனத்தை இது குறிப்பிடுகிறது. யோவான் 15:1
- **“இஸ்ரவேன் மகிமை”** இஸ்ரவேலருக்கு நேராக அவர் உண்மையுள்ளவராயும் உறுதியுடனும் இருப்பதைக் குறிப்பிடுகிறது. 1 சாமுவேல் 15:29; மீகா 1:15
- **“நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவன்”** என்பது இயேசு கிறிஸ்துவின் சரீரம் தெய்வீகமாய் உருவாகியதைக் குறிப்பிடுகிறது. ரோமர் 15:6; 2 கொரிந்தியர் 1:3; எபேசியர் 1:3; 1 பேதுரு 1:3
- **“என்னை உண்டாக்கிய தேவன்”** என்பது மனித சரீரத்தின் அமைப்பில் நேரடியாக அவர் ஈடுபடுவதைக் குறிப்பிடுகிறது. யோபு 35:10
- **“என் கன்மலையாகிய தேவன்”** விசுவாசிகளுக்கு இவர் அளிக்கும் உறுதியைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 42:9
- **“ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களுடைய தேவன்”** இது ஆபிரகாமோடு அவர் செய்த உடன்படிக்கையில் அவருடைய பங்கைக் குறிப்பிடுகிறது. யாத்திராகமம் 3:16; அப்போஸ்தலர் 3:13; 7:32
- **“சகலவிதமான ஆறுதன் தேவன்”** உபத்திரவ காலங்களில் அவர் உதவியளிப்பவர் என்பதைக் குறிப்பிடுகிறது. 2 கொரிந்தியர் 1:3
- **“மாம்சமான யாவருக்கும் தேவன்”** எல்லா மனுக்குலத்தையும் படைத்தவர் அவரே என்ற சத்தியத்தை இது குறிப்பிடுகிறது. எரேமியா 32:27
- **“நம்பிக்கையின் தேவன்”** என்பது அவருடைய எதிர்காலத் திட்டத்தின்மேல் நமக்கிருக்கும் நம்பிக்கையைக் குறிப்பிடுகிறது. ரோமர் 15:13
- **“அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன்”** என்பது போராட்டங்களில் ஒப்புரவாகும் அவருடைய ஆசையைக் குறிப்பிடுகிறது. 2 கொரிந்தியர் 13:11.
- **“என் இரட்சிப்பின் தேவன்”** நம்முடைய நித்திய இரட்சிப்பில் நமக்குச் சொந்தமான தனிப்பட்ட இயல்பை இது குறிப்பிடுகிறது. சங்கீதம் 18:46; 25:5; 27:9; 51:14; 88:1; மீகா. 7:7; ஆபகூக் 3:18; லூக்கா 1:47
- **“என் பெலனாகிய தேவன்”** மனுக்குலத்துக்கு அவருக்குச் சொந்தமான தனிப்பட்ட அவருடைய தாங்குதலை இது குறிப்பிடுகிறது. சங்கீதம் 43:2
- **“சரிக்கட்டுகிற தேவனாகிய கர்த்தர்”** அநீதியாய் நடப்பவர்களுக்கு நியாயத்தீர்ப்பளிப்பார் என்ற சத்தயத்தை இது குறிப்பிடுகிறது. எரேமியா 51:56
- **“மாம்சமான யாவருடைய ஆவிகளுக்கும் தேவன்”** இது ஜீவனைப் பராமரிக்கும் இயல்பைக் குறிப்பிடுகிறது எண்ணாகமம் 27:17
- **“நம்முடைய பிதாவாகிய தேவன்”** விசுவாசிகளுக்கு அவரோடிருக்கும் குடும்ப உறவை இது குறிப்பிடுகிறது. ரோமர் 1:7; 1 கொரிந்தியர் 1:3; 2 கொரிந்தியர் 1:2; கலாத்தியர் 1:3; எபேசியர் 1:2; பிப்பியர் 1:2; கொலோசெயர் 1:2; 2 தெசலோனிக்கேயர் 1:1; 2:16; பிலேமோன் 1:3 யாக்கோபு 1:27
- **“நம்முடைய பெலனாகிய தேவன்”** என்பது நம்முடைய தனிப்பட்ட பெலத்துக்காக மட்டுமல்ல ஒன்றுபட்ட பெலத்துக்கும் அவரே உறைவிடம் என்ற சத்தியத்தைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 81:1
- **“பூமியின் ராஜ்யங்களுக்கெல்லாம் தேவனானவர்”** இது தேவ தூதர்களால் அல்லது மனிதர்களால் நிலைநாட்டப்பட்ட எந்த அதிகார அமைப்புக்கும் அவர் மேலானவர் என்று குறிப்பிடுகிறது. 2 இராஜாக்கள் 19:15; ஏசாயா 37:16
- **“பிதாவாகிய தேவன்”** இது எல்லா காரியங்களின் மேலும் அவருடைய ஏற்பாட்டைக் குறிப்பிடுகிறது. யோவான் 6:27; 1 கொரிந்தியர் 8:6; 15:24; கலாத்தியர் 1:1; எபேசியர் 5:20; 6:23; பிப்பியர் 2:11; கொலோசெயர் 1:3; 3:17; 1 தெசலோனிக்கேயர் 1:1; 2 தெசலோனிக்கேயர் 1:2; 1 தீமோத்தேயு 1:2; தீத்து 1:4; 1 பேதுரு 1:2; 2 பேதுரு 1:17; 2 யோவான் 1:3; யூதா 1:1
- **“எனக்காகப் பழிக்குப்பழி வாங்கும் தேவன்”** ஒரு தனிநபருக்குச் செய்யப்பட்ட தவறுகளுக்கு அவர் தாமே பழிவாங்குவதை இது குறிப்பிடுகிறது. 2 சாமுவேல் 22:48; சங்கீதம் 18:47
- **“பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன்”** கடினமான வேளைகளில் விசுவாசியை பராமரிக்கும் ஒருவராக அவர் இருக்கிறார் என்ற சத்தியத்தை இது குறிப்பிடுகிறது. ரோமர் 15:5
- **“தீங்குக்கு மனஸ்தாபப்படுகிற தேவன்”** ஒரு தேசத்தின் மேல் கொண்டுவரும் சீரமைப்பை அவரால் ரத்து செய்ய முடியும் என்பதைக் குறிப்பிடுகிறது. யோனா 4:2
- **“காண்கிற தேவன்”** மனுக்குலத்துக்கு அவர் கவனம் செலுத்துவதைக் குறிப்பிடுகிறது. ஆதியாகமம் 16:13
- **“திக்கற்ற பிள்ளைகளுக்குச் சகாயர்”** என்பது தகப்பனற்ற குழந்தைகளுக்கு அவர் உதவி செய்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 10:14
- **“ஆறுதல் செய்கிறவர்”** இது வேதனையைக் குறைக்கும் அவருடைய ஆற்றலைக் குறிப்பிடுகிறது. ஏசாயா 51:12
- **“மனுஷனுடைய நினைவுகள் இன்னதென்று அவனுக்கு வெளிப்படுத்துபவர்”** இது மனிதனுக்கு அவருடைய மனதை வெளிப்படுத்துவதைக் குறிப்பிடுகிறது. ஆமோஸ் 4:13
- **“அவர்களுடைய இருதயங்களையெல்லாம் உருவாக்குபவர்”** இது மனிதனுடைய ஆழ்ந்த உள்ளானப் பகுதிகளில் அவருடைய படைப்பு திறனை குறிப்பிடுகிறது. சங்கீதம் 33:15

- **“நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும அதிகமாய் நமக்குச் செய்ய வல்லவர்”** அவருடைய கிரியைகளின் எல்லையற்ற சாத்தியங்களை இது குறிப்பிடுகிறது. எபேசியர் 3:20
- **“இயேசுவை மரித்தோரிருந்து எழுப்பியவர்”** இது இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அவருடைய பங்கைக் குறிப்பிடுகிறது. ரோமர் 8:11
- **“பரிசுத்த பிதா”** இது அவருடைய நீதியான முழுமையைக் குறிப்பிடுகிறது. யோவான் 17:11
- **“உன் நடுவிலுள்ள பரிசுத்தர்”** இது அவருடைய நீதியின் பிரச்சன்னத்தைக் குறிப்பிடுகிறது. ஓசியா 11:9
- **“உன் நாயகர்”** தம்முடைய படைப்புக்கு அன்பான அவருடைய ஏற்பாட்டை இது குறிப்பிடு கிறது. ஏசாயா 54:5
- **“விதவைகளுக்காக நியாயம் விசாரிக்கிறவர்”** பாதுகாப்பற்றவர்களாக விடப்பட்டவர்களுக்கு அவருடைய அக்கறை. சங் கீதம் 68:5
- **“சர்வலோக நியாயாதிபதி”** இது உலகத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் அவருடைய அதிகார எல்லை வியாபித்திருக்கிறது என்று குறிப்பிடுகிறது. ஆதியாகமம் 18:25
- **“பரலோகத்தின் ராஜா”** இது அவருடைய சிம்மாசனம் இருக்குமிடத்தைக் குறிப்பிடுகிறது. தானியேல் 4:37
- **“ஜீவனுள்ள பிதா”** இது இப்போதைய நெருங்கிய அன்பைக் குறிப்பிடுகிறது. யோவான் 6:57
- **“ஆண்டவர்”** இதன் அர்த்தம் அவர் எஜமான் என்பதாகும். லூக்கா 2:29
- **“யேகோவாநிசி”** ஒரு தேசத்தின் கொடியைப்போல அவர் ஒருவர்மீது நாம் கவனம் செலுத்த வேண்டும் என்பதை இது குறிப்பிடுகிறது. யாத்திராகமம் 17:15
- **“கர்ததர் என் கன்மலை”** இது ஒரு விசவாசிக்காக அவரிடமிருக்கும் உறுதியைக் காட்டுகிறது. சங்கீதம் 19:14; 28:1; 144:1
- **“சர்வ பூமியினுடைய ஆண்டவர்”** இது சகல பூமியும் அவருடைய அதிகார எல்லையின் கீழ் இருக்கிறது என்ற உண்மையைக் குறிப்பிடுகிறது. யோசுவா 3:11, 13; சங்கீதம் 97:5; மீகா 4:13, சகரியா 4:14
- **“வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவர்”** சர்வலோகத்தின் ஒவ்வொரு பகுதியும் அவருடைய அதிகாரத்தின்கீழ் இருக்கிறது என்பதைக் குறிப்பிடுகிறது. மத்தேயு 11:25; லூக்கா 10:21; அப்போஸ்தலர் 17:24
- **“ராஜாக்களுக்கு ஆண்டவர்”** இது பூமியின் ராஜாக்களுக்கு மேலாகவும் அவருடைய அதிகாரமிருக்கிறது என்பதைக் குறிப்பிடுகிறது. தானியேல் 2:47
- **“நம்மை உண்டாக்கின கர்த்தர்”** இது மனுக்குலத்தை உருவாக்க அவர் அதிகாரத்தைப் பயன்படுத்தியதைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 95:6
- **“எங்கள் கேடகமாகிய ஆண்டவர்”** தம்முடைய மக்களைப் பாதுகாக்கும் அவருடைய ஆற்றலை இது குறிப்பிடுகிறது. சங்கீதம் 59:11
- **“உன் பரிகாரியாகிய கர்த்தர்”** இது நோய்களின் மேல் அவருடைய வல்லமையைக் குறிப்பிடுகிறது. யாத்திராகமம் 15:26
- **“உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர்”** உலகத்திருந்து உங்களைப் பிரித்தெடுக்க வேண்டிய அதிகாரத்தை இது குறிப்பிடுகிறது. யாத்திராகமம் 31:13; லேவியராகமம் 20:8; 22:32
- **ஞுனுஅடிக்கிறவராகிய நான் கர்த்தர்”** இது அநேக சந்தர்ப்பங்களில் தம்முடைய மக்கள்மீது அவர் கொண்டுவரும் தெய்வீக சீரமைப்பைக் குறிப்பிடுகிறது. எசேக்கியேல் 7:9
- **“கர்த்தருடைய பர்வதத்திலே பார்த்துக்கொள்ளுபவர்”** இது அவர் தம்முடைய மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்கிறார் என்ற உண்மையைக் குறிப்பிடுகிறது. ஆதியாகமம் 22:14
- **“உன் சிருஷ்டிகர்”** இது உங்களைப் படைத்ததில் தேவனுடைய கரத்தைக் குறிப்பிடுகிறது. ஏசாயா 54:5
- **“எல்லாவற்றின் சிருஷ்டிகர்”** இது அவருடைய படைப்பின் கிரியையின் அளவைக் குறிப்பிடுகிறது. பிரசங்கி 11:5; எரேமியா 10:16; 51:19
- **“பரலோகத்தில் எஜமான்”** இது அதிகாரம் இருக்கும் மற்றவர்களுக்கு அவர் காட்டிய முன்மாதிரியைக் குறிப்பிடுகிறது. கொலோசெயர் 4:1
- **“எனக்குச் சாட்சி பகருகிறவர்”** இதன் அர்த்தம் அவர் நமக்கு பிரதிவாதியாய் நிற்கிறார் என்பதாகும். யோபு. 16:19
- **“என் நம்பிக்கை”** அவரில் நம்முடைய நம்பிக்கையின் தனி இயல்பைக் குறிக்கிறது. சங்கீதம் 71:5
- **“என் சகாயர்”** இது விடுவிப்பதின் தனிப்பட்ட இயல்பைக் காட்டுகிறது. யாத்திராகமம் 18:4; சங்கீதம் 27:9; 40:17; 54:4; 63:7; 70:5; 118:7; 121:1; எபிரெயர் 13:6
- **“என் மறைவிடம்”** இது மக்களைப் பாதுகாப்பதில் அவருக்கே உரிய இயல்பைக் குறிப்பிடு கிறது. சங்கீதம் 32:7
- **“என் நம்பிக்கை”** இது எதிர்காலத்துக்காக தேவனை நம்புவதைப்பற்றிய நமது சொந்த இயல்பைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 25:5, 21; 39:7; 62:5; 71:5; 119:74, 81, 114, 147; அப்போஸ்தலர் 23:6; 26:6
- **“என் வெளிச்சம்”** அவருடைய வழிகாட்டும் சொந்த இயல்பை இது குறிப்பிடுகிறது. சங்கீதம் 27:1; மீகா 7:8
- **“நெருக்கமுண்டான நாளிலே எனக்கு உயர்ந்த அடைக்கலமானவர்”** துன்பப்படும் வேளைகளில் அவருடைய பாதுகாப்பை இது குறிப்பிடுகிறது. எரேமியா 17:17; சங்கீதம் 59:16
- **“எனக்கு ஆதரவாயிருந்தவர்”** இது அவருடைய ஏற்பாடுகளின் சொந்த இயல்பைக் குறிப்பிடுகிறது. 2 சாமுவேல் 22:19; சங்கீதம் 18:18
- **“உன் மீறுதல்களைக் குலைத்துப்போடுபவர்”** இது அவருடைய தனிப்பட்ட மன்னிப்பளிக்கும் இயல்பைக் குறிப்பிடுகிறது. ஏசாயா 43:25
- **“நமக்கு அடைக்கலமானவர்”** அவர் நம்முடைய உண்மையான வீடு என்பது இதன் பொருள். சங்கீதம் 90:1
- **“நம்முடைய நியாயாதிபதி”** மனுக்குலம் எல்லாவற்றின் மேலும் அவர் நியாயாதிபதியாய் இருக்கிறார் என்பதை இது குறிப்பிடுகிறது. 1 சாமுவேல் 24:15; ஏசாயா 33:22

- **“நம்முடைய நியாயப்பிரமாணிகர்”** எல்லா மனுக்குலத்துக்கும் தகுதிநிலைகளை நிலைநாட்டும் அதிகாரம் அவருக்கிருக்கிறது என்பது இதன் அர்த்தம். ஏசாயா 33:22
- **“எங்கள் மீட்பர்”** அவர் மனுக்குலத்துக்கு இரட்சிப்பை வாங்கிவிட்டார் என்பது இதன் அர்த்தம். ஏசாயா 47:4; 63:16
- **“நமக்கு அடைக்கலமும் பெலனுமானவர்”** அவர்களுடையவர்களை அவர் பாதுகாப்பவர் என்பது இதன் பொருள. சங்கீதம் 46:1
- **“வானத்தையும் பூமியையும் உடையவர்”** எல்லாப் பொருட்களுக்கும் சொந்தக்காரர் அவர் என்பது இதன் அர்ததம். ஆதியாகமம் 14:19, 22
- **“குயவன்”** தம்முடைய கையிருப்பதை அவர் வடிவங்களாக உருவாக்குகிறார் என்பது இதன் அர்த்தம். ஏசாயா 29:16; 45:9; 64:8; எரேமியா 18:4, 6; சகரியா 11:13; ரோமர் 9:21
- **“உன் மீட்பர்”** உங்களைத் தவிர மற்றவர்களுக்கு அவர் இரட்சிப்பை வாங்குபவர் என்பது இதன் பொருள். ஏசாயா 54:5
- **“தமது ஜனத்துக்கு அடைக்கலமானவர்”** அவருடைய மக்களுக்கு அவர் அளிக்கும் பாதுகாப்பைக் குறிப்பிடுகிறது. யோவேல் 3:16
- **“பெருவெள்ளத்துக்குத் தப்பும் அடைக்கலம் அளிப்பவர்கள்”** மனிதர்களுடைய வன்முறையிருந்து அவர் பாதுகாப்பளிக்கிறார். ஏசாயா 25:4
- **“நீதியுள்ள பிதா”** இது அவருடைய நற்பண்பைக் குறிப்பிடுகிறது. யோவான் 17:25
- **“நீதியுள்ள நியாயாதிபதி”** அவருடைய தீர்மானங்கள் சரியாயிருப்பதைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 7:11; எரேமியா 11:20; 2 தீமோத்தேயு 4:8
- **“எனக்கு அடைக்கலமும் கன்மலையுமானவர்”** அவருடைய பாதுகாப்பின் உறுதியைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 94:22
- **“பெலனான என் கன்மலை”** தனி ஒருவனுக்கு பெலனைக் கொண்டுவரும் உறுதியை இது நோக்கிப்பார்க்கிறது. சங்கீதம் 62:7
- **“இரட்சணியக் கன்மலை”** நம்முடைய இரட்சிப்பு இருக்கும் உறுதி நிலை. சங்கீதம் 95:1
- **“பரிசுத்த ஸ்தலம்”** அவர் ஒரு உறைவிடம் என்ற உண்மையை இது குறிப்பிடுகிறது. ஏசாயா 8:14; எசேக்கியேல் 11:16
- **“அரணான அடைக்கலமானவர்”** அவர் ஒரு புகடம் என்பது இதன் அர்த்தம். சங்கீதம் 28:8
- **“வெயிலுக்கு ஒதுங்கும் நிழல்”** அழுத்தம் அதிகரிக்கும்போது கொடுக்கப்படுவதை இது குறிப்பிடுகிறது. ஏசாயா 25:4
- **“பெலன்”** அவர் அளிக்கும் வல்லமையை இது குறிப்பிடுகிறது. ஏசாயா 28:6
- **“இருதயத்தின் பெலன்”** ஒரு விசுவாசியின் இருதயத்துக்கு அவர் அளிக்கும் வல்லமையை இது குறிப்பிடுகிறது. சங்கீதம் 73:26
- **“என் இரட்சிப்பின் பெலன்”** இது நம்முடைய இரட்சிப்பின் பின்னால் இருக்கும் வல்லமையைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 140:7
- **“சிறுமைப்பட்டவனுக்கு அடைக்கலமானவர்”** மனிதனின் அழுத்தத்துக்குக் கீழிருப்பவர்களுக்கு தேவனின் பாதுகாப்பை குறிப்பிடுகிறது. சங்கீதம் 9:9
- **“நெருக்கப்படுகிற காலங்களில் தஞ்சமானவர்”** அழுத்தம் இருக்கும் போதெல்லாம் அவருடைய பாதுகாப்பைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 9:9
- **“என் ஆத்துமாவை ஆதரிக்கிறவர்”** அவருடைய ஆவிக்குரிய ஏற்பாட்டின் தனிப்பட்ட இயல்பைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 54:4
- **“போதகர்”** மக்களுக்கு உபதேசம் செய்யும் அவருடைய திறமையைக் குறிப்பிடுகிறது. யோபு. 36:22; ஏசாயா 30:20
- **“ஜெபத்தைக் கேட்கிறவர்”** மனுக்குலத்தின் எல்லா ஆசைகளையும் அவர் புரிந்துகொள்ளுகிறார் என்பது இதன் அர்த்தமாயிருக்கிறது. சங்கீதம் 65:2
- **“உடன்படிக்கையையும் கிருபையையும் காத்து வருபவர்”** இதனுடைய பொருள் என்னவெனில், அன்பினால் அவர் அவருடைய உடன்படிக்கைகளைக் கைக்கொள்ளுகிறார். 1 இராஜாக்கள் 8:23; 2 நாளாகமம் 6:14
- **“ஆபத்துக்காலத்தில் அனுகூலமான துணையுமானவர்”** நமக்கு உதவி தேவைப்படும்போது, அவர் நமது அருகில் இருக்கிறார் என்பது இதன் அர்த்தம். சங்கீதம் 46:1

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 5 பகுதி 3

1. **“என்,” “உன்,” “அவனுடைய” என்ற ஒருமை சுட்டுப் பெயர்கள் (ஒருவரை பெயரிட்டு அழைக்காமல் அவரைக் குறிப்பிடும் வார்த்தைகள்) தேவனுடைய பெயர்களுடன் உபயோகப்படுத்தும் போது, இது எவ்வகையான உறவை குறிக்கிறது?**

2. **“நம்முடைய” அல்லது “அவர்களுடைய” பன்மை என்ற சுட்டுப் பெயர்கள் தேவனுடைய பெயர்களுடன் உபயோகப்படுத்தும் போது, இது எவ்வகையான உறவை குறிக்கிறது?**

3. **“ஆ” பிரிவில் பிதா எப்படிப்பட்டவர் என்ற வித்யாசமான விளக்கங்களை எடுத்துக்கொள்ளுங்கள். அவற்றை கீழுள்ள தெய்வீகத் தன்மையின் குணாதிசயங்களுடன் இணையுங்கள். சில விளக்கங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட குணாதிசயங்களுடன் அடங்கும். ஆனால் இந்தப் பயிற்சியில் ஒன்றுடன் மட்டும் இணைக்க வேண்டும். இப் புத்தகத்திலுள்ள தெய்வீகத் தன்மையின் குணாதிசயங்களை அ, ஆ, இ... உடன் குறிப்பிடலாம்.**

a. ராஜரீகம் (சர்வ அதிகாரம்)
b. நீநி
c. நியாயம்
d. அன்பு
e. நித்திய ஜீவன்
f. சர்வ வல்லமை
g. எங்கும் நிறைந்த
h. சர்வ ஞானம்
i. மாற்ற முடியாத தன்மை
j. உண்மை

4. **“ஈ” பகுதியில் பிதாவின் பங்கு (வேலை) பற்றிய வித்தியாசமான விளக்கங்களை கீழே விவரிக்கப்பட்டுள்ள பிதாவின் செயல்களுடன் இணையுங்கள். மேலும், இந்த விளக்கங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவைகளுடன் தொடர்புள்ளதாயிருக்கலாம். இப் புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ள செயல்களுடன் அ, ஆ, இ... என்று குறித்துக் கொள்ளலாம்.**
a. அதிகாரம்
b. சிருஷ்டிகர்
c. தற்காப்பவர் மற்றும் பாதுகாப்பவர்
d. உதாரணம்
e. கொடுப்பவர்
f. நியாதிபதி
g. தலைவர்
h. அன்புள்ளவர்
i. உறுவாக்குபவர் மற்றும் கொடுப்பவர்
j. ஸ்திரப்படுத்துபவர் மற்றும் தாங்குபவர்

பகுதி 4
குமாரனாமீய தேவன் (Christology)

A. இயேசு கிறிஸ்து என்ற நபர்

குமாரனாகிய இயேசு கிறிஸ்து மாம்சமான தேவன். அது ஒரு நல்ல மனிதன் தேவனாக மாறியது அல்ல, அது தேவன் மனிதனாகியது ஆகும் (யோவான் 1:1, 14). அவர் தேவனுடைய இயல்பின் சரியான பிரதிநிதியாயிருக்கிறார் (யோவான் 14:8–9; எபிரெயர் 1:3).

1. அவர் முன்பாக இருந்தது

சரீரப்பிரகாரமாக பிறப்பதற்கு முன்பாகவே இயேசு இருந்தார். ***"அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்ட"*** (கொலோசெயர் 1:16) என்று நமக்குக் கூறப்பட்டிருக்கிறது. இயேசுவுங்கூட, ***"ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்"*** (யோவான் 8:58) என்று யூதர்களிடம் சொல்யிருக்கிறார்.

யோவானின் சுவிசேஷமுங்கூட அவர் முன்பாகவே இருந்தார் என்பதை நிலைநாட்டுகிறது. யோவான் சுவிசேஷம், ***"ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை"*** (யோவான் 1:1–3) என்று துவங்குகிறது. இந்த அதிகாரத்தில் பின்னால் யோவான், ***"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்த"*** (யோவான் 1:14).

2. தேவ மனித ஐக்கியம்

இயேசு தேவனும் மனிதனும் சேர்ந்தவர். அவர் முழுமையாக தேவனாகவும் முழுமையாக மனிதனாகவும் இருக்கிறார். இந்த சத்தியத்தை அநேக நேரங்களில் புரிந்துகொள்ளுவது கடினமாக இருந்தாலும் அது மெய்யாயிருக்கிறது.

சிலுவையில் மரிப்பதற்குச் சற்று முன்பாக இயேசு பரிசேயர்களிடம் இந்தக் கேள்வியைக் கேட்டார் (மத்தேயு 22:41–46). அவர், "தாவீது அவரை ஆண்டவர் என்று சொல்யிருக்க, அவனுக்கு அவர் குமாரனாயிருப்பது எப்படி" என்று கேட்டார். இது சாத்தியமாவதற்கு ஒரேவழி மேசியா தேவனாகவும் மனிதனாகவும் இருக்க வேண்டும் என்பதே.

3. அவர் பரிபூரணர்

இயேசு ஒவ்வொரு வழியிலும் பூரணராயிருந்தார். தேவனாக அவர் பரிபூரணராயிருந்தாலும் சிலர் அவர் மனிதனாயிருந்ததில் பூரணராயிருந்தாரா என்று கேள்வி எழுப்பியுள்ளனர்.

ரோமர் புத்தகத்தில் நாம், ***"ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று"*** (ரோமர் 5:12) என்று வாசிக்கிறோம். எல்லா மனிதருக்கும் பாவத்தையும் மரணத்தையும் பரவச்செய்த அந்த ஒரு மனிதன் ஆதாம் ஆவான். (ரோமர் 5:13–19). இயேசுவுக்கு உலகப்பிரகாரமான உயிரியல் ரீதியிலான தகப்பன் இல்லை, "பரிசுத்த ஆவியானவர்" அவருக்குப் பிதா ஆனார் (லூக்கா 1:35). அதனால் மட்டுமே அவர், "தேவனுடைய குமாரன்" என்றழைக்கப்பட வேண்டும் என்பதில்லை, இன்றும் முதல் மனிதன் ஆதாம் மூலமாக வந்த பாவமும் மரணமும் அவருக்குச் சென்றடையக் கூடாது என்பதினால்தான் மனுக்குலத்தில் மற்ற எல்லாருக்கும் இருந்தது போல, ஆதாமுடைய பாவ இயல்பு இயேசுவிடம் இல்லை. ஆதாம் பூரணமாகப் படைக்கப்பட்டான், பின்னர் வீழ்ந்தான். ஆனால் இயேசு பூரணராய் பிறந்து ஒருக்காலும் வீழ்ச்சி அடையவில்லை.

இயேசு ஒரு பரிபூரண வாழ்க்கை வாழ்ந்தார் என்று சதாகாலங்களுக்கும் பரிபூரணராயிருப்பார் என்றும் வேதாகமத்தில் காண்கிறோம். அவர் "பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை" (1 பேதுரு 2:22). மாம்சத்தில் அவருடைய பாவமற்ற வாழ்க்கையினால் அவர் "என்றென்றைக்கும் பூரணர்" ஆக்கப்பட்டார் (எபிரெயர் 5:9; 7:28). இதன் அர்த்தம் அவர் ஒருபொழுதும் பாவம் செய்ய மாட்டார் என்பதாகும்.

B. இயேசு கிறிஸ்துவின் பங்கு

தேவனுடைய திட்டத்தில் இயேசுவின் பங்கு, தேவனுடைய திட்டத்தைச் செய்து முடிப்பதாகும் (யோவான் 8:28–29). மனுக்குலம் இரட்சிக்கப்பட மனுக்குலத்தின் பாவங்களுக்கான கிரயத்தைச் செலுத்தி முடித்து, தம்முடைய செயல்களைப் பூர்த்தி செய்தார் (2 கொரிந்தியர் 5:21).

1. ஒரு குழந்தையாக இயேசு வந்தது

பழைய ஏற்பாட்டில், குறிப்பாக, ஏசாயா தீர்க்கதரிசி மூலமாக இயேசுவின் பிறப்பு தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்டது (ஏசாயா 7:14; 9:6; 11:1; 53:2). இயேசு வாக்குறுதியளிக்கப்பட்ட "ஸ்திரீயின் வித்தானவர்" (ஆதியாகமம் 3:15).

அவர் பெத்லகேமில் பிறப்பார் என்றும் (மீகா 5:2), ஈசாக்கு (ஆதியாகமம் 21:12), யாக்கோபு (ஆதியாகமம் 35:10–12), யூதா (ஆதியாகமம் 49:8–11), ஈசா (ஏசாயா 11:1), மற்றும் தாவீது (2 சாமுவேல் 7:12–16; எரேமியா 23;5; சங்கீதம் 132:11) ஆகியோரின் வம்சாவளியில் ஆபிரகாமின் வித்து (ஆதியாகமம் 22:18; மத்தேயு 1:1; ஆதியாகமம் 3:16) பிறப்பார் என்றும் தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது.

2. **கன்னியிடம் பிறந்தது**
தேவனுடைய திட்டம் மேசியாவாகிய (கிறிஸ்து) இயேசு ஒரு கன்னிகை மூலமாகப் பிறக்க வேண்டும் என்பதாயிருந்தது (ஏசாயா 7:14). இறையியல் பிரகாரம் இது முக்கியமானதாயிருந்தாலும், இயேசுவின் பிறப்பு அற்புதமானது என்பதையும் கவனிக்க வேண்டும்.

மரியாளின்மூலமாக இந்த தீர்க்கதரிசனம் தெளிவாக நிறைவேறியது (மத்தேயு 1:20, 25).

3. **கிறிஸ்துவினுடைய மரணம்**
கிறிஸ்துவின் மரணம் அநேகக் காரியங்களை நிறைவேற்றியது. அவர் மரணமடைவதற்குத் தகுதியுடையவரல்ல (லூக்கா 23:4). பாவம் செய்த எல்லாரும் (ரோமர் 3:23) மரணமடையத் தகுதியுள்ளவர்கள் (ரோமர் 6:23). நாம் எல்லாரும் பாவஞ்செய்தபடியால், நாம் எல்லாரும் மரணத்துக்குத் தகுதியுள்ளவர்கள். இயேசு பாவம் செய்யாமல் மரணமடையத் தகுதியற்றவராயிருந்ததால், ஒரு பரிசுத்த நீதியுள்ள தேவனுக்கு முன்பாக நம்முடைய பாவங்களுக்கான கிரயத்தைச் செலுத்தும்படி நம்முடைய இடத்தை அவரே தெரிந்துகொண்டார் (யோவான் 10:15-17).

a. பதிலாள்
பதிலாள் என்பதற்கு சிலுவையின்மேல் இயேசு நம்முடைய இடத்தை எடுத்துக்கொண்டார் என்பதாகும். ***"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்"*** (1 பேதுரு 2:24). இயேசு நம்முடைய "சார்பாக" மட்டுமே சிலுவையிடம் போகாமல் "நம்முடைய இடத்தில்" போனார். நம்முடைய "சாபத்தை" அவர் சுமந்தார் (கலாத்தியர் 3:13).

b. மீட்பு
"மீட்பு" என்பதின் அர்த்தம், கிரயம் செலுத்தப்பட்டாயிற்று என்பதால் ஒருவர் விடுவிக்கப்பட்டார் என்பதாகும். அவரால் வாங்கப்படுமுன், நம் விருப்பமல்லாத ஒரு அடிமை நிலை இருந்ததையும் விடுதலை பெறுவதற்கான கிரயம் இப்பொழுது செலுத்தப்பட்டது என்பதையும் குறிப்பிடுகிறது. மீட்சி என்பது பாவங்களை மன்னிக்கும் ஒரு செயல்; இது நம்மை சாத்தானின் அதிகாரத்திருந்து தேவனுடைய இராஜ்யத்துக்குக் கொண்டு செல்லுகிறது (கொலோசெயர் 1:13-14).

பாவம் மரணம் என்ற பிரமாணத்திருந்து (ரோமர் 8:2) எல்லாரும் விடுவிக்கப்பட, கிறிஸ்து மனுக்குலம் முழுவதுக்கும் கிரயம் செலுத்திவிட்டார் (2 பேதுரு 2:1). அவர் செலுத்திய கிரயம் அவருடைய சொந்த இரத்தமாகும். இது சிலுவையின்மேல் அவருடைய மரணத்தைக் குறிப்பிடுகிறது (வெளி. 5:9-10). நம்முடைய விடுதலைக்கான கிரயம் செலுத்தப்பட்டதால் இப்பொழுது நாம் தேவனுக்கு ஊழியஞ் செய்வதைத் தெரிந்துகொள்ளும் உரிமையுடையவர்களாயிருக்கிறோம், (1 கொரிந்தியர் 6:19-20). இப்படிச் செய்வது நமக்குக் கொடுத்த கிருபைக்காக நன்றி செலுத்துவதற்காகவேயன்றி ஒரு கட்டாயத்தினால் அல்ல; நாம் முதல் கிறிஸ்துவுக்கு அடிமையாயிருப்பதைத் (ஒரு எஜமான் மிகப் பெரியவர் என்பதால் அவருக்குக் கீழ் தங்களை அமர்த்திக் கொண்டவர்கள்) தெரிந்துகொள்ள வேண்டும், மனிதனுடைய கருத்துப்படியல்ல (1 கொரிந்தியர் 7:19-23).

கிறிஸ்துவுக்குள் நமக்குக் கொடுக்கப்பட்ட சுதந்தரத்தைக் கைக்கொள்ளுவதில் ஒரு போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. (கலாத்தியர் 5:1) அவிசுவாசிகளைப்போல நடந்துகொள்ள நம்முடைய ஆத்துமாக்களை அடிமைபடுத்தும் சோதனைகளுக்கும் பாவங்களுக்கு நம்மை ஒப்புக்கொடுப்பது நம்முடைய மனித சுபாவம் (எபேசியர் 5:1-14). நமக்குக் கிருபையாக கிறிஸ்துவினால் கிரயம் செலுத்தப்பட்ட சுயாதீனத்தை "மாம்சத்துக்கு ஏதுவாக அநுசரியாமல்" நாம் ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யும்போது அன்பினால் வழிநடத்தப்பட வேண்டும் (கலாத்தியர் 5:13).

c. ஒப்புரவாகுதல்
ஒப்புரவாகுதல் என்பது இரண்டு கூட்டத்தினருக்கும் இடையேயுள்ள பகைமையை நீக்குவதாகும். இவ்வாறாக, ஒப்புரவாக்குதல் முடிவு சமாதானமாகும்.

அவிசுவாசிகள் "தேவனுக்குச் சத்துருக்கள்" (ரோமர் 5:10) என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றனர்; இதனால் அவருடைய கோபாக்கினையை எதிர்கொள்ளுகிறார்கள். அதாவது இரட்சிப்பு பெறும்படி (யோவான் 3:16, 18, 36) இயேசு கிறிஸ்துவின்மீது விசுவாசம் வைக்காத ஒவ்வொருவரும் தேவனுக்கு எதிராக பகைமையுணர்ச்சியுடையவர்களாய் இருக்கின்றார் (எபேசியர் 2:3). இயேசு கிறிஸ்து சமாதானத்தை நிலைநாட்டும்படி தம்முடைய மாம்ச சரீரத்தை ஒப்புக்கொடுத்தார். அதாவது யூதருக்கும் புறமதஸ்தர்களுக்குமிடையில் சமாதானத்தை நிலைநாட்டி அவர்களை தேவனோடு ஒப்புரவாக்கும்படி (எபேசியர் 2:16) இயேசு வந்தார்.

தேவனோடு ஒப்புரவாகுதலுக்கு பாவத்துக்கான கிரயம் செலுத்தப்பட வேண்டும் (2 கொரிந்தியர் 5:19). பகைமையின் அடிப்படையைக் கண்டு, தேவனுக்கும் மனிதனுக்குமிடையில் சமாதானத்தை உண்டாக்கும் ஊழியத்துக்காக தம்மை ஒப்புக்கொடுத்தார் (2 கொரிந்தியர் 5:18-21). ஒருவருக்கொருவர் பகைமையோடிருக்கும் இரண்டு அல்லது அதற்கதிகமான மக்களுக்கிடையே சமாதானம் கொண்டுவருபவராகச் செயல்படும்போது ஒரு தனிமனிதனின் ஒப்புரவாக்கும் ஊழியம் உபயோகிக்கப்படுகிறது (மத்தேயு 5:9).

நாம் தேவனோடு ஒப்புரவாகிவிட்டோம் என்ற உண்மை கிறிஸ்துவின் அன்பின் பெரியது என்பதையும் அளவையும் பெருந்தன்மையயும காட்டுகிறது (ரோமர் 5:8; லூக்கா 6:31-35). ஒப்புரவாகுதல் மனுக்குலம் எல்லாருக்கும் கிடைக்கிறதாயிருக்கிறது (கொலோசெயர் 1:20).

d. சாந்தப்படுத்துவது
"சாந்தப்படுத்துவ"து என்பது ஒரு பரிசுத்த தேவனுடைய நீதியையும் நேர்மையையும் திருப்திப்படுத்துவதாகும். இது ஒரு பயின் மூலம் செய்யப்படுகிறது.

பாவங்களைக் கண்டு தேவன் கடுங்கோபங் கொள்ளுகிறார். அவருடைய கோபத்தைப்பற்றி பழைய, புதிய ஆகிய இரண்டு ஏற்பாடுகளிலும், தெளிவாகப் போதிக்கப்பட்டிருக்கிறது (உபாகமம் 6:14–15; யோசுவா 23:16; சங்கீதம் 78:21; யோவான் 3:36; ரோமர் 1:18; எபேசியர் 2:3; 1 தெசலோனிக்கேயர் 2:16 இன்னும் அநேக வசனங்கள்). தேவன் அன்பும் இரக்கமும் உள்ள வராகவும் இருக்கிறார். சார்லஸ் ரைரீ கூறுகிறார்,

> பழைய ஏற்பாட்டு கொள்கையானது திருப்தி செய்யப்பட வேண்டுமென்று வற்புருத்துகிற புறஜாதிகளின் ஒரு நியாயமற்ற தெய்வமல்ல. ஆனால் பாவத்தைப் பொருத்துக் கொள்ளக் கூடாத நீதியுள்ள தேவன் அவருடைய அன்பு அவருடன் ஐக்கியம் கொள்வதற்கான வழியையும் கொடுத்துள்ளது என்பதைப் பற்றியதாகும்.[99]

தேவனுடைய கடுங்கோபம் திருப்திபடுத்தப்பட வேண்டும் அல்லது சாந்தப்படுத்தப்படவேண்டும், பாவங்களைப் பற்றிய தேவனுடைய கடுங்கோபத்தை திருப்திபடுத்தியது இயேசு கிறிஸ்துவின் மரணமே (ரோமர் 3:23–25). அவர் மனுக்குலத்தின் மேலுள்ள தேவனுடைய கடுங்கோபத்தை திருப்திப்படுத்தினார் (1 யோவான் 2:2), இது நம்மேல் அவருடைய அன்பைக் காட்டும் ஒரு செயலாகும் (1 யோவான் 4:10). இது எப்பொழுதும் தேவனுடைய திட்டமாயிருந்தது; இதுவே இயேசு மனிதனாக இந்த உலகுக்கு வந்த காரணத்தின் ஒரு முக்கிய பகுதியாகும் (எபிரெயர் 2:17–18).

4. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

உயிர்த்தெழுதல் என்பது அழிக்க முடியாத, ஒருபோதும் மரணமடையாத சரீரத்துடன் மரித்தோரிருந்து உயிர்த்தெழுந்த ஒருவரை விவரிக்கப் பயன்படும் குறிப்பான ஒரு சொல் (1 கொரிந்தியர் 15:42, 54). இது மறுபடியும் "உயிர்ப்பிப்ப"து என்பதிருந்து வேறுபட்டது. இது மரித்தபின் அதே சரீரத்தில் உயிர்த்தெழுந்து இறுதியில் மறுபடியும் மரணமடைவதைக் குறிப்பிடுகிறது (1 இராஜாக்கள் 17:21–22; 2 இராஜாக்கள் 4:34–35; யோவான் 11:43).

இயேசு மரித்தோரிருந்து உயிரோடு எழுப்பப்பட்டார். அவர் உண்மையாகவே மரணமடைந்தார், ஒரு உறக்க நிலையில் அல்லது னுகோமாது நிலையில் இல்லை என்று வேதவசனங்கள் தெளிவாக்குகின்றன (மத்தேயு 27:62–66; மாற்கு 15:39–44; லூக்கா 23:48, 49; யோவான் 19:33). தீர்க்கதரிசனம் நிறைவேறத்தக்கதாக ஒரு கல்லறை இருந்தது (ஏசாயா 53:9; மத்தேயு 27:57–58; மாற்கு 15:42–45; லூக்கா 23:50–52; யோவான் 19:38). இதன்பின் இயேசுவை மெல்ய துப்பட்டியிலே சுற்றி (மத்தேயு 27:59–60; மாற்கு 15:46; லூக்கா 23:53–54; யோவான் 19:40–42) கல்லறையிலே வைத்தார்கள் (மத்தேயு 27:62–66). அவர் கல்லறையினுள் எங்கே வைக்கப்பட்டார் என்பது யூதர்களுக்கும் தெரியும். அவர்கள் ரோமப் போர் வீரர்கள் நான்கு பேரை வாசல் காவல் வைத்து கல்லறையை அடைத்து முத்திரை வைத்தார்கள். (மத்தேயு 27:62–66). இயேசுவின் சீடர்கள் அவருடைய சரீரத்தைத் திருடிவிட்டனர் என்று பின்னர் யூதர்கள் வதந்தியைப் பரப்பினார்கள் (மத்தேயு 28:11–15; மாற்கு 14:15).

மூன்றாம் நாள் அந்தக் கல் மேலாக உருட்டப்பட்டிருந்தது (மத்தேயு 28:2 இதற்கு **குயூயோ (KULIO)** என்ற சொல்லைப் பயன் படுத்துகிறது. இதற்கு **"அங்குமிங்கும் உருட்டுவ" (KULIO)** என்பது அர்த்தம்; மாற்கு 16:3–4 பயனப்டுத்தும் **அனாகுயோ (ANAKULIO)** என்ற வார்த்தை மேலே உருட்டுவது என்ற அர்த்தமுடையது; லூக்கா அப்போகுயோ **(APOKULIO)** என்ற வார்த்தையை உபயோகப்படுத்துகிறார். அதற்கு புரட்டித் தள்ளப்படுதல் என்று அர்த்தம். யோவான் 20:1 **ஏரோ (AIRO)** என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது. இதன் அர்த்தம் "மேலே தூக்குவ" என்பதாகும். அந்தக் கல் மலைக்கு மேலாக உருட்டப்பட்டு பின்னர் மேலே தூக்கப்பட்டது. கல்லறை வெறுமையாயிருந்தது. (மத்தேயு 28:5–8; மாற்கு 16:2–8; லூக்கா 24:1–8; யோவான் 20:1).

கல்லறையினுள் இருந்ததெல்லாம் அடக்கத்தின்போது சுற்றப்பட்ட துணி மாத்திரமே. சரீரம் இயற்கைக்கு அப்பாற்பட்ட வழியிலன்றி வேறு வழியில் எடுக்க முடியாத அளவில் அவைகள் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. (யோவான் 20:2–10). இயேசு நீண்ட குறுகிய துண்டு துணிகளால் சுற்றப்பட்டிருந்தார். சரீரம் போய்விட்டது என்று காட்ட தலையைச் சுற்றியிருந்த துணி மட்டுமே நீக்கப்பட்டது. அந்த வழியில் ஒருவர் அதை சுற்றி எடுத்துத் திரும்பவும் அதை சுற்றி வைத்தாலுங்கூட யாராவது ஒருவர் அதற்காக நேரத்தைச் செலவிடுவது முடியாத காரியமாய்த் தோன்றுகிறது. சரீரம் தன்னைப் பின்வாங்கிக் கொண்டது.

உயிர்த்தெழுதலுக்குப் பின், இயேசு மகதலேனா மரியாளுக்கும் (யோவான் 20:14); மற்ற பெண்களுக்கும் (மத்தேயு 28:9–10); பேதுருவுக்கும் (லூக்கா 24:34; 1 கொரிந்தியர் 15:5); எம்மாவுக்குப் போகும் வழியில் இரண்டு சீடர்களுக்கும் (லூக்கா 24:13–33); தோமாவைத் தவிர மற்ற அப்போஸ்தலர்களுக்கும் (லூக்கா 24:36–43; யோவான் 20:19–24) மறுபடி அவன் இருக்கும் போதும் (யோவான் 20:26–39), கலேயா கடன் அருகில் சீடர்களில் ஏழு பேருக்கும் (யோவான் 21:1–23); கலேயாவில் ஒரு மலையில் 500 சீடர்களுக்கும் அதிகமானவர்களுக்கும் (1 கொரிந்தியர் 5:6), அவருடைய ஒன்றுவிட்ட சகோதரன் யாக்கோபுக்கும் (1 கொரிந்தியர் 15:7), அவர் பரத்திற்கேறினபொழுது பதினொரு சீடர்களுக்கும் (மத்தேயு 28:16–20; லூக்கா 24:33–52; அப்போஸ்தலர் 1:3–12); மற்றும் அவருடைய பரமேறுதலுக்குப்பின் பவுலுக்கும் (அப்போஸ்தலர் 9:3–6; 1 கொரிந்தியர் 15:8) தோன்றினார்.

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் முக்கிய பகுதியாயிருப்பது கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலாகும். (1 கொரிந்தியர் 15:1–3). இதுவே உலக சமயங்களின் இதர தலைவர்களிடமிருந்து இது அவரை வேறுப்படுத்துகிறது, அவர்களில் எவரும் உயிர்த்தெழவில்லை.

இயேசு தாம் மரித்தோரிருந்து உயிர்த்தெழுவார் என்று உரிமையுடன் சொன்னார் (மத்தேயு 16:21; 17:9, 22–23; 20:18–19; 26:32; மாற்கு 9:10; லூக்கா 9:22–27), இப்படியாக அவர் சொற்படியும் வரலாற்றுபடியும் இது நடைபெறாதிருந்தால், அவருடைய ஊழியம் முழுவதும் மதிப்பில்லாமல் போயிருக்கும். நாம் இன்னும் பாவத்தில் தொலைந்து போயிருப்போம் (1 கொரிந்தியர் 15:16–17).

பிதாவாகிய தேவன் அவருடைய உயிர்த்தெழுதன் ஒரு காரணமாயுள்ளவர் (கொலோசெயர் 2:12; 1 தெசலோனிக்கேயர் 1:10; 1 பேதுரு 1:21; எபிரெயர் 13:20), பரிசுத்த ஆவியானவரும் அப்படியே உயிர்தெழுதல் பங்கு பெற்றார். (அப்போஸ்தலர் 2:24; ரோமர் 8:11; 1 பேதுரு 3:18).

இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் அவர் கூறியவைகளும் செய்தவைகளும் உண்மையானது என்பதை நிலைநாட்டிற்று.

நாம் கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலை ஏற்றுக்கொள்ளுவதே நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் அடிப்படையாகும் (ரோமர் 6:4).

5. **இயேசு கிறிஸ்துவின் பரமேறுதல்**
கிறிஸ்துவின் "பரமேறுதல்" அவருடைய உயிர்த்தெழுதலுக்குப்பின் பூமியிருந்து அவர் பரலோகத்துக்கு திரும்பியதைக் குறிப்பிடுகிறது. அவர் பிதாவின் வலது பக்கத்தில் தம்முடைய சரியான இடத்தை அவர் எடுத்துக்கொண்டார். இதுவே படைப்புகள் யாவற்றிலும் சிறந்த இடமாகும் (சங்கீதம் 110:1; எபேசியர் 1:20; கொலோசெயர் 3:1; எபிரெயர் 1:3, 13; 8:1; 10:12; 1 பேதுரு 3:22).

பரத்துக்கேறுதல் பெந்தெகொஸ்தே நாளுக்குப் பத்து நாட்களுக்கு முன் நடைபெற்றது. அங்கு சென்றபின் அவர் தாம் வாக்களித்தபடியே (யோவான் 14:16-17) பரிசுத்த ஆவியானவரை அனுப்பி (அப்போஸ்தலர் 2:33), தம்முடைய சபையை நிலைநாட்டினார் (அப்போஸ்தலர் 1:9-11 ஒத்துப்பார்க்க அப்போஸ்தலர் 2). அவர் பரமேறியது தூதர்களின் போராட்டத்தை அவர் வென்றார் என்பதற்கு நிரூபணமாயிருக்கிறது (எபிரெயர் 1:3-13).

இயேசு பரமேறியபோது முன்னால் மரித்து 'ஆபிரகாமின் மடியிலே' இருந்த ஆத்துமாக்களை அவரோடு எடுத்துச் சென்றார் (லூக்கா 16:22; எபேசியர் 4:7-10). பரிசுத்த ஆவியானவரால் சபைக்குக் கொடுக்கப்பட்ட (1 கொரிந்தியர் 12:11) வரங்களை மனிதருக்கு அளித்தார் (எபேசியர் 4:8).

C. இயேசு கிறிஸ்துவின் காலம் (session)

இயேசு கிறிஸ்து, பிதாவின் வலது பாரிசத்தில் செலவிடும் நேரத்திருந்து, இரண்டாம் வருகையில் அவர் பரத்திருந்து திரும்ப வரும் காலம்வரையுள்ள நேரம் "காலவரை" (session) என்றழைக்கப்படுகிறது. தேவனுடைய திட்டத்துக்குள் பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கும் காலத்திருந்து, இறுதி வெற்றிக்காக, பூமிக்கு அவர் திரும்பிவரும் காலம் வரை, ***"சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரையில்"*** (சங்கீதம் 110:1) அது அவருக்கு அவசியமாகிறது.

இந்தக் காலவரை, பரத்துக்கேறி இப்பொழுது தேவன்-மனிதன் என்று மகிமைப்படுத்தப்பட்ட கிறிஸ்துவின் உயர்த்தப்திபட்ட பதவியைக் குறிப்பிடுகிறது. அது, ***"தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி இயேசுவின் நாமத்தில் .... முழங்கால் யாவும் முடங்கும் படி"*** (பிப்பியர் 2:9-10) என்பவற்றின் சித்திரம் இது. அது தானியேல் 7:13-14 வசனங்களில் கொடுக்கப்பட்டத் தீர்க்கதரிசனம் நிறைவேறுவதாகும்.

அவருடைய காலவரையில் இயேசு கிறிஸ்து மனுக்குலத்துக்கு இப்படியாக ஊழியஞ்செய்தார்:

1. **பரிந்து பேசுபவர்**
"பரிந்து பேசுபவராக" கிறிஸ்து பரிசுத்தவான்களுக்காக பிதாவிடம் வேண்டிக் கொள்ளுகிறார் (எபிரெயர் 7:25). இது பரிசுத்த ஆவியானவரோடு ஒன்று சேர்ந்து செயல்படுத்தப்படுகிறது (ரோமர் 8:26, 27, 34). இது பிதாவினுடைய சித்தத்தின்படி, ***"சகலமும் நன்மைக்கு ஏதுவாக"*** (ரோமர் 8:28) நடைபெற வேண்டுமென்று பிதாவிடம் பணிவாகக் கேட்டுக்கொள்வதாகும்.

2. **வழக்காடுபவர்**
இயேசு நமக்காக வாதாடுபவராக நம்முடைய வழக்கறிஞராயிருந்து தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிராக சாத்தான் கொண்டுவந்த குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிப்பார் (1 யோவான் 2:1; வெளிப்படுத்தல் 12:10).

3. **மத்தியஸ்தர்**
நம்முடைய "மத்தியஸ்தராக" இயேசு தேவனோடு நாம் தொடர்புகொள்ளுவதற்காக "நடுவில் இருக்கும் மனிதர்" ஒரு மத்தியஸ்தர் என்பவர், ஒத்துப்போகாத இரண்டு கட்சிகளுக்காக அல்லது ஒரு ஒப்பந்தம் செய்துகொள்ள முன்வரும் ஒருவருக்காக நடவடிக்கையெடுக்க நியமிக்கப்பட்டவர் ஆகும்.

மனிதனுக்கும் தேவனுக்குமிடையே இருக்கும் ஒரே "மத்தியஸ்தர்" இயேசு கிறிஸ்து மட்டுமே (1 தீமோத்தேயு 2:5). தம்முடைய நிலையில் அவர், நியாயப்பிரமாணத்தின்படியல்லாமல் இரக்கத்தின்படியான தேவனுக்கும் மனிதனுக்குமிடையில் ஒரு புதிய நடவடிக்கையைக் கொண்டுவர அவர் மத்தியஸ்தராயிருந்தார் (எபிரெயர் 8:6-13). மோசேயின் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையிலான பழைய உடன்படிக்கையின்கீழ் தண்டிக்கப்பட்ட பாவங்களுக்கான ஆக்கினைகளுக்குக் கிரயம் செலுத்துவதற்காக அவர் பாவங்களுக்குப் பயானதால் புதிய உடன்படிக்கை நடைமுறைக்கு வந்தது (எபிரெயர் 9:13-15). இந்தப் புதிய உடன்படிக்கை சதாகாலங்களுக்கும் நிலைத்திருக்கும் (எபிரெயர் 12:22-24).

"என்னையல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14: 6) ணுஎன்று சொன்ன போது அவரே தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் மத்தியஸ்தர் என்பதை தெளிவுபடுத்தினார்.

4. **பிரதான ஆசாரியர்**
கிறிஸ்துவே பிதாவினால் நேரடியாக நியமிக்கப்பட்ட நம்முடைய "மிகப்பெரிய பிரதான ஆசாரியர்" ஆவர். இவர் லேவியரின் ஆசாரியர் சந்ததியில் பிறக்கவில்லை என்பதால் அவருடைய வம்ச வழியின் அடிப்படையில் ஆசாரியர் என்ற பதவியை உரிமையோடு கேட்கமுடியாது (எபிரெயர் 5:4-10; 7:5-28). இயேசு கிறிஸ்துவின் ஆசாரியத்துவம் எபிரெய புத்தகத்தின் ஒரு முக்கிய கருப் பொருளாயிருக்கிறது.

லேவிய ஆசாரியத்துவம் நிலைநாட்டப்பட்ட காலத்துக்கு, நானூறு ஆண்டுகளுக்கு முன்பாக, ஆபிரகாமின் நாட்களில் வாழ்ந்த மெல்கிசேதெக்கு போல இயேசு ஒரு பிரதான ஆசாரியர் (எபிரெயர் 7:1-3). சோதனைக்குட்படும் மனித வர்க்கத்துக்கு இந்த ஆசாரியத்துவம்

அவசியமாயிருந்தது. இதனால் அவர் மனிதக்குலத்தின்மேல் இரக்கமாகவும் உண்மையாகவுமிருந்து, அவன் பாவம் செய்யும் போது பிதாவை சாந்தப்படுத்த (திருப்திப்படுத்த) முடியும். அவருடைய ஆசாரியத்துவம் சதாகாலங்களுக்குமானது (எபிரெயர் 2:17; 4:14-15). அவருடைய ஆசாரியத்துவம் சதாகாலங்களுக்குமானது (எபிரெயர் 6:20; 7:3, 24).

ஒரு ஆசாரியரின் சடங்கு பசெலுத்துவதாகும். (எபிரெயர் 8:1-3). இயேசு தம்மை தாமே ***"பாவங்களுக்காக எக்காலத்திற்கும் ஒரே தரம் பலி"*** யாக ஒப்புக்கொடுத்தார் (எபிரெயர் 9:6-14; 10:10, 12). இதனால் அவருடைய "பரிந்துபேசும்" செயலும், "மத்தி யஸ்தம் செய்வதும்" அவருடைய பிரதான ஆசாரியத்துவத்தின் விரிவாக்கம் ஆகிறது.

சபையிலுள்ள எல்லாரும் ஆசாரியர்கள் ஆதலால் (1 பேதுரு 2:5, 9; வெளிப்படுத்தல் 1:6), தேவனுடைய சித்தத்துக்கு ஒரு பயாக நம்மை ஒப்புக்கொடுப்பதின் மூலம் (ரோமர் 12:1), நாம் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டும் (1 கொரிந்தியர் 11:1).

5. **சபையின் தலைவர்**

இயேசு கிறிஸ்து சபையின் "தலைவர்" அல்லது சபையை வழிநடத்துபவராக இருக்கிறார் (எபேசியர் 1:22-23; கொலோசெயர் 1:18). இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் எல்லாரும் சபை என்று தெரிந்து கொள்ளப்பட்ட "மணவாட்டி" அல்லது கிறிஸ்துவின் "சரீரம்" ஆக இருக்கிறார்கள் (1 கொரிந்தியர் 12:13).

இயேசு கிறிஸ்து வாக்களிக்கப்பட்ட சபையின் மணவாளன் (எபேசியர் 5:23) என்பதால் அவருடைய மாறாத அன்பைத் தொடர்ந்து அளிக்கிறார் (எபேசியர் 5:25-27). இந்தக் "கயாணச் சடங்கு" இரண்டாம் வருகையில் இயேசு கிறிஸ்து திரும்பவும் வருவதற்குச் சற்று முன்பாக பரலோகத்தில் நடைபெறும் (வெளிப்படுத்தல் 19:7-10 ஒத்துப்பார்க்க 11-16), எனினும் அந்த அன்பும் விசுவாசமும் இப்பொழுது இருக்கிறது. "மணவாட்டியாக" சபை அவளுடைய மணவாளனுக்காக ஆயத்தம் செய்யப்படுகிறது (எபேசியர் 4:15; 5:26-27).

6. **மேய்ப்பர்**

"போதகர்" என்ற சொல் உண்மையில் ஒரு "மேய்ப்பர்" என்று குறிப்பிடும் சொல். கிறிஸ்து, ஒரு "நல்ல மேய்ப்பராக" அவருடைய ஆடுகளுக்காகத் தம் ஜீவனைக் கொடுத்தார் (யோவான் 10:11). இதனால் அவர் "மிகப்பெரிய மேய்ப்பர்" ஆனார் (எபிரெயர் 13:20).

அவருடைய இப்போதைய காலவரையில், தம்முடைய ஆடுகளை வழிநடத்திப் பாதுகாக்கும் ஒருவராக, "பிரதான மேய்ப்பர்" ஆக அவர் பிதாவின் வலது பாரிசத்தில் இருக்கிறார் (1 பேதுரு 5:4).

D. இயேசு கிறிஸ்து இவ்வாறாக விவரிக்கப்பட்டுள்ளார்

- ஒரு **"பரிந்துபேசுபவர்"** அவர் பிதாவிடம் நம்முடைய தற்காப்புக்காகப் பேசுகிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. 1 யோவான் 2:1
- **"அல்பாவும் ஓமெகாவும்"** இது கிரேக்க மொழியின் எழுத்துக்களில் முதல் எழுத்தையும் கடைசி எழுத்தையும் குறிப்பிட்டு, இது தொடர்புகொள்ளுவதின் அடித்தளமாயிருக்கிறது என்ற சத்தியத்தையும் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 1:8; 21:6; 22:13
- **"ஆமென்"** கொடுக்கப்பட்ட ஒரு பாடப்பொருளின் கடைசி வார்த்தை என்ற அர்த்தமுடையது. 2 கொரிந்தியர் 1:20; வெளிப்படுத்தல் 3:14
- **"அபிஷேகம் பண்ணப்பட்டவர்"** இது இயேசு மேசியா என்று சதாகாலங்களுக்குமாய் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டதைக் குறிப் பிடுகிறது. 1 சாமுவேல் 2:35; 2 நாளாகமம் 6:42; சங்கீதம் 2:2; 28:8; 84:9; 89:38, 51; 132:10, 17; தானியேல் 9:25-26; அப்போஸ்தலர் 4:26
- **"அப்போஸ்தலர்"** அவர் அதிகாரத்தோடு அனுப்பப்பட்டார் என்பதை இது குறிப்பிடுகிறது. எபிரெயர் 3:1
- **"விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவரும்"** இது கிறிஸ்து தேவனாக திட்டத்தை எழுதி, மனிதனாக அதைச் செய்து முடித்தார் என்ற அர்த்தமுடையது. எபிரெயர் 12:2
- **"இரட்சிப்பின் அதிபதி"** இது இரட்சிப்பைத் துவக்கியவர் என்ற அவருடைய பங்கைக் குறிப்பிடுகிறது. எபிரெயர் 2:10
- **"ஆதியும் அந்தமும்"** இது அவர் வாழ்க்கையின் முக்கிய விளைவாயிருக்கிறார் என்ற உண்மையைக் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 21:6; 22:13
- **"தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருப்பவர்"** இது தேவனுடைய படைப்பை ஆட்சிசெய்பவர் என்பதைக் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்துதல் 3:14
- **துனுநித்தியானந்தமுள்ள ஏக சக்கராதிபதி"** இது அவருடைய மிக உயர்ந்த அதிகாரமுடையப் பதவியைக் குறிப்பிடுகிறது. 1 தீமோத்தேயு 6:15
- **"கர்த்தரின் கிளைனுது** இது அவருடைய தெய்வத்துவத்திருந்து மனித இனம் போஷாக்குப் பெறுவதைக் குறிப்பிடுகிறது ஏசாயா 4:2
- **"தேவன் அருளிய அப்பம்"** இது அவருடைய வாழ்க்கை தெய்வீகமாகப் பராமரிக்கப்படுகிறது என்பதைக் குறிப்பிடுகிறது. யோவான் 6:33, 51
- **"ஜீவ அப்பம்"** இது வாழ்க்கையின் தேவைகளைச் சந்திக்கும் ஒருவர் என்பதைக் குறிப்பிடுகிறது. யோவான் 6:35, 48
- **"மணவாளன்"** இது அவர் விசுவாசிகளோடு வைத்திருந்த உறவின் நெருங்கிய பாதுகாக்கும் இயல்பைக் குறிப்பிடுகிறது. ஏசாயா 62:5; மத்தேயு 9:15; 25:1, 5, 6, 10; மாற்கு 2:19, 20; லூக்கா 5:34, 35; யோவான் 2:9; 3:29; வெளிப்படுத்தல் 18:23
- **"விடிவெள்ளி நட்சத்திரம்"** இதன் அர்த்தம் ஆவிக்குரிய இருளால் மூடப்பட்ட இடத்தில் அவர் பிரகாசமான நட்சத்திரமாயிருக்கிறார் என்பதாகும். வெளிப்படுத்தல் 22:16
- **"பிரதான மேய்ப்பர்"** இது மந்தைக்குப் பொறுப்பானவர் இவர் ஒருவரே என்பதைக் குறிப்பிடுகிறது. 1 பேதுரு 5:4

- **ஹுஹுதெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப்பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்"** இது அவர் அளவிடுவதின் தகுதிய நிலையாக குறிப்பாகத் தெரிந்தெடுக்கப்பட்டார் என்பதைக் குறிப்பிடுகிறது. மூலைக்கல் ஒரு கட்டிடத்தின் தகுதியை நிலை நாட்டுகிறது. எபேசியர் 2:20; 1 பேதுரு 2:4, 6
- **"என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்"து** இது மனிதனாக வந்த இயேசுவே மேசியா என் வாழ்க்கையின் அதிகாரம் என்று அர்த்தம். பிப்பியர் 3:8
- **"நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்"து** இது எதிர்காலத்துக்கு நம்முடைய நம்பிக்கையாயி ருக்கிற மேசியாவாகிய இயேசுவைக் குறிப்பிடுகிறது. 1 தீமோத்தேயு 1:1
- **"தேவனுடைய கிறிஸ்"து** இது அவரை மேசியாவாகத் தெரிந்துகொண்டதைக் குறிப்பிடுகிறது. லூக்கா 9:20; 23:35
- **"சேனையினுடைய அதிபதி"** இது இராணுவங்களின்மேல் அவருடைய அதிகாரப் பதவியைக் குறிப்பிடுகிறது. தானியேல் 8:11
- **"இஸ்ரவேன் ஆறுதல்"** இது கிறிஸ்து அளிக்கும் ஊக்கத்தைக் குறிப்பிடுகிறது. லூக்கா 2:25
- **"ஜனத்திற்கு உடன்படிக்கை"** இது விசுவாசிகளுக்கு ஒரு புதிய உடன்படிக்கையின் அஸ்திபாரமாக இயேசு இருப்பதைக் குறிப்பி டுகிறது. ஏசாயா 42:6
- **"வாசல்"** இது அவர் தேவனுடைய ராஜ்யத்துக்கு பிரவேசிக்கும் வழி என்பதைக் குறிப்பிடுகிறது. யோவான் 10:7, 9
- **"நித்திய பிதா"** அவர் எப்பொழுதுமே தேவனாக இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. ஏசாயா 9:6
- **"நித்தியமாயிருக்கிற ஜீவன்"** இது ஒரு கருத்தல்ல ஒரு நபரில் காணப்படுவது, என்பதாகும். 1 யோவான் 1:2
- **"நித்திய கன்மலை"** இது எப்பொழுதும் அவரில் காணப்படும் நிலைத்திருக்கும் தன்மையை நமக்குப் போதிக்கிறது. ஏசாயா 26:4
- **"அவருடைய தன்மையின் சொரூபம்"** இது மாம்சமாகிய தேவனாயிருந்தால் கிறிஸ்துவின் மனிதநேயத்தைக் குறிப்பிடுகிறது. எபிரெயர் 1:3
- **"உண்மையும் சத்தியமுமுள்ளவர்"** இது அவருடைய மாறாத்தன்மையையும் உண்மையையே பேசும் தன்மையையும் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 19:11
- **"உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சி"** இது தீர்க்கதரிசன நிகழ்வுகளைப்பற்றிய காரியங்களில் மாறாமருப்பதையும் உண்மையாயி ருப்பதையும் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 3:14
- **"உண்மையுள்ள சாட்சி"** இது அவருடைய உயிர்த்தெழுதல் பற்றிய சாட்சியைக் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 1:5
- **"முந்தினவரும் பிந்தினவரும்"** இது அவர் மட்டுமே படைப்பின் ஒரே ஆதாரம் என்ற உண்மையைக் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 1:17; 2:8; 22:13
- **"மரித்தோரிருந்து முதற்பிறந்தவர்"** இது முதலாவதாக மரணத்தின்மேல் வெற்றியடைந்து உயிர்த்தெழுந்த சரீரத்தைப் பெற்றவர் என்பதைக் குறிப்பிடுகிறது. கொலோசெயர் 1:18; வெளிப்படுத்தல் 1:5
- **"சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்"** இது படைப்புகள் எல்லாவற்றிற்கும் முதலானவர் என்ற அர்த்தமுடையது. கொலோசெயர் 1:15
- **"நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானவர்"** இது உயிர்த்தெழுதன் முதல் ஆசீர்வாதமாக அவர் இருக்கிறார் என்ப தைக் குறிப்பிடுகிற. 1 கொரிந்தியர் 15:20
- **"சுகந்த வாசனை"** இது அவருடைய பயின் ஆசீர்வாதத்தைக் குறிப்பிடுவது. எபேசியர் 5:2
- **"ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன்"** இது சமூகத்தால் தவிர்க்கப்படுபவர்களுக்கும் சட்டங்களை மீறுபவர்களுக்கும் அவர் அக்கறை காட்டினார் என்பதைக் குறிப்பிடுகிறது. மத்தேயு 11:19; லூக்கா 7:34
- **ஹுஹுஉம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமை"** துதியைப் பெற்றுக்கொள்ள அவர் தகுதியானவர் என்பதை இது குறிப்பிடுகிறது. லூக்கா 2:32
- **"சர்வ பூமியின் தேவன்"** இது மனித குலத்தின் உறவின் சாராம்சத்தின் அளவை குறிப்பிடுகிறது. ஏசாயா 54:5
- **"சர்வத்திற்கும் மேலான தேவன்"** இது இஸ்ரவேன் தேவனாயிருக்கிறவரின் தனிக்குறிப்பாயிருக்கிறது. ரோமர் 9:5
- **"நல்ல மேய்ப்பன்"** இது அவருடைய வழிகாட்டும் பாதுகாக்கும் இயல்பைக் குறிப்பிடுகிறது. யோவான் 10:11
- **"மகா பிரதான ஆசாரியர்"** இது தம்முடைய பதவியை எப்படி திறமையாகப் பயன்படுத்துகிறார் என்பதைக் குறிப் பிடுகிறது. எபிரெயர் 4:14
- **"பெரிய வெளிச்சம்"** இது இருளை அவர் எந்த அளவுக்கு நீக்குகிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. ஏசாயா 9:2; மத்தேயு 4:16
- **"பெரிய மேய்ப்பர்"** இது அவருடைய ஏற்பாட்டையும் பாதுகாப்பையும் குறிப்பிடுகிறது. எபிரெயர் 13:20
- **"விசேஷித்த உடன்படிக்கைக்குப் பிணையாளி"** இது தேவனோடு ஒரு நல்ல ஒப்பந்தத்துக்கு இயேசு வாக்குத்தத்தமாயி ருந்தார் என்பதைக் குறிப்பிடுகிறது. எபிரெயர் 7:22
- **ஹுஹுஆத்துமாக்களுக்கு மேய்ப்பர்"** இது விசுவாசிகளின் ஆத்துமாக்களுக்கு அவர் பாதுகாப்பளிப்பதைக் குறிப்பிடுகிறது. 1 பேதுரு 2:25
- **"தலையாயிருக்கிறார்"** இது அவருடைய தலைமைக்குப்பின் இருக்கும் புத்திசாத்தனத்தைக் குறிப்பிடுகிறது. 1 கொரிந்தியர் 11:3; எபே சியர் 4:15; கொலோசெயர் 2:19
- **"புறஜாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவர்"** இது யூதரல்லாதவர்கள் மேலும் கூட கிறிஸ்துவுக்கு இருக்கும் அதிகா ரத்தைக் குறிப்பிடுகிறது. ரோமர் 15:12
- **"பரிசுத்தஞ்செய்கிறவர்"** இது ஊழியத்துக்காகப் பிரித்து வைக்கும் கர்த்தருடைய திறமையைக் குறிப்பிடுகிறது. எபிரெயர் 2:11
- **"உள்ளிந்திரியங்களையும் இருதயங்களையும் ஆராய்கிறவர்"** இது மனிதவர்க்கத்தின் நோக்கங்களையும் (எண்ணங்க ளையும்) தீர்மானிக்கும் இயேசுவின் திறமையைக் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 2:23

- **“சரீரத்துக்குத் தலையானவர்”** இது அவர் புத்திசாத்தனத்தோடு சபையின் தலைவராயிருப்பதைக் குறிப்பிடுகிறது. கொலோசெயர் 1:18
- **“சபைக்குத் தலையாயிருக்கிறார்”** இது விசுவாசிகளை புத்திசாத்தனத்தோடு அவர் தலைமை தாங்குவதைக் குறிப்பிடுகிறது. எபேசியர் 5:23
- **“சகல துரைத்தனங்களுக்கும் அதிகாரத்துக்கும் தலைவர்”** இது அவருடைய பூரண அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது. கொலோசெயர் 2:10
- **“சர்வத்துக்கும் சுதந்தரவாளி”** இது பிதாவினுடைய குமாரனாக அவர் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ளுவதைக் குறிப்பிடுகிறது. எபிரெயர் 1:2
- **“பிரதான ஆசாரியர்”** இது அவர் வகிக்கும் பதவியைக் குறிப்பிடுகிறது. எபிரெயர் 2:17; 3:1; 4:14, 15; 5:5, 10; 6:20; 7:26; 8:1; 9:11; 13:11-12
- **“நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவியவர்”** இது தாம் அன்பாயிருப்பதனால், கிறிஸ்து நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 1:5
- **“ஒரே பேறான குமாரன்”** எல்லா படைப்புகளிலும் இயேசு கிறிஸ்து முற்றிலும் தனித்தன்மை வாய்ந்தவர் என்பதை இது குறிப்பிடுகிறது. யோவான் 3:16; எபிரெயர் 11:17; 1 யோவான் 4:9
- **“பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்”** இது அவருடைய குண இயல்பின் பூரணத்தைப்பற்றிய ஒரு குறிப்பு. அப்போஸ்தலர் 3:14
- **“தேவனுடைய பரிசுத்தர்”** இது அவர் பூரணமாக மனித வாழ்வை வாழ்ந்தவர் என்று குறிப்பிடுகிறது. மாற்கு 1:24; லூக்கா 4:34; யோவான் 6:69.
- **“பரிசுத்தமான வேலையாள்”** ஒரு குழந்தை கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ளுவதைப்போல அவர் அதைக் கற்றுக்கொண்டார் என்பதைக் குரிப்பிடுகிறது. அப். 4:27, 30 (“குழந்தை” என்ற அர்த்தமுடைய கிரேக்கச் சொல் “பேய்ஸ்” (PAIS) என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது)
- **“இஸ்ரவேன் நம்பிக்கை”** இது நம்பிக்கையின் உண்மையான அடிப்படையாக இஸ்ரவேல் இருப்பதைக் குறிப்பிடுகிறது. எரேமியா 14:8; 17:13; அப். 28:20
- **“இரட்சணியக் கொம்பு”** இது இரட்சிப்பைக் கொண்டுவரத் தேவையான வல்லமையைக் குறிப்பிடுகிறது. லூக்கா 1:69
- **“அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம்”** இது தேவன் மாம்சமாகிய இயேசு என்ற அர்த்தமுடையது. கொலோசெயர் 1:15
- **“இம்மானுவேல்”** இது “தேவன் நம்மோடிருக்கிறார்” என்பதற்கான எபிரெய சொல்லாகும். ஏசாயா 7:14; 8:8; மத்தேயு 1:23
- **“சொல்முடியாத ஈவுணுது** இது இயேசுவைப் பற்றிய உயர்ந்த காரியங்களை முழுவதும் சொல்ல தேவையான சொல் அகராதி நமக்கு இல்லை என்பதைக் குறிப்பிடுகிறது. 2 கொரிந்தியர் 9:15
- **“நசரேயனாகிய இயேசு”** இது அவர் வளர்ந்த பட்டணத்தைக் குறிப்பிடுகிறது. மத்தேயு 26:71; மாற்கு 1:24; 10:47; லூக்கா 4:34; 18:37; 24;19; யோவான் 1:45; 18:5, 7; அப்போஸ்தலர் 2:22; 6:14; 10:38; 22:8; 26:9
- **“உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி”** இது நியாயத் தீர்ப்பும் தண்டனையும் அளிக்கும் அதிகாரமுடைய அவருடைய பதவியைக் குறிப்பிடுகிறது. அப்போஸ்தலர் 10:42; 2 தீமோத்தேயு 4:1
- **“ராஜாதி ராஜா”** மிக உயர்ந்த அதிகாரங்களுக்கும் மேலான பதவியை இது குறிப்பிடுகிறது. அப்போஸ்தலர் 19:16
- **“ஜாதிகளின் ராஜா”** அரசியல் குழுக்களுக்கும் மேலாக அவருடைய உயர்ந்த பதவியைக் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 15:3
- **“தேவ ஆட்டுக்குட்டி”** நீதிபரரான தேவனை திருப்திப்படுத்த இயேசு தம்மை பயாக ஒப்புக்கொடுப்பார் என்பதைக் குறிப்பிடுகிறது. யோவான் 1:29, 36
- **“பிந்தின ஆதாம்”** இது பாவமில்லாமல் உயிர் வாழ்ந்தவர்களில் அவரே கடைசியானவர் என்ற உண்மையைக் குறிப்பிடுகிறது. 1 கொரிந்தியர் 15:45
- **“ஜீவன்”** மெய்யான ஜீவன் கிறிஸ்து என்ற நபரில் காணப்படுகிறது, ஒரு சரீர நிலையில் இது காணப்படுவதல்ல என்பதைக் குறிப்பிடுகிறது. யோவான் 1:4; 11:25; 14:6
- **“உயிர்ப்பிக்கிற ஆவி”** இயேசு பரிசுத்த ஆவியோடு ஐக்கியமாயிருப்பதை இது குறிப்பிடுகிறது. 1 கொரிந்தியர் 15:45
- **“புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளி”** இது மனுக்குலம் முழுவதுக்கும் இயேசு வெளிப்படுத்தப்பட்டார் என்பதைக் காட்டுகிறது. லூக்கா 2:32
- **“ஜீவ வெளிச்சம்”** இது வாழ்க்கையில் எளிதில் புரிந்துகொள்ள முடியாத காரியங்களின் வழி நாம் பிரயாணம் செய்யும் போது அவருடைய வழிநடத்துதலைக் குறிப்பிடுகிறது. யோபு 33:30; சங்கீதம் 49:19; 56:13; யோவான் 8:12
- **“மனுஷருக்கு ஒளி”** மனிதகுலத்துக்கு அவரிடமிருந்து வழிகாட்டுதலைப் பெற முடியும் என்பதைக் குறிப்பிடுகிறது. யோவான் 1:4
- **“உலகத்துக்கு ஒளி”** இது உலகத்தின் ஆவிக்குரிய இருளில் அவர் வழிக்காட்டுவதைக் குறிப்பிடுகிறது. யோவான் 8:12; 9:5
- **“உயிருள்ளவர்”** இது அவருடைய உயிர்த்தெழுதன் நித்திய இயல்பைக் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 1:17-18
- **“ஜீவனுள்ள கல்”** அவருடைய வாழ்க்கையில் காணப்படும் நிலையானதன்மையை இது குறிப்பிடுகிறது. 1 பேதுரு 2:4
- **“ஆண்டவர்”** இது அவருடைய அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது. அப். 4:24; வெளிப்படுத்தல் 6:10
- **“கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்”து** மனுக்குலத்தை அவர்களுடைய பாவங்களிருந்து விடுவிக்க அவர் பயன்படுத்திய அதிகாரத்தை இந்த உண்மை குறிப்பிடுகிறது. 2 பேதுரு 1:11, 20; 3:18
- **“மகிமையின் கர்த்தர்”** அவருடைய அதிகாரத்தின் அற்புத இயல்பை இது குறிப்பிடுகிறது. 1 கொரிந்தியர் 2:8
- **“கர்த்தாதி கர்த்தர்”** எல்லா அதிகாரங்களுக்கும் மேலான அதிகாரமுடையவர் என்ற உண்மையை இது குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 19:16

- **“சமாதானத்தின் கர்த்தர்”** தேவனுக்கும் மனிதனுக்கும் இடையில் சமாதானத்தை உண்டுபண்ணும் அவருடைய அதிகாரத்தை இது குறிப்பிடுகிறது. 2 தெசலோனிக்கேயர் 3:16
- **“அறுப்புக்கு எஜமான்”** சுவிசேஷதைப் பரப்புவதின் மீதான அவருடைய அதிகாரத்தை இது குறிப்பிடுகிறது. மத்தேயு 9:38; லூக்கா 10:2
- **“ஓய்வுநாளுக்கும் ஆண்டவர்”** இது பத்து கற்பனைகளில் நான்காவது நியாயப்பிரமாணத்தின் மேல் அவருடைய அதிகாரத்தைக் குறிப்பிடுகிறது. மத்தேயு 12:8; லூக்கா 6:5
- **“நமது நீதியாயிருக்கிற கர்த்தர்”** நமக்கு நீதியைக் கொடுப்பவர் என்பதற்கு அவரே தகுதிநிலையாயிருக்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. எரேமியா 23:6; 33:16
- **“தேவன் அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்”** தேவன் அவரை அங்கிகரித்ததை இது போதிக்கிறது. அப்போஸ்தலர் 2:22
- **“வானத்திருந்து வந்த ஒரு மனிதர்”** இது அவருடைய தெய்வீக இயல்பைக் குறிப்பிடுகிறது. 1 கொரிந்தியர் 15:47
- **“துக்கம் நிறைந்தவர்”** அவரைப் புறக்கணித்த மனித இனத்தின் மேல் அவருடைய மனதுருக்கத்தை இது காட்டுகிறது. ஏசாயா 53:3
- **“எசமான்”** இது அதிகாரம் அல்லது திறமை ஆகியவற்றின் மேலான அவருடைய நிலையைக் குறிப்பிடுகிறது. லூக்கா 5:5; 8:24, 45; 9:33; 17:13; எபேசியர் 6:9; கொலோசெயர் 4:1; 2 தீமோத்தேயு 2:21
- **“புது உடன்படிக்கையின் மத்தியஸ்தர்”** தேவனோடு மிகவும் நல்ல ஒரு உடன்படிக்கையை உத்திரவாதமளித்த ஒருவர் அவர் என்பதை இது குறிப்பிடுகிறது. எபிரெயர் 9:15; 12:24
- **“இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியர்”** அவருடைய பதவியின் மனதுருக்கத்தையும் உறுதியையும் இது குறிப்பிடுகிறது. எபிரெயர் 2:17
- **“உடன்படிக்கையின் தூதன்”** தேவனோடு ஒரு புதிய ஒப்பந்தத்தின் செய்தியைக் கொண்டுவருபவர். மல்கியா 3:1
- **“மேசியா”** மக்களுடைய பாவங்களிருந்து அவர்களை விடுவிக்க தேவனால் அவர் தெரிந்துகொள்ளப்பட்டார். யோவான் 1:41; 4:25
- **“வல்லமையுள்ள தேவன்”** அவருடைய தெய்வத்துவத்தின் வல்லமையை இது குறிப்பிடுகிறது. ஏசாயா 9:6
- **“விடிவெள்ளி நட்சத்திரம்”** இருளால் மூடப்பட்ட நட்சத்திரங்களுக்குள் பிரகாசமான நட்சத்திரமாக அவர் இருக்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. 2 பேதுரு 1:19; வெளிப்படுத்தல் 22:16
- **“நசரேயன்”** என்பது கே செய்யும் பெயர். மத்தேயு 2:23
- **“தாவீதின் வேரும் சந்ததியும்”** தாவீது ராஜாவின் வம்சவழியில் அவர் மனித குலத்துக்கு வந்ததைக் குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 22:16
- **“நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்”** தேவனுடைய சாராம்சத்தின் ஐக்கியத்தை இது குறிப்பிடுகிறது. யோவான் 10:30
- **“பிதாவிடத்திருந்து வந்த ஒரே பேறானவர்”** இது அவர் உயிரோடிருப்பதின் இணையற்ற தன்மையைக் குறிப்பிடுகிறது. யோவான் 1:14, 18
- **“நம்முடைய இரட்சகரான தேவன்”** இணையற்ற தன்மையுடைய அவர் ஒரு நபரென்றும் அவருடைய கிரியைகளையும் குறிப்பிடுகிறது. யூதா 1:25
- **“மகிமையுடைய நம்முடைய கர்த்தர்”** விசுவாசிகளுக்கிடையே அவருடைய அதிகாரம் மிகப் பெரியது என்று குறிப்பிடுகிறது. யாக்கோபு 2:1
- **“நம்முடைய தேவனும் இரட்சகராகவுமிருக்கிறவர்”** சபைக்கு இயேசு கிறிஸ்து மனித வர்க்கத்தின் ஒரு நபர் என்றும் சபைக்கும் அவருக்குமுள்ள தொடர்பையும் இது குறிப்பிடுகிறது. 2 பேதுரு 1:1
- **“நம்முடைய ஜீவன்”** சபைக்கு அவர் இருக்கிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. கொலோசெயர் 3:4
- **“நம்முடைய கர்த்தர்”** அவருடைய அதிகாரத்தை சபை ஏற்றுக்கொள்ளுவதைக் குறிப்பிடுகிறது. ரோமர் 1:4; 5:21; 7:25; 1 கொரிந்தியர் 1:9; யூதா 1:25
- **ஹுதுஒன்றான ஆண்டவராகிய தேவன்”** அவர் மேற்பதவியிருக்கிறார் என்பதையும் அவருடைய அதிகாரத்தையும் சபை ஒப்புக்கொள்ளுகிறது என்பதை இது குறிப்பிடுகிறது. யூதா 1;4
- **“நம்முடைய பஸ்கா”** சபையின் சார்பாக அவருடைய பயை இது குறிப்பிடுகிறது. 1 கொரிந்தியர் 5:7
- **“நம்முடைய சமாதானம்”** தேவனுக்கும் சபைக்குமிடையே சமாதானத்தை நிலைநாட்டுவதை இது குறிப்பிடுகிறது. எபேசியர் 2:14
- **“நமது இரட்சகர்”** பாவங்களிருந்து விடுதலையை அவர் சபைக்கு அளித்ததை இது குறிப்பிடுகிறது. தீத்து 3:6
- **“வைத்தியர்”** குணமாக்கும் அவருடைய திறனை இது குறிப்பிடுகிறது. லூக்கா 4:23
- **“அதிபதியாகவும் இரட்சகராகவும் இருப்பவர்”** வாழ்க்கையிலும் இரட்சிப்பளிப்பதிலும் முன்னாக வழிநடத்துபவர் என்பதை இது குறிப்பிடுகிறு. அப்போஸ்தலர் 5:31
- **“ஜீவாதிபதி”** இது வாழ்க்கையில் அவர் முன்னாக வழிநடத்துவதைக் குறிப்பிடுகிறது. அப்போஸ்தலர் 3:15
- **“சமாதானப் பிரபு”** தேவனோடு இசைந்திருப்பதை நிலைநாட்ட அவர் முன்பாக வழிநடத்துகிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. ஏசாயா 9:6
- **“அதிபதிகளுக்கு அதிபதியாயிருக்கிறவர்”** இதன் அர்த்தம் அவரைவிடப் பெரிய தலைவர் இல்லை என்பதாகும். தானியேல் 8:25
- **“தீர்க்கதரிசி”** அவருடைய தீர்க்கதரிசனம் நிறைவேறியதைக் குறிப்பிடுகிறது. உபாகமம் 18:18ஐ அப்போஸ்தலர் 3:22 உடன் ஒத்துப்பாருங்கள்.

- **“நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்பவர்”** அவர் பிதாவினுடைய நீதியையும் நியாயத்தையும் திருப்தி செய் தார் என்பதைக் குறிப்பிடுகிறது. 1 யோவான் 2:2
- **“சுத்திகரிப்பவர்”** மனித வர்க்கத்திருந்து பாவம் நீக்கப்பட்டது என்பதைக் காண அவருடைய நடவடிக்கையை இது குறிப்பிடுகிறது. மல்கியா 3:3
- **“மகிமையின் பிரகாசம்”** பிதாவினுடைய குண இயல்பின் பிரகாசத்தை இது குறிப்பிடுகிறது. எபிரெயர் 1:3
- **“எல்லாரையும் மீட்கும் பொருள்”** நம்மை விடுவிக்க அவர் கிரயம் செலுத்திவிட்டார் என்பது இதன் அர்த்தமாகும். 1 தீமோத்தேயு 2:6
- **“உயிர்த்தெழுதலும் ஜீவனும்”** இயேசு கிறிஸ்துவின் மூலமாக மட்டுமே நித்திய ஜீவனைப் பெற உயிர்த்தெழ முடியும் என்று இது போதிக்கிறு. யோவான் 11:25
- **ஷுநீதியுள்ள நியாயாதிபதி”** அவருடைய பூரண தகுதிநிலைக்கு ஏற்றவாறு அவர் சிட்சிக்கிறார் அல்லது பரிசளிக்கி ார் என்பது இதன் பொருள். சங்கீதம் 7:11; 2 தீமோத்தேயு 4:8
- **“நீதிபரர்”** அவருடைய பூரண தகுதிநிலைகளை அவர் சொந்தமாக பூரணமாய் உபயோகிப்பதை இது சுட்டிக் காட்டுகிறது. ஏசாயா 24:16; அப்போஸ்தலர் 3:14; 7:52; 22:14; 1 யோவான் 2:1
- **“தாவீதின் வேர்”** தாவீதை உருவாக்கியதில் அவருடைய நித்திய இயல்பு ஈடுபட்டிருந்தது என்ற உண்மையை இது குறிப் பிடுகிறது. வெளிப்படுத்தல் 22:16
- **“பூமியின் ராஜாக்களுக்கு அதிபதி”** பூமியில் காணப்படும் மிக உயர்ந்த அதிகாரங்களுக்கும் மேலான அவருடைய அதிகாரத்தை இது குறிப்பிடுகிறது. வெளிப்படுத்தல் 1:5
- **“உலகரட்சகர்”** இதன் அர்த்தம் பாவங்களிருந்து விடுதலையளிக்கக் கூடிய ஒருவர் அவர் மட்டுமே என்பதாகும். யோவான் 4:42; 1 யோவான் 4:14
- **“மேய்ப்பவன்”** அவர் அன்பு செலுத்துபவர்கள் மீது அவருடைய அக்கறையை இது காட்டுகிறது. ஆதியாகமம் 49:24; சங்கீதம் 80:1; பிரசங்கி 12:11
- **“உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பர்”** மனிதனுடைய உடல் சம்பந்தப்படாத பகுதியை அவர் பாதுகாக்கிறார் என் பதைக் குறிப்பிடுகிறது. 1 பேதுரு 2:25
- **“ஜனங்களுக்கு அடையாளம்”** இது மக்கள் தேட வேண்டிய நபர் அவர் என்பதைக் குறிப்பிடுகிறது. ஏசாயா 11:10
- **“தேவனுடைய குமாரன்”** திரித்துவத்தினுள் அவருக்குள்ள உறவை இது குறிப்பிடுகிறது. யோவான் 10:36; 11:4
- **“ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்”** ஒரு விக்கிரகத்தோடு அல்ல, மெய்யான தேவனோடு அவருக்குள்ள உறவை இது குறிப்பிடுகிறது. மத்தேயு 16:16
- **“உன்னதமான தேவனுடைய குமாரன்”** அவர் தூதர்களால் எப்படி காணப்படுகிறார் என்பதைக் குறிப்பிடுகிறது. மாற்கு 5:7; லூக்கா 8:28
- **“நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணர்”** அவர் இரட்சிப்பின் ஆதாரம் என்ற உண்மையை இது குறிப்பிடு கிறது. எபிரெயர் 5:9
- **“உன் காலங்களுடைய உறுதியாயிருக்கும்”** வாழ்க்கையின் தாக்குதல்களைச் சகிக்கும் தன்மையை இது குறிப்பிடு கிறது. ஏசாயா 33:6
- **“ஒரு கல்”** மனித வர்க்கத்தின் வாழ்க்கைக்கு அவர் உறுதியாயிருக்கிறார் என்பதை இது குறிப்பிடுகிறது. ஏசாயா 28:16
- **“வீடுகட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளிய கல்”** இது இஸ்ரவேலர்களின் தலைவர்கள் தாக்குவதற்காகத் தெரிந்து கொண்ட உறுதியைக் குறிப்பிடுகிறது. சங்கீதம் 118:22; மத்தேயு 21;42; மாற்கு 12:10; லூக்கா 20:17; 1 பேதுரு 2:7
- **“போதகர்”** (ரபூனி) இது அவருடைய போதனையளிக்கும் திறனைக் குறிப்பிடுகிறது. யோவான் 20:16
- **“பரீட்சிக்கப்பட்ட கல்”** வாழ்க்கையில் கிறிஸ்துவின் அனுபவத்தை இது குறிப்பிடுகிறது. ஏசாயா 28:16
- **“இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிற”து** தேவனுடைய சரியான நேரத்தில் இயேசுவின் சாட்சி வெளிப் படுத்தப்பட்டது என்பது இதன் பொருள். 1 தீமோத்தேயு 2:6
- **“மெய்யான அப்பம்”** இயேசு மெய்யாகவே தேவனிடமிருந்து வந்த போஷாக்கு என்பது இதன் அர்த்தம். யோவான் 6:32
- **“மெய்யான ஒளி”** இது அவர் வெளிப்படுத்திய சத்தியம் பிழையற்றது என்பதைக் குறிப்பிடுகிறது. யோவான் 1:9; 1 யோவான் 2:8
- **“மெய்யான திராட்சச் செடி”** இயேசு உண்மையாகவே ஆவிக்குரிய கனியை (நற்கிரியைகள்) ஆவிக்குரிய வழியில் அளிப்பவர் என்பதை இது குறிப்பிடுகிறது. யோவான் 15:1
- **“சத்தியம்”** அவருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியும் குற்றமின்றி செய்துமுடிக்கப்பட்டது என்பதை இது குறிப்பிடுகிறது. யோவான் 5:33; 8:31–32; 14:6
- **“வழி”** இரட்சிப்புக்கும் தெய்வீக வழிநடத்துதலுக்கும் அவரே ஆரம்ப கர்த்தா என்பது இதன் அர்த்தமாயிருக்கிறது. மத்தேயு 7:14; யோவான் 14:5–6
- **“பூரண ரட்சிப்பின் பொக்கிஷம்”** மனித வர்க்கத்தை விடுவிப்பதில் அவருடைய மதிப்பை இது குறிப்பிடுகிறது. ஏசாயா 33:6
- **“ஞானம்”** தேவனுடைய வசனங்களில் காணப்படும் எல்லாவற்றையும் புரிந்துகொண்டு தகுந்தவிதத்தில் பயன்படுத்தும் அவருடைய திறமையை இது குறிப்பிடுகிறது. ஏசாயா 33:6
- **“நமக்கு நீதியும் பரிசுத்தமும் மீட்புமானவர்”** ஒரு கருத்தில் அல்லாமல், இரட்சிப்பும் ஆவிக்குரிய முதிர்ச்சியும் உண்மை யாகவே அவரில் கண்டுபிடிக்கப்பட்டது என்பது இதன் அர்த்தம். 1 கொரிந்தியர் 1:30
- **“நமக்கு தேவனால் ஞானமானவர்”** அவரில் ஞானமும் காணப்படுகிறது என்ற உண்மையை இது குறிப்பிடுகிறது. 1 கொரிந்தியர் 1:30

- **“ஜனக்கூட்டங்களுக்குச் சாட்சி”** இது அவர் மனிதவர்க்கம் முழுவதுக்கும் அவர் கொடுத்த சாட்சியைக் குறிப்பிடுகி றது. ஏசாயா 55:4
- **“அதிசயமான ஆலோசனைக் கர்த்தா”** இது துன்பப்படும் காலங்களில் அவசியப்படும் முழு உதவியையும் அளிக்கும் அவருடைய திறமையைக் குறிப்பிடுகிறது. ஏசாயா 9:6
- **“வார்த்தை”** எல்லா பேச்சுத் தொடர்புக்கும் அடிப்படை அவரே என்பதை இது குறிப்பிடுகிறது. சங்கீதம் 119:81; யோவான் 1:1, 14; 1 யோவான் 1:1; வெளிப்படுத்தல் 19:13
- **“தேவனுடைய வார்த்தை”** தேவனிடமிருந்து வரும் எல்லா வகையான தொடர்புகளுக்கும் அஸ்திபாரம் அவரே என்ற உண்மையை இது குறிப்பிடுகிறது. 2 பேதுரு 3:5; யோவான் 1:1-5; வெளிப்படுத்தல் 19:13
- **“ஜீவவார்த்தை”** உயிரோடிருக்கிற எல்லாவற்றிற்கும் அடிப்படை கட்டும் செங்கல் அவரே என்பது இதன் அர்த்தம். பிப்பியர் 2:16; 1 யோவான் 1:1
- **“உன் நாயகர்”** அவரோடு மக்களுக்கிருக்கும் உறவின் நெருக்கத்தை இது குறிப்பிடுகிறது. ஏசாயா 54:5
- **“உன் மீட்பர்”** மனித வர்க்கப் பாவங்களுக்கு கிரயம் செலுத்திய ஒருவர் அவர் என்று குறிப்பிடுகிறது. ஏசாயா 54:5
- **“உன் இரட்சிப்புமானவர்”** மனுக்குலத்தை அவர்களுடைய பாவங்களிருந்து விடுவிக்கும் ஒருவர் என்று அவரைக் குறிப் பிடுகிறது. லூக்கா 2:29-30.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 5, பகுதி 4

1. **வாசிக்கவும் கொலேசெயர் 1:16 மற்றும் யோவான் 8:58. இயேசு கிறிஸ்து என்ற நபரைப் பற்றி இது நமக்குக் கூறுவது என்ன?**

2. **வாசிக்கவும் மத்தேயு 22:41-46. மேசியா எவ்வாறு தாவீது ராஜாவின் ஆண்டவராகவும், அவனுடைய குமாரன ாகவும் இருக்கமுடியும்?**

3. **வாசிக்கவும் 1 பேதுரு 2:22. இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் பாவத்தைப் பற்றி இது கூறுவது என்ன?**

4. **வாசிக்கவும் ஏசாயா 7:14; 9:6; 11:1-2 மற்றும் 53:2. வரப்போகிற மேசியாவைக் குறித்து அவை வெளிப்படுவதை சிறு குறிப்பு எழுதுக.**

5. **கீழ்கண்ட பகுதிகளை வாசித்து இயேசுவின் மரணம் நமக்கு செய்தது என்ன என்று கூறு:**
   a. கலாத்தியர் 3:1
   b. கொலேசெயர் 1:13-14
   c. எபேசியர் 2:14-16
   d. 1 யோவான் 2:1-2

6. **கீழ்கண்ட பகுதிகளை வாசித்து இயேசுவின் உயிர்த்தெழுதலைப் பற்றி சில உண்மைகளைக் கூறு:**
   a. மத்தேயு 27: 62-66
   b. யோவான் 20: 2-10
   c. யோவான் 20:14; மத்தேயு 28:9-10; யோவான் 20:26-29; 21:1-23 மற்றும் 1 கொரிந்தியர் 15:6
   d. 1 கொரிந்தியர் 15:1-3

7. **வாசிக்கவும் அப்போஸ்தலர் 1:9 மற்றும் கொலேசெயர் 3:1. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அவர் செய்தது என்ன?**

8. **கீழ்கண்ட பகுதிகளை வாசித்து பிதாவின் வலது பாரிசத்திருந்து இயேசு இப்போது என்ன செய்கிறார்?**
   a. எபிரேயர் 7:25
   b. 1 யோவான் 2:1
   c. 1 தீமோத்தேயு 2:5
   d. எபிரேயர் 4:14

9. **வாசிக்கவும் எபேசியர் 1:22-23. கிறிஸ்து சபைக்கு என்னவாயிருக்கிறார்?**

10. **வாசிக்கவும் யோவான் 10:11; எபிரேயர் 13:20 மற்றும் 1 பேதுரு 5:4. நம்முடைய கர்த்தர் எவ்வகையான “மேய்ப்ப ராக” இருக்கிறார்?**

11. **"D" பகுதியில் சொல்லப்பட்டுள்ள குமாரனுடைய ஆள்தத்துவம் மற்றும் பங்கு பற்றிய வித்தியாசமான விளக்கங்களை கீழேயுள்ள குமாரனுடைய செயல்களுடன் இணையுங்கள். மேலும் இந்த விளக்கங்கள் ஒன்றுக்கு மேற்பட்டவைகளுடன் சம்பந்தப்படலாம். குமாரனுடைய செயல்களைப் பற்றிய விபரங்களை 1, 2, 3...என்று குறிக்கலாம்.**

a. அவர் முன்பே இருந்தது
b. தேவன் மனிதன் ஒற்றுமை
c. அவருடைய பரிபூரணம்
d. அவருடைய பிறப்பும் இறப்பும்
e. அவருடைய மரணம்
f. அவருடைய உயிர்தெழுதல்
g. அவருடைய பரமேறுதலும் காலமும்
h. அவருடைய ஊழியம்

பகுதி 5
பரிசுத்த ஆவியானவராகிய தேவன் (Pneumatology)

A. அவர் ஒரு நபர்[100]

பரிசுத்த ஆவியானவர் தேவனாயிருக்கிறார் என்று ஏற்கெனவே நிரூபிக்கப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் தெய்வீக வல்லமையை அல்லது நோக்கத்தை குறிக்கப் பயன்படும் ஒரு தலைப்பு மட்டுமல்ல ஒரு நபராக இருக்கிறார். அது ஒரு நபருக்குரிய மூன்று குண இயல்புகளான அறிவுத்திறன், உணர்ச்சி, மற்றும் சித்தம் ஆகியவைகளைக் கொண்டவராக அவர் இருக்கிறார் என்ற சத்தியத்தினால் நிரூபிக்கப்பட்டது.

சபை வரலாறு முழுவதிலும் பரிசுத்த ஆவியானவரின் ஆள் தத்துவம் மற்றும் அவருடைய கிரியை ஆகியவைகளின்மீது ஒத்த கருத்து இல்லாமருந்தது. ***"சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்"*** (எபேசியர் 4:3) என்ற கோட்பாட்டுக்கு நாம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். பரிசுத்த ஆவியானவரைப் பற்றி மெய்யாகப் புரிந்துகொண்டு அவர்மீது சார்ந்திருப்பது அன்புக்கு வழிநடத்தும் (கலாத்தியர் 5:22), இது தேவனிடம் நமக்கிருக்கும் அன்பை மட்டுமின்றி ஒருவருக்கொருவர் மீதான அன்பையும் (1 யோவான் 4:20) உள்ளடக்கியது.

பரிசுத்த ஆவியானவரின் ''ஆலயம்'', கிறிஸ்தவனுடைய சரீரமாயிருக்கிறது. அப்போஸ்தலர் பவுல், ***"உங்கள்*** பன்மை அர்த்தம் நீங்கள் ***எல்லாரும் சரீரமானது*** (ஒருமை) ***நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும்*** (ஒருமை, இதன் பொருள் ஒரு சரீரம், ஒரு ஆலயம் என்பதாகும்), ***நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?"*** என்றார் (1 கொரிந்தியர் 6:19). இதற்கு முன்பாக பவுல், ***"நீங்கள்*** (எல்லாரும்) (பன்மை) ***தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும்*** (ஒருமை), ***தேவனுடைய ஆவி உங்களில்*** (எல்லாரிடத்திலும்) ***வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா?"*** (1 கொரிந்தியர் 3:16) என்று கேட்கிறார். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் சரீரத்திற்குள் தனி நபர்களை ஒருவரோடொருவராக இணைக்கிறார். பரிசுத்தமில்லாத நடவடிக்கைகளால் அந்த ''ஆலயத்துக்குத்'' தீங்கு விளைவிக்கக் கூடாது என்று நாம் எச்சரிக்கப்படுகிறோம் (1 கொரிந்தியர் 3:17). இயேசு கிறிஸ்துவுக்கு ஒரே ஒரு மணவாட்டி மட்டுமே இருக்கிறது. நம்முடைய படிப்பில் இது வழிகாட்டுவதாக இருக்கட்டும்.

1. **அவருடைய புத்திக்கூர்மை**

   தேவனுடைய காரியங்களை அறிந்து தேடும் திறமை பரிசுத்த ஆவியானவருக்கு இருக்கிறது (1 கொரிந்தியர் 2:10-11). அவருக்கு ஒரு சிந்தை இருக்கிறதென்றும் (ரோமர் 8:27) மக்களுக்குப் போதிக்கும் திறமையிருக்கிறதென்றும் (1 கொரிந்தியர் 2:13) இது நமக்குப் போதிக்கிறது.

2. **அவருடைய உணர்வுகள்**

   பரிசுத்த ஆவியானவரை விசனப்படுத்தக் கூடும் என்று குறிப்பாக தேவனுடைய வசனங்கள் கூறுகின்றன (ஏசாயா 63:10; எபேசியர் 4:30), இது அவர் உணர்ச்சியுடையவராக இருக்கிறார் என்று குறிப்பிடுகிறது. அவர் ஒரு செல்வாக்காகவோ அல்லது நோக்கமாகவோ இருந்திருந்தால், அவர் அப்படிப்பட்ட உணர்வுகளுக்கு ஆளாக மாட்டார். அவரைத் தூஷணஞ்செய்ய முடியும் என்ற சத்தியத்திற்கு இதுவுங்கூட ஆதாரமாயிருக்கிறது (மாற்கு 3: 29).

3. **அவருடைய சித்தம்**

   ஒரு சித்தத்தைத் தெரிந்துகொள்ளும் திறன் அவருக்கிருக்கிறது என்பதும் தெளிவாகிறது. பரிசுத்த ஆவியின் மிக உயர்ந்த அதிகாரத்துடன் அவர் ஆவிக்குரிய வரங்களை கிறிஸ்துவின் சரீரத்துக்குப் பகிந்தளிக்கிறார் (1 கொரிந்தியர் 12:11). அவர் கிறிஸ்தவர்களின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டி நடத்துகிறார் என்பதும் தெளிவாகிறது. (அப்போஸ்தலர் 16:6-11).

4. **அவருடைய ரூபம்**

   வேதாகமத்தில், இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின்போது ஒரே ஒரு முறை மட்டுமே பரிசுத்த ஆவியானவர் புறாவின் வடிவமெடுத்தார் என்று பார்க்கிறோம். இது சமாதானத்தின் அடையாளமாகும் (மத்தேயு 3:16; மாற்கு 1:10; லூக்கா 3:22; யோவான் 1:32).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 5, பகுதி 5A

1. **ஒரு நபருடைய மூன்று குணாதிசயங்கள் யாவை?**
   a. வாசிக்கவும் 1 கொரிந்தியர் 2:10-11. பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இது நமக்குப் போதிப்பது என்ன?
   b. வாசிக்கவும் எபேசியர் 4:30. பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இது நமக்குப் போதிப்பது என்ன?
   c. வாசிக்கவும் 1 கொரிந்தியர் 12:11. பரிசுத்த ஆவியானவரைப் பற்றி இது நமக்குப் போதிப்பது என்ன?

B. அவருடைய பங்கு

1. **படைப்பு**

   சிருஷ்டிபிலும், வானங்களையும் பூமியையும் படைத்ததிலும் பரிசுத்த ஆவியானவருக்கு ஒரு பங்கு இருந்தது என்பது தெளிவாயிருக்கிறது. பூமி வடிவமும் மக்களுமில்லாமருந்தபோது ***"தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார்"*** (ஆதியாகமம் 1:2). இது ஒரு பறவை தன் குஞ்சுகள் மீது இறக்கைகளை அசைத்துக்கொண்டிருப்பதைப்போல் இருந்தது (உபாகமம் 32:11), கர்த்தர் வானங்களின் விரிவை ஒரு வார்த்தையினால் உண்டாக்கினார் என்றும் பரிசுத்த ஆவியானவர் அவைகளில் நட்சத்திரங்களை வைத்தார் (சங்கீதம் 33:6) என்றும் வேத வசனங்கள் கூறுகின்றன. பரிசுத்த ஆவியானவருக்கும் அவருடைய படைப்பின்மேல் கட்டுப்பாடு இருக்கிறது (யோபு 26:13).

பரிசுத்த ஆவியானவருக்குப் படைப்பிலும் மனிதகுலத்தை உருவாக்குவதிலும் (யோபு 33:4), மிருகங்களை உருவாக்குவதிலும் ஒரு பங்கு இருந்தது (சங்கீதம் 104:24-25 ஒத்துப்பார்க்க 104:30).

படைப்பில் அவருடைய பங்கு, கர்த்தராகிய தேவனை அவருடைய படைப்பின் மூலம் வெளிப்படுத்துவதாகும் (ஏசாயா 40:12-13 ஒத்துப்பார்க்க ரோமர் 1:20 ஒத்துப்பார்க்க யோவான் 16:13-14).

2. **வெளிப்படுத்தல்**
வெளிப்படுத்தல் பரிசுத்த ஆவியானவருடைய பணியானது புதிய சத்தியங்களை மனித இனத்திற்கு அறிவிப்பதே ஆகும். (யோவான் 16:13). இந்தச் சத்தியத்தைத் தெரிவிக்கிறதற்கு அவர் மனிதர்களைப் பயன்படுத்துகிறார் (2 சாமுவேல் 23:2) சில சமயம் அந்த உண்மை துக்கம் தருவதாக இருக்கலாம் (மீகா 3:8).

வேதாகமமே பரிசுத்த ஆவியானவரிடமிருந்து தோன்றிய ஒரு வெளிப்பாடாக இருக்கிறது (மத்தேயு 22:42-43; அப்போஸ்தலர் 1:16; 4:24-25; 28:25-26; எபிரேயர் 10:15-16).

3. **புரிந்துகொள்ளுதல்**
பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய செய்தியை மானிடருக்கு வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் அவற்றில் சில புரிந்துகொள்வதற்குக் கடினமாயிருக்கிறது (1 கொரிந்தியர் 13:12). ஆகவே பரிசுத்த ஆவியானவரும் தேவனுடைய வார்த்தையைப் புரிந்துகொள்வதற்கு நமக்கு உதவுகிறார் (1 கொரிந்தியர் 2:12-16). மேலும், நமது வாழ்க்கையில் நாம் சந்திக்கிற வெவ்வேறு சூழ்நிலைகளில் எந்தெந்த வேதபகுதி நமக்குப் பொருத்தமாயிருக்கிறது என்பதை அவர் வெளிப்படுத்துகிறார் (லூக்கா 12:11-12; எபிரெயர் 3:7-8). ஆவிக்குரிய புரிந்துக்கொள்ளுதலை நம் வாழ்வில் செயல்படுத்துவதே "ஞானம்" என்று அழைக்கப்படுகிறது.

4. **ஆவியின் ஏவுதல்**
பரிசுத்த ஆவியானவர் குறிப்பிட்ட மனிதர்களைப் பரிசுத்த வேதாகமத்தை எழுத ஏவினார் (2 பேதுரு 1:21). "வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கின்றன" என்று தேவனுடைய வார்த்தை நமக்குக் கூறுகிறது (2 தீமோத்தேயு 3:16-17). எழுத்துப் பிரகாரமாக இது "தேவ ஆவியின் செயலாற்றல்." அப்போஸ்தலனாகிய பவுல், அந்தப் பகுதியை எழுதிய போது வேறெங்கும் காணமுடியாத ஒரு கிரேக்க வார்த்தையை பயன்படுத்தினார். அந்த வார்த்தை என்னவென்றால் தியோப்னுஸ்டாஸ் (THEOPNEUSTOS) இந்த வார்த்தையானது தியோஸ் மற்றும் ப்னூமா என்ற கிரேக்க வார்த்தைகளை கொண்டு உறுவானதாகும். அதன் அர்த்தம் "தேவன்" மற்றும் "ஆவி" என்பதாகும். முழு வேதாகமம் பரிசுத்த ஆவியாகிய தேவனால் ஏவப்பட்டதாகும்.

5. **அற்புதங்கள்**
இயேசு கிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினாலே அற்புதங்களைச் செய்தார் (லூக்கா 4:18).

மற்ற அற்புதமான செயல்களிலும் பரிசுத்த ஆவியானவர் நேரடியாகத் தொடர்புகொள்பவராக இருந்தார். உதாரணமாக பிப்பு எத்தியோப்பியனுக்கு திருமுழுக்குக் கொடுத்தபோது ஆவியானவர் பிப்பைக் கொண்டுபோய் விட்டார் (அப்போஸ்தலர் 8:39). மற்றொன்று கன்னிப்பிறப்பாகும்.

6. **கன்னிப்பிறப்பு**
தூதனாகிய காபிரியேல் கன்னியாகிய மரியாளைப் பார்த்து அவள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று அவர் "தேவனுடைய குமாரன்" என்னப்படுவார் என்று சொன்னார் (லூக்கா 1:27, 35). திரியேகத்தில் இயேசுவின் பரம பிதா என்பதைச் சொல்லுகிறது மட்டுமல்ல, பரிசுத்த ஆவியானவர் தேவனாக இருக்கிறார் என்பதற்கு இன்னொரு சான்றாக இருக்கிறது.

மரியாள் இயேசுவைச் சுமந்துக் கர்ப்பவதியானபிறகு அவளை திருமணம் செய்யப்போகிற யோசேப்புக்கு ஒரு தூதன் தோன்றினான். அவரிடம் மரியாள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று கூறினார் (மத்தேயு 1:18-20).

7. **பாவத்தை உணர்த்துதல்**
பரிசுத்த ஆவியானவருடைய குறிப்பிட்ட இன்னொரு பணி, மனிதன் பாவம் செய்யும் போது, அவனை பாவத்தைக்குறித்துக் கண்டித்து உணர்த்துவதாகும். அதாவது, தேவனுடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமல் போய் அவர்கள் பாவிகளாயிருப்பதினாலே அவர்களுக்கு ஓர் இரட்சகர் தேவை என்பதை அவர் உலகத்திற்கு மட்டுமல்ல, தனிப்பட்ட மனிதர்களுக்கும் தெளிவாக்குவார் (யோவான் 16:8). நமது மனச்சாட்சியின் மூலமாய் பாவத்தை உணர்த்துகிறார் (ரோமர் 9:1).

8. **மறுபடியும் பிறப்பது**
மறுபடியும் பிறப்பது என்றால் "புதிய பிறப்பு" என்பதாகும். அது இரட்சிப்பின் போது நேரிடுகிற மாறுதல், இரட்சிப்புக்குப் பிறகு நேரிடுகிற ஒன்றல்ல. தேவனுடைய வார்த்தையில் வாக்களிக்கப்பட்ட அவருடைய வாக்குறுதியின்படி பரிசுத்த ஆவியானவரே புதிய பிறப்பைத் தருகிறவர் (1 பேதுரு 1:23; ஒத்துப்பார்க்க தீத்து 3:5).

9. **ஞானஸ்நானம்**
பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப்பற்றி விசுவாசிகள் மத்தியில் பல குழப்பங்கள் இருக்கின்றன. இதைக் குறித்து பரிசுத்த வேதாகமம் போதிக்கிறதைக் கவனத்தோடும் தெளிவோடும் ஆராய்ச்சி செய்வோமாக.

ஞானஸ்நானம் என்ற கிரேக்க பதம் "பாப்டிட்ஸோ" (BAPTIDZO) என்பதாகும். இது "அமிழ்த்துதல்" என்று பொருள்படும். கிரேக்க மக்கள் இந்த வார்த்தையை ஒரு துணியைச் சாயந்தோய்ப்பது அல்லது தண்ணீர் எடுக்கும்போது ஒரு பாத்திரத்தை இன்னொரு பாத்திரத்திற்குள் அமிழ்த்துவது,[101] அல்லது அநேகக் கேள்விகளாலே சூழப்பட்டிருத்தல் ஆகியவற்றுக்கு உபயோ

கித்தனர். (யுத்தத்திற்கு ஒரு போர் ஆயு தத்தை இரத்தத்தில் தோய்த்துக் கொள்வது, ஒருவருக்கொருவர் இடையிலுள்ள அர்ப் பணிப்பைக் குறித்தது) ஒருவருக்கு வார்த்தையினலே சரீரத்தின் மூலமாகவோ அல்லது உணர்வு பூர்வமாகவோ அறிவிக்கும் முறையாகும். உதாரணமாக, தான் மூழ்க வேண்டிய ஒரு ஸ்நானம் இருக்கிறது என்று இயேசு கூறினார். உண்மையில் அது சிலுவையைப் பற்றிய குறிப்பாகும். இயேசு ஏற்கெனவே தண்ணீரில் ஞானஸ்நானம் பெற்றார் (மாற்கு 1:9). இயேசுவின் தண்ணீர் ஸ்நானம் அவருடைய வாழ்க்கையில் பிதாவினுடைய திட்டத்தை ஏற்றுக்கொள்ளும் அடையாளமாயிருந்தது.

யோவான்ஸ்நானன் கொடுத்த செய்தி ***"பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுப்பார்"*** - என்பதையும் உள்ளடக்கியது (மத்தேயு 3:11; மாற்கு 1:8; லூக்கா 3:16; யோவான் 1:33; அப்போஸ்தலர் 1:5). ஆகவே பெந்தெகொஸ்தே நாளில் ஆண்டவர் பரிசுத்த ஆவியானவரை அனுப்பிய பின்தான் ஆவியானவரின் ஸ்நானம் நேரிட்டது (யோவான் 14:16-17; அப்போஸ்தலர் 2:1-4). பேதுரு இதை ஆரம்பம் என்று அழைத்தார் (அப்போஸ்தலர் 11:16). அந்த நாளுக்கு முன்னதாக எந்த விசுவாசியும் அதைப் பெறவில்லை. அது பெந்தெகொஸ்தே நாளில் ஆரம்பித்தபோது அது திருச்சபைக்குப் புதியதாய் இருந்தது.

பெந்தெகொஸ்தே நாளிருந்து விசுவாசிகளை ஒரு சரீரத்தில் அதாவது "கிறிஸ்துவின் சரீரத்தில்" அல்லது சபையில் (எபேசியர் 5: 22-30) வைப்பதே பரிசுத்தாவியானவரின் ஞானஸ்நானத்தின் நோக்கமாக இருந்தது (1 கொரிந்தியர் 12:12-13). இதை அறியாமல் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை புரிந்து கொள்வது இயலாத காரியம். பாவமோ அல்லது மாம்சீகமோ இவர்களைச் சரீரத்திருந்து விலக்கவில்லை என்பதைக் கவனியுங்கள். இல்லாவிட்டால் கொரிந்தியர்கள் நிச்சயமாக விலக்கப்பட்டிருப்பார்கள் (கொரிந்தியரின் திரளான பாவங்களைக் குறித்து அறிய 1 கொரிந்தியிர் 1-11 அதிகாரங்களை வாசியுங்கள்).

"பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெற வேண்டும்" என்ற கட்டாயமோ கட்டளையோ வேதாகமத்தில் எங்கும் காணப்படவில்லை. ஆகையால் ஒருவர் இயேசு கிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டு அவரை விசுவாசிக்கும் போது அது நேரிடுகிறது (1 கொரிந்தியர் 15:1-4). அது ஒரு "ஈரமான" ஸ்நானம் அல்ல, "உலர்ந்த" ஸ்நானமாக இருக்கிறது.

விசுவாசிகளுக்கான ஞானஸ்நானத்தின் ஆவிக்குரிய உண்மையை அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவாய் கூறுகிறார்,

> ***கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிருந்து எழுப்பப்பட்டதுபோல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம்பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயல் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதன் சாயலும் இணைக்கப்பட்டிருப்போம்.*** (ரோமர் 6:3-5)

இயேசு கிறிஸ்துவை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்ட ஒரு விசுவாசியில் பரிசுத்தாவியானவர் வாசம் செய்யும்போது அவருக்கு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கிடைக்கிறது. விசுவாசியுடன் பரிசுத்த ஆவியானவர் தங்கி வாழ்கிறார் (யோவான் 14:17; ரோமர் 5:5).

10. முத்திரை போடுதல் (sealing)

முத்திரை என்பது ஒரு மெழுகில் அழுத்தப்பட்ட ஒரு மோதிரம் உருவாக்கிய தோற்றத்தைப் போல் உங்களில் பதிக்கப்பட்ட ஒன்றாகும். இயேசுவின் கல்லறையில் மூடிய கல் எடுக்கப்பட்டதோ இல்லையோ என்று அறியும்படிக்கு இயேசு கிறிஸ்துவின் கல்லறைக்கு யூதர்கள் முத்திரை போட்டார்கள் (மத்தேயு 27:66). ஒருவர் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது பரிசுத்த ஆவியானவர் அந்நபர் மேல் காண முடியாத (invisible) தேவனுடைய "முத்திரையைப்" போடுகிறார் (எபேசியர் 1:13).

முத்திரை போடப்பட்டவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்கள் என்பதற்கு தேவன் கொடுத்த ஒரு அதிகாரமாகவுள்ளது. விசுவாசி, இயேசு கிறிஸ்துவுடன் ஒரு நிலையான உறவுக்குள் செல்லுகிறான்; பரிசுத்த ஆவியானவர் அந்த ஒற்றுமையில் தம்முடைய "பெயரைக் கையொப்பமிடுகிறது போல" குறிக்கிறார். பரிசுத்த ஆவியானவர், தேவனாக இருப்பதினால், இந்தக் கண்ணால் பார்க்க முடியாத சின்னத்தைப்போட "தேவனுடைய முத்திரையை" (2 கொரிந்தியர் 1:22) பயன்படுத்துகிறார்.

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு முத்திரை போட்டதால் பாவச் செயல்களை செய்து நாம் அவரைத் "துக்கப்படுத்தக் கூடா"து (எபேசியர் 4:30).

"மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்றிருக்கிறோம்" (எபேசியர் 4:30; எபேசியர் 1:13-14) என்று வாசிக்கிறோம். அது இறுதி உயிர்த்தெழுதன்போது மீட்பு முழுவதுமாய் நிறைவேற்றப்படும் என்பதைக் குறிக்கிறது (ரோமர் 8:23).

11. உள்ளே தங்கி வாழ்வது

இரட்சிப்பு கிடைக்கும்போது விசுவாசியில் பரிசுத்த ஆவியானவர் வந்து தங்கி வாழ்கிறார். இது இயேசு கொடுத்த வாக்குறுதியின் நிறைவேற்றுதல் ஆகும். அவர் ***"நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ள மாட்டாது; அவர் உங்களுடனே வாசம் பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்"*** (யோவான் 14:16-17) என்று கூறினார்.

பெந்தெகொஸ்தே நாளுக்கு முந்திய நாளில் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் "மேல்" இருந்தார் என்று சொல்லப் பட்டது. பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின்னர் அவர் விசுவாசிகளுக்குள் இருக்கிறார் அல்லது தங்கி வாழ்கிறார் என்று கூறப்படுகிறது. பரிசுத்த ஆவியானவர் உள்ளே தங்கி வாழ்வது திருச்சபைக்கு ஒப்பற்றதாயிருக்கிறது (ரோமர் 8:9; 1 கொரிந்தியர் 3:16; 6:19; 2 தீமோத்தேயு 1:14).

பரிசுத்த ஆவியானவர் பல்வேறு பணிகளைச் செய்கிறார். அதாவது, பாவத்தைக் கண்டித்து உணர்த்துவது, சத்தியத்தை வெளிப் படுத்துவது ஆகியவை. ஆனால் அவருடைய "இடம்" மாறிவிட்டது.

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்குள்ளே நுழைவது, பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் கிடைக்கும் அதே நேரத்தில் நிகழ் கிறது. குறிப்பாக இரட்சிப்பின் நேரம். பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானம் மற்றும் தங்கி வாழ்வது தேவனுடைய வரங்கள் இருப்பதினாலேயாம் (அப்போஸ்தலர் 11:16-17; ரோமர் 5:5). அவைகள் விசுவாசியிடமிருந்து எடுக்கப்படமாட்டாது (ரோமர் 11:29). கொரிந்து சபையினால் நிரூபிக்கப்பட்டதுபோல, ஒரு விசுவாசி பாவஞ்செய்தாலும்கூட ஆவியானவர் அந்த வரங்களை எடுக்க மாட்டார். பவுல் முதல் கொரிந்தியர் நிருபத்தில் 5, 6 அதிகாரங்களில் பல பாவங்களைக் குறித்துப் பேசின ாலும் 1 கொரிந்தியர் 1:2; 3:16; 6:19 ஆகிய வசனங்களில் கொரிந்து விசுவாசிகள் இரட்சிக்கப்பட்டவர்களாகத் தொடர்ந்து குறிப் பிடப்பட்டிருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவியானவர் இரட்சிக்கப்பட்ட பின்பு கொடுக்கப்பட்டிருந்தார் என்று அப்போஸ்தலர் நடபடிகளில் இரண்டு இடங்க ளில் காண்கிறோம் (அப்போஸ்தலர் 10:44; 19:16). மாணவர் யார்? என்ன? எப்பொழுது? என்ற கேள்விகளின் முக்கியத்துவத்தை ஞாபகம் வைத்திருக்கிறார் என நம்புகிறோம். அந்த இரு இடங்களிலுமே மேசியா வருவார் என சம்பந்தப்பட்டவர்கள் நம்பின ார்கள் என்று பார்க்கிறோம். ஆனால் அவர் ஏற்கெனவே வந்துவிட்டார் என்பதை அறியாமல் இருந்தார்கள். மேசியா வந்தி ருக்கிறார் என்ற போதனையை நம்பி அவர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொண்டார்கள். விஷேசமான சம்பவங்களை ஆதாரமாக எடுத்துக் கொண்டு அவற்றை வழக்கமானது என்று நம்புவது ஞானமல்ல.

12. **நிறைதல்**

பரிசுத்த ஆவியானவருடைய நிறைவைப்பற்றிப் படிக்கும்போது பதில்களைக் கண்டுபிடிக்க தேவனுடைய வசனத்திற்குத் திரும்புவோம். பரிசுத்த ஆவியின் நிறைவைக் குறித்து வேதாகமத்தின் விளக்கத்தைப் பார்த்துவிட்டு, அது நம்முடைய வாழ்க் கையில் எவ்வளவு முக்கியமானது என்பதை உறுதியாய்த் தெரிந்துகொள்ள நாடுவோம்.

a. பரிசுத்த ஆவியானவரால் நிறையப்படுதல் என்பது:

1) **விஷேச கைவேலைகளில் ஈடுபடுபவர்களுக்கும் தலைமைத்துவத்திற்கும் கொடுக்கப்பட்டது**

பரிசுத்த ஆவியின் நிறைவு, இஸ்ரவேன் காலத்தில், குறிப்பிட்ட மக்களுக்குக் குறிப்பிட்ட கட்டளைகளை நிறைவேற்று கிறதற்காகக் கொடுக்கப்பட்டிருந்தது. பரிசுத்த ஆவியானவருக்காக வேண்டிக்கொள்ளலாம் (லூக்கா 11:13), ஆனால் அது அவசியமில்லை. தேவாலயத்தில் வேலை செய்த பெசலெயேல் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்தும்படி பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார் என்று வேதம் கூறுகிறது (யாத்திராகமம் 31:3; 35:31). மேலும், மோசேயின் மரணத்திற்குப் பிறகு, இஸ்ரவேன் மக்களை நடத்தும்படிக்கு யோசுவாவும்கூட ***"ஞானத்தின் ஆவியினால் நிறையப்பட்டான்"*** (உபாகமம் 34:9) எனக் காண்கிறோம்.

2) **பரிசுத்த ஆவியானது விசேஷமான ஊழியத்தி கும் ஊக்குவிப்பதற்கும் தீர்க்கதரிசனத்திற்கும் கொடுக்கப் பட்டி ருந்தது**

யோவான்ஸ்நானனும் (லூக்கா 1:15), அவருடைய தாயாகிய எசபெத்தும் (லூக்கா 1:41), அவருடைய தகப்பனாகிய சகரியாவும் (லூக்கா 1:67) பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள் என்று லூக்கா சுவிசேஷத்தில் படிக்கிறோம். இந்த வசனங்கள் பரிசுத்த ஆவியானவரின் நிறைவு விசேஷமான ஊழியம் செய்வதற்கு தெய்வீக வல்லமையைக் குறிக்கிறது என்ற ஓர் அடிப்படைத் தத்துவத்தை நிலைநாட்டுகின்றன.

3) **பரிசுத்த ஆவி: ஒரு குறிப்பிட்ட மக்களுக்கு ஒரு விசேஷமான செய்தியைக் கூறுவதற்குக் கொடுக்கப்பட் டிருந்தது**

இயேசு அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் அவருடைய பரமேறுதலுக்கு முன்னர், பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள் ளுங்கள் என்று தம் சீடர்களிடம் கூறினார் (யோவான் 20:22). இது பரிசுத்த ஆவியானவருக்குச் செவிகொடுக்கவும் அவரு டைய வல்லமைக்காகக் காத்திருக்கவும் வல்லமையைப் பெறுவதற்காகவும் கூறப்பட்டது (அப்போஸ்தலர் 1:2). இது இயேசுவைச் சிலுவையில் அறைந்தவர்களை மன்னிக்க அவர்களுக்குக் கிருபையைக் கொடுக்கும் (யோவான் 20:23).

பரிசுத்த ஆவியானவர், பெந்தெகொஸ்தே நாளில் அவர்களை நிரப்பி அவர்களுக்கு வல்லமையைக் கொடுத்ததி ன ால் அவர்கள் முன்பு தெரியாத மொழிகளிலே பேச ஆரம்பித்தார்கள் (அப்போஸ்தலர் 2:1-11 விசேஷமாக வசனங்கள் 4, 8, 11). அதே அதிகாரத்தில் பதிவு செய்த பிரசங்கத்தைப் பிரசங்கிக்கவும் இயேசு கிறிஸ்துவைக்குறித்த செய்தியை ஏற்றுக்கொள்ளும் அனைவருக்கும் பரிசுத்த ஆவியின் வாக்குத்தத்தத்தை அளிக்கவும் (2:38-40) பேதுரு பரிசுத்த ஆவியினாலே வல்லமை பெற்றார் (2:14-40). இஸ்ரவேன் காலத்தில், பரிசுத்த ஆவியின் நிறைவு ஊழியஞ் செய்வ தற்கு பிரத்தியேகமான ஒரு வல்லமையைக் கொடுத்தது.

4) **ஆவிக்குரிய பாதுகாப்புக்கும் தைரியத்திற்கும் கொடுக்கப்பட்டிருந்தது**

பேதுரு யூதர்களுக்கு (அப்போஸ்தலர் 4:5-12) நடந்தவற்றைக் குறித்து விளக்கம் கொடுப்பதற்கு பரிசுத்த ஆவியின ால் நிரப்பப்பட்டார். பிறகு அந்தச் செய்தியை விளக்கியபோது ஆவியினால் நிரப்பப்பட்டார். பேதுருவும் அவரு டைய நண்பர்களும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தைரியத்தோடு பேச வல்லமையைப் பெற்றார்கள் (4:31). இந்த இரண்டு நிகழ்ச்சிகளிலும்

அவர்கள் வல்லமை பெற்றனர். ஆனால் வேறு மொழிகளில் பேசவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். ஆகையால், பரிசுத்த ஆவியானவரின் நிறைவு எப்பொழுதும் பிற மொழிகளில் பேசுவது என்பது தவறான எண்ணமாகும்.

பரிசுத்த ஆவியின் நிறைவு பற்றிய துவக்க எடுத்துக்காட்டுகளிருந்து, பரிசுத்த ஆவியானவர் தங்கி வாழ்வது ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் ஒரு முறைதான் நேரிடும் மற்றும் அது நிலையானது என்றும் அறிகிறோம். ஆனால் பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுவது அடிக்கடி நேரிடும் மற்றும் அது நிலையற்றது என்று நாம் தீர்மானிக்கலாம். அதைக்குறித்து இன்னொரு சான்று என்னவென்றால் விசுவாசிகளிடம் பரிசுத்த ஆவியானவர் தங்கி வாழ வேண்டும் என்று அவர்களுக்குக் கட்டளையிடப்படவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறார்கள் (எபே. 5:18). பரிசுத்த ஆவியில் தங்கி வாழ்வது என்பது ஒரு நிலையைக் குறிக்கிறது (பரிசுத்த ஆவியானவர் நம்மிலும் மற்றும் நாம் கிறிஸ்துவிலும்). பரிசுத்த ஆவியானவரின் நிறைவு விசுவாசியின் மூலம் அவருடைய வல்லமையை வெளிப்படுத்துகிறது.

5) **ஊழியஞ்செய்வதற்கு வல்லமையைக் கொடுக்கிறது**

திருச்சபையில் பரிசுத்த ஆவியின் நிறைவு மற்ற விசுவாசிகளுக்கும் நாம் செய்யும் ஊழியத்திற்கு வல்லமையளிக்கிறது. ஆதித் திருச்சபையில் விதவைகளைக் கவனிக்கும் பிரச்சனை எழும்பியபோது (அப்போஸ்தலர் 6:1), சீடர்கள் சபையினரிடம் பிரச்சனையை கவனிக்கும்படி பரிசுத்த ஆவியினால் மற்றும் ஞானத்தினால் நிரப்பப்பட்டவர்களை தெரிந்தெடுக்கச் சொன்னார்கள் (அப்போஸ்தலர் 6:2-5), சபையார் அப்படியே செய்தார்கள். திருச்சபையில் சேவை செய்வதற்கு மக்களுக்கு ஆவிக்குரிய வல்லமையின் அவசியத்தை சீடர்கள் உணர்ந்துகொண்டார்கள்.

6) **சாத்தானுடைய வஞ்சகத்தைக் கண்டுபிடிப்பதற்குக் கொடுக்கப்பட்டது**

தன்னுடைய முதல் மிஷனெரி பயணத்தின்போது பவுல் தேவனுடைய வார்த்தையை செர்கியுபவுல் என்னும் அதிபதியுடன் பகிர்ந்துக்கொண்டிருக்கும்போது, பர்யேசு என்னும் மாயவித்தைக்காரன் எதிர்த்தான் (அப்போஸ்தலர் 13:6-7). பவுல், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டதினால் அவன் தேவனுடைய வார்த்தையைத் தவறாக விலக்கித் திருப்புகிறான் என அறிந்தார் (அப்போஸ்தலர் 13:8-10).

7) **புறக்கணிக்கப்படும்போது, உதவிசெய்யக் கொடுக்கப்பட்டது**

பிசீதியா நாட்டிலுள்ள அந்தியோகியாவில் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்ட பவுலும் பர்னபாவும் யூதர்களால் புறக்கணிக்கப்பட்டிருந்தார்கள் (அப்போஸ்தலர் 13:42-51). இந்தச் சூழ்நிலையில் பரிசுத்த ஆவியின் நிறைவு என்பது அவர்களுடைய பணியில் பரிசுத்த ஆவியானவரோடு தொடர்ந்து உறவுகொள்ளும் வாழ்வு உண்டு என்பதைக் குறிப்பிடுகிறது (13:52).

b. வளர்ந்து வரும் விசுவாசியில் பரிசுத்த ஆவியானவரின் நிறைவு

விசுவாசி பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டிருப்பதினால் (எபேசியர் 5:18) ஒவ்வொரு விசுவாசியும் எல்லா நேரங்களிலும் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்க மாட்டார் என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

தேவனோடுள்ள விசுவாசியின் உறவைப் பாவம் தடை செய்வதினால், அது பரிசுத்த ஆவியானவரின் நிறைவை அல்லது அவர் வல்லமை அளிப்பதைத் தடை செய்யும் (1 யோவான் 1:6). பரிசுத்த ஆவியானவரில் தொடர்ந்து நிறைந்திருப்பது, நமது கிறிஸ்தவ நடக்கையைக் குறிப்பாகத் தெரிவிக்கிறது. இது “வெளிச்சத்தில் நடந்துகொள்ளுங்கள்” என்று குறிப்பிடுகிறது (யோவான் 8:12; 12:35-36; எபேசியர் 5:7-10; 1 யோவான் 1:7). சில சமயங்களில் விசுவாசியும் பாவஞ்செய்வான் (1 யோவான் 1:8, 10). இது தேவனோடு இருக்கிற நமது உறவைப் பாதிக்கிறது. அப்பொழுது விசுவாசி, “தேவன் நம்மை மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார்” என்பதை விசுவாசித்து தனது பாவங்களை அறிக்கையிட வேண்டும் (1 யோவான் 1:9).

பரிசுத்த ஆவியானவரின் நிறைவு ஒரு நிறைவேற்றப்பட்ட செயலாக இருக்கிறது என்பதைத் தயவுசெய்து கவனியுங்கள். அது ஓர் உடனடியான செயல், அது பகுதி மட்டும் முடிந்துவிட்ட ஒரு வழிமுறை அல்ல. ஒருவன் பரிசுத்த ஆவியினால் பாதி மட்டும் நிரப்பப்பட்டிருக்கிறான் அல்லது ஒரு பகுதியில் மட்டும் அதைப் பெற்றிருக்கிறான் என்று வேதாகமத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை. அது மட்டுமல்ல, பரிசுத்த ஆவியின் நிறைவு ஒருவருடைய கிறிஸ்தவ வளர்ச்சியைப் பொறுத்ததல்ல. ஆகையால் பரிசுத்த ஆவியானவரின் நிறைவு: (1) எல்லா விசுவாசிகளுக்கும் இருக்கிறது. அவர்களுடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தக்கபடி அல்ல, (2) அது முழுமையாய் இருக்கிறது; பரிசுத்த ஆவியானவரை எதிர்க்கவும் கூடும் (அப்போஸ்தலர் 7:51), ஒருவர் தாம் பரிசுத்தாவியால் நிரப்பப்படும்படிக்கு அவருக்கு முழுவதுமாய் அர்ப்பணம் செய்ய வேண்டும்.

நாம் இப்பொழுது பார்த்த உண்மைகளிருந்து பரிசுத்த ஆவியானவரின் நிறைவு விசுவாசிக்கு கிறிஸ்தவ வாழ்க்கை வாழப் பெலனளிக்கும் ஒரு நிறைவான செயல், இருப்பினும் அதுவே கிறிஸ்தவ வாழ்க்கையின் நோக்கம் அல்ல; ஆனால் அது கிறிஸ்தவ வாழ்க்கையை ஆரம்பித்து, அதை ஆதரிக்கிறது.

பரிசுத்த ஆவியானவரின் நிறைவின் நான்கு குறிப்பிட்ட விளைவுகள்: தேவனை ஆராதிப்பதற்கு வல்லமை வெளிப்படையாகச் சொல்லுதல்), தேவனைத் தொழுதுகொள்வது (உள்ளான உணர்வு), தேவனுக்கு நன்றிசெலுத்துதல், மற்றும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிவது ஆகும் (எபேசியர் 5:19-21).

13. ஜெபிப்பது

பரிசுத்த ஆவியின் நிறைவுப் பகுதியில் நிலையாயிருத்தன் முக்கியத்துவத்தைப் பார்த்தோம். அது மட்டுமல்ல, “ஆவியிலே ஜெபிப்ப”து முக்கியமானது என்று நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம். இது பரிசுத்த ஆவியாகிய தேவனுடன் உள்ள நமது உறவைக் குறிக்கிறது (எபேசியர். 6:18; யூதா 1:20-21). நமது ஜெப வாழ்க்கையில், நாம் ஜெபிக்கும்போது

தேவனோடு ஐக்கியப்பட்டிருக்க வேண்டும் என்று தெளிவாக இருக்கிறது. ஆகவே நமது பாவங்களை அறிக்கையிட நாம் உறுதியாயிருக்க வேண்டும் (1 யோவான் 1:9).

நமக்கு ஜெபம்பண்ணத் தெரியாத சமயங்கள் இருக்கும், எந்த வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டும் என்று நமக்குத் தெரியாது அல்லது என்ன செய்ய பிரயாசப்படுகிறோம் என்று நமக்குத் திட்டமாய் தெரியாது. இது நேரிடும்போது பரிசுத்த ஆவியானவர் நமது ஜெபங்களைப் பிதாவிற்கு முன்பாகக் கொண்டுவர நமக்காக வேண்டுதல் செய்கிறார் என்பதைக் குறித்து நாம் ஆறுதல் அடையலாம் (ரோமர் 8:26–27).

14. **உறுதிப்படுத்துவது**

பரிசுத்த ஆவியானவருடைய செயல் ஒரு பங்கு, இரட்சிப்பைக் குறித்தும் நித்திய ஆசீர்வாதங்களைக் குறித்தும் விசுவாசியை உறுதிப்படுத்துவதாகும். அவர் ***"நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று... நாம் கிறிஸ்துவுக்கு உடன் சுதந்தரருமாமே"*** என்று சாட்சி கொடுக்கிறார் (ரோமர் 8:16–17).

பரிசுத்த ஆவியானவர் நமது நித்திய சுதந்திரத்துக்கு ''அச்சாரமாயிருக்கிறார்'' (எபேசியர் 1:13–14).

15. **பரிந்து பேசுதல்**

நாம் நமது ஆவல்களைத் (வேண்டுதல்களைத்) தெளிவாகக் கூற முடியாவிட்டாலும், அதை பிதா அறியும்படிக்கு, பரிசுத்த ஆவியானவர் உறுதி செய்வார் (ரோமர் 8:26–27).

16. **வரங்களைக் கொடுப்பது**

இயேசு கிறிஸ்து, பிதாவினிடத்திற்குப் பரமேறியபோது, மனித இனத்திற்கு வரங்களைக் கொடுத்தார் (எபேசியர் 4:11). இந்த ஆவிக்குரிய வரங்கள் விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியினாலே பகிர்ந்துக் கொடுக்கப்படுகின்றன (1 கொரிந்தியர் 12:11, 18; எபிரேயர் 2:4).

ஒரு ஆவிக்குரிய வரம், கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படி, கிறிஸ்துவின் சரீரத்திற்குப் பிரயோஜனமாயிருக்கும்படி வாழ்வின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் தேவன் கொடுத்த திறமையாக இருக்கிறது (1 கொரிந்தியர் 12). ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு வரம் உண்டு. மற்ற விசுவாசிகளுக்குச் சேவை செய்வதற்கு அதைப் பயன்படுத்த வேண்டும் (1 பேதுரு 4:10).

ஒரு ஆவிக்குரிய வரம் இயற்கையான அல்லது முயன்று பெற்ற ஒரு வரமாக இல்லாமல் இருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய வரத்தின் மூலம் நமது இயற்கையான தாலந்துகளையும், திறமைகளையும் அடிக்கடி பயன்படுத்துவார். எடுத்துக் காட்டாக இசை சார்ந்த தாலந்துகளை ஒருவரை ஊக்குவிக்கப் பயன்படுத்தலாம் (ரோமர் 12:8).

ஆவிக்குரிய வரங்கள் முழுமையாய்ச் செயல்படுவதற்கு நீங்களே வளர்ந்துப் கொண்டே திறமைகள் உங்களுக்கு தேவையாயிருக்கலாம். எடுத்துக்காட்டாக: உங்களுக்குப் போதிக்கும் வரம் இருந்தால் தேவனுடைய வார்த்தையைப் படிக்க வேண்டியதாக இருக்கும் (ரோமர் 12:7; 1 கொரிப்தியர் 12:28; எபேசியர் 4:11). அதைப் போதிக்க நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமாய் இருக்கும் (2 தீமோத்தேயு 2:15). வரப்போகும் பகுதியில் ஆவிக்குரிய வரங்களைப் பற்றி விரிவாகப் படிப்போம்.

17. **போதிப்பது**

பரிசுத்த ஆவியானவருக்கு ஒரு முக்கியமான செயல் என்னவென்றால் தேவனுடைய காரியங்களைப் பற்றி நமக்குப் போதிப்பது (யோவான் 14:26). ஒரு குறிப்பிட்ட தேவைகளை முன்னிட்டு அவர் நமக்கு வேகமாய்ப் போதிக்கலாம் (லூக்கா 12:11–12) அல்லது கற்றுக்கொள்ளும் முறையில் நம்மை நடத்தலாம் (யோவான் 16:13–15).

பரிசுத்த ஆவியானவரின் போதிக்கிற பணியினாலேதான் நாம் ஆவிக்குரிய காரியங்களைக் கற்றுக்கொள்ளுகிறோம் (1 கொரிந்தியர் 2:10–16).

18. **வழிநடத்துதல்**

கிறிஸ்தவ வாழ்க்கைக்கு பரிசுத்த ஆவியானவரே நமது வழிகாட்டியாக இருக்கிறார். நம்முடைய வழிகாட்டியாக, அவருடைய முதலாவது நோக்கம் நாம் அவரைப் போல் மாறும்படி (யோவான் 16:13) இயேசு கிறிஸ்துவைப் போல் இருக்கக் கற்றுக்கொடுப்பதாகும் (1 கொரிந்தியர் 11:1; எபேசியர் 5:1).

தமது வார்த்தையின் மூலம் தேவனுடைய சித்தம் எங்கெங்கே தெளிவாய் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறதோ, (அதாவது நீதி முறைக்குக் கட்டுப்பட்ட காரியங்களில்) (1 தீமோத்தேயு 1:8–11; ரோமர் 8:12–14) அங்கே பரிசுத்த ஆவியானவரின் நடத்துதல் தெளிவாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தை எழுத ஏவினதினாலே (2 தீமோத்தேயு 3:16–17; 2 பேதுரு 1:21) எழுதப்பட்டதிருந்து நாம் அவருடைய சித்தத்தை அறிய முடியும். அதனாலே அது நமது வழிகாட்டியாக ஆகிறது.

அவருடைய வார்த்தையிலே தேவனுடைய குறிப்பிட்ட சித்தம் வெளிப்படாத சூழ்நிலையில், இரண்டு நல்ல காரியங்களில் எதைத் தெரிந்தெடுப்பது என்று தெரியாவிட்டால் நாம் நம்மையே அவருக்குப் பரிசுத்தமும் பாவபயாகவும் ஒப்புக்கொடுக்க வேண்டும் (ரோமர் 12:1). அப்பொழுது அந்தக் காரியத்திற்காக நாம் அவருடைய சித்தத்தைப் புரிந்துகொள்ள முடியும் (ரோமர் 12:2).

பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதன் மற்ற உதாரணங்களுக்காக, அப்போஸ்தலர் 8:29; 10:19–20; 13:2–4; 16:6–7; 20:20–23 ஆகிய வசனங்களைப் பார்க்கவும்.

19. **கனி கொடுத்தல்**
நமக்குள் தங்கி வாழ்கிற பரிசுத்த ஆவியானவர் நம் மூலமாய் கனி கொடுக்க விரும்புகிறார். இந்தக் கனி அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம் (கலாத்தியர் 5:22-23). கனி கொடுக்கும்படிக்கு மாம்சத்தையும் அதின் கிரியைகளையும் வெல்லும்படி (கலாத்தியர் 5:17-21), பரிசுத்த ஆவியானவர் நமது கிறிஸ்தவ நடையில் நம்மை பெலப்படுத்த அனுமதிக்க வேண்டும் (கலாத்தியர் 5:16, 25).

20. **மகிழ்ச்சியும் சந்தோஷம் கொண்டாடுவதும்**
பரிசுத்த ஆவியானவர் நமக்குள் மகிழ்ச்சியைத் தூண்டி எழுப்புகிறார். அப்பொழுது நாம் சந்தோஷத்தைக் கொண்டாடுகிறோம். கடினமான துன்ப நேரத்திலும்கூட மகிழ்ச்சி இருக்கலாம் (1 தெசலோனிக்கேயர் 1:6). இது தனிப்பட்ட ஆசீர்வாதம் மட்டுமல்ல, மற்றவர்களுக்குமானது (லூக்கா 10:21).

21. **அன்பு ஊற்றப்படுதல்**
இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பவரில் பரிசுத்த ஆவியானவர் தங்கி வாழும்போது, அவர் உண்மையான தெய்வீக அன்பையும், நல்ல நம்பிக்கையையும் கொண்டு வருகிறார் (ரோமர் 5:5).

22. **நீதியும் சமாதானமும் மகிழ்ச்சியும் வெளிப்படுதல்**
விசுவாசியின் வாழ்க்கையில், தேவனுடைய இராஜ்யத்தின் முக்கியமான ஆசீர்வாதங்கள் மாம்சத்துக்குரியதல்ல, ஆவிக்குரியதாயிருக்கின்றன என்று பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். (ரோமர் 14:7)

23. **வல்லமையளிப்பது**
விசுவாசி, மிகுந்த நம்பிக்கை பெறும்படிக்கு, பரிசுத்த ஆவியானவர் அவருக்கு வல்லமையளிக்கிறார் (ரோமர் 15:13). அப்போதுதான் அவர் நித்திய, பரலோகத்துக்குரிய சுவிசேஷத்தைப் பிரசங்கம் செய்ய முடியும் (1 பேதுரு 1:2).

24. **பரிசுத்தமாக்குதல்**
நாம் தேவனுக்கேற்ற பகளைச் செலுத்தும்படிக்கும் மற்றவர்களுக்கு நன்மை செய்யும்படியும் அவருக்காகப் பிரித்தெடுக்கப்பட்டிருக்கிறோம் (பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்) (ரோமர் 15:16; எபிரேயர் 13:15-16 ஒப்பிடுக). இந்த பரிசுத்தமாக்குதல் அறநெறிகளை உட்கொண்டுள்ளது. ஏனெனில், துன்மார்க்கத்தில் ஈடுபடுபவர்கள் தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் வேகம் குறைந்தவர்களாகவும், தடைப்பட்டவர்களாவுமிருக்கிறார்கள். (1 தெசலோனிக்கேயர் 4:1-8). அவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல (1 பேதுரு 1:16), பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பரிசுத்தமாக்குவது நமது பரிசுத்தமாக்குதல் ஒரு பகுதியாகும்.

25. **ஐக்கியம் ஏற்படுத்துதல்**
இயேசு கிறிஸ்துவின் கிருபை மற்றும் பிதாவின் அன்பின் அடிப்படையில் விசுவாசிகளின் மத்தியில் ஐக்கியம் ஏற்படுத்துபவர் பரிசுத்த ஆவியானவரே (2 கொரிந்தியர் 13:14).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 5, பகுதி 5B

2. **கீழுள்ள வசனங்களை வாசித்து பரிசுத்த ஆவியானவரின் பங்கை விவரி:**
A. யோபு 33: 4
B. யோவான் 16:13
C. 1 கொரிந்தியர் 2:12-16
D. 2 பேதுரு 1:21
E. லூக்கா 4:18
F. லூக்கா 1:27 மற்றும் 35
G. யோவான் 16:8
H. தீத்து 3:5
I. மத்தேயு 3:11
J. எபேசியர் 1:13
K. யோவான் 14:16-17
L. எபேசியர் 5:18
M. எபேசியர் 6:18
N. ரோமர் 8:16-17
O. ரோமர் 8:26
P. 1 கொரிந்தியர் 12:11 மற்றும் 18
Q. யோவான் 14:26
R. கலாத்தியர் 5:22-23
S. 1 தெசலோனிக்கேயர் 1:6
T. ரோமர் 5:5
U. ரோமர் 14:17
V. ரோமர் 15:13
W. ரோமர் 15:16
X. 2 கொரிந்தியர் 13:14

C. பரிசுத்த ஆவியானவர் இவ்விதமாக விளக்கப்பட்டிருக்கிறார்
- **“வேறொரு தேற்றரவாளன்”** இயேசு கிறிஸ்துவைப்போல அவர் ஆற்றித் தேற்றும் பணியைச் செய்கிறார். யோவான் 14:16
- **“சர்வ வல்லவருடைய சுவாசம்”** ஜீவனைக் கொடுக்கிற வல்லமையைக் குறிக்கிறது. யோபு 32:8; 33:4
- **“வரம்”** அவருடைய பிரசன்னம் தேவனுடைய வெகுமதி என்பதைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் 2:38; 8:19-20; 10:45
- **“சகாயர்”** - சத்தியத்தைப் போதிப்பதில் அவருடைய உற்சாகப்படுத்துதலைக் குறிக்கிறது. யோவான் 14:26
- **“அச்சாரம்”** நமது இரட்சிப்பைக் குறித்து நமக்குக் கொடுக்கப்பட்ட அடையாளத்தைக் குறிக்கிறது. 2 கொரிந்தியர் 1:22; 5:5, எபேசியர் 1:14
- **ஹுவாக்குறுதி செய்யப்பட்டவர்”** தேவனுடைய திட்டத்தில் அவருடைய பங்கைக் குறிக்கிறது. அப்போஸ்தலர் 2:33; எபேசியர் 1:13

- **“புத்திரசுவிகாரத்தின் ஆவி”** தேவனுடைய குடும்பத்திற்கு நம்மைக் கொண்டு வருகிற அவருடைய பங்கைக் குறிக்கிறது. ரோமர் 8:15
- **“நியாயத்தின் ஆவி மற்றும் சுட்டெரிப்பின் ஆவி”** தேவனாக அவருடைய நீதியையும், நியாயத்தையும் குறிக்கிறது. ஏசாயா 4:4
- **“இயேசுகிறிஸ்துவினுடைய ஆவி”** இயேசு கிறிஸ்துவின் மனிதத்துவத்தில் அவருடைய பணியைக் குறிக்கிறது. ரோமர் 8:9; பி. 1:19; 1 பேதுரு 1:11
- **“ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவி”** தேவையானவர்களுக்கு அவர் கொடுக்கிற இரக்கத்தையும் ஆதரவையும் குறிக்கிறது. ஏசாயா 11:2
- **“விசுவாசத்தின் ஆவி”** விசுவாசிக்கப்படுவதற்கு அவருக்குள்ள தகுதியைக் குறிக்கிறது. 2 கொரிந்தியர் 4:13
- **“மகிமையுள்ள ஆவி”** அவருடைய சொந்த மேன்மையைக் குறிக்கிறது. 1 பேதுரு 4:14
- **“தேவ ஆவியானவர்”** அவருடைய சொந்த தெய்வீகத் தன்மையைக் குறிக்கிறது. ஆதியாகமம் 1:2; யாத்திராகமம் 31:3; 35:31; எண்ணாகமம் 24:2; 1 சாமுவேல் 10:10; 11:6; 19:20, 23; 2 நாளாகமம் 15:1; 24:20; யோபு 33:4; சங்கீதம் 106:33; எசேக்கியேல் 11:24; மத்தேயு 3:16; 12:28; ரோமர் 8:9, 14; 1 கொரிந்தியர் 2:11, 14; 7:40; 12:3; எபேசியர் 4:30; பிப்பியர் 3:3; 1 யோவான் 4:2.
- **“தெய்வீக ஆவியானவர்”** ஆண்டவராக அவருடைய தன்மையைக் குறிக்கிறது. ஆதியாகமம் 41:38
- **“கிருபை மற்றும் விண்ணப்பத்தின் ஆவி”** அவருடைய கிருபையின் மனப்பான்மையையும் ஜெபங்களைக் கேட்கும் அவரு டைய விருப்பத்தையும் குறிக்கிறது. சகரியா 12:10
- **“தமது குமாரனுடைய ஆவி”** இது திரியேகத்தைக் குறிக்கிறது. கலாத்தியர் 4:6
- **“பரிசுத்தமுள்ள ஆவி”** அவர் பரிசுத்தர் மட்டுமல்ல, பரிசுத்தத்தைப் பற்றியச் சத்தியத்தை வெளிப்படுத்துபவர். ரோமர் 1:4
- **“நியாயத்தின் ஆவி”** அவருடைய நியாயத்தீர்ப்பின் வெளிப்பாட்டைக் குறிக்கிறது. ஏசாயா 4:4
- **“நீதியின் ஆவி”** அவரது நேர்மையைக் குறிக்கிறது. ஏசாயா 28:6
- **“அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் கொடுக்கும் ஆவி”** ஆண்டவரை மதித்து நடத்துகிற அவர் கொடுக்கிற அறி வைக் குறிக்கிறது. ஏசாயா 11:2
- **“ஜீவனுடைய ஆவி”** அவர் கொடுக்கிற ஆவிக்குரிய ஜீவனுடைய பங்கை குறிக்கிறது. ரோமர் 8:2
- **“நமது தேவனுடைய ஆவி”** வெளிப்படுத்தும் தேவனாக அவர் திருச்சபையின் வாழ்வில் இருப்பதைக் குறிக்கிறது. 1 கொரிந்தியர் 6:11
- **“ஜீவனுள்ள தேவனுடைய ஆவி”** இது தேவனுக்கும் சிலைகளுக்கும் வேறுபடும் பண்பைக் குறிக்கிறது. 2 கொரிந்தியர் 3:3
- **“கர்த்தருடைய ஆவி”** எஜமானனாகிய தேவனுக்கு அவர் கொடுக்கிற உதவியைக் குறிக்கிறது. லூக்கா 4:18; அப்போஸ்தலர் 5:9; 8:39; 2 கொரிந்தியர் 3:17
- **“கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர்”** கர்த்தராகிய தேவனுக்கு அவர் செய்யும் உதவியை / பணியைக் குறிக்கிற து. ஏசாயா 61:1
- **“சத்திய ஆவி”** அவரிடம் பொய்கள் இல்லை. யோவான் 14:17; 15:26; 16:13; 1 யோவான் 4:6
- **ஞுனுஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவி”** தேவனுடைய வார்த்தையை வாழ்க்கைக்கு பயன்படுத்தும்போது அவர் சரியாகப் புரிந்துகொள்ளும் மற்றும் பண்படுத்தும் திறமையைக் குறிக்கிறது. ஏசாயா 11:2
- **“ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவி”** இன்னும் கிறிஸ்துவை அறியும்படிக்கு தேவனுடைய வார்த்தையைச் சரியாகப் பயன்படுத்த ஒருவனை வழிநடத்துவதைக் குறிக்கிறது. எபேசியர் 1:17
- **“சர்வ வல்லவருடைய சத்தம்”** தேவனுடைய வார்த்தையை அறிவிக்கிற பணியைக் குறிக்கிறது. எசேக்கியேல் 1:24
- **“கர்த்தருடைய சத்தம்”** உயர்ந்த அதிகாரத்துக்காக அவருடைய அறிவிப்பைக் குறிக்கிறது. ஏசாயா 6:8

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 5, பகுதி 5C

3. **ஆவியானவருடைய ஆள்த்தத்துவத்தைப் பற்றி பகுதி “C” யில் சொல்லப்பட்டுள்ள வெவ்வேறு விளக்கங்களை கீழேயுள்ள ஆவியானவருடைய செயல்களுடைய விளக்கங்களுடன் இணையுங்கள். இந்த விளக்கங்கள் ஒன்றுக்கும் மேற்பட்டவைகளுடன் பொருத்தலாம். இப்புத்தகத்திலுள்ள ஆவியானவருடைய செயல்களின் விளக்கங்களை அ அல்லது ஆ என்று குறிக்கலாம்.**
   a. அவரின் பங்கு
   b. அவரின் ஆள்தத்துவம்

அத்தியாயம் 6

தேவனுடைய படைப் பின் கோட்பாடுகள்

பகுதி 1
படைப்பு (Cosmology)

வேதத்தின் முதல் வசனம் ***"ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்"*** (ஆதியாகமம் 1:1) என்று நமக்குச் சொல்லு கிறது. "சிருஷ்டி" என்று மொழிபெயர்க்கப்பட்ட எபிரெய பதம் BARA (பாரா) என்பது. அது "ஒரு புது பொருளைத் தொடக்கம் செய்ய"[102] "ஒன்றுமில்லாததிருந்து ஒரு பொருளைப் படைப்ப"[103] என்று பொருள்படும். தேவன் மட்டுமே காரியங்களை இவ்வாறு செய்யக்கூடும்.

தேவன் வானத்தையும் பூமியையும் படைத்தார் என்ற உண்மை மற்ற வேத பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது (ஏசாயா 40:26-28; 42:5; 45:12, 18). நாம் இந்த உண்மையை ஏற்றுக்கொள்வது மிக முக்கியமானது. ஏனெனில் அது மனிதனுடைய பெரிய கேள்விகளில் ஒன்றுக் குப் பதில் கொடுக்கிறது. "மனித இனம் எப்படி ஆரம்பித்தது?" இதற்குப் பதில் தேவன் மனிதனைப் படைத்தார் என்பதாகும்.

எபிரெய புத்தகத்தின் ஆக்கியோன் ***"விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்ட தென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்"*** (எபிரெயர் 11:3) என்கிறார். தேவன் வார்த்தையினால் ஆணையிட்டதும் வானங்கள் உண்டாயின. படைப்பு தேவனுடைய அதிகாரத்தின ாலும் வல்லமையினாலும் வந்தது. படிப்படியாக பரிணாமத்தினால் வரவில்லை (சங்கீதம் 33:6; 148:4, 5).

தேவன் எல்லா ஜீவனையும் (ஆதியாகமம் 1:21) மனிதனுடைய ஆத்துமாக்களையும் படைத்தார் என்று வேதம் கூறுகிறது (ஆதியாகமம் 1:27; 5:2; 6:7; ஏசாயா 45:12). பின்னர் அவர் தமது படைப்பின் கிரியையிருந்து "ஓய்வு எடுத்தார்" (ஆதியாகமம் 2:3-4). ஆயினும் எதிர்கா லத்தில் ஒரு நாள் அவர் புது வானங்களையும் பூமியையும் படைப்பார் (ஏசாயா 65:17; 2 பேதுரு 3:10-13; வெளிப்படுத்தல் 21:1).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 6, பகுதி 1

1. **வாசிக்கவும் ஆதியாகமம் 1:1. வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தது யார்?**
2. **வாசிக்கவும் எபிரேயர் 11:3. தேவன் அவைகளைச் சிருஷ்டித்தது எப்படி?**
3. **வாசிக்கவும் ஆதியாகமம் 1:2-31. வேறு எவற்றை தேவன் சிருஷ்டித்தார்?**
4. **வாசிக்கவும் 2 பேதுரு 3:10-13 மற்றும் வெளிப்படுத்தல் 21:1. எதிர்காலத்தில் தேவன் எதை சிருஷ்டிப்பார்?**

பகுதி 2
தேவதூதர்கள் (Angelology)

A. அவர்களுடைய ஆள்தத்துவம்

மனித இனத்தைத் தவிர தூதர்கள் என்ற அறிவுள்ள உயிருள்ளவர்கள் படைக்கப்பட்டனர் என்று தேவனுடைய வார்த்தை நமக்குச் சொல்லுகிறது. வேதாகமம் முழுவதும், ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரை அவர்களைப் பற்றி சொல்லப்பட்டுள்ளது. "தூதன்" என்ற வார்த்தை எபிரேய (மலாகி'யாக்) மற்றும் கிரேக்க (ஏஞ்சலோஸ்) மொழிகளின் அடிப்படையில் செய்தி அறிவிப்பவர் என்று பொருள்படும். இவர்களால் யோசிக்கவும், அதை அறிவிக்கவும் முடியும் (மத்தேயு 8:29; 2 கொரிந்தியர் 11:3; 1 பேதுரு 1:12), அவர்கள் உணர்ச்சியுடையவர்கள் (லூக்கா 2:13; யாக்கோபு 2:19; வெளிப்படுத்தல் 12:17). அவர்களால் எதையும் தெரிந்துகொள்ள முடியும் (லூக்கா 8:28-31; 2 தீமோத்தேயு 2:26; யூதா 6), அவர்கள் தனித்துவம் உடையவர்கள்.

தூதர்கள் **"ஆவிகளாய்"** இருக்கிறார்கள் (எபிரெயர் 1:14). ஆண்டவரால் அனுமதிக்கப்படும்போது அவர்கள் மனித உருவத்தை எடுக்கலாம் (லூக்கா 2:9; 24:4). மனித இனத்தைப் பார்க்கிலும் அவர்கள் உயர்ந்த நிலையில் உள்ளவர்கள். அவர்கள் இயல்நிலை கடந்தவர்கள் (supernatural beings) (எபிரெயர் 2:7). அவர்கள் மானிடர்களைவிட மிகவும் பெலனுள்ளவர்களாகவும், அறிவுள்ளவர்க ளாகவும் இருக்கிறார்கள். (வெளிப்படுத்தல் 10:1-3). இருப்பினும் அவர்கள் எல்லாம் தெரிந்தவர்கள் அல்லர் (1 பேதுரு 1:12). தேவனை ப் போல அவர்கள் சர்வ வல்லவர்கள் அல்ல (மத்தேயு 25:41) அவர்கள் எங்கும் நிறைந்தவர்களும் அல்லர்.

வேதாகமத்தில் தூதர்களைக் குறித்து மூன்று தனிப்பட்ட பெயர்கள் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள் மிகாவேல் (தானியேல் 10:13, 21; 12:1; யூதா 1:9; வெளிப்படுத்தின விசேஷம் 12:7), காபிரியேல் (தானியேல் 8:16; 9:21; லூக்கா 1:19, 26) மற்றும் சாத்தான் (வெளிப்படுத்தல் 12:9).

B. அவர்களைப் படைத்தவர்

பூமியிலே குடியிருக்க மானிடரைப் படைப்பதற்கு முன் (யோபு 38:7) தேவனால் தேவதூதர்கள் படைக்கப்பட்டார்கள் (சங்கீதம் 148:2-5). மனிதர் பிள்ளைகளைப் பெற்றெடுப்பது போல தேவதூதர்கள் பிள்ளைகளைப் பெறாததினாலும் (லூக்கா 20:35). அவர்களுக்கு மரணம் இல்லாததாலும் (லூக்கா 20:36), அவர்களுடைய தொகை எப்பொழுதும் ஒரே மாதிரி இருந்தது. எத்தனை தேவதூதர்கள் இருக்கிறார்கள் என்று நமக்குத் தெரியாவிட்டாலும் அவர்கள் எண்ணிக்கையற்றவர்களாய் இருக் கிறார்கள் என்று நமக்குத் தெரியும் (எபிரெயர் 12:22; வெளிப்படுத்தல் 5:11).

தேவன் பாவம் இல்லாதவராய் (2 கொரிந்தியர் 5: 21) பூரண சற்குணராய் (மத்தேயு 5:48) இருக்கிறார் என்று அறிந்து ஏற்றுக் கொள்கிறோம். அவர் பூரணராய் இருப்பதினால் அவர் பூரணமானவர்களையே பாவமற்றதாய் படைப்பார் என்ற முடி வுக்கு நாம் வரலாம். ***"ஏனெனில், பாவம் அவரிடம் வாசமாயிருப்பதில்லை"*** (சங்கீதம் 5:4). இதை சாத்தானுடைய சூழ்நி லையில் பார்ப்போம். அவன் பாவமில்லாதவனாய் படைக்கப்பட்டாலும் தேவனுக்கு விரோதமாய் எதிர்த்து நிற்பதைத் தெரிந்தெடுத்தான் (எசேக்கியேல் 28:12-15; ஏசாயா 14:12-14).

தேவதூதர்கள் மரித்துவிட்ட மனிதர்களே என்று சிலர் நம்புகிறார்கள். தேவதூதர்கள் மனிதகுலம் தோன்றுமுன்னே இருந்ததினால் அவர்கள் மரித்த மனிதர்கள் அல்ல, அவர்கள் ஒரு தனித்தன்மை வாய்ந்த படைப்புகள் என்பதை நாம் நம்பலாம்..

C. அவர்களுடைய அமைப்பு

தேவதூதர்கள் போருக்கு அமைக்கப்பட்டிருப்பதினாலும் (வெளிப்படுத்தல் 12:7), வானோர் கூட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டி ருப்பதினாலும் (சங்கீதம் 89:5, 7) அவர்களுக்கு வரிசை அமைப்பு (rank) இருக்கிறது என்று நாம் அறியலாம்.

வரிசையில் உயர்ந்த தேவதூதன் பிரதான தூதன். அது ஆளுகின்ற தூதன் என்று பொருள்படும், மிகாவேல் மட்டுமே (யூதா 9) பிர தான அதிபதிகளில் (தானியேல் 10:13) "பிரதான தூதனாகக்" குறிப்பிடப்பட்டிருக்கிறான். சாத்தானுக்கு விரோதமாக கர்த்தருடைய தூதர்களை நடத்தினான் (வெளிப்படுத்தல் 12:7). ஆகவே ஒரே ஒரு பிரதான தூதன் இருக்கிறான் என்று தெரிகிறது. அவனுக்கு ஒரு குறிப்பிட்ட விசேஷ சத்தம் உண்டு (1 தெசலோனிக்கேயர் 4:16).

தூதர்கள் "ஆளுநர்களாக" அமைக்கப்படலாம் என்று நாம் பார்க்கிறோம் (ரோமர் 8:38; எபேசியர் 1:21; 3:10; 6:12; கொலோசெயர் 1:16; 2:10, 15) "அதிகாரிகளாக" (எபேசியர் 1:21; 2:2; 3:10; 6:12; கொலோசெயர் 1:16; 2:10, 15; 1 பேதுரு 3:22) "வல்லமைகள்" (2 பேதுரு 2:11) அல்லது "சிங்காசனங்கள்" (எபேசியர் 1:21; கொலோசெயர் 1:16; 2 பேதுரு 2:10; யூதா 8). இவ்வசனங்கள் தூதருடைய மண்டலத்தில் அவர்களுடைய நிலையை அல்லது அவர்களுடைய பணியை குறிக்கின்றன.

தூதர்களில் இன்னும் இரண்டு வகுப்புகள் உண்டு, "சேராபீன்கள்" மற்றும் "கேருபின்கள்", சேராபீன்கள் வேதத்தில் ஒரு அதிகா ரத்தில்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள் (ஏசாயா 6:2, 6). அவர்களுக்கு ஆறு செட்டைகளும் ஒரு மனித உடலும் உண்டு என்று விளக்கப்பட்டிருக்கின்றன. ஒரு நெருப்புத் தழலால் சுத்திகரிக்கும் தூதர்களைப்போல் தோன்றுகிறார்கள். அவர்கள் பெயர் "தீப்பற் றுவ"து என்று பொருள்படும்.

கேருபீன் மற்றொரு விதமான தூதன், சாத்தான் அவர்களில் ஒருவனாக இருந்ததினால் அவர்களுக்கு ஓர் உயர்ந்த பதவி உண்டு என்று தோன்றுகிறது (எசேக்கியேல் 28:14, 16), ஆதாமும் ஏவாளும் வீழ்ச்சி அடைந்து ஏதேன் தோட்டத்திருந்து நீக்கப்பட்ட பிறகு, தோட்டத்தில் இருந்த ஜீவவிருட்சத்துக்குப் போகாதபடி கேருபீன்கள் காவலர்களாக வைக்கப்பட்டிருந்தார்கள் (ஆதியாகமம் 3:24).

தேவாலயத்தில் கேருபீன்களுக்கு உடன்படிக்கையின் பெட்டியிலும் (யாத்திராகமம் 25:18-22), மூடுதிரைகள் (யாத்திராகமம் 26:1) திரைச்சீலை, (யாத்திராகமம் 26:31) ஆகிய பொருட்களில் குறிப்பிட்ட இடம் கொடுக்கப்பட்டது, சாட்சிப் பெட்டியின் மேலுள்ள இரண்டு கேருபீன்களின் நடுவில் மோசே கர்த்தருடைய சத்தத்தைக் கேட்டான் (எண்ணாகமம் 7:89).

சாலொமோனின் ஆலயத்திலும் கூட கேருபீன்கள் முக்கியமான இடத்தைப் பெற்றார்கள். அங்கே இரண்டு கேருபீன்கள் இருந்தன. அவைகளை ஒலிவ மரங்களால் செய்து பொன்னால் மூடினார். அவைகள் சுமார் 15 அடி உயரமும் (5.5 மீட்டர்) செட்டைகளின் அளவு 15 அடி அகலமும் (5.5 மீட்டர்) இருந்தன (1 இராஜாக்கள் 6:23-28). உடன்படிக்கையின் பெட்டி மேல் அவைகள் செட்டைகளை விரித்தன (1 இராஜாக்கள் 8:6-7). பரிசுத்த ஸ்தலத்துக்குள் போகும் சுவர்களிலும் கதவுகளிலும் வெட்டியமைக்கப்பட்டன (1 இராஜாக்கள் 6:29-35). ஆலயத்தின் பொருட்களிலும்கூட செய்யப்பட்டிருந்தன (1 இராஜாக்கள் 7:29, 36).

தீர்க்கதரிசனாகிய எசேக்கியேலுக்குக் கொடுக்கப்பட்ட தரிசனத்தில், கேருபீன்களை தேவனுடைய சிங்காசன அறைக்குக் கொண்டு போனார்கள் (எசேக்கியேல் 10:1-22). வேதாகமத்தில் அவர்களைக் குறிப்பிட்ட இடங்களில் பார்க்கும்போது, வரலாற்றில் கேருபீன்களுடைய பணியை எளிதாய்ப் புரிந்துகொள்ள முடியாவிட்டாலும் அவர்களுக்கு முக்கியமான ஒரு பணி இருந்தது. அவர்களுடைய பணி இன்னும் முடியவில்லை. இனி வரப்போகும் ஆயிர வருட அரசாட்சியில் அவர்கள் முக்கிய பங்கு வகிப்பார்கள் (எசேக்கியேல் 41:18, 20, 25) என்று தெரிகிறது.

கேருபீன்கள் தேவனுடைய திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட முக்கியமான பங்குகொள்கிறார்கள் என்பது தெளிவாய் இருக்கிறது. பிறகு நம்முடைய ஆய்வில் அவர்களுடைய பங்கைக் குறித்து விரிவாகப் பார்ப்போம்.

D. அவர்களுடைய ஊழியம்

மனித வரலாற்றில் தூதர்கள் முக்கியமான நிகழ்வுகளில் பங்கு கொண்டார்கள். தேவன் பூமியைக் குடியிருக்கத்தக்கதாக உண்டாக்கியபோது அவர்கள் துதித்து மகிழ்ந்தார்கள் (யோபு 38:6-7). அவர்கள் மோசே நியாயப்பிரமாணம் கொடுத்த சமயத்திருந்தார்கள் (கலாத்தியர் 3:19; எபிரெயர் 2:2), தேவனுடைய மற்ற சத்தியத்தின் வெளிப்பாடுகளோடுகூட சம்பந்தப்பட்டிருந்தனர் (தானியேல் 7:15-27; 8:13-26; 9:20-27; வெளிப்படுத்தல் 1:1; 2:6, 8). அவர்கள் இஸ்ரவேல் நாடு மீது மட்டும் அல்ல (தானியேல் 12:1), மற்ற நாடுகளைக் குறித்தும் ஈடுபாடு கொண்டிருந்தார்கள் (தானியேல் 4:17; 10:21; 11:1; வெளிப்படுத்தல் 8-9, 16).

தூதர்கள் இயேசுவின் பிறப்பை முன்னறிவித்தார்கள் (மத்தேயு 1:20), அவருடைய பெற்றோர்களை எகிப்துக்குப் போக எச்சரித்தார்கள் (மத்தேயு 2:13-15). எகிப்திருந்து எப்பொழுது விட்டு திரும்பிப் போகலாம் என்று சொன்னார்கள் (மத்தேயு 2:19-21). அவர் சாத்தானாலே சோதிக்கப்பட்ட போது அவர்கள் நேரடியாக அவருக்குப் பணிவிடை செய்தார்கள். (மத்தேயு 4:11). கெத்செமனே தோட்டத்தில் இருக்கும்போது அவரைப் பலப்படுத்தினார்கள் (லூக்கா 22:43). அவருடைய உயிர்த்தெழுதலும் (மத்தேயு 28:1-2), அவர் பிதாவிடம் போகும் நேரத்திலும்கூட இருந்தார்கள் (அப்போஸ்தலர் 1:10-11).

சபையின் ஆதிகாலத்தில் தூதர்கள் சுவிசேஷத்தைக் கேட்க ஆயத்தமாயிருந்தவர்களுக்கு சுவிசேஷகர்களை வழிநடத்தினார்கள் (அப்போஸ்தலர் 8:26; 10:3). தேவையானவர்களுக்குத் தரிசனங்களைக் கொடுத்தார்கள் (அப்போஸ்தலர் 10:3, 7). ஜெபங்களுக்குப் பதில்களைக் கொண்டு வந்தார்கள் (அப்போஸ்தலர் 12:5-10). ஆபத்திருந்து மக்களைக் காப்பாற்றினார்கள் (அப்போஸ்தலர் 12:11), இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நிகழ்ச்சிகளில் பணியாற்றுவார்கள் (மத்தேயு 25:31; 2 தெசலோனிக்கேயர் 1:7). நியாயத்தீர்ப்புகளில் பங்கு பெறுவார்கள் (வெளிப்படுத்தல் 7:1; 8:2).

தூதர்கள் தேவனைத் துதிக்கிறார்கள் (சங்கீதம் 148:1-2; ஏசாயா 6:3); அவரை ஆராதிக்கிறார்கள் (எபிரெயர் 1:6; வெளிப்படுத்தல் 5:8-13), அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிகிறார்கள் (சங்கீதம் 103:20; வெளிப்படுத்தல் 22:9).

அநீதியான மக்களின்மீது நியாயத்தீர்ப்பு வழங்குவதில் பங்கு பெறுகிறார்கள். வரப்போகிற நியாயத்தீர்ப்புகளை அறிவிக்கிறார்கள். (ஆதியாகமம் 19:13; வெளிப்படுத்தல் 14:6-7: 19:17-18). தேவனுடைய கட்டளைப்படி குறிப்பிட்ட தீர்ப்புகளைக் கூறினர் (அப்போஸ்தலர் 12:23; வெளிப்படுத்தல் 16:1). கடைசியாக நீதிமான்களையும் அநீதிமான்களையும் பிரிக்கிறதற்கு அவர்கள் உதவி செய்வார்கள் (மத்தேயு 13:39-40).

தேவதூதர்கள் இப்போதும் விசுவாசிகளுக்கு உதவி செய்கிறார்கள் (எபிரெயர் 1;14). அது மட்டுமல்ல, ***"அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்"*** (எபிரெயர் 13:2) என்றும் சொல்லப்பட்டுள்ளது. விசுவாசிகள் என்னென்ன செய்கிறார்கள் என்பதைக் கவனிக்கிறார்கள் (1 கொரிந்தியர் 4:9), அவர்கள் நம்மிடமிருந்து கற்றுக்கொள்கிறார்கள் (எபேசியர் 3:8-10, 1 பேதுரு 1:10-12), குறிப்பிட்ட சூழ்நிலைகளில் அவர்கள் வந்து நமது தேவையில் நம்மை உற்சாகப்படுத்துவார்கள் (அப்போஸ்தலர் 27:23-24). நாம் மரிக்கும்போது தூதர்கள் நம்மை நமது பரலோக வீட்டுக்குக் கொண்டு போவார்கள் (லூக்கா 16:22).

E. சாத்தான்

1. சாத்தான் யார்?

சாத்தான் அறிவைக் கொண்டுள்ள (2 கொரிந்தியர் 11:3), உணர்வுடைய (வெளிப்படுத்தல் 12:17; லூக்கா 22:31). தெரிந்து கொள்ளும் (choose) திறமையுடைய ஒருவன் (ஏசாயா 14:12-14; 2 தீமோத்தேயு 2:26;). சிலர் சாத்தான் ஓர் ஆள் அல்ல, தீய சக்தியே சாத்தான் என்று நம்புகிறார்கள். சாத்தான் தனது செயல்களுக்குக் கணக்கு கொடுக்க வேண்டும். மற்றும் ஒரு நாள் நித்திய அக்கினியிலே தண்டனையைச் சுமப்பான் என்று இயேசு கிறிஸ்து தெளிவாய் அறிவித்தார் (மத்தேயு 25:41), வெறும் தீய சக்தியை தண்டிக்க முடியாது. ஆகவே சாத்தான் ஒரு மெய்யான நபர் தான் என்று நம்பாமருப்பது இயேசு கிறிஸ்துவின்

சத்தியத்தைச் சந்தேகப்படுவதாகும், தேவனுடைய வார்த்தையைச் சந்தேகப்படுவதை சாத்தான் ஏதேன் தோட்டத்து நாட்களிருந்து பயன்படுத்திருக்கிறான் (ஆதியாகமம் 3:1-5).

2. **என்ன நிகழ்ந்தது**

சாத்தான் பரிபூரணப்பட்டவனாகப் படைக்கப்பட்டு, பின்பு பாவஞ் செய்தவன் கேருபீன்களில் உயர்ந்தவனாயிருந்தான். எசேக்கியேல் 28:12-15ல் சாத்தானுக்கு நேரிட்டதை நமக்குப் போதிக்க "தீரு ராஜாவை" ஒரு எடுத்துக்காட்டாகப் பயன்படுத்தியிருக்கிறான், தீரு ராஜாவிற்கு ஒரு அழகான தோட்டம் இருந்தது. ஆனால் அது ஏதேன் தோட்டத்தில் இல்லை. அவனை மூடிக்கொண்ட விலையேறப்பெற்ற கற்களின் மூலமும் (28:13) அவன் "பரிசுத்த ஸ்தலங்களைப்" பரிசுத்தக் குலைச்சலாக்கினதினாலும் (28:18) தூதருடைய பிரதான ஆசாரியனாக இருந்தான் என்பதை அறிகிறோம். பிரதான ஆசாரியனாகவும் தன் "வியாபாரத்தின் மிகுதி" யினாலும் எவன் தன்னைத் தானே உயர்த்தியதைக் குறிக்கிறது. அவன் தூதர்களில் மீதி மூன்றில் ஒரு பங்கை தவறான வழியில் நடத்தினான் (வெளிப்படுத்தல் 12:4).

சாத்தான் தேவனுக்கு சவால்விடத் தீர்மானித்தான். இது ஏசாயா 14:12-14ல் உள்ள வசனங்களில் காணப்படுகிறது. அவனுடைய அடிப்படைப் பாவம் பெருமை (1 தீமோத்தேயு 3:6), அது அவனது சுய சித்தத்தின் ஐந்து குறிப்புகளில் காணப்படுகிறது (தேவன் விரும்புவதைப் பற்றிக் கவலையில்லை, எனக்கு வேண்டியது வர வேண்டும்) என்று ஏசாயாவில் கூறப்பட்டுள்ளது. சாத்தான் தான் பாவத்தை உண்டாக்கினான் (எசேக்கியேல் 28:15) அதற்கு அவனே பொறுப்பாளன் (மத்தேயு 25:41). அது அவனது இருதயத்திருந்து வந்தது (ஏசாயா 14:13).

சாத்தானுடைய சுய சித்தத்தின் முதல் வெளிப்பாடு, ***"நான் வானத்துக்கு ஏறுவேன்"*** என்று கூறுவது. அது தேவனோடு சமமாயிருப்பது அவனுடைய இலக்கு என்பதைக் குறிக்கிறது, அவனுடைய இரண்டாவது கூற்று ***"தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்"*** என்று கூறுவது பரலோகத்திருந்து எல்லா தூதர்களின் மீது ஆட்சி செய்ய அவனுக்குள்ள நோக்கத்தைக் குறிக்கிறது. மூன்றாவது கூற்று ***"வடபுறங்களிலுள்ள ஆராதனை கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன்"*** என்று கூறுவது, பாபிலோனிய தெய்வகங்களின் கருதப்பட்ட இருப்பிடத்தைக் குறிக்கிறது. அவைகள் பூமியை ஆளும் என்று பாபிலோனியர் நம்பினார்கள். நான்காவதாக ***"நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்"*** என்று கூறுகிறான். அது தேவனுக்கு இருக்கிற மகிமையை விரும்புவதைக் குறிக்கிறது. அவனுடைய ஐந்தாவது கூற்று ***"உன்னதமானவருக்கு ஒப்பாவேன்"*** என்று கூறுவது. தேவனுடைய இடத்தை அடைந்து அந்த அதிகாரத்தையும் வல்லமையையும் எடுப்பதற்குள்ள அவனுடைய விருப்பத்தைக் குறிப்பிடுகிறது.

சாத்தான் ஆதியில் செய்த பாவம் என்ன என்பதை நாம் அறிந்த பின், நமக்கு ஏன் இந்த எச்சரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது எளிது: ***"ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள்"*** (பிப்பியர் 2:3). நாம் பெருமையும் சுய சித்தமும் கொண்டிருப்போமானால் சாத்தானைப் பின்பற்றுகிறோம் என்றே அர்த்தமாகும்.

3. **சாத்தானுடைய பெயர்களும் பட்டப்பெயர்களும்**

அவனுக்குக் கொடுக்கப்பட்ட பெயர்களும் பட்டப்பெயர்களும் அவனுடைய குணத்தைப் பற்றி நமக்கு அநேகக் காரியங்களை வெளிப்படுத்துகின்றன. "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே" என்று அவன் அழைக்கப்பட்டிருக்கிறான் (ஏசாயா 14:12). அது "விளக்கை சுமக்கிறவர்" என்று பொருள்படும், அது லத்தீன் மொழியிருந்து லூசிப்பர் என்று **(Lucifer)** மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது, இயேசு கிறிஸ்து உண்மையான "விடிவெள்ளி நட்சத்திரமாக" இருக்கிறார் (வெளிப்படுத்தல் 22:16). சாத்தானின் வீழ்ச்சியிருந்தே அவன் கிறிஸ்துவைப் போல் காட்டிக்கொள்ளும் போயானவனாய் இருக்கிறான் என்று தெரிகிறது.

அவன் சாத்தான் என்று அழைக்கப்படுகிறான். இந்தப் பெயர் எபிரெய மொழியிலுள்ள "சாத்தான்" என்பதிருந்து வருகிறது, அது "எதிர்க்கிறவன்" என்று பொருள்படும் (எண்ணாகமம் 22:22, 32; 1 சாமுவேல் 29:4; 2 சாமுவேல் 19:22; 1 இராஜாக்கள் 5:4; 11:14, 23, 25; 1 நாளாகமம் 21:1; யோபு 1:6, 7, 8, 9, 12; 2:1, 2, 3, 4, 6, 7; சங்கீதம் 109:6; சகரியா 3:1-2; மத்தேயு 4:10; 12:26; 16:23; மாற்கு 1:13; 3:23, 36; 4:15; 8:33; லூக்கா 10:18; 11:18; 13:16; 22:3, 31; யோவான் 13:27; அப்போஸ்தலர் 5:3; 26:18; ரோமர் 16:20; 1 கொரிந்தியர் 5:5; 7:5; 2 கொரிந்தியர் 2:11; 11:14; 12:7; 1 தெசலோனிக்கேயர் 2:18; 2 தெசலோனிக்கேயர் 2:9; 1 தீமோத்தேயு 1:20; 5:15; வெளிப்படுத்தல் 2:9, 13, 24; 3:9; 12:9; 20:2, 7). சாத்தான் இடைவிடாமல் விசுவாசிகளைக் குற்றஞ்சாட்டுகிறான் (வெளிப்படுத்தல் 12:10). ஆனால் இயேசு கிறிஸ்து நமக்காகப் பரிந்து பேசுகிறார் (1 யோவான் 2:1-2). மக்களைப் பாவஞ்செய்ய சாத்தான் தூண்டுகிறான் (ஆதியாகமம் 3:1-5; மத்தேயு 4:3; 1 தெசலோனிக்கேயர் 3:5; அப்போஸ்தலர் 5:3; 1 கொரிந்தியர் 7:5).

அவன் "பிசாசு" என்று அழைக்கப்படுகிறான், இந்தப் பெயர் "டையபொலொஸ்து" **(DIABOLOS)** என்ற கிரேக்க பதத்திருந்து வருகிறது. அது "அவதூறு பேசுபவர்" என்று பொருள்படும் (மற்றொருவரைக் குறித்துப் பொய் சொல்லுகிறவன்), (மத்தேயு 4:1, 5, 8, 11; 13:39; 25:41; லூக்கா 4:2, 3, 6, 13; 8:12; யோவான் 6:70; 8:44; 13:2; அப்போஸ்தலர் 10:38; 13:10; எபேசியர் 4:27; 6:11; 1 தீமோத்தேயு 3:6, 7; 2 தீமோத்தேயு 2:26; எபிரெயர் 2:14; யாக்கோபு 4:7; 1 பேதுரு 5:8; 1 யோவான் 3:8, 10; யூதா 9; வெளிப்படுத்தல் 2:10; 12:9, 12; 20:2, 10).

அவன் "பழைய சர்ப்பம்" என்று அழைக்கப்படுகிறான், இது அவனுடைய சூழ்ச்சியையும் வஞ்சனையையும் குறிக்கிறது (ஆதியாகமம் 3:1, 2, 4, 13, 14; 2 கொரிந்தியர் 11:3; வெளிப்படுத்தல் 12:9, 14, 15; 20:2).

சாத்தான் "வலுசர்ப்பம்" என்று அழைக்கப்படுகிறான். போரில் அவனுடைய கொடிய இயல்பைக் குறிக்கிறது (வெளிப்படுத்தல் 12:3, 4, 7, 9, 13, 16, 17; 13:2, 4, 11; 16:13; 20:2).

அவன் "பெயல்செபூல்" என்று அழைக்கப்படுகிறான். அது "சாணக்குவியன் தலைவன்"[104] என்று பொருள்படும். அது யூதர்களால் பேய்களின் தலைவனுக்கு கொடுக்கப்பட்ட இழிவான பெயர் (மத்தேயு 10:25; 12:24, 27; மாற்கு 3:22; லூக்கா 11:15, 18, 19).

அப்போஸ்தலனாகிய பவுல் அவனை "பேயாள்" என்று அழைத்தார், அது அவனுடைய பயனற்ற அவகேடான இயல்பைக் குறிக்கிறது (2 கொரிந்தியர் 6:15).

சாத்தான் ***"உலகத்தின் அதிபதி"*** (யோவான் 12:31) ***"இப்பிரபஞ்சத்தின் தேவன்"*** (2 கொரிந்தியர் 4:4) ***"ஆகாயத்து அதிகாரப்பிரபு"*** (எபேசியர் 2:2) மற்றும் ***"கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற"*** (எபேசியர் 2:2) என்று அழைக்கப்படுகிறான். இந்த விளக்கங்கள் சாத்தான் தேவனுக்கு முழுமையாய் எதிர்த்து நிற்கிறான் என்பதைக் குறிக்கிறது.

4. **அவனுடைய நிகழ்காலச் செயல்கள்**

சாத்தான் தனது குறிப்பிட்ட திட்டங்களில் வெற்றி பெறுவதற்கு தேவனுடைய திட்டத்தைத் தாக்கி அதை அழிக்கும் எண்ணத்தோடு இடைவிடாமல் செயல்களில் ஈடுபட்டான் (ஏசாயா 14:12-14). தேவனை விட்டுவிட்டு, சாத்தானுடைய திட்டம் என்னவெனில் தேவனுடைய திட்டத்திற்குப் போயை உண்டாக்கி, தேவனை வெளியேற்றுவதாகும். அது வெற்றி பெறுவதற்கு, அவன் பிசாசுகளான அவனுடைய தூதர்களையும் (1 தீமோத்தேயு 4:1) ***"கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தை தரித்துக் கொள்ளுகிறவர்களையும்"*** (2 கொரிந்தியர் 11:13-15) எந்த வழிமுறையிலும் பயன்படுத்துவான்.

தேவனுடைய திட்டத்தை எதிர்த்துநிற்கிற ஒரு ஒழுங்கான அமைப்பை உருவாக்கி தேவனை எதிர்ப்பதில் தானே அதற்குத் தலைவனாவது சாத்தானுடைய திட்டமாகும். இந்த ஒழுங்கான அமைப்பின் கருத்துப் படிவம் "காஸ்மாஸ்" **(COSMOS)** என்ற கிரேக்க பதத்திருந்து வருகிறது. "காஸ்மாஸின்" **(COSMOS)** முக்கியமான கருத்து "ஒழுங்கு"[105] என்பதாகும்.

தன்னுடைய திட்டத்தை நிறைவேற்றுவதற்கு சாத்தான் முதலாவது "மனதைத் குருடாக்குகிறான்" (2 கொரிந்தியர் 4:4). அவிசுவாசிகள் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாதபடிக்கு அவர்கள் ஆண்டவரைப்பற்றிக் கேட்ட சத்தியங்களை எடுத்துப்போட பிரயாசப்படுகிறான் (லூக்கா 8:12), அவிசுவாசிகளின் "மனதைக் குருடாக்க" அவன் ***"தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதக்கிற"*** (2 தீமோத்தேயு 3:5) ஒரு போயான கிறிஸ்தவத்தை கொண்டுவரப் பிரயாசப்படுகிறான் . அது வெளிப்புறத்திலே கிறிஸ்தவமாகத் தோன்றலாம்; ஆனால் உள்ளானது சாத்தானுடையதே (மத்தேயு 23:25-26). இந்தப் போயான நம்பிக்கையின் அமைப்புகள் பல விதங்களில் வெளிப்படும். அதில் சுயத்தை தீவிரமாக ஒடுக்குவதில் உள்ள எல்லாரும் (கொலோசெயர் 2:16-23) தெரிந்தே பாவம் செய்வதும் அதை அங்கீகரிப்பதும் அடங்கும். தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதைத் தடை செய்யும்படி சாத்தான் உலகத்தில் எல்லாவற்றையும் பயன்படுத்துவான் (கொலோசெயர் 1:13; 1 யோவான் 2:15-17).

இயேசு கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது அவர்கள் உலகத்தை ஜெயிக்கிறார்கள். அதாவது சாத்தான் உண்டாக்கிய அமைப்பை (1 யோவான் 5:4-5). ஆயினும் சாத்தான் இரட்சிக்கப்பட்டவனை சும்மா விட்டுவிட மாட்டான். மனிதனை அவன் வெறுப்பதால் (சங்கீதம் 69:1-4; மத்தேயு 10:22) அவன் திருடனாகவும், கொல்பவனாகவும், அழிப்பவனாகவும் வருகிறான் (யோவான் 10:10).

தேவனுடைய இராஜ்யத்திற்கு யாரும் வராதபடி, அவன் முக்கியமாக அழிக்க விரும்புவது உண்மையான கிறிஸ்தவ சாட்சிகளைத்தான். விசுவாசி உலக விதிமுறைகளை விரும்பி அவைகளுக்கு ஒத்திருக்குமாறு, அவன் விசுவாசியைச் தூண்டுகிறான் (1 தெசலோனிக்கேயர் 3:5; 1 யோவான் 2:15-17). விசுவாசி தன்னலத்தை மறைக்க முயலவும் (அப்போஸ்தலர் 5:1-3) மேலும் ஒழுக்கமற்ற செயல்களைச் செய்யவும் சோதிக்கிறான் (1 கொரிந்தியர் 7:5).

சாத்தான் ***"கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்"*** (1 பேதுரு 5:8). அவனுடைய சோதனைகளுக்குப் பயாக விழுகிற ஒருவனைத் தேடுகிறான். அப்பொழுது அவன் அவர்கள்மேல் ***"குற்றஞ்சாட்டுகிறான்"*** (வெளிப்படுத்தல் 12:10). அந்த விசுவாசி ஆண்டவருடைய சீஷராக இல்லாமல் ஆவிக்குரிய வாழ்க்கையில் அவர்களை முன்னேற விடாமல் தடுப்பான் (லூக்கா 22:31).

சாத்தான் ஒருபோதும் உண்மையாயிருக்க மாட்டான் என்பதை விசுவாசிகள் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும் (யோவான் 8:44). அவன் தன் நோக்கத்தை நிறைவேற்றும்படி யாரையும், எதையும் பயன்படுத்துவான்.

F. சாத்தானுடைய தூதர்கள்

சாத்தானோடு போகத் தெரிந்துகொண்டவர்கள் அவனுடைய தூதர்களாயிருக்கிறார்கள். இவர்கள் தூதர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்காகும் (வெளிப்படுத்தல் 12:4). இந்த தூதர்கள் பிசாசுகள் அல்லது அசுத்த ஆவிகள் என்று அழைக்கப்படுகிறார்கள். சாத்தான் அவர்களுடைய பிரபுவாக இருப்பதினால் அவனுடன் எதிர்த்து நின்றவர்களும் இவனோடு இணைந்திருக்கிறார்கள் (மத்தேயு 12:24). சாத்தானோடுள்ள அசுத்த ஆவிகள் பாவத்திலும் தீமையிலும் நாட்களைக் கழிக்கிறார்கள். சாத்தானுடைய அரசு அமைப்பில் வெவ்வேறு அசுத்த அதிகார நிலைகளைப் பெற்றிருக்கிறார்கள். பிசாசுகளுக்கு உடல் பெலன் உண்டு (மாற்கு 5:3; அப்போஸ்தலர் 19:16). ஆகவே அவர்களுடைய அதிகாரத்தினாலே பல காரியங்களைச் செய்து முடிக்கிறார்கள்.

சாத்தானுடைய தூதர்கள் அறிவுடையவர்கள். அவர்கள் இயேசுவை அறிந்தவர்கள் (மாற்கு 1:24), அவர்களுடைய அழிவை உணர்ந்தறிந்தார்கள் (மத்தேயு 8:29) என்பதை அவர்களுடைய போதனையின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியவற்றின் மூலம் (1 தீமோத்தேயு 4:1-3) அறிகிறோம். அவர்கள் இரட்சிப்பின் திட்டத்தை அறிந்து அதை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள் (யாக்கோபு 2:19).

தேவனை எதிர்த்து நிற்கிற எந்தக் காரியத்திலும் சாத்தான் ஈடுபடுவான். தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தை அவர்கள் தவறான வழியில் செலுத்தும்படி முயற்சி செய்வார்கள். உண்மையாகவே எல்லா நன்மையான காரியங்களுக்கும் கர்த்தரே காரணர் என்பதற்கான நற்பெயரை தாங்கள் எடுத்துக்கொள்ள முயற்சி செய்வார்கள்.

பிசாசுகள் எல்லாவிதமான உருவ வழிபாட்டிலும் மந்திரத்திலும் பங்கெடுக்கிறார்கள் (அப்போஸ்தலர் 16:16). ஒருவர் உயிருள்ள தேவனுக்கும், தனக்கும் நடுவிலே ஒரு காரியத்தையோ அல்லது ஒருவனையோ வைக்கும் போதுதான் உருவ வழிபாடு நேரிடும். விக்கிரகம் மரத்தினாலோ, கற்களினாலோ உண்டாக்கப்படலாம்; அல்லது அந்திக் கிறிஸ்துவை ஆராதிப்பதைப் போல அது ஒரு நபராக இருக்கலாம் (வெளிப்படுத்தல் 13:15). மனிதன் தன் சொந்த அறிவைக்கூட ஆராதிக்கலாம் (யோவான் 5:39-40). பிசாசுகள் உயிருள்ள தேவனைத் தவிர, மற்ற யாவற்றையும் ஆராதிக்க மனிதனைத் தூண்டுவார்கள்.

பிசாசுகள் பொய்யான சமயத்தை வளர்ச்சியடையச் செய்யும்படி ஊக்கமளிப்பார்கள். பொய்யான மதம் என்பது ஒரு பயனற்ற, மதிப்பற்ற இரட்சகரை ஆதரிப்பதாகும் (1 யோவான் 4:1-4). அவைகள் நற்கிரியைகளினால் கிடைக்கும் இரட்சிப்பையும் (1 தீமோத்தேயு 4:3-4; எபேசியர் 2:8-9) தீமையை நன்மையானது என்று அறிவித்து பாவமான செயல்களைப் பின்தொடர ஊக்குவிப்பார்கள் (வெளிப்படுத்தல் 2:20-24 உடன் கலாத்தியர் 5:13; ரோமர் 6:1).

பிசாசுகள் மக்கள் நோயையும் (மத்தேயு 9:33); மன உளைச்சலையும் அனுபவிக்கச் செய்வார்கள் (மாற்கு 5:4-5), ஆயினும் எல்லா நோய்களும் பிசாசுகளின் செயல் விளைவுகள் அல்ல, ஏனெனில் இயற்கையாக வரும் நோய்க்கும் பிசாசு உண்டாக்கும் நோய்க்கும் உள்ள வேறுபாட்டை வேதாகமத்தில் காணலாம் (மத்தேயு 4:24; மாற்கு 1:32, 34; லூக்கா 7:21; 9:1).

பிசாசுகள் மக்களையும் (லூக்கா 8:28-31) மற்றும் மிருகங்களையும் (லூக்கா 8:32-33) பிடித்து ஆட்டலாம் **(possessed).** இங்கே பிடித்தாட்டுவது என்பது ஒரு நபருக்குள்ளே பிரவேசித்து அவன் சரீரத்தைக் கட்டுப்பாடு செய்வது. உலகத்திருக்கிறவனிலும் உங்களிடத்திருக்கிறவர் (பரிசுத்த ஆவியானவர்) பெரியவர் என்று நமக்குத் தெளிவாய் கூறப்பட்டிருப்பதினால், ஒரு விசுவாசி, பிசாசுகளினால் பிடித்தாட்டப்படுவதென்பது முடியாத ஒன்று, எனினும் விசுவாசி பிசாசுகளினால் அதிகமாகத் தாக்கப்படும்போது அவன் பிசாசினால் ஆடுவது போல் தோன்றலாம். பிசாசு பிடித்தாடும் மக்கள் கட்டுப்பாடற்றவர்களாகச் செயல்படுவார்கள் (லூக்கா 8:28-31). சாத்தான் ஒரு வெளிச்சத்தின் தூதனாகத் தோன்றலாம் என்பதை நாம் மறக்கக் கூடாது (2 கொரிந்தியர் 11:13-15). ஓர் ஆவி பொய் சொல்லுகிறதோ இல்லையோ என்பதை அவன் இயேசு கிறிஸ்துவைப் பற்றி கூறுகிற செய்தியிருந்து தெரிந்துகொள்ளலாம் (1 யோவான் 4:1-4).

சாத்தான் விசுவாசியை விழுங்கப் பிரயாசப்படுகிற முறைகளை அறிவது நமக்கு முக்கியமானது (2 கொரிந்தியர் 2:11). அவன் புகழையும் (அங்கீகாரம்) அல்லது செல்வத்தையும் (பணம் அல்லது வேறு விதமான வாழ்வு வளம்) அல்லது வல்லமையையும் (அதிகாரம்) அல்லது இன்பத்தையும் நமக்கு வழங்குவான். அவனுடைய பொதுவான செயல்பாடு தேவன் விசுவாசிக்கு ஏற்கனவே கொடுத்ததை அவன் அளிப்பதாக இருக்கும். விசுவாசி தேவனுடைய பிள்ளையாயிருப்பதினாலே அவனுக்குப் புகழ் உண்டு (1 யோவான் 3:1). அவனுக்கு நித்திய ஜீவனும் பரலோகக் குடியிருப்பும் இருப்பதினால் அவனுக்கு செல்வமும் உண்டு (எபேசியர் 2:19-20). அவன் தேவனோடு இணைந்திருப்பதினால் அவனுக்கு அதிகாரமும் உண்டு (ரோமர் 8:1-2). ***"அவனுக்கு எல்லா புத்திக்கும் மேலான தேவசமாதானம் இருப்பதினால் அவனுக்கு இன்பமும் உண்"*** (பிப்பியர் 4:7).

சாத்தானுடைய வழிமுறைகளைப் பற்றி நாம் கற்றுக்கொள்ளும் போது நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். ஏனெனில் தேவனுடைய வழிகளைவிட, அவனுடைய வழிகளை நாம் அதிகமாய்ப் படிக்கச் செய்தால், அவனுக்கு அது வெற்றி கிடைப்பதாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு சாத்தான் தன்னுடைய வழிகளை உருவாக்கிக் கொண்டேயிருக்கிறான். அவன் திரளான போயான அமைப்புகளை உண்டாக்கியிருக்கிறான். ஒரு போ அமைப்பைக் கண்டுணர வேண்டுமானால் நல்ல வழிகளைப் பற்றி அதிகமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உடனே போ அமைப்பைப் பற்றித் தெரிந்துகொள்ள முடியும்.

நமது வாழ்வில் சாத்தானையும் அல்லது அவனுடைய பிசாசுகளையும் சிந்திக்க நாம் தவறினால், கடவுளுக்கும் சாத்தானுக்கும் இடையிலுள்ள போராட்டத்தில் இடர் அடைவோம். அப்போஸ்தலனாகிய பவுல் எச்சரிப்பு தருகிறார்.

> ***ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள்.*** (எபேசியர் 6:12-13).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 6, பகுதி 2

1. **கீழுள்ள பகுதிகளை வாசித்து தூதர்களுடைய குணாதிசயங்களை என்ன என்று கூறுங்கள்.**
   a. 1 பேதுரு 1:12
   b. லூக்கா 2:13
   c. யூதா 6
2. **வாசிக்கவும் லூக்கா 24:4. தூதர்கள் மனிதர்களின் ரூபம் எடுக்கமுடியுமா?**
3. **வாசிக்கவும் எபிரேயர் 2:6-7. இப்பொழுது மனுகுலம் உயர்ந்த நிலையில் இருக்கிறதா அல்லது தாழ்ந்த நிலையில் இருக்கிறதா?**
4. **வாசிக்கவும் சங்கீதம் 148:2-5 . தூதர்களை உண்டாக்கியது யார்?**
5. **வாசிக்கவும் லூக்கா 20:35. அவர்களுக்கு குழந்தை உள்ளனவா?**

6. வாசிக்கவும் எபேசியர் 6:12. சாத்தானின் தூதர்களின் அமைப்பு பதவி வித்தியாசங்கள் உள்ளனவா?
7. வாசிக்கவும் வெளிப்படுத்தல் 12:7. தேவனுடைய இராணுவங்களின் தலைவனாயிருக்கும் தூதன் யார்?
8. வேதத்தில் எந்தவிதமான தூதன் அடிக்கடி சொல்லப்பட்டுள்ளான். கேரூபிமா, சேராபிமா?
9. வாசிக்கவும் எபிரேயர் 1:14. தூதர்களின் முக்கிய பங்கு என்ன?
10. வாசிக்கவும் வெளிப்படுத்தல் 12:7-9. சாத்தான் யார்?
11. வாசிக்கவும் மத்தேயு 25:41. சாத்தானின் இறுதி முடிவு என்ன?
12. வாசிக்கவும் ஏசாயா 14:12-14. சாத்தானின் உண்மையான பாவத்தில் அடங்கியிருந்தது என்ன?
13. சாத்தான் என்ற பெயரின் அர்த்தம் என்ன?
14. பிசாசு என்ற தலைப்பின் அர்த்தம் என்ன?
15. சர்ப்பம் என்ற விளக்கத்தின் அர்த்தம் என்ன?
16. வாசிக்கவும் 2 கொரிந்தியர் 11:13-15. சாத்தானும் அவனுடைய ஊழியர்களும் ஏமாற்ற எதை உபயோகிக்கிறார்கள்?
17. வாசிக்கவும் 2 கொரிந்தியர் 4:4. சாத்தானும் அவனுடைய கூட்டமும் எதைச் சாதிக்க முயலுகிறார்கள்?
18. சாத்தானின் தூதர்களின் இரண்டு முக்கிய தலைப்புகள் என்ன?
19. வாசிக்கவும் 1 யோவான் 4:1-4. ஒரு ஆவி உண்மையானதா அல்லது பொய்யானதா என்று தீர்மானிக்க உபயோகப்படுத்தப்படும் முக்கிய காரணி என்ன?
20. வாசிக்கவும் எபேசியர் 6:12-13. விசுவாசிகளுக்கான உண்மையான போராட்டம் யாருக்கு எதிரானது?

பகுதி 3
மனிதன் (Anthropology)

A. மனிதனுடைய படைப்பு

மனிதனுடைய படைப்பு பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவராகிய தேவனால், திட்டமிடப்பட்டிருந்தது. ***"நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக"*** (ஆதியாகமம் 1:26) என்ற வசனத்திலே பதிவுசெய்யப்பட்டது. மனிதனுடைய படைப்பில் தேவனுடைய தன்மையில் மூன்று நபரும் சேர்ந்திணைந்து செயலாற்றினார்கள்.

தேவனுடைய சாயலும் ரூபத்திலும் மனிதனைப் படைப்பது இந்தத் திட்டமாகும். தேவன் மனிதனை முழுவதுமாகப் படைக்கத் திட்டமிட்டார். அவன் தேவன் அல்ல, ஆனால் தேவனைப் போல, மனிதன் உயிருள்ள, அறிவுள்ள, நீதிக்குரிய மற்றும் தீர்மானிக் கக்கூடிய திறமையுள்ளவனாய் இருப்பான். ஆகவே, தேவனோடு உறவுகொள்வதற்கு அவனுக்கு ஆற்றல் இருக்கும்.

ஆண்டவராகிய தேவன்தாமே ஆதாமாகிய முதல் மனிதனைப் படைத்தார். ***"தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண் ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்"*** (ஆதியாகமம் 2:7) என்று நமக்குக் கூறுகிறது. "ஆத்துமா" என்ற எபிரெய பதம் "NEPHESH" "ஆன்மா" என்று பொருள்படும். தேவன் மனிதனை அவர் ஏற்கனவே படைத்த பொருளிருந்து படைத்தார். பூமியின் மண்ணினாலே, மனிதனுடைய "ஆன்மா" (பொருள் தன்மையில் லாத பகுதியை) ஒன்றுமில்லாததிருந்து படைத்தார் (ஆதியாகமம் 1:27). பிறகு அவர் இரண்டையும் இணைத்து "மனிதன்" என்ற நபரை உண்டாக்கினார்.

ஆதாம் ஓர் ஒப்பற்ற படைப்பு என்று மாணவர் மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். சாதாரண முறையில் அவன் பிறந்ததில்லை, அவன் ஒரு முழு வளர்ச்சி அடைந்த ஆணாக, அறிவோடு வந்தவன். கர்த்தர் அவனைத் தோட்டத்திலே வைத்து, எல்லா விலங்குகளுக்கும் பெயர்களைக் கொடுக்கச் செய்தார் (ஆதியாகமம் 2:8, 19).

"மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல" என்று கர்த்தர் கூறினார் (ஆதியாகமம் 2:18). ஆகவே, ஆதாமுக்கு ஏற்ற துணையை உண்டாக்க அவர் தீர்மானித்தார். அவள் தெய்வீக அறுவை மருத்துவத்தின் மூலம் வந்ததினாலே அவள் "மனுஷி" என்று அழைக் கப்பட்டாள் (ஆதியாகமம் 2;18-23). ***"ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவளாக"*** இருந்ததினால் அவள் "ஏவாள்" என்று பேரி டப்பட்டாள். கர்த்தர் இருந்த பொருளிருந்து (ஆதாமுடைய விலா எலும்பு) அவளை உருவாக்கி அவளுக்கு ஜீவனைக் கொடுத்தார் (ஆதியாகமம் 2:20-33). அந்த ஆணும் பெண்ணும் இருவரும் கர்த்தரால் ஒரு நேரடியான, விசேஷமான, உடனடியாக படைக்கப் பட்டவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஒரு கீழான படைப்புயிரிருந்து படிப்படியாகத் தோற்றுவிக்கப்படவில்லை.

கர்த்தர் சகல மிருகங்களையும் ***"மண்ணினாலே உருவாக்கி"*** ஜீவனைக் கொடுத்தார் (ஆதியாகமம் 2:19). மிருகங்கள் ***"கர்த்தருடைய சாயல்"*** உண்டாக்கப்படவில்லை. அவைகளுக்கு ஜீவன் உண்டு என்று யாரும் வாதிட மாட்டார்கள். ஆனால் அவைகளுக்கு ஓர் அளவு அறிவு உண்டு என்று சிலர் கூறுவார்கள். ஆனால் தீர்மானங்களைச் (நன்மைக்கும் தீமைக்கும் இடையில்) செய்வதற்கு அவை களுக்குத் திறமையில்லை. அவைகளுக்கு ஜீவன் உண்டு, ஆனால் பகுத்தறிவு அவைகளுக்கு இல்லை (2 பேதுரு 2:12; யூதா 1:10).

B. மனிதனுடைய வீழ்ச்சி

கர்த்தர் படைத்த ஆணும் பெண்ணும் (ஆதாமும் ஏவாளும்) ஏதேன் தோட்டத்தில் வாழ்ந்தார்கள் (ஆதியாகமம் 2:10, 15). தோட் டத்தைப் பண்படுத்துவதும் காப்பதும் மனிதனுடைய வேலையாக இருந்தது (ஆதியாகமம் 2:15). தோட்டத்தில் இருந்த மரங்களின் கனியைச் சாப்பிட அவர் அனுமதித்தார். ஆனால் தோட்டத்தின் நடுவிலே வாழ்வளிக்குமரத்தின் பக்கத்தில் ***"நன்மை தீமை அறி யும் மரத்தின் கனியைச்"*** சாப்பிடக்கூடாது என்று தேவன் கட்டளையிட்டார். தேவன் ஏவாளை உண்டாக்கியதற்கு முன்பாகவே, நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை சாப்பிட்டால் அவன் சாகவே சாவான் என்று ஆதாம் எச்சரிப்பைப் பெற்றிருந்தான் (ஆதியாகமம் 2:16-17). தேவனுடைய வார்த்தையை மீறிய தண்டனை அவனுடைய உடலையும் ஆன்மாவையும் பாதிக்கும் (எபி ரெய மொழி) "சாகவே சாவாய்" என்று கூறுகிறது.

சாத்தானைக் குடியிருப்பிடமாகக் கொண்டுள்ள சர்ப்பம் (வெளிப்படுத்தல் 12:9) பெண் மூலம் மனிதனைச் சந்திக்க வழி உண்டாக்கின ான். ஏவாள் உண்ணக் கூடாது என கட்டளையிடப்பட்டிருந்த அந்த கனியைச் சாப்பிட சாத்தான் அவனை வஞ்சித்தான் (2 கொரிந் தியர் 11:3; 1 தீமோத்தேயு 2:14). ஏவாள் கனியைப் பறித்து ஆதாமுக்குக் கொடுத்தாள். அவனும் கர்த்தருடையக் கட்டளையை மீறின ான் (ஆதியாகமம் 3:6).

மனிதனுடைய வீழ்ச்சிக்குப்பின் நடந்த நிகழ்ச்சிகளை இன்னும் விவரமாகக் கவனிப்போம். மனிதனோடு இல்லாத பெண்ணை சர்ப்பம் அணுகியது என்பதைக் கவனிக்கவும். தோட்டத்தை மனிதன் கவனித்துக் கொள்ளுமாறுதான் கட்டளை பெற்றிருந்தான், ஏனெனில் அவன் அதைக் காக்க வைக்கப்பட்டான் (ஆதியாகமம் 2:15). அந்தக் குறிப்பிட்ட மரத்தின் கனியைச் சாப்பிடக் கூடாது என்று ஆணும் பெண்ணுமாக இரண்டு பேரும் கட்டளை பெற்றார்கள் (ஆதியாகமம் 3:1). எளிதாய் சூழ்ச்சிக்குள் வீழ்க்கக் கூடிய நபரைச் சர்ப்பம் தேடியது.

தேவன் கட்டளையிட்ட காரியத்திற்கு மிகநுட்பமாக எதிர்மாறான கேள்வியோடு சாத்தான் சம்பாஷணை ஆரம்பித்தான். தோட்டத்தின் மரங்களில் எந்த மரத்தின் கனியையாவது சாப்பிடக் கூடாது என்று தேவன் கட்டளையிட்டாரா? (ஆதியாகமம் 3:1). இது ஒரு பொருளற்ற கேள்வி, ஏனெனில் அவர்கள் தோட்டத்தில் இருந்த கனியைச் சாப்பிடக் கூடாதிருந்ததானால் அவர்கள் தோட்டத்தைவிட்டு உணவு தேடுவதற்கு வெளியே போக வேண்டியதாயிருந்திருக்கும். தேவனுடைய நன்மையின் மீது நுட்பமான தாக்குதனாலே கேள்வி ஆரம்பித்தது. அந்தக் கேள்வி, பெண்ணுக்கு என்ன தெரியும், அவள் தேவனுடைய கட்டளைகளை எவ்வளவு கருத்தோடு கவனித்தாள் என்பதைக் கண்டுபிடிப்பதற்காகக் கேட்கப்பட்டது.

சர்ப்பத்துக்கு பெண் கூறிய பதில் வெளிப்படையாக இருந்து (ஆதியாகமம் 3:2-3), சர்ப்பத்தின் கூற்றைத் திருத்திப் பதில் அளிக்கிறாள். ஒரு பிரச்சனை என்னவென்றால் தேவனுடைய கட்டளையில் இல்லாத பதங்களை அவள் பயன்படுத்தி அதற்குக் கருத்து சேர்க்கிறாள். அவள், “தொடவும் வேண்டாம்,” என்று சேர்த்துக் கூறுகிறாள். ஆதாம் ஏவாளிடம் தேவனுடைய கட்டளை கூறிய போது அந்த கூற்றைச் சேர்த்துக் கூறியிருக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். கூற்றைச் சேர்த்தது ஆதாமானாலும் ஏவாளானாலும் விளைவு ஒன்றுதான். அவர்கள் தேவனுடைய வார்த்தைக்குப் பொருளைச் சேர்க்கவும் அவர் அளித்தது போதுமா என்று ஐயப்படவும் ஆரம்பித்திருந்தார்கள். சாத்தான் அந்த சேர்க்கையைப் பயன்படுத்தி, தேவனுடைய தண்டனையையும் (ஆதியாகமம் 3:4) அவருடைய நோக்கங்களையும் (ஆதியாகமம் 3:5) எதிர்த்துரைக்க ஆரம்பித்தான். அவன் இந்த நன்மைதீமை அறியும் அறிவை தேவன் கொடுக்க மறுக்கிறார் என்றும் இப்பொழுது அவர்களுக்கு அது பயனுள்ளதாயிருக்கும் என்றும் அறிமுகப்படுத்துகிறான்.

(Missing paragraph)

சாத்தான் பெண்ணுடைய பார்வையின் புலனுக்கும் அவளுடைய அறிவுக்கும் கவர்ச்சியூட்டினான் (ஆதியாகமம் 3:6), அந்தச் சமயத்தில் அந்தப் பெண் விசுவாசத்தினால் நடப்பதை நிறுத்தினாள். அவள் தேவனை நம்பாமல் தன்னை நம்ப ஆரம்பித்தாள். அவள் தேவனைப்போல அறிவுள்ளவளாய் இருக்கலாம் என்று சாத்தான் அவளுக்குச் சொன்னான் (ஆதியாகமம் 3:5). அவள் தேவனைப் போல அறிவுள்ளவளாயிருக்கக் கூடுமானால், அவள் தன்னுடைய வாழ்க்கைக்காக அவரைச் சார்ந்திருக்க அவசியமில்லை. மேலும் தன்னுடைய விதிகளை உருவாக்கலாம். சாத்தான் அவளுக்குத் தெய்வீகத்தை முன் வைத்தான். அவளும் இதை அதிகமாய்ப் பெற்றுக்கொள்ள விரும்பினாள். (ஏசாயா 14:12-14). ***“விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்”*** என்று நாம் அறிகிறோம் (எபிரெயர் 11:6). தடைசெய்யப்பட்ட கனியைச் சாப்பிட்டபோது, ஏவாள் தேவனை நம்பவில்லை. தேவன் உண்மையாகவே நல்லவர் அல்ல; அவர் அவளுக்குத் தேவையில்லை விசுவாசமில்லாமல் வாழ்க்கையில் மகிழ்ச்சியாயிருக்கலாம் என்பதை நம்பும்படி சாத்தான் அவளை ஏமாற்றினான் (2 கொரிந்தியர் 11:3). அவள் சாப்பிட்டாள்.

வேதாகமம் தொடர்ந்து, ***தனுதன் புருஷனுக்குக் கொடுத்தாள்; அவனும் புசித்தான்”*** (ஆதியாகமம் 3:6) என்று கூறுகிறது. ஆதாம் சாப்பிடும் முன்பாக அவர்கள் என்ன பேசினார்கள் என்று நமக்கு கூறப்படவில்லை. வேதம் ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை என்று கூறுகிறதே தவிர (1 தீமோத்தேயு 2:14), அவனுடைய சிந்தனைகளைப் பற்றி எதையும் கூறவில்லை. ஆதாம் (தெரிந்தும்) உணர்வுடன் பாவம் செய்வதைத் தெரிந்து கொண்டான். வேதாகமம் நமக்குக் கூறுகிறது “அவனும் புசித்தான்” (ஆதியாகமம் 3:6). அவர்கள் இருவரும் பாவஞ்செய்தனர், எனினும் அவர்களுக்குக் கிடைக்கும் தண்டனை வேறுபட்டவை.

ஆதாமும் ஏவாளும் தேவனுடைய கட்டளையை மீறினார்கள் என்று உடனடியாக உணர்ந்தார்கள்; பயந்தார்கள். அவர்களுடைய ஆடையற்ற நிலையை உணர்ந்து வெட்கம் அடைந்தார்கள் (ஆதியாகமம் 2:25; 3:7). அவர்களுடைய பிரச்சினையை அவர்களே தீர்க்கப் பிரயாசப்பட்டு, அத்தியிலைகளை தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள் (ஆதியாகமம் 3:7), பிறகு தேவனிடமிருந்து அவர்கள் ஒளிந்துகொள்ள வகை தேடினார்கள் (ஆதியாகமம் 3:8). ஒரு மனிதன் தன்னை இரட்சிப்பதற்கு இதுதான் முதல் முயற்சியாகும்.

C. மனிதனுடைய வீழ்ச்சியின் தண்டனைகள்

சர்ப்பமானது முதலாவது தண்டனை பெற்றது. அது தன்னுடைய மீதியான நாட்களெல்லாம் வயிற்றினால் நகர்ந்து உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்னும்படி தண்டனை கிடைத்தது (ஆதியாகமம் 3:14). சர்ப்பமானது சாத்தான் அல்ல. ஆனால் சாத்தான் சர்ப்பத்தில் இருந்தான். சாத்தான் பூமியின்மீது சுற்றித்திரியக்கூடியவன் [யோபு 1:6; 2:1]. அது மட்டுமல்ல, பரலோகத்திற்குப் போய் சகோதரர் மேல் குற்றஞ்சாட்டினான் [வெளிப்படுத்தல் 12:10]. சாத்தானால் பயன்படுத்தப்பட்ட சர்ப்பம், பூமியிலே வெறுக்கத்தக்க, சபிக்கப்பட்ட ஒன்றாக இருந்தது (ஆதியாகமம் 3:14).

சாத்தான் சர்ப்பத்தைப் பேச அதிகாரமளித்ததினால் அவனும்கூட நியாயந்தீர்க்கப்பட்டான். பெண்ணுடைய வித்துக்கும் அவனுக்கும் பகை ஏற்படும் (ஆதியாகமம் 3:15) என்றார். இதுதான் ஆதியாகமத்தில் மேசியாவைப் பற்றிய முதல் குறிப்பாகும். இது அவருடைய பிறப்பின் தன்மையைக் குறிக்கிறது. ஏனெனில் பொதுவாக வித்து ஆண் மூலம் வருகிறது (ஆதியாகமம் 12:7; 22:17, 18). மேசியா ஒரு கன்னியின் மூலம் பிறப்பார் என்று தெளிவாய் வேதாகமத்தில் பார்க்கிறோம் (ஏசாயா 7:14). இந்தத் தீர்க்கதரிசனத்தோடு மற்ற எல்லா தீர்க்கதரிசனங்களும் தொடர்புடையதாயிருக்கின்றன (வெளிப்படுத்தல் 12:4, 5 உடன் ஒப்பிடுக). சர்ப்பமானது மேசியாவின் குதிங்காலை நசுக்குவான் (இது சிலுவையைக் குறிக்கிறது). ஆனால் மேசியா சர்ப்பத்தின் தலையை நசுக்குவார் (இது வெற்றியைக் குறிக்கிறது).

பாவத்தின் முதல் தண்டனைகள் குற்ற உணர்வு (அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்பதைக் குறித்து வெட்கமடைந்தார்கள் (ஆதியாகமம் 3:7). அது மட்டுமல்ல தேவனோடு இருந்த உறவை இழந்தார்கள். (அவர்கள் ஒளிந்துகொண்டார்கள்) (ஆதியாகமம் 3:8).

பெண் கர்ப்ப வேதனையை அடைவாள் (ஆதியாகமம் 3:16). மேலும் அவள் கணவர்மேல் அதிகாரம் செலுத்த விரும்புவாள். ஆயினும் அவள் கணவரால் ஆட்கொள்ளப்பட விரும்புவாள். ஏவாள் தன் கணவரை நடத்த விரும்பினபோது இந்த சோதனையைத்தான் சந்தித்தாள் (கனியைப் பறித்த சமயத்தில்), ஆனால் எப்படியோ அவன் அவளைத் தடுத்திருக்க வேண்டும் என்று விரும்பினாள்.

பெண்ணுக்கு விரோதமாக ஆதாம் சாட்டிய குற்றச்சாட்டுகளுக்கு ஆண்டவர் பதில் அளிக்கிறார் (ஆதியாகமம் 3:17). ஆதாம் அவளுக்குச் செவிக்கொடுத்தது தவறு என்று தெளிவாய் இருக்கிறது. ஒரு மனிதன் இந்த வசனத்தைச் சரியாய் புரிந்துகொள்ளாவிட்டால் அவருடைய மனைவியிடம் ஒருபோதும் ஆலோசனை கேட்கக் கூடாது என்று தீர்மானித்து விடுவான். அது தவறு. ஏனெனில் ஆபிரகாம் தன் மனைவியிடம் ஆலோசனையைக் கேட்குமாறு தேவன் ஒரு சமயம் சொன்னார் (ஆதியாகமம் 21:12). எந்த ஆலோசனையை ஏற்றுக்கொள்ள வேண்டுமானாலும் அது எப்பொழுதும் தேவனுடைய வசனத்தை ஆதாரமாகக் கொண்டிருக்க வேண்டும். தன் மனைவிக்குச் செவிகொடுத்தது பாவமல்ல, தடுக்கப்பட்ட கனியைச் சாப்பிடத் தீர்மானித்ததே ஆதாமுடைய பாவம். ஆதாம் மீது வந்த சாபம், அவன் வாழ்நாள் முழுவதும் கடினமான வேலை செய்து சாப்பிட வேண்டும் (ஆதியாகமம் 3:17-19) என்பதாகும்.

தடுக்கப்பட்ட கனியைச் சாப்பிட்டதினால் வந்த மூல தண்டனை மறந்துவிடப்படவில்லை. ஆதாம் பாவஞ்செய்த போது அவன் தேவனோடு உள்ள உறவை இழந்ததினால் அவன் ஆவிக்குரிய விதத்தில் மரித்தவனாக இருந்தான். அவனுடைய உடலுக்குரிய மரணம் 930 ஆண்டுகளுக்குப் பிறகு நேரிட்டது (ஆதியாகமம் 5:5). தேவன் ஆதாமையும் ஏவாளையும் மிருகத் தோல்களினாலே மூடினதினாலே, அவர்களுக்குக் கிருபை அளித்தார் (ஆதியாகமம் 3:21). ஒரு மிருகத் தோல் வைப்பதற்கு, ஒரு பழுதற்ற மிருகம் பயாகக் கொல்லப்பட்டிருந்தது என்று பொருள்படும். பாவங்களுக்காகப் பாவநிவிர்த்திசெய்வதற்கு ப செலுத்த வேண்டும் என்று தெளிவாயிருக்கிறது. இது மேசியாவில் பரிபூரணமாய் நிறைவேறப்படும் (எபிரேயர் 10:10, 12).

ஆதாமும் ஏவாளும் ஆண்டவரால் ஆடையால் மூடப்பட்ட பிறகு, அவர்கள் ஏதேன் தோட்டத்திருந்து அனுப்பிவிடப்பட்டார்கள். (ஆதியாகமம் 3:22-24). ***"தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து புசித்து என்றைக்கும் உயிரோடிருக்காத"*** படி இதைச் செய்ய வேண்டியதாயிருந்தது. வீழ்ச்சியுற்ற மணமக்கள் விழுந்த நிலையில் சாபத்தின் கீழ் என்றைக்கும் உயிரோடு இருப்பது நல்லதல்ல என்று தேவன் உணர்ந்தார். காரணத்தை அறிந்து புரிந்து கொள்வதற்கு நமக்குக் கடினமாய் இல்லை. விசுவாசிகளுக்கு மரணம் நல்லதாக இருக்கும். ஏனெனில் அவர்களுடைய மேசியாவாகிய இயேசு கிறிஸ்துவினுடைய பரிசுத்தமும் பூரணமுள்ள உடலைப்போல அவர்கள் புது உடல் உயிரோடு எழுப்பப்படுவார்கள் (1 யோவான் 3:2). அவர்கள் சாபமில்லாத ஜீவவிருட்சம் இருக்கிற பரலோகத்திற்குக் கொண்டுபோகப்படுவார்கள் (வெளிப்படுத்தல் 22:2-3).

D. மனிதனுடைய இயல்பு

1. சரீரம்

தேவன் தம்முடைய சாயல் மனிதனைப் பூமியின் மண்ணினாலே உண்டாக்கியபோது அவனுடைய சரீரம் தோன்றியது (ஆதியாகமம் 1:26). பிறகு ஆதாமுடைய எலும்பிருந்து ஏவாளை உண்டுபண்ணினார் (ஆதியாகமம் 2:7, 21). ஆதாமும் ஏவாளும் பாலுறவு கொண்டு பிள்ளைகளைப் பெற்றார்கள். அவர்களுடைய முதல் இரண்டு பிள்ளைகள் காயீன் மற்றும் ஆபேல் (ஆதியாகமம் 4:12). மற்ற மனுக்குலத்தோர் ஆதாம் மற்றும் ஏவாளிருந்து வந்தார்கள். ஏவாளுடைய பெயர் ***"ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்"*** என்று பொருள்படும் (ஆதியாகமம் 3:20).

சரீரம் மனிதனின் இயற்பொருளாக இருக்கிறது. அது பார்வை, உணர்வு, கேட்டல், சுவைத்தல், வாசனையை முகர்தல் ஆகிய புலன்களைப் பெற்றிருக்கிறது. சரீரத்திலுள்ள பகுதிகள் - தலை, கைகள், கால்கள் ஆகியவை நாம் அறிந்திருக்கிறோம். அவைகளுக்கு ஒரே வேலை அல்ல, நாம் நமது கைகளினால் நடக்கிறதில்லை. நமது கால்களினால் சாப்பிடுவதில்லை. நமது இயற்கையான உடல்கள் ***"கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையைக்"*** குறித்த ஓர் ஆவிக்குரிய உடலைப் பற்றி நமக்குப் போதிக்கத் திட்டமிட்டிருக்கின்றன (ரோமர் 12:4-5). எல்லா விசுவாசிகளுக்கும் இந்த ஆவிக்குரிய உடல் ஒரு பகுதி உண்டு. அவர்களுக்கு அந்த உடலுக்குள் ஒரு முக்கியமான, ஆனால் வேறுபட்ட வேலை உண்டு (1 கொரிந்தியர் 12).

தேவன் உருவாக்கின மனித சரீரம் ஆவியானவர் குடிபுகும் ஒரு வீடாக இருப்பது. ஒரு வியக்கத்தக்க உயிர்பொருளாக இருக்கிறது. நமது பாவங்களுக்காக ஆண்டவர் தமது பூமிக்கு தம் சரீரத்தை ஒரு பயாக செலுத்தினார் (1 கொரிந்தியர் 11:24), நாம் ***"பரிசுத்தராகவும் குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும்"*** அவர் நம்மைப் பிதாவிற்கு ஒப்புரவாக்கினார் (கொலோசெயர் 1:21-22), ஆண்டவர் தமது சரீரத்தில் நமது பாவங்களைச் சுமந்து மரித்தார் (1 பேதுரு 2:24).

அவ்வண்ணமாகவே கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவராக (1கொரிந்தியர் 11:1) அவர் தமது சித்தத்தின்படி நம்மை பயன்படுத்தும் படியாக நமது உடலை உயிருள்ள பயாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும் (ரோமர் 12:1-2), மரணம் பரியந்தமும் வாழ்வின் ஒவ்வொரு பகுதியிலும் கிறிஸ்து நமது உடல் உயர்த்தப்பட வேண்டும் (பிப்பியர் 1:20).

ஒரு நாளில் சரீரத்தில் செய்த கிரியைகளுக்காக நாம் ஆண்டவருக்குக் கணக்கு கொடுப்போம் என்று அறிந்து (2 கொரிந்தியர் 5:10), நமது சரீரத்தை நாம் பரிசுத்தமாய் வைத்துக் கொள்ள வேண்டும். (1 கொரிந்தியர் 9:27), நமது உடலுள்ள நாக்கு என்ற சிறிய பகுதி நமது பேச்சினாலே காக்கப்பட வேண்டும் (யாக்கோபு 3:2-5), நாம் இப்பொழுது ஜீவனைப் பெறும்படிக்கு, நமது பாவங்களுக்காக இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் செய்தியைக் கொண்டு போவதற்காக நமது சரீரங்களைப் பயன்படுத்த வேண்டும் (2 கொரிந்தியர் 4:10).

ஒரு நாளில் இந்தப் பூமிக்குரிய சரீரம் மரணத்தைக் காணாத ஒரு புது சரீரமாக மாற்றப்படும் (1 கொரிந்தியர் 15:40-44), இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த மகிமையுள்ள சரீரம் போல இருக்கும் (பிப்பியர் 3:20-21), இந்தப் புது சரீரம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடு பரிபூரண மற்றும் நிறைவான உறவு கொள்ள நமக்கு உரிமை கொடுக்கும் (2 கொரிந்தியர் 5:6-8).

2. **ஆன்மா**

ஆன்மா என்பது மானிடரின் சரீர பகுதியில் ஒரு பகுதி, அதைக் காண முடியாது, தொட முடியாது, கேட்க முடியாது, மோந்து பார்க்கவோ ருசித்துப்பார்க்கவோ முடியாது. ஆன்மா இல்லாமல் சரீரம் உயிரோடு இருக்க முடியாததினால் (ஆதி. 35:18) எபிரெய பதம் "NEPESH" "நெப்பெஷ்" மற்றும் கிரேக்க பதம் "PSUCHE" "பசுக்சே" என்பவை "ஆன்மா" என்பதல்ல. "ஜீவன்" அல்லது "ஆள்" என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

"ஆதாம் படைக்கப்பட்டபோது தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானவன்" என்று வேதாகமம் கூறுகிறது (ஆதியாகமம் 2:7; 1 கொரிந்தியர் 15:45), ஜீவன் என்ற பதத்தை விளக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட எல்லா பதங்களையும் ஆராய்ந்து பார்க்க நம்மால் முடியாது. தேவன் தமது சுவாசத்தினாலே ஆதாம் மற்றும் ஏவாளின் ஆன்மாக்களை உண்டாக்கினார் என்று நம்புவோமாக. அவைகளும் மனித குலத்தின் மற்ற நபர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன (யாத்திராகமம் 1:5). மிருகங்களுடைய ஜீவனுக்கு "NEPHESH" "நெப்பேஷ்" என்ற பதம் பயன்படுத்தியிருக்கிறது (ஆதியாகமம் 1:20, 21, 24, 30; 2:19).

ஆன்மா உடலே என்னென்ன செய்கிறது என்பதை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது தேவனுக்கு ஓர் ஆன்மா இருக்கிறது என்றும் (மத்தேயு 12:18; எபிரேயர் 10:38) மனிதன் அவருடைய சாயல் படைக்கப்பட்டான் என்றும் நாம் அறிய வேண்டும் (ஆதியாகமம் 1:26-27).

மனிதனுடைய ஆன்மாக்குள்ளே நீதிக்குரிய தீர்மானங்கள் (நன்மைக்கும் தீமைக்கும் இடையிலுள்ள தீர்மானங்கள்) செய்யத் திறமை உண்டு, ஒரு தீர்மானம் பண்ணும் முன், ஆன்மாவில் தேர்வு செய்யும் இடம் உண்டு, தெரிந்தெடுக்கும் இது இச்சித்தல் ஆகும், ஆன்மா நீதிக்குரிய தீர்மானங்கள் செய்யக்கூடிய இடத்தில் இருப்பதினால், ஆன்மா இரட்சிக்கப்பட வேண்டும் என்று நாம் முடிவு எடுக்க வேண்டும் (சங்கீதம் 33:18-19; அப்போஸ்தலர் 2:41; எபிரேயர் 10:39; யாக்கோபு 1:21; 1 பேதுரு 1:8-9). பாவத் திருந்து அது குணப்பட வேண்டும் (சங்கீதம் 41:4), இயேசு இழந்துபோன மனிதக்குலத்தை மீட்கும்படிக்குத் தமது உடலை மட்டுமல்ல, தமது ஆன்மாவையும் கூடக் கொடுத்தார் (மத்தேயு 20:28; மாற்கு 3:4; யோவான் 10:11, 15, 17; 15:13). ஆகவே நமது ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவர் என்று ஒருவர் இருக்கிறார் (1 பேதுரு 2:25), அவிசுவாசத்தினாலே ஆன்மா மீட்டுக்கொள்ளப்படாமல் இருந்ததானால் அது நரகத்தில் அழிந்து போகும் (மத்தேயு 10:28; 16:26).

மனிதன் செய்யவேண்டிய சில தீர்மானங்களில் கடவுளை நேசிப்பதும் உள்ளடங்கும் (உபாகமம் 6:5; 10:12-13; 30:6). நாம் சரியான காரியங்களைச் செய்து நம்மைப் படைத்தவரிடம் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும், (1 பேதுரு 4:19), சகோதரர்களுக்காக நமது ஆன்மாவைக் கொடுக்க ஆயத்தமாய் இருக்க வேண்டும், (1 யோவான் 3:16), மனிதனுடைய ஆன்மாவில் ஒழுக்கக்கேடான காரியங்களோடு போராட்டம் உண்டு (1 பேதுரு 2:11). கள்ளப் போதகர்கள் ஆவிக்குரிய உறுதியற்றவர்களைக் கவர்ச்சியூட்டியிழுக்கிறார்கள் (2 பேதுரு 2:12-14).

ஆன்மா தீர்மானங்கள் செய்யப்படும் இடம் மட்டுமல்ல, ஆன்மாவிருந்து உணர்வுகள் உண்டாகும் (யோபு 30:25). அது கசப்பாயிருக்கலாம் (2 இராஜாக்கள் 4:27), ஆழமான துக்கத்தை அனுபவிக்கலாம் (சங்கீதம் 43:5; எரேமியா 13:17; மத்தேயு 26:38) குத்தப்பட்டிருக்கலாம் (லூக்கா 2:35), வியாகுலமும் அடையலாம் (ரோமர் 2:9), பகைக்கலாம் (2 சாமுவேல் 5:8), அன்புகூரலாம் (உன்னதப்பாட்டு 1:7; 3:1-4), ஆண்டவரை மகிமைப்படுத்தலாம் (லூக்கா 1:46), சந்தோஷமாயிருக்கலாம் (லூக்கா 12:19).

3. **மனித ஆவி**

மனித ஆவி என்ற பதத்திற்கு எபிரெய மொழியில் **ஹுருவாச்து** "RUACH" என்றும், கிரேக்க மொழியில் "PNEUMA" "நியூமா" என்றும் காணப்படுகிறது. வேதாகமத்திருந்து இதைப்படிப்பது கடினமாய் இருக்கிறது. ஏனெனில் இவையிரண்டும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டிருக்கின்றன, அவைகள் காற்று, சுவாசம், பரிசுத்த ஆவியானவர், அசுத்த ஆவிகள் மற்றும் மனித ஆவி ஆகியவற்றை வெவ்வேறு இடத்தில் குறிக்கின்றன.

மனித ஆவி ஆவிக்குரிய ஜீவ அதிகாரமாக இருக்கிறது. அது சரீரம் சார்பில்லாத பகுதி, அது தேவனால் உருவாக்கப்பட்டு அவனிடம் வருகிறது (பிரசங்கி 12:6-7; சகரியா 12:1; எபிரேயர் 12:9). குறிப்பாக பரிசுத்த ஆவியானவர் (யோவான் 3:6; 6:63), மனித ஆவிக்கு அவசியமாயிருக்கிறது (லூக்கா 8:55; யாக்கோபு 2:26).

மனித ஆவியின் பண்புகளை நாம் பார்க்கும்போது, மனித ஆவியின் பண்புகள், ஆன்மா மற்றும் இருதயத்தின் பண்புகள் ஒரே மாதிரி இருக்கின்றன எனக் காணலாம். ஆனால் வேதாகமம் மனித ஆவி, மனித இருதயத்திருந்தும் ஆன்மாவிருந்தும் வேறுபட்டதாக இருக்கிறது என்று நமக்குக் கூறுகிறது.

நாம் மனித ஆவியைக் குறித்து இந்த வசனங்களைப் படிக்கும்போது அதற்கு நான்கு செயல்பாடுகள் உண்டு:

a. செய்தியைப் பெறுவது

மனித ஆவி கிருபை, உண்மை வழியாக வருகிற தகவலைப் பெறுகிறது (கலாத்தியர் 6:18; பிலேமோன் 1:25) வெளிப்படுத்தல் (எபேசியர் 1:16-17), அது மட்டுமல்ல, அதைச் சினமூட்டலாம் (அப்போஸ்தலர் 17:16) எழுப்பக்கூடும் (1 நாளாகமம் 5:26; எஸ்றா 1:1, 5).

b. செய்தியை மதிப்பிடலாம்

மனித ஆவி பெறுகிற செய்தியை மதிப்பிடலாம்; நிகழ்ச்சிகளை உணர முடியும் (யோபு 6:4), நமது சிந்தனைகளை அறிய முடியும் (1 கொரிந்தியர் 2:11), ஆழ்ந்து யோசிக்க முடியும் (சங்கீதம் 77:6) புரிந்துகொள்ள முடியும் (யோபு 20:3; 32:8) மதிப்பீட்டைக் குறித்து ஞானமாயிருக்கலாம் (யாத்திராகமம் 28:3; உபாகமம் 34:9; எபேசியர் 1:16-17).

c. தீர்மானம் செய்யலாம்

மனித ஆவி செய்தியைப் பெற்று மதிப்பிட்ட பிற்பாடு அது என்னென்ன செய்ய வேண்டும் என்று தீர்மானிக்கலாம். அது பரிசுத்த ஆவியினாலே தொடர்ந்து நடத்தப்படுவதையோ (அப்போஸ்தலர் 20:22-23) (Missing parts) அல்லது கடவுளுக்கு விரோதமாக எதிர்த்து நிற்பதையோ (யோபு 15:3) தீர்மானிக்கலாம்.

d. பதில் அளிக்கலாம்

சூழ்நிலைகளை உணர்ந்து மதிப்பீட்டு தீர்மானங்கள் செய்யும்போது, மனித ஆவி பல முறைகளில், பாவமுள்ள முறைகளிலும்கூட பதில் அளிக்கலாம்.

மனித ஆவி பல விதங்களில் விளக்கப்பட்டுள்ளது. அதை ஒருவர்:

- கோபப்படுத்தக் கூடும். நியாயாதிபதிகள் 8:3; பிரசங்கி 7:9; 10:4
- முற்கோபப்படுத்தக்கூடும். நீதிமொழிகள் 14:29 (பொறுமையற்றவன்)
- வேதனைப்படுத்தக் கூடும். யோபு 7:11
- மனமேட்டிமை காட்டலாம். சங்கீதம் 76:12; நீதிமொழிகள் 16:18; பிரசங்கி 7:8
- முறிக்கப்படக் கூடும். சங்கீதம் 51:17; நீதிமொழிகள் 15:13; 17:22; 18:14; ஏசாயா 65:14
- அமைதலாய் இருக்கக்கூடும். நீதிமொழிகள் 17:27
- நெருக்கி ஏவப்படக் கூடும். யோபு 32:18
- நொறுக்கப்படக் கூடும். சங்கீதம் 34:18; நீதிமொழிகள் 15:4
- கபடமுள்ளதாய் இருக்கலாம். சங்கீதம் 32:2
- தூய்மை கெடுக்கப்படலாம். 2 கொரிந்தியர் 7:1
- சோர்வு அடையலாம். யாத்திராகமம் 6:9 (ஆவியின் வேதனை)
- கற்பனையாக மற்றொருவரின் அனுபவத்தை அனுபவித்தல். 1 கொரிந்தியர் 5:3-5; கொலோசெயர் 2:5
- தவறு செய்யக் கூடும். ஏசாயா 29:24
- ஆண்டவரின் சன்னிதானத்தை அனுபவிக்கக் கூடும். 2 தீமோத்தேயு 4:22
- தன்னை வெளிப்படுத்தக் கூடும். நீதிமொழிகள் 29:11
- தொய்ந்து போகக் கூடும். சங்கீதம் 77:3; 143:7; ஏசாயா 57:16; 61:3; எசேக்கியேல் 21:7
- மனிதனுக்கு உண்மையுள்ளவனாயிருக்கலாம். நீதிமொழிகள் 11:13
- ஆர்வம் மிக்கவனாக இருக்கலாம். அப்போஸ்தலர் 18:25; ரோமர் 12:10-11
- மதிகெட்டதாயிருக்கலாம். எசேக்கியேல் 13:3
- சாந்தமுள்ளதாய் இருக்கலாம். 1 கொரிந்தியர் 4:21; கலாத்தியர் 6:1; 1 பேதுரு 3:4
- ஆண்டவருக்குக் கொடுக்கக்கூடியது. அப்போஸ்தலர் 7:59
- மனம்நொந்தவராய் இருக்கலாம். ஏசாயா 54:6
- கடினப்படுத்தியிருக்கலாம். உபாகமம் 2:30
- பரிசுத்தமாயிருக்கலாம். 1 கொரிந்தியர் 7:34
- கனப்படுத்தப்பட்டிருக்கலாம். 2 கொரிந்தியர் 12:18
- தாழ்த்தப்பட்டிருக்கலாம். நீதிமொழிகள் 16:19; 29:23
- எரிச்சலுள்ளதாயிருக்கலாம். எண்ணாகமம் 5:14
- தேவ ஆவியைப் பெற்ற நினைவில் பிழைக்கலாம். 1 பேதுரு 4:6
- உத்தமமாய் இருக்கலாம். எண்ணாகமம் 14:24
- பூரணராக்கப்படலாம். எபிரெயர் 12:23
- மக்களை எழுப்பலாம். யாத்திராகமம் 35:21; நீதிமொழிகள் 16:2; வெளிப்படுத்தல் 19:10
- கலங்கித் துயரமடையலாம். யோவான் 11:33
- புதிதாக்கப்படலாம். எசேக்கியேல் 11:19; 18:31; 36:26
- மனக்கிலேசமடையலாம். 1 சாமுவேல் 1:15

- மேற்கொள்ளப்படலாம். சங்கீதம் 142:3; 143:4
- திட்டமிடலாம். அப்போஸ்தலர் 19:21
- ஏழையாயிருக்கலாம். மத்தேயு 5:3
- ஜெபிக்கலாம். 1 கொரிந்தியர் 14:14-16
- பராமரிப்பைப் பெறுகிறது. யோபு 10:12; 1 தெசலோனிக்கேயர் 5:23
- அமைதலாயிருக்கலாம். 1 பேதுரு 3:4
- இனம்பற்றிய பண்புகள் இருக்கலாம். ஏசாயா 19:3; ஏரேமியா 51:11
- ஆறுதலடையலாம். 2 கொரிந்தியர் 7:13
- களிகூரலாம். லூக்கா 1;47
- புதிதாக்கப்பட லாம். எபேசியர் 4:21-24
- இளைப்பாறலாம். 2 கொரிந்தியர் 2:13
- உயிர்ப்பிக்கப்படலாம். ஆதியாகமம் 45:27; 1 சாமுவேல் 30:12
- தன் மனதை அடக்கலாம். நீதிமொழிகள் 16:32
- சப்பு அடையலாம். 1 இராஜாக்கள் 21:5
- ஆண்டவரைத் தேடலாம். ஏசாயா 26:9
- சேவை செய்யலாம். ரோமர் 1:9
- பலவீனத்தை அறியலாம். நீதிமொழிகள் 18:14
- பெருமூச்சுவிடலாம். மாற்கு 8:12
- நிலைவரமானதாயிருக்கலாம். சங்கீதம் 51:10
- பலங்கொண்டதாயிருக்கலாம். லூக்கா 1:80
- மற்றவர்களுக்கு அடங்கலாம். 1 கொரிந்தியர் 14:31-32
- அடங்கலாம். எபிரெயர் 12:9
- பயமுள்ளதாயிருக்கலாம். 2 தீமோத்தேயு 1:7
- கலக்கங்கொள்ளலாம். ஆதியாகமம் 41:8; யோபு 21:4; தானியேல் 2:1-3; யோவான் 13:18-21
- அடக்காதவனாயிருக்கலாம். நீதிமொழிகள் 25:28
- ஆண்டவரோடு இசைந்திருப்பது. 1 கொரிந்தியர் 6:17
- மற்றவிசுவாசிகளோடு இசைந்திருப்பது. பிப்பியர் 1:27
- கரைந்து போகலாம். யோசுவா 2:11; நியாயாதிபதிகள் 15:19; 1 இராஜாக்கள் 10:4-5
- உற்சாகமாயிருக்கலாம். சங்கீதம் 51:10-12
- தொழுதுகொள்ளலாம். யோவான் 4:23
- நமது இரட்சிப்புகென்ற சாட்சி கொடுக்கிறது. ரோமர் 8:16

4. **இருதயம்**

மனிதனுடைய இருதயம் வேதாகமத்தில் முழுவதும் கவனத்திற்குரிய ஒரு பொருளாக இருக்கிறது, எபிரெய பதம் "LEBH" "லெப்சு", மற்றும் கிரேக்க பதம் "KARDIA" "கார்டிய" சேர்ந்து சுமார் 1,000 முறைகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. (Missing parts)

வேதாகமத்தில் இருதயம் என்ற சொல்லை நாம் சிந்திக்கும்போது நான்கு குறிப்பிட்ட கருத்துக்கள் விளங்குகின்றன:

a. அறிவுத்திறன் மையம்

இருதயம் அறிவுத்திறனின் மையத்தைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது, அதற்கு கணக்கிடும் (உபாகமம் 8:5), பாராட்டும் (சங்கீதம் 119:11) திட்டமிடும் (எபிரேயர் 4:12) திறமை உண்டு, அது மட்டுமல்ல, இருதயம் திறமையான சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும், மூல காரணமாயிருக்கிறது (மத்தேயு 15:19-20).

b. மனக்கிளர்ச்சிகளின் மையம்

இருதயத்தை மனக்கிளர்ச்சிகளின் மையமாகப் பார்க்கிறோம். அது அன்புகூர வல்லது (உபாகமம் 6:5) விரும்ப முடியும் (சங்கீதம் 37:4) களிகூர முடியும் (சங்கீதம் 104:15; ஏசாயா 30:29; கொலோசெயர் 3:16), இருதயத்தினால் விசனமாயிருக்க முடியும் (நெகேமியா 2:2; ரோமர் 9:2) கசப்பாகவும் இருக்கலாம் (சங்கீதம் 73:21) தன்னைக் கண்டிக்கலாம் (யோபு 27:6).

c. சுயாதீனத்தின் மையம்

இருதயம் விருப்பத் துணிவாற்றன் மையமாக இருக்குது, அது தேவனைத் தேடலாம் (உபாகமம் 4:29) அது மாற்றப்படலாம் (யாத்திராகமம் 14:5) அல்லது தேவனுக்கு விரோதமாகத் தன்னைக் கடினப்படுத்தலாம் (யாத்திராகமம் 8:15; எபிரெயர் 4:7).

d. ஆவிக்குரிய வாழ்வின் மையம்

இருதயம் ஆவிக்குரிய வாழ்வின் மையமாக இருக்கிறது. கடவுளுடைய வார்த்தை கூறுகிறதாவது உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய், நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், (ரோமர் 10:9-10), விசுவாசிக்கு தன் இருதயம் குமாரனுக்கும் (1 பேதுரு 3:15; எபேசியர் 3:17) பரிசுத்த ஆவியானவருக்கும் குடியிருப்பிடமாக இருக்கிறது (2 கொரிந்தியர் 1:22).

5. மனச்சாட்சி

மனச்சாட்சி என்ற பதம் புதிய ஏற்பாட்டில் மட்டுமே வருகிறது, பழைய ஏற்பாட்டில் இருதயம் என்ற பதத்தினாலே மனச்சாட்சி யின் செயல் குறிப்பிட்டிருக்கிறது (1 சாமுவேல் 24:5; யோபு 27:6). கிரேக்க பதம் "SUNEIDESIS" ''சானைடீசிஸ்'' ''உடன் அறிய'' அல்லது ''தன்னைப் பற்றி அறிந்து கொள்வ"து, சரி அல்லது தவறு என்று தனி நபர் குறிப்பிடும் திறமையைக் குறிக்கிறது, னுசரிது என்று போதிக்கப்பட்டதைச் செய்யத் தூண்டுகிற மனிதனில் இருக்கிற பகுதி – மனச்சாட்சி என்று அழைக்கப்படுகிறது, மனச்சாட்சி நமக்குச் சரி மற்றும் தவறு என்று போதிக்கிறதில்லை, ஒருவன் தவறான தகவலைப் பெற்றதினாலே, நல்ல மன ச்சாட்சியில் அவன் தவறு செய்யலாம்.

சரி மற்றும் தவறு என்கிற தேவனுடைய கோட்பாட்டின்படி ஒருவன் போதிக்கப்பட்டிருந்தால், ஒரு இரட்சிக்கப்படாதவனுடைய மனச்சாட்சி ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்கலாம் (யோவான் 8:9; ரோமர் 2:15). ஒருவன் தேவனுடைய கோட்பாடுகளை தள்ளி விடும்போது, மனச்சாட்சியில் உறுத்தல் இருக்கும் (1 தீமோத்தேயு 4:2). ஒருவன் தேவனுடைய கோட்பாடுகளை மறுக்கும்போது மனச்சாட்சி மாசு நிறைந்ததாயிருக்கும் (தீத்து 1:15), ஆனால் மனச்சாட்சி எல்லா தீமையிருந்து சுத்திகரிக்கப்படும் (எபிரெயர் 10:22).

பரிசுத்த ஆவியானவரின் குற்றமெய்ப்பிக்கிற செயனாலே, விசுவாசியின் மனச்சாட்சி பல்வேறு உறவுகளில் அவனைச் சரி செய்ய வயுறுத்தும், அவன் கூடியிருக்கிற ஆட்சிக்குப் கீழ்ப்படியவும் (ரோமர் 13:5) அநியாயமான எஜமானிடம் பொறுமை யாயிருக்கவும் (1 பேதுரு 2:19) பெலவீனமான சகோதரருடைய மனச்சாட்சியைப் புண்படுத்தாதபடி நடத்தவும் (1 கொரிப்தியர் 8:7; 10, 12), அது கட்டாயப்படுத்தும்.

6. மனம்

மனதுக்கு கிரேக்க பதம் நௌஸ் (NOUS) என்பதாகும். இங்கே எல்லா புலன்களும், மனக்கிளர்ச்சிகளும் அறிவும் சேர்ந்து வருகின்றன. (Missing parts)

> இது மனித மூளை ஆன்மாவின் செயல்களையெல்லாம் கொண்டுள்ளது. ''மனம்'' என்பதில் நம் எண் ணத்தைப் பிரதிபக்கிற விழிப்புநிலை, புரிந்து கொள்ளும் உணர்வு, நியாயம் தீர்த்தல், தீர்மானம் எடுத்தல் ஆகியவற்றை அடக்கியுள்ளது. கிரேக்க பதங்கள் "DIANOIA" ''டையனொய்'' சிந்தித்துப் பார்ப்பது என்று பொருள்படும். "ENNOIA" ''என்னொய்'' என்றால் ''எண்ணம்'' அல்லது கருத்து. மனமும் இருதயமும் நெருங்கிய உறவு கொண்டிருந்தாலும் அவைகள் வேறுபட்டது (எபிரெயர் 8:10, 16).[106]

பழைய ஏற்பாட்டில் ''மனதின்'' பொது கருத்தைப் பற்றி விவாதித்திருந்தாலும் அதில் ஒரு எபிரெய பதம் கூட இல்லை, அது இருதயம், ஆன்மா, ஆவி ஆகிய பதங்களின் அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ளது. ஆகையால் கிரேக்க மொழியில் பயன் படுத்தின முறையிருந்து நம் மனதைக் குறித்துப் புரிந்துகொள்ளுவோம்.

இரட்சிக்கப்பட்டவர்களுக்கும் இரட்சிக்கப்படாதவர்களுக்கும் மனம் உண்டு (ரோமர் 14:5). தேவன் கொடுத்த மனதை எவ் விதமாய் மனிதன் பயன்படுத்துகிறான் என்பது தேவனுக்கு முக்கியமானது. எபேசியர் 4:17-18; எபிரெயர் 4:12 வசனங்களில் ''என்னொய்'' என்பது ''நினைவுணுது என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது, கர்த்தருக்கு ''மனம்'' உண்டு, நாம் அதை அறி யும்படி நாட வேண்டும். (ரோமர் 11:34; 1 கொரிந்தியர் 2:16). நாம் அவரை நேசிப்பதற்கு அவர் நமக்கு மனதைத் தந்திருக்கிறார் (மத்தேயு 22:37; மாற்கு 12:30; லூக்கா 10:27). நாம் அவரைப் புரிந்து கொள்ள வேண்டும் (லூக்கா 24:45), பிதாவிலும் குமாரனிலும் கண்டுபிடிக்கப்பட்ட சத்தியத்தை அறிவதற்கு விசுவாசியின் மனது திட்டமிட்டிருக்கிறது (1 யோவான் 5:20ல்) ''டையனொய்'' என்ற வார்த்தை ''விளக்கிக்கொள்ளுதல்'' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது.

கர்த்தர் நமக்குக் கொடுத்த மனதினால் நேர்மையாய் ஆராய்ச்சி செய்ய முடியும், நம்மால் கணக்கு போன்றவற்றை செய்ய முடிவதால் இது நிரூபிக்கப்பட்டிருக்கிறது (வெளி 13:18). நேர்மையான எண்ணத்தின் விளைவுகளைப் புரிந்து கொள்ள முடியும் (வெளிப்படுத்தல் 17:9). அது ஒருவரது மனச்சாட்சியை நிலைநாட்டுகிறது (ரோமர் 7:23, 25). இந்த தனிப்பட்ட வளர்ச்சி மற்ற வர்களுக்குப் போதிக்கும் திறமையைத் தருகிறது. (1 கொரிந்தியர் 14:19). கிறிஸ்துவின் சரீரத்தில் ஒற்றுமையைக் கட்டும்படிக்கு வளர்ச்சி அடைய முடியும் (1 கொரி 1:10), மனம் தேவனுக்கும், தனக்கும் மற்றவர்களோடு உள்ள உறவிலும் உண்மையாயி ருக்க வேண்டும் (2 பேதுரு 3:1). மனமானது மனித ஆவியோடு சேர்ந்து இந்த எல்லா பகுதிகளிலும் பங்கேற்கத் திட்டமிட்டுப் படைக்கப்பட்டுள்ளது (1 கொரிந்தியர் 14:15).

மனம் தேவனுடைய ஊழியத்திற்குப் பயன்படுத்தக்கூடியதாக இருந்தாலும், (மாற்கு 12:30), அது தேவனுக்கு விரோதமாக செயல்படத் தீர்மானிக்கலாம் அல்லது தெய்வீகக் கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளாமல் கெட்டுப்போகலாம் (ரோமர் 1:28; 1 தீமோத்தேயு 6:5; 2 தீமோத்தேயு 3;8), அது மட்டுமல்ல, அது தேவனை எதிர்த்து நிற்கலாம் (கொலோசெயர் 1:21). ஆகவே, மனமானது தீட்டாக்கப்படலாம் (தீத்து 1:15).

ஒரு விசுவாசியின் மனமும் கூட பெருமையும் (1 கொரிந்தியர் 14:14) தன்னலமும் கொண்டு மாம்சத்துக்குரிய காரியங்களை நினைக்கலாம் (லூக்கா 1:51; எபேசியர் 2:3; கொலோசெயர் 2:18). கள்ளப் போதனையை உண்மையான கொள்கையாக ஏற்றுக் கொண்டால் மனம் அசைக்கப்படலாம் (2 தெசலோனிக்கேயர் 2:2). இதில் ''நௌஸ்'' "NOUS" மனதில் அசைக்கப்படாமல் இருக் கும் அமைதியைக் குறிக்கிறது.

அதிகமாகத் தேவனுக்கு நன்றி கூறும்போது, அவருடைய சித்தத்தை அறியும்படியாக மனம் புதுப்பிக்கப்படுவோம் (ரோமர் 12:2); பாவகரமான குறிக்கோள்களை விட்டுவிட முடியும் (எபேசியர் 4:22-24); செயல்பட தைரியம் கொடுக்கும் (1 பேதுரு 1:13); நாம் துன்பத்தை சந்திப்பதற்கு தயாராயிருக்கச் செய்கிறது (1 பேதுரு 4:1). (Missing part)

7. மாம்சம்

சில சமயங்களில் ''மாம்சம்'' என்ற பதம் சரீரத்தின் ஆக்க மூலப் பொருள் அல்லது அந்தப் பொருளின் மெய்மையாகிய ஓர் உயிருள்ள படைப்பின் மூலப்பொருளைக் குறிக்கிறது (ஆதியாகமம் 2:21; யாத்திராகமம் 12:8; லூக்கா 24:39; ஆதியாகமம் 6:17, 19; 1 கொரிந்தியர் 15:39; எபிரெயர் 5:7). ''மாம்சம்'' என்ற பதம் இறையியலாகப் பயன்படுத்தப்படுகிற முறையில் அது மனிதனு டைய பொருளுக்குரிய மற்றும் பொருளில்லாத காரியங்கள் இணைந்திருக்கின்றன என்பதைக் காட்டுகிறது.

இயேசு கிறிஸ்துவின் ஆள்தத்துவத்திலே தேவன் மாம்சம் ஆனார் (யோவான் 1:1, 14; 1 தீமோத்தேயு 3:16). அவர் தாவீதின் வழித்தோன்றியவர் (ரோமர் 1:3; 9:5). தேவன் உண்மையான மனிதன் ஆனார் என்று இது பொருள்படுகிறது. அவர் மாம்சத்தின் சாயலானார், ஆனால் அவருடைய மாம்சம் பாவமுள்ளதல்ல (ரோமர் 8:3). ஒரே சமயத்தில் அவர் தாவீதினுடைய ''ஆண்டவ ரும்'' மற்றும் ''குமாரனுமாக'' இருந்தார் என்று பொருள்படுகிறது (மத்தேயு 22:45). அவர் மனிதனுக்காக தேவனோடு சமாதான த்தை உறுதிப்படுத்தும்படியாகவும் சாத்தானுடைய அதிகாரத்தை உடைக்கும்படியாகவும் (எபிரெயர் 2:14) நம்முடைய பாவங் களைச் சுமக்கும்படியாகவும் வந்தார் (எபேசியர் 2:14-15; கொலோசெயர் 1:22-23). கள்ளப் போதகர்கள் இயேசு மெய்யாகவே மாம்சமாகவில்லை என்று கூறுவார்கள் (1 யோவான் 4:2; 2 யோவான் 1:7).

தேவன் மாம்சத்திலே வரவேண்டும் என்று பழைய ஏற்பாடு விளக்கியுரைத்தது, ஆசரிப்புக் கூடாரம் மற்றும் தேவாலயத்தின் ''திரை'', இயேசு மாம்சத்தில் வந்தபோது தேவனோடு மனிதனுக்கு நித்திய வழியைத் திறக்கும் என்பதன் சின்னமாக இருந்தது (எபிரெயர் 10:19-20; மத்தேயு 27:51). யூதர்கள் நாற்பது ஆண்டுகளுக்கு வனாந்தரத்தில் கடந்துபோனபோது, அவர்களைப் பாதுகாத்த ''மன்னா'', கிறிஸ்து தமது மாம்சத்தினாலே கொடுக்கும் விடுதலையின் மற்றும் ஆதாரத்தின் சின்னமாக இருந்தது (யாத்திராகமம் 16:31-35; யோவான் 6:51-56). தாவீதின் சங்கீதங்களில் ஒன்று மேசியாவின் மாம்சத்துக்கு அழிவில்லை என்று கூறியது. அது மரணத்திருந்து அவருடைய உயிர்த்தெழுதலையும் (சங்கீதம் 16:10; அப்போஸ்தலர் 2:31). ஜெபத்திற்கு தேவனு டைய பதிலையும் (எபிரெயர் 5:7) குறித்துக் காட்டியது.

கிறிஸ்துவினுடைய மாம்சத்தின் பாடுகளும், நோக்கமும் மனிதன் பின்பற்றுவதற்கு ஒரு மாதிரியாக ஆனது (1 பேதுரு 4:1-2). மனிதனுடைய மாம்சம் பாவத்தின் கோட்டையாகவும் பரிசுத்த ஆவியானவரோடு போராடுகிறதாகவும் வேதாகமத்தில் காணப் படுகிறது (கலாத்தியர் 5:16-17). பாவத்தின் பிரச்சினையையும் அதின் விளைவுகளையும் இன்னதென்று காட்டுவது பரிசுத்த ஆவியானவரின் கிரியை (யோவான் 16:8-11) ஆகும்.

தேவனுடைய வசனங்கள் மாம்சத்தின் குறிப்பிட்ட தன்மைகளை விளக்கியுரைத்திருக்கின்றன, ஆவியில்லாத மாம்சம் செத் தது (யோவான் 6:63), மாம்சம் மாம்சத்தை மட்டும் பிறப்பிக்கிறதினாலே, பரிசுத்த ஆவியானவர் மாம்சத்திற்கு ஆவியைத் தர வேண்டும் (யோவான் 3:6). நாம் நம்முடைய மாம்சத்தை நேசித்து ஆதரித்துப் பேணுகிறோம் (எபேசியர் 5:28-29), மாம்சத்துக்கு ஞானமும் உண்டு (1 கொரிந்தியர் 1:26-29).

மாம்சம் சோதனையை எதிர்த்து நிற்கப் பெலனின்றி இருக்கிறது (மத்தேயு 26:41). இரட்சிப்புக்கு முன் மாம்சத்திற்கு இடம் கொடுப்பது மனிதனுடைய இயல்பான நிலையாய் இருக்கிறது (எபேசியர் 2:3). ஆகவே, மாம்சமானது மனதின் எண்ணத்தைப் பாதிக்கிறது (கொலோசெயர் 2:18). மாம்சத்தின் இச்சைகளுக்கு இடம்கொடுப்பது அதிகாரத்தை விரும்பாத தன்மையையே வெளிப்படுத்துகிறது (2 பேதுரு 2:9-10). எனவே மாம்சீகமாகத் தங்களுக்கு மேல் அதிகாரத்தில் இருப்பவர்களுக்குச் சேவை செய்யக் கற்றுக்கொள்ளுவதின்மூலம் கிறிஸ்தவர்கள் வளர்ச்சி பெறுகிறார்கள் (எபேசியர் 6:5). மாம்சமானது எப்போதுமே தெய்வீகப் பிரமாணங்களின் தகுதிநிலைகளுக்கு விரோதமாக நடந்துகொள்ளுகிறபடியால், அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளுவது ஒரு போராட்டமாகவே இருக்கிறது (ரோமர் 7:5).

நாம் மாம்சத்தின்படி மற்றவர்களை நியாயந்தீர்க்கக் கூடாது என்றாலும் இருக்கிற நமது வாழ்க்கை மற்ற நபர்களால் நியாயந் தீர்க்கப்படும் (யோவான் 8:15). மாம்சத்துக்குரிய செயல்களின் அடிப்படையிலே நாம் மற்றவர்களைக் கனம்பண்ணக்கூடாது (2 கொரிந்தியர் 5:16). சடங்காச்சாரங்களிலும் நியாயமற்ற காரியங்களைக் குறித்தும் மாம்சத்திலே நம்பிக்கை வைக்கக்கூடாது. (பிப்பியர் 3:2-7) மாம்சத்தில் இருக்கிற நமது வாழ்க்கை தேவனுடைய சித்தத்தின்படி வாழ வேண்டும் (1 பேதுரு 4:6).

மாம்சத்துக்குப் பல பெலவீனங்கள் உண்டு. பாவத்திற்கு எதிர்த்து நிற்பதில் பெலவீனமாயிருக்கிறது (ரோமர் 6:19). உலகமானது மாம்சம் பாவத்திற்குரிய காரியங்களை விரும்புவதற்கு ஊக்கமளிக்கிறது (1 யோவான் 2:16). மாம்ச இச்சை பல பாவங்களைப் பிறப்பிக்கும். பாவி நித்திய ஆசீர்வாதங்களை இழப்பான் (கலாத்தியர் 5:19-21), மாம்சத்தின் தன்னல முயற்சிகள் மாம்சத்துக்கு அழிவைக் கொண்டுவரும் (கலாத்தியர் 6:8). கடைசியாக, மாம்சம் வாடிப்போகும் (1 பேதுரு 1:24-25). கள்ளப் போதகர்கள் இந்த மாம்சத்துக்குரிய விருப்பங்களை ஊக்குவித்து தம்மைப் பின்பற்றுகிறவர்களை கவருகிறார்கள் (2 பேதுரு 2:18-19).

பாலுறவு பகுதிகளில் மாம்சத்துக்குப் பெலவீனங்கள் உண்டு. திருமணம் என்பது ஒரே மாம்சமாக ஒரு ஆணும் பெண் ணும் இணைந்திருப்பதாகும். ஆகவே, மாம்ச இச்சை என்பது ஆணுடன் ஆணும் பெண்ணுடன் பெண்ணும் பாலுறவில் ஈடுபடுவதாகிய "வேறு" மாம்சத்தைத் தொடருவது ஆகும் (மாற்கு 10:8; யூதா 1:7). மாம்சத்தின் இச்சைகள் அழிவுக்கு நம்மை நடத்தும் (1 கொரிந்தியர் 5:5).

மாம்சமானது அதிகமாக மற்றும் வேகமாக மாற்றத்துக்கு ஆளாகக் கூடியதாக இருப்பது மற்றொரு பலவீனமாகும் (2 கொரிந் தியர் 1:17). இது விசுவாசியின் வாழ்க்கையில் ஸ்திரமில்லாத தன்மையை உருவாக்கக் கூடும். அவ்வப்போது எழும் தூண்டு தல்களுக்கு ஏற்றபடி நாம் நமது மனதை அடிக்கடி மாற்றிக் கொள்ளுவோமானால், நாம் அதிகமாகக் குழப்பமும் கலகமும் அடைய வேண்டியிருக்கும்.

மாம்சத்துக்குக் குறைபாடுகளும் உள்ளன. மாம்சத்துக்குச் செய்யப்படும் எதுவும் (விருத்தசேதனம் போன்றது) ஆவிக்குரிய தன்மையைச் சுட்டிக்காட்டவில்லை (ரோமர் 2:28). சடங்குகள் மாம்சத்தின் பலவீனங்களுக்கோ அல்லது குறைபாடுகளுக்கோ தீர்வாக மாட்டா (கொலோசெயர் 2:23; 1 பேதுரு 3:21).

நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளுவதின் மூலமாக மாம்சத்தை நீதியுள்ளதாக அறிவிக்க முடியாது (ரோமர் 3:19-20). மாம்சம் மட்டுமே நன்மையானதைச் செய்துவிடவும் முடியாது (ரோமர் 7:18). தேவனுடைய ஆசீர்வாதங்கள் மாம்சத்துக்கும் இரத்தத்துக் குமாக வடிவமைக்கப்படவில்லை (1 கொரிந்தியர் 15:50). மாம்சத்துக்கு தெய்வீக வெளிப்பாடு தேவைப்படுகிறது (மத்தேயு 16:17).

விசுவாசியின் வாழ்க்கையில் மாம்சத்துக்கு விரோதமான போராட்டம் உண்டு. ஒருவர் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் போது, அவர் இயேசு நமது மாம்சத்தின் பாவங்களுக்காகப் பாவ பரிகாரமாக மரித்தார் என்பதை உணர்ந்திருக்கிறார் (கலாத்தியர் 5:24). இந்த உண்மையை உணர்ந்துகொள்ள விசுவாசி ஒருவருக்கு ஆவிக்குரிய வளர்ச்சி தேவை. நன்கு வளர்ச்சியடையாத விசுவாசி தேவனுடைய கைகளில் எப்பொழுதும் பாதுகாப்பாகவும் (யோவான் 10:27-30) மற்றும் அவர் இயேசு கிறிஸ்துவின ாலே விடுதலை பெற்றிருப்பதையும் (கலாத்தியர் 5:1) என்றும் உணரலாம். ஆகவே அவர் தவறாக மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றத் தொடர்கிறார். தேவனில் கிடைத்த பாதுகாப்பும், விடுதலையும், மாம்சத்தின் இச்சைகளைப் பின்தொடர்வதற்கா கக் கொடுக்கப்படவில்லை. (கலாத்தியர் 5:13). இது ஆவிக்குரிய போராட்டத்தில் ஒரு பகுதியாயிருக்கிறது.

போராட்டத்தின் இன்னொரு பகுதி மாம்சத்துக்கு ஒரு சித்தம் உண்டு என்று உணருகிறது (யோவான் 1:12-13). மாம்சம் பாவம் செய்யும் நோக்கத்துடன் மனதோடும் (ரோமர் 7:25) பரிசுத்த ஆவியோடும் (கலாத்தியர் 5:16) போராடுகிறது. விசுவாசி மாம்சத் தின் பாவங்களைத் தொடரவோ அல்லது பரிசுத்த ஆவியானவரின் காரியங்களைத் தொடர்ந்து செய்யவோ தெரிந்தெடுக்க வேண்டும் (ரோமர் 8:3-13). பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாலே மட்டுமே மாம்சத்தின் ஆசைகளை மேற்கொள்ள முடி யும் (கலாத்தியர் 3:3; 5:16). நாம் சந்திக்கிற உண்மையான ஆவிக்குரிய போராட்டங்கள் மற்றவர்களுடைய மாம்சத்திருந்து வரு கிறதில்லை என்பதைக் கவனியுங்கள். (2 கொரிந்தியர் 10:2-3). மாறாக சாத்தானிருந்தும் அவனுடைய அதிகாரங்களிருந்துமே வருகின்றது (எபேசியர் 6:12).

நமது ஆவிக்குரிய பயணத்தில் ஒரு பகுதி என்னவென்றால் பரிசுத்தமாய் மாறுவதன்மூலம், மாம்சத்தின் எல்லா தீமையிருந்து சுத்திகரிக்கப்படுவதாகும் (2 கொரிந்தியர் 7:1). இயேசு நமது மாம்சத்தில் விளங்கும்படியாக (2 கொரிந்தியர் 4:11) அவரை நமது வாழ்க்கையில் அழைத்து மாம்ச இச்சைகளை விட்டுவிட வேண்டும் (ரோமர் 13:14). தேவனுடைய சரீரத்திற்கு நமது மாம்சம் ஒப்புக்கொடுக்கப்படும்படியாக (கொலோசெயர் 1:24) இயேசு கிறிஸ்துவில் உள்ள விசுவாச வாழ்க்கை மூலமாகவே விசுவாசி இது செய்யப்பட முடியும் (கலாத்தியர் 2:20), நம்மால் மாம்ச இச்சைகளை விட முடியும்.

தேவன் நம்மிடத்தில் அன்புகூருகிறார்; கர்வத்துடன் நம்மை நாமே உயர்த்தாதபடிக்கு நம் "மாம்சத்திலே ஒரு முள்" ளைக் கூடக் கொடுக்கலாம் (2 கொரிந்தியர் 12:7).

8. **பாவத்தன்மை**

ஆதாமுடைய பாவம் மனித இனத்தின் ஒவ்வொருவருக்கும் வழிவழியாக வந்ததை "பாவத்தன்மை" என்கிறோம். மனித இனத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் ஆதாமுடைய பாவத்தன்மையைப் பெற்று ஆக்கினைக்குள் தீர்க்கப்பட்டிருக்கிறார்கள் (ரோமர் 5:12-14; 18-19).

"பாவத் தன்மை" மாம்சத்தில் ஒரு பகுதியாயிருக்கிறது. ஒரு தனி நபரின் வாழ்க்கையில் தனிப்பட்ட பாவங்களைத் தூண்டி எழுப்புகிறது. மனிதனுடைய பாவத் தன்மையை "தேவனுடைய திட்டத்தின்" பகுதியில் படிப்போம்.

9. **சித்தம்**

மனிதனுடைய சித்தத்தைக் குறிப்பிடுவதற்கு இரண்டு கிரேக்க பதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் பதம் "தெலீமா" (THELEMA). இது ஒரு ஆசையைக் குறிப்பிடுகிறது. இரண்டாவது பதம் "பலீமா" (BOULEMA) இது ஒரு திட்டத்தை அல்லது வடிவைக் குறிக்கிறது. இரண்டும் தேவனுடைய விருப்பத்தை அல்லது திட்டத்தை அறிவிக்க அடிக்கடி பயன்படுத்தப்பட்டி ருக்கின்றன. ஆனால் மனிதன் தேவனுடைய சாயல் படைக்கப்பட்டிருப்பதினால், (மனிதனுக்கும்கூட ஒரு "சித்தம்" உண்டு). அவைகள் மனிதனுடைய விருப்பத்தையும் அறிவிக்கப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

மனிதனுடைய சித்தம் பலமுள்ளதாயிருக்கலாம். மனிதன் தேவனைத் தெரிந்துகொள்வதைப் போல, அவருக்கு விரோதமானவற்றையும் தெரிந்தெடுத்து (யோசுவா 24:15). அவன் ***"தனது மாம்சமும் மனதும் விரும்பினவைகளைச் செய்யலாம்"*** (எபேசியர் 2:3). தனக்குள்ளே இருக்கிற பாவத் தன்மையை மேற்கொள்ள மனிதனுடைய சித்தம் வமையற்றதாக இருக்கிறது (ரோமர் 7:15-21). கிறிஸ்துவின்மூலமாய் பரிசுத்த ஆவியானவர் ***"எல்லாவற்றையும் செய்யப்"*** பெலனளிக்கிறார் (பிப்பியர் 4;13).

ஒரு மனிதனுடைய சித்தம் எவ்வளவும் வமையாயிருந்தாலும், அதனால் அந்த மனிதனை இரட்சிக்க முடியாது அவருடைய நாமத்தில் விசுவாசமாயிருப்பதன்மூலம் இயேசு கிறிஸ்துவின் ஈவை ஏற்றுக்கொள்ள வேண்டும் (யோவான் 1:12-13; அப்போஸ்தலர் 4:12). ஒரு நபர் தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, அந்த நபர் இரட்சிப்பைப் பெற்று நித்திய ஜீவனை அடைவார் (யோவான் 6:39-40).

மனிதனுடைய சித்தம் தம்முடைய சித்தத்திற்கு ஒப்பாக இருப்பதை தேவன் விரும்புகிறார். இந்த உண்மையை இயேசு கிறிஸ்து தாமே போதித்தார் மற்றும் அதன்படி வாழ்ந்தார் (யோவான் 5:30; 6:38, 39). தாவீது சில சமயங்களில் படுதோல்வி அடைந்தாலும் தேவனுடைய சித்தத்தைச் செய்ய விரும்பினார். அதனால் அவர் "தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன்" (அப்போஸ்தலர் 13:22) என்று அழைக்கப்பட்டார்.

தேவனுடைய சித்தத்தைச் செய்யும் விருப்பம், அதைப் புரிந்துகொள்வதற்கு மிக முக்கியமானது (யோவான் 7:17). தேவன் தமது சித்தத்தைப் பற்றிய கல்வி அறிவை அல்ல மாற்றப்பட்ட வாழ்க்கையைத் தேடுகிறார். தேவனுடைய வார்த்தையை அதன்படி நடப்பதற்காக அன்றி அதை அறிந்துகொள்வதற்காக மட்டும் படிக்கும் ஒருவர் வாழ்க்கையை பற்றிய தவறான கண்ணோட்டமுள்ளவராகவே இருப்பார்.

மனுக்குலமானது பாதுகாக்கவும் (மத்தேயு 1:19), வழக்காடவும் (மத்தேயு 5:40), மற்றவர்களிடமிருந்து கடனாகப் பெறவும் (மத்தேயு 5:42) தனது சுயசித்தத்தைப் பயன்படுத்தவும் முடியும் என்று தேவனுடைய வார்த்தையிருந்து அறிகிறோம். மனுக்குலமானது கிறிஸ்துவைப் பின்பற்ற வேண்டுமென்று சித்தம்கொள்ள (மத்தேயு 16:24-25), மேன்மையடைய (மத்தேயு 20:26-27), கிறிஸ்துவில் பயபக்தியோடு வாழவும் (2 தீமோத்தேயு 3:12), மற்றவர்கள் தங்களை ஒரு குறிப்பிட்ட வகையில் நடத்த வேண்டுமென்று விரும்பவும் (மத்தேயு 7:12) முடியும் என்றும் காண்கிறோம்.

"சித்தம்" என்பது "விருப்பத்திற்கு" மேல் ஒரு படி முன் சென்றால் அது ஒரு "திட்டம" ஆகும். கிரேக்க பதம் "பலீமா" விருப்பங்கள் திட்டங்களாக ஆகின்றன என்பதைக் குறிக்கிறது. இந்த வார்த்தை அநேக இடங்களில் பலவிதமாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, ஆனால் எல்லா இடங்களிலும் ஒரு விருப்பதுடன் இணைந்து செல்லும் ஒரு திட்டத்தைக் கொண்டிருப்பது என்ற அர்த்ததுடன் வருகிறது. தேவனுக்கு ஒரு திட்டமிட்ட விருப்பம் உண்டு (ரோமர் 9:19). அந்தத் திட்டத்திற்குள் குமாரனுக்கு ஒரு குறிப்பிட்ட பங்கு உண்டு (மத்தேயு 11:27).

திட்டங்கள் மற்றவர்களைப் பாதுகாப்பதற்கு (அப்போஸ்தலர் 27:43), அவர்களுக்குத் தீங்கு செய்வதற்கு (யோவான் 11:53; 12:10; அப்போஸ்தலர் 5:33) அல்லது தம்மைத் தாமே பாதுகாப்பதற்கு (அப்போஸ்தலர் 27:39), உள்ள ஒரு விருப்பத்திருந்து உருவாக்கப்படலாம். பயணம் செய்வதற்கு (அப்போஸ்தலர் 15:37) உண்மைகளைக் கண்டுபிடிப்பதற்கு (அப்போஸ்தலர் 23:8) போரிடுவதற்கு (லூக்கா 14:31) பாவஞ்செய்வதற்கும்கூட (1 பேதுரு 4:3) திட்டங்களை உருவாக்கலாம். திட்டங்கள் தேவனிடமிருந்தும் அல்லது மாம்சத்திருந்தும் வரலாம் (2 கொரிந்தியர் 1:17).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 6, பகுதி 3

1. **வாசிக்கவும் ஆதியாகமம் 1:26. யாருடைய சாயல் மனிதன் படைக்கப்பட்டான்?**
2. **வாசிக்கவும் ஆதியாகமம் 2:7. தேவனுடைய சுவாசத்தின் மூலம் மனிதன் என்னவானான்?**
3. **வாசிக்கவும் ஆதியாகமம் 2:18. பெண் ஏன் படைக்கப்பட்டாள்?**
4. **வாசிக்கவும் 2 பேதுரு 2:12 மற்றும் யூதா 10. மிருகங்கள் செய்யாத எதை மனிதன் செய்கிறான்?**
5. **வாசிக்கவும் ஆதியாகமம் 2:16-17. ஆதாமுக்கு இருந்த தடை என்ன?**
6. **வாசிக்கவும் ஆதியாகமம் 2:17. தண்டனை என்ன?**
7. **வாசிக்கவும் ஆதியாகமம் 3:18-19. தேவனுடைய கட்டளையை மீறிய பின் மனிதன் மற்றும் மனுஷீயின் வாழ்க்கை எப்படி மாறியது?**
8. **வாசிக்கவும். கீழுள்ள பகுதிகளை வாசித்து மனிதனுடைய இயல்பின் முக்கிய மூலப் பொருள்களை கூறு?**
   a. ஆதியாகமம் 2:7
   b. யாக்கோபு 2:26
   c. ரோமர் 10:9-10
   d. 1 தீமோத்தேயு 4:2
   e. ரோமர் 12:2
   f. ஆதியாகமம் 2:21
   g. ரோமர் 5:12-14
   h. யோவான் 1:12-13

பகுதி 4
தேவதூதர்களின் போராட்டம்

தேவனுக்கும் சாத்தானுக்குமிடையே போர் நடந்துகொண்டிருக்கிறது என்ற உண்மை இந்த ஆய்வின்போது அநேக முறை குறிப்பிடப் பட்டுள்ளது. இந்தப் போர் ''தேவதூதர்களோடு போராட்டம்'' என்றழைக்கப்பட்டது. இப்போராட்டத்தின் விவரங்கள் விரிவானதாகவும் இப்புத்தகத்தின் அளவைவிடப் பெரியதாகவும் உள்ளது. ஆனாலும் இங்கு சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளவைகள். இது மனிதகுலம் ஏன் இங்கே இருக்கிறது என்ற நீண்டகால கேள்விக்குப் பதிலளிக்க உதவி செய்யும்.

மனிதனைப் படைப்பதற்கு முன்பாக ஒரு காலகட்டத்தில் மற்றொரு வகையான ஜீவிராசியை உருவாக்க வேண்டுமென்று தேவன் தெரிந்துகொண்டார். இந்த ஜீவிகள் ''தூதர்கள்'' என்றழைக்கப்பட்டனர். இவர்களில் முக்கியமான தூதனாகிய (Lucifer) லூசிபர் என்பவன் தேவனுடைய இடத்தை எடுத்துக்கொள்ள முயற்சித்தான் (ஏசாயா 14:12-14). லூசிபர் பாவஞ்செய்தான் (எசேக்கியேல் 28:11-19). இவன் பிசாசு என்றும் சாத்தான் என்றும் அறியப்படுபவனாக மாறினான் (வெளிப்படுத்தல் 12:9). சாத்தான், அவனுக்காகவும் அவனைப் பின்பற்றிய தூதர்களுக்கும் ஆயத்தம்பண்ணப்பட்ட நித்திய அக்கினியில் போடப்படும்படி தீர்ப்பளிக்கப்பட்டது. (மத்தேயு 25:41)

இந்தத் தீர்ப்பு இன்னும் செயல்படுத்தப்படாததால் சாத்தான் தேவனுடைய தீர்மானத்துக்கு மேல் முறையிட்டான். இது இயேசு கிறிஸ்துவின் ஆயிரம் ஆண்டு ஆட்சிக்குப்பின் நிறைவேற்றப்படும் (வெளி. 20:14). மனிதன் இவர்கள் இருவருக்கும் மத்தியில் இருப்பதால், தேவனுக்கும் சாத்தானுக்கும் இடையேயுள்ள இந்தப் போராட்டத்தின் தீர்வில் அவனுக்கும் ஒரு பங்கிருக்கிறது.

அப்போஸ்தலர் பவுல், விசுவாசிகளின் வாழ்க்கையை இந்தப் போராட்டம் பாதிக்கிறது என்று தெளிவாகக் கூறினார். அவர் எபேசியர் 6:12ல், ***"ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு."*** என்று சொன்னார். விசுவாசிகளுக்கு உண்மையான போராட்டம் சாத்தானோடும் அவனுடைய சேனைகளோடுமேயன்றி மற்ற மனிதர்களோடு அல்ல. இந்தப் போராட்டத்தில் பங்குபெற, ***"தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்"*** (எபேசியர் 6:13) என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தப் போராட்டங்கள் மற்றும் இதில் நம்முடைய சுருக்கமான பங்கு பற்றிய விவரங்கள் முழுமையாக இப்போது நமக்குத் தெரியாவிட்டாலும், ஒரு நாள் நமக்கு யாவும் வெளிப்படுத்தப்படும் (1 கொரிந்தியர் 13:12). இப்போதைக்கு நமக்குத் தெரிந்தது போதுமானது. நாம் விசுவாசத்தில் நடந்து (எபிரெயர் 11:6) தேவன்மீதும் ஒருவருக்கொருவர்மீதும் அன்பு செலுத்த வேண்டும் (மாற்கு 12:29-31).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 6, பகுதி 4

1. **வாசிக்கவும் ஏசாயா 14:12-14. சாத்தானின் உண்மையான பாவம் என்ன?**

2. **வாசிக்கவும் எசேக்கியேல் 28:11-19. சாத்தானின் உண்மையான பதவி என்னவாயிருந்தது?**

3. **வாசிக்கவும் மத்தேயு 25:41. அக்கினிக் கடல் என்ன காரணத்தால் உருவாக்கப்பட்டது?**

4. **வாசிக்கவும் வெளிப்படுத்தல் 20:14. சாத்தானும் அவனுடைய தூதர்களும் எப்போது அக்கினிக் கடல் எறியப்படுவார்கள்?**

5. **வாசிக்கவும் யோவான் 16:11. சாத்தானுக்கு ஏற்கனவே நடந்திருப்பது என்ன?**

6. **சாத்தான் ஏற்கனவே நியாயம் தீர்க்கப்பட்டிருக்கிறான். அவனுக்கு விதிக்கப்பட்ட தண்டனை இன்னும் நிறைவேற்றப்படவில்லை. நாம் என்ன முடிவுக்கு வரலாம்?**

7. **ஆதாம் மற்றும் ஏவாளை பாவம் செய்யப்பண்ணிய போதே சாத்தான் வீழ்ச்சியடைந்திருந்தான். சாத்தானின் வீழ்ச்சி எப்போது என்பதைப் பற்றி நாம் என்ன முடிவு செய்யலாம்?**

8. **சாத்தான் நியாயம் தீர்க்கப்பட்டதற்கும் தண்டனை நிறைவேற்றப்படுவதற்கும் இடையில் மனிதன் இருப்பதால், மனிதனுடைய வாழ்க்கைப் பற்றி நாம் என்ன முடிவுக்கு வரலாம்?**

9. **வாசிக்கவும் எபேசியர் 6:10-18. சாத்தானின் தந்திரங்களை ஜெயிக்க கிறிஸ்தவன் என்ன செய்ய வேண்டும்?**

அத்தியாயம் 7

தேவனுடைய திட்டத்தின் கோட்பாடுகள்

பகுதி 1
வெளிப்படுத்தல்: திருமறை (Bibliology)

திருமறை விளக்கவியல் மனிதனுக்கு தம்மைக் குறித்து தேவன் வெளிப்படுத்தின பகுதி திருமறையில் வெளிப்படுத்தல் சுவிசேஷமாக உள்ளது. அவர் படைத்த பொருளின் மூலம் தம்மை வெளிப்படுத்தியிருக்கிறார் (ரோமர் 1:20). ‘‘வெளிப்பாடு’’ என்பது ‘‘மறைக்கப்பட்ட பொருளை னுகாணவும்து மூடும் பொருளை எடுக்கவும்’’, எனப் பொருள்படும். தேவன் தாம் எழுதிய வார்த்தையின் மூலமாய் தம்மைத் தாமே அறியப்படவும், காணப்படவும் விட்டுவிட்டார். வரலாற்றின் யுகங்களில் பல்வேறு மனிதர்களுக்கு தேவன் தம்மை வெளிப்படுத்தின ார். தம்மைக் குறித்து அவருடைய வெளிப்பாட்டை எழுத அவர்களை எழுப்பினார். இது ஆவியின் ஏவுதல் என்று அழைக்கப்படுகிறது.

தேவன்தாமே இந்த வெளிப்பாட்டையும் ஆவியின் ஏவுதலையும் நேராக ஏவி அதைத்தாமே நிர்வகித்து மேற்பார்வை யிட்டதால் முதல் கைப்பிரதிகள் (original manuscripts) எந்தப் பிழையுமின்றி எழுதப்பட்டன. எனவே தேவனுடைய வசனங்கள் என்பதால், வேதாகமம் அவருடைய அதிகாரத்தைக் கொண்டுள்ளது. இதனால் ஆவிக்குரிய காரியங்களில் அது நமக்கு வழிகாட்டியாயிருக்கிறது.

கி.மு. 1450–400க்கு இடைப்பட்ட ஆண்டுகளில் தேவன் 39 வேறுபட்ட புத்தகங்களை எழுதுமாறு அநேக எழுத்தாளர்களை ஏவினார்; இவைகள் ஒன்றாகத் தொகுக்கப்பட்டுப் பழைய ஏற்பாடு என்றழைக்கப்பட்டது. கி.பி. 46–96 கால வரையில் அவர் இன்னும் அதிக எழுத் தாளர்களை கூடுதலாக 27 புத்தகங்களை எழுதும்படி ஏவினார், இதுவே புதிய ஏற்பாடு ஆனது. இந்தப் புத்தகங்களின் ஒன்று சேர்ந்த தொகுப்பு அங்கீகரிக்கப்பட்ட வேதவசனங்கள் (Canon of Scripture) என்று அழைக்கப்பட்டது. தேவனுடைய ஏவுதலாய் வேறுபட்ட எழுத்தாளர்கள் தேவன் தம்மை வெளிப்படுத்துமாறு இந்த எழுத்தாளர்களை ஊக்குவித்து இவற்றை எழுதச் செய்தார். இந்த எழுத்தா ளர்களின் எழுத்து மூலம், தேவனால் ஒரு அதிகாரத்தைக் காட்ட முடிந்தது.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 7, பகுதி 1

1. வாசிக்கவும் ரோமர் 1:20. அவருடைய சிருஷ்டியின் மூலம் தேவனைப் பற்றி தெளிவாகத் தெரிவது என்ன?
2. வெளிப்பாடு வரையறை கூறு.
3. உள்ளுணர்வு வரையறை கூறு.
4. தேவனுடைய வார்த்தை என்றவிதத்தில் வேதாகமம் என்னவாயிருக்கிறது?
5. ஆவிக்குரிய காரியங்களில், நம்மை வழி நடத்துவது எது?
6. பழைய மற்றும் புதிய ஏற்பாடுகள் சேர்ந்தது என்ன?
7. வாசிக்கவும் யோவான் 17:17. தேவனுடைய வார்த்தை எது?
8. வாசிக்கவும் சங்கீதம் 119 மற்றும் தேவனுடைய வார்த்தை பற்றி சொல்லப்பட்டவைகளைக் கூறு.

பகுதி 2
பிரச்சினை: பாவம் (Harmartiology)

A. அறிமுகம்

பொதுவாக பாவம் என்பது நன்கு நிலைநாட்டப்பட்ட ஒரு தெய்வீக தரத்தை மீறுவதாகும். பாவத்தை வரையரை செய்யத் தேவனே ஒரு தரத்தை ஏற்படுத்தவேண்டும் என்று கர்த்தருடைய வார்த்தை தெளிவாகக் கூறுகிறது. நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் பாவம் எண்ணப்படமாட்டாது (ரோமர் 4:15; 5:13), பாவத்தைக் குறிக்க எபிரெய மொழியில் சாட்டா (CHATA) என்ற சொல்லும் கிரேக்க மொழியில் ஹமார்ஷியா (HARMARTIA) என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. "இலக்கைத் தவறவிட்ட" என்பது இதற்கு அர்த்தமாகும். இது இலக்கை நோக்கி ஒரு அம்பை எய்தும் அது மையப் பகுதியை எட்டத் தவறுவதாகும். ஒருவர் சிறிதளவே விலகியிருந்தாலும் அதுவும் "இலக்கை எட்டத் தவறியதாகும்".

B. தேவனுடைய வார்த்தையில் மூன்றுவிதமான பாவங்கள் சொல்லப்பட்டுள்ளன

1. **சுமத்தப்பட்ட பாவம்**

பிறக்கும்போது மனித குலத்தில் ஒவ்வொரு நபரும் ஆதாமுடைய மூல பாவத்தின் பொறுப்பிலும் தண்டனையிலும் பங்கெடுக்கிறான். "சுமத்தல்" என்ற பதம் ஆதாமுடைய ஆதி பாவத்தினால் அவனுடைய பிள்ளைகளாகிய நம்மெல்லார் மேலும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்று பொருள்படும். ரோமர் 5:12 கூறுகிறதாவது, ***"ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று."*** மறுபடியும் ரோமர் 5:18-19ல், ***"அது ஒரே மீறுதலாலே*** (ஆதாம் செய்த பாவத்தினாலே) ***எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரே நீதியினாலே எல்லா மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதனாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்."*** ஆதாமுடைய பாவமும் அதின் விளைவான ஆக்கினைத்தீர்ப்பும் மனித குலத்தில் அனைவருக்கும் செலுத்தப்பட்டது.

இந்தப் பாவம் உலகத்திலுள்ள தகப்பன் மூலம் செலுத்தப்படுகிறதைக் கவனிப்பது முக்கியமானது. இயேசுவுக்கு ஒரு பூமிக்குரிய தகப்பன் இல்லை, ஆனால் விண்ணுலகுக்குரியவர் இருந்தார். ஆகவே, ஆதாமுடைய பாவம் அவர் மேல் சுமத்தப்படவில்லை.

2. **இயற்கையாக மனிதனில் உள்ள பாவம்**

"சாட்டப்பட்ட பாவத்தின்" விளைவினால் ஒவ்வொருவரும் தனிப்பட்ட பாவங்களைச் செய்யும் ஓர் இயல்பைப் பெறுகிறார்கள். இது "பாவ இயல்பு" அல்லது "பழைய மனிதன்" என்று கூறப்படுகிறது. ஆதாமுடைய பாவத்தின் விளைவாகிய ஆக்கினைத்தீர்ப்பு நீக்கப்பட்டிருந்தாலும் (ரோமர் 6:6; 8:1) நமது சரீர மரணம் வரைக்கும் பாவ இயல்பு நம் எல்லாரையும் தொடரும்.

ரோமர் 7:16-18ல் பவுல் பாவ இயல்பைக் குறித்து அவருடைய போராட்டத்தைப் பற்றி எழுதினார். ***"இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே. ஆதலால் நான் அல்ல, எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது. அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்தில்லை."*** இந்தப் பகுதியிருந்து பவுலும் கூட அவருடைய பாவ இயல்பினால் சில போராட்டங்களில் தோல்வி அடைந்தார் என்று நாம் முடிவுக்கு வரலாம். இது பரிசுத்த ஆவியோடுகூட உள்ள ஒரு போராட்டம் என்று கூறுகிறார் (கலாத்தியர் 5:16-17). விசுவாசி ***"பழைய மனிதனை களைந்து போடவேண்டும்"*** (எபேசியர் 4:20-22).

இயேசுவுக்கு "சாட்டப்பட்ட பாவமோ" அல்லது "இயற்கையாய் அமையப்பெற்ற பாவமோ" இல்லை.

3. **தனிப்பட்ட பாவம்**

தனிப்பட்ட பாவங்கள் என்றால் தேவனுடைய தரத்தை மீறுகின்ற பாவங்கள். நாம் இனி மோசேயின் நியாயப்பரமாண சடங்காச்சாரங்களின் கீழ் இல்லாவிட்டாலும், அதில் போதிக்கப்பட்ட நெறிமுறை ஒழுங்குகள் பின்பற்றத்தக்கவை. பவுல் 1 தீமோத்தேயு 1:8-10ல் கூறுகிறதாவது: ***"ஒருவன் நியாயப்பிரமாணத்தை நியாயப்படி அநுசரித்தால், நியாயப்பிரமாணம் நல்லதென்று அறிந்திருக்கிறோம். எங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் நீதிமானுக்கு விதிக்கப்படாமல், அக்கிரமக்காரருக்கும், அடங்காதவர்களுக்கும், பக்தியில்லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், அசுத்தருக்கும், சீர்கெட்டவர்களுக்கும், தாய் தகப்பன்மாரை அடிக்கிறவர்களுக்கும், கொலைபாதகருக்கும், வேசிக்கள்ளருக்கும், ஆண்புணர்ச்சிக்காரருக்கும், மனுஷரைத் திருடுகிறவர்களுக்கும், பொய்யருக்கும், பொய்யாணை இடுகிறவர்களுக்கும்,"*** விதிக்கப்பட்டிருக்கிறது. மாம்ச செயல்கள் என்று அழைக்கப்பட்ட மற்ற பாவங்கள் கலாத்தியர் 5:19-21ல் கூறப்பட்டிருக்கின்றன. ***"மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்."***

C. தனிப்பட்ட பாவங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. **மனதால் செய்யும் பாவங்கள்**

தனிப்பட்ட பாவங்களில் முதல் வகை ஒருவன் சிந்திக்கும் முறையைக் குறிக்கிறது. மத்தேயு 5:28ல் இயேசு கூறுகிறதாவது: ***"நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று."*** நமது மனதிலும் நமது எண்ணங்களிலும் பாவங்கள் எழும்பலாம். அவைகள் பரிசுத்த எண்ணங்களாக இல்லை அவைகள் பாவங்கள் தான். நாம் பரிசுத்தமாய் இருக்க வேண்டும் என்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம். "நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே" (1 பேதுரு 1:16). மோசேயின் நியாயப்பிரமாணத்தின் 10வது கட்டளையில் "இச்சை" என்ற மனதின் பாவம் தடைச்செய்யப்பட்டுள்ளன (யாத்திராகமம் 20:17).

மற்ற தனிப்பட்ட பாவங்களைப் போல, மனத்தால் செய்யும் பாவம், அன்பின் சட்டத்தை மீறுகிறது. யாக்கோபு 2:8-9ல் காணப்படுகிற பட்சபாதம் என்ற மன பாவத்தின் உதாரணமாக: ***"உன்னிடத்தில் நீ அன்புகூருகிறது போலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரிக பிரமாணத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள். பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து, மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்."*** அடிக்கடி மனதால் செய்யும் பாவங்கள் வெளிப்படையாகக் கூடிய பாவமாக மாறுகிறது.

2. **நாவினால் செய்யும் பாவங்கள்**

தனிப்பட்ட பாவங்களில், இரண்டாவது வகை ஒருவர் பேசுவதைக் குறிக்கிறது. யாக்கோபின் புத்தகம் நாவினால் வரும் தீமைகளைக் குறித்த நீண்ட ஒரு பகுதியை உள்ளடக்கியுள்ளது (3:1-10). ஒன்பதாவது கட்டளையில் நாவின் பாவங்கள் தெளிவாய்க் குறிக்கப்பட்டிருக்கின்றன. ***"பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக"*** (யாத்திராகமம் 20:16). சாத்தானாகிய ("எதிரி" என்று அர்த்தம்) பிசாசு ("தூற்றுபவன்" என்று அர்த்தம்) பேச்சு மூலமாக மற்றவர்களைப் புண்படுத்துவதில் வல்லவனாகயிருக்கிறான். நாம் பேசும் வார்த்தைகள் தேவனிடமும் மனிதரிடமும் நாம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தாவிட்டால் அதுவே பாவத்தின் முக்கிய தன்மையாக இருக்கிறது.

3. **வெளிப்படையான பாவங்கள்**

தனிப்பட்ட பாவங்களின் மூன்றாவது வகை ஒருவர் செய்பவைகளைக் குறிக்கிறது. இவைகளே பொதுவாக மனிதன் செய்கிற செயல்களாகும். இந்தப் பாவங்களைக் குறித்து மூன்று தெளிவான உதாரணங்களை 6ம், 7ம், 8ம் கற்பனைகளில் காணலாம்:

*1. **"கொலை செய்யாதிருப்பாயாக"***
*2. **"விபசாரம் செய்யாதிருப்பாயாக"***
*3. **"களவு செய்யாதிருப்பாயாக"***

யாக்கோபு 4:17 கூறுகிறதாவது, ***"ஒருவன் நன்மைச்செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்."***

சில பாவங்கள் இப்பொழுது குறிப்பிட்ட எல்லா பிரிவுகளையும் உள்ளடக்கியதாயிருக்கும் என்று அறிவது முக்கியம். கொலை மனதினாலும் நாவினாலும் ஒருவருடைய உயிரை எடுக்கும் செயனாலும் செய்யலாம் என்று இயேசு தெளிவாய் போதித்தார் (மத்தேயு 5:21-23).

இயேசு கிறிஸ்து எந்த விதமான தனிப்பட்ட பாவமும் செய்யவில்லை (1 பேதுரு 2:22).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 7, பகுதி 2

1. **வாசிக்கவும் ரோமர் 4:15 மற்றும் 5:13. பாவம் ஏற்படுவதற்கு எது அவசியம்?**

2. **வாசிக்கவும் ரோமர் 5:12 மற்றும் 5:18-19. ஆதாமுடைய உண்மையான பாவத்தின் விளைவு என்ன? ஏன்?**

3. **வாசிக்கவும் ரோமர் 7:16-18. பாவ இயல்பு எங்கு தங்குகிறது?**

4. **வாசிக்கவும் கலாத்தியர் 5:19-21. தனிப்பட்ட பாவங்கள் எப்படி அழைக்கப்படுகிறது?**

5. **வாசிக்கவும் மத்தேயு 5:28. எவ்விதமான பாவத்தை இது கூறுகிறது?**

6. **வாசிக்கவும் யாக்கோபு 3:1-10. எவ்விதமான பாவத்தை இது கூறுகிறது?**

7. **வாசிக்கவும் யாத்திராகமம் 20:13-15. எவ்விதமான பாவத்தை இது கூறுகிறது?**

8. **கலாத்தியர் 5:19-21 இல் பல்வேறு பாவங்கள் சொல்லப்பட்டுள்ளன. அவைகள் முக்கியமாக மனரீதியானவைகளோ, பேச்சு சார்ந்ததா அல்லது வெளிப்படையானதா என்று கண்டு பிடியுங்கள். சில ஒன்றுக்கு மேற்பட்ட வகையைச் சேர்ந்ததாயிருக்கலாம். தேவைப்படுகிற இடங்களில் மேலும் வினக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.**

a. விபச்சாரம்
b. அசுத்தம் (மதச் சடங்குகளினால் அசுத்தமாகுதல்
c. வேசித்தனம் (முறை தவறிய பாலுறவு
d. விக்கிரகாராதனை
e. பில் சூனியம்
f. பகைகள் (பதவிக்காக மறைவான தாகம்)
g. விரோதங்கள் (வாக்குவாதங்கள்)
h. பொறாமை (பொருட்கள் சேர்க்க வேண்டும் என்ற வழி தவறிய ஆசை)
i. கோபங்கள்
j. சண்டைகள் (சுய நல நோக்கம்)
k. பிரிவினைகள் (தவறான பிரிவுகள்)
l. மார்க்கபேதங்கள் (துர் உபதேசத்தால் வரும் பிரிவினை)
m. பொறாமைகள் (மற்றவர்களின் உடைமைகள் மீது தவறான ஆசை)
n. வெறிகள்
o. களியாட்டுகள் (மது குடிக்கும் கூட்டங்கள்)

பகுதி 3
தீர்வு: இரட்சிப்பு (Soteriology)

A. அறிமுகம்

இயேசு கிறிஸ்துவைத் தவிர எல்லா மனிதர்களுக்கும் பாவம் என்ற பிரச்சினை இருப்பதால், எல்லா மனிதர்களும் பாவத்தினால் வரும் தண்டனையிருந்து இரட்சிக்கப்பட வேண்டும். ஒருவர் இரட்சிக்கப்படும்படியாக தேவன் தமது சர்வ ஏகாதிபத்தியத்திலும், தமது எல்லாம் அறிகிற அறிவினாலும் ஒரு திட்டத்தை வகுத்தார். அந்தத் திட்டத்துக்கு ஒரு கிரயம் இருந்தது. அக்கிரயம் இயேசுவின் ஜீவனே. வேறு எந்த மனிதனும் கொடுக்க முடியாத விலையைக் கொடுத்து இயேசு பிதாவின் நீதியையும் நேர்மையையும் திருப்திப்படுத்தினார். அது பாவத்திற்கான விலையாகும். மனுகுலம் விசுவாசத்தினாலே இயேசுவின் பயில் பங்குபெற அழைக்கப்பட்டிருக்கிறான் (2 கொரிந்தியர் 8:9).

B. சுவிசேஷம்

சுவிசேஷம் என்றால் ‘‘நற்செய்தி’’. இதை எளிதாகக் கூறினால், நற்செய்தி என்பது ‘‘கிறிஸ்துவிலே மட்டும் உள்ள விசுவாசத்தினாலே மாத்திரம்’’ கிடைக்கும் இரட்சிப்பு. அப்போஸ்தலர் 16:30ல் ரோம சிறைச்சாலைக்காரன் பவுலைப் பார்த்து ‘‘இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?’’ என்று கேட்டான். பவுல் ‘‘கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்’’ என்றார். (16:31)ல் இரட்சிக்கப்படுவதற்கு இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது மட்டுமே அவசியம் என்று தெளிவாய்க் காண்கிறோம். (யோவான் 3:16, 18, 36). மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை (அப்போஸ்தலர் 4:12).

தேவன் எல்லா மனிதர்களும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று விரும்புகிறார் (1 தீமோத்தேயு 2:4; 2 பேதுரு 3:9). ஆகவே எல்லா மனிதர்களையும் தம்மிடத்திற்குக் கொண்டுவரும்படி (யோவான் 12:32) இயேசு கிறிஸ்து அவர்களுடைய பாவங்களுக்காகக் கிரயம் செலுத்தினார் (1 யோவான் 2:2). பரிசுத்த ஆவியானவர் உலகத்திற்குப் பாவத்தின் பிரச்சினையைக் கண்டித்து உணர்த்தி இயேசு கிறிஸ்துவையே தீர்வாக வெளிப்படுத்துகிறார் (யோவான் 16:7–15).

இயேசு கிறிஸ்துவைக் குறித்து ஒவ்வொருவரும் ஏற்றுக்கொள்ள வேண்டிய உண்மைகள் அவர் தேவனாய் இருந்து மனிதனானார் (யோவான் 1:1, 14) ; அவர் மனிதனுடைய பாவங்களுக்காக மரித்தார்; அவர் அடக்கம் பண்ணப்பட்டார். இது அவர் உண்மையாகவே மரித்ததைக் குறிக்கிறது. மூன்றாவது நாள் அவர் தம் சரீரத்தோடு மரித்தோரிருந்து எழுப்பப்பட்டார் (1 கொரிந்தியர் 15:3–5).

C. கிருபை

கிருபை என்பது, சம்பாதிக்க முடியாத ஒன்றை தகுதியற்றவர்களாகிய நாம் இலவசமாகப் பெற்றுக்கொள்வது நமது வேலைக்குத் தக்கபடி நாம் பணத்தைப் பெற்றால் நாம் அதைச் சம்பாதித்தோம் எனலாம். நாம் இரட்சிப்பில் பெறுகிற கிருபை தேவனிடமிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் ஒரு ஈவாக இருக்கிறது. வேதத்தில் ***“கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினாலே உண்டானதல்ல;”*** (எபேசியர் 2:8–9) என்று வாசிக்கிறோம். நாம் விசுவாசத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிற இரட்சிப்பின் ஈவை தேவனுடைய கிருபை அளித்தது. சுவிசேஷம் தேவனுடைய கிருபையை விளக்கிக் கூறுகிறது (அப்போஸ்தலர் 20:24).

இயேசு கிறிஸ்துவே மனிதனுக்கு கிருபையின் மாதிரியாக இருந்தார். (யோவான் 1:14–17).

D. விசுவாசம்

விசுவாசம் என்பது நம்பிக்கையாகும். தகுதியானது விசுவாசிக்கப்படுகிற பொருளில் இருக்கிறதேயல்லாமல் விசுவாசிக்கிறவரில் இல்லை. இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுக்கொள்வதே இரட்சிப்பையளிக்கிறது. விசுவாசம் ஒரு கிரியை அல்ல.

மனிதர்களாகிய நாம் நமது இரட்சிப்பைச் சம்பாதிக்க விரும்புகிறோம். மேலும் பலர் தேவனுடைய கிருபையினால் இந்த ஈவை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, தங்கள் இரட்சிப்புக்காக கிரியை செய்ய வேண்டும் என்று நம்புகிறார்கள். தேவன் ***“நம்மை நற்கிரியை செய்கிறதற்குச் சிருஷ்டித்தார்”*** என்பது உண்மைதான். (எபேசியர் 2:10). ஆனால் நமது இரட்சிப்பைச் சம்பாதிக்கிறதற்கு முயலாமல், அதின் விளைவான நற்கிரியைகளை நாம் செய்ய வேண்டும்.

கிறிஸ்து ஊழியஞ்செய்த ஒரு சமயத்தில், அவர் நித்திய வாழ்வைப் பற்றிப் போதித்தார். அவர் அதை ஒரு ஈவு என்று கூறினார் (யோவான் 6:26–27). மக்கள் இயேசுவைப் பார்த்து ***“தேவனுக்கேற்ற கிரியைகளை நடப்பிக்கும்படி நாங்கள் என்ன செய்ய வேண்டும்”*** என்றார்கள் (யோவான் 6:28). முடிவில் அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: ***“அவர் அனுப்பினவரை நீங்கள் விசுவாசிப்பதே தேவனுக்கேற்ற கிரியையாயிருக்கிற”*** என்றார் (யோவான் 6:29). இரட்சிக்கப்பட நீங்கள் கிரியை செய்ய வேண்டும் என்று விசுவாசிப்பீர்களானால், அந்த நம்பிக்கையே ஒரு கிரியை என்றே அவர் சுட்டிக்காட்டுகிறார். நமது விசுவாசம் ஒரு ‘‘கிரியையாக’’ இருக்குமானால் (ஆனால் அது ‘‘கிரியை’’ அல்ல), அது அந்த ‘‘கிரியை’’ தேவனுடைய பிரம்மாண்டமான இரட்சிப்பின் கிரியைக்கு முன்னால் ஒன்றுமில்லாததாகிவிடுகிறது.

தேவன் ஒவ்வொரு நபருக்கும் விசுவாசிக்கும் திறமையையும், தெரிந்துகொள்ளும் திறமையையும் கொடுத்திருக்கிறார். ***“தேவனுடைய சாயல் படைக்கப்பட்டதை”*** இது காட்டுகிறது (ஆதியாகமம் 1:26–27). மனிதனுக்குத் தெரிந்துகொள்வதற்கு திறமை கொடுக்கப்பட்டிருந்தாலும், அவன் ஒவ்வொரு தடவை சரியானதைத் தெரிந்துகொள்வான் என்று கூறமுடியாது. தெரிந்தெடுக்கும் திறமையானது, ஒவ்வொரு மனுஷனும் மனுஷியும் தன்னுடைய தெரிந்தெடுப்பிற்கு பொறுப்புள்ளவனாக்குகிறது. ஒவ்வொரு மனிதனும் தீர்மானிக்க உரிமையுள்ளவனாயிருப்பதினால், கிறிஸ்துவைத் தெரிந்தெடுக்காதவர்கள் அவருக்கு விரோதமானதைத் தெரிந்தெடுத்தார்கள் (மத்தேயு 12:30; யோவான் 3:18) எனலாம். கிறிஸ்துவைத் தெரிந்தெடுப்பது இரட்சிப்பையும் பரலோகத்தில் நித்திய ஜீவனையும் கொண்டுவருகிறது. கிறிஸ்துவுக்கு விரோதமாய்த் தெரிந்தெடுப்பது அழிவையும் நரகத்தில் நித்திய வாழ்க்கையையும் கொண்டு வருகிறது (யோவான் 3:36).

E. மனந்திரும்புதல்

மனந்திரும்புதல் என்பதற்கு "மனதை மாற்றுவ"து என்று அர்த்தம். ஒரு நம்பிக்கை இன்னொரு நம்பிக்கையாக மாறியிருக்கிறது என்று அர்த்தம். இயேசு கிறிஸ்து மனிதர் கெட்டுப்போகாதபடிக்கு ஒவ்வொரு அவிசுவாசியும் தங்கள் மனதை மாற்றிக் கொள்வதை விரும்புகிறார். (2 பேதுரு 3:9; அப்போஸ்தலர் 20:21). இயேசு அவர்களுக்காக பாவத்தின் கடனைத் தீர்த்தார், என்று அர்த்தமாகிறது (லூக்கா 24:45-47). மனதின் மாற்றம் கிறிஸ்தவனின் புது வாழ்வுக்கு அஸ்திபாரமாக இருக்கிறது (எபிரெயர் 6:1).

தாங்கள் உண்மையென்று விசுவாசித்த ஒன்று உண்மையல்ல என்பதை அறியும்போதும் (2 தீமோத்தேயு 2;24-25), தாங்கள் பாவமாக உணராத ஒன்று பாவமென்று அறியும்போதும் (2 கொரிந்தியர் 7:9-10) விசுவாசிகள் தங்கள் மனதை மாற்றிக்கொள்ள வேண்டியிருக்கும். அவர்கள் இந்தப் பாவங்களை (எல்லாப் பாவங்களையும்) தேவனிடம் அறிக்கையிட வேண்டும் (1 யோவான் 1:9).

F. நீதிமானாக்குதல்

நீதிமானாக்குதல் என்றால், ஒருவனை நீதிமானாக பிரகடனம் செய்வது என்று அர்த்தம். பாவியாகிய மனிதன் நீதிமானல்ல. அது மட்டுமல்ல, பரிசுத்த தேவனோடு உறவுகொள்வதற்கு வேண்டிய நீதியை அடைய முடியாது (ஏசாயா 64:6; ரோமர் 3:20). இது மனிதனுக்கு ஒரு பெரிய பிரச்சினை உண்டாக்குகிறது. ஒருவன் தேவனுடைய பிரசன்னத்தில் பிரவேசிக்க வேண்டிய அளவு நீதிமானாக மாறுவது எப்படி? இந்தக் கோட்பாட்டில் இதற்கான பதில்கள் காணப்படுகின்றன.

ரோமர் 3:19-4:5ல் மையப் பொருள் உள்ளது. அது (1) ஒருவனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே நீதிமானாக்கப்பட முடியாது (3:20; கலாத்தியர் 2:16; 3:24 உடன் ஒப்பிடுக). (2) நீதிமானாக்கப்படுதல் கிருபையின் ஈவாக இருக்கிறது. கிறிஸ்து பாவத்திற்கான கடனை தீர்த்தார் (மீட்டுக் கொண்டார்). தேவனுடைய நீதியின் மற்றும் நேர்மையின் வேண்டுகோள்களைச் சந்தித்தார் (நிவர்த்தி செய்தார்) (3:24). (3) நீதிமானாக்குதல் இயேசுவிலே வைக்கும் விசுவாசத்தின் மூலமாய் கிடைக்கும் (3:26) என்பதே. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் நபருக்கு அவருடைய நீதியைக் கொடுத்து நீதிமானக பிரகடனம் செய்கிறார்..

இயேசு கிறிஸ்துவில் வைத்த விசுவாசத்தைக் கொண்டு கிருபையினால் நீதிமானாக்கப்படுதல் சமாதானத்தை நமக்கு அளிக்கிறது (ரோமர் 5:1). தேவ நீதியின் விளைவாக நேரிடுகிற அவருடைய கோபாக்கினையிருந்து நமக்கு விடுதலை அளிக்கிறது (ரோமர் 5:9). பாவத் தன்மையினாலே நமக்கு வர இருக்கும் ஆக்கினைத்தீர்ப்பிருந்து நமக்கு விடுதலை அளிக்கிறது (ரோமர் 6:7). அது நமக்கு கிறிஸ்துவுடன் ஒரு சுதந்திரத்தைக் கொடுக்கிறது (தீத்து 3:4-7).

G. பரிசுத்தமாகுதல்

பரிசுத்தமாகுதல் என்பதற்கு நாம் பரிசுத்தவான்களாகப் பிரித்தெடுக்கப்பட்டோம் என்று பொருள். பரிசுத்தம் தேவனுடைய நீதியினாலும் நேர்மையினாலும் அளவிடப்பட்டிருக்கிறது. கிருபையினாலே இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்தைக் கொண்டு ஒரு நபர் நீதிமானாக்கப்பட்டிருக்கும்போது, அவர் கிறிஸ்துவினாலே (அப்போஸ்தலர் 26:18 எபிரெயர் 2:11). ஒரே தடவை ஒப்புக்கொடுத்த பயின் மூலமாகவும் பரிசுத்த ஆவியினாலேயும் (2 தெசலோனிக்கேயர் 2:13; 1 பேதுரு 1:2) பரிசுத்தமாக்கப்பட்டார் (எபிரெயர் 10:10-14; 13:12) நாம் விசுவாசிகளாகும்போது இந்தப் பரிசுத்தமாகுதலை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் (எபிரெயர் 12:14).

இந்த ஆரம்ப பரிசுத்தமாகுதல் விசுவாசியின் வாழ்க்கை பாவமில்லாமல் பரிசுத்தமாகிவிடும் என்று உறுதியளிப்பதில்லை. கொரிந்து சபையார் வாழ்க்கையில் ஏறக்குறைய ஒவ்வொரு பகுதியிலும் தவறுசெய்தார்கள். இருப்பினும் அவர்கள் கிறிஸ்துவில் பரிசுத்தமாக்கப்பட்டு பரிசுத்தவான்களாக இருந்தார்கள் (1 கொரிந்தியர் 1:2, 30; 6:9-12).

விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையில் பரிசுத்தத்துக்குத் தகுதிநிலையாகக் கிறிஸ்துவையே கொண்டிருக்க வேண்டும் (1 தெசலோனிக்கேயர் 4:3, 4, 7; எபேசியர் 5:25-26; 1 பேதுரு 3:15). இதில் இரட்சிக்கப்பட்ட வேளையில் பரிசுத்தமாக்கப்பட்டதைத் தொடர்ந்து பரிசுத்தமாக்கப்படுதல் முன்னேறுவது அடங்கி இருக்கிறது (ரோமர் 6:19; 1 தெசலோனிக்கேயர் 5:23). தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தை விசுவாசிப்பது (யோவான் 17:17-19) மற்றும் எந்தவொரு நற்கிரியையும் செய்யும்படி பயன்படுத்தப்படுவதற்காக ஒருவர் சுத்திகரிக்கப்படும்படி தனது வாழ்க்கையை எஜமானருக்கு ஒப்புக்கொடுப்பது (2 தீமோத்தேயு 2:21) மூலம் இது சாத்தியமாகிறது. அப்போது விசுவாசிகளின் பகள் பரிசுத்த ஆவியானவரால் கிறிஸ்துவுக்கென்று தனித்து வைக்கப்படுகின்றன (ரோமர் 15:15-16). இப்படிச் செய்யாதவர்கள் கிருபையை இழிவுபடுத்துகிறார்கள். கர்த்தரிடமிருந்து அவர்கள் கடுமையான சிட்சையை எதிர்நோக்க வேண்டியிருக்கும் (எபிரேயர் 10:29).

H. மன்னிப்பு

மன்னிப்பு என்பதற்கு "அனுப்பிவிடுவ" என்று அர்த்தம். இது "அஃபீயெமி - APHIEMI" என்ற கிரேக்க வார்த்தையிருந்து வருகிறது. அதை "விட்டு விடு" என்று மொழிபெயர்க்கலாம் மத்தேயு 4:20, 22; 5:24). அதாவது இன்னொரு இடத்திற்குப் போகும்போது ஒரு இடத்தை விட்டுவிடுவது போல, பாவங்களை விட்டுவிடுவதாகும். அவைகள் இனிமேலும் சுமக்க வேண்டிய ஒரு பாரம் அல்ல. இயேசு கிறிஸ்துவின் சிலுவைக்கு முன், பாவங்களும் மீறுதல்களும் மூடப்பட்டிருந்தன என்று சொல்லப்படுகிறது. அதாவது பாவங்கள் இருந்தன, ஆனால் அவைகளுக்கான நியாயத்தீர்ப்பு தடுத்து நிறுத்தப்பட்டிருந்தது (சங்கீதம் 32:1; ரோமர் 4:7 உடன் ஒப்பிடவும்). பாவபரிகாரம் செய்தல் என்பதற்கு மூடுவது என்று அர்த்தம். சிலுவையில் கிறிஸ்துவினுடைய பயோடு "பாவங்களை அனுப்பிவிடுவ"து அல்லது "மன்னிப்பு" வந்தது (மத்தேயு 26:27-28). பாவ மன்னிப்பு யோவான் ஸ்நானகன் (லூக்கா 3:3-4) மற்றும் இயேசு கிறிஸ்துவின் (லூக்கா 4:18-19; அப். 5:31) செய்தியின் முக்கிய பகுதியாய் இருந்தது. நமக்குச் செலுத்த வேண்டிய காரியங்களுக்காகவும் (மத்தேயு 6:12-15), பாவங்களுக்காகவும் (மத்தேயு 9:2-6) அல்லது இருதயத்தின் தவறான நோக்கங்களுக்காகவும் (அப்போஸ்தலர் 8:22) மன்னிப்பு ஏறெடுக்கப்படலாம்.

இரட்சிப்பைப் பெறுவதற்கு முக்கியமான ஒன்று பாவ மன்னிப்பாகும். (லூக்கா 1:77). பாவிகள் தேவனுக்குப்பட்ட கடனுக்கு கிரயம் செலுத்திய கிறிஸ்துவின் ப அவருடைய மன்னிப்பின் அடிப்படையாய் இருந்தது (எபேசியர் 1:7; கொலோசெயர் 1:13-14; எபிரெயர் 9:22).

ஒரு நபர் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது அவன் பாவ மன்னிப்புப் பெறுகிறான் (அப்போஸ்தலர் 10:43; 26:18). பாவத்தினால் உண்டான கடன், கிறிஸ்து கிரயம் செலுத்தியதால் தீர்ந்து போயிற்று. இனி பாவத்தை மூடும் அல்லது நிவிர்த்தி செய்யும் ஒருப இல்லை (எபிரெயர் 10:17-18).

மன்னிப்பானது நமது பாவங்களை நாம் பின்னால் விட்டுவிடும்படி செய்யும் கிருபையின் கிரியையாக இருப்பது மட்டுமல்லாமல், தேவன் இன்னும் மேன்மையான ஒன்றையும் செய்கிறார். நாம் ஆடை போன்ற எதையாவது பின்னால் விட்டுச் சொல்லுவோமானால் எப்போதாவது அதைத் தேடிக்கொண்டு திரும்பவும் வருவோம். தேவன் நமது பாவங்களை விட்டுவிட்டார் என்பது மட்டுமல்ல, அவர் அவைகளை நீக்கிவிடுகிறார். அவர் ***"உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடேகூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து; நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தைக் குலைத்து, அதை நடுவிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து...வெற்றிசிறந்தார்"*** (கொலோசெயர் 2:13-14). நமது பாவங்கள் விட்டுவிடப்பட்டது மட்டுமல்ல, இனி நமக்கு இல்லை என்ற உண்மை ஆண்டவருடைய முன்னிலையில் புது நிலைக்கு நடத்த வேண்டும் (அப்போஸ்தலர் 3:19).

விசுவாசிகள் தேவனைப் போல (எபேசியர் 5:1) மற்றும் கிறிஸ்துவைப்போல (1 கொரிந்தியர் 11:1) மாற்றப்பட வேண்டும். இது ஒரு மன்னிக்கும் ஆவியின் தேவையைத் தெளிவாய் போதிக்கிறது (மத்தேயு 18:21-22). கிறிஸ்தவர்கள் மன்னிக்கிற மக்களாக மாறுவது முக்கியமானது. ஏனெனில் பாவ மன்னிப்பு பெரிய கட்டளையில் ஒரு பகுதியாக இருக்கிறது (லூக்கா 24:46-47; அப்போஸ்தலர் 1:43; 13:38). நாம் போதிக்கிறதை விருப்பத்துடன் செயல்படுத்துகிறவர்களாய் இருக்க வேண்டும்.

விசுவாசிகள் பாவஞ்செய்யும் போது அப்பாவங்களை மன்னிப்புக்காகவும் சுத்திகரிப்புக்காகவும் தேவனிடத்தில் அறிக்கையிடுவது முக்கியமானது (1 யோவான் 1:6-10). கிறிஸ்தவ வாழ்வில் பெரிய அளவில் வளர்ச்சி அடைய ஒருவருக்கு இது அவசியமாய் இருக்கிறது. சிலுவையில் இயேசு எல்லாப் பாவங்களுக்காகவும் கிரயம் செலுத்தினார். ஆகவே, நாம் ஏற்கெனவே மன்னிப்பு பெற்றிருக்கிறோம். ஒரு விசுவாசி தன் பாவங்களை அறிக்கையிடும்போது, அவனுடைய கடன் தீர்க்கப்பட்டது என்று உணருகிறார்.

I. மன்னிக்கப்படமுடியாத பாவம் (ஆவியானவருக்கு விரோதமான தூஷணம்)

ஒரு மன்னிக்க முடியாத பாவம் உண்டு. அது ஆவியானவருக்கு விரோதமான தூஷணமாகும் (மத்தேயு 12:31-32). தேவனை தூஷணம் பண்ணுவது என்றால் அவரிடம் இல்லாத ஒன்றை இருக்கிறது என்று சொல்வதே ஆகும். ஒருவன் தேவனுடைய எந்த அம்சத்தையும் தாக்கி அது உண்மையில்லை என்று சொன்னால், அது தூஷணணாகும். பரிசுத்த ஆவியானவர், உண்மையின் ஆவியானவர் (யோவான் 14:17) இயேசுவை மேசியாவாக வெளிப்படுத்துகிறார் (யோவான் 14:6; 16:13). ஒருவன் இயேசுவை மேசியாவாக மறுதக்கும் போது, தேவன் பொய் சொல்லுகிறார் என்று குறிப்பிடுகிறான். (1 யோவான் 5:10). ஒருவர் சரீரப்பிரகாரமாக உயிருடன் இருக்கும் வரையில், இயேசுவை மேசியாவாக ஏற்றுக்கொள்ளும் வாய்ப்பு இருக்கிறது என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். எல்லா விவரங்களையும் நாம் ஆராய்ந்து பார்க்கும்போது, "பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமான தூஷணம்" என்பது ஒருவர் தான் மரிக்கும் வரை பரிசுத்த ஆவியானவரை இயேசுகிறிஸ்துவை குறித்துப் பொய்சொல்லுபவர் என்று அழைப்பதாகும் என்று அறிகிறோம். அது தேவனுக்கு விரோதமாக மோசமான வார்த்தைகளைச் சொல்லுவதல்ல (பார்க்க, மத்தேயு 26:74 பேதுரு இயேசுவை மறுதத்தல்). இந்த பாவம் வாழ்நாள் முழுவதும் பிடித்திருக்கிற அவநம்பிக்கையாகும். இந்த பாவம் இரட்சகராக இயேசுகிறிஸ்துவின் கிரியையைப் பிடிவாதமாக மறுப்பதாகும். இது நரகம் என்னும் நித்திய விளைவைக் கொண்டுவருகிறது.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 7, பகுதி 3

1. **வாசிக்கவும் யோவான்3:16, 18 மற்றும் 36. இரட்சிப்புக்கு அவசியமானது என்ன?**

2. **வாசிக்கவும் யோவான் 1:1, 14 மற்றும் 1 கொரிந்தியர் 15:3-5. இயேசு கிறிஸ்துவைப் பற்றி ஒருவர் எதை விசுவாசிக்க வேண்டும்?**

3. **வாசிக்கவும் 1 தீமோத்தேயு 2:4 மற்றும் 2 பேதுரு 3:9. மனிதனுடைய இரட்சிப்புக்காக தேவனுடைய விருப்பம் என்ன?**

4. **வாசிக்கவும் எபேசியர் 2:8-9. மனிதன் எப்படி இரட்சிக்கப்படுகிறான்?**

5. **எது விசுவாசம் மற்றும் எதில் தகுதி?**

6. **வாசிக்கவும் 2 தீமோத்தேயு 2:24-25. தவறான சிந்தனையை மாற்றத் தேவையானது எது?**

7. **வாசிக்கவும் ரோமர் 3:20 மற்றும் கலாத்தியர் 2:16 மற்றும்3:24. எது நம்மைத் தேவனுக்கு முன்பாக நீதிமானாக்குகிறது? எது நீதிமானாக்குதில்லை?**

8. **(Missing)**

9. **வாசிக்கவும் எபேசியர் 1:7 மற்றும் கொலேசெயர் 1:13-14. விசுவாசி மன்னிக்கப்படுவது ஏன்?**

10. **வாசிக்கவும் 12:31-32; யோவான் 14:17; யோவான் 16:13 மற்றும் 1 யோவான் 5:10. "பரிசுத்த ஆவிக்கு விரோத மான தூஷணம்?"**

பகுதி 4
பாதுகாப்பு: தேவனுடைய வாக்குத்தத்தங்கள்

A. அறிமுகம்

இயேசு கிறிஸ்துவின்மீதுள்ள விசுவாசத்தினாலே ஒருவன் இரட்சிக்கப்படும்போது, இயற்கையாக அவனுக்குள் பல கேள்விகள் எழும்பலாம். உதாரணமாக: ''நான் எனது இரட்சிப்பை இழந்து போகமுடியுமா? நான் இரட்சிக்கப்பட்ட பின்னர் நாம் பாவஞ்செய்தால், மறுபடியும் இரட்சிக்கப்பட வேண்டுமா?'' தேவனுடைய உறுதியான அன்பிலேயா அல்லது இரட்சிப்பை இழக்கும் பயத்திலேயா நான் எப்படி கிறிஸ்தவ வாழ்க்கை வாழலாம்?'' ''நமக்கு நித்திய ஜீவன் உண்டு என்று நாம் எப்படி உறுதியாக தெரிந்துகொள்ள முடியும்?'' (1 யோவான் 5:13). விசுவாசியின் இந்தக் கேள்விகளுக்குப் பதிலாக நம்முடைய ஆய்வின் இப்பகுதியில் இரட்சிப்பைப் பற்றிய உண்மைகளை ஆராய்வோம்.

B. முன்னறிவு மற்றும் முன்குறித்தல் (Foreknowledge and Predestination)

முன்னறிவு (foreknowledge) என்றால் முன்னதாக அறிவது. இயேசு உலகத்தோற்றத்திற்கு முன்னே குறிக்கப்பட்டவராயிருந்தார் (1 பேதுரு 1:20). முன்குறித்தல் என்பது ''முன்பே குறிக்கப்பட்ட''து என்று பொருள்படும். ''PROORIDZO'' என்ற கிரேக்க வார்த்தையிருந்து வந்ததாகும். அது எல்லைகளை உருவாக்கும் கருத்தைக் கொடுக்கிறது.

முன்னறிதல் என்பது நிகழ்ச்சிகளின் முடிவை அவர் முன்பே தீர்மானித்திருந்தார் என்று தேவனுடைய வார்த்தையிருந்து தெளிவாகத் தெரிகிறது. (ரோமர் 8:29-30; 1 பேதுரு 1:1-2). தேவன் எல்லாம் அறிந்தவர். செய்யப்படும் ஒவ்வொரு தீர்மானத்தையும், நேரிடும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அறிந்திருந்தார். மட்டுமல்ல, அவர் நடக்கப்போகும் ஒவ்வொரு செயலையும் அறிந்தார். தேவன் ஒரு திட்டத்தை உண்டுபண்ணினார். அந்தத் திட்டத்தில் அவருடைய மனித மற்றும் தூதருக்குரிய படைப்பிற்குத் தீர்மானிக்கும் திறமை கொடுத்தார். இருப்பினும் அதில் அவர் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றுவார் என்பது அவருடைய மேன்மையைத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

தேவனுடைய வார்த்தையில் காணப்படுகிற தீர்க்கதரிசனங்கள் அவருடைய முன்னறிவில் சிலவற்றை வெளிப்பட உருவாக்கப் பட்டன (2 பேதுரு 3:17). நேரிடப்போகிற சில நிகழ்ச்சிகளை நாம் முன்னதாக அறிந்து, வருங்காலத்தில் தேவனுடைய பக்கத்திலோ அல்லது சாத்தானுடைய பக்கத்திலோ இருக்கத் தீர்மானம் பண்ணலாம்.

C. உடன்படிக்கைகள்

அர்த்தம் காணுதல் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் என்ற எட்டாவது கொள்கை தேவன் மனிதனோடு ஏற்படுத்திக் கொண்டுள்ள ஒன்பது வெவ்வேறான உடன்படிக்கைகளைப் பற்றிக் கூறுகிறது. சில நிபந்தனையோடு கூடியவை; மனிதனின் கீழ்ப்படிதலை அவை சார்ந்திருக்கின்றன. சில நிபந்தனையற்றவை, அவை முழுமையாகத் தேவனுடைய நேர்மையைச் சார்ந்திருக்கின்றன. இந்த உடன்படிக்கை தேவனிடமிருந்து வாக்குத்தத்தங்களைக் கொண்டிருக்கின்றன. அவை இப்போதும் எப்போதும் விசுவாசிக்குப் பாதுகாப்பைக் கொடுக்கின்றன. மாணவன் உடன்படிக்கைகளில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களையும், தேவனுடைய வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் நமக்கிருக்கும் பாதுகாப்பையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

D. நித்திய பாதுகாப்பு

நித்திய பாதுகாப்பு என்றால் இரட்சிப்பை இழந்துபோக முடியாது என்று பொருள்படும். நாம் இதுவரை கற்றிருக்கிற கோட்பாடுகளின் அடிப்படையில், இந்த அறிக்கையை நிரூபிக்க முயலுவோம். இந்த த் தலைப்பை எடுத்துகொள்ளும் போது நம்முடைய அனுமானிக்கக் கூடிய அறிவின் முக்கியத்தை நினைவு கூறுவோம். நமது இரட்சிப்பை இழந்து போக முடியாது என்று தேவனுடைய வார்த்தை நமக்குக் கூறுகிறபோது, அக்கூற்றுகளை மறுதக்க வேறு வசனம் இருந்தாலொழிய, இந்தக் கூற்றுகளை மெய்யானவைகளாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். வேதாகமம் ஒரு கூற்றைக் குறிப்பிட்டால், வேதாகமம் மட்டுமே அதற்கு விதிவிலக்களிக்க முடியும் என்பது பொருத்தமானது. எடுத்துக்காட்டாக வேதம் கூறுகிறதாவது: ***"எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி"*** என்கிறது. எனினும் (ரோமர் 3:23) வேதாகமத்தில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு விதிவிலக்குள்ளது ***"அவர் பாவம் செய்யவில்லை"*** (1 பேதுரு 1:22). முழுமையின்அடிப்படையில் பகுதியைப் பகுத்தாராயும் இந்த அணுகுமுறை பகுத்தாராய்ந்து முடிவுக்கு வருதல் என்று அழைக்கப்படுகிறது. இப்படிப் பகுத்தாராயும்போது நாம் இப்படிப்பட்ட முடிவுக்கு வருகிறோம். ''இயேசுகிறிஸ்துவைத் தவிர எல்லோரும் பாவம் செய்திருக்கிறார்கள் என்றால், நானும் பாவம் செய்திருக்கிறேன் என்பதே அர்த்தமாகும். ஆனால் தொகுப்பாய்வு முறையில் முடிவுக்கு வருவது என்பது பகுதியின் அடிப்படையில் முழுமையை ஆராய்கிறது (நான் பாவம் செய்திருக்கிறேன் என்கிறபடியால், ெல்லோரும் பாவம் செய்திருக்கிறார்கள்). தொகுப்பாய்வு முறையான இந்த முடிவு கிட்டத்தட்ட சரியாக இருந்தாலும், இயேசு கிறிஸ்து விதிவிலக்கானவராக இருப்பது இந்த வழிமுறைகளின் குறைபாட்டைச் சுட்டிக்காட்டுகிறது. முழுமையின் எந்தவொரு பகுதியையும் நாம் விட்டுவிட்டால் அது பெரிய பிழைக்கே நம்மை இட்டுச் செல்லும்.

நித்திய பாதுகாப்புக்கு சான்றாக நாம் நமக்கு வேறுபட்ட நான்கு வழிமுறைகளைக் காண்போம்.

1. **தர்க்க சாஸ்திர வழிமுறை**

   நித்திய பாதுகாப்புக்கு நேர்மையான நோக்கின் மூன்று எடுத்துக்காட்டுகளைச் சிந்திப்போம். முதலாவது, இரட்சிப்பு விசுவாசத்தைக் கொண்டு கிருபையினாலே வருகிறது. அது கிரியையினால் அல்ல. ஆகவே, இரட்சிப்பை பாவமாகிய கிரியைகளின் மூலம் இழந்துபோக முடியாது (எபேசியர் 2:8-9). இரண்டாவது, மறுபிறப்பு நம்மை தேவனுடைய பிள்ளைகளாக ஆக்குகிறதினாலே, நமது தோல்விகள் நமது பிதா யார் என்பதை மாற்ற முடியாது (யோவான் 1:12-13; 2 தீமோத்தேயு 2:13). மூன்றாவது, நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருந்தபோது, அவர் நம்மை இரட்சித்து, எல்லாவற்றையும் செய்து முடித்ததினாலே, அவர் இப்பொழுது இரட்சிக்கப்பட்ட நம்மைத் தள்ளிவிடுவதால், குறைந்ததைச் செய்ய மாட்டார் (ரோமர் 5:9-10).

2. **அந்தஸ்து வழிமுறை**
நித்திய பாதுகாப்பில் அந்தஸ்து வழிமுறையானது, விசுவாசி இயேசு கிறிஸ்துவுக்குள் இருக்கிறார் என்ற அடிப்படை உண்மையைச் சார்ந்திருக்கிறது (ரோமர் 8:1). அதாவது, இயேசு கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை (ரோமர் 8:1). கிறிஸ்துவுக்குள் ஒரு விசுவாசிக்கு, பிதாவின் அன்பானது அவருடைய குமாரன் மீது வைத்துள்ள அன்பிற்கு சமமானதாகும். விசேஷமாக, நாம் இப்பொழுது அவருடைய பிள்ளைகளாய் இருக்கிறோம் (யோவான் 1:12-13; ரோமர் 8:38-39; கலாத்தியர் 3:26; எபேசியர் 1:5-8). உண்மையாகவே, நாம் இப்பொழுது கிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதல் பங்கு கொள்பவர்களாயிருக்கிறோம். அதில் மரணமில்லை (எபேசியர் 2:6). இன்னொரு முக்கியமான குறிப்பு, தலையானவர் சரீரத்திருந்து உறுப்புக்களை எடுத்து விட்டு முழு சரீரமாக இருக்க முடியாது. (1 கொரிந்தியர் 12:13). அதனால் நாம் எப்பொழுதும் அவரில் ஒரு பங்காக இருக்கிறோம்.

3. **பாதுகாப்பு வழிமுறை**
நித்திய பாதுகாப்பில் பாதுகாப்பு வழிமுறையானது, கிறிஸ்து பிதாவினுடைய வலது பாரிசத்தில் நமக்காகப் பேசுகிற ஊழியத்தின் அடிப்படையில் இருக்கிறது. அவர் சாத்தானோடு போராடி நமது நீதிபரராகப் பரிந்துபேசுகிறார் (1 யோவான் 2:1-2; வெளிப்படுத்தல் 12:10). அவர் தேவனுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தர். அவர் மனிதனுக்காக விசேஷித்த உடன்படிக்கையைச் செய்தார் (கலாத்தியர் 3:20; 1 தீமோத்தேயு 2:5; எபிரெயர் 8:6; 9:15; 12:24). இப்பொழுது அவரால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களை உறுதியாக இணைந்து காப்பாற்றி அவர்களுக்காக அவர் பரிந்து பேசுகிறார் (ரோமர் 8:31-39). யாராவது அவருடைய கையிருந்து அவருடைய ஆடுகளைப் பறித்துக்கொள்ளப் பிரயாசப்பட்டால், பிதாவின் மற்றும் குமாரனுடைய சர்வ அதிகாரத்தைத் தாக்குகிறார்கள் (யோவான் 10:27-29). (ஆசிரியர் குறிப்பு: அது எனக்கு நிச்சயத்தைக் கொடுக்கிறது)

4. **ஆவிக்குரிய வழிமுறை**
நித்திய பாதுகாப்பின் நோக்கத்தில் ஆவிக்குரிய வழிமுறை, பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்திலும் கிரியையிலும் உள்ள நமது உறவை அடிப்படையாகக் கொண்டது. “அழிவுள்ள வித்தினால்” ஜெனிப்பிக்கப்பட்ட இரட்சிக்கப்படாத மனுகுலத்தை பரிசுத்த ஆவியானவர் அவர்கள் இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் போது த பரிசுத்த ஆவியானவர் ஆட்கொண்டு “அழிவில்லா வித்தினாலே” ஜெனிப்பிக்கப்படச் செய்கிறார். ஆகவே நாம் மறுபடியும் மரிக்க முடியாது (1 கொரிந்தியர் 15:42, 52; 1 பேதுரு 1:22-25; யோவான் 11:25-26). இரட்சிக்கப்பட்டவுடனே பரிசுத்த ஆவியானவரிருந்து முழுமையான, திரும்பப் பெற முடியாத பல வரங்கள் நமக்குக் கொடுக்கப்படுகின்றன (ரோமர் 11:29). இரட்சிப்படையும்போது பரிசுத்த ஆவியானவர் விசுவாசியில் குடிகொள்கிறார். விசுவாசியின் உயிர்த்தெழுந்த சரீரத்துக்கு அவர் அச்சாரமாய் இருக்கிறார் (ரோமர் 8:9; 1 யோவான் 2:27; 2 கொரிந்தியர் 1:22). பரிசுத்த ஆவியானவர் விசுவாசிப்பவர்களை நிரப்பி, அவர்களைக் கிறிஸ்துவோடு இணைக்கிறார் (ரோமர் 8:9; 1 யோவான் 2:27). மீட்பின் நாளுக்கென்று விசுவாசியை முத்திரை போடுகிறார் (2 கொரிந்தியர் 1:21-22; எபேசியர் 1:13, 14; 4:30).

E. தத்தெடுக்கப்படுதல்
இயேசு கிறிஸ்து தேவனுடைய ஒரே பேறான குமாரனாக இருக்கிறார் (யோவான் 3:16). விசுவாசத்தினாலே நாம் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டிருக்கும்போது, நாம் தேவனுடைய “தத்தெடுக்கப்பட்ட மகனாக” பார்க்கப்படுகிறோம். இந்த மகவேற்பு இஸ்ரவேலர் அனைவருக்கும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அநேகர் அவர்களுடைய மேசியாவைப் புறக்கணித்தார்கள் (ரோமர் 9:3-4).

இப்பொழுது விசுவாசி பிதாவின் பிள்ளையாக, அவருடன் ஒரு நெருங்கிய உறவுகொள்ளும் வாய்ப்பு இருக்கிறது. அவர் கிறிஸ்துவுடன் சுதந்தரவாளியாய் இருக்கிறார் என்று அறிகிறான் (ரோமர் 8:15-17; கலாத்தியர் 4:4-7). ஒரு நாளிலே இந்த மகவேற்பின் ஆசீர்வாதங்களை நாம் முழுமையாக உணர்ந்து அறிவோம் (ரோமர் 8:22-23).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 7, பகுதி 4

1. **வாசிக்கவும் 1 யோவான் 5:13. தாங்கள் இரட்சிக்கப்பட்டதை ஒருவர் நிச்சயமாக அறிய முடியுமா?**

2. **வாசிக்கவும் ரோமர் 8:29-30 மற்றும் 1 பேதுரு 1:1-2. தேவனுடைய முன்குறித்தன் சம்பவங்களுக்கு முக்கிய காரணி எது?**

3. **வாசிக்கவும் யோவான் 10:27-29. இயேசுவின் ஆடுகளுக்கு வாக்குப்பண்ணப்பட்டது என்ன?**

4. **வாசிக்கவும் எபேசியர் 2:8-9 மற்றும் ரோமர் 11:29. இரட்சிப்பு ஒரு ஈவாயிருக்கிறபடியால் தேவன் அதைத் திரும்ப எடுத்துக்கொள்வாரா?**

5. **வாசிக்கவும் யோவான் 1:12-13 மற்றும் 2 தீமோத்தேயு 2:13. ஒரு விசுவாசி விசுவாசமில்லாதவராக மாறினால், அவன் தேவனுடைய பிள்ளையாக இருக்கமாட்டானா?**

6. **வாசிக்கவும் ரோமர் 5:9-10 மற்றும் லூக்கா 6:31-36. நாம் தேவனுடைய எதிரிகளாயிருந்த போது நம்மை அவர் இரட்சித்தாரா? அன்பின் மிகப் பெரிய வெளிப்பாடு என்ன?**

7. **எதிரிகளாயிருந்த நம்மை அவர் இரட்சித்து தம்முடைய பிள்ளைகளாக மாற்றியிருக்க, நம்மை இப்போது தள்ளிவிட்டால் அதற்கு ஏதாவது அர்த்தம் உள்ளதா?**

8. **வாசிக்கவும் ரோமர் 8:1. கிறிஸ்துவில் நம்முடைய நிலையைப் பொருத்து, எது தற்போது இல்லை?**

9. வாசிக்கவும் ரோமர் 8:35-39. கிறிஸ்துவின் அன்பைவிட்டு எது ஒரு விசுவாசியைப் பிரிக்க முடியும்?

10. வாசிக்கவும் 1 பேதுரு 1:22-25. நம்முடைய புதுப் பிறப்பு அழியாத வித்திருந்து பரிசுத்த ஆவியினால் கொடுக்கப்பட்டடியால், நாம் மீண்டும் எப்போதாவது மரிக்க முடியுமா?

11. வாசிக்கவும் ரோமர் 8:15-17. தேவனுடன் விசுவாசியின் உறவு என்ன?

பகுதி 5
வருங்காலம்: தீர்க்கதரிசனம் (Eschatology)

A. முன்னுரை

தேவன் தமது கிருபையின்படி காலங்களுக்காக ஒரு திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார். நடைபெறப் போகும் முக்கிய வரலாற்று நிகழ்ச்சிகளைப்பற்றி அவர் நமக்கு அறிவித்திருக்கிறார். சில வேளைகளில் அவர் நமக்குப் பல விவரங்களையும் கொடுத்திருக்கிறார். மற்ற வேளைகளில் ஒரு சில விவரங்களையே கொடுத்திருக்கிறார். தேவன் தமது கரங்களில் நமது வருங்காலத்தை ஏந்தியிருக்கிறார் என்ற உண்மை நமது விசுவாசத்தைப் பலப்படுத்துகிறது.

தீர்க்கதரிசனம் என்பது தேவனுடைய வார்த்தையின் ஒரு முக்கிய கருப்பொருளாகும். உண்மையில் வேதாகமத்திலுள்ள 1,189 அதிகாரங்களில் 271 தீர்க்கதரிசனங்களைக் குறித்ததாகும். இது கிட்டத்தட்ட வேதாகமத்தில் நான்கில் ஒரு பங்காகும். மற்ற நூல்களிலும்கூட தீர்க்கதரிசனம் குறித்த கூடுதலான வசனங்களை நாம் காண முடியும். எனவே தீர்க்கதரிசனங்களைப்பற்றிய ஆய்வு முக்கியமானதாகும்.

நாம் தீர்க்கதரிசனத்தை ஆய்வுசெய்யும்போது, முதலாவதாக, இன்னும் நடைபெறாத முக்கிய நிகழ்ச்சிகள் எவையெவை என்பதைத் தீர்மானிக்க வேண்டும். நமது ஆய்வுக்கு வழிகாட்டும் சுருக்கக் குறிப்பை இது நமக்குக் கொடுக்கும். ‘‘அர்த்தம்காணுதன் அடிப்படைக் கொள்கைகள்’’ என்ற நமது ஆய்வின் 4ஆம் அத்தியாயத்தில், கொள்கை 15இல் சில தீர்க்கதரிசனங்கள் ஏற்கெனவே நிறைவேறியிருக்கின்றன, சில தீர்க்கதரிசனங்கள் இனிமேல் நிறைவேற வேண்டியிருக்கின்றன என்பதை அறிந்திருக்கிறோம்.

நமது ஆய்வின் இந்த இடத்தில் வருங்கால நிகழ்ச்சிகளை விவரிக்கப் பயன்படுத்தப்படும் பல சொற்களை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

B. யுகங்கள்

தீர்க்கதரிசனம் என்பது கால ஒழுங்குகளின் ஆய்வோடு தொடர்புடையதாகும். ‘‘அர்த்தம்காணுதன் அடிப்படைக் கொள்கைகளிருந்’’ கால ஒழுங்குகளைப் பற்றிய 13ஆம் கொள்கையை மாணவர் மறுபடியுமாகப் படித்துப் பார்ப்பது நலமாகும்.

கால ஒழுங்குகள் என்பவை வரலாற்றின் காலகட்டங்களாகும்; இந்தக் கால கட்டங்களில் தேவன் தமது மக்களுக்காக வெவ்வேறான பொறுப்புகளை உறுதிப்படுத்துகிறார். கால ஒழுங்கில் மாறுபாடு ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு அடையாளமாக, ஆசாரியத்துவத்திலும், பிரமாணங்களிலும் மாற்றம் காணப்படுகிறது (எபிரெயர் 7:12).

ஆதாமின் வீழ்ச்சியிருந்து எகிப்தைவிட்டு இஸ்ரவேலர் வெளியேறுவது வரையிலான புறஜாதிகளின் காலம் நிறைவுபெற்றிருக்கிறது. இஸ்ரவேன் காலம் யாத்திராகமத்திருந்து (நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டதிருந்து) பெந்தெகொஸ்தே நாள் வரை பரவியிருக்கிறது. ‘‘உபத்திரவ காலம்’’ அல்லது ‘‘தானியேன் 70ஆவது வாரம்’’ என்ற ஏழு ஆண்டு காலகட்டம் தவிர இந்தக் காலமும் நிறைவுபெற்றிருக்கிறது (தானியேல் 9:24–27).

நாம் இப்போது பெந்தெகொஸ்தே நாளன்று துவங்கிய சபையின் காலத்தில் இருக்கிறோம். இது சபை எடுத்துக்கொள்ளப் படுதல் வரை தொடரும்.

இயேசுகிறிஸ்து தமது ஆயிரமாண்டு ஆளுகையை நிறுவும்படி இரண்டாம் முறையாக வரும்போது, ஆயிரமாண்டு காலகட்டம் துவங்கும். அது சாத்தானின் இறுதிக் கலகத்தோடு முடிவுபெறும்.

C. சபை எடுத்துக்கொள்ளப்படுதல்

சபை எடுத்துக்கொள்ளப்படுதலைக் குறிக்கும் “rapture” என்ற ஆங்கில வார்த்தை “RAPERE” என்ற இலத்தீன் சொல்ருந்து வந்ததாகும். இந்தச் சொல் “HARPADZO” என்ற கிரேக்கச் சொல்லை மொழிபெயர்க்கப் பயன்படுத்தப்பட்டது. இந்தச் சொல்லை நாம் 1 தெசலோனிக்கேயர் 4:17 வசனத்தில் காண்கிறோம். ஆங்கிலத்தில் இது ‘‘எடுத்துக்கொள்ளப்படுதல்’’ (caught up) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

சபை எடுத்துக்கொள்ளப்படும்போது, ஆண்டவர் உயிரோடிருக்கும் விசுவாசிகளோடு, மரித்துப்போன விசுவாசிகளையும் உயிரோடு எழுப்புவார்; ஆகாயத்தில் அவர் அவர்களைத் தம்மோடு சேர்த்துக்கொள்ளுவார் (1 தெசலோனிக்கேயர் 4:14–17). இந்த மாற்றம் ஒரு கணத்தில் நடைபெற்றுவிடும் (1 கொரிந்தியர் 15:51–52).

சபை எடுத்துக்கொள்ளப்படுவதோடு சபையின் காலம் முடிவடைந்து உபத்திரவ காலம் என்ற காலகட்டம் துவங்குகிறது.

D. உபத்திரவம்

உபத்திரவ காலத்தைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான “Tribulation’’, “THLIPSIS’’ என்ற கிரேக்கச் சொல்ருந்து வருகிறது. ‘‘அழுத்தம்’’ என்பதே இதற்கு அர்த்தமாகும். அதாவது கானால் திராட்சப்பழத்தை நசுக்குவது போன்ற செயலை இது குறிக்கிறது. இது உலகம் இதுவரை காணாத வகையில் ஆத்துமாவுக்கும், சரீரத்துக்கும் தீவிரமான அழுத்தம் ஏற்படும் கால கட்டமாகும். உபத்திரவ காலத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளின் சுருக்கத்தை நாம் வெளிப்படுத்தல் 6–19 அதிகாரங்களில் காணலாம்.

இது ஏழு ஆண்டு காலகட்டமாகும்; இது ‘‘தானியேன் 70ஆவது வாரம்’’ என்றும் அழைக்கப்படுகிறது (தானியேல் 9:24–27). தேவன் தீர்க்கதரிசியாகிய தானியேலுக்கு ஒரு வெளிப்பாட்டைக் கொடுத்தார். அதில் அவர் தமது மக்களாகிய யூதர்களுக்காகப் பல ஆண்டுகளைக் குறிக்கும் 70 வாரத் தீர்க்கதரிசனத்தைக் கொடுத்திருக்கிறார். இயேசுவானவர் சிலுவையில் அறையப்படுவதற்கு ஒரு வருஷத்திற்கு முன்னர் எருசலேமுக்குள் பவனியாகச் சென்றபோது, இந்த 69 வாரங்கள் நிறைவேறிவிட்டன. 70ஆவது வாரம் என்பது இஸ்ரவேன் காலத்தின் இறுதி ஏழு ஆண்டுகளாகும். இது சபை எடுத்துக்கொள்ளப்படும் காலத்திருந்து இரண்டாம் வருகை வரையில் தொடரும்.

E. இரண்டாம் வருகை

இரண்டாம் வருகை என்பது ஏழாண்டு உபத்திரவ காலம் முடிவடைந்தவுடனே உடனடியாக நிகழும் கிறிஸ்துவின் வருகையைக் குறிக்கிறது (மத்தேயு 24:29). இது சபை எடுத்துக்கொள்ளப்படும் நிகழ்ச்சியிருந்து வேறுபட்டதாகும். அந்த வேளையில் கிறிஸ்து பூமியில் கால் வைக்கவில்லை; அவர் மேகங்களின் நடுவே வருவார் (அப்போஸ்தலர் 1:11). ஆனால் இப்போதோ அவர் பூமியில் கால் வைப்பார் (சகரியா 14:1-6).

இந்த வேளையில் அவர் தமது எதிரிகளையெல்லாம் முறியடித்து, தமது ஆயிரமாண்டு ஆளுகையைத் துவங்குவார் (வெளிப்படுத்தல் 19:20-20:6). கிறிஸ்து முதல் ஒலிவ மலையில் கால்வைத்து, அதை இரண்டாகப் பிளப்பார்; இஸ்ரவேல் மீதியானவர்களைக் காப்பாற்றுவார் (சகரியா 14:1-6). பிறகு அவர் தமது வாயினால் மேற்கத்திய அரசனை அழித்துப்போடுவார் (2 தெசலோனிக்கேயர் 2:8; வெளிப்படுத்தல் 19:16). அடுத்தபடியாக, அவர் வானத்திருந்து அக்கினியை இறங்கப்பண்ணி, ஏற்கெனவே தெற்கத்திய அரசனை அழித்துப்போட்டிருந்த (தானியேல் 11:40-44), வடக்கத்திய அரசனை அழித்துப்போடுவார் (எசேக்கியேல் 38-39). பிறகு அவர் கிழக்கத்திய அரசனோடு நேருக்கு நேர் போரிட்டு அவனை அழித்துப்போடுவார் (ஏசாயா 63:1-6; வெளிப்படுத்தல் 14:20).

F. ஆயிரமாண்டு இராஜ்யம்

ஆயிரமாண்டு இராஜ்யம் என்பது பூமியில் இயேசுகிறிஸ்துவின் ஆயிரமாண்டு ஆளுகையைக் குறிக்கிறது (வெளிப்படுத்தல் 20:6). இந்த இராஜ்யம் எப்படியிருக்கும் என்று பல வேதாகமப் பகுதிகளில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

ஆயிரமாண்டு ஆளுகை ஆபிரகாம், தாவீது மற்றும் புதிய உடன்படிக்கையை நிறைவு செய்யும். அது ஏதேனின் சாபத்தையும் அகற்றிப்போடும் (ஆதியாகம் 3:17-19).

இந்த ராஜ்யத்தின் வெளிப்பிரகாரமான பண்புகள்: (1) யுத்தங்கள் கிடையாது (ஏசாயா 2:4; மீகா 4:3); (2) மிருகங்களில் கொடூரமில்லாமை (ஏசாயா 11:6-9; 35:9; 65:25); (3) நோயும் சரீரக் குறைபாடுகளும் அகற்றப்படும்; வாழ்நாள் நீட்டிக்கப்படும் (ஏசாயா 29:17-19); (4) சமுதாய, பொருளாதார அல்லது அரசியல்ரீதியாக ஒடுக்குதல் எதுவும் கிடையாது (ஏசாயா 14:3-6); (5) ஜனத்தொகை விருத்தியாகும் (எரேமியா 30:20); (6) வேலை (எரேமியா 31:15; ஏசாயா 62:8-9; 65:21, 23); (7) பொருளாதாரரீதியான செழிப்பு (ஏசாயா 35:1, 2, 7); மற்றும் (8) ஆண்டவரிடமிருந்து வெளிச்சம் (சகரியா 14:6-7). ஆயிரமாண்டு ராஜ்யத்தில் உபத்திரவகாலத்துக்குத் தப்பிப் பிழைத்த "வெள்ளாடுகளாகிய" யூதர்களும் புறஜாதியாரும் இருப்பார்கள் (மத்தேயு 25:31-46). எனவே ஆயிரமாண்டு ராஜ்யத்தின்போது பாவ இயல்புகளைக் கொண்ட மனிதரும் இருப்பார்கள். அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் இரட்சிக்கப்பட வேணடும்.

ஆவிக்குரிய பண்புகளால் உள்ளடக்கியவை: (1) நீதிமான்களாக இருத்தல் (மல்கியா 4:2; சங்கீதம் 86:14); (2) ஆண்டவரைக்குறித்த முழுமையான அறிவு (ஏசாயா 11:9); (3) பரிசுத்த ஆவியானவரின் நிறைவு (யோவேல் 2:28-29); (4) சந்தோஷம் (ஏசாயா 9:3-4); (5) நீதி (ஏசாயா 9:7; 11:5; 32:16; 42:1-4; 65:25).

கிறிஸ்துவின் ஆளுகை ஐக்கியப்பட்ட அரசைக் கொண்டு (எசேக்கியேல் 37:24-28) உலகளாவியதாக இருக்கும் (தானியேல் 7:14; மீகா 4:1-2; செப்பனியா 3:9-10; சங்கீதம் 72;8). குற்றங்கள் முழுமையாக நசுக்கப்படும் (சங்கீதம் 72:1-4; வெளிப்படுத்தல் 19:15). எருசலேம் உலக அரசின் மையமாக இருக்கும் (ஏசாயா 2:2-4; எரேமியா 31:6; மீகா 4:1; செப்பனியா 2:10-11). அது சர்வவல்ல தேவனால் பாதுகாக்கப்படும் (ஏசாயா 11:9). அதை எளிதாக அணுக முடியும் (ஏசாயா 35:8-9), அது மிகப் பெரியதாக விரிவாக்கப்பட்டிருக்கும் (எரேமியா 31:38-40; எசேக்கியேல் 48:30; சகரியா 14:10). எருசலேம் ஆராதனையின் மையமாகவும் இருக்கும் (எரேமியா 30:16-21; 31:6, 23; யோவேல் 3:17; சகரியா 8:8, 20). அது ஆயிரமாண்டு ஆலயத்தில் (எசேக்கியேல் 40:1-46:24) சாதோக்கின் ஆசாரியத்துவத்தினால் (எசேக்கியேல் 43:19; 44:15) நடத்தப்படும்.

G. பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு

ஆயிரமாண்டு ஆளுகை முடிவடைந்து, சாத்தான் சிறிது காலம் கட்டவிழ்த்து விடப்பட்ட பிறகு பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்பு நடக்கிறது. அவன் ஜாதிகளை ஏமாற்றும்படிக்கும், "கோகு, மாகோகு" கலகங்களை வழிநடத்தவும் அனுமதிக்கப்படுவான் (வெளிப்படுத்தல் 20:7-8). ஆயிரமாண்டு ஆளுகையில் இரட்சிக்கப்படாதவர்களாக இருப்பவர்கள் அவனுடைய பிரஜைகளாக ஆகிறார்கள். ஆண்டவர் வானத்திருந்து அக்கினியைக் கொண்டுவந்து, சாத்தானையும், மிருகத்தையும், கள்ளத் தீர்க்கதரிசியையும் அக்கினிக் கடலே தள்ளி, சாத்தானின் தாக்குதல்கள் எல்லாவற்றுக்கும் முடிவைக் கொண்டுவருவார் (வெளிப்படுத்தல் 20:9-10).

இந்த நிகழ்ச்சிகளுக்குப் பிறகு அவிசுவாசிகள் "பெரிய வெள்ளை சிங்காசனத்தில்" நியாயந்தீர்க்கப்படும்படி உயிரோடு எழுப்பப்படுவார்கள். அவர்கள் அக்கினிக்கடல் போடப்படுவார்கள் (வெளிப்படுத்தல் 20:11-15).

H. நித்திய நிலை

நித்திய நிலை என்பது "தேவனுடைய நாள்" என்று அழைக்கப்படுகிறது (2 பேதுரு 3:12). அது பெரிய வெள்ளைச் சிங்காசன நியாயத்தீர்ப்புக்குப் பிறகு, பழைய பூமியும் பழைய வானமும் அழிக்கப்பட்டு, புதிய வானமும் புதிய பூமியும் உண்டாக்கப்படுவதிருந்து துவங்குகிறது (ஏசாயா 65:17; 66:22; 2 பேதுரு 3:12-13; வெளிப்படுத்தல் 21:1). புதிய பூமியானது இஸ்ரவேன்று பன்னிரு கோத்திரங்களையும், பன்னிரு அப்போஸ்தலர்களையும் நினைவுகூரும் வகையில் ஒரு புதிய எருசலேமைக் கொண்டிருக்கும் (வெளிப்படுத்தல் 21:2-5). புதிய எருசலேமில் ஆலயம் எதுவும் இருக்காது; ஏனென்றால் ஆட்டுக்குட்டியானவராகிய இயேசுகிறிஸ்துவே அதற்கு ஆலயமாக இருப்பார்; அங்கே சூரியனோ சந்திரனோ இருக்காது. ஆட்டுக்குட்டியானவரே அதன் விளக்காயிருப்பார் (வெளிப்படுத்தல் 21:22-23). சிம்மானத்திருந்து புறப்படும் ஒரு ஆறு முழுவதுமாக "ஜீவத்தண்ணீரைக்" கொண்டிருக்கும்; அதன் கரையில் "ஜீவவிருட்சம்" இருக்கும்; அது மாதத்துக்கு ஒன்றாக பன்னிரு வெவ்வேறான கனிகளைக் கொடுக்கும் (வெளிப்படுத்தல் 22:1-2).

நித்திய நிலையில் பாவமே இருக்காது (வெளிப்படுத்தல் 21:24-27). இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, தங்கள் பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளாத எவரும் புதிய எருசலேமுக்குள்ளோ அல்லது புதிய வானம், புதிய பூமிக்குள்ளோ நுழைய அனுமதிக்க மாட்டார்கள். அவர்கள் அக்கினிக் கடல் நித்தியத்தைக் கழிப்பார்கள் (வெளிப்படுத்தல் 21:8). ஜெயங்கொண்டவர்கள் மட்டுமே ஜீவனுள்ள தேவனோடுகூட நித்திய பொக்கிஷத்தில் பங்கெடுக்க முடியும். ***"விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயமாக"*** இருக்கிறபடியால் தேவனைத் துதிப்போம் (1 யோவான் 5:4-6).

வெளிப்படுத்தல் 21:8 வசனத்தில் விவரிக்கப்பட்டுள்ள பாவங்கள் அல்ல. இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து, பாவங்களிருந்து மன்னிப்பைப் பெறத் தவறுவதே ஒருவரைப் பரலோகத்தில் பிரவேசிக்க முடியாமல் செய்யும் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 7, பகுதி 5

1. வாசிக்கவும் எபிரேயர் 7:12. ஒரு யுகம் மாறும்போது என்ன நடக்கிறது?

2. வாசிக்கவும் 1 தெசலோனிக்கேயர் 4:14-17. சபை எடுத்துக்கொள்ளும்போது விசுவாசிகள் எங்கு சந்திப்பார்கள்?

3. வாசிக்கவும் 1 கொரிந்தியர் 15:51-52. சபை எடுத்துக்கொள்ளப்படுதல் எவ்வளவு வேகமாக நடைபெறும்?

4. வாசிக்கவும் யோவான் 14:1-3. சபை எடுத்துக்கொள்ளப்பட்டபின் சபை எங்கிருக்கும்?

5. வாசிக்கவும் தானியேல் 9:24-27. ஏழு வருடங்களடங்கிய 70வது வாரம் இன்னும் நிறைவடையவில்லை. இந்தக் கால இடைவெளி எப்படி அழைக்கப்படுகிறது?

6. வாசிக்கவும் வெளிப்படுத்தல் 19:11-16; மத்தேயு 24:29-30 மற்றும் சகரியா 14:1-6. உபத்திரவ காலத்திற்கு பிறகு கிறிஸ்து என்ன செய்வார்?

7. இடத்தைப் பொறுத்தவரை சபை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கும் இரண்டாம் வருகைக்கும் உள்ள பெரிய வித்தியாசம் என்ன?

8. வாசிக்கவும் வெளிப்படுத்தல் 19:20; 20:10. இரண்டாம் வருகையின்போது அக்கினிக் கடல் போடப்படுவது யார்?

9. வாசிக்கவும் வெளிப்படுத்தல் 20:1-3. இரண்டாம் வருகையின்போது பாதாளத்தில் தள்ளப்படுவது யார்?

10. வாசிக்கவும் வெளிப்படுத்தல் 20:4-6. கிறிஸ்துவின் ராஜ்ஜியம் பூமியில் எவ்வளவு காலம் இருக்கும்?

11. வாசிக்கவும் வெளிப்படுத்தல் 20:7-10. ஆயிரம் வருட அரசாட்சிக்குப்பின் சாத்தான் கொஞ்ச காலம் விடுவிக்கப்படுவான், முரட்டாட்டம் செய்வான், மீண்டும் தோற்கடிக்கப்படுவான் எங்கு முடிவுறுவான்?

12. வாசிக்கவும் வெளிப்படுத்தல் 20:11-15. "ஜீவ புத்தகத்தில்" பெயரெழுதப்பட்டதாகக் காணப்படாதவர்கள் பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு பிறகு எங்கு செல்வார்கள்?

13. வாசிக்கவும் 2 பேதுரு 3:10-13 மற்றும் வெளிப்படுத்தல் 21:1. பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்புக்கு பின் என்ன நடக்கும்?

அத்தியாயம் 8

தேவனுடைய நோக்கத்தைப்பற்றிய கோட்பாடுகள்

பகுதி 1
தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கை (Hodology)

A. முன்னுரை

தம்முடைய குமாரன் இயேசுகிறிஸ்துவின் சாயல் மாற்றப்பட வேண்டும் என்பதே ஒவ்வொருவரையும் குறித்த தேவனுடைய நோக்கமாக இருக்கிறது (ரோமர் 8:29). தொடர்ச்சியாக நடைபெறும் மாற்றங்களின் மூலம், தனிப்பட்ட ஒருவருடைய வாழ்க்கையில் தமது நோக்கத்தை நிறைவேற்றும்படியாக, அவர் வாழ்க்கையில் மூன்று கட்டங்களை உண்டாக்கியிருக்கிறார்: அவைகளை கட்டம் 1, கட்டம் 2, மற்றும் கட்டம் 3 என்று அழைக்கலாம்.

கட்டம் 1: ஒரு அவிசுவாசி இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு விசுவாசியாகும்போது, இது நடக்கிறது (அப்போஸ்தலர் 16:31). இது அந்த நபரின் நித்திய இரட்சிப்புக்குரிய நேரமாகும்.

கட்டம் 2: இது இரட்சிப்பின் கணத்திருந்து, மரணம் வரையிலோ அல்லது சபை எடுத்துக்கொள்ளப்படும் வரையிலோ குறிக்கப்பட்ட ஒரு காலகட்டமாகும்.

கட்டம் 3: சரீரப்பிரகாரமான மரணத்திலோ அல்லது விசுவாசி எடுத்துக்கொள்ளப்படுவதிலோ துவங்கி, நித்தியகாலமாகத் தொடருகிறது.

நாம் 3ஆவது கட்டத்துக்குள் நுழையும்வரையில், கிறிஸ்துவைப் போன்ற சாயலை முழுமையாகப் பெற முடியாது. ஆனால் விசுவாசியின் இரட்சிப்பிருந்தே அவனுக்குள் மாற்றம் நிகழத் துவங்குகிறது (2 கொரிந்தியர் 3:18). கிறிஸ்துவின் சாயலைப் பெறுவது என்பது அவருடைய மனோபாவத்தைப் பெறுவதாகும், அதாவது, சுயநலமற்ற, தாழ்மையான, தியாக குணமுள்ள மனோபாவத்தைப் பெறுவதாகும் (பிப்பியர் 2:5–8). இந்த மாற்றம் என்பது நாம் எவ்வாறு ***"அழைப்புக்குப் பாத்திரராக நடக்கிறோம்"*** என்பதைப் பொருத்திருக்கிறது (எபேசியர் 4:1–3).

விசுவாசியின் வாழ்க்கையில் இவ்வாறு கட்டங்கள் இருக்கின்றன என்பதை உணருவது முக்கியமாகும்; ஏனென்றால் அது தனிப்பட்ட ஒருவர் தேவனுடைய வார்த்தையைச் சிறப்பாகப் புரிந்துகொள்ள உதவும். "யார்?" என்ற கேள்வியை நாம் கேட்கும்போது, தேவன் விசுவாசிகளிடமா அல்லது அவிசுவாசிகளிடமா யாரிடம் பேசுகிறார் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அப்போதுதான் அந்தப் பகுதியைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். ஆவிக்குரிய தன்மையைக் குறித்து நாம் கவனிக்கும்போது, இதை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

B. கிறிஸ்தவ வாழ்க்கையின் பதின்மூன்று அம்சங்கள்

1. விசுவாசம்

எளிமையாக கூற வேண்டுமானால், விசுவாசம் என்பது ஒன்றின்மீதோ அல்லது ஒருவர்மீதோ நம்பிக்கை வைப்பதாகும். அதாவது, அந்த நபரோ அல்லது பொருளோ உங்கள் தேவைகளைச் சந்திக்கும், விருப்பங்களை நிறைவேற்றும் என்ற நம்பிக்கையாகும். விசுவாசத்தில் அல்ல, எது அல்லது யார்மீது விசுவாசம் வைக்கப்படுகிறதோ அதைக் கொண்டே அதன் மதிப்பு தீர்மானிக்கப்படுகிறது. மனிதனால் இப்போது இருப்பதுபோல மற்றொரு வானத்தையும், பூமியையும் சிருஷ்டிக்க முடியும் என்று ஒருவர் விசுவாசிக்கலாம்; ஆனால் அப்படிப்பட்ட சிருஷ்டிப்பை உண்டாக்கும் வல்லமையை மனிதன் பெற்றிருக்கவில்லை. இப்படிப்பட்ட விசுவாசம் பயனற்றதாகும்.

ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியை நிறைவேற்றி முடிக்கத் தேவையான திறமையையும், அறிவையும் ஒருவர் பெற்றிருப்பாரானால், அவர் மீது விசுவாசம் வைப்பது மதிப்பைப் பெற்றிருக்கிறது. நாம் தேவன்மீது விசுவாசம் வைத்திருக்கிறோம்; அவரே வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவர்; ஏனென்றால் அதற்கான வல்லமையையும், அறிவையும், வாஞ்சையையும் அவர் பெற்றிருக்கிறார். வேதாகமம் இவ்வாறு கூறுகிறது: ***"விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள். விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லையென்றும் அறிந்திருக்கிறோம்"*** (எபிரெயர் 11:1–3).

இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் வைப்பது நீதிமானாக்கப்படுவதற்கு (நீதிமான் என்று அறிவிக்கப்படுவது) அடிப்படையாகும். அது கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கப்படும் கிருபைக்குள் நாம் பிரவேசிக்கும்படி செய்கிறது (ரோமர் 5:1–2). எனவே 1ஆம் கட்டத்தில் ஒரு அவிசுவாசி விசுவாசியாக மாறுவதற்கு விசுவாசம் அத்தியாவசியமாக இருக்கிறது. இந்த விசுவாசம் பரிசுத்த ஆவியானவரோடு நமது உறவையும் துவக்கிவைக்கிறது (கலாத்தியர் 3:2–3, 14).

விசுவாசம் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு (2ஆம் கட்டம்) அத்தியாவசியமானதாகும்; ஏனென்றால் அதில்லாமல் தேவனைப் பிரியப்படுத்த முடியாது (எபிரெயர் 11:6; 2 கொரிந்தியர் 5:7). அவர் நம்மில் விசுவாசத்தைக் காணும்போது, களிகூருகிறார் (மத்தேயு 8:5–10). விசுவாசமே சாத்தானின் உலகத்தை ஜெயங்கொள்ளுகிறது (1 யோவான் 5:4–5). நாம் குழந்தை நிலையிருந்து முதிர்ச்சியடைந்த விசுவாசியாகும்படியாக வளர்ச்சியடையும் வரையில் நமது விசுவாசம் சோதிக்கப்படும் (யாக்கோபு 1:3). நமது விசுவாசம் முரண்படாததாக இருக்குமானால், நாம் பரிசுத்த ஆவியானவரோடுள்ள உறவில் வளர்ச்சியடைகிறோம் (கலாத்தியர் 3:4–5). விசுவாசமே எப்போதும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அஸ்திபாரமாக இருக்கிறது (2 பேதுரு 1:5–9).

நாம் நமது உயிர்த்தெழுந்த சரீரத்தில் கிறிஸ்துவோடுகூட நித்தியமாக இருக்கும்போது, விசுவாசத்திற்கான தேவை இருக்காது; ஏனென்றால் நாம் அவர் இருக்கிறவண்ணமாகவே அவரைத் தரிசிப்போம் (1 யோவான் 3:2).

2. **ஆவிக்குரிய தன்மை**

பரிசுத்த ஆவியானவராகிய தேவனோடு ஒருவர் கொண்டிருக்கும் உறவின் ஆழத்தைக் குறிக்க ஆவிக்குரிய தன்மை என்ற சொல் பயன்படுத்தப்படுகிறது. எனவே அது விசுவாசி தனது வாழ்க்கையில் தொடர்ந்து பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்திருப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அவிசுவாசி பரிசுத்த ஆவியானவரோடு உறவைப் பெற்றிருக்கவில்லை (1 கொரிந்தியர் 2:14). எனவே அவர்களில் ஆவிக்குரிய தன்மையின் வளர்ச்சி காணப்படாது.

a. உள்ளே வாசம்பண்ணுதல்

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின்மீது எவ்வாறு செயல்படுகிறார் என்பதின் அடிப்படையில் சபைகாலத்துக்கு விசுவாசிகளுக்கும் அதற்கு முந்தைய காலத்து விசுவாசிகளுக்குமிடையே வேறுபாடு உண்டு. இப்போது அவர் இயேசுகிறிஸ்துவின் வார்த்தையின்படியே விசுவாசிக்குள் கிரியைசெய்கிறார் (யோவான் 14:17). விசுவாசிக்குள் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னம் இருப்பதே விசுவாசி இரட்சிக்கப்பட்டிருப்பதற்கான நிரூபணமாக இருக்கிறது (ரோமர் 8:9).

பரிசுத்த ஆவியானவர் உள்ளே வாசம்பண்ணுவது இரட்சிப்பின்போது கொடுக்கப்பட்ட ஒரு வரமாகும் (ரோமர் 5:5; அப்போஸ்தலர் 11:16–17; 1 கொரிந்தியர் 2:12). ஒரு வரம் திரும்ப எடுக்கப்பட மாட்டாது (ரோமர் 11:29). எனவே ஒரு நபர் பாவம் செய்யும்போது பரிசுத்த ஆவியானவர் அவனைவிட்டு விலகுவதில்லை. பாவத்தில் ஈடுபட்டு (1 கொரிந்தியர் 5:5), ‘‘மாம்சத்திற்குரியவர்கள்’’ என்று அழைக்கப்பட்ட (1 கொரிந்தியர் 3:3) கொரிந்தியர்கள் இருந்தாலும், *எல்லோருக்குள்ளும்* பரிசுத்த ஆவியானவர் அப்போதும் வாசம்பண்ணிக் கொண்டிருந்தார் (1 கொரிந்தியர் 3:16; 6:19).

b. நிறைதல்

‘‘ஆவிக்குரியதன்மை’’ என்பது பரிசுத்த ஆவியானவரோடு நமக்குள்ள உறவின் அளவைக் குறிக்கும் அதே வேளையில், ‘‘பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுதல்’’ நமது ‘‘ஆவிக்குரிய தன்மையின்’’ துவக்கமாகும். பரிசுத்த ஆவியானவர் நம் மூலமாகக் ‘‘கனியை’’ உண்டாக்கும்படியாக (கலாத்தியர் 5:22–23), எப்போதும் நாம் அவரால் நிரப்பப்பட்டு, வல்லமை பெறுவதை நாட வேண்டும்.

பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது என்பது, குறிப்பிட்ட பணியைச் செய்வதற்காகச் சிறப்பான முறையில் நிரப்பப்படுவதாகவே வேதாகமத்தில் துவக்கம் பெற்றது. ஆனால் இப்போதோ அது நமது கிறிஸ்தவ வாழ்க்கையில் நாள்தோறும் தொடர்ந்து வரும் ஒரு அம்சமாக இருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதின் முக்கியத்துவத்தை, விதவைகளுக்குப் பந்திவிசாரணை செய்வதில் உதவும்படி தெரிந்துகொள்ளப்பட்ட ஸ்தேவானில் முதன்முறையாகக் காண்கிறோம் (அப்போஸ்தலர் 6:5). சபையானது ஒரு ‘‘குழந்தையாகத்’’ துவங்கி, முதிர்ச்சியடையும்படி ஊக்குவிக்கப்பட்டிருப்பதை நாம் பார்க்கும்போது, இந்த அர்த்தத்தின் விரிவாக்கத்தை நம்மால் எதிர்பார்க்க முடியும் (எபேசியர் 4:11–16).

சுவிசேஷங்களையும், அப்போஸ்தலருடைய நடபடிகள் நூலையும் தவிர பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதைப்பற்றிக் கூறப்பட்டுள்ள மற்றொரு இடம் பவுல் அப்போஸ்தலன் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் இருக்கிறது. ***“துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்”*** என்று அவர் நமக்குக் கட்டளையிடுகிறார் (எபேசியர் 5:18). ஒருவர் மதுவை அருந்துவதினால் உடனடியாக வெறிகொள்ளுவதில்லை; அதைப்போல பரிசுத்த ஆவியினால் நிரப்பப்படுவதும் படிப்படியாக நடக்கிறது என்பதை இது உணர்த்துகிறது. பவுல் ஏற்கெனவே ‘‘நிரப்புதல்’’ (கிரேக்க மொழியில் PLEROO) என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ள விதத்திலும் இது போதிக்கப்படுகிறது (எபேசியர் 1:23; 3:19; 4:10). பவுன் கட்டளை பரிசுத்த ஆவியானவரால் தொடர்ந்து நிரப்பப்படுவதின் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது; இதற்காக நாம் தொடர்ந்து பாவத்தை உணர்ந்து, அறிக்கையிட்டு, தேவன் அவைகளை மன்னித்துவிட்டார் என்று விசுவாசிக்க வேண்டும். இவ்வாறு முரண்படாமருப்பது நமது ‘‘ஆவிக்குரிய தன்மையோடு’’ நேரடியான தொடர்புடையதாக இருக்கிறது.

இவ்வாறு ஆவிக்குரிய தன்மை கிருபையையும் விசுவாசத்தையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. ***“ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக”*** என்று நமக்குக் சொல்லப்பட்டிருக்கிறது (கொலோசெயர் 2:6–7). நாம் விசுவாசத்தினாலே கிருபையின் மூலமாக அவரைப் பெற்றுக்கொண்டோம் (எபேசியர் 2:8–9). கிறிஸ்தவ முதிர்ச்சிக்கு வழிநடத்தும் ஆவிக்குரிய தன்மை விசுவாச நடக்கையில் வேர் கொண்டிருக்கிறது என்ற தெளிவான போதனை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது (கலாத்தியர் 3:2–3). விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாக இருப்பது கூடாதகாரியமாகும் (எபிரெயர் 11:6).

முடிவாக, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவது விசுவாசிகள் கிறிஸ்து இயேசுவுக்குள் இன்னுமதிக முதிர்ச்சியைப் பெறும்படியாக அவர்களைப் பலப்படுத்துகிறது.

c. துக்கப்படுத்துதல் மற்றும் அவித்துப்போடுதல்

ஒரு விசுவாசி பாவம் செய்யும்போது, அது பரிசுத்த ஆவியானவரைத் ‘‘துக்கப்படுத்துகிற’’ அல்லது அவருக்கு வருத்தத்தைக் கொண்டுவருகிறது (எபேசியர் 4;30). விசுவாசியின் வாழ்க்கையில் இந்தப் பாவம் எவ்வளவு அதிககாலம் அறிக்கையிடப்படாமல் இருக்கிறதோ அவ்வளவாக அது பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறது. விசுவாசியின் தனிப்பட்ட வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்பதை இந்த வார்த்தை விவரிக்கிறது.

விசுவாசி பரிசுத்த ஆவியானவரை ‘‘அவித்துப்போடுவ’’ என்பது தண்ணீர் ஊற்றி அணைப்பது போன்றதாகும். இது விசுவாசி தன்னுடைய அல்லது மற்றவர்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கோ அல்லது கனிக்கோ பாதிப்பை உண்டாக்குவதைக் குறிக்கிறது (1 தெசலோனிக்கேயர் 5:19). மற்ற விசுவாசிகளில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையை நிறுத்திப்போட நாம் முயலக்கூடாது.

3. **பாவ(ங்களை)த்தை அறிக்கையிடுதல்**

நாம் இரட்சிக்கப்பட்டபோது நமது பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டுவிட்டன என்பது தேவனுடைய வார்த்தையிருந்து தெளிவாக இருந்தாலும்கூட, விசுவாசிகளாகிய நாம் இன்னும் பாவம் செய்வோம் என்பதும் தெளிவாக இருக்கிறது (ரோமர் 7:14-25). பாவம் இப்போது நமது இரட்சிப்பைப் பாதிக்கப்போவதில்லை என்றாலும், அது நமது கிறிஸ்தவ வாழ்க்கையை நிச்சயமாகப் பாதிக்கும். விசுவாசியின் வாழ்க்கையிலுள்ள பாவம் தேவனோடும் மற்றவர்களோடும் அவனுக்குள்ள உறவைக் காயப்படுத்துகிறது. ஆனால் அதை முறித்துப்போடுவதில்லை. எனவே பாவம் ஐக்கியத்தைக் குறித்த காரியமாக இருக்கிறது.

ஐக்கியம் கொள்ளுதல் என்பது ஒருவரோடொருவர் பகிர்ந்துகொள்ளுவதாகும். இவ்வாறு பகிர்ந்துகொள்ளுவது மக்களையோ, நிகழ்ச்சிகளையோ, பொருட்களையோ அல்லது நேரத்தையோகூடக் குறிக்கலாம். அவிசுவாசிகள்கூட பாவம் செய்வதில் ஒன்றாக இணைந்திருப்பார்களானால் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொள்ள முடியும். இந்த ஐக்கியத்தின் விதிகளை ஒரு விசுவாசியோ அல்லது அவிசுவாசியோ மீறும்போது, அவர்கள் மற்றவர்களோடு இசைந்திருக்காமல் மாறிப்போகிறார்கள். கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனோடும் ஒருவர் மற்றவரோடும் உறவுகொள்ள வேண்டும்; இது தேவனுடைய பிள்ளைகள் என்ற நமது புதிய நிலையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. எனவே இது தேவன் நிறுவிய நீதியான தகுதி நிலைகளை அடிப்படையாகக் கொண்ட ஐக்கியமாக இருக்கிறது.

தேவனோடும் மற்ற கிறிஸ்தவர்களோடும் உள்ள உறவில் எவ்வாறு சீர்பொருந்துவது என்பதுபற்றிய செய்தி 1 யோவான் 1:5-10 வசனங்களில் தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஐந்தாம் வசனம் ஐக்கியத்துக்கான தகுதிநிலையைக் கொடுக்கிறது. ***"தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை; இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிற"*** என்று அந்த வசனம் சொல்லுகிறது. தேவனுடைய ஒளியே தகுதிநிலையாக இருக்கிறது. இது பாவத்தைக் குறித்த அவருடைய சத்தியத்தைக் குறிக்கிறது.

ஆறாம் வசனம் அந்த உறவுக்கான பரீட்சையைக் கொடுக்கிறது. ***"நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம்"*** என்று அந்த வசனம் சொல்லுகிறது. நமது சிந்தனைகளும், பேச்சும், செயல்களும் (நடக்கை) தேவனுடைய ஒளியில் பரீட்சித்துப் பார்க்கப்பட வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.

ஏழாம் வசனம் உறவுக்கான நிபந்தனையை உறுதிப்படுத்துகிறது. ***"அவர் ஒளியிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்"*** என்று இந்த வசனம் சொல்லுகிறது. கிறிஸ்துவைப்போருக்கும் நமது நினைவுகளும், பேச்சும், செயல்களும் ஒருவர் மற்றவரோடு ஐக்கியத்தையும் தொடர்ந்து பாவத்திருந்து சுத்திகரிக்கப்படுதலையும் கொண்டுவருகின்றன.

எட்டாம் வசனம் பாவத்தின் ஏமாற்றும் தன்மையை வெளியரங்கமாக்குகிறது: ***"நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இரா"*** "நமக்கு" என்ற சொல் விசுவாசிகளையே குறிக்க வேண்டும்; ஏனென்றால் நாம் என்பதில் யோவான் தன்னையும் உள்ளடக்கியிருக்கிறார். தான் பாவமில்லாத பரிபூரண நிலையை எட்டிவிட்டதாக ஒரு நபர் நம்பும்போது, உண்மையில் அந்த நபர் ஏமாற்றப்பட்டிருக்கிறான்.

ஒன்பதாம் வசனம் பாவத்துக்கான தீர்வைக் கொடுக்கிறது: ***"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்"*** "அறிக்கையிடுதல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொல்லாகிய HOMOLOGEO என்ற சொல்ன் அர்த்தம் ஒப்புக்கொள்ளுவதாகும். அதாவது, சிந்தனையும், பேச்சும் அல்லது செயலும் பாவமாகும் என்று தேவனோடு ஒப்புக்கொள்ளுவதாகும். மனந்திரும்பாத இருதயத்தோடு இருந்துகொண்டு, தேவனை மன்னிக்கச் செய்வதற்கு இது ஒரு "சூத்திரம்" என்று நினைத்துக்கொள்ளக் கூடாது; தேவனைப் பரியாசம் பண்ணக் கூடாது (கலாத்தியர் 6:7). ஜீவனுள்ள தேவனிடம் ஒருவர் பாவத்தை அறிக்கையிட வேண்டும் என்பதற்கான காரணம் என்னவென்றால், அவரால் மன்னிக்க முடியும், அவர் மன்னிப்பார் என்று அந்த நபர் விசுவாசம் கொண்டிருக்கிறார். கிறிஸ்தவர்கள் அறிந்து, விசுவாசித்து, பயன்படுத்தும்படியாக இது தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு வாக்குத்தத்தமாகும்.

பாவத்தை உணராதவர்களின் நிலையைப் பத்தாம் வசனம் விவரிக்கிறது. ***"நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்யராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இரா"*** ஒரு கிறிஸ்தவனாக நமது வாழ்க்கையில் பாவம் இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளாவிட்டால், நாம் தேவனைப் பொய்யராக்குகிறோம், அவருடைய வார்த்தையைப் புரிந்துகொள்ளவில்லை என்பதே இந்த வசனத்தின் அர்த்தமாகும்.

இந்த எல்லா வசனங்களையும் நாம் ஒன்றாக ஆராய்ந்து பார்க்கும்போது, பாவமே தேவனோடும் (வசனம் 6), மற்ற விசுவாசிகளோடும் (வசனம் 7) உள்ள உறவைக் காயப்படுத்துகிறது என்பதை அறிகிறோம். தேவனுக்கு முன்பாக இந்தப் பாவத்தை ஒப்புக்கொள்ள வேண்டும் (வசனம் 9 - தேவன் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்). எனவே மன்னிப்பைப் பெற்று உறவைச் சரிசெய்ய முடியும்.

பாவத்தின் நித்திய பின்விளைவுகளே மன்னிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நினைவில் வைத்திருங்கள். என்றாலும், காலம் கடக்கும்போது, விசுவாசி சில செயல்களின் பின்விளைவுகளைச் சந்திக்க வேண்டியிருக்கும். ஆதாமும் ஏவாளும் மன்னிக்கப்பட்டாலும், ஏதேன் தோட்டத்தைவிட்டு வெளியேற்றப்பட்டார்கள்.

4. **ஆவிக்குரிய வரங்கள்**

ஆவிக்குரிய வரம் என்பது, கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள்ளாக வெவ்வேறு ஊழியத்தில் சிறப்பாகச் செய்யும்படி தேவனால் கொடுக்கப்பட்ட திறமையாகும். இதன் மூலச் சொல் ஒரு கிரேக்கச் சொல்ருந்து உருவாக்கப்பட்டது. "கிருபையின் விளைவாகக் கொடுக்கப்பட்ட"து (கரிஸ்மா-CHARISMA) என்பதே அதன் அர்த்தமாகும். இது நம்முடைய இயற்கையான பிறப்பில் உள்ள அல்லது மனித திறமையிருந்து வேறுபட்டது, இதில் இயேசு கிறிஸ்து வரங்களை ஏற்படுத்தினார் (எபேசியர் 4:11) மற்றும் இரட்சிப்பின்போது பரிசுத்த ஆவியானவர் தம்முடைய சர்வ அதிகாரத்தின்படி முழு சபைக்கும் (எபேசியர் 2:20) பகிர்ந்தளிக்கிறார் (1 கொரிந்தியர் 12: 11, 18) தாலந்து ஒவ்வொரு நபருக்கும் குறைந்தபட்சம் ஒரு வரமாவது கொடுக்கப்பட்டிருக்கிறது (1 பேதுரு 4:10). ஆனால் எவரும் தாமாகவே ஒரு சரீரமாகிய சபையாகிவிடாதபடி எவருக்கும் எல்லா வரங்களும் கொடுக்கப்படவில்லை (1 கொரிந்தியர் 12).

எல்லா வரங்களும் அன்பிலே செயல்பட வேண்டும் என்பதையும் (1 கொரிந்தியர் 13), அவை மற்றவர்களுக்கு ஊழியம் பண்ணவே வடிவமைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் (1 பேதுரு 4:10) நாம் உணருவது முக்கியமாகும். இவை பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய வரங்களாக இருந்தாலும்கூட, இவை தன்மீது கவனத்தைத் திருப்புவதற்காக மாம்சீக வழியில் பயன்படுத்தப்படலாம் என்றும் இவை பெருமைக்கு வழிவகுக்கின்றன என்றும் பவுல் அப்போஸ்தலன் (1 கொரிந்தியர் 12) நிருபத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார். பிரிவினைகளையோ குழப்பத்தையோ உண்டாக்குவதற்கு அல்ல (1 கொரிந்தியர் 14:12, 33), சபையைக் கட்டியெழுப்புவதற்காகவே ஆவிக்குரிய வரங்கள் பயன்படுத்தப்பட வேண்டும்.

புதிய ஏற்பாட்டில் ஐந்து இடங்களில் ஆவிக்குரிய வரங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன. **1 கொரிந்தியர் 12:8-10** வசனங்களில் நாம் ஞானத்தைப் போதிக்கும் வரம், அறிவை உணர்த்தும் வரம், விசுவாசம், குணமாக்கும் வரம், அற்புதங்களைச் செய்யும் வரம், தீர்க்கதரிசனம் உரைத்தல், ஆவிகளைப் பகுத்தறிதல், பற்பல பாஷைகளைப் பேசுதல், பாஷைகளுக்கு வியாக்கியானம் பண்ணுதல் ஆகிய வரங்களை நாம் காண்கிறோம். **1 கொரிந்தியர் 12:28** வசனத்தில், அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், போதகர்கள், அற்புதங்கள், குணமாக்குதல், ஊழியங்கள், ஆளுகைகள், பலவித பாஷைகள் இவைகளைக் காண்கிறோம். **எபேசியர் 4:11** வசனத்தில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர் மற்றும் போதகரையும் காண்கிறோம். **1 பேதுரு 4:11** வசனத்தில் ஆவிக்குரிய வரங்களின் இரண்டு அடிப்படைப் பிரிவுகளாக போதித்தல், உதவி செய்தல் இவை குறிப்பிடப்பட்டுள்ளன. **ரோமர் 12:6-8** வசனங்கள் இந்த ஆவிக்குரிய வரங்கள் சிலவற்றின் பட்டியலைக் கொடுக்கின்றன.

பெந்தெகொஸ்தே நாளன்று துவக்கப்பட்ட சபைக்கு ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்பட்டன என்பதை நாம் உணர வேண்டும் (அப்போஸ்தலர் 2). சில வரங்கள் சபை துவக்கப்படும்படியாக அஸ்திபாரத்துக்குள்ள வரங்களாக இருக்கின்றன (எபேசியர் 2:20); சபை கட்டியெழுப்பப்பட்டு, உறுதிப்படுத்தப்பட இவை உதவுகின்றன (1 கொரிந்தியர் 14:40). இந்த வரங்கள் "அடையாளணுது வரங்கள் என்று அழைக்கப்பட்டன; இந்தப் புதிய கால ஒழுங்குக்காக வேத வசனங்கள் எழுதப்படும் வரையில், விசுவாசிகள் நற்செய்தியை அறிந்துகொள்ளும்படியாகவும், புதிய விசுவாசி உறுதிப்படுத்தப்படும்படியாகவும் இவை வடிவமைக்கப்பட்டுள்ளன (1 கொரிந்தியர் 14:20-22). இவை தற்காகமானவையாகும்; துவக்ககாலச் சபையில் அவை தேவையை நிறைவேற்றிய பிறகு, மறைந்துபோயின (1 கொரிந்தியர் 13:8-10).

கீழ்க்கண்ட பட்டியல் நாம் தாற்காகமான வரங்களைக் காணலாம்; சபையின் காலத்தில் இவை இப்போது ஆவிக்குரிய வரங்களாகச் செயல்படுவதில்லை:

சபையின் காலத்துக்கான தாற்காகமான ஆவிக்குரிய வரங்கள்	
அறிவை உணர்த்தும் வசனம் (1 கொரிந்தியர் 12:8)	சபை கால சத்தியத்திற்கு உபயோகப்படுத்தும்படியான இயற்கைக்கு அப்பாற்ப்பட்ட போதனைகள்
விசுவாச வரம் (1 கொரிந்தியர் 12:9)	முடியாது என்ற சூழ்நிலையில் கர்த்தர் மேல் இயற்கைக்கு அப்பாற்பட்ட பெரிய விசுவாசம் (1 கொரிந்தியர் 13:2 ஒப்பீடு அப்போஸ்தலர் 12:1-19)
ஞானத்தை உணர்த்தும் வசனம் (1 கொரிந்தியர் 12:8)	சபைக்கு நேரடியாகத் தேவையான செய்தியை இயல்புக்கு அப்பாற்பட்ட வகையில் அறிவித்தல்; இது தீர்க்கதரிசன இயல்பைக் கொண்டிருக்கவில்லைபுதிய ஏற்பாடு எழுதப்படும் வரையில் அவர்களை வழிநடத்தும்படியாக இது கொடுக்கப்பட்டது.
குணமாக்குதல் (1 கொரிந்தியர் 12:9, 28)	வெவ்வேறு வகைப்பட்ட நோய்களினால் பீடிக்கப்பட்டிருக்கும் தனிப்பட்டவர்கள் இயல்புக்கு அப்பாற்பட்ட வகையிலும், உடனடியாகவும், முழுமையான சரீர குணமாகுதலைப் பெறுதல்.
அற்புதங்கள் (1 கொரிந்தியர் 12:10, 28)	வழக்கமான இயற்கையின் விதிகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் குணப்படுத்தலும் பிசாசுகளை துரத்துவதும் காணப்பட்டது. (அப்போஸ்தலர் 19:11-12)
தீர்க்கதரிசனம் (1 கொரிந்தியர் 12:10, 28; ரோமர் 12:6; எபேசியர் 4:11)	சமீபத்து மற்றும் நீண்ட கால சபையின் எதிர்காலத்தைப் பற்றிய செய்தியை முன்னதாக அறிவிக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறன் (அப்போஸ்தலர் 11:27-28).
ஆவிகளைப் பகுத்தறியும் வரம் (1 கொரிந்தியர் 12:10)	கள்ளப் போதகர்களையும் கள்ளத் தீர்க்கதரிசிளையும் மதிப்பீடுசெய்ய பயன்படுத் தப்பட்ட அடிப்படையான இயற்கைக்கு அப்பாற்பட்ட வரம் (1 கொரிந்தியர் 14:32).
அந்நிய பாஷைகள் / மொழிகள் (1 கொரிந்தியர் 12:10, 28)	இதற்கு முன்னால் கற்றுக்கொள்ளாத மொழிகளைப் பேசும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமை.
வியாக்கியானம் செய்வது (1 கொரிந்தியர் 12:10)	இதற்கு முன்னால் கற்றுக்கொள்ளாத மொழிகளைப் பேசும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமையினால் விவரித்துக் கூறுவது.
அப்போஸ்தலர் (1 கொரிந்தியர் 12:28; எபேசியர் 4:11)	கிறிஸ்து தாமே தெரிந்தெடுத்த (லூக்கா 6:13-16; அப்போஸ்தலர் 9:15; கலாத்தியர் 1:1) பன்னி ரண்டு மனிதர்கள் மட்டுமே வைத்துக் கொண்ட ஒரு ஆவிக்குரிய (வெளிப்படுத்தல் வரம் 21:14).

“நிறைவான”து வரும்போது, “தீர்க்கதரிசன”, “அந்நிய பாஷை பேசும்” “அறிவின் வார்த்தை” ஆகிய வரங்கள் ஒழிந்துபோகும் (1 கொரிந்தியர் 13:8-10) என்று நமக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வரங்கள் அழிந்து போவதால், “ஆவிகளைப் பிரித்தறியும்” மற்றும் “அந்நிய பாஷைகளை வியாக்கியானம் செய்யும் வரம்” ஆகிய வரங்களும் மறைந்துபோகும். ஏனென்றால் இவைகள் முன்னால் கூறப்பட்ட வரங்களோடு சேர்ந்து செயல்படுகின்றன. ஞான வரம் மற்றும் விசுவாசம் ஆகியவையும் “ஒழிந்து போகும்” என்று சொல்லப்பட்ட மற்ற வரங்களுடன் இணைந்து செயல்படுவதாக காணப்படுகின்றன. இந்த எல்லா வரங்களும் “தொடர்புகொள்வ”து பற்றியவை என்பதைக் கவனியுங்கள். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் எழுதப்பட்டபொழுது, “சபையின் காலத்துக்கான” தீர்க்கதரிசனம் மூடப்பட்டது (வெளிப்படுத்தல் 22:18-19). ஆகவே “பூரணப்பட்ட” அதாவது தேவன் சுவாசித்த, தேவனால் ஏவப்பட்ட வசனங்கள், நிறைவேற்றப்பட வேண்டும். இவைகளுக்கும் அதிகமான புதிய செய்திகள் சபைக்கு அவசியமில்லை. இதனால் போதிக்கும் வரங்கள், புதிய ஏற்பாட்டின் வேத வசனங்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட செய்தியின்மீது கவனத்தைக் குவிக்கிறது.

வெளிப்படுத்தல் 21:14 பன்னிரண்டு அப்போஸ்தலர்கள் மட்டுமே இருந்தார்கள் என்று குறிப்பிடுகிறது. மற்ற மக்களும் “அப் போஸ்தலர்” என்றழைக்கப்பட்டாலும் அவர்களுக்கு இந்த வரம் இருந்ததா என்று தெரியவில்லை (கலாத்தியர் 1:19; ஆண் டவருடைய சகோதரன் முதல் பன்னிருவரில் ஒருவரல்ல..) ஆவிக்குரிய இந்த வரம் தற்காகமானது என்பது தெளிவாகிறது.

புதிய ஏற்பாட்டில் அவர்களுடைய வரலாற்றின் ஆதாரப்படி, “குணமளிக்கும்” மற்றும் “அற்புதமளிக்கும்” வரங்களும் தற்காக மான வரங்களே. இருந்தாலும் இன்னும் தேவனால் மக்களைக் குணமாக்கவும், அற்புதங்களை நடைபெறச் செய்யவும் முடியும், எனினும் ஒரு தனி நபருக்குக் கொடுக்கப்பட்ட வரத்தின் மூலமாக அல்ல. கர்த்தர் இன்னும் ஜெபங்களுக்குப் பதிலளிக்கிறார் (யாக்கோபு 5:16), எனினும் இந்த வரம் செயல்படுவது அதை வைத்திருக்கும் ஒருவரின் தீர்மானத்தின் அடிப்படையிலானது. குணமளிக்கும் வரத்தையுடையவர்கள் கர்த்தரைக் கூப்பிட முடியும், குணமளித்தல் நடைபெறும் (அப்போஸ்தலர் 3:6-8; 5:12-16; 9:34). உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் செய்தியை நாம் கவனிக்கும்படியும் அதை ஊர்ஜிதம் செய்வதற்கும் துவக்கக் கால சபை யில் இந்த வரங்கள் பயன்படுத்தப்பட்டன (அப்போஸ்தலர் 8:1-8, 39; 13:4-12; 14:1-4; 19:11-12). விசுவாசிகள் ஒருவர்மீது ஒருவர் அன்புகூருவது இயேசு கிறிஸ்துவின் செய்திக்கு கவனத்தைக் கவருவதற்கு ஒரு நல்ல வழியாயிருக்கிறது (யோவான் 13:34-35).

அப்போஸ்தலராகிய பவுலுக்கு இந்த குணமளிக்கும் வரம் இருந்தது என்று நமக்குத் தெரியும் (அப்போஸ்தலர் 20:8-12; 28:8), எனினும் அவருடைய வாழ்க்கையின் பிற்பகுதியில், அவரால் தம்முடைய நல்ல நண்பன் எப்பாப்பிரோத்துவையோ (பிப்பியர் 2:25-27) அல்லது தன்னையோ (2 கொரிந்தியர் 12:7-9) குணப்படுத்த முடியவில்லை. துவக்க சபையின் முக்கிய மக்களில் ஒரு வரான அப்போஸ்தலனை இந்த வரம் விட்டுப்போனதால், மற்ற எல்லாரையுங்கூட இது விட்டுப்போயிருக்க வேண்டும்.

மற்ற வரங்கள், “ஆரம்ப நிலையைக்” கடந்து சென்றபின் சபையின் செயல்பாட்டுக்களுக்காக அமைக்கப்பட்டன (1 கொரிந்தியர் 13:10-13), எனவே இவை நிலையானவை. எனவே இந்த வரங்கள் தேவனுடைய வசனங்களை பிறருக்கு எடுத் துக் கூறி மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்வதையும் உள்ளடக்கியவை (1 பேதுரு 4:10-11).

இன்றைக்கும் செயல்படும் நிலையான ஆவிக்குரிய வரங்கள் கீழே அட்டவணையிடப்பட்டுள்ளன.

சபையின் காலத்துக்கான நிரந்தரமான ஆவிக்குரிய வரங்கள்	
போதிப்பது (1 கொரிந்தியர் 12:28; ரோமர் 12:7)	தேவனுடைய வசனங்களை மற்றவர்களுக்கு எடுத்துக் கூறுவதில் இயற்கைக்கு அப் பாற்பட்ட திறமை
உதவி செய்வது (1 கொரிந்தியர் 12:28)	இயற்கைக்கு அப்பாற்பட்ட வழிகளில் ஒரு வரம் மற்றவர்களுடைய வரங்களுக்கு உதவி செய்கிறது. இது அநேக வித்தியாசமான பகுதிகளில் செயல்படுகிறது. ஒரு எடுத்துக்காட்டு: மற்றவர்கள் இன்னும் முழுமையாகத் தங்கள் குறிப்பிட்ட வரங்களை செயல்படுத்தும்படி அவர்களுக்குப் போஷாக்களிக்கும் உணவைத் திரட்டுவது அல் லது ஆயத்தம் செய்வதாகும் (அப்போஸ்தலர் 6:1-6)
நிர்வாகம் (1 கொரிந்தியர் 12:28)	தேவன் தம்முடைய சபைக்குக் கொடுத்த மூலாதாரங்களை ஒழுங்குபடுத்தி மேற்பார் வையிடும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறன்.
ஊழியஞ்செய்வது (ரோமர் 12:7; 1 பேதுரு 4:11)	வெளிப்படையான ஊழியத்தின் செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தக்கூடிய இயற்கைக்கு அப்பாற்பட்ட திறன்.
உற்சாகப்படுத்துதல் (ரோமர் 12:8)	கிறிஸ்துவின் சரீரத்தினுள் (சபையில்) உற்சாகப்படுத்துதன் அவசியத்தை உணர்ந்து, அவற்றைச் சந்திக்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறன்
கொடுத்தல் (ரோமர் 12:8)	ஒருவரிடமிருக்கும் மூலாதாரங்களை, சாதாரணமாக எதிர்பார்ப்பதைவிடக் கூடுதலாக மற்றவர்களுக்குக் கொடுத்துப் பங்கிடும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமை. குறிப் பிட்ட அளவு என்பதாயிராமல் தங்களிடம் இருப்பவைகளை விருப்பமாய் பங்கி டும் செயல். இது தன்னலமற்ற செயல், தாராளமாய்க் கொடுப்பதையும், பிறரோடு பகிர்ந்துகொள்வதையும் காட்டுகிறது
வழிகாட்டுதல் (ரோமர் 12:8)	சபையின் ஊழியத்தை நிறைவேற்றுவதில் தனி நபர்களுக்கு வழிகாட்டி நடத்தும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமை
இரக்கம் (ரோமர் 12:8)	ஆவிக்குரிய அல்லது சரீரப்பிரகாரமான தேவைகள் உள்ளவர்களை அடையாளங் கண்டு உதவிசெய்யும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறன்
சுவிசேஷத்தைப் பரப்புதல் (எபேசியர் 4:11)	தனி நபருக்கு அல்லது சிறுகூட்ட மக்களுக்கு, அவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளும்படியாக இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷ நற்செய்தியை அளிக்கும் இயற் கைக்கு அப்பாற்பட்ட திறன்
மேய்ப்பர் - போதகர் (எபேசியர் 4:11)	போதனை மூலமாகவும் அவருடைய வசனங்களை செயல்படுத்துவதின் மூலமாகவும் தேவனுடைய மந்தையை மேய்க்கும் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமை

5. **நீதி**

முந்தய பகுதியில், நாம் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்பொழுது தேவன் தம்முடைய நீதியை நமக்குக் கொடுத்தார் என்று கண்டோம். இது நீதிமானாக்கப்படுதல் என்றழைக்கப்பட்டது. இப்பொழுது புதிய விசுவாசி, எது சரி, எது தவறு என்ற தேவனுடைய தகுதி நிலையின் அடிப்படையில் முற்றிலுமாக இருக்க தன் வாழ்க்கையை மாற்றும் சவாலைச் சந்திக்கிறான். ஒரு விசுவாசியினுடைய வாழ்க்கையின் நீதி தேவனுடைய தகுதிநிலைக்கு ஒத்தவனாயிருப்பதை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

நீதியின் இரண்டு முக்கியமான தகுதிகள், உங்கள் முழு இருதயத்தோடும் தேவன்மீது அன்புகூருவதும், உங்களைப்போல் உங்கள் அயலான்மீது அன்புகூருவதுமாகும் (மாற்கு 12:29-31). நீதியாயிருப்பது என்பது பாவங்கள் இல்லாமருப்பது என்பது மட்டுமல்ல, அது உங்கள் மனமாற்றமும் மனநிலையும் தேவனோடு ஒத்துப்போக வேண்டும் என்பதைக் கூறுகிறது (பிப்பியர் 2:5-8). எடுத்துக்காட்டாக ***"உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவராயிருங்கள்"*** என்றபடி நாம் இருக்க வேண்டும். மேலும் நம்முடைய எதிரிகளிடமும் நாம் அன்பாயிருக்கவேண்டும் (லூக்கா 6:36-40). எளியவர்களுக்குக் கிருபையாய் உதவிசெய்வதன் மூலம், இந்த நீதியிருந்து நாம் கனிகொடுக்க வேண்டும் (2 கொரிந்தியர் 9:8-10). தேவனுடைய சித்தத்திற்கேற்ப செயல்படுதலுங்கூட இந்த நீதியின் ஒரு பகுதியாயிருக்கிறது (எபிரெயர் 11:32-33).

விசுவாசியின் நீதி பின்தொடரப்பட வேண்டும் (1 தீமோத்தேயு 6:11; 2 தீமோத்தேயு 2:22-23). இந்த நீதியைப் புரிந்துகொள்ள தேவனுடைய வசனங்கள் எல்லாம் முக்கியமானவை (2 தீமோத்தேயு 3:16-17), எனவே புது விசுவாசிக்கு இதைப் புரிந்துகொண்டு ஏற்றுக்கொள்ளுதல் கடினமான காரியமாகும் (எபிரெயர் 5:12-14).

தேவனுடைய தகுதிநிலைகளோடு (நீதி) இணங்குவது என்பது வெறுமனே மனிதர்களை கவரும்படியான ஒரு கீழ்ப்படிதலைக் குறிப்பதுமட்டுமல்ல (மத்தேயு 6:1). பரிசேயர்கள் மற்றவர்கள் காணும்படியாகத் தங்கள் நீதியைச் செயல்படுத்தினார்கள். மேலும் அவர்கள், தங்கள் பாரம்பரியங்களைக் கடைப்பிடித்தனர். அவை வேதவசனங்களுக்குச் சமமாக இருப்பதாக விசுவாசித்தனர். (மாற்கு 7:1-8). ஒருவர் தேவனுடைய வசனங்களுக்குப் புறம்பாகப்போய், அதை ஒரு நீதியின் தகுதிநிலையாக ஆக்குவது "சட்டத்தின்படியான"து (legalism - இதை குறித்து நாம் முன்பே பார்த்துள்ளோம்) என்று அழைக்கப்பட்டது, இது தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிற விரும்புகிற நீதியல்ல.

நீதியில் குறைவுபடும் ஒவ்வொரு நபரையும் பரிசுத்த ஆவியானவர் உணர்த்துகிறார் (யோவான் 16:8-10). நீதியில் குறைவுபடுதல், பரிசுத்தமான தேவனோடுள்ள உறவிருந்து அவிசுவாசியைத் தடுத்து விடுமென்று பரிசுத்த ஆவியானவர் வெளிப்படுத்துகிறார். இயேசு கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தினால், அவிசுவாசி இரட்சிக்கப்படுகிறான் (எபேசியர் 2:8-9). நீதிமானென்று அறிவிக்கப்பட்ட நிலையில், அவனால் தேவனோடு ஐக்கியம் கொள்ள முடியும். பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலுள்ள பாவத்தைப்பற்றிய குற்ற உணர்வைக் கொடுக்கிறார். பாவ அறிக்கையின் அவசியத்தைச் சுட்டிக்காட்டுகிறார். இதனால் தேவனோடுள்ள உறவு திரும்பவும் கொண்டுவரப்படுகிறது. (1 யோவான் 1:6-10). விசுவாசி பரிசுத்த ஆவியானவரால் கொண்டுவரப்பட்ட நீதியைத் தேட வேண்டும். தேவனுடைய இராஜ்யத்தில் வாழ்வதில் இது ஒரு முக்கிய பகுதியாயிருக்கிறது (ரோமர் 14:16-17). தெய்வீக தகுதிநிலைகளுக்குள் பூரணமாக வாழ்ந்த இயேசு கிறிஸ்துவின் வெளிச்சத்திருந்து இந்த நீதியின் கனி கிடைக்கிறது (எபேசியர் 5:6-10).

நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாக நாம் இருந்தால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டு அதைப் பெற்றுக்கொள்ளுவோம் (மத்தேயு 5:6). ஆவிக்குரிய மரணத்திருந்து நம்மை எழுப்பிய ஒருவரை நீதி கனப்படுத்துகிறது என்பதால் நமக்கு அதைப் பெற்றுக்கொள்ள ஆவல் இருக்க வேண்டும் (ரோமர் 6:12-13). இயேசு கிறிஸ்துவைத் தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்வரை அவிசுவாசிகள் ஆவிக்குரியரீதியில் மரணமடைந்தவர்களாய் இருக்கின்றனர் (ரோமர் 6:23). அவிசுவாசிகளாக நாம் எல்லாரும் பாவத்துக்கு அடிமைகளாயிருந்தோம், எனினும் இப்பொழுது விசுவாசிகளாக நாம் நீதிக்கு அடிமைகளாக மாற வேண்டும் (ரோமர் 6:16-19).

விசுவாசியைக் குழப்பி ஏமாற்றுவதற்கு சாத்தானும் அவனுடைய சேனைகளும் நீதியின் ஊழியக்காரரின் வேஷத்தைத் தரித்துக்கொள்ளுகிறார்கள் (2 கொரிந்தியர் 11:13-15). இது அவர்கள் அதற்காக நேர்மையோடு வாழுபவர்களைத் துன்புறுத்துவதாகும் (மத்தேயு 5:10; 1 பேதுரு 3:14). நம்முடைய வாழ்க்கையில் உண்மையாகவே நீதியாக மாறுவது ஒரு போராட்டம், எனினும் இது ஒரு கிரீடத்தை நித்திய பரிசாக நமக்கு அளிக்கக் கூடியது (2 தீமோத்தேயு 4:6-8). இந்தப் போராட்டத்தின்போது தேவன் உங்களுக்குப் பயிற்சியளித்து உங்கள் ஆத்துமாவில் மெய்யான சமாதானத்தை அருளிச் செய்வாராக (எபிரெயர் 12:11).

6. **ஜெபம்**

ஜெபம் என்பது தேவனோடு தொடர்புகொள்ளுவதாகும். ஜெபத்தைப்பற்றித் தெரிந்துகொண்டு, சிந்தித்து அல்லது கற்றுக்கொண்டு அதைச் செயல்படுத்தாவிட்டால் அதனால் எந்த பயனுமில்லை. ஒருவர் தேவனிடம் ஜெபித்து, பின்னர் அவர் பதிலளிப்பதைக் காணும்போது மட்டுமே அதன் மதிப்பு தெரிகிறது. ஜெபம் நமக்குக் கொடுக்கப்பட்ட ஒரு சலுகையாயிருக்கிறது ஏனெனில் அது தேவனுடைய கிருபாசனத்தண்டையில் நம்மை நுழையச் செய்கிறது (எபிரெயர் 4:16).

தங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தைத் தேடுபவர்கள், ஜெபத்தில் இடைவிடாமல் தரித்திருக்கிறார்கள். இது துவக்க சபையில் காட்டப்பட்டது (அப்போஸ்தலர் 2:42). இயேசுவினுடைய முதல் சீடர்கள், எப்படி ஜெபம் செய்ய வேண்டும் என்று தெரிந்துகொள்வதன் அவசியத்தைக் கண்டபொழுது (லூக்கா 11:1), இயேசு "கர்த்தருடைய ஜெபத்தை" அவர்களுக்குப் போதித்தார் (லூக்கா 11:2-4). ஜெபம் என்பது, உங்களுடைய விருப்பத்தை தேவன் நிறைவேற்ற வேண்டும் என்பதற்காக வார்த்தைகளை கவனமாக தெரிந்தெடுப்பது அல்ல, அது அவருடைய சித்தத்தோடு நம்மை ஒன்றுபடுத்தும் ஒரு நேரமாகும் (1 யோவான் 5:14). தூதர்களோடுள்ள போராட்டத்தில் ஜெபம் உங்களுடைய மிகவும் முக்கியமான பட்டயமாகும் (எபேசியர் 6:18).

ஜெபம் பிதாவுக்கு நேராகவும் (எபேசியர் 5:20; மத்தேயு 6:9; 1 பேதுரு 1:17) பரிசுத்த ஆவியானவரின் வல்லமையிலும் (எபேசியர் 6:18) குமாரனின் நாமத்திலும் (யோவான் 14:13; 15:16)., ஏறெடுக்கப்பட வேண்டும் என்று தேவனுடைய வசனங்கள் நமக்குக் கூறுகின்றன.

பொதுவாக ஜெபம் ஐந்து முக்கிய பகுதிகளைக் கொண்டதாயிருக்க வேண்டும். ஜெபத்தின் முதலாவது பகுதி பாவங்களை அறிக்கையிடுவதாகும் (சங்கீதம் 66:18-20; ஏசாயா 59:2; மத்தேயு 6:14; 1 யோவான் 1:9). இது தேவனோடு நமக்குள்ள உறவைத் தடுப்பது ஏதாவது இருக்கிறதா என்று நம்மைக் காணச்செய்கிறது. இரண்டாவது பகுதி துதிசெலுத்துவதாகும் (மத்தேயு 21:16; லூக்கா 19:37; ரோமர் 14:11; 15:11; எபேசியர் 1:6, 12, 14; எபிரெயர் 13:15). துதி செலுத்துவது என்பது தேவன் யார் என்பதை உணர்ந்து அவரைப் புகழ்வதாகும். மூன்றாவது பகுதி ஸ்தோத்திரிப்பது, இது அவர் நமக்காகச் செய்த காரியங்களுக்காக அவரைப் பாராட்டுவதாகும். நான்காவது பகுதி, வேண்டுதல் செய்வதாகும். இது மற்றவர்களுக்காக ஜெபிப்பதைக் குறிக்கும் (எபேசியர் 6:18; எபிரெயர் 7:25). ஐந்தாவது பகுதி, முறையிடுவது, இது உங்களுக்காக ஜெபிப்பதைக் குறிக்கும் (எபிரெயர் 4:16).

மேலும் ஜெபிப்பதற்கு முன், உங்கள் பாவங்களை எந்த நேரத்திலும் அறிக்கையிட (வேண்டும்)லாம். அது போலவே எந்த நேரமும். நீங்கள் அவருக்கு நன்றி செலுத்தலாம் அல்லது துதி செய்யலாம், மற்றும் உங்களுக்காகவும் அல்லது வேறு யாருக்காகவும் நீங்கள் தெரிந்துகொள்ளும் நேரத்திலும் வேண்டுதல் செய்யலாம்.

7. வளர்ச்சி

நாம் இந்த உலகத்தினுள் ஒரு குழந்தையாகப் பிறந்ததுபோலவே, இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது நாம் மறுபடியும் பிறக்கிறோம் (யோவான் 3:1-16), குழந்தைப் பிராயத்திருந்து நாம் வளர்ந்து முதிர்ச்சியடைவதுபோல, நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையிலும் நாம் வளர வேண்டும். நாம் முதிர்ச்சியடைந்தவர்களாக மாறும்படி அழைக்கப்படுகிறோம். அந்த அழைப்பு நம்முடைய பரலோக பிதாவினுடையதைப் போன்ற ஒரு முதிர்ச்சிக்கான அழைப்பாயிருக்கிறது (மத்தேயு 5:48), அது இந்த வாழ்க்கையில் ஒருபொழுதும் முழுமையாவதில்லை (பிப்பியர் 3:12-15).

நம்முடைய வளர்ச்சியின் முதல் காரியம் நாம் நம்மை அவருக்கு **"பரிசுத்தமும் தேவனுக்குப் பிரயமுமான ஜீவபயாய்"** அளிக்க விருப்பமுடையவராய் இருக்கிறோமா இல்லையா என்பதாகும், இதன் அர்த்தம் நம்முடைய வாழ்க்கையை அவருடைய ஊழியத்துக்காக ஒப்புக்கொடுக்கிறோமா என்பதாகும் (ரோமர் 12:1-2). இதற்குப்பின் நம்முடைய பிதா நாம் வளரும்படி உதவிசெய்ய அநேக சோதனைகளை நம்முடைய வாழ்க்கையில் கொண்டுவருகிறார் (யாக்கோபு 1:2-4). அவர் சபைக்கு அநேக ஆவிக்குரிய வரங்களையும் கொடுத்திருக்கிறார் (எபேசியர் 4:11-14).

முதிர்ச்சியடைவது என்பது எளிதாக, ***"குழந்தைக்கேற்றவைகளை ஒழித்துவிட்டேன்"*** (1 கொரிந்தியர் 13:11) என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. முதிர்ச்சியடைந்த ஒருவர் அவருடைய செயல்களிலும் (மத்தேயு 19:21), சொல்லும் (யாக்கோபு 3:1-2), எண்ணங்களிலும் (1 கொரிந்தியர் 14:20) வளர்ச்சியடைந்தவனாயிருக்கிறான். நம்முடைய உறுதியின் அடிப்படையில் நம்முடைய முதிர்ச்சியை நாம் மதிப்பிடுவோம். சிறுபிள்ளைத்தனமான செயல்கள் (சுயநலம் போன்றவை) வேதனைப்படுத்தம் பேச்சு பாவகரமான எண்ணங்கள் (பெருமை) ஏறக்குறைய சாதாரணமாக ஆகிவிட்டனவா? அவைகள் சர்வசாதாரணமானவைகளாகிவிட்டால் அப்போது ஒருவர் அதிக சிறுபிள்ளைத்தனமானவரும் குறைவாக முதிர்ச்சியடைந்தவராகவும் இருக்கிறார்.

வேதவசனங்களில் முதிர்ச்சியைப்பற்றி அநேக தகுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. முதிர்ச்சி அடைவதென்பது சுயநலமின்மை (மத்தேயு 19:21), தாழ்மை (பிப்பியர் 3:12-15), உபதேசம் செய்தல் (கொலோசெயர் 1:28) ஆகிய குணங்களையுடையவராய் இருப்பதாகும். அது மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்கிறது (கொலோசெயர் 4:12). அது ஆவிக்குரிய விடுதலையை சுயநலத்துக்காகப் பயன்படுத்தாமல் (யாக்கோபு 1:25; கலாத்தியர் 5:1, 13), கனத்துக்குரிய வகையில் பயன்படுத்துகிறது. முதிர்ச்சியடைதல், ஒருவர் தேவனுடைய நீதியின் தகுதிநிலையைப் பாராட்டும், அளவுக்கு வளர்ந்துவிட்டார் என்பதைக் குறிப்பிடுகிறது (எபிரெயர் 5:12-14). முதிர்ச்சியடைந்த நபர், எல்லா நன்மைகளும் அதிருந்து வருகிறது (யாக்கோபு 1:17) என்று தெரிந்துகொண்டு, தேவனுடைய கிருபையை (2 கொரிந்தியர் 12:9) சார்ந்திருக்க வேண்டுமென்று கற்றுக்கொண்டவர். நம்முடைய வாழ்க்கை எப்படி முதிர்ச்சியடைந்ததாக மாறிவிட்டது என்பதை மிக அதிகமாக வெளிப்படுத்தும் குணம், நம்முடைய வாழ்க்கையிருந்து பயத்தை அது அகற்றும்வரை தேவனோடு நமக்குள்ள அன்பு உறவை எந்த அளவுக்கு வளர்ந்துள்ளது என்பதை பொருத்துள்ளது (1 யோவான் 4:17-19).

8. அன்பு

இயேசு கிறிஸ்து தாமே, கிறிஸ்தவ வாழ்க்கையில் அன்பு மிகவும் முக்கியமானது என்றார். மாற்கு சுவிசேஷத்தில், இயேசு உபாகமம் 6:4-5 வசனங்களைக் குறிப்பிட்டு மிகப்பெரிய கற்பனையை வெளிப்படுத்தினார். அவர், ***"பிரதான கற்பனை எதுவென்றால்: இஸ்ரவேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். நீ உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை"*** (மாற்கு 12:29-30) என்றார். அடுத்தபடியாக இயேசு இரண்டாவது மிகப்பெரிய கற்பனையென்று சொல்லப்பட்ட லேவியராகமம் 19:18ன் ஒரு பகுதியைக் குறிப்பிட்டார். ***"அந்த இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே; இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை"*** என்றார் (மாற்கு 12:31). அவர்மீது நாம் அன்புகூர வேண்டும். ஏனெனில் முதலாவது அவர் நம்மீது அன்புகூர்ந்தார் (1 யோவான் 4:19). நாம் உண்மையாக அவர்மீது அன்புகூர்ந்தால் நம்முடைய சகோதரன்மீது நாம் அன்புகூருவோம் (1 யோவான் 4:20-21). நாம் அழைக்கப்பட்ட அன்பு மானிடர்கள் ஒருவரிடம் ஒருவர் காட்டும் சாதாரண அன்பு அல்ல, அது பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வரும் ஒரு அன்பாகும் (கலாத்தியர் 5:22). மனித உணர்வுகள் இதில் சம்பந்தப்பட்டு இருந்தாலும் இது வெறும் உணர்ச்சிகளின் அடிப்படையில் உந்தப்பட்ட அன்பு அல்ல.

அன்பு என்றால் என்ன என்று கூறுவதைப்பார்க்கிலும் அன்பு தேவனுடைய வசனங்களால் விவரிக்கப்பட்டுள்ளது. 1 கொரிந்தியர் 13ல் காணப்படும் அன்பு பற்றிய அற்புதமான வசனப்பகுதி அதன் முக்கியத்துவத்தை நமக்குப் போதிக்கிறது. நம்மிடம் என்ன ஆவிக்குரிய வரமிருந்தாலும் நாம் என்ன நன்மை செய்தாலும் அல்லது நாம் என்ன காணிக்கை கொடுத்தாலும், அது அன்பினால் செய்யப்படாவிட்டால் நாம் கிறிஸ்தவ வாழ்க்கையின் இலக்கைத் தவறவிட்டு விட்டுவிட்டோம் (1 கொரிந்தியர் 13:1-3) என்றாகிறது. இதன்பின் அப்போஸ்தலர் பவுல் அன்பின் பதினாறு விவரிப்புகளைக் கொடுக்கிறார் (13:4-8). ஒருவருடைய அன்பைப்பற்றித் தெரிந்துகொள்ள ஒரு நல்ல பரீட்சை, அன்புக்குப் பொறாமையில்லை என்று வாசிக்கும்போதும் எனக்கு பொறாமையிருக்கிறதா? என்று கேட்க வேண்டும். ஒவ்வொரு குண இயல்போடு இது போன்ற கேள்வியைக் கேட்க வேண்டும். இதன் பதில் "இல்லை" என்றால், அவருடைய வாழ்வில் அன்பு குறைவுபடுகிறது. அன்பைப் பற்றிய இன்றும் அதிக குணநலன்களும், செயல்பாடுகளும் ரோமர் 12:9-21 வசனங்களில் பட்டியவிடப்பட்டுள்ளன.

தேவன் நம்மிடம் விரும்புகிற அன்பின் எதிரி தான் “உலகம்” என்பது. “உலகம்” என்பது பெரும்பாலும் தேவனுடைய சித்தத் திருந்து நம்மைத் திசைதிருப்ப முயற்சி செய்யும் சாத்தானின் செயல்களைக் குறிப்பிடுகிறது. உலகம் நமக்குக் கொடுக்கும் காரியங்கள்மீது நாம் அன்பு செலுத்தும் போது, நாம் முற்றிலும் தேவன்மீது அன்பு செலுத்தத் திராணியற்றவர்களாகிறோம். (1 யோவான் 2:15).

9. **துன்பம்**

துன்பம் என்பது வேதனைக்குள்ளாகச் செல்வதாகும். அது சரீரப்பிரகாரமாகவும் மனரீதியிலும் இருக்கக் கூடும். நம்முடைய பாவங்களுக்காக கிரயம் செலுத்தி மனிதகுலத்துக்குத் தெரிந்த மிகப்பெரிய துன்பம் அனுபவித்த ஒருவரை நாம் சிலுவையிலே இயேசுகிறிஸ்துவில் காண்கிறோம் (1 பேதுரு 2:21-24; 4:1; 5:1). அவர் நம் பாவங்களுக்குக் கிரயம் செலுத்தும்படியாகவே வந்து (லூக்கா 9:22; 22:15). அநீதியான மனிதர்களின் கைகளில் துன்பம் அனுபவித்தார் (1 பேதுரு 2;21-24). எனவே, அவரிருந்து எப் படி அநீதியான துன்பத்தை எதிர்கொள்ள முடியும் என்பதற்கான ஒரு எடுத்துக்காட்டை நாம் காண்கிறோம்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் முதிர்ச்சி என்ற கருத்தை முன்பாகவே அறிமுகப்படுத்தியிருக்கிறோம். அநீதியாகத் துன்பப்ப டுவது நம்மை முதிர்ச்சியுள்ளவர்களாக்க நாம் மேற்கொள்ளும் சோதனையின் ஒரு பகுதியாயிருக்கிறது (1 பேதுரு 5:10). நம்முடைய சாட்சிக்கும் சகிப்புத்தன்மைக்கும் தேவன் நித்தியமாக பலனளிப்பார் (1 பேதுரு 2:19-20; 2 கொரிந்தியர் 4:17). அநியாயமாய்த் துன்பம் அனுபவிக்கும் நேரங்களில் நம்முடைய சாட்சி அவர் மீதிருக்கும் நம்பிக்கையின் அடிப்படையி லானது (1 பேதுரு 4:19).

கிறிஸ்துவே நம்முடைய மெய்யான கர்த்தர் என்பதைத் தெரிந்துகொண்டு நீதிக்காக சரியானதைச் செய்தற்காக துன்பப்படுதல் ஒரு ஆசீர்வாதமாகும் (1 பேதுரு 3:14-17; 4;14). அதிகாரப் பதவியிருப்பவர்கள், ஒரு விசுவாசி கிறிஸ்துவைப் பின்பற்றுபவன் என்ற காரணத்தினால், அவர்களுக்கு அநியாயமாகத் துன்பம் கொடுக்கின்றனர். இது ஒவ்வொரு கிறிஸ்தவனும் சிறிதளவில் அல்லது அதிகமாக அனுபவிப்பதாகும் (பிப்பியர் 1:27-30).

இயேசு கிறிஸ்துவின் துன்பங்களுக்குச் சாட்சிகொடுத்த அப்போஸ்தலர் பேதுரு (1 பேதுரு 5:1), அவருடைய துன்பங்களை நாம் பகிர்ந்துகொளும் அளவுக்குக் களிகூரவேண்டும் என்று நமக்குச் சொன்னார் (1 பேதுரு 4:13-16). உலகம் இயேசுவைப் பகைப்பதால் அவரைப் பின்பற்றிபவர்களையும் பகைக்கும் என்ற சத்தியத்தை அவர் குறிப்பிடுகிறார் (யோவான் 15:18-20; 1 பேதுரு 4;12). கிறிஸ்துவினுடைய துன்பங்கள் மட்டுமே பாவத்துக்கான கிரயத்தைச் செலுத்தியது, நம்முடையவகளல்ல, எனினும் அவருடைய துன்பங்களைப் பகிர்ந்துகொள்ளுதல், நம்முடைய சார்பாக அவர் அனுபவித்த வேதனையின் அனுபவத்தைத் தெரிந்துகொள்ள நமக்கு உதவுகிறது. இந்த வகையான துன்பப்படுதலைக் குறித்து நாம் வெட்கப்படக்கூடாது (1 பேதுரு 4:16), மற்ற கிறிஸ்தவர்களும் வேதனையைச் சகித்துக்கொண்டு (1 பேதுரு 5;9), அவர்கள் தேவனுடைய இராஜ்யத்துக்குத் தகுதியான வர்கள் என்று நிரூபிக்கின்றனர் என்றும் தெரிந்துகொள்ள வேண்டும் (2 தெசலோனிக்கேயர் 1:5). இந்தத் துன்பப்படுதலுக்காக நாம் பயப்படக்கூடாது (வெளிப்படுத்தல் 2:10).

நாம் பாவங்களுக்காகத் துன்பப்படும்போது அது பெறத்தகுதியான துன்பம் என்பதையும் அது கிறிஸ்தவ வாழ்க்கையில் விரும்பத்தக்கதல்ல என்றும் பேதுரு எச்சரிக்கிறார் (1 பேதுரு 4:15). எந்தப்பாவமும் மிகப்பெரிய துன்பத்தை அனுபவிக்கத் தகுதியானதே (லூக்கா 13:1-5).

10. **ஒழுக்கம்**

ஒழுக்கம் என்ற வார்த்தை (கிரேக்கமொழியில் **(PAIDEUO)** நாம் விரும்பிய பயிற்சியைக் கொண்டுவர போதுமான வேதனையைக் கொடுப்பது என்ற கருத்தையும் உள்ளடக்கியது. எடுத்துக்காட்டாக, லூக்கா 23:16-22ல் தங்களுடைய வழிகளை மாற்றிக்கொள் ளுவார்கள் என்பதற்காக ஒரு சிறைக்கைதியை அடிப்பதை விவரிக்கிறது (லூக்கா 23:16-22) (பிலாத்துவினால் தண்டிக்கப்பட்டுடு பின்னர் விடுவிக்கப்பட இருந்த அந்தக் கைதி ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவாக இருந்தார்). அது கற்பிக்கப்படுதலையும் அடக்கியது. (அப்போஸ்தலர் 7:22; 22:3). திருச்சபை காலத்தின் விசுவாசியை மற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் நிலையில் அமர்த்தும்போது அது மிகுந்த ஒழுக்கத்துடன் செய்யப்பட வேண்டும் (2 தீமோத்தேயு 2:24-26).

ஒழுக்கம், துன்பத்திற்கு இணையாக உள்ளது, ஏனெனில் இரண்டிலும் வேதனை உள்ளது. துன்பப்படுவதென்பது ஒருவருக்குத் தகுதியான தண்டனையாகவும் அல்லது தேவையற்ற தண்டனையாகவும் கூட இருக்கலாம். ஆனால், ஒழுக்கம் என்பது பயிற்சி பெற அவசியமான வேதனையைக் குறிக்கிறது. நம்முடைய பயிற்சி குணங்களைச் சீர்ப்படுத்தும்படியான தேவையற்ற தண்ட னையாகவும் அல்லது நாம் வழிதப்பி போகும்போது (1 தீமோத்தேயு 1:18-20). நம்முடைய சிந்தையையோ பாவ செயல்களையோ மாற்றும்படியான தகுதியான தண்டனையாகவும் இருக்கலாம்.

தெய்வீகத் தண்டித்தல் என்பது நம்முடைய குண இயல்பை - ஒரு தகப்பன் தன் பிள்ளைக்குப் பயிற்சி அளிப்பதுபோல - (எபேசியர் 6:4; எபிரெயர் 12:7) கட்டி எழுப்பும் நோக்கத்தைக் கொண்டது. நீதியான செயல்களில் நிலைத்திருப்பதற்காகவும், இந்த நோக்கத்துக்காக தேவனுடைய வசனங்கள் எல்லாம் பயனுள்ளதாயிருப்பதற்காகவும் அது திட்டமிடப்பட்டிருக்கிறது (2 தீமோத்தேயு 3:16-17). அந்த நேரத்தில் தண்டிக்கப்படுதல் ஒரு மகிழ்ச்சியான நிகழ்ச்சியல்ல, எனினும் அதன் விளைவுகள் மதிப்புள்ளவைகள் (எபிரெயர் 12;11). பாவத்துக்கு நாம் செலுத்த வேண்டிய கிரயம், இந்தப் பயிற்சியின் முக்கியத்துவத்தை நாம் தெரிந்துகொள்ள வழிநடத்த வேண்டும் (தீத்து 2;11-12).

கோபத்தோடு தண்டிக்கும் நம்முடைய பூலோக தகப்பன்மார்களைப் போலல்லாமல், நம்முடைய பரமபிதா அவருடைய அன்பினால் நம்மைத் தண்டிக்கிறார் (வெளிப்படுத்தல் 3:19). இந்தப் பயிற்சியை அவர் நமக்களிப்பது நம்மேல் வைத்திருக் கும் அன்பினால் ஆகும்; இதனால் அவர் நம்மை சிட்சிக்கும்போது நாம் உற்சாகத்தை இழந்துவிடக்கூடாது (எபிரெயர் 12:5). தண்டிப்பதில் தேவனுடைய நோக்கம் நாம் உலகத்தோடு ஒத்த வேஷம் தரிக்கக்கூடாது என்பதாகும் (1 கொரிந்தியர் 11:31-32), எனவே விசுவாசி கர்த்தருடைய சிட்சையை வரவேற்க வேண்டும் (எபிரெயர் 12:8).

11. **வேதபாடம்**
தேவனுடைய வசனங்களைக் கற்றுக்கொள்ள வேண்டியதின் முக்கியத்தை மிகைப்படுத்த முடியாது. அவரோடு நம்முடைய உறவை வளர்த்துக் கொள்ள அது தேவனால் கொடுக்கப்பட்ட கையேடாகும். (1 கொரிந்தியர் 2:16). இந்த முழு வேத படிப்பும் தேவனுடைய வசனங்களின் முக்கியத்துவத்தின் அடிப்படையிலானவை, அதை ஒவ்வொரு நாளும் கற்றுக்கொள்ள வேண்டும்.

12. **ஆராதனை**
ஆராதனை என்பது இயேசு கிறிஸ்துவின் ஒரு கொண்டாட்டமாக இருக்க வேண்டும். இதில் அவர் யார் என்பதும், அவர் என்ன செய்தார் என்பதும் அது அவருடைய தகுதியைத் தெரிந்துகொண்டு, அவருக்குத் துதிசெலுத்துவதாகும். இயேசுவே துதிக்கப்பட தகுதியானவர் (வெளிப்படுத்தல் 5:1-7), பரலோகம் கர்த்தருடைய ஆராதனைக்காகத் தெரிந்துகொள்ளப்பட்ட ஒரு இடம் (வெளிப்படுத்தல் 4:9-11).

அவிசுவாசிகளான மனிதர் படைத்தவருக்கு ஆராதனை செய்து ஊழியஞ்செய்வதற்குப் பதிலாக, படைக்கப்பட்டவைகளுக்கு ஆராதனை செய்து ஊழியஞ்செய்கிறார்கள் (ரோமர் 1:25). தன்னை ஆராதிக்கவேண்டும் என்று சாத்தான் விரும்புகிறான் (லூக்கா 4:7), எனினும் நாம் தேவன் ஒருவரையே ஆராதிக்க வேண்டும் (லூக்கா 4:8). சிலர் தேவனுடைய மற்றொரு படைப்பான தேவதூதர்களையுங்கூட ஆராதிக்கின்றனர் (கொலோசெயர் 2:18). படைக்கப்பட்டவைகளை ஆராதிக்க வேண்டும் என்ற மனிதருடைய விருப்பத்தின் விளைவாக அவர்கள் தேவனுடைய வசனங்களில் இல்லாத, அவர்களே உருவாக்கிய கற்பனைகளையுங்கூட ஆராதிப்பார்கள் (மாற்கு 7:7). ஆராதிக்கப்படத் தகுதியுள்ள ஒருவரை ஆராதிப்பதற்கு மாறாக அவர்கள் ஆராதனை செய்யும் இடங்களையும் ஆராதிப்பார்கள் (யோவான் 4:20-22).

உண்மையான ஆராதனை இயேசு கிறிஸ்துவின் தகுதியை வெளிப்படுத்தி பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கையில் கிரியை செய்வதிருந்து வெளிவருகிறது (யோவான் 4;23-24; பிப்பியர் 3:2-3), இதனால் நாம் அவரைத் துதிக்க முடியும். நம்முடைய சரீரங்களை அவருக்கு ஊழியஞ்செய்யும்படி ஒப்புக்கொடுத்து (ரோமர் 12:1-2) விசுவாசத்தினால் அவருடைய வசனங்களை ஏற்றுக்கொள்ளுவதின் மூலம் இதைச்செய்ய முடிகிறது (எபிரெயர் 11:21).

ஆராதனை செய்வதற்கு அநேக மாதிரிகளிருந்தாலும், ஒருவர் எடுக்கும் நிலைகள் அல்லது நடவடிக்கைகள் கட்டளைகளாக வேதவசனத்தில் சொல்லப்படவில்லை. எனவே ஒருவருடைய ஆவிக்குரிய தன்மை அல்லது முதிர்ச்சியை அவர் ஆராதிக்கும் முறையின் மூலம் நியாயந்தீர்ப்பது இதனால் சட்டத்திற்குட்பட்டதாகிறது (legalism).

13. **சீடர்களை உருவாக்குதல்**
பிரதானக் கட்டளையில் இயேசு தம்முடைய சீடர்களிடம், ***"நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீடராக்குங்கள்"*** (மத்தேயு 28:18) என்று கட்டளையிட்டார். சீஷன் என்பவன் வசனத்தைக் கற்றுக்கொள்ளும் மாணவனாகவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பின்பற்றத் தீர்மானித்தவனாகவும் இருக்கிறான். இரட்சிக்கப்பட்டதோடு நிறுத்திவிடுபவர்கள் சீடர்களல்ல, மாறாக அதன்படி வாழ்வதற்காக தேவனுடைய வசனங்களைக் கற்றுக்கொள்ளும் விசுவாசியாக இருக்கிறான் (யோவான் 7:17).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 8, பகுதி 1

1. **கிறிஸ்தவ வாழ்க்கையின் பகுதிகளைப் பற்றி:**
   a. வாசிக்கவும் அப்போஸ்தலர் 16:30-31. அவர்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது, ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் எந்த அம்சம் ஏற்படுகிறது?
   b. வாசிக்கவும் 2 கொரிந்தியர் 3:18. ஒரு மனிதனுடைய வாழ்வின் எப்பகுதியில் விசுவாசி கிறிஸ்துவின் சாயலாக மறுரூபமடைகிறான்?
   c. வாசிக்கவும் 1 யோவான் 3:2. நாம் கிறிஸ்துவை அவர் இருக்கும் வண்ணமாக தரிசிக்கும் போது, ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் எப்பகுதி மாற்றம் ஏற்படுகிறது?

2. **வாசிக்கவும் எபிரேயர் 11:6. விசுவாசி தேவனைப் பிரியப்படுத்த எதைப் பெற்றிருக்கமுடியும்?**

3. **வாசிக்கவும் 1 கொரிந்தியர் 2:14-15. ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்து கொள்ள எது தேவை?**
   a. வாசிக்கவும் யோவான் 14:17. பரிசுத்த ஆவியானவர் எங்கே வாசம் பண்ணுகிறார்?
   b. வாசிக்கவும் கலாத்தியர் 3:2-3. ஆவிக்குரிய காரியங்களுக்கு அவசியமானது எது?
   c. வாசிக்கவும் எபேசியர் 4:30 மற்றும் 1 தெசலோனிக்கேயர் 5:19. ஒரு விசுவாசியில் உள்ள பாவம் எந்த இரண்டு காரியங்களை ஏற்படுத்தலாம்?

4. **வாசிக்கவும் 1 யோவான் 1:5-10. ஒரு விசுவாசி பாவம் செய்வானா? அப்படியானால் என்ன செய்ய வேண்டும்?**

5. **வாசிக்கவும் 1 பேதுரு 4:10. ஒவ்வொரு விசுவாசியும் எதை பெறுகிறான்?**
   a. வாசிக்கவும் 1 கொரிந்தியர் 13:1-3. ஒரு ஆவிக்குரிய வரத்தைப் பயிற்சி செய்வதில் தனிப்பட்ட விதத்தில் எது இருக்கவேண்டியது அவசியம்?
   b. வாசிக்கவும் 1 கொரிந்தியர் 13:8-11. சில வரங்களுக்கு என்ன நேரிடும் என்று இது கூறுகிறது?
   c. வாசிக்கவும் யோவான் 13:34-35 மற்றும் 1 பேதுரு 4:10. "ஒருவரை ஒருவர் நேசிப்பதின்" முக்கிய நோக்கத்தை நமக்கு ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்பட்ட காரணத்துடன் ஒப்பிடுக.

6. **வாசிக்கவும் ரோமர் 6:16-19. நாம் எதற்கு அடிமைகளாகவேண்டும்?**

7. ஜெபத்தின் ஐந்து முக்கியக் காரணிகளைக் குறித்து:
   a. வாசிக்கவும் 1 யோவான் 1:9. இங்கே கொடுக்கப்பட்டுள்ள காரணி எது?
   b. வாசிக்கவும் ரோமர் 14:11 மற்றும் 15:11. இந்தப் பகுதிகளில் கொடுக்கப்பட்டுள்ள காரணி எது?
   c. வாசிக்கவும் 1 தெசலோனிக்கேயர் 5:18. இங்கே கொடுக்கப்பட்டுள்ள காரணி எது?
   d. வாசிக்கவும் எபேசியர் 6:18. இங்கே கொடுக்கப்பட்டுள்ள காரணி எது?
   e. வாசிக்கவும் எபிரெயர் 4:16. இங்கே கொடுக்கப்பட்டுள்ள காரணி எது?

8. வாசிக்கவும் 1 பேதுரு 2:2 மற்றும் 2 பேதுரு 3:18. இரட்சிப்புக்குப் பிறகு கிறிஸ்தவன் செய்யவேண்டியது என்ன?

9. வாசிக்கவும் மாற்கு 12:29-31. தேவனுடைய இரண்டு முக்கிய கட்டளைகள் எவை?

10. வாசிக்கவும் 1 பேதுரு 2:19-20 மற்றும் 1 1 பேதுரு 5:10. விசுவாசி எதை சகிக்கவேண்டும்?

11. வாசிக்கவும் எபிரெயர் 12:6-7. தேவன் நம்மை எப்படி பயிற்றுவிக்கிறார்?

12. வாசிக்கவும் 2 தீமோத்தேயு 3:16-17. தேவனுடைய வார்த்தையை படிப்பது லாபகரமானதா?

13. வாசிக்கவும் யோவான் 4:23-24 மற்றும் பிப்பியர் 3:2-3. தேவன் நாம் எப்படி ஆராதிக்க வேண்டும்?

14. வாசிக்கவும் மத்தேயு 28:18-20. கிறிஸ்துவின் சீஷர்கள் எவைகளைச் செய்யவேண்டும்?

பகுதி 2
ஒன்றுபட்ட கிறிஸ்தவ வாழ்க்கை (Ecclesiology)

A. போதனை

இயேசு கிறிஸ்து மிகப்பெரிய கட்டளையைக் கொடுத்தபோது, அவர் கற்பித்ததின் ஒரு பகுதியாக, ***"நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்"*** (மத்தேயு 28:20) என்றார். இயேசு ஒரு போதகர் (மத்தேயு 4:23; 5:2; 7:29; 9:35; 11:1; 13:54; 21:23; 22:16; 26:55; 28:15; அப்போஸ்தலர் 1:1). அவரது சீடர்களும் அவர் கட்டளையிட்டபடியே செய்து போதிக்கத் துவங்கினார்கள் (அப்போஸ்தலர் 4:2, 18; 5:21, 25, 28, 42; 11:26; 15:1, 35; 18:11, 25; 20:20; 21:21, 28).

போதிப்பது உபதேசத்தைக் கொடுக்கிற வேளையில், பிரசங்கம் உற்சாகப்படுத்துகிறது (கொலேசெயர் 1:28; 3:16). இவை இரண்டும் சபைக்கு முக்கியமானவை.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு செய்யவேண்டிய காரியங்களைப்பற்றிய குறிப்புகளைக் கொடுத்த பொழுது, அவனிடம் அவன் மற்றவர்களுக்குப் போதிக்கும்போது அவர்கள் இன்னும் அதிமானவர்களுக்குப் போதிக்கத் தகுதியுள்ளவர்களாயிருப்பார்கள் என்று கூறினார் (1 தீமோத்தேயு 4:11; 6:2; 2 தீமோத்தேயு 2:2). இப்படியாக தேவனுடைய வசனங்கள் ஒரு சந்ததியிருந்து மற்ற சந்ததியினரை வந்தடைந்தது.

சிலர் போதகர்களாக இருப்பதற்கு வரம்பெற்றவர்களாயிருந்தாலும் (ரோமர் 12:7), எல்லா விசுவாசிகளும் போதிக்கும்படி அழைக்கப்பட்டவர்களே (எபிரெயர் 5:12-14).

B. ஐக்கியம்

ஒருமித்திருத்தல் என்பது துவக்க கால சபையின் ஒரு முக்கிய பகுதியாயிருந்தது (அப்போஸ்தலர் 2:42). இது ஒருவர் மற்றொருவரோடு பகிர்ந்துகொள்ளுதலைக் குறித்தது. இது ஒருவருடைய பொருளைப் பகிர்ந்துகொள்வதை மட்டுமல்ல (ரோமர் 15:26; 2 கொரிந்தியர் 8:4; 9:13; எபிரெயர் 13:16), ஆவிக்குரிய காரியங்களைப் பகிர்ந்துகொள்வதையும் காட்டுகிறது (1 யோவான் 1:3, 7). அதை இந்த அதிகாரத்தின் பகுதி ஒன்றில் படித்தோம். ஒருமித்திருப்பது என்பது ஒன்றுபட்டு ஆராதனை செய்வதையும் குறிக்கிறது. கர்த்தரை ஒன்றுகூடி ஆராதிப்பது தனிநபர் ஆராதனையிருந்து வளர்ச்சியடைந்ததாகும்.

மற்ற விசுவாசிகளோடு ஆவிக்குரிய ரீதியில் ஒருமித்திருப்பது (2 கொரிந்தியர் 6:14) இயேசு கிறிஸ்துவோடு நமக்குள்ள ஐக்கியத்தின் அடிப்படையிலானது (1 யோவான் 1:7), இது பரிசுத்த ஆவியானவரோடு நம்முடைய ஐக்கியத்தின் மூலம் கொண்டுவரப்பட்டது (2 கொரிந்தியர் 13:14). அது விசுவாசத்தின் மேல் கட்டப்பட்டு (பிலேமோன் 1:6), கிறிஸ்துவின் சரீரத்தினுள் ஒற்றுமையைக் கொண்டுவருகிறது (பிப்பியர் 2:1-2). நாம் இருளில் நடந்துகொண்டிருக்கும்போது நிறைவேற்ற முடியாத (1 யோவான் 1:6) இந்த ஐக்கியத்தினுள் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம் (1 கொரிந்தியர் 1:9).

நம்முடைய ஐக்கியத்தின் அஸ்திபாரம் பெரும்பாலும் திருவிருந்து என்றழைக்கப்படும் கர்த்தருடைய பந்தியில் காட்டப்பட்டிருக்கிறது, இது கிறிஸ்து என்ற நபரையும் அவருடைய கிரியையும் நமக்கு ஞாபகப்படுத்துகிறது (1 கொரிந்தியர் 10:16). அது அவருடைய துன்பங்களோடுள்ள ஒரு ஐக்கியத்தில் கட்டப்பட்டது (பிப்பியர் 3:10).

சில காரியங்கள் ஒத்துப்போகாவிட்டாலும் தீர்வு கண்டு (கலாத்தியர் 2:9), சுவிசேஷத்தைப் பரப்ப நாம் ஒன்றாகச் செயல்படும்போது விசுவாசிகளாகிய நமக்கு ஐக்கியம் இருக்கிறது (பிப்பியர் 1:5). ஐக்கியத்தின் வழியாகவே அன்பான உறவுகள் வளர்ச்சியடைய முடியும்.

கிறிஸ்தவ வாழ்க்கையில் அன்பின் முக்கியத்துவத்தைப்பற்றி முன்பே பார்த்தோம். நாம் தேவன் மேலும் அன்புகூரவேண்டும். மற்றவர்களிடமும் அன்பாயிருக்க வேண்டும். புதிய ஏற்பாடு இதைப்பற்றி அநேக இடங்களில் சீடர்களுக்குக் கூறுகிறது (1 யோவான் 4:20). ஒருவரைப்போலவே அவருடைய அயலானையும் நேசிப்பது "ராஜரீக பிரமாணம்" (யாக்கோபு 2:8). நம்முடைய எதிரிகளின் மீதும் நாம் அன்புசெலுத்த வேண்டும் (லூக்கா 6:35) என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாம் எப்படி நடந்தப்பட வேண்டும் என்ற விரும்புகிறோமோ அப்படியே நாம் மற்றவர்களை நடத்த வேண்டும் (மத்தேயு 7:12).

கீழே கொடுக்கப்பட்ட கொள்கைகள் ஒருவரோடொருவருக்குள்ள நம்முடைய உறவுகளோடு இடைபடுகின்றன. அவை திருமண உறவோடு துவங்கி பின்னர் நம்முடைய குடும்பத்துக்கும், நம்முடைய சபையாகிய குடும்பத்திற்கும், தேவனுடைய குடும்பத்திற்கும், இரட்சிக்கப்படாதவர்களுக்குங்கூட விரிவுபடுத்தப்பட வேண்டும். உறவுகளைக் கட்டி எழுப்பும் அநேக கொள்கைகள் புதிய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. முதிர்ச்சியடையாத ஒரு விசுவாசி இந்தக் கொள்கைகளை பார்த்து மற்றவர்கள் அவைகளைச் செயல்படுத்த வேண்டும் என்று எதிர்பார்ப்பான், எனினும் இவற்றைச்செய்வது தன் சொந்த பொறுப்பு என்று கருதமாட்டான். முதிர்ச்சியடைந்த விசுவாசி, அவற்றை கைக்கொள்ளுவான். ஏனென்றால் அவைகள் செய்வதற்கேற்ற சரியான காரியங்கள் என்று அவனுக்குத் தெரியும். அவைகளை அவன் ஒரு சுயநலமான வழியில் பயன்படுத்தமாட்டான்.

"ஒருவருக்கொருவர்" என்ற கொள்கைகளை இப்போது நாம் பார்ப்போம்:

- ஒருவரையொருவர் **நேசிக்க** வேண்டும் என்ற கட்டளை புதிய ஏற்பாட்டில் அநேக வசனங்களில் காணப்படுகிறது (யோவான் 13:34, 35; 15:12, 17; ரோமர் 13:8; 1 தெசலோனிக்கேயர் 3:12; 4:9; 2 தெசலோனிக்கேயர் 1:3; 1 பேதுரு 1:22; 1 யோவான் 3:11, 23; 4:7, 11, 12; 2 யோவான் 1:5). அதாவது நாம் 1 கொரிந்தியர் 13:4-8; ரோமர் 12:9-21 ஆகிய வசனங்களில் காணப்பட்டக் கொள்கைகளின்படி வாழவேண்டும் என்பதாயிருக்கிறது.
- நாம் ஒருவருக்கொருவர் **அங்கத்தினர்கள்** (ரோமர் 12:5; எபேசியர் 4:25) என்பதை அங்கிகரிக்க வேண்டும்; இதன் அர்த்தம் நாம் கிறிஸ்துவின் சரீரத்தின் ஒரு பகுதியாயிருப்பதால் நமக்கு ஏற்கெனவே ஒரு உறவு உள்ளது.

- நாம் ஒருவர்மேலொருவர் **பட்சமாயிருக்க** வேண்டும் (ரோமர் 12:10), அதாவது, ஒருவருக்கொருவர் மற்றவர்களுடைய மெல்ய நல்லண்ணத்தையும் அன்பையும் வளரச்செய்ய வேண்டும். இதில் மற்றவர்களுடைய நலத்திற்கான அற்பணிப்பு அடங்கியுள்ளது.
- நாம் ஒருவரையொருவர் **கனம்** பண்ணவேண்டும், அதாவது,தேவனுக்கு முன்பாக நாம் மற்றவர்களின் மதிப்பைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதாகும் (ரோமர் 12:10).
- நாம் ஒருவருக்கொருவர் **ஏகசிந்தையுள்ளவர்களாய்** இருக்க வேண்டும். தேவனுடைய கிருபையை உடன்,பெற்றுக் கொள்ளும் மற்ற மக்களை நாம் அடையாளம் கண்டுகொள்ளவேண்டும் என்பது இதன் பொருள் (ரோமர் 12:16; 15:5).
- கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல நாமும் ஒருவரையொருவர் அவருடைய கிருபை அவசியப்படும் மக்களாக **ஏற் றுக் கொள்ள** வேண்டும் (ரோமர் 15:7)
- ஆவிக்குரிய அபாயம் நெருங்குவதை நாம் காணும்பொழுது ஒருவரையொருவர் **எச்சரிக்க** வேண்டும் (ரோமர் 15:14).
- நாம் ஒருவரையொருவர் "பரிசுத்த முத்தத்தோடு" **வாழ்த்த** வேண்டும் (ரோமர் 16:16; 1 கொரிந்தியர் 16:20; 2 கொரிந்தியர் 13:12; 1 பேதுரு 5:14). இது தேவனுக்கு முன்பாக ஒருவர் எவ்வளவு மதிப்புள்ளவராக இருக்கிறார் என்பதை அங்கிகரிப்பதா கும்.
- நாம் ஒருவருக்கொருவர் **ஊழியம்செய்ய** வேண்டும் (யோவான் 13:14; கலாத்தியர் 5:13). இயேசு சீடர்களின் கால்களைக் கழு வியதில் இந்த மாதிரியைக் காண்கிறோம்.
- ஒருவரையொருவர் **தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ண** வேண்டும் (பிப்பியர் 2:3).
- நாம் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க வேண்டும் (கலாத்தியர் 6:2). அதாவது அவர்களுடைய பாவத்திருந்து விடுதலை பெற **உதவி செய்ய** வேண்டும்
- நாம் ஒருவரையொருவர் **தாங்க** வேண்டும் அதாவது ஒவ்வொருவரோடும் பொறுமையாயிருக்க வேண்டும் (எபேசியர் 4:2; கொலோசெயர் 3:13).
- நாம் ஒருவருக்கொருவர் **ஒப்புக்கொடுக்க** வேண்டும் அதாவது நாம் மற்றவர்களது தேவைகளை முதலாவதாக உணரு றே ாம் (எபிரேயர் 5:21).
- ஒருவரையொருவர் நாம் **ஊக்கமளிக்க** வேண்டும். இது அவர்கள் ஆவியில் சோர்ந்துபோயிருக்கும்போது அவர்களுக்கு உதவிசெய்வதைக் குறிப்பிடுகிறது (ரோமர் 1:12; 1 தெசலோனிக்கேயர் 4:18; 5:11; எபிரேயர் 3:13; 10:25).
- நாம் ஒருவரோடொருவர் **சமாதானமுள்ளவர்களாய்** இருக்கவேண்டும் (மாற்கு 9:50). நம்முடைய செயல்களாலும் கருத்துக்களாலும் நாம் தொல்லைப்படுத்தக் கூடாது என்பதே இதன் அர்த்தமாகும்.
- **நம்முடைய பாவங்களை** நாம் ஒருவருக்கொருவர் **அறிக்கையிட** வேண்டும் (யாக்கோபு 5:16). இதில் நாம் தவறிழைத்தவர்களுடன் ஒப்புரவாகி, உடைந்த உறவுகளில் சமாதானத்தைக் கொண்டுவரவேண்டும்.
- நாம் ஒருவருக்காக ஒருவர் **ஜெபம்** செய்யவேண்டும் (யாக்கோபு 5:16).
- ஆண்டவர் நமக்கு மன்னித்தது போல நாமும் ஒருவருக்கொருவர் **மன்னிக்க** வேண்டும் (கொலோசெயர் 3:13).
- நாம் ஒருவருக்கொருவர் **நன்மை செய்ய** வகை தேட வேண்டும். தேவனோடு நெருங்கிய உறவோடு நாம் ஒவ்வொருவரும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம் என்பதே அதன் பொருளாகும் (1 தெசலோனிக்கேயர் 5:15).
- ஒருவரோடொருவர் **அன்பு செய்யவும் நற்கிரியை செய்யவும் ஊக்குவி**க்க வேண்டும் (எபிரேயர் 10:24). இதில் மற்ற வர்களுக்கு எப்படி உதவிசெய்யக் கூடும் என்பதும் அவர்களைச் செய்யத் தூண்டுவது எப்படியென்பதும் அடங்கியுள்ளது.
- நாம் ஒருவருக்கொருவர் **காத்திருக்க வேண்டும்** (1 கொரிந்தியர் 11:33). மற்ற விசுவாசிகளோடு சேர்ந்து மகிழ்ச்சியாயிருப்பதைக் குறிக்கிறது.
- நாம் ஒருவருக்கொருவர் **தயவாய்** இருக்க வேண்டும். இது மனக்கசப்பு, கோபம், மற்றவர்களுக்கு தீங்கிழைக்கும் ஆவல் ஆகியவற்றை எடுத்துப் போடுவதாகும் (எபேசியர் 4:31-32).
- நாம் மற்றவர்களுக்காக **கரிசனை**யுடையவர்களாய் இருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 12:25). கிறிஸ்துவின் சரீரத்தின் மற்ற அவயவங்களைப் பற்றி நாம் அக்கறையுடையவர்களாக இருக்கிறோம் என்பதே இதன் பொருளாகும்.
- ஒருவருக்கொருவர் இடையிலான ஊழியத்தை நாம் **அங்கீகரிக்க** வேண்டும் (லூக்கா 7:32). மனிதன் நம்மைத் அங்கீகரிக்க வேண்டும் என்பதற்காக ஊழியஞ்செய்யாமல், தேவனுடைய குடும்பத்தில் ஒருவருக்கொருவர் இடையிலான ஊழியத்தை தெரிந்துகொண்டு கனப்படுத்துங்கள்.
- ஒருவரை ஒருவர் **உபசரியுங்கள்** (1 பேதுரு 4:9). நாம் அந்நியர்களை நம்முடைய கூட்டங்களுக்கு வரவேற்க வேண்டும் என்பதை இது குறிக்கிறது.
- ஒருவருக்கொருவர் **தாழ்மையுள்ளவராக** இருக்க வேண்டும் (1 பேதுரு 5:5). இது நாம் ஒருவருக்கொருவர் மீதான மனநிலையைக் குறிக்கிறது.
- நாம் ஒருவரோடொருவர் **ஐக்கியமுள்ளவர்களாய்** இருக்க வேண்டும் (1 யோவான் 1:7).
- நாம் ஒருவருக்கொருவர் **பக்திவிருத்தி** உண்டாக்கும்படிச் செய்ய வேண்டும் (ரோமர் 14:19; 1 தெசலோனிக்கேயர் 5:11). அது மற்றவர்களை உற்சாகப்படுத்துவதையும் கற்றுக் கொடுப்பதையும் கொண்டது.

C. நற்செய்தியைப் பரப்புதல்

நற்செய்திப் பணி என்பது இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதாகும். இயேசு கிறிஸ்துவே தேவன் என்றும் (யோவான் 1:1) அவர் மனிதனாக வந்தார் என்றும் (யோவான் 1:14) அதை அவரை விசுவாசிப்பவர்கள் நித்திய ஜீவனைப்பெறும்படியும் (யோவான் 3:16) உலகத்தின் பாவங்களுக்காக கிரயம் செலுத்தும்படியாகவும் மரித்து (1 யோவான் 2:1-2) மரணத்துக்குப்பின் உயிர்த்தெழுந்தார் என்றும் (1 கொரிந்தியர் 5:1-3) இது பிரகடனப்படுத்துகிறது. நாம் பாவிகள் என்பதல்ல (ரோமர் 3:23) பாவங்களுக்காக பட்ட கடனை இயேசு செலுத்திவிட்டார் (ரோமர் 6:23) என்பதே இந்த நற்செய்தி (கலாத்தியர் 3:13).

உலகளாவிய சபையும் உள்ளூர் சபையும் மற்றவர்களுக்கு நற்செய்தியைக் கொண்டுவர ஆவலுடையவர்களாய் இருக்க வேண்டும். நமக்குக் கொடுக்கப்பட்ட வெளிச்சத்தையும் சத்தியத்தையும் மறைப்பவர்களாக நாம் இருக்கக்கூடாது (மத்தேயு 5:14; ரோமர் 1:16).

சுவிசேஷங்களை எந்த முறையில் அளிக்க வேண்டுமென்பதில் தேவன் நம் விருப்பப்படிச் செய்ய அனுமதித்திருக்கிறார். அது ஒரு நபரிடமிருந்து மற்றொருவருக்கோ (அப்போஸ்தலர் 8) அல்லது குழுக்களுக்கோ (அப்போஸ்தலர் 2) அளிக்கப்படலாம். முக்கியமான காரியம் என்னவென்றால், அவருடைய இராஜ்யத்தை சேருவதற்கு வரவேற்பளிக்கும்படி தேவனுடைய வசனங்களைச் சபை பரப்ப வேண்டும் என்பதாகும். நற்செய்திப் பரப்புவதற்காக மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட மிகவும் பயனுள்ள ஆதாரம் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதாகும் (யோவான் 13:34-35).

D. ஊழியம்

ஊழியம் என்பது மற்றவர்களுடைய ஆவிக்குரிய, சரீரப்பிரகாரமான மற்றும் மனம் சார்ந்த தேவைகளைத் தெரிந்துகொண்டு அவர்களுக்கு உதவிசெய்ய வழிதேடும் சேவையாகும் (அப்போஸ்தலர் 11:29; 2 கொரிந்தியர் 8:3-5). இது இயேசு கிறிஸ்துவின் ஒரு ஸ்தானாதிபதியாக இருந்து, தேவனோடு ஒப்புரவாகும் செய்தியை அழிந்துகொண்டிருக்கும் ஒரு உலகத்துக்கு எடுத்துச் செல்லுவதாகும் (2 கொரிந்தியர் 5:18-21). ஒருவர் தேவனோடு ஒப்புரவாக முடியுமானால், அவர் உலகத்தின் சட்டப்பூர்வ நடவடிக்கையிருந்து விடுபடவும் முடியும். எனவே ஊழியம் விடுதலையின் செய்தியையும் கொண்டு வருகிறது (1 தீமோத்தேயு 4:4-6). விசுவாசிகளாகிய நாம் விடுதலையடைந்தோம் (கலாத்தியர் 5:1). இப்பொழுது நம்முடைய விடுதலையை மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்யப் பயன்படுத்துகிறோம் (கலாத்தியர் 5:13).

இயேசு கிறிஸ்துதாமே நாம் பின்பற்றும்படியான ஒரு முன்மாதிரியை காட்டினார் (மத்தேயு 20:28). ஆகவே, ஊழியக்காரன் தலைவரைப் பின்பற்றவேண்டும் (யோவான் 12:24-26). ஒருவருடைய பதவியல்ல, கிறிஸ்தவருடைய சேவை மனப்பான்மையே சபையில் ஆவிக்குரிய மேன்மைக்கு உண்மையான அடையாளமாயிருக்கிறது (மத்தேயு 20:26-28; 23:10-12). விசுவாசிகளான நாம் தேவன் நமக்கு இரட்சிப்பில் காட்டிய இரக்கத்தை நினைத்து நாம் கர்வமுள்ளவராகவோ அல்லது சோர்வுற்றவராகவோ மாறாமல் இருக்க வேண்டும் (2 கொரிந்தியர் 4:1-2). தேவன் நாம் மற்றவர்களுக்குச் செய்த மிகச்சிறிய சேவையையுங்கூட மறக்கமாட்டார் என்று வாக்குறுதியளித்திருக்கிறார் (எபிரேயர் 6:10-12).

ஊழியஞ்செய்வதற்கான வாய்ப்புகள் தேவனால் கொடுக்கப்படுகின்றன (அப்போஸ்தலர் 20:24; 1 கொரிந்தியர் 12:4-6). விசுவாசிகள் அவற்றை ஏற்றுக்கொண்டு ஒருவருக்கொருவர் உதவிசெய்ய தேவன் கொடுத்த வசதிகளையும் வரங்களையும் பயன்படுத்த வேண்டும். எனவே ஊழியம் என்பது நாம் உறுதியாகப் பங்குபெற வேண்டிய (ரோமர் 12:7) கிறிஸ்தவ வாழ்க்கையின் தவிர்க்க முடியாத ஒரு கடமையாயிருக்கிறது (1 பேதுரு 4:10-11). இதில் ஊழியத்துக்கும், நம்முடைய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கும் கெட்ட பெயர் வராதபடி (2 கொரிந்தியர் 6:3) கவனமாயிருக்க வேண்டும்.

ஊழியங்கள் ஒன்றாகச் செயல்படக் கற்றுக்கொள்ள வேண்டும். சபையின் முதல் டீக்கன்மார் தேர்தல் நடத்துவதற்குக் காரணம் இன்னும் திறமையுள்ள ஊழியம் அவசியம் என்பதேயாகும். அப்போஸ்தலர்கள் தாங்களாகவே சபையின் எல்லா தேவைகளையும் சரீரப்பிரகாரமாகச் சந்திக்க முடியாது என்று கண்டுகொண்டதால், விதவைகளின் தேவைகளைக் கவனிப்பதற்கு சபை மக்களைக் கேட்டுக்கொண்டனர் (அப்போஸ்தலர் 6:1-6). வேறுபட்ட ஊழியங்கள் ஒன்றாகச் செயல்பட்டு, மக்களின் தேவைகளை நிறைவேற்ற உதவிசெய்தன.

மற்ற மக்கள் ஊழியர்களாக ஆயத்தம்பண்ண அமைக்கப்பட்ட சபை தலைமைத்துவ ஊழியத்தைக் கர்த்தர் நிலைநாட்டினார். அப்போஸ்தலர் பவுல்,

> ***மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலனாகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்*** (எபேசியர் 4: 11-13) ***என்று கூறுகிறார்.***

விசுவாசிகளை, ஆவிக்குரிய, சரீர, உணர்வு பிரகாரமாக மற்ற மக்களுக்கு ஊழியஞ்செய்யும்படி ஆயத்தப்படுத்துவது சபை தலைமைத்துவத்தின் பொறுப்பாகும். இதனால் மற்றவர்கள் நற்செய்திக்குள் கொண்டுவரப்பட்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவோடுள்ள ஒரு தனிப்பட்ட உறவின் மூலம் முதிர்ச்சியடைந்தவர்களாக ஆக்கப்படுகின்றனர். அன்பினால் செயல்பட்ட ஊழியம் சபைக்குக் கொடுக்கப்பட்ட மிகவும் வல்லமையாக நற்செய்தி பரப்பும் ஆதாரமாயிருக்கிறது (யோவான் 13:1-35).

E. ஒற்றுமை

தனிப்பட்ட சபைகள் கிறிஸ்துவின் சரீரத்துக்குள் ஒற்றுமையாயிருப்பதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும் (எபேசியர் 4:13). இயேசு கிறிஸ்து தாம் சிலுவையிலறையப்படுவதற்கு முந்திய இரவில், அவரைப் பின் தொடருபவர்கள் ஒன்றாயிருக்க வேண்டுமென்று ஜெபித்தார்.அவர்,

நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையி ால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும்படிக்கும், என்னை நீர் அனுப்பியதையும், நீர் என்னில் அன்பாயிருக்கிறதுபோல அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன் (யோவான் 17:20-23) *என்று கூறினார்.*

இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கும் அந்த நொடியில், எல்லா விசுவாசிகளிலும் பரிசுத்த ஆவியானவர் வாசமாயிருப்பதாலும் ஆவியானவர் ஒருவரே என்பதாலும் (எபேசியர் 4:4) மேலும் அவர் நம் எல்லாருக்குள்ளும் வாசம் செய்வதாலும் முதலாவதாக ஒற்றுமை நிலைநாட்டப்பட்டது. நம்முடைய அழைப்புக்குப் பாத்திரராய் நடப்பதன்மூலம் பரிசுத்த ஆவியானவரின் இந்த ஒற்றுமை காப்பாற்றப்பட வேண்டும் என்று அப்போஸ்தலர் பவுல் நமக்குப் போதித்தார் (எபேசியர் 4:1-3). இதற்கு நம்முடைய நடை கிருபையின ால் நிறைந்ததும் விசுவாசத்தின் அடிப்படையிலானதுமாக இருக்கிறது என்று அர்த்தமாகும் (எபேசியர் 2:8-9). கிறிஸ்துவுக்குள் நம்முடைய நிலை பொதுவான இரட்சிப்பின் மூலம் நம்மை ஒன்று சேர்த்தாலும், அன்பின் அடிப்படையிலான கிறிஸ்துவின் சரீரத்தினுள் ஒன்றாயிருப்பதை நாம் நாட வேண்டும். இதனால் இரட்சிக்கப்படாத எல்லாரும் நாம் இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் என்று தெரிந்து கொள்ளுவார்கள் (யோவான் 13:34-35).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 8, பகுதி 2

1. **வாசியுங்கள் 2 தீமோத்தேயு 2:2. சபையில் எது முக்கியமானது?**

2. **வாசியுங்கள் 1 தீமோத்தேயு 6:3. ஆரோக்கியமான உபதேசத்தை மதிப்பீடு செய்வது எப்படி?**

3. **வாசியுங்கள் எபிரேயர் 5:12. நீண்ட காலம் விசுவாசிகளாயிருப்பவர்கள் என்ன செய்யக் கூடும்?**

4. **வாசியுங்கள் 1 யோவான் 1:3 மற்றும் 7. சபைக்கு முக்கியமானதாகக் காணப்படுவது எது?**

5. **கீழுள்ள பகுதிகளில் கற்பிக்கப்பட்டுள்ள ஐக்கியத்தின் கொள்கைகள் என்ன?**
   a. யோவான் 13:34-35
   b. ரோமர் 12:10
   c. ரோமர் 15:7
   d. கலாத்தியர் 5:13
   e. பிப்பியர் 2:3
   f எபிரேயர் 3:13 மற்றும் 10:25
   g. கொலோசெயர் 3:13
   h. எபேசியர் 4:31-32
   i. 1 பேதுரு 4:9
   j. ரோமர் 14:19

6. **வாசியுங்கள் மத்தேயு 5:14 மற்றும் ரோமர் 1:16. சபை செய்யவேண்டியது என்ன?**

7. **வாசியுங்கள் கலாத்தியர் 5:1 மற்றும் 5:13. நாம் எந்தக் காரணத்திற்காக விடுதலையாக்கப்பட்டுள்ளோம்?**

8. **வாசியுங்கள் எபேசியர் 4:13. எது ஒவ்வொரு ஸ்தல நோக்கமாயிருக்கவேண்டும்?**

9. **வாசியுங்கள் யோவான் 17:20-23. தம்மைப் பின்பற்றுபவர்களுக்கு கிறிஸ்துவில் அறிவிக்கப்பட்ட அவருடைய விருப்பம் என்ன?**

அத்தியாயம் 9

நிறைவேற்றுதல்

அறிமுகம்

இந்தப் பகுதி ஒரு வேத பாடத்தை ஆயத்தம்செய்வதற்கு ஒரு நடைமுறையை அறிமுகம் செய்கிறது. இந்த முறை அநேக போதகர்கள் தேவனுடைய வசனங்களை பயனுள்ள வகையில் போதிக்க பயன்படுத்திய வழிமுறைகளின் அடிப்படையிலானது. ஆயத்தம் செய்யும் முறைகள் வேறுபட்டாலும் அத்தியாயம் 4ல் கற்றுக்கொண்ட அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

இந்தப் பாடத்தை ஆயத்தம் செய்யும்போது, முதலாவது கற்கும் ஒழுக்கத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொள்ளுங்கள். எனினும் கற்கும் ஒழுக்கம் பரிசுத்த ஆவியானவருடைய போதிக்கும் ஊழியத்தின் இடத்தை எடுத்துக்கொள்ள கூடாது மற்றும் முடியாது என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். பரிசுத்த ஆவியானவரே ***"சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்"*** (யோவான் 16:13). மனிதனால் வடிவமைக்கப்பட்ட எந்த முறையும் இந்த உத்தரவாதத்தை அளிக்க முடியாது.

நாம் தேவனுடைய வசனங்களை அறிவதில் எவ்வளவு தேறினாலும் நாம் எப்பொழுதும் விசுவாசத்தில் நடக்க வேண்டும் (கொலோசெயர் 2:6). கிறிஸ்தவ முதிர்ச்சி என்பது மாம்ச முயற்சியினால் வருவதில்லை, விசுவாசத்தினால் வருகிறது (கலாத்தியர் 3:2-5). பரிசுத்த ஆவியானவரை நம்புவதைவிட, நமது சொந்த வழிகளையும் அறிவையும் அதிகமாக நம்பும்படி சாத்தான் தந்திரமாக முயற்சிப்பான் (யோவான் 5:39-47). எனினும், கிறிஸ்தவ அன்பில்லாத அறிவு இறுமாப்பிற்கு நேராகவே நடத்தும். இது முதிர்ச்சியற்ற இயல்பின் குணமாகும். (1 கொரிந்தியர் 8:1).

நம் கிறிஸ்தவ வாழ்க்கையில் நாம் எதைச் செய்ய முயற்சித்தாலும் எப்பொழுதும் பாவ அறிக்கையோடு கூடிய ஜெபத்துடன் துவங்க வேண்டும் (1 கொரிந்தியர் 11:31; நீதிமொழிகள் 28:13; 1 யோவான் 1:9), அதன் பின் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். எந்தப் பாடத்தைக் கற்றுக்கொள்ளத் துவங்குமுன்பும் நாம் மனதை ஒருமைப்படுத்தவும், புரிந்துகொள்ளவும் கற்றுக் கொண்டவைகளை மனதிருக்கச் செய்யவும் ஜெபம் பண்ணவேண்டும்.

பகுதி 1
இந்தப் புத்தகத்தோடு பரிச்சயமாகுதல்

A. அறிமுகம்

ஒரு புத்தகத்தை வாசிப்பதற்காகத் தெரிந்துகொண்டபின், நாம் முதலாவது அதை முழுவதுமாக, அது ஒரு பத்திரிகையின் கட்டுரை அல்லது வேறொரு புத்தகம் என்பதுபோல அநேக முறை வாசிக்க வேண்டும். இது நாம் அந்தப் புத்தகத்தில் அடங்கியிருக்கும் பொருளின் அடிப்படை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவேயன்றி அதன் ஆழ்ந்த இறையியல் கேள்விகளுக்குப் பதிலளிக்கும் எண்ணத்தோடு எழுதப்பட்டதல்ல.

வேகமாகப் பலமுறை இந்தப் புத்தகத்தை வாசித்து முடிப்பது முக்கியமான பாடப்பொருள் மற்றும் நிகழ்ச்சிகளைப்பற்றிய சில கருத்துக்களை நாம் பெற்றுக்கொள்ள உதவி செய்யும். அதன் அருகேயுள்ள, இடையேயுள்ள மற்றும் நெருங்கிய சம்பந்தமில்லாத நிகழ்ச்சிகளைக் கருத்தில்கொண்டு பின்னணிக்கு ஏற்றவாறு விளக்கமளிக்க வேண்டும் என்பதை நாம் ஞாபகத்தில் வைக்க வேண்டும். ஒரு புத்தகத்தை வசனம் வசனமாக முழுவதையும் வாசிப்பதே அருகேயுள்ள இடையேயுள்ள சூழ்நிலைகளைப் புரிந்துகொள்ளும் ஒரே வழியாயிருக்கிறது.

வேதாகமத்தில் பல்வேறு புத்தகங்களின் வரலாறு மற்றும் பூகோள சாஸ்திரத்தோடு தொடர்புடைய காரியங்களோடும் நாம் பரிச்சயப்பட்டிருப்பது அவசியம். இந்த ஆய்வுக்காக 1 தெசலோனிக்கேயர் புத்தகத்தை எடுத்துக்கொள்ளுவோம். மாணவர்களுக்கு உதவிசெய்ய, தெசலோனிக்கேயர் பட்டணத்தின் சில பின்னணி செய்திகளை நாங்கள் அளித்திருக்கிறோம். இந்த வகையான செய்தி, வேதாகமத்திற்கு வெளியுள்ள செய்தி ஆதாரங்களிருந்து பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இந்தச் செய்திக்கு வேதாகம அகராதிகள் மற்றும் வேதாகம அறிமுகங்கள் என்ற புத்தகங்கள் உதவியான ஆதாரங்களாகும்.

B. தெசலோனிக்கேயின் புவியியலும் வரலாறும்

இன்றைய நவீன கிரேக்க நாட்டின் ஏஜியன் கடன் (Agean Sea) வட மேற்கு மூலையில் இருக்கும் தெர்மாயிக் வளைகுடாவின் (Thermaic Gulf) முக்கிய நுழைபகுதியில் தெசலோனிக்கே கடல் துறைமுகம் இருக்கிறது. அது மக்கெதோனியா (Macedonia) என்ற ரோம மாகாணத்தில் இருக்கிறது. அதன் சூடான நீரூற்றுகளுக்கும் கப்பல்கட்டுமிடத்துக்கும் இது பெயர்பெற்றது. இங்கே பெரிய கப்பல்கள் நங்கூரமிட முடியும். அதன் நாட்களில் அது மக்கெதோனியாவின் மிகப்பெரியதும் மிக அதிக முன்னேற்றமடைந்த நகரமாயிருந்தது.

கி.மு. 315ல் மகா அலெக்சான்டரின் மரணத்துக்குக் கொஞ்ச காலத்துக்குப்பின் அந்திபேட்டரின் (Antipater) மகன் கசாண்டர் (Cassander) என்பவரால் தெசலோனிக்கே நிருவப்பட்டது. அலெக்சாண்டரின் மரணத்துக்குப்பின் ஒரு பயங்கர பதவிப் போராட்டம் நடந்தது. அந்திபேட்டர் ராஜ குடும்பத்துக்கு விசுவாசமாயிருந்து, அவனுடைய மகன் கசாண்டரின் மனைவி தெசலோனிக்கேயின் பெயரை அந்தப் பட்டணத்துக்குப் பெயரிட்டான். அவள் மகா அலெக்சாண்டரின் பாதி சகோதரியாயிருந்தாள்.

தெசலோனிக்கே, அடிப்படையாக கிரேக்கர்களாலும் நல்ல செல்வாக்குடைய யூத சமூகத்தாலும் நிரம்பியிருந்த ஒரு வர்த்தக நகரம். இன்று அது சலோனிக்காவின் (Salonika) கிரேக்கப் பட்டணமாயிருக்கிறது.

C. சபையின் வரலாற்றுப் பின்னணி: அப்போஸ்தலர் 17:1–9

பவுன் மக்கெதோனிய தரிசனத்தின் (அப்போஸ்தலர் 16:9) விளைவாக அவரின் இரண்டாம் மிஷனரி பயணத்தில் சபை நிலைநாட்டப்பட்டது. பவுல் சீலா (அவனது எபிரெயப் பெயர் இது, சில்வானஸ் (Silvanus) என்பது அவனுடைய ரோமப்பெயர் ஆகும்), தீமோத்தேயு மற்றும் லூக்கா ஆகியோருடன் சென்றார். அவர்கள் கிழக்கை மேற்கோடு இணைக்கும் வழியாகப் பிரயாணம் செய்தனர். பிப்பி, அம்பிபோ, அப்பலோனியா ஆகிய பட்டணங்களைப் போய் பார்த்து (அப்போஸ்தலர் 17:1). அந்தக் குழு தெசலோனிக்கே வந்து சேர்ந்தது.

மூன்று ஓய்வுநாட்களில் (அப்போஸ்தலர் 17:2) இயேசு பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றினார் என்றும் ஆகவே அவரே மேசியா என்றும் (அப்போஸ்தலர் 17:3) பவுல் ஜெப ஆலயத்தில் போதித்தார். அவருடைய செய்தியின் விளைவாக அநேகர் விசுவாசிகளானார்கள். (அப்போஸ்தலர் 17:4)

புதிய விசுவாசிகளுக்கு போதிப்பதில் பவுல் அதிக நேரம் செலவிட்டார். இதனால் விசுவாசிகளல்லாத யூதர்கள் வைராக்கியங்கொண்டு கூட்டங்கூடி நற்செய்தியளித்த குழுவினருக்கு எதிராகச் செயல்பட்டனர் (அப்போஸ்தலர் 17:5). இந்தக் கூட்டம் பவுலைப் பிடிப்பதற்காக யாசோனுடைய வீட்டுக்குப் போனார்கள், பவுல் அங்கே இல்லாததால் யாசோனை பட்டணத்து அதிகாரிகளிடம் இழுத்துக்கொண்டு வந்து (அப்போஸ்தலர் 17:6), அங்கே பவுன் இயேசுவைப் பற்றியப் போதனைகளைத் திரித்துக் கூறினார்கள் (அப்போஸ்தலர் 17:7). எதிர்ப்பு மிகவும் அதிகமாகிவிட்டதால், பவுலும் அவனது கூட்டத்தாரும் பெரோயாவிற்கு ஓட வேண்டியதாயிற்று (அப்போஸ்தலர் 17:8–10).

D. எழுதிய நேரமும் காரணமும்

பவுல் அந்தியோகியாவில் போதித்த பின் கி.பி. 49ல் இரண்டாவது மிஷனரி பயணம் துவங்கியது. பவுல் தெசலோனிக்கே பட்டணத்தை விட்டபின், கொரிந்து பட்டணத்துக்குப் போகுமுன் பெரோயாவிலும் அத்தேனே பட்டணத்திலும் கொஞ்சக்காலம் போதித்தார். கொரிந்துவில் அவர் 18 மாதங்கள் தங்கியிருந்தார் (அப்போஸ்தலர் 18:11). புதிய சபையின் முன்னேற்றத்தைத் தெரிந்துகொள்ள பவுல் தீமோத்தேயுவை திரும்ப தெசலோனிக்கே பட்டணத்துக்கு அனுப்பினார் (1 தெசலோனிக்கேயர் 3:2). தீமோத்தேயுவின் அறிக்கை சாதகமாயிருந்தது. அதன் விளைவே இந்தப் புத்தகம். தெசலோனிக்கேயரின் புத்தகங்கள் ஏறக்குறைய கி.பி. 50ல் எழுதப்பட்டதாக இது குறிப்பிடுகிறது. இது பவுனால் எழுதப்பட்ட இரண்டாவது புத்தகம். (முதலாவது எழுதப்பட்டது கலாத்தியர் புத்தகம்).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 9, பகுதி 1

2 தெசலோனிக்கேயர் பற்றி 3 ஆம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளனவற்றை வாசியுங்கள்.

பகுதி 2
புத்தகத்தின் சுருக்க வருணனை எழுதுவது

ஒரு புத்தகத்தைக் கவனத்துடன் பார்க்குமுன்பு, நாம் ஒரு சுருக்க வருணனையை தயார் செய்ய வேண்டும். நாம் செய்ய வேண்டியது முதலாவது ஒரு பெரிய சித்திரத்தோடு துவங்கி, பின்னர் அந்தப் படத்தைச் சிறிய சிறியப் பகுதிகளாகப் பிரித்து ஆராய வேண்டும். இதன் நியாயம் வெளிப்படையானது; அதிக விரிவான ஒரு சித்திரத்தை நாம் அருகிருந்து நீண்டநேரம் பார்க்கும்போது, நாம் அதிக விவரங்களைக் கண்டுகொள்ள முடியும். தேவனுடைய வசனங்களும் இதைப் போன்றதே. இவற்றில் மிகப்பெரிய சித்திரம் இயேசு கிறிஸ்துதாமே. எழுதப்பட்ட வசனங்கள் ஜீவனுள்ள வார்த்தையின் வெளிப்பாடேயாகும் (யோவான் 5:39-47). இன்னும் அருகில்போய்ப் பார்க்கும்போது நாம் கிறிஸ்து என்ற நபரின் அதிக விவரங்களை பார்க்க முடியும்.

அந்தப் பெரிய சித்திரத்தின் பின்னனியைத் தெரிந்துகொள்ளத் தவறும் அளவுக்கு நாம் நுணுக்கமான விவரங்களில் சிக்கிக்கொள்ளக் கூடாது. அப்படிச் சிக்கிக்கொண்டால், ***"கொசுகில்லாதபடி வடிகட்டி, ஒட்டகத்தை விழுங்குகிறவர்களாயிருக்கிறீர்கள்"*** (மத்தேயு 23:24). இதன் அர்த்தம் உண்மையாகவே முக்கியமான காரியங்களை நாம் தவறவிட்டு விடுவோம் என்பதாகும்.

ஒரு புத்தகத்தின் சுருக்கத்தை நாம் ஆயத்தம் செய்யும்போது, நம்முடைய முதல் வேலை, அந்தப் பாடப்பொருள் எப்படிப் பத்திப் பிரிவுகளாக அமைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அநேக வேதாகம மொழிபெயர்ப்புகள் இந்தப் பிரிவுகளை பாடப்பொருளில் அடையாளமிடும் ஒரு வழியைக் கடைப்பிடிக்கின்றன. பொதுவாக, ஒரு பத்தியின் முதல் வசன எண்ணை மொழிபெயர்ப்புகள் கெட்டியான எழுத்தால் மேம்படுத்திக் காட்டுகின்றன. மொழிபெயர்ப்பாளர்கள் எப்படி பத்திகளை அடையாளப்படுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள, நீங்கள் பயன்படுத்தும் மொழிபெயர்ப்பின் அறிமுகத்தை வாசியுங்கள். அப்படிப்பட்ட பிரிவுகள் அடையாளமிடப்படவில்லையென்றால், பாடப்பொருள் மாறும் இடங்களைக் குறித்துக்கொண்டு முன்னேறுங்கள்.

எடுத்துக்காட்டாக, 1 தெசலோனிக்கேயர் பத்திப் பிரிவுகள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன:

1. 1:1
2. 1:2-10
3. 2:1-12
4. 2:13-16
5. 2:17-20
6. 3:1-10
7. 3:11-13
8. 4:1-8
9. 4:9-12
10. 4:13-18
11. 5:1-11
12. 5:12-22
13. 5:23-28

அடுத்ததாக, ஒவ்வொரு பத்திக்கும் ஒரு தலைப்புக் கொடுங்கள். இந்தப் புத்தகத்தை இன்னும் ஆழமாகக் கற்றுக்கொள்ளும்போது, அதன் பாடப் பொருளை அதிகமாக நாம் பார்க்கும்போது ஒருவேளை நம்முடைய பாடச்சுருக்கம் மாற்றமடையக் கூடும். இந்த நிலையில் இந்தத் தலைப்புகள் மேல் நாம் அதிக நேரம் செலவிட மாட்டோம். நம்முடைய வேலை எவ்வளவுதூரம் எளிதாக முடியுமோ அவ்வளவு எளிதாகச் செய்திகளைக் கொடுப்பதாகும்.

1 தெசலோனிக்கேயரின் பத்திப் பிரிவுகளின் சுருக்கம் இதைப் போன்றிருக்கும்:

1.	1:1	வாழ்த்துக்கூறுதலும் வணக்கம் கூறுவதும்
2.	1:2-10	அவர்களுடைய முன்மாதிரிக்கு நன்றி கூறுதல்
3.	2:1-12	பவுன் நிலை
4.	2:13-16	அவர்களுடைய சுறுசுறுப்புக்கு நன்றி சொல்லுவது
5.	2:17-20	அவர்களைப் பார்க்க பவுன் ஆவல்
6.	3:1-10	அவர்களது முன்னேற்றத்தைத் தெரிந்துகொள்ள பவுன் ஆர்வம்
7.	3:11-13	அவர்களது ஆவிக்குரிய முன்னேற்றத்துக்காக பவுன் நம்பிக்கை
8.	4:1-8	அவர்கள் தூய்மையாக்கப்படுவதற்கான பவுன் ஆவல்
9.	4:9-12	அவர்களுடைய அன்புக்காக பவுன் புகழ் வார்த்தைகள்
10.	4:13-18	கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்
11.	5:1-11	கர்த்தருடைய நாள்
12.	5:12-22	செயல்முறையில் புத்திமதி கூறி உற்சாகப்படுத்துதல்
13.	5:23-28	விடைபெறுதல்

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 9, பகுதி 2

கீழ்கண்ட வசன பிரிவுகளின் அடிப்படையில் 2 தெசலோனிக்கேயர் புத்தகத்திற்கு சுருக்க வருணனை எழுதுக:

1. 1.1: 1–2

2. 1:3–12

3. 2:1–17
   a. 2:1–12
   b. 2:13–15
   c. 2:16–17

4. 3:1–15
   a. 3:1–5
   b. 3:6–13
   c. 3:14–15

பகுதி 3
உங்கள் ஆய்வின் நோக்கத்தைக் குறுகியதாக ஆக்குவது

இந்தப்படி தனிப்பட்ட பத்திகளை வெவ்வேறாக பிரிப்பதோடு துவங்குகிறது. எடுத்துக்காட்டாக 1 தெசலோனிக்கேயர் முதலாம் அதிகாரத்தில் முதல் இரண்டு பத்திகளை நாம் பரிசீலனை செய்வோம்.

A. வாழ்த்துக் கூறுதலும் வணக்கம் கூறுவதும். 1 தெசலோனிக்கேயர் 1:1

1:1 ***பவுலும், சில்வானும், தீமோத்தேயும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குள்ளும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள்ளும் இருக்கிற தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதுகிறதாவது... உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.***

இந்தத் துவக்க வசனம் நாம் பதில் தேட வேண்டிய சில கேள்விகளுக்குப் பதிலளிக்கிறது. பவுலும், சில்வானும், தீமோத்தேயும் இந்தக் கடிதத்தின் வாசகங்களில் உள்ளடங்கியிருப்பதால், எழுதியவர் "யார்" என்ற கேள்விக்கு நாம் பதிலளித்து விட்டோம். இதைப் பெறுபவர்கள் தெசலோனிக்கேய சபை அங்கத்தினர்கள், எனவே "யாருக்கு" இந்த கடிதம் எழுதப்பட்டது என்பதற்கும் நாம் பதிலளித்துவிட்டோம்.

பிதா மற்றும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு "உள்" சபை இருக்கிறது என்று பவுல், அடையாளம் காட்டுகிறார் என்பதைக் கவனியுங்கள். இது தேவனுக்கும் விசுவாசிகளுக்குமிடையில் ஒரு நெருங்கிய உறவு இருப்பதைக் குறிப்பிடுகிறது.

அவர்களுக்காகப் பவுல் ஒரு சிறிய ஜெபம் செய்கிறார். கிருபையும் சமாதானமும் அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

இதைத் துவங்குவதற்கு நமக்கு உதவிசெய்ய வசனம் 1ல் மூன்று கொள்கைகள் போதிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனியுங்கள்:

கொள்கை #1: மற்ற மக்கள் தேவனோடுள்ள தங்கள் உறவில் வளர்ச்சியடைய வேண்டும் என்று பெரிய தெய்வ மனிதர்கள் ரும்புகின்றனர்.
கொள்கை #2: பெரிய தெய்வ மனிதர்கள் மற்றவர்கள் வளர்ச்சியடைய ஊக்கமளிக்கும்படி ஒன்று சேர்ந்து செயல்பட முடியும்.
கொள்கை #3: பெரிய தெய்வ மனிதர்கள் தங்களிடமிருப்பதைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறார்கள்.

நம்முடைய ஆய்வை இன்னும் குறுகியதாக ஆக்க, இரண்டாவது பத்தியை அமைக்கும் வசனங்களை இப்போது பார்ப்போம்.

B. அவர்களுடைய நல்ல மாதிரிக்காக நன்றி செலுத்துதல். 1 தெசலோனிக்கேயர் 1:2-10

1. **முதலாவதாக இரண்டாம் பத்தி முழுவதையும் பலமுறை வாசியுங்கள்.**

1:2 ***தேவனுக்குப் பிரியமான சகோதரரே, உங்கள் விசுவாசத்தின் கிரியையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்குமுன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து,***

1:3 ***நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து,***

1:4 ***எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்.***

1:5 ***எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடேமாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே.***

1:6 ***நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி,***

1:7 ***இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்.***

1:8 ***எப்படியெனில், உங்களிடத்திருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதராதபடிக்கு, தேவனைப் பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று.***

1:9 ***ஏனெனில், அவர்கள்தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென்பதையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களைவிட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும்,***

1:10 *அவர் மரித்தோரிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திருந்து வருவதை நீங்கள் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்.*

2. பின்னர் ஒவ்வொரு வசனத்துக்கும் நாம் ஒரு தலைப்புக் கொடுங்கள்:

1:2 ஸ்தோத்திரிப்பது ஏன் – விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு
தேவனுக்குப் பிரியமான சகோதரரே, உங்கள் விசுவாசத்தின் கிரியையும், உங்கள் அன்பின் பிரயாசத்தை யும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையை யும், நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து,

1:3 தேவனிடமிருந்து அவர்களுடைய அழைப்புக்கேற்றபடி வாழ்வது
நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து,

1:4 ஜெபத்தில் ஸ்தோத்திரிப்பது
எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்.

1:5 சுவிசேஷத்தில் அவர்களுடைய வேர்
எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடேமாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களேணு

1:6 சுவிசேஷம் உண்டாக்கிய வேறுபாடு
நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக் கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி,

1:7 வேறுபாட்டின் முதல் விளைவு, ஒரு நல்ல மாதிரியாகியது
இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்.

1:8 வேறுபாட்டின் இரண்டாம் விளைவு தாக்கம்
எப்படியெனில், உங்களிடத்திருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித்ததுமல்லாமல், நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியதாயிராதபடிக்கு, தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று.

1:9 வேறுபாடுகளின் அஸ்திபாரம் – விக்கிரகங்களிருந்து திரும்புவது
ஏனெனில் அவர்தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென் பதையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களைவிட்டு தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும்.

1:10 வேறுபாடுகளின் அஸ்திபாரம் – பரலோக வாழ்க்கை
அவர் மரித்தோரிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திருந்து வருவதை நீங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 9, பகுதி 3

1. 2 தெசலோனிக்கேயர் 1:1-12. பலமுறை வாசியுங்கள்.

2. ஒவ்வொரு வசனத்திற்கும் ஒரு தலைப்புக் கொடுங்கள்.

பகுதி 4
உறவுகளுக்காகத் தேடுவது

A. பாடப்பொருள் தோன்றும் முறைகளைக் கவனியுங்கள்:

1 தெசலோனிக்கேயர் இரண்டாம் பத்தியில் ஒவ்வொரு வசனத்தின் தலைப்பையும் நாம் பார்க்கும்போது ஒரு செயல் முறை தோன்றுவதை காணத் துவங்குகிறோம்.

1:2 ஸ்தோத்திரிப்பது ஏன் – விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு

1:3 தேவனிடமிருந்து அவர்களுடைய அழைப்புக்கேற்றபடி வாழ்வது

1:4 ஜெபத்தில் ஸ்தோத்திரிப்பது

1:5 சுவிசேஷத்தில் அவர்களுடைய வேர்

1:6 சுவிசேஷம் உண்டாக்கிய வேறுபாடு

1:7 வேறுபாட்டின் முதல் விளைவு ஒரு நல்ல மாதிரியாகியது

1:8 வேறுபாட்டின் இரண்டாவது விளைவு தாக்கம்

1:9 வேறுபாடுகளின் அஸ்திபாரம் – விக்கிரகங்களிருந்து திரும்புவது

1:10 வேறுபாடுகளின் அஸ்திபாரம் – பரலோக வாழ்க்கை

அவர்களது வாழ்க்கையில் ஸ்தோத்திரிப்பதின் மாதிரிகளையும், சுவிசேஷம் உண்டுபண்ணிய வேறுபாடுகளையும் காண்பது எளிது.

B. அபிப்பிராயங்களைக் குறித்துக்கொண்டு வசனங்களை அருகாமையில் பார்ப்பது

1:2 ஜெபத்தில் ஸ்தோத்திரிப்பது
எங்கள் ஜெபங்களில் இடைவிடாமல் உங்களைக்குறித்து விண்ணப்பம்பண்ணி, உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறோம்.

இந்த வசனத்தில், பவுல் அவர் என்ன செய்கிறார் என்றும் (ஸ்தோத்திரிக்கிறார்) அதை எப்படிச் செய்கிறார் என்றும் (ஜெபம் செய்து) நமக்குக் கூறுகிறார்.

1:3 ஸ்தோத்திரிப்பது ஏன் – விசுவாசம், நம்பிக்கை மற்றும் அன்பு
தேவனுக்குப் பிரியமான சகோதரரே, உங்கள் விசுவாசத்தின் கிரியையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நம்மு டைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள உங்கள் நம்பிக்கையின் பொறுமையையும், நம்முடைய பிதாவா கிய தேவனுக்குமுன்பாக நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து,

இந்த வசனம் அவர் ஏன் அவர்களுக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறார் என்று கூறுகிறது:
1. அவர்களின் விசுவாசத்தின் கிரியை,
2. அவர்களின் அன்பின் பிரயாசம்.
3. அவர்களின் நம்பிக்கையின் பொறுமை.

அவர்களின் விசுவாசமும், நம்பிக்கையும் அன்பும் இன்னும் மூன்று காரியங்களின் அடிப்படையிலானது:
1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடுள்ள அவர்களின் உறவு,
2. பிதாவோடு அவர்களின் நெருங்கிய உறவு,
3. தேவனிடமிருந்து அவர்களின் அழைப்பு (வச. 4)

1:4 தேவனிடமிருந்து அவர்களுடைய அழைப்புக்கேற்றபடி வாழ்வது
நீங்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களென்று நாங்கள் அறிந்து

1:5 சுவிசேஷத்தில் அவர்களுடைய வேர்
எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழு நிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயி ருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே.

இவ்விதமாக அவர்களிடத்திற்கு வந்த சுவிசேஷத்தை ஏற்றுக்கொண்டார்கள்:

1. வார்த்தை முலம்,
2. வல்லமையோடு,
3. பரிசுத்த ஆவியானவரில்,
4. முழு நிச்சயத்தோடு
5. நல்ல குண இயல்புடைய மனிதர்களிடமிருந்து

1:6 சுவிசேஷம் உண்டாக்கிய வேறுபாடு ஞ

நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுகிறவர்களாகி,

சுவிசேஷம் ஒரு வேறுபாட்டை உண்டாக்கியது. அதைக் கேட்டவர்கள் முதிர்ச்சியுடையவானார்கள்; அவர்கள் பவு லையும், அவரது நண்பர்களையும், தேவனையுங்கூட பின்பற்றுபவர்களானார்கள். உபத்திரவங்களின் மத்தியிலும் அவர்கள் சுவிசே ஷத்தை சந்தோஷத்தோடே ஏற்றுக்கொண்டார்கள்.

1:7 வேறுபாட்டின் முதல் விளைவு, ஒரு நல்ல மாதிரியானது

இவ்விதமாய் மக்கெதோனியாவிலும் அகாயாவிலுமுள்ள விசுவாசிகள் யாவருக்கும் மாதிரிகளானீர்கள்.

சுவிசேஷம் உண்டுபண்ணிய வேறுபாட்டின் முதல் விளைவு, தெசலோனிக்கேயர்கள் அக்கம்பக்கமுள்ள சபைக ளுக்கு முன் மாதிரியானார்கள்.

1:8 வேறுபாட்டின் இரண்டாம் விளைவு, தாக்கம்

எப்படியெனில், உங்களிடத்திருந்து கர்த்தருடைய வசனம் மக்கெதோனியாவிலும் அகாயாவிலும் தொனித் ததுமல்லாமல், நாங்கள் அதைக்குறித்து ஒன்றும் சொல்லவேண்டியிராதபடிக்கு தேவனைப்பற்றின உங்கள் விசுவாசம் எங்கும் பிரசித்தமாயிற்று.

இதன் இரண்டாவது விளைவு, அவர்களுடைய விசுவாசம் தங்கள் அயலகத்தார்களுக்கு அப்பாலும் வெகுதூரம் பரவிற்று.

1:9 வேறுபாடுகளின் அஸ்திபாரம் – விக்கிரகங்களிருந்து திரும்புவது

ஏனெனில், அவர்கள்தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென்ப தையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களைவிட்டு தேவனிடத் திற்கு மனந்திரும்பினதையும்,

வேறுபாடுகளின் முதல் அஸ்திபாரம் என்னவெனில் மக்கள் விக்கிரகங்களைவிட்டு மனந்திரும்பினார்கள்.

1:10 வேறுபாடுகளின் அஸ்திபாரம் பரலோக வாழ்க்கை

அவர் மரித்தோரிருந்தெழுப்பினவரும், இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கி றவருமாயிருக்கிற அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திருந்து வருவதை நீங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதையும், அறிவிக்கிறார்களே.

வேறுபாடுகளின் இரண்டாம் அஸ்திபாரம் தெசலோனிக்கேயர்கள் ஆவலுடன் கர்த்தருடைய வருகைக்காகக் காத்துக் கொண்டிருப்பதாகும்.

கர்த்தரே (1) மரித்தோரிருந்து எழுந்தவரும் (2) வரப்போகும் கடுங்கோபத்திருந்து நம்மைத் தப்புவிப்பவருமா இருக்கிறார்.

C. இன்னும் விரிவாக்கப்பட்ட சுருக்க வருணனை இதைப் போன்றிருக்கும்:

1. **நன்றி செலுத்துவது. வச. 2**
2. **நன்றி செலுத்துவது ஏன்? வச. 3-4**
   a. விசுவாசத்தின் கிரியை
   b. அன்பின் பிரயாசம்
   c. நம்பிக்கையின் உறுதி
      1) நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில்
      2) நம்முடைய தேவனும் பிதாவுமானவரின் முன்னிலையில்
      3) அவர்களது தெய்வீக அழைப்பு
3. **அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுதல் வச. 5**
   a. வார்த்தை முலம்,
   b. வல்லமையோடு,
   c. பரிசுத்த ஆவியானவரில்,
   d. முழு நிச்சயத்தோடு
   e. நல்ல குண இயல்புடைய மனிதர்களிடமிருந்து

4. **சுவிசேஷம் உண்டுபண்ணிய இரண்டு வேறுபாடுகள் வ. 6**
    a. பவுனுடைய கூட்டத்தினரையும் கர்த்தரையும் பின்பற்றினார்கள்
    b. உபத்திரவத்தின் மத்தியில் ஆவிக்குரிய சந்தோஷம் கொடுத்தது
5. **வேறுபாடுகளின் இரண்டு விளைவுகள் வ. 7-8**
    a. அண்டைச் சபைகளுக்கு எடுத்துக்காட்டுகளாக மாறியது
    b. அவர்களுடைய விசுவாசம் தங்கள் அயலகத்தார்களுக்கு அப்பாலும் வெகுதூரம் பரவிற்று.
6. **வேறுபாடுகளின் இரண்டு அஸ்திபாரங்கள். வ. 9-10**
    a. விக்கிரகங்களை விட்டு விலகினர்
    b. கர்த்தருடைய வருகைக்காக காத்திருப்பது.
        1) மரித்தோரிருந்து எழுப்பப்பட்ட ஒருவர்
        2) வரப்போகும் கடுங்கோபத்திருந்து விடுவிக்கும் ஒருவர்

இந்த அதிகாரத்தில் பவுல் தெசலோனிக்கேயாவில் இருந்த சபைக்கு மிகவும் பிரமாண்டமான புகழ் வார்த்தைகளை கொடுப்பதை நாம் இங்கே கவனிக்க வேண்டும். அவைகள் உண்மையில் ஒரு "எடுத்துக்காட்டு" அல்லது "மாதிரி" சபை என்றழைக்கப்பட்டது. ஆகவே, இன்று ஒரு "மாதிரி" சபை என்றால் என்ன என்பதை நாம் கற்றுக்கொள்ள முடியும்.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 9, பகுதி 4

1. **நீங்கள் வசனத்திற்குக் கொடுத்துள்ள தலைப்பைக் கவனித்து பாடக் கருத்தின் வகையைப் பாருங்கள்.**

2. **வசனங்களை கூர்ந்து கவனியுங்கள், நீங்கள் கண்டுபிடித்தவைகளை குறித்துக் கொள்ளுங்கள்.**

3. **2 தெசலோனிக்கேயர் 1:1-12ன் விரிவான சுருக்க வருணனையை உருவாக்குங்கள்.**

பகுதி 5
வெவ்வேறு பகுதியிலுள்ள வேத வசனங்களை ஒப்பிட்டு நோக்குதல்

நாம் இப்போது வெவ்வேறு பகுதியிலுள்ள வேதவசனங்களை வேதவசனங்களோடு ஒத்துப்பார்ப்போம். அதாவது வெவ்வேறு பகுதியிலுள்ள வேத வசனங்களைக் கண்டுபிடிப்பதில் இதைச் செய்வதற்கு எளிதான வழி, ஒரு குறிப்பிட்ட சொல் பயன்படுத்தப்பட்டுள்ள இடங்களையெல்லாம் பட்டியட்ட ஒரு ஒத்த வாக்கிய அகராதியைப் பயன்படுத்துவதாகும். இந்த வார்த்தைகள் எங்கெல்லாம் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தேடுவதன் மூலம் வேதாகமத்தில் எந்தெந்த இடத்தில் இதே பாடப்பொருள் கையாளப்பட்டுள்ளது என்ற வேறு இடங்களுக்கு நாம் கொண்டு செல்லப்படுகிறோம்.

வெவ்வேறு ஒத்தவாக்கிய அகராதிகள் வெவ்வேறு வழிகளில் செயல்படுகின்றன. நெருங்கிய சம்பந்தமில்லாமல் அமைக்கப்பட்ட வசனங்களை ஆய்வு செய்வதற்கான ஒரு முக்கியமான முதல் படி ஒருவர் எப்படி செயல்படுகிறார் என்பதை பரிச்சயமாக்கிக் கொள்ளுவதாகும். நன்றாகத் தெரிந்ததும் மிகவும் உதவியாயிருப்பதுமான இரண்டு ஒத்த வாக்கிய அகராதிகள் ஆங்கிலேயருடைய கிரேக்க ஒத்தவாக்கிய அகராதியும், ஆங்கிலேயருடைய எபிரெய கல்தேய ஒத்த வாக்கிய அகராதியும் ஆகும். இவை குறிப்புகளை கிரேக்க அல்லது எபிரெய வார்த்தைகளில் ஒழுங்காக அமைத்திருக்கின்றன. இவ்விதமாக காலோஸ் (KALOS), ''நன்மை'' போன்ற ஒரு குறிப்பிட்ட வார்த்தை காணப்படும் எல்லா இடங்களும் அந்தத் தலைப்பின்கீழ் காணப்படும்.

மிக பிரபலமான ஒத்தவாக்கிய அகராதியான ஸ்ட்ராங்கின் விளக்கமான ஒத்தவாக்கிய அகராதி (Strong's Exhaustive Concordance), ஒவ்வொரு வார்த்தை ஒவ்வொரு முறை வரும்போதும் அதை ஒழுங்காய் (ஆங்கிலத்தில்) அமைத்திருக்கிறது. எடுத்துக்காட்டாக நன்மை good என்ற ஆங்கில வார்த்தை வரும் ஒவ்வொரு வசனப்பகுதியும் பட்டியடப்பட்டுள்ளது. எனினும் அநேக வேறுபட்ட கிரேக்க அல்லது எபிரெய சொற்கள் ஆங்கிலத்தில் நன்மை good என்று மொழி பெயர்க்கப்பட்டிருந்தாலும், ஒவ்வொரு வார்த்தைக்கும் அதன் சொந்த தனிப்பட்ட அர்த்தம் அல்லது நுட்பமான வித்தியாசமான அர்த்தம் இருக்கும்.

நம்முடைய விளக்கமான வேதாகம ஆய்வில், நன்மை good என்ற ஆங்கில வார்த்தை எந்த பிறமொழி வார்த்தையின் மொழிபெயர்ப்பு என்று தெரிந்துகொள்ளுவது முக்கியம். இந்த நோக்கத்தோடு வேதாகமத்திலுள்ள ஒவ்வொரு கிரேக்க அல்லது எபிரெய வார்த்தைக்கும் ஸ்ட்ராங் ஒரு எண்ணை ஒதுக்கியிருக்கிறார். எடுத்துக்காட்டாக, ஆங்கில வார்த்தை நன்மை good காணப்படும் ஒவ்வொரு தேவவசனப்பகுதியின் அருகில் அந்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்தப்பட்ட கிரேக்க அல்லது எபிரெய பதங்களுக்கு ஒத்ததாக ஒரு எண் கொடுக்கப்படுகிறது (இந்தக் குறிப்பிட்ட கிரேக்க, எபிரெய வார்த்தை ஒத்த வாக்கிய அகராதியின் பிற்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது). அது இதுபோல் காணப்படுகிறது:

GOOD (நன்மை):
மத்தேயு 3:10 நல்ல கனிகொடாத மரமெல்லாம் (2570)
மத்தேயு 5:45 தீயோர் மற்றும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி (18)

மத்தேயு 3:10ல் (குறிப்பு எண் # 2570) பயன்படுத்தப்பட்ட ''நல்ல'' என்பது கிரேக்க மொழியில் KALOS என்பதாகும். இது இயற்கையாகவே ''நல்லது'' அல்லது ''நல்ல இயல்பு'' என்ற அர்த்தமுடையது. எனினும் மத்தேயு 5:45ல் நல்ல (குறிப்பு எண் # 18) என்று சொல்லுக்கான கிரேக்க சொல் AGATHOS என்பதாகும். இது கிரேக்கர்களுக்கு ''நல்லதாக மாறும் ஒன்று'' என்ற அர்த்தமுடைது.

கிரேக்க எபிரெய வார்த்தைகளின் முழு அர்த்தங்களின் விளக்கங்கள் லெக்சிகன் என்றழைக்கப்படும் புத்தகங்களிலும் காணப்படுகிறது. இவை அர்த்தங்களின் அகராதிகள். இந்தப் புத்தகங்களைப் பயன்படுத்துவது விளக்கமாக வேதாகம ஆய்வு செய்வதில் மிகப்பெரிய உதவியாயிருக்கும்.

இப்பொழுது ''பின்பற்றுபவர்'' என்று 1 தெசலோனிக்கேயர் 1:6ல் காணப்படும் வார்த்தையைப் பாருங்கள். சில மொழிபெயர்ப்புகளில் கிரேக்கப்பதம் மிமெட்டீஸ் (MIMETES) என்பதை ''பாவனை செய்பவர்'' என்பதற்குப் பதிலாக ''பின்பற்றுபவர்'' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ''பாவனைசெய்வ''து என்ற கிரேக்க வார்த்தை ஒன்றைப் பார்த்து அதைப்போலவே செய்வது என்ற அர்த்தமுடையது. இது புதிய ஏற்பாட்டில் ஆறுமுறை பயன்படுத்தப்பட்டிருக்கிறு. இது கீழ்க்கண்ட வசனப் பகுதிகளில் காணப்படுகிறது:

1 கொரிந்தியர் 4:16 "ஆகையால், என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்களென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்".

1 கொரிந்தியர் 11:1 "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்."

எபேசியர் 5:1 "ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போல தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி... நடந்து கொள்ளுங்கள்."

1 தெசலோனிக்கேயர் 1:6 "நீங்கள் மிகுந்த உபத்திரவத்திலே, பரிசுத்த ஆவியின் சந்தோஷத்தோடே, திருவசனத்தை ஏற்றுக்கொண்டு, எங்களையும் கர்த்தரையும் பின்பற்றுபவர்களாகி.. மாதிரிகளானீர்கள்."

1 தெசலோனிக்கேயர் 2:14 "எப்படியெனில், சகோதரரே, யூதேயா தேசத்தில் கிறிஸ்து இயேசுவுக்குள்ளான தேவனுடைய சபைகளை நீங்கள் பின்பற்றினவர்களாகி, அவர்கள் யூதராலே எப்படிப் பாடுபட்டார்களோ, அப்படியே நீங்களும் உங்கள் சுய ஜனங்களாலே பாடுபட்டீர்கள்."

எபிரெயர் 6:12 "நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங்களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து... ஆசையாயிருக்கிறோம்."

''பின்பற்றுவ'' து என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்ட ஒருசில வசனப்பகுதிகளை ஆய்வு செய்வதின் மூலம் பின்பற்றுதல் என்ற பொருளைப் புரிந்துகொள்ள ஒப்பிட்டு நோக்குவது பற்றி ஓரளவு தெளிவாகிறு. இதைப்பற்றிய முக்கியமான காரியங்கள்:

- 1 கொரிந்தியர் 4:16ல் கொரிந்திய சபை அங்கத்தினர்கள் தன்னைப் பின்பற்ற வேண்டும் என்று பவுல் விரும்புகிறார் என்று நாம் வாசிக்கிறோம். இதன் அருகில் உள்ள பின்னணியில் (வச. 14-15) அவர்கள், ஒரு பிள்ளை தன் தகப்பனைப் போல பாவனை செய்வதைப் போருக்கிறது என்று நாம் காண்கிறோம்.
- 1 கொரிந்தியர் 11:1ல் பவுலைப் பின்பற்றச் சில தகுதிகள் இருக்கின்றன என்று நாம் காண்கிறோம். நாம் அவருடைய பாவங்களையும் கெட்ட பழக்கங்களையும் பின்பற்றாமல் (ரோமர் 7ல் பவுலுக்கு பாவத்தோடு ஒரு தொடர்ந்த போராட்டம் இருந்தது என்று காண்கிறோம்) பவுல் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றிய வழியைப் பின்பற்ற வேண்டும்.
- எபேசியர் 5:1ல் ஒரு பிள்ளை தன் தகப்பனைப் பின்பற்றுவது போல நாம் தேவனைப் பின்பற்ற வேண்டுமென்று காண்கிறோம்.
- தெசலோனிக்கே சபை பவுலையும் கர்த்தரையும் பின்பற்றியது. 1 தெசலோனிக்கேயர் 1:6.
- தெசலோனிக்கே சபை தங்கள் துன்பங்களைச் சகிக்கும் தன்மையில் யூதேயா சபையைப் பின்பற்றினார்கள் (1 தெசலோனிக்கேயர் 2:14). இந்த வசனப்பகுதி அதே புத்தகத்தில் இருப்பதால் அதன் உடனடியான சந்தர்ப்பத்தை நாம் பார்க்க முடிகிறது.
- இந்தப் பின்தொடருவதின் ஒரு முக்கியமான பகுதி ஊழியம் செய்வதாகும். எபிரெயர் 6:9-12

இந்த வசனப்பகுதிகள் எல்லாவற்றையும் நாம் ஒன்று சேர்த்தால், வேதவசனங்கள் நம்மை மூன்று காரியங்கள் செய்ய ஊக்கப்படுத்துகிறது என்று காண முடியும்.

1. தேவன், இயேசு கிறிஸ்து, பவுல் ஆகியோரைப் பின்பற்றுங்கள்.
2. துன்பங்களின் மத்தியிலும் ஒரு பிள்ளை தன் தகப்பனைப் பின்பற்றுவதுபோல அவர்களைப் பின்பற்றுங்கள்.
3. மற்றவர்களுக்கு ஊழியஞ்செய்வதின் மூலம் அவர்களைப் பின்பற்றுங்கள்.

இப்பொழுது நாம் பின்பற்றுதல் என்ற கருத்தை (1 தெசலோனிக்கேயர் 1:6ன் தொடர்புடன்) சொல்லத்தக்கவாறு விரிவுபடுத்த முடியும். ஏனெனில் வேதவசனங்கள் அதைப்பற்றிக் குறிப்பாக என்ன சொல்லப்போகிறது என்று தீர்மானித்துவிட்டோம். பவுல், அவனையும் அவன் கூட்டத்தையும் பின்பற்றுவதைப்பற்றி தெசலோனிக்கேயரைப் புகழ்ந்தபோது, அவர் கிறிஸ்துவைப் பின்பற்றியது என்ற கருத்தில் புகழ்ந்தாரேயன்றி, அவருடைய மனித பலவீனங்களையும் குற்றங்களையும் பற்றியல்ல (ரோமர் 7ஐ ஒத்துப்பாருங்கள்).

பயன்படுத்துவதற்காக நாம் பின்பற்ற வேண்டிய பிதா குமாரன் ஆகியோரின் சில பண்புகளை நாம் தீர்மானிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு குண இயல்பின் முக்கியத்துவத்தை, அல்லது ஒரு வாக்குறுதியை நிறைவேற்றுவதின் அர்த்தத்தை அல்லது சத்தியத்தில் வாழ்வதின் முக்கியத்துவத்தை நாம் குறிப்பிட முடியும் (தேவனைப் பற்றிப் பேசத் துவங்கும் போது முடிவற்ற சாத்தியக்கூறுகள் உள்ளன). தேவனுடைய வசனங்களிருந்து நாம் விட்டுக்கொடுக்கும் அல்லது போதிக்கும அளவு நடைபெற்றுக்கொண்டிருக்கிற இடைவிடா ஜெபமாயிருக்க வேண்டும். தேவனுடைய வசனங்களைப் போதிப்பவர்களாக நாம், புதிய முதிர்ச்சியடையாத விசுவாசிகளால் ஆழ்ந்த இறையியலைப் புரிந்துகொள்ளுவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது (எபிரெயர் 5:11-14) என்பதை உணரவேண்டும். பேசுவதைக் கேட்பவர்கள் எந்த அளவுக்கு ஆவியில் முதிர்ச்சியடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு அந்த மட்டத்துக்கு அவர்களோடுத் தொடர்பு கொள்ள வேண்டும்.

அந்த அத்தியாயத்தில் அல்லது பத்தியில் நாம் முக்கியமான குறிப்பைத் தவறவிட்டுவிடக்கூடாது என்பதற்காக தொடர்ந்து துவங்கிய சந்தர்ப்பத்துக்கு நாம் திரும்பி வர வேண்டும். தெசலோனிக்கேய சபை அங்கத்தினர்கள் பவுலையும் கர்த்தரையும் பின்பற்றி, ஒவ்வொரு விசுவாசியும் பின்பற்ற வேண்டிய ஒரு எடுத்துக்காட்டானார்கள்.

உடனடியான சந்தர்ப்பத்தைப் பார்க்கும்போது ஒரு மாதிரி சபைக்கான சில குண இயல்புகளை நாம் காண்கிறோம். பவுல் மூன்று காரியங்களுக்காக தெசலோனிக்கேயர்களுக்கு நன்றி செலுத்தினான். (வச. 2):

1. அவர்களுடைய விசுவாசத்தின் கிரியை
2. அவர்களுடைய அன்பின் உழைப்பு மற்றும்
3. அவர்களின் உறுதியான நம்பிக்கை.

புதிய ஏற்பாடு முழுவதும் வேலை (173), விசுவாசம் (246), உழைப்பு (19), அன்பு (115), உறுதி (32), மற்றும் நம்பிக்கை (56) ஆகியவைகளை ஒருவர் வாரக்கணக்கில் அல்லது மாதக்கணக்கில் இந்தப் பாடப்பொருட்களை ஆய்வுசெய்வதில் அல்லது போதிப்பதில் செலவிட முடியும். அடைப்புக் குறிக்குள் காணப்படும் எண்கள் இந்தப் பெயர்சொற்கள் எத்தனை தடவை பயன்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதைக் கொடுக்கிறது. இது சம்பந்தான வினைச் சொற்களும் ஏராளமான முறைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. இந்தப் பாடப்பொருட்கள், ஒரு மாதிரி (model) சபை எப்படியிருக்கவேண்டும் என்பதைப் புரிந்துகொள்ள மிகவும் முக்கியமானது.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 9, பகுதி 5

பகுதி 5 மற்றும் 6 இணைக்கப்பட்டுள்ளன. மாணவனுடைய முழுமையான ஆய்விற்கு ஒத்த வாக்கிய அகராதி அவசியமாயிருக்கிறது. ஒவ்வொரு பிரதிநிதித்துவ வசனத்தையும் கவனித்து 2 தெசலோனிக்கேயர் 1 வசனத்துடன் தொடர்புபடுத்துக.

பகுதி 6
உங்கள் படிப்பை விரிவுபடுத்துவது

தேவனுடைய வசனங்களை அளிப்பதற்கு முன்பாக, போதகர் எவ்வளவு ஆழ்ந்து கற்றுக்கொள்ள வேண்டுமென்பது பெரும்பாலும் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலையும் கேட்பவர்களின் முதிர்ச்சியையும் சார்ந்திருக்கிறது. எனினும், தனிப்பட்ட ஆய்வில் தேவனுடைய ஆழங்களைத் தேட வேண்டியிருக்கிறது. பரிசுத்த ஆவி நிறைந்த கிறிஸ்தவர்களான நமக்கு 1 கொரிந்தியர் 2:9-10ன்படி இப்போது இந்தப் பொக்கிஷங்களுக்கு செல்லும் வழியிருக்கிறது.

> ***தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவை களைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்*** என்று 1 கொரிந்தியர் 2:9-10 சொல்லுகிறது.

இந்த கருத்தை அளிப்பதற்குச் சிறந்த வழி ஒரு எடுத்துக்காட்டு மூலம் கொடுப்பதாகும்; எனவே 1 தெசலோனிக்கேயர் 1:3ஐ முக்கிய கிரேக்க வார்த்தைகளும் அவைகளுடைய வரையறைகளும் உள்ளடக்கியதாக நாம் விரிவுபடுத்துவோம். இந்த வசனம் கூறுகிறது:

> **உங்கள்** (பன்மை) **விசுவாசத்தின்** (PISTIS = நம்பிக்கை) **கிரியையும்** (ERGOS = ஒருவர் செய்துகொண்டிருக்கும் தொழில், வேலை) **உங்கள் அன்பின்** (AGAPE = செய்ய உங்களுக்கு விருப்பம் இல்லையென்றாலும் கூட சரியானதைச் செய்வது) **பிரயாசத்தையும்** (KOPOS = (துன்பகாலத்திலும் பிரயாசப்படுவது), **நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள** (EMPROSTHEN = அவருக்கு முன்பாக) உங்கள் **நம்பிக்கையின்** (ELPIS = நிச்சயத்தோடு எதிர்பார்ப்பது) **பொறுமையையும்** (HUPOMONE = சூழ்நிலைகளுக்கு நேரான பொறுமை, இதன் கீழ் நீங்காதிருப்பது), **நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நாங்கள் இடைவிடாமல்** (ADIALEIPO = குறைவுபடாமல்) **நினைவுகூர்ந்து** (MNEMONEUW = ஞாபகத்தில் வைத்திருத்தல்)... **ஸ்தோத்திரிக்கிறோம்.**

சந்தர்ப்ப அடிப்படைக் கொள்கை; அவைகளுக்காக ஏன் நாம் நன்றி செலுத்தவேண்டும் என்று மக்களிடம் சொல்லுங்கள் (ஒப்பிட்டுப் பாருங்கள் வச. 2).

முக்கிய குறிப்பு: இது ஒரு மாதிரி சபையாக இருப்பதால் (வச. 7), ஒரு மாதிரி சபை அதனுடைய விசுவாசம், நம்பிக்கை அன்பு ஆகியவற்றால் மதிப்பிடப்படுகிறது என்று நாம் காண்கிறோம்.

A. கவனித்த சில காரியங்கள்:

1. எழுதியவர் யாராக இருந்தாலும் ஒவ்வொரு புதிய ஏற்பாட்டு நிருபத்திலும் இந்தக் குணங்களில் ஒன்று அல்லது அதற்கும் மேலாக, முக்கிய பகுதியாக எப்பொழுதும் காணப்படுகிறது.

2. ஒரு "விசுவாசத்தின் கிருபை," "அன்பின் பிரயாசம்," "நம்பிக்கையின் பொறுமை" ஆகியவைகள் பார்க்கக்கூடிய வைகளாக இருக்கின்றன என்பதைக் கவனியுங்கள்.

3. இப்படியாக, இந்த மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை, இணைந்து செயல்படுபவையாகும்.

4. இந்த எல்லாக் குணங்களும் வளர்ச்சியடைய முடியும்.
   a. விசுவாசம் (2 தெசலோனிக்கேயர் 1:3)
   b. நம்பிக்கை (ரோமர் 15:13)
   c. அன்பு (2 தெசலோனிக்கேயர் 1:3)

5. மற்றவர்கள் காணவேண்டும் என்ற வகையில் வாழ்வதற்காக தேவனால் வடிவமைக்கப்பட்ட குணங்கள் இவை.
   a. விசுவாசம் (எபிரெயர் 11:1)
   b. நம்பிக்கை (ரோமர் 8:24)
   c. அன்பு (எபேசியர் 3:16-19)

6. ஒருவர் ஆவிக்குரிய ரீதியில் வெதுவெதுப்பாக அல்லது குளிர்ச்சியாக இருந்தால் அவர்கள் அடைந்த முன்னேற்றம் அழிந்துவிடக்கூடும். (வெளிப்படுத்தல் 3:14-20)

7. இவை எல்லாவற்றிலும் அன்பே பெரியது என்று பவுல் நமக்குச் சொன்னார், இது உங்களிடம் இல்லாவிட்டால், உங் களிடம் எதுவுமே இல்லை. (1 கொரிந்தியர் 13:1-3, 13)

8. ஒரு சபைக்கு இந்தக் குணங்கள் எதுவுமில்லாமலிருந்தால், அதன் விளைவு கலாத்தியர்களைப் போல சட்டப்படி யா னதாக **(Legalism)** அல்லது கொரிந்தியர்களைப்போல இஷ்டம் போல செயல்படுவதாக அல்லது இவை இரண்டும் ஒன்றுபடுவதாக இருக்கும்.

B. கீழே கொடுக்கப்பட்ட மூன்று கொள்கைகளைப் பற்றிக் கூற, நீங்கள் இந்த ஆய்வை விரிவுபடுத்திக் கொள்ளலாம்:

1. விசுவாசத்தின் கிரியை
   a. விசுவாசத்தின் கிரியை என்றால் விசுவாசம் உங்கள் வேலையாகிவிட்டது என்று அர்த்தம், இப்படியாக உங்கள் வாழ்க்கை முறை அதன் அடிப்படையில் ஆயிற்று.

b. கிரேக்க மொழியில் இது "விசுவாசத்தினுடைய கிரியை" என்று சொற்படியாகச் சொல்லுகிறது. இது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் இருக்கும் விசுவாசத்திருந்து புறப்படும் சூழ்நிலைகளுக்கான ஒரு பதிலைக் குறிப்பிடுகிறது.

c. சிலர் "விசுவாசத்தின்கிரியை" என்பதை இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் பரப்புவதுஎன்பதாகக் காண்கிறார்கள்.

d. "விசுவாசம்" என்ற சொல் வேதவசனங்களில் எழுதப்பட்ட வார்த்தையில் காணப்படும் சத்தியத்தின் பகுதியைக் குறிப் பிட அடிக்கடி பயன்படுத்தப்பட்டது, எனினும் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் இது மூன் றாவதாகவே (யாக்கோபு மற்றும் கலாத்தியருக்குப் பின்பு) இருப்பதால் இப்படிப் பயன்படுத்துவதைப் பவுல் குறிப்பிடுகிறார் என்பது சந்தேகமாயிருக்கிறது.

e. விசுவாசத்தின் கிரியை இரட்சிப்பதற்கான நீதியை அளிக்கவில்லை. (ரோமர் 3:27-28; கலாத்தியர் 2:16)

f. கிரியை அல்ல விசுவாசமே தேவனற்றவனை நீதிமான் என்று நிரூபிக்கிறது. (ரோமர் 4:5)

g. கிரியையினால் இரட்சிப்பைப் பின்தொடரும் ஒரு நபர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை பற்றி இடறல் அடைகிறார். (ரோமர் 9:32)

h. விசுவாசத்தின் மிகப்பெரிய தலைவர்கள் தங்களை ஆட்சி செய்பவர்களாக அல்ல, உடன் ஊழியர்களாகக் காண்கிறார் கள். (2 கொரிந்தியர் 1:24)

i. விசுவாசத்தினால் நீதிமானாக்கப்பட்டு, ஒருவர் இரட்சிக்கப்பட்டபின்பு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் இருந்து கொண்டிருக்கும் விசுவாசம் கிருபையின் கிரியையை உண்டுபண்ண வேண்டும். (2 கொரிந்தியர் 8:7)

j. ஒரு விசுவாசி பரிசுத்த ஆவியானவரை கிரியையினால் பெற்றுக்கொள்ளுவதில்லை, எனினும் கிரியைகள் ஆவிக் குரிய தன்மையின் ஒரு புறம்பான வளர்ச்சியாகும். (கலாத்தியர் 3:2-5)

k. நம்பிக்கையினால் விசுவாசம் ஆவிக்குரிய அன்பின் மூலம் கிரியை செய்கிறது (கலாத்தியர் 5:5-6)

l. விசுவாசம் நிறுத்தப்பட வேண்டும் என்று சாத்தான் விரும்புகிறான். இதை முயற்சிசெய்ய பொதுவாக அவன் மனிதன ால் உண்டாக்கப்பட்ட சட்டத்தைப் பயன்படுத்துதல் போன்ற அமைப்பை உபயோகிக்கிறான். (கலாத்தி யர் 5:7, 13)

m. நம்முடைய விசுவாசம் நம் மீது அல்ல, அது நமக்குள் கிரியை செய்யும் தேவனில் இருக்க வேண்டும். (கொலோசெ யர் 2:12; பிப்பியர் 2:12-16)

n. மற்ற விசுவாசிகளுக்கு வல்லமையான விசுவாசத்தின் கிரியை இருக்க வேண்டுமென்று நாம் ஜெபம் செய்வது அவசி யம். (2 தெசலோனிக்கேயர் 1:11; யாக்கோபு 2:14-16)

கொள்கை: தேவன் அவர்கள் மூலம் கிரியை செய்ய அனுமதிப்பதன் மூலம் ஒரு மாதிரி சபைக்கு கண்களால் பார்க்கக் கூடிய ஒரு விசுவாசம் இருக்கிறது.

2. **அன்பின் பிரயாசம்**

a. இந்த ஒரு இடத்தில் மட்டுமே புதிய ஏற்பாட்டில் இந்த இரண்டு வார்த்தைகள் (பிரயாசம் மற்றும் அன்பு) நெருக்கமாக ஒன்றாக இணைந்து பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

b. நீங்கள் நேசிக்கிற மனைவியோடே வாழ்வை அனுபவிப்பதே உங்கள் பிரயாசத்தினால் வாழ்வில் கிடைக்கும் பரிசுக ளில் ஒன்று. (பிரசங்கி 9:9)

c. பிரயாசம் என்பதற்கு இந்தக் குறிப்பிட்ட வார்த்தை ஒருவர் களைப்படையும்வரை கடினமாக வேலை செய் வதைக் குறிப்பிடுகிறது.

d. இது மற்றவர்களுடைய நன்மைக்கான பிரயாசம். (யோவான் 4:37-38)

e. இந்தப் பிரயாசம் தேவனுடைய அன்பின் வேலையின் ஒரு ஐக்கியமாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 3:6-9)

f. கர்த்தருடைய கிரியையினால் நீங்கள் படும் பிரயாசம் விருதாவாயிருக்காது. (1 கொரிந்தியர் 15:58)

g. மற்றொருவருடைய பிரயாசத்தை ஒருவர் நியாயப்பிரகாரமாக உரிமை கொண்டாடக்கூடாது. (2 கொரிந்தியர் 10:14-18)

h. ஏமாற்றும் ஊழியக்காரர்கள் தங்கள் பிரயாசத்தைப் பெரிதாக்கிக் காட்டுகிறார்கள். (2 கொரிந்தியர் 11:23-27)

i. புதிய விசுவாசிகளுக்குச் சுமையாயிராமல் தேவனுடைய ஊழியக்காரர் அவசியப்பட்டால் களைப்படையும் வரை பிர யாசப்பட விருப்பம் உள்ளவர்களாக இருக்க வேண்டும். (1 தெசலோனிக்கேயர் 2:9; 2 தெசலோனிக் கேயர் 3:8)

j. ஒருவரும் தங்கள் பிரயாசம் விருதாயிருக்கிறது என்று காண விரும்பமாட்டார்கள். (1 தெசலோனிக்கேயர் 3:5)

k. அன்பில்லாமல் பிரயாசப்படுவது ஒரு உள்ளூர் சபையை இல்லாமலாக்கிவிடக் கூடும். (வெளிப்படுத்தல் 2:2-7)

l. இது அகப்பே (AGAPE) அன்பு, அதாவது நீங்கள் அதை செய்ய விருப்பமில்லாதவர்களாக இருந்தாலும் எது சரி மற்றும் சிறந்ததோ அதைச் செய்ய வேண்டும் என்பது இதன் அர்த்தம்.

m. இப்படியாக "அன்பின் பிரயாசம்" களைப்படையும் வரை பிரயாசப்படுவதும், ஒருவர் அப்படிச்செய்ய ஆர்வமில்லாத வராயிருந்தாலுங்கூட மற்றவர்களுக்காக சரியான சிறப்பான காரியத்தை களைப்படையும் வரை செய்வதுமாகும்.

n. இது அதற்குப் பின்னால் ஒரு நியாயமான நோக்கத்தோடுகூடிய பிரயாசம்.

o. இது, இரண்டு மிகப் பெரிய கட்டளைகளை நிறைவேற்றும்படி (மாற்கு 12:29-31), மற்றவர்களை உங்களைவிட மிகவும் முக்கியமானவர்களாகக் கருதி (பிப்பியர் 2:3) உங்கள் சரீரத்தை ஒரு ஜீவ பரிசுத்த பயாய் அளிப்பதாகும். (ரோமர் 12:1)

கொள்கை: ஒரு மாதிரி சபை, தேவனுக்கும் மற்றவர்களுக்குமாக இருக்கும் அன்பிற்காக களைப்படையும்வரை போகச் சித்தமாயிருக்கிறது.

கொள்கை: இது ஒரு போதகருக்கு மட்டுமல்ல சபையாகிய சரீரம் முழுவதுக்குமான ஒரு குண இயல்பாயிருக்கிறது என்பதைக் கவனியுங்கள்.

3. **உங்கள் நம்பிக்கையின் பொறுமை**
   a. ''நம்பிக்கையின் பொறுமை'' என்பது நம்பிக்கையினால் சூழ்நிலைகளுக்கு நேராக உண்டுபண்ணிய பொறுமை.
   b. ELPIS என்ற கிரேக்கச் சொல் ''நம்பிக்கை'' என்று மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. இது எதிர்காலத்தில் ஒரு நம்பகமான எதிர்பார்ப்பு என்ற அர்த்தமுடையது.
   c. உண்மையில் நம்பிக்கை என்பது இயேசு கிறிஸ்து என்ற நபரை சார்ந்திருக்கிறது. (1 தீமோத்தேயு 1:1)
   d. உங்களில் கிறிஸ்து அதிகமாக உருவாகும்போது, அதிகமாக நீங்கள் அவருடைய மகிமையின் ஐசுவரியத்தைத் தெரிந்து கொள்ளுவீர்கள். (கொலோசெயர் 1:27)
   e. விசுவாசம், நம்பிக்கை, அன்பு இவை மூன்றும் இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலோடு நெருக்கமாகப் பிணைக் கப்பட்டுள்ளது. (1 பேதுரு 1:20-22)
   f. இயேசு கிறிஸ்துவின் மேல் வைக்கப்பட்ட நம்பிக்கை ஆத்துமாவைப் பரிசுத்தப்படுத்த வழிநடத்தும். (1 யோவான் 3:1-3)
   g. பொறுமையாகக் கனி கொடுப்பவர்கள் சுவிசேஷத்தின் மேன்மையை வெளிப்படுத்துவார்கள். (லூக்கா 8:15)
   h. பொறுமையாகத் தொடர்ந்து நன்மை செய்கிறவர்கள் நித்திய ஜீவனைப் பற்றிய அறிவில் வளருவார்கள். (ரோமர் 2:5-11)
   i. நம்பிக்கையின் வளர்ச்சியில் பொறுமை ஒரு முக்கியமான ஆதாரப்பொருளாயிருக்கிறது. (ரோமர் 5:1-5)
   j. நம்பிக்கை என்பது இப்போது வெளிப்படுத்தப்படும் ஒன்றல்ல, எனினும், பொறுமையோடிருக்கும்போது, அது ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. (ரோமர் 8:23-26)
   k. தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையும் ஆறுதலும் நம்பிக்கையை உருவாக்கும் இரண்டு ஆதாரப்பொருளாயிருக்கிறது. (ரோமர் 15:4)
   l. தேவனிடத்திருந்து வரும் பொறுமையும் ஆறுதலும் ஒருவரோடொருவருக்குள்ள உறவுகளில் சாதகமான பாதிப்பு ஏற்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். (ரோமர் 15:5-7)
   m. பொறுமையும் பிரயாசமும் தேவனுடைய ஊழியக்காரர்களாக இருப்பதற்கான தகுதிகள் ஆகும். (2 கொரிந்தியர் 6:1-12)
   n. நாம் பொறுமையை அடைய தேவனுடைய சித்தத்தைப் பற்றிய அறிவு பகுதியாக வடிவமைக்கப்பட்டிருக் கிறது. (கொலோசெயர் 1:9-14)
   o. ஒரு சபை பொறுமையை வெளிக்காட்டும்போது, சபையிலுள்ள மற்ற அங்கத்தினர்கள் தொடப்படுவார்கள். (2 தெசலோனிக்கேயர் 1:4; 3:5)
   p. தேவபக்தியுள்ள ஒரு நபர் பொறுமையைச் சரியாகப் பின்தொடருவார். (1 தீமோத்தேயு 6:11-12)
   q. நம் எல்லாருக்கும் பொறுமையின் மாதிரிகள் அவசியமாயிருக்கிறது. (2 தீமோத்தேயு 3:10-13)
   r. வயது முதிர்ந்தவர்கள் பொறுமையின் மாதிரிகளாக இருக்க வேண்டும். (தீத்து 2:2).
   s. தேவன் வாக்குறுதியளித்த எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள விசுவாசத்தின் அடிப்படையிலான பொறுமை மிக வும் முக்கியமானது. (எபிரெயர் 10:36-39).
   t. நம்முடைய பந்தய ஓட்டத்தில் பொறுமை ஒரு பகுதியாயிருக்கிறது. (எபிரெயர் 12:1-3)
   u. பொறுமை விசுவாசியின் முதிர்ச்சியின் ஒரு ஆதாரமாயிருக்கிறது. (யாக்கோபு 1:2-4)
   v. இரண்டு மிகப்பெரிய கட்டளைகளை நிறைவேற்றுவதில் பொறுமை ஒரு பகுதியாகிறது. (2 பேதுரு 1:5-7)
   w. பொறுமை இருந்து, அன்பில்லாமருக்கும் ஒரு சபை அபாயத்திருக்கிறது. (வெளிப்படுத்தல் 2:24)
   x. ஒரு சபைக்கு அன்பு, விசுவாசம், ஊழியம் மற்றும் பொறுமை ஆகியவைகள் இருந்தும் தீமைக்கு இடங்கொடுத்தால் அதுவும் அபாயத்திருக்கிறது. (வெளிப்படுத்தல் 2:19-20)
   y. சிலுவையின்மேல் இயேசு கிறிஸ்து காட்டிய பொறுமை விசுவாசிகளை மகா உபத்திரவத்திருந்து விடுவிப்பதற் கான அடிப்படையாயிருக்கிறது. (வெளிப்படுத்தல் 3:10-11).

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 9, பகுதி 6

இந்தப் பகுதி 5 உடன் இணைக்கப்பட்டுள்ளது.

பகுதி 7
குறிப்புகளை எழுதுவது

தேவனுடைய வசனங்களைப் போதிப்பவரான உங்களிடம், கேட்பவர்கள் புரிந்துகொண்டு ஞாபகத்தில் வைப்பதற்கும் அதிகமான செய்தி இருக்கும். உங்களுடைய செய்தியைப் புரிந்துகொண்டு அதை அவர்கள் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டுமென்று நிச்சயமாய் நீங்கள் விரும்புவீர்கள். எவ்வளவுதான் தெளிவாயிருந்தாலும், அதிகமான உண்மைகள் பெரும்பாலும் குழப்பத்துக்கு வழிநடத்துகின்றன. செய்தியை எளிதாகவும் செயல்படுத்தக்கூடியதாகவும் அமைப்பது சிறந்ததாயிருக்கும்.

ஒரு முக்கிய பாடப்பொருள்மேல் கவனம் செலுத்துங்கள். இந்தக் கருத்தை நிறைவேற்ற எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துவது ஒரு வழியாகும். உதாரணமாக, ஒரு பலகையினுள் ஒரு ஆணி அடிப்பதை ஒரு முக்கிய பாடப்பொருளாக நாம் பார்ப்போமானால், சுத்தியன் ஒவ்வொரு அடியும், நம்முடைய நோக்கம் நிறைவேறும்வரை ஆணியைக் கொஞ்சம் ஆழமாக செலுத்துகிறது. ஒவ்வொரு எடுத்துக் காட்டும், நாம் விரும்பிய நோக்கத்தை அடைவதற்கு அதே காரியத்தை அழுத்தமாய்த் தெரிவிக்க வேண்டும்.

தேவனுடைய வசனங்களின் ஆய்வை நாம் எந்த வழியில் அணுகியிருக்கிறோம் என்பதைக் கவனியுங்கள். முதலாவது, பெரிய படத்தைக் கொண்டு வர முயற்சி செய்து, பின்னர் விவரங்களைத் தேடி, இதன்பின் விவரங்கள் எப்படிப் பெரிய படத்தில் பொருந்துகின்றன என்று தீர்மானித்தோம்.

1 தெசலோனிக்கேயர் 1:2ல் பவுல், விசுவாசத்தில் வளரும் மற்றவர்களுக்கு நன்றி செலுத்தியதை நாம் பார்த்தோம். இதில் ஒரு செய்தி, ***"உங்களெல்லாருக்காகவும் எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன்"*** என்பதாக இருக்கக்கூடும். இப்படிப்பட்ட செய்தி முக்கியமானது ஏனெனில் முதிர்ச்சியடையாத விசுவாசிகள் தங்களுக்கு இருப்பவைகளுக்காக நன்றியுள்ளவர்களாக இருப்பதற்கு மாறாக தங்கள்மீதும் தங்களுடைய குறைவுகளின் மீதுமே கவனம் செலுத்துபவர்களாய் இருக்கிறார்கள்.

ஒரு முறை இயேசு ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து அவைகளுக்காக பிதாவுக்கு ஸ்தோத்திரம் செலுத்தினார். போதுமான உணவு இல்லாமருந்தபொழுதும், இன்னும் அதிகமாகக் கேட்பதற்குப் பதிலாக அவர்களிடம் இருந்தவைகளுக்காக ஸ்தோத்திரம் செலுத்தினார், அப்போது ஒரு அற்புதம் நடந்தது.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி நான்கு சுவிசேஷங்களிலும் நாம் வாசிக்க முடியும் (மத்தேயு 14:15-21; மாற்கு 6:37-44; லூக்கா 9:13-17; யோவான் 6:5-13). எந்த ஒரு வர்ணனையிலும் கர்த்தர் பிதாவிடம் மீன்களையும் அப்பங்களையும் "பெருக வேண்டும்" என்று கேட்டதாக எழுதப்படவில்லை. அதற்குப் பதிலாக நான்கு சுவிசேஷங்களிலும் இயேசு ஸ்தோத்திரம் செலுத்தினார். "உங்கள் நேரத்தில் பெரும்பகுதியை நன்றி செலுத்துவதற்கா, அல்லது குறைகூறுவதற்கா, எதற்காகச் செலவிடுகிறீர்கள்?" என்ற கேள்வியை கேட்டுக்கொண்டிருப்பவர்களுக்கு ஒரு சவாலாகக் கேட்கலாம். நமக்குத் தெரிந்த மக்களில், கொஞ்சம் உலகப்பிரகாரமான உடைமைகள் இருந்தும், தங்களுக்கு இருந்தவைகளுக்காக தேவனிடம் நன்றி கூறுபவர்களின் எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்தலாம். இந்தச் செய்தியைப் பெற்றுக்கொண்ட மக்கள் தேவனுக்கு நன்றி செலுத்துவதின் முக்கியத்துவத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். நன்றி செலுத்துவதற்கான கிரேக்க வார்த்தை யூக்காரிஸ்டியா (EUCHARISTIA) என்பதைக் கவனியுங்கள். இது "EÙ" மற்றும் "சாரிஸ்" (CHARIS) என்ற இரண்டு கிரேக்க வார்த்தைகளால் ஆனது . "யூ" என்பதன் அர்த்தம் "நன்மை", "சாரிஸ்" என்பதன் அர்த்தம் "கிருபை" என்பதாகும். இப்படியாக நன்றி செலுத்துவது என்பது தேவனுடைய கிருபையின் நன்மையைத் அங்கீகரிப்பதாகும். தங்கள் வாழ்க்கையில் நன்றிசெலுத்துவதில் குறைவுபடுபவர்கள் ஒரு வேளை கிருபையைப் பாராட்டாதவர்களாக இருப்பார்கள்.

உதாரணங்கள், வேதவசனங்களை விளக்கிக் கூற மிகப்பெரிய உதவியாயிருக்கும். நல்ல உதாரணங்கள் புத்தகங்களிருந்து வருவதில்லை, அவை வாழ்க்கையில் நாம் காண்பவைகளிருந்து வருகின்றன. போதிப்பவர், தேவன் என்ன செய்தார் என்பதையும், அவரைச் சுற்றி தேவன் என்ன செய்கிறார் என்பதையும் பற்றித் தெளிவான விழிப்புணர்வோடு இருப்பது அவசியம்.

தனிப்பட்ட ஆய்வு: அதிகாரம் 9, பகுதி 7

2 தெசலோனிக்கேயர் 1 யில் பின்னணியை அடிப்படையாகப் கொண்டு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை மகிமைப்படுத்துவதைப் பற்றிக் கூறும் ஒரு பிரசங்கம் உருவாக்குங்கள்.

ஆசிரியர்களிடமிருந்து ஒரு குறிப்பு

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவோடுள்ள உங்கள் அன்றாட வாழ்க்கையிலும் பணியிலும் நாங்கள் உங்களை உற்சாகப் படுத்த விரும்புகிறோம். அஸ்திபாரங்கள் என்ற இந்த நூல் உங்கள் வேதாகமக் கல்வியில் சாதகமான முதல்படியாக அமையும் மேலும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறியும் அறிவிலும் தொடர்ந்து வளர்ச்சியடைவீர்கள் என அறிவோம் (2 பேதுரு 3:18). ஞநீங்கள் அஸ்திபாரங்கள் என்ற இந்த நூருந்து கற்றுக் கொண்டவைகளை உங்கள் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் செயல்படுத்த வேண்டுமென்று உங்களுக்கு ஊக்கமளிக்க விரும்புகிறோம். இயேசுகிறிஸ்துவோடு நெருங்கி வாழும், உங்கள் சொந்த வாழ்க்கையை வளர்ச்சியடையச் செய்து அதை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதைவிட முக்கியமான காரியம் எதுவுமில்லை. வேதாகமத்தை நன்றாக விளங்கிக்கொண்டு அந்த ஞஜீவவார்த்தையை நீங்கள் பிரதிபப்பதன் மூலமாகவே நீங்கள் இயேசுவோடு நெருங்கி வாழ முடியும்.

நீங்கள் ஒரு நல்ல மாணவனாகவும், மற்றவர்களுக்கு அதை விளக்கிக் கூறவும் வேதாகமத்தைப் படித்து நன்கு புரிந்துகொள்ளவும், தேவையான அடிப்படை உபகரணங்களை அஸ்திபாரங்கள் உங்களுக்கு வழங்கியுள்ளது. நீங்கள் கற்றுக்கொண்டவைகளை மற்ற கிறிஸ்தவர்களுக்கு பயிற்சியளிக்கவும் போதிக்கவும் துவங்கவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். நீங்கள் சத்தியத்தைப் பின்தொடரும்போது, அநேகக் கள்ளப்போதகர்களையும் – வேதவசனங்களின் சத்தியத்தையும் அதன் எளிமையையும் தங்கள் தவறான வியாக்கியானங்களாலும் போதனைகளாலும் திரித்துக் கூறுபவர்களையும் கண்டுகொள்ளுவீர்கள் (பிப்பியர் 3:2). உங்களைப் பாதுகாத்துக்கொள்ள பெரோயா பட்டணத்தார் செய்தது போல (அப்போஸ்தலர் 17:11) நீங்கள் கேட்பவைகள், வாசிப்பவைகள் எல்லாவற்றையும் கவனமாக பரிசீலனை செய்து, வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதைக் கண்டுபிடித்தபின் அதை உண்மையென்று ஏற்றுக் கொள்ளுங்கள்.

உங்கள் விசுவாச ஊழியப் பிரயாணத்தை நீங்கள் தொடரவேண்டுமென்பதே எங்கள் ஜெபமாயிருக்கிறது. நாம் ஒரு மிகப்பெரிய உலகத்தில் வசிக்கிறோம், நாம் செய்யும் காரியங்கள் சிறியதாகவும், முக்கியமற்றதாகவும் இருந்தாலுங்கூட தேவனுடைய முழுத் திட்டத்தில் நாம் செய்யும் ஒவ்வொன்றும் அவருடைய சபையைக் கட்டுகிறது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களாகவும் அதே ஊழியக் குழுவில் இருப்பவர்களுமான நாம், இயேசு நமக்குக் கொடுத்த விசுவாசச் செய்தியைப் பகிர்ந்துகொண்டு சீடர்களை உருவாக்குவது நம்முடைய பொறுப்பாயிருக்கிறது. நாம் எல்லாரும் பரலோகத்துக்குப் போய்ச் சேரும்பொழுது, நம்மை அநேக வழிகளில் தம்முடைய மகிமைக்காக கர்த்தர் பயன்படுத்தியதைப் பகிர்ந்துகொண்டு களிகூருவோம். நீங்கள் செய்யும் எல்லாக் காரியங்களிலும் வெட்கப்படாத ஊழியக்காரராகவும், சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப்போதித்து தேவனுக்கு முன்பாக உத்தமராகவும் நடந்துகொள்ளும்படி (2 தீமோத்தேயு 2:15) தேவன் உங்களை ஆசீர்வதிக்க வேண்டுகிறோம்.

சர்வதேச கிராம ஊழியங்கள்

Village Ministries International

பதில்கள்

அதிகாரம் 1

பகுதி 1
தனிப்பட்ட ஆயத்தம்

அதிகாரம் 1, பகுதி 1

1. இது இரட்சிக்கப்படுவதற்குமுன் ஒரு அவிசுவாசியைக் குறிக்கிறது (1 கொரிந்தியர் 15:44, 46). இது பொறாமை, சுயநலம், பெருமை மற்றும் பொய் நிறைந்த ஒரு மனிதனை விளக்கப் பயன்படுகிறது (யாக்கோபு 3:14-15). இது கடைசிக் காலத் தவறான போதகர்களை விளக்க உபயோகப்படுகிறது (யூதா 1:18-19).
2. இது (1) உபயோகத்திற்கும், (2) கடிந்துகொள்ளுதலுக்கும், (3) சீர்திருத்தலுக்கும், மற்றும் (4) நீதியில் பயற்சி பெறவும் பிரயோஜனமானது. ***"எந்த நற்கிரியைக்கும் தகுதியுள்ளவனாக்குவதே நோக்கமாகும்."***
3. கேட்கும் ஒருவனுக்கு தேவன் கொடுப்பார்.
4. வெட்கப்படாத வேலையாளாக, தேவனுக்கேற்றவர்களாக நம்மை ஒப்புக்கொடுப்பது ***"சத்திய வசனத்தை சரியாகப் பகுத்தும் போதிப்பதே"*** நமது நோக்கம்.
5. மன்னிக்கவும் சுத்திகரிக்கவும்.
6. அதை வாழ்ந்து காட்ட ஒருவர் விரும்ப வேண்டும்.
7. நாம் விசுவாசத்தின் மூலம் கிருபையில் நடக்க வேண்டும். இரட்சிப்பின்போது நமக்குக் கொடுக்கப்பட்ட கிருபையைப் பாராட்டுகிறோம். நாம் நம்முடைய இரட்சிப்புக்காக தேவனை நம்புகிறபடியினால் (விசுவாசம்) நம்முடைய வாழ்விற்கு தேவையானதைத் தரும்படி தேவனை நம்புகிறோம்.
8. நோக்கம் என்னவென்றால், அவர் நம்மை சமாதானத்தோடு, பாவமற்றவர்களாகவும், குற்றமற்றவர்களாகவும் காணவேண்டும். நாம் (1) கிரிபையிலும் (2) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றும் அறிவிலும் வளரவேண்டும்.
9. (1) வெளிச்சத்தில் நடந்து (2) நம் பாவங்களை அறிக்கையிட வேண்டும்.
10. சாத்தானும் அவனுடைய கூட்டமும்தான் உண்மையான எதிரிகள். தேவனுடைய எல்லா ஆயுதங்களையும் தரித்துக் கொண்டு யுத்தம் செய்ய வேண்டும்.
11. தேவ குமாரனைப் பற்றிய உண்மையான அறிவை அடிப்படையாகக் கொண்ட விசுவாசத்தின் ஒற்றுமையை அடைவது.

பகுதி 2
வேதாகமம்

அதிகாரம் 1, பகுதி 2

1. பசெலுத்துபவரை பூரணப்படுத்துதல் (வ.1) மற்றும் பாவங்களை நீக்குதல் (வ. 3)
2. இயேசு கிறிஸ்துவை வெளிப்படுத்து.
3. (1) உபதேசம், (2) கடிந்துகொள்ளுதல், (3) சீர்ப்படுத்தல், (4) நீதியைப் படிப்பித்தல்.
4. (1) விசுவாசியை முதிர்ச்சிக்கு நடத்த மற்றும் (2) விசுவாசியை நற்கிரியைக்களுக்கு ஆயத்தப்படுத்துதல்.
5. வேதத்தைப் பற்றிய உண்மையான அறிவு ஒருவரை இயேசு கிறிஸ்துவிடம் விசுவாசிக்கிறவர்களுக்கு நித்திய ஜீவனைக் கொடுக்க அவரால் முடியும் மற்றும் கொடுக்கிறார். வேதம் நித்திய ஜீவனைக் கொடுக்க முடியாது.
6. ஒருவரிடத்திருந்து இன்னொருவனுக்கு ஒரு விருப்பம் கொடுக்கப்பட்டது மற்றும் அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. விருப்பத்தில் உறவைக் காத்துக்கொள்ள வாக்குறுதி இருக்கிறது.
7. (1) பிரிமாணம், (2) சரித்திரம், (3) கவிதை, (4) பெரிய தீர்க்கதரிசிகள் மற்றும் (5) சிறிய தீர்க்கதரிசிகள்.
8. ஆம். தலைப்புகள் மனிதனால் ஏற்படுத்தப்பட்டவைகள்.
9. (1) சரித்திரம், (2) நிருபங்கள், (3) தீர்க்கதரிசனம்

பகுதி 3
ஒரு சரித்திர பார்வை

அதிகாரம் 1, பகுதி 3

1. இப்போதுள்ள வானங்கள் மற்றும் பூமியின் சிருஷ்டிப்பு, அவற்றின் அழிவு மற்றும் புதிய வானம் மற்றும் பூமி சிருஷ்டிப்பு.
2. அவனுடைய உண்மையான பாவம் சுய விருப்பம் (நான் செய்வேன் என்று ஐந்து முறை கூறுவதைக் கவணியுங்கள்) அவனுடைய முடிவு அக்கினிக் கடல்.

3. அது மறுபடியும் பூரணமாக்கப்படும்.
4. முதல் மனிதன் பாவம் செய்தான். இயேசு செய்யவில்லை.
5. சாத்தானும் அவனுடைய கூட்டமும்தான் உண்மையான எதிரிகள். தேவனுடைய எல்லா ஆயுதங்களையும் தரித்துக் கொண்டு யுத்தம் செய்ய வேண்டும்.
6. எல்லா மனுக்குலமும் ஒரே நேரத்தில் நியாயந்தீர்க்கப்பட்டது.
7. முதலாவது மத சம்பந்தமான வீழ்ச்சி, இரண்டாவது பொருளாதாரம்.
8. புதிய வானங்கள் மற்றும் புதிய பூமியில்.
9. முதல் வருகையை இயேசு கிறிஸ்து பாடுபட்டு மரிக்க, இரண்டாவது வருகையில் அவர் தம்முடைய எதிரிகளை ஜெயிப்பார்.
10. இயேசு கிறிஸ்து எல்லோருக்கும் ஊழியம் செய்ய வந்தார். அந்திகிறிஸ்து தன்னைத்தானே சேவிப்பான்.
11. சகல ஜாதிகளையும் (தேசங்களையும்) சீஷராக்கு.

பகுதி 4
கால அடிப்படையிலான பார்வை

அதிகாரம் 1, பகுதி 4

1. ஆதாமின் வீழ்ச்சி
நோவா காலத்து வெள்ளம்
ஆபிரகாமிற்கு வாக்குத்தத்தம்
இஸ்ரவேன் யாத்திரை
சாலமோனின் நான்காம் வருடம்
வட ராஜ்ஜியத்தின் வீழ்ச்சி
தென் ராஜ்ஜியத்தின் வீழ்ச்சி
இயேசு கிறிஸ்துவின் பிறப்பு
இயேசு கிறிஸ்துவின் மரணம் அடக்கம் மற்றும் உயிர்தெழுதல்
வேதாகமத்தின் இறுதிப்புத்தகம்
2. ஆதியாகமம் மற்றும் யோபு
3. யாத்திராகமம் – லேவியராகமம் – எண்ணாகமம் – உபாகமம் – யோசுவா – நியாயதிபதிகள் – ரூத் – 1 சாமுவேல் – 2 சாமுவேல் – 1 இராஜ்ஜாக்கள் 1-5 – சங்கீதம் – 1 நாளாகமம்
4. 1 இராஜ்ஜாக்கள் 6-22 – 2 இராஜ்ஜாக்கள் – 2 நாளாகமம் – நிதீமொழிகள் – பிரசங்கி – உன்னதப்பாட்டு – ஒபதியா – யோவேல் – யோனா – ஆமோஸ் – ஓசியா – மீகா – ஏசாயா – நாகூம் – செப்பனியா – ஆபகூக்
5. ஏரேமியா – புலம்பல் – ஏசேக்கியேல் – தானியேல் – எஸ்றா – நெகேமியா – சகரியா – ஆகாய் – மல்கியா
6. மத்தேயு – லூக்கா – மாற்கு – யோவான் – அப்போஸ்தலர்
7. யாக்கோபு – கலாத்தியர் – 1 தெசலோனிக்கேயர் – 2 தெசலோனிக்கேயர் – 1 கொரிந்தியர் – 2 கொரிந்தியர் – ரோமர் – பிலமோன் – எபேசியர் – கொலேசேயர் – பிப்பியர் – 1 தீமோத்தேயு – தீத்து – 2 தீமோத்தேயு – எபிரேயர் – 1 பேதுரு – 2 பேதுரு – யூதா – 1 யோவான் – 2 யோவான் – 3 யோவான் – வெளிப்படுத்தல்

பகுதி 5
வேதாகமத்தைப் படிப்பதற்கு ஆயத்தம் செய்தல்

அதிகாரம் 1, பகுதி 5

1. யார் = சிதேக்கியா, நேபுகாத்நேச்சார் மற்றும் அவனுடைய சேனை
என்ன = நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றிக்கையிட்டு நகர மதிலை உடைத்தான்
எப்போது = சிதேக்கியாவின் ஆட்சியின் ஒன்பதாம் வருடம், பத்தாம் மாதம்
எங்கே = எருசலேம்
ஏன் = இவ்வசனங்களில் பதில் இல்லை வேறொரு இடத்தில் உள்ளது (40: 2-3 ஐ பார்க்க)
எப்படி = நேபுகாத்நேச்சாரின் சேனை எருசலேமை முற்றுகையிட்டது
2. முழு இருதயம், ஆத்துமா, சிந்தை மற்றும் பலம்
3. விசுவாசம் மற்றும் ஒருவரிலொருவர் அன்பு

அதிகாரம் 2 மற்றும் 3

2-3 அதிகாரங்களுக்கு பதில்கள் கொடுக்கவில்லை, ஏனெனில் இந்த வசனங்களை விளக்க வித்தியாசமான சரியாக இருக்கக்கூடிய ஏராளமான வழிகள் உண்டு.

அதிகாரம் 4

பகுதி 1
விதி ஒன்று

அதிகாரம் 4, பகுதி 1A

1. இது மாணவன் செய்யவேண்டியது.
2, வசனம் 1 மற்றும் 4இல், "கர்த்தர்" என்ற வார்த்தை அவருடைய ஆளுகையைக் குறிக்கும் அவரின் அதிகாரத்தைக் வெளிப்படுத்துகிறது. வசனம் 4 இல் அவர் சிங்காசனத்திருக்கிறார் என்ற உண்மை அவரின் ராஜரீகத்தின் வெளிப்பாடாகும். வசனம் 7 இல், கர்த்தர் நீதிபரர் என்ற நேரடியான ஒரு அறிவிப்பு உள்ளது. வசனம் 7 இல், அவருடைய நீதியை வெளிப்படுத்தும்படி துன்மார்க்கனை அவர் நியாயந்தீர்க்கிறார். வசனம் 1 இல், அவருடைய அன்பைக் குறிக்கும்படி சங்கீதக்காரன் அடைக்கலம் புகத்தகுந்த கர்த்தராயிருக்கிறார். வசனம் 4 இல், பரலோகத்தில் வைக்கப்பட்டிருத்தல், அவருடைய நித்திய வாழ்வைக் குறிக்கிறது. வசனம் 6 இல், அவர் மழைக்குக் காரணர் என்பது அவருடைய வல்லமையைக் குறிக்கிறது. வசனம் 4 இல், அவர் பரலோகத்தில் இருக்கிறார் மற்றும் மனுபுத்திரரைக் கண்ணோக்குகிறார். அவருடைய எங்கும் நிறைந்த தன்மையைக் காட்டுகிறது. வசனம் 4 மற்றும் 5 இல் அவருடைய கண்கள் மனுஷகுமாரனை க் (மனுஷருக்கான பொதுவான தலைப்பு) கண்ணோக்குகிறது மற்றும் நீதிமானையும் துன்மார்க்கனையும் சோதிக்கிறது என்ற உண்மை உள்ளான மனிதனைப்பற்றிய அவருடைய அறிவு அவருடைய சர்வ ஞானத்தைக் குறிப்பிடுகிறது. வசன ம் 7 இல், "கர்த்தர் நீதிபரராயிருக்கிறார்" என்ற அறிக்கை அவருடைய மாறாத தன்மையை, அவர் மாற்றப்பட முடியாதவர் என்பதைக் குறிக்கிறது. வசனம் 1 இல் கர்த்தரில் தனக்கு அடைக்கலம் கிடைக்கும் என்று கூறுவது அவர்மீது அவனுடைய நம்பிக்கையை அவர் உண்மையுள்ளவர் என்று நம்புவதைக் குறிக்கிறது.

அதிகாரம் 4, பகுதி 1B

1. இயேசு கிறிஸ்து தேவனாயிருக்கிறார். மனிதனானார்.
2. மோசேயின் பிரமாணத்தின் கீழ் பயாக கொடுக்கப்பட்ட காளைகள் மற்றும் ஆடுகளின் இரத்தம் மனிதனுடைய பாவபிரச்சனையைத் தீர்க்கமுடியவில்லை. இயேசு கிறிஸ்துவின் ப மட்டுமே அதைச் செய்ய முடியும். அந்த பகள் இயேசு கிறிஸ்து என்ற நிஜத்தின் நிழலாயிருந்தன.
3. யோனா புறஜாதிகளுக்கு சுவிசேஷத்தைக் கொடுக்கும்படி, தேவனால் அனுப்பப்பட்டான். (நினிவே புறஜாதியாகிய அசீரிய பட்டணமாகும் யோனா 1:2). ஆனால் இயேசு யூதர்களுக்கு மட்டுமல்ல புறஜாதிகளுக்கும் சுவிசேஷத்தை அறிவித்தார். கிறிஸ்து செய்தது போல யோனா மற்றவர்களுக்காகத் தன்னைத் தானே ஒப்புக்கொடுத்தான் (யோனா 1:12). யோனா மூன்று பகலும் இரவும் மீன் வயிற்றில் இருந்தான் (யோனா 1:17). ஆனால் இயேசு மூன்று பகலும் இரவும் பூமியின் வயிற்றிருந்தார். யோனா இயேசு கிறிஸ்துவின் ஊழியம், மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதன் சித்திரமாயிருக்கிறான்.
4. இயேசு பெத்லகேமில் பிறந்தபோது, அவர் தேவனாயிருந்தார், மனிதனானார். (இஸ்ரவேலை ஆளப்போகிறவரின் வருகை குறித்து "அவருடைய புறப்படுதல் அனாதியாய் நித்திய நாட்களாயிருக்கும்" என்று சொல்லப்பட்டுள்ளது. இது தேவனை மட்டுமே குறிக்கிறது மீகா 5:2). வானத்திருந்து இறங்கி வந்த ஜீவ "அப்பம்" என்று இயேசு தன்னைக் கூறினார் (யோவான் 6). "அப்பம்" அப்பத்தின் வீட்டில் பிறந்தது.
5. தேவ சமுகத்தப்ப மேஜை இயேசுவை ஆவிக்குரிய வாழ்க்கையைத் தாங்குபவராக விளக்குகிறது. பொன் குத்து விளக்கானது, இயேசுவை "உலகத்தின் வெளிச்சம்" என்று கூறுகிறது.
6. இயேசு மனுகுலத்தின் பாவங்களுக்காக தன்னையே ஒப்புக்கொடுத்த "தேவ ஆட்டுக்குட்டி" யாயிருக்கிறார்.
7. இது மாணவன் செய்யவேண்டியது.

பகுதி 2
விதி இரண்டு

அதிகாரம் 4, பகுதி 2A

1. a. ஸ்திரீயின் வித்து - ஆதியாகமம் 3:15 மற்றும் மத்தேயு 1:23
   b. ஆபிராகாமின் வித்து - ஆதியாகமம் 12:3 மற்றும் மத்தேயு 1:1
   c. ஈசாக்கின் வித்து - ஆதியாகமம் 21:12 மற்றும் மத்தேயு 1:2
   d. யாக்கோபின் வித்து - ஆதியாகமம்35:10-12 மற்றும் மத்தேயு 1:2
   e. யூதாவின் வித்து - ஆதியாகமம் 49:8-11 மற்றும் மத்தேயு 1:2
   f. ஈசாயின் வம்சம் - ஏசாயா 11:1 மற்றும் மத்தேயு 1:5-6
   g. தாவீதின் வீடு - 2 சாமுவேல் 7:12-16 மற்றும் மத்தேயு 1:6
   h. பெத்லகேமில் பிறந்தவர் - மீகா 5:2 மற்றும் மத்தேயு 2:1
   i. தேவனும் மனிதனும் - சங்கீதம் 110:1 மற்றும் யோவான் 1:1, 14
   j. இம்மானுவேலென்று அழைக்கப்பட்டவர் - ஏசாயா 7:14 மற்றும் மத்தேயு 1:23

k. தீர்க்கத்தரிசி - உபாகமம் 18:18 மற்றும் யோவான் 7:40
l. ஆசாரியன் - சங்கீதம் 110:4 மற்றும் எபிரேயர் 5:9-10
m. நியாதிபதி - ஏசாயா 33:22 மற்றும் யோவான் 5:22
n. ராஜா - எரேமியா 23:5 மற்றும் வெளிப்படுத்தல் 19:16
o. பரிசுத்த ஆவியானவரின் விசேஷ அபிஷேகம் - ஏசாயா 11:2 மற்றும் மத்தேயு 3:16
p. தேவனுடைய வீட்டிற்காக வைராக்கியம் - சங்கீதம் 69:9 மற்றும் யோவான் 2:17

2. மேசியாவைப்பற்றிய தீர்க்கத்தரிசனங்களை இயேசு நிறைவேற்றினார்

அதிகாரம் 4, பகுதி 2B

1. a. ரோமர் 8:35-39 நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு ஒன்றும் நம்மைப் பிரிக்காது.
   b. யோவான் 3:16 தேவனுடைய ஒரே குமாரனை விசுவாசிப்பவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு.
   c. யோவான் 3:18 தேவனுடைய ஒரே குமாரனை விசுவாசிக்காதவர்கள் ஏற்கனவே நியாயந்தீர்க்கப்பட்டாயிற்று.
   d. யோவான் 3:36 குமாரனில் விசுவாசமாயிருப்பவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. விசுவாசியாதவர்கள் தேவ கோபத்தை சந்திக்கிறார்கள்.
   e. எபேசியர் 2:8-10. விசுவாசி பின்பு நற்கிரியைகள் செய்யும்படி இரட்சிப்பு விசுவாசத்தின் மூலமாக கிருபையினால் வருகிறது.
   f. 1 யோவான் 2:1-2. ஒரு விசுவாசி பாவஞ்செய்யும் போது முழு உலகத்தின் பாவங்களுக்காக கிரயம் செலுத்திய இயேசுவே பரிந்து பேசுபவராயிருக்கிறார்.
   g. தீத்து 3:5 நாம் நம்முடைய நற்கரியைகளால் இரட்சிக்கப்படவில்லை.
2. உள்ளேயே பார்.

அதிகாரம் 4, பகுதி 2C

1. a. மற்றவர்களை ஆசீர்வதிக்கும்படி ஆபிரகாமிற்கு தேசம், மனிதனுடைய அங்கீகாரம் மற்றும் ஆசீர்வாதம் வாக்களிக்கப்பட்டது.
   b. ஆபிராமை ஆசீர்வதிப்பவர்களை ஆசீர்வதிப்பதாக தேவன் வாக்களிக்கிறார்.
   c. பூமியிலுள்ள எல்லோரையும் ஆசீர்வதிக்க தேவன் வாக்களிக்கிறார்.
2. a. தேவன் காட்டும் தேசத்திற்கு போக உன் தேசத்தை விடு
   b. உன் சொந்தங்களை விடு
   c. உன் தகப்பனுடைய வீட்டை விடு
3. ஏனெனில் அவனுடைய தகப்பனாகிய ஆபிரகாம் தேவனுக்கு கீழ்ப்படிந்தான்
4. ஏனெனில் அவன் அவரை விசுவாசித்தான்
5. இல்லை
6. இல்லை
7. ஆம், இயேசு கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தின்மூலம் (கலாத்தியர் 3:26)

அதிகாரம் 4, பகுதி 2D

1. a. 15:1-11 கிறிஸ்துவில் உயிர்தெழுதல் இரட்சிப்பின் சுவிசேஷத்திற்கு மையமாயிருக்கிறது
   b. 15:12-19 நம்முடைய இரட்சிப்பிற்கு எழுத்தின்படியான உயிர்தெழுதல் அவசியமாயிருக்கிறது
   c. 15:20-28 விசுவாசிகளின் உயிர்தெழுதல் படிப்படியாக வரும்
   d. 15:29-34 உயிர்தெழுதல் சுயநல நோக்கங்களுக்கு கொடுக்கப்படும் உரிமையில்லை
   e. 15:35-49 உயிர்தெழுதல் இயற்கையினால் கற்பிக்கப்படுகிறது.
   f. 15:50-58 உயிர்தெழுதல் சீக்கிரம் ஏற்படும்
2. (1) வேத வாக்கியம் நிறைவேறும்படி இயேசு மரித்தார், (2) அடக்கம்பண்ணப்பட்டார், (3) மூன்றாம் நாளில் மரித்தோரிருந்து எழுந்தார் மற்றும் (4) தம்முடைய சீஷர்களுக்கு தோன்றினார் என்று விசுவாசிக்க

அதிகாரம் 4, பகுதி 2E

1. குமாரனை விசுவாசி
2. குமாரனை விசுவாசி
3. ஆம்
4. அவர்களுக்கு தெரிந்துகொள்ளும் திறமை அதாவது சுயாதீனம் இருந்தது.
5. கட்டளையை நிறைவேற்றுவதா இல்லையா என்பதை மனிதன் தீர்மானிக்கவேண்டும், இவ்வாறாக மறுபடியும் சுயாதீனம் நிரூபிக்கப்படுகிறது.

அதிகாரம் 4, பகுதி 2F

1. a. ஏதேன் உடன்படிக்கை
   b. மோசேயின் உடன்படிக்கை
   c. பாலஸ்தீன உடன்படிக்கை
2. a. ஆதாம் உடன்படிக்கை
   b. நோவாவின் உடன்படிக்கை

c. ஆபிரகாம் உடன்படிக்கை
d. தாவிதீன் உடன்படிக்கை
e. இஸ்ரவேலுக்கு புதிய உடன்படிக்கை
f. சபைக்கு புதிய உடன்படிக்கை

3. வித்தியாசமான விளக்கங்கள் கொடுக்கலாம்.

பகுதி 3
விதி மூன்று

அதிகாரம் 4, பகுதி 3A

1. அவர் கிருபை
2. விசுவாசம்
3. நற்கிரியைகள்
4. இல்லை
5. ஆம், யோவான் உபயோகிக்கும் "நாங்கள்" என்ற வார்த்தையில் அவரும் இருக்கிறார்
6. அவைகளை அறிக்கையிடு
7. தேவன்
8. (1) தேவனுக்கு துதி மற்றும் (2) பகிருதல்
9. (1) மனதுருக்கத்தை தரித்துக்கொள்ளுங்கள், (2) இரக்கம், (3) தாழ்மை, (4) சாந்தம், (5) பொறுமை, (6) ஒருவரையொருவர் தாங்குதல், (7) ஒருவருக்கொருவர் மன்னித்தல், (8) அன்பைத் தரித்துக்கொள்ளுதல், (9) கிறிஸ்துவின் வார்த்தை உங்களுக்குள் வாசமாயிருக்கட்டும், (10) ஒருவருக்கொருவர் போதித்தல், (11) ஒருவரையொருவர் எச்சரித்தல், (12) நன்றியோடு பாடுதல் மற்றும் (13) எல்லாவற்றையும் கர்த்தருடைய நாமத்தில் செய்தல்
10. ஈடுசெய்தல்

அதிகாரம் 4, பகுதி 3B

1. உறுதியாக நில்லுங்கள், அடிமைத்தன நுகமாகிய சட்டத்திட்டங்களுடன் ஈடுபடாதிருங்கள்
2. ஒருவரையொருவர் சேவித்தல்
3. எல்லாவற்றையும் தேவ மகிமைக்காக செய்வதன்மூலம்
4. விடுதலை
5. விடுதலையின் பிரமாணம்
6. விடுதலையின் பிரமாணத்தால் தீர்க்கப்படுபவரைப் போல
7. தேவ ஊழியர்களைப் போல
8. அவர்கள் விடுதலையை வாக்குப்பண்ணுகிறார்கள், ஆனால் அவர்களே அடிமைப்பட்டிருக்கிறார்கள்
9. விடுதலை ஒருவருக்கொருவர் சேவைசெய்ய உபயோகப்படுத்தப்படும் (கலாத்தியர் 5:13; 1 பேதுரு 2:16) மற்றும் எல்லாம் தேவமகிமைக்காக செய்யவேண்டும் (1 கொரிந்தியர் 10:28–31). விடுதலைப் பரிசுத்த ஆவியினால் பெலப்படுத்தப்படுகிறது (2 கொரிந்தியர் 3:17). அது ஒரு பிரமாணம் (யாக்கோபு 1:25). அதற்காக நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் (யாக்கோபு 2:12). கள்ள போதகர்கள் அதை வாக்குப்பண்ணுகிறார்கள் ஆனால் அது பொய் (2 பேதுரு 2:1, 17–19)

அதிகாரம் 4, பகுதி 3C

1. இயேசு கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தால்
2. விசுவாசத்தின்மூலம் கிருபையால்
3. நற்கிரியைகள்
4. அது பயனற்றது (2:20) மற்றும் செத்தது (2:26)
5. இல்லை
6. ஆம்
7. "யாராவது" என்பது எந்த மனிதனையும் குறிக்கும்
8. இல்லை
9. இயேசு கிறிஸ்துவில் உள்ள விசுவாசம் "இரட்சித்து" தேவனுக்கு முன்பாக "நீதிமானாக்குகிறது." கிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தின் விளைவாக ஏற்படும் நற்கிரியைகள் மற்ற மனிதர்களால் பார்க்கப்படுகிறது. இவ்வாறாக, பலவீனமான சாட்சியாயிருப்பதிருந்து "இரட்சிக்கப்பட்டு" மனிதனுடைய கண்களுக்கு முன்பாக "நீதிமானாக்கப்பட்டு" நற்சாட்சி வருகிறது.

அதிகாரம் 4, பகுதி 3D

1. ஆம்
2. அதை இழக்கமுடியாது
3. பாவத்திருப்பவர்கள் தேவராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டார்கள்
4. ஆம்

5. இயேசு கிறிஸ்துவில் விசுவாசம் வைத்தபோது விசுவாசியின் இரட்சிப்பு உறுதியாகிறது. நற்கிரியை செய்யும் விசுவாசிகளுக்கு விதவிதமான பலன்களுண்டு. நற்கிரியைகளுக்குப் பதிலாக ஒரு விசுவாசி பாவத்தில் நீடித்தால், ''சுதந்திரம்'' அல்லது ''பலன்களை'' இழப்பார்.
6. கர்த்தருக்காக அன்பினால் மரணம் வரை சோதனையில் உண்மையாயிரு
7. உங்கள் அதிகாரத்திற்குக் கீழ் உள்ளவர்களை போஷித்து, நேர்மையாகவும், தாழ்மையாகவும் மாதிரியாக நடந்துகொள்ளுங்கள்.
8. இயேசுவின் வெளிப்படுதலை விரும்புங்கள்

அதிகாரம் 4, பகுதி 3E

1. சட்டம்
2. குடும்ப தலைவர்கள்
3. அவர்களுடைய இருதயங்களில் எழுதப்பட்டவைகள்
4. லேவி கோத்திரத்தைச் சேர்ந்த ஆரோனும், அவன் குமாரர்களும்
5. பிரமாணம் மோசே மூலம் தேவனால் கொடுக்கப்பட்டது
6. விசுவாசிகளாயிருப்பவர்கள் (''பிதாவாகிய தேவனுடைய முன்னறிவிப்பின்படியும், ஆவியின் பரிசுத்தமாக்கும் செயலாலும், அவருடைய இரத்தத்தினால் தெளிக்கப்பட்டவர்களாய் நீங்கள் இயேசு கிறிஸ்துவிற்கு கீழ்ப்படியத்தக்கதாக தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்'')
7. அன்பின் பிரமாணம்
8. லேவி கோத்திரத்தைச் சேர்ந்த சாதோக்கின் குமாரர்கள்
9. கர்த்தராலே உறுதிப்படுத்தப்பட்ட பிரமாணம்
10. அது பயின் தோற்றம் மற்றும் முறையிலுள்ள வித்தியாசம்

அதிகாரம் 4, பகுதி 3F

1. அது மிக உறுதியானது
2. இது தனிப்பட்ட வியாக்கியான காரியமல்ல
3. பரிசுத்த ஆவியானவர் மனிதர்களை அசைத்தார்
4. மேசியா (1) தரித்திரருக்கு சுவிசேஷம் அறிவிக்க, (2) கட்டுண்டவஞகளுக்கு விடுதலையும், (3) குருடர்களுக்கு பார்வையையும் பிரசித்தப்படுத். (4) சிறைப்பட்டவர்களை விடுதலையாக்க மற்றும் (5) கர்த்தருடைய அனுக்கிரக வருஷத்தைப் பிரசத்தப்படுத்த வரவேண்டும் என்ற வேத வார்த்தை (ஏசாயா) நிறைவேறியது
5. ஆம்
6. ஆம்
7. இல்லை
8. இல்லை
9. இல்லை
10. 1 தெசலோனிக்கேயரில் உள்ள பகுதி ''இரகசிய வருகையை'' சபை மத்திய ஆகாயத்தில் கிறிஸ்துவிடம் எடுத்துக் கொள்ளப்படுவதை குறிக்கிறது. சகரியாவில் உள்ள பகுதி கர்த்தரின் இரண்டாம் வருகையில் பூமிக்கு வருவதைக் குறிக்கிறது. இரண்டும் வெவ்வேறு சம்பவங்கள்.
11. (1) யூத கோத்திரத்து சிங்கம், (2) தாவீதின் வேர் மற்றும் (3) ஆட்டுக்குட்டி

பகுதி 4
விதி நான்கு

அதிகாரம் 4, பகுதி 4A

1. (1) குற்றஞ்சாட்டப்படாதவன், (2) ஒரு மனைவியுடையவன், (3) ஆத்திரப்படாதவன், (4) நிதானமானவன், (5) மரியாதைக்குரியவன், (6) உபசரிப்பவன், (7) போதக சமர்த்தன், (8) மதுபானத்திற்கு அடிமையாகாதவன், (9) சண்டைப்பண்ணாதவன், (10) சாந்தமுள்ளவன், (11) போட்டியில்லாதவன், (12) பண ஆசையில்லாதவன், (13) குடும்பத்தை நன்ற ாய் நடத்துபவன், (14) குழந்தைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவன், (15) நூதன சீஷன் அல்ல, (16) சபைக்கு வெளியே நல்ல மரியாதை உள்ளவன்
2. இந்தப் பதில் ஒருவருக்கு ஒருவர் வேறுபடும்

அதிகாரம் 4, பகுதி 4B

1. ஞானம்
2. வசனத்தைப் படிப்பதில் உறுதி
3. கண்காணி குற்றஞ்சாட்டப்படாதவனாயிருக்க வேண்டும்.

4. ஆம்
5. பதில் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.
6. பதில் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.
7. பதில் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.

அதிகாரம் 4, பகுதி 4C

1. பொறாமை மற்றும் சண்டை
2. மாம்சத்தின் கிரியைகள்
3. தேவனிடமிருந்து சத்தியத்தைத் தேடாமல் வேத பகுதிகளை தங்களுடைய சொந்த கருத்தை நிரூபிப்பதற்கு முயற்சி செய்யலாம்
4. நம்முடைய சொந்தப் புரிந்துகொள்ளுதல், ஏனெனில் அறிவு மட்டுமே ஒருவனை சர்வமுள்ளவனாக்கும்
5. ஆம்
6. இல்லை, ஏனெனில் இதில் பாகுபாடு உள்ளது
7. உறுதி
8. சுய மதிப்பீடு மற்றும் பாவ அறிக்கை
9. ஞானம்
10. பார்க்கும் பகுதியினுடைய பின்னணியை ஞாபகத்தில் வைக்கவேண்டும்
11. வேதாகமம் முழுவதும் தேவனுடைய வார்த்தை
12. தேவனுடைய நினைவுகள் மனிதனுடைய நினைவுகளைவிட பெரியவை
13. பொறாமை, சுய நோக்கம் மற்றும் கர்வம்

அதிகாரம் 5

பகுதி 1
திரித்துவம்

அதிகாரம் 5, பகுதி 1

1. ஒன்று
2. பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவர்
3. அவர் திட்டமிடுகிறார்
4. பிதாவின் கிரியைகளைச் செய்யுங்கள்
5. குமாரனை வெளிப்படுத்த
6. ஒவ்வொருவரும் அதே குணாதிசயங்களை உடையவர்கள் என்று வேதத்திருந்து காட்ட
7. ஆம்
8. ஆம்
9. ஆம்
10. ஆம்
11. ஆம்
12. ஆம்
13. ஆம்
14. ஆம்
15. ஆம்
16. ஆம்

பகுதி 2
தேவனின் நாமங்கள்

அதிகாரம் 5, பகுதி 2

1. a. தேவன் = ஏலோஹிம் (3)
   b. சர்வ வல்லமையுள்ள தேவன் = எல்ஷடாய் (5)
   c. உன்னத தேவன் = எல் எயோன் (8)
   d. நித்திய தேவன் = எல் ஓலாம் (7)
   e. கர்த்தர் = யாவே (9)

f. கர்த்தர் கொடுப்பார் = யாவே ஜைரே (10)
g. கர்த்தர் என் கொடி = யாவே நிசி (2)
h. கர்த்தரே சமாதானம் = யாவே ஷாலோம் (6)
i. சேனைகளின் கர்த்தர் = யாவே சாபோத் (1)
j. கர்த்தர், எஜமான், உரிமையாளர் = அடோனாய் (4)

2. a. தேவன் = தியோஸ் (3)
b. கர்த்தர் = குரியோஸ் (1)
c. எஜமான் = டெஸ்போடெஸ் (2)

பகுதி 3
பிதாவாகிய தேவன் (Paterology)

அதிகாரம் 5, பகுதி 3

1. தனிப்பட்ட
2. குழுவான
3. a. ராஜரீகம்: "மகிமையின் பிதா" – "உன்னத தேவன்" – "மகிமையின் தேவன்" – "தேவாதி தேவன்" – "சமாதான த்தின் தேவன்" – "உன்னத தேவன்" – "பெரிய பயப்படத்தக்க தேவன்" – "எல்லா தேவர்களிலும் பெரிய ராஜா" – "மகிமையின் ராஜா" – "சர்வ வல்ல கர்த்தராகிய தேவன்" – "சமாதானம்" – "கர்த்தராகிய உன்னதமான தேவன்" – "நம்முடைய தேவனாகிய கர்த்தர்" – "கெம்பீர மகிமை" – "உன்னதத்தில் மாட்சிமை" – "மாட்சிமை நிறைந்தவர்" – "மிகவும் பெரியவர்" – "என் பாடல்" – "உண்மை தேவன்"
b. நீதி: "பரிசுத்தமுள்ளவர்" – "வைராக்கிய வாஞ்சையுள்ள தேவன்"
c. நியாயம்: "உண்மையின் தேவன்...அநியாயமில்லாதவர்" – "பயப்படத்தக்கவர்"
d. அன்பு: "உண்மை தேவன்" – "இரக்கங்களின் பிதா" – "வைராக்கியமானவர்" "அன்பு" – "அன்பிரக்கம்"
e. நித்திய ஜீவன்: "அநாதி தேவன்" – "சதா காலமுள்ள தேவன்" – "ஜீவனுள்ளோரின் தேவன்" – "ஜீவிக்கும் உண்மை தேவன்"
f. சர்வ வல்லமை: "சர்வ வல்லவர்" – "வல்லமையும் பராக்கிரமமுள்ள தேவன்" – "சர்வ வல்ல கர்த்தராகிய தேவன்"
g. எங்கும் நிறைந்தவர்: எங்கும் உள்ளவர்
h. ஞானம் நிறைந்தவர்: "ஒரே ஞானமுள்ள தேவன்"
i. மாற்றப்பட முடியாதவர் – "ஒரே பூரண தேவன்" – "பரிபூரணர்"
j. உண்மை: "உண்மை தேவன்"
4. a. அதிகாரம்: "நித்திய ராஜா" – "பூமியின் ராஜ்ஜியங்களுக்கு மேலான தேவன்" – "தீங்குக்கு மனஸ்தாபப்படும் தேவன்" – "பரலோக ராஜா" – "கர்த்தர்" – "எல்லா பூமிக்கும் ஆண்டவர்" – "வானத்திற்கும் பூமிக்கும் கர்த்தர்" – "ராஜ ாக்களின் கர்த்தர்" – "நம்முடைய நியாயப்பிரமாணிகர்" – "வானத்தையும் பூமியையும் உடையவர்"
b. சிருஷ்டிகர்: "கட்டிடக் கலைஞர்" – "கட்டுபவர்" – "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவுமானவர்" – "என்னை உருவாக்கிய தேவன்" – "மாம்சமான யாவருக்கும் தேவன்" – "அவர்கள் எல்லாருடைய இருதயத்தையும் திருப்புபவர்" – "நம்மை உருவாக்கிய ஆண்டவர்" – "உங்களை சிருஷ்டித்தவர்" – "எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர்" – "குயவன்"
c. தற்காப்பவர் மற்றும் பாதுகாப்பவர்: "திக்கற்றவர்களை தற்காப்பவர்" – "தகப்பனற்றவர்களின் தகப்பன்" – "திரும்பக் கொடுக்கும் தேவன்" – "எனக்காக பவாங்கும் தேவன்" – "விதவைகளின் நியாதிபதி" – "நம்முடைய கேடகமாகிய கர்த்தர்" – "என் வழக்குரைஞர்" – "என் மறைவிடம்" – "தீங்கு நாளில் என் அடைக்கலம்" – "நம்முடைய அடைக்கலமும் பெலனும்" – "தம்முடைய ஜனங்களுக்கு அடைக்கலம்" – "புகடம்" – "பாதுகாக்கும் காப்பாளர்" – "ஒடுக்கப்பட்டவர்களின் கோட்டை" – "ஆபத்துக் காலத்தில் அரணான கோட்டை" – "தக்க சமயத்தில் உதவுபவர்"
d. உதாரணம்: "பரிசுத்த பிதா" – "பரலோக எஜமான்" – "நீதியுள்ள பிதா"
e. கொடுப்பவர்: "வெளிச்சங்களின் பிதா" – "ஆவிகளின் பிதா" – "ஜீவ தண்ணீரூற்று" – "ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவன்" – "சகல ஆறுதன் தேவன்" – "என் இரட்சிப்பின் தேவன்" – "நம்முடைய பெலனாகிய தேவன்" – "பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன்" – "இயேசுவை மரித்தோரிருந்து எழுப்பியவர்" – "உங்கள் மீறுதல்களைத் துடைக்கிற தேவன்" – "நம்முடைய மீட்பர்" – "என் இருதயத்தின் பெலன்"
f. நியாதிபதி: "முழு பூமியின் நியாதிபதி" – "காற்று விசச் செய்யும் கர்த்தர்" – "நம் நீதிபதி" – "நீதியுள்ள நியாதிபதி"
g. தலைவர்: "என் வெளிச்சம்" – "ஒரு ஆசிரியர்"
h. அன்பர்: "உன் கணவர் (நாயகர்)" – "ஜீவனுள்ள பிதா" – "உன் மீட்பர்" – "ஜெபத்தைக் கேட்பவர்" – "உடன்படிக்கையையும் கிருபையையும் காப்பவர்" – "மனதுருக்கமும் கிருபையும் உள்ள தேவன்"
i. உருவாக்குபவர் மற்றும் கொடுப்பவர்: "திராட்சத் தோட்டக்காரர்" – "நாம் நினைப்பதற்கும் வேண்டிக்கொள்வதற்கும் மிகவும் அதிகமாய் செய்ய வல்லவர்" – "இரக்கங்களின் பிதா" – "மன்னிப்பின் பிதா" – "என் பெலனாகிய தேவன்" – "நம்முடைய பிதாவாகிய தேவன்" – "பிதாவாகிய தேவன்" – "மனிதனுக்கு அவனுடைய நினைவுகளை வெளிப்படுத்துபவர்" – "தேவைகளைச் சந்திக்கும் தேவன்" – "உங்களை பரிசுத்தமாக்கும் கர்த்தர்" – "பெலன்"
j. நிலைநிறுத்துபவர் மற்றும் தாங்குபவர்: "இஸ்ரவேன் மகிமை" – "என் கன்மலையாகிய தேவன்" – "நம்பிக்கையின் தேவன்" – "அன்பு மற்றும் சமாதானத்தின் தேவன்" – "மாம்சமான யாவருடைய ஆவிகளின் தேவன்" – "காண்கிற தேவன்" –"திக்கற்றவர்களின் சகாயர்" – "உங்களை ஆறுதல்படுத்துபவர்" – "உங்கள் நடுவிருக்கும் பரிசுத்தர்" – "என் கொடியாகிய கர்த்தர்" – "பரிகாரியாகிய கர்த்தர்" – "என் உறுதி" – "என் சகாயர்" – "என் நம்பிக்கை" – "என் உதவி" – "நாம் தங்குமிடம்" – "நான் அடைக்கலம் புகும் பாறை" – "நம் இரட்சிப்பின் பாறை" – "வெயிலுக்கு ஒதுங்கும் நிழல்" – "என் இரட்சிப்பின் பெலன்" – "என் ஆத்துமாவைத் தாங்குபவர்"

பகுதி 4
குமாரனாகிய தேவன் (Christology)

அதிகாரம் 5, பகுதி 4

1. அவர் மாம்சமாவதற்கு முன்பே உள்ளார்.
2. மேசியா தேவனும் மனிதனுமாயிருக்கிறார்.
3. அவர் பாவமற்றவர்.
4. மேசியாவே தேவன் (9:6) கன்னியிடத்தில் பிறப்பார் (7:14) ஈசாயின் வம்சத்தில் (11:1) அவருடைய மனிததோற்றம் தன்னில் தானே கவர்ச்சியாயிராது.
5. a. நமக்குப் பதிலாக நமக்காக சாபமானார்
   b. நம்மை மீட்டார்
   c. நம்மை தேவனுள் ஒப்புரவாக்கினார்
   d. பிதாவின் நீதியையும் நியாயத்தையும் திருப்திப்படுத்தினார்
6. a. அவர் உண்மையிலே மரித்தார், தூங்கிக்கொண்டோ மயக்க நிலையிலோ இல்லை. அவர் கல்லறையில் வைக்கப்பட்டார். யூதர்கள் காவலர்களைக் கொண்டு வாயிலைக் காத்தார்கள்
   b. அவர் சரீரத்தைச் சுற்றியிருந்த சீலை களையாமல் இருந்தது. அவருடைய சரீரம் தன்னைத்தானே வெளியே இழுத்துக் கொண்டதைக் காட்டுகிறது
   c. உயிர்தெழுந்த இயேசுவுக்கு அநேக நேரடி சாட்சிகள் இருந்தார்கள்
   d. கிறிஸ்துவின் உயிர்தெழுதல் சுவிசேஷத்தின் முக்கிய பகுதியாகும்
7. அவர் பிதாவின் வலதுபாரிசத்திற்கு சென்றார்
8. a. பரிந்து பேசுபவராக செயல்படுகிறார்
   b. நம்முடைய வழக்குறைஞராயிருக்கிறார்
   c. நடுவராயிருக்கிறார்
   d. நம்முடைய பிரதான ஆசாரியன்
9. தலைவர்
10. நல்லவர் (யோவான் 10: 1), பெரியவர் (எபிரேயர் 13: 20) மற்றும் தலைவர் (1 பேதுரு 5: 4)
11. a. முன்பே இருந்தவர்: “அல்பாவும் ஓமெகாவும்” – “நம்முடைய விசுவாசத்தைத் துவக்குபவரும் நிறைவுசெய்பவரும்” – “இரட்சிப்பின் அதிபதி” – “ஆதியும் அந்தமுமானவர்” – “தாம் ஒருவரே ஸ்தோத்திரிக்கப்பட்ட ராஜா” – “நித்திய பிதா” – “நித்திய ஜீவன்” – “முதலும் முடிவுமானவர்” – “எல்லா சிருஷ்டிக்கும் முதல் பிறந்தவர்” – “உங்கள் சிருஷ்டிகர்”
    b. தேவன் – மனிதன் ஒற்றுமை: “தேவனுடைய சிருஷ்டிக்கு ஆரம்பம்” – “கர்த்தரின் கிளை“ – “தேவனுடைய கிறிஸ்து” – “அவருடைய தன்மையின் சொரூபம்” – “காணக்கூடாத தேவனின் தன்மை” – “இம்மானுவேல்” – “பரலோகத்திருந்து வந்தவர்” – “வல்லமையுள்ள தேவன்” – “பிதாவுடனிருப்பவர்” – “நம்முடைய இரட்சகர் ஒரே தேவன்” – “நம்முடைய தேவனும் இரட்சகருமானவர்” – “அவருடைய மகிமையின் பிரகாசம்” – “ஜீவனுள்ள தேவனுடைய குமாரன்” – “உன்னதமான தேவனுடைய குமாரன்”
    c. அவருடைய பூரணம்: “ஆமென்” – “பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்” – “தேவனுடைய பரிசுத்தர்” – “சொல் முடியாத ஈவு“ – “மகிமையின் கர்த்தர்” – “எஜமான்” – “நம்முடைய மகிமையின் கர்த்தர்” – “நீதியுள்ள நியாயதிபதி” – “நீதிபரர் – “தேவகுமாரன்” – “உண்மையான அப்பம்” – “உண்மையான வெளிச்சம்” – “உண்மையான திராட்ச செடி” – “சத்தியம்” – “நம்முடைய நீதியும், பரிசுத்தமும், மீட்புமானவர்” – “தேவனுடைய வார்த்தை”
    d. அவருடைய பிறப்பும் வாழ்வும்: “ஜீவ அப்பம்” – “தெரிந்துக் கொள்ளப்பட்ட கல்” – “விலையேறப்பட்ட மூலைக்கல்” – “உண்மையும் சத்தியமுள்ள சாட்சி” – “உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேன் மகிமை” – “அவருடைய ஒரே பேரான குமாரன்” – “பரிசுத்த ஊழியர்” – “நசரேயனாகிய இயேசு” – “கடைசி ஆதாம்” – “ஜீவனுள்ளவர்” – “உங்களுக்கு தேவனால் உறுதிப்படுத்தப்பட்டவர்” – “துக்கமுள்ள மனிதர்” – “நசரேயன்” – “தாவீதின் சந்ததி” – “பிதாவின் ஒரேபேரானவர்” – “தாவீதின் வேர்” – “ஏற்ற வேளையில் விளங்கிய சாட்சி”
    e. அவருடைய மரணம்: “சுகந்த வாசனை” – “நம்மை நேசித்து நம்முடைய பாவங்களிருந்து விடுவித்தவர்” – “இரட்சணிய கொம்பு” – “தேவ ஆட்டுக்குட்டி நம்முடைய பஸ்கா” – “எல்லாருடைய மீட்பின் கிரயம்”
    f. அவருடைய உயிர்த்தெழுதல்: “உண்மையுள்ள சாட்சி” – “மரித்தோரிருந்து முதற்பிறந்தவர்” –”நித்திரையடைந்தவர்களில் முதற்பலன்” – “உயிர்த்தெழுதலும் ஜீவனும்”
    g. அவருடைய பரமேறுதலும் காலமும்: “வழக்குரைஞர்” – “சர்வ பூமியின் ஆண்டவர்” – “எல்லாவற்றிற்கும் மேலான தேவன்” – “நல்ல மேய்ப்பன்” – “மகா பிரதான ஆசாரியன்” – “எல்லாவற்றிற்கும் சுதந்திரவாளி”
    h. அவருடைய ஊழியம்: “அபிஷேம் செய்யப்பட்டவர்” – “அப்போஸ்தலர்” – “தேவ அப்பம்” – “மணவாளன் – “அதிகாலை விடிவெள்ளி நட்சத்திரம்” – “பிரதான மேய்ப்பர்” – “என் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து” – “நம் நம்பிக்கையாகிய கிறிஸ்து இயேசு” – “சேனையதிபதி” – “இஸ்ரவேன் ஆறுதல்” – “ஜனங்களுக்கு உடன்படிக்கை” – “வாசல்” – “நித்திய கன்மலை” – “பாவிகளுக்கும் ஆயக்காரர்களுக்கும் சிநேகிதர்” – “பெரிய வெளிச்சம்” – “பெரிய மேய்ப்பர்” – “மேலான உடன்படிக்கைக்கு

அச்சாரம்'' – ''உங்கள் ஆத்துமாவின் காவலர்'' – ''புறஜாதிகளை ஆளும்படி எழுப்புபவர்'' – ''பரிசுத்தமாக்குபவர் – ''சிந்தைகளையும் இருதயங்களையும் அறிந்தவர்'' – ''சரீரத்திற்குத் தலை'' – ''சபையின் தலைவர்'' – ''எல்லா அதிகாரங்களுக்கும் வல்லமைகளுக்கும் மேலானவர்'' – ''பிரதான ஆசாரியன்'' – ''இஸ்ரவேன் நம்பிக்கை'' –''ஜீவனுள்ளோருக்கும் மரித்தோருக்கும் நியாயதிபதி'' – ''ராஜாதி ராஜா'' – ''ஜாதிகளின் ராஜா'' – ''ஜீவன்'' – ''உயிர்ப்பிக்கும் ஆவி'' – ''புறஜாதிகளுக்கு வெளிச்சம்'' – ''ஜீவ வெளிச்சம்'' – ''மனிதர்களுடைய வெளிச்சம்'' – ''உலகத்தின் ஒளி'' – ''ஜீவனுள்ள கல்'' – ''கர்த்தர்'' – ''கர்த்தரும் ரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து'' – ''கர்த்தாதி கர்த்தர்'' – ''சமாதான கர்த்தர்'' – ''அறுவடையின் ஆண்டவர்'' – ''ஓய்வு நாளின் கர்த்தர்'' – ''நம்முடைய நீதியாகிய கர்த்தர்'' – ''புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தர்'' – ''இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியன்'' – ''உடன்படிக்கையின் தூதன்'' – ''மேசியா'' – ''காலை நட்சத்திரம்'' – ''நம்முடைய ஜீவன்'' – ''நம் கர்த்தர்'' – ''நம்முடைய ஒரே எஜமான ாகிய கர்த்தர்'' – ''நம்முடைய சமாதானம்'' – ''நம்முடைய இரட்சகர்'' – ''பரிகாரி'' – ''ராஜாவும் இரட்சகரும்'' – ''ஜீவாதிபதி'' – ''சமாதான ராஜா'' – ''ராஜாதி ராஜா'' – ''தீர்க்கதரிசி'' – ''நம்முடைய பாவங்களுக்கான விலை'' – ''சுத்திகரிப்பவர்'' – ''பூமியின் ராஜாக்களுக்கெல்லாம் அதிபதி'' – ''உலகின் இரட்சகர்'' – ''மேய்ப்பர்'' – ''உங்கள் ஆத்துமாக்களின் மேய்ப்பர்'' – ''ஜனங்களுக்கு அடையாளம்'' – ''நித்திய இரட்சிப்பின் ஊற்று'' – ''உங்கள் வருஷங்களின் உறுதி'' – ''கல்'' – ''கட்டுபவர்களால் தள்ளப்பட்ட கல்'' – ''போதகர்'' – ''சோதிக்கப்பட்ட கல்'' – ''வழி'' – ''இரட்சிப்பின் ஐசுவரியம்'' – ''ஞானம்'' – ''தேவனாலே நமக்கு ஞானமானவர்'' – ''ஜனங்களுக்கு சாட்சி'' – ''அதிசயமான ஆலோசகர்'' – ''வார்த்தை'' – ''ஜீவ வார்த்தை'' – ''உங்கள் நாயகர்'' – ''உங்கள் மீட்பர்'' – ''உங்கள் இரட்சிப்பு''

பகுதி 5
பரிசுத்த ஆவி (Pneumatology)

அதிகாரம் 5, பகுதி 5

1. அறிவு, உணர்வு மற்றும் சித்தம்
   a. அவருக்கு அறிவு உள்ளது
   b. அவருக்கு உணர்வு உள்ளது
   c. அவருக்கு சித்தம் உள்ளது
2. a. மனுக்குலத்தை சிருஷ்டித்ததில் அவருக்குப் பங்குண்டு
   b. மனுக்குலத்தை வெளிப்படுத்துவதில் அவருக்குப் பங்குண்டு
   c. நம்முடையப் புரிந்துக்கொள்ளுதல் அவருக்குப் பங்குண்டு
   d. வேதத்தை வெளிப்படுத்துதல் அவருக்குப் பங்குண்டு
   e. அற்புதங்களில் அவருக்குப் பங்குண்டு
   f. இயேசு கிறிஸ்துவின் கன்னிப்பிறப்பில் அவருக்குப் பங்குண்டு
   g. அவர் பாவத்தைக் குறித்து உலகத்தை கடிந்துகொள்வார்
   h. ஒருவன் இரட்சிக்கப்படும்போது, அவன் மறு உற்பத்தி செய்கிறான்
   i. அவர் விசுவாசியை ஸ்நானப்படுத்துகிறார்
   j. அவர் நம்மை முத்தரிக்கிறார்
   k. விசுவாசிகளுக்குள் வாசம் செய்கிறார்
   l. விசுவாசிகளை நிரப்புவார்
   m. ஜெபத்திற்கு அவர் அவசியம்
   n. நிச்சயமளிக்கிறார்
   o. நமக்காக பரிந்து பேசுகிறார்
   p. நமக்கு வரங்களைக் கொடுகிறார்
   q. போதிக்கிறார்
   r. நம்மூலம் கனிகள் ஏற்படுத்துகிறார்
   s. நம்மில் சந்தோஷம் உண்டாக்குகிறார்
   t. விசுவாசிக்கு அன்பையும் நம்பிக்கையையும் தருகிறார்
   u. நீதி, சமாதானம் மற்றும் சந்தோஷம் தருகிறார்
   v. நம்பிக்கைக்கு வமை தருகிறார்
   w. ஊழியங்களை பரிசுத்தமாக்குகிறார்
   x. விசுவாசிகளுக்குள் ஐக்கியம் உருவாக்குகிறார்
3. a. அவரின் பங்கு: ''வேறொரு தேற்றவாளன்'' – ''ஈவு'' – ''துணையாளர்'' – ''உறுதி ''– ''வாக்குப்பண்ணப்பட்டார்''– ''சுவிகார ஆவி'' – ''கிறிஸ்துவின் ஆவி'' – ''ஆலோசனையும் வல்லமையும் தரும் ஆவி ''– ''விசுவாச ஆவி'' – ''கிருபை மற்றும் விண்ணப்பத்தின் ஆவி'' – ''அவருடைய குமாரனுடைய ஆவி'' – ''நியாயத்தீர்ப்பின் ஆவி'' – ''நியாயத்தின் ஆவி ''– ''அறிவு மற்றும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தின் ஆவி'' – ''ஜீவ ஆவி'' – ''கர்த்தருடைய ஆவி'' – ''சத்திய ஆவி'' – ''ஞானம் மற்றும் புரிந்துகொள்ளுதன் ஆவி'' – ''ஞானம் மற்றும் வெளிப்படுத்தன் ஆவி'' – ''சர்வ வல்லவரின் சத்தம்'' – ''கர்த்தரின் சத்தம்''
   b. அவரின் ஆள்தத்துவம்: ''சர்வ வல்லவரின் சுவாசம்'' – ''நியாயத்தீர்ப்பு மற்றும் சுட்டெரிப்பின் ஆவி'' – ''தேவ ஆவி'' – ''தெய்வீக ஆவி'' – ''பரிசுத்தத்தின் ஆவி'' – ''நம்முடைய தேவனுடைய ஆவி'' – ''ஜீவனுள்ள தேவனுடைய ஆவி'' – ''கர்த்தராகிய தேவனுடைய ஆவி''

அதிகாரம் 6

பகுதி 1
படைப்பு (Cosmology)

அதிகாரம் 6, பகுதி 1

1. தேவன்
2. அவர் பேசி காணப்படாதவைகளிருந்து காணப்படுகிறவைகளை சிருஷ்டித்தார்
3. வெளிச்சமும் இருளும் - வசனம் 3-5
   ஆகாய விரிவு - வசனம் 6-8
   வெட்டாந்தரையும் சமுத்திரமும் - வசனம் 9-10
   புல், பூண்டுகள் - வசனம் 11-13
   சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் - வசனம் 14-18
   நீர் வாழும் ஜந்துக்கள், பறவைகள் - வசனம் 19-23
   தரையில் வாழும் ஜந்துக்கள், மனிதன் - வசனம் 24-31
4. புதிய வானமும் புதிய பூமியும்

பகுதி 2
தூதர்கள் (Angelology)

அதிகாரம் 6, பகுதி 2

1. a. அறிவு
   b. உணர்வு
   c. தெரிந்து கொள்ளும் திறன்
2. ஆம்
3. கீழே
4. கர்த்தர்
5. இல்லை
6. ஆம்
7. மீகாவேல்
8. கேருபீன்
9. விசுவாசிகளுக்கு ஊழியர்
10. தேவனை எதிர்க்கும் தூதர்களின் தலைவன்
11. அக்கினிக் கடல்
12. தேவனுக்கு விரோதமாய் தெரிந்துகொள்ளவும் சவால் விடவும் சுயசித்தம்
13. எதிர்ப்பவன்
14. தூற்றுபவன்
15. தந்திரசா மற்றும் ஏமாற்றுபவன்
16. மாய்மாலக்காரன்
17. அவிசுவாசிகளின் மனதைக் குருடாக்குகிறான்
18. பிசாசுகளும் அசுத்த ஆவிகளும்
19. இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கொண்டு வரப்பட்ட செய்தி
20. சாத்தானின் வல்லமைகளுக்கு விரோதமாய்

பகுதி 3
மனிதன் (Anthropology)

அதிகாரம் 6, பகுதி 3

1. தேவனுடைய
2. ஒரு ஜீவனுள்ள ஆத்துமா (உயிர்)
3. மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல
4. காரணம்
5. நன்மை தீமை அறியும் மரத்தின் கனியைப் புசிக்காதே
6. மரணம்
7. தேவனை சந்திப்பதற்கு பதிலாக அவரிடமிருந்து ஒளிந்துக்கொண்டார்கள்(3:8, 10). அவர்கள் தங்கள் நிர்வாணத்தைப் பற்றி வெட்கப்பட்டார்கள் (3:10). அவர்கள் தங்களுடைய தீர்மானங்களுக்காக மற்றவர்களை குற்றப்படுத்தினார்கள் (3:12-13). பகை உண்டானது (3:14-15). பிரசவத்தில் பெண்ணுக்கு வ ஏற்படும் (3:16). மனிதன் சாப்பிடும்படியாக கடினமாக உழைக்க வேண்டும் (3: 17-19).
8. a. சரீரமும் ஆத்துமாவும்
   b. (மனித) ஆவி
   c. இருதயம்
   d. மனச்சாட்சி
   e. சிந்தை
   f. மாம்சம்
   g. ஆதாமிருந்து வந்த பாவ சுபாவம்
   h. சித்தம்

பகுதி 4
தூதர்களின் போராட்டம்

அதிகாரம் 6, பகுதி 4

1. சுய சித்தம்
2. தேவனுடைய சிங்காசனத்தின் காவலனாய் இருந்தான்
3. பிசாசுக்காகவும் அவனுடைய தூதர்களுக்காகவும்
4. இயேசு கிறிஸ்துவின் ஆயிர வருட ஆட்சிக்குப் பின்
5. அவன் நியாந்தீர்க்கப்பட்டிருக்கிறான்
6. தீர்ப்பிற்கு மேல் முறையீடு செய்துள்ளான்
7. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் முன்பாக இது நடந்தது
8. சாத்தானுடைய மேல் முறையீடு பற்றி நாம் செய்ய வேண்டியவை உள்ளன
9. தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக் கொள்ளுங்கள்

அதிகாரம் 7

பகுதி 1
வெளிப்படுத்தின விசேஷம்: வேதாகமம் (Bibliology)

அதிகாரம் 7, பகுதி 1

1. அவருடைய கண்ணுக்குப் புலப்படாத குணங்கள்
2. ஒன்றை அறியப்படுத்த
3. தேவன் தம்மைப் பற்றிய வெளிப்பாட்டை எழுதும்படி மனிதர்களை ஏவினார்
4. நம்முடைய அதிகாரம்
5. நம்முடைய வழிகாட்டி
6. வேதாகமம் அல்லது வேதத்தின் அதிகாரம்
7. சத்தியம்
8. இங்கே குறிப்பிட்ட பதில் தேவையில்லை.

பகுதி 2
பிரச்சனை: பாவம் (Harmartiology)

அதிகாரம் 7, பகுதி 2

1. தேவனுடைய பிரமாணத்தின் தெரிந்துகொள்ளும் சுயாதீனம்
2. எல்லோருக்கும் நியாயத்தீர்ப்பு, ஏனெனில் அவனுடைய பாவம் அவன் சந்ததிக்கு கடந்துசென்றது
3. நம்முடைய மாம்சத்தில்
4. மாம்சத்தின் கிரியைகள்
5. மனரீதியான பாவங்கள்
6. நாவின் பாவங்கள்
7. வெளிப்படையான பாவங்கள்
8. a. விபச்சாரம் - மனரீதியான மற்றும் வெளிப்படையான
   b. அசுத்தம் - வெளிப்படையான
   c. வேசித்தனம் - மனரீதியான மற்றும் வெளிப்படையான
   d. விக்கிரகாராதனை - மனரீதியான மற்றும் வெளிப்படையான
   e. பில்சூனியம் - மனரீதியான மற்றும் வெளிப்படையான
   f. பகைகள் - மனரீதியான
   g. வாக்குவாதள்கள் - வார்த்தை மூலம்
   h. பொறாமை - மனரீதியான
   i. கோபங்கள் - மனரீதியான மற்றும் வார்த்தைரீதியான
   j. சண்டைகள் - மனரீதியான
   k. பிரிவினைகள் - மனரீதியான, வார்த்தைரீதியான மற்றும் வெளிப்படையான
   l. மார்க்கபேதங்கள் - மனரீதியான
   m. பொறாமைகள் - மனரீதியான
   n. குடிவெறிகள் - வெளிப்படையான
   o. களியாட்டுகள் - வெளிப்படையான

பகுதி 3
தீர்வு: இரட்சிப்பு (Soteriology)

அதிகாரம் 7, பகுதி 3

1. இயேசுகிறிஸ்துவில் விசுவாசம்
2. அவர் தேவன் மனிதனானார்; நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், அடக்கம்பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்தெழுந்தார்
3. இரட்சிக்கப்படவும் சத்தியத்தைப்பற்றிய முழு அறிவுக்குள் வரவும், கெட்டுப்போகாமல் மனந்திரும்பவும்
4. கிருபையினாலே இயேசுகிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தின் மூலம்
5. விசுவாசம் என்பது நம்பிக்கை, அதன் மேன்மை அது எதன் மீது வைக்கப்பட்டுள்ளதோ அதைப்பொறுத்தது
6. மனதை மாற்றுதல் அது மனந்திரும்புதல் என்று அழைக்கப்படுகிறது
7. நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் அல்ல; இயேசுவில் உள்ள விசுவாசம் நம்மை இரட்சிக்கிறது
8. பரிசுத்த ஆவியானவர்
9. ஏனெனில் நம்முடைய பாவங்களுக்கான விலை செலுத்தப்பட்டாயிற்று, இவ்வாறு மீட்கப்பட்டிருக்கிறோம்
10. இயேசுவே மேசியா என்ற பரிசுத்த ஆவியின் செய்தியைப் புறக்கணிப்பது. மனிதன் தன்னுடைய மரணத்திற்கு முன் எந்த நேரத்திலும் இரட்சிக்கப்பட வாய்ப்புள்ளபடியால் இந்த பாவம் மரிக்கும்போதும் இயேசுகிறிஸ்து இரட்சகர் என்பதை புற க்கணிப்பதாகும்.

பகுதி 4
பாதுகாவல்: தேவனுடைய வாக்குத்தத்தங்கள்

அதிகாரம் 7, பகுதி 4

1. ஆம்
2. அவருடைய முன்னறிவு
3. அவரிடமிருந்தோ பிதாவினிடமிருந்தோ ஒருவனும் அவைகளைப் பறிக்கமுடியாது
4. இல்லை
5. இல்லை

6. ஆம், நான் அவருடைய எதிரிகளாயிருந்தபோது அவர் நம்மை இரட்சித்தார் இதுவே அவருடைய அன்பின் வெளிப்பாடு
7. இல்லை
8. ஆக்கினைத் தீர்ப்பு
9. ஒன்றுமில்லை
10. இல்லை
11. ஒரு தத்துப்பிள்ளை

பகுதி 5
எதிர்காலம்: தீர்க்கத்தரிசனம் (Eschatology)

அதிகாரம் 7, பகுதி 5

1. ஆசாரியத்துவமும் நியாயப்பிரமாணமும் மாறுகிறது
2. ஆகாயத்தில்
3. கண்ணிமைக்கும் நேரத்தில்
4. கிறிஸ்துவுடன் அவருடைய பிதாவின் வீட்டில்
5. உபத்திரவம்
6. அவர் திரும்ப வந்து ஒவ மலையில் தம்முடைய பாதத்தை வைப்பார்
7. அனைவரும் எடுத்துக்கொள்ளப்படும்போது, அவர் பூமியில் தம் பாதத்தை வைக்கமாட்டார். ஆனால், ஆகாயத்தில் அவரைச் சந்திக்கும்படி எடுத்துக்கொள்வார். இரண்டாம் வருகையில் பூமியில் பாதத்தை வைப்பார்.
8. மிருகமும் கள்ளத் தீர்க்கத்தரிசியும்
9. சாத்தான்
10. 1,000 வருடங்கள்
11. அக்கினிக் கடல்
12. அக்கினிக் கடல்
13. புதிய வானத்தையும் புதிய பூமியையும் தேவன் சிருஷ்டித்தார்

அதிகாரம் 8

பகுதி 1
தனிப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கை (Hodology)

அதிகாரம் 8, பகுதி 1

1. a. பகுதி ஒன்று - இரட்சிப்பு
   b. பகுதி இரண்டு - முதிர்ச்சியின் படிகள்
   c. பகுதி மூன்று - நித்தியம்
2. விசுவாசம்
3. ஆவிக்குரிய தன்மை
   a. விசுவாசிக்குள்
   b. விசுவாசம்
   c. பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுத்தப்படலாம் அல்லது அவித்துப்போடப்படலாம்
4. ஆம். விசுவாசி பாவங்களை அறிக்கை செய்யவேண்டும்
5. ஒரு ஆவிக்குரிய வரம்
   a. அன்பு
   b. அவைகள் அழியும்
   c. "ஒருவரிலொருவர் அன்புகூறுதல்" விசுவாசமில்லாத உலகத்திற்கு கிறிஸ்துவைக் கொடுக்கிறது. ஆவிக்குரிய வரங்கள் ஒருவருக்கொருவர் உதவும்படி பயன்படுத்தப்படவேண்டும். அநித்தியமான பரிசுகள் (ஆரம்பத்தில்) விசுவாசியாத உலகிற்கு கிறிஸ்துவைக் கொடுக்க உதவுகிறது. ஆனால் சபையானது ஒருவரை ஒருவர் நேசிக்கக் கற்றுக்கொள்ளுகிறது
6. நீதி
7. a. பாவ அறிக்கை
   b. துதி
   c. நன்றி செலுத்துதல்
   d. பரிசுத்தவான்களெல்லாருக்காகவும் விண்ணப்பம் அதாவது பரிந்துபேசுதல்
   e. தனக்காகவே ஜெபம் அதாவது விண்ணப்பம்

8. இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறியும் அறிவிலும் வளருதல்
9. தேவனை நேசி மேலும் ஒருவரில் ஒருவர் அன்பாயிரு.
10. அநியாயமான துன்பம்
11. ஒழுக்கத்தின்மூலம்
12. ஆம்
13. ஆவியிலும் உண்மையிலும்
14. போய் எல்லா ஜாதிகளையும் சீஷராக்கி, ஞானஸ்நானம் கொடுத்து அவர்களுக்குப் போதியுங்கள்

பகுதி 2
கூட்டுக் கிறிஸ்தவ வாழ்க்கை (Ecclesiology)

அதிகாரம் 8, பகுதி 2

1. மற்றவர்களுக்குப் போதிக்கும்படி கற்றுக்கொடுத்தல்
2. இயேசுகிறிஸ்துவின் வார்த்தைகளின் அளவுகோன்படி
3. போதி
4. தேவனோடும் ஒருவரில் ஒருவர் ஐக்கியம்
5. a. ஒருவரையொருவர் நேசியுங்கள்
   b. ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுத்தலும் கனம்பண்ணுதலும்
   c. ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுதல்
   d. ஒருவருக்கொருவர் ஊழியம் செய்தல்
   e. மற்றவர்களை நம்மிலும் முக்கியமானவர்களாக கருதவேண்டும்
   f. ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கவேண்டும்
   g. ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துதல்
   h. ஒருவரையொருவர் மன்னித்தல்
   i. ஒருவருக்கொருவர் அன்பாயிருத்தல்
   j. ஒருவருக்கொருவர் விசாரித்தல்
   k. ஒருவரையொருவர் கட்டுதல்
6. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷ வெளிச்சத்தை எல்லா மனிதர்க்கும் பரப்புதல்
7. மற்றவர்களுக்கு ஊழியம் செய்தல்
8. விசுவாசத்தின் ஒற்றுமை
9. அவரும் பிதாவும் ஒன்றாயிருப்பதுபோல், அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கும்படி

அதிகாரம் 9

பகுதி 1 - 7

இந்தப் பகுதிகளுக்கான பதில்கள் அதிகமாக வித்தியாசப்படும், எனவே கொடுக்கவில்லை. நீங்களாகவே இவைகளைச் செய்யும்படி பயிற்சி பெறுவீர்கள்.

Bibliography

The following bibliography does not attempt to include all the titles that are pertinent to our course of study, as this would take a book in itself. It does represent the main authorities and the works consulted in the writing of this book.

Archer, Gleason L., Jr., *A Survey of Old Testament Introduction,* Moody Press, 1964.

Archer, Gleason L., Jr., *Survey of the Old Testament,* Moody Press, Chicago, 1978.

Chafer, Lewis Sperry, *Systematic Theology,* Vol. I-VIII, Dallas Seminary Press, 1947.

Dunnett, Walter M., *New Testament Survey,* Evangelical Teacher Training Association, Wheaton, 1967.

Gaebelein, Frank E., General Editor, *The Expositor's Bible Commentary, New Testament,* Zondervan, Grand Rapids, 1976-1992.

Geisler, Norman L., *A Popular Survey of the Old Testament,* Baker Book House, Grand Rapids, 1977.

Harris, R. Laird, Gleason L. Archer, Jr. and Bruce K. Waltke, *Theological Word Book of the Old Testament,* Moody Press, Chicago, 1980.

Harrison, Roland Kenneth, *Introduction to the Old Testament,* William B. Eardmans Publishing Co., 1969.

Hartill, J. Edwin, *Principles of Biblical Hermeneutics,* Zondervan Publishing House, 1947.

Hiebert, D. Edmond, *An Introduction to the New Testament,* Vol. I-III, Moody Press, 1975.

Hoehner, Harold W., *Chronological Aspects of the Life of Christ,* Zondervan Publishing Hosue, 1977.

Jensen, Irving L., *2 Kings with Chronicles,* A Self-Study Guide, Moody Press.

Machen, J. Greshem, *The New Testament, An Introduction to its Literature and History,* edited by W. John Cook, The Banner of Truth Trust, Edinburgh, 1976.

Ramm, Bernard, *Protestant Biblical Interpretation,* Baker Book House, 1970.

Ryrie, Charles C., *Basic theology,* Victor Books, 1986.

Tenney, Merrill C., *New Testament Survey,* William B. Eerdmans Publishing Co., 1961.

Tenney, Merrill C., *New Testament Survey,* William B. Eerdmans Publishing Co., 1965.

Tenney, Merrill C., General Editor, *The Zondervan Pictorial Encyclopedia of the Bible,* Vol. I-V, Zondervan Publishers and Authors.

Thayer, Joseph Henry, *Thayer's Greek-English Lexicon of the New Testament,* Associated Publishers and Authors.

Thiele, Edwin R., *A Chronology of the Hebrew Kings,* Zondervan Publishing House, 1977.

Thiessen, Henry Clarence, *Introduction to the New Testament,* Eerdmans, Grand Rapids, 1943.

Unger, Merrill F., *Introductory Guide to the Old Testament,* Zondervan Publishing House, 1951.

Vine, W.E., Merrill F. Unger & William White, Editors, *An Expository Dictionary of Biblical Words,* Thomas Nelson, Inc., 1985.

Walvoord John F., Roy B. Zuck, Editors, *The Bible Knowledge Commentary,* Victor Books, Wheaton, 1983, 1985, electronic media.

Wilkinson, Bruce and Kenneth Boa, *Talk Thru the Old Testament,* Vol. I, Thomas Nelson Publishers.

End Notes

[1] Adapted from J. Edwin Hartill, *Principles of Biblical Hermeneutics*, p. 9.

[2] Bruce Wilkinson and Kenneth Boa, *Talk Thru the Old Testament*, Vol. I, Thomas Nelson Publishers, 1983, p. 39.

[3] Some of the ideas for this chart were drawn from *A Popular Survey of the Old Testament*, by Norman L. Geisler, Baker Book House, Grand Rapids, 1977, p. 83 and *Talk Thru The Bible* by Bruce Wilkinson and Kenneth Boa, Thomas Nelson Publishers, Nashville, 1983, p. 47-49.

[4] Wilkinson and Boa, p. 59.

[5] Notes from the *NIV Study Bible*, Zondervan, 1985, electronic version.

[6] Wilkinson and Boa, p. 72.

[7] Charles Caldwell Ryrie, *Ryrie Study Bible, Expanded Edition*, Moody, electronic media.

[8] John F. Walvoord, Roy B. Zuck, Editors, *The Bible Knowledge Commentary*, Victor Books, Wheaton, 1983, 1985, electronic media.

[9] Wilkinson and Boa, p. 84.

[10] Irving L. Jensen, *2 Kings with Chronicles, A Self-Study Guide*, Moody, p. 20.

[11] Charles C. Ryrie, *Ryrie Study Bible, Expanded Edition*, Moody, Chicago, electronic media.

[12] Ibid.

[13] Wilkinson and Boa, p. 100.

[14] Ibid., p. 101.

[15] Ibid., p. 110.

[16] Ibid., p. 117.

[17] Walvoord/Zuck, electronic media.

[18] Wilkinson and Boa, p. 125.

[19] Walvoord/Zuck, electronic media.

[20] Norman L. Geisler, *A Popular survey of the Old Testament*, Baker, Grand Rapids, 1977, p. 180.

[21] Ibid., p. 181.

[22] Ryrie, p. 777.

[23] Archer, Electronic Edition.

[24] Ryrie, p. 831.

[25] Archer, Electronic Media.

[26] Adapted from Archer's *Survey of the Old Testament*, Electronic Media.

[27] Charles L. Feinberg, *Class Notes*, Dallas Theological Seminary, p. 3, 1960's.

[28] Geisler, p. 195-196.

[29] Wilkinson and Boa, p. 164.

[30] Geisler, p. 214.

[31] Ryrie, p. 1032.

[32] R. Laird Harris, L. Archer, Jr. Bruce K. Waltke, *Theological Word Book of the Old Testament*, Vol. 2, p. 544.

[33] Carl Laney, *Bibliotheca Sacra*, Oct.-Dec. 1981, p. 315-316.

[34] Charles C. Ryrie, *The Ryrie Study Bible, Expanded Edition*, Moody Press, 1995, p. 1151.

[35] Norman L. Geisler, *A Popular Survey of the Old Testament*, Baker, Grand Rapids, 1977, p. 227-228.

[36] Ibid., p. 228.

[37] Archer, Electronic Media.

[38] Wilkinson and Boa, p. 200.

[39] Adapted from Wilkinson and Boa, p. 209.

[40] Hebrew class at Dallas Theological Seminary taught by Dr. Robert Chisholm, Spring 1993.

[41] John F. Walvoord, Roy B. Zuck, Editors, *The Bible Knowledge Commentary*, Victor Books, Wheaton, 1983, 1985, electronic media.

[42] Wilkinson and Boa, p. 252.

[43] Ibid., p. 263.

[44] Gleason Archer, Electronic Media.

[45] Ibid.

[46] Ibid.

[47] Wilkinson and Boa, p. 296.

[48] Charles C. Ryrie, *Ryrie Study Bible, Expanded Edition*, Moody, p. 1498.

[49] J. Greshem Machen, *The New Testament, An Introduction to Its Literature and History*, edited by W. John Cook, The Banner of Truth Trust, Edinburgh, 1976, p. 16.

[50] Merrill C. Tenney, *New Testament Times*, Eerdmans, Grand Rapids, 1965, p. 107-108.

[51] Charles C. Ryrie, *Ryrie Study Bible, Expanded Edition*, by, Moody, p. 1500.

[52] Ibid., p. 1498.

[53] Ibid., p. 1499.

[54] Bruce Wilkinson and Kenneth Boa, *Talk Thru The Bible*, Thomas Nelson, Nashville, 1983, p. 305.

[55] Charles C. Ryrie, *Ryrie Study Bible, Expanded Edition*, Moody, p. 1509.

[56] John F. Walvoord, Roy B. Zuck, editors, *The Bible Knowledge Commentary*, Victor Books, Wheaton, 1983, 1985, electronic media.

[57] Walter M. Dunnett, *New Testament Survey*, Evangelical Teacher Training Association, Wheaton, 1967, p. 17

[58] Ryrie, p. 1574.

[59] Wilkinson/Boa, p. 321.

[60] Ibid., p. 327.

[61] Ryrie, p. 1614.

[62] Ibid., p. 1614.

[63] Wilkinson/Boa, p. 328.

[64] Ibid., p. 328.

[65] Walvoord/Zuck, electronic media.

[66] Ibid.

[67] Wilkinson/Boa, p. 338.

[68] Walvoord/Zuck, electronic media.

[69] Ibid.

[70] Wilkinson/Boa, p. 353.

[71] Walter M. Dunnett, *New Testament Survey*, Evangelical Teacher Training Association, Wheaton, 1967, p. 40.

[72] J. Sidlow Baxter, *Explore the Book*, p. 63-64.

[73] Ryrie, p. 1786.

[74] Wilkinson/Boa, p. 374.

[75] Henry Clarence Thiessen, *Introduction to the New Testament*, Eerdmans, Grand Rapids, 1943, pp. 202-03.

[76] Gaebelein, electronic media.

[77] Walvoord/Zuck, electronic media.

[78] Frank E. Gaebelein, General Editor, *The Expositor's Bible Commentary, New Testament*, Zondervan, Grand Rapids, 1976-1992, electronic media.

[79] Ryrie, p. 1886-1887.

[80] A.T. Robertson, *Paul and the Intellectuals*, Revelation. and ed. W. C. Strickland (Nashville: Broadman, 1959), p. 12.

[81] Wilkinson/Boa, p. 413.

[82] Dr. S. Lewis Johnson in *Bibliotheca Sacra, Studies in the Epistle to the Colossians*, beginning Vol. 118, # 471.

[83] Walvoord/Zuck, electronic media.

[84] Ryrie, p. 1939.

[85] Wilkinson/Boa, p. 444.

[86] Thiessen, p. 271.

[87] Wilkinson/Boa, p. 450.

[88] Walvoord/Zuck, electronic media.

[89] Ryrie, p. 1966.

[90] Wilkinson/Boa, p. 465.

[91] Ryrie, p. 1966.

[92] Ron Blue, *The Bible Knowledge Commentary*.

[93] The *NET Bible*, The Biblical Studies Press.

[94] Walvoord/Zuck, electronic media.

[95] *NIV Study Bible*, electronic Library.

[96] *NET Bible*, electronic media.

[97] Ryrie, p. 2005.

[98] Adapted from R.T. Ketcham, D.D.; found in J. Edwin Hartill's *Principles of Biblical Hermeneutics*.

[99] Charles C. Ryrie, *Basic Theology*, Victor Books, 1986, p. 295.

[100] Ibid., p. 343.

[101] W.E. Vine, *Vine's Expository Dictionary of Biblical Words*, Thomas Nelson Publishers 1985.

[102] Harris, Archer, Waltke, *Theological Wordbook of the Old Testament*, 1980, Moody Bible Institute, p. 127.

[103] W.E. Vine, *Vine's Expository Dictionary of Biblical Words*, 1985, Thomas Nelson Publishers, p. 51.

[104] Merrill C. Tenney, General Editor, *Zondervan Pictorial Encyclopedia of the Bible*, Zondervan Publishing House, Grand Rapids, Michigan, 1978, Vol. I p. 505.

[105] W.E. Vine, *Vine's Expository Dictionary of Biblical Words*, Thomas Nelson Publishers, 1985, p. 685.

[106] Ibid.